ஸ்ரீ

கடவுளுக்கு வந்தனம்.

ஸ்ரீசந்திரவமிச க்ஷத்திரியராகும்
ஆந்திரர் என்னும் கவுரவராகிய

பலிஜவாரு புராணம்

அல்லது

நாயடுகாரு

சமஸ்தான சரித்திரம்

(இரண்டாம் பதிப்பு.)

இதை
கோயமுத்தூர் கலாநிதி பத்திரிகாசிரியரும், ஆஸ்திகமத சித்தாந்தம்,
மதவிருக்ஷம், காசியாத்திரை, காஞ்சீ, திருபதி, ஸ்ரீ பெரும்பூதூர்,
மேல்கோட்டை, மஹாத்துவங்கள், தருக்க சாஸ்திரம்,
சங்கீத சாஸ்திரம், பக்தி சாஸ்திரம், ஆரியர் வேதம்,
ஆரியர் ஆசாரம், கலியுக தருமம், கலியாணபாட்டுகள்,
வேதப்பொருள் சார சங்கிரகம், முதலான கிரந்தங்
களின் கருத்தரும், கோயமுத்தூர்
டிஸ்டிரிக்டு போர்டு மெம்பரும், கவுரவ மேஜஸ்திரேட்டும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஓர் அங்கத்தினருமாகிய
சேலம் பகடால

நரசிம்மலு நாயடு அவர்கள்

இயற்றி

கோயமுத்தூர் கலாநிதி ஆபீசு
சென்னை. பி. ஆ. அ. பிரஸ், டவடன் கம்பெனி பிரஸ்
ஆநந்தா பிரஸ், எம். எல்.வி பிரஸ், கிச்சினர் பிரஸ்,
பண்டித மித்திரன் பிரசுஆபீசுகளில்
பதிப்பித்தனர்.

1905.

To

All Balija Caste People.

OR

Nayudu Community

IN WHATEVER COUNTRY, TONGUE AND CREED
IN WHATEVER POST, POSITION AND NEED

TO WHOM

MY HEART HAS CLUNG

AMID MANY TRANSITIONS & TRIALS


THE FOLLOWING PAGES

Are Inscribed

WITH THE SERVICE OF SIMPLE AFFECTION

AND

FAITHFUL LOYALTY.



சே. ப. நரசிம்மலு நாயடு.

முதற்பதிப்பின் முகவுரை.

இப் பூவுலகில் பெருமை பெற்ற பரதகண்டத்தில் பிரபலமான ஒவ்வொரு ஜாதியாருடைய பூர்வ உற்பத்தி, மத்தியகால ஸ்திதி, தத்காலஸ்திதிகளை பல புராணங்களாக எழுதப்பட்டும், அவைகளில், அநேகம் இக்காலத்தில் அச்சிடப்பட்டும் இருக்கின்றன. அவைகளால், சிலர்- தாம் ஆரிய பிராம்மணர்களென்றும்; சிலர், விஸ்வகர் பிராம்மணர்களென்றும்; சிலர், சவுராஷ்டிர பிராமணர்களென்றும்; சிலர், சூரிய வமிசத்தைச்சார்ந்த க்ஷத்திரியர்களென்றும்; சிலர், சந்திரவமிசத்தைச்சார்ந்த க்ஷத்திரியர்களென்றும்; சிலர், தேவ அங்கத்தாரென்றும்; சிலர், சான்றோரென்றும்; சிலர்,வேதோக்தமாக கர்மங்களைச் செய்யும் வைசியர்களென்றும்; சிலர்,உயர்குல வேளாளர் என்றும பெருமை பாராட்டி தம் தம் இனத்தாரை கவுரவப்படுத்தி வர்ச்சே; பலிஜவாரு எனனும் சந்திரகுல க்ஷத்திரியர்களுடைய சரியான சரித்திரம் இதுவரையில் அச்சிடப்படாமையால்; அநேகர், இந்த ஜாதியாரை கேவலம் சூத்திரர்களென்றும், சேவகா ஜாதியார் என்றும் சொல்லி வருகிறார்கள். இடையில், யாதோ ஒரு துராபிமானமுள்ள பண்டிதரால் கவுரிபுத்திர சரித்திரம் என்னும் பெயரால் ஒரு தெலுங்கு புத்தகத்தைப் பதிப்பித்தாலும்; அதைக் காலதேச வர்த்தமானங்களைத் தழுவி சரித்திர சாசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கச்சே அதுவும் சரியான சரித்திரமல்ல வென்றே ஸ்பஷ்டமாகியது. ஆகவே,

இந்த பலிஜவாரு எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்? இவர்கள் ஆதி ஜனனமெப்படி? இவர்கள் மத்தியகாலத்தில் எப்படி இருந்தார்கள்? இப்போது எப்படி இருக்கிறார்கள்? இவர்கள் பிறப்பில், க்ஷத்திரியர்களா? அல்லது சூத்திரர்களா? இவர்களுடைய குலம், கோத்திரம், நடை, உடை, விவாஹாதி கர்மங்கள் எப்படிப்பட்டவை? என்றதிகளை அறிந்துய்ய இன்றுநேற்றல்ல; சுமார் இருபதுவருஷகாலங்களாக பல பெரியோர்களையும், பல கிரந்தகர்த்தர்களையும் விசாரித்துவந்தேன்; வந்துமென்ன? உள்ளது உள்ளபடி விவரித்தாரை இன்றளவும் கண்டேன் இலலை. சமீப காலத்துக்கு முன்பு சென்னையம்பதியில் ஸ்ரீமான் அப்பாய் நாயடுகாரு முதலான கனவான்கள் சிலர் கூடி இந்த பலிஜவாரு ஜாதியாருக்கு தக்கபடி கலவி அறிவையூட்ட "நாயடு ஹோம்"- நாயடு ஆசிரமத்தை ஸ்தாபிக்க பிரயத்தனப் பட்டபோது, அந்தச்சங்கத்தைச்சார்ந்தவரோ, மற்றெவரோ ஒருவர், சென்னை 'இந்து' (The Hindu) பத்திரிகையில் "நாயடு ஜாதியாரின் ஜனனமெப்படி என்று வினவி இருந்தார். இந்த வினவிற்கு யாராவதுவிடைஎழுதியிருந்தால்,அந்தவிடையினாலாகிலும் உண்மை வெளியாகுமென்று எதிர்பார்த்திருந்தேன். அந்த வினவுக்கும் நாளதுவரையிலும் தக்க விடை எழுதியதாகத் தோன்றவில்லை; ஆகையால, இனி காலதாமதமாக்குவதில் காரியமில்லை என்று கண்டு "அரைப்படிப்பைக்கைக்கொண்டு அம்பலமேறினால், அரைப்படிப்பு முழுப்படிப்பாகும்" என்ற பழமொழியைத்தழுவி, இந்த பலிஜவாரு

ஜாதியைப்பற்றிய கேள்விகளைப் பலரும் அறிய, ஆகமவேத பூராண இதிகாசாதி கிரந்தங்களினால் எனக்கு தெரியவந்த சங்கதிகளுடன், இக்காலத்தில் ஆங்கிலேய பண்டிதர்கள் பலர் தமது அருமையான அருத்தத்தையும், காலத்தையும், செலவிட்டு கண்டுபிடித்த சிலா சாசனங்களினாலும், சரித்திரங்களினாலும், அறியவந்த சங்கதிகளையுஞ்சேர்த்தும்; நான்பரதகண்டத்தின் பெரும்பாகம் யாத்திரை செய்து அங்காங்கு கண்டும் கேட்ட சங்கதிகளைச் சேர்த்தும், வெறுங்காதுக்கு ஒலையாபரணஞ்சிறந்தது, என்னும் பழமொழியை அனுசரித்து பலிஜவாரைப்பற்றி வினாவும் வினாக்களுக்கு விடையாக இப்புத்தகத்தை முதல்பாகமாக வருததும்: இந்த பலிஜவாரு ஆதி ஆந்திரர்களாகையால், இவர்களது பாஷையும் ஆந்திரமே என்று எண்ணி இந்நூலின் சில பாகத்தை சென்னை ஆந்திரபிரகாசிகைக்கு தெலுங்குபாஷையில் எழுதி வந்தேன் ; ஆனால் கால தேச வாத்தமானங்களைத் தழுவி இந்த பலிஜவாரு, இப்போது மஹாராஷ்டிரம், தெலுங்கு, தமிழ் முதலான பல பாஷைகளை தம் சுயபாஷையைப்போல வழங்கிவருகிறதினாலும், இவர்களில் பெரும்பான்மையோர், இத்தக்ஷணபாகத்தில் தமிழ்பாஷையையே சுயபாஷையாக வழங்கிவருகிறதாக தெரியவந்தமையாலும், இப்பெரும்பான்மையோர் வழங்கும் தமிழ்பாஷையில் இப்புராணத்தை அச்சிட்டால் அநேகருக்கு உபயோகமாகுமென்று எண்ணி, முன் தெலுங்கில் எழுதிவந்ததையே இப்போது தமிழில் மொழிபெயர்த்து பதிப்பித்தனன்.

இந்நூலை வாசித்துப் பார்ப்பவருக்கு சுமார் பத்தாயிரம் வருஷங்களுக்கு முன் இப்பரதகண்டத்தில நிகழ்ந்த சரித்திர சங்கதிகளையுந் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கிறதென ஸ்பஷ்டமாகும். இச்சங்கதிகள் பலகாலங்களிலும், பல பாஷைகளிலும், பல நாடுகளிலும் நிகழ்ந்தவை. இவைகளனைத்தையும் தெள்ளத்தெளியும்படி தொகுத்துக்காட்ட ஒருவர் இருவரால் முடியுமோ ? அநேக பாஷைகளையறிந்த அநேக வித்வான்களால், அநேக வருஷங்களாக எழுதவேண்டிய காரியமலல்வா? ஆகவே, ஆனையுலாவுங்காட்டில் ஆனையுலாவத் துணிந்ததைப்போல, இப்புத்தகத்தை நானொருவன் வெளியிட்டதில் கணக்கற்ற குறைவு குற்றங்கள் இருக்கலாம்—ஆயினும், இது முதல் பதிப்பானபடியினாலும், இனி இதை விருத்தியாக்கியும்,இத்துடன் 'பேட்டைபலிஜவாரு,முசுகுபலிஜவாரு கொல்ல பலிஜவாரு, கம்ம பலிஜவாரு முதலானவர்களுடைய சரித்திரங்களையும் விவரப்படுத்தி சேர்த்தும், இரண்டாம் பதிப்பாகப் பதிப்பிக்க யோசித்திருப்பதாலும்; புத்திமான்களான பெரியோர்கள் இதிலுள்ள குணங்களை நாடி, குறைவு குற்றங்களுக்காக அநுதாபப்பட்டு அவைகளை எனக்குக் காட்டியும், இனி இதில் சேர்க்கத் தகாதவை இன்னவையென்றும், சேர்க்கவேண்டியவை இன்னவையென்றும் தெரிவிக்க அதிக விநயமாக வேண்டுகின்றனன்.

கோயமுத்தூர்,
1896ஹு அக்டோபர்மீ 30உ.

இங்ஙனம்,
சே. ப. நரசிம்மலு நாயுடு.

ஸ்ரீ

இரண்டாம்பதிப்பின்

முகவுரை.

இந்தப்பலிஜவாரின் புராணத்தினுடைய முதற்பதிப்பின் முகவுரையினால், இதை பிரசுரம் செய்யவேண்டிவந்த காரணம் ஸ்பஷ்டமாகும் — முதற்பதிப்பிற்கண்ட சங்கதிகள், சாசன சரித்திர சாஸ்திரோக்த மானவைகளோ என்பவற்றை அறியும்பொருட்டு, பெரும்பாகமான புத்தகங்களைப் பத்திராதிபர்களுக்கும், பாவலருக்கும், பிராம்மணப் பண்டிதர்களுக்கும், பலிஜவாரைச் சார்ந்த சிலபெரியோர்களுக்கும் அனுப்பித் தந்தோம். இந்தக்ஷண தேசத்து ஆங்கிலபாஷையில் நடைபெறும் பல பத்திரிகைகளுக்கும், பூஷணமாக பிரகாசிக்கும் சென்னை ஹிந்து பத்திராதிபர். அதைப்பூரணமாகப் படித்துப்பார்த்து, அடியிற்கண்டபடி தமது அபிப்பிராயததை எழுதிப்பதிப்பித்திருக்கிறார்,

ORIGIN AND HISTORY OF BALIJA CASTE

BY Mr. S. P. NARASIMMALU NAIDU.

* * * * *

"The perusal of the book shows, what time, and trouble "should have been taken to gather the various interesting infor-"mation about the various dynasties of Northern and Central "India and of the Vejianagar Dynasty in particular. The * * "introduction is the more important and bulkier part of the book, "and it gives us a synopsis of the various dynasties beginning "of course from the beginning of the world; from Brahma and "from the Solar and Lunar dynasties. Our friend thinks that the "Balejahs are Kshatryas of the Lunar Dynasty, take their name "from an Andhra King called "Balinja", who ruled more than "2803 years before Christ. * * * The famous Vickramodi-"tya is stated to belong to the Andhra Dynasty. "Andhra" "means great, 'noble' &c. Andhras have been called, "Telu-"gus" or Telingas as they came to occupy the country of "Trilinga. * * * * * *

" The book proper gives us the names of the four divisions "and the "*Inti Peru*" of the various sub-divisions of the Kota " Balijas, so called from the Vijianagar fort which shows at any " rate their immediate origins. The names and divisions of the " Petta Balija's our friend promises in a future publication. Then " follow rules and rituals observed by the Balijas at deaths and " marriages, and the book concludes with a synopises of Hindu " Caste observations and quotations from the Veda and the Ve- " danta. The book on the whole combines very useful infor- " mation with instruction, and this being the first account in " Tamil of a forgotten past. Mr. Narasimulu Naidu's patriotic " attempt is highly commendable"—*The* Hindu, Madras, 30th " November 1896.

மேல்கண்ட இங்கிலீஷ் வாசகத்தின் கருத்து.

*   *   *   *   *   *

இந்த (பலிஜவாருபுராண) புத்தகத்தைப்படிப்போர்க்கு வட இந்தியாவி லும், மத்திய இந்தியாவிலும், இருந்த பற்பல (இராஜ) ஜாதியார்களைப்பற்றியும்; முக்கியமாக விஜயநகர ஸமஸ்தான ஜாதியைப்பற்றியும், பற்பலவித விநோத மான சங்கதிகளைத்திரட்டிப் பதிப்பித்தவிஷயத்தில் எவ்வளவுகாலத்தையும், கஷ்டத்தையும் எடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்பது பிரத்தியக்ஷமாகும்.— * இப்புத்தகத்தின் நூன்முகம் விசேஷமானதாயும்; பெரியபாகமுடையதாயு மிருக்கிறது—அது இந்த உலகாரம்பமானது முதல் பிரம்ம கல்பம் தொடங்கி சூரியவமிச சந்திரவமிச முதலான பற்பலஜாதிகளுற்பத்தியைப்பற்றித்திரட்டிக் காட்டுகின்றது—கிறிஸ்து அவதரிப்புக்கு 2803-வருஷங்களுக்குமுன் "பலிஞ்சன்" என்னும் பெயரால் ஆண்ட சந்திரவமிச க்ஷத்திரியனாகிய ஒரு ஆந்திரனுடைய சந்ததிகளே பலிஜவாரு என்று நமது அன்பர் எண்ணுகிறார் * * * புகழ்பெற்றோங்கிய விக்கிரமார்க்க மஹாராஜன் ஆந்திரவமிசத்தான் என்றும், ஆந்திரர் என்னும் பதத்திற்கு பெரியோர், மேலோர் என்றதிப்பொருள்களென் றும், அவர்கள் தெலுங்கானாவில் குடியேறியபோது தெலுகர் அல்லது தெலுங்கர் என்றப்பெயரைப் பெற்றனரென்றும் சொல்லி யிருக்கிறார் * * *

புத்தகத்தின் சரியான பாகத்தில் கோட்டபலிஜவாரின் நான்குவகுப்புகளை ப்பற்றியும், அவர்களுடைய பற்பல உள்பிரிவாரைப்பற்றியும், அவர்களுடைய வீட்டுப்பெயர்களைப்பற்றியும், காணலாம்—இந்தகோட்டை என்றால் விஜயநகர கோட்டையைக் குறிப்பதால்; அது அவர்களுடைய சரியான உற்பத்திஸ்தானத் தைக்காட்டுகிறது—பேட்டை பலிஜவாருடைய பெயர்களையும், வகுப்புகளை யும், சீக்கிரம்பதிப்பதாகச் சொல்லி இருக்கிறார்—பிறகு பலிஜவாரு, மரண விவா ஹாதிகாலங்களில் செய்யவேண்டிய சடங்கு சட்டதிட்டங்களைப் பற்றிச்

சொல்லியும்; புத்தகத்தின் முடிவில் ஹிந்துஜாதி ஆசாரங்களைப்பற்றியும் வேத வேதாந்தங்களிலிருந்து பிரமாணங்களையும் திரட்டிக்காட்டி இருக்கிறார்.

கடைசியாக, புத்தகமுழுதையும் சேர்த்து நோக்குங்கால், இது மிக்க உபயோகமான விஷயங்களையும், விதிகளையும், மறைந்துபோன புராதனசரித்திரத்தையும் காட்ட முதல்முதல் தமிழ்பாஷையில் எழுதப்பட்டதாகையால், இதை இயற்றிய ம-ா-ஸ்ரீ நரசிம்மலுநாயடுடைய தேசாபிமான பிரயத்தனத்தை புகழ்ந்துகொண்டாடத் தக்கினதேயாம்—சென்னையில் 1896ஞு நவம்பர்மீ 30உ பதிப்பித்த இந்துப்பத்திரிகையின் பத்திராதிபர்.

அதைப்பற்றி தமிழ்பத்திரிகாசிரியர் கருத்தாவது.

நாகப்பட்டணம் சென்டு அண்று கலாசாலையின் பிரதமஉபாத்தியாயரும், தஞ்சை நாய்க்கர் வமிச சரித்திரத்தை நாகை நீலலோசனிப்பத்திரிகைக்கு நெடுநாட்களாக எழுதிவந்த விதவசிகாமணியுமாகிய ஸ்ரீமான் டி. இராஜம் ஐயங்காரவர்கள் பி.ஏ. இந்தபலிஜவாரு புராணத்தைப்படித்து ஷெபத்திரிகையில் (1899ஞு ஜுலை 4உ) அடியிற்கண்டபடி எழுதி இருக்கிறார்.

"மேலும், சிலநாட்களுக்குமுன்பாக கோயமுத்தூர் வாசியான சேலம் பகடால நரசிம்மலுநாயடு அவர்களிடத்திலிருந்து பலிஜவாருபுராணம் என்ற நாயக்கர்வம்சப் பிரகாசிகைப் புத்தகத்தை அடியேன்பெற்று படித்தேன். இவர் நாயக்கர்வம்ச திலகர் என்பதில் அடியேனுக்கு யாதொரு ஆக்ஷேபமும் தோற்றவில்லை—இவ்வம்சத்திற்கு இவர் அழியாதகீர்த்தி யொன்றையுண்டாக்கியிருக்கின்றார்—அடியேன் எழுதிவருகின்ற தஞ்சை நாய்க்கர் ராஜவம்சத்தைப் பொறுமையோடு படித்துவருகின்ற நீங்கள், ஷெ புத்தகத்தை வாங்கிபடித்தீர்களானால், எனது விநோதகதையின் ஆதாரமான சரிததிரமென்னவென்றுவெளியாகுமென்று நம்புகின்றேன்". (Sd) T. RAJAM AIYANGAR, B. A.,

அதைப்பற்றி சிலதமிழ் வித்வான்களுடைய கருத்துக்களாவன.

திரிசிரபுரம் மஹாவித்துவ சிரோன்மணியாகிய
ம-ா-ஸ்ரீ, சி. தியாகராஜ செட்டியாரவர்கள் மாணாக்கரும்;
தேவாங்கபுராண உரையாசிரியரும்.
கோயமுத்தூர் காலேஜ் பிரதம தமிழ்பண்டிதரும் ஆகிய கும்பகோணம்
ம-ா-ஸ்ரீ வித்வான் R. சபாபதிபிள்ளை அவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீருறு மறையாகமபுரா ணாதி செப்பிய வருணநான் கினையுந்
தேருறு வாய்ந்து மற்றவை தமமுட் டிங்கடன் மரபினிற் செழித்த
வேருறு பலிஜ வாருமா புராண மின்புல வோர்தலை துளக்கப்
பாருறு மெவரு நன்றுபா ராட்டப் பைந்தமிழ் நடையிற்செய் தன்னால்,

இத்தகு புலவன் யாரெனிற் கோவை யெழிலுறு கலாநிதி யெனுஞ்சீர்ப்
பத்திரிகைக்குத் தலைவனாற் கலைகள் பயிறலே விநோதமா வுடையான்
எத்திசை யோரும் புகழ்பிர சங்க னெனக்கு மற்றெவர்க்கு நல்லினிய
வுத்தம னுலகு புகல்பக டால வெளிர் நரசிம்மலுத்தமனே.

கோயமுத்தூர் மஹாவித்வான் ம-ா-ஸ்ரீ கந்தசாமிமுதலியாரவர்கள்
மாணக்கருளொருவரும், செண்டிரைகல் காலேஜ் பிரதம தமிழ்பண்டிதருமாகிய
வித்துவான் ம-ா-ஸ்ரீ, த. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள்,
இயற்றிய,

பன்னிரு சீரடி யாசிரிய விருத்தம்.

நீர்பூத்த வுலகமெலாந் தண்ணிப நன் மதிக்குடையி னிழற்கீழ் வைகநீதிநெறி வழாதளித்த பலிஜ வா ரெனும்பெயரி னிருபர் சோமான்
பேர்பூத்த வங்கிசத்தின் வழிவந்த மன்னவர்தம் பெயரு மன்னோர்
பீடுபெறச் செய்தபல வற்புதமு மவர்புகழும் பிறவு மிந்தப்
பார்பூத்த மாந்தரெலா முணர்ந்துமனி வியந்தோதப் பலிஜ வாரு
புராணமெனப் பெயர்நிறீஇப் பசுந்தமிழி னொருநூலைப் பகர்ந்து தந்தான்
சீர்பூத்த வக்குலத்திற் பகடால வார்குடியிற் செனித்தோன் சீர்சால்
சேலநர சிம்மலுநாயடுகாரென் னண்பர்தமிற் சிறந்து ளோனே.

இராமநாதபுர சமஸ்தான வித்வான்களிலொருவரும்
வலியகலியுக ஹரதத்தாசாரியாருமாகிய, ம-ா-ா-ஸ்ரீ,
சாயக்குளம், வெங்கடரமண ஐயங்காரவர்க ளியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

ஆகியாம் பகவ னமைத்த பூவுலகில்—வேதியர் முதலா மேதகுவருண
பேதம்பலவும் பிறங்கிய மாந்தருள்—நீதிநெறியே நிறுவிய செங்கோல்
நெடுநாளோச்சி நீணிலம் புரந்து—மடியாக் கீர்த்தி வளர்ந்திட வாழ்வோர்
முச்சுடர்க்குலத்து முளைத்திடு வேந்தருள்—முச்சகம்புகழு முழுமதிக் குலத்தோர்
பலிஜவா ரென்று பாருளோர் துதிக்க—மலிபுகழோங்கி வாழ்ந்திடு முரவோர்
இவர் வரலாறுகள் யாவருமெளிதிற்—றவறுறா துணரத் தமிழ்வசனத்தால்
வேதமாஞ்சுருதி மிருதியே முதலா—யோது நூல்பலவு மொருங்காராய்ந்து
முறைபடவியற்றி முத்துநேரச்சிற்—குறையறப்பதித்துக்கொடுத்துயர்ந் தனனால்
அத்தகைப்பெரியோன் யாவனோவென்னில் - நத்தொளிர்கோவை நன்னகர்வாழ்
சுத்தப் பிரமச் சுட ரொளிதனையே—சித்தந்துதிக்கு நியமிக்குடையான் (வோன்
கலாநிதிதன்னைக்கவின்பெறநடத்தும்-வலான்பலநூல்கள்மகிழ்வொடுசெய்தோ
இரப்போற்கேது மில்லையென்னாமல்—கரப்போர்நாணத் தருகரமலரான் (ன்
கவுரவமாஜிந்தி ரேட்டதிகாரம்—புவியினிற்பொறுத்த புண்ணியசீலன்
பாவியசேலம் பகடால—நரசிம்ம நாயடாம் நல்லோன்றானே.

என்றும், பின்னும் பலவித்துவான்கள் பலவிதமாக வர்ணித்தும் பாடிக்கொடுத்தனர், விரிவஞ்சி பதிக்காமல் விட்டனம், நிற்க,

அப்புத்தகத்தின் சிலபிரதிகளை, தென்ஜில்லாக்களில் வதிந்து வரும், பலிஜவார்களிற் சிலருடைய பார்வைக்கு அனுப்பிக்கொடுத்ததில்; படித்துப்பார்த்து, சிலர் அனுதாபக்கடிதங்களை எழுதி எமக்கு உற்சாகமூட்டினார்கள் — சிலர், (அப்புதகமானது தம் ஜாதியாருடைய ஆதி அந்தஸ்தையும், அருமைப்பெருமைகளையும் அறிந்துய்யச் சாதனமானதைக்கருதி) தம்தம் குடும்பங்களில், நடந்த விவாஹாதிசுபகாலங்களில், தமது ஆசாரியர் முதலானவர்களுக்குதாம்பூலங்கொடுத்து மரியாதைகள்செய்த பிறகு, எமக்கும் ஓர்தாம்பூலம் எடுத்துவைத்து மரியாதைச்செய்வித்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள்-அதனால் அவர்கள் தம் ஜாதிவிஷயத்தில் கொண்டிருக்கும்அபிமானமும், அதிற்காகஉழைக்கும் எம்மிடம் கொண்டிருக்கும் அன்பும் ஸ்பஷ்டமாகும். சிலர், அப்புத்தகத்தைபூரணமாகப்படித்துபபார்த்தபிறகு,

"தூங்கு சிறை வாவலுறை தொன் மரங்க ளென்ன
ஓங்கு குலம் நையவத னுட் பிறந்த வீரர்
தாங்கல் கடனாகும் தலைசாய்க்க வருதீச்சொல்
நீங்கல் மடவாாகள் கட னென்றெழுந்து போந்தான்"

என்று சீவகசிந்தாமணி, காந்தருவ தத்தையாரிலம்பகத்தில் சொல்லியபடி; தமது ஜாதியாருக்கு தக்காலத்திற் சம்பவித்திருக்கும் குறைவுகளை நீக்கிக்கொள்ள பிரவர்த்தித்தார்கள்—அப்படிபிரவர்த்தித்தவர்களில் முதன்மையானவர்கள் திருநெலவேலி ஜில்லாவைச்சார்ந்த, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலானவிடங்களில் வதிந்துவருபவர்களேயாம் — அதுவிஷயமாக அவர்கள் எமக்கனுப்பி இருக்கும் மஹஜரில்கண்ட சிலபாகங்களின் நகலை இதனடியிற் காணலாம்.

"கோயமுத்தூரிலிருக்கிற, மகா கனம்பொருந்திய, ஸ்ரீமான்
சேலம் பகடால நரசிம்மலுநாயடு அவர்கள் திவ்வியசமூகத்துக்கு;

"ஸ்ரீவில்லிபுத்தூர், கசுப்பா மஞ்சபூத்தெருவிலிருக்கிற நாட்டாண்மை சிங்கிலிநாயடு, சிவந்தப்பநாயடு, மேட்டுத்தெருவிலிருக்கிற நாட்டாண்மை அழகிரிசாமிநாயடு, கிருஷ்ணன்கோவிலிருக்கிற அய்யவாரு முத்துசாமிநாயடு, பெருமாள்பட்டியிலிருக்கிற நாட்டாண்மை சங்கரப்பநாயடு, தம்பிரான்பக்கன் தெரிவிலிருக்கிற நாட்டாண்மை கிருஷ்ணசாமிநாயடு, அய்யம்பட்டியிலிருக்கிறவர்களும் ஷை யூர் நாட்டாண்மை கிருஷ்ணசாமிநாயடு, இராமசாமிநாயடு, சுத்திகுளம் கிராமத்திலிருக்கிறவர்களும், மடவார் விளாகம், காளையாகுரிச்சி தெருவிலிருக்கிறவர்களும், இடையபெட்டலென்ற கோகுலபிருந்தாவன தெரிவிலிருக்கிற இராஜகோபாலநாயடு, அரிகோவிந்தராஜராவ், N. E. எதிராஜலுநாயடு, சுப்பராவ் வகையாரா; இதனடியில் கையெழுத்து வைத்திருக்கிற கவுரவ பலிஜவாரு அதிக வணக்கமாக எழுதி தெரியப்படுத்திக்கொண்ட விண்ணப்பம் என்னவென்றால்.

இவ்விடம், ஸ்ரீவில்லிபுத்தூருலிருக்கிற நம்முடைய தென்கலை, வடகலை
குருசுவாமிகள் நம்முடைய வர்ணாச்சிரம, விபரங்களைக்குறித்து, அநேகசாஸ்தி
ரங்களையும், அநேகசரித்திரங்களையும், அநேகசாசனங்களையும், பார்வையிட்டு,
சாஸ்திரயுக்தமாக நம்முடைய ஜாதியாருக்கு சென்ற டிசம்பர் மீ 10உ யில்
ஸ்ரீமுகபத்திரிக்கைகள் அச்சிற்பதிப்பித்து அனுப்பியிருக்கிறார்கள். அப்படி
அவர்கள் அனுப்பிவைத்திருக்கிற ஸ்ரீமுகபத்திரிகையில் கண்ட சங்கதி சார
அம்சத்துக்கு விரோதமாகவும், இப்போதிய மாகஷிமைதங்கிய கவரன்மெண்
டாரவர்களால் சென்செஸ் விஷயமாய் பிறப்பித்திருக்கிற சென்ற 1890௵
சென்செஸ்மானியூல், 31-வது பிரிவில்கண்ட சங்கதிக்கு விரோதமாகவும், இப்
போதிய 1900௵த்தில் ஷை கவரன்மெண்டாரால் பிறப்பிவித்திருக்கிற சென்
செஸ்மான்யூல் 36-வது பிரிவில்கண்ட சங்கதிக்கு விரோதமாகவும், இவிடம்
திருநெல்வேலிஜில்லா ம-ா-ஸ்ரீ, கலெக்டர்துரையவர்களாலும், நாளது மீ 4உ
யில் ஷை துரையவர்கள் யுக்தியாகவோ,அல்லது எப்படியோ ஒரு லீஸ்டு அச்சில்
பதிப்பித்து, இவ்விடத்திலுள்ள சென்செஸ் சூப்பிரவைசர்களுக்கு அனுப்பி
வைத்திருக்கிறார்கள். அதை நாங்கள் பார்வையிட்டதில், ஷை List of Castes
லீஷ்டின் சீரியல் நெ. 9-ல், 2-வது கலத்தில், நம்முடைய ஜாதியாரை பலிஜ
ஆர் ஜெண்டு என்று காட்டியும், ஷை லீஷ்டின் மார்ஜினில் 3-வது
கலத்தில் கம்மவார், காப்பு, கவரையர், ரெட்டி, கம்பளதார், தொட்டியர், நாய்க்
கர்மார், வடுகர்கள், என்பதாக காட்டியும்; இவர்களும் பலிஜவார் வம்சத்தைச்
சார்ந்த வகுப்பாரென்று எண்ணங்கொண்டு, இவ்விடத்திலுள்ள சென்செஸ்
சூப்பிரவைசர்கள் அப்படியே அபிப்பிராயப்பட்டு ஷை விஷயமாய் ஷை வகை
என்யூமரேட்டர்களுக்கு உத்திரவுகள் ஷை சூப்பிரவைசர்கள் ஷை விவரப்படி
உத்திரவுகள் எழுதியனுப்பியதில், ஷை யார்கள் நம்முடைய ஜாதியாரை கவரை
யரென்றாவது, வடுகர்களென்றாவது, சென்செஸ்செடியூல் 8-வது கலத்தில்
பதிவுசெய்வோமென்றும்,இவ்விடத்திலுள்ள என்யூமரேட்டர்கள்சொன்னார்கள்.
அதின்பேரில் ஷை விபரத்தைக்குறித்து ஷை விதமாக லீஷ்ட்டு அச்சில்பதிப்
பித்து, அனுப்பிவைத்த இவ்விடம் ஜில்லா ம-ா-ஸ்ரீ கலெக்டர்துரையவர்களுக்கு
ஒருமாஜர் மனு எழுதி இவ்விடத்திலிருக்கிற நம்முடையஜாதியார் எழுவர்களும்
சேர்ந்து கையெழுத்துவைத்து மனு எழுதியனுப்பிவைத்தோம். அது என்ன
வென்றால், எங்கள் ஜாதியார் விஷயமாய் மாகஷிமைத்தங்கிய கவரன்மெண்டா
ரவர்கள் பிறப்பிவித்திருக்கிற சென்செஸ்மான்யூலுக்கும் விரோதமாகவும், நம்மு
டையஜாதியாரை கம்பளம், தொட்டியார், வலைப்பாக்கள் வகுப்பில் ஜாயிண்
டாக சேர்த்திருப்பதானது, நம்முடைய ஜாதியாருக்கு அதிகமனவருத்தத்தைக்
கொடுக்கக்கூடியதாக யிருக்கிறதினால்; இத்துடன சமூகம்பார்வைக்கு அனுப்பி
யிருக்கிற மனுவிருப்பதில் கண்ட விவரப்படி ஒருமாஜர் எழுதி அதில் இவ்வி
டத்திலுள்ள 7-ஊராரும் கையெழுத்துவைத்த 1901௵ ஜனவரி மீ 5உ யில்
ஷைகலெக்டர்துரையவர்களுக்கு ஷைமாஜரை அனுப்பியிருந்தோம்,அதின்பேரில்
1901௵ ஜனவரி மீ 15உ யில், ஒருசர்க்கியூலர் ஆடர் ஷை துரையவர்கள் அனு
ப்பியிருக்கிறார்கள் ஷை சர்க்கியூலருக்கும் ஒரு நகல் எழுதி இத்துடன் சமூகம்
பார்வைக்கு அனுப்பியிருக்கிறோம். அதில் எழுதியிருக்கிறதானது, பலிஜா ஆர்
ஜெண்டுகொப்பந்தம் கம்மவார், கவரை, கம்பளம், தொட்டியர்வகையரா
வெல்லாரும்முறையே ஒவ்வொன்றும் பிரதானமான ஜாதி என்று எல்லாருக்கும்
தெரிந்தவிஷயம்; ஆகையால், இதைமுக்கியமாய் கவனித்துவரவேணுமென்று

ஷை சர்க்கியூலரிலிருக்கிறது. அதைவைத்து நம்முடைய ஜாதியாரை இப்போது கவரைபரென்று, எழுதிக்கொள்வதாக என்யூம்ரேட்டர்கள் சொல்கிறார்கள், அப்படிசொல்லுகிறதானது நம்முடைய குருசுவாமிகள் நமக்கு அனுப்பியிருக்கிற ஸ்ரீமுகபத்திரிகைக்கும், இப்போது சென்செஸ் மானியூலுக்கு விரோதமாகவும், இப்போது இவ்விடத்தில் சப்ரிஜிஸ்ட்டர் ஆபீசில் பதிரய வகையரா வில் நம்முடைய ஜாதியார் ஜாதிப்பெயர் கவுரவர்ளென்று அனுஷ்டானத்திற்கும் விரோதமாகவும், பலவிதமாக ரொம்ப கலவரமாக யிருக்கிறது.

ஷை விஷயமாக சங்கரநயினர் கோவில் கசுப்பாவிலும், புளியங்குடியிலும், ஸ்ரீவைகுண்டந்தாலூகா புதுக்குடி முதலான இடங்களிலும், இவ்விடம் ஸ்ரீவில்லிபுத்தூர் கசுப்பா சரம் கிருஷ்ணன்கோவிலிலிருக்கிற அய்யவாரு முத்து சாமிநாயடு வகையாரவர்கள் கேட்டுவந்து; தாங்கள் ஷை சென்செஸ்செடியூல் 3-வது கலத்திலும், 8 வது கலத்திலும், என்னவிதமாக எழுதிவைக்கிறதென்றும் ரொம்ப மனவருத்தமாகக் கேட்டிருக்கிறார்கள். மேல்கண்ட விஷயமாய் இந்த ஜில்லாமுழுவதும் நம்முடைய ஜாதியார்விஷயமாக பலவிதகலவரமாக யிருக்கிறது. ஷை விஷயமாக இவ்விடம் * * வந்திருக்கிற ஷை லீஸ்டாப் காஸ்ட்டு அச்சுபதிப்பு லீஸ்ட்டு ஒன்று, இவ்விடத்தில் கிடைத்த லீஸ்டும் 1-ம் ஷை லீஸ்ட்டின்பேரில் நாங்கள் கலெக்டர் துரையவர்களுக்கு எழுதியிருக்கிற மனுமாஜாஜுக்கு ஒருநகலும், அதில் புட்நோட்டாக எழுதியிருக்கிற இங்கிலிஷ் தர்ஜிமாவுக்கு ஒருநகலும்; அதின்பேரில் இவ்விடம் ஜில்லாகலெக்டர் துரையவர்களால் பிறப்பிவித்திருக்கிற சர்க்கியூலர் ஆர்டருக்கு ஒருநகலும், நம்முடைய குருசுவாமிகள் எங்களுக்கு அனுப்பிவைத்திருந்த ஸ்ரீமுக பத்திரிக்கையில் ஒன்றும் ஆக இத்தியாதி ஆதாரங்களையும், ஷை பேப்பர்களையும் இத்துடன் தங்கள்சமூகம் பார்வைக்கு அனுப்பியிருக்கிறோம்.

2. மேல்கண்ட பேப்பர்கள் எல்லாவற்றையும் சமூகத்தில் பூரவாக பார்வையிட்டு ஷை விஷயமாய் சமூகத்தில் தீர்க்கஆலோசனை செய்துக்கொண்டு, ஷை ஆர்டர்களுக்கும் ஷை லீஸ்டில்கண்ட நம்முடைய ஜாதிவிஷயமாய்ச் சொல்லியிருக்கிற அம்சங்களுக்கும், ஆக்ஷேபனை சமாதானஞ்சொல்லி எங்களில் இவ்விடத்திலிருக்கிற N. E. எதிராஜுலுநாயடுக்கு சென்ற டிசம்பர் 18உ 20உ 22உ யிலும் சமூகத்திலிருந்து எழுதியிருக்கிற போஸ்ட்கார்டுகளில் கண்டபடிக்கு நம்முடைய ஜாதியாரை க்ஷத்திரியராக எடுத்துக்கொள்ளவேணுமென்று கவரனமெண்டாருக்கு எழுதியிருக்கிறபடிக்காவதும், அல்லது மேது குருசாமிகள் அனுப்பியிருக்கிற ஸ்ரீமுக பத்திரிக்கையில் கண்டபடி, நம்முடையவர்களுக்கு கவுரவர்களென்று இருக்கலாமென்று சமூகத்துக்கு யுக்தமாக தோணுகிறதால்; அந்தப்படிக்காவதும், கவுரபலிஜவாரென்று இருக்கலாமென்று சமூகத்துக்கு தோன்றுகிற விஷயத்தில் அந்தப்படிக்காவதும், ஆந்திர க்ஷத்திரியரென்றுயிருக்கலாமென்று சமூகத்துக்குத்தோன்றுகிற விஷயத்தில் அந்தப்படிக்காவதும் அல்லது சாஸ்திர யுக்தப்படி எவ்விதமாக யிருக்கலாமோ அவ்விதமாக சமூகத்தில் யோசித்தும், சீர்திருத்தத்துக்குக்கொண்டுவர தங்களால் கூடிய முயற்சியும் பிரயாசையும் எங்களுக்காக சமூகத்தில் எடுத்துக்கொள்ள வேணுமென்றும் ரொம்ப வந்தனங்களோடு கேட்டுக்கொள்ளுகிறோம். * * *

இப்படிக்கு; N. E. எதிராஜுலுநாயடுவகையரா. பலபெயர்கள்

அந்த மஹாஜரோடு எமக்கு வந்த ஸ்ரீவில்லிபுத்தூர் வடகலை, தென்கலை சுவாமிகளுடைய ஸ்ரீமுகத்தை இதனடியிற் காணலாம்.

ஸ்ரீமுகப்பத்திரிகை.

ஸ்ரீமதேராமானுஜாயநம:

கவுரவ பலிஜவாரு ஆதி ஜெனன உர்ப்பத்தியின் விபரத்தை தெரிந்து; அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதற்கு, அடியில் கையொப்பமிட்டிருக்கிறவர்களால் பிரசுரம் செய்யப்படுகிறதாவது.

(1) கவுரவ பலிஜவாருடைய ஆதிஜெனன விஷயத்தைப்பற்றி, ஆகம வேத ஆதிபூர்வ கிரந்தங்களாகிய பாரதம், மகாப்ரகவதம், விஷ்ணுபுராணம், மனுதருமசாஸ்திர முதலிய பலகிரந்தங்களை ஆதியோடந்தமாய் நாம் பரிக்ஷித்தும்; அதற்காதாரமாக இந்த கவுரவபலிஜவாரு ஜாதிவிஷயமாக கோயமுத்தூரில் இருக்கிற; தற்கசாஸ்திரம், யோகசாஸ்திரம்; சாமுத்திரிகா சாஸ்திரம், மனுதர்மசாஸ்திரமுதலிய பூர்வ உற்பத்தி கிரந்தங்களை வெகுகாலமாக அங்காங்கு பார்த்தும், 1897ஹு த்தில் சேலம் பகடால நரசிம்ஹலு நாயடுகாரால், பதிப்பித்திருக்கிற பலிஜவாரு புராண புஸ்தகத்தை ஆதியோடந்தமுமாக பார்த்தும், ஷை புஸ்தகத்தின் 7-வது பக்கத்தில் தெளிவாகவும், வியக்தமாகவும் சொல்லியிருக்கிற விபரங்களினாலும்; 1890 ஹு அக்டோபர் மீ த்தில் இப்போது மாக்ஷிமைதங்கிய கவரன்மெண்டாரவர்களால் பிரசுரம்செய்திருக்கிற, சென்சஸ் மானுயல் 10-வது பக்கம், 31-வது பிரிவின் 8 வது வரியிலும்; 11-வது பக்கம் 1-வது வரியிலும்; சொல்லியிருக்கிறபடி, (ராவ்) என்று தம்மைச்சொல்லிக் கொள்கிறவர்கள் பிராமணர்களாகவாவது (பலிஜ) ஜெண்டுகளாகவாவது இருக்கலாமென்றும் கண்டிருப்பதினாலும், இப்போது நாளது ஹுத்தில் பிரசுரம் செய்திருக்கிற சென்செஸ் மானுயல் 10, 11 வது பக்கங்களில், 35 வது பிரிவில்; 2 வது உட்பிரிவில், ராயலென்று தம்மைச்சொல்கிற ஒருவர், பிராமணராகவாவது, பலிஜ ஜாதியாயாகவாவது, இருக்கலாமென்று கண்டிருப்பதனாலும், இதனடியிற்கண்டிருக்கிற திருஷ்டாந்திரங்களினாலும் இவர்கள் (ஆதிபூர்வம் சந்திரகுல தெலுங்கு க்ஷத்திரியர்களாகிய கவுரவ பலிஜவார்களென்றே தீர்மானமாக ஏற்படுகிறது).

(2) இந்த கவுரவஜாதியாருக்கு, இவ்விடம் திராவிட தேசமாகிய தென் பிராந்தியங்களில் இப்போது வழங்கிவருகிற ஜாதிப்பேர் கவரையென்றும், ஜெண்டுயென்றும் இருப்பதைக்குறித்து, ஆகமவேத புராணகிரந்தங்களை பார்வையிட்டதில், மேல்கண்ட ஜாதிபேர்கள் ஷை கிரந்தங்களுக்கு ஒற்றுமையாக

இல்லை. அந்த ஜாதிப்பேர் கவுரவர்களென்று இருக்கிற சிறந்தவார்த்தைக்கு இந்த பிராந்தியங்களில் விசர்பமாகவும்; நாடோடிவார்த்தையாகவும், கவரை என்று வந்ததாகவும்,—ஜெண்டு என்று வந்திருக்கிறவார்த்தையானது அது ஒரு மேன்மையைக்குறித்துவந்த பட்டப்பேராகவும் இருக்கிறதேயல்லாமல்; ஜாதியைக் குறித்துவந்த பெயராகயில்லை.

(3) அதற்கு திருஷ்டாந்தமாய்-வடபிராந்தியங்களில் உள்ள கவுரவ பலிஜவார்களில் கவர்ன்மெண்டு பரிக்ஷைகளில் 8, 2, 81ல். ஜெனரல் நெ. 1397ல்; மிடில்ஸ்கூல் பரிக்ஷையில் தேறின, கொடுமுசெட்டி பதமநாபசாமிநாயடு, குமாரர் கொடுமூசெட்டி அப்பால் நரசிம்மராவ் வகையராப்பேர்களும், ஷை ஹூ மீ உ யில் மெட்டிகிலேஷன் கிளாசில் ஜெனரல் நெ. 717 ல், பாசாயிருக்கிற T. N. நாகப்பநாயடு குமாரர் T. N. வெங்கோபராவ் வகையராவும், 5, 2, 84 ல் 82 வது த்திய மிடில்ஸ்கூல் பரிக்ஷையில் தேறி, ஜெனரல் நெ. 83 ல், பிரசுரம் செய்திருக்கிற K. வெங்கிடரெட்டிநாயடு குமாரர், கோ. க. சேஷகிரிராவ் வகையரா அநேகப்பேர்களும், ஜெனரல் நெ. 1673 ல் கொண்டல செஙகல்வராவ்நாயடு குமாரர் கொண்டல வெஙடேசுவரராவ் வகையரா பேர்களும், தங்களுடைய பூர்வ வம்சத்தின் அனுஷ்டானத்தைசரியாய் அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள்.

(4) இப்போது தங்கள் ஜாதியின் பூர்வ அனுஷ்டானத்தை இதுமுதலாகவாவது அனுஷ்டித்து வருவதற்கு ஒரு நல்லவழி யேற்படுவதால், அதாவது 10, 1, 1901 முதல் சென்சஸ் எடுத்து எழுத கவர்ன்மெண்டில் ஆரம்பமாவதால், சென்சஸ் எடுத்து யெழுதவருகிற யெனியூமரேட்டர்கள், செனசஸ் செடியூலுக்கு ஒத்திருக்கும்படியான ஜாதிகள் சொல்லி யெழுதிவைக்கும்படி சொன்னால், விபரமாய் ஷை சென்சஸ் செடியூல் 3-வது கலமுதல்—16-வது கலம் வரையில், பூராவாக எழுதிவைக்கவேண்டிய விஷயங்களில், 3வது கலத்தில் (ராவ்) அல்லது (ராவ்நாயடு) என்றும், 8வது கலத்தில் (கவுரவர்கள்) என்றாவது (கவுரவ பலிஜி) என்றாவது கலவரத்திற்கிடமன்றியல் ஒரவிதமாய்ச் சொல்லி எழுதிவைக்கவேண்டும், இப்படி எழுதிவைப்பதினால் இதுமுதல் அனுஷ்டானத்திற்கு சரியாய் வந்துவிடும்.

(5) இதற்குமுன் அயன் பட்டாக்களிலும், பத்திரங்களிலும், யேர்ப்பட்டு அனுஷ்டானத்திலிருக்கிறபேர்களும்; சர்க்கார் உத்தியோகத்திலிருக்கப்பட்டவர்கள் சர்வீசு ரிஜிஷ்டர்களில் எழுதிவைத்திருக்கிறபேர்களும், இதன் 4-வது கலத்தில் சொல்லியிருக்கிறபடிக்கு,சென்சஸ செடியூல் 3வது கலத்தில் எழுதிவைப்பதில் ஆக்ஷேபனைக்கிடமில்லை. இப்போது பிறந்திருக்கிற குழந்தைகளுக்கும், பத்திரமுதலியதில் அனுஷ்டானத்திற்கு வராமலிருக்கிற பையன்களுக்கும் ஷை 3வது கலத்தில் (ராவ்) என்றாவது (ராவ் நாயடு) என்றாவது பட்டப்பேர் சாதாரணமாய் எழுதிவைக்கவேண்டியது.

(6) இந்த தென்தேசத்தில் கவுரவ பலிஜவார் வீட்டுப்பேர்கள் அநேகமாக அனுஷ்டானத்திற்குவராமல், விட்டுப்போயிருப்பதாக யிருக்கிறது. அதுகளைவிபரமாகசொல்லி எழுதிவைக்ககூடுமானால். வீட்டுப்பெயர் தெரிந்தவர்கள் அவர்கள்பெயரைச்சொல்லி எழுதிவைக்கும்போது, அவர்களுடைய பேருடனே வீட்டுப்பெயரையும், விபரமாகச்சொல்லி எழுதிவைக்கலாம், கேட்டவர்களுக்கும் ஜாதி கவுரவர்களென்றே சொல்லவேண்டும்.

(7) இந்த வீட்டுப்பெயர்களை, இந்தஜாதியார் கலியாண சுப சோபனகாலத்தில் அவரவர்கள் பெயருடனே, அவரவர்கள் வீட்டுப்பெயரையும்; பட்டோலையில் அனுஷ்டானத்திற்கு கொண்டுவந்தால், அவர்களின் கோத்திரம், வம்சாவழி இவைகள் நன்றாய் துலங்கும்; இதுமுதலாக மேல்கண்ட அனுஷ்டானங்களை தவறுதலன்றியில் அனுஷ்டிப்புக்கு சரியாய்க்கொண்டு வருவீர்களென்று நம்புகிறோம்.

☞ அத்தங்கி திருமலை, வடபத்திரசாயி தாத்தாசாரியார்
சந்தானை வி. ஸ்ரீ. அழகராசாரியார் } தென்கலை

ஞூயகுரு, கோடி கன்னிகாதானம், கீழ்த்திருமாளிகை
சின்னகோபாலசுவாமி தாத்தாசாரியார்,
ஞூயகுரு, கோடி கன்னிகாதானம், ஸ்ரீநிவாச தாத்தாசாரியார் } வடகலை

தென்கலை வடகலை குருசுவாமிகள் ஸ்ரீவில்லிபுத்தூர்.

இந்த மஹஜரும், ஸ்ரீமுகமும் எமக்கு எட்டியபோது, சென்னை கவர்ன்மெண்டார் 1901௵ காணிஸ்வாரி குடித்தொகைக்கணக்கோடு, இந்தராஜதானியில் வசிக்கும் பலஜாதியாருடைய ஜாதி அந்தஸ்துக்களையும் தெரிந்து சரித்திரம் எழுதக்கருதி, ஒவ்வொரு ஜில்லாவின் கலெக்டரவர்களுக்கும், ம[illegible]ற்றோர் முதலான பெரியமனுஷர்களுக்கும் உத்திரவுகளை அனுப்பினார்கள். அவ்வுத்திரவுகளை அனுசரித்து கோயமுத்தூர் கலெக்டரவர்கள், கஸ்பா தாசில்தாரவர்களையும், வேறுசில படிப்பாளிகளான பெரியோர்களையும், அவர்களோடு எம்மையும் சேர்த்து ஒருசபையைக்கூட்டி ஜாதி அந்தஸ்து விஷயங்களைப்பற்றி சாச்சைசெய்யவித்து, சபையாருடைய தீர்மானங்களை தெரிவிக்கும்படி நியமித்தபிரகாரம், கோயமுத்தூர்தாலூகா கச்சேரியில் இரண்டு தடவைகளில்ச் சபைகூடி தீர்மானித்தச்சங்கதியை இதனடியிற காணலாம்.

OUR CASTE CLASSIFICATIONS AND CENSUS OPERATIONS

"With reference to the letter dated 25th May 1901 of the Superintendent of Census Operations Madras, our Collector has appointed the following gentlemen, Messers E. T. Vedanayagam Pillay, Avl , Tahsildar, Coimbatore Viz. 'President,' H. Rama Row Avl. 1st Grade Pleader, C. Bujanga Row Avl. B. A., Asst. Master

Coimbatore College, Rajupurohitham Venkatasubba Sastrilu and S. P. Narasimmulu Naidu, Editor of the Coimbatore Crescent as members of the District Committee to discuss and criticize this scheme in so far as it relates to the Castes and tribes commonly found in Coimbatore District. The members met twice (on Saturday the 6th and on Wednesdey the 10th Instant; at the Taluk Office and carefully scrutinized the existing Classification. With regard to the *Balija Caste* which was placed in the 4th Class of the Classification the members recorded that they (Balija Caste) has good claim to be classed as Kshatriyas. One of the members (S. P. Narasimmulu Naidu) filed a phamplet containing the following letter &c. to the Superintendent of Census Operations Madras.

"THE CRESCENT" OFFICE,
COIMBATORE,
10th July 1904,

To

M. FRANCIS Esq. I. C. S.
Superintendent of Census Operations,
MADRAS.

SIR,

In reference to your letter No. 1018 of the 25th May 1901, enclosing a 'Classification of Castes and tribes', forwarded to all Collectors with a view to have the Classification carefully scrutinized, I have the honour to bring to your notice that the Balija Caste mentioned in the 4th page of the said classification is given a wrong place inasmuch as it ought to be placed in Group II under the head of Kshatriyas.

The Balija Caste people are Kshatriyas of the Lunar Race as can be proved by a reference to the Bahgavatham, Vishnupuranam and Brahmmandapuranam &c. (Vide XXIII Chap. of the IX Scanda of Bahgavatham. Journal of the Asiatic Society and District Manuals of Tanjore, Madura, Nellore &c.)

In this connection, it will be interesting to note that one Sevappa Naidu married Murthiammal, sister-in-law to Achutha Deva Rayulu of Narapathi Samasthanam of Vijianagar and as a marriage portion or dowry received the territory of Tanjore over which he ruled as king for a long period. It was at this time that the celebrated Tirumalay Naidu of Madura took as wife one of the daughters of Sevappa Naidu's family. Tirumalay Naidu's grandson, one Chockalinga Naidu, married Mangammal daughter of Vijiaragavalu Naidu, a grandson of the said Tanjore Sevappa Naidu. It will thus be seen that the Naidu rulers of Tanjore, Trichy and Madnra were all relations of Narapathi Samasthanam of Vijianagaram. (Vide Pages 502, 503, 504, 505- Vol. VI Part II. The Journal of Asiatic Society, &c. The District Manuals of Madura, Tanjore &c.)

That these Narapathies of Vijianagaram were Kshatrias of the Lunar race can be seen clearly by a reference to Manucharithra, Parijathapaharanam. Prouda Prabanda Kavi Cheritra &c. (Page 521, Vol. VI The Journal of Asiatic Society of 1838), and that they were direct descendants of the great Andra kings can be proved with equal satisfaction by refering to Col. Mackenzie's M. S. S. in the Introduction of A, D Campbell's Telugu Grammer and James Prinsep's Indian Antiquities Useful tables on Andra kings, Pages 241 and 242 will shew that the Andras were immediate descendants of the well-known Yayathi Raja of the Lunar race.

I have also the honour to state that, in 1896 a tamil book called Balijavaru Puranam was published by me proving the above facts in the most incontestable manner. The book was circulated among learned Pundits and Brahmins, among whom may be mentioned M. R. Ry. Sabapathy Pillai Avl. Hd. Tamil Pandit of the Coimbatore College, M. R. Ry, Tiruchittrambalam Pillai Avl. Tamil Pandit L. M. High School, and Samakulam

Venkataramana Iyengar a well known Brahmin Pundit. These have not only commended the arguments in the book and acknowledged the truth of the line of reasoning but have also furnished me with சாற்றுக்கவிகள் to shew their appreciation of the work.

Besides the above mentioned gentlemen, the great Vaishnava Iyengar Brhmin priests (Attangi Thirumalay Vadabadra Sai Thatha Chariar, V, S. Kandadai Alaga Chariar of Y Marks, and Raiguru, Koti Kannikadanam, Keel Thirumaligai, Chinna Gopalasamy Thatha Charriar, Raiguru; Koti Kannikathanam, Sreenivasa Thatha Chariar of U Marks) of Srivilliputhur have also approved of it as authoritative history and sent in a ஸ்ரீமுகம் to all Balija Caste people advising them how to fill up the names, titles, castes &c. in the recent Census Forms. A copy of the book and the authentication ஸ்ரீமுகம்; and a geneological chart of the Balija Caste are herewith submitted for your perusal.

Under these circumstances, I think it will only be just and reasonable that the Balija caste should be spared the ignominy of being placed lower than the Komitees and other similar classes when their (Balija's) real status is that of Kshatriyas.

I have the honour to be

Sir,

Your most obedient servant,

S. P. NARASIMMULU NAIDU,

Editor of the Coimbatore Crescent,

"The Coimbatore Crescent" 12th July 1901.

இந்துஜாதியார் நியமனம்.

நமது நாட்டில் சமீபகாலத்தில் குடித்தொகை கணக்கெடுத்ததில்; அக் குடிகளுடைய ஜாதிவருணபேத அந்தஸ்துக்களை; அந்த குடித்தொகைப் புத்தகங்களில் பதிக்கக்கருதி, ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் சில பெரியமனுஷர்களை ஒரு சபையாகக்கூடிப் பேசித்தெரிவிக்க வேண்டுமென்று அந்த இலாகா

சூபிரெண்டெண்டவர்களுடைய கடிதத்தின்படி நமது கோயமுத்தூர் ஜில்லா கலெக்டரவர்கள், நமது நகரத்திலிருக்கும், கஸ்பா தாசில்தார் மகா-௱-௱-ஸ்ரீ, ஈ. டி. வேதநாயகம் பிள்ளையவர்களையும், முதல்கிரேட் பிளீடரும், அநேகலௌகீக வைதீக விஷயங்களை அறிந்தவருமான மகா-௱-௱-ஸ்ரீ, எச். இராமராயரவர்களையும், கோயமுத்தூர் காலேஜ் உபாத்தியாயரும், ஜாதிவிவரசரித்திரங்களை அறிந்தவருமான மகா-௱-௱-ஸ்ரீ, புஜங்கராயரவர்களையும், ஸமஸ்கிருத தெலுங்குபாஷைகளில் மஹாபாண்டித்திய முடையவரான மகா-௱-௱-ஸ்ரீ, இராஜபுரோஹிதம் வெங்கடசுப்பு சாஸ்திரிகளையும், சே. ப. நரசிம்மலுநாயடு அவர்களையும், ஒரு கமிட்டியாராக நியமித்ததில்; அந்த மெம்பர்கள் கஸ்பா தாலூகாகச்சேரியில் இரண்டுவிசை, அதாவது ஐூலை௴ 13௳ சனிக்கிழமையும், 10௳ புதன்கிழமையன்றும் கூடி வெகுநேரம்பேசி ஜாதிபட்டியில்கண்ட பெயர்களை வெகுஜாகிரதையாக தக்க இடங்களுக்கு மாற்றினார்கள். அந்த ஜாதிபட்டியில் பலிஜவாரைச்சூத்திரரென்று கண்டிருப்பதைக்கருதி, அந்த ஜாதியாரை க்ஷத்திரியர் வகுப்பில் சேர்க்கத்தகுந்த நல்ல ஆதாரங்களிருப்பதாக ரிக்கார்டு செய்தார்கள், அதனமேல் அந்த மெம்பர்களுடைய கருத்தின்படி அவர்களில் ஒருவராகிய சே. ப. நரசிம்மலு நாயடு அந்த உண்மையை பிரசித்தப்படுத்த, இதனடியில் கண்ட கடிதத்தையும், அதற்கேற்ற ஆதாரங்களையும் ஒரு சிறுபுத்தகமாகப்பதிப்பித்து, சூபரிண்டெண்டவர்களுக்கு அனுப்பும்படி தாக்கல்செய்தார்.—அது இது.

சென்னை

சென்சஸ் கானிஸ்வாரி இலாகா சூபரெண்டாண்டு.

கனம் W, பிரான்சிஸ் துரையவர்கள் சமுகத்திற்கு.

ஐயா,

கோயமுத்தூர் கலெக்டர் அவர்களுடைய 1—6—01 தேதியின் 206 நெம்பருள்ள கடிதத்துடன் அனுப்பலான, தங்களுடைய 1901௵ மே௴ 25௳ 1018 நெம்பர் கடிதத்தையும், ஜாதிவருண வகுப்பாருடைய தரா தர அந்தஸ்தைக்காட்டும் பட்டியையும் படித்துப்பார்த்தேன்.

1. அந்த ஜாதிவகுப்பு பட்டியில் 4—வது பக்கத்தில் பலிஜவாரை அவர்களுடைய சரியான 2—வது வகுப்பு க்ஷத்திரியர்கூட்டத்தில் சேர்க்காமல்; 4-வது கூட்டத்தில் சத் சூத்திரர் என்று எழுதி, கீழானதும் தப்பிதமானதுமான இடத்தில் பதிப்பித்தது சரியல்ல என்று தோன்றுகிறது. ஏனெனில்.—

2. பலிஜவாரு சந்திர குல க்ஷத்திரிய வமிசத்தைச்சார்ந்த யயாதியின் சந்ததிகளென்று, பாகவதம் 9 வது ஸ்காந்தம், 23-வது அத்தியாயத்திலும்; விஷ்ணுபுராணம்; வாயுபுராணம், பிரமாண்டாதி புராணங்களிலும்; ஆசியாடிக்கு ஜர்னல்கள், மதுரை, தஞ்சை முதலான டிஸ்டிரிக்டு மானியூல்கள், கர்னல்மெகன்சி, டெயிலர்; இராபர்ட்ஸ்வெல் முதலானவர்களுடைய கிரந்தங்களிலும் ஸ்பஷ்டமாகிறது.

3. எப்படி எனில்—விஜயநகரம் நரபதி ஸமஸ்தானத்தைச் சார்ந்த அச்சுத தேவராயலுடைய மனைவி திருமலையம்மாளுடைய சகோதிரி மூர்த்தி அம்மாளை அவர் இனத்தைச்சார்ந்த சேவப்பநாயடு கோரு விவாஹம்செய்து கொண்டதற்காக, தஞ்சாவூர் சமஸ்தானத்தை அவருக்கு ஸ்ரீதனமாக கொடுத்தும், அதை ஆண்டு அனுபவித்துக்கொள்ளும்படி அதிகாரமும் கொடுக்கப்பட்ட சங்கதி தஞ்சாவூர் சரித்திரம், 112 நெம்பர், கவுண்டர்மார்க்கு 325லும், ஆசியாடிக்கு ஜர்னல் 6-வது வாலியம் 502,506-வது பக்கங்களிலும் மற்ற கிரந்தங்களினாலும் ஸ்பஷ்டமாகிறது.

4. இந்த தஞ்சை சேவப்பநாயடு அவர்களுடைய குடும்பத்தைச்சார்ந்த, ஒரு பெண்ணை மதுரை திருமலைநாயடுகோரு விவாஹம்செய்துக்கொண்டதன்றியில், அந்தத் திருமலை நாயடவர்களுடையப் பேரனாகிய சொக்கலிங்கநாயடுகோரு, ஷை தஞ்சை சமஸ்தானம் சேவப்பநாயடுகோருடைய பேரனாகிய விஜயராகவலு நாயடுகோரின் குமாரத்தி மங்கம்மாளை விவாஹம் செய்துக்கொண்டதாக தஞ்சை சரித்திரம் 122 நெம்பர், கவுண்டர்மார்க்கு 325, ஆசியாடிக்கு ஜர்னல் 6-வது வாலியம் 502, 503-வது பக்கங்களிலும்; மதுரை, தஞ்சைஜில்லா மானியூல் முதலான கிரந்தங்களினாலும்; ஸ்பஷ்டமாகிறபடியால்; தஞ்சை; திருச்சி, மதுரையில் அரசாண்ட விசுவநாத; திருமலை, விஜயரங்க சொக்கநாத நாயடுகோர்களும், தஞ்சையிலாண்ட சேவப்ப அச்சுத விஜயராகவநாயடு அவர்களும் விஜயநகர நரபதி சமஸ்தானத்தைச்சார்ந்த நரசிம்ஹ, கிருஷ்ணதேவ, அச்சுத தேவராயர்களுடைய சந்ததிகளென்று ஸ்பஷ்டமாகிறது.

5 விஜயநகர நரபதி சமஸ்தானத்தார் சந்திரவமிச க்ஷத்திரியர்கள் என்று மநுசரித்திரம், பாரிஜாதபஹாரணம், கிருஷ்ணராஜ்யவிஜயம், பிரவுட பிரபந்தகவி சரித்திரம் முதலான கிரந்தங்களினாலும்; கர்னல் மெக்கன்ஜி, இண்டியன் ரிவியூவ் சதாசிவ மஹாராயர் கிரந்த எழுத்து தர்மிசாசனம் நெம்பர் 17 லும், ஆசியாடிக்கு ஜர்னல் 6-வது வாலியம், 521-வது பக்கத்திலும் இதர கிரந்தங்களினாலும் ஸ்பஷ்டமாகிறது.

6. இந்த விஜயநகர நரபதிகள்; விக்கிரமார்க்கருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களென்றும், விக்கிரமார்க்கன் ஆந்திரவம்ஸ க்ஷத்திரியரென்றும், அந்த ஆந்திரர்கள் யயாதியின் சந்ததிகளென்றும்; ஆகவே பலிஜவாரும் யயாதி சந்ததியைச்சார்ந்த சந்திரவமிச க்ஷத்திரியரென்பதும் ஸ்பஷ்டமாகிறது.

7. இத்தியாதி ஆதாரங்களைக்கொண்டு 1896ஹு பலிஜவாருபுராணம் என்ற, பெயரால் நான் ஒருபுத்தகத்தைப் பதிப்பித்து; பிராம்ஹணாதி பலஜாதியார்களுடைய பார்வைக்கனுப்பியதில்; அது சரியான சரித்திரமென்று கோயமுத்தூர் காலேஜ்பண்டிதர் ஸ்ரீ சபாபதிபிள்ளை அவர்களும் ல. மி. ஐஸ்கூல் பண்டிதரான ஸ்ரீதிருச்சிற்றம்பலம்பிள்ளை அவர்களும், சைவவைணவ மதங்களை நன்கறிந்த ஸ்ரீவைணவ பிராம்ஹணஜாதியார் சிறுமுக்குளம வெங்கிடரமணதாசரவர்களும் பின்னும் சிலரும் அதற்குச் சாற்றுக்கவிகள் பாடிக்கொடுத்திருப்பதுடன்,

திருநெல்வேலிஜில்லா; ஸ்ரீவல்லிப்புத்தூரிலிருக்கும், மஹா வைஷ்ணவ தென்கலை வடகலை வைஷ்ணவ பிராமண ஆசாரியர்களாகிய ஸ்ரீ அத்தங்கி திருமலை வடப்பத்திர சாயி தாதாசாரியர், (2) கந்தாடை வீ ஸ்ரீ அழகாராசாரியார், (3) இராயகுரு கோடி கன்னிகாதானம் கீழ்திருமாளிகை சின்ன கோபால சுவாமி தாதாசாரியார், (4) இராயகுரு கோடி கன்னிகாதானம் ஸ்ரீனிவாச தாதாசாரியார தென்கலை வடகலை குருசுவாமிகள் தங்கள் ஸ்ரீமுகத்தில் அடியிற் கண்டபடி எழுதியிருக்கிறார்கள்.

* * *

☞ அந்த ஸ்ரீமுகத்தை 8-வது பக்கத்தில் பார்க்கவும்.

ஆகையால், இத்தியாதி சாசனங்களைப் பார்வையிட்டு பலிஜவாரை கோமுட்டி முதலான ஜாதிகளுக்குக் கீழ்ப்படுத்தி, அச்சாரியாரை அவமானப்படுத்த செய்யாமல் க்ஷத்திரியர்களாக 2-வது கூட்டத்தில் சேர்ப்பதுதான சரியான இடமும், நியாயமென்று தெரிவிக்கலானேன.

இப்படிக்குத் தங்கள் ஊழியன்.

சே. ப. நரசிம்மலு நாயடு,

கலாநிதி பத்திராதிபர்.

இந்தப்படி பலிஜவாருடைய சரித்திர விவரங்களை பல புராதனகிரந்தங்களிலிருந்து மேற்கோள்களாக எடுத்துக்காட்டி எழுதிக்கொடுத்த புத்தகத்தைப் பார்த்து கோயமுத்தூர் கலெக்டரவர்கள் எமக்கு எழுதியகடிதமிது

To

M. R, Ry. S. P. Narasimmalu Naidu Garu,

Editor of the Crescent, Coimbatore.

Sir;

In acknowledging the receipt of your letter dated 28th current and the enclosures thereto- I have the honour to thank you much for the interesting information furnished by you regarding the Balija Caste- * * *

I have the honour to be Sir,

Your most obedient servant,

(Sd) C. W. T. COTTON,

For Collector.

* * *

இதன் கருத்தாவது-பலிஜவாரு ஜாதியாருடைய மனோஹரமான சரித்திரத்தைப்பற்றி எழுதியனுப்பியதற்கு மிக்கவந்தனம் செய்கிறேன் என்பதாம்-நிற்க-

இந்தக்கடிதத்தையும், இதற்காதாரமான தஸ்தாவேஜுகளையும், சென்னை சென்ஸஸ் சூபரெண்டாண்டவர்களுக்கு அனுப்பியதில், அவர் இவைகளில் கண்டச்சங்கதிகளோடு, மற்றசரித்திர சாசனங்களையும் தழுவி, 1901ல் பதிப்பித்த சென்ஸஸ் ரிபோர்ட்டு 15-வது வாலியம்; 144 பக்கத்தில்; பலிஜவர்ளைப்பற்றி அடியிற்கண்டபடி எழுதிப்பதிப்பித்திருக்கிறார்.

CENSES OF INDIA

Vol XV—Part I. Report. Page 144.

Balija—(1,008,036; M. 10)—This is the chief Telugu trading caste and it is scattered throughout all the districts of the Presidency. It is said to have two main sub-divisions, Desa (or Kota) and Peta. The first of these includes those whose ancestors are supposed to have been the Balija (Nayak) kings of Madura, Tanjore and Vijayanagar, or provincial Governors in those kingdoms, and to the second belong those, like the Gazulu (Bangle-sellers) and Perike (salt sellers), who live by trade. In the Tamil Districts Balijas are known as Vadugans ('Telugu people') and Kavarais. The descendants of the Nayak or Balija kings of Madura and Tanjore claim to be Kshatriyas and of the Kasyapa gotra, while the Vijayanagar Rais say they are lineal descendants of the sage Bharadwaja. Others trace their ancestry to the Kauravas of the Mahabharata. This Kshatriya descent is not, however, admitted by other castes, who say that Balijas are an offshoot of the Kammas or Kapus, or that they are a mixed community recruited from these and other Telugu castes. The members of the caste none of them now wear the sacred thread or follow the Vedic ritual. (C. R. 1891, para 458; *Kurnool Man*, p. 137; Buchanan's Mysore, etc., Vol. I, pp. 168-170; Madura Man, Part II, p. 86; North Arcot Man. Vol. I. pp. 202-3)

இதன் கருத்தாவது.

1901ஆம் சென்னை ராஜதானியிலிருந்த பலிஜவாரு 10,08,036 குடிகள் M-107.

இவர்கள் (பலிஜவாரு) விசேஷமாக வர்த்தகஞ்செய்யும் தெலுங்கு ஜாதியார்கள்-இவர்கள் இச்சென்னை ராஜதானியின் எல்லா ஜில்லாக்களிலும் பரவியிருக்கிறார்கள். இவர்களில் தேசபலிஜவாரென்றும், (கோட்டபலிஜவாரு என்றும்) பேட்டபலிஜவாரென்றும் இரண்டு முக்கியமான வகுப்பினர் இருக்கின்றனர்-இவ்விருவகுப்பார்களில முதல்வகுப்பார், மதுரை, தஞ்சை, விஜயநகரஸமஸ்தானங்களை ஆண்ட பலிஜ அல்லது நாயக்கர் ராஜர்களுடைய சந்ததிகளைச் சார்ந்தவர்கள். இரண்டாவது வகுப்பார், வளையல்களை விற்கும் காஜுலுவாரும், உப்புவியாபாரம் செய்யும் பெரிகவாருமான வர்த்தகவிருத்தி செய்பவர்களவர்- — தமிழ் ஜில்லாக்களில் பலிஜவாரை வடுகர் (தெலுங்கு ஜனங்கள்) என்றும், கவரைகளென்றும் சொல்லப்படும். மதுரை, தஞ்சைஸமஸ்தானங்களை ஆண்ட நாயக்கர் அல்லது பலிஜராஜாகளுடைய சந்ததிகள் க்ஷத்திரியஜாதியைச்சார்ந்த கஷியப கோத்திரத்தார்களென்றும்; விஜயநகர சமஸ்தான இராயலுகாருகள் பாரத்துவாஜ மஹாமுனிவருடையநேரான சந்ததிகளென்றும்சொல்லுகிறார்கள். மற்ற பலிஜவார்கள் மஹாபாரதத்தில் கண்டிருக்கும கவுரவர்களுடைய சந்ததிகளென்று சொல்லுகிறார்கள. சொன்னாலும், இவர்கள் க்ஷத்திரியர் சந்ததிகளென்பதை மற்றஜாதியார் அங்கீகரிக்கிறதில்லை. பலிஜவாரு கம்ம, காபு ஜாதிகளிலிருந்துண்டானவர்கள், அல்லது ஷை ஜாதிகளிலிருந்தும், வேறுஜாதிகளிலிருந்தும் பிரிந்த கலப்பு ஜாதியாரென்றும் சொல்லுகிறார்கள்—இந்தஜாதியைச்சார்ந்தவர்களில எவரும்இப்போது (எஞ்ஞோபவீதம)பூணுநூலை தரிக்கிறதுமில்லை, வேதோகதமாக கர்மங்களைச்செய்வதுமில்லை. (விவரமாகஅறியவிரும்புவோர், 1891ஆம் கானிஸ்வாரி ரிபோர்ட்டையும், கர்னூல் சரித்திரம் 137-வது பக்கத்தையும், பக்கானன் மைசூர்சரித்திரம் 1-வது வாலியம், 168, 170 பக்கங்களையும், மதுரை சரித்திரம் 2-ம் பாகம் 86-வது பக்கத்தையும், வட ஆற்காடு சரித்திரம், வாலியம 1-20-23 பக்கங்களையும் படித்துப் பார்க்கலாம், என்று எழுதியிருக்கிறார்.

இந்தமுகவுரையின் 11 முதல் 16 பக்கங்களில் காட்டியிருக்கும் எமது கடிதத்தினாலும், பலிஜவாருடைய ஜனஜாதிவிவரங்களை நன்

கலிந்த பிராம்மண வைணவ வடகலை, தென்கலை மடாதிபதிகளான ஆசாரியசுவாமிகளுடைய ஸ்ரீ முகத்திலும், பலிஜவாரை க்ஷத்திரியவம்சத்தாரென்று நிரூபித்திருந்தும்; 1901௵ சென்சஸ் சூபெரண்டெண்டாரவர்களாகிய, மேஸ்டர் பிரான்சிஸ் (W. Frances, Esq. I. C. S.) துரையவர்கள்மேல்கண்டபடி எழுதிப் பதிப்பித்திருக்கிறார். இது சில பலிஜவார்களுக்கு அதிருப்திகரமான வாசமாக இருந்தாலும் இருக்கலாம்—ஆயினும், இந்தசூபெரண்டாண்டு துரையவர்கள் ஷை 1901௵ சென்சஸ் ரிபோர்டு 15-வது வாலியூம், முதல் பிரிவின், 130-வது பக்கம், 22-வது பாராவின் கடைசியில்.

"Even as it is, there will be several castes which will be dissatisfied with the position accorded them. I drew up the table in accordance with the information available, neither extenuating anything nor setting down aught in malice, and committees of native gentlemen formed for the purpose in every district have criticised and amended the original draft, but I am well aware that the task has been a most delicate one."

இதன் கருத்து.

"ஜாதி அந்தஸ்துகளைப்பற்றி இப்போது நியமித்திருக்கும்
"ஸ்திதியில்கூட அநேக ஜாதியாருக்கு அதிருப்தியைத் தரக்
"கூடும். இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் சுதேச பெரிய
"மனுஷர்களைக் கமிட்டியாராக நியமித்தும், அவர்கள சமூகத்தில்
"ஜாதிமூலக்குறிப்புப் பட்டிகளை அனுப்பி, சர்ச்சை செய்வித்தும்,
"அச்சபையார் எனக்கு திருத்தியனுப்பியச் சங்கதிகளைத் தழுவி
"இதை தயார்செய்ததேயன்றி; கெட்ட எண்ணத்தோடு ஒருஜாதி
"யாருக்குள்ள அந்தஸ்தைக்குறைத்தும், இல்லாததைச் சேர்த்
"தும் எழுதியதன்று; ஆயினும், இந்தவேலை அதிகநுட்பமும்
"தருமச்சங்கடமுமான வேலையென்று தெரிந்தவிஷயம்".

என்று எழுதி இருப்பதால், இந்த மேஸ்டர் பிரான்சிஸ்துரையவர்களும், இவரை இந்தக்கஷ்டமானவேலைக்குத் தலைவராக நியமித்த நமது இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரும், தமக்கு அகப்பட் சரித்திர சாசனங்களைக்கொண்டு, நல்ல எண்ணத்துடன் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுஎழுதிப்பதிப்பித்ததற்காக நாம்யாவரும் நன்றியறிந்தவர்களாக விருக்கக்கடமைப் பெற்றிருக்கிறோமல்லவா? நிற்க. ஆங்கிலேய கவரன்மெண்டார் ஜாதிசமயாசாரங்களிலும், வேஷபாஷாதிகளிலும், நம்மவருக்கு வேறுபட்டவர்களாக இருந்தும்;

தம்குடிகளாகிய நமது ஜாதி அந்தஸ்துக்களைப்பற்றி தக்கபடி விசாரித்தும், அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதைசெய்தும், சுதந்தரமாகவும், சுகமாகவும் வாழ்விக்க பாடுபட்டுவரச்செ—நமது சுதேசத்திலேயே பிறந்தும், சுதேசஜாதி சமயாசாரங்களையேத்தழுவியும், சுதேசவேஷபாஷாதிகளையே அனுஷ்டித்துவரும்சுதேசிகளிடம், இவ்விதமான தேச ஜாதி அபிமான தருமம் இல்லாமையால்; நம்மவர்களிற் சிலர் அனுபவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் கொஞ்சமல்ல;—அதற்கோர் திருஷ்டாந்திரமாக கொச்சியிலிருந்துவந்த கடிதத்தை இதன் அடியிற காணலாம்.

Trichur 14*th* *January* 1903.

To S. P. Narasimmalu Naidu Esqr.

Coimbatore.

Sir,

We the undersigned Nayudus are residents of Trichur, a District under His Highness the Rajah of Cochin.

We sorrowfully narrate our greevainces to you in a few lines to find out a way for redress.

(1) It is nearly a century since we landed here from Tanjore and other places.

(2) Our forefathers and some of us were given full privilege of entering the Temples here, but after a certain time at the instigation of Nayars who are quite ignorant of our castes we were prohibited from entering on the ground that we are not Sudras and if at all we are not of good caste. Some time hence bathing in Tanks also were prohibited.

(3) Ever since that prohibition we fought with utmost energy to establish our caste system, but in vain. What amount of evidence and what amount of facts submitted by us are of no avail, as almost all the offices in the state are occupied by Nayars who are quite ignorant of Nayudus.

(4) After several years' fight we succeeded in getting a permission to bathe in the Tanks.

(5) We produced certificates from Namboori Vydeekas (Malayali Brahmins) to show that we belong to High caste. But they also go without any use.

(6) After all we received an order from His Highness to produce a certificate from a Vydeeka of our parts (beyond the Cochin State) to show that we are High Caste Sudras;

(7) When we received this order we searched for a patron who will kindly and benevolently come forward and establish the Nayudu caste in this dark country where Malayalis alone are held in great respect although their caste system * * * * * At last we came to know from a friend of ours that you have been taking the greatest effort in connection with the same thing to let our Nayudu brothern know to what caste they really belong and that you have also published a volume describing it after a thorough search of Shastras & Vedas.

(8) We therefore humbly and respectfully approach you and beg you to be gracious enough to extend your trials to these parts also and to establish our castes as it is and to give us that privilege to which we are justly entitled. Further we request you to be kind enough to furnish us with a detailed certificate from a Brahmin Vydeeka so that we may forward the same to His Highness with a petition (a copy of which should be kindly sent by you in English describing all that we have to say supported by facts and figures). &c., &c., &c.,

We beg to remain, Sir,—your obedient brethern (signed)

1. T. S. Veeraswamy Naidu Pensd Post Master.	5. V. Perumal Naidu
	6. S. P. Ramaswamy Naidu
2. S. Raghavaloo Naidu	7. T. P Gopalakrishna Naidu
3. P. Venkataswamy Naidu	8. V, Doraswamy Naidu
4. V. Peddoo Naidu	9. M. Venkatasubbia Naidu &c.

இதன்கருத்து.

மா-ா-ஸ்ரீ, கோயமுத்தூர் சே. ப. நரசிம்மலுநாயடவர்களுக்கு,

ஐயா,

மாக்ஷிமைப்பொருந்திய கொச்சிராஜரவர்கள் சமஸ்தானத்தைச்சார்ந்த திருச்சூரிலிருக்கும், நாயுடுஜாதியாராகிய எங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களைப்பற்றி அதிகவிசனத்துடன் எழுதிக்கொள்ளும் மஹஜராவது.

1. சுமார் நூறுவருஷங்களுக்கு முன் தஞ்சை முதலானவிடங்களிலிருந்து எங்களுடைய முன்னோர்கள் இங்குவந்து குடிபுகுந்தார்கள்.

2. அப்படி குடிப்புகுந்த எங்கள் முன்னோர்கள் இவ்விடங்களில் கோயில்களிற்போய் கும்பிடும்படியான சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர்—பிறகு நம்முடைய ஜாதியின் பெருமையை அறியாத நாயர்மார்களுடைய தூண்டுதலினால் நம்மைசூத்திரரல்லவென்றும, நல்லஜாதியாரல்லவென்றும், கோயில்களுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்றும், தடுத்ததன்றியில்; குளங்களில் ஸ்நானமும்செய்யக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள்.

3. அப்படிச்செய்தது முதல் நம்முடையஜாதியின் அந்தஸ்து விவரங்களைப்பற்றி பிரபலநியாயங்களோடு எடுத்துக்காட்டியும்; இச்சமஸ்தானத்தின் உத்தி

யோகஸ்தர்களில் பெரும்பாலர், நம்மஜாதியின் அந்தஸ்தைப்பற்றி அறியாத வாயர்களாக இருப்பதால், காரியசித்தி பெற்றேமில்லை.

4. இப்படி பலவருஷங்கள் போராடிய பிறகு, குளங்களில்மாத்திரம் குளிக்கும்படியான சுதந்தரத்தைப்பெற்றேம்.

5. நாங்கள் (நல்ல) க்ஷத்திரிஜாதியைச் சார்ந்தவர்களென்று மலையாள நம்பூத்திரி வைதிகபிராம்ஹணர்களிடமிருந்தும் நற்சாக்ஷிபத்திரங்களைப் பெற்றுக்கொடுத்தும் பிரயோஜனப்படவில்லை.

6. கடைசியாக-கொச்சி சமஸ்தானத்துக்கு வெளியிலிருக்கும் வேறு நாட்டு வைதீக பிராம்ஹணர்களால், நாங்கள் உயர் க்ஷத்திரிஜாதியாரென்று நற்சாக்ஷிபத்திரத்தைப்பெற்று காட்டும்படியாக, நீதிமைப்பொருந்திய கொச்சி மஹாராஜரவர்களால் உத்திரவைப்பெற்றேம்.

7. அந்த உத்திரவுபெற்ற உடனே; மலையாளத்தாரே சிரேஷ்டஜாதியாரென்றும், இதரஜாதியார் கேவலரென்றும் எண்ணி இருக்கும்இவ்வந்தகாரமான ராஜியத்தில், நம்முடைய ஜாதியின் பெருமையை பிரசித்தப்படுத்த, எந்தபுண்ணிய புருஷன் முன்வருவரோவென்று தேடுங்கால்; தாங்கள் இதவிஷயமாக அநேக சாஸ்திரங்களை ஆராய்ந்து புராணமெழுதியும், இந்தஜாதியாருடைய ஆதிஅந்தத்தை முன்னுக்குகொண்டுவர உழைப்பவரென்று ஒரு அன்பரால் கேள்வியானேம்.

8. ஆகையால், தாங்கள் தயவுசெய்து நமது ஜாதியாருக்குள்ள ஆதி அந்த விஷயங்களைப்பற்றி அந்த பிராந்தியங்களிலிருக்கும் வைதீக பிராம்ஹணர்களால் நற்சாக்ஷி பத்திரிகைகளையும், அவற்றிற்காதாரமான நியாயங்களையும், சோதருமஇருக்ஷீஷ்பாவையில் ஒருவிண்ணப்பத்தை மாக்ஷிமைப்பொருந்திய மஹாராஜரவர்களுக்கு அனுப்பிவைக்கும்படியாகச் செய்வித்தும்; அவைகளால் நமது ஜாதிக்குடைய சுதந்தரங்களை இந்த பிராந்தியங்களில் அனுப்பிவிக்கும்படி செய்வித்துதர பிரார்த்திக்கிறேம்.

இப்படிக்கு தங்களன்புள்ள சகோதிரர்கள்;

1. டி. எல். வீராசாமிநாயடு பிளீடர் போஸ்டுமேஸ்டர் 2. என். ராகவலுநாயடு, 3. பி. வெங்கிடசாமிநாயடு, 4. வி. பெத்தநாயடு, 5 வி. பெருமாள்நாயடு, 6. எஸ். பி. ராமசாமிநாயடு, 7. டி. பி. கோபாலசாமிநாயடு, 8. வி. துரைசாமிநாயடு, 9. எம். வெங்கடசுப்புநாயடு, முதலானவர்கள்.

இம்மாதிரியாகவே பின்னும் பலர் இக்காலத்திற் தமக்கு சம்பவித்திருக்கும் பல கஷ்டநிஷ்டூரங்களைப்பற்றி பலகடிதங்களை அனுப்பினர்கள். விரிவஞ்சி பதிக்காமல்விட்டோம். இவர்களுக்கு நன்றியாமையா சரித்திர சாதனங்கலின்னும் வெளியாகாமலிருக்கு மிக்காலத்தில திருப்திகரமான புராணத்தை எப்படி எழுதுவதென்று ஏக்கங்கொண்டிருக்கையில்,

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
"மடிதற்று தான் முந்துறும்"—அதாவது,

தம் குடியனை உயரச்செய்யவேண்டி முயற்சிகளைச் செய்வோருக்கு தெய்வம் உதவிசெய்ய முன்வந்து நிற்கும்—என்றும்,

"குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானை
"சுற்றமாச் சுற்று முலகு"—அதாவது,

குற்றமற்றவனுகி தன்குலத்தை உயரச்செய்ய விரும்புவோருக்கு உலகத்தாரும் உரவாடி உதவிசெய்வார்கள் என்றும், தெய்வப்புலவர் செப்பிய திருக்குறல்கள் நினைவிற்குவர ; இவ்வாக்கியங்களின் உண்மையைக் கண்டறிய சந்தித்து உழைத்துவருகையில் "இந்தபலிஜவாருடைய பூர்வசந்ததிகள் அல்லது பிதாமாதாக்களான நரபதிகளுடைய ஆதிஉற்பத்தி சரித்திரசாசனமாக சென்னை சர்வகலாசாலையின் ஸமஸ்கிருதபாஷா பண்டிதரும், கவர்ன்மெண்டு தெலுங்குதுபாஷிகருமாகிய டாக்டர் ஆப்போர்ட் சாஸ்திரிகளால் பதிக்கப்பெற்றிருக்கிறதும்என்றனமக்குக்கிட்டியது அதில்பலிஜவாரின் ஆதி தந்தைகளான நரபதிகளுடைய ஆதி உற்பத்தியைப்பற்றி அடியிற்கண்டபடி எழுதி இருக்கிறார்.

THE ORIGIN OF NARAPATIS.

"In the preface to the Balabhagavatam, Konerinatha gives an accurate account of the family of his patron; which family is known as the dynasty of the Narapatis. As Konerinatha, who hailed from Duvvuru, was a son of a former Minister, he enjoyed as such a peculiarly favourable position for being well informed about the family history of his protector. The genealogical information about the Narapatis supplied by Konerinatha coincides with the statements contained in the Vasucaritram of Ramabhusana, in the Narasabhupaliyam of Saradamurti, in the Narapativijayam or Ramarajiyam, the family chronicle of the younger line of the Narapatis and with those furnished by inscriptions.

The origin of the Narapatis is in all the above four works and in the *Devanhalli inscription* traced back to *Arjuna* and thence to *Chandra*. The Narapatis are moreover styled Calukyas. According to the Narapativijayam and to the Devanhalli inscription *Nandaraja* is the eighty-third descendant of the *Pandava Arjuna*, and Calukya the ninth descendant of Nanda. From Calukya descended in course of time the well-known Vijala or Bijjala of Kalyana. This Vijala, who belonged to the family of the Kalacuryas, though he usurped the throne of the Calukyas of Kalyana, is himself called Calukya Narayana, he is also known as Venga Tribhuvana Malla.

The son of Vijala generally known as the Yuvaraja, was, according to the Narapativijayam, the father of Hemmaliraja, who in his turn became the father of Tatapinnaraja, who in the Balabhagavatam, Vasucaritram, and Narasabhupaliyam heads the list of the Narapati dynasty

The Narapatis are therefore, according to the Narapativijayam, the representatives of Vijala, and, like him, they are repeatedly called Calukyas. The Narapatis themselves rose to great power espicially in the territoreis of the Nizam, the Northern Circars and Ceded Districts"

INSCRIPTIONS.

From Narayana,—Brahma, Atri, Chandra, Budha Pururavas, Ayu, Nahusa, Yayati, Puru, &c., are descended the Bharatas, and as the 83rd in descent from *Arjuna* is given in the Narapativijayam—Nanda, his 9th descendant is Calukya and from him is descended Vijala or Bijjala of Kalyana. His grandson is Vira Hemmaliraya, Hemmaliraya's son is Tatapinna. &c., &c.,

GENEALOGICAL TREE OF THE NARAPATIS

Vijala of Kalyana
|
Hemmaliraya
|
Tatapinnama
|
Somadeva.
|
Raghavadeva.
|
Pinnamaraja or Pinnasauri
|
Arviti—Bukkaraja

Singaraja | Ramaraja

Timmaraja. | Kondaraja. | SriRangaraja

Kona. Timma. Ramaraja,—son-in-law of KrisnaDevaRaya

Vide Pages 25, 26 and 73, A CONTRIBUTION TO THE HISTORY OF SOUTHERN INDIA. PART I. INSCRIPTIONS. BY DR. GUSTA OPPERT, PH. DR. Professor of Sanskrit, Presidency College; Telugu Translator to Government, Madras &c.,

இந்த இங்கிலீஷ் வாசகத்தின் கருத்து.

நரபதிகளுடைய ஆதி உற்பத்திவிவரம்.

பால பாகவதத்தின் முகவுரையில் கோணேரி நாதர், தம் பாட்டுக்குடைய **நரபதி நாயகனுடைய** சந்ததி விவரத்தைச் சரியாக எழுதியிருக்கிறார்— அந்த கோணேரிநாதர் உள்ளூர் கிராம வாசியும், புராதன நரபதி ஸமஸ்தானத்தில் மந்திரியின் குமாரருமாகையால்; அந்த நரபதிகளுடைய ஆதி உற்பத்தி விவரங்களைகாட்டும், இராஜ ரிகார்ட்டுகளைப் பூரணமாகப்படித்துப் பார்த்து, சரித்திர மெழுத அனுகூலமிருந்தது. அந்த கோணேரிநாதர் எழுதிய வம்சாவளியானது, இராமபூஷணர் இயற்றிய வசுசரித்திரம், சாரதா மூர்த்தி இயற்றிய **நரசபூபாலியம், நரபதி விஜயம், இராமராஜீயமாதி** கிரந்தங்களுக்கும், நரபதி குடும்பத்தின் சிலாசாசனங்களுக்கும் சரியாக இருக்கிறது—

மேல் குறித்த **நான்கு** கிரந்தங்களினாலும்; **தேவன்ஹள்ளியில்** அகப்பட்ட சாசனங்களினாலும், நரபதிகள்-**சந்திர** வமிசதிலகராகிய **அர்ஜுனனுக்கு** நேரான சந்ததிகளென்று ஸ்பஷ்டமாகிறது. நரபதிகளுக்கு சாளுக்கியரென்ற பெயருமிருந்தது. நரபதி விஜயத்தின் படியும், தேவன்ஹள்ளி சாசனங்களின்படியும், பாண்டவ **அர்ஜுனனுக்கு** என்பத்திமூன்றும் (83) சந்ததியாக **நந்தா** மஹாராஜன் பிறந்ததாகவும்; அந்த நந்தா மஹாராஜனுக்கு சாளுக்கியன் **ஒன்பதாவது** சந்ததி என்றும்; அந்த சாளுக்கியன் சந்ததியில், **விஜ்ஜல** இராஜன் பிறந்து, காலசூரியஜாதியை ஸ்தாபித்தும், கலியாண புரியில் ஆண்டதாகவும்; அந்த விஜ்ஜலனுக்கு, யுவராஜனும் (நரபதி விஜயத்தின்படி) அவனுக்கு ஹெம்மளராஜனும், அவனுக்கு தாத பின்னமராஜனும் பிறந்ததாகவும், அந்த **தாத பின்னமராஜு** (பால பாகவதம், வசுசரித்திரம், நரசபூபாலியம் முதலான கிரந்தங்களின்படி நரபதிகளுக்கு தலைவனாகிறபடியால், **நரபதிகள் சந்திரவமிச க்ஷத்திரியர்களேயாகின்றனர்** என்று தீர்மானமாகிறது.

அதற்குச்சரியான வமிச விருக்ஷமாவது

ஸ்ரீமன்நாராயணனால்,-பிரம்மாவும்,-பிரம்மாவினால் அத்திரியும்,-அத்திரியினால் சந்திரனும்; பிறகு புதன்—புரூரவன், ஆயு, நஹுஷன், யயாதி, புரு முதலானவர்கள் பிறந்தார்கள். அந்த **பாண்டவர்** அர்ஜுனனுடைய 83-வது சந்ததி **நந்தா** மஹாராஜனும், அந்த நந்தனுடைய 9-வதுசந்ததி, சாளுக்கியனும், அவனால் **விஜ்ஜலனும்** ஜனிக்க, அந்த விஜ்ஜலனுடைய சந்ததியில்

ஹெம்மராயலு
|
தாத பின்னமராயலு
|
சோமதேவராயலு
⋮

இராகவ தேவராயலு

|

பின்னசவுரி

|

ஆர்வீடி புக்கராயலு

|

சிங்கராயலு

|

* இராம ராயலு

|

திம்ம ராயலு

|

கோதண்டராயலு

|

ஸ்ரீரங்கராயலு

|

கோனராயலு, திம்மராயலு. பிறந்து ஆண்டார்கள்

*இராமராயலு. இவர்தான் ஸ்ரீ நரபதி கிருஷ்ணதேவராயலு மருமகனர். இந்த கிருஷ்ணதேவராயலுடைய தம்பி அச்சுததேவராயலு, அந்த அச்சுதேவராயலு சந்ததிகள்தான் தஞ்சைசேவப்ப நாயடு, அச்சுதப்ப நாயடு, விஜயராகவலு நாயடும், அவர்களுடைய பந்துக்களாகிய மதுரையிலாண்ட நாயடு முதலானவர்களாம்.

இந்த சரித்திர வமிசாவளி சாசனத்தினல், நரபதிகள் ஆதி சந்திரவமிச க்ஷத்திரியர் என்றும்; ஆகவே அந்நரபதிகளுடைய நேரான சந்ததிகளாகிய தஞ்சை, திருச்சி, மதுரை முதலான விடங்களில் ஆண்ட நாயடு காருகளாதும் பலிஜவாரும் சந்திரவமிச க்ஷத்திரியர்களென்றே ஸ்பஷ்டமாகிறதல்லவா?

மேல்கண்ட சாசனத்தைப் படித்து பார்ப்போர், அது நரபதிகளுடைய பெண் சந்ததியைக் காட்டுப் வம்சாவளி என்று எண்ணக்கூடும். அக்குறைவை நீக்கக் கருதியே, அந்த நரபதிகளின் ஆதி ஆண் சந்ததி வமிசாவளி சாசனத்தைப் பதிப்பிக்க தேடித்திரிகையில்; தெய்வானுகூலத்தினல் இப்போது அந்த நரபதி ஸமஸ்தான பிரபுவாக இருக்கும் ஆனைகுந்தி ஸ்ரீமத் ஸ்ரீரங்க தேவராயலு இராவ் சாஹேபவர்கள் சமஸ்தான ரிகார்டிலிருந்த புராதன சாசனத்தை, தத்காலம் விஜயநகரஸமஸ்தான சரித்திர கிரந்தத்தை எழுதிவரும், பிரம்மஸ்ரீ பெங்களூர் சூரிய நாராயணராயவர்கள் (Brahma Sri Bangalore, Surya Narain Row Garu, B. A. M. R. A. S.) சகாயத்தினல் நான் பெற்று அதன் கருத்தை மாத்திரம் இதனடியிற் பதிப்பிக்கலானேன்.

ஸ்ரீ விஜயநகர நரபதி ஸமஸ்தான ஆண் சந்ததியைக்காட்டும் சாசனத்தின் வமிசாவளி சங்கிரகம்.

ஸ்ரீநாராயணமூர்த்தியால்

1. பிரம்மன்.
2. அத்திரி.
3. சந்திரன்.
4. புதன்.
5. புரூரவன்.
6. ஆயூ.
7. நகுஷன்.
8. யயாதி.
9. புரு.
10. ஜன்மேஜயன்.
11. பிராசீனவான்.
12. சரியாதி.
13. அகம்யாதி.
14. சர்வபவுமன்.
15. ஜயத்சேனன்.
15. அராஜன்.
17. மஹாபாகு.
18. அயதாரியதா.
19. அகிரோதனன்.
20. தேவதிதி.
21. ருசகன்.
22. ருச்சராஜன்.
23. அனநியன்.
24. திரசன்.
25. ஜன்மேஜயன்.
26. துஷியந்தன்.
27. புருதன்.
28. பூமனியு.
29. சுஹோத்திரன்.
30. அஸ்தி.
31. நிகும்பன்.
32. அஜீமீடன்.
33. சம்வரன்.
34. குரு.
35. விரோதன்.
36. அனுசுவன்.
37. பரிக்ஷித்து.
38. பீமசேனன்.
39. பிரதீபன்.
40. சந்தானு.
41. விசித்திர வீரியன்.
42. பாண்டுராஜன்.
43. அர்ஜுனன்.
44. அபிமனியன்.
45. பரிக்ஷித்து.
46. ஜன்மேஜயன்.
47. சதாநிகன்.
48. சகஸ்திரன்.
49. அசுவமேதஜயன்.
50. நிஜகிருது.
51. உத்தரன்.
52. சித்தாரதன்.
53. சுசிரதன்.
54. சுசேனன்.
55. சுநீதி.
56. நுரூசச்சு.
57. நளன்.
58. பாரிபிளவன்.
59. கனயன்.
60. மேதாவி.
61. நிருபஞ்சயன்.
62. தூர்வன்.
63. புருஹாதிரன்.
64. சுதர்சனன்.
65. சுதாநீகன்.
66. தூர்த்தபி.
67. விஹிநரன்.

68. தண்டபாணி.
69. நிமி.
70. க்ஷேமகன்.
71. நிபுஞ்சன்.
72. பிரதியோதரன்.
73. பாலகன்.
74. விசாகயாகன்.
75. அஜகன்.
76. நந்திவர்த்தனன்.
77. சிசுநாகன்.
78. காகவர்ணன்.
79. க்ஷேமதர்மன்.
80. க்ஷேத்திரகன்.
81. விதாரகன்.
82. தர்மகன்.
83. ஆஜயன்.
84. நந்திவர்த்தனன்.
85. மஹாநந்தி.
86. சிசுநாகன்.
87. மகாபத்மன்.
88. மவுருவி.
89. சந்திரகுப்தன்.
90. வாரிராஜன்.
91. அசோகவர்த்தனன்.
92. சுயசன்.
93. சங்கீதன்.
94. சாலிசாகன்.
95. சோமசர்மன்.
96. சந்தானவாஹி.
97. புஹாஅதிரதன்.
98. புஷியமித்திரன்.
99. அக்கினிமித்திரன்.
100. தேவபூதி.
101. கண்வன்.
102. வாசுதேவன்.
103. பூமித்திரன்.
104. நாராயணன்.
105. சுதர்சனன்.
107. கிருஷ்ணன்=ஆந்திரன்.
108. ஸ்ரீ சாந்தகர்ணன்.
109. யவுர்ணமாசன்.
110. லம்போதரன்.
111. சிபிலிகன்.
113. மேகாசுவரன்.
114. அஷமான்.
115. அனிஷ்டகர்மன்.
116. அலேயன்.
117. பதலகன்.
118. பிரபலசேனன்.
119. சுநந்தன்.
120. சகோரன்.
121. சிவஷியாதி.
122. பூரிமான்.
123. சிவசிரன்.
124. சிவஸ்காந்தன்.
125. யஞ்சன்.

126 விஜயன்—127 சந்திரபீஜன்—128 சுபலன்—129 துருஷன்
130 சிசுநந்தி,—131 சோசநந்தி—132 பிரவீரகன்—133 புஷ்பமித்திரன்
134 நந்தா மஹாராஜன்

135 சாலுக்கியன்

136,-விஜ்ஜல ராஜன் 137,-விஜயதேவன் 138, விஷ்ணுவர்த்தனன்

136,-விஜ்ஜல ராஜன்:
1. வீரஹெம்மலன்
2. தாத பின்னன்

138, விஷ்ணுவர்த்தனன்:
1. அணுவமஹாராஜன்
2. நரசிம்ஹ தேவன்

பெண்சந்ததி	ஆண்சந்ததி
3. சோமதேவன்	3. இராமதேவராயலு
4. இராகவதேவன்	4. பிரதாபராயலு
5. பின்னசவுரி	5. ஜம்புகேசவராயலு
6. புக்கராஜன்	(இவருக்கு சந்தானமில்லாமையால் இவர் தம்பி (6)திம்மராயலு பட்டம் பெற்றார்)
7. இராமபத்திரன்	அந்தசந்ததியில்
8. கோதண்டராமன்	7. திம்மராயலு
9. ஸ்ரீராமன்	
10. இராமாராஜா=கிருஷ்ணதேவராயலுடைய மருமகனார்	8. ஈசுவரராயலு
9. நரசிம்ஹராயலு	10. திம்மராயலு

11 வீர நரசிம்ஹராயலு—12 கிருஷ்ணதேவராயலு—13 அச்சுததேவராயலு

இவர்களுடைய சந்ததிகளே

தஞ்சையிலாண்ட-சேவப்பநாயடு-அச்சுதப்பநாயடு-இரகுநாதநாயடு, விஜயராகவலுநாயடு-மன்னாறுநாயடு-செங்கமலதாசநாயடும்,- அவர்களுடைய சம்பந்திகளே மதுரை, திரிசிராப்பள்ளியில் ஆண்ட 1. விசுவநாதநாயடு, 2. குமாரகிருஷ்ணப்பநாயடு, 3. பெரியவீரப்பநாயடு, 4. விசுவநாதநாயடு, 5. லிங்கய்யநாயடு, 6. விசுவநாதநாயடு, 7. முத்துகிருஷ்ணப்பநாயடு, 8. முத்துவீரப்பநாயடு, 9. திருமலைநாயடு, 10. முத்துஅளகிரிநாயடு, 11. சொக்கநாதநாயடு, 12. முத்துலிங்கய்யநாயடு, 13. இரங்ககிருஷ்ணமுத்துவீரப்பநாயடு, 14. மங்கம்மகாரு, 15. விஜயரகுநாத சொக்கலிங்கநாயடு, 16. மீனாக்ஷியம்மகாரு, 17. பங்காருதிருமலைநாயடுகாரு, 18. விஜயரகுநாதநாயடுகாருமாம்—இந்த நாயடுகாருகளுடைய சம்பந்திகளே, இலங்கை என்னும் சிம்ஹலதீபத்தில் (கண்டியில்) ஆண்ட மதுரைபெரியகிருஷ்ணப்ப நாயடுகாருடைய மைத்துனராகிய (1) விஜயபூபால மஹாராஜுகாரு (2) கொண்டல மஹாராஜுகாரு, (3) அங்கதாங்கித மஹாராஜுகாரு, (4) இராஜாதிராஜமஹாராஜுகாரு, (5) விகிரம அல்லது கீர்த்தி சிம்ஹலமஹாராஜுகாருமாம். இப்போது திருவையாற்றில் சப்ரிஜிஸ்டிராராகவும்,இராஜபென்சன்தாரராகவும் இருக்கும் ஸ்ரீமஹாராஜா தியாக சிம்ஹள மஹாராஜரவர்களும் இந்த கண்டிராஜர்களுடைய சந்ததியாம்; ஆகவே,

இந்த இரண்டுசாசனங்களிலும், இந்த முகவுரையின் 8-9-10வது பக்கங்களிற் பதிப்பித்திருக்கும் ஸ்ரீவல்லிபுத்தூர் **ஸ்ரீவைஷ்ணவ வடகலை தென்கலை ஆசாரிய சுவாமிகளுடைய தத்காலிக ஸ்ரீமுகப் பத்திரிக்கையினாலும், நரபதிகளும்,** அவர்களுடைய பின்சந்ததிகளாகிய **பலிஜநாயடுகாருகளும் ஆதிசந்திரவமிச க்ஷத்திரிய பாண்டவர்களுடைய பரம்பரையில் வந்தவர்களென்று ஸ்பஷ்டமாதும்.** ஆயினும் இந்த பலிஜவாருடைய ஆதி அந்தஸ்து, மத்தியகாலமகிமை தத்காலஸ்திதிகளைச் சாங்கோபாகமாகத் தெரிவிக்கும் சாசன சரித்திரங்கள் தக்கபடி கிட்டாமையால், இந்த கிரந்தத்தை எழுதுவதற்குவேண்டிய விஷயங்களுக்கு பலவிடங்களுக்கு நேரில்போயும், பலபாஷாகிரந்தங்களை பலவருஷங்களாகப் படித்தும், விசாரித்தும் வந்ததில், திருப்திகரமான சரித்திர சங்கதிகள் விரும்பியபடி கிட்டாமல் அதேகவலையாகவிருந்தேன்.

இப்படிப்பட்ட காலத்தில் இச்சரித்திரத்திற்கு இன்றிமையா சில சரித்திர சாசனாதி கிரந்தங்களை இதனடியிற் குறித்த கனவான்களும், அன்பர்களும் எமக்கு இரவலாகவும், இனாமாகவும் கொடுத்து உதவினார்கள். அவர்களில் முக்கியஸ்தர்கள் எவர்களெனில், சென்னை கவரன்மெண்டாரவர்கள், கோயமுத்தூர் டிஸ்டிரிகட்டு கலெக்டர் மேஸ்டர் சி. மவுன்சி துரையவர்கள், (C, Mounsey Esq, I. C. S.) சித்தூர் டி- ஜட்ஜியவர்களாகிய மேஸ்டர் ஜே. காட்டன் துரையவர்கள், (J. J. Cotton Esq, I. C. S.) சென்னை கண்காக்ஷிசாலைத்தலைவர் மேஸ்டர் தர்ஸ்டன் (Dr. J. Thurston) துரையவர்கள், விஜயநகர நரபதி ஸமஸ்தானத்தின் தத்கால பிரபுவாகிய ஸ்ரீரங்கதேவராயலு ராவ்சாஹேபவர்கள், இந்து அமெரிக்காஜோதிஷசித்தாந்த பிரபாகரரும், விஜயநகர ஸமஸ்தான சரித்திர கிரந்தகர்த்தருமாகிய பிரம்மஸ்ரீ, சூரியநாராயண ராயரவர்கள், பிரம்மாச்சாரி சுவாமி நாராயணதாசரவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் பத்திராசிரியராகிய மஹாவித்துவான் ஸ்ரீ இராகவையங்காரவர்கள், சென்னை செந்தோம் காலேஜ் இயற்றமிழ் பண்டிதர் ஸ்ரீ வெங்கடராம ஐயங்காரவர்கள், சென்னை வித்தியா வதிஆபீசு ஆந்திரபாஷா பண்டிதர் ஸ்ரீமத் துரைசாமி ஐயங்காரு, சென்னை டெலகிராப் ஆபீசு ஸ்ரீமான் விஜயராகவலு நாயடுகாரு, சென்னை ஐகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் பம்மல், சம்பந்த முதலியாரவர்கள், சென்னை அகவுண்டாண்டு ஜெனரலாபீசு ம-ா-ா-ஸ்ரீ கனகசபைப்பிள்ளை அவர்கள், ஐதிராபாத்து ம-ா-ா-ஸ்ரீ போஜராஜு நாயடுகாரு, ம-ா-ா-ஸ்ரீ இரங்கசாமி ராஜுகாரு, கோயமுத்தூர் தாசீல்தாரர் ம-ா-ா-ஸ்ரீ பி-ஏ - சென்னகேசவுலுநாயடுகாரு, தாராபுரம் சவுக்கார் ம-ா-ா-ஸ்ரீ அளகிரிசாமிநாயடுகொரு, புள்ளாச்சி ஓவர்சியர் ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி நாயடுகாரு, சென்னை பகவத்கீதை ம-ா-ா-ஸ்ரீ அப்பாய்நாயடுகொரு, பாளையங்கோட்டை கலெகட்டராபீசு எதிராஜலுநாயடுகாரு, கூடலூர் திருப்பாதிரிப்புலியூர் ம-ா-ா-ஸ்ரீ அரங்கசாமிநாயடுகாரு, பாபட்ல ம-ா-ா-ஸ்ரீ சீதாராமநாயடுகாரு கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ சுப்புராய ஆசாரியார் முதலானவர்களாம். இவர்கள்யாவருக்கும் நன்றியறிந்த வந்தனஞ் செய்யக்கடமைப்பட்

டிருக்கிற தன்றியில்; இத்தேசத்தின் புராதன சரித்திரத்தைப் பற்றி எனது குமாரன் அரங்கநாதனுக்கும், அவனுடைய தோழர்களும் அடிக்கடி போதித்து வந்த விஷயங்களைத்திரட்டி இப்புத்தகத்துக்கு **நூன்முகமாக** எழுதிக் கொடுத்த என் ஆப்த சிநேகிதராகிய போலீசு டிபார்டுமெண்டு ம-ா-ா-ஸ்ரீ நஞ்சராவுத்தரவர்களுக்கும் நன்றியறிந்த வந்தனம் சொல்லக்கடமைப்பட்டிருக்கின்றனன்.

இந்த முகவுரைக்குப்பின் சேர்க்கப்பட்டிருக்கும் " **தரிசனகிரந்த**,"பட்டியைப்படித்துப் பார்ப்போருக்கு, இப்புத்தகத்தை எழுத, நான் பரிசோதித்த கிரந்தங்கள் இன்னவை என்று விளங்கும். இவ்வளவு புத்தகங்களைப்படித்துக் கொண்டும்,இதுவிஷயமாக சரித்திரசாசனங்களைத்தேடிப்பிடிக்கவும்,பலவிடங்களுக்குப் போய்படாதபாடுபட்டுத்தேடிபுத்தகமெழுதிப்பதிப்பிக்குந்தருணத்தில்;கோயமுத்தூரில் **பிளேகு** என்னும் கொடியநோய்ப்புகுந்துக்கொள்ளையிட்டுவரவே;இதை என் சொந்தஅச்சில் பதிப்பிக்க அனுகூலப்படாமல்,சென்னையில் பி-ஆர்பன் அசைலம் பிரசு, டரவுடன் கம்பனி பிரசு, ஆநந்த பிரசு கிச்சினர் பிரச், பண்டிதமித்திரன் பிரசு, எம். எல்-வி-பிரசு, கோமுயத்தூர் கலாநிதி பிரசு ஆகிய பல அச்சுகூடங்களில்காண்டம் காண்டமாகப்பதிப்பித்ததில், புரூபுகளைசரியாகத்திருத்த அனுகூலபடாமையால், பலவித பிழைகள் மலிந்துவிட்டதன்றியில்; இதன் நூன்முகம், இரண்டாம்காண்டம் முதலான சிலபாகங்கள் சிறியஎழுத்துக்களில் பதிந்து புத்தகத்தின் பெருமையையேக் கெடுத்துவிட்டன.இம்மட்டோ? இடையில் என் குடும்பத்திலுண்டான சாவு சங்கடங்களினாலும், இதைப்பதிக்கச் சென்னையில் குடும்பத்தோடுபோய்சில மாதங்கள் தங்கி வியாதி வியாகூலத்தினால் வருந்தியதனாலும், ஏராளமான பொருளை செலவிட்டு உழைத்த கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல.இப்படிக்கெல்லாம்வருந்தி வருத்தப்படினும்,இப்புத்தகம்யாருடையநன்மையைக்கருதி எழுதி வெளியாக்கினேனோ,அவர்கள் இதைப்பூரணமாகப்படித்து;இதனால் கருதப்பட்டபலனையும், சந்தோஷத்தையும்பெறுவார்களாகில்,அதுவேயான்பட்ட பிரயாசைக்கு பிரதிபலனாகும்.மேல்கண்ட எதிர்ப்பாராத கஷ்டநிஷ்டூரங்களினால் இந்த இரண்டாம்பதிப்பைகுறித்தகாலத்துக்குள் பதிப்பித்து வெளியாக்க அனுகூலபடாமையால்,இதற்கு கையொப்பகாரராகி முன்பணம் அனுப்பி இதுவரையிலும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தகையொப்பகாரகனவான்கள்,காலதாமதமானதைக்கருதி வருந்தாமல், க்ஷமிப்பார்களென்று எண்ணுகிறேன்-

மேலும், இந்த இரண்டாம்பதிப்பு எழுத ஆரம்பித்தபோது இது சுமார் 20-பாரங்களுக்குள் முடியுமென்றெண்ணி விளம்பரத்தில் ஒரு நிதானமான விலையைக்குறித்திருந்தேன்-பிறகிட்டு கிடைத்த இன்றிமையா விசேஷ சாசன சரித்திரங்களினால், புத்தகம் பெரியதாகி விலையையும் சற்று உயர்த்த வேண்டி வந்தது-இந்த உயர்ந்த விலையைக்கொடுத்து இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர் சிலரேயாகையால்; ஏழைகளுக்கும் உபயோகமாகும்படி இப்

புத்தகத்தின் சாராம்சங்களைமாத்திரம் சங்கிரகமாக தமிழிலும், தெலுங்கிலும் பதிப்பிக்கலானேன்; பதிப்பித்தாலுமென்ன?-சுல்பவிலையுள்ள இச்சங்கிரகப் புத்தகங்களையும் வாங்கிவாசிக்கச் சக்தியற்ற ஏழைபலிஜவாருகள் பல்லாயிரம்பெயர் இருக்கின்றனர்-இவர்களுக்கு தம்ஜாதியின் அருமைப்பெருமைகளை அறிவிக்கும்வழிஎப்படி?இப்படிப்பட்டஏழைபலிஜவாருக்கு இப்புத்தகங்களை இலவசமாகக்கொடுக்கலாமென்றெண்ணில் அதுவும் சாத்தியமாகாது-ஏனெனில், இந்த பலிஜவாருபுராணத்தின் முதற்பதிப்பை அச்சிட்டதில், கிட்டதிட்ட 100-காபிகள் வரையில் விற்பனைக்குக் கொடுத்து, பாக்கி நூறுகணக்கான காபிகளை அநேகருக்கு இனமாகவும், இலவசமாகவும் கொடுத்ததில், அதிக நஷ்டமடைந்ததன்றியில்; இந்த இரண்டாம்பதிப்புக்கும் எட்டுவருஷ காலங்களாக பலவிடங்களிற்சென்றும், சரித்திரசாசனங்களைத்தேடிமொழிப்பெயர்த்தவர்களுக்கும், புது கிரந்தங்களை வாங்கியதற்கும், இதை சென்னை முதலான விடங்களுக்குப்போய் பதிப்பித்ததற்கும் கிட்டதிட்ட 2000ரூபாய்வரையில் செலவிடப்பட்டிருக்கிறது; ஆக, முதற்பதிப்பில் 1000-ரூபாயும், இரண்டாம்பதிப்பில் 2000ரூபாயாகமொத்தம் 3000ரூபாயாகிறது-இப்போதுபதிப்பித்திருக்கிற 1000காபிகளை பிரதி ஒன்று ரூ 1-8-0 ரூ 1 அணா 12 விற்றாலும் பாதிதொகை அதாவது அச்சுகூலியும், காகிதத்தின்கிரயமும், பயிண்டு கூலியும் கட்டிவருவது கஷ்டமல்லவா?

ஆகவே, இத்தக்ஷணதேசத்து பலிஜவாருகளில் தனகனவான்களாகவும், ஜமீன், மிட்டாபாளையப்பட்டு, மிராசுதாரர்களாகவும், வியவசாயவர்த்தக பிரபுக்களாகவும இருக்கிறவர்கள், சுஜாதி அபிமானம்பூண்டு,இதில் பலகாபிகளை வாங்கி தமது ஏழை பந்து மித்திரர்களுக்கு தருமார்த்தமாக கொடுத்து படிக்கும்படிசெய்தால்;அவர்களுக்கும் அவர்கள் ஜாதியாருக்கும் சுகிர்தம் உண்டாகுமென்பது திண்ணம்.கடைசியாக-இதிலுள்ள எல்லாவித பிழைகளையும்க்ஷமித்தும்,இதில் சேர்க்கத்தகாதவை இன்னவைஎன்றும்,சேர்க்கவேண்டியவை இன்னவை என்றும் எனக்கும் தெரிவித்தால், மனமுவந்தவந்தனத்தோடு மூன்றாம்பதிப்பை திருப்திகரமாகப்பதிப்பிக்க சித்தமாக இருக்கின்றனன்.

கோயமுத்தூர்,
கலாநிதி ஆச்சிரமம்.
15—8—1905.

இங்ஙனம்,

சேலம் பகடால. நரசிம்மலு நாயடு.

☞ இப்புத்தகமும் இதன் தெலுங்கு மொழிப் பெயர்ப்புப் புத்தகமும் வேண்டியவர்கள் கோயமுத்தூர் அவனாசி ரோட்டில் "கலாநிதி" அச்சாபீசில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

நூன்முகத்தின் அட்டவணை.

மகமதியர்கள்.

முதற்காண்டத்தின் அட்டவணை.

பெயர் அட்டவணை.

(அட்டவணை முற்றிற்று.)

இந்த கிரந்தத்தை எழுத எமக்கு

உதவியாக இருந்த

ஸமஸ்கிருத, தெலுங்கு, தமிழ், ஆங்கிலபாஷா தரிசன கிரந்தங்களாவன.

ஸமஸ்கிருத கிரந்தங்கள்.

இருக்குவேதம் ...
யஜுர்வேதம் ...
புருஷ சூக்தம் ...
சாந்தோக்கிய உபநிஷத்து ...
தைதிரேயாதி உபநிஷத்துகள்
கடவல்லி ...
மநுதர்ம சாஸ்திரம் ...
பராசர ஸ்மிருதி ...
தக்ஷஸ்மிருதி ...
பிருஹத் சம்ஹிதை ...
யஞ்ஞியாவல்கிய ஸ்மிருதி ...
ஸ்ரீகிருஷ்ணயஜுர் வேதம் ...
சுக்கிலயஜுர் வேதம் ...
ஆபஸ்தம்பஸ் மிருதி ..
ஹிரண்ய கேசி சூத்திரம் ...
அசுவலாயனம் ...
பாகவதம் ...
பாரதம் ...
ருக்மணி பரிணயம் ...
சாஹித்திய ரத்னாகரம் ...
இரகுநாத பூப விஜயம் ...
இரகுநாதவிலாசம் ...
பாரிஜாதா பஹரணம் ...
ஆத்ம பரிக்ஷை ...
நளாபியதயம் ...
ஆநந்த ராகவ நாடகம் ...
விஷ்ணு புராணம் ...
மச்ச புராணம் ...
வாயுபுராணம் ...
பிரம்மாண்ட புராணம் ...
பிரம்மபுராணம் ...
பத்மபுராணம் ...
சிவபுராணம் ...
நாரதீய புராணம் ...
மார்க்கண்டேய புராணம் ...
அக்கினி புராணம் ...
பவிஷியத் புராணம் ...
பிரம்மவைவர்த்த புராணம் ...
இலிங்க புராணம் ...
வராஹ புராணம் ...
ஸ்காந்த புராணம் ...
வாமன புராணம் ...
கூர்ம புராணம் ...
சதுர்தண்டி பிரகாசிகைமுதலியன

தெலுங்குபுத்தகங்கள்.

பாகவதமு ...
பிரவுடகவுலுசரித்திரமு ...
ஆந்திர கவுலுசரித்திரமு ...
மநுசரித்திரமு ...
வசு சரித்திரமு ...
நரபதி விஜயமு ...
நரசபூ பாலியமு ...
பாலபாகவதமு ...
இராமசித்தீயமு ...
வித்தியாரணிய சரித்திரமு ...
கவுரிபுத்திர சரித்திரமு ...
இராயண பாஷ்கர சரித்திரமு
பாரிஜாதாபஹரணம் ...
தஞ்சாவூரிவாருநாயனிசரித்திரமு
வெலம கோத்திரசரித்திரமு ...
ஸ்ரீவம்ச பிரகாசிகை ...
விஷ்ணு சித்தீயமு ...
சகலார்த்த சாகரமு ...
தேவன ஹள்ளிசாசனமு ...
ஆமுக்த மாலியோதயமுமுதலியன

தமிழ்புத்தகங்கள்.

அமரர் புராணம் ...
வருண சிந்தாமணி ...
ஜாதிசமய சங்கிரகம் ...
தத்துவ போதினிகள் ...
பிரம்ம நாடகம் ...
பிராமதீபிகை ...
பாரதம் ...

விஷ்ணு புராணம் ...
செந்தமிழ் ...
கம்பர் இராமாயணம் ...
வில்லிபுத்தூரார் பாரதம் ...
பிள்ளை பெருமாளையங்கார் சரித்திரம்
கர்ணாடக ராஜாக்கள் கதை ...
சித்தூர்ஜில்லா கோர்ட்டு தீர்ப்பு
சேலம்ஜில்லா கோர்ட்டுதீர்ப்பு...
அபிதான கோசம் ...
திருக்குறள் ...
ஜீவகசிந்தாமணி ...
போஜசரித்திரம் ...
விகிரமார்க்கன் சரித்திரம் ...
பிங்கள நிகண்டு ...
புறநானூறு ...
தொண்டமண்டலதுளுவ
வேளாளர்நடவடிக்கைசரித்திரம்
தஞ்சைநாயக்கர்விருத்தாந்தம்
அடங்கன் முறை ...
நாலாயிரம் ...

தசோபநிஷத்துக்கள் ...
பெரிய புராணம் ...
எரெழுபது ...
சென்ன பசுவ புராணம் ...
ஸ்ரீ ரங்கம் ஒழுகு ..
பகவத்கீதை ...
சிலப்பதிகாரம் ...
மேருமந்திர புராணம் ...
வீராகமம் ...
குண்டலகேசி ...
மதுரைச் சீமை விருத்தாந்தம்...
தொண்டமண்டல சதகம் ...
மோஹநாங்கி ...
பாவலர் தீபம் ...
கலிங்கத்துப் பரணி ...
திக்குவிஜயம் ...
இராஜபரம்பரை ...
விசுவகர்மபுராணம் ...
சூடாமணி நிகண்டு ..
சூதசங்கிதை ...

இங்கிலீஷ்புத்தகங்கள்.

The Asiatic Journals. Vols. III, V, VI, VII VIII, IX, &c.
The Asiatic Reserches. Vols. XI—XXV.
The Archæological Survey. Vol. II
The Aristocracy of S. India.
The Ancient History of India.
A History of Kalasty.
Contribution to the History of S. India Dr. Oppert.
The History of Vizianagar or a Forgotton Empire.
Never to be Forgotton Empire.
Mr. Cowell's History of India.
Mr. Marshman's History of India.
Hon. M. S. E. History of India.
Mr. Lithbridge's History of India.
Caldwell's History of Tinnavelly.
Mr. Wilk's History of Mysore.
Mr. Bachanan's Mysore.
Mr. Rice's Mysore and Coorg.
Do. Inscriptions, &c.
The Indian Epic Poetry.
The Indian Antiquities.
Dr. E. Thomas's Useful Tables.
The Hindu Mythology, Wilkins.
The S. Indian Inscriptions.
The Indian Review Vol. 1901.
The India Illustrated—Gilbert.
The India and its Natives—Trevor
The Indian Native States.
The Indian Antiquities 1876.
A Gazetteer of S. India.
Do. on Continent of India.
The Census of India 1881, 1891, 1901.
The Indian and Eastern Architecture.
Dr. Walker's Works on India.
Rev. W. Taylor's Works.
Col. Mackenzi's Works.
Wilson's Works.
Ferno Nunz's Letters.
Dr. Layden on Cheras.
Dr. Burgi's Works on India.

Dr. Burnell's Works.
Abur's and Rices Progress of India
Dr. E. Haltzches S. I. Inscriptions Vol. II.
Madras Journal of Education Vol. 1881.
Rev. Foulks on S. Iudian Kings.
Dr. Burnal's S. Indian Paleography.
Velepakam Plats in Indian Antiquities Vol. II.
Bulletins of Museum, Madras Vol. IV, No. 2.
Progress of the Madras Presidency (40 years).
Epigraphia Indica 1902.
Do. Refosh 1889.
An Introduction to Col. Campbell's Telugu Grammar.
Manual Barada's Letters.
The Geneclogical Tables–Prinsep.
Mr. Fleet's Indian Antiquity.
Wilford on Andras.
The Journal of Archeological Survey of India.
The Journal of Assatic Society of Bengal.
Bettany's Worlds History.
Professor Dowson's Papers J. R. A. S. Vol. I.
Mr. Walhouse's Indian Antiquity Vol. X 365.
Father Proenza's Works.
South Indian Chronological Tables.
List of Ancient Monuments 1891.
The Indian Empire—Hunter.
The History of Indian Literature—Weber.
Modern India and Indians—Williams.
Essays relating Indian subjects—Hodgson.
The Religions of India—A. Barth
Hindu Philosophy—J. Davis.
The Ordinances of Maun, Barth.
The Imperial Gazeteer of India.
Ancient History of India, Max Dunche.
Tod's—Rajasthan.
Hindu Tribes and Castes, Sherring.
Caste—Dr. J. Wilson.
Religions of the Hindus do.
Vishnupurana do.
Hunter's, Orisa.
Colebrook's Essays.
A Brief History of Indian People.
History of the Marathas—Grant Duff.
Do. do. M. G. Ranade.
District Manual of N. Arcot.
Do. S. Arcot.
Do. Bellary.
Do. Chenglepet.
Do. Coimbatore.
Do. Cuddapah.
Do. Ganjam.
Do. Godavari.
Do. Kurnool.
Do. Madura.
Do. Malabar.
Do. Nellore.
Do. Nilgiris.
Do. Salem.
Do. S. Canara.
Do. Tanjore.
Do. Trichinopoly.
Do. Tinnevelly.
Do. Vizagapatam.
&c., &c.

பிழைத் திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	20	படிருந்தான்	பட்டிருந்தான்
10	20	நாணேயம்	நாணயம்
,,	29	தேசாபிமனம்	தேசாபிமானமும்
12	13	அந்த	இந்த
16	14	சித்தித்து	சிந்தித்து
19	17	விருதான்	விருந்தான்
29	8	விஜ்ஜனன்	விஜ்ஜலன்
32	12	சாந்தா	சார்ந்த
37	18	ஆந்தான்	ஆந்திரன்
39	22	பாதி	பதி
46	12	பிரதபத்தையும்	பிரதாபத்தையும்
50	19	தரனே	தன்னே
52	14	జోధాయనం	బోధాయన
61	16	கஞகவும்	களாகவும்
64	3	கிருககி	நீக்கி
ஷை	12	காயம்	காலம்
99	10	ணிகுந்தார்	ணிருந்தவர்
104	34	கட்டப்படட	கட்டப்பட்ட
108	33	மூல்லான	முதலான
112	35	பபய்யமநாயுடு	வய்யமநாயுடு
1a	34	பேனதிஞல்	போனதிஞல்
4a	26	இருருக்கும்	இருக்கும்
5a	17	பிறது	பிறகு
7a	3	கோட்யை	கோட்டையை
18c	4	பார்ட்டி	பாராட்டி
245	41	மந்தி	மந்திரி
31a	8	யுல்ல	யுள்ள
33a	10	வர்ந்து	கவர்ந்து
36a	29	சொண்டான்	கொண்டான்
44a	24	முதவான	முதலான
6b	3	திருச்ராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
22b	9	உத்தாரப்படிக்கு	உத்திரவுபடிக்கு
32b	27	தூதவனே	தூதுவனே
39b	7	பார்ச்க	பார்க்க
61b	6	மேஞடில்	மெண்டில்
ஷை	31	நரகம்	நாகம்
85b	23	ஸமஸ்தான்	ஸமஸ்தானம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
195b	27	நாரன்கு	நான்கு
199b	2	நகிக்கு	நதிக்கு
202b	26	முன்டாக	முண்டாக
219b	24	ளோடி	ளோடு
221b	4	படம்	பட்டம்
223b	34	உற்ப்தி	உற்பத்தி
23c	16	மஞ்சல்	மஞ்சள்
2d	14	ஷை	ஷை
9d	29	கவரி	கவுரி
14d	16, 23 26, 29 302	ஷை	ஷை
19d	34	ஆரிய	அரியாய

ஸ்ரீ

சந்திரவமிச க்ஷத்திரியராகிய

பலிஜவாருபுராணத்தின்

நூன்முகம்.

(ஓர்அன்பர் எழுதி அனுப்பியது.)

ஸ்ரீபரமேசுவரனால் பிரகாசிக்கும் இப்பிரபஞ்சத்தில் பிரபலமான தேசங்களிலெல்லாம் பெருமைபெற்ற பரதகண்டத்தின் தக்ஷணபாகத்தில் - சந்தனம், தேவதாரம், தேக்கு, தடா, வாகை, வேங்கை, நுங்கம், ஈட்டி, இருளு, இருப்பசம், கர்ப்பூரம், நாவல் மருது முதலான விருக்ஷங்களினாலும்; மற்றும் மலைதரும் பற்பல பொருள்களினாலும் நிரம்பிய நீலகிரி, வெள்ளியங்கிரி, ஆனைமலை, பூனாச்சிமலை, திருமூர்த்திமலை, சென்னிமலை, பழனிமலை, பருகூர்மலை, பிளகிரிரங்கமலை, மாதேசுவரன்மலை, மருதமலை, மதுகரைமலை முதலான சிறந்தமலைகளால் சூழப்பட்டதாய்; ஆம்பிராவதி பவானி, காவிரி, நொய்யல் முதலான திவ்யநதிகளால் சதா நீர்வளம்பெற்றதாய்; தென்னஞ்சோலை, கமுகுச்சோலை, வாழைச்சோலை, கரும்புச்சோலை, புளியஞ்சோலை, மாஞ்சோலை முதலான பலன்தரும் பற்பலசோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப்பெற்றதாய்; அசோகம், அலரி, குருக்கத்தி, பன்னீர், பவளம், பாதிரி, புன்னை, சண்பகம், தாழை, மந்தாரம், மகிளம், முதலானமலர்தரும்செடி விருக்ஷங்களை விசேஷமாக உடையதாய்; மல்லிகை, முல்லை, மருவு, மருதோன்றி, மருக்கொழுந்து, ஜாஜி, சம்பங்கி புஷ்பாதிகளில்சதா வண்டுகள் பாடியாடும் நந்தாவனங்களைநாலாபக்கங்களிலும் உடையதாய்; அல்லி, செங்கழுநீர், நீலோத்பலம் விகசிக்கும் வாய்க்கால்களும், நீர் நிறைந்த ஓடைகளும், செந்தாமரை, வெண்தாமரைகள் நிறைந்துள்ள தடாகங்களும், ஏரிகுளங்களுமுடையதாய்; செந்நெல், கோதிமுதலான நஞ்சைப்

பயிர்களும், சோளம், கம்பு முதலான புஞ்சைப்பயிர்களும், காய்கறி, மஞ்சள் முதலானசெடிகளும் செழித்தோங்கும்படியானவயல்களும், தோட்டங்களும் நெருங்கப்பெற்றதாய்; இல்லற தருமத்தை இன்பமாய் நடாத்தும் கல்விமான்களும், செல்வவான்களும் சுதந்திர சுகமாகவசிக்க யோக்கியமானதாய்; பிரம்மச்சாரிகள், வானபிரஸ்தர், சன்னியாசிகள், எதிகள், யோகிகள், முனிகள், தபோநிதிகள் முதலான மஹான்கள் மனமுவந்து வாழ்வதற்கேற்ற விடமாய்; அந்தணர்வீதி, அரசர்வீதி, வைஸியர்வீதி, சூத்திரர்வீதி, கணிகையர்வீதி, பஞ்சமர்வீதி, கடைவீதி, பண்டசாலை, பணச்சாலை, மண்டிகள் முதலானதுகளால் மேன்மைபெற்றதாய்; விஜயநகரத்தார், மதுரைநாயக்கர், மைசூரார், மகம்மதியர், ஆங்கிலேயரால் அவ்வக்காலத்தே அரசுபுரியப்பெற்றதாய்; கிராமாதிகாரி, கணக்காதிகாரி, போலீசதிகாரி, தாலூக்காதிகாரி, தபாலதிகாரி, துக்கிடியதிகாரி, நகரபரிபாலனதிகாரி, ஸ்தலபரிபாலனதிகாரி, குற்றவிசாரணையதிகாரி, நீதிபரிபாலனதிகாரி, வனபரிபாலனதிகாரி, வித்தியாபரிபாலனதிகாரி, பத்திரப்பதிப்பதிகாரி, சமயபரிபாலனதிகாரி முதலான அதிகாரிகளுக்கு இருப்பிடமாய்; கல்விச்சாலை, சிலம்பச்சாலை, ஆயுதச்சாலை, அறச்சாலை, சிறைச்சாலை, வாசகச்சாலை, சங்கீதச்சாலை, பிரசங்கச்சாலை, வைத்தியசாலை, பருத்திகைத்தொழிற்சாலை, காபிச்சாலை, கரும்புச்சாலை, அரிசிச்சாலை, எருச்சாலை முதலான பற்பலச்சாலைகளை உடையதாய்; வர்த்தக விருத்தி, ஜனோபகாரநிதி முதலான திரவிய சேகரநிதிகளையுடையதாய்; கலாநிதி, வித்தியாபானு முதலான அச்சு இயந்திரங்களை உடையதாய்; கரூர், காரமடை, அவிநாசி, தாந்தோன்றி வெள்ளியங்கிரி, திருப்பேரூர் முதலான திவ்வியக்ஷேத்திரங்களையுடையதாய்; சைவ வைணவ பிராம்ம சக்திமுதலான ஆலயங்களையும், அவற்றின் மாடமாளிகை கூடகோபுரங்களையும் பரக்கப்பெற்றதாய்; வேதகோஷங்களும், மங்களவாத்தியங்களும் சதாகேட்கப்பட்டவிடமாய்; சேர சோழ பாண்டியநாடுகளென்னும் மூந்நாடுகளுக்கும் நன்னடாகும் கொங்குநாட்டிற்கு திலகம்போல் பிரகாசிப்பதாய்; விளங்குவது **கோயமுத்தூர்** என்ற திவ்யநகரமாம்.

அந்தநகரத்தின் மத்தியில், நான்குபக்கங்களிலும் சுற்றியிருக்கும்தோட்டத்தின் திவ்யமான மலர்களின் சுவாசனையைத் தென்றல்காற்றுக் கொண்டுவரப்பட்டவிடமாயும்; அம்மலர்களின்தேனை பற்பல பக்ஷிகளும்,வண்டுகளும் உண்டு தேக்கெறிந்து உல்லாசமாகஇனியகீதங்கள்பாடிஆநந்தமூட்டப்பட்டவிடமாயும்; ஆகம வேத புராண இதிகாசாதி சாஸ்திரங்களுக்கு இருப்பிடமானதாயும்;உலக லௌகீக வைதீக விஷயங்களை வியக்தமாக அறிந்துய்வதற்கு ஏற்ற இடமாயும்; அகத்தியர், வசிஷ்டர், வியாசர், பராசரர், பாரத்துவாஜர், பதஞ்சலியார், சுகர் சவுனகர், சாண்டிலியர்,சங்கரர்,ராமாநுஜர்,மத்துவர், சைதனியர்,குருகோவிந்தர் அப்பர்,ஆழ்வாராசாரியர், சுந்திரர், மாணிக்கவாசகர், தாயுமானவர்,இராமலிங்கர், இராமமோஹனர்,கேசவசந்திரர்,கபீர்,துக்காரம், பராங்குசர் முதலான இந்நாட்டு மஹாத்துமாக்களும்; சாகிரடீஸ், பிளேட்டோ, கான்பியூஸ், ஜொராஷ்டார், ஏசு, மகம்மது முதலான ஏனைய நாட்டுமஹான்களும் அபிராகிருததிவ்வியமங்கள சுவரூபிகளாகவந்து ஆசீர்வதிக்குமிடமாயும்; ஜாதிபேதம், சமயபேதமற்று சர்வ சமயத்தாருக்கும் பொதுவாகி, சமரசவேத சஹோதிரானந்த சபாபீடமாயும்; சைவர்,வைணவர், சாக்தேயர், ஜயினர், பவுத்தர்,பார்சிகர், கிறிஸ்து,மகம்மதாதி மதாபிமானிகளும்; துவைதாத் துவைத விசிஷ்டாத்துவைத சித்தாந்திகளும் சதாவந்து, சர்வேசுவரனுடைய ஆநந்தகலியாணகுணங்களைப்பற்றி சரச்சித்து, சுகாநந்தமடைவதற்கு ஆஸ்தானமண்டபமாயும்; அமைந்துள்ள கலாநிதி என்ற பெயரைப்பெற்ற அழகியதோர் ஆச்சிரமமிருக்கின்றது.

அது,ஆரியம், ஆந்திரம்,திராவிடம்,ஆங்கில முதலான பாஷைகளைக்கற்றுக் கல்விகேள்விகளிற் சிறந்தவராய்; இருக்கு யஜுர் சாமம் அதர்வணாதி வேதங்களின் சாரங்களையும்; சிக்ஷை சந்தசு சோதிடம் நிருக்தம் கற்பம் வியாகரணாதி வேதாங்கங்களையும்; மீமாம்சை நியாயம் முதலான உபாங்கங்களையும்; பிராம்ம முதல் பிரம்மாண்டாதி புராணங்களின் சாரங்களையும்; இராமாயணம், பாரதம், சிவரகசியாதி இதிகாசங்களையும்; பாஞ்சராத்ரம், வைகாசனம்பொது இலக்கிய இலக்கண அலங்கார தருக்கச் சங்கீத க்ஷேத்திர அக்ஷர கணித ககோள பூகோள சிற்ப சாமுத்திரக நீதியந்தவாகடாதி ஆகமங்களையும்; பைபில், குரான் ஜந்து முதலான ஏனையநாட்டு வைதீக லௌகீக கிரந்தங்களின் தாத்பரியங்களையும்; இரவும் பகலும் படித்து தெளிந்தவராய்; இலௌகீக வைதீககாரியங்களை சாங்கோபாங்கமாகத் தெரிந்தவராய்; துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் செய்யும் சக்தியையுடையவராய்; தருமரக்ஷணிசபை, மஹாஜனசபை, கான்கிரசுசபை, ஆசாரசீர்திருத்தும்சபை, தத்துவசபை, பிரம்மசபை, முதலான பற்பலபொது நலச்சபைகளுக்கு ஓர் முக்கியஸ்தராய்; நூல்நூற்கும் சாலை (காட்டன்மில்) சர்க்கரைச்செய்யும்சாலை முதலான கைத்தொழில்சாலைகளை ஸ்தாபித்து

அவைகளால் ஆயிரக்கணக்கான ஏழைக்குடிகளுக்கு ஜீவனோபாயத்தை உண்
டாக்கினவராய்; தாலூகாபோர்டு, டிஸ்டிரிக்டுபோர்டு முதலான சபைகளுக்கு
மெம்பராய், கவுரவமேஜஸ்திரேட்டு முதலான கவர்ன்மெண்டு கவுரவவேலை
களுக்கு பலவருஷகாலங்களாக நியமிக்கப்பட்டு, அவ்வேலைகளினால் ஏழை
ஜனங்களுக்கு இரவும் பகலாக பாடுபட்டுழைக்கும் நவஜீவதயாபரராய்; அநேக
பத்திரிகைகளையும், புத்தகங்களையும் பதிப்பித்து இந்நாட்டாரின் இகபரசுக
த்துக்கு இன்றியமையா ஹிதோபதேசம் செய்பவராய்; ஹிமசேதுவரையில் யாத்
திரைச்செய்து இந்நாட்டின் திவ்யதேச சரித்திரங்களை எழுதியவராய்; ஆசிய
ஐரோபா, அமெரிகா, ஆபிரிகா முதலானகண்டங்களிலுள்ள மதியூகிகளால்மதிக்க
ப்பெற்றவராய்; மங்காதபுகழ்ப் பெற்றோங்கும் ஆங்கில அரசி விக்டோரியா
சக்ரவர்த்தினியார், எட்வார்டு சக்ரவர்த்தியவர்களால் சுதேசோபகாரியென்று
சர்டிபிகேட்டுகளைப் பெற்றவராய்; சோர்வின்மை, தணிவுடைமை, தூய்மை
வாய்மையாதி குணங்களால் பல வித்துவான்களால்புகழ்பெற்றவராய்; தேசாபி
மானமே உருவாகவந்து சகலஜாதியாரலும் கொண்டாடப்பட்டவராய்;
சந்திரவம்ச க்ஷத்திரிய ஆந்திரர் குடும்பத்தின் பரம்பரையில் ஜனித்தவ
ராய்; ஜனகாதி மஹரிஷிகளைப்போல இல்லறதருமத்தை இனிதாக நடாத்தி
சதாபிரம்ம தியான பாராயணம் செய்துகொண்டிருக்கும் நரசிம்ஹ
இராஜயோகியாருக்கு ச்சொந்தம்.

அந்த ஆச்சிரமத்தில் அன்றொருநாள் அருணோதயகாலத்தில் பாலசூரியன்
உஜ்வலரூபத்துடன் உதயமாகி உத்தமோத்தமனுடைய மஹிமாபிரசாரம்
செய்துக்கொண்டு ஆகாயவீதியில் வரவும், விதம்விதமான பக்ஷிகள் விழித்
தெழுந்து உத்சாஹம் நிறம்பிய உள்ளங்களுடன் அகிலவிநோதனுடைய அத்
புதசக்தியை ஆநந்த கீதங்களால் பாடியாடவும்; இயற்கைப்பொருள்கள்யாவும்
இரமணீயமாகத் தோன்றவும்; அத்தபோநிதியின் ஆப்தர்களாகிய ஸ்ரீநாராயணரிஷி
பொன்னரங்கர், விஜயரங்கர், இரங்கப்பர், நஞ்சப்பர், சின்னப்பர், கிருஷ்ணப்பர்
பார்த்தசாரதி, வெங்கிட்டராமர், அப்பய்யர் முதலான பாகவதசிரேஷ்டர்கள்
பிரம்மதியான பாராயணார்த்தமாகவந்துகூட; அந்தஆசிரமாதிபதியாகிய நரசிம்ஹ
யோகிந்திரர் காலைக்கடனைமுடித்துக்கொண்டுவந்து, அத்திரு கூட்டத்திற்கு
முதல்வராகி "ஓம் பிரமணே நம:" என்னும் மகுடவாக்கியத்தை உச்சரித்தும்
பிறகு "சத்யஞானம் அநந்தம் பிரம்மம் சாந்தம் சிவமத்வைதம்" என்னும் வே
வாக்கியத்தைசசொல்லி, அதன்பொருளைப்பற்றி பிரபலமாக பிரசங்கித்தும்
அநந்தரம் "பிரம கிருபாஹிகேவலம்" என்ற வாக்கியத்தைச்சொல்
முடித்தும், அன்பருக்கு ஆநந்தமூட்ட; அவர்கள்யாவரும் எழுந்து அந்த ஆச்சிர
மத்தை அடுத்திருக்கும் நந்தாவனத்தில் ஏகாந்த சேவையைச்செய்யப்போயினா

A—5

அதன்பின்பு-தாம் இந்த உலகத்தாருடைய நன்மையைக் கருதிச் சொல்ல வேண்டியவைகளும், செய்யவேண்டியவைகளும் பின்னும் பலவிருக்க; அவைகளைப்பூர்த்திச்செய்யப் போதுமான சமயம் வாய்க்கவில்லையே என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அந்தஇராஜயோகியின் ஆப்தசீடனாகிய அரங்கநாதன் என்னும் புத்திர சிகாமணியானவன், நித்தியாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சத்தியம் சாந்தமுதலானகுணங்களிற் சிறந்த சிலசினேகிதர்களுடன்வந்து, அந்த குருசிரேஷ்டருடைய திருப்பாதக்கமலங்களில் விழுந்து, தண்டம் சமர்ப்பித்து, அஞ்சலி யஸ்தனாய்ச் சேவித்து நின்றான்.

அந்த இராஜயோகியானவர் அவனைக் கண்குளிரக் கண்டு ஓ! சீடா, சுகமா? "உன்மனதில் யாதோ ஒருச்சந்தேகம் ஜனித்து,அதைப்பற்றிச் சிந்திப்பதாகத் தோற்றப்படுகிறாய்; அந்தச் சந்தேகத்தைச் சொல்லுக," என்று ஆஞ்ஞாபிக்க; அரங்கநாதனென்னும் சீடன்: "ஓ, குருசுவாமி! தங்களுடைய கிருபாகடாக்ஷத்தினால் இகபரசுகங்களுக்கு இன்றியமையா இலக்கிய இலக்கண இலக்கந் தருக்க சாமுத்திரிக சங்கீதாதி சாஸ்திரங்களின் கருத்துக்களையும்; பூகோள ககோள விவசாய வைத்தியாதி சாஸ்திரங்களின் சாரங்களையும்; நாஸ்திகத்தை நீக்கி ஆஸ்திகசித்தாந்தத்தையும்; மூர்த்திதலந் தீர்த்தங்களை தெளிவாய்க் காட்டும் திவ்யதேச சரித்திரங்களையும்; ஆரியர் வேத வேதாந்தங்களின் சாரங்களையும்; அதிலுண்டான சைவ வைணவாதி சமயாசாரங்களையும்; துவைதாதுவைத விசிஷ்டாதுவைத சித்தாந்தங்களையும்; சத்தியம், சாந்தம்,பக்தி, யோகம் ஞானமுதலியவைகளின் இலக்ஷணங்களையும்; தருமசாஸ்திரங்களின் தாத்பரியங்களையும்; இராமாயணாதி இதிகாசங்களின் கருத்துக்களையும்; பைபிள், குரானாதி ஏனையோர்களின் மதக்கருத்துக்களையும் கரதலாமலகம்போல கற்றுக்கொண்டேன். அப்படிக்கற்றுக்கொண்டிருந்தும், பின்னும் சில சந்தேகங்கள் என்மனதில்தோன்றி, அவைகளுக்கு தக்க சமாதானம் கிடைக்காமல் தவித்து, தங்களுடைய திருப்பாதகமலத்தினிடம் வந்தேன்"; என்றான்.—உடனே,

கலாநிதி ஆச்சிரமத்தார் கேட்டு— ஏ, குழந்தாய், அரங்கநாதா! "அச்சந்தேகங்களைச் சாங்கோபாங்கமாகச் சொல்லுக," என்று வினவ, அரங்கநாதன் அடியில்கண்டபடி அறையலானான்.

ஏ, குருநாதா? இதுவரையில் யான் கற்றுத் தெளிந்த இதிகாசாதி கிரந்தங்களினால் கிரேத, திரேத, துவாபர யுகங்களில இப் பரதகண்டத்தில் பிரபலமான குருநில மன்னர்களுடையவும்; சக்கிரவர்த்திகள், சாஸ்திரஞர்கள், சாதுக்கள்முதலானவர்களுடையவும்; சரித்திரங்களைப் பற்றி ஒருவாறு தெரிவிக்கப்பட்டிருந்தாலும்; அச்சரித்திரங்கள் ஒருகிரந்தத்தில் சொல்லியிருப்ப

ணப்போல மற்ற கிரந்தங்களில் சொல்லக்காணோம். அன்றியும், அவைகளும் சைவ வைணவாதி மதத் துவேசமானவைகளாக இருக்கின்றன; மேலும், இந்த கலியுகத்தில் பிரபலமான ஜாதியார்,சக்கிரவர்த்திகள்,பெருநில குருநில மன்னர்கள், மஹான்களுடைய மகிமைகளைப்பற்றி எந்தகிரந்தத்திலும் வியக்தமாகச்சொல்லாமலிருப்பதற்குக் காரணம் மறிகிலேன்.

இதுநிற்க, இப்போது பிரம்ம க்ஷத்திரிய வைஶியர் முதலானவர்களுடைய ஜாதிவிவர சரித்திரங்களை அச்சிட்டு வெளியாக்கி இருக்கையில்; பலிஜவாருடைய ஜாதியை விவரமாக்கும் சரித்திரத்தை மாத்திரம் அச்சிட்டு வெளியாக்காமல் இருப்பதற்குக் காரணமென்ன? இப்போது பலிஜவாரை சிலர், க்ஷத்திரியர் என்றும்; சிலர் சூத்திரரென்றும் சொல்லவேண்டிய காரணமென்ன? பலிஜவாரு க்ஷத்திரியர்களா? அல்லது சூத்திரர்களா? பலிஜவாரு க்ஷத்திரியரென்பதற்கு சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களில் ஆதாரங்களை அறிவிக்கப் பட்டிருக்கின்றனவா? அவர்கள் சூத்திரர்களாகில், அவர்களில் அநேகர்மகதம்,மாளவம்,விஜயநகரம்,மதுரைமுதலானவிடங்களில்சக்கிரவர்த்திகளாகவும், இராஜாதிராஜர்களாகவும், தேசாதிபதிகளாகவும் பிரபலமாகி, பல நாடுகளை ஆண்டுச் செங்கோலை ஸ்தாபித்தல் தருமசாஸ்திர சம்மதமாகுமோ? ஆகவே, பலிஜவாருடைய ஆதி உற்பத்தி ஜாதிசரித்திரம் இன்னதென்றும், அவர்களுடைய மத்தியகாலஸ்திதி இன்னதென்றும், திட்டமாக அறியக் கூடவில்லை; மேலும்,

காலத்துக்குக்காலம் காலதேசவர்த்தமானங்களைத் தழுவிப் பதினெண் புராணங்களை எழுதியவர்கள், இக்கலியுகத்துக்காக பத்தொன்பதாவது புராணம் ஒன்று எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

இடையில் தத்தாசாரியர் (R. C. Dutt) முதலானவர்கள் ஒருவாறு இத்தேச சரிதங்களை எழுதினும்; அவைகளும் வடநாட்டின் சில சரித்திரங்களைப்பற்றிமாத்திரம் விசேஷமாக அறிவிக்கின்றவைகளாக இருக்கின்றனவேயன்றி; விந்தியபருவதத்திற்கு தெற்கும், கன்னியாகுமரிக்கு வடக்குமுள்ள மத்திய நாடுகளினுடையவும், தென்னாடுகளினுடையவும் சரித்திரங்களை அறிவிக்கக்காணோம்;அன்றியும்,ஆங்கில இராஜியம் இந்நாட்டில் ஸ்தாபிதமானபிறகு சில ஆங்கில வித்துவான்கள் சில சரித்திரங்களை எழுதினும், அவைகளும் அவர்களுடைய ஜெயாபஜயங்களைப்பற்றியவைகளாகவும்,சமீபகாலத்தில் நடந்த சரித்திரங்களாகவும் இருக்கின்றனவே யொழிய, இத்தென்னாட்டின் மத்தியகாலத்தினுடைய சரித்திரத்தைத் தெரிவிக்கக்காணோம்—ஆகவே,—ஓ, பரமகுருவே!

புராணமென்றாலென்ன? அதன் விலக்ஷணம்யாது? அது எக்காலத்தில் யாவராலியற்றப்பட்டது? அதன் உத்தேசமென்ன? இப்போது அது பதினெண்புராணங்களாகவும், பதினெண் உப புராணங்களாகவும், அநேகஸ்தலபுராணங்களாகவும்; அவைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான கொள்கைகளை உடைவனவாகவும் இருக்கவேண்டிய காரணமென்ன? அன்றியும்—இப்புராணங்களின்படி இந்நாட்டை அலங்கரித்த அரசர்கள், ஆசிரியர்கள், ஆசாரியர்கள்யாவர்? இடையில் இத்தேசத்தை ஆண்ட அரசர்களும், அறிவுடையார்களும் யாவர்? பிறகு இந்நாட்டிலாண்ட அரசர்கள் முதலானவர்களுடைய சரித்திரங்களையும், காலதேசவர்த்தமானங்களைத் தழுவி புராணங்களை எழுதாமல் விட்டகாரணம்யாது? இத்தியாதிச்சங்கதிகளை விவரமாகச்சொல்ல வேண்டுமென விண்ணப்பம் செய்ய;"

அக்கலாநிதி யோகீந்திரர்கேட்டு, ஏ, குழந்தாய்! நீகேட்டகேள்விகள் நியாயமானவைகளே; இக்கேள்விகளுக்கு விடையாக, நாம் சாக்ஷியினாலும், கேள்வியினாலும் காலதேசவர்த்தமானங்களைத் தழுவிச்சொல்லும் சங்கதிகளை கவனமாய்க்கேள்? "யதிதம் கிஞ்சத் ஜகத் ஸர்வம் பிராண ஏஜாதி நிஸ்ருதம்"—"இதோ இருக்கிற இந்த உலகம் முழுதும் பரமாத்மாவினிடத்திலிருந்துவெளிப் "பட்டதாகிப் பிராணசுவரூபனாகிய அவரிலேயேஅசைந்துக்கொண்டிருக்கிறது" என்றுகடோபநிஷத்தின் கருத்தை முன்னமே உபதேசித்திருக்குறோமல்லவா? இப்படி அந்தரத்தில் அசை வாடிக்கொண்டிருக்கும் அண்டத்தில், அந்தப் பரமாத்மே பிரம்மா என்னும் பெயரினால் பிரபஞ்ச பிரஜைகளை சிருஷ்டித்தும; அப்படி சிருஷ்டித்த பிரஜைகளை (அந்தப்பரமாத்மாவே) விஷ்ணு என்னும் பெயரால் பாதுகாத்தும்; (அவரே) ருத்திரன் என்னும் பெயரால் சங்காரம் செய்தும் வருவதோடு; பிரபஞ்சபிரஜைகளின் இகபரசுகங்களுக்கு இன்றியமையா தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தத்தின் ஸ்வரூபத்தை (அந்தபரமாத்மே) ஆதிபுருஷனுக்கு நேராக அறிவித்தார்—அப்படி அறிவித்தஞானத்திற்கே சுருதி என்றுபெயர்—அதாவது,

சுருதி என்றால்—சுரூயத—இதி சுருதி—கேட்கப்பெற்றதனால் அதாவது பரமாத்மாவினிடமிருந்து நேராகக் கேட்கப்பெற்றபடியாலும்; சுரோத்திரேந்திரியத்தினால்சப்தரூபமாகஅறியப்பெற்றபடியாலும்; சுருதிஎன்னும் பெயரைப்பெற்றது. இந்த சுருதிக்கே வேதம் என்றும், ஆம்நாயமென்றும் பின்னும் பலபெயர்கள் உண்டென முன்னமேசொல்லி இருக்கிறோமல்லவா?

இந்த வேதத்தின் வார்த்தைகளும், வாக்கியங்களும் கடினமானபாஷையிற் சொல்லப்பெற்றும்; ஆழ்ந்ததத்துவகருத்துக்களுடையவைகளாகையாலும; அவைகள் சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருக்தம், ஜியோதிஷம், கற்பமென்னும ஆறு அங்கங்களை (ஆசாரியர் மூலியமாக) கற்றுத்தெளிந்த மஹா மதியூகிகளுக்கேயன்றி, மற்றவர்களுக்கு வியக்தமாக விளங்காமலிருக்கக்கண்டு; மஹாஞான

சிரோன்மணிகளாகிய மநு, விஷ்ணு, யமன், அங்கீரசர், வசிஷ்டர், தக்ஷர், ஸம்வர்த்தர், சாதாதபர், பராசரர், ஆபஸ்தம்பர், உசநசு, காத்தியாயனர், பிரஹஸ்பதி, கவுதமர், சங்கர், லிகிதர்; ஹாரீதரர், அத்திரி, முதலான பதினெட்டுப் பெயர்கள் சுருதி என்னும் வேதத்தின் கருத்தையே (மனோராச்சியஞ்செய்து) (மனதில் நினைத்து) ஸ்மிருதிகளாகச் சொன்னார்கள்—

ஸ்மிருதி என்றால்—"வாசிஷ்டம் சைவஹாரீதம்", &c. என்ற வாக்கியத்தின் படி—சுருதிகளின் கருத்துக்களையே வசிஷ்டர் முதலானவர்கள் சொன்ன தரும சாஸ்திரங்களாம். காலவித்தியாசத்தினால் இந்த ஸ்மிருதிகளின் வாக்கியங்களின் பொருளையும் அறிந்துய்யும்படியான சக்தி ஜனங்களுக்கில்லாமற்போகவே, ஸ்ரீ வால்மீகர் இராமாயணத்தையும், வியாசர் பாரதத்தையும், கர்க்காசரியர், கர்க்க சம்ஹிதையையும் இதிகாசங்களாக இயற்றினார்கள்.

இதிஹாசம் எனில்—"இதிஹாசபுரா விருத்தம்" என்னும் வாக்கியத்தின் படி, "முந்தி நடந்த சரித்திரங்களின் வாயிலாகத் தரும அர்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தத்தை போதிப்பதென்பதாம்.

இந்த இதிஹாசங்களையும் சரிபாகப்படிந்து பொருளறியும் சக்தி கால வித்தியாசத்தினால் ஜனங்களுக்கு இல்லாமற்போய் விட்டபடியால், காலபேதத்தை யறிந்து பாமரர்களும், முக்கியமாக ஸ்திரீ சூத்திரர்களுடைய ஞானவிருத்தியைக் கருதி புராணங்கள் சொல்லப்பெற்றன.

புராணம் என்றால்—'பழம்பது' என்று பொருள். "ஸர்கஸ்ச பிரதிஸர்கஸ்ச வம்சமந்வந்தராணிச," &c. என்ற அமரசிம்மஹருடைய வாக்கியத்தின்படி, சிருஷ்டி கிரமம், பிரளயகிரமம், முந்தி இருந்த மஹான்களுடைய வம்சாவளி, மநுவந்தரங்கள், முன்னிருந்த வம்சத்தாருடைய சரித்திரம் ஆகிய பஞ்சலக்ஷணங்களோடு சொல்லப்பெற்றிருப்பதே புராணமாம்.

புராணத்தின் பூர்வஸ்திதி.

அது கிருதயுகத்தில் பிரம்மாவினால் நூறுகோடி கிரந்தங்களுள்ள ஒரே நூலாக இயற்றப்பெற்றிருந்ததாகவும்; அதை திரேதாயுகத்தில், சில ரிஷிகள் 318 - சம்ஹிதைகளுள்ளதாகவும், 18 - பிரிவுகளுள்ள ஒரு கோடி கிரந்தங்களாகச் செய்ததாகவும்; அவைகளை வேதவியாசர் துவாபரயுகத்தில் இலக்ஷம் கிரந்தங்களுள்ள 18 - புராணங்களாகச் செய்ததாகவும்; மச்சபுராணம் 53 - வது அதியாயத்தில் விரிவாகச் சொல்லப்பெற்றிருக்கிறது. அன்றி;" இதைக்கேட்ட அரங்கநாதன், ஏ, குருஸ்வாமி! சுருதி ஸ்மிருதி புராணங்களா உற்பத்தியான விதங்களைக்கேட்டுத் தெளிந்தேன். இனி [illegible] வழங்கும் புராணங்களின் பெயர்களையும், அவற்றின் சாராம்சத்தையும் அறியக் வேண்டுகிறேன்;" என்று வணங்கி கேட்க, அந்தப்பண்டிதர் அடியில் வருகிற படி புராணசாரத்தை சொல்லலுற்றார்.

"ஏ, பிரம்மசாரியே, கேளாய்!—இப்போது இந்நாட்டில் பிரம்மம், பாத்துமம், வைணவம், சைவம், பாகவதம்.பவிஷியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரம்மவைவர்த்தம், இலிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், பிரம்மாண்டமென்னும் பெயர்களையுடைய 18 - புராணங்களே பிரபலமானவைகள்—இவைகளில்— முதலாவது,

1. பிரம்ம புராணம்.

இது ஆதியில் 10,000 சுலோகங்களையுடையதாக் இருந்து. இப்போது 7,000 முதல் 8,000 சுலோகங்களுள்ளதாக பிரகாசிக்கிறது-இதில் முக்கியமாக உலக சிருஷ்டி முதலான விவரங்களையும் ; ஸ்ரீ ஜகந்நாதபுரியில் பிரகாசிக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வைபவங்களையும் ; பிரம்மாவினால் தக்ஷருக்கு உபதேசித்தவைகளையும் சொல்லப்பெற்றிருக்கின்றன—

2. பத்ம புராணம்.

இது, பிரம்மாவானவர், கமலாசனத்திலிருந்து சிருஷ்டிசெய்தவைபவத்தை புலஸ்தியருக்கு போதிக்க ; அவர், பீஷ்மருக்குச் சொன்னதாக, ரோமஹரிஷியுடைய புத்திரராகிய சூதர், நைமிசாரணிய ரிஷிகளுக்குச் சொன்ன 55,000 சுலோகங்களை உடையது. இதில் சிவபெருமான் விஷ்ணுவின் மகிமையைப்பற்றிப் பார்வதிதேவிக்குச்சொல்லியதையும் ; அவ்விருவரும் விஷ்ணுவைக் கொண்டாடியதைப் பற்றியும் ; ஜைனமதஸ்தர், மிலேச்சர்கள் வந்த சங்கதிகளைப்பற்றியும் ; ஸ்ரீரங்கம், திருப்பதி, விஜயநகர ராயலுசரித்திரங்களைப்பற்றியும் சொல்லப்பெற்றிருக்கின்றன. இதன் பூர்வபாகத்தை வைஷ்ணவர்களும், உத்தரபாகத்தை சைவர்களும் பிரமாணமல்லவென்று சொல்வதனால் ; இது ஒரு மதத்துவேஷமான புராணமென்று அநேகருடைய அபிப்பிராயம்—

3. விஷ்ணு புராணம்.

இது புராணங்களுக்கெல்லாம் சிரேஷ்டமானதாம் ; ஏனெனில், புராணங்களுக்கு இன்றியமையா பஞ்சலக்ஷணங்களோடு கூடியபுராணம் இதுவேயாம்— இது ஆறு அனுவாகங்களுடையதாகவும், அநேக அத்தியாயங்களை உடையதாகவும், 23,000 சுலோகங்களுடையதாகவும், பராசுரர், மைத்ரேயருக்கு போதித்த சிறந்தபுராணம்—இதன் முதல் அத்தியாயத்தில் உலக சிருஷ்டி விஷயத்தைப்பற்றியும் ; பிரஹலாதர் முதலானவர்களுடைய சரித்திரங்களைப் பற்றியும்; இரண்டாவதில் பிரபஞ்சத்தின் விவரம்,சூரியசந்திராதிகளின் விவரம், பற்பல நரகங்களின் விவரம், பரதர் முதலானவர்களுடைய விவரங்களைப்பற்றியும் ; மூன்றாவதில் மநு, மந்வந்தரங்களின் விவரம், வேதப்பிரிவுகளின் விவரம், பிதுராதி சிராத்தங்களைச்செய்யும் விவரங்களைப்பற்றியும்; நான்காவதில், சூரிய சந்திர வமிசங்களின் விவரங்களையும் ; விஷ்ணுவானவர் கலிகாலவதாரமெடுக்கும் விவரங்களைப்பற்றியும் ; ஐந்தாவதில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரவைபவத்தைப்பற்றியும்; கலியுகதரும விவரத்தைப்பற்றியும், ஆறாவதில் கலியுகதருமத்தைப்பற்றியும், மூன்று வினாசங்களைப்பற்றியும், மோக்ஷசாதனத்தைப்பற்றியும், விஸ்தரித்துச்

சொல்லப்பெற்றிருக்கிற தன்றியில்; கலியுகத்தில் அரசுசெய்யும் சில இராஜ வமிசத்தாரைப்பற்றியும் தெரிவிக்கப்பெற்றிருக்கிறது.

4. சிவ புராணம்.

இதுவே வாயுபுராணம். நைமிசாரணிய ரிஷிகளுக்கு சூதரால்சொல்லப் பெற்ற பிராகிரயா, உபாதகாத, அநுசங்கா, உபசம்ஹார, என்னும் நான்கு பாதங்களை உடையதாகவும்; 24,000 சுலோகங்களை உடையதாகவும் உள்ளது, இது சுவேத கல்பத்தைப்பற்றியும், சிவபெருமானாகிய ருத்திரமூர்த்தியின் மகுத்துவத்தைப்பற்றியும் சொல்லுகின்றது.

5. ஸ்ரீ பாகவத புராணம்.

இது அஸ்தினபுரத்தின்அரசனும்,அர்ஜுனனுடைய பேரனுமாகியபரிக்ஷித்து மஹாராஜனுக்கு, வியாசருடைய புத்திரராகிய சுகதேவர் சொன்னத்தை; நைமிசாரணிய ரிஷிகளுக்குச் சூதரால் சொல்லப்பெற்றும்;12 ஸ்காந்தங்களாகப் பிரிக்கப்பெற்ற 332 அதியாயங்களில், 18,000 சுலோகங்களை உடைய சிறந்த புராணம்—ஹிமசேதுவரையிலுள்ள பேரும்பான்மையான இந்துக்களால் புகழ்ந்துக்கொண்டாடும் இந்தபுராணத்தில்,உலக சிருஷ்டி விமர்சனையைப்பற்றியும், இத்தேசத்தில் ஆண்ட சக்கிரவர்த்திகள், மநு மன்வந்தரங்கள் முதலான சரித்திரங்களைப்பற்றியும், விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பதைப்போலவே விஸ்தரித்துச்சொல்லி இருப்பதோடு; பத்தாவது ஸ்காந்தத்தில் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினுடைய ஜனனம்,லீலைமுதலானதுகளைப்பற்றி விஸ்தாரமாகஅறிவிக்க ப்பெற்றிருக்கின்றது—சிலர் இந்தபாகவத புராணத்தை பூபதேவர் என்னும் வியாகரணபண்டிதர் இயற்றியதாக அபிப்பிராயப்படுகிறார்கள் —அதுசரியான அபிப்பிராயமாகத் தோற்றவில்லை, இந்த பாகவதபுராணத்திற்கு ஸ்ரீதரசுவாமிகள் இயற்றிய வியாக்கியான மிருக்கிறது. பூபதேவர் இயற்றியது தேவிபாகவத மென்னும் சைவமத கிரந்தமாம்.

6. நாரதீய புராணம்.

இது நைமிசாரணிய ரிஷிகளுக்கு நாரதர் 25,000 சுலோகங்களில், பிரஹத் கல்பத்தைப்பற்றியும்; துருவர், பிரஹ்லாதர்களுடைய சரித்திரங்களைப்பற்றியும்; ருக்மாங்கதன், ஏகாதசிவிருதப்பலனைப்பற்றியும், சொல்லிய வைணவபுராணம். இப்போது அநுஷ்டானத்தில் 3,500 சுலோகங்கள்தான் இருக்கின்றன மற்ற சுலோகங்கள் மறைந்திருக்கின்றன, மேலும், இதில் புராணலக்ஷணத்துக்குவேண்டிய உலகசிருஷ்டி விஷயத்தைப்பற்றியும்; ஆண்ட அரசர் சக்கிரவர்த்திகளுடைய சரித்திரங்களைப்பற்றியும் சொல்லப் பெற்றிருக்கவில்லை; அன்றியும் இந்த நாரதீய புராணத்தைப்போலவே; நாரதர், சனத்குமாரருக்கு போதித்ததென்று சூதர் உபதேசித்ததாக இப்போது அநுஷ்டானத்தில்

ஒன்றிருக்கின்றது. இது மார்க்கண்டேயர் உற்பத்தி, சாகரபுத்திரர்களுடைய வமிசநாசம், நாராயணஸ்தோத்திரங்கள் முதலானதுகளைப்பற்றி மாத்திரம் தெரிவிக்கின்றது.

7. மார்க்கண்டேய புராணம்.

இது மார்க்கண்டேய மஹரிஷியால், தருமாசருமங்களைப்பற்றி ஜெயமுனிக்கு 9,000 சுலோகங்களில் சொல்லப்பெற்றிருக்கிறது. இதில் தேவலோகபக்ஷிகள், பிரம்மஞானத்தை போதிப்பதைப்பற்றியும்; பலதேவருடைய சபசைப்பற்றியும்; ஹரிச்சந்திரர் வைகுண்டத்தை அடைந்ததைப்பற்றியும்; வசிஷ்டருக்கும், விசுவகர்மாவுக்கும், உண்டானச் சச்சரவுகளைப்பற்றியும், துர்கா, காளி, சாமுண்டிதேவிகளுடைய மகுத்துவங்களைப்பற்றியும், உலக சிருஷ்டியாதி விஷயங்களைப்பற்றியும், பிரபலமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றது. இப்போது அநுஷ்டானத்தில் 6,900 சுலோகங்கள்தான் இருக்கின்றன. மற்ற 2,100 சுலோகங்கள் மறைந்திருக்கின்றன.

8. அக்கினி புராணம்.

இது ஈசானகல்பத்தைப்பற்றி அக்கினிபகவான், வசிஷ்டருக்கு 16,000 சுலோகங்களில் போதித்தது. இதை வியாசர் கற்று சூதருக்குபோதிக்க; அவர் நைமிசாரண்ய ரிஷிகளுககு உபதேசித்தார். இப்புராணம் இராமகிருஷ்ணாவதாரங்களைப்பற்றியும்; சிவபூஜை மகுத்துவத்தைப்பர்றியும்; பாணினி இயற்றிய வியாகரணத்தைப்பற்றியும்; சாஸ்ருதரியற்றிய வைத்தியசாஸ்திரத்தைப்பற்றியும்; மல்ல உயுத்தம், முஷ்டி உயுத்தம், வில்வித்தைகளைப்பற்றியும்; விக்கிரமார்ககன், சாலிவாஹனன, முதலான சில மன்னர்களுடைய சரித்திரங்களைப்பற்றியும் அறிவிக்கின்றது.

9. பவிஷியத் புராணம்.

இது அகோர கல்பகாலத்தில் இவ்வுலகமிருக்கும் ஸ்திதியைப்பற்றியும்; பிராணிகோடிகளின் ஸ்திதியைப்பற்றியும்; சூரியனுடைய பிரதாபத்தைப்பற்றியும்; பிரம்மா, சுவயம்புமனுவுக்கு 126 அத்தியாயங்களில், 14,000 சுலோகங்களாகச்சொன்னது. இதின் ஐந்து அத்தியாயங்கள் பிர்மா, விஷ்ணு, சிவ ஈஸ்வராதி தேவர்களைப்பற்றியும்; 5-வது பிரதிசர்க்கம் சிருஷ்டியைப்பற்றியும் பிரஸ்தாபிக்கின்றது—மற்றபாகங்களில், சமயாசார சம்ஸ்கார சந்தியா வந்தனச் சடங்குகளைப்பற்றியும்; குருபத்தி, ஜாதி, ஆசார தருமங்கள், விரதங்கள், நாகபஞ்சமி முதலானதுகளைப்பற்றியும் சொல்லப்பெற்றிருககின்றது.—இப்போது அநுஷ்டானத்தில் 7,000 சுலோகங்கள்தானிருக்கின்றன, மற்ற சுலோகங்கள் மறைந்தன—இதற்குச்சம்பந்தப்பெற்றதாகச் சொல்லும் பவிஷியோத்திரபுராணமென்று சொல்லும் ஓர் புராணம் 7,000 சுலோகங்களுடையதாக இருக்கிறது. இது இரத உற்சவம், மன்மதன், காமனுதிகளுடைய சரித்திரங்களைச் சொல்லுகிறது.

10. பிரம்மவைவர்த்த புராணம்,

இது நாராயண ரிஷியானவர் நாரதருக்கும்; அந்நாரதரால் வியாசருக்கும்; அவ்வியாசரால் சூதருக்கும், அச்சூதரால் நைமிசாரண்ய ரிஷிகளுக்கும் சொல்லிய

பிரம்ம, பிரகிருதி, கணேச, கிருஷ்ண ஜனனமென்னும் நான்கு கண்டங்களாகி 18,000 சுலோகங்களால் பிரகாசிக்கிறது. இதில்பிரம்ம, தேவி, கணேசர், கிருஷ்ணருடைய பிரதாபங்களைப்பற்றிச் சொல்லியிருக்கினும், இராதாகிருஷ்ணருடைய லீலைகளையும், அவர் பிருந்தாவனத்திலும் கோகுலத்திலும்செய்தகிரீடைகளைப் பற்றியும், கோபிகளுடைய பக்தியைப்பற்றியும் பிரபலமாகவர்ணித்துச் சொல்லப் பெற்றிருக்கிறது,

11. இலிங்க புராணம்.

இது தருமார்த்தகாமத்தின் விலக்ஷணங்களையும் ; அக்கினி கல்பகாலத்தில் மோக்ஷமடையும் விதத்தையும் பற்றி, பிரம்மாவுக்கு அக்கினிஸ்வரூபரான மஹாதேவர் 11,000 சுலோகங்களில் சொன்ன சைவமதகிரந்தம். இதில் சிருஷ்டியாதி விஷயங்களைப்பற்றியும், சிவபெருமானே விஷ்ணுவைப்போலிருந்து சிவதருமங்களை நியமிப்பதைப்பற்றியும், அச்சிவபெருமான் கல்பங்கள்தோறும் 28 அவதாரங்களைச் செய்வதைப்பற்றியும், பயங்கரமான அக்கினி லிங்காவதாரமெடுப்பதைப்பற்றியும் ; பிரம்மா விஷ்ணுவைவிட, சிவபெருமானே சிரேஷ்டரென்று காட்ட 1,000 வருஷகாலம் பலபக்கங்களில் திரிந்து, பிரம்மா விஷ்ணுவை அலக்கழித்ததைப்பற்றியும் ; பத்மகல்பத்தையும், ததிசிமுனிவரைப்பற்றியும், சிவபிரார்த்தனை, சிவமந்திர மகுத்துவங்களைப்பற்றியும் ; யோகசாதனையைச்செய்யும் விவரங்களைப்பற்றியும் பிரபலமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றது.

12. வராஹ புராணம்.

இது விஷ்ணுவானவர் வரஹாவதாரமெடுத்து பூமியை மீட்டியதையும் ; மானவகல்பத்தையும், மதுராபுரி மகுத்துவத்தையும், சுமந்திமுனிவருடைய சரித்திரத்தையும், சிவபிரான், துர்க்காதேவதையின் சரித்திரங்களைப்பற்றியும் ; தீர்த்தஸ்தலங்களின் மகுத்துவங்களைப்பற்றியும், 24,000 சுலோகங்களில் சொல்லிய சைவபுராணம்.

13. ஸ்காந்த புராணம்.

இது மஹேசுவரரால் தத்புருஷகல்பத்தின் சங்கதிகளை சந்தர், அதாவது ஆறு சிரசுகளையுடைய சுப்பிரமணியருக்கு உபதேசித்த 81,100 சுலோகங்களையுடைய சைவமத கிரந்தம். இது ஆறு சமஹிதைகளாகவும், 500 காண்டங்களாகவும், பிரிக்கப்பெற்ற 500,000 சுலோகங்களுடையதாக சிலகிரந்தங்களில் தெரிவிக்கப்பெற்றிருக்கின்றது.—இதில் சூதசமஹிதை, சநத்குமாரசமஹிதை, சவுரசம்ஹிதை, கபிலசமஹிதை என்றுதி பலசம்ஹிதைகளும் ; பிரம்மோத்திரகாண்டம்—உத்கலகாண்டம், ரேவகாண்டம், சிவரஹசியகாண்டம், ஹிமவத்காண்டம் என்றுதி பலகாண்டங்களுமடங்கி இருக்கின்றன—இதில் காசிகாண்டம் ஒன்றுமாத்திரம், 15,000 சுலோகங்களை உடையதாயும் ; அவைகளில் காசிக்ஷேத்திரத்தினுடையவும், அதையடுத்திருக்கும் க்ஷேத்திரங்களினுடையவும், மகுத்துவங்களையும் ; அகஸ்தியருடைய சரித்திரத்தையும் ; தக்ஷணதேசத்தில் இந்துமதம் பரவிய விவரத்தையும் ; காசிராஜனான திவதாசனுடைய சரித்திரத்தைப்பற்றியும் விஸ்தாரமாகத்தெரிவிக்கப்பெற்றிருக்கிறது—வட இந்தியாவிலுள்ளவர்கள் பூமி ஜகந்நாதத்தின் பெருமையைப்பற்றியும், அதை அடுத்திருக்கும் புவநேசுவரருடைய சரித்திரத்தைப்பற்றியும் உத்கலகாண்டத்தில் விவரித்திருப்பதைப்பற்றி விசேஷமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

14. வாமன புராணம்.

இது திரிவிக்கிரமருடைய இருப்பைப்பற்றியும்; சிவகல்பத்தைப்பற்றியும், பிரம்மதேவர் 10,000 சுலோகங்களில்சொல்லிய ஓர் பொதுப்புராணம். இப்போது அநுஷ்டானத்திலிருக்கும் புராணம் புலஸ்தியர் நாரதருக்கு போதித்த 7,000 சுலோகங்களையுடையதாயும்; இலிங்கபூஜையைப்பற்றியும்; தக்ஷருடைய யாகத்தைப்பற்றியும்; காசிநகருக்கடுத்திருக்கும் பாபவிமோசன தீர்த்தத்தைப் பற்றியும்; காமதேவனை எரித்தவிஷயத்தைபபற்றியும்; ஹிமாசலத்திலிருக்கும் பத்திரிகாச்சிரமத்திலிருக்கும் கேதார ஈசுவரரைப்பற்றியும்; சரயுநதி குரு க்ஷேத்திரங்களைப்பற்றியும்; கோதாவரியைப்பற்றியும்; உமாசிவகலியாணத்தைப் பற்றியும்; கிருஷ்ணர் வாமனாவதாரமாகிப் பலிச்சக்கிரவர்த்தியை அடக்கியதைப்பற்றியும், மந்வந்தரங்களைப்பற்றியும் போதிக்கின்றது.

15. கூர்ம புராணம்.

இது விஷ்ணுவானவர் ஆமையாக அவதரித்து, பூமிக்குள்ளாண்டு, புருஷார்த்தைசாகரதீர்த்தத்தினிடத்தில்இந்திரத்யும்மநுவுக்கு இலக்ஷ்மிகல்பத்தைப் பற்றி 17,000 சுலோகங்களில் சொல்லப்பெற்றிருக்கிறது. இப்போது அநுஷ்டானத்திலிருக்கும் கிரந்தம், பிரம்ம, பகவதி, சவுரி, வைணவி என்னும் நான்கு சம்ஹிதைகளையுடையதாயும், 6,000 சுலோகங்களுடையதாயும்; சூதர் நைமிசாரணிய ரிஷிகளுக்கு போதித்த முதல் அத்தியாயத்தில், சிருஷ்டிவிஷயத்தைப் பற்றியும்; விஷ்ணுவின் அவதாரங்களைப்பற்றியும்; சூரிய சந்திரவம்சாவளியைப் பற்றியும், பைரவர்செய்த அண்டகாசுரன்வதையைப்பற்றியும்; மஹேசுவரி சிவ, சக்தி, ஹேமவதி என்ற நான்கு சக்திகளைப்பற்றியும்; சிவபெருமான் அவதாரங்களைப்பற்றியும்; காசிமகுத்துவம், யோகவிஷயம். ஈசுவரகீதை, வியாசகீதை வைரவம், வாமம், அரஹதம், யாமலசாஸ்திரங்களைப்பற்றியும் தெரிவிக்கின்றது.

16. மச்ச புராணம்.

இது விஷ்ணுவானவர் மீன அவதாரமெடுத்துப் பிரளயங்களையும், கல்பங்களையும்பற்றி மநுவுக்கு உபதேசித்த 20,000 சுலோகங்களையுடைய கிரந்தம்— இப்போது 14 முதல் 15 ஆயிரம் சுலோகங்கள்தான் இருக்கின்றன. இவற்றில் பிரளயகாலத்தில் மநுவைப்பாதுகாத்த விஷயத்தையும்; விஷ்ணு புராணத்தில் சொல்லியிருப்பதைப்போல சிருஷ்டிவிஷயம், பிதுர்தேவதைகள் விஷயத்தையும்; இராஜவம்ச பரம்பரைவிஷயத்தையும்; இல்லறவின்பம், விரதாதிவிவரம், சிவபெருமான், பெருமான், திரிபுராசுரவதை, தாரகர், தைத்தியர்களுடைய சண்டைசச்சரவுகள், கார்த்திகேயர் ஜனனம், உமாதேவியின் உற்பத்திவிவரம், காமனை எரித்தல், அசுரருடையமாய்கை, அந்தகன்வதை, விஷ்ணுவின் அவதாரங்கள், சிற்பசாஸ்திர சிறப்பு, விக்கிரக நியமனசாஸ்திரம்,

நீதிநெறி, சிரார்த்த விவரம், சாவித்திரி சத்தியவான் சரித்திரம், முதலானது களைப்பற்றி பிரபலமாக அறிவிக்கப்பெற்றிருக்கின்றது. இது பெயருக்குச் சைவபுராணமாகிலும், உண்மையிற் ஓர் பொதுபுராணம்.

17. கருட புராணம்.

இது கருட கல்பத்தில் விஷ்ணுவானவர் கருடருடைய ஜனனத்தைப் பற்றி 15,000 சுலோகங்களில் சொன்னது. இப்போது 7,000 சுலோகங்கள் தானிருக்கின்றன. இவைகள் பிரம்மாவானவர் தேவேந்திரனுக்கு உபதேசித்த வைகளாம். இதில், சிருஷ்டி விஷயம், வாதங்களின் விஷயம், சிவன், சூரியன், விஷ்ணு பூஜைகளைச்செய்யவேண்டிய விவரங்களையும்;சோதிடம், வைத்தியம், சாமுத்திரிகம், இரத்தினபரிக்ஷை, பிரேதகல்ப முதலானதுகளைப்பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றது.

18. பிரம்மாண்ட புராணம்.

இது பிரம்ம பீஜத்தைப்பற்றியும்; இனிவரும் கல்பத்தைப்பற்றியும், பிரம்மாவானவர் 12,2000 சுலோகங்களில் சொன்ன கலம்பகமான கிரந்தம். இப்போது இதில் 124 அதியாயங்களும், 18,000 சுலோகங்கள் மாத்திரம் இருக்கின்றன—இவைகள் அகஸ்தியர், காஞ்சீபுரத்தில் ஹயக்கிரீவாவதாரமாக இருக்கும் விஷ்ணு பராசக்தியின் பூஜையைப்பற்றி பிரபலமாக்கியதையும்; லலிதாதேவியின் மகுத்துவம், பண்டாசூரன்வதை, சக்திபூஜையைச் செய்யும் விதங்களைப்பற்றியும்; ஸ்காந்த வாயுபுராணங்களில் சொல்லி இருக்கிற சங்கதிகள் முதலானவைகளைப்பற்றியும் சாவகோபமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றது—இப்பதினெண் புராணங்களில் மச்சக் கூர்மாதி சில புராணங்கள் தாமச கிரந்தங்களென்றும் ; விஷ்ணு பாகவதாதி புராணங்கள் சாத்மீகமானவைகளென்றும்; பிரம்மாண்டம், பவிஷியத்தியாதி புராணங்கள் இராஜசமானவைகளென்றும் சிலவைணவர்களுடைய அபிப்பிராயம்—என்றுசொல்ல,

அரங்கநாதன் கேட்டு, "ஏ, நரேந்திரா ! இதுவரையில்தாங்களரு பதினெண் புராணங்களின் சரித்திர சாரங்களைக்கேட்டுத் தெளிந்தேன். இனி உப புராணங்கள் என்று சொல்லப்படுகிறவை எவை ? அவற்றின் சாராம்சத்தையும் அறிவிக்கவேண்டுகிறேனென;" அம்முனிப்புங்கவர் சொல்லலுற்றார்—ஏ, சுதனே ? கேள் ! உப புராணங்களில் முக்கியமானவை சனத்குமாரம், நரசிம்மம், நாரதீயம், சைவம், துர்வாசம், கபிலம், மானவம், அவசனுசம், வருணம், கலிகம், சாம்பம், நந்தசவுரம், பராசரம், ஆதித்யம், மஹேசுவரம், தேவிபாகவதம், வசிஷ்டபுராணம் என்பவைகளே—இவற்றிற்சிறந்தவை சிவபுராணம், கலிகபுராணம் என்பவைகளாம் அவற்றில்.—

சிவபுராணம்—இது 6,000 சுலோகங்களில் சனத்குமாரர் வியாசருக்கு உபதேசிக்க, அவரால் நைமிசாரணியரிஷிகளுக்கு உபதேசம்செய்யப்பெற்றது. இது இலிங்கபூஜை, பிரம்மா, விஷ்ணு முதலானவர்களின் உற்பத்தி; யோக வித்தை, காசியாதி சிவக்ஷேத்திரங்களின் மகிமை; திருபராசுரன்வதை, தக்ஷருடைய யாகம், கார்த்திகேயர், கணேசர், நந்தி, பிரிங்கி ரிஷியின் ஜனனம், சிவராத்திரியின்மகிமை முதலான விஷயங்களைப்பற்றி விவரித்துச் சொல்லுகின்றது.

கலிகபுராணம்—இது 98 அதியாயங்களில் 9,000 சுலோகங்களில் கிரிஜாதேவியை காளி பத்திரக்காளி மஹாமாயி என்றுதி பெயர்களால் சக்தி பூஜையைச்செய்யும் விவரங்களைப்பற்றியும்; சிவபார்வதி விவாஹவைபவத்தை ப்பற்றியும்; பைரவிசரித்திரம், ஆசாம்நாட்டுக்கடுத்த காமரூபமென்னுமிடத்தில், காமாக்ஷி என்னும்பெயரால் துர்க்கையின் கோவிலிருப்பதைப்பற்றியும் தெரி விக்கின்றது. மற்றவைகள் மூர்த்தி ஸ்தல தீர்த்த மகுத்துவங்களைப்பற்றி போதிக்கும் மதவைஷம்மியமான கிரந்தங்களேயாம்.

இத்தியாதிகளைக்கேட்ட அரங்கநாதன்:-ஏ, ஆசாரியாரே! கேவலம் ஸ்திரி சூத்திரர்களுக்கு சுருதி ஸ்மிருதிகளுடைய கருத்துக்களைச் சங்கிரகமாகவும், தெளிவாகவும், அறிவிக்கும்பொருட்டு புராணங்களை இயற்றியதாகச் சொன்னீர் களே; அப்படிக்கிருக்க, இப்புராணங்களில் சில சைவமதத்தையும், சில வைணவமதத்தையும் கண்டித்து, தூஷிக்கவேண்டியகாரணமென்ன? பத்ம புராணத்தை ஒருவரே எழுதி இருக்க, அதில் பூர்வபாகத்தை வைணவர்களும்; உத்திரபாகத்தை சைவர்களும் பிரமாணமே யல்லவென்று ஒதுக்கிவிட காரண மென்ன? மச்சிய கூர்மாதி சில புராணங்களை தாமசமானவை என்றும்; விஷ்ணுபாகவதாதி புராணங்களைச் சாத்மீகமானவைகளென்றும், பிரம்மாண்ட பவுஷியத்யாதி புராணங்களை இராஜசமானவை என்றும் வைணவர்கள் சொல்வ தற்குக்காரணமென்ன? அன்றியும் ஆதியில் ஒரே புராணமாக இருந்ததை இடையில், பதினெட்டுப்புராணங்களாகவும்; பிறகு உப புராணங்கள் என்னும் பெயரால் பதினெட்டு புராணங்களாகவும்; இப்போது இந்நாட்டில் ஸ்தல புராணங்கள் என்னும் பெயரால்கணக்கற்ற புராணங்களாகவும் இருக்கக்காரண மென்ன? இச்சந்தேகங்களை தீர்த்தருளவேண்டும் என பிரார்த்திக்க" அந்தயோகீந்திரர் சொல்லுகிறார்—ஓ, சுமதி-"சுருதி என்னும் வேதத்திற்குறித்த ஒரே மூர்த்தியாகிய பரமாத்மாவை சிருஷ்டி விஷயத்தில் பிரம்மா வாகவும்; இரக்ஷணிய விஷயத்தில் விஷ்ணு வாகவும்; சங்கார விஷயத்தில் ருத்திரனுகவும்; அறிவு அல்லது ஞானவிஷயததில் சரஸ்வதி யாகவும்; தனதானியப் பொருள் விஷயத்தில் இலக்ஷிமி யாகவும்; சவுரிய

சாமார்த்திய விஷயத்தில் சக்தியாகவும்; மழைமாரி விஷயத்தில் வருணனாகவும்; காற்று விஷயத்தில் வாயுவாகவும்; உஷ்ணந்தரும் விஷயத்தில் அக்கினியாகவும், ஆன்றோர்களாகிய ஆரியரிஷிகள் காலதேச வர்த்தமானங்களை அனுசரித்துப் பற்பலவிதமாக வர்ணித்துப் பிரார்த்தித்துவந்ததாக முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா?

இந்த உண்மையான கருத்தை அறிந்த வியாசர் முதலானமஹாத்மாக்கள், அப்பரமாத்மாவின் பல பெயர்களையும், அவற்றின் அருத்தங்களையும், அந்தப் பரமாத்துமாவினால் நியமிக்கப்பெற்ற தருமார்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களை அடையும் சாதனங்களையும், விஸ்தரித்து புராணங்களினால் பிரபலமாக்கினார்கள். அதுபற்றியே, ஜாபால ஸ்மிருதியில் "சுருதி ஸ்மிருதி விரோதேஷு சுருதிரேவ கரீயஸீ, அவிரோத ஸகாகாரியம் &c. என்றவாக்கியம் சொல்லப்பட்டிருக்கின்றது." அதாவது சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோதமிருக்குமிடங்களில் சுருதியே கவுரவ பிரமாணமாகும் என்பதாம்.

இப்படியிருக்க, இடையில் பவுத்தமதஸ்தருடைய கலகத்தினாலோ, மற்றெந்த மதஸ்தர்களுடைய சச்சரவுகளினாலோ; இப்போது சிவபூஜைசெய்யும் குருக்களும், விஷ்ணுபூஜைசெய்யும் பட்டர்களும் வருமானத்தைக்கருதி "என் தெய்வம்பெரிது! உன் தெய்வம்சிறிது" என்று சண்டைசச்சரவுகளைசெய்வதைப் போல; பிழைப்புக்கு வழியற்றுத் தவித்த ஸமஸ்கிருதக கவிகளில் சிலர், சிவனை துதித்தும், சிலர் விஷ்ணுவை பூஜித்தும் புதுசுலோகங்களைப்பாடி பழய புராணங்களின் இடையில் நுழைத்தும்; சிலர் மதத்துவேசமானபுது புராணங்களையேபாடி அவைகளுக்கு மகிமையும் மேன்மையுமுண்டாகச்சருக (அப்புத) புராணங்களை வியாசபகவான் திருவாய்மலர்ந்தருளியதாகப் பொய்ப்பெயர்களை புனைந்தும், தான்கெட்டதல்லாமல் சந்திரபுஷ்கரணியையும் கெடுத்ததைப் போல பெரியோர்மீதும் பழியைச்சுமத்திவிட்டார்கள்—அன்றியும்.

அக்காலத்தில் இந்நாட்டையாண்டுவந்த அறிவிலிகளான சில அரசர்களுக்கும் துர்ப்போதனைச்செய்தும்; அவர்களை தம்வசமாக்கிக்கொண்டும், அவர்களுடைய மதக்கருத்துகளின்படி கோயில், கோபுரங்களைக்கட்டிவைப்பித்தும், அவைகட்குவேண்டிய மணிமானியங்களையும், ஆடையாபரணங்களையும், உற்சவ வேடிக்கைகளையும்செய்விப்பித்தும்; அநேகரைத் தமமதத்தைச் சாரும்படிசெய்வித்தும்; அப்படி தமதுமதத்திற்குச் சாராமல் தாக்கிப்பேசுவோரைப்பிடித்து கல் காணைகளிற்போட்டு ஆட்டிக்கொன்றும்; செக்குகளிற்போட்டு நசுக்கியும், கழுவேற்றியுமல்லவே; இப்போதிந்நாட்டிலிருந்த சில தமிழ் தெலுங்காதி வித்வான்களும் அந்தக்கீர்வாண வித்துவான்களையே பின்பற்றி, தயக்கிடையான மதத்துவேசமான சணக்கற்ற கிரந்தங்களையும், ஸ்தல புராணங்களையும்பாடி பிரபலமாக்கிவிட்டார்கள். அப்படியாக்கிவிடவே.

ஆரியர் நாடாகிய இதில் அநேக சமயபேதங்களும், ஜாதிபேதங்களும் ஏற்பட்டு, குடிகளுக்குள் கலகங்களும் சண்டைகளுமுண்டாகிவர, ஆதியிலிருந்த சமரச ஞானமும்; சகோதரவாஞ்சையும், அவற்றாலானசிறந்த "ஒருமைப்பாடு" என்னும் ஒப்பற்ற கட்டுப்பாடுமழியவே, இந்நாட்டாரின் க்ஷேமம் குறைந்து, துன்பமுண்டாகி, துக்கசாகரத்தில் தவிக்கும் துர்ப்பாக்கிய ஸ்திதியை அறிந்த ஏனைய நாட்டார், படையெடுத்துவந்து இந்நாட்டை வெகு சுலபமாகப்பற்றிக்கொண்டார்கள்—அந்தோ! ஆரியநாட்டிற்குவந்த அலங்கோலத்தைச் சொல்லநாக்கும்கூசுகின்றதே—

இப்படி இந்நாட்டைக் கைக்கொண்ட ஏனையநாட்டார்கள், ஜாதி சமய ஆசாரங்களில் இந்நாட்டாருக்கு முற்றும் வேறுபட்டவர்களானபடியாலும்; அவர்களே அரசராகி, அதனால் ஆணுவமுங்கொண்டிருந்தவர்களானபடியாலும்; இந்நாட்டாரைத் தம்மதத்திலும், ஜாதியிலும் சேரும்படி கட்டாயப்படுத்தியும்; இவர்களுடைய கோயில் கோபுரங்களை இடிப்பித்தும், அருமையான கிரந்தங்களை அக்கினிக் கிரையாக்கியும், படாதபாடுகளைப் படும்படி செய்துவரவே— இப்பரதகண்டத்தின் புத்திமான்களும், படிப்பாளிகளும், பக்திமான்களும், (பிளேகுபயத்தினாலோடுபவரைப்போல) தம்தம்நாட்டையும், வீட்டையும்விட்டு காட்டுக்குள்போய் காய்கிழங்குகளைத்தின்று, கள்ளரைப்போல் தவித்து காலம் போக்கி மறைந்தார்கள்—

இத்தன்மையான ஆபத்துகள் சம்பவித்தகாலத்தில், சேர சோழ பாண்டிய ராதிகளுடைய சரித்திரங்கள் மறைவு பெற்றதன்றியில்; ஆதி ஆந்திரர்களும், அவர்களுடையபின் சந்ததிகளாகிய சாலுக்கியரும், காலசூரியரும், கஜபதி, நரபதி ராயலுகளும், அவர்களுடைய சந்ததிகளாகிய பலிஜ நாயடுகார்களும் வீரதீரர்களாக வெளிவந்து; ஏனையநாட்டு குரூர ஜாதியார்களால் இந்நாட்டாருக்கு கஷ்ட நிஷ்டூரங்களதிகமுண்டாகாதபடி சுமார் 500 வருஷகாலங்களாக (அவ்வேனைய நாட்டாரோடு சண்டைகள்செய்து) இந்து மதத்தையும், இந்துஜாதி சமயாசாரங்களையும் கெடாதபடி பாதுகாத்து செங்கோல்செலுத்திவந்தார்கள். அவர்களுடைய ஆதி உற்பத்தி விவரத்தை பாகவதாதி புராணங்களில் பரக்கக்காணலாம். அவர்களுக்குத் தனியாகஜாதி சமய சரித்திரங்களுமிருந்தன. இடையில் மகம்மதியராலுண்டான கஷ்ட நிஷ்டூரங்களினாலும், சொந்த பந்துஜன பொறாமைச்சண்டைகளினாலும், அவர்களுடைய ஆதி சரித்திரங்கள் மறைந்ததன்றியில்; காலதேச வர்த்தமானங்களைத் தழுவி ஜனசமூஹத்தாருக்குள் சமரசஞானமும், சஹோதரவாஞ்சையும், உண்டாகும்படி புதியபுராணங்களை எழுதி போதிக்கவும்; இந்நாட்டையாண்ட ஆதி அரசர், ஆன்றோர் சரித்திரங்களை வெளியாக்கவும் கைபற்றப்போகவே; இப்போது இந்நாட்டருக்குச் சரியான சரித்திரமே கிடையாதென்று ஏனையோர் நிந்திக்கச்சம்பவித்தது.

ஆ! என்ன காலவித்தியாசம்! ஆதியில் ஒரேசமயத்தாராகவும், ஒரேஜாதியாராகவும் இருந்து சகோதிர வாஞ்சையுடன் வாழ்ந்தும், எந்நாட்டாராலும் புகழ்பெற்றோங்கிய இந்நாட்டாருக்கு இடையில்வந்த சமயபேத ஜாதிபேத சசண்டைகளினால், இந்நாட்டையும் இழந்து, பிறருடைய பச்சாத்தபத்திற்கும் பாத்திரராகிய துர்பாக்கிய தசையை என்னென்று சொல்லலாம்—இப்படிக்

கெல்லாம் உண்டான கஷ்ட நிஷ்டூரங்களை நீக்கக்கருதியே கருணாநிதியாகிய கடவுள் ஜாதிபேதம்,சமயபேதத்தைப்பாராட்டாமல் நீதிநெறிச்செலுத்தும் மங்காத மாக்ஷிமையைப்பெற்ற ஆங்கில அரசை இந்த ஆரியநாட்டில் நியமித்தார்; ஆகையால், இனி குடிகளுக்கு க்ஷேமமுண்டாகலாமென்று சொல்ல ; அரங்கநாதன் கேட்டு—இந்நாட்டிற்குண்டான கஷ்ட தசையைப்பற்றி சிந்தித்துவிட்டு—ஏ ! தேசாபிமானியே ? இந்த ஆரியவர்த்தத்துக்கு ஆங்கில அரசை நியமித்த அருளானந்த மூர்த்திக்கு, ஹிருதயபூர்வவந்தனம் செய்கிறேன். இதுநிற்க—

ஏ, உத்தமகுருவே, இந்த உலகசிருஷ்டியைப்பற்றி இந்நாட்டார் சொல்லி இருக்கும் சங்கதிகளை எல்லாம் முன்னமே தங்களால் தெரிந்துகொண்டிருக்கிறேன். இனி இதுவிஷயமாக மேல்நாட்டு தத்துவசிரோமணிகள் சொல்லும் சங்கதிகளைத் தெரிவிக்கவேண்டுமென—அந்தக் கலாநிதி யோகீந்திரர் சொல்லலுற்றார்—ஏ ! சுபுத்திரா ! சிரத்தையாகக்கேள்,

(பிரபஞ்ச பிண்ட உற்பத்தி விவரம்.)

———)x(———

சிரசிற்குமேலிருக்கும் ஆகாயத்தைச் சுத்தமான இருட்டுக்காலத்திலேறிட்டுப்பார்க்கில், அங்கு அநந்தகோடி நக்ஷத்திரங்கள் தம்தம்கதிகளிற் சுழன்று பிரகாசித்தல் பிரத்தியக்ஷமல்லவா ?

அந்த நக்ஷத்திரங்களுக்கு மேலாக தூரதிருஷ்டி கண்ணாடி, சூக்ஷ்ம வீக்ஷணிகளைக் (Telescope & Spectorscope) கொண்டுப் பரிசோதிக்கில் ; அங்கு, சில வெண்ணிறமாயும், சில வெளிரியசென்னிறமாயும்,சில மஞ்சள் நிறமாயும், சில வெண் மணல் நிறமாயும், பின்னும் பல வைர இரத்தினபொடிகளைப் போலவும் பிரகாசிக்கும் தாரகா கணங்கள் அநந்தம் தோன்றும்.

அவைகளுக்கு (நூபிலியா Nebulea) பிரபஞ்சப்பரிணாமகிரப் படலாகிருதம் என்று பெயர்—அதாவது பிரபஞ்சங்களுற்பத்திக்கு காரணமான பகோளமண்டலங்களாம்—அவைகள், அநந்தகோடி மைல்கள் தூரங்களில், அநந்தகோடிவருஷங்களாக ஆவிரூபமாய்ச் சுழன்றுக்கொண் டிருக்கும் பிரபஞ்ச அஸ்திவார பிண்டங்களாம் — அப்பிண்டங்களே நாளாவட்டத்தில் நாம் வசிக்கத்தக்க இந்த உலகத்தைப்போல பலபிரம்மாண்டங்களாகின்றன— எப்படியெனில்.

ஜகதீசுவரனுடைய சுவாசங்களென்றுச் சொல்லத்தகும் பிராணவாயுவும், (ஆக்ஸிஜன்—Oxygen) ஜலவாயுவும், (ஐடிரிஜன்—Hydrogen) பின்னும் சில மூலகாரணபூதங்கள் (அவருடைய இச்சாசக்தியினால்) அவ்யக்தம் அல்லது மூலபிரகிருதியின் ஸ்வரூபமாகியபரமாணுவை (ஈதர் Ether) த்தாக்க; அது,மின்

தாதுக்களாக (எலக்ட்ரன்ஸ் Electrons) மாற்றம்பெற்றும்; அம்மின்தாதுக்கள் பிரகாச அணுக்களாக (ரேடியமாக Radium) மாற்றம்பெற்றும், அந்தபிரகாசித அணுக்கள் சூக்ஷம வச அணுக்களாக (ஆட்டோம்ஸ்—Atoms) மாற்றம்பெற்றும்; அவைகள் நாளாவட்டத்தில் அணுத்திரள்களாக (மோல்குலீஸ்—Molecules) மாற்றம்பெற்றும்; அவ்வணுத்திரள்கள்கூடி, முன்னுக்கும் பின்னுக்கும் இழுக்கும் கவர்ச்சி சக்திகளாற் பந்தப்பட்டு சுழல்வதனால், அக்கினிபிண்டங்களாக (தீமொத்தை—Mosses) மாற்றம்பெற்றும்; அப்படியாகிய அக்கினிபிண்டங்கள் பல சூரியர்களாகி ககோளத்தின் பலபக்கங்களில் பறந்து, அக்கினிபுகைகளுடன் சுடர்விட்டெரிந்தும், கர்ஜித்துக்கொண்டும், அநேககோடி வருஷங்களாகச் சுழன்றுக்கொண்டிருக்க; அவற்றின் அக்கினி ஸ்வரூபமான ஆவிகளெல்லாம் திரண்டு சுழன்று வருவதனால் கோளாகார பிண்டங்களாகின்றன.

அக்கோளாகார பிண்டங்களே, பின்னும் பலகோடி வருஷங்களாகச்சுழல்வதனால், அக்கினிஜலபிண்டங்களாக மாற்றம்பெற்றும்; அவ்வக்கினி ஜலப்பிண்டங்களும் பலகோடிவருஷங்கள் சுழன்றுவருவதனால், அவற்றின் அக்கினிமயமான சூடுசற்றுத்தணிய, ஜலசமுத்திர பிண்டங்களாக மாற்றம்பெற்றும்;—அச்சமுத்திராண்ட பிண்டங்களும் பின்னும் பல்லாண்டுகளாகச் சுழன்றுவருவதனால், அச்சமுத்திர ஜலத்தினாலுண்டான ஓர்விதப்பாசியினாலும், அதிலுற்பத்தியான சங்கமூல கிரிமிகீடாதி சவசத்துக்களாலும், ஓர்வித கிட்டம்—பிரகிருதி Matter தோன்றியபிறகு, அவை பசுபக்ஷி மனுஷா வதிக்கத்தக்க மண்ணுலகங்களாகி விடுகின்றன,

நாம் இருக்கும் இந்தபூமியும் ஒருகாலத்தில் நமது சூரியாண்டத்திலிருந்து அக்கினிமய ஆவியாகக்கிளம்பி (Igneous fusion) தணல்விட்டெரிந்து உருகிய லோகங்களினால் மொத்தையாகி, பயங்கரமான அக்கினிப் புகைகளினாலும், மேகங்களினாலும், சூழப்பெற்றும் (Centripetal & Centrifugal) மத்தியாபிமுக, மத்தியாதீத கவர்ச்சிகளினால் அநேக ஆயிரம்வருஷகாலங்களாகச் சுழன்று கோளாகார ரூபத்தைப்பெற்றது.

ஆதியில் அக்கினிமய பிண்டமாக இருந்த இந்த உலகம், குளிர்ந்து கட்டிமயமாக 80,000,000 எட்டுகோடி வருஷங்களான தன்றியில்; இது சூரியனிடமிருந்து பிரிந்தபோது 200,000 சென்டிகிரேட்டு உஷ்ணத்திலிருந்து 200, சென்டிகிரேட்டு குளிர்ச்சிக்குவர, 350,000,000 முப்பத்தைந்துகோடி வருஷங்களாகியதாம்.

அப்படியாகியும், இந்த உலகத்தின் அடியில் ஆழமாகத்தோண்டிப்பார்க்கில், அங்கு பயங்கரமான அக்கினி ஜலம் சுடர் விட்டெரிந்துக்கொண்டு இருக்கிறது,

அப்படி எரியும் அக்கினியினால் பூமியின் பலபக்கங்களில் பூகம்பங்களுண்டாகி அவற்றின்மூலியமாக அக்கினிக்கங்களும், எத்னா, விசுவியஸ் முதலான அக்கினி பருவதங்களும் பீறிக்கொண்டுவந்து தணல்விட்டெரிந்து கர்ஜித்தல் பிரதியக்ஷம். சில அக்கினிபருவதங்களின் அக்கினிசுவரூபம் நாளாவட்டத்தில் தணிய, அவைகளின் கிட்டம் பெரும்பாறைக்கற்களாகவும், பெரும் பருவதங்களாகவும் மாற்றம் பெறுகின்றன.

இரவில் நமக்கு ஆநந்தகரமாக வெளிச்சத்தைத்தரும் நமது சந்திரனும் ஒரு காலத்தில் நமது பூமியின் மைய அக்கினியிலிருந்து பீறிட்டுக்கொண்டுப்போய் பலவருஷங்கள் எரிந்து, பிறகு தணிந்துச்சுழலும் பெரும்பாறைக்கல் பிண்டமேயாம்.

பிராகிருத பிரளயம்.

இனி இந்த பூமத்தியிலிருக்கும் அக்கினியினால் எத்தனையோகக்கங்கள் பிண்டங்களாகப் பீறிக்கொண்டுபோகக்கூடும். அப்படி பீறிக்கொண்டுபோகப்போக பூமியின் பலபக்கங்களில் பயங்கரமான பூகம்பங்களுண்டாகி, அவற்றால் பூமி பிளவுபட்டுப்போக, பூமியின் மேலிருக்கும் மலைகளும், விருக்ஷங்களும், வீடு வாசல்களும் இடிந்து முறிந்து சின்னாபின்னமாகி விழ; அவைகளில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் பிராணிகோடிகள் பாழ்த்துப்போம்—அப்படியாவதற்கே பிராகிருதபிரளயம் என்று சொல்லப்பெறும்.

ஜல பிரளயம்.

ஒருவேளை அப்படிப்பட்ட பல பூகம்பங்களினால் பூமையத்தில் எரிந்துக்கொண்டிருக்கும் பெரும்பாகமான அக்கினி சக்தியும், அதன் உஷ்ணமும் தணிந்துபோக; பூமியின்மேல் பெய்யும் பனியினாலும், மழையினாலும், ஜலபாகம் அதிகரித்து சமுத்திராண்டமாகிவிட; ஜந்துகோடிகள் அந்த ஜலத்தில் மூழ்கி பாழ்த்துப்போம், அப்படியாவதற்கே ஜலபிரளயம் என்று சொல்லப்பெறும்,

அக்கினி பிரளயம்.

ஒருவேளை பூமையத்திலிருக்கும் அக்கினிசக்தியினாலும், காற்றினாலும், பூமியின் ஜலபாகம் தினே தினேச் சுண்டிப்போக, பூமியானது சுத்தமாகக்குளிர்ந்து தக்கைப்போலாகிக் கவர்ச்சி சக்திகளற்றுப்போவதனால்; பிராணகோடிகள் பாழ்த்தும், இந்தபூமி மறுபடியும் சூரியனிடம்போய்ச்சேர்ந்து அக்கினிமய பிண்டமாகக்கூடும். அப்படியாவதற்கே அக்கினிபிரளயம் என்று சொல்லப்பெறும்.

அத்தன்மையான பிரளயங்கள் எத்தனையோ சம்பவித்தன; இனி எத்தனையோச்சம்பவிக்கக்கூடும். இத்தியாதிகளுக்கு காரண கர்த்தாவாகிய ஜகதீசுவரனுடைய சக்தியை அறியவல்லார்யாவர்? என்றசொல்ல,

அரங்கநாதன்கேட்டு "ஏ, தத்துவசிரேஷ்டரே! இனி பிரபஞ்ச பிராணிகளின் சிருஷ்டிவிஷயத்தில் மேல்நாட்டு தத்துவசிகாமணிகள்கொண்டிருக்கும் கருத்துகளைத்தழுவித் தெரிவிக்கவேண்டுகிறேன்; என."—கலாநிதி யோகீந்திரர் பின்வருகிறபடி சொல்லலுற்றார்.

A—21

பிராணிகளின் உற்பத்தி விவரம்.

ஆதித்தனிடமிருந்து அக்கினி ஜலபிண்டமாகப் பிரிந்த இந்த பிரபஞ்சமானது பல்லாண்டுபல்லாண்டுகளாக பல கவர்ச்சிகளினால் பந்தப்பட்டுச் சுழல்வதனால்; இதன்மேலிருந்த பெரும்பாகமான உஷ்ணம் படிப்படியாகத் தணிந்த பிறகு, மேல்புறணி அல்லது மேல்கிட்டம்தோன்றியதாக முன்னமே சொல்லி இருக்கிறோமல்லவா? அதாவது.—

ஒருவெங்காயத்தை எடுத்து அதன்மேல் தோல்களை உரித்துக்கொண்டே போனால், அது பல புரைகளால் மூடப்பட்டிருத்தல் பிரத்தியக்ஷமல்லவா? அதுபோலவே, இந்தபூமியும் அக்கினிமய ஸ்வரூபத்திலிருந்து இப்போதிருக்கும்படியான ஸ்திதியை அடைய, பல்லாயிரம்வருஷங்களையும், பல்லாயிரம் கனதியான கிட்டம் அல்லது புறணிகளையும் பெற்றிருக்கிறது.

இதைப்பற்றியே பூததத்துவசாஸ்திரிகள் இந்தப்பூமி, சூரியனைவிட்டுப் பிரிந்த பிறகு, இப்போதிருக்கும்படியான குளிர்ந்தத்தன்மையை அடைய அநேக காலாவதிகளையும், கிட்டத்தின் கனதிகளையும் கணித்து கணக்கிட்டிருக்கிறார்கள்—அந்த கணக்கின்படி.

இந்தபூமியின் (முதல்காலாவதியில் Eozoic) ஆழ்ந்த அடிப்புறணி அல்லது கிட்டம் 70,000 அடிகள் கனதியுள்ளதாகவும்; அதற்கு அடுத்த மேற்புறணி (இரண்டாவது காலாவதியில்—Palaeozoic) 42,000 அடிகள் கனதியுள்ளதாகவும்; அதற்கு அடுத்த மேற்புறணி (3-வது காலாவதியில்—Mesozoc) 15 000 அடிகள் கனதியுள்ளதாகவும்; அதற்கு அடுத்த மேற்புறணி (நான்காவது காலாவதியில்-Tertiary) 3,000 அடிகள் கனதியுள்ளதாகவும்; அதற்கு அடுத்தமேற்புறணி (ஐந்தாவது காலாவதியில்—Post Tertiary) 600 அடிகள் கனதியுள்ளதாகவும் படிப்படியாக மாற்றம்பெற்றும்; அப்புறணிகளில் முறையே முதலில் கடற்பஞ்சைப்போன்ற பூண்டுகளையும்; பிறகு, பெரன்சு என்னும் கல்கிளப்பி பூண்டுகளையும், பிறகு இலையற்ற செடி விருக்ஷங்களையும், பிறகு இலைகளோடு கூடிய செடிவிருக்ஷங்களையும் படிப்படியாக விளையும்படி செய்வித்தும்; அவைகளின் சவசத்துக்களைக்கொண்டு, அவ்வவ்பூண்டு பயிர் விருக்ஷங்களுக்கேற்றபடி முறையே முதலில் (மனோரா—Monera) என்ற சூக்ஷமரூப ஜந்துக்களையும், பிறகு மச்சங்களையும், பிறகு ஊர்வனங்களையும், பிறகு பால்தரும்படியான பிராணிகளையும், பிறகு பசு பக்ஷி மனுஷர்களையும் படைக்கப்பெற்றதாக ஸ்பஷ்டமாகிறது.—(எப்படியெனில்)

ஜீவமூலத்தோடு (Oxygen) ஜலமூலத்தை (Hydrogen) ஓர் அளவாகச் சேர்ப்பதனால், ஜலம் உண்டாகிறதைப்போல; (சகல ஸ்தாவர ஜங்கமங்களுக்கும் சாரீரியாகிய சர்வேசுவரனது சுவாசங்களெனச் சொல்லத்தகும்) மூலகாரண பூதங்களாகிய பிராணவாயுவையும், (Oxygeu) கரிமூலவாயுவையும், (Carbon) ஜலவாயுவையும், (Hydrogen) உப்புவாயுவும் (Nitrogen) பெரும்

பாகமாகவும்; அவைகளோடு கெந்தகசத்து (Sulphur) பாஸ்பரசத்து (Phosphorus) முதலான மூலகாரணபூதங்களை சிறுபான்மையாகவும் சேர்த்து, மூலபிரகிருதியோடு கலக்க; அவைகள் நாளாவட்டத்தில் திரண்டு, தாதுகந்தமூல பிராணிகளாகி; அவற்றின் சவசத்துக்களால் புரோடபாசம் (Protoplasm) என்னும் பஞ்சுப் பாசைப்போன்ற பிராணோற்பத்திப்பொருளைத் தோன்றும்படி செய்விக்க, அதிலிருந்து பிராணிகோடிகள் ஜனிக்கின்றன,

அந்த பிராணோற்பத்தி பஞ்சுப்பாகிய புரோடபாசம் என்னும் ஜலஜல்லி குழம்பை, தக்க சூக்ஷம வீக்ஷணி என்னும் (Microscope) அணுசரிசிணி கண்ணாடியைகொண்டு சோதிப்போமாகில்; அதில்கணக்கற்ற கெபிகளையும், அநேக வட்டவடிவான அறைகளையும்காணலாம். அந்தக்கெபி அறைகளும், அவ்வறைகளுக்குள் சூக்ஷமாணுக்களாகக் காணுகிறவைகளும் பிராணிகளாம்.

அந்த அறைகளில் அந்த ஸ்திதியில் இருக்கும் பிராணிகளுக்கு மனேரியா (Morera) என சூக்ஷமாணு பிராணிகளென்றுப் பெயர். அவைகளுக்கு உருவமும் வருணமுமில்லை. அவைகளிலிருந்து அமியேபா (Amaebae) என்னும் (அடிக்கடி மாறுந்தன்மையுள்ள) சுழல் சூக்ஷம ஜீவிகள்தோன்றுகின்றன—அவைகளிலிருந்து புரோடஜோ (Protozoa) என்னும் (உருவமும் வருணமுமற்ற) சூக்ஷம ஜலசரங்கள் தோன்றுகின்றன—அவைகளிலிருந்து ஸபாஞ்சி—கடற்பஞ்சைப்போன்ற பிராணிகள் (Sponges) தோன்றுகின்றன—அவைகளிலிருந்து பவளக்கொடியாக்கும் (Coral Builder) பிராணிகள்தோன்றுகின்றன; அவைகளிலிருந்து வெள்ளிமச்சங்களும், (Star fish) நத்தை ஞண்டு புழு பூச்சிகளுந் தோன்றுகின்றன; அவைகளிலிருந்து ஊர்வனங்களும், அவைகளிலிருந்து பக்ஷிகளும், வெளவால்களும்; அவைகளிலிருந்து மிருகங்களும்; அவைகளிலிருந்து வானரங்களும்; அவைகளிலிருந்து வாலில்லாகுரங்குகளும் தோன்றியபிறகு, கடைசியாக—மானவஜாதியாராகிய மநுஷர்தோன்றினர்—ஆ என்ன ஆச்சரியம்! கேவலம் தாதுகந்தமூலத்திலிருந்தும், அணுரூபமான அற்ப பிராணிகளிலிருந்தும், பிரபல ஞானம்பெற்று பிரகாசிக்கும் பிரஜைகளை (Evoleve) தோன்றச்செய்த சர்வேசுவரனுடைய சக்தியை வர்ணிக்க யாவரால் முடியும்? இக்கருத்தைக்கொண்டே இந்நாட்டு தத்துவஞானிகள் சித்து அசித்துக்களுக்குச் சரீரியான சர்வேசுவரன் மச்ச, கூர்ம, வராஹ, நாரசிம்ம, வாமன, இராமாதி அவதாரங்கள் எடுத்து ஜகத்கோடிகளையும், ஜந்துகோடிகளையும் வாழ்விக்கச்செய்கிறார் என்றுவர்ணித்து எழுதி இருக்கிறார்கள்; ஆகவே அப்படி உண்டான ஆதிமனுஷனால் பிரபஞ்ச பிரஜாவிருத்தியானபடியால் அவனே பிரஜாபதியாம்-என-அங்கநாதன் கேட்டு. ஏ, தத்துவோபதேசிகரே! உலகசிருஷ்டியைப்பற்றியும், உலக ஜீவிகளுடைய சிருஷ்டியைப்பற்றியும், சொன்னசங்கதிகளால் என்சந்தேகங்கள்நீங்கின—இனி இந்த உலகத்துக்கு சிரோபூஷணமாக விளங்கும் இந்த இந்துதேசத்தின் ஆதிபிரஜாபதிகளையும், அவர்களுடைய சந்ததிகளையும்; இந்நாட்டை ஆதிகாலந்தொட்டு நாளதுவரையில் ஆண்டுவந்த பிரபலமான சக்கிரவர்த்திகள், பெருநில குறுநிலமன்னர்கள், ஆன்றோர், சான்றோர், சாதுக்கள் முதலானவர்களுடைய பெயர்கள் முதலான விவரங்களைப்பற்றியும் சங்கிரகமாகச்சொல்லி, என் சந்தேகங்களை நீக்க வேண்டுமென மன்றாட;—அந்தக் கலாநிதியார் கேட்டு, அக்கேள்விகளுக்கு பின்வருகிறபடி சொல்லலுற்றார்.

பிரஜாபதிகள்.

பிருகு, புலஸ்தியர், புலஹர், கிரது, அங்கீரசு, அத்திரி, தக்ஷர், வசிஷ்டர், நாரதர் என்னும், பத்துபிரஜாபதிகளைபிர்ம்மாசிரிஷ்டித்தார். இந்த பத்துபிரஜாபதிகளிஞல் அநேகமக்கள் பிறந்து; அவர்களை தருமநியமனங்களால், இரக்ஷிககருதி பிர்ம்மா தனது மனோ அம்சத்திஞல் சுயம்பு மநுவை சிருஷ்டித்தார் அந்த சுயம்பு மநுவிஞலும் சந்ததி விருத்தியாககி தருமநியமனங்களைத் தழுவி நடக்க சதரூபை என்கிற ஒருஸ்திரீயையும் சிருஷ்டித்தார். அப்படி சிருஷ்டித்த சதரூபையை, சுவயம்புமநு விவாஹமசெய்துகொண்டதில், அவர்களுக்கு பிரயம்விர்தன், உத்தானபாதன் என்ற ஆண்மக்களும், பிரசூதி-ஆகூதி என்னும் பெண்மக்களும் பிறந்தார்கள.

பிரம்ம புத்திரரான சுயம்பு மநுவின் சந்ததிவிவரம்

உத்தானபாதர் சந்ததி.

சுவயம்பு மநுவின் புத்திரஞன, உத்தானபாதன் என்னும் பரதவருஷ சக்கிரவர்த்திக்கு துருவர், வட்சரர், புஷ்பாரனர், வியுவஷ்டர், சாவதேஜஸர், காகுஸ்தியர், உலுமுகர், அநகர், வேனதர்மர், பிருது, அந்தரத்தியானர், அவித்தனர், பிராசீனவர், பரிக்ஷித்தர், தக்ஷபிரஜபதி பிறந்து ஆண்டார்கள. அந்த தக்ஷபிரஜாபதிக்கு பத்துபெண்கள் பிறந்து - தருமரைக்கூடி பதிமூன்று பெண்களைப்பெற்று மரீசியின் குமாரராகிய கஷியபரை மணஞ்செய்துக்கொண்டார்கள். பிறகு அவர்கள் தானர், திதி அதிதி, மற்றும் இருபத்தேழு பெண்கள் பிறந்து சந்திரனை மணந்தார்கள்.

பிரயம் விரதருடைய சந்ததிகள்.

சுவயம்புமநுவின் மற்றோர் குமாரராகிய பிரயம்விரதர் என்[illegible]ம் புத்திரபத்தின் சக்கிரவர்த்திக்கு நபி, ரிஷபதேவர், பரதர், சுமதி, விருத[illegible]ர் தேவதாஜித்-தேவதும்மன், பரமேஷ்டி, பிரதாஹர், பூமர், உத்கிதா, பிர[illegible]ர், பிருது, பிராதுசேனர். நாகதர், காயா, சித்தார்த்தர், சுமரதர், மரீசி, [illegible], மநு, வீரவிரதர், மாந்து, பவுனர், துவஸ்த்தர், விராஜர் அவருடைய நூறு பிள்ளைகளும ; அந்த உத்தானபாதர், பிரியம்விரதர், என்னும் இரண்[illegible]ரர் களுடைய சந்ததிகள் அக்காலத்தில் ஜம்புதுவீப மென்னும் இந்தபர[illegible] தையும்; பிளக்ஷ்தீபம், சாமலதீபம், குசதீபம், கிரவுஞ்சதீபம், சா[illegible]தீபம், புஷ்கரதீபம் என்றுதி தேசங்களையும் ஆண்டுவந்தார்கள். அவர்கள் சந்[illegible]ரான ரிஷபதேவருடைய மக்களாகிய குசவர்த்தர், இலவர்த்தர், பிரம்மவர்த்தர், ம[illegible]யர் கேதுபதரசேனர், இந்திரஸ்பிரிதி, விதர்பர், கேகயர், கவியாஹஹரி, அந்தரீக்ஷர் பிரபுத்தா, பிபிலியாளர், அபிர்ஹோத்ரர், திராவிடர், சமஸர், கார்மேஜனர் என்றவர்கள் தம்தம் பெயர்களால் அநேகஸமஸ்தானங்களை ஸ்தாபித்து; ஆண்டு அநேகவம்சத்தாராஞர்கள்,

சூரியவமிச சந்ததி விவரம்.

மரீசி பிரஜாபதியின் குமாரனாகிய கஸியபர், தக்ஷபிரஜாபதியின் குமார்த்தியாகிய அதிதியை மணம்புரிந்து; விவசுவானென்கிற சூரியனைப் பெற்றார். அவருக்கு வைவஸ்வத சூரியன் பிறந்து, ஐயோத்தியா அரசரானார். அவருடைய குமாரர் இக்ஷுவாக்கு மஹாராஜர் பிறந்தது. (திரேதாயுகம் ஆரம்பத்தில்-அதாவது கிறிஸ்துபிறப்பதற்கு முன் 3,500 வருஷங்களுக்குமுன் அல்லது இப்போதைக்குச் சுமார் 55,000 வருஷங்களுக்குமுன்) ஐயோத்தியிலிருந்து அரசுசெய்தார். அவருக்குப்பிறகு.

சூரியவமிசத்தில் ஐயோத்தியாவிலாண்டவர்களில்.

இக்ஷுவாக்கு, நாபகன், நெடிஷ்டிரன், கருசன் சந்ததிகளாகிய விகுஸ்க்ஷி-காகுஸ்தன் அல்லது பரஞ்சயன், அநேனசு, பிருகு, விட்டலாசன் அல்லது விசுவகந்தி, யுவனாசுவரன், பிருகுதாசுவரன், வலயாசுரன் திருஷ்டாசுவன் அரியாசுவன், நிகும்பன், அமிதாசுவன், குருசாசுவன், பிரசனன்ஜித்து, வனசுவன், மாந்தாத, புருகூர்ச்சன், அம்பரிஷன், நாபகன், திரசதயன், அணரணியன், பிரசதாசன், அரியசன், வசுமனசு, திரிதனவன், திரையருணி, சத்யவிருதன், அல்லது திரிசங்கு, ஹரிச்சந்திரன், உரோகிதன், அரிதன், சஞ்சன், விஜயன், விருகஷன், பிருகன், பாகுசகிரன், அசுமஞ்சன், திலீபன், பகீரதன, சுகோத்திரன், நாபகன - அம்பரிஷன், சிந்துதீபன், அயுதாயு, உருதுவர்ணன், சர்வாகாமன், சுதரசனன், சுவிதாசன், அச்சுமகன், மூலகன், தசரதன், இளைபடன், விசுவசகாயன், கடகவாங்கன் தீர்க்கபாகு, இரகு, தசரசன், ஸ்ரீராமர், இலட்சுமணர், பரதர், சத்துருக்கினன், முதலானவர்கள் துவாபரயுகததி லாண்டார்கள். அவர்களுக்கு பிறகு.

அவர்களுடை சந்ததிகள், திரேதாயுகத்தில்.

குசன், அதிதி, நிஷதகன், அணிலன், நபசு, புண்டரீகன், சோமதனவன், தேவநீகன், அகிநாது, குரு, பரியத்திரன், பலன், சலன், உருக்கன் விசகிரநாபன், சங்கன், வியோகதாசன், விசுவாகன், ஹிரணியநாபன், புதியன், துருவசந்தி, சுதரிசனன், அக்கினிவதனன், சிகிரகன், சேகரன், மரு-பிரசுசுருக்கன், ரசசுருக்கன் சுந்தரி-அமரசேனன் - சகாசரவன்-மஹாசுவாது - இச்சுகாசுவன்- விசுவபாவன்-பிரசன்னஜித்து-தகஸகர்- விஹதபாலன் - விஹுத்சேனவ ஆண்டார்கள். பிறகு.

அவர்களுவடைய சந்ததிகளில், கலியுகத்தில்.

உருககேஷுபன்-வட்சரன்-வியூவன்-பிரதி-ஸ்ரீராமன்-பானு-திவாகரன்-சஹாதேவன் வீரன்-பாநுமதி-பரித்ஸ்வரன் - சுபரதீர்தசர்- மாருதேவன் -சுனக்ஷேத்திரன்-கின்னரன்- அந்தரீகஷன்- சுதபசு-அமிர்தஜிகது- விரஹத்ராஜன்-பராஹிதருமன்-கிருதஞ்சயன் - (சவராஷ்டிரத்தில் - சூரியவமிசத்தை-ஸ்தாபித்தவன்) -இரணன்-ஜயன் - சஞ்சயன், சாக்கியன் - சுதம்தாதனன்- இராதுலன் - பிரசன்னஜிதது; ரோமிகன் - குண்டகன் - சரிதரன் - சுமித்திரன் ஆண்டுவந்தார்கள் - அவர்கள் சந்ததிகள்தான் கலியுகததில் சவுராஷ்டிரநாட்டில் சூரியவமிசத்தை ஸ்தாபித்தவர்கள்.

சூரியவமிசத்தில் மிதலாபுரியில் ஆண்டவர்கள்.

இக்ஷ்வாக்கின் சந்ததிகளான நிமி, ஜனகன், உதகவசு, நந்திவாத்தனன், சேது, தேவரதன், பிருகுதத்தன், மகாவீரியன், சுதருதி-திருஷ்டகேது-அரியசன், மரு- பிரதியகூஷன்- கிருதிரதன்-தேவமீஷ்டன், விபுதன்- மகாதிருதி, கிருதிரதி-மகாரோமன்- சுவணரோமன்- இரசுரோமன், சீரத்துவஜன்- சல்லது ஜனகன் சீதை-பாநுமன்- சத்தியமான்- சசி, ஊர்ஜனன், சதததுவசன்-கிருதி-இரஞ்சன்-புரைஜித்து- அரிஷ்டநேமி- சுருதியாயு, சுபாரிடன், சிரஞ்சயன், சோமரவி; அன்னோநசு, பீமரசன், சதியரதன், உவாகு; வாகுபாதன், சவாகசன, சுவங்கதன்; சுவ்வணணன், சுவ்வசசு, சுபாஷன், சுஸ்ரதன், ஜயன், விஜயன், இருதன், சுனயன், வீதிகவியன், திருதி, பகடாசசு, கிருதி என்பவர்களாம்.

சூரியவமிசத்தில (ஆனர்த்த) குஜராதத்தில் ஆண்டவர்கள்.

இக்ஷ்வாக்கின் சந்ததியாகிய சுருயாதி, சுகனியா, அனர்த்தன், ரேவதன், குகுஸ்தன் என்பவர்களே—

சூரியவமிசத்தாரில் வைசால நாட்டில் (அலகபாத்தில்) ஆண்ட அரசருடைய சந்ததிகள்.

இக்ஷ்வாக்கின் வமிஷத்தைச்சார்ந்த நெடிற்றிரன் சந்தியாராகிய நாபகன், பலந்தன், வத்ஸ்புகி, பரஞ்சயன், பாராசானி, கனித்திரன், சுபாசுபன் காருஸ்தன், விம்மிதன், விஞ்சன், விவஞ்சாதி, காளிநேத்திரன், தார்மீகன், அதிவிபூதி, கருந்தைமன், ஆவிசித்து, மாருதி,—மருத்தி, நரிசந்தன், தமன், இராஜுவர்த்தனன், சுவிருத்தி. கோவாலன், சுதிருதி, நாரன், சந்திரன், கோவலன், பந்துமானன், வேகவன், புதன், திரணவிந்து, விசாலன், ஹேமசந்திரன், சந்திரன், துமிராகன், சிற்சயன், சஹாதேவன், கிருசாஸ்வதன், சோமமந்தலை, சுமதி, ஜெனமேஜயன், என்பவர்கள் ஆண்டார்கள்.

சூரியவமிசத்தில் கபிலநாட்டில் பவுத்தமதத்தை ஸ்தாபித்து ஆண்டவர்கள்.

இக்ஷ்வாக்கின் மூத்தகுமாரர்கள் ரோகினி நதிக்கருகில் கபிலராஜியத்தை ஸ்தாபித்தார்கள். அவர்கள் சகோதிரி பிரியை என்பவளை அரசியாக்கினார்கள். அந்தராஜிபதத்தாருக்கு சாக்கியபிரபுக்களெனப்பேயர். அந்தசாக்கிய குலத்தில் சுதயோதனன என்னும் குமாரர் பிறந்தார். அவர் கபிலேயிலாண்டுவரும்போது, கோலிபிரபுக்களுடைய சந்ததியைச்சார்ந்த மாயாதேவியை மணம்புரிந்ததில்; கௌதம சாக்கிய சித்தார்த்த புத்தர்பிறந்தார்—அந்த புத்தர். கோளி வமிசததைச் சார்ந்த சுபத்தரை என்னும் யசோதரயை மணம்புரிந்து இரண்டொருவருஷம் அரசுசெய்து பிறகு சந்நியாசியாகிவிட்டார். அவர் பிறப்பு கி-மு 623-வருஷங்களுக்குமுன் என—சிலர்கருத்து.

இத்தியாதிகளைக்கேட்ட அரங்கநாதன்! எ, எ திராஜா! "இனிச்சந்திர வமிசததாருடைய பெயர்களைச்சொல்லவேண்டுமென வேண்ட" ; கலாநிதியார் சொல்லலுற்றார்—சுதனே, கேள்!

சந்திரவமிசத் தரசர்கள்.

பிரம்மாவின் குமாரர் அததிரி என்னும் முனீந்திரருக்கும், அநுசூயாவக்கும் சோமன், துர்வாசன், தத்தாரியன் என்னும் குமாரர்கள் பிறக்க ; அவர்களில்

சோமன் என்னும் சந்திரன் பிரகஸ்பதி மனைவியாகிய தாரையைச் சேர்ந்ததில் புதன் பிறந்தான்; அவன்சந்ததிகளுக்கே சந்திரவமிசத்தாரென்றபெயர். அந்தப் புதன் சூருயவமிசத் திலகராகிய இக்ஷவாக்கின் சகோதரி இளை என்பவளை மணந்து புரூரவன், ஆயு, நகுஷன், யயாதிராதிகளைப்பெற, அவர்களில் ஆயுவின் சந்ததிகள் காசிராஜாக்களானார்கள்—அவர்களாவன—

சந்திரவமிசத்தில் காசியில் ஆண்ட அரசர்கள்.

புரூரவன் குமாரன் ஆயுவின் குமாரர்களாகிய நகுசன், சத்திவிருத்தன், இரம்பன், இரசி, அன்னைநசு, சததிரவிருத்தன் குமாரனாகிய சகோத்திரன், அவன்குமாரர்களாகிய காசன், காசிராஜன், தீர்க்கதபுசு, தன்வந்திரி, கேசிமதன் வீமாதன், தேவதாசன், பிரதததனன், அழற்கன், சந்ததி, சுநீதன், சுகேது, தருமகேது, சதியகேது, விபு, சுவிபு, சுகுமாரன், திருஷ்டகேது, வயான கோத்திரன், பார்க்கன், பார்க்கபூமி என்பவர்களாம்.

சந்திரவமிசததி லுதிதத கவுசிக வமிசத்தார்.

புரூருவன் குமாரனுகும் அமானவசுவின் சந்ததிகளாகிய வீமன், காஞ்சானன், சுகோத்திரன், சந்தன சுமந்தன், அச்சகன், பாலகாசன், குஜன், குசாம்பன், ஜோதி, விசுவாமித்திரன், ஜமதக்கினி, என்பவர்களாம்—அந்தஜமதக்கினி, சூரிய குலதிலகனாகிய இரேணு என்னும் அனுமகாராஜன் குமாரி இரேணுகை என்பவளை மணந்து பரசுராமரைப்பெற்றார்—அந்தப்பரசுராமர் சேர நாட்டுக்கு முதலரசரானார்-

சந்திரவமிசத்தில் பிறந்த மதுக்கள் அல்லது யாதவர்கள்.

யதுவின் சந்ததிகளுக்கு யாதவர் என்னும் பெயர். அதாவது புரூருவன் குமாரனாகிய ஆயுவின் சந்ததிகளான நகுஷன், யயாதி, சம்யாதி, வியாதி, கிருதியுமன்; யயாதியின் மக்களாகிய, துருவவசு- தீர்க்காயிசு- அன்னு- புரு; என்பவர்களும்; யதுவின்- சந்ததிகளாகிய சகஸிரஜித்து- குரோஷ்டு- நளன்- நகுஷன் என்பவாகளும்: சகரசித்து சந்ததிகளாகிய சதசித்து- கேகயன்- தருமன்- தருமேந்திரன்- குந்தி- சகஸிரசித்து மகிழமன்- பத்திர சிரேணியன்- தூர்த்தமன்- தனகன்- கார்த்தவீரியன்; க்ஷனன்: அந்த அர்ஜுன னுடைய மக்களாகிய சூரன்- சூரசேனன்- விருஷசேனன்- மது- ஜயதுவஜன்- அந்த ஜயதுவஜன் மக்களாகிய தாளசங்கன்- பரதன்- விருக்ஷன்- மது- என்பவர் களாம்—அந்தமதுவின் சந்ததியாருக்கு மதுகுலத்தார் என்று பெயர்.

சந்திரவமிசத்தில் பிறந்த சைத்தியர் என்னும் யாதவராஜர்கள்

புரூருவன் குமாரனாகிய ஆயுவின் மகன், யாது- சக்கிரசித்து; குரேஷ்டு- நளன்- நகுசன்- என்பவர்களும்; அந்தகுரேரேஷ்டுவின் சந்ததிகளாகிய துவச நீயான்- சுவாதி; உஞ்சகன்; சித்திரார்தன்; சசிபிந்து; பிரீதிகீர்த்தி; பிரீதிதமன் உசானன்; சிதம்பன்; உருகமகவசன், பராவிருத்தி; ஜயமகன்; விதர்ப்பன்; அந்த விதர்ப்பன்சந்ததிகளாகியகிருதன்; உரோமபாதன்; கேசிகன்; உரோமபாதன்; சந்ததிகளாகிய பப்புரு; திருதி; கேசிகன்; சேதி; என்பவாகளாம்— அந்தச்சேதியின் சந்ததிகளுக்கே சைதியர் என்றுபெயர்— அந்தச்சேதியின் சந்ததியிற் சேர்ந்த தமகோசன் பாண்டவர்களுடைய தாயாராகிய குந்தியின் சகோதிரி சுரதி; சிரவசு என்பவளை மணந்து சிசுபாலனைப்பெற்றாள்,

சந்திரவமிசத்தைச்சார்ந்த சாததுவதர் என்னும் யாதவராஜர்கள்.

புரூரவன் சந்ததியான உரோமபாதன சகோதிரன் கிருதனுடைய சந்ததியான சாத்துவதர். அவர்களாவன—கிருதன்; குந்த; திருவ்ஷ்டி; விதிருசு; சசருக்கன்; விபோமன்; நீமூதயன; விகுருதி; வீமரதன்; நவரதன்; தசரதன்; சகுனி, காம்பி; தேவரதன்; தேவசத்திரன்; மது; குருவமிசன்; அன்னு; பூர்வோசத்திரன்; அஞ்சனன்-சத்துவதன்; அவனால்தான் அந்த சந்ததிக்கு சாத்துவதர் என்றபெயர்வந்தது.

சந்திரவமிசததைச்சார்ந்த போஜா என்னும் யாதவராஜர்கள்.

புரூரவின சந்ததியாகிய மேல்சொன்ன சாத்துவாதியின் ஏழு குமாரர்களில் ஒருவனாகிய மஹாபோஜன் என்பவன் சந்ததியில் தோன்றியவர்கள். அவர்களுடைய பிரதானப்பட்டணம் மிருதியகாவு என்பதாம்.

சந்திரவமிசத்தைச்சார்ந்த சேய்நேயர்களாகிய யாதவராஜர்கள்.

புரூரவன் சந்ததியாகிய சச்வாதன், விருசுஷனி, சுமித்திரன்; அன்னேயன்; சின்னன், சத்தியகன்; சாதியகி; சஞ்சயன்; குணியுகந்தான் என்பவர்களாம்—

சந்திரவமிசத்தைச்சார்ந்த ஸ்ரீகிருஷ்ணவமிச யாதவராஜர்கள்.

புரூரவன் சந்ததியாகிய சத்துவதன் குமாரன் அந்தகன் மக்களில். பசைமானன் மரபில் ஸ்ரீகிருஷ்ணருடைய தந்தை வாசுதேவரும். அவருடையசகோதிரியும்; பாண்டவர் தாயாராகிய குந்திதேவியும் தோன்றினர்—அந்தப்பசைமானன் சகோதிரனாகிய குகுரன் மரபில் ஸ்ரீகிருஷ்ணருடைய தாயாராகிய தேவகியும் ஸ்ரீகிருஷ்ணருடைய மாமனாராகிய கம்சனும் தோன்றினர். அவர்களுடைய சந்ததிகளாவன.

அந்தயாதுவின்சந்ததியான சத்துவாதனுக்கு அந்தகன் என்ற குமாரனிருந்தான் அவனுக்கு பசைமானன்; குகுரன் என்ற இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்.—அவ்விருவரில் பசைமானன் சந்ததியில் விதூரதன், சூரன், சமீ, பிரதச்சந்திரன் போஜன், இருஷ்டிகன், தேவகர்பன், சூரன் என்பவர்கள் பிறந்தார்கள். அவர்களில் சூரனுக்கு குந்திதேவியும், வாசுதேவரும் பிறந்தார்கள்.—மற்றோர் மகனாகிய குகுரன் மரபில் திரிஷ்டன், கபோதராமன், விலோமன், அன்னு, ஆனகதுந்துபி, அபிசித்து. புநர்வசு, ஆக்கன் என்பவர்கள் பிறந்தார்கள்—அவர்களில் ஆக்கனுக்கு தேவகன், உகிரசேனன் பிறக்க; அந்ததேவகன் மகளாகிய தேவகியை மேல்சொன்ன வாசுதேவர் மணந்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பெற்றார்; உகிரசேனனுக்கு கம்சன் பிறந்தான்.

சந்திரவமிச துருவவசு அரசர்கள்.

யயாதியின் இரண்டாவது குமாரனாகிய துருவவசுக்கு வஹனி, பார்க்கன். பானு, திரையீசன், கரைந்தமன், மருதன் என்பவர்கள் பிறந்தார்கள்—கூர்ம புராணத்தின்படி தக்ஷணநாட்டிலாண்ட தென்னன் என்னும் பாண்டியர்களும் அவர்கள் சந்ததிகளாம்—

சந்திரவமிசத்து காந்தாரக அரசர்கள்.

யயாதியின் மூன்றாவது குமாரனாகிய துருக்காயுவின் சந்ததிகளான பப்பு, சேது, ஆர்ப்பதன், காந்தார்கன், கருமான், கிருதன், துர்த்தமன், பிரசதன், சத்தரு

மன், என்பவர்களாம்—அவர்கள் காடுகளைவெட்டி நாடுகளையுண்டாக்கியதால் காந்தாரர் என்று பெயரைப்பெற்றார்கள்,

சந்திரவமிசத்து ஆந்திர அங்க வங்க கலிங்க சிம்ஹள பவுண்டர அரசர்கள்.

யயாதியின் நான்காவது குமாரனாகிய அன்னுவின் சந்ததிகளான, சபாநலன் காலாநலன, சிறுசயன், புரஞ்சயன், ஜனமேஜயன், மஹாசலன், திதிக்கு, உருக்க திருதன், வமன், சுதவசு, பலி அல்லது பலிஞ்ஜன்; ஆந்திரன் என்பவர்களாம்- அந்தப் பலிஞ்ஜன் சந்ததியிலிருந்து அங்கன், வங்கன, கலிங்கன், சிம்மளன், பவுண்டிரன் என்னும் அரசர்கள் ஜனிததார்கன்—அந்த அங்கவமிசம். அதிரதனோடுமுடிவுபெற, பாண்டவருக்கு முன்பிறந்த கர்ணன் அங்கதேசத்துக் கரசனானன்.

சந்திரவமிசததைச் சார்ந்த அங்கவமிசத் தரசர்கள்.

அங்கன், அன்னபானன், திவிரதன், தருமரதன், சித்திரரதன், சதுரங்கன், பிருதவிலக்கன், சம்பன், அரியங்கன், பத்திரரதன், பிருகுதிரதன், பிரகத்கருமின், பிரகத்பானு, பிரகன்மகன், சயுத்தனன், விஜயன், திருதி, திருதிவிருதன், சத்திய கருமன், அதிரதன், (கர்ணன்குமாரன்) விருக்கசேனன, எனபவர்களாம்.—

சந்திரவமிசத்தில் பாஞ்சாலதேசத்தையாண்ட அரசர்கள்.

யயாதியின் சந்ததிகளான புரு, ஜனமேஜயன், பிராணவதன், புரவீரன், மனசியு. பயஸ்தன், சுதியுன்னன், பாஹிகாலன், சம்யாதி- அசம்யாதி, இரட்டா சுவன், இரீதியு, இரந்திநாரன், அபிரதீர்த்தன், கானவன், தஞ்சன், அநிலன், துஷியந்தன், என்பவர்களாம்—பரதன், விதாதா, பவனமனியன், விகிதன், சுஹோத்திரன், அஸ்தினன்- அச்சுமிதன், நீலன், இரிக்சன், சந்தி, சுசந்தி, புருஷன், சுகசு, அரியசுவன், முவுகலன், சிரஞ்சீயன், விரிகதசுசன், பரவீரன், சம்பீலியன், என்பவர்களாம்.

சந்திரவமிசத்தில் அஸ்தினாபுரியில் ஆண்ட பஞ்சபாண்டவர்களின் விவரம்,

யயாதியின் சந்ததியாகிய புரு; சகோத்திரர்; அஸ்தினர்; அச்சுமித்தர்; நீலன்; பாஞ்சாலர்; இரிகசர்; சம்பரணர்; குரு; சுதனுசர் சந்ததிகளாகிய சந்து; சுரதர்; விதுரர்; சர்வபாமர்; சுயசேனர்; அயுதாயு; அகிரோதர்; ஊரிகேசர்; திலீபர்; பரதீபர்; சந்தானு; அந்தசந்தானுவுக்கு கங்கையால் பீஷ்மர் பிறந்தார். பிறகு வியாசருடைய தாயார் சத்தியவதியை மணந்த சித்திராங்கதர்; விசித்திரவீரயர் பிறந்தார்கள்.—அந்தவிசித்திர வீரியர் காசிராஜமக்களாகிய அம்பிகை; அம்பாலிகையை மணந்தும்; புத்திரசந்தானமற்று இறந்ததில்; வியாசர் அவர்களைமணந்ததில் திருதராஷ்டிரனும்; பாண்டுவும் முறையே பிறந்தார்கள்—அந்த திருதராஷ்டிரனுக்கு துரியோதனாதி நூறுமக்களும்; பாண்டுவுக்கு குந்தியினிடம் யுதிஷ்டிரர்; பீமன்; அர்ஜுனனும்; மற்றொரு மனைவியாகிய மத்திரையினால்; நகுலன்; சகாதேவன் பிறந்தார்கள்—அந்த பஞ்சபாண்டவர்களன்றியில் குந்திதேவிக்கு விவாஹமாவதற்கு முன் கர்ணன் பிறந்தான்,

சந்திரவமிசத்தில் மகதநாட்டிலாண்ட அரசர்கள்.

யயாதி சந்ததியில் குருமஹாராஜனுடைய மக்களில் ஒருவனாகிய சுதனசு, சுகோத்திரர், சியவனர், கிருதகர், உபரிசரர், விருகதரதர், ஜராசந்தர், சகதேவர், சோமாபி, சுருதசிரவர், அயுதாயுவர், நிரமித்திரர், சுக்ஷேத்திரர், விருகத்கருமர், சேனஜித்து, சுருதஞ்சயர், விபு, சுசி, க்ஷேமர், சுவிரதர், தருமர், சிசிராமர், திரீரசர், சுமதி, சுபலி, சுநீதர், சத்தியஜித்து, ரிபுஞ்சயன் என்பவர்களாம்—

இத்தியாதிகளைக்கேட்ட அரங்கநாதன்: ஏ, சற்குருநாதவே! இனி சூரிய சந்திரவமிசத்தார்களில் கிரேத, திரேத, துவாபர, கலியுகங்களில் எத்தனை சக்கிரவர்த்திகள் ஆண்டுவந்தார்கள்? அவர்கள் ஆண்ட கால விவரத்தைச் சொல்லி, என் சந்தேகங்களை நீக்கவேண்டுமென மன்றாட;—

கலாநிதியார்சொல்லலுற்றார்—ஏ, சுவசனபூவணு! சொல்லக்கேள்!

முதலாவதாகிய கிருதயுகத்தில்

இந்த ஆரியவர்த்தத்தை மநுச்சக்கிரவர்த்தி கிருதயுக ஆரம்பத்தில் ஆண்டுவந்தார்—அவருடைய சந்ததியாகிய நபியின் குமாரர் பரதர் பட்டத்தைப் பெற்றபோது, இதேசத்துக்கு பரதவருஷம் அல்லது பரதகண்டம் என்ற பெயருண்டாகியது—அவருடைய இருபத்தாவது சந்ததி விஸ்வக்சேனன். அவர்மரபில் ரைவதர், வைவஸ்வத மநுக்கள்தோன்றி பிரபலரானார்கள், சூரிய சித்தாந்தத்தின்படி அவர்கள் ஆண்டகாலம் 1,86,18,745 வருஷங்களுக்கு மேலாகிறது—பிறகு,

இரண்டாவதாகிய—திரேதாயுகத்தில்

சூரியவமிசத்தில் இக்ஷ்வாக்கு முதல் ஸ்ரீராமர் வரையில் 56-சக்கிரவர்த்திகளும்; சந்திரவமிசத்தில், அத்திரி முதல்,யுதிஷ்டிரன் வரையில் 46-சக்கிரவர்த்திகளும் பிரபலராக ஆண்டார்கள். அவர்கள் ஆண்டகாலம் கி-மு-5695 வருஷங்களுக்கு மேலாகிறது.

மூன்றாவது அல்லது—துவாபரயுகத்தில்

சூரியவமிசத்தில் குசச் சக்கிரவர்த்தி முதல் பிரசேனஜித்து வரையில் 30 சக்கிரவர்த்திகளும்; சந்திரவமிசத்தில், சகதேவன் விரஹத்பாலன் முதல் பரிக்ஷித்து வரையில் 23 பெயர்களும் ஆண்டார்கள். அவர்கள் ஆண்டகாலம் கி-மு-4995 வருஷங்களுக்கு மேலாகிறது—பிறகு.

நான்காவதாகிய—கலியுக ஆரம்பத்தில்

சூரியவமிசத்தில் உருக்குவியன் முதல் சுமித்திரன் வரையிலும்; சந்திரவமிசத்தில, ஜனமேஜயன முதல் காஸ்மேகன் வரையிலும் கலியுக ஆரம்பத்தில் ஆண்டார்கள். அதுவரையில் இந்நாட்டார சமயபேதம், ஜாதிபேதம், பொறாமையுமற்று சமரசமாகவாழ்ந்து இருந்தார்கள்—பிறகு ஜாதிபேதங்களுண்டாகி, குடிகளுக்குள் சண்டைச் சச்சரவுகளுண்டாகவே; ஐகமத்தியங்கெட்டு அன்னியநாட்டாரும் படை யெடுத்துவர ஆரம்பித்தார்கள்.—

இனி அவர்களுக்கு பிற்பாடு இத்தேசத்தை ஆண்டுவந்தவர்கள் யாவரென்று அரங்கநாதன் கேட்க,கலாநிதியார்-பின்வருகிறபடி உரைக்கலானார்-அவர்களுக்கு பிறகு ஆந்தச்சூரிய சந்திரவமிசத்தார்களில் சிலர் சுனகர், சிசுநாகர், மவுரியர்,

சங்கர், கனவர் என்றுதி நவீனப்பெயர்களால் இத்தேசத்தை ஆண்டார்கள் அவர்களில்.

சுனகஜாதியார்களில்

பிரதியோதனன், பாலகன், விஸ்சயூபன், ஜனகன், என்பவர்கள் கி. மு. 915 வருஷத்தில் பிரபலராகி இருந்து 128 வருஷங்கள் ஆண்டார்கள்.—பிறகு

சிசுநாகஜாதியாரில்

சிசுநாகன், கேகவர்ணன், கேஷ்மதர்மன், கேஷத்ராஜனன், விதிமிசான், அஜாதசத்ரு, தர்மகன், உதாசன், அஜனு, நந்திவர்த்தனன், மஹாநந்தி, நந்தன் முதலானவர்கள், கி மு. 777 வருஷங்களுமுன் 360 வருஷங்கள் ஆண்டார்கள். பிறகு

மவுரியஜாதியாரில்

சந்திரகுப்தன், விந்துசரன், அசோகவர்த்தனன், சுவசாசன், தசரதன், சங்காதன், பந்தபலிதன், சாலிதகன், இந்திரபலிதன், தேவதர்மன், சோமசர்மன், சேஷதர்மன், விரஹத்ரதன் என்பவர்கள் கி. மு. 315 வருஷங்களுக்கு முன் 137 வருஷங்கள் பிரபலராகி ஆண்டார்கள்—பிறகு.

சங்கஜாதியாரில்-

புஷ்பமித்திரன், (மவுரியராஜனுடைய மந்திரி) அகினிமித்திரன், சுஜயந்தன், வசுமித்திரன், ஆப்திரகன், பத்ரகன், கோஷாவசு, வஜ்ரமித்திரன், பாகவதன், தேவபூதி, என்பவர்கள் கி. மு. 178 வருஷங்களுக்குமுன் 110 வருஷங்கள் ஆண்டார்கள்—பிறகு.

கன்வஜாதியாரில்-

வாசுதேவன், பூமித்திரன், நாராயுணன், சுஸ்ரமான், என்பவர்கள் கி. மு. 66 வருஷங்களுக்குமுன்பு பிரபலராகி இருந்து 45 வருஷங்கள் ஆண்டு வந்தார்கள்—பிறகு.

சந்திரவமிசத்தில் மகதநாட்டில் ஆந்திர அரசர்கள் ஆண்டார்கள்,

யயாதியின் குமாரனான அனுராஜனுடைய 13-ம் சந்ததியாகிய பலின் அல்லது பலிஞ்சன் குமாரன் ஆந்திரன். அவன் சந்ததிகளாகிய ஸ்ரீகிருஷ்ணன், சத்காருணியன், பிரேணசங்கரன், சிவசுவாதி, சதகாருணியன், இலம்போதரன், அபிரதாகன், சங்கான், சத்காருண்டன், ஸகந்தஸ்வதி, மிருகேந்திரன், குண்டலஸ்வாதி, ஸ்வாதிகரன், புலோமவிதரன், கோரஸ்வசு, ஹாலன், மண்டலாகாரன், புரந்தரசேனன், சுந்தரன், இராஜஸ்வாதி, சிவஸ்வாதி, கவுதமிபுத்திரன், வசிஷ்டபுத்திரன், புலோமயன், சிவஸ்கந்தி, ஸ்கந்தஸ்வாதி, யஜ்ஞானன், விஜயன், சந்திரசேகன், புலோமர்களும் ஆண்டார்கள்—பிறகு மாருதியும் நந்தனும் பட்டத்தைப்பெற்று ஆண்டார்கள். அந்த நந்தராஜன் பாண்டவ அர்ஜுனனுக்கு 63-வசந்ததி. அந்த நந்தனுடைய சந்ததிகளில் ஏழுபெயர் மகத நாட்டைவிட்டு புறப்பட்டு மாளவ உஜ்ஜினியிலும்; பிறகு செந்கேகொண்டவிடு ஓரிசா, ஒரங்கல், கலியாணி, விஜயநகரத்திலும் வந்து ஆந்திர ஸமஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டார்கள்,—அவர்களில் மாளவநாட்டில் ஆண்ட விக்கிர

மார்க்கனும், போஜனும்- பிரபலமான ஆந்திரர்கள்- தென்னுடுகளில் ஆந்திர ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தவன் சாலுக்கியன்- அந்த சாலுக்கியன்மேலே சொன்ன நந்தராஜனுடைய 9-ம் சந்ததி· அந்த சாலுக்கியன் சந்ததியில் பிரபலமானவன் கலியாணபுரி அரசனுகிய விஜயன் அல்லது விஜ்ஜலன்- அந்த விஜ்ஜலன் பேரன் வீரஹொம்மலன், அவனுடைய குமாரன் தாதபின்ன ராஜன்-அந்த தாதபின்னராஜன்தான் நரபதிகளுக்குஆதிதக்கை-அந்த நரபதிகளின் சந்ததிகளே பிறகு தெற்கே தஞ்சை மதுரையில் நாயடு ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தார்கள.

Vide Page 73 Contributions to the History of Southern India· Part. I. Inscreptions by Dr Gustav Oppert. Ph.d. Professor Presidency College Madras.

பிறகு சந்திரவமிசத்தாரில் சிலர் இத்தேசத்தின் வடமேற்கு மூலையிலிருக்கும் காஷ்மீரநாட்டில் இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஆண்டார்கள்—அவர்களில்.

காஷ்மீரநாட்டில் முதலில் ஆண்ட கவுரவஜாதியார்

1266 வருஷங்கள் ஆண்டார்கள்.

கஷிபமுனிவர் கி. மூ. 2666 வருஷங்களுக்குமுன்பே காஷ்மீரத்தை கைக்கொண்டு ஆண்டுவர, அவர்சந்ததிகளில் 53 பெயர் பிரபலராக ஆண்டார்கள். அவர்களுக்குப்பிறகு சுலேமான், காசிகன், என்ற மஹம்மதியர்த்தாக்கிப்பிடித்து ஆண்டுவரச்சே, சந்திரவமிச பாண்டவர் வகுப்பைச்சார்ந்தபந்தக்கன் அவர்களை ஜயித்து இந்துராஜாங்கத்தை மறுபடியும் ஸ்தாபித்தான்—பிறகு அவன் சந்ததியில் இலதிகன், இலக்ஷிகன் சுந்தரீகன், சுண்டரீகன். துண்டிகன், பெத்துகன், மந்தகன், துர்பிநசன், மேசிகன், தேஹிகன், கலியுகன்மெலகிகன், சேதம்பரன் நவரங்கன், பார்கன், அரிசிகன், சஞ்லிகன், சங்கரன், ஜீவரன், நந்தன், பக்கராஜன், ஆண்டார்கள்—பிறகு கி. மூ 1045 வருஷம் கலியுக ஆரம்பத்தில் ஜராசந்தனுடைய சந்ததியாகிய கோபரதன் பிரபலமாகி; அவன் சந்ததியாகிய தாமோதரனும்; அவன் மரபைச் சார்ந்த 35 இராஜர்களும் ஆண்டார்கள—பிறகு

கி. மூ. 1709 வருஷம் பல்லவன்முதல் கவுசிகன், அபிமனியு வரையில் ஆண்டார்கள்—பிறகு இரண்டாம்காலம்.

கோனரித்திய வமிசத்தார் 1013 வருஷங்கள் ஆண்டார்கள்.

கி. மூ. 388 வருஷம் நாகபூஜன், கோனரதன், விபூஷணன்முதல் யுதிஷ்டிரன் வரையில் ஆண்டார்கள்—பிறகு.

ஆதித்திய ஜாதியார 162 வருஷங்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி. மூ. 10 வருஷம் பிரதாபதித்தியன் முதல் ஆரியராஜன் காலத்தில் ஆரம்பமாக, மறுபடியும்

கோனர்த்திய ஜாதியார் பிரபலராகி 692 வருஷங்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி. பி. வருஷம் 23 மேஹவாகனன் முதல், மாலதித்தியன் வரையில் ஆண்டார்கள்—பிறகு காஷ்மீரத்தில்.

கார்கோடகர் நாகஜாதியார் 260 வருஷம் 5 மாதங்கள் ஆண்டார்கள்

அவர்களில், கி-பி 115 வருஷம் துர்லாவர்த்தனன் முதல் உத்பலபீரியன் வரையில் அம்சா ஆண்டவர்; அவருடைய சந்ததிகளில்.

உத்பல ஜாதியார் 84 வருஷம்—5 மாதங்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 875 வருஷம் ஆதிதியவர்மன் முதல், அவனுடைய சந்ததிகள் கி-பி 930 வருஷங்கள் வரையில் ஆண்டார்கள்—பிறகு

கலப்புஜாதியர்கள் 64 வருஷம்—4 மாதங்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 960 வருஷம் பார்ஷ்வதேவன் முதல் சிங்கதேவன் வரையில் ஆண்டபிறகு மகமதியர் படையெடுத்து வந்தார்கள். பிறகு

நேபாள தேசத்தில் ஆண்ட இராஜர்கள்.

இத்தேசத்தின்மீது வெளிநாட்டார் படையெடுத்துவந்ததைக்கண்ட ஆரிய சந்திரவம்சத்தாரில் சிலர், மலைகடந்த காஷ்மீரநாட்டிற்குப்போய் ஆண்டதைப்போலவே; சிலர் மலைகடந்த நேபாளதேசத்திற்குப்போய் சுமார் 500 வருஷங்கள் ஆண்டார்கள்—அந்த இராஜ்ஜியத்தை முதலில் ஸ்தாபித்த—நேமமுனி என்பவராம். அவர்சந்ததிகளில் சிறந்த (கி-மு 3503 வருஷம்) பூமிமேகன், ஜயகுப்தன், பரமகுப்தன், ஹர்ஷகுப்தன், பீமகுப்தன், மணிகுப்தன், விஷ்ணுகுப்தன், ஜயகுப்தன், பலசிங்கன், ஹரிசிங்கன், புவனசிங்கனுமாக ஆண்டபிறகு.

கோதர் என்னும் கீழ்மலைநாட்டார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-மு 3240 வருஷம் இலங்கன், முதல் காலிஜங்கன் வரையில் ஆண்டபிறகு.

நேபாளத்தில் சூரியவம்சத்தார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-மு 1553 வருஷம் நேமாதி முதல், கி-பி 27 பீமதேவன், வரையில் ஆண்டபிறகு: கட்டுடன் யுமாதனை அரசு தம்பத்தாராகிய,

அஹீரசஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 43 வருஷம் விஷ்ணுகுப்தன், கிருஷ்ணகுப்தன்; பூமிகுப்தன் ஆண்டபிறகு.

நேபாளத்தில் நேவாரிகஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 218 வருஷம் சிவதேவவர்மா, முதல் ஜெயஸ்திதிமல்லன் வரையில் ஆண்டபிறகு; ஜயக்ஷமல்லன், இராஜ்யத்தை தனது இரண்டு குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் பங்கிட்டுக்கொடுக்க; அவர்கள் காட்டமாண்டு, பத்தன், பட்கௌன் என்றவிடங்களை பிரதானப்பட்டணங்களாகக் கொண்டு ஆண்டார்கள்—பிறகு.

நேபாளத்திலாண்ட பத்ரசவுனா ஜாதியார்களில்.

இராயமல்லன் முதல் இரஞ்சித்மல்லன் வரையில் ஆண்டார்கள்.

பேனபஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் இரணமல்லன் முதல் (கட்டமாண்டில்) இரசதினமல்லன், ஜயபிரகாசமல்லன், பிரதாபமல்லன், ஜெயயோகமல்லன், பாஷ்கரமல்லன், மஹேந்திரமல்லன், ஜெயஜசத்மல்லன், பிரகாசமல்லன் முதலானோர் ஆண்டபிறகு.

பத்தான்ஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் சித்திரசிங்ஹன், முதல் விஷ்ணுமல்லன்வரையில் கி-பி 1654 வருஷமுதல் 1749 வருஷம் வரையில ஆண்டார்கள்—பிறகு.

நேபாளத்தில் குருகுலவமிசத்தார் ஆண்டார்கள்.

பிரிதி நாராயணஷா முதல் இராஜேந்திர விக்கிரமன் வரையில் 1664 வருஷமுதல் 1816 வருஷம வரையில் ஆண்டார்கள்—பிறகு.

நேபாளத்தின் தென்பாகத்தில் சுமங்கலராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்களில் நானதேவர் முதல் அரிசிங்கதேவர் கி. பி. 844 வருஷமுதல் 1323 வருஷம் வரையில் ஆண்டார்கள்; பிறகு மகமதடோக்லா கஷா படையெடுத்துவந்து பிடித்தார். அந்த கஷ்டத்தைக்கருதியே சூரியசந்திரவமிசத்தார்களில் சிலர், மகம்மதியருக்கு எட்டாத கீழ்நாடுகளுக்குப்போய் ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்—

வங்காளம் (கஜேஜி அல்லது கவுரவ) நாட்டில் ஆண்ட அரசர்கள்.

பகீரதருடைய சந்ததிகளில் 24 இராஜர்கள் 2418 வருஷங்களும்; போஜகோரிய ஜாதியாரில் ஒன்பது இராஜர்கள், 250 வருஷங்களும்; அதிசூர ஜாதியாரில் 11 இராஜர்கள் 714 வருஷங்களும் ஆண்டார்கள்—பிறகு.

பூபாலஜாதியில், 10 இராஜர்கள் 689 வருஷங்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி பி 1027 ஷூபூபாலன், கிரிபாலன், தியோபாலன், பூபதிபாலன், தனபதிபாலன், பஜிவிபாலன், ஜயபாலன், ராஜபாலன், போகபாலன், ஜகத்பாலன், கோபாலன், தர்மபாலன், தேவபாலன், சுரபாலன், நாராயணபாலன், மகிபாலன், சித்திரபாலன், வசந்திபாலன், குமாரபாலன், லோகபாலன், விகிரபாலன் மஹிபாலன், நயபாலன், விகிரகபாலன் ஆண்டபிறகு; வைத்திய ஜாதியார் பட்டத்தைப்பெற்று ஆண்டார்கள்.

அவர்களில் கி. பி. 1063 வருஷம் சுகசேனன், பெல்லாலசேனன், லக்ஷிமிசேனன், மாதவசேனன், கேசவசேனன், சூரசேனன், நாராயணசேனன், லக்ஷ்மணசேனன், விஜயசேனன், கேசவசேனன், ஆண்டபிறகு; மகமதியார் படையெடுத்து வந்தார்கள்—பிறகு, சந்திரவமிசத்தாரில் சிலர்,

காமரூபமென்னும் ஆசாம்நாட்டில் ஆண்டார்கள்

அவர்களில் பிரம்புத்திர ஜாதியார்களில்.

தர்மபாலன், சிசுநாகன், புருஞ்சயன், குஜங்கன், சுகிரான்கு, மிருகாங்கு, கி-பி 1494 வருஷம் ஆண்டார்கள்—பிறகு, அங்கு

இந்திரவமிசத்தில்.

கி-பி 1230 வருஷம் சுகபாதிராஜன் முதல் 1808 வருஷம் வரையில் கமலேசுவரசிங்காதி, 42 அரசர் ஆண்டார்கள்—அக்குடும்பத்தாரே பிறகு மணிப்பூரை பிரதானப் பட்டணமாகக்கொண்டு, கி-பி 35 வருஷமுதல் ஆண்டுவர ஆரம்பித்தார்கள்.

மணிப்பூர் அரசர்கள்.

பஹுதகன், கேரஹி, தனுசிரகம், பெனிசீபன், கனகாம்பன், காஜுகாம்பன், சாமுராகன், கந்தகோபன், கேசவன், லக்ஷ்மிகாமன், காகலபிரபு, முதல் ரோஹினி சந்திரன், மார்ஜிதசிங்கன், கம்பீரசிங்கன், கீர்த்திசிங்கன், கிருபாதீசன். கீர்த்தி சிங்கன் வரையில ஆண்டார்கள்—பிறகு அவ்விடத்திலும் மகம்மதியர் படை எடுத்துவந்தார்கள்—அப்படிவரவே,

சிலர் அந்த விடைபகாட்டாருக்கு பயந்து, இத்தேசத்தின் வடகிழக்கு, வடமேற்கு, மலைபட்டுக்காடுகளுக்குப்போய், கோஹானராதிபரென்ற பெயரால் அப்புமலையின் சார்பிற்றங்கி ஆஜ்மீரம், டில்லி, கோட்டை, புந்தி என்றவிடங்களில் புது இராஜியங்களை ஸ்தாபித்து ஆண்டார்கள்.

அவர்களில் சோஹானர் என்னும் அக்கினிகுலத்து அரசர்கள்.

கி-மு 700 வருஷம் அனலகோஹன், காரமண்டலத்தை ஸ்தாபிக்க: அவன் சந்ததியில் சுவாசனமல்லன், காலன், கி-பி 145 வருஷம அஜிபாலன், (ஆஜ்மீ பட்டணத்தைக் கட்டினவன்) கி-பி 500 வருஷம் சாமந்ததேவன், மஹாதேவன், ஜெயசிங்கன், வீரசிங்கன், விசாடாசுரன், வைரிதேவந்தன், டோலராயன், கி-பி 695 மாணிக்கிராய் [illegible] சந்திரகுப்தன், பிரதாபசிங்கன், மோஹன சிங்கன் முதல் [illegible], அஜிபாலன், முதலானவர்கள் ஆண்டார்கள். பிறகு அந்த (கோபன்) [illegible] ஹிமிராதியிலிருந்து.

ஹாரவதி ஜாதியார் பட்டத்தைப் பெற்றார்கள்.

அவர்களில், விசாலதேவருடைய மகன் அனுராஜனுடைய சந்ததிகளில் கி. பி. 1024 வருஷம் அனுராஜன், இஷ்டபாலன், [illegible], [illegible]பாலன் மஹாமேயன் முதல் [illegible] ஆண்டார்கள்—பிறகு.

பொங்கி வகுப்பார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1574 [illegible] (இ[illegible]தைக் கட்டினவன்) கோபிநாதன், இராமசிங்கன் முதலானவர்கள் ஆண்டுவர.

கோட்டவாரு வகுப்பார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1579 வருஷத்தில் மாதுசிங்கு, முகுந்தசிங்கு, ஜகத்சிங்கு, கேசவசிங்கு, இராமசிங்கு, மாதுசிங்கு முதலானவர்கள் ஆண்டார்கள்—பிறகு சிலர் அனுஹூல்வார் ஜாதியார் என்றபெயரால்.

கூர்ஜரத்தில் இராஜியத்தை ஸ்தாபித்து ஆண்டார்கள்.

அவர்களில் அக்கினிபாலனம், ஆ[illegible] கிரந்தங்களின்படி, கி-பி 896 வருஷம் [illegible], பிறகு ஜோதிராஜன், போஜராஜன், முதல் [illegible] முதலானோர் ஆண்—பிறகு.

சவராஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 746 ஹனுராஜன், யோகராஜன், 841ஆு போயிமகாஜன், வீரசிங்கன், மூலராஜன் முதலானோர் ஆண்டபிறகு.

சோனகிரி இராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 910 வருஷம் மூலராஜன், சாமுண்டி, வல்லபன், இராஜமாலன், முதலானோர் ஆண்டபிறகு.

பாகுலஜாதியார் ஆண்டார்கள்.

அவர்களில் மூலன், பிருதுமூலன், பலிதேவன், கருணன் முதலானோர் ஆண்டார்கள்—பிறகு சிலர் சித்தூர், உதயப்பூர் நாடுகளிற்போய் மீவார் இராணுக்கல் என்றபெயரால்.

உதயப்பூர், சித்தூரில் ஆண்டார்கள்.

அவர்களில்கி-பி 750 வருஷம் ஸ்ரீகோஹதித்சன, போஜன், மகேந்திரன் முதல் பிரதாபசிங்கு, அமீரசிங்கு, ஜகத்சிங்த,ஹமீரன். பீமசிங்கு முதலானவர்கள் ஆண்டார்கள்—அவர்காலத்தில் [illegible] [illegible] [illegible] வந்து தாக்கினார்கள். பிறகு கி-பி 1328, ஜீவன்சிங்கு ஆண்டார்கள்—பிறகு சிலர்.

ஜோதிப்பூரில் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 300 வருஷம் புலகேசராஜன், [illegible] தேவன், [illegible] தேவன் நயினபாலன், [illegible] ஆண்டார்கள் பிறகு உதயசிங்[illegible], [illegible], [illegible]கன், ஸ்ரீஹரசிம்ஹன், மேகச்சனன, வீரபத்திரன, [illegible], [illegible], [illegible] சேனன், முகுந்தன், பரத[illegible], 18[illegible] வருஷம் [illegible]சிங்கு, முதலானோர் ஆண்டார்கள்—அந்த மான்சிங்கின் குமாரர்கள் பிக்கனீர் ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தாண்டார்கள்—பிறகு

கிருஹ மண்டலராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்கள் கி பி 358 வருஷம் பிரபலரான யாதவராயனுடைய சந்ததிகள், அவர்களில் கோணபிராஜனுடைய பிரதானபட்டணம் குருஹமென்று பெயர்—அத்துடன் மாருகிருஷ்ண பட்டணத்தின்ராஜன் கோபாலசா என்பவன் 634-ஆு மண்டலமென்று பெயரிட்டு ஆண்டான—அவர்களில் ஜ[illegible]வ் 5 வருஷங்களும் மாதவசிங்கு, 33 வருஷங்களும், ஆண்டபிறகு சனசிங்குவரையில் அநேகர் ஆண்டார்கள்—அந்த ஸமஸ்தானத்துக்கு 35 மைல் தூரத்திலிருக்கும் நூம்பி நாட்டில் குலசூர்ஜாதியில காசதவீரியன், யுவராஜதேவன், கோகலன் கங்கதேவன். கர்ணதேவன், அசுவதேவன், காயகர்மன், நரசிங்கன் முதலானோர் பிரபலமாக ஆண்டார்கள்—பிறகு

சூரியவமிசத்தார்களில சிலர் பல்லராய் என்றபெயரால்

சவுராஷ்டிரம் (சூரத்திலும) குஜராத்திலும் ஆண்டார்கள்.

ஸ்ரீராமருடைய 56 வது சந்ததியாகிய கனகசேனர் மீவார்குடும்பத்தை ஸ்தாபித்து, சமேத்திராவரையில் ஆண்டார்—அவர்களில் சமித்திரனுடைய சந்ததி

யாகிய மஹாரிது, அந்தரீதன், அகிலசேனன், கனகசேனன், கி-பி 144 வருஷம் சவுராஷ்டிரராஜனை மஹாமதனசேனன், சீலாதித்தியன் முதலானோர் ஆண்டார்கள். அவர்களில் சிலர் சூரியவம்சத்தைச்சார்ந்த

கிரஹலோட்டி சேசோத்திய அரசர்கள் ஆண்டான்.

அவர்களில் சிலோதியன் குமாரன்கிரஹாதித்தியன் பண்ணோர்வனத்தில்பிறந்து அந்தஜாதியை ஸ்தாபித்தாண்டான்—அவன்சந்ததியில் சேசவன், முதலானோர் ஆண்டார்கள்—பிறகு கி-பி 713 வருஷம் பூபன் சித்தூரைப் பிடித்து மீவார்சோஹிலஜாதியை ஸ்தாபித்தான்—பிறகு.

பக்கனீர் இராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1458 வருஷம் புக்கசிங்கு, 1494 வருஷம் நங்கரன், 1512 வருஷம்ஜயத்சிங்கு, 1546 வருஷம் கலியாணசிங்கு, 1573 வருஷம் இராமசிங்கு, 631 கருணுசிங்கு, 1673 வருஷம் அனுமசிங்கு, 1768 வருஷம் சுருபசிங்கு, சுஜன சிங்கு, முதல் சூரத்சிங்கு முதலானோர் ஆண்டார்கள். பிறகு சூரிய வம்சத்தைச்சார்ந்த இராமருடைய குமாரன் குசனுடைய சந்ததிகளாகிய துசவாஹன ஜாதியார் என்பவர்களில் சிலர் எழுந்து.

ஜெயப்பூரில் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 294 வருஷம நளராஜன், நார்வார், அல்லது நிஷத்தப் பட்டணத்தை ஸ்தாபித்து, அவனுடைய சந்ததிகளில் 32 இராஜர்கள் ஆண்டார்கள்—பிறகு கி-பி 965 வருஷம சூரசிங்கு, டோலராஜா, மாதவராவ், (அம்பரை பிடித்தார்) ஜயசிங்கு அதைவிட்டு ஜயப்பூரைகட்டினர். பிறகு இந்துவர், குந்தலராவ், பஞ்சதேவன், மாலேசி, பிஜாவன், இராஜதேவன், கிருபன், சந்தலன், ஜரின்கிஉதியகர்ணன், பாலோஜி, நரசிம்ஹன், வகுபீரன், சிங்கராஜன், விகிரராஜன், மஹராஜ சிவாயசிங்கு, மாதவசிங்கு முதலானோர் ஆண்டார்கள்—பிறகு.

ஜெஸ்ல்மீர இராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்கள் சந்திரவம்சத்தைச்சார்ந்த யாதவர்கள். அவர்களில் நரபன், பிரீதிபாஹு, பஹுபாலன், பாலந்ரன், மங்கலராவ், முதல் கஜசிங்கு முதலானவர்கள் ஆண்டார்கள்—பிறகு அங்கும் மகம்மதியர் புகுந்தார்கள்-என-

அரங்கநாதன்கேட்டு : வ, தீர்க்கதரிசியே! காலவித்தியாசத்தினுல், சூரிய சந்திரவம்சத்தார்கள் இந்நாட்டின் வடமேற்கு வடகிழக்கு மலைநாடுகளுக்கேகி புதுராஜ்ஜியங்களை ஸ்தாபித்துவந்தபோது, மத்தியநாடுகளிலும் தென்னுடுகளிலும் எவர்போய் ஆண்டார்களோ தெரியவில்லை. அவர்கள்பெயர்களைச்சொல்லி என்சந்தேகங்களை நீக்கவேண்டுமென மன்றாட,"

கலாநிதியார் அடியில்வருகிறபடி சொல்லலுற்றார்—

சுகமுகனேக் கேள்—இந்நாட்டின் வடபாகங்களில்மகம்மதியர் முதலான வேனயநாட்டார்வந்து சுதேசிகளைக்காக்குவதற்கு அதிகவசதியானவைகளாக இருந்தபடியால்; அவைகளைவிட்டு, மத்தியநாடுகளிலும்தென்னுடுகளிலும்வந்து புதுஸமஸ்தானங்களை ஸ்தாபித்தார்கள்—அவர்களில் முதன்மையானவர்கள்.

மாளவநாட்டில் (உஜ்ஜினியில்) ஆண்ட ஆந்திர அரசர்கள்.

மகதநாட்டில் ஆண்ட ஆந்திரர்களுக்குள் பௌத்தமதச்சண்டைச் சச்சரவுகளினால், ஏழு ஆந்திரர்கள் மகதநாட்டைவிட்டு தெற்கேவந்து புது ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தாண்டதாக முன்சொன்னோமல்லவா? அப்படிவந்த ஆந்திரர்களில் முதன்மையானவர்கள் மாளவநாட்டில் (உஜ்ஜினியில்) ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தவர்களாம்—அவர்களில் (கி-மு 840 வருஷம்) தனஞ்சயன் ஜிதச்சந்திரன், சமுத்திரபாலன், நரவாஹனன், பூதிராஜன், ஆதித்தியபுவனன், பிரம்மராஜன், ஆதிபிரம்மன், சதாசிவசேனன், ஹமீரதன், கந்தரூபன், (கி-மு 56 வருஷம்) விக்கிரமார்க்கன் ஆண்டார்கள்—அந்த விக்கிரமார்க்கனுக்கு பிறகு (கி-பி 44 வருஷம்) சந்திரசேனன், சூரியசேனன், கனகசேனன், சந்திரபாலன், மஹேந்திரபாலன், கர்மசந்திரன், விஜயானந்தன், சிந்தலனும் ஆண்டபிறகு அந்தசிந்தலனுக்கு போஜன் பிறந்து கி-பி 540-ல் ஆண்டான் (மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 13-20 வது பக்கங்கள்வரையில் பார்க்கவும்,) பிறகு

உத்கலதேச ராஜர்கள்.

என்ற பெயரால், ஜனமேஜயன், திருக்கவீரன், அபிவாரன், விசித்திரவீரியன் அபிமன்யு, சந்திரஹாஸன், கலிங்கராஜன் ஆண்டபிறகு; அவன்குடும்பத்தில் யயாதிகேசரி என்பவன் கேசரிவமிசத்தை ஸ்தாபிக்க; அவன்சந்ததிகள் கடகபுரியில்:

கேசரிவமிச ஜாதியார்களாக ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 141 வருஷம் பக்தகேசரி, திருபுவனகேசரி, நிர்மலதேவன், பீமதேவன், தனபாலன் ஆண்டபிறகு; கி-பி 473 வருஷம் யயாதிகேசரி ஜெயபுரத்தைக்கட்டி ஆண்டான். பிறகு அவன்சந்ததிகளில் சூரஜகேசரி, அனந்தகேசரி, 617 ஆம் லலித இந்திரகேசரி (புவனேசுவர கோயிலைக்கட்டி) அவன் சந்ததிகளில 32 இராஜர்கள் 455 வருஷங்கள் ஆண்டு, கடகபுரியை (கி-பி 989 ஆம்) புதிதாகக்கட்டி அதிகப்பிரபலயாக வாழ்ந்தார்கள். பிறகு அந்தகடகபுரியில்.

சங்கவமிசத்தார் ஆண்டார்கள்.

அவர்களில் 1131 வருஷம் சாரங்கதேவன், கங்கேசுவரதேவன்- அனங்க பீமதேவன்- இராஜேசுவரதேவன்- இராஜநரசிங்கதேவன்— என்பவர்கள் ஆண்டார்கள்—பிறகு அங்கு.

ஐந்துநரசிங்கர்கள், அல்லது சுரராஜராஜர் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1451 வருஷம் கபில இந்திரதேவன்- புருஷோத்தம தேவன்- பிரதாப ருத்திரதேவன்- கோவிந்ததேவன்- பிரதாபசக்கிரதேவன்; நரசிங்கதேவன்- ஹரிச்சந்திரமுகுந்ததேவன்- ஆண்டபிறகு அங்கு-

புலிவமிச கருடராஜர் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1580 வருஷம் புருஷோத்தமதேவன்- பிறகு நரசிங்க தேவன்- கங்காதரதேவன்- பலபத்திரதேவன்- முகுந்ததேவனும் பிறகு அவர்கள் அறியில் சில சில்லறை ஜாதியார்கள் இடையில் ஆண்டார்கள்—அவர்களில்-

காலபுஜர்- அல்லது காலசுன்னர் வகுப்பில் சகாப்தம் 1078 வருஷம் விஜயதேவன்- முராரிதேவன், சங்கமதேவன்- முதலானவர்கள் ஆண்டார்கள்— அவர்கள் சந்ததியில் சிலர்; தாவரசமுத்திரத்தில் சகாப்தம் 1113 வருஷம் யாதவ வீரபல்லாளன்- நரசிம்மன்- முதலானவர்கள் ஆண்டார்கள்—பிறகு தேவகிரியாதவர் என்றபெயரால் சகப்தம் 1110 வருஷம் பல்லமுதேவன்; ஜயத்துங்கதேவன், கின்னரதேவன், சஙகரதேவன் முதலானவர்கள் ஆண்டார்கள்—அவர்களுக்குமுன்.

சாலுக்கியஜாதியார் ஆண்டார்கள்.

அவர்கள் மகதநாட்டில் ஆண்ட ஆந்திரர் சந்ததிகளிலிருந்து தெற்கே வந்த ஒருகிளையார்—அவர்கள் பாண்டவர் அர்ஜுனனுடைய 83-வது சந்ததியாகும்—நந்தராஜனுடைய நேரானசந்ததிகள், ஆதியில் ஐயோத்தியாவில் ஆண்டபிறகு—கி-பி 566 வருஷம் விஜயாதித்தியன் தெற்கேவந்து ஸமஸ்தானத்தை ஸ்தாபிக்க, அவன மரபில் ஜயசிம்மன், புத்தவர்மன், கீர்த்திவர்மன், மங்கலீசன் முதலானவர்கள் பிரபலராகி ஆண்டார்கள் — அவர்களுக் கீழ் பிரிவார் சோழராஜர்களோடு சம்பந்தம்செய்துக்கொண்டார்கள் (மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 20 முதல் 27 வது பக்கங்களில் பார்க்கவும்)—பிறகு அவர்கள் சந்ததிகளில் சிலர்.

காலசூரிய ஜாதியாராக ஆண்டார்கள்.

அவர்கள் மகதநாட்டு ஆந்திரருடைய மற்றோர் கிளையார். அவர்களில் புத்த மஹராஜன் ஸமஸ்தானத்தை ஸ்தாபிக்க; அவன்மரபில் சங்கரன், ஜோதிசிங்கு, பிராமாதி கி-பி 1128 வரும் பிரபலராகி ஆண்டார்கள்-நரபதிகளுக்கு தலைவனும் கலியாணபுரியில் ஆண்ட விஜயன், அல்லது விஜ்ஜலன் அந்த வகுப்பைச்சார்ந்தவன்—(மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 28 முதல் 30 பக்கங்களில் பார்க்கவும்—பிறகு.

கபிலேசுவா கஜபதிராஜர் ஆண்டார்கள்.

அவர்களில் கி-பி 1454 முதல் 1461 வருஷம் கபிலேசுவர கஜபதியும் பிறகு, வீரபத்திர கஜபதி, பிரதாபருத்திர கஜபதி முதலானவர்கள் ஆண்டார்கள் (மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 36-37 பக்கங்களைப்பார்க்கவும்.) பிறகு

ஓரங்கல் கணபதி இராஜர்கள் ஆண்டார்கள்.

அவர்களில் திருபுவனமல்லன், புரோளிராஜன், பிரதாபருத்திரன், முதலானவர்கள் பெரியகோயில்களைக்கட்டி பிரபலமாக 370 வருஷம் ஆண்டுவரச்சே; கி-பி 1221 வருஷம் மகமதியர்வந்துத்தாக்க; அந்தசமஸ்தானத்தின் தளகர்த்தாகளாக இருந்த ஹரிஹரன் - புக்கன் முதலானவர்கள் ஆனகுந்தி, விஜயநகரத்தில் போய் ஆண்டார்கள்—(மற்ற விவரங்களை இந்த கிரந்தத்தின் 31 முதல் 35 52 64 வது பக்கங்களில் பார்க்கவும்)—பிறகு:

ஆனகுந்தி அல்லது விஜயநகரத்தில் ஆண்ட ஆந்திர நரபதிகள்.

சந்திரவம்சி க்ஷத்திரிய அந்திரர்களில் ஒருகிளையார் ஆனகுந்திக்குவந்து நரபதிஸமஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டார்கள்—அவர்களில் கி-பி 1034

வருஷம் நந்தராஜன் நந்தாபுரத்தைக்கட்டி ஓரங்கலில் ஸமஸ்தானத்தை ஸ்தாபிக்க, அவன் சந்ததியாகிய விஜயராஜன் கி-பி 1118 வருஷம் விஜயநகரத்தைக் கட்டி ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தான்—பிறகு விமலராயலு,நரசிம்மதேவராயலு இராமதேவராயலு, பூபதேவராயலு ஆண்டார்கள். அப்போது மகம்மதியர்வந்து தாக்க, இராமதேவராயலுடைய சந்ததிகள் துளவநாட்டிற்கு போய்விட; அந்த விடத்தில் சந்திரவம்ச யாதவ சங்கனுடைய சந்ததியாகிய புக்கனை கி-பி 1334 வருஷம் வித்யாரணியர் இராஜனாக நியமித்தார்; அந்தபுக்கன் மரபில்,ஹரிஹரன், தேவராயலு, வீரவிஜயராயலு, தேவராயலு, மல்லிகார்ஜுனராயலு, விருபாக்ஷி, பிரவுடதேவன், இராஜசேகரன், ஆண்டுவந்த பிறகு—அந்த விஜயநகர புராதன ஸமஸ்தானபதியின் பூர்வசந்ததியாகிய கி-பி 1490 ஷும் நரசிம்மதேவராயலும், பிறகு வீரநரசிம்மதேவராயலு, கிருஷ்ணதேவராயலு,அச்சுததேவராயலு, சதாசிவ ராயலு, இ ராம ராய லு முதலானவர்கள் ஆண்டார்கள். (மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 37 வது பக்கம் முதல் 120 வது பக்கங்களில் பார்க்கவும்) அந்த நரபதிகளின் சந்ததிகளாகிய அச்சுததேவராயலுடைய நெருங்கிய பந்துக்களே பிறகு தஞ்சை-மதுரை முதலானவிடங்களில் நாயடு ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தார்கள்—அப்போது.

சேரநாட்டில் (மலையாளத்தில்) ஆண்ட அரசர்கள்.

ஆதிபெருமான் 12 வருஷங்களும்;பாண்டியபெருமான் 12 ஷும், சேரமான் பெருமாள் 36 ஷும், துளபனபெருமாள் 6 ஷும, இந்திரபெருமாள் 12 ஷும் ஆரியபெருமான், குந்தனபெருமாள், கொட்டிபெருமாள்; மாதவபெருமாள் 12 ஷும் எரியபெருமாள 12 ஷும், கம்பெனபெருமான் 4 ஷும், விஜயன் பெருமான், வல்லபப்பெருமாள் ஆண்டார்கள்—பிறகு.

திருவநந்தபுரத்தில்.

அவர்களின் பந்துக்கள் பானுவிகிரமன்,வீரமார்த்தாண்டவர்மன்,உதயமார்த்தாண்டன், ஆதித்யவர்மன்,வீரமார்த்தாண்டன்-எரிவர்மன்,கேரளவர்மன், உதயவர்மன், முத்துராஜவர்மன், வீரமார்த்தாண்டன், ஆதித்யவர்மன். எரிவர்மன், மார்த்தாண்டன், உதயமார்த்தாண்டன், கேரளசேகரன், ஆதித்யன், உதயன், வீரஎரி, வீரபானு, இரவிவர்மன், உள்ளிகேரளவர்மன், ஆதித்யவர்மன். உமையம்மாள். இரவிவர்மன், உள்ளிகேரளன், இராமவர்மன், மார்த்தாண்டவர்மன், இராமவர்மன், பலராமவர்மன்,கவுரிலக்ஷ்மி, கவுரிபார்வதி, இராமவர்மன், மார்த்தாண்டான், ருக்மணிபாய். இராமவர்மா 1823 ஷும் பத்மநாபவஞ்சி பலராம குலசேகரர் ஆண்டார்கள்—(மற்றவிவரங்களை 2 ம காண்டத்தில் பார்க்கவும்.) அவர்களுக்கு முன்னும் பின்னும் ஆண்டவர்கள்.

சோழராஜர்கள்.

ஹரிவம்ச மென்னும் கிரந்தத்தின்படி சோழர்கள் சந்திரவம்சத்தார்கள். அவர்களில் கி-பி 855 வருஷம் விஜயாதிராயனும்; பிறகு ஆதித்யன்- வீரசேழ நாராயுணன், ஹரிஜயன், தசோதிதிராயன் பராந்தகன், திவியராயன், இராஜராஜேந்திரன்- இராஜேந்திரன், கரிக்காலன், இராஜராஜசோழன், வீரசோழன், விக்கிரமசோழன், குலத்துங்கன், விருமைதேவன், கரிக்காலன், சக்கிரவர்த்தி,சூடமணி,ருசிரன்,நாராயணஇராஜன், யாவதியன்,இராஜராஜன், விஜயா

தித்தியன், விக்கிரமாதித்தியன், குலத்துங்கன், கங்கைகொண்டகான், குண்டலன், சாரங்கதரன், விக்கிரமன், ஆதொண்டன், இராஜசிங்கன், விம்மதேவன், ஆநந்தவர்மன், இராஜேந்திரன், குலத்துங்கன், பராக்கிரமன, குலத்துங்கன் தேவன், சசிசேகரன், சிவலிங்கன், கரிக்காலன், பீமசோழன், இராஜராஜன், வீரமார்த்தாண்டான், கீர்த்திவர்த்தனன், ஜயன், சனகன், சுந்தரசோழன், காலாகலன், கலியாணன், பாதிரசோழன், விஜயன், விஜைநீக்கியவன், உத்தாண்டி, சுகுணன், பிரபாகரன், குஞ்சரன், சுதீபணி, ஏகாம்பிரன், மகேஹறன், கற்பூரராஜன், விஜயகாந்தகோபாலன், இராஜகுமாரபங்கயன், இரண்மயன், தாயுமானவன், தருமவர்மன், விஜயாலயன், ஆதித்யதசோழன், பராங்கதன் அல்லது கோபகேசரிவர்மன், அல்லது வீரநாராயணன், இராஜாதித்யன், கண்டராதித்தன், அரிஞ்சயன், இராஜதித்தன், ஆதித்யவர்மா-மதுராந்தகன், பரகேசரிவர்மன், குலோத்துங்கன், ஜயதரன், விஜயாதித்யன், வீரசோழன், குலத்துங்கன், இராஜராஜகுலத்துங்கன், விக்கிரமன், கிருமிகண்டசோழன், முதலானவர்கள் ஆண்டார்கள் (மற்றவிவரங்களை இந்தகிரந்தத்தின் 2-ம் காண்டத்தில் பார்க்கவும்.)

மதுரையில் முதலில் ஆண்டவர்கள்.

பாரெங்கும் புகழ்பெற்றப் பாண்டியர்களுக்கு முன் மதுரையில் முதலில் மஹாராஜர்கள் என்றபெயரால் 13 பெயர்கள், 239 வருஷகாலங்கள் ஆண்டார்கள்—அவர்களில் உதிபஹாராஜன் 18 வருஷங்களும், ஜெயதேவன், லோஹிதராஜன், (10 வருஷங்களும் ஆண்டகாலத்தில்) மதுரைக்கோயில் கோபுரங்களைக் கட்டினவன் சகசதேவன், வாமதேவன், திரிபுராந்திரன்- பட்டிவீரன்- ஸ்ரீதேவநாதன், மாலிகார்ஜுனன், ஆதிராயன், மஹாசூதந்திரன், விசுவேசுவரன், கி-பி 950 வருஷம் சந்தரபூதி 9 வருஷங்களும் ஆண்டபிறகு மதுரைக்கு பாண்டியர்கள் வந்தார்கள் —

பாண்டிய இராஜர்கள்.

அந்தப்பாண்டியர்களும் சந்திரவமிசத்தார்களே. அவர்களில்- குலசேகரபாண்டியன், மலயத்துவஜன், தடாதகை- உக்கிரன், வீரபாண்டியன், அபிஷேகன், விக்கிரமபாண்டியன், இராஜசேகரன், குலோத்துங்கன், அனந்தகுணன், குலபூஷணன், ராஜசிம்ஹன், ராஜராஜேந்திரன், ராஜேசுவரன், ராஜகம்பீரன், பிரதீபன் புருஷோத்தமன், பிரதாபன். சுந்தரபாதசேகரன், வரகுணன், இராஜராஜன், சுகுணன், சித்திரவீரன், சித்திரபூஷணன், சித்திரத்துவஜன், சித்திரவாமன், சித்திரசேனன, சித்திரவிக்கிரமன, ராஜமார்த்தாண்டன், ராஜசூடாமணி, ராஜசாதுவான், துவஜராஜகுலோத்துங்கன், ஆயுதபிரவீணன், ராசகுஞ்சரன், பராக்கிரமன்; உக்கிரசேனன், மஹாசேனன, சத்துருஞ்சயன், பீமரதன், பீமபராக்கிரமன், பிரதாபமார்த்தாண்டன, விக்கிரமன், உயுத்தகோலாஹலன்; அதலவிக்கிரமன், அதலகீர்த்தியன், கீர்த்திவிபூஷணன்; வமிசசேகரன், வமிசசூடாமணியன், பிரதாபசூரசேனன், வமிசத்துவசன், ரிபுமர்த்தனன்; சோழவமிசன்; சோழவமிசன், பாண்டியவமிசாந்தகன், வமிசசூடாமணியன், குலத்துவசன், வமிசவிபூஷணன்; சோமசூடாமணியன், சூல்சூடாமணியன், ராசசூடாமணியன்; பூபசூடாமணியன், குலேசயன், அரிமர்த்தனன், சகந்நாதன; வீரபாஹுயன்; விக்கிரமன், சுரபிபாண்டியன், குங்குமன்; கர்ப்பூரன், காருணியன்; புருஷோத்தமன்; சத்துருசேனயன்; குலப்சயன்; வரையில் 75 பாண்டியர்கள் ஆண்டார்கள்

பாண்டியர் (வைப்பாட்டி மக்கள்) ஆண்டார்கள்.

பிறகு அந்தப்பண்டியர் வைப்பாட்டிக் குமாரர்களில் சோமசேகரபாண்டியன் கர்பூரசுந்தரன்- குமாரசேகரன்- குமாரசுந்தரன்- சுந்தரராசன்- வணமுகராசன்- மேருசுந்தரன்- இந்திரவர்மன்- சந்திரகுலதீபன்- மீனகேதனன்- மீனதுவசன் மகரதுவசன் பார்த்தாண்டன் குலையநந்தன், சிருவணன- முண்டலன்- சத்ருபீகரன்- சத்ருசம்ஹாரன்- வீரவர்மன்- வீரபாகுராயன்- மகுடவர்த்தனன்- வீரசிம்மன். வம்சகுலதுங்கன்- அதிவீரராயன். குலவர்த்தனன். சோமசேகரன்- சோமசுந்தரன், இராசராசன், இராசகுஞ்சரன், இராசசேகரன், இராசவர்மன்; இராசமேதாவியன், வரதராசன், குமாரசிம்ஹாரன், வீரசேனன், பிரதாபராசன், வரகுணராசன், பராக்கிரமன், மயூரசந்திரன், வரதுங்கன, சந்திரசேகரன், சோமசேகரன் வரையில் ஆண்டார்கள்—(மற்றவிவரங்களை இந்தக்கிரந்தத்தின் இரண்டாங்காண்டத்தில் பார்க்கவும்.)

அப்படி சேரசோழபாண்டியர்கள் பிரபலமாக ஆண்டுவருவதற்கு முன்னும் பின்னும், பல்லவர், மைசூரார், கொங்கர் முதலான சில க்ஷத்திரியர்கள் ஆண்டார்கள—அவர்களில்.

பல்லவராஜர்களில்.

விஜயகாந்தவர்மா, விஜயபுத்தவர்மா, முதல் ஸ்காந்தவர்மா, வீரவர்மா, சிம்மவர்மா, விஷ்ணுவர்மா, ஸ்காந்தவர்மா, சிம்மவர்மா, நந்திவர்மா, சிம்மவிஷ்ணு வர்மா. மஹேந்திரவர்மா; நரசிம்மவர்மா, மஹேந்திரவர்மா, பரமேசுரவர்மா, நரசிம்மவர்மா, நந்திவர்மா, பல்லவமல்லநந்தி, பராக்கிரமவர்மன் முதலான இருபதுபெயர் ஆண்டார்கள் (மற்றவிவரங்களை இரண்டாங்காண்டத்தில் பார்க்கவும்.) பிறகு

கொங்குநாட்டரசர்கள்.

கோயமுத்தூருக்கடுத்த கரூரில் கொங்குநாட்டரசர்கள் ஆண்டார்கள்—அவர்களில், வீரராயசக்கிரவர்த்தி, கோவிந்தராயன் முதல் கிருஷ்ணராயன், கலாவல்லபராயன், கோவிந்தராயன், சதுர்புஜகன்னதேவன், திருவிக்கிரமராயன், கொங்கணிவர்மன், மாதங்கராயன், ஹரிவராயன், பாகுலாதிராயன், நரசிம்மராயன், விஷ்ணுகோபவர்மன், பிரிதுலசந்திரராயன், மாதவராயன், கிருஷ்ணவர்மன், கொங்கணிமதிராயன்; துருவிநதிராயன, முஷ்கரராயன், பிரபஹத்திராயன், திருவிக்கிரமராயன், பூவிக்கிரமராயன், வல்லபராயன்; நவகர்மராயன், இராஜகோவிந்தன், நந்திவர்மன், சிவராயன், பிருதிவிகொங்கணி, விஜயாதித்தியன், மல்லதேவன், காந்ததேவன், சத்தியவாக்கன், குணதுத்தமன், வல்லதேவன், காலிங்கராயன் வரையில் 40 பெயர் ஆண்டார்கள—(மற்ற விவரங்களை இரண்டாங்காண்டத்தில் பார்க்கவும்.) பிறகு

மைசூர் இராஜர்கள்.

அப்படி கொங்குநாட்டை ஆண்டுவருகையில் மைசூர் ஸமஸ்தானத்தை யாதவகுலஜாதியர் ஆண்டார்கள—அவர்களில் கி.பி 1399 வருஷம விஜய உடையார், ஹரிபெட்டராஜர், திம்மராஜர், சாமராஜர், பெட்டசாமராசர், அப்பண்ண திம்மராசர், கிருஷ்ணராசர், ஹரிசாமராசர், மூப்பணதேவரு, தோட்ட தேவரு, சிக்கதேவரு, காந்திருவராசர், தொட்ட கிருஷ்ணராசர், கெம்பதேவரு,

பெட்டலஉடையார், இராசஉடையார், காந்திராசர், நரஸிஙகராசர், சாமராசர், இம்மீடிராசர், நஞ்சராசர், சாமராசர், சிக்ககிருஷ்ணராசர், சாமராஜேந்திரர், 1894 ஹூம் வாணிவிலாச மஹாராணியும், பிறகு கிருஷ்ணராசஉடையர் இப்போது ஆண்டுவருகிறார்கள்—(மற்றவிவரங்களை இரண்டாம்காண்டத்தில் பார்க்கவும்) பிறகு

பல்லாலராஜர்கள்.

அந்தமைசூருக்கு அடுத்த இடங்களில் பல்லாலசாதியார் என்றபெயரால் சிலர் கணவாயிக்குமேலே 98 வருஷகாலம 9 இராசர்களும்; மேற்குக்கணவாய்க்கு கீழ 111 வருஷஙகளும் ஆண்டார்கள்—அவர்களில் முக்கியமானவர்கள் கி-பி 948 ஹூம் ஹைசாலபல்லால இராயன், வீணைதீர்த்தபல்லாலன், எரியத்தபுல்லாலன், விஷ்ணுவர்த்தனபல்லாலன், விஜயநரசிம்மன், வீரபல்லாலன், வீரநரசிம்மன், வீரசோமேசுவரன், வீரநரசிம்ஹ பல்லாலன் ஆண்டார்கள்—(மற்றவிவரங்களை இந்தகிரந்தத்தின் 2-ம் காண்டத்தில் பார்க்கவும்) அப்போது

நாயடு காரு ஸமஸ்தானம்.

தக்ஷிணதேசத்தில் அதிகபிரபலமாக பிரகாசித்த சோழபாண்டியர்களுடைய ஸமஸ்தானங்கள், தினேதினே தீனதசையடைந்துவரவே, அக்குடிகளுக்குகஷ்டநிஷ்டூரங்கள் அதிகரித்தன. அவைகளை நீக்கி, தக்கபடி பரிபாலனம் செய்யவேண்டியகடமை, அப்போது அதிகபிரபல ஸ்திதியிலிருந்த விஜயநகர நரபதி ஸமஸ்தானத்தாருடையதாக விருந்தது; ஆகவே—அந்த நரபதிகள தமது பந்துக்களில் சிலரைபிரதிநிதிகளாக நியமித்தனுப்பினார்கள்-அப்படிநியமித்தவர்களில் அச்சுததேவராயனுடைய மைத்துனி திருமலாம்பாளை மனம்புரிந்த சிவப்பநாயடு, சோழனாகிய தஞ்சைமுதலான விடங்களுக்கு அரசனாகவும், துப்பாக்கி கிருஷ்ணமநாயடு, செஞ்சி, வேலூர் முதலான பிராந்தியங்களுக்கரசனாகவும், நாகம விசுவநாதநாயடு மதுரைப்பாண்டிய நாட்டிற்கரசனாகவும், நியமித்தார்கள். அப்படி நியமித்தவர்களில்

தஞ்சாவூரில் ஆண்ட நாயடு அரசர்களில்.

கி-பி 1530 ஹூம் சிவப்பநாயடும், பிறகு அவர் குமாரன் அச்சுதப்பநாயடும் இரகுநாதநாயடும், விஜயராகவநாயடும், மன்னாருநாயடும், அளகிரிநாயடும், செங்கமலதாசநாயடும் ஆண்டார்கள்—(மற்ற விவரங்களை 3-ம் காண்டத்தில் பார்க்கவும்) பிறகு.

மதுரையில் ஆண்ட நாயடு அரசர்களில்.

கி-பி 1559 ஹூம் விசுவநாதநாயடு, குமாரகிருஷ்ணப்பநாயடு, பெரியவீரப்பநாயடு, லிங்கப்பநாயடு, முத்துகிருஷ்ணப்பநாயடு, முத்துவீரப்பநாயடு, திருமலைநாயடு, முத்துஅளகிரிநாயடு, சொக்கநாதநாயடு, முத்துலிங்கநாயடு, இரங்ககிருஷ்ணநாயடு, மங்கம்மாள், விஜயரங்க சொக்கநாதநாயடு, மீனாக்ஷி அம்மாள், பங்காருதிருமலைநாயடு, ஆண்டார்கள்—அவர்களுடையபந்துக்களில்

இலங்கையில் ஆண்டார்கள்.

சிலர் இலங்கைத்தீவில் ஆண்டார்கள். அவர்களில் விஜயபூபால மஹாராசர் காண்டசாலராசர், அங்கிதாங்கிதராசர், கீர்த்திசிம்ஹலராசர், இராசாதிராசர், விக்கிரமசிமஹாராசர், முதலானவர்கள் ஆண்டார்கள். பிறகு

வெங்கிடகிரி இராஜர்கள்.

என்னும்பெயரால் கிழக்கே வெங்கடகிரியில் சிலர் ஆண்டார்கள். அவர்களில் விட்டலராயடு, தர்மநாயடு, வனமநாயடு, எரதகடிநாயடு, சின்னமநாயடு, மதனன் வேதகிரி, குமாரமதனன், சின்னமநாயடு, பாதசிம்மன், சின்ன சிம்மன், அநுபோதசர்வசிம்மன், தர்மன், திம்மன், சிட்டிதக்ஷன், அநுபோதன், சர்வ சிவன், தர்மன், திம்மன், சிட்டிதக்ஷன், அநுபோதன், மதனன், சூரயசிம்மன், நிர்வாணன், குமாரதிம்மநாயடு, படகொண்டநாயடு, சென்னப்பநாயடு, வெங்கடாதிரி, இராயப்பன், பெனுகொண்டயச்சமன், கஸ்தூரியச்சமன். பெத்த யச்சமன், குமாரஎச்சமன், பங்காருஎச்சமன், பெத்தஎச்சமன், 1804 குமார எச்சமநாயடு, பங்காருஎச்சமநாயடு ஆண்டார்கள்—(மற்ற விவரங்களை இந்த கிரந்த 3-ம் காண்டத்தில் பார்க்கவும்) அப்போது

காளாஸ்திரியில்.

மேல்சொன்ன வெங்கடகிரியாரைப்போலவே காளாஸ்திரியில் இனிகால ஜாயிநாயடு, மாதநாயடு, வல்லபநாயடு, திம்மநாயடு, அப்பாயிநாயடு, அணைம நாயடு, வெங்கடப்பநாயடு, வீரப்பநாயடு, வெங்கடப்பநாயடு, சென்னப்பநாயடு, தாமாரால்குமாரநாயடு, குமாரவெங்கடப்பநாயடு, தாமராலதிம்மநாயடு, பெத்த வெங்கடமநாயடு, குமாரமுத்துவெங்கடமநாயடு முதலானவர்கள் ஆண்டார்கள்—(மற்ற விவரங்களை 3-ம் காண்டத்தில் பார்க்கவும்)

இராமநதபுரத்திலாண்ட சேதுபதிகள்.

தக்ஷண இந்தியாவின் வடக்குகிழக்குமேற்குநாடுகளில் நாயடுகளும், மைசூராரும் மலையாளத்தாரும் ஆளுகையில்; தெற்கே சிலா சேதுபதிஸமஸ்தானம் ஸ்தாபித்து ஆண்டார்கள் அவர்களில் கி-பி 1604 வருஷம் சடையகக தேவர், பிறகு குட்டன்சேதுபதி, தளவாய்சேதுபதி, தினகரதேவர், நாராயண தேவர்; விஜயரகுநாதசேதுபதி, சூரியதேவசேதுபதி, இரகுநாதசேதுபதி, திருவுடையதேவர், சாண்டதேவர், பாபினிசங்கரதேவர், குயதேவரும், குமார முத்துவிஜயரகுநாதசேதுபதி, இரசகதேவசேதுபதி, செல்வத தேவர், முத்துராமலிங்கசேதுபதி, முத்துதிருவாய் நாச்சியார், மங்கலேசுவரி நாச்சியார், அண்ணாசாமிதேவர், சிவகாமிநாச்சியார், இராமசாமிதேவர், மங்க லேசுவரி, முததுச்செல்வி, முத்துவீராய், துரைராஜநாச்சியார், பர்வதவர்த்தினி நாச்சியார், (பொன்னுச்சாமிதேவர் மாஜேஹர்) முத்துராமலிங்க சேதுபதி, ஸ்ரீஹிரண்ய கர்ப யாஜ்ஞசர இரகுநாதசேதுபதி வரையில் ஆண்டார்கள்—(மற்ற விவரங்களை இந்தகிரந்தத்தின் 3-ம் காண்டத்தில் பார்க்கவும்) பிறகு

புதுக்கோட்டை தொண்டாமான் அரசர்கள் ஆண்டார்கள்.

இத்தொண்டமான் அரசர்கள் இராமநாதசேதுபதிகளுடைய பந்துக்கள்—அவர்களில் பல்லவராய தொண்டமானுக்கு தஞ்சைநாயடுகாரு வெகுமதியாக புதுகோட்டையைக் கொடுத்தார். பிறகு 1673 வருஷம் முதல் இரகுநாதகிழவ சேதுபதியின் பந்துவர்க்கத்தில் திருமலைதொண்டமான், நாமனதொண்டமான், நாமனதொண்டமான், பச்சைததொண்டமான், தாண்டகதொண்டமான், நாமனதொண்டமான், திருமலைதொண்டமான், நாமனதொண்டமான், சச்சிச்சேதொண்டமான், கிங்கிணிதொண்டமான், தாண்டகதொண்டமான், பல்லவராயதொண்டமான், இரகுநாததொண்டமான், விஜயரகுநாததொண்ட

மான். இராஜவிஜய ரகுநாததொண்டமான், இராஜவிஜயரகுநாததொண்டமான் விஜயரகுநாதராயபஹதூர், இரகுநாதராயதொண்டமான், இராமசந்திர தொண்டமான், இராஜமார்த்தாண்ட பைரவதொண்டமான் பஹதூர், 1897ஆம் ஸ்ரீராஜமார்த்தாண்ட பைரவிதொண்டமான்ராஜா ஆண்டார்கள்—இப்படி மதுரை முதலான தக்ஷிணநாடுகளில் நாயுடு ஸமஸ்தானங்கள் ஸ்தாபிக்கப்பெற்று பிரபலமாய் ஆண்டுவரச்சே, வடமேற்கே சத்தாராநாட்டில் ஒருபிரபலமான இந்துராஜாங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது—அதுவே,

மஹாராஷ்டிர ஸமஸ்தானம்.

அந்த மஹாராஷ்டிரராஜ்யத்தை அரங்கஜீபினுடைய கர்நாடக சுபேதாராகிய சஹாஜியின் குமாரர் (கி-பி 1647) சிவாஜி என்பவர் ஸ்தாபிக்க, பிறகு—இராஜராம், சம்பாஜி, சந்தான், தாராபாய், சிவாஜி, (2-வது) இராமராஜா பிரதாபசிங்கு ஆண்டார்கள்—பிறகு சிலர்,

புனாவில் பேஷ்வாக்கள் என்றபெயரால்.

கி-பி 1740 ஆம் பாலாஜி பாஜிராவும், பிறகு மாதேரஜிராவ், நாராயணராவ்- இரகுநாதராவ், மாதவராவ்நாராயண், பாஜிராவ், சிம்மாஜி, பாஜிராவ், முதலானவர்கள் ஆண்டார்கள்—இம்மஹாராஷ்டரில் சிலர்.

நாகப்பூரில் பான்சுலே ராஜர்கள் என்றபெயரால்.

கி-பி 1734ஆம் இராகோஜிபான்சுலேயும் பிறகு ஜானோஜி இராகோஜி, சர்போஜி, பர்ஸாமுதாஜி, கூஜார் ஆண்டார்கள்—சிலர்

குவாலியூர்நாட்டில் சிந்தியர் என்றபெயரால்,

கி-மு 1724ஆம் ரானோஜிசிந்தியாவும், பிறகு ஜயாராவ், தத்தாஜி மாதாஜி தவுலத்ராவ், பைஜாபாய், ஜனகூஜி, மாதவராம்சிங் ஆண்டார்கள்—சிலர்

இந்தூரில் ஹோல்கர் என்றபெயரால.

கி-மூ 1724ஆம் மலஹாரிராவ்ஹோல்கார், பிறகு மாலிராவ், அஹில்யாபாய், துக்காஜி, ஜசவந்தராவ், துளசிபாய், மலஹாரிராவ், மார்த்தாண்டராவ்; ஹரிஹோல்கார், துக்காஜிராவ், சிவாஜிராவ் ஹோல்கார்பஹதூர் முதலானவர்கள் ஆண்டார்கள்—சிலர்

பரோடாவில் கைகோவார்:

என்றபெயரால் ஆண்டார்கள். அவர்களில் கி-பி 1720ஆம் திம்மாஜி கைகோவாரும், பிறகு பில்லாஜிகைகோவார், தாமாஜி, கோவிந்தராவ், பெய்த்சிங்கு, மானாஜிராவ்- கோவிந்தராவ்- ஆநந்தராவ்- பெய்தசிங்கு- மலஹாரிராவ், ஜமுனாபாய் ஆண்டுவர, இப்போது மஹாராஜர் சாயாஜிராவ்- கைகோவார ஆண்டு வருகிறார்—ஆதி மஹாராஷ்டிரர்களில் சிலர்

தெற்கே தஞ்சாவூரில் ஆண்டார்கள்.

செங்கமல தாசநாயக்கரை அக்கிரமமாக துரத்திவிட்டு, கி-பி 1674—75ல், எக்காஜியும்- பிறகு வெங்கோஜிராவ்- சந்தோஜிராவ்- சாஹாஜிராவ், சர்போஜி- துக்காஜிராவ்-பாபாசாஹிப்-சாஹூஜி-அல்லது சாயாஜி-பிரதாபசிங்கு-துலாஜிராவ்- அமரசிம்ஹன்- சார்போஜி- சிவாஜி- விஜயமோஹன -முத்தாம்பாபாய் சாஹிபா ஆண்டார்கள்—என,

பார்க்கர்—என்பவன் முதலில் படை எடுத்துவந்து சிலபாகங்களை பிடித்து
ஆண்ட பிறகு கி-மு 1960வருஷம் ஆசிரியாவில் அசிரிய சிமெரோமிஸ் வந்து ஆண்
டாள்—பிறகு கி-மு 1400வருஷம் எச்பத்நாட்டு சிசாஸ்டிரசுவந்து ஜயித்து ஆண்
டான்—பிறகு கி-மு 512வருஷம் பார்சுதேசத்தரசனாகிய டேரையசு வந்து
ஆண்டான்—பிறகு கி-மு 327வருஷம் கிரேக்கு தேசத்துமகா அலெக்ஜாந்தர்
வந்து ஜயித்து ஆண்ட பிறகு; அவனது சேனைத்தலைவனான செலியூக்கும்,
அவன் சந்ததிகளும் கி-மு 256வருஷம் வரையில் ஆண்டார்கள்—பிறகு.

மகம்மதியர் வந்தார்கள்.

அவர்களில், பொக்காரர் சாபனியஜாதியார் கி-பி 664வருஷம்
வந்தார்கள். அவர்களில் கி-பி 872வருஷம் பொக்கார ஜஸ்மாயேல் சாபனி என்பவ
னும் அவன் சந்ததிகளும் 120வருஷம் ஆண்டார்கள், பிறகு-கஜினிவம்சத்தார்க
ளில்—கி-பி 961வருஷம் அபஸ்திகி முதல் மூசூத்வரையில் ஆண்டார்கள்,பிறகு.
கோரிவமிசத்தார்களில்—கி-பி 1174வருஷம் மகம்மதுகோரி ஆண்ட பிறகு—
அப்கன் பட்டாணி வமிசஸ்தார்களில்—கி-பி 1206வருஷம் குதபுதீன்,
இயிகோபாத் வரையில் பதது பெயா ஆண்டார்கள்—இந்தகாலத்தில்தான்
கொமயுனென ஜுங்கிஸ்கான் படைஎடுத்துவந்து ஜயித்தான் பிறகு.
கில்ஜிவமிசஸ்தார்களில்—கி-பி 1290வருஷம் பிரோஜஷா ஜில்லாலுடீன்
முதல் குஸ்ரூ வரையில் ஐந்துபெயர்கள் ஆண்டார்கள்—பிறகு.
டோக்லாக் வமிசஸ்தார்களில்—கி-பி 1321வருஷம் கியாசுடீன் முதல்
முகமது வரையில் எட்டுபெயர் ஆண்டார்கள். இக்காலத்தில்தான் 1398வருஷம்
தாமர்லேன் என்னும் கொடியன் படைஎடுத்துவந்து குடிகளை வதைத்தான்.
பிறகு. சையத் வமிசஸ்தார்களில்-கி-பி 1414வருஷம் சையத்கயிசிர்கான் முதல்
அல்லா வரையில் நான்குபெயர் ஆண்டார்கள்—பிறகு.
லோடி வமிசஸ்தார்களில்—கி-பி 1450வருஷம் பெலால்கான்லோடி
முதல் இப்ராகிம்லோடி வரையில் மூவர் ஆண்டார்கள்—பிறகு.

மொகல் வமிசத்தார்களில்—கி-பி 1526வருஷம் பேபரும், பிறகு
உமாயூன, அக்பர், ஜஹாங்கிர், சாஜிஹான், அரங்கஜீப், சாஹாலம், சிகந்தர்ஷா,
பிரோக்ஷா, ரபுடீன், ரபிஉட்டவலா, மகம்மதுஷா, அகமத்ஷா, அலிகிர்,
ஷாஹாலம், அகபர்ஷா ஆண்டார்கள் — இக்காலத்தில்தான் (1738வருஷம்)
பெரிஷிய நாட்டுக்கொடுங்கோலன் நாதர்ஷா படைஎடுத்துவந்து குடிகளை
வதைத்து கொள்ளையிட்டு டில்லியிலிருந்த மயில் சிங்காசனத்தை எடுத்துக்கொண்டு
போனான், பிறகு அந்த மகம்மதியரில் சிலரும், ஹிந்துமதியரும் இந்நாட்டின்
நாலாபாகங்களில்போய் புதிதாய் ஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டார்கள்.—
அவர்களில் காஷ்மீரநாட்டில்—கி-பி 1326வருஷம் ஸம்ஷுதீன்
முதல் யூசப்ஷா வரையில் 20ம் மகம்மதியர் ஆண்டார்கள்—பிறகு.—சிந்துநாட்
டில்—ஹிஜரி 93வருஷம் மகம்மதுபின்காசிம், முதல் யாகோப்பின் வரையில்
19 மகம்மதியர்கள் ஆண்டார்கள்.—இராஜபுட்டானாவில்—கி-பி 1336
வருஷம் ஜாம்ஆபிரா, முதல் 1409வருஷம் ஜாம்கிரான் மகம்மதபகார் வரையில
17 மகம்மதியர்கள் ஆண்டார்கள்—பிறகு.—மாளவநாட்டில் — கி-பி
1387வருஷம் சுல்தான்டிலவர்கோரி முதல் மகமமது சுல்தான் வரையில் 7 மகம்ம
தியர்கள் ஆண்டார்கள்.—கூர்ஜரத்தில்—கி-பி 1391வருஷம் முசபார்ஷா
முதல், 1561வருஷம் முசபர்ஷா வரையில் ஆண்டார்கள் —முல்ட்டானில்—
கி-பி 1443வருஷம் ஷேக்யுசப முதல், 1524வருஷம் உசேன்லங்கா வரையில்

ஆண்டார்கள்.— ஐயோத்தியில்—கி-பி 1700 ஆம் சாடட்அலிகான் முதல் 1847 ம் வசீரலி வரையில் ஆண்டார்கள்—பிறகு.—பங்காளத்தில் கி-பி 1203 ஆம் மகம்மது பக்தியார்கி ஜீ முதல் மீயர்காசிம், ஜாபர், நிஜாம் உடவுலா ஆண்டார்கள்.—அவரங்காபாத்து அல்லது கால்பர்கா பாமினிஜாதி வம்சமகமதியர்களில்—கி-பி 1347 ஆம் அலாவதின், உசேன்சா, முதல் கலிம் வல்லாபாமினிஷா வரையில் ஆண்டார்கள்—பிறகு.—அஹமதநகரத்தில் அல்லது பீடரில் ஆண்ட பிரத்ஷா வகுப்பு மகம்மதியர்களில்—கி-பி 1492 ஆம் காசிம் பெரிட்ஷா முதல் 1609 ஆம் அமீர்பெரிட்ஷா வரையில் ஆண்டார்கள். பரஹான்பூரில் அல்லது காண்டிஸ் பார்கீஜாதி மகம்மதியாகளில்—கி-பி 1370 ஆம் மாலிக்ராஜ் முதல் 1596 ஆம் பகதூர்கான் வரையில் ஆண்டார்கள்.—பீராரிலாண்ட இமத்ஷா மகம்மதியாகளில்—கி-பி 1284 ஆம் பாட்டிஉல்லா இமதிஷா முதல், 1568 ம் துபால்கான்ஷா வரையில் ஆண்டார்கள்.—பீஜப்பூரிலாண்ட அதில்ஷாமகம்மதியர்களில்—கி-பி 1489 யூசப்கான், முதல் 1660 ம் அலிஅதில்ஷா வரையில் ஆண்டார்கள்.—அகமது நகரிலாண்ட நைஜாம்ஷா மகம்மதியர்கள்—கி-பி 1490 ம் அகமதுநைஜாம், முதல் 1607 ம் வரையில் மலீதஆம்பர் ஆண்டார்கள்,—கோலகுண்டாவில் குதுப்ஷா மகம்மதியர்களில்—கி-பி 1512 ம் சுல்தான்—குலிகுடப்ஷா முதல் 1672 ம் அபுஅசேன்ஷாவரையில் ஆண்டார்கள்.—ஐதராபாதில் நிஜாம் மகம்மதியர்களில்—கி-பி 1747 ல் நைஜாமுல்முல்க் இறந்தபோது ஆசப்கான் நிஜாமுல்முல்க், 1748 ல் நாசர்ஜங்கு 1757 ல் முசபர்ஜங்கு, 1763 நிஜாமாலிமுல்க், சலபத்ஜங்கும் பிறகு சிகந்தர்ஜா ஆண்டார்கள். 1884 முதல் பெடிஜங்நிஜாம்உடவுலா, அசம்ஜாமுசபர்உல்முல்க், ருஸ்தாமிதுரான், அரஸ்டுஜமீன், சிபாசாலார்டிக்கான், மியர்மாபூப்அலிகான் பஹதூர்ஆண்டுவருகிறார்.—மைசூரிலாண்ட மகமதியர்களில்—கி-பி 1755 ம் ஐதர்லிகானும், 1782ல் திப்புசுல்டானும்ஆண்டார்கள்—கானுடகத்திலாண்ட மகமதியாகளில்-கி-பி 1731ம் சாதத்தல்லிகானுக்குபிறகு, தாஸ்டும்மகமது, அலாவட்டீன், சந்தசாயபு, மகம்மதலி முதலானவர்கள் ஆண்டார்கள். அவர்களன்றியில் சிலகுருநில மன்னர்களும், அநேக ஜமீன்தாரர்களும் சிற்றரசர்களாக ஆண்டார்கள். அந்த மகமதியர் அரசாக்ஷிகாலத்தில் ஆக்பர், பெரோஜஷா, ஷர்ஷா முதலான சிலர்மாத்திரம் குடிகளுக்கு கிஞ்சித்து சுகமுண்டாக்கியதேயன்றி, பெரும்பான்மையான மகமதிய மன்னர்களால் குடிகளுக்கு சுதந்திர சுகமில்லாமல் தவித்தார்கள், என;—அரங்கநாதன்கேட்டு, "அண்ணலே, அப்படித்தவித்த இந்நாட்டாருக்கு சுதந்தர சுகமுண்டாக்க, எந்நாட்டிலிருந்து எவர்கள்வந்தார்களென?" கலாநிதியார் சொல்லுகின்றார்.

ஏ! அரங்கநாதா, கேளாய்! இந்த இந்தியாவின் பெருமை ஐரோபியருக்கு தெரியுமென்று முன்னமேசொன்னோமல்லவா? மத்தியகாலத்தில் இந்நாட்டின் அருமையான வாத்தகப்பொருள்கள் கானிஸ்டாண்டிநோபில், ஜினோவா, வெனிஸ் பட்டணங்களின் மூலியமாகக் கொண்டுபோய் விற்பனைச்செய்து வருவதை, ஐரோபாஜாதியாரில் விவேகிகளான சிலர் இத்தேசத்தையே நேரில் வந்துப்பார்த்து வர்த்தகம்செய்யவந்தார்கள்- அவர்களில் போர்த்துகேயஜாதியார் முதல்வர். போர்த்துகேயரில்—கி-பி 1487 பார்ததலோமியுடையசும்; பிறகு 1497 வாஸ்கோடிகாமாவும் கப்பல்யாத்திரைசெய்துவந்து, கள்ளிகோட்டையைச் சேர்ந்தார். 1405 ம் பிரானிசிஸ்கோ அல்மோடா என்பவர் இந்தியாவின் பிரதிநிதியாக, மிஸ்டர் ரப்பர்டரும், பிறகு 1510ம் ஆல்பான்சோ ஆல்புகர்வந்து

சிலபாகங்களை ஆண்டார்—1536 ம் நூனுடிகன்ஹா ஆண்டபோது டியூவில் கோட்டையைக்கட்டி ஆண்டார்கள்—பிறகு.

இஸ்பானியஜாதியார்கள்— அவர்களில் கி-பி 1521 ம் இஸ்பானியர் பிலப்பியின் தீவுகளில் குடியேறி, மணிலாகோட்டையைகட்டி ஆண்டார்கள்.

உலாந்தஜாதியாரில்—1595 ம் இந்தியாவுக்குவந்து நாகப்பட்டணம், பழவேற்காடு, சின்சுரமுதலானவிடங்களைப் பிடித்தாண்டார்கள்—பிறகு.

தேனியஜாதியாரில்—கி-பி 1612 ம் தஞ்சை அரசன் உதவியால் தரங்கம்பாடியை வர்த்தகஸ்தலமாக்கிக்கொண்டு பிறகு, அதைவிட்டுவிட்டார்கள்

பிரான்சுக்காரர்களில்—கி-பி 1693 ம் பிரான்சுக்காரர் சூரத்தில் வந்திறங்கி, பிறகு புதுச்சேரியை பிரதான பட்டணமாக்கிக்கொண்டு லெப்ரடினே, டியுப்லே, புஸி, கவுண்டிடிலாலி என்பவர்களும் அவர்களைச் சார்ந்த மற்றவர்களும் புதுச்சேரி, மாஹி, சந்திரநாகூர்முதலான விடங்களில் ஆண்டார்கள்.—பிறகு

ஆங்கிலேயர் அல்லது இங்கிலீஷ்காரர்கள் வந்தார்கள்—கி-பி 1585ம் இங்கிலாந்தில் எலிசிபெத் அரசியாகவும்; இந்தியாவில் ஆக்பர் சக்கிரவர்த்தியாகவும் இருந்தபோது, நியுபரி, பிட்சு என்றவர்கள் கோவாவழியாகவந்து ஆகிராவிற்குப்போனார்கள்—பிறகு 1591 ம் இரைமாண்டு, கெண்டால், லங்காஸ்டர், என்னும்கப்பல் தலைவர்கள் இந்தியாவுக்குவந்தாலும், 1600 ம் சில அங்கிலேய வியாபாரிகள் கிழக்கிந்தியாவில் வியாபாரம்செய்யும் கூட்டத்தார் என்ற சார்ட்டரைப்பெற்றுவந்து; 1613 ம் ஜிஹங்கர் சக்கிரவர்த்தியால் சூரத்தில் வர்த்தகச் சாலையைக்கட்டிக் கொண்டார்கள்—பிறகு கி-பி 1639 ம் சந்திரகிரி அரசனால் சென்னைப்பட்டணக்கோட்டையை கட்டிக்கொண்டார்கள்-பிறகு கி-பி 1664 ம் 2-வதுசார்லஸ அரசன் போர்த்துக்கல் தேசஇராஜகுமாரியை விவாஹம்செய்ததில் பொம்பாய் பட்டணத்தை ஸ்ரீதனமாகப் பெற்றார்கள்—பிறகு கி-பி 1698 ஹாமில்டன் என்னும் வைத்தியர் டில்லிராஜ பிரேருக்ஷிருக்கு வைத்தியம்செய்ததில், பெங்காளத்தில் (கல்கத்தாவில்) போர்டுவில்லியம என்னும் கோட்டையை கட்டிக்கொள்ள பகுமானமாகக்கொடுக்கப்பெற்றார்கள், பிறகு—நாளாவட்டத்தில் இத்தேசத்தின் பெரும்பாகத்தையும்பெற்று; இப்போது, தேசமுழுவதும் அவர்களுடைய ஆளுகைக்குள்ளாகிவிட்டது. அந்த ஆளுகையை அங்கிலேய நாட்டு அரசர்கள்தமது பிரதிநிதிகளைக்கொண்டு ஆண்டுவருகிறார்கள். அவர்களே

கவர்னர்ஜனரலர்கள் அல்லது வைசிராய் என்னும் ஆங்கில சிரேஷ்ட தேசாதிபதிகளாம்—அவர்களில் கி-பி 1774 ல் வாரன்ஹேஸ்டிங்சும், பிறகு—, 1785 ல் மெக்பரஸன், 1786 ல் லார்டுகாரன்வாலிஸ், 1793 ல் ஸர்ஜான்ஷோர் 1798 ல் கிளாக்கு, வெல்லஸ்லி, 1805 ல் காரனவாலிஸ், பார்லோ, 1807 ல் லாரடுமின்டோ, 1813 ல் ஹேஸ்டிங்ஸ, 1823 ல் ஆடம், ஆமரெஸ்டு, 1828 ல் பெயிலி, பெண்டிக், 1835 ல் மெட்கால்ப், 1836 ம் ஆக்லாண்டு, 1842 ல் எலின்பிரோ 1844 ஹார்டிங்சு, 1848ம் டாலவுசி, 1856 ல கானிங்கு. 1862 ம் எலிஜின், 1863ம் நேபியர்-டெனிசன் 1864 லாரென்சு, 1869 மேயோ, 1872 ல் ஸ்டார்ச்சி, நேபியர், 1872 ம் நார்த்துபுருக், 1879 ல் லிட்டன், 1880 ல் ரிப்பன், 1884 டபிரின், 1888 ல் லான்ஸ்டவுனி, 1894 ல் எலிஜன, 1898 கர்ஸான்பிரபுக்களாம்—இந்த சிரேஷ்ட தேசாதிபதிகளுக்கு கீழாக அனேக கவர்னர்களும், உதவிகவர்னர்களும், கமிஷனர்களென்றபெயர்களால், பல மாகாணங்களை ஆண்டுவருகிறார்கள். அப்படிப்பெற்றவர்களில் சென்னைராஜதானியின்.

கவர்னர்களாவன—கி-பி 1652ஆம் பேகர். 1659ல் ஸ்ரீசேம்பர், 1661ல் ஸ்ரீ எட்வார்டுவிண்டர். 1665ல் பாக்ஸ்கிராப்ட், 1670ல் லாங்க் ஹாரன், 1678ல மாஸ்டர், 1681ல் கயிபோர்டு, 1687ல் யேல், 1692ல் ஹிகின்சன், 1698ல் பிட், 1709ல் அடிசன, மாண்டெகு, 1701ல் பிரேஸர், 1711ல் ஹாரிசன், 1717ல் காலெட். 1720ல் ஹேஸ்டிங்கின், 1721ல் இல்விச், 1725ல் மாக்ரே. 1730ல் பிட், 1735ல் பென்யான், 1744ல் மாரஸ், 1747ல் பளோயா 1750ல் சாண்டிரஸ், 1755ல் பிகெட், 1763ல் பேலக், 1767 ல பர்ஸியர், 1770 ல டுபிரி, 1773 ல் விஞ்ச், 1775 ல் பிகெட், 1776 ல் ஸ்டிராட்டன், 1777 ல் வைட்ஹில், 1778 ல இராம்போல்ட், 1780 ல வைட்டில், 1780 ல் ஸ்மித், 1781ல் மகார்த்னி, 1785ல் டேவிட்சன், 1786 ல் காம்பெல், 1789 ல் ஹாலெண்டு, 1790 ல் மெடோஸ், 1792 ல் ஓகலே, 1794 ல் ஹோபார்டு, 1798,ல் ஹாரிஸ், கிளைவ், 1803ல் பெண்டிங்கு, 1807 ல் பட்டிரி, பார்லோ, 1813 ல் அபிர்கோம்பி, 1814 ல் எலியட்டு, 1820 ல் மன்ரோ, 1827 ல் கிரீமி, 1827 ல் லஷிங்கடன், 1832 ல் ஆடம், 1837ல் எல்பின்ஸ்டோன், 1842ல் டுவீடேல், 1848 ல் மகின்சன், 1848 ல் பாட்டின்ஜர், 1854 ல் எலியட், ஹாரிஸ், 1859 டிரிவிலியன், 1860 ல் மோரெட், டென்விவார்டு, மோன்டேகு, 1861 ல் டெனிசன், 1866 ல் மால்டுபீ, நேபியா, 1872 ல் ஆர்பத்நட்டு, 1872 ல் ஹோபார்ட், 1875 ல் இராபின்சன், 1875 ல் பக்கிங்ஹாம், 1880 ல் ஆடம், 1881 ல் ஹடல்ஸ்டன், 1881 ல் கிராண்டப், 1886 ல் பார்க்கு, 1890ல் ஹாரிஸ்டன், 1891ல் வென்லாக்கு; 1896 ல் ஹாவலாக், 1990 ல் அம்பதில் பிரபுவர்களேயாம்.—என,

அரங்கநாதன்செட்டி—எ, குருசுவாமி.

இதுவரையில் தங்கள் சொன்னசங்கதிகளினால் இப்பரதகண்டத்தின் பதினெண்புராணங்களின் சாரங்களையும், இதில் ஆதிமுதல் நாளதுவரையில் ஆண்ட அரசர்களுடைய பெயர்முதலான விவரங்களையும், சங்கிரஹமாக அறிந்துக்கொண்டேன். இனி இந்நாட்டை அலங்கரித்த ஆதி சந்திர வமிசக்ஷத்திரியராகிய யயாதியின்சந்ததிகளில் பலிஜன் அநிதிரன் முதலானோர், முதலில் மகதநாட்டில் ஆண்டபிறகு; அவர்களுடைய சந்ததிகளில் ஏழுபெயர் மகத நாட்டைவிட்டு உஜ்ஜினிநாட்டிற்கும், கடகம் கலியாணபுரிக்கும், வாரங்கல் கொண்டவீடுவுக்கும், ஆனகுந்தி விஜயநகரத்திற்கும், பெனுகொண்ட சந்திரகிரிக்கும், நெல்லூர் வேலூருக்கும், செஞ்சி, தஞ்சைக்கும், மதுரை இலங்கைக்கும் வந்து; விக்கிரம, சாளுக்கிய, காகேதிய, கஜபதி, நரபதி, நாயடு முதலான பலபெயர்களால் புதுஸமஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டுவந்த விவரங்களையும்; அந்தபலிஜவாருடையஜனனாதி விவரங்களையும், அவர்களுக்கு இடையில்வந்த பலபெயர்களையும், அவர்களுடைய வீட்டுப்பெயர், கோத்திரப் பெயர், விவாஹசடங்குகளின் விவரங்களையும், அவர்களுக்குளிருக்கும் பல உட்பிரிவார்களுடைய விவரங்களையும், அவர்களுடைய தற்காலஸ்திதிகளையும், அவர்கள்காலத்தில் இந்நாட்டின் பலபக்கங்களில்ஆண்ட சேர சோழ பாண்டியர் முதலான மன்னர்களுடைய விவரங்களையும், சவிஸ்தாரமாக அறிவிக்கும் பலிஜவாரு புராணத்தைச் சொல்லவேண்டும்,” என்று மன்றாட.

கலாநிதி யோகிந்திரர்செட்டி, அரங்கநாதனை அகமகிழ்ந்து ஆலிங்கனம் செய்துகொண்டு, ஜாதியபிமானம், சமயாபிமானமுடைய எ, சத்தியகாமியே! “சந்திரவமிச, க்ஷத்திரியராகிய பலிஜவாருபுராணத்தை விவரிக்கிறேன்-சிரத்தையாகக்கேள்” என்று பின்வருகிறபடி பலிஜவாருபுராணத்தைச்சொல்லலுற்றார்.

நான்முகப் முற்றிற்று:

கடவுளுக்கு வந்தநம்.

ஸ்ரீசந்திரவமிச க்ஷத்திரியராகிய

ஆந்திரர் அல்லது கவுரவர்

என்னும்

பலிஜவாரு புராணம்.

முதல் அத்தியாயம்.

பலிஜவாருடைய ஆதி உற்பத்தி விவரம்.

ஸம்ஸ்க்ருத பாகவதம், நவமஸ்கந்தம்
22-ம் அத்தியாயம் 45-ம் சுலோகம்.

క్షేమకం ప్రాప్యరాజానం సంస్థాంప్రాప్స్యతివైకరా।
అథమాగధరాజానో భవితారో వదామి తే ॥

ஷ நவமஸ்கந்தம் 23-ம் அத்தியாயம்.

శ్రీశుక ఉవాచ.

అనోః సభానరశ్చక్షుః పరోక్షుశ్చ త్రయః సుతాః ।
సభానరాత్ కాలనరః సృంజయ స్తత్సుత స్తతః ॥౧॥
జనమేజయ స్తస్య పుత్రో మహాశీలో మహామనాః ।
ఉశీనర స్తితిక్షుశ్చ మహామనస ఆత్మజౌ ॥౨॥
శిబివర్ణనః శమిదర్ణక్షు శ్చత్వారోశీనరాత్మజాః ।
వృషాదర్భః సువీరశ్చ మద్రః కైకయ ఆత్మజాః ॥3॥
శిబేశ్చత్వార ఏవాసం స్తితిక్షోశ్చ రుశద్రథః ।
తతో హేమోఽథ సుతపాబలిః సుతపసోఽభవత్ ॥౪॥

అఙ్గవఙ్గకలిఙ్గాద్యాః సుహ్మాపుణ్డ్రాన్ధ్రసంజ్ఞితాః ।
జజ్ఞిరేదీర్ఘతమసో బలేః క్షేత్రేమహీక్షితః ॥ ౫ ॥
చక్రుఃస్వనామ్నా విషయాన్ షడిమాన్ ప్రాచ్యకాంశ్చతే ।

இதன் பொருள்.

వ. యయాతికొడుకనువునకు సభానరుండు చక్షుస్సు పరోక్షుండు ననువారు ముగ్గురుపుట్టిరి. అందు సభానరునికిఁ గాలనాభుండు, కాలనాభునకు సృంజయుండు, సృంజయునకుఁ బురంజయుండు, పురంజయునకు జనమేజయుండు, జనమేజయునకు మహాసేనుండు, మహాసేనునికి మహామనస్సు, మహామనస్సునకు నుశీనరుండు తితిక్షువన నిరువురు జన్మించిరి. అందునుశీనరునకు శిబి గయ నిమి వర్చువులు నలువురుజన్మించిరి. అందు శిబికి వృషదర్భసుకీరమద్రకేకయులు నలువురు పుట్టిరి. తితిక్షునకు రుశద్రథుండు రుశద్రథునకు హేముండు, హేమునకు సుతపస్సు, సుతపస్సునకు బలిపుట్టె. ఆబలివలన నంగవంగకళింగ సింహళ పుండ్రాంధ్రు లనుపేళ్లుగల వారార్వురు కుమారులు పుట్టిరి. వారలు తూర్పుదేశంబునకు రాజులయి తక్కినదేశంబులకుఁ దమతమనామధేయంబు లిడి యేలిరి.

ஸ்ரீமஹாபாகவதம் (9) ஒன்பதாவது ஸ்கந்தம், (23) இருபத்தி மூன்றாவது அத்தியாயத்தில், 374-வது பக்கத்தில் ஸ்ரீசுகதேவர், பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சொன்ன விவரம்.

"ஸ்ரீசந்திரவம்ச க்ஷத்திரிய திலகராகிய யயாதி மஹாராஜனுடைய புத்திரன் அனுவுக்கு, சபாநரன் என்றும், சடச்சுவன் என்றும், பரோக்ஷன் என்றும் மூன்று பிள்ளைக ளிருந்தனர். அவர்களில் சபாநரனுக்கு காலநரனும், அவனுக்கு சிரஞ்சயனும், அவனுக்கு ஜனமேஜயனும், அவனுக்கு மஹாசாலனும், அவனுக்கு மஹாமனசும் ஜனித்

தார்கள். மஹாமனசுக்கு உசிநரனென்றும், திதிக்ஷாவென்றும்இரண்டு பிள்ளைகள் உண்டு. உசிநரனுக்கு சிபி என்றும், வானன் என்றும், க்ஷமி என்றும், தர்ப்பன் என்றும் நான்கு பிள்ளைகளிருந்தனர். அவர்களில் சிபிக்கு விருஷதர்ப்பன் என்றும், சுவீரன் என்றும், மித்திரன் என்றும், கேகயன் என்றும் நான்குபிள்ளைகள்உண்டு. திதிக்ஷாவுக்கு ருசத்திரதரனும், அவனுக்கு ஹேமனும், அவனுக்கு சுதபசும், அவனுக்கு பலியும்பிறந்தார்கள்-பலியின் க்ஷேத்திரத்தில் தீர்க்கதபசு என்கிற ரிஷிக்கு அங்கன், வங்கன், களிங்கன், சுகன், பவுண்டரன், ஆந்திரன் என்ற ஆறுபிள்ளைகள் ஜனித்து, அவர்கள் இந்தபூமியை அடைந்து தங்கள் தங்கள் பெயர்களால் அங்கம்முதலான ஆறு ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தார்கள்.

அவர்களில் சுதபசு மாஹாராஜனுக்கு பல வருஷங்கள்வரையில் பிள்ளைகள் பிறவாமையினால், அநேகபலியாகங்களைச் செய்ய ஓர் பிள்ளைபிறந்தது. ஆகவே அந்தப்பிள்ளைக்கு பலி அல்லது பலிஞ்ஜன் என்று பெயர். பலி + ஜனனன், பலி=யாகத்தில், ஜனனன்=பிறந்தவன் பலிஞ்சன். அதாவது பலி யாகத்தில் ஜனித்தவன் என்னும்பொருளுள்ள பெயரை இடப்பட்டது. அந்தப்பலியின் குடும்பத்திற் பிறந்த அங்கன் முதலான ஆறு மக்களில், ஆந்திரன் சிறுகுழந்தையாக இருக்கும்போதே அவனுடைய ஜாதக சாமுத்திரிகாதி முதலிய விவரங்களினால் மஹாபுத்திபராக்கிரமாதி குணங்களைப்பெற்று, பிரபஞ்சத்தில் பிரபலமன்னனுவானென்று தோன்றியபடியால்; அவனுக்கு (சிரேஷ்டன் அல்லது மேலோன் என்று பொருளாகும்) ஆந்திரன் என்ற பெயரிட்டும், கல்வியையும், ஞானத்தையும் கற்பித்தும், தக்க காலம் வந்தபோது மகத தேசத்துக்கு அரசனாக நியமிக்கப்பட்டும், ஆண்டுவந்தான்.

அப்படி ஆண்டுவந்த ஆந்திர மஹாராஜனுடைய சந்ததிகளில் அநேகர் அஷ்டஐசுவரியமும், ஆயுளாரோக்கியமும் பெற்றும், தம்முயிரைப்போல மண்ணுயிரைப் பாதுகாத்துக்கொண்டும், வடக்கே ஹிமாசல பருவத அடிவாரம் வரையிலும், மேற்கே மாளவஉஜ்ஜினிவரையிலும், கிழக்கே வங்கதேசம்வரையிலும், தெற்கே தெலுங்கானம் ஆணகுந்திவரையிலும் ஏகச்சக்கிராதிபதிகளாகி இருந்து சுமார் 460 வருஷங்கள் வரையில் ஆண்டார்கள்.

இத்தேசத்து சரித்திரசாசனங்களை பரிசோதித்து சரித்திரம் எழுதிய மேஸ்டர் இராபர்டு சுவேல் துரையவர்கள் அந்த ஆந்திரரைப்பற்றி பின்வருகிறபடி எழுதி இருக்கிறார்.

“இந்த இராஜதானியின் வடபாகங்களை ஆதியில் ஆண்ட அரசர்களைப் பற்றி விசாரிப்போமாகில், அப்படி ஆண்டவர்கள் **ஆந்திர வமிசத்தாரேயாம்.** வடதேசத்திலாண்ட மஹா மவுரியருக்குப் பிறகு புராணரீதியாகப் பார்க்கும்போது, சங்கமஜாதியாரும், அந்தச்சங்கமருக்குப் பிறகு கன்னுவ ஜாதியாரும் ஆண்டார்கள். அந்தக் கன்னுவஜாதியிலாண்ட கடைசிமன்னனான சுஸ்ராமன் அல்லது சிசுமானை அவனுடைய மந்திரியாகிய சுத்தாரிகன் அல்லது **சிப்ரகன்** கொன்று சிங்காசனமேறி தனது **ஆந்திரசந்ததியை** பிரபலமாக்கினான். அந்த ஆந்திரர்களையே கிரீக்குதேச பூமிசாஸ்திரிகள் **“அண்டரியா”** என்று வழங்கிவந்தார்கள்.

அந்த ஆந்திரர்கள் தமது விஸ்தீரணமான நாடுகளை வெகு பராக்கிரமத்தோடு ஆண்டார்கள். அவர்கள்தான் சரியான **ஆந்திரஜாதியார்கள்.** அவர்களுக்குள் **ஆந்திரஜாதிகர்** அதாவது ஆந்தரர்களுடைய “பந்துக்கள்” என்றும், “**ஆந்தர புந்தியர்**” அதாவது ஆந்திரருடைய உத்தியோகஸ்தர்கள் அல்லது வேலைக்காரர்கள் என்றும் மூன்று வகுப்பினர்களாக இருந்தார்கள். அவர்களில் சரியான ஆந்திரருடைய ஸமஸ்தானம் பல்கி பெருகியிருந்தகாலத்தில், அவர்களுடைய உத்திரவின்படி அவர்களுடைய பந்துக்கள் அவர்களுடைய பிரதிநிதிகளாகச் சிலபல நாடுகளை ஆண்டுவந்தார்கள்.

சென்னை இராஜதானியின் வடபாகங்கள் முழுதும், கிருஷ்ணாதிக்கு தெற்கே வெகுதூரம் வரையிலுள்ள நாடுகளும் அந்த ஆந்தரருடைய அதிகாரத்துக்குட்படிருந்தன. அவர்கள் வழங்கிவந்த பலவித நாணயங்கள் கங்கை கிருஷ்ணா கோதாவரி முதலான பெருநதிக்கரை தீரங்களில் இப்போதும் பரவியிருக்கின்றன. அவர்கள் புத்தமதஸ்தர்கள். கிறிஸ்துசகாப்தம் ஆரம்பகாலத்தில் ஆந்திரர்கள் மஹாபராக்கிரமசாலிகளாகியும், அதிகதிரளான தண்டுதளாதிகளை உடையவர்களாகியும் இருந்தார்கள் என்று (Pliny) பிளினி என்னும் யாத்திரை சாஸ்திரியார் எழுதி இருக்கிறார். களிங்க நாடுமுழுதும் அந்த ஆந்திரர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்தது.

The earliest Kings of whom we have any trace who ruled the north of this Presidency are the Andhras. The great Mourya dynasty of the north were, according to the Puranas, succeeded by Kings of the Sanga family, and these again by the Kanavas. The last Kanva Susaraman, or Sisuman was murdered by his minister Sudaraka or Sipraka, who seized the throne and founded a dynasty which was called after the name of his tribe, the Andhras. These are the Andorae of the Greek Geographers. Three dynasties successively ruled over their widely extended territories. These were the Andhras-Proper, The Andhara-jatikas or the relatives of the Andhras, and the Andhra-brityas or servants of the Andhras.

The whole of the north of the Madras Presidency down at least to the Kristna river, and probably considerably to the south of it,

belonged to them, and many of their leaden coins are found in the tracts near the great rivers. They were Buddhists in relegion. About the begining of the Christian era the Andhras were exceedingly powerful, possessing, according to Pliny, very large armies. They held the whole Kalinga &c The Archaeological Survay Vol.II Pages 144 to 146 By Mr. Robert Sewell

ஆந்திரர்களைப்பற்றி பிரபலசரித்திரகராகிய ஜேம்ஸ்பிரின்சிப் அவர்கள் எழுதியவிவரமாவது.

ஆந்திரர்களுடைய இராஜதானியைப்பற்றி இருந்த சந்தேகத்தைப் போலவே, அவர்களுடைய ஆளுகை செய்தகாலத்தைப்பற்றியும் இதுவரையிலும் சந்தேகமிருந்தது. ஆந்திரராஜாக்கள் 800 வருஷங்களுக்குமேல், கங்காநதிக்கரையோரத்தில் மஹாபராக்கிரமசாலிகளாக ஆண்டுவந்தார்களென்றும், ஆந்திரரும் களிங்கத்துக்கடுத்த கோசலநாட்டாரும் ஒரேவகுப்பினரென்றும், அவர்களில் ஒருவரான ஸ்ரீகாரணதேவர், திரிகாலிங்க அரசன் (அதாவது இத்தேசத்தின் கிழக்கு மேற்கு தெற்கு எல்லைகளுக்குட்பட்ட நாடுகளை ஆளும் அரசனென்று) பட்டாபிஷேகம் பெற்றுக்கொண்டதாகவும் வில்போர்டு சாஸ்திரியார் சொல்லியிருக்கிறார்—இக்கருத்தை குஜராத்துக்கருகிலிருக்கும் கிர்னரில் அகப்பட்ட சிலாசாசனத்திற் கண்டிருக்கும் சங்கதியோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தக்ஷணபாதத்திற்கு முன்சொன்ன எல்லைக்குறி வரையறைச் சரியாக இருக்கிறதென்றும், அதில்கண்ட சத்கரணி என்னும் ஆந்திரவம்சத்தான் இத்தேசத்துக்கே அரசனாக இருந்தான் என்றும் உறுதியாக நம்பலாம்; மேலும் ஆந்திரருடைய காலத்தைப்பற்றி விசாரிக்கையில், அந்த ஆந்திரர் காலத்தாராகிய நந்திரமா என்பவன் அசோகனுடன் தொடர்ந்ததாகத் தெரியவருகிறது, அவர்கள் (ஆந்திரர்கள்) கி-பி மூன்று அல்லது ஆறாம் நூற்றாண்டில் (அதாவது) ஆந்திரருடைய கடைசி சந்ததியாகிய புலோமரிஷி அல்லது புலோமனுடையகாலத்தில்) பிரபலமாய் இருந்ததாக வில்போர்டு சாஸ்திரி கணக்கிடுகிறார்; ஆயினும்-ஆந்திர அரசர்கள் இந்தியாவில் மஹாவீரதீரர்கள் என்றும், அவர்கள் சுவாதீனத்தில் 30 அரணான கோட்டைகளையுடைய பட்டணங்களும் 1,00,000 இலக்ஷம் சேனைகளும், 1000 யானைகளும் இருந்தனவென்றும், பிளினி சொல்லி இருப்பதால், ஆந்திரர்கள் கிறிஸ்து சகாப்தம் பிறப்பதற்கு முந்தியே மகோன்னத ஸ்திதியிலிருந்ததாக அங்கீகரிக்கவேண்டியது என்றும் மேஸ்டர் ஜேம்ஸ் பிரின்சிப் சாஸ்திரியார் எழுதி இருக்கிறார்.

"The locality of the Andhara dominion has hitherto been as uncertain as the period of its sway-Wilford says in one place that the Andhara princes, made a most conspicuous figure on the banks of the Ganges for above 800 years; again that Andhra and Kosala

(near Kalinga) that Sree Karana Deva took the title of King of Sri Kalinga or of the three shores to the east, west, and south of India—From our inscriptions we perceive that the general term of Dakshini Patha agrees well with the latter definition, and we may rest content with denoting the Satakarnies(Andhras)as the Kings of the Peninsula.

Further, as to their age, we find one of the name contemporary with Rudrama who followed Asoka—Wilford brings them much lower down from the third to the sixth century after Christ. * *

He is forced to confess, however, that there were Andhras at the begining of the Christian era, when,says Pliny, the Andarea Kings were very powerful in India, having no less than thirty fortified cities, an army of 1,00000 men and 1,000 Elephants (vide pages 66-67 Essays on Indian Antiquities by Mr. James Prinsep.

மேஸ்டர் ஜேம்ஸ் பிரின்சிப் சாஸ்திரிகளுடைய ஆராய்ச்சியினால்அகப் பட்ட சிலாசாசனங்களில் கண்டஆந்திர அரசர்களாவன.

---

1. சிப்ரகன் கி. மு. 21ஹும்
2. பலீன் அல்லது பலிஞ்சன்
3. கிருஷ்ணன்
4. ஸ்ரீசத்காருணன்
5. பூர்ண தசங்கன்
6. சத்காரணன்
7. லம்போதரன்
8. இவிலிகன்
9. மேகஸ்வாதி
10. புதுமதன்
11. அரிசாலகர்மன்
12. ஹாலன்
13. திலகன்
14. பிரவலேசனன்
15. சுந்தரன்
16. சகிர சத்கரணன்
17. சிவசுவாதி
18. கோமதிபுத்திரன்
19. பூரிமதன்
20. சத்காரணன்
21. சிவ்சுவாதி
22. யாகவஸ்ரீ?
23. விஜயன்
24. சந்திரஸ்ரீ
25. புலோமரிஷி-என்பவர்களாம்

Table XXI-Andhara or Vrispala Dynasty of Andhra or Telengana and in continuation of the Magadha Line.

(See Wilford's comparative list from the Bhagavat, and three other Puranas in the 9 th Vol of As. Res) (These thirty Andhra Bhirtya Kings will reign 456 years—Vishnu Purana. Prof. Wilson adds in a Note—The Vayu and Bhagavat state also 30 Kings and 456 years; The Matsya' has 29 Kings and 460 years. The actual enumaration of the

text gives but 24 Names; that of Bhagavatas but 23, that of the Vayu but 17-The Matsya has the whole 29 Names, adding several to the list of our text (V. P.) and the aggregate of the reigns amounts to 435 years and 6 Months B. C. 21—Sipraka a powerful Minister of Susramon, kills the latter and founds the Andra Bhrutya dynasty.

1. Balin, Balekeita B. C. 908 J. A. D. 190. W. D.
2. Kristna,
4 Srisatkarani
5. Purnot sanga, Parvamasu
6. Satakarana 11
7. Lambodara
8. Ivilaka, Apilica. W. D.
9. Mega Swati
10. Putumata
11. Arishlakarman. Car Bag Puranam
12: Hala
13. Talaka or Tilaka
14. Pravelasena
15. Sundara named Satkarana
16. Chakara Satakarana
17. Sivaswati
18. Gomatiputra or Gowtami A. D. 500
19. Pulimat or Purimat
20. Satakaranvi IV. Car B Puranam
21. Sivasri
22 Sivaskanda
23. 408 Yagavasri (Yeyne of Chinese)
24. Vegien
25. A. D. 428. Chendrasri or Vijia last Mahgada King 300 J. 546-T
26. Pulomarishi (Pulomeen of Chinese) Mr D. Dies 648 A. D. Salaneadi T. Cot of Soppa Bowal of Mewar A. D 720—(Vide Page 241 Geneological Tables by Mr. James Prinsep in Indian Antiquity.)

அப்படி ஆண்ட ஆந்தார்களுடைய பெயர்களைப் பற்றி காலபேதத்தி ஞல் இரண்டொரு பெயர்கள் வித்தியாசப்பட்டிருப்பதால் பாகவதம், விஷ்ணு வாயு பிரம்மாண்டாதி புராணங்களில் கண்டிருக்கும் விஷயங்களை விசாரித்து எழுதிய

மகதநாட்டில் ஆண்ட சந்திரவம்ச ஆந்திர சக்கிரவர்த்திகளுடைய பெயர்கள்.

பாகவத புராணத்தின்படி	விஷ்ணு புராணத்தின் படி.	வாயு புராணத்தின் படி.	பிரம்மாண்ட புராணத்தின் படி.
பலஹீதன	சுப்ரசன் = சுத்ரகன்	சிந்துகன் 23	கிஷ்முகன் 23
* கிருஷ்ணன்	கிருஷ்ணன்	கிருஷ்ணன் 18	கிருஷ்ணன் ஹ 18
ஸ்ரீசத்காரணி	ஸ்ரீசத்காரணி	ஸ்ரீசத்காரணி	ஸ்ரீசத்காரணி 10
பவுர்ணமாசன்	புரோங்கதசங்கன்	புரோங்கதசங்கன் 18	புரோங்கதசங்கன் 18
தெரியவில்லை	சதகாரணி	சதகாரணி 56	சதகாரணி 56
லம்போதரன்	லம்போதரன்	லம்போதரன் 18	லம்போதரன் 18
இவிலேகன்	இவிலேசன்	அபிலேசன் 12	அபிலேசன் ஹ 12
மேகசுவாதி	மேகசுவாதி	தெரியவில்லை	சவுதேசன் 18
ஆத்மானன்	பதுமாதன் (பதுமாய்	புதுமாபி 24 [52	அபி ஹம 12
தெரியவில்லை	அரிஷ்டகர்மன்	நேமிகிருஷ்ணன்	தெரியவில்லை
ஹலியன்	ஹாளன்	ஹாளன் 1	ஸ்கந்தஸ்வாதி 28
தாளகன்	பட்டலகன்	புலகன் 5	ராவகன் 5
புஷ்பவரன்	பிரவிலசேனன் புருக்ஸேனன்	புருக்ஸேனன் 21	பிரவிலசேனன் 12
சுநந்தனன்	சுந்தரசதகாரணி	சதகாரணன் 1	சுந்தரசதகாரணி 1
சகோரன்	சகோரசத்காரணி	சகோரசத்காரணி ½	சகோரசத்காரணி 6
தெரியவில்லை	தெரியவில்லை	தெரியவில்லை	மஹேந்திர சத்காரணி 3
ஷை	ஷை	ஷை	குண்டல சத்காரணி 8
வேதகன்	ஷை	ஷை	ஷை
சிவசுவாதி	சிவசுவாதி	சிவசுவாமி 28	சிவசேனன் 1
சவுதமிபுத்திரன்	கவுதமிபுத்திரன்	கவுதமிபுத்திரன் 21	பந்திரமதி 34
பூரிமான்	புலிமான் (புலோமாய்	தெரியவில்லை	தெரியவில்லை
மாதசிரன்,	சிவாஸ்ரீ	ஷை	அபி 4
சிவஸ்காந்தன்	சிவஸ்காந்தன்	ஷை	சிவஸ்காந்த சத்காரணி 2
யாஜஞஸ்ரீ	யாஜஞஸ்ரீ	{ யாஜஞஸ்ரீ 29 } { சதகாரணி 60 }	யாஜஞ சத்காரணி 19
விஜயன்	விஜயன்	தெரியவில்லை	தெரியவில்லை
சந்திரவிஜயன்	சந்திரசி (தண்டா	தண்டாஸ்ரீ 3	சண்டாஸ்ரீ சத்காரணி 3
லோமாதி	புளோமரிஷி (புலேபிரவி	புலோமயன் 7	புலோமயன் 7

* இந்த கிருஷ்ணன் சிப்ரகனுடைய சகோதிரன். மற்றவர்கள் யாவரும் நேரான ஆண் சந்ததி வார்சுகளாக வந்தாண்டார்கள் அந்த ஆந்தரர்களுடைய வம்சாவளியைப்பற்றி பிருஹத் சம்ஹிதையைப்(T. R. A. S. Vol V-P-82.) பார்க்கவும்? மத்சிய புராணத்தில் 29 ஆந்திரர்களை குறித்திருக்கிறது.

பிறகு ஆங்கிலேயருடைய அரிய முயற்சிகளினால் ஆங்காங்குத்தேடி அகப்பட்ட செப்பேடு சிலாசாசனங்களை பரிசோதித்து எழுதிய (Asiatic Reserches Vol. IX. P. 101-106) ஆசியாடிக்கு சரித்திர கிரந்தம் 9-வது வாலியம் 101-106 பக்கங்களில் மேஸ்டர் (Wilford) வில்போர்டவர்கள் எழுதிய சரித்திரத்தினாலும், மேஸ்டர் பெர்கூயூசன் (Mr. Ferguson's The Indian and Eastern Architecture Page 716) எழுதிய சரித்திரம் 716-வது பக்கத்தில் கண்ட விவரங்களினாலும், மற்றும் அநேக சிலாசாசனங்களையும் பரிசோதித்து மேஸ்டர் சுவேல் (Robert Sewell) அவர்கள் எழுதிய ஆர்கியோ லாஜிகல் சர்வே சரித்திர புத்தகம் 2-வது வாலியம், 144 - 45-வது பக்கங்களில் பதிப்பித்திருக்கிற மகத தேசத்தை யாண்ட ஆந்திர அரசர்களுடைய பெயர்களையும், அவர்கள் ஆண்ட காலத்தையும் இதனடியில் பதிப்பித்திருக்கிறோம்.

மகததேசத்திலாண்ட ஆந்திரர்களுடைய விவரம்.

அரசர்களின் பெயர்கள்.		ஆண்ட காலம். கிறிஸ்து பிறப்பதற்கு முன்	கிறிஸ்து பிறந்த பின்.
1. பலின் அல்லது பலின்ஜா அல்லது சுபகரன்		31 —	8-வரு
2. கிருஷ்ண ராஜா	கி-பி	8	10 ,,
3. சத்காருணியன்	கி-பி	10	28 ,,
4. பிரஞேத சங்கரன்	...	28	46 ,,
5. சிவசுவாமி	...	46	64 ,,
6. சதகாருண்யன் (2-வது)	...	64	120 ,,
7. இலம்போதரன்	...	120	138 ,,
8. அபிதாகான்	...	138	150 ,,
9. சங்கரன்	...	150	68 ,,
10. சத்காருண்யன் (2-வது)	...	168	186 ,,
11. ஸ்கந்தாஸ்வதி	...	186	193 ,,
12. மிருஜேந்திரன்	...	193	196 ,,
13. குண்டலஸ்வாதி	...	196	204 ,,
14. ஸ்வாதிகரன்	...	204	205 ,,
15- புலோமவிதுரன்	...	205	241 ,,
16. கோரஸ்வசு	...	241	266 ,,
17. ஹலா ராஜா	...	266	271 ,,
18. மண்டலாகாரன்	...	271	276 ,,

19. புரந்தரசேனன்	...	276	281	,,
20. சுந்தரன்	...	281	284	,,
21. இராஜசுவாதி	...	284	6ஹீ	,,
22. சிவஸ்வாதி (2-வது)	...	284	312	,,
23. கவுதமிபுத்திரன்	...	312	333	,,
24. வசிஷ்டபுத்திரன்	...	333	335	,,
25. புலோமதன்	...	335	363	,,
26. சிவாஸ்ரீ	...	363	370	,,
27. ஸ்கந்தாஸ்வாதி (2-வது)	...	370	377	,,
28. யஜானன்	...	377	406	,,
29. விஜயன்	...	406	412	,,
30. சந்திரகேசன்	...	412	422	,,
31. புலோமரிஷீ	...	422	429	,,

அந்த ஆந்திரரும், அவர்களுடைய பிரதிநிதிகளும் வழங்கிவந்த நாணயங்களை டாக்டர் காடிரிங்குடன், பகவன்லால் இந்திராஜி (Dor. Codrington and Bagavan Lal Indragee) என்ற இரு சாஸ்திரர்கள் பரிசோதித்ததில், அவைகளில் சிலதில் வசிஸ்டர் குமாரன் வாலிவாயுவன் என்றும், சிலதில் மஹீதார்மகன் சிவாலயன் என்றும், சிலதில் கவதமி புத்திரன் விதியாவான் என்றும் பின்னும் சில நாணயங்களில் வேறு இராஜர்களுடைய பெயர்களையும் பதிப்பித்திருக்கிறதைக் கண்டு ஆசியாடிக்கு சரித்திரம் 303-வது பக்கத்தில் (Vide J. B. B. R. S. S. XIII-303) எழுதி இருக்கிறார்கள். அப்படி ஆண்ட ஆதி ஆந்தார்கள் ஆதியில் பவுத்தமதஸ்தர்களாயும், பிறகு சக்தி, சைவ, வைணவமதஸ்தர்களாயும் இருந்ததாக அநேக சரித்திரங்களால் ஸ்பஷ்டமாகிறது.

ஆதி ஆந்திரர்கள் புத்தமதஸ்தர்களாக இருந்ததில், பிராம்மண மதஸ்தர்களுக்கும், அவர்களுக்கும் அடிக்கடி சமய விஷயமாகச் சண்டைசச்சரவுகள் நடந்துவரக் குடிகளுக்குள் ஐகமத்தியம் என்னும் ஒருமைப்பாடுகெட்டும், அதனால் தேசாபிமானமும் அற்றுத் தவிக்குங்காலத்தில், இத்தேசத்தின் செல்வச்செருக்கையும், சமயபேத ஜாதிபேதச் சண்டைச் சச்சரவுகளையும் கேட்டும், தக்கச்சமயம் பார்த்திருந்த ஏனையநாட்டார் படை எடுத்து வந்து தாக்கிப் பிடித்துக்கொள்ள பிரவர்த்தித்தார்கள். அதாவது ஆந்திர ராஜர்களில் 'புலோமருடைய' தந்தை 'சந்திரகேச' இராஜன் காலத்தில், கிரேக்கர், பாகதாதியர், பாரசீகர் முதலான ஏனைய நாட்டார் இந்தியாவின்மீது படை எடுத்துவந்ததை, அக்காலத்தில் பாணினி வியாகரணத்துக்கு வியாக்யானம் செய்த பதஞ்சலியார் பிரத்தியக்ஷமாகப் பார்த்தவர். புராணரீதியாகப்பார்க்கையில், ஆந்தரசக்கிரவர்த்திகளின் கடைசிகாலத்தில் அலெக்சாந்தர்படை எடுத்துவந்திருக்கவேண்டும். அன்றியும்,

அந்தக்காலத்தில் மகமதியரும் படை யெடுத்துவந்து இந்தியாவின் மத்திய நாடுகளைத் தாக்கினார்கள். அப்படி சித்தியர் முதலான யவனர்கள் இந்தியாவின் மீது படை எடுத்துவந்து எட்டுதரம் தாக்கி, கோயில் கோபுர விக்கிரகங்களை எல்லாம் இடித்தும், வேதாதி கிரந்தங்களையெல்லாம் பொசுக்கியும், ஜாதிபேதம் குலபேதங்களைக் கெடுத்தும், மங்கையரை மானபங்கஞ் செய்தும் வந்ததனால்; இயற்கையிற் சாதுக்களான இந்துக்கள் அவர்களுக்கு பயந்து, (பிளேக்முதலான கொடிய விஷவியாதிகள் பிரவேசிக்கும் காலத்தில் குடிகள்பயந்து நாட்டை யும், வீட்டையும், காட்டையும் விட்டொழிவதைப்போல;) நாட்டிலுள்ள நல்லபி ராம்மணர் முதலானவர்கள் காட்டுக்குள்போய் கடுந்தவஞ்செய்யஆரம்பித்தனர். அப்படி ஆரம்பிக்கவே, இந்தநாட்டில் சுமார் 250 வருஷகாலம் சரியான சக்கிர வர்த்திகளும், இராஜர்களும் இல்லாமல் குடிகள்தவித்து நாட்டின் நாலாபக்கங் களில் ஓடியும், மலை முதலான மறைவான விடங்களிலும் குடிபுகுந்தார்கள்.

(The Andhras end in Puloma or Pulomarishi A. D. 436 and from thence forward the chronology of Magada relapses into confusion (Page 151. History of India by the Hon. Mount stuart Elephanston.)

ஆகவே, ஆந்திரருடைய சந்ததி வம்சாவளி புலோமரிஷிகாலத்தின் முடிவு வரையில், அதாவது கி. பி. 436 வருஷம் வரையில் தெரிய வருகிறதேயன்றி அந்தபுலோமரிஷிக்குப் பிறகு மகததேசத்திலாண்ட ஆந்திரருடைய வம்சாவளி குழப்பமாகவே இருக்கிறது என்றுகனம் மவுண்டுஸ்டுவார்டு எலிபன்ஸ்டன் அவ ர்கள் எழுதிய இந்துதேச சரித்திரம் 157 வது பக்கத்தில் எழுதினார். அப்போது புத்தமதஸ்தர்களாக இருந்த ஆந்திரர்களுடைய வம்சாவளி முதலான சரித்திர ங்களை படிப்பாளிகளான பிராம்மண மதஸ்தர்கள் மதாவேசத்தினால் எழுதாமல் விட்டு விட்டார்களோ, அல்லது அவர்கள் எழுதிவைத்திருந்த சரித்திரங்களை அப்போது இந்நாட்டின் மீது படைஎடுத்து வந்துப்பிடித்த பாரசீகர், கிரேக்கர் மகமதியர் முதலான வர்களால் பொசுக்கப்பட்டு பஸ்பமாகிவிட்டனவோ உண் மை இன்னதென்று விவரமாக நாளது வரையிலும் விளங்கவில்லை.

ஆயினும், ஆந்திரர்கள் பிராம்மணமதஸ்தருடைய சச்சரவுகளுக்கும், பார சீகர் கிரேக்கர் முதலான யுவனர்களுடைய படை எடுப்புக்குப் பயந்தோ, மற் றெந்த காரணத்தைப்பற்றியோ,இனிமகததேசத்திலிருந்துஆளுவதில்சுகமில்லை என்று கண்டு மகதநாட்டிற்கு தெற்கே மலைகள் அடர்ந்த மறைவான விடங் களுக்கும், நீர்வளம், நிலவளம் பொருந்திய நாடுகளுக்கும் குடியேறி தம் தம் பெயர்களால் சில ஸமஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டுவர ஆரம்பித்தார்கள்.

அப்படி வந்தவர்கள் ஐந்து ஆறு ஆந்திர சகோதிரர்கள் என்று, விசாகப் பட்டணம், கோதாவரி ஜில்லா சரித்திரங்களினால் தெரியவந்தாலும், வடக்கே மேஸ்டர் ஜேம்ஸ் பிரின்சிப்பவர்களுக்ககப்பட்ட சிலாசாசனங்களினால், மகத நாட்டிலாண்ட மாருதி இராஜனுடைய சந்ததியார்களில் ஏழு பேயர் மகத

நாட்டை விட்டுப்புறப்பட்டு மாளவ நாட்டிலும், ஓரங்கல், கொண்ட விடு ஆணகுந்தி, விஜயநகரம் முதலான விடங்களிலும் காலதேசார்த்தமானங்களைத்தழுவி ஆந்திர ஸமஸ்தானங்களைஸ்தாபித்து ஆண்டுவந்ததாகத் தெரியவருகிறது. அவர்களில் மாளவ நாட்டிலாண்ட உஜ்ஜினி (1) விக்ரமார்க்கனுடைய, குடும்பத்தாரும் (2) கால சூரியராயலு குடும்பத்தாரும் (3) தக்ஷணத்தின் வடமேற்கு கிழக்கரை நாடுகளையாண்ட சாலுக்கியரும் (4) ஓரங்கல் நாட்டிலாண்ட கணபதிராயலும் (5) கொண்ட விடுவிலாண்ட கஜபதிராயலும் (6) ஆணகுந்தி விஜயநகரத்திலாண்ட நரபதிகளும் ஆக (6) ஆறுஆந்திர குடும்பத்தாருடைய சாசன சரித்திரங்கள் மாத்திரம் இதுவரையில் அகப்பட்டிருக்கின்றன. மற்றொரு ஆந்திரகுடும்பத்தாருடைய சரித்திர சாசனங்கள் இன்னும் அகப்படவில்லை. ஒருவேளை சங்கம ஜாதியாரும் ஒரிசா நாட்டிலாண்ட கேசரி வமிசத்தாரும் அந்த அந்த ஆந்திர குடும்பத்தாராக இருந்தாலும் இருக்கலாம்.

சில சரித்திரங்களினால் சங்கஜாதியார், ஒரிசாவிலாண்ட கேசரி ஜாதியார்,கொண்டவிடு ரெட்டி ஜாதியார்,கேலாதிராஜர்கள்,களிங்கஜாதியார் கபிலேசுவர ஜாதியர் முதலான பிரபல்மான சில ஜாதியார்களும் ஆந்திரவமிசத்தைச் சார்ந்தவர்கள் என்றும்;வடக்கே கஞ்சம், கோதாவரி, விசாகப்பட்டணம், இராஜமஹேந்திரம், நெல்லூர் முதலான விடங்களிலிருக்கும் ஜயபூர், போபுலி, மடுகொலி, சாலூர், ஆந்திரிகம், பஞ்சபேட்ட, சேகு, சங்கம் விலாசம், பெல்காம், மேரங்கி, குரியம், அனகபல்லி. நக்கபல்லி, பாலகொண்ட, குண்டலி மந்தினவு, முதலான குருநில மன்னர்களும், ஜமீன்தாரர்களும் ஆந்திரவமிசத்தைச் சார்ந்த கணபதி, கஜபதி, நரபதிகளுடைய ஜாதியார்களென்றும், சந்ததிகளென்றும் சில தெலுங்குக்கவிவாணர்களும், சரித்திரக்காரர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

அப்படிக்கவிகள் சொல்லும் வாக்கியங்களையே உண்மையான சங்கதிகளாகநம்பி சரித்திரம் எழுதுவதைப் பார்க்கிலும்; கவிகளாலும், சரித்திரக்காரர்களாலும், கல்சிலாசாசனம், தாம்பிரம் செப்பேடு முதலான சாசனங்களையும், காலதேசவர்த்தமானங்களையும் தழுவி எழுதுவதே நம்பத்தக்க சரித்திரமாகுமாகையால்; இன்றுவரையிலும் ஆந்திரஜாதியாருடைய சரித்திரத்தைப் பற்றி வேதபுராண இதிகாசங்களினாலும், சிலா செப்பேடு சாசனங்களினாலும், சர்க்கார் சோதனை சரித்திர கிரந்தங்களினால் அகப்பட்ட ஆதாரங்களினாலும், ஆந்தரர்கள் என்றுஸ்திரப்படுத்தப் பட்டவர்களுடைய சரித்திரங்களைமாத்திரம் எழுதலானேம்—அப்படி நாளதுவரையிலகப்பட்ட சிலாசெப்பேடு முதலான சாசனங்களினாலும், புராண இதிகாசங்களினாலும் ஸ்திரப்படுத்தலானவர்கள் (1) தாராநகரத்தை ஆண்ட விக்கிரமார்க்கன் குடும்பத்தார்களும் (2) சாலுக்கியஜாதியாரும்,(3)ஓரங்கல் கணபதிராயர்களும்,(4) கோண்டவிடு கஜபதிராயர்களும் (5)விஜயநகர நரபதிராயர்களும் ஆந்திரவமிசத்தாரில் முக்கியமானவர்கள்என்று ஸ்பஷ்டமாகிறபடியால் அந்த ஐந்துகுடும்ப ஆந்திரர்களுடைய

சரித்திரங்களை மாத்திரம் சங்கிரஹமாக எழுதத் தீர்மானித்தோம்—அவர்களில் முக்கியமானவர்கள் மாளவ நாட்டில் உஜ்ஜினியிலாண்ட விக்கிரமார்க்க மஹாராஜனுடைய குடும்பத்தார்களே.

இரண்டாவது அத்தியாயம்.

விக்கிரமார்க்கனுடைய சரித்திரம்.

மேஸ்டர் ரோபர் லித் பிரிட்ஜி அவர்கள் எழுதிய இந்துதேச சரித்திரம் 174-வது பக்கத்தில், "நாம் சொல்லுகிற சில நூற்றுண்டுகளில் இந்தியாவில் அதிக பராக்கிரம சாலிகளும், இராஜபுத்திரர்களுக்குள் சிறந்தவர்களுமாகிய ஆந்திரர்ளும் அவர்களுடைய சந்ததிகள் மகதநாட்டிலாண்டு வந்தபோது புத்தமதவிஷயமாகத் தாக்கப்பட்டு ஓரிசா நாட்டின்தெற்கே தெலுங்கானு வென்னும் ஓரங்கலுக்கும், அக்காலத்தில் இந்தியாவில் சிறந்திருந்த மால்வாவைச்சார்ந்த உஜ்ஜினி நகரத்துக்கும் வந்தாண்டார்கள். ஆந்திரர்களுக்கு சிறந்த மன்னனும், வீரபராக்கிரமமுடையவனும், உஜ்ஜினி நகரத்திலிருந்து ஆண்டவனுமான விக்கிரமார்க்க மஹாராஜன் என்று சொல்லி இருக்கிறார்; ஆகவே, இனி அந்த விக்கிரமார்க்கனுடைய சரித்திரத்தைப்பற்றி விசாரிப்போம்.

"For Some centuries during the period of which we are speaking the most powerful family in India, and the greatest of all the Rajaput Dynasties, was called Andhra Branches of this great family reigned in Magada (whence they had expelled the Buddist kings) in Warangel in that part of the Deccan called Telingana, south of Orissa and also in Ujjain in Malwa, which was the most famous city of India at that time. The greatest king of the Andra dynasty was the heroic Vickramaditya king of Ujjain. Mr. L. Lrthbrdge.

விக்கிரமார்க்கனுடைய சரித்திரத்தைப்பற்றி தென் தேசத்தில் வழங்கி வரும் முப்பத்திரெண்டு பதுமைக்கதை முதலானதுகளில் சொல்லி இருக்கும் சங்கதி சங்கிரஹமாவது:—

நந்தியா புரவாசியாகிய **சந்திரவர்ணன்** என்னுமோர் அந்தணர், தாம் கற்றுத்தெளிந்த கல்வியோடு, பின்னும் பலகலைகளைக் கற்றுத்தெளிய தக்க ஓர் குருவை நாடி தேசசஞ்சாரம் செய்துக்கொண்டு ஒரு வனத்தில்போய் ஓர் அரசமரத்தடியிற் படுத்திருந்ததாகவும், அப்போது அந்த மரத்திலிருந்த ஓர் பிரம்மராக்ஷஸி அந்த அந்தணருக்கு பிரத்தியக்ஷமாகி ஒவ்வொரு இலையிலும் ஒவ்வொரு ஞானத்தையும் எழுதிப்போட, அவைகளை அந்த அந்தணர் (உபவாசத்தோடிருந்து) படித்துத் தெளிந்தபிறகு, அக்காட்டைவிட்டு சன்னியா புரத்துக்குவந்து ஆறுமாதகாலமாகவிருந்த உபவாச கஷ்டத்தினுல் அங்கிருக்கும் அலங்காரவல்லி என்னும் தாசி வீட்டின் நடையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்ததாகவும்;

அப்படித்தூங்கிக்கொண்டிருந்தவரை அந்த அலங்காரவல்லி வந்துப் பார்த்து மெய் அன்னம் வேது செய்து எழுப்பித் தன்னை கலியாணம் செய்துக் கொள்ளும்படி வருந்திய தாகவும், அதற்கவர் சம்மதிக்காமையால் இருவருக்கும் சண்டைசச்சரவுகளுண்டாகி அந்நாட்டுக்கரசனை சுத்தவர்மாவினிடம் போய் முறையிட, அவ்வரசன் தனது மந்திரிபிரதானி புரோகிதர்களிடம் அதைப்பற்றி யோசிக்க தனது குமாரத்தியாகிய சித்திரரேகையையும், புரோகிதன்மகளாகிய கலியாணியையும, செட்டிமகளாகிய கோமலாங்கியையும், தாசிமகளாகிய அலங்காரவல்லியையும் சேர்த்து ஒரே காலத்தில் விவாகம் செய்வித்தல் சாஸ்திர சம்மதமெண; அந்த அரசனும் அப்படியே செப்வித்ததாகவும்; அப்படி விவாஹம் செய்வித்த, சுத்தவர்மா அரசன் சாகும்தருவாயில் தனக்கு ஆண் பிள்ளைகளில்லாக்குறைவினல் சமஸ்தானத்தைச் சந்திரவரணனுக்குபட்டாபிஷேகம் செய்துவிட்டதகவும், அப்படி பட்டாபிஷேகம் செய்துக்கொண்ட சந்திரவரணனுக்கு முதல் மனைவியாகிய சித்திரரேகையினல் விக்கிரமார்க்கனும், கலியாணியினல் வல்லவரிஷியும், கோமலாங்கியினல் பட்டி என்பவனும், அலங்கார வல்லியினல் பிரித்துலஹரி என்பவனு மாக நான்குமக்கள் பிறந்ததாகவும், அப்படிப் பிறந்த நான்கு குமாரர்களில் வல்லவரிஷி துறவியாகிவிட்டதாகவும், சிலகாரணங்களைப்பற்றி பிரித்துலஹரி சிங்காசனத்தைப் பெற்று 120 மனைவிகளை விவாஹம் செய்து அரசுசெலுத்தி வருங்காலத்தில், சாந்தயோகரிஷி கொடுத்த கொம்மட்டி மாதுளம்பழத்தினல் தன்மனைவிமேல் சந்தேகமுற்று ஸமஸ்தானதனைவிட்டு சந்நியாசியாகிவிட்டதாகவும், பிறகு அந்த சிங்காசனத்துக்கு விக்கிரமார்க்கன் வந்து தனது சகோதிரன் பட்டியை மந்திரியாக நியமித்துக் கொண்டும், தானிருக்கும் கன்னியாபுரியைவிட்டு உஜ்ஜினி புரத்தை இராஜதானியாக்கிக் கொண்டும், அங்குப்போய்பத்திரகாளியம்மனுடைய தரிசனையையும் வரத்தையும் பெற்றும், அங்கிருக்கும் 7 உரிகளை வெட்டி மொக்ஷத்தைப் பெற்று தன் நாட்டை அலங்கரித்தும், ஏலகாரம்பை யாதி 1008 மனைவிகளை விவாஹம் செய்துக்கொண்டும் மஹாபராக்கிரமத்தோடு ஆண்டுவந்ததாகவும்; அப்படி ஆண்டுவருகையில், தேவலோகத்தில் அரம்பை ஊர்வசி மார்களுடைய நடன யோக்கியதையை அறிந்துச் சொல்லும்படி தேவேந்திரனல் அழைக்கப் பட்டுப்போய் அத்தேவேந்திரனுக்கு திருப்தி யுண்டாக்க, அத்தேவேந்திரன் வியந்து 1000 வருஷ ஆயுளும், தேவலோக சிங்காசனத்தையும் கொடுத்தனுப்பியதாகவும், அவைகளைப் பெற்று பூலோகத்துக்கு வந்து பத்ரகாளியினல் நாடாறுமாதமும் காடாறுமாதமுமாக 2000 வருஷ ஆயுளைப்பெற்றும் ஐம்பத்தாறு தேசங்களுக்கதிபதியாகி செங்கோல் செலுத்தியதாகவும், அந்த சிங்காசனத்தை

ரறவிரும்பிய போஜனுக்கு 32 பதுமைகள் சொன்னகதைகளை ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சாலிவாஹனனுடைய விவரம்.

காவேரிதீரத்தில் பல்லாண்டு புரிவாசிய இராமகிருஷ்ண அவதானி தன் மனைவி திவ்விய சிந்தாமணியை சித்திராபர்வம் 15-ம் திதி இரவு 12நாழிக்குமேல் ரோகிணி நக்ஷத்திரத்தில் கூடினால் அற்புதப்பிள்ளை பிறக்குமென்று சண்டுப் போகையில், இடையில் ஆற்றின் பெருவெள்ளத்தைக்கண்டுத் தவித்ததாகவும், அப்போது அருகிலிருந்த குடகுநாட்டுக் குயவன் இராம வேளாளன் தன் குமாரத்தியாகிய அன்ன பூரணியை அணையும்படிவேண்ட, அந்த அந்தணரும் சம்மதித்து சேர்ந்ததில், சாலிவாஹனன் பிறந்ததாகவும், அந்தச் சாலிவாகனன் கல்விகேள்வி மந்திர தந்திரங்களால் மைசாபுரி (மைசூர்) அரசன் விசுவநாதனுக்கு மந்திரியாகி ஆண்டுவரும்போது, மேலேசொன்ன விக்கிரமார்க்கனுக்கு மாமூல்படிகப்பம் கட்டாமலிருந்ததனால், அந்த விக்கிரமார்க்கனும் பட்டியும்பலமான தண்டுதளாதிகளோடு படையெடுத்துவந்ததாகவும், அப்படி வந்த விக்கிரமார்க்கனை சாலிவாஹனன் மந்திர தந்திரங்களினால் கொன்று அந்த சிங்காசனத்தை அந்தச் சாலிவாஹனன் கட்டியாண்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

விக்கிரமார்க்கனைப்பற்றி வடதேசத்தில் முக்கியமாக சிலாசாசனசெப்பேடுகளில் கண்ட சரித்திரங்களைக் கொண்டு ஆசியாடிக் ரிசெர்சஸ் என்னும் சரித்திரம் 9-வது வாலியம் 131-135-146-147-வது பக்கங்களிலும், ஷைபத்தாவது வாலியத்திலும் வில்போர்டு (Wilford) சரித்திரம் 1-வது வாலியம், 274-வது பக்கத்திலும், மேஸ்டர் ஜேம்ஸ் பிரின்செப் (James Prinsep) இந்தியன் அண்டி குட்டி சரித்திரம் 249-250 பக்கங்களிலும் பின்னும் பல சாசன சரித்திரங்களில் பின்வருகிறபடி சொல்லப்பட்டிருக்கிறது.

பாடலீபுரத்து விக்கிரமார்க்கன்.

அவர்களில், பாடலீபுரத்தில் ஒரு விக்கிரமார்க்கன் பிறந்து விக்கிரமகேசரி என்ற பெயரால் பிரபலனாகி ஒரு சாலிவாஹனனால் கொல்லப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு விக்கிரமார்க்கனைப்பற்றி பின்வருகிறபடி சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது

மால்வா நாட்டில் திருபுரநாதனென்ற சிவபெருமானே விக்கிரமார்க்கன் என்றப் பெயரால் பிரபலனாகி அப்போது இந்தியாவின்மீது படை எடுத்து வந்த மிலேச்சரைத் துறத்தியடித் தோட்டினனும். அந்த விக்கிரமனுக்கு விகிரமசக்தி என்ற ஒரு மந்திரி இருந்ததாகவும், அவன் மஹாமதியூகி என்றும் அந்த

விக்கிரமன் உஜ்ஜினியில் குணவதி, சந்திரவதி, மதனசுந்திரி என்ற மூன்று மனைவிகளை விவாஹம் செய்துக் கொண்டிருந்ததன்றியில். இலங்கை மன்னனாகிய வீரசேனசிம்ஹசேலசுவரன் குமாரத்தி குட்டக்காளையும், களிங்கநாட்டு மன்னன் குமாரத்தி விசுவகர்மினியையும் விவாஹம் செய்துக்கொண்டிருந்தான் என்றும், அப்படி பலமனைவிமார்களை விவாஹம் செய்து வாழ்ந்துவருங்காலத்தில் அவனது சமஸ்தானத்திலிருக்கும் புரந்தசபுரவாசியாகிய ஒரு பிரபல தனவான் தான் சாகும்போது தனது நான்கு குமாரர்களை அருகில் தருவித்து அந்த நான்கு குமாரர்களுக்கும் நான்குப் பானைகளைக்கொடுத்து இறந்தானென்றும்; அந்த நான்கு பானைகளில் முதற்பானையில் மண்ணும், 2-வதில் அடுப்புக்கறியும், மூன்றாவதில் எலும்புகளும், நான்காவதில் தவிடும் போட்டிருக்கக் கண்டு அதன் பொருள் தெரியாமல் தவித்து அதின் விஷயத்தைப்பற்றி அரசனாகிய அந்த விக்கிரமார்க்கனுக்கு அறிவிக்க; அந்த விக்கிரமார்க்கனும் அவன் மந்திரி முதலானவர்களும் அதைப்பற்றிச் சிந்தித்துச் சிந்தித்தும் பொருள் விளங்காதவர்களாகி அந்தப்பொருளை அறிவிப்போருக்கு நல்ல பஹுமானம் தருவதாக விளம்பரம் செய்வித்ததாகவும், அப்போது அடுத்த கிராமத்திலிருந்த அந்தணர் இருவருக்கு ஒரு விதந்துவான சஹோதிரி இருந்ததாகவும், அந்த விதந்துவான பிராம்மண ஸ்திரி எப்படியோ கர்பவதியாகியதை அவளுடைய சகோதரர்கள் கண்டு வெட்கப்பட்டு அவளை வீட்டை விட்டு ஓட்டிவிட, அவள் போய் ஓர் குயவன் வீட்டில் அடைக்கலம் பெற்று அந்தக்குயவன் வீட்டில் சாலிவாஹனன் என்ற பெயரால் ஒரு குமாரனைப்பெற்று வளர்த்ததாகவும், அச்சாலிவாகனன் 12-வயது பையனாகியபோது அந்தப்பயன் அந்த ராஜவிளம்பரத்தைப்படித்துப் பார்த்துச்சிரித்து இறந்துபோன தனவந்தன் தன்மக்களுக்குக் கொடுத்த நான்குபானைகளில், மண்போட்டுவைத்திருந்த பானையைப் பெற்றமகன் தன்தந்தையின் பூஸ்திதிகளையும், கறிப்போட்டுவைத்திருந்த பானைக்குடையவன் தன் தகப்பனுடைய மர முதலான சாமான்களையும், எலும்புகள் போட்டுவைத்திருந்தப் பானைக்குடையவன் ஆனை எருது முதலானமிருகங்களாகிய சொத்துக்களையும், தவிடுபோட்டிருந்தப்பானைக்குடையவன் தானிய முதலான சொத்துக்களையும் அடையவேண்டியதென்று ஒருசீட்டில் எழுதிராஜனுக்கு அனுப்ப இராஜன்படித்துப்பார்த்து. சந்தோஷப்பட்டு அந்தப்பையனை நேரில்பார்க்கக் கருதிசொல்லியதால்; அப்பையன்வராமல் உன் இராஜனைவந்து என்னைப்பார்க்கச்சொல், என்று அவமானமாகச்சொல்லி அனுப்பியதாகவும், அதைக்கேட்டு இராஜன் அதிக கோபமூண்டு தனது தண்டு தளாதிகளோடுப்போய் சண்டைடப்போட, அந்தப்பையன் மண் முதலானதுகளால் வேடிக்கைக்குச் செய்துவைத்திருந்த குதிரை ஆனைகளுக்கு உயிரைக் கொடுத்து அவைகளைக் கொண்டு விக்கிரமார்க்கமஹாராஜனோடுச் சண்டை செய்து, ஜயித்தானென்றும் சொல்லப்பட்டு இருக்கிறது.

அக்கினிபுராணத்தின்படி விக்கிரமார்க்கன் சந்திரவமிசக்ஷத்திரிய ஆந்திர குலதிலகனென்றும், அவன் பாண்டவரைச்சார்ந்த அர்ஜுனனுக்கு 785 வருஷங்களான பிறகு உஜ்ஜினியிலாண்டவனென்றும், அந்த ஆந்திரசந்ததி

யில் விக்கிரமார்க்கனுக்கு முன்பு உஜ்ஜினியில் அடியில்கண்ட அரசர்கள் ஆண்டார்களென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உஜ்ஜினியில் விக்கிரமார்க்கனுக்கு முன்பு ஆண்ட ஆந்திர அரசர்களின் விவரம்.

அரசர்களின் பெயர்கள்.		ஆண்ட காலம்.
தனஞ்சயன்	கி-மு	840-ஐம்
ஜிதச்சந்திரன்	...	760 ,,
சமுத்திர பாலன்	...	670 ,,
நரவாஹனன்	...	680 ,,
பூதிராஜன்	...	580 ,,
ஆதித்யபுவனன்	...	400 ,,
பிரம்மராஜன்	...	390 ,,
ஆதிபிரம்மன்	...	360 ,,
சதாசிவசேனன்	...	271 ,,
ஹமீரதன்	...	191 ,,
கந்தரூபன-கார்த்தபரூபன்	...	91 ,,
விக்கிரமார்க்கன்	...	56 ,,
அந்த விக்கிரமார்க்னுக்கு பிறகு.		
சந்திரசேனன்	கி-பி	44 ,,
சூரியசேனன்	...	135 ,,
சந்திரசேனன்	...	215 ,,
கனகசேனன்	...	216 ,,
சந்திரபாலன்	...	302 ,,
மஹேந்திர பாலன்	...	402 ,,
கர்மசந்திரன்	...	409 ,,
விஜயாநந்தன்-அவனுக்குபிள்ளைகளில்லாமையால் சிந்துலாவை தத்துவாங்கினன்	...	410 ,,
முஞ்சன் (சிந்துலாவின் சகோதிரன்)...		470 ,,
அந்த சிந்துலாவுக்கு போஜன் பிறந்தான் சகாப்தம்		540ஐம்
போஜன்	...	483 ,,

அந்த போஜராஜனுக்குப் பிறகு 45 அரசர்கள் கி. பி. 1210 வருஷங்கள் வரையில் மாளவ உஜ்ஜினிப்பட்டணத்திலிருந்து ஆண்டார்கள் (அந்த 45 அரசர்களின் பெயர் முதலான விவரங்களை இந்நூலின் நூன்முகத்தில் மாளவாவில் ஆண்டவர்களின் பட்டியிற்பார்க்க) அப்படி ஆண்ட அரசர்களிலெல்லாரிலும் விக்கிரமார்க்கன் ஆந்திரவம்சதிலகனென்றும், கந்தரூபனுடைய குமாரன் என்றும், அந்தகந்தரூபனும் அவனுடைய முன்னோர்களும் புத்தமதஸ்தர்களாக இருந்தார்களென்றும், விக்கிரமார்க்கன் தன் முன்னோருடைய புத்தமதத்தை விட்டு, இந்து (பிராம்மண) மதத்தைத் தழுவி சத்திபூஜை சிவபூஜைகளில் ஈடுபட்டவனாகி; அநேக பிரம்மாலயங்களையும், மாடமாளிகை கூடகோபுர அகிரஹாரங்களையும், ஆலிகூபதடாகாதி தருமங்களை நியமித்தும்; சகலரிடத்திலும் சமரசஞானியாகவிருந்துத் தழுவியும், துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்தும், அக்காலத்தில் இந்தநாட்டை நாடித் தாக்க வந்த சீத்தியர், யுவனர் மகமதியர் முதலானவர்களைத் தடுத்தும், அவர்களை காரூர் என்னுமிடத்தில் மடக்கியடித்தும்; வடக்கே ஹிமாசலபர்வதஅடிவாரம்வரையில்இராஜ்ஜியத்தை ப்பரவச்செய்தும், மஹாபராக்கிரமசாலியாகியும், தன்னுயிரை ப்போல்மன்னுயிரைப்பாதுகாத்தும் வரருசி, வராஹமீரர், தனவந்திரி, சபாநாதன், அமரகோசன், விட்டலபட்டர், கடகர்பர், சங்கர், சதாநந்தன் என்னும் ஒன்பது வித்வத்சிங்கங்களையும், மற்றும் அநேக கற்றோர் கவிகளையும் தக்கபடி ஆதரித்தும், தாராநகர அரசனாகிய இராஜேந்திரனுடைய குமாரத்தியைமணந்துபுத்திரசந்தானம்பெற்றும், அனைவராலும் கொண்டாடும்படியான ஓர் அவதார புருஷனாக இருந்தும், 135 ௵ ஆண்டபடியால்; அந்த விக்கிரமனுடைய நல்ல பெயரை உலகோர் என்றும் புகழும்படி அவனுடைய ஆளுகை முதல் ஒரு புதுசகாப்தத்தை ஏற்படுத்த, அதற்கு விக்கிரமாதிசம்மக்ஷர மென்றும், அது கி. மு. 56¾ ௵ம் மார்ச்சு மாதம் முதலாரம்பித்த தென்றும், அப்படி புகழ்பெற்ற விக்கிரமார்க்கன் தனது 130 வயதாகிய கலியுகாப்தம் 3044 ௵ம் மரணமடைந்தான் என்றும்; ஆகவே, அந்த விக்கிரமார்க்கனுக்கு பலவருஷங்களுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த சாலிவாஹனன் அவனைக்கொன்றதாகச் சொல்லுவது பிசகான சரித்திரம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கொரு திருஷ்டாந்திரமாக- விக்கிரமார்க்கன் சகாப்தம், கிறிஸ்து பிறப்பதற்கு முன் 56¾ வருஷங்களுக்குமுன் ஆரம்பிக்கிறது, சாலிவாஹன சகாப்தமோ கிறிஸ்து பிறந்த பிறகு 79 வருஷங்களுக்கு பின்பு ஆரம்பிக்கிறது; ஆகவே, இருவருடைய காலவித்தியாசம் அதிகமாக இருக்கிறது. இருக்கவே, சாதாரணஜனங்கள் நம்புவதைப் போல சாலிவாஹனனே விக்கிரமார்க்கனை கொன்றான் எனில், விக்கிரமார்க்கன் பெயரால் பல ராஜர்கள் ஆண்டுவந்ததாக இபுத்தகத்தின் 13-14 பக்கங்களில் தெரிவித்திருக்கிறபடியால், அவர்களில் யாரோ ஒரு விக்கிரமார்க்கனைக்கொன்றிருக்கலாமே யொழிய, (32) பதுமைக்கதையில் சொல்லி இருக்கும் காவிரி தீரத்திலுள்ள, மைசூர் நாட்டை ஆண்ட சாலிவாஹனன், வடக்கே வெகுதூரத்திலிருக்கும் உஜ்ஜினி நாட்டையாண்ட விக்கிரமார்க்கனைக் கொன்றதாகச் சொல்தக்க ஆதாரசாசனங்களில்லை.

சிலாசாசன சரித்திரங்களினால் தெரிவிக்கப்பட்ட

போஜ மஹாராஜன்.

விக்கிரமார்க்கன் என்ற பெயரால் நான்கைந்து விக்கிரமார்க்கன்மார்கள் பிறந்து பிரபலப்பட்டதாக சரித்திர சாசனங்கள் சொல்வதைப்போலவே, போஜராஜன் என்ற பெயரால் இரண்டு மூன்று போஜர்கள் இருந்ததாகச் சரித்திர சாசனங்கள் சொல்லுகின்றன, அதில் ஒருபோஜனையே விக்கிரமார்க்கனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் பெரும்பான்மையான சரித்திர சாசனங்களில் மாளவ தேசத்துக்கரசனாகி, தாராநகரிலாண்ட ஆந்திர போஜனையே சரியான போஜனாக ஸ்தாபிக்கின்றது.

அந்த போஜராஜன் மாளவ நாட்டைச்சார்ந்த தாராநகரத்தில் ஆண்ட சிந்துல ராஜனுடைய மகன். அந்த போஜனுடைய மனைவி லீலாவதி. அவனுடைய மந்திரி புத்திசாகரன். அவனுடைய சமுகவித்துவான்கள்- காளிதாசன், பவபூதி, தண்டி, பாணன், வரருசி, சுபந்து, கிராடாசந்திரன், கவிசேகரன்,விஷ்ணு,மாயூரன் முதலானவர்கள். அந்த போஜராஜன் சைவமதஸ்தனாக விருந்தும், தருமராஜ்ய பரிபாலனம் செய்தும், சகலமதஸ்தர்களிடத்தும் சமரச சினேகிதனாகவிருந்தான். அந்த போஜன் காலத்தில் ஸமஸ்கிருத வித்தியா விஷயம் விருத்தியானதைப் போல அவனுக்கு முன்னுமில்லை, பின்னு மில்லை. போஜராஜனும் மஹாவித்வானாக இருந்து போஜச் சொம்பு, போஜபிரபந்தம் முதலான கிரந்தங்களை இயற்றினான். அந்த போஜராஜனை ஆகம வேதபுராண இதிகாசங்களைத் தக்கபடி ஆராய்ந்து தெளிந்தவனாக இருந்ததன்றியில், அவன் காலத்தில் வாகட வைத்திய நூல்களும் விருத்தியாகின. அவன்காலத்தில் மானுஷ வைதியத்தோடு அசுரவைதிய மாகிய(சர்ஜரி)சத்திரவைதியமும் விருத்தியாகி இருந்ததென்பதற்கு திருஷ்டாந்தமாக,அந்தபோஜனுக்கு ஒருகாலத்தில் பயங்கரமான தலைவலியுண்டாகித்தவிக்க, சலிய சாஸ்திரத்திரத்திற்ச் சிறந்த சகோதிரர்கள் இருவர் வந்து அவனைப்பார்த்தும், சமோஹினி என்னும் மருந்தினால் அந்த அரசனை மூர்ச்சைஅடையும்படி செய்தும், அவன் கபாலத்தைக் கத்தியினால் பிளந்தும், மூளையிலிருந்த விஷத்தை நீக்கி சுத்திசெய்தும், மறுபடியும் கபாலத்தைப் பழமைப் போலப் பொருத்தி சந்தைத்தைத்தும், சந்தானகரணி என்னும் மருந்தைக் கொடுத்தும், மூர்ச்சையைநீக்கி நீடூழிவாழச் செய்ததாகவும் அவனுடைய பிரபந்தமொன்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த போஜனுக்கு வயது 114 வருஷங்கள். போஜனுக்குப்பிறகு அவனுடைய குமாரன் ஜயாநந்தன் 21 வருஷங்களாண்டான். அந்த ஜயாநந்தன் போஜனுடைய குமாரத்தி பானுமதியை விவாஹம் செய்துக்கொண்டவன் என்று(A. R. S. Vol. 9) ஒரு சாசனத்தினால் வெளியாகிறபடியால்; அவன் போஜனுடைய மருமகனாக இருந்தாலும் இருக்கலாம். பிறகு சாலிவாகனன் மாளவநாட்டை மஹாராஷ்டிர

நாட்டுடன் சேர்த்து 21 வருஷங்களாண்டு வரும்போது, மகமதியர்கள் முக்கியமாக, மகமதுகஜினி கூர்ஜரநாட்டின் மேல் படை எடுத்து வந்து சோமநாதபுரத்தையும், அதன் கோயிலையும் இடித்து குட்டிச்சுவர்களாக்கி அங்கிருந்த அளவற்ற திரவியத்தை ஆனை ஒட்டைகைகளின் மேலேற்றிக்கொண்டு போனான்.

மூன்றாம் அத்தியாயம்.

சாளுகிய ஜாதியார்.

பாலபாகவதம், வசுசரித்திரம், நரசபூபாலியம், நரபதி விஜயம் முதலான கிரந்தங்களின்படியும்,வேறுசாசனங்களின் படியும் சந்திரவமிசப் பாண்டவரில் ஒருவன் அர்ஜுனனுடைய 83 வது சந்ததி நந்தராஜன் என்றும், அந்த நந்தராஜனுடைய 9-வது சந்ததி சாளுகியன் என்றும், அந்த சாளுகியரில் கலியாண்புரியிலாண்டவன் விஜ்ஜலராஜன் என்றும், அவன் பேரன் வீரஹெம்மலராயன் என்றும், அந்த ஹெம்மலராயன் மகன் தபீனன் என்றும், அந்த தபீனன் சந்ததியில் இராமராஜாபிறந்தான் என்றும், அந்த ராமராஜா கிருஷ்ணதேவராயனுடைய மருமகனென்றும், டாக்டர் கஸ்டவ் அப்போர்டுக்கு அசப்பட்ட சாசனத்தை அவர் தென்னிந்தியா சரித்திரம் 73-வது பக்கத்தில் எழுதி இருக்கிறார்.

(Inscription) "From Naryana, Brama, Atri, Chendra, Buda, Pururavas, Ayu,Nahasa, Yayati,Puru &c. are descended the Bahratas and as the 83rd. in descent from Arjnna is given in the Narpati Vijiam *Nanda* his 9th descendent is Chalukya and from is descended Vijjal or Bijjala of Kalyana" &c. Geniological Tree of the Narapatis contributions to the Southeren India inscriptions Part 1, Page 73. By Dr. Gustav Oppert, Ph. D. Professor of Sanscrit Presidency College Madras. &c. &c. &c.

சந்திர வமிச க்ஷத்திரிய ஆந்திரர்களில் ஒரு வகுப்பாராகிய சாளுக்கியர் கி. பி. ஆறுவது நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டுவரையில் அதாவது ஆறு நூற்றாண்டுகள் வரையில் ஸமஸ்தானத்தை ஸ்தாபித்து பிரபலராக ஆண்டவர்கள் என்றும்,ஆதியில் அவர்களில்59 அரசர்கள் ஐயோத்தியாவை பிரதான பட்டணமாகக் கொண்டு ஆண்டதாக அநேக சாசனங்களிருக்கினும், அவர்களில் மூன்றாவது அரசன் கி. பி. 566 ஹூ தக்ஷணதேசத்தில் ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தாண்ட சங்கதி முதல் அநேக சரித்திர சாசனங்களினால் ஸ்பஷ்டமாகிறது. அவர்களில் விஜயாதித்தியன் தக்ஷண நாடுகளை நாடி ஸமஸ்தானங்களை ஸ்தாபிக்க வந்த போது, ஒரு யுத்தத்தில் கொல்லப்பட்டான்.

அவன் மனைவி அப்போது பூர்ணகர்பவதியாக இருந்தமையால், ஓரந்தணா வீட்டில் அடைக்கலம் புகுந்து,விஷ்ணுவர்த்தனனென்னும் மகனைப்பெற்றாள். அந்த விஷ்ணுவர்த்தனன் பல்கிப் பெருகி பராக்கிரமசாலியாகி காஞ்சிபுரத்திலாண்டுவந்த பல்லவராஜனை ஜயித்து, அவனுடைய குமாரத்தியை விவாஹம் செய்துகொண்டான். அவர்களுக்கு விஜயாதித்யனும், அவ்விஜியாதித்யனுக்கு புலிகேசி வல்லபனும் பிறந்தார்கள். அந்தப் புலிகேசியின் பேரன்மார்கள் பிரபலமானபோது,அவர்களில் மூத்த குடும்பத்தார்கள்,மேற்கு தக்காணத்திலும்,இளையவனான குப்ஜவிஷ்ணுவர்த்தனன் கிழக்குக் கரையோரங்களிலும் படை எடுத்துப்போய் வெங்கிநாட்டிலிருந்த பல்லவ சாலான் கியானர்களை ஜயித்தான். அப்போது வெங்கிநாட்டிலாண்ட ஆந்திர பிருதியர்கள் புத்தமதஸ்தர்கள். சாளுகஜாதியாரோ வைணவ மதஸ்தர்கள்.

அந்தச் சாளுகியருடைய வம்சாவளியைப்பற்றி டாக்ட்டர் பர்னல் (Dr.-Burnel's) South Indian Palaeography Page 18 & Mr. Fleets Dynasties of Kanara District P. 18) மேஸ்டர் பிளீட்டவர்களுடைய சரித்திர கிரந்தங்களையும் அனுசரித்து எழுதினோம். அந்த வமிசத்திற்கு ஆதிபிதா தைலேபர் என்று இரண்டொரு சாசனங்களினால் தெரியவரினும், பெரும்பான்மையான சாசனங்களில் அடியில் கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது.

சாளுக்கியருடைய வம்சாவளி.

1. ஜயசிம்ஹன்.
2. புத்தவர்மன்.
3. விஜயவர்மன். அல்லது விஜயராஜன்
   (சாலிவாகன சகாப்தம் 394ஹூ கிறிஸ்து சகாப்தம் 472
4. இரணராஜன்.
5. புலகேசிவல்லபன்.
6. கீர்த்திவர்மன்.
7. பிருதுவி வல்லபன்
   சாலிவாகனன் சகாப்தம் 489 கி. பி. 567
8. மங்கலீசராஜன்.
   கி. பி. 567 சிங்காசனமேறி 610ஹூ ஆண்டான்.
9. சத்யஸரிய இந்திரவர்மன்.
   சகாப்தம் 532 கி. பி. 610

10. வல்லபேந்திரன் அல்லது 2-வது புலகேசி வல்லபன்.
கி. பி. 610 முதல் 634வரையும் ஆண்டான்.
11: குப்ஜவிஷ்ணுவர்த்தனன்.
கிழக்குநாட்டு அரசன் கி. பி. 615-633வரையும் ஆண்டான்.
12. 2-வது ஜயசிம்ஹன். 633-663
13. நாகவர்த்தனன்=இந்திரபட்டகன். 663
14. ஆதித்யவர்மன்.
15. விஜயபத்திரன்.
16. விக்கிரமாதித்யன் = அம்பேரம்மாள். ஆதி சங்கராசாரி வதிந்தகாலம். சகாப்தம் 592-602 கி. பி. 670-681.
17. விஜயாதித்யன்.
சகாப்தம் 603-618 கி. பி. 681-696
18. விஜயாதித்யன்.
சகாப்தம் 618-655 கி. பி. 696-733.
19. விக்கிரமாதித்யன். 2-வது லோகமாதேவியின் கணவன்.
சகாப்தம் 655-669 கி. பி. 733-747.
20. கீர்த்திவர்மன். 2-வது
சகாப்தம் 669-679 கி. பி. 747-757.
21. 1-பீமராஜன்.
22. 3-கீர்த்தி வர்மன்.
23. 3-விக்கிரமாதித்யன்.
24. 2-பீமராஜன்.
25. ஜயானன்.
26. 4-வது விக்கிரமார்க்கன். பூகதேவியின் கணவன்.
சகாப்தம் 895-919 கி. பி. 973-997.
27. 4-வது விக்கிரமார்க்கன்.
28. 2-வது சைலபூபன்.
29. சத்யசிரேயன். அம்பிகாதேவியின் கணவன்.
சகாப்தம் 919-930 கி. பி. 997-1008
30. தாசவர்மன். பாகியவதியின் கணவன்.
31. விபுவிகிரமன்.
சகாப்தம் 930-940 கி. பி. 1008-1018
32. ஜயணன்.

33. அக்கதேவி.
சகாப்தம் 944-969 கி. பி. 1022-1047

34. 3- ஜயசிம்ஹன்.
சகாப்தம் 940-964 கி. பி. 1018-1042

35. சோமேசுவரன்.
சகாப்தம் 964-990 கி. 1042-1068

36. 2-சோமேசுவரன்.
சகாப்தம் 990-997 கி. 1068-1075

37. 6-வது விக்கிரமாதித்யன்.
சகாப்தம் 997-1048 கி பி. 1075-1126

38. 4-வது ஜயசிம்ஹன்-பானவாசியிலாண்டவன்
சகாப்தம் 1001-1003 கி. 1079-1081

39. ஜயகாரணன்.

40. 3-வது சோமேசுவரன்.
சகாப்தம் 1048-1060 கி. 1126-1138

41. மையிலாலதேவி-கதம்பஜயகேசிரியை மணந்தாள்.

42. ஜகத்காமலன்.
சகாப்தம் 1060-1072 கி.1138-1150

43. 3-வது திரிலோகமல்லன்.
சகாப்தம் 1702-108 கி. 1150-1162

44. 4-வது வீரசோமேசுவரன்.
சகாப்தம் 1104-1111 கி. 1182-1189

அவர்களில் புலிகேசிவல்லபன் கதம்பருடைய தலைநகரமாகிய பானவாசியைப்பிடித்து பாதாமிகோட்டையை வசமாக்கிக்கொண்டான்.

கீர்த்திவர்மன் (1) கதம்பரைஜயித்து பிரபலனானதனாலும், அவன் தம்பி மங்கலீசன் காலசுரிஜாதியாரை ஜயித்து கொங்கணநாட்டைச்சார்ந்த ரேவதி தீபம், மதங்கம் முதலான கோட்டைகளை பிடித்தான். சத்யஸிரயன் மஹாபராக்கிரமசாலியாகி கனோஜி நாட்டு அரசனாகிய ஹர்சவர்த்தனனையும், ரஸ்தரகூட ஜாதியைச்சார்ந்த கோவிந்தனையும், கோரரோண மவுரியரையும், கூர்ஜரமால்வ அரசர்களையும் ஜயித்தும், மஹாராஷ்டிரருடைய பிஷ்டாபுரத்தைப் பிடித்தும், களிங்கரையும், கோசலரையும், அடக்கியும், பல்லவரை காஞ்சிபுரம் வரையிலோட ஓட்டியும், சோழர்களையும் ஜயித்தாளுவதற்காகப் பெரிய சேனையை அனுப்பினான். அந்த சத்ய சிரேயனுடைய பராக்கிரமத்தையும், தருமராஜாங்கத்தையும் பற்றி அநேக கவிகள் புகழ்ந்தும், அவன் குடும்பத்துக்கே "சத்யசிரேஷ்டிகள்" என்று பெயரிட்டதனாலும், அவன்

காலத்திலுண்டான கல்வி சீர்திருத்தத்தை நேரில்வந்துகண்ட Hewen Thsang எவன்திசாங்கு என்னும் சைனு நாட்டு யாத்திரைகாரரும் கொண்டாடி எழுதி இருப்பதோடு, பாரசீக நாட்டின் அரசன் Khosru II கொச்ருராஜன் வியந்து விலையற்ற வெகுமதிகளைக் கொடுத்துப் புகழ்ந்தான்.

அந்த சத்யாசிரேயனுக்குப் பிறகு பட்டத்துக்குவந்தவர்கள், அதிக பிரபல ராக இராவிடினும், அவன் பட்டத்தையடைந்த விக்கிரமாதித்யன் முதலில் பல்லவருடைய முக்கட்டுச்சண்டைகளினால் சற்று சலித்தாலும், கடைசியில் அவர்களை ஜயித்து காஞ்சிபுரத்தைப் பிடித்தான். அப்போது சந்திரகாசாவில் ஆண்ட தேவசக்திராஜன் அந்த விக்கிரமார்க்கனுக்கு கப்பம்கட்டிவந்தான்.

அந்த விக்கிரமார்க்கனுடைய குமாரன் வினையாதித்தியனும் பல்லவரைக் கண்டித்தடக்கியதன்றியில், அவன் சமஸ்தானம் தக்கரணத்தில் தென்னாடு களின்பலவிடங்களிற்பரவச்செய்தும் காலம்பரர்,கேரளர்,ஐயசலார்,விலாசர், மாலவர், சோழபாண்டியர்களையும் ஜயித்ததாக சிலசாசனங்களால் தெரியவரு கிறது. அவன் குமாரன் விஜியாதித்யன் காலத்தில் ஸமஸ்தானத்தில் சண்டை சச்சரவுகளின்றி சமாதானமாக இருந்தது. அவன் குமாரன் 2-வது விக்கிரமார்க்கன் பல்லவரை மூன்று தரம் ஜயித்து காஞ்சியைக் கைப்பெற்றான்.

2-வது கீர்த்திவர்மன்-2-வது திரிலோகவல்லபன் காலத்தில் விசேஷ விகல்பங்களில்லையாயினும், 3-வது ஜயசிம்ஹன் சேரசோழர்களைத் தாக்கினன். (2) சோமேசுவரன், குலத்துங்கசோழனை ஜயித்தான். அவனுக்கு பக்தலா தேவி, சந்திரகதேவி, மைலதேவி என்ற மூன்று மனைவிகளிருந்தார்கள் (2) சோமேசுவரன் கதம்பரை ஜயிக்க, அவர்களுடையநாட்டின் பாதிபாகத்தை அவன் சகோதிரன் (4வது) விக்கிரமாதித்தன் ஆண்டான்.

அந்த (4-ம்) விக்கிரமாதித்தன் சோழராஜனுடைய குமாரத்தியை விவாஹம் செய்துக்கொண்டதன்றியில்,தன் குமாரத்தியை கதம்பராஜனுக்கும் கொடுத்தான். அப்படி மஹாபராக்கிரமசாலியாக ஆண்டுவரும்போது 1189 ஞும் பிஜ்ஜாலர், காலசூரியர், கணபதிராயலு, பல்லாளராஜர்கள் பிரபலமாகி வந்த போது அந்த மேற்குநாட்டு சாலுகியருடைய மகிமைமங்கியது.

சாலுகிய ஜாதியில் இரண்டு கிளையார்களென்று முன்னமே சொல்லி அவர்களில் மேல் பிரிவு சாலுகியரைப்பற்றி விவரித்தோம், இனிகீழ்பிரிவு சாலு கியரைப்பற்றி சற்றுச்சங்கிரஹமாகச் சொல்வோம். சாலுகிய குடும்பத்தில் சிரேஷ்டனான குப்ஜவிஷ்ணுவர்த்தனன், கீழ்கரைநாடுகளை நாடிவந்து வெங்கி நாட்டிலிருந்து சாலங்கியானனை ஜயித்து ஸமஸ்தானத்தை ஸ்தாபிக்க, அது ஒரிசாமாகாணம் வரையில் பரவி இராஜமஹேந்திரத்தை பிரதான பட்டண மாக்கிக்கொண்டு நந்நூறு வருஷகாலங்களாக அந்த களிங்கநாட்டை ஆண்டார்கள். டாக்டர் பர்னல் (The S. I. Pilaeagraphy P. 21-22) சாசனத்தின்படி அவர்களுடையவம்சாவளி.

1. குப்ஜவிஷ்ணுவர்த்தனன் 18௵ம் ஆண்டான்?
2. ஜயசிம்ஹவல்லபன் 30 ,, ,,
3. இந்திரராஜன்
4. இராஜநந்தன விஷ்ணுவர்த்தனன் 9 ,,
5. மங்கியுவராஜன் 25 ,, ,,
6. 2-வது ஜயசிமஹவல்லபன் 13 ,, ,,
7. கோகிலிராஜன் 6 ௴ ,,
8. (3) விஷ்ணுவர்த்தனன் 37 ௵ ,,
9. சக்திவர்மன்(விஜியாதித்திய பட்டான்) 16 அல்லது 18 ௵
10. (4) விஷ்ணுவர்த்தனன் 30௵ ஆண்டான்
11. (2) விஜயநரேந்திரமிருகராஜன் 40 அல்லது 48 வருஷம்
12. (5) காளிவிஷ்ணுவர்த்தனன் $1\frac{1}{2}$ ௵ ஆண்டான்
13. (3)குணபூஷண விஜியாதித்தியன் 40-48 ,, ,,
14. விக்கிரமாதித்யயுவராஜன்
15. சாலுகிய பீமன் 30 ,, ,,
16. உயுத்தமல்லன்,தாரப்பன்,உயுத்தமல்லன் 7 ௵.ஆண்டான்
17. கொல்லபிகாவிஜியாதித்தியன் 6 ௴ ஆண்டான்
18. விக்கிரமாதித்தியன் 11 ,, ,,
19. அம்மராஜ விஷ்ணுவர்த்தனன் 7௵ம். ,,
20. விஜியாதித்தியன்
21. இராஜபீமன் 12 ௵ம். ஆண்டான்
22. அம்மராஜன் 25 ,, ,,
23. தானராஜன் 3 வருஷம்ஆண்டபோது பிரபலசண்டைகள்
24. சக்திரவர்மன் 12 ௵ ஆண்டான்
25. விமலாதித்தியன் 7 ,, ,,

அவர்களில் விமலாதித்தியன் சூரியவமிச க்ஷத்திரியனாகிய இராஜராஜேந்திர சோழனுடைய தங்கையாகிய குந்தியை விவாஹஞ் செய்தான். அவன் குமாரன் சந்திரவமிச க்ஷத்திரியனாகிய இராஜராஜனுடைய குமாரத்தி இருமாங்கியை 1022 ௵ம் விவாஹம் செய்தான். அவர்களுக்குப் பிறந்த இராஜேந்திரசோழன் 1064 ௵ம் வெங்கிநாட்டிற்கு முதற்சோழராஜனானான். அப்போது வெங்கிநாடு சோழநாட்டிற்கு வடக்கெல்லையாகியது. இராஜேந்திரகுலத்துங்கன் (1) தன் குமாரனை சாளுக்கிய நாட்டிற்கு பிரதிநிதி யாக்கினாலும், ஒருவருஷம் கடந்த பிறகு இராஜியத்தை தன் சிற்றப்பன் விஜியாதித்தியனிடம் கொடுத்து விட்டு தெற்கே வந்து விட்டான்.

அந்த விஜியாதித்தியன் களிங்கநாட்டை 15 வருஷகாலம் ஆண்டு இறந்த

பிறகு, குலத்துங்கன் தனது தவிதியகுமாரனாகிய வீரநாதனுக்கு பிரதிநிதி அரசனாக்க, அவன் கி. பி. 1102 வருஷம் வரையில் ஆண்டான். பர்னல் சாஸ்திரியின் சாசனத்தின்படி சோழர்கள் அந்த நாட்டை கி. பி. 1228 வருஷம் விட்டுவிட நேர்ந்தது. குப்ஜவிஷ்ணுவர்த்தனனுடைய ஜயம் கி. பி. 605 வருஷம் ஆரம்பித்தது கி. பி. 610 வருஷம் தன் சகோதிரரை விட்டுப்பிரிந்தான்.

மங்கியுவராஜன், அவனுடைய சகோதிரன் கோக்களிராஜனும் பட்டத்துக்குச் சண்டைப்போட்டுக் கடைசியில் மங்கியேபட்டத்தை வகித்தான். பிறகு தாரப்பனுக்கும் விக்கிரமார்க்கன் மகன் அம்மராஜனுக்கும் இராஜ்ஜியத்தைப்பற்றி சண்டைசச்சரவுகளுண்டாகி இராஜபீமனுக்கே ஜயம் கிடைத்து 12 வருஷகாலம் ஆண்டான். 2வது அம்மராஜன் கி.பி 945 ஹில் பட்டத்துக்கு வந்தபோது பிரபலராஜகலகங்களுண்டாகி நாட்டில் சுமார் 27 அல்லது 30 வருஷம் நாதனற்று குடிகள் தவித்தார்கள். அந்த சாளுகியர்களில் இராஜமஹேந்திரத்திலிருந்த விஷ்ணுவர்த்தனன் நன்னேயபட்டு என்ற தெலுங்கு கவிவாணரைக்கொண்டு ஸமஸ்கிருத மஹாபாரதத்தை தெலுங்கில் பாடும்படிசெய்வித்தான். அப்படி பிரபலமாக நானூறு வருஷகாலங்களாக வெங்கிநாட்டையும், களிங்கநாட்டின் பெரும்பாகத்தையும் சமாதானத்தோடு ஆண்டுவந்த சாளுகியரை ஒரிசா நாட்டு கஜபதிகளும், ஓரங்கல்நாட்டு கணபதிராயலுகளும் பிரபலராகவந்துதாக்க கி-பி 1228 வருஷம் மங்கலடைந்து மறைந்தது. அந்த சாளுக்கியர் ஒரு காலத்தில் கலியாணிபுரத்தையும் பிரதான பட்டணமாகக்கொண்டு ஆண்டுவந்தார்கள் என்றும், ஆனகுந்தி நரபதி ஸமஸ்தானம் கிருஷ்ணதேவராயலுடைய மருமகன் இராமராஜா, அந்த சாளுகிய குடும்ப ஸ்தானென்றும் சாசனங்களால் பிரத்தியக்ஷமாகிறது (Vide Page 105-Vol 8-Indian Autiquity by Mr. Fleet)—Vide Pages 1481 to 53-155, 156 157 158 The Archaeological Survay of S. I. Vol II by Robert Sowell M L S

சாளுகிய மேற்குப்பிரிவு ராஜர்களுடைய காலத்திலுண் டான சாசனங்களின்

வருஷம் கி—பி.	இராஜர்களுடைய பெயர்கள்	சாசனங்கள் இப்போதிருக்குமிடம்	வகைரா
650	அமபர ராஜன்	ஒகூா	தாம்பிரசாசனம்
652-3 முதல் 690 வரை	சதிய ஸ்ரீரியன்குமாரன்	கர்னூல்	ஷை
	விக்கிரமார்க்கன்	ஷை	ஷை 5 சாசனங்கள்
690 முதல் 95	விக்கிரமாதித்தியன்	பெல்காம், சோராம், ஹரிலே	சிலாசாசனம், தாம்பிரம்
758	கீர்த்திவர்மன்	ஒக்கலேரி	தாம்பிரசாசனம்
997	ஆபாவமல்லன்	தாலடகுண்டி.	சிலா சாசனம்
1019	ஜயசிம்மன்	பெல்காம்	ஷை
1020 to 1035	ஜகதேவமல்லன் [ன்	ஷை	ஷை
1145 to 1048	சோமேசுவர தேவ	தாலிடகுண்டி, டெல்காம்	ஷை
1066	விஷ்ணுவர்த்தனன்	தேவன்கிரி	ஷை
1068	திரிலோகமல்லன்	பணவாசி	ஷை
1070-1075	புவனேகமல்லன்	பெல்காம்	4 ஷை
1077-1125	விக்கிரமாதித்தியன் 5வது	ஷை அநந்தப்பூர், கோராபமுதேவன்கிரி முதலான விடம்	15 சாசனங்கள்
1029 to 1142	பூலோகமல்லன்	டெல்காம், இந்திகிரி தேவன்திரி	சிலா சாசனம்
1147	ஜகதேவமல்லன்	ஹரிஹர	ஷை.
ஷை	தைலிபராஜன்	ஷை	ஷை.
1154	திரிலோகமல்லன்	பெல்காம்	ஷை

கீழ்பிரிவு சாளுகியருடைய சாசனங்கள்.

650	1 ஜயசிம்மன்	கிருஷ்ணாஜில்லா, பெத்தமாத கிராமம்	தாமரசாசனம்
,,	இந்திரபாதிரிகா	சென்னை விநோத சாலையில்	ஷை
,,	சாளுகியபீமன்	கோதாவரி, மண்டலம்	ஷை
,,	அம்ம ராஜன் 1	கிருஷ்ணாஜில்லா	ஷை
,,	ஷை	ஏரேரு, கிருஷ்ணா, சென்னை	ஷை
,,	ஷை 2-வது	கிருஷ்ணா ஜில்லா	
,,	ஷை ஷை	ஷை	ஷை

இந்த சாசனங்களினால் அந்த சாளுகியாருடைய ராஜ்ய பரிபாலனம் பிரத்தியக்ஷமாகும்.

நான்காவது அத்தியாயம்.

காலசூரிய ஜாதியார்.

சாளுக்கிய ஜாதியாரின் சந்ததியாகிய கலியாணபுரியிலாண்ட விஜ்ஜலன் அல்லது பிஜ்ஜலன் அல்லது விஜயன் என்னும் அரசன் முதலில் காலசூரிய ஜாதியைச் சார்ந்தவனாகவும் அதற்குத் தலைவனாகவும் இருந்து, பிறகு சாளுக்கிய நாராயணன், என்றும் வெங்கித்திரு புவனமல்லன் என்றும் பிருதுகளைப் பெற்றதாக டாக்டர் ஆப்போர்ட்டரவர்களுக்கு தேவனஹள்ளியிலும், மெயிசூரிலும் அகப்பட்ட சாசனங்களினாலும், பாலபாகவத முதலான சரித்திரங்களினாலும் ஸ்பஷ்டமாகிறது.

"From Calukya descended in course of time the well-known Vijjala or Bijjala of Kalyana. This Vijjala who belonged to the family of the Kilacuryus, though he usurped the throne of the Chalukyas of Kalyaneo * * We hope further to have brought to light * * The Chalukyas, through Vijjala the Head of the Kalasurya dynasty Pages 25-25-44 T.J. History by Dr. Oppert.

அவர்களுடையவம்சாவளி.

1 புத்தமஹாராஜன்
2 சங்கரன்
3 கானன்
4 ஜோதிசிங்கன்
5 பிரமாதி-1128
6 விஜ்ஜலன்-1161-1162
7 வசுதேவி-1164
8 சோமேசுவரன்-1167-1175
9 சங்கம்மாள் 1175-1180
11 ஆஹமல்லன் 1186-1188
12 சிங்கன்னன் 1189

ஆந்தர ஜாதிவகுப்பைச் சார்ந்த காலசூரியலு ஜாதியார் கி-பி 567முதல் 660ஷு வரையில் ஆண்ட ஒரு பிரபலமான ஜாதியார்கள் என்று மேஸ்டர் பிளீட் (Mr. Fleet) அவர்களுக்கு அகப்பட்ட சாசனங்களைக் கொண்டு தமது கனரிஜாதி சரித்திரம் 10-11 பக்கங்களில் எழுதி இருக்கிறார்.

அந்த ஜாதியின் ஆதித்தலைவர் புத்தமஹாராஜன். அவனுக்கு சங்கரர், கானர் என்ற புத்திரர்கள் பிறந்து, ஒருவன் வடதேசங்களிலும், மற்றொருவன் தென்தேசங்களிலும் ஆண்டார்கள். அந்த சங்கரருக்கு, ஜோதிசிங்கனும், அவனுக்கு பிரமாதியும் பிறந்து 1128ஷு மேற்கு சாளுக்கியருக்கு அடங்கி ஆண்டார்கள். அவனுக்குப் பிறகு அவன் குமாரன் விஜ்ஜலன் 1161 முதல் 1162 வருஷம் வரையிலும், பிறகுஸ்ரீவசுதேவியும், பிறகு சோமேசுவரன் 1167 முதல்

1175 வரையிலும், பிறகு சங்கம்மாள் 1175 முதல் 118 வரையிலும், பிறகு ஆஹவமல்லன் 1186 முதல் 1188 வரையிலும், அநந்தரம் சிங்கன்னன் 11890 வருஷம் வரையிலும் ஆண்டுவந்தார்கள். அவர்கள் ஆண்டுவந்த இடங்களையும், அவர்கள் காலத்தில் நடந்த விசேஷங்களையும் விவரமாகக் காட்டும் சாசன சரித்திரங்கள் இது வரையிலும் கிட்டவில்லை. டாக்டர் ஆபோர்டுக்குரெய்சூரில் கிடைத்த கல் சாசனங்களினாலும், சரித்திரங்களினாலும் அந்த காலசூரா ராயலைச்சார்ந்த விஜ்ஜளான் சாலுக்கியஜாதிக்கும் தலைவனென்றும் அவன் கலியாணபுரியைக்கட்டி ஆண்டு, லிங்காயத்து மதத்தை ஸ்தாபித்த பசுவரை தனது மந்திரிபிரதானியாக நியமித்துக்கொண்டும், அவர்சகோதரி பத்மாவதியை விவாஹம் செய்துக்கொண்டதாகவும், கடைசியில் அந்த பசுவருடைய ஏவுதலினால் விஜ்ஜலன் கொல்லப்பட்டானும். அந்த விஜ்ஜலனுடைய சந்ததிதான் விஜயநகர கிருஷ்ணதேவராயலுடைய மருமகனாகிய இராமராஜாவாம். அவர்களின் வீட்டின் பெயர் பூசப்பாட்டிவராம்.

டேபில் X L II-தெலுங்கானாவின் பிரதான பட்டணமாகிய ஓரங்கல்லில் ஆண்ட ஆந்திர (தாளுவ) ஆதேவராஜர்கள் பிரதாபருத்திரருக்குமுன் ஓரங்கள்ளில் ஆண்ட 19 இராஜர்களில் 18 பெயர் 370 ஹு காலம் ஆந்திர ஆதேவராஜர்கள் ஆண்டார்கள், என ஓங்கல்லின் ஒரு கோயிலில் கட்டப்பட்ட சாசனத்தில் கண்டிருப்பதாக ஆ-ரி கிரந்த முதல் வாலியத்தில்கண்டிருக்கிறது. அவர்களில் 1 திருபுவன மல்லராஜா ஓரங்கல்லை ஸ்தாபித்தான்.

கி-பி 1162 ஹு பிரதாபருத்திரன் கோயிலைக் கட்டிவைத்தான். அவன் காலத்தில் அந்த சமஸ்தானம், கிழக்கு சமுத்திரகக்ரை, ஐதராடாத்தின் தெற்கு ஸ்ரீசைலமலை, மேற்கு வேங்கடமலை, வடக்கு கோதாவரி மாகாணமாம்.

அங்கு ஆண்ட ஆந்திரர்கள்.

கி. பி. 800 வ. ஸ்ரீரங்கராயன்	25 ஹு	நரசிம்மஹன்	8 ஹு
வீரநாராயணன்	23 ,,	துய்யமஹாராஜன்	12 ,,
ஒபிளிராஜன்	21 ,,	ஸ்ரீபாண்டியன்	9 ,,
ஸ்ரீரங்கநாயகன்	22 ,,	வாசுதேவன்	12 ,,
பிரங்கிஎண்டயன்	15 ,,	ஸ்ரீவீரநிதி	15 ,,
சந்திரகோபாலன்	32 ,,	குப்ஜயவேலன்	14 ,,
நரசிம்மஹ்ன்	13 ,,	இராஜவிஜயபுஜங்கன்	12 ,,
கம்பீரன்	15 ,,	சாலிநாராயணன்	10 ,,
பக்க[illegible]ன்	22 ,,	பிரதிவாதிபயங்கர சாலிகன்	87 ,,
வீரநரசிம்மன்	12 ,,		

ஊரகண்டி பிரதாபருத்திரன் 58 அல்லது 54 வருஷம் ஆண்டு 1221க்கு முடித்தது பிறகு மிலேச்சராகிய மகமதியர் வந்து தாக்க, பிரதாபருத்திரனுடைய

சேனாதிபதிகளாகிய, ஹக்கன், புக்கன், விஜயநகரத்துக்குப் போய் சமஸ்தானத்தை ஸ்தாபித்தார்கள். (மேஸ்டர் பிரின்சிப் அவர்கள் எழுதிய வம்சாவளி கிரந்தம் 278-279-வது பக்கங்களில் காணலாம்.)

Table X L II **Adeva Rajas** of Tuluva, Andra or Telingana Capital **Worangalli or Warancal.**

Ninteen Adeva Rajhas reigned 370 years supposed to be the eighteen princes of Andra descent, prior to Pratapa Rudra (See As Res Vol, Saca 1113,) Sasanam from a temple at Warangall & Trans Lip So A Vol III I. Tribuvana Mall Raja of Warangolli Poli Raja his son A. D. 1162 Pratapa Rudra built a temple.

East boundry the Sea Shore, Sri Sela Hills (South of Hydrabad West Venketa country, North Countries Godavery,

830 Sri Ranga A. R.	25	Years.	Narasimha	8	Years.
Viranarayana	23	,,	Dvia	12	,,
Woalaa	21	,,	Sri Pandia	2	,,
Sriranga Nayaken	22	,,	VasaDeva	12	,,
Perunge Enden	15	,,	Sri Virandi	15	,,
Canda Gopala	32	,,	Cutia Deva	14	,,
Narasimha	13	,,	Raja Visio Bajanga	12	,,
Cambale	15	,,	Salica Narna	19	,,
Bucana	2	,,	PridivodiBayanankam Sadican	87	
Viranarasimha	12	,,			

1167 Uracondi Pratapa Rudra 58 or 54 ended 1221. The milichas (Mahamadans.) followed and Pratapa Rudra, whose officers Hacca & Bucca raised the Vigianagar dynasty &c. Vide Pages 278 -279-Genealogical Tables of James Prinsip &c.

மேஸ்டர் ஜே. சி. மார்ஸ்மேன் எழுதிய இந்துதேச சரித்திரம் 13-வது பக்கத்தில் ஏறக்குறைய கி. மு. 56 வருஷம் ஆந்திரவமிசத்தார் மகத ராஜ்ஜியத்தைப்பெற்று 436 வருஷம் ஆண்டார்கள் அவர்களுடைய சமஸ்தானம் தெற்கே அவர்களுடைய பிரதான பட்டணமாகிய ஓரங்கல் வரையிலும், வடக்கே புகழ் பெற்ற உஜ்ஜினிபட்டணம்வரையிலும் பரவி இருந்ததாக எழுதியிருக்கிறார்.

About the year 56. B. C. The Andra Dynasty obtained possession of the throne of Magada and flowricshed till 436 A. D. Their dominion extended into the Deccan with Warangal for their capital and Ojjein as the great metropolis of their power in the north (The History of India Page 13-by J. L. Marshman.)

ஐந்தாவது அத்தியாயம்.

சந்திரவமிச ஆந்திர ராஜர்களில்

மற்றொருபிரிவாராகிய

ஓரங்கல் கணபதி (ஞானபதி) இராஜர்கள்.

அவர்களை காகத்திய ஜாதியாரென்று சொல்வதுமுண்டு. சந்திர வமிச ஆந்திரர்களில் மற்றொரு பிரிவாராகிய ஓரங்கல்கணபதி இராஜர்களுடைய சரித்திரத்தைப் பற்றி மேஸ்டர் பிரின்சிப் (Prinsep) டாக்டர், வாகர் (Dr. Walker) கனம் டெயிலர் (Rev. W. Taylor) கர்னல் மெக்கன்சி (Col. Mckanzie) முதலானவர்கள் பிரபல பிரயத்தனப்பட்டு சாசனங்களைத்தேடி எழுதி இருக்கினும், திருப்திகரமான சரித்திரம் இன்னமும் அகப்படவில்லை. ஆயினும் அந்த சமஸ்தானத்தை ஸ்தாபித்த அரசன் கோதாவரி தீரத்தில் நந்தாவனம் என்னும் பெயரால் இராஜதானியை ஸ்தாபித்தும், சோழர்களை ஜயித்தும், இலங்கை மன்னனுடைய குமாரத்தியை விவாஹம் செய்துகொண்டதில், பிறந்த குமாரன் புத்திசுவாதீன மற்றவனாக இருந்ததைக் கருதியும், அவனுடைய இரண்டுபேரன்மார்கள் இராஜ்ஜியத்தை ஆண்டு வந்ததாகவும், அவர்களுக்குப் பின் ஆண்ட பத்து (10) இராஜர்களுடையப் பெயர்கள் திருப்தி கரமாக தெரியவராவிட்டாலும், அவர்களுடைய ஆண்சந்ததியாகிய புரோளராஜன் பட்டத்துக்கு வந்ததாகவும், டாக்டர் வாகர் சாஸ்திரியாருக்கு அகப்பட்ட சாசன சங்கதியினால் தெரியவருகிறது.

அந்த கணபதிராஜர்களுடைய வம்சாவளி.

1. திரிபுவன மல்லன்
2. புரோளராஜன் (அவன் மனைவி முப்பம்மதேவி)
3. பிரதாபருத்திரன்
4. கணபதிதேவராஜன்
   அவன் விதந்து
5. ருத்ரம்மகாரு கி. பி. 1257-1295 38 வருஷங்கள் ஆண்டார்
6. ஷெடி குமாரத்தி
7. பிரதாபருத்திரன் 2-வது கி. பி. 1295-1323
8. கிருஷ்ணன்
9. விநாயகன் அல்லது நாகதேவன்

அந்தத் திருபுவனமல்லன் அனுமகொண்டாவில் அகப்பட்ட சாசனத்தின் படி (Vide Mr. Fleets) புரோளிஇராஜனுடைய தந்தை என்று மாத்திரம் தெரிய வருகிறதே யன்றி மற்ற சங்கதிகள் தெரியவரவில்லை.

2. **புரோளிராஜனும்** அவனுக்கு முன்னிருந்த 8 பெயர்களும் அனுமகொண்டாவிலிருந்து அரசு செய்தாலும், அது வசதியாக இராமையால், புரோளிராஜன் ஓரங்கல் அதாவது ஓரே கல்லில் 12,546 கஜ மண் மதில் சுற்றளவுள்ள பலமான கோட்டையையும், அதைச்சுற்றி அழகான பட்டணத்தையும் கட்டுவித்து ஆண்டான். அவனுடைய பிதா இறந்தபோது புரோளிராஜன் பாலியனாக இருந்தும் தக்கக் கல்வியறிவைப் பெற்றும் ஒரிசாகஜபதி மன்னனோடு சண்டை செய்து ஜயித்த தாகவும், சாளுகிய வமிசஸ்தனாகிய தைலப்பதேவனையும, மைசூரை சார்ந்த அரசர்களையும் ஜயித்ததாகவும், தற்செயலாக தன் குமாரனால் கொல்லப்பட்டான் என்றும் அனுமகொண்ட சாசனத்தினால் தெரியவருகிறது.

3. (1) **பிரதாபருத்திரன்** 1162 வருஷம் பட்டத்துக்கு வந்து பீமராஜனையும், சோழர்களையும ஜயித்து பராக்கிரமசாலியானான்.

4. **கணபதிதேவன்** 1190முதல்1258 வருஷம் வரையில் ஆண்டான். ருத்திரம்மகாரு அவனுடைய மனைவி, அவர்களுக்குப் பிறந்த ஞானம்பாள் என்னும் குமாரத்தியை அப்போது தாரணிகோட்டைக்கரசனாகிய கோட்டபெட்ட ராஜனுக்கு விவாஹம் செய்துக்கொடுத்தார்கள். அந்த கோட்டபெட்ட ராஜன ஜயினமதஸ்தனாக இருந்தும், இராஜரீகய விஷயத்தைக்கருதி பெண்ணைக் கொடுத்தார்கள் போலும், அப்படி விவாஹமானவர்களுக்கு புகழ் பெற்ற (2) பிரதாபருத்திரன் பிறந்தான்.

5. **ருத்திரம்மகாரு**, கணபதிதேவனுக்கு ஆண் சந்ததி இல்லாமையால், அவன் மனைவி ருத்திரம்மாள் 1290 வருஷம் பட்டத்துக்கு வந்து சுமார் 1323 வருஷம் வரையில் 40 வருஷகாலங்களாக அதிக தருமராஜியபரிபாலனம் பண்ணினதை **மார்கபோலோ** (Marco Polo) என்ற யாத்திரகன் நேரில் பார்த்து புகழ்ந்து எழுதியிருக்கிறான். அப்போது மஹாவீரதீரனான கங்கைய்ய ரெட்டி ருத்திரம்மாளுடைய புகழ்பெற்ற தளர்த்தனாக இருந்தான்.

6. 2-வது **பிரதாபருத்திரன்** ருத்திரம்மாளுடைய பேரனானபடியால் தன் பாட்டன் பாட்டியின பிரபுத்துவத்தை வகித்தான். அவன் தந்தை ஜயினமதஸ்தனாக இருந்தாலும், பிரதாபருத்திரன் தன் தாய் வர்க்கத்தாருடைய இந்து மதத்தை அநுஷடித்து அதிக பிரபலனாகி ஸமஸ்தானத்தை கன்னியகுமரி வரையில் பரவச்செய்தான். அவன் புகழ் எங்கும் பரவியது. அந்தக்காலத்தில் ஐயோதியாவிலாண்ட நபின் சேனைகள் படைஎடுத்து வந்து, ஓரங்கல்லுக்கு அடுத்த தேவகிரிகோட்டையையும் தாக்கி, ஏராளமான பொருள்களை வாரிக்கொண்டுபோன தன்றியில்; கி. பி. 1306 வருஷம் அலாவுதீன், மாலிக்கபூர் என்னும் சேனைத்தலைவனை அனுப்பி தேவகிரியைத் தாக்கச் செய்தும், சப்பம்

கட்டாயிருந்த (பிரதாபருத்திரனை) சிறைப்பிடித்து டில்லிக்குக் கொண்டு போனான். பிறகு மகமதியர் 1309 வருஷம் ஒருங்கல்லின் மேல் படையை அனுப்பிப் பிடித்து டில்லிக்கு அடங்கி ஆளச்செய்தார்கள். 1310 வருஷம் மகமதியர் மறுபடியும் மலிக்கபூரை அனுப்பி கொள்ளை யிடச்செய்தார்கள். 1326 வருஷம் பிரதாபருத்திரன் தேவகிரி அரசனோடு சமாதானமாகி தங்க சேனைகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு, தான் டில்லி மகமதியருக்குக் கட்டும் கப்பத்தை நிறுத்திவிட, 1321 ௵ டில்லி மகமதியர் மஹா கோபங்கொண்டு மறுபடியும் ஓரங்கல்லுக்கு ஒரு சேனையை அனுப்ப, மகமதியர் சேனைகள் கொடிய வியாதிகளால் தாக்கப்பட்டு டில்லிக்குத் திரும்பினாலும்; 1323 ௵ மகமதியர் மறுபடியும் பலமான சேனையை அனுப்பி ஓரங்கல்லைப் பிடித்தும், பிரதாப ருத்திரனை டில்லிக்கு கொண்டுபோய் விட்டார்கள்.

7. அந்த பிரதாப ருத்திரனுடைய குமாரனாகிய **வீரபத்திரனென்னும்** கிருஷ்ணன், 1425 ௵ பட்டத்துக்குவந்து, 1344 ௵ அடுத்திருந்த இந்து ராஜர்களை சமாதனப்படுத்தி பெருஞ் சேனையைத் திரட்டி மகமதியரை துரத்தி அடித்தாலும்; 1358 வருஷம் மகமதுஷா பாமினி படை எடுத்துப்போய் கொள்ளையடித்து உயுத்தச் செலவை வாங்கிக்கொண்டு திரும்பினான்.

8. அந்த கிருஷ்ணனுக்குப் பிறகு அவன் குமாரன் **வினயகதேவன்** அல்லது நாகதேவன் பட்டத்துக்கு வந்து கொஞ்சகாலம் ஆண்டாலும், சிலசாசனங்களில், அவன் குமாரன் கிருஷ்ணநாயடு ஆண்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1371 ௵ மறுபடியும் மகமது பாமினி வமிசத்தாருக்கும், ஓரங்கல்லாருக்கும் சண்டையுண்டாக, பெலலம் பட்டணம் பிடிப்பட்ட தன்றியில், நாகதேவனும் கொல்லப்பட்டபடியால்,இந்துக்கள் மகமதியரைச் சின்னபின்னமாக அடிக்க, மூன்றில் ஒரு பாகச்சேனை மாத்திரம்தான் குல்பர்காவுக்குப் போக சேர்ந்தது. அந்தக்காலத்தில் இந்து மன்னருக்கு சிநேகிதரான டில்லிமகமதியர் இந்தராஜருக்கு உதவிசெய்யாமல் விட்டது சதிமோசமே. 1424 ௵ மறுபடியும் மகமதியர் ஓரங்கல்லின்மேல் படை எடுத்து வந்து பிடித்தாலும், ஒரிசா கஜபதி மன்னர்களும், மற்ற இந்து மன்னர்களும் தேசாபிமானமும் ஜாதியபிமானமுமற்று ஒருவரொருவரைத் தாக்கிச் சண்டைசச்சரவுகள் செய்துவர ஓரங்கல்லின் மகிமை மங்கலடையச் சம்பவித்தது.

ஓரங்கல் கணபதிராயர்களுடைய காலத்திலுண்டான சாசனங்கள், இப்போது இருக்கும் இடம், காலம் முதலானதுகளைக்காட்டும் ஜாப்தா.

௵-ம்	இராஜாகளுடைய பெயர்	சாசனங்கள் இருப்பிடம்	ஷரா
இ-பி 1175	கணபதி ருத்திரன் மருமகன்	மேகதாளரி தாகசரகிணம்	சிலா சாசனம்
1179	காகதிய பிரதாபருத்திரன்	குனுகூலுகுடைய ௸	3 சாசனம்
1201	கணபதிதேவர் மச்சினர்	பெஜ்வாடா, சொபர்லு	2 ௸
1248	கணபதிதேவன்	இராஜமந்திரம்	௸
1249 முதல் 1254	ருதிரதேவன் ௸	காஜா, கிருஷ்ணா, துக்கி, பட்டி பெலுமன் பாடு, இலிமல்	௸ 5 சாசனம்
1255	பிரதாபருதிரன்	தூர்கி-குஷ்ணா	௸
1258	கணபதிதேவன்	௸	,,
1264	ருதிரம்மாள்	காம்பொடி கிருஷ்ணா	,,
1268	ருதிரமஹாதேவன்	குடிமெட்டல-கிருஷ்ணா	,,
௸	சாயிணிஞான்ம நாயுடு சேனகர்த்தர்	பெத்தவர்ம ௸	,,
1268	ருதிரதேவன்	முதுகூரு ௸	,,
௸	கணபதிதேவன்	தூர்கி ௸	,,
1270	ருதிரம்மதேவி	௸ ௸	,,
1278	ருதிரதேவன்	கோதாவரி தாக்ஷராம்	,,
1279	பிரதாபருதிரன்	கர்னூல்	,,
1292	குமாரருதிரதேவன்	பெத்தகள்ளபல்லி	,,
1293	பிரதாபருதிரன்	மச்சர்வா-கிருஷ்ணா	,,
1295	ருதிரமதேவன்	குடிமெட்டலா ௸	,,
1247-99	பிரதாபருதிரன்	தூர்க்கி, தாடாயி, ஸ்ரீகாகுளம	,,
1304	௸	சிந்தபல்லி கிருஷ்ணா	,,
1305	௸	கெரம்பூடி ௸	,,
1306	௸	ஸ்ரீகாகுளம்	,,
1307	௸	கர்னூல், பில்கலகுருடு	,,
1310	௸	நெல்லூர் கொசிரலகேபட	,,
1311	௸	கர்னூல் தாம்கபடல	,,
1312	௸	௸ தாடிபட	,,
1313	௸	நெல்லூர்-தார்சி	,,
1317	௸	காரம்பாடி, கிஷ்ணா	,,
1318	௸	கோலாகருஞ்சி ௸	,,
1319	௸	தாரிவிபூல, ௸	,,
௸	௸	மாச்சரல ௸	,,
௸	காகதியகணபதின்	பெத்தசெருகூரு	,,
௸	காகூதிய பிரதாபருதிரன்	கோதாவரி, ப்ாலிவேறு	,,
		கிருஷ்ணாகுடிமெட்டலா	,,
		நந்திவெலூரு, செபரோலு	,,
		என்ற விடங்களில்	

கனம் மவுண்டு ஸ்டுவார்டு எலிபன்ஸ்டன் இந்துதேச சரித்திரம் 243-வது பக்கத்தில் ஒரிசா கொண்ட விடு ஜாதியாரைப்பற்றி எழுதுகையில், "ஒரிசா நாட்டு சரித்திரமும் மற்ற தக்ஷணநாட்டினரைப்போல மஹாபாரதத்தில் கண்ட அரசர்களுடைய சந்ததிகளைப்பற்றியே ஆரம்பிக்கிறது; என்று எழுதி இருக்கிறார். (The history of Orissa like all others in the Deccan, begins with princes connected with the Mahabarata &c Page 243. The History of India by M. S. Elphinston-Edited by Mr. E. B. Cowell. M. A. &c.

ஆறுவது அத்தியாயம்.

ஒரிசாகொண்டவிடு கஜபதிராஜர்கள்.

சந்திரவம்ச ஆந்திரர்களில் ஒரு பிரிவாராகிய கஜபதிராஜர்கள் கொண்டவிடுபட்டணத்தை கெடிஸ்தானமாகக் கொண்டு ஆண்டார்கள். அந்த கொண்டவிடு, கிருஷ்ணா ஜில்லாவில் கிருஷ்ணாநதிக்குத் தெற்கே குண்டூருக்கு 8மைல் தூரத்தில் இருக்கும் அரணானமலைக்கோட்டை. மகமதியர்களால் ஓரங்கல் கணபதிராஜியம் மங்கலடைந்தபோது, கிழக்குகரையோரமாக இருந்த சில ரெட்டிகள் கிளம்பி அதைப் பிடித்து கி-பி-1328 முதல் 1427 வரையில் ஆண்டுவரச்சே; அவர்களையும் மகம்திியர்கள் தாக்கினார்கள்-பிறகு அதன் பிரதான பாத்தியஸ்தார்களான கஜபதிராஜர்கள் பட்டத்தை அடைந்தார்கள். அவர்களில் விசுவம்பரதேவன் மறுபடியும் அந்த ஸமஸ்தானத்தை ஸ்தாபித்து, புட்ட கோட்டையைக் கட்டுவித்தான். அவனுக்கு கணபதிதேவன், பாலபாஷ்கரதேவன், ஹரிஹரதேவன், விசுவாம்பரதேவன் என்னும் நான்கு குமாரர்கள் பிறந்திருந்தார்கள்-(கி-பி 1145) ஒரு பெரிய கிராமத்தை தானம்செய்து, பிறகு தனது அரசாக்ஷியை காகத்தீ யந்திரதேவனுக்குத் தத்தம் செய்துவிட்டான்.

ஆசியாடிக் ரிசேர்ஸ் கிரந்தம் 15ம் வாலியம் 269 பக்கத்தில், ஒரிசாகஜபதி ராஜனாகிய அனங்கபீமதேவன் தனது அரசாக்ஷியின் 12ம் வருஷத்தில் பூரியை தரிசித்து, தான் ஸ்ரீகாகுளம் முதல் இராஜமஹேந்திரம் வரையில் ஜயித்த ஜயபலன்களைப் பற்றி பிரபலமாக்கி, தனது ஜயபலனாக ஜகந்நாத சுவாமிக்கு கோயிலைக் கட்டிவைத்ததாகவும், அப்படி கட்டியது கி. பி. 1174-வருஷம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கஜபதிராஜுர்கள் அதிகபிரபலராக 100 ௵ ஆண்டார்கள். அப்போது கிருஷ்ணாநதிக் கரையிலிருக்கும் அமராவதிக் கடுத்த தாரணிகோட்டை தோண்டி அல்லி ரெட்டி வசத்திலிருந்தது. அந்த ரெட்டியின் குடும்பத்தைச் சார்ந்த புரோலயவேமரெட்டி நாளாவட்டத்தில் வீரதீரனாகி தாரணிகோட்டைக் சருகில் காகித்திய பிரதாபருத்திரனுடைய சேனாவீரனைத் தாக்கியும், கொண்ட விடுக்கு வந்து புட்டகோட்டையைப் புதுப்பித்தும் கி. பி. 1320-1331 ௵ வரையில் ஆண்டு வந்ததாக சிலசாசனங்களினால் தெரியவருகிறது.

கி. பி. 1420 வருஷம் அலங்காரகஜபதி, இராஜ வெங்கட ரெட்டியை ஜயித்து கி. பி. 1421 வருஷம் வரையில் ஆண்டுவர; ஆனகுந்தி விஜயநகர ஸமஸ்தானத்தைச்சார்ந்த பிரதாப தேவனும், ஹரிஹரதேவனும் படை எடுத்து வந்து பிடித்து, அவர்கள் கி. பி. 1431-1454 வருஷம் முறையே முதல்வர் ஏழு வருஷங்களும், பிந்தியவர் பதினைந்து வருஷங்களும் ஆண்டார்கள்.

பிறகு மறுபடியும் பழயகஜபதிராஜுர்களுடைய பழயவார்சாகிய கபிலேசுவர கஜபதி கி. பி. 1454 வருஷம் சிங்காசனத்தைப் பெற்று கி. பி. 1461-வருஷம் 27 வருஷங்கள் ஆண்டான்.

அந்தகபிலேசுவரகஜபதியின் வம்சாவளி.

கபிலேசுவர கஜபதிராஜன் கி. பி. 1454-1461-27 வருஷம்.

ஸ்ரீவீரபிரதாப புருஷோத்தமகஜபதிராஜன் கி. பி. 1461-1496 35 வருஷம் ஆண்டு ச-1411 கீளகவருஷம் கொண்டவிடு குடிகளின் வரியைநீக்கினான்.

பிரதாபருத்திரகஜபதி கி. பி. 1496-1497 ஒருவருஷம்.

வீரபத்திரகஜபதி கி. பி. 1497-1515-18 வருஷம்ஆண்டான்.

அந்த வீரபத்திரகஜபதியைவி ஜயநகர கிருஷ்ணதேவ்ராயலு கி. பி. 1515 வருஷம் உதயகிரி வழியாகபோய் ஜயித்து அந்த கஜபதியின் குமாரத்தியை விவாஹம் செய்துக்கொண்டதன்றியில், சாலவதிம்மாசின் அண்ணன் குமாரனாகிய நடிண்டிலகோபமந்திரியை கொண்டவிடுக்குத்தலைவனாக்கியும் ஒரு கோயிலைக் கட்டிவைத்தான். அந்தக்கட்டிடத்தில் பதிக்கப்படிருக்கும் சாசனத்தில் ச-1443 (கி. பி. 1521 வருஷம்) மேல்கண்ட சங்கதிகள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

பிறகு அச்சுத தேவரார்யலு படைஎடுத்துப் போனதைப் பற்றி பிரஸ்தாபித்திருக்கிற தன்றியில், இராமய்ய பாஸ்கருடு என்னும் மந்திரியும் கொண்டுவிடுவிலிருந்து 72 ரெட்டித்தலைவர்களைக் கொல்லவைத்து, கோட்டையைப்

பிடித்தான். பிறகு விஜயநகர சதாசிவராயலு காலத்தில் கந்தனூலி இராமராஜனுடைய பேரனும், மூர்த்திராஜனுடைய குமாரனாகிய விட்டலதேவனுடைய சுவாதீனத்தில் கொண்ட விடு கோட்டை இருந்தது. மேலும் விஜயநகர திருமலைதேவராயலு பெரியசேனையைத்திரட்டி மகமதியரை யோட்டி தனது குமாரன் இரங்கராஜயதேவனை கொண்டவிடுக்கு அரசனாக்கினான். அநந்தரம் திருமலைதேவராயலு 1574 வருஷத்திலும், ஸ்ரீரங்கதேவராயலு காலத்தில் கோலகுண்டா இபிராஹீம் குதப் சாயிபு இராமராவ் என்னும் மஹாராஷ்டிர பிராமண்ணன் மூலியமாகப் படையை அனுப்ப அந்தராயன் பாலநாடு சர்னூல், நெல்லூர்க்கடுத்த நாடுகளைப் பிடித்துக் கொண்டு கடைசியில் கொண்ட விடுவையும் தாக்கிப் பிடித்தான். அத்தோடு கொண்டவிடுவின் மகிமை மங்கலடைந்தது.

வேமன பத்தியங்கள் என்னும் வேதாந்த தெலுங்கு பத்தியங்களைப்பாடிய வேமனர் அந்த கொண்டவிடு நாட்டில் பிறந்து அக்கவிகளைப்பாடினார்.

ஏழாவது அத்தியாயம்.

விஜயநகர ஸமஸ்தான நரபதி ஆந்திரராயர்கள்.

சந்திரவமிச ஆந்தரர்களில் மற்றொரு சந்ததியாராகிய விஜயநகர ஸமஸ்தானம் நரபதிகளும் சந்தரவமிசக்ஷத்திரியராகிய பாண்டவருடைய நேரான சந்ததிகளென்று புராண இதிகாசங்களினாலும், பாரிஜாதா பஹரணம், மநுசரித்திரம், கிருஷ்ணராஜ விஜயமு, பாண்டுரங்க விஜயமு, பிரவுட பிரயந்தகவி சரித்திரம், பாலபாகவதம், நரச பூபாலியம், நரபதி விஜயம், வசு சரித்திரம், முதலான கவிரத்னங்களுடைய கிரந்தங்களினாலும், ஜேம்ஸ் பிரின்சிபு (James Prinsep) கர்னல் மெக்கன்சி (Col Mackanzie C. S. Survayor General of India) இராபர்டு சுவேல் (Robert Sewell. M. C. S.) முதலானவர்கள் எழுதிப் பதிப்பித்த சிலா செப்பேடு சாசன சரித்திரங்களினாலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அந்த உண்மையை ஸ்தாபிக்க வடநாடுகளில் மேஸ்டர் பிரின்சிப்பவர்களுக்கு அகப்பட்ட சாசனத்தின் நகலை இதனடியில் பதிப்பிக்கின்றனம்.

Table-X i V i-Rajas of Vijianagar.

From history, inscriptions, and family genealogy (See As. Res Vol × ×) The later authority, in the usual maner, deduce a direct line from *Pandu* of the *lunar dynasty*, imperfectly following the Puranic lists to *Chandrabiga*, the last of the Magadha rajas to whom succeeds : —

A. D.

,, Maru

,, Nanda

,, Bhutanandi

,, Nandali, who has two sons Seshunandi and Yesanandi, whose fourteen sons ruling over Bylendish, are disposed by two invaders Amitra and Durmitra, and seven fled to Andharadesa or Telungaa, where A. D.

1034. Nanda Maharaja erected a kingdom and founded Nandapur and Warangal.

1076. Chalika Raja.
1118. Vejia raja founder of Vijianagar,
1158. Vimal Rao.
1182. Narasimha Deva.
1249. Rama Deva.
1274. Bhoja Raya died without issue
1334 Bukka, Son of a neighbouring Raja raised to the throne of the Dakhan by Vidyaranya his Guru
1367. Harihara Rao
1391, Deva Rao
1414. Vijia Rao
1424. Pundara Deva Rao deposed by Sri Rang Raja of Kalian-Drug
1450. Ramachandra Row Son of Sri Ranga
1473. Narasimha Rao
1490. Vira Narasimha Raja
Achutha Row
1524. Kristna Deva; extended his sway to Gugerat &c
Rama Raja killed in invasion of Nizam Shab

And Imudul Mulk
1565. Sri Ranga Raja
Tirumala Raja
Viravengatapaty
Sre Ranga II
Rama Dvea Row
Venketapaty Rao
Tirumalu Row
Rama Deva Row
Sri Ranga Row
Venkatapaty; invaded by the Moghuls and fled to Chundrageri Rama Rao, recovered a portion of theterritory
1693. Haridoss
1704. Checka Doss his brother.
1721. Chinna Doss Gopal Rao Son of Chinnu Doss
1741. Venkata Paty Rao
Tirumala Rao Sultan khan took the country in the name of Tipu; and with Vira Venketapathy Rama Raja the dynasty became extint A. D. 1129

See Page 281. Vol II Essays on Indian Antiquities by James Prinsep and Useful Tables by Edward Thomas. M A

இந்த சாசனத்தின் கருத்து.

விஜயநகர இராஜர்கள்.

சரித்திரத்திலும், செப்பேடு முதலான சாசனங்களிலும், (ஆசியாடிக்கு சோதன கிரந்தம் சரித்திர புத்தகத்தில் கண்ட) குடும்பவம்சாவளியிலும் (விஜயநகர ராயர்கள்) சந்திர வமிசத்தைச்சார்ந்த பாண்டுமெஹாராஜனுடைய நேரான சந்ததிகள்.

புராணரீதயாகப் பரிக்ஷிக்கையில் அவர்கள் மகதராஜாதிபாதியாகிய சந்திரபீஜராஜனுக்குப் பிறகு செங்கோல் செலுத்தியவர்கள்:—அவர்களில்.

மாருதி ராஜன்.

நந்த ராஜன்.

பூதநந்தி.

நந்திலி-அவனுக்கு சேஷநந்தி, ஈசநந்தி என்ற இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் பைலாண்டிஸ் நாட்டிலாண்டுவரச்சே அமிர்தன், துர்மிதன் என்ற இரண்டு மன்னர்கள் படை எடுத்து வந்துதாக்க, அப்போது எழு ஆந்திரர்கள் தெலுங்கானம் என்னும் ஆந்திர தேசத்திற்வந்து ஆண்டார்கள் அவர்களில்.

கி—பி.
1034 ஸம்நந்தமஹாராஜன்-அங்கு நந்தாபுரத்தையும், ஓரங்கல் ஸமஸ்தானத்தையும் ஸ்தாபித்தான்

1076—சாலிகராஜன்
1118—விஜயராஜன், விஜயநகரத்தை ஸ்தாபித்தான்
1158—விமலராயலு
1182—நரசிம்மதேவராயலு
1249—இராமதேவராயலு
1274—பூபராயலு சந்ததியற்றவன்
1334—புக்கராயலு அயல்நாட்டரசருடைய குமாரன், அவன்குரு வித்தியாரணியரால் தக்ஷணநாட்டிற்கு அரசனாக நியமிக்கப்பட்டான்
1367—ஹரிஹரராயலு
1391—தேவராயலு
1414—விஜயராயலு
1424—புண்டரதேவராயலு, கலியாண நகரத்திலிருந்த ஸ்ரீரங்கராயலால் நீக்கப்பட்டான்
1450—ஸ்ரீராமசந்திரராயலு ஸ்ரீரங்கருடைய குமாரன்
1473—நரசிம்ம தேவராயலு
1490—வீரநரசிம்மராயலு

அச்சுததேவராயலு

1524, கிருஷ்ணதேவராயலு குஜராது வரையில் சமஸ்தானத்தை பரவச் செய்தான்

இராமராஜா நைஜாம்ஷா இமிட்டிலும் ராவல் கொல்லப்பட்டான் 1595-ஸ்ரீரங்கராஜு திருமலராஜா, வீரவெங்கடபதி-ஸ்ரீரங்கன் 2-வது இராமதேவராயலு, வெங்கடபதிராயலு, திருமலராயலு, இராமதேவராயலு, ஸ்ரீரங்கராயலு-வெங்கடபதி அவர்காலத்தில் மோகலர் படைத்துவர சந்தரிக்கேகினர் இராமராயலு, இழந்த சமஸ்தானத்துல் பாகுயைப்பெற்று ஆண்டார்.

1693—ஹரிதாசன்
1704—சிக்கதாசன்
1721—சின்னதாசன்
1734—அராமராயலு
1741—வெங்கடபதி
1756—திருமலைராயலு-அவன் காலத்தில் தான் சுல்தான்கான் திப்புவின் பெயரால் தேசத்தைப் பிடிக்க 1829ஆம் வீரவெங்கடபதி ராமராயலுகாலத்தில் சமஸ்தானமழிந்தது.

ஜேமஸ் பிரின்சிப்பவர்களுடைய இந்தியபுராதன சரித்திரம் எட்வார் தாமஸவர்களுடைய வமிசாவளி புத்தகம் 281-பக்கம் பார்க்கவும்.

விஜயநகரத்திலாண்ட ஆந்திர நரபதிகள் சிங்காசனம் ஏறிய காலத்தைப்பற்றி, 1630ஸூம் சர்வேஜனரல் கர்னல் மெக்கன் ஜிக்கு அகப்பட்ட சாசனத்தின்படி விவரம்.

	விஜயநகர அரசர்களுடைய பெயர்கள்	சாலிவாகன் சகாப்தம்	கிறுஸ்து சகாப்தம்	ஆண்ட காலம் ஸூ	மீ	ந
1	நரபதி ராமதேவ ராயலு	தெரி	யவில்லை			...
2	ஹரிஹர ராயலு-தாதுஸூ வைகாசி-2ம்	1258	1336	14	...	...
3	புக்கதேவராயலு	1272	1350	29	8	...
4	ஹரி ஹர ராயலு (2-வது)	1301	1379	22	...	...
5	விஜயபுக்கராயலு (2வது)	1323	1401	17	...	...
6	வல்லபுக்க அல்லது தேவராயலு	1340	1418	16	...	...
7	குண்டதேவராயலு	1356	1434	20	...	...
8	இராஜசேகர ராயலு	1376	1454	—	9	...
9	விஜயராயலு	1376	1455	—	10	...
10	பிரவுட பிரதாபராயலு	1378	1456	21	...	...
11	வீர ராயலு-	1399	1477	4	...	...
12	மல்லிகார்ஜுன ராயலு	1403	1481	6	...	...
13	இராமசந்திர ராயலு	1409	1487	1	...	...
14	விருபாக்ஷி ராயலு	1410	1488	2	...	...
15	திம்மராயலு-காலம் தெரியவில்லை-	—	—	—		...
16	ஈசுவர ராயலு- ஷை	—	—	—		...
17	நரசிம்மதேவராயலு	1412	1490	5	..	...
18	வீர நரசிம்மராயலு	1426	1504	13	...	...
19	கிருஷ்ணதேவராயலு இரக்தாக்ஷிஸூ வைகாசிமீ சுக்லபக்ஷம்	1430	1509	21	...	...
20	அச்சுதவேராயலு-விக்கிருதி வருஷம்	1462	1530	12	...	...
21	சாலுகதிம்ம ராயலு, சோபகிருது ஜேஷ்ட (ஷை அச்சுதர் குமாரன் வெங்கடாதிரி மைனராக இருந்ததினால்)	1464	1542	22	...	...
22	சதாசிவ ராயலு 5ஸூ கலகம். இராமராஜன்	1486	1564	—	...	...
23	திருமலேராயலு - பிரமோதூதஸூ (பெனு கோணடாவில்	1451	1569	—	11	...
24	ஸ்ரீரங்கராயலு-ஆங்கிரச வைகாசி 10 தேதி	1494	1572	14	...	...
25	வெங்கடபதிராயலு-பரிதாபிஸூ மாசம் 10	1507	1585	28	8	15
26	சிக்க தேவராயலு	1536	1614	—	4	...
27	இராமதேவராயலு-	1552	1630	15	4	...
28	ஸ்ரீரங்க தேவராயலு-	—	1659	—	—	...

பிறகு அகப்பட்ட மற்றோர் சாசனத்தின்படி.

கிறிஸ்து சகாப்தம்.

1	ஸ்ரீரங்க தேவராயலு	1665	1678
2	வெங்கடபதிராயலு	1678	1680
3	ஸ்ரீரங்கராயலு	1692	
4	வெங்கடராயலு	1706	
5	ஸ்ரீரங்க தேவராயலு	1716	
6	மஹாதேவராயலு	1724	
7	ஸ்ரீரங்கராயலு	1729	
8	வெங்கடபதிராயலு	1732	
9	இராம ராயலு	1739	
10	வெங்கடபதி ராயலு	1744	
11	ஷை ஷை	1791	1793
12	திருமலைராயலு	1801	1824
13	வீர வெங்கடபதி ராயலு	1831	
14	திருமலை தேவராயலு	1866	
15	வெங்கடராம ராயலு	1870	
16	நரசிம்மதேவ ராயலு	1871	
	இப்போதிருப்பவர் ஸ்ரீரங்கதேவராயலு ராவ் சாஹிபு பின்சன்தாரர்		

(மேஸ்டர் ஜேம்ஸ் பிரின்சிப்புக்கு அகப்பட்ட சாசனங்களின்படி)

விஜயநகர நரபதிகளின் வம்சாவளி.

1 மாருதிமஹாராஜன் (மகதநாட்டிலாண்டவன்)
2 நந்தமஹாராஜன்-அர்ஜுனனுக்கு 83ம் சந்ததி
3 பூதநந்தன்
4 நந்தலிராஜன் (மகதநாட்டு அரசன்)
5 யாசநந்திராஜன்
6 பூதநந்தி-14 குமாரர்கள் (பயிலாநந்தமரசர்கள்)
7 நந்தமஹாராஜன் (கி-பி-1034௵ம்) நந்தபுரம் ஓரங்கல்லுக்கு அரசன்
8 9ம் சந்ததி சாலுக்கியன் (கி-பி- 1076௵
9 விஜ்ஜலன் அல்லது 2வது விஜயன் கி-பி-1118 ௵ம்-, (ஆணைகுந்தி விஜயநகரம் ஸ்தாபித்தவன்)
10 விமலராயலு விட்டலராயலு (கி-பி-1158௵ம்)

11 நரசிம்மதேவராயலு(1182ரு)
12 இராமதேவராயலு-(1249ரு)
13 பூபராயலு-(கி-பி-1274ரு) புக்கன், ஹரிஹரன்மந்திரி பிரதானிகள்
14 புக்கராயலு (துளுவநாட்டிற்குக் கொண்டுபோய் வளர்த்தவன்)
15 திம்மராயலு அல்லது இராமசந்திரராயலு 1450ரு
16 நரசிம்மராயலு
17 ஈசுவரராயலு-1473ரு
18 பிரவுடதேவராயலு
19 வீரநரசிம்மராயலு 1490ரு
20 அச்சுதராயலு
21 கிருஷ்ணதேவராயலு 1524
22 ஸ்ரீரங்கராயலு 1565

மற்றபெயர்களை மேஸ்டர் பிரின்சிப் நாமாவளி X I V I பார்க்க.

(மேஸ்டர் இராபர்டுசுவேல் அவர்களுக்கு முதலில் கிடைத்தசாசனத்தின்படி)

விஜயநகரஸமஸ்தானத்தின் வம்சாவளி.

இரண்டாம்சந்ததி

1 புக்கராயலு-மங்கம்மாள் மனைவி
2 சங்கமகாராஜன்-மல்லாம்பிகா-சாரதா மனைவிகள்
3 ஹரிஹரன்-கி-பி-1336-1350
4 கம்பமஹீபதி-சங்கமா
5 புக்கராயலு-கவராம்பிகா, காமாக்ஷி 1350-1379
6 மாரப்பா
7 முத்தப்பா
8 காமிதேவிக்கு-ஹரிஹரன்-மல்லதேவி மனைவி 1379-1401
9 பாஸ்கரபூபதி
10 விருபாக்ஷி
11 பிரவுடதேவராயலு - பத்மாம்பா, - மல்லாம்பா மனைவிகள் 1406-1412

12 விஜயபூபதி-நாராயணதேவி கி-பி-1418

13 தேவராயலு 1422-1447

14 வீரமல்லன்ன

3-வது சந்ததி

1 திம்மராயலு-தேவகிமனைவி

2 ஈசுவரராயலு-புக்கம்மாள் மனைவி

3 நரசராயலு-திப்பாம்பா-நாகாம்பாமனைவிகள் 1590வரும்

4 திப்பாம்பாளால் வீரநரசிம்மராயலு 1509வரு [தேவி நாகாம்பாள் வயற்றில் கிருஷ்ணதேவராயலு-சின்னதேவி-திருமலை (ஓரிசா) மனைவிகள் 1509-1530வரும்

மற்றொருசாசனத்தின்படி 3-வது சந்ததி

1 இராமராஜா-இலக்ஷிமியாம்பிகாள்மனைவி

2 ஸ்ரீரங்கதேவராயலு-திருமலைதேவி மனைவி

3 இராமராஜன் - சதாசிவனுக்குபிந்தி கிருஷ்ணதேவராயலு குமாரத்தி மனைவி-தலிகோட்டையில்மரணம் 1564

4 திருமலராயலு 1564-1574 வெங்கலாம்பா, பத்மாம்பாள் கிருஷ்ணும்பாள், இராகவாம்பாள் - மனைவிகள் ஸமஸ்தானத்தை 1567 பெனுகொண்டாவுக்கு கொண்டு போனான்

5 வெங்கடாத்திரி

மற்றொருசாசனத்தின்படி.

1 இராமராஜா

2 திருமலராயலு

3 கிருஷ்ணராஜா

4 திருமலராஜா-ஆனைகுந்தியை ஆண்டான்

5 ஸ்ரீரங்கராயலு-திருமலதேவி-கதம்பா 1574-1585 குமாரத்தியை ஜகதேவராயலு மணம் செய்தார்

6 திருமலைதேவன்

7 வெங்கடபதி 1585-1614 இராஜியத்தை பெனுகொண்டாவிலிருந்து சந்திரகிரிக்கு மாற்றினான்

அந்தவெங்கடபதிக்குப் பிறகுவந்தவர்கள்.

ஸ்ரீரங்கராயலு	கி. பி. 1619	வெங்கடபதி	1678-1680
இராமராயலு	1622	ஸ்ரீரங்கராயலு	1692
ஸ்ரீரங்கராயலு	1623	வெங்கடபதி	1706ஷு
வெங்கடராயலு	1623	ஸ்ரீரங்கராயலு	1724
இராமராயலு	1629	மஹாதேவராயலு	1729
வெங்கடபதி	1636	ஸ்ரீரங்கராயலு	1732
ஸ்ரீரங்கர்	1665	வெங்கடபதி	1736
பிறகு		இராமராயலு	1739
ஸ்ரீரங்கராயலு	1665-1678	வெங்கடபதி	1791-1793

4-ம் சந்ததி

1 திருமலைராஜா-1801-ிஜாம்ஷா, பின்சன்கொடுத்தார்
2 ஒருகுமாரன்
3 ஒருகுமாரத்தி
4 வீரவெங்கடபதிராயலு-1831ல் இறந்தான்
5 திருமலைதேவன்
6 இலக்ஷிமீதேவியம்மாள்-நரசிம்மராயலுமனைவி
7 வெங்கடராமராயலு-ஸ்ரீரங்கம்மாள் மனைவி 1871 இறந்தார்
8 கிருஷ்ணதேவராயலு-குப்பம்மா இராஜ்ஜியம் 1872 இறந்தா[ர்
9 வெங்கய்யா
10 ஒரு குமார்த்தி
11 ஒரு குமார்த்தி
12 நரசிம்மராயலு 1870 பிறந்தார்

இந்தியன் ஆர்கியாலோஜிகல் சர்வே புத்தகம்-2-வது வாலியம் 243-253 பக்கங்களில் பார்க்க.

நரபதிகளுடைய ஆதிசரித்திரம்.

நரபதிகளுடைய ஆதிசரித்திரம் திட்டமாகக்கிட்ட வில்லை-சென்னை சர்வகலாசாலை ஸமஸ்கிருத ஆந்தரபாஷா பண்டிதர், டாக்டர் ஆப்பர்ட் (Dr. Gustow Oppert, P. H. Dr. Professor of Sanskrit Presidency College Madras, Telugu Translator to Govt, Curator Govt Oriental Mss Library &c) அவர்கள் 1881ஷும் எழுதிப்பதிப்பித்த (The History

of S. India) தென்னிந்திய சரித்திரப்புத்தகம் 24 முதல் 73 பக்கங்கள் வரையில் நரபதிகளைப்பற்றி தமக்குக்கிடைத்த கிரந்த சிலாசனங்களைப்பரிக்ஷித்து அடியில்கண்டபடி எழுதிஇருக்கிறார்-அதாவது—நரபதிகளிற் சிறந்த திருமலை ராஜநுக்கு அங்கிதமாக பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பாலபாகவதம் என்னும் தெலுங்கு கிரந்தம் இயற்றப்பட்டதாம். அதை அந்த ஸமஸ்தானத்தில் அப்போது பிரதான மந்திரியாக இருந்த நாகையநுடைய குமாரரும், அந்த நரபதிகளுடைய ஆதிஉற்பத்தி முதலான விவரங்களை சர்கார் ரிகாட்டுகளினுலும், அக்கால தேசவர்த்தமானங்களினுலும் தெள்ளத்தெரிந்தவராயும் சிறந்த ஸமஸ்கிருத தெலுங்கு வித்துவாம்சராயும் இருந்த கோனேரிநாதர் இயற்றியதாம். அந்தப்பால பாகவதத்தின் முகவுரையில் தமது பாட்டுடைத் தலைவருடைய பிரதபத்தையும், அவருடைய ஆதிசந்ததி சரித்திரங்களையும் விவரமாகக்காட்டி இருக்கிறார். அந்த விவரத்தை இராமபூஷணர் இயற்றிய வசுசரித்திரம், சாரதாமூர்த்தி இயற்றிய நரசபூபாலீயம், நரபதிவீஜயம், இராமராஜியம் முதலான கிரந்தங்களில்கண்ட நரபதிகளுடைய சரத்திரங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கையில்; அந்த பாலபாகவத்த்திற்கண்ட சங்கதகளும் சரியாக இருப்பதோடு, தேவனஹள்ளியில் கிடைத்த சிலாசாசனத்திற்கண்ட சங்கதிகளுக்கும் சரியாக இருக்கின்றனவாம்.

அந்த விவரமாவது.

நரபதிகள், பூர்வசந்திரவமிச பாண்டவரில் ஒருவராகிய அர்ஜுனனுடைய நேரான சந்ததிகளென்றும், அந்த அர்ஜுனனுடைய 83வது சந்ததியாகிய நந்த ராஜனுக்கு ஒன்பதாவது சந்ததி சாலுகியன் பிறந்தானென்றும், அந்த சாலுகியனுடைய சந்ததியில் கலிபாணபுரத்தையாண்ட விஜ்ஜலன், அல்லது பிஜ்ஜலன், அல்லது விஜபன் பிறந்தானென்றும், பாலபாகவதத்திற் செப்பி இருப்பதைப்போலவே, நரபதி விஜபத்திலும் தேவனஹல்லி சாசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

அந்த விஜ்ஜலன் அல்லது விஜயராஜனுக்கு யுவராஜனுண்டாகி அவனுக்கு ஹெம்மலராஜனும், அவனுக்கு தாதபின்னராஜனும் பிறந்ததாகவும்; அந்தத் தாதபின்னராஜன்தான் நரபதிகளுக்கு தலைவனென்றும் பாலபாகவதம், வசுசரித்திரம், நரசபூபாலியத்திற் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

அந்தத் தாதபின்னமராஜனுக்கு "மன்னுடுலி" என்று பெயர். அந்ததாதபின்னமராஜனுக்கு சோமதேவன் என்னும் குமாரன் பிறந்து பஹுபராகிரமசாலியாகி 60000 சேனைகளை உடையவனுகஇருந்தானும. அவன் ஆர்வீட்டு என்னும் இடத்திலிருந்து ஆண்டு, கொண்டனவலி, இராயசூர், சாதனிகோட்டை, யாதவகிரி, காலபகோலு, முசலிமடுகு, கங்களினிகொண்ட என்று ஏழுகோட்டைகளையும் பிடித்தாண்டானும். அவனுக்கு பாரமல்லன் அல்லது விபாலன் என்றப்பட்டப் பெயர் வழங்கிவந்ததாம்.

அவனுடைய குமாரன் இராகவராஜன் ஆண்டபிறகு, அவன் குமாரன் பின்னமராஜன் அல்லது பின்னசவுரி பட்டத்துக்கு வந்தானும். அவனுக்குச் சாலுவ நரசிங்கராயலு பிரதம மந்திரியாக இருந்தானும். அந்த பின்னமராஜனு க்குப் பிறகு அவன் குமாரன் புக்கராஜன் பட்டத்துக்கு வந்தானும். அவன் ஆரு விடுவில்வந்து குடியிருந்தபடியால் அவனுக்கு ஆர்வீட்டு புக்கராஜன் என்று பெயர் வழங்கிவந்ததாம். அவனுக்கு அபலாதேவி, பல்லாதேவி என்ற இரண் டுமனைவிகள் இருந்தார்களாம். அவர்களில் அபிலதேவி வயற்றில் சிங்கராஜ னும், பல்லதேவி வயற்றில் இராமராஜனும் பிறந்தார்களாம். அவர்களில் இளை யகுமாரனுன இராமராஜன் கண்டனவலியில் சண்டைசெய்து கலியாணபுரத் தைப்பிடித்து ஆண்டதன்றியில், அதவேனியை அடுத்த காகதேசத்தையும் ஜயித்தானும். கோனேரிநாதர் கணக்கின்படி அந்த அரசனிடம் அப்போதிருந்த சேனையின் பலம்70000 பதாதிகளாம்.

இராமராஜாவின் மனைவி இலக்கம்பாள் வயற்றில் திம்மராஜன், கோண் டசவுரி, ஸ்ரீரங்கராஜன் என்ற மூன்றுமக்கள் பிறந்து, அவர்களில் கடைசி மகனுன ஸ்ரீரங்கராஜன் கலியாணபுரத்தின் பட்டத்தை அடைந்தானும். அவ னுடைய மனைவிதிம்மாம்பாளாம். அவன் நைஜாமின் கொட்டத்தை அடக்கியும் காஞ்சிபுரத்தைப்பிடித்தும், கர்னுடக தேசம் முழுவதையும் சுவாதீனமாக்கிக் கொண்டானும். அந்த ஸ்ரீரங்கனுடைய அண்ணன் திம்மராஜன் ஆர்விடுவில் குடியிருந்தான். அவனுக்கு மன்னிபுலி அதாவது காட்டுப்புலி என்று பட்டப் பெயர்வழங்கிவந்ததாம். அவன் குத்தி, பெனுகொண்ட, தூர்கி, கண்டிகோட்ட, கொண்டவைலி,அடோவனி முதலானகோட்டைகளைப் பிடித்தானும். அவனை அவன் அண்ணன்மகன் இராமராஜ கொன்றதாக ஒரு சரித்திரத்தால் தெரிய வருகிறதாம்,

அந்த திம்மராஜனுக்கு திருமலைராஜா, விடலேசன், சின்னதிம்மாராஜன், பாபதிம்மராஜன் என்னும் நான்கு குமாரர்கள் பிறந்து, அவர்களில் மூத்தவனு கிய திருமலைராஜன் பிரதாபசாலியாகி "சாலுகியநாராயுணன்" என்றப்பட்டத் தைவகித்தானும், அவனுடைய சமுகவித்துவனுகிய கோனேரிநாதகவி பிரகாசி த்து,பாலபாகவதத்தை இயற்றினுராம். அந்தப்பாகவதத்தில் தான்மேல்கண்ட சங்கதிகள்யாவும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவாம். கடைசிகுமார னுகிய விடலேசன் அதிகபிரதாபசாலியாகி மன்னிபுலி, மன்னவிபாலான் முதி பிருதுகளைப்பெற்றும் மால்வநாடு, சாகநாடு முதலானதுகளைப் பிடித்தும் கடைசியில் நேபாளதேசத்தையும் ஜயித்துப் பிடித்தானும்.

அப்படிக்கெல்லாம் இருந்தும், அவனுடைய அண்ணன் குமாரனுகிய இராமராஜன் ஆயுசுவரையில் நரபதி என்றப்பட்டத்தை வகித்துவந்தானும் அவன் தந்தையாகிய ஸ்ரீரங்கராஜனுடைய மனைவி திம்மாம்பாள் வயற்றிற் பிறந்தவன். அவனுக்கு கோனராஜன், திம்மராஜன், திருமலைராஜன், வெங்கட ராஜன் என்ற சகோதிரர்களும், இலக்ஷுமாம்பா என்ற சகோதரியும் இருந்

தாளாம். அந்த இலக்ஷுமாம்பாளை சூரியவமிசத்தைச்சார்ந்த கலி கலகோல விபுடுவின் ஐந்தாம் சந்ததியாகிய அவுபலராஜனுக்கு விவாஹம்செய்து கொடுக்கப்பட்டாளாம்.

அந்த அவுபலராஜனுக்கு நரசராஜன் பிறந்தானாம். அந்த நரசராஜனுக்கு தான் சாரதா மூர்த்தி என்னும் பட்டுமூர்த்தி நரசபூபாலியம் என்னும் கிரந்தத்தைப்பாடி அங்கிதம் செய்வித்தாராம். மேலே சொன்ன இராமராஜன், விஜயநகரத்திலாண்டான். அவன் மனைவி கிருஷ்ணதேவனுடைய குமாரத்தியாம். சதாசிவராஜன் அவனுடைய மந்திரியாகஇருந்த தன்றியில், திருமலைராஜ-வெங்கடராஜன் என்ற இரண்டு சகோதிரர்களும் அவனுக்கு உதவிசெய்துவந்தார்களாம். அவர்கள் உதவியினால் அந்த நரசராஜா பாரிடாவிலுள்ள அதில் கானையோட்டி பீமரதம் என்னும் இடத்தில் பிடித்தார்களாம்,

நரசபூபாலியத்தின்படி கர்னாடகதேசமுழுதும் இராமராஜாவின் சுவாதீனப்பட்டிருந்த தன்றியில், குடுயிப்உல்முல்குடன் சண்டை செய்து ஜயித்தும், நைஜாமை ஜயித்தும், ரெயிசூருக்கு கப்பம் கட்டும்படிசெய்தான். நரபதி விஜயத்தின்படி புடல்கான், அடில்கான், அயின் அலிமுல்கு, உல்லிகான் முதலானவர்களை ஜயித்தான் என்பது ரெய்சூரிலகப்பட்ட சாசனங்களினாலும் ஸ்தாபிதமாகிறதாகவும் எழுதிஇருக்கிறார்.

* "The origin of the Narapatees is in all the four works (Balabagavatham, Vasacharitram, Narasabapeliam,and Narapathy Vigiam) and in Devanhalli inscrption traced back to Arjuna and thencc to Candra The Narapaties are more over styled Chalukyas. According to the Narapativijiam and to the Devanahalli incription *Nandaraja* is the eighty third (83rd) descendent of the Pandava Arjuna, and Chlukya the ninth descendent Nanda. From Calukya descended incourse of time the well known Vijala or Bijjala of Kalyana. This Vijala, who belonged to the family of the Kalasurayaes, though he usurped the throne of tho Calukyas of Kalyana, he himself called Calukya Narayana; he is also known as Vinga Tribavana Malla -Vijala's power increased rapidly untill he came to an untimely end by the machinations of the fameus *Basava*, the founder of the *Lingamates*,

Vijjala had raised this Basuva from an insignificant position to the post of Prime minister and commander-in-chief through the influance of the beautiful *Padmavati*, the sister of Basuva, to whose charms Vijjala had succumbed and whom he had married. ¦ Vajadeva malla, Mallaya and Bommanna are mentioned in the *Cenna Basava Purana* as the actual murderers of Vijjala.

The son of Vijala generally known as the Yuvarajha was, according to the Narapaty Vijiam the father of *Hemmaliraja*, who in his turn became the father of *Tatapinnaraja*, who in the Balabagavatham Vasucartram and Narasabupoliyam heads the lsit of the *Narapaty Dynasty*.

The Narapaties are therefore, according to the Narapaty Vijiam, the representatives of Vijala and like him they are repeatedly called Calukyas * * *' *Tatapinamaraja* of the founder the *Narapaty* dynasty, who was also called Manvapuly was succeeded by his son Somadeva who seems to have been a very powerful prince in his time &c. Pages 25 to 27 Inscription. History in the Southern India by Dr. G. *Oppert*.

மேஸ்டர் ஜேம்ஸ் பிரினிசிபு முதலான சாஸ்திரிகளுக்கு அகப்பட்ட சாசனங்களின்படி.

விஜயநகர நரபதிகளுடைய அதிசரித்திர சங்கிரகம்.

மகத தேசத்தை ஆண்ட ஆந்திரர்களில் மாநதிஇராஜனுக்கு நந்தன், பூத நந்தன் என்னும் இரண்டு குமாரர்கள் பிறந்து, இராஜிய பரிபாலனம செய்து வருகையில்; மூத்தவனாகிய நந்தனுக்கு, நந்தலி என்பவன் பிறந்து, தக்க காலம் வாய்த்தபோது பட்டத்துக்குவந்து மகதநாட்டை பிரபலமாக ஆண்டு வந்தான்.

அந்த நந்தனுக்கு, சேஷநந்தி, யாசநந்தி என்னும் இரண்டு குமாரர்கள் பிறந்து, அவருக்கு பதினான்கு (14) குமாரர்கள் பிறந்து மகத நாட்டிற்கடுத்த பயிலாந்த தேசத்தில் அரசுபுரிந்து வருங்காலத்தில், அமிர்தன், துர்மித்திரன் என்னும் இரண்டு அபலரசர்கள் கிளம்பிவந்து, அந்த 14 பெயர்களைத் துரத்தித்தாக்க; அவர்களில், ஏழு பெயர்கள் அந்த மகத நாட்டை விட்டு தெற்கேவந்து தெலுங்காணாவில் ஆந்திர ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தார்கள், அப்படி ஸ்தாபித்தவர்களில் (கி-பி. 1034 ௵)

நந்தாமஹாராஜன், நந்தாபுரத்தையும், ஓரங்கல்லையும் கட்டி ஆண்டு வந்தான்-(கி-பி 1076 ௵) அந்த நந்த மஹாராஜனுடைய சந்ததிகளில் ஒருவனாகிய, சாலுகியன் பட்டத்துக்கு வந்து பிரபலனாகி ஆண்டான்.

அநந்தரம் (கி-பி 1118 ௵) அந்த நந்தமஹாராஜனுடைய சந்ததிகளில் மற்றொரு ஆந்திரனாகிய விஜ்ஜலன் அல்லது விஜயராஜன் பின்னும் சற்று

த்தெற்சே துங்கபத்திரா நதிக்கரையோரத்திலிருந்த ஆனைகுந்தி தக்க இடம் எனத்தோன்றியபடியால்; அங்கு தனது பெயரால் **விஜயநகரம்** என்னும் நகரத்தைக்கட்டி ஸமஸ்தானத்தை ஸ்தாபித்து ஆண்டுவர; (கி-பி 1158ஹூம்) அவன் குமாரன் விமலராவ் பட்டத்துக்கு வந்தான்—பிறகு (கி-பி1182ஹூம்) அவன் குமாரன் நரசிம்மதேவராயனும் (கி-பி 1249ஹூம்) இராமதேவராயனும், (கி-பி 1274வருஷம்) **பூபராயலும்** முறையே பட்டத்துக்கு வந்து பிரபலமாக ஆண்டார்கள்.

அந்த **பூபராயலுக்கு**, **புக்கனும்**, ஹரிஹரனும் மந்திரி பிரதானிகளாக இருந்து பிரகாசித்தார்கள். அந்த புக்கனும் ஹரிஹரனும் சந்திரவமிசயாதவராகிய சங்க மஹாராஜருடைய குமாரர்கள்- அவர்கள் முதலில் ஒரங்கல் பிரதாபருத்திரனிடம் மந்திரி பிரதானிகளாக இருந்தார்கள்; அந்தராஜியம் மகமதியரால் பிடிப்பட்ட பொழுது, அதை விட்டுத் தெற்கேவந்து விஜயநகர பூபதி ராயலிடம் வேலைக்கமைந்தார்கள். (Vide Pages 278-279 Genealogical Tables by James Prinsep.)

அந்த பூபராயலு-புக்கன், ஹரிஹரனுடைய சகாயத்தைக்கொண்டு, சத்தியத்தை நாட்டி தருமராஜிய பரிபாலனஞ்செய்து வருங்காலத்தில்; டில்லிப் பட்டணத்துக் கதிபதியாகிய **மகமதுடோக்லாது** எழுந்து சுற்றுப்பக்கத்து குறுநில பெருநில மன்னர்களைத் தாக்கி ஜயித்தும்; தான்சைக்கிரவர்த்தி என்று கொண்டாடும்படி கொடுங்கோல் செய்யச்சே, கில்ஜிவமிசத்தைச்சார்ந்த **அலாவுதீன்** என்பவன், கூர்ஜஜரம் முதலான நாடுகளைத் தாக்கிப்பிடித்து கப்பம் வாங்கிக்கொண்டு குடிகளை வருத்திய தன்றியில்; கி-பி 1325வருஷம் தன் சேனைத் தலைவனான **மாலிக்காப்பூர்** (Malick Kafur) என்பவனைத் தெற்கே இராமேசவரம் வரையில்போய், இந்த ராஜர்களைத்தாக்கி ஜயித்துக் கப்பம்வாங்கி வரும்படிகட்டளை இட்டனுப்பினான்.

அந்தமல்லிக்காபூரும் அவனது சேனைகளும் அப்படியேவந்து அனேக இந்து ராஜர்களைத்தாக்கி கப்பம் வாங்கிக்கொண்டு ஆனைகுந்திக்குவர; அப்போது அங்கிருந்த நரபதி பூபராயலும், அவருடைய சேனை வீரர்களாகிய ஹரிஹரன் புக்கன் முதலானவர்களுங்கூடி மகமதியருக்குப் பயந்து கப்பங்கட்ட மாட்டோமென்றும், எதிர் நின்று சண்டைசெய்யச் சித்தமாக இருக்கிறோமென்றும் சேதி சொல்லியனுப்ப, அதற்கு அம்மஹமதியர்களும் சம்மதிக்க, இருகக்ஷிக்காரருக்கும் பிரமாத சண்டைகள் நடந்தன.

அப்போது ஹரிஹரனும் புக்கனும் சில மஹமதிய வீரர்களுடன் ஒரு மூலையில் நின்று மல்லயுத்தம் செய்துகொண்டிருக்க, இது சங்கதியையறிந்த மகமதியரில் சிலர், ஹரிஹரனும் புக்கனும் மல்லயுத்தத்தில் மகமதியரால் கொல்லப்பட்டு இறந்துவிட்டார்கள் என்று பொய்யான சங்கதியைச் சொல்ல; இந்து சேனைகள் பயந்து பல பக்கங்களில் ஓடமகமதியர் கோட்டையைச் சுற்றி வளைத்துக்கொண்டும், உள்ளே இருந்த இராயலையும்,

அவருடைய பதினொரு மக்களையும் பிடித்து வரச் சொல்லி, அவர்களுடையக் கோட்டை கொத்தளங்களை மகமதியர் தம்வசமாக்கி விடும்படிக்கும்; உயுத்த செலவுக்கு மூன்றுகோடி ரூபாய் தரும்படிக்கும், பிரதி வருஷமும் கிரமமாகக் கப்பம்கட்டி வரும்படிக்கும்; இராயனும் அவருடைய மக்களும் மகமது மதத்தை அநுஷ்டிக்கவேண்டு மென்றும், அப்படி செய்யா விட்டால் சிரச்சேதம் செய்யப்படும் என்றும் சொல்ல; பூபராயனுக் கேட்டுச் சிரித்து, மகமதிய சேனாதிபதி கேட்ட கோட்டை முதலான சொத்துக்களைச் சுவாதீனமாக்கச் சித்தமாக இருப்பதாகவும், ஆனால் தாமும் தம் மக்களும் தமது இந்து மதத்தை விட்டு, மகமது மதத்தைத் தழுவ பிராணன் உள்ள நாள் வரையில் சம்மதிக்கோமென்றும் சொல்ல; இருகக்ஷிக்காரருக்கும் வெகுநேரம் தர்க்கமாகிக் கடைசியில், பூபராயனும் தனது பிள்ளைகளும் மதவைராக்கியத்தினால் அங்கு முன்னாடி தயார் செய்திருந்த அக்கினி குண்டத்தில் "ஹரி ஹரி ராம் ராம்" என்று சொல்லிக்கொண்டு இறங்கி சுத்த வீரர்களாக சொர்க்கலோக மடைந்தார்கள். கோட்டையின் முன்வாசலில் இப்படி நடக்கவே, கோட்டையின் உள்ளே அந்தப்புரத்திலிருந்த இராஜ மஹிஷிகள் தமது நாயகர் கருத்தின்படி, முன்னடியாக தயாரசெய்திருந்த அக்கினி குண்டத்தில் குதித்து வீர சொர்க்கத்தை அடைந்தார்கள்.

அக்காலத்தில் பூபராயனுவுடைய மூன்றுவயது ஆண் குழந்தையாக இருந்தவனை, ஒரு தாதிக்கிழவி யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டுபோய், கோட்டையின் பெரிய சாக்கடைக்குள் மறைத்து வைத்திருந்தும், மகமதிய பகையாளிக்குத் தெரியாமலும், இராத்திரி காலங்களில எடுத்துக்கொண்டோடியும், கடசியாக துளவதேசத்தை (கனராவைச்) சார்ந்த ஒருமலைகாட்டில் போய் மறைத்தும், அவ்விடத்திய மலையாளிகளோடு உறவாடியும் அவர்களால் தேனும் தினைமாவும் பெற்று வளர்த்தும் வந்தாள். இது நிற்க,

கோட்டைக்குள் பிரவேசித்த மகமதியர் சேனைகள் (1334வருஷம்) அதைச் சின்னபின்னமாக இடித்தும், அதிலுள்ள விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் வாரிக்கொண்டு வெளியில் வந்தும், கோயில் கூட கோபுரங்களை எல்லாம் இடித்தும், நகர வாசிகளை நாலாவிதமாக ஹிம்சைசெய்தும், அவர்கள் வீடு வாசல்களைக் கொள்ளையடித்தும், குரூரங்கள் செய்ய; அநேகர் அந்நாட்டைவிட்டு நாலாபக்கங்களிலும் ஓடிப்போய் விட்டார்கள்.

ஆனைகுந்தி பட்டணம் அல்லோல கல்லோலமாகிவிட, இத்தியாதிகளைக் கண்டும் கேட்ட ஹரிஹரன் புக்கன் என்னும் சேனாதிபதிகள், இனி அவ்விடத்திலிருப்பதில் யாது பிரயோஜனமு மில்லையெனக் கண்டுத்தெளிந்து, ஆடுமேய்க்கும் குரும்பர்களைப்போல வேஷம் தரித்துக்கொண்டும், அநேக காடுமலைகளைத் தாண்டியும், தாங்கள் முன்னிருந்த பட்டணத்தைச் சேர்ந்தார்கள். அங்கும் மகமதியர் குடிகளை வருத்துவதைக் கண்டு, அதற்கடுத்த ஓர் பெரிய வனத்துக்குள் மறைந்து நிற்கப் போயினர். அந்த பயங்கரவனத்தில் ஓர் அழகிய ஆச்சிர

மழும், அந்த ஆச்சிரமத்துக் கருகே பரமசிவமே அவதாரமாக வந்தாற்போல ஒரு பெரியவர் புலித்தோலாசனத்திலிருந்து, அவரைச் சுற்றியிருக்கும் சீடர்களைநோக்கி இந்து மதத்தின் பெருமையையும், அதை மகமதியர் கெடுக்கும் அக்கிரமத்தையும் பற்றி அழுதகண்ணோடும், அனுதாபத்தோடும் சொல்லிக் கொண்டிருப்பதைக் கண்டும் கேட்டும்; ஹரிஹரன் புக்கன் அவர் பாதத்தில் விழுந்து வணங்கி நின்றார்கள்.

வித்தியாரண்ணியர் சரித்திரம்.

அந்தப் பெரியவர் யாவரெனில், துங்கபத்திரா நதி தீரத்தில் பம்பாநகரத்தில், தெலுங்கு பிராமணகுலத்தில், பிறந்து வளர்ந்தவர். அவரது தந்தையின் பெயர் மாயண்ணர்-சாயணாசாரியார் அவருடையதமயனார்-பார்துவாஜ கோத்திரத்தைச் சார்ந்தவர்—புக்கருடைய குலகுருவு என்பதற்கு அடியிற்கண்ட சுலோகமே ஆதாரமாம்.

శ్లో॥ యస్యజోధాయనం సూత్రంశాఖాయస్యచయాజుషీ ।
భారద్వాజకులంయస్య సర్వజ్ఞస్సహిమాదవః ।
శ్రీమతీయస్యజననీసుకీర్తిర్మాయణఃపి తా ।
సాయణోభోగనాథశ్చమనోబుద్ధిసహోదరౌ॥

ஆகமவேத புராண இதிகாசங்களைக் கரைகண்டுணர்ந்து, இல்லறம்புக, அவரது உத்தம பத்தினியார் சிறுபிராயத்திலேயே பரமபதமடைந்த தனால்; அவர் உலக ஆசையை விட்டொழித்து சந்நியாச ஆச்சிரமத்தை வகித்தும், நல்லொழுக்கம், சீலம், சிவபக்தி, பரோபகாரம், தேசோபகாரம் முதலான குணங்களிற் சிறந்த **வித்தியாரண்ணிய** சுவாமிகளாம். வேதாந்த மத சித்தாந்தியாகிய அவ்விப்பிரர், 108 உபநிஷத்துக்களுக்கு அத்வைத பரமாக பாஷியமெழுதியும், பராசரமாத்வீயம், காலமாத்வீயம், சங்கர விஜயம், விதியாரண்ணியம், சர்வதரசன சங்கிரஹம், மாதவ நிதானம், காலஞ்ஞானம் முதலான கிரந்தங்களை இயற்றிமஹா **மாத்துவாசாரியர்** என்று மகிமைபெற்று ஸ்ரீசங்கராசரியர் பீடத்தைப் பெற்றவர். அந்த சங்கராசாரியர் பீடத்துக்கு வந்தவர்களில் அவரைவிட சிறந்தவித்துவான் அவருக்கு முன்னுமில்லை, பின்னுமில்லை. அவர் சனியாசரமத்தைச் சார்ந்தவராகினும், புக்கனுக்கு மந்திரியாக இருந்தமையால்; அழகிய அரண்மனைகளில் வதிந்தும், ஆனைக்குதிரை தண்டெளாதி பிருதுகளுடன் பவனிவந்து பிரகாசித்தார். அவர் காலம் தொடங்கிதான் அந்த மடாதிபதியை உலககுரு வென்ற பெரும்பெயர் வழங்கிவரப்பட்ட தன்றியில், அவரைப்பார்த்து மற்ற மடாதிபதிகளும் ஆனைக் குதிரை முதலான பிருதுகளை வகிக்க ஆரம்பித்தார்கள்.

தோலும் எலும்புமாகத் தோன்றும் அத்தபோகிதி, தம் நாட்டில் துருக்கர் புகுந்து தேவாலயங்களையும், மடாலயங்களையும், விக்கிரகங்களையும், வீடுகளையும் உடைத்துக் கொள்ளையிட்டும், குடிகளைக் குரூரமாக நடத்திவருவதைக் கண்டு சகியாமல்; சதா அழுதகண்ணும் சிந்திய மூக்குடன் சிவனைத்தியானித்தும், தமது சீடர்களுக்கு சிவபக்தி சீலத்தையும், தேசாபிமானத்தையும் போதிப்பதைக் கண்டும் கேட்ட ஹரிஹரனுக்கும் புக்கனுக்கும் அவரிடத்தில் அத்யந்த விசுவாசமுண்டாகி; அவர்பாதத்தில அடைக்கலாமாக விழுந்ததைக்கண்டு; அந்த வேத்தா அவர்களை ஆசீர்வதித்து, நீங்களாரப்பா? எங்கிருந்து வந்தீர்கள்? என்று வினவ, அந்த ஹரிஹர புக்கனும் தாம் பிறந்ததுமுதல் அங்கு வந்தவரையில் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லக்கேட்டு, ஆனைகுந்திக்கு உண்டான கஷ்டத்தைச் சருதி அழுது, அந்தோ! அந்தப் பட்டணத்திலும் துருக்கர் புகுந்து தும்சம் செய்ததற்கு துக்கப்பட்டும்; இனி அந்தப் பட்டணத்துக்கு தாம் வந்து குடிகளுக்கு நன்மை செய்ய சித்தமாக இருப்பதாகவும் சொன்னார்.

வித்தியா நகரம் என்னும் விஜய நகரம் உண்டான விதம்.

அம்முனிவர் அப்படி சொன்னாலும் என்ன, அப்போது ஓரங்கல்நாடு முதல் ஆனைகுந்தி வரைக்கும் இடைக்கிடை மகமதியர் சேனைகள் தங்கி,வழிப்போக்கர்களை மரித்து உதைத்துக் கொள்ளையடித்து கொலைபுரிந்து வந்தபடியால், ஒரூரிலிருந்து அடுத்த ஊருக்கு உயிருடன் போய்ச் சேர்வது கஷ்டசாத்தியமாக இருந்தது ஆகவே, அந்த வித்தியாரண்ணிய சுவாமிகளை ஒரு பிரேதம்போல் வேஷமிட்டும், ஒரு பாடையில் படுக்கவைததும், அவரை அவர் சீடர்களில் சிலரும்; ஹரிஹரன் புக்கன் முதலானவர்களும் மாறு வேடம் தரித்து தூக்கிக் கொண்டு ஆனைகுந்திவழியே பிணக்கோலமாகப்போய் துங்கபத்திராநதி தீரத்தில் வந்திறக்கினார்கள்.

அவ்விடம் சிறு முயற்குட்டி ஒன்று ஒரு பெரிய சிங்கத்தைத் துரத்திக் கொண்டு போவதை வித்தியாரணியர்ப் பார்த்து "என்ன ஒரு சிறு முயல் சிங்கத்தை எதிர்த்துச் சண்டை செய்யுமாகில், இந்த இடம் எப்படிப்பட்ட வீரர் குடியிருந்த விடமாக விருக்கவேண்டும்! இதுவன்றோ வீரதீரர்கள் வசிக்கத் தக்க விடம்!" என்று ஆச்சரியப்படடுக்கொண்டு, அருகில் ஒரு மலையின்மேல் விருபாக்ஷி சிவஸ்தலமிருக்கக் கண்டுப் போய் உள்ளே நுழைந்து அங்குள்ள புவனேசுவரி சுவாமியைத் தியானித்தும், அந்தக் கோயிலைக் கட்டியவர்கள் யாவரென்று அருகில் நின்ற அர்ச்சகரை வினவ; அவ்வர்ச்சகர், அம்முனிச் சிரேஷ்டரை நோக்கி "ஏ! எதீந்திரா! ஸ்ரீமத்ராமாயணத்தில் கண்ட சுக்கிரீவன்

இந்த மலைமீது ஏறிசுவாமியைச் தரிசிக்கையில், வாலியும் அவனைத் தொடர்ந்து வந்து தனனுலானமட்டும் ஏறிப்போக முக்கியும் முடியாமல் போய்விட்டான். இதைச் சுற்றிலும் மாலவதம், ஏமகூடம், பசுவசிங்கம், மதங்க பருவதம், கிஷ்கந்தம், என்னும் ஐந்து பருவதப் பிரதேசங்களிருக்கின்றன. இங்குதான் ஹம்பிஸ்தலமு மிருக்கிறது. இவைகளைச் சாக்ஷாத் தசரதராமர் கட்டி தரிசித்தது முதல் அநேக தம்பாநிதிகள் வந்து வனசஞ்சாரிகளாகித் தவஞ்செய்து சர்வேசுவரனை அடைந்தார்கள் என்று சொல்லவே; அந்த வித்தியாரணியருக்கு இவையாவும் ஞானதிருஷ்டியினாலும் உண்மையாகவே தோன்றியதன்மேல், இப்படிப்பட்ட ஸ்தலத்தில் தாமும் தம் உயிர் உள்ளநாள் உள்ளவரையில் காலம்போக்கக் கருதியும், அவ்விடத்தில் அஷ்ட ஐசுவரியங்களும் திரண்டுவந்த அழகிய நகர மொன்றை உண்டாக்கித் தரவேண்டுமென்றும், தமது இஷ்ட தேவதையாகிய அஷ்டலக்ஷிமையைத் தியானித்தார்.

அப்படி தியானித்துக் கொண்டிருக்கும்போது, அம்முனி புங்கவருடைய சீடர்களான ஹரிஹரன் புக்கன் முதலானவர்கள் வேறுவேடந்தரித்து ஆனைகுந்திக்குள் போய்ப்பார்க்க, அவ்விடத்திய கோயில் கோபுரங்களும், கோட்டை கொத்தளங்களும், இடிந்து குட்டிச்சுவர்களாக நிற்கவும்; அந்நகரத்தில் உள்ள ஜனங்கள் எல்லாரும் நாலாபக்கங்களில் வலசைப்போய் ஒரு காட்டைப் போலிருப்பதையும் கண்டு பரிதபித்து, தம்தபோநிதியினிடம் திரும்பிவருகையில், வழியில் ஓர் தடாகத்தைக்கண்டு தண்ணீர் குடிக்க இறங்கினார்கள். அங்கு ஒரு குகை இருக்கக்கண்டு அதற்குள் புக்கன் பிரவேசித்துப் பார்க்க, தங்கக்கம்பங்களும், தகடுகளும்கட்டி கட்டியாகவும், வைரம் கெம்பு முத்து முதலான நவரத்னங்கள் கூடை கூடைகளாகவும், பணம் துட்டுகள் பானை பானைகளாகவும் கிடக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு, இப்பொருள்களை எந்த ஹிந்துராஜன் துருக்கர் முதலானவர்களுக்குப் பயந்து இங்குமறைத்து வைத்தானோவென்று மயங்கி ஓடிப்போய் வித்தியாரணியருக்கு அறிவிக்க; அவர் உத்தரவுப்படி அவைகளைக் அவர்கள் கொண்டுவர; அங்கு மஹா வித்துவசிகாமணிகளும், வீரசிகாமணிகளும் வசிக்கத்தக்க நகரத்தைக் கி - பி. 1336 - வருஷம் (அதாவது சுமார் 600 வருஷங்களுக்குமுன்)கட்டிவைப்பித்தார். அவரிப்படிக்கட்டிய பட்டணத்திற்கு அவர் பெயரே வழங்கிவருகிறது. அதுதான் வித்தியாரண்ணியர் நகரம் அந்த விடந்தான் முன் விஜயராயனுக்கட்டிய விஜயநகரம். அந்த நகரந்தான் பிற்காலத்தில் ஆந்திர இராயனு ஸமஸ்தானத்தார் தலை நகரமாகவும், சக்கிரவர்த்திப்பட்டம் கட்டும் கெடிஸ்தலமாகவும் பிரபலப்பட்டது.

அப்படிப் பட்டணம் கட்டிமுடிந்தது. போதுமான பொருளும் கிட்டியது. அப்படி இடமும் பொருளும் கிட்டவே, முன் மகமதியர்களுக்குப் பயந்து வலசைபோன குடிகளும் நாளாவட்டத்தில் நகரத்தில் வந்து குடிபுக ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தாலு மென்ன? அவர்களைத் தக்க தருமநீதி சட்ட திட்டங்களைக்கொண்டு ஆளுவதற்கு ஓர் அரசனில்லாமையால், அக்குறையை நீக்கும் பொருட்டு வித்தியாரணியர் அந்த ஆனைகுந்தியில் முன் ஆண்டுவந்த ஸ்ரீநர

பதி பூபராயலு அவர்களுடைய சந்ததிகள் எங்கிருக்கிறார்களோவென்று தேடிப்பார்க்க, அக்குடும்ப வார்சுகள் அகப்படவில்லையே என்று விசனப்பட்டுக் கொண்டிருக்கையில், அவரது உண்மையான சீடர்களாகிய ஹரிஹரனும் புக்கனும் வந்து "சுவாமி ஸ்ரீ பூபராயலுடைய சந்ததிகள் இந்நகரம் வரும்மட்டும் தாங்களே அரசனாகி இராஜிய பரிபாலனம் செய்துவர வேண்டுமென்று அவர் பாதங்களைப்பற்றி வேண்ட, அந்த வித்தியாரணியர் சிரித்து, "நான் பிராமண சந்நியாசி, க்ஷத்திரியர் வேலையிலும், இல்லறத்தார் வேலையிலும் பிரவேசிக்க சரிப்படாது; ஆகவே, பூபராயலுடைய சந்ததிகள் வருகிறவரையில், உங்களில் மூத்தவனாகிய ஹரிஹரன் இராஜனாகவும், புக்கன் சேனாதிபதியாகவும் இருங்கள்; நான் உங்களுக்கு மந்திரியாகவிருந்து என்னாலான உதவிகளைச் செய்துவருகிறேன்" என்று சொல்லி, அவர்களைச் சம்மதிக்கச் செய்து, ஆசீர்வதித்தும், அந்நகரத்தில் அரசனுக்கு என்று முன்னாடியாக தயார் செய்திருந்த தங்கத்தினாலும், நவரத்தினங்களாலும் பிரகாசிக்கும் சிங்காசனத்தின் மீது நல்ல முகூர்த்தகாலத்தில் ஹரிஹரனைக் கைலாகுக் கொடுத்து ஏற்றி உட்கார்ச்செய்து பட்டங்கட்டினார். அந்த நியமனத்தைக் குடிகள் யாவரும் அங்கீகரித்துக் கொண்டு, அந்த வேத புருஷனையும் அவரால் நியமிக்கலான ஹரிஹரராயலு அரசனையும் வணங்கினார்கள்.

(1) ஹரிஹரதேவராயலு ஸம்ஸ்தானம்.

(கி. பி. 1336 முதல் கி. பி. 1350–வருஷம்)

அப்படி ஸ்ரீ வித்தியாரணிய சுவாமிகளுடைய ஆசீர்வாதத்தினால் அரசாக்ஷியைக் கைக்கொண்ட ஹரிஹரராயலு சந்திரவமிசக்ஷத்ரிய ஜாதி, சங்கம வகுப்பைச் சார்ந்தவன். அவனுடன் பிறந்தவர்கள் ஐவர். அவர்களில் புக்கன் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டாலும், பெரும்பான்மையான இராஜீய காரியங்களையும் பார்த்துக்கொண்டு முக்கியமாக பைகூரிலிருந்து அரசுசெய்தான். மற்ற சகோதிரர்களில் "செம்பராயலு" கீழ்நாடுகளையும், "மாரப்பராயலு" பானவாசி நாட்டையும் ஆண்டுவந்தார்கள். அக்காலத்தில் கோவா (துளுவ) கனரா ஹயிசாலம் அல்லது மைசூர், பனவாசி, குண்டலம் முதலான நாடுகள் அவர்களுக்கு சுவாதீனமாகி இருந்ததன்றியில், கனரா நாட்டிலுள்ள ஜயினர்களையும், கோவாவின் மேற்கு பாகத்திலிருந்த அராபிய தலைவர்களையும், ஜயித்தது, 1343-வருஷம் நாட்டின் மீது படை எடுத்துவந்த மகமதியரைத் துரத்தியடிக்க, ஓரங்கல் இந்து மன்னருக்கு உதவியும் செய்தான். பிறகு அவன் பாதாமி என்னும் இடத்தில் பலமான கோட்டையைக் கட்டி 7 வருஷம் சமாதானமாக ஆண்டு 1343 வருஷம் பரமபதமடைந்தான். அவனுக்குப் பிறகு

(2) புக்கதேவராயலு ஸமஸ்தானம்.

(கி. பி. 1343 - ௵ முதல் 1379 - ௵ம்.)

ஹரிஹரராயலுக்குப் பிறகு அவனுடைய தம்பி புக்கராயலு விஜயநகரத்துக்குவந்து அதை ஸமஸ்தானத் தலைநகரமாக்கிக்கொண்டும், கூல்பர்க்காவிலிருந்த பாமினி குடும்ப மகமதியர்களைத் தாக்கியும், அநேக வருஷகாலம் மகமதியர் இந்துக்களைத் தாக்காதபடி பாதுகாப்பு செய்தான். அவன் ஓரங்கல்நாட்டரசனாகிய ருத்திரதேவனுக்கு உதவி செய்ததினால், சுல்தான் மகமது ஷாவுக்கு விரோதமுண்டாகி, மெயிசூர் ஆபில் 1365-வருஷம் இருவருக்கும் பிரமாத சண்டைகளுண்டாச; கடைசியில், நிரபராதிகளான குடிகளை எவரும் கொல்லக்கூடாதென்ற நிபந்தனைகளோடு சமாதானம் செய்துகொண்டார்கள். பிறகு 1376-ம் வருஷம் அந்தச் சுல்தான் மகமதுவின் குமாரன் மூஜாஹித் சாயபு சண்டைக்குவந்தும் தோல்வியடைந்து அதோனியில் சமாதானம் செய்துகொண்டார்கள். அந்த புக்கராயலு காலத்தில் விஜயநகர சமஸ்தானத்துக்கு கோவா, பெல்காம், துளுவம், கொங்கணம் முதலான நாடுநகரங்கள் சுவாதீனமானதன்றியில்; விஜயநகர ஸமஸ்தானம் தெற்கே இராமேசுவரம் வரையில் பரவியதனால், இலங்கை மலையாள மன்னர்களும், தகுந்த வெகுமானங்களுடன் ஸ்தானாபதிகளை விஜயநகரத்துக்கு அனுப்பினார்கள்.

அக்காலத்தில் விஜயநகரம் சகலசம்பத்துக்களில் நிறைவுபெற்று பிரகாசித்தது. அந்த புக்கராயலு கேவலம் உயுத்தத்தில் சுத்தவீரனாக மாத்திரம் ஜீவித்ததோடு; கல்விவிருத்தி விஷயத்திலும், பகவத்பக்தி விஷயத்திலும் அதிகசிரத்தையுடையவனாக விருந்தான். வித்தியாரணியருடைய சகோதிரர் சாயனாசாரியார் வேதங்களுக்கு பாஷியம்செய்ய ஆரம்பித்தது இந்தப் புக்கராயலு காலத்தில்தான். கி-பி. ஏழாம் நூற்றாண்டில் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளால் ஸ்தாபிக்கலான மைசூரையடுத்த ஸ்ரீங்கேரி மடத்துக்கு வித்தியாரண்ணிய சுவாமிகளைப் பிரதம ஆசாரியராக நியமித்ததும் அக்காலத்தில்தான். இம்மட்டோ, அந்தப் புக்கராயலு மதத்தில் சைவனாக விருக்கினும் அன்னிய மதங்களை தூஷிக்காமலும், அவைகளை ஆதரித்தும் வந்தான். இந்து மதத்துக்கு விரோதிகளான ஜயினர்களுக்கும் உதவிசெய்து வந்ததோடு; ஜயினருக்கும் இராமாநுஜ மதஸ்தர்களுக்கும் ஊர்கோல விஷயமாக உண்டான பெருங் கலகத்தைச் சிராவண பெலகோலாவில் சமரசமாக சமாதானப்படுத்தினான். குடிகளுக்கு உபயோகமான சத்திரங்களையும், வைத்தியசாலைகளையும், கிணறுகளையும் வாய்க்கால் முதலான சாதனங்களையும், இப்போது அந்தப்பூரிலிருக்கும் புக்கசாகரம் முதலான தடாகங்களையும் உண்டாக்கினான். இப்படி 35 ௵ ஆண்ட புக்கதேவராயலு 1379 ௵ம் மரணமடைந்தான். அவனுக்குப் பிறகு

2-வது ஹரிஹரராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1379 முதல் 1406 வருஷம்.

அந்த புக்கராயலுக்குப் பிறகு அவனுடைய குமாரன் (2-வது) புக்கரா யலு அல்லது ஹரிஹரராயலு சிங்காசன மேறினன். அவனுடைய பட்டபுதே வியின் பெயர் மலலாம்பிகையம்மாள். அவன் 1393-வருஷம் தென்னடுகள் வரையில் தமது அதிகாரத்தைப் பரவச்செய்தும், சோழ பாண்டியர்களை அட க்கி அவர்களிடம் கப்பம் வாங்கிக்கொண்டும், அப்படி அவர்களை அடக்கியதனல் "சாரதுலமாத பஞ்சனன்" அல்லது மஹாராஜாதிராஜன் என்ற பிருதுப்பெய ரைப் பெற்ருன் என மைசூர், தார்வார், செங்கல்பட்டு, திரிசிரபுரம், காஞ்சீபுரம் முதலான விடங்களில் அநேக சாசனங்க ளகப்பட்டன. அவன் பிராம்மணர் களுக்கு அநேக அக்கிரகாரங்களையும், கோயில் கோபுர கட்டிடங்களையும் கட்டி க்கொடுத்த தன்றியில், ஜயினமத வித்துவானகிய "தண்டதீபர்" வேண்டு கோளின்படி, விஜய நகரத்தில் ஒரு அழகிய ஜயினர் கோயிலையும் கட்டிக்கொ கொள்ள இடங்கொடுத்தான். அவன் ஸமஸ்தானத்தில் ஸமஸ்கிருத வித்தை யைப்பரவச் செய்ததோடு, வித்தியாணியருடைய சகோதிரரும், தமது முக்கிய மான மந்திரியுமாகிய சாயனசாரியாரை அவரது வேத பாஷியத்தை எழுதி முடிக்கவேண்டிய உதவிசெய்து முடிப்பித்தான். இந்தியாவின் வடதேசத்தில் பிரோஜஷா 'டொக்ளாக்' பிராமணர்களுடைய கோயில் கூட கோபுரங்களை இடித்தும், சிறந்த கிரந்தங்களைக் கொளுத்தி நாசமாக்கி வருகையில்; தெற்கே ஹரிஹரன் பிராமணர்களையும் அவர்களுடைய கிரந்தங்களையும் கோயில் கோபு ரவிக்கிரகங்களையும் பாதுகாத்துப் பரிபாலித்து வந்தான். அவன் அப்படி பாது காத்து வந்ததற்கு தார்வார், கன்னடா, கோவா, மைசூர், பல்லாரி, கடப்பை, காஞ்சி, திரிசிராப்பள்ளி முதலான விடங்களில் அகப்பட்ட சாசனங்கள் இன் றும் சாக்ஷிப் பகருகின்றன.

விஜயநகரத்தினுடைய போகங்களைக்கண்டு சகியாத கூல்பர்கா சுல்தான் பெரோஜிஷா 1398-ம் வருஷம் சண்டைக்கு எத்தனிக்க; விஜய நகரத்தாரும் துங்கபத்திரா நதியைக்கடந்து ரெயிச்சூர்வோபைப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு மகமதியசேனை மஹா மூர்க்கத்தோடு விஜயநகரம் வரையில் வர, இருக க்ஷியாருக்கும் சமாதானமுண்டாகியது. அந்தக்காலத்தில் தக்ஷணத்திலும் கர் ணடகத்திலும் கடும்பஞ்சம் சம்பவித்து 12 வருஷகாலம் நீடித்து நாலாபக்கத்து நரஜீவர்களை நாசமாக்கி விட்டது. அக்காலத்தில் வடக்கே தாமர்லேன் படை யெடுத்துவந்து இந்துக்களைத் தும்சம்செய்து வருவதைக் கூல்பர்க்காவிலிருந்த பெரோராஜிஷா கேட்டு அவன் உதவியைக்கொண்டு குஜராத்திலும், காண்டே ஷிலும், கூடுமாகில் விஜயநகரத்திலும் இரண்டாந்தரம் சண்டைசெய்யப் பிரயத்தனப்படுகையில், 1406-வருஷம் ஹரிஹரராயலு சுமார் 20 இறங் ஆண்டு இறந்தான். அவன் காலத்தில் செல்வவிணியாகிவந்த பொன் வெள்ளி

செப்பு நாணயங்கள் இன்னும் அகப்படுகின்றன. அவன் கட்டுவித்த புதிய கோட்டை கொத்தளங்களும், கோயில் கோபுரங்களும் தருமசாலைகளும் இன்னும் அவன் பெயரைப் புகழுகின்றன.

1-வது தேவராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1406-ம் முதல் 1416-ம்ஹூ வரையில்.

இரண்டாவது ஹரிஹர ராயலுக்குப் பிறகு அவன் குமாரன் தேவராயலு 1406ஹூ நவம்பர்மீ சிங்காசனமேறினன். அவன் காலத்தில் குடிகளுக்கு கஷ்டமேயொழிய இஷ்டலாபம் கிடையாமல் தவித்தார்கள். அப்படி ஆவதற்குக் காரணம், கூல்பர்கா பெரோஜிஷா சமஸ்தானத்தைச்சேர்ந்த முடுகலநாட்டில் ஒரு குடியானவனுடைய அதிக அழகுடைய பெண்ணேயாம் அந்தப் பெண்ணின் பெயர் பிரிதுலை-அவளுக்கு உபாத்தியாயராக இருந்த பிராம்மணன் அவள் அழகைப்பற்றி அடிக்கடி தேவராயலிடம் புகழ்ந்துச் சொல்ல, அந்த தேவராயலும் அவளை விவாஹம்செய்ய விரும்பி அநேக ஆடையாபரணங்களை அந்த அந்தணர் மூலியமாக அனுப்பித்தார்-அந்தப் பெண், அரசனை விவாஹம் செய்தால் தன்னை பெற்றாரை இனி பார்ப்பதற்கு அநுகூலப்படா தெனக்கருதி வந்த அந்தணரை திருப்பியனுப்பிவிட, அந்த பிராம்மணன் கொண்டுவந்த ஆடையாபரணங்களைஅரசனிடம்கொண்டுபோய்வாப்ஸ்கொடுக்க,அரசன்அதிக கோபாரூடனுகி அப்பிரிதலைப் பெண்ணை எப்படியாவதுக்கொண்டுவர தக்கதண்டுதளாதிகளோடு முடுகல நாட்டின்மேல் படை எடுத்துப்போக அந்தப் பெண்ணின் தந்தை அதைப்பற்றி தமது சுல்தானிடன் முறையிட, சுல்தான் விஜயநகரத்தின்மேல் படையெடுத்துவர, இருகக்ஷிக்காரர்களுககும் பிரமாத சண்டைகள் நடந்ததில், விஜயநகரத்தார் நாவல் குண்டத்தையும் பங்காபுரத்தையும் சுல்தானுடைய உயுத்தச் செலவுக்குக் கொடுத்துச் சமாதானம் செய்யப்பட்டது. இச்சமாதானத்தினுல் தேவராயலுடைய குமாரத்தியை சுல்தான் விவாஹம் செய்துக் கொண்டதாகவும், மடுகுல நாட்டு குடியானவன் மகளாகிய பிரிதுலையை பெரோஜஷா தன் குமாரன் ஹசேன் கானுக்கு விவாஹம் செய்வித்ததாகவும் ஒரு சாசனத்தில் வெளியாகிறது. இந்த விசனத்தினுல் 1416-ல் பரமபதமடைந்தான்.

விஜயபூபதிராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1416 முதல் 1418-ம் வருஷம்.

இறந்துபோன தேவராயலுக்கும் அவன் மனைவி திம்மாம்பிகா தேவிக்கும் பிறந்த விஜயபூபதிராயலு தமது காலத்தையெல்லாம் கல்வியை விருத்தியாக்குவதிலும், சிற்றின்ப சுகத்திலும் கழித்துவிட்டான்.

பிரவுட தேவராயலு சமஸ்தானம்.

கி. பி. 1419 முதல் 1444வரை-ம்.

விஜயபூபதிராயலுக்கும் அவன் மனைவி நாராயணாம்பிகாளுக்கும் ஜனித்த பிரவுட தேவராயலு பட்டத்துக்கு வந்தான். புராதன புக்கராயலுக்குப் பிறகு பிரபலமான இராயலாகிய பிரிவுடதேவராயலு, மகமதியர் தம் முன்னோரிடம் பிடித்துக்கொண்டிருந்த கோட்டைகளை எல்லாம் சண்டை செய்து ஜயித்து தம் வசமாக்கிக்கொண்டான். அச்சண்டைகளில் மகமதியசேனைத் தலைவரான மீயர்பைசுரல்லி சாயபு இந்துக்களால் கொல்லப்பட்ட சங்கதி சுல்தான் பெரோஜிஷாகேட்டு மனமொடிந்து அதே விசனத்தில் மரணமடைந்தான். அந்தச் சுல்தானுக்குப் பிறகு வந்த அஹமத்ஷா தமது தகப்பனருக்கும் சேனைக்கும் உண்டான கஷ்டத்தைக் கருதி 1422-ம் வருஷம் தேவராயலுக்கு விரோதமாகப் படையெடுத்து வந்து விஜயநகரத்துக்கு முற்றுகை போட்டு வழியில்கண்ட கோயில் கோபுரங்களை எல்லாம் இடித்துச் சண்டைசெய்ய, அவன் உயுத்த செலவைத் தருவதாக சமாதானமாகியது. அந்த பிரமாத சண்டைசச்சரவுகளினால் 1424-25வரை நாட்டில் பிரமாத பஞ்சமுண்டாகி பலலாயிரம் பிரஜைகள் பரலோக மடைந்தார்கள்.

அந்தச் சண்டையினால் இந்துக்களுக்கு வரவர வில் வித்தையில் சாமார்த்தியம் குறைந்துபோய்விட்டதென்று கண்டு, தேவராயலும் தனது சமஸ்தானத்தில் 2,000 மகமதியரைச் சேனையில் சேர்த்தும், அவர்களுடன் 80,000 இந்துச் சிப்பாய்களையும் சேர்த்தும், மகமதியரை விஜயநகரத்தில் வதிந்து வரும்படி இடங்கொடுத்தும், அவர்களால் இராஜத்துரோகம் செய்கிறதில்லையென்று சொல்லி குரானில்சத்தியம் வாங்கியும், அக்குரானைத் தனது ஸமஸ்தானத்தில் வைத்துக்கொண்டான். அப்படி மகமதியரை இந்து சேனையோடு சிப்பாய்களாக சேர்த்துக்கொண்டது இந்த விஜயபூபதி காலத்தில்தான் ஆரம்பம்.

1435 வருஷம் சுல்தான் அஹமத் சாயபு இறந்துவிட, அவனுடைய குமாரன் அலாவுதீன் பட்டத்துக்கு வந்தான். அவனது தம்பி மகமது, தேவராயலுடைய உதவியினால் அலாவுதீனை ஜயித்து ரெயிச்சூர், பீஜப்பூர், ஷோரனூர் முதலான கோட்டைகளைப் பிடித்துக்கொள்ள, தேவராயலை மஹாபராக்கிரமசாலி என்று மகமதியர்கள் கொண்டாடினர். அந்தக்காலத்தில் (1420-1421-வரும்) விஜயநகரத்தைவந்து பார்த்த ஐரோபிய யாத்திரைக்காரராகிய "நிகாலா கோண்டி" (Nicola Conti.) என்பவர் விஜயநகரம் சகல சம்பத்துப் பெற்றும், 60-மைல் சுற்றளவுள்ள சிறந்த பட்டணமாகவும், 90,000-சேனைவீரர்களால் காக்கப்பட்டும், சஹகமனம், ரத உற்சவம், செடில் குத்தியாடல் முதலான உற்சவங்களையும் கண்டதாக எழுதியிருக்கின்றனர். மற்றோர் யாத்திரை

க்காரராகிய "அப்தல் ரஜாக்" என்பவர் விஜயநகரத்தைப்பற்றி பின்னும் விசே ஷித்து எழுதி இருக்கின்றனர்.

அதாவது தான் (அப்தல் ரஜாக்)பாரசிக நாட்டு 'கோரேசன்' இராஜாவின் ஏஜண்டாகி மலையாள கரையோரமாக மங்களூருக்கு வந்து அங்கிருந்து விஜய நகருக்கு வந்ததில், அந்த விஜயநகரமும் அதைச் சுற்றிலு மிருந்த விடங்களில் பலவித பயிர்கள் செய்யப்பட்டு ஓர் சிங்காரநந்தவனம் போலவும், அதன் இரா ஜாங்கம் தெற்கெ இலங்கை முதல், கூல்பர்காவரையிலும்; மலையாளம் முதல் பங்காளம் வரையிலும் பரவி, அந்த எல்லைக்குள்ளாக 300 பெரிய அரணுள்ள கோட்டைகளும் கட்டிருந்தனவாகவும், அவைகளையடக்கி ஆண்ட இராயலு இந்தியாதேசத்திற்குள் சிறந்த சக்கிரவர்த்தியாகவும், அவனுக்குப் பிரதிமாதமும் கிரமச் சம்பளம் பெற்றுவந்த (11,00,000) லக்ஷம் சேனைகள் சுத்த வீரர்க ளாகவும், ஆயிரங்கணக்கான யானைகளும், அனேக ஆயிரங் குதிரைகளும், இரதங்களும் இருந்தனவாகவும், வித்யாநகரம் அல்லது விஜயநகரபட்டணம் 10 மைல் நீளமும், 12 மைல் அகலமுள்ள விஸ்தீரணமுள்ளதாயும், அதைச் சுற்றிலும் ஏழுசுற்றுள்ள பிரமாண்ட கல்சுவர்கள் கட்டப்பட்டும், அதற்குள் அரணுள்ள ஓர் பெரிய கோட்டையும், உருவிய கத்திகயோடு இமைபோடாமல் அனேக வீரர்கள் பாதுகாத்துக்கொண்டிருந்ததாகவும், அந்த நகரத்தில் எங்கு பார்த்தபோதிலும் விசாலமான ரோட்டுகளும், வாய்க்கால்களும், கூடகோபுர மாடமாளிகைகளும், அனேகவித புஷ்பங்களையும் பழங்களையும் தரும் நந்தவனங் களும், உத்தியானவனங்களும் நிறைந்திருந்ததாகவும், அனேக ஆபரணக்கடை களும், ஆடைகளை விற்கும் கடைகளும், தானியக்கடைகளும், பலசரக்கு கடை களும் நிறைவுப் பெற்று, குடிகள் குதூகலத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த தாகவும், கண்டு ஆநந்தித்து சரித்திரமெழுதி இருப்பதன்றியில்; அந்த ஸமஸ் தானத்தில் நீதிபரிபாலனத்துக்காக அரண்மனைக்கு பின்புரத்தில் கட்டி இருந்த பெரிய நீதிஸ்தலத்தில் "தண்டநாயுடு" என்ற நீதி அதிபர் பிரதிதினமும் வந்து பிராதுக்காரர்களிடம் சொற்ப நஜுர் பெற்றுக்கொண்டு, பிராதுகளை விசாரித்து நீதி செலுத்தியும்; அச்சங்கதியை அன்றுடம் மாலையில், இராயலவர்களுக்கு அறிவித்து வந்ததாகவும், அப்படி அறிவிக்கும் கேசுகளில் பிசகுகள் நடந்தாகி லும், நீதிதவறி இருந்தாகிலும், அல்லது சிக்குமுக்கான வழக்குகளாக விருந் தாகிலும் இருக்கில் உடனே ஸமஸ்தானத்திலுள்ள தக்க பண்டிதர்களையும், பெரிய மனுஷர்களையும் தருவித்து அவர்களோடுயோசனைசெய்துநீதி செலுத்தி வந்ததாகவும், அந்த நீதிஸ்தலத்துக்குப் பின்பக்கத்தில் ரிகார்டு அறைகளும், அங்கு அநேக உத்தியோகஸ்தர்கள் எழுத்தாணிகளால் ஓலைகளில் எழுதிக் கொண்டும், மரப்பலகைகளில் எழுதிக்கொண்டு மிருந்ததாகவும், அந்த ரிக் கார்டு ரூமுகளுக்கு அருகில் அழகான தங்கசாலைக் கட்டப்பட்டு அதில் தங்கத்தி னாலும், வெள்ளி, செம்புகளினாலும், வராகன், பிரதாபன் டணங்களை வார்ப்பிடம் செய்துகொண்டிருந்ததாகவும், மாஜிஸ்ட்ரேட்டும், அவர் கச்சேரியைகாக்கவும், அமுலை நடத்திவரவும் 12,000 பதாதி சேவகர்கள் இருந்ததாகவும்.

அவர்களுடைய (பதாதிகளுடைய) மாதாந்திர சம்பளத்தை அந்நகரில் அப்போது செல்வத்தில் சிறந்த தாசிகளுக்கு விதித்த வரியிலிருந்து கிரமமாகக் கொடுக்கப்பட்டு வந்ததாகவும்; அந்தப் பன்னீராயிரம் பதாதிகளுக்கு நகரிலும், மற்ற விடங்களிலும் நடக்கும் அக்கிரமங்கள் பூரணமாகத் தெரியும் என்றும், ஸமஸ்தானத்தில் குற்றம் செய்தகுற்றவாளிகள் அகப்படாவிட்டால் அந்த 12,000 பதாதிகள் உத்தரவாதிகளாகக் கொண்டு நீதி செலுத்தப்பட்டு வந்த படியால், அங்கு குற்றங்கள் அபூர்வமென்றும், ஆகவே குடிகள் தம்பொருள் பயம் பிராணபயம் அற்று நிம்மதியாக வாழ்ந்திருந்தார்களென்றும், எப்படிப் பட்ட குடிகளும் நிர்ப்பயமாக நல்ல ஆடை ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு சுபமுகமாக இருந்தார்களென்றும் தெரிவித்ததோடு, இராஜாமாளிகையில் அநேக அறைகளின் சுவர் கூரைகளையும், தங்கத் தகடுகளில் சித்திரவேலை செய்துப் பத்தித்து அலங்கரிக்கப்பட்டிருந்ததாகவும், இராஜ சிங்காசனம் தங்கத்தினாலும், நவரத்தினங்களினாலும் பதிக்கப்பட்டு பிரம்ம விமானம்போல் தோன்றியதாகவும்; இராஜ அரண்மனையில் 12,000 ஸ்திரீகள் மஹாசுந்தரவதிகளாகவும், அவர்களில் 3000 பெயர் இராயனுடைய மனைவிகளாகவும், அவர்களில் 500 பெயர் இராயனு வெளியில் போகும்போது கூடபல்லக்கில் போய் வருவதாகவும் இன்னும் பலவிதமாக இந்த ஸமஸ்தானத்தின் பெருமையைப் பற்றிப் பிரபலமாக எழுதி இருக்கிறார். அன்றியும், அங்கு நடந்த தசரா பண்டிகை காலத்தில் ராயனு கொலுவிருந்தபோது அநேக பெருநில குருநிலமன்னர்களைத் தருவித்து மரியாதைசெய்து பவனிவந்த வைபவத்தையும் பின்னும் தீபாவளிபண்டிகை காமன்பண்டிகைகளின் விநோதங்களையும் புகழ்ந்து எழுதி இருக்கின்றனர். அந்த அப்தல் ரஜாக்சாயபே இராயலவர்களைத் தரிசிக்கப்போன பொழுது அவரை அன்போடு அழைத்து அருகிலிருக்கச்செய்தும் மகமதிய ராஜாங்க விஷயங்களைப்பற்றி விசாரித்ததாகவும், அந்தராயனு நீண்ட உருவமும், ஆஜானுபாகுவும் அழகிய முகாரவிந்தமுடைய வாலிபனென்றும் புகழ்ந்து எழுதியிருக்கின்றனர்.

அவ்வளவு வைபோகத்தோடிருந்த தேவராயனு 1443-ம் வருஷம் பீரார் சுல்தான மீது படை எடுத்துப்போய் முடுகல், பான்கிபூர் என்ற கோட்டைகளைப்பிடித்தான். அவன் காலத்தில் ரெயிச்சூர்லிங்கசாகர் என்ற இரண்டு விடங்களில் தவிர, மற்ற பாகங்களிருந்த குடிகள் மகமதியர் பயமற்றுவாழ்ந்தார்கள். அப்படி 30 வருஷங்களாக மாக்ஷிமையோடு ஆண்ட பிரிவுடதேவராயனு 1446-ம் வருஷம் பரமபதமடைந்தான்.

இம்முடி தேவராயனு

கி. பி. 1444 முதல் 1449 வருஷம்

பிரவுடதேவன் மனைவி சிம்ஹலாதேவி வயிற்றில் ஜனித்த மல்லிகார்ஜுனனுக்கு திம்மன்ன தண்டநாயுடு மந்திரி. மல்லிகார்ஜுனன் பெனுகொண்

டாவுக்குப்போய் அங்கிருந்த நரசிங்கராயலு தக்கபடி அரசு செய்யாமையால் தனது குமாரன் நந்த ராஜுவை அங்கு அரசனாக்கினான்.

விருபாக்ஷிராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1467-முதல் 1485-வருஷம்.

மல்லிகார்ஜுனனுடைய தம்பியாகிய,விருபாக்ஷி இராயலு பயங்காளியாக இருந்தமையால், பாமினி ஸமஸ்தானம் காஜாகான் கவான் 1470 வருஷம் கொங்கனி நாட்டின் மீது படை எடுத்துப்போய், 1471-ம் வருஷம் கோவா பட்டணத்தைப் பிடித்தான். பிறகு பெல்காமும் 1472-ம் வருஷம் மகமதியர் வசமாகிவிட்டது. அந்தக் காலத்தில் கடகபுரியிலிருந்த புருஷோத்தமதேவனும் படை எடுத்து வந்து வருத்தினான். விருபாக்ஷிராயலுக்கு புத்திரசந்தானமில்லை. மல்லிகார்சுனராயலுக்கு சொந்தமக்களில்லாமையால் அவனோடு, (அதாவது சாலிவாகன சகாப்தம் 1407க்கு சரியான கிறிஸ்து சகாப்தம் 1485 வருஷத்தில் சுமார் 150 வருஷகாலம்) கம்பீரமாக ஆண்டுவந்த ஹரிஹரபுக்கராயலுடைய சமஸ்தானம் முடிந்து விட்டது. ஆகவே பெனுகொண்டாவில் அரசு புரிந்த ராயலுடைய குமாரனாகிய பிரவுடதேவராயலை (III) மல்லிகார்ச்சுனராயலு சுவீகாரம் செய்துகொண்டு விஜயநகரத்தில் பட்டாபிஷேகம் செய்வித்ததாகவும், அந்த பிரிவுடதேவராயலு வாலிபதசையோடு பன்னிரண்டு வருஷம் ஆண்டுவந்து 1498-ம் வருஷம் மகமதியரோடு சண்டைசெய்ய, கத்திகாயம் பட்டு அந்த காயம் சவுக்கியபடாமல் இறந்துவிட்டதாகவும், அந்த ராயலுக்கு நரசிம்மராயலு தளகர்த்தனாகவும் மந்திரியாகவும் இருந்ததாக (Ferishta) பிரஷ்டாஎன்பவர் சரித்திரத்தில் எழுதி இருக்கிறார்.

அந்த 3-வது பிரவுட தேவராயலும், அவன் தளகர்த்தனும் மந்திரியுமாக இருந்த நரசிம்மராயலும், எவர்களென்று சில சாசன சரித்திரங்களைச் சோதித்துபார்கையில், முன்பு மாலிகாபூர் விஜயநகரத்தின் மீது படை எடுத்து வந்து பிரமாத சண்டை செய்து கோட்டையை முற்றுகைபோட்டுப்பிடித்து அக்கோட்டைக்குள்ளிருந்த நரபதி இராஜனாகிய பூபராயலையும், அவன் மக்களையும் அக்கினிக்கு இரையாக்கியபோது, அவனுடைய தாதியானவள் அரன்மனையில் இருந்த மூன்று வயதுள்ள புக்கன் என்னும் ஆண்பிள்ளையை அந்தரங்கமாகவும், கோட்டையின் சாக்கடை வழியாகவும் கொண்டுபோய், துளுவநாட் டெல்லை மலையாளர் குடிசையில் தேனும் தினைமாவும் கொடுத்து வளர்த்த பிள்ளையின் சந்ததிகளென்று ஸ்பஷ்டமாகிறது.

தாதியின தந்திரத்தினால் துளுவநாட் டெல்லைக்குக் கொண்டுபோன பிள்ளையின் பெயர் 'புக்கராயலு'. அந்தப் பெயரை பூபராயலு உயிரோடிருந்த போது தமது சேனாவீரனாகிய புக்கனுடைய பராக்கிரமத்தை மெச்சி அச்சேனைத்தலைவன் பெயர் மறவாதிருக்கும் நிமித்தம் தமது மக்களில் கடைசி மக

ஜேக்கு வைத்தான். அந்தச் சிறுவனும் தனது பெயருக்குத் தக்கபடி பராக்கிரம முதலான குணங்களை உடைத்தாயிருந்தும், மலையாளருடைய சேனுக்கும் இணைமாவுக்கும் எதிர்பார்த்திருந்தபடியால்; அப் பராக்கிரமத்தை உடனே அந்நியருக்கு காட்ட வகையில்லை. ஆயினும், அவனை ஆசையோடு எடுத்துக் கொண்டுபோய் வளர்த்ததாதியானவள் அம்மலை நாட்டில் அகப்பட்ட உபாத்தியாயர்களிடத்தில் சுவல்பக்கல்வியையும், மலையாளர்களிடத்தில் மல்ல யுத்தம், வில்லு யுத்தத் தொழில்களையும், கற்பித்தும், காலம் முதிர, அந்த புக்கனுக்கு அம்மலைநாட்டில் வந்து வளரும் விருத்தாந்தத்தை எல்லாம் சாங்கோபாங்கமாகச் சொல்ல, அவன் கேட்டு தம் விதிவசத்தை எண்ணி துக்கப்பட்டும், அப்போது விஜயநகரத்தில் பிரபலமாக ஆண்டுவந்த புக்கராயலுக்கு தமது உண்மையான நிலைமையைச் சொன்னாலும் கால வித்தியாசத்தினால் காரிய சித்தியடைய வகையில்லை என்றஞ்சியும், அந்தத் தாதியைத் தமது தாயாகப் பாவித்தும், அவள் சொற்படி நடந்தும், மலசர்ப் பிள்ளைகளுக்குக் கல்வியைக் கற்பித்துக் கொண்டும், மலசருக்கு வேண்டிய வேட்டைகளாடியும், சொற்ப பொருள் சம்பாதித்து காலம் கழித்துவந்தான். அவனுக்கு கிட்டத்தட்ட இருபது வருஷ வயது ஆகவே, தாதியம்மாள் பார்த்து இனி அவனுக்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டுமென்று கருதியும், இரவில் யாரிடமும் சொல்லாமலும், ஆனகுந்திக்குப்போயும், அங்கு நரபதி இராமராயலுடைய பூர்வபந்துக்களில் அதிக ஏழைகளாக இருந்த ஒரு குடும்பத்தில் தான் நடத்திய இரகசியங்களை எல்லாம் சொல்லியும் புக்கனுக்கு அங்குள்ள ஓர் நல்ல பெண்ணைப்பார்த்து சம்மதப்படச் செய்வித்தும், அப்பெண்ணையும், அப்பெண் வீட்டாரையும் இரகசியமாக இராக்காலங்களில் துளுவ நாட்டிற்கு அழைத்து வந்தும், மலசர் சமூஹத்தில் மணம் செய்விக்க; அம்மலசர்கள், அந்த வாலிபப் புக்கராயலுடைய பூர்வசரித்திரத்தையும், அவனுக்கு அங்கு நடந்த விவாஹ வைபவத்தையும் கண்டு அவன் சாக்ஷாத் புராதன நரபதி பூபராயலுடைய குமாரனென்று அறிந்து அவனை அந்தத் துளுவநாட்டிற்கு அரசனாகக் கொண்டு அவன் ஆக்கினைக்குள் அடங்கி வாழ்ந்து வந்தார்கள். அந்த புக்கராயலுடைய ஆதிபாட்டன் பூட்டன் தந்தை மார்களாகிய நரபதிராயலு மார்களின் ஆதி வீட்டுப் பெயர்கள் "ஸம்பிதவாரு" "கோட்டவாரு," "கோலவாரு," "தேசாவாரு" என்பவைகளாம். இடையில் காலதேச வித்தியாசங்களினால் அந்த புக்கராயலு துளுவ நாட்டிற்கு அரசனாகியதால் அன்று முதல் அந்த புக்கராயலு குடும்பத்திற்கு "துளுவவாரு" என்ற புது (வீட்டுப்) பெயர் வழங்க நேர்ந்தது.

அந்தத் துளுவ புக்கராயலுக்கு திம்மராயலு என்ற குமாரன் பிறந்தான். அவனும் தம்முன்னோருடைய விஜயநகரத்தை அடைய பிரயத்தனப்பட்டும், காரியசித்தி பெறாமையால், தமது தந்தையைப் போலவே துளுவநாட்டில் ஆண்டுவந்தான்; ஆயினும் அக்காலத்தில் விஜயநகரத்தை யாண்டுவந்த மல்லிகார்ஜுன ராயலும் தமது பிறப்பையும், பாத்தியதையையும் தெரிவிக்க, அவன் உண்மையறிந்தும் தம் ஸமஸ்தானத்தைக்கொடுக்க சம்மதியாமல், அவ

னுடைய இளைய குமாரன் நரசிங்கரார்யலைப் பெனுகொண்டாவுக்கு அதிபதியா
க்கியும், மறுபடியும சில வருஷங்களுக்குள்ளாக அவன் அதிகாரத்தை நீருக்கி,
அவ்விடத்திற்குத் தன் குமாரன் நந்தராஜனை நியமித்து விட்டதாக ஒரு சரித்
திரசதால் தெரியவருகிறது. அந்ததிம்மராயலுக்குப் பிறகு அவர் குமாரர் ஈசுவர
ராயலும் துளுவநாட்டில் சிலகாலம் ஆண்டுவர அவருக்கு நரசராயலு என்ற
குமாரர் பிறந்தும் சகல கல்விகலை ஞானங்களைக்கற்றும் சுத்தவீரனாக இருந்த
மையால், தம்முன்னோருடைய பிதுரார்ச்சித சொத்தாகிய விஜயநகரத்தை நியா
யமூலமாகக் கேட்டும் கிடைக்காததனால், பிறர்சகாயம் பெற்று அந்தக் கோட்
டையின்மேல் படை எடுத்துப்போகப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்க, அந்த
விஜயநகரத்தில் புக்கரார்யலுடைய சமஸ்தானத்துக்குச் சரியான வார்சுகளற்று
பெனுகொண்டாவில் சிலகாயம் ஆண்ட தமது சிறிய தகப்பனாருடைய குமா
ரன் பிரவுடதேவராயலை விரூபாக்ஷிராயலு சுவீகாரம் செய்துகொண்டு விஜயந
கர சிம்மாசனத்திலேற்றின சங்கதியைக் கேட்டு ஆநந்தித்து, தாமும் வந்து சே
ர பிரவுட தேவராயலு 1494-ம் வருஷம் இறந்துப்போக, அவன் மந்திரியாகிய
நரசிம்ம ராயலே அந்த நரபதிச் சக்கிரவர்த்தி பட்டத்தைப பெற்று
ஆண்டுவர ஆரம்பித்தார். மேஸ்டர் சுவேல் அவர்சள் எழுதிய பர்காட்டன்
எம்பயர் சரித்திர புத்தகம் 108-வது பக்கத்தில் விருபாஷிராயலு சிற்றின்
பத்தில் மூழ்கி துவ்ஷ்கிருதியங்களைச் செய்துவருவதைப்பற்றி அவன் மூத்த
குமாரன் அவனைக் கொலைசெய்து விட்டுதான் சிங்காசனமேற, அவனுடைய
சகோதரனாகிய பிரவுட தேவராயலு அந்த மூத்தகுமாரனைக் கொலைசெய்து
பட்டம் கட்டிக்கொண்டதாகவும், அந்த பிரபுடதேவ்ராயலும் திருப்தீகரமாக
ஆண்டு வராமையால் ஸமஸ்தான குடிகளும் பிரபுக்களும் நொந்து அவனைப்
பட்டத்திலிருந்து நீக்கி நரபதி ஸமஸ்த்தானத்தின் ஆதிசந்ததியாகிய நரசிம்ம
இராயலை சிங்காசன மேற்றி வித்ததாக எழுதி இருக்கிறார்.

விஜயநகரத்தில் மறுபடியும் நரபதி ஸமஸ்தான ஸ்தாபனம்.

இப்படி விஜயநகரம் மறுபடியும் நரபதி சமஸ்தானமாகி நரசராயலு
ஆண்டுவர ஆரம்பிக்கையில், ஸமஸ்தான குடிகளும் பிரபுக்களும் சுதந்தர சுக
வாழ்வைப்பெற்றார்கள். பிறகு பீரார் நாட்டு அரசனாகிய காஜாகவான் சாயிபு
இறந்துவிட 1489-ம் வருஷம் ஈசுப் ஆதல் ஷாப் பட்டத்திற்குவர அந்நாடெங்
கும் கலகங்களாகி அல்லோலகல்லோலமாகியது. அதே மாதிரியாகவே அஹமத்
நகரம், பீரரர். பெத்னூர், கோல்கொண்டா முதலானவிடங்களிலும் கலகங்க
ளுண்டாக பாமினி, ராஜியம்பாழடைந்துவந்தது. தென்தேசத்தின்ஸ்திதி இப்
படி இருக்க, வடக்கே 'பேபர்' என்பவன் படை எடுத்துவந்து டில்லியைப்
பிடித்து மோகல்ராஜியத்தை ஸ்தாபித்தும், இந்தியாவிலுள்ள மகமதிய சிற்றரச

ர்களுக்கெல்லாம் உதவிபுரியச் சித்தமாக இருப்பதாகச் சங்கதி அறிவித்தான். அப்போது ஐரோப்பாகண்டத்தைச் சார்ந்த போர்த்துகல்லிலிருந்து 1498ஹூம் ஆகஸ்டு மாதம் 26ம் தேதி வாஸகோடிகாமா என்பவன் மலையாளக்கரையி லிறங்கி வர்த்தகம் செய்ய ஆரம்பித்தான். இப்படிப்பட்ட நவீன சம்பவங்கள் நடக்கும் காலத்தில் அரசாக்ஷிசெய்ய ஆரம்பித்த நரசராயனின் ஸ்திதி எப்படி இருக்கவேண்டும்.

நரபதி நரசராயலு ஸமஸ்தானம்.

கி பி-1490-ஹூ-ம் முதல் 1497-ஹூ-வரையில்

அப்படி தமது பிதுரார்ச்சித ஸமஸ்தானத்தை குடிகளுடையவேண்டுகோ ளின்படி அடைந்த நரசராயலு சந்திரவமிச க்ஷத்திரிய ஆந்திரர். அவர் வீட் டின் பெயர் கோட்டவாரு. அதாவது அவருடைய ஆதி தாய்தந்தைகள் மகத நாடு அல்லது புஷ்பபுரி கோட்டையிலிருந்து வந்தவர்களானபடியால், அவர் கள் வீட்டின் பெயர் கோட்டைவாரு என்றாயிற்று. மத்தியகாலத்தில் கால வித் தியாசத்தினால் தமது தாய்தந்தைகள் துளுவநாட்டிலாண்டு வந்ததைப்பற்றி துளுவவாரு என்றுசில சரித்திரக்காரர்கள் வழங்கிவருகிறார்கள். இதற்குமுன் விஜயநகரம்ஆண்ட புக்கராயலு முதலானவர்கள் சைவர்களாக விருந்தார்கள். நரபதி நரசராயலு குடும்பத்தார் ஆதியில் புத்தர்களாகவும், பிறகு சைவர்க ளும் இருந்து, பிறகு வைணவர்களாகிவிட்டார்கள். அப்படியாகினும், சகல மதஸ் தரிடத்திலும் சமரச மரியாதையுடையவர்களாக இருந்தார்கள். அவருடைய மந்திரி மஹாமதியூகியென்று பிரபலப் பெயர்பெற்ற சாலுவதிம்மரசு அல்லது அப்பாஜீ என்பவர்.

அந்த நரசராயலுக்குத் திப்பாம்பாதேவி, நாகாம்பிகாதேவி, உமாம்பிகா தேவி, என்ற மூன்று மனைவிகளிருந்தார்கள். அவர்களில் திப்பாம்பாதேவி வயிற்றில் 'வீரநரசிம்மராயலும்', நாகாம்பிகாதேவிக்கு 'கிருஷ்ண தேவரா யலும், உமாம்பிகாதேவி'க்கு அச்சுததேவராயலும், அரங்கதேவராயலுமாக நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். வேறொரு சாசனத்தினால், நரசராயலு க்கு புஜபலராயலு என்ற ஜேஷ்ட குமாரர் பிறந்து 6 வருஷகாலம் சமஸ் தானத்தை அதிககம்பீரமாக ஆண்டுவந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற் றொரு சாசனத்தில், வீர நரசிம்மலு ராயலுக்கே புஜபலராயலு என்ற பெயரும் வழங்கி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (Vide P. 110. A Forgotten Empire by Robert Sewell) அப்படிப் பிறந்த ஆண்மக்களுக்கு க்ஷத்திரிய தருமத்தின்படி சிறுவயதிலேயே கல்வி ஞானத்தையும், வில்வித்தைமல்ல யுத்த முதலான பயிற்சிகளையும்போதித்து, சமஸ்தானத்துக்குத் தக்கபடி வளர் த்தினார்கள்,

அந்த நரசராயலு காலத்தில் நடந்த விசேஷங்களைப்பற்றி அநேக சாசனங்கள் இருக்கின்றன. அவைகளில் அவர் திக்கு விஜயம் செய்து துவஜஸ்தம்பத்தை நாட்டியதையும், களிங்கன், யவனன், முதலான ராஜர்களை ஜயித்ததையும், விஜயநகரத்தில் ராயலு சமஸ்தானத்தை ஊர்ஜிதமாக்கியதையும், குந்தலேசுவரனை ஜயித்து பீஜப்பூரைச் சுவாதீனமாக்கிக் கொண்டதையும்; மாளவதுருக்க சீமையில் பாரசிகர் முதலானவர்களை ஜயித்தும், சோழபாண்டியருடன் சண்டை செய்து அவர்கள்நாடுகளை வசமாக்கியதையும், ஸ்ரீரங்கபட்டணத்தில் ஹான நரேந்திரனோடு சண்டைசெய்து ஜயித்ததையும், தான் மண்டலீக 'மேகமராண்டன்' என்ற பிருதை வகித்துக் கொண்டதையும் சொல்லியிருக்கின்றது. ஆயினும் 'நரசராயலு விஜயம்' என்னும் அவர் சரித்திரத்தைச் சோதிக்கையில், அந்த நரசராயலு தென் சமுத்திரம் வரையில் நேராகப் போய் இடையிலுள்ள சேர சோழ பாண்டியர்களை ஜயித்தும், அவர்களிடம் கப்பம் வாங்கிக்கொண்டு, இராமேசுவரத்தையும், ஸ்ரீரங்கத்தையும் தரிசித்துக் கொண்டும் அவ்விடங்களில் அநேக தருமங்களைச் செய்தும், காவிரிநதியில் குடிகளுக்கேற்ற அணைகளைக் கட்டித் தடுத்து அநேக வாய்க்கால்களை வெட்டிப் பயிர்பச்சைகளைச் செழித்தோங்கச் செய்வித்தும், அங்குள்ளகோயில் கோபுரங்களுக்கு அநேக மானியங்களையும் தருமங்களையுந் தந்தும்; ஸ்ரீரங்கத்திற்கும், காஞ்சீபுரத்துக்கும் மத்தியில் தாம் குடியிருந்து விஷ்ணுவை வணங்க வேலூரில் ஒரு கோட்டையையும்; அதற்குள் அநேக கோயில் கோபுர வீடுகளையும் கட்டிவைத்தும், அதில் கொஞ்சகாலம் இருந்தும், அது பகைவர்வந்துத் தாக்க வசதியாக இருக்கக்கண்டு, அதை விட்டு மலைகளால் சூழ்ந்த அரணுள சந்தரகிரியில் ஒரு கோட்டையைக்கட்டி, அதில் தமது பொக்கிஷத்துடன் சிலகாலம் வாழ்ந்தும், பிறகு வடக்கே மகமதியர் கலகம் செய்த படியால் அவர்கள்மீது படையெடுத்துப்போய் ஜயித்தும், கங்கைக்கரைவரையில் தமது இராஜியத்தைப் பரவச்செய்தும் ஜயசீலனுகிவந்து விஜயநகரத்தமர்ந்தும், வயோதிகம் வருவதற்கு முன்பே தமது ஜேஷ்ட குமாரர் வீரநரசிம்மராயலுக்கு சக்கிரவர்த்தி பட்டங்கட்டியும், தம் இளைய குமாரர்களான கிருஷ்ணதேவராயலு, அச்சுததேவராயலு, ரங்கதேவராயலு அவருக்குதவியாக விருக்கச்செய்தும், அவர்கள் யாவரும் சாலுவதிம்மரசு என்னும் அப்பாஜியை மந்திரியாகக் கொண்டு அரசசெய்ய வேண்டுமென்று திட்டப்படுத்தியும், இவ்விதயாகக் 13 வருஷங்களாண்டபிறகு சாலிவாஹன சகாப்தம் 1401-ம் வருஷம் சார்வரி நாமசம்வச்சரமாகிய கி. பி. 1498-ம் வருஷம் பரமபதமடைந்தார்.

வீரநரசிம்மராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1497-முதல் 1598 ஹு வரையில்.

---

* அந்த நரசராயலுக்குப் பிறகு அவர் ஜேஷ்டகுமாரர் வீரநரசிம்மராயலு சாலிவாகன சகாப்தம் 1410-வருஷம் (சார்வரி நாம சம்வச்சரம்) சிங்காசனமேறின

டனே தமது அதிகாரத்துக்குட்பட்ட அநேகபெருநில குறுநில மன்னர்க ளிடம் சப்பம்வாங்கி வந்தாலும்; மைசூர் ஸமஸ்தானத்தாரும், கர்னாடகத்தைச் சார்ந்த உம்மத்தூர், தலைநாடு முதலான விடங்களிலுள்ள பாளையக்காரர்கள் நாம் கப்பங்கட்டமாட்டோமென்று கர்வத்தைக் காட்டியதனால், அந்நாடுகளு க்குத் தமது தம்பிமார்களாகிய கிருஷ்ணதேவராயலையும், அச்சுத தேவராயலை யும் தகுந்த சேனையோடு அனுப்பி அவர்கள் கொட்டத்தை அடக்கி கப்பம் வாங்கிக்கொண்டு வாழ்ந்து வருகையில், 1498 வருஷம் போர்த்துகல் தேச த்து 'வாஸ்கோடிகாமா' வின் கப்பல் 'கார்வார்' கரைக்கு வந்தது. 1503 வரு ஷம் போர்த்துக் கேசியர் ஹானிவர் கோட்டையைத்தாக்க அந்நகரத்தை நெருப்புக்கிரையாக்கி விட்டார். பிறகு அவர்கள் பட்கல்ம என்னும் இடத்திற் குப் போய்த்தாக்கி ராயலு அனுமதியினால் 1505 வருஷம் அஸ்ஜிடிவ் (Anjdiv) என்ற விடத்தில் கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள். அந்தப் போர்த்து கேசியருக்கு (Almeyda) அல்மீடியா என்பவர் பிரதிநிதியாக இருந்தார், அந்த பிரதிநிதிக்கு நரசிம்மராயலு ஒரு தானாதிபதியையனுப்பிச் சமாதானம் செய்துகொண்டார்.

அந்தக்காலத்தில் இடாலியா யாத்திரைக் காரராகிய (Vartheema) வர்த்தமா' என்பவர் கனராவையும், விஜயநகரத்தையும் வந்து நேரில் பார்த்து கழ்ந்து எழுதியிருக்கிறார். அதாவது விஜயநகரம் அப்போது பூலோகத்தில் ர் விசித்திர பட்டினமென்றும், அதை ஆண்ட நரசிம்மதேவராயலு கோடீசு ரரென்றும், அவருக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 15,00,000 பவுன் அல்லது 2,25,00,000 ரூபாய் வருமானம் என்றும், அவரிடம் 49,000 குதிரை ரர்களும், 4,000 யானைகளும் இருந்தனவென்றும், அந்தராயலு வெளியில் றப்படும்போது அவருடன் 5,000 குதிரைகளும், அனேக இராஜர்களும், ரபுக்களும் புறப்பட்டு மரியாதை செய்கிறார்களென்றும், அவர் சமஸ்தானத் ல் திருடர் துஷ்டர் பயம் இல்லையாதென்றும் எழுதியிருக்கிறார். அந்த நர ம்மராயலுடைய ஜயாதிபராக்கிரமத்தைப்பற்றி பாரிஜாதபஹரணத்தில்.

సీ॥ కుంతలేశ్వరుడు చిక్కుపడంగ విద్యాపురంబునకై కొవి। నిజ
ప్రౌఢిచెలఁపెఁ। వారసీకునకు దుర్భరమానవత్వంబుఁ। దొల
గించె మానవదుర్గసీమ జ్రోలవల్లభునకు సురవధూమదురాధర
ముచ్చి మధురాపురంబు గొనియె। శ్రీరంగపట్టణ సీమఖడ్గనటీ
వినోదంబు। చూపసేంధునకుజూ॥

సీ॥ నతఁడు నుతికెక్కె రామసేత్వంతరాళ
కలితహాటకశ్రుతదానవిఖ్యాతయశుఁడు
మండలీకరమేఘమార్తాండబిరుదుఁ
డీశ్వరాధిపునరస పృధ్వీశ్వరుండు.

என்று சொல்லி இருக்கும் கவியால் காணலாம். அப்படி பிரபலத்தோடு 1 வருஷகாலம் ஆண்ட வீரநரசிம்மராயனை 'இராஜாதிராஜ ராஜ பரமேசுவர பிரவுட பிரதாப வீரநரசிம்ம மஹாபுஜபலராயலு' என்று புகழ்ந்துகொண் டாட சாலிவாஹனசகாப்தம் 1430 (கி-பி 1509) (ருத்திரோத்காரி) வருஷம் விஷ்ணுபதமடைந்தார். அவருக்குப் பிறகு அவருடைய தம்பி ஸ்ரீகிருஷ்ண தேவராயலு சிங்காசனமேறினர்.

ஸ்ரீ கிருஷ்ணதேவராயலு ஸமஸ்தானம்.

1509-ஹூ முதல் 1530-ஹூ வரையில்.

ஸ்ரீகிருஷ்ணதேவராயலுடைய ஜனனத்தைப்பற்றி ஒரு விநோத கதை உண்டு. அதாவது:—அவரது தந்தைக்கு முதல் குமாரனாகிய வீரநரசிம்மராயலு பால்யத்தில் சரீரதிடனற்றும், சோம்பலாகவும் இருந்தமையால், அப்படிப்பட்டவன் தனது பெரிய இராஜ்யத்தை நிருவகிக்க முடியாதென்றும்; ஆகவே, சுறுசுறுப்பும் சுத்தவீரனாகவுமிருக்கும் ஒரு மகன் பிறக்கவேண்டுமென்றும் சதாசகதீசுவரனைத் தியானித்தும், அநேக ஜோசியர்களுடன் ஆலோசனை செய்தும் வருகையில், அந்த ஜோசியரில் வல்லவனான ஒருவன், இராயலைப் பார்த்து, "வேந்தே, விசனப்படவேண்டாம், வெகு சமீபசீக்கிரத்தில் விண்ணுல கில் ஒரு விசேஷமான வெள்ளி ஜ்வலிக்கப்போகின்றது, அதை ஜாக்கிரதை யாகக் கவனித்துப்பார்த்து, அன்றிரவு தமது பட்டமகஷியோடு சேர்ந்தால் உடனே கர்ப்பமாகி ஜகதலப் பிரதாபனாகும்படியான ஒரு சுத்தவீரன் பிறப் பான்" என்று சொன்னான். அந்த வாக்கியத்தை நரசராயலு வெகு கவனத் தோடு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்க, ஒரு நாள் இரவு படுத்து நித்திரை செய்து, நடுராத்திரியில் நித்திரைத் தெளிந்து வெளிக்குவர, அப்போது ஆகா யத்திலிருந்து அதிக அற்புதமான ஒரு நக்ஷத்திரம் அந்த அரசன் காலலும்ப கொண்டுபோய் அருகில் வைத்திருந்த பாத்திரஜலத்தில் பிரகாசத்துடன் பா த்துவிழுந்தது, உடனே இராயலு அது சங்கதியை சேவுகாரன் மூலியமாய் தமது மந்திரி சாளுவதிம்மரசுக்கு அறிவித்தார்.

அந்த இம்மரசு கேட்ட உடனே ஜோசியன் சொன்ன வாக்கியத்தை நினைத்து வேவுக்காரனைப்பார்த்து, "ஓடிப்போய் இராயலவர்களைத் தம்மருகிலிருக்கும் பாத்திர ஜலத்தில் நக்ஷத்திரம் விழுந்ததாகச் சொன்னோமே, அந்த ஜலத்தை உடனே குடித்துவிட்டு, தமது பட்டமஹிஷியோடு சேரும்படிச் சொன்னதாகச்சொல்" என்று சொல்லியனுப்ப. அந்த வேவுகாரனும் ஓடிவந்துஅப்படியேச் சொல்ல, இராயலவர்களும் அருகிலிருந்த ஜலத்தை உடனே பானம் செய்தும், தம் பட்டமஹிஷியைப் பள்ளியறைக்கு வரும்படி கட்டளையிட்டார். அந்த வேவுகாரனும் ஓட்டமாக ஓடிப்போய் பட்டமஹிஷியிடம் சங்கதியைச் சொல்ல, அந்த மஹாராணி தன் அந்தஸ்துக்குத் தக்கபடி ஆடையாபரணங்களைச் சாவதானமாக அணிந்துக்கொண்டுவர, "ஐயர் வருகிறதற்குள் அமாவாசை யோடிப்போய்விடும்." என்னும் பழமொழிப்படி அந்தப் பட்டமஹிஷி வருவதற்குள் குறித்த நல்ல முகூர்த்த காலம் முடிந்துவிடுமென்று எண்ணி; இராயலு உடனே தமது பள்ளியறையில் விளக்குகளைத் தூண்டி விசிறியை வீசும் கன்னிகையான ஒரு நாகாம்பாளைக்கூட, அந்தப்பெண் கர்ப்பவதியாகி பத்தாம் மாதத்தில் பாலசூரியனைப்போன்ற பிள்ளையைப் (கிருஷ்ணதேவராயலை) பெற்றாளாம். அந்த கிருஷ்ணதேவராயலு பிறந்த காலத்தைப் பற்றி.

ఉ॥ అంచలిశాలివాహన శకాబ్దముల ద్రివసుత్రిసోములన్ వందితమై
నయవిక్రృతి వత్సరమందలి పుష్యమాసమందుందగు - కృష్ణపక్ష
ముననుండెడి ద్వాదశి శుక్రవాసరంబందు దయించెఁ గృష్ణుఁడు
శుభానితుఁడా సరసింహము ర్రికిన్॥

மேலேகாட்டிய கவியினால் கிருஷ்ணதேவராயலு கி-பி 1465௵த்துக்குச் சரியான சகாப்தம் 1387௵ம் விகுருதி வருஷம் புஷியபஹுளா துவாதசி வெள்ளிக்கிழமைதினம் பிறந்ததாக பிரதியக்ஷமாகிறது.

ஸ்ரீகிருஷ்ணதேவராயலுடைய ஜாதி.

கிருஷ்ணதேவராயலு சந்திரவமிச க்ஷத்திரயர் குலதிலகனாகினும், அவருடைய முன்னோர்களிற் சிலர் துளுவநாட்டில் சிலகாலம் வதிந்து வந்தபடியால் துளுவ தேசஸ்தார் என்றும், அவருடைய வீட்டின் பெயர்கள், சாலுவவாரு, சம்பெட்டவாரு, சேலகோலவாரு என்றுதிகளென கொண்ட வீட்டி கவிகள் சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் சந்திரவமிசத்தார் என்று மறு சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

எப்படியேனில்.

కృష్ణరాయని పూర్వుల వృత్తాంతము.

కృష్ణరాయని పూర్వులవంశము చంద్రవంశమైనట్లును, తుళువ

యను పౌపషనామంబుగలది ఆయినట్లునీక్రింది పద్యమువలనంగా న్పించు ... మనుచరిత్రములో

చంద్రవంశములో నొకపురుషుడు.

క॥ అతనికి యదు దుర్వసులను
సుతులుద్భవమంది హితసూదనులుబలా ।
న్వితమతులు వారిలోలి ।
శుభ్రతకీర్తివహించె దుర్వసుడుగుణనిధియై॥

గీ॥ వానివంశంబుతుభు వాన్వవాయమయ్యె ।
అందుబెక్కండ్రు నృపులుదయంబునంది ।
నిఖిలభువన ప్రపూర్ణ నిర్నిద్రకీర్తి ।
నధికులయిరి తదీయాన్వయమునబుట్టి॥ అని.

அப்படி அந்தக் கிருஷ்ணதேவராயலு பிறந்த உடனே இராயலுக்கு அநேக நல்ல சகுனங்களுண்டாகிச் சந்தோஷத்தை விருத்தியாக்கியதுடன், பீஜப்பூர் ஸமஸ்தானம் முழுதும் இராயலுக்குச் சொந்தமானபடியால், நரசராயலு மகிழ்ந்து, அந்தக் கிருஷ்ணராயலு மஹா அதிர்ஷ்டசாலியாவானெனக் கொண்டு, நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்து வந்தாராம்.

இதையறிந்த அந்த ராயலுடைய மற்றமனைவிகள் "இனி இந்த கிருஷ்ணராயலு உயிருடனிருந்தால், தம் மக்களுக்கு ஸிங்காசனம் கிட்டாதென்றஞ்சி, அம்மகவை அரண்மனைக்குள்ளாகவே கொன்றுவிடவேண்டுமென்று இரகசியமாகக் கொலைப் பாதகரைத் தூண்டி வந்தார்களாம். அந்தச் சூதையறிந்த சாலுவ திம்மரசு என்னும் மந்திரி, அக் கொலைபாதகரைத் தம்வசப்படுத்தியும், அவர்கள் வசத்திலிருந்த கிருஷ்ணதேவராயலு என்னும் பிள்ளையைத் தாம் பெற்றுக்கொண்டும், அப் பிள்ளைக்குப் பதில் ஒரு பக்ஷியைக் கொடுத்துக் கொல்லச்செய்து அதன் இரத்தத்தை இராஜமஹிஷிகளுக்கு காட்டும்படி செய்து இருட்டியாக்கிவிட்டும்; கிருஷணராயலு என்னும் சிசுவைத் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து போஷித்துபாதுகாத்தும், பலகலைகளையும் போதித்துவர, அந்தப் பாலியனான கிருஷ்ணதேவராயலு, சாலுவதிம்மரசு தான் தனது பிதாவென்றும், அவரை; அப்பாஜீ' என்று அழைத்துவர, அந்த மந்திரிக்கு அன்று முதல்

"அப்பாஜி" யென்று பெயரே அதிக பிரபலமாகிவிட்டதாம், அந்த அப்பாஜியும் அந்தக் கிருஷ்ணதேவராயலை அதிக காருணியத்தோடும், கருத்தோடும், வளர்த்துவந்தாராம்.

அப்படி கிருஷணதேவராயலு தம் மந்திரி வீட்டில் வளர்ந்துவர. அரண்மனையிலிருந்த தந்தையாகிய நரச இராயலுக்கு இச்சங்கதிகளை அறிவிக்காமல், கிருஷணராயலு என்னும் சிசு மாந்தத்தினால் இறந்துவிட்டதென்று பெண்டுகள்கூடி பெரும் பொய்யைச்சொல்ல, அந்த அரசனும் அது உண்மை என்று நம்பி, அன்று முதல் நல்ல ஆஹாரமும் நித்திரை முதலானவைகளுமற்று வியாகூலராக காலங்கழித்துவர; வியாதியும் மேலிட்டு, இனி பிழையோமென்றெண்ணி, தமது மந்திரி சாலுவதிம்மரசையும், தமது மூத்த மனைவியின் மக்களையும் அருகில் தருவித்தும், தமது சுண்டுவிரலில் அணிந்திருந்த இராஜ முத்திர மோதிரத்தை எந்தமகன் பிடுங்க வல்லவனோ, அவனுக்குத் தான தமது இராசியம் கொடுப்பதாகச் சொல்ல; அந்த ராஜபுத்திரர்கள் அந்த மோதிரத்தைப் பிடுங்கப் பலபாடுபட்டும், மோதிரமணிந்த விரலில் வீக்கமிருந்தபடியால், அதைப்பிடுங்க வகையற்றுத் தவிக்க; அரசன் திம்மரசைப்பார்த்து "மதியூகியாகிய மந்திரியே! இப்போது கிருஷ்ணதேவராயலு உயிருடனிருந்தால் இம்மோதிரம் இதுவரையில் என் விரலிலிருக்குமோ?" என்று விசனப்படுகையில், திம்மரசுப்பார்த்து "வேந்தே விசனப்படாதே, உமது கிருஷணதேவராயலு இறந்துப் போகவில்லை, என் வீட்டில் சுகமாக வளர்ந்துவருகிறான், ஆக்கினை கொடுத்தால் அழைப்பிக்கிறேன்" என, 'இராயலு சொல்லிமுடியாத சந்தோஷமுற்று உடனே அருகில் தருவிக்கச்செய்து கிருஷ்ணதேவராயலைக் கட்டித்தாவி முத்தமிட்டும். அந்தப்புரத்து அஞ்ஞான அரிவையர்செய்த சதி மோசத்திற்காக விசனப்பட்டும், கிருஷணராயலை எறிட்டுப்பார்த்தும், தன் கை விரலிலிருக்கும் மோதிரத்தைக் கழற்றும்படி சொல்ல, அந்தக் கிருஷ்ணதேவராயலு மகாபுத்திசாலியானபடியால், அந்த மோதிரமணிந்த விரலுக்கு ஒரு ஈரத்துணியைச் சற்றுநேரம் சுற்றிவைத்து வீக்கம் நீங்கியபிறகு அம்மோதிரத்தை லகுவில் கழற்றிக்கொடுத்தான். இராயலுக்கு அதிக சந்தோஷமுண்டாகி, அந்தக் கிருஷணராயலே தமது சிங்காசனத்துக்குத் தக்கவனென்றும், ஆயினும் மூத்தகுமாரன் வீரநரசிம்மராயலு காலம்வரையிலும் அவனுக்கு உதவியாக இளவராசு பட்டம் தரிக்கவேண்டுமென்று மந்திரியிடம் சொன்னதாகவும் சிலராற் சொல்லப்பட்டு வருகின்றது.

இந்தக்கதை உண்மையானதோ என்று நரபதிகளுடைய வம்சாவளியைக் காட்டும் வித்தியாநகர இராஜ சரித்திரம், பிரவுடதேவராயலும் சரித்திர, கொண்ட விடுதண்டகவியிலும், மநு சரித்திரம், பாரிஜாதாபஹரணம் முதலானகிரந்தங்களையும், அநேக சிலாசனங்களையும் கொண்டு பரிசோதிக்கையில், இது பொய்யான கதையென்றும், கிருஷ்ணதேவராயலுடைய தாயாராகிய 'நாகாம்பாதேவி' சந்திரவமிச க்ஷத்திரிய குலஸ்திரி என்றும், அவள் நரசிம்ம

தேவராயலுடைய இரண்டாந்தாரமாகிய தருமபத்தினி என்றும் தெரிய வருகிறது.

கிருஷ்ணதேவராயலு தமது தமயனார் இறந்த பிறகு

சகாப்தம் 1430-க்கு விபவ வருஷம் சித்திரை மாதம் (கி. பி. 1509-ம் வருஷம் பிப்ரவரிமீ 4உ) சிங்காசன மேறியதாக அனேக சரித்திரங்களினாலும், சாசனங்களினாலும் ஸ்பஷ்டமாகிறது. அவரைத் திம்மரசு என்னும் மந்திரி நல்ல சுபமுகூர்த்த காலமறிந்து தேவபிராமண பூஜைகளைச்செய்வித்தும், அனேகமுடிசார்ந்த மன்னர்கள் பந்து மித்திரர்களுக்கு முன்பாகவும், சாஸ்திர பத்ததியாகவும், சடங்குகளை நடப்பித்தும், சிங்காசன மேற்றியதாக ஒரு சாசனத்தில் ஸ்பஷ்டமாகிறது.

அப்படி சிங்காசனமேறிய கிருஷ்ணதேவராயலு, தமது மந்திரி திம்மரசை அருகில் அழைத்து தமது சமஸ்தான சங்கதிகளை எல்லாம் சாங்கோபாங்கமாக அறிந்தும், இராக்காலங்களில் மாறுவேடம் பூண்டு வீதி வீதியாக உலாவிக் குடிகளுடைய சுகதுக்கங்களை நேர் நேராகக் கேட்டும், அரசுசெய்து வருங்காலத்தில்; பிரதாபருத்திரனாகிய கஜபதிராஜனும், நைஜாமும் வேறு சில குறுநிலமன்னர்களும் கிரமமாக தம் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதாமல் கஷ்டப்படுத்தி வருவதையும், தமக்குச் செலுத்தவேண்டிய கப்பத்தைக் கிரமமாகச் செலுத்தாமல் அசட்டை செய்துவருவதை அறிந்தும்; பெரிய தண்டு தளாதிகளுடன் படையெடுத்தும், கிருஷ்ணா நதியைத்தாண்டிப்போய் கோல்கொண்டாவை முற்றுகைப்போட்டு அங்கிருந்த மகமதியர்களை ஜயித்தும், அருகிலிருந்த அகமது நகரத்துக்குப்போய் அதைப் பிடித்தும், அங்கு தமது ஜயஸ்தம்பத்தை நாட்டியும்; கஜபதி சமஸ்தான நாட்டின் வழியாகத் திரும்புகையில், அந்த கஜபதியும் கப்பங்கட்டாத்தைப்பற்றி சண்டை செய்ய ஆரம்பிக்கையில்; அந்தக் கஜபதி ஜகந்நாதத்திலிருக்கும் மஹாவிஷ்ணு பக்தனென்றும், சதாபிராம்மண சாதுஜனபோஷகனான சொந்த பந்துவென்றும், அப்படிப்பட்டவன்மேல் படை எடுப்பது தருமமல்லவென்றும், திம்மரசு மந்திரி தடுத்துச் சொல்லியும்; கிருஷ்ணதேவராயலு கேளாமல், படை எடுக்க; அப்படைகள் அங்கிருந்த பயங்கரமான வனந்துக்குள் சண்டைக் கோலமாகப்போக, அங்கு சித்தாவுத்கான் என்னும் மஹமதிய வீரன் 60-ஆயிரம் சேனையோடுவந்து தாக்க, உடனே கஜபதியின் சேனைகளும், சித்தாவுத்கான் சேனைகளும் பந்தத்தால் மற்றோர் புறம் வந்து கிருஷ்ணதேவராயலை வளைத்துக்கொள்ள, கிருஷ்ணதேவராயலுடைய சேனைகள் வேறு வழிப்போக வழியற்றுத் தவிப்பதைக் கிருஷ்ணதேவராயலு கண்டு ஓ ஹோ! மந்திரி திம்மரச வார்த்தையைக் கேளாமையால்

இந்த வம்புவந்து வாய்த்ததே என்று முகம்வாடி நிற்பதைத் திம்மரசு மந்திரி பார்த்து "வேந்தே விசனப்படாதே," மிஞ்சிப்போன காரியத்தை எஞ்சி யெஞ்சி யோசிப்பதில் பிரயோசனமில்லை; இந்த அசந்தர்ப்பத்தில் இராஜ தந்திரமாக காரியத்தை முடித்தால்மாத்திரம் காரிய சித்திப்பெறலா" மெண, கிருஷ்ணதேவராயலு "அஃதெப்படி" என, "இதோ செய்கிறேன் பாருங்கள்" என்று அடியில் கண்ட உபாயத்தைச் சொன்னார். அதாவது:—

இந்தச் சண்டையில் அதிக வீரதீரனுன மகமது சிதவத்கானுக்கு ஒரு கடிதமெழுதி, அக்கடிதத்தில் "ஐயா, தாங்கள் முன் கிருஷ்ணதேவராயலுக்கு ஒப்பந்தம் செய்து கொடுத்தபடி, கஜபதி பிரதாப ருத்திரரை உயிருடன் பிடித்துக் கொடுத்தால் உமக்கு வாக்குத்தத்தம் செய்தபடி ஓரங்கல் கோட்டையையும், பின்னு மநேக கிராமங்கள் தண்டுதளாதி ஆபரணங்களையும், பஹுமான மாகத் தரச் சித்தமாக இருக்கிறோம்; அதற்கு அத்தாக்ஷியாக இக்கடிதத்துடன் சில ஆடை ஆபரணங்களை அனுப்பி இருக்கிறோம். அங்கீகரித்துக்கொண்டு இது சங்கதியை யாவருக்கும் அறிவிக்காமல் அதிக அந்தரங்க சங்கதியாக வைக்க வேண்டும்.

இப்படிக்கு இஷ்டன்
மஹாமந்திரி
"சாலுவ திம்மரசு"

என்று எழுதி கிருஷ்ணதேவராயலுக்குக் காட்ட, கிருஷ்ணதேவராயலு பார்த்து இப்படிப் பட்ட காரியம்செய்ய இஷ்டப்படாதவராக இருந்தும், இராசநீதி விஷயத்தையும், காலதேச வர்த்தமானத்தையும் அறிந்து, மந்திரியின் இவ்விதமான தந்திரக் கடிதத்தை அங்கீகரித்தார். இதை அங்கீகரிக்கவே,

உடனே திம்மரசு மந்திரி, அந்தக்காகிதத்தையும், அத்துடன் சில ஆடை ஆபரணங்களையும் சேர்த்து அவைகளை (சிதவுத்கானுக்கு அனுப்பாமல்) கஜபதி ராயலிடம் நேரில் கொடுக்கும்படி வேவுகாரனிடம் கொடுத்தனுப்ப, அந்த வேவுகாரனும் வாயுவேக மனோவேகமாக ஓடி பிரதாபருத்திர கஜபதிராயவிடம் கொண்டுபோய்க் கொடுக்க, அவர் யாதோ சமாதான உடன்படிக்கைக் கடிதமென்றெண்ணி, தம் யானையை விட்டிறங்கி அந்தரங்கமான விடத்திற் கொண்டுபோய் வாசிக்க, அதிற்கண்ட சங்கதியினல், அது மகமது சிதவுத்கானுக்கு எழுதிய கடிதமென்றும், அது வகைமோசமாக தம்மிடம் வந்து விட்டதென்றும், இனி அதில்கண்டபடி சிதவுத்கான் தம்மைப் பிடித்து கிருஷ்ண தேவராயலிடம் ஒப்புவித்து விடுவானென்றும் பயந்து, எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, ஏங்கித் தேங்கித் தவித்துத் தலைகுனிந்து நிற்க, அவருடைய சேனைகள் அவர் வெகு நேரமாக யுத்த களத்தில் வராதிருப்பதைக் கருதி கஜபதிக்கு யாதோ கெடுதி அல்லது பகைவரால் கொலை சம்பவித்ததென்றெண்ணிப் பயந்து பலபக்கமும் பரந்து ஓடிவிட்டார்கள்.

இத்தியாதி சங்கதிகளைக்கண்ட வேவுகாரன் ஓடிவந்து, திம்மரசு மந்திரியிடமும் இராயலிடமும் சவிஸ்தாரமாகச் சொல்ல, திம்மரசு தம் பல்லக்கு ஏறி இராயலைப் பாதுகாக்கவேண்டிய சேனையை அவரிடம் விட்டு, அவருத்திரவின்படி சிலதண்டுதளங்களைக் கூட்டிக்கொண்டு கஜபதி ஸமஸ்தானக் கோட்டைக்கருகில் வந்து, கஜபதிக்கு தாம் சமாதானம்செய்ய வந்திருப்பதாகச் சங்கதி சொல்லியனுப்பினர்.

கஜபதியும், அவருடைய மந்திரி முதலானவர்களும் சாலுவதிம்மரசை மரியாதையுடன் அழைத்துக்கொண்டு கோட்டைக்குள்ளேபோய் க்ஷேமசமாசாரங்களைப் பேசியபிறகு, திம்மரசு, கஜபதியைநோக்கி, "பிரபுவே, நரபதி சமஸ்தானத்தாரும், கஜபதிசமஸ்தானத்தாரும் இந்துக்களாகவும், சந்திரவமிசக்ஷத்திரியர்களாகவும், மாமன் மருமகன் வரிசையான பந்துக்களாகவும் இருக்க, நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொண்டும், இந்துக்களுக்குப் பொதுப்பகையாளியான மகமதியரை இந்நாட்டை விட்டு ஓட்டுவதைவிட்டு, அவர்களைச்சிநேகிதர்களாகக்கொண்டு உங்கள் பொது குடும்பத்தைப் பாழ்த்துப் போகச்செய்வது இந்து மதஸ்தர்களுக்குத் தருமமல்லவே" என்று புத்திமதிகளைச்சொல்ல, கஜபதியின் மனதும் கரைந்து திம்மரசு வாக்கைத் தேவவாக்காகக் கொள்வதாகச்சொல்ல, திம்மரசு பார்த்து,

"ஓ! பிரதாபருத்திர கஜபதியே, உமக்கு அதிக ரூபலாவண்யமான குமாரத்தி இருப்பதாக கேள்விப்படுகிறேன், அந்தப்பெண்ணுக்கு ஏற்ற புருஷன் கிருஷ்ணதேவராயலைவிட சிறந்தவர் யாருமில்லை. உங்களிருகுடும்பத்தார்களும் எப்போதும் மாமன் மச்சான் உறவினானபடியால், தங்கள் பெண்ணைக் கிருஷ்ணதேவராயலுக்கு விவாஹம் செய்துகொடுத்துவிட்டால், உங்கள் பழய பந்துத்துவமும் போகாமல் நீடிக்கும், மேலும் நீங்களிருவரும் இவ்விதமான சம்பந்தத்தினல் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு உதவியாக நிற்கில், உங்கள் சமஸ்தானங்களின்மேல் மகமதியர் முதலான வேறு நாட்டு மதஸ்தர்கள் அடி எடுத்துவைக்க வழியில்லை. இது விஷயத்தில் உமதிஷ்டம் என்ன" என்று, திம்மரசு கேட்க. பிரதாபருத்ர கஜபதிராயலும் கேட்டு கால தேச வரத்தமானங்களைத் தழுவியும் 'அப்படியே யாகட்டும்' என்று சம்மதிப்பட்டு அந்தத் திம்மரசை அந்தபுரத்துக்கு அழைத்துப்போய் தமது குமாரத்தியின் அழகிய அரண்மனையையும், ரூபபடத்தையும் காட்டி, அவள் அன்போடு வளர்த்துவந்த பஞ்சவர்ணக்கிளியையும் கிருஷ்ணதேவராயலுக்கு பருமானமாகக் கொடுத்தும் திம்மரசுக்கும் தக்கமரியாதைகளைச் செய்தும், நல்ல சுபமுகூர்த்த காலமறிந்து வந்து நிச்சய தாம்பூல முகூர்த்தம் நடப்பிக்க வேண்டுமென்றும் சொல்லி, திம்மரசைத்தமது சமஸ்தான எல்லைவரையில் மரியாதைகளுடன் கொண்டுபோய் விட்டு வரும்படி உத்தரவு செய்தார்,

இப்படி மரியாதைகளுடன் திரும்பிப் புறப்பட்ட திம்மரசு கிருஷ்ணதேவராயலிடம் வந்து தாம் போனது முதல் அங்கு வந்த நிமிஷம்வரையில் நிகழ்ந்த

ங்கதிகள்யாவையும் சவிஸ்தாரமாகச் சொல்லியும், கஜபதி குமாரத்தி கொடுத்த பஞ்சவர்ணக்கிளியை இராயலிடம் கொடுக்க, அக்கிளியானது கிருஷ்ண தேவராயலை முகர்ந்து முத்தமிட்டு தன்னை வளர்த்த வரதாம்பாள் அல்லது பிரதாபருத்திர கஜபதிராயலுடைய அருமையும் அழகு யாவும் திரண்டுவந்த நுகாம்பாதேவியின் அழகையும், குணாதிசயங்களையும் அவளுக்கேற்ற கணவன் கிருஷ்ணதேவராயலே என்றும் இனிய வார்த்தைகளால் கொஞ்சிக் கொஞ்சி பேச, கிருஷ்ணதேவராயலும் அதிக சந்தோஷமுற்று, திம்மரசின் புத்திசாதுரியத்தைத் துதித்தும். கூடிய சீக்கிரத்தில் கஜபதி குமாரத்திக்கு நிச்சயதாம்பூலம் செய்யவேண்டுமென்றும், அப்படி செய்யும்போது அந்தப்பெண்ணைத் தாமும் மாறுவேடம் தரித்து முன்னாடியாகப் பார்த்து பிறகு முகூர்த்தத்தை நடத்த வேண்டுமென்றும் திம்மரசு மந்திரிக்கும் சொல்ல, அதற்கு அம்மந்திரியும் சம்மதித்து, அந்த கிருஷ்ணதேவராயலை ஸமஸ்தான வெற்றிலைப்பாக்கு மடித்துக்கொடுக்கும் வேலைக்காரனைப்போல் வேஷம் போட்டும், நிச்சய தாம்பூல உற்சவத்திற் கேற்ற ஆடை ஆபரணங்களை எடுத்துக்கொண்டும், தக்க துரக கஜ பதாதி பிருதுகளுடன் புறப்பட்டு வந்தும், கஜபதி ஸமஸ்தானக் கோட்டைக்கு அருகில் பல்லக்குகளை நிறுத்தும்படி செய்தும், தாம்வந்திருக்கும் சங்கதியைக் கஜபதிராயலுக்கு முன்னாடியாகத் தெரிவிக்கும்படி வேவுக்காரர்களை அனுப்பினார்கள்.

அது சங்கதியைக் கேட்ட பிரதாபருத்திர கஜபதிராயலும், தம் சபா மண்டபத்தைக் கமுகு வாழை பூங்கொடிகளால் அலங்கரித்தும், அந்தபுரத்துக்குள் போய் தமது பத்தினிமார்களையும் பந்துக்களையும் அழைத்து, தாம் செய்ய தீர்மானித்த விவாக சங்கதியைச்சொல்ல, அவர்கள் கேட்டு அதிசயித்து "அந்தோ! கிருஷ்ணதேவராயலு சுபத்தினிக்கு பிறக்காமல், தாசிவயிற்றில் பிறந்தவனுமே; அப்படிப்பட்ட இழிகுலத்தானுக்கு நமது உயர்குலப்பெண்ணை எப்படித்தருவது" என்று சொல்லி விசனப்பட்டுக் கண்ணீர் விட்டழுதார்கள்.

கஜபதிராயலு, தம்மனைவிமார்களையும் பந்துக்களையும் பார்த்து "பேதைகாள் பயப்படாதேயுங்கள்! கிருஷ்ணதேவராயலு நரசராயலுக்கும், அவரது தர்மபத்தினி நாகலாம்பாதேவிக்கும் பிறந்த குலஸ்தர்; அவர் பிறந்தது முதல் நரசராயலு அவர்மேல் மிதமிஞ்சிய அன்பைக் காட்டிவந்தமையாலும்; மற்ற மனைவிகளும் மக்களும் நரசராயலுடைய இராஜசிங்காசனம் தம்மக்களுக்கும் தமக்கும் கிட்டாதென்றஞ்சி, பொறாமைப் பேய்பிடித்து அவரைக் கொல்லவும், ஜாதிபிரஷ்டனாக்கவும், தாசிபுத்திரன் என்று அநியாயமான அவதூறுகளைச் செய்தார்கள். ஆகவே, அந்தப் பொய்க்கதைகளை நம்பவேண்டாம்; கிருஷ்ண தேவராயலு தாசி புத்திரராக இருந்தால், அப்படிப்பட்டவருக்கு எனது குல மணியைக் கொடுக்க சம்மதிப்பேனா? அந்தக் கிருஷ்ணதேவராயலு பிறந்தநாள் முதல் நாளதுவரையில் நடந்த அவரது ஜாதகத்தைப் பார்த்துத்தான் வாக்குத்தத்தம் செய்தேன்'' என்று பலவிதமாக புத்திமதிகளைச் சொல்லி சமாதானப்

படுத்தியும், தம் பத்தினிமார்களையும், புத்திரியும், தக்கபடி அலங்காரம் செய்து கொண்டிருங்கள் என்று திட்டம்செய்தும், தமது பந்து மித்திரர்களையும், பிராமணசிரேஷ்டர்களையும், சமஸ்தான பெரிய உத்தியோகஸ்தர்களையும் சகல வாத்தியகோஷங்களுடன் கோட்டைக்கு வெளியில் அனுப்பி, அங்கு வந்து தங்கி யிருக்கும் திம்மரசு மந்திரிக்குத் தக்க மரியாதைகளைச் செய்தும், அவர் கூட வெற்றிலைப்பாக்கு மடித்துக்கொடுக்கும் வேஷதாரியான கிருஷ்ணதேவ ராயலையும், மற்ற உத்தியோகஸ்தர்களையும் கோட்டைக்குள் அழைத்துவந்தும், அரண்மனைக்குள் அலங்கரித்து வைத்திருந்த சபாமண்டபத்தில் உட்காரச் செய்து உபசரித்தும்; கிருஷ்ணதேவராயலுடைய க்ஷேமத்தையும், அவர் சமஸ்தான க்ஷேமத்தையும் விசாரித்தும் விவாக முகூர்த்தகாலம் வரவே, வேதப் பிராமணர்கள் வேதகீதங்களைப்பாட நிச்சயதாம்பூலத்துக்கு ஆரம்பித்தார்கள்.

உடனே முகூர்த்தகாலம் கிட்டிவர, புரோகிதர்கள் மந்திரங்களைச் சொல்லி ஆசீர்வதிக்க, க்ஷத்திரிய தருமத்தின்படி கிருஷ்ணதேவராயலு அனுப்பிய ஆடை ஆபரணங்களையும், பண்டு பலாதிகளையும், வெற்றிலை பாக்கு புஷ்ப சந்தன குங்குமாதிகளையும், மணமகளுக்குக் கொடுக்க, கஜபதிராயலு திம்மரசு மந்திரியை அந்த வரிசைகளுடன் அந்தப்புரத்துக்கு வரும்படி அழைத்துப் போக, அந்தத்திம்மரசும் தன்னுடன் வெற்றிலைப்பாக்கு மடிக்கும் வேஷதாரனாக வந்திருக்கும் கிருஷ்ணதேவராயலையும் கஜபதியின் உத்திரவின்படி அந்தப் புரத்துக்குள் அழைத்துக்கொண்டுபோய், தங்கத் தட்டுகளில் அநேக ஆடை ஆபரணங்களையும், முத்துகள் கோர்த்த தட்டுக்களில் மல்லிகை முல்லை முதலான புஷ்பங்களையும், வைர மணிகள் பதிந்தத் தட்டுக்களில் வெற்றிலைபாக்கு சந்தன குங்குமாதிகளையும், அவைகளின்மேல் வைர வைடூரிய நவரத்தனங்கள் பதிந்த கட்டாரியையும், அடுக்கடுக்காக அடுக்கச் செய்வித்து, அவைகளை வெற்றிலைப் பாக்கு மடிக்கும் வேஷதாரியை எடுத்துக்கொண்டுபோய்த் திரைக்குள் சகல ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு தேவலோக அப்சர ஸ்திரீயைப்போல் இருந்த கஜபதி குமாரத்தியினிடம் கொடுக்கும்படி உத்தரவுசெய்ய, அதைக்கேட்டு கஜபதி ராஜகன்னிகையும் திரையை நீக்கிக் கொண்டு தக்க தாதிமார்களுடன் திரைக்கு வெளியில் சற்றுவந்து நிற்க, வெற்றிலைப் பாக்குக் கொடுக்கும் வேஷதாரியும், திம்மரசு வார்த்தைக்கு மிக்க பயந்தவனைப்போல பாசாங்கு காட்டியும், அடக்க ஒடுக்கமாக அந்தத் தங்கத் தட்டுக்களையும், முத்துமணி வைரமணி கட்டாரி தட்டுகளையும் ஏந்திக்கொண்டுபோய் கஜபதி கன்னிகையின் முகார விந்தத்தை ஜாடையாக எதிட்டுப் பார்த்தும், அவள் அழகின் பெருமையைக் கண்டு தனக்குள் தான் சந்தோஷித்தும், இரு கைகளாலும் எடுத்துக் கொடுக்க, அந்தக் கஜபதி புத்திரியும், அந்த வெற்றிலை வேஷதாரியின் முகார விந்தத்தையும், காலில் அணிந்திருந்த வஜ்ஜிரவீர சங்கிலியையும், கையிலணிந்திருந்த வச்சிரகண்டி முதலானதுகளையும் பார்த்து பிரமித்து, இந்த வேஷதாரியே கிருஷ்ணதேவராயலென்று தீர்மானித்து பெருமூச்சு விட்டுக் கேவலஸ்திரீஜாதியான தன் நிமித்தமாகத் தன் அந்தஸ்தை

யும், பெருமையையும் மறைத்து வேலைக்காரன் வேடம்பூண்டு வந்ததைச் சிந்தித்தவனைப்போல முகத்தைகாட்டி நின்றாள்.

உடனே பதில் தாம்பூல மரியாதையாகக் கிருஷ்ணதேவராயலுக்கு கஜபதிராயலு தயார்செய்து வைத்திருந்த தங்கத் தட்டு தாம்பூலாதிகளை அந்தக் கன்னிகையின் கையில்கொடுத்து, வெற்றிலைப் பாக்கு மடிக்கும் வேஷதாரி வேலைக்காரனிடம் கொடுக்கும்படிச் சொல்ல, அந்தக் கன்னிகையும் மனமுவந்து தனது ஆசை நாயகனுகிய வேஷதாரியின் முக அழகை மறுபடியும் பார்த்தும், இரண்டு கைகளால் ஏந்திக்கொடுக்க, அவ்வேஷதாரியும் அடக்க ஒடுக்கமாக வாங்கி திம்மரசுக்கு அருகில் வந்து வைக்க, அந்தத்திம்மரசும், கஜபதியும் அவர்பந்து மித்தரர்களும் சந்தன புஷ்பங்களைத் தரித்துக் கொண்டு, உல்லாசமாக இரண்டு ஸமஸ்தானங்களின் சங்கதிகளைப் பேசிக்கொண்டிருக்க, திரைக்குள் போன இராசகன்னிகையை அவளுடைய தாயார் முதலான இராச மஹிஷிகள் வந்து சூழ்ந்துகொண்டு திரைக்கு வெளியில் நடந்த விருத்தாந்தங்கள் என்ன என்று கேட்க, அந்தக் கன்னிகையும், கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக, கரங்கள் நடுங்க, தனது தாயாரைப் பார்த்து.

“எனது ஆருயிராகிய அன்னையே, நான் திரைக்கு வெளியில் போய் வெற்றிலை மடிக்கும் வேலைக்காரனிடம் தாம்பூலமரியாதை வரிசைகள் வாங்கியது முதல், அந்த வேலைக்காரனே என் முன்வந்து, இப்போதும் சயாரூபமாக நிற்கிறான். பசும்பொன் நிறமும், பதினெட்டு வயதும், ஆஜானுபாஹுவும், வில்லுகளைப்போல் வளைந்தப் புருவங்களும், செந்தாமரையைப்போன்ற பெருத்த கண்களும், விசாலமான காதுகளும், நீண்ட மூக்கும், பவளத்தைப்போன்ற உதடுகளும், முத்துவரிசையைப்போன்ற பற்களும், அரும் துளிர்போல் ஆரம்பிக்கு மீசையும், பூரண சந்திரனைப்போன்ற குளிர்ந்த முகமும், தக்க கரசரணுதிகளும் பொருந்தி இருப்பவனும், காலில் வஜ்ஜிர வீரசங்கிலியையும் தரித்து, வெகு காம்பீரமாக வந்த அந்த வேலைக்கான் எவனோ? அறிகிலேன்! அவனைப்பார்த்தது முதல் எனக்கு தசாவஸ்தையும் சம்பவித்ததுபோலிருக்கிறது. அவன் இப்போதும் திரைக்கு வெளியில்தான் நமது அப்பாவுக்கு அருகில் கைகட்டிக்கொண்டு நிற்கிறான், பாருங்கள்” என்று சொன்னாள்.

இராஜமஹிஷிகளும் மற்ற அநதப்புர மாதுசிரோன்மணிகளும் உடனே கொஞ்சமாகத் திரையை நீக்கிப் பார்க்கையில், அந்த வாலிப வேலைக்காரனுடைய விலக்ஷணங்கள் எல்லாம் தாம் முன் பலரால் கேட்டிருந்தபடி கிருஷ்ணதேவராயலுடைய விலக்ஷணங்களாகவே இருக்கின்றன வென்றும், அந்தக் கிருஷ்ணதேவராயலு இப்போது வேஷமிட்டு வந்திருக்கிறானென்றும், அவன் அவ்வளவு அழகு வாய்ந்தவனுகவும், இராஜாதிராஜனுக இருக்கினும் தாசி புத்திரன் தான் என்றும், அவனை இன்று இராத்திரியில் படுத்துத்தூங்கும் போது எப்படியாவது கொன்று விட்டால், தமது இராஜகுமாரத்தியை வேறு நல்ல ஜாதியானுக்குக் கட்டிக் கொடுக்கலாமென்றும், குசுகுசவென்று அஞ்

ஞான அந்தபுர ஸ்திரீகள் பேசியதை அந்தணர் சிரேஷ்டரான திம்மரசு தெரிந்து, ஓஹோ! நமது அரசனுக்கு அபாயம் வந்ததே, என்றஞ்சி, உடனே அந்தக் கிருஷ்ணராயலு வேஷதாரியை எப்படியாவது கோட்டைக்கு வெளியில் போகச்செய்வதே நலமென்றெண்ணி, அருகிலிருக்கும் வெற்றிலைப் பாக்குக்காரனைப் பார்த்து "அடே, ஏண்டா சும்மா மரம்போல் நிற்கிறாய், உன்னிடம் கொடுத்த ஆடை ஆபரணங்களையும் பையில் போட்டுக்கட்டு, பொழுதாகிறது போவோம்" என்று மிரட்டி அதட்டிச் சொல்ல, அந்தச் சூக்ஷமத்தை அறிந்த வேஷதாரியான கிருஷ்ணதேவராயலு, வெற்றிலை பாக்கு முதலானதுகளைச் சின்னபின்னமாக நசுக்கிப் பையிற்குள் போட்டுக்கட்ட திம்மரசு பார்த்து "அடா இராஜாகன்னிகைக் கொடுத்த மரியாதை வரிசை சாமான்களை நசுக்கி நாசமாக்கலாமா அடிக்கிறேன்பார்" என்று அதட்டி அடிக்க அபிநயித்தார்.

அந்த வேஷதாரியான வேலைக்காரன் மிக்கப் பயந்தவனைப் போல பதைப்பதைத்து ஓட்டமெடுத்து கோட்டைகது வெளியில் போய் தம்பல்லக்கு இருக்கும் இடத்தில் மறைந்துகொள்ள; திம்மரசும் அந்த வரிசை சாமான்களை வேறு வேலைக்காரர் இடம் கொடுத்து பந்தோபஸ்து செய்வித்துக்கொண்டிருக்க, கஜபதிராயலு பார்த்து "(வேஷதாரியான) வேலைக்காரன் செய்த பிழையை க்ஷமிக்கவேண்டும்" மென்று சொல்ல, திம்மரசுப்பார்த்து "வேந்தே, க்ஷத்திரிய குலதிலகரான எங்கள் நரபதி சமஸ்தானத்தார் கட்டாரியை வைத்துத்தான் கலியாணம் செய்வது வழக்கம்; அந்த வழக்கத்தை அனுசரித்தே எமது கிருஷ்ணதேவ இராயலுடைய வைரக் கட்டாரியைக்கொண்டுவந்து தக்க உபசார மரியாதைகளுடன் தங்கள் குமாரத்தியிடம் கொடுப்பித்தேன், அதைத் தங்கள் குமாரத்தி வாங்கி முத்தமிட்டும் மறுபடியும் எங்களுக்கே திருப்பித்தரவேண்டும், அதை நாங்கள் பெற்றுக்கொண்டுபோய் எங்கள் ராயலிடம்கொடுத்து, அவரதை முத்தமிட்டு வணங்கி, மறுபடியும் தக்க தண்டு தளாதிகளுடன் அக்கட்டாரியைத் தங்களிடம் அனுப்பினால், தங்கள் குமாரத்தி மேற்படி கட்டாரியைப் பெற்றுக்கொண்டு அத்துடன் எங்கள் சமஸ்தானத்துக்கு வரவேண்டும்; இதுதான் எங்கள் சமஸ்தானவழக்கம்.

என்னுடன் வந்த வேலைக்காரன் இவ்வளவு விசேஷமான கட்டாரியைத் தங்கள் குமாரத்தியிடமிருந்து மறுபடியும் வாங்க மறந்துவிட்டபடியால், எனக்கு அத்தனைகோபமுண்டாயிற்று. ஆயினும் தாங்கள் போய் அந்தக் கட்டாரியை வாங்கி வாருங்கள்' என்று சொல்ல; அவரும் வாங்கிவர, திம்மரசும் அதைப் பெற்றுக்கொண்டும் "இந்தக்கட்டாரி எப்போது உங்கள் சமுகம் வருமோ அப்போது தங்கள் குமாரத்தியையும் அனுப்புங்கள்" என்று சொல்லி, தக்க மரியாதைகளைப் பெற்றுக் கோட்டைக்கு வெளியில் வந்து தம் பல்லக்கிலேறி அங்கு மறைந்திருந்த வேஷதாரி கிருஷ்ணராயலோடு புறப்பட்டு விஜயநகரம் வந்தனர். வேஷதாரியாகிய கிருஷ்ணதேவராயலு தம் வேஷத்தை மாற்றி திம்மரசு மந்திரியின் அற்புத சக்திக்கு ஆநந்தித்து அவருக்குத் தக்க மரியாதை

களைச் செய்தனர். பிறகு கிருஷ்ணதேவராயலு தமது அரண்மனையில் தக்க பள்ளிஅறையைச் சித்தப்படுத்தியும், அதற்குவேண்டிய தங்கத்தகட்டினால் மூடிய கட்டில், சோபா, நாற்காலிகளையும், பட்டு மஹமல் திண்டு திவாசுகளையும், கண்ணாடி குளோபு லஸதர் ரசகுண்டுகளையும் கொண்டு சிங்காரித்தும், வித்தியாநகர முழுதும் தமது கலியாண விஷயத்தைப் பற்றி தண்டோரா போடவைத்தும், அலங்காரம் செய்விக்கும்படி செய்வித்தும், திம்மரசு மந்திரியைத் தருவித்துக் கஜபதி பெண்ணைத் அழைத்துவரும்படியாக உத்தரவளிக்க, அந்தத் திம்மரசும், நல்ல சுபகாலமறிந்து, இராயலுடைய பந்து மித்திரர்களையும், தேவப் பிராமணர்களையும், ஸமஸ்தான உத்தியோகஸ்தர்களையும், தண்டு தளாதி சேனைகளையும் சேகரித்து சமஸ்தானத்திற் தங்கமயமான பல்லக்கில் சந்தண புஷ்ப தாம்பூல ஆடையாபரணாதி தட்டுகளையும், இராயலுடைய சமஸ்தான வைரமணி கட்டாரியையும் வைத்து, சகல வாத்திய கோஷங்களுடன் கஜபதி ஸமஸ்தானத்துக்கனுப்பி அவர் பெண்ணை அழைத்து வரும்படி ஆக்கியாபித்தார். அப்படி அனுப்பிய கட்டாரிவரிசையும் கஜபதி ஸமஸ்தானத்துக் சோட்டைக் கருகில் வந்து தங்கிய சங்கதியைக் கஜபதிக்கு முன்னாடியாகத் தெரிவித்தார்கள்.

கிருஷ்ணதேவராயலின் முதல் விவாஹம்.

அப்படி நரபதி சமஸ்தானத்தார் வந்திறங்கி இருக்கிற சங்கதிகளைப் பிரதாபருத்ர கஜபதி கேட்ட உடனே தமது பந்து மித்திரர்களையும், ஸமஸ்தான உத்தியோகஸ்தர்களையும், எதிர்கொண்டழைத்துவரும்படி அனுப்பிவிட்டும், தாம் அந்தபுரத்துக்கு வந்து தமது பத்தினிமார்களையும், குமாரத்தியையும் பார்த்து, 'தக்க ஆடை ஆபரணாதிகளைப் பூண்டு நரபதி ஸமஸ்தானத்துக்கேகத் தயாராக இருங்கள்' என்று சொல்லிவிட்டும், கிருஷ்ணதேவராயலாகிய மருமகனுக்குத் தரவேண்டிய வரிசைகளைத் தயார் செய்யப்போனார்.

இத்தியாதி சங்கதிகளை அறிந்த கஜபதியின் பட்ட மஹிஷி தனது அருமை மகளைப் பார்த்து, கட்டித்தாவிக் கண்ணீர்விட்டு "அந்தோ! மகளே, உன்னைப் பெற்றெடுத்த அருமை என்ன! உன் ஜாதியின் பெருமை என்ன! அந்தஸ்தென்ன; உன்னை நல்ல குடும்பத்திற் பிறந்த குலஸ்தனுக்குக் கட்டிக்கொடுக்காமல், வைப்பாட்டி மகனான கிருஷ்ணதேவராயலுக்கு மனைவியாக்க உனது தந்தை ஆத்திரப்பட்டு வாக்குதத்தம் செய்து விவாகம் செய்துவிட்டார். அன்று முதல் நமது பந்து மித்திரர்கள் நம்மை இழிவாக எண்ணுகிறார்கள். அது சங்கதி உனது அப்பாவுக்குத் தெரியாது. அவர் கேவலம் இராஜ தந்திரத்தை யனுசரித்து துர்மந்திரி வார்த்தையைக் கேட்டு இப்படி செய்தாரேயொழிய, பந்து மித்திரர்களுடைய யோசனையை அனுசரித்தாரில்லை, இனி என்ன செய்யலாம். உன் தலைவிதி இப்படி முடிந்தது. ஆயினும் இப்படி நமது குடும்பத்துக்கு வந்த குறைவை நீக்க உன்னால் கூடும். கண்ணே! கவனமாகக்கேள். கிருஷ்ணதேவராயலு உன் படுக்கை வீட்டுக்குள் வந்து படுத்துத் தூங்கும

போது அவனது 'கட்டாரியாலே' அவனுடைய வயிற்றில் ஓரே குத்தாகக் குத்திக் கொன்றுவிட்டு நம்ம வீட்டுக்கு வந்துவிட்டால், நமது குடும்பத்துக்கு இப்போது வந்திருக்கும் இழிவானபெயர் மாறி, நல்ல புகழுண்டாகும். இப்படி செய்வதுதான் க்ஷத்திரிய தருமம். இதை நீ கட்டாயமாகச் செய்யவேண்டும்" என்று சொல்ல.

இதைக் கேட்ட கஜபதி குமாரத்தி, "என் தாயே! தங்கள் வார்த்தையைத் தடுத்துப் பேசுவதாக எண்ணவேண்டாம். கிருஷ்ண தேவராயனுடைய பிறப்பைப்பற்றி அப்பா அவர்கள் அதிகமாகத் தங்களுக்கும் மற்ற பந்து மித்திரர்களுக்கும் திருப்திகரமாகச் சொல்லி இருந்தும், கேவலம் பொறாமையுள்ள சில பந்துக்கள் வார்த்தைகளை நம்பி இப்படி கிலேசப்படுதல் ஆச்சரியம். என்னைக் கிருஷ்ண தேவராயனுக்கு கட்டிக் கொடுக்காமல் நமது பந்துக்களில் யாரோ ஒரு முட்டாள் பயலுக்குக் கட்டிக்கொடுத்து விட்டால் அப்போது இப்படிபபட்ட வார்த்தைகள் நடவா. நம்மைவிட நமது அப்பா ஞானமும் அறிவுமில்லாத அரசரா? என்னை இழிகுலத்தானுக்குக் கட்டிக்கொடுத்தால் அவருக்கு அவமானமில்லையா? அவர் இந்த அவமானமான காரியத்தைச் செய்தும் மீசைவைத்துக்கொண்டு அரசு செய்வாரா? இதியாதிகளை ஆர அமர யோசியாமல், தங்களுக்கு தெய்வீகமாக அமைந்த மருமகனாகிய கிருஷ்ணதேவராயனைப் படுக்கை வீட்டில் கொன்று விட்டுவரச் சொல்லுகிறீர்களே, இது தருமந்தானா? அடைக்கலம் என்று அண்டிய பகையாளிகளையும் ஆதரிக்கவேண்டுமென்று க்ஷத்திரிய தரும விதியாக இருக்க, இரவில் நிரபராதியாகவும், நிராயுதபாணியாகவும், பத்தினியை நம்பிப் படுத்துத்தூங்கும் இராஜாதி இராஜனைக் கொல்ல எவர்மனது தான் துணியும்? கொள்ளைகள் அடித்ததும், குடும்பங்களைக் கெடுத்தும், கொலைகள் செய்யும், குரூரகல்நெஞ்சமுள்ள கள்ளரும், நிரபராதியானவர்களைக் கொல்லத் துணியார்களெனில்; என்னைத் தமது வாழ்க்கைத் துணையாகக்கொண்டு, உலகில் உள்ளநாள் உள்ளவரையிலும், பரலோகத்திலும் ஏகதேகமாகவும், ஏகமனசாகவும் இருப்பதாக வாக்களித்துத் தரும விவாஹம் செய்துகொண்ட உயிர்த்தோழனை உறங்கும்போது உயிர்வாங்கும்படி தாங்கள் எனக்குப் போதிப்பது தருமமா? என்னை பாணிகிரஹணம் செய்துகொண்டவன் பள்ளனானாலும், பறையனானாலும், முரடனானாலும், குருடனானாலும், குஷ்டரோகியானாலும், துஷ்டனானாலும், திருடனானாலும், எனக்குக் கணவனேயல்லவா? அபபடிப்பட்டவனை இரவில் படுக்கையில் கொல்லச் சொல்வது பதிவிரதையாகிய தங்களுக்குத் தகுமா? நான் எக்காரியம் செய்யினும் பதிதுரோக மாகிய இக்காரியத்தைச்செய்யேன்" என்று அழுது, குனிந்து தன் தாயார் பாதங்களைப் பிடித்து நான் இப்படி சொன்னதற்கு க்ஷமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். இத்தியாதிகளைக்கேட்ட ராஜ மஹிஷி தன் குமாரத்தி கிருஷ்ணதேவராயனுடைய மோகத்தில் மூழ்கிவிட்டாள், இனி அவளைத் திருப்புவது கஷ்டமெனக் கண்டு வேறு உபாயத்தை நியமித்தாள். அதாவது, தனது குமாரத்தியுடன் கிருஷ்ணதேவராயனுடைய படுக்கை

வீட்டுக்குப்போய் தம் மகளை அலங்கரிக்கும் இரண்டு தாதிப் பெண்களை அந்தரங்கமாக அழைப்பித்தும், அவர்களுக்கு நடந்த சங்கதிகளை எல்லாம் சொல்லியும், கிருஷ்ணதேவராயலு சோபனத்திற்கு இராஜ குமாரத்தியை அலங்கரிக்கும்போது, அவள் இடுப்பில் வில்வைத்த சிறு கத்திகளையும், ஒட்டியாணத்துடன் தெரியாமல் பூட்டி, மேலே மெல்லிய சால்வையைப் போட்டு மூடி படுக்கவைத்தும், அந்த இராஜ கன்னிகையின் இடுப்பில் கிருஷ்ணதேவராயலு கைபோட்டவுடனே அந்த வில்கத்திகள் பீறிட்டுப் பாய்ந்து, கிருஷ்ணதேவராயலைச் சின்னாபின்னமாகக் குத்திக்கொல்லும்படி செய்வித்தும்; தனது குமாரத்தியைக் கஜபதி ஸமஸ்தானத்துக்கே மறுபடியுங் கூட்டிக்கொண்டுவந்தால் நல்ல மானியங்களும், வெகுமதிகளும் தருவதாகவும்; இச்சங்கதியைத் தன் குமாரத்திக்குகூடத் தெரிவிக்கக் கூடாதென்றும் சத்தியம் வாங்கிக்கொண்டும், நல்ல வில்லுவைத்த கத்திகளைச்செய்வித்துப் பட்டு சால்வைகளில் மறைத்துக் கொடுத்தும், தம் மகளுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களைக் கொண்டு சிங்காரித்துத் துக்கத்தோடு அழைத்துப்போய்ப் பல்லக்கில் அமர்த்தியும், அவளுக்குத் துணையாக முன்னாடியே தாயார் செய்து வைத்திருந்த தாதிமார்களையும், பந்து மித்திரர்களையும் அனுப்ப; கஜபதி பார்த்துத் தனது மருமகனாகிய கிருஷ்ணதேவராயலுக்கு தாயார் செய்து வைத்திருந்த வரிசைகளுடனும், தண்டுதளாதிகளுடனும், சகல வாத்திய கோஷங்களுடனும் நரபதி சமஸ்தானத்துக்கு அனுப்பினார்கள்.

அப்படி பவனியாகவந்த சங்கதியைக் கிருஷ்ணதேவராயலும், திம்மரசும் கேட்டுச் சந்தோஷப்பட்டு சமஸ்தானத்திலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களையும், தேவ பிராமணர்களையும், பந்து மித்திரர்களையும் முன்னனுப்பி அழைத்து வரசெய்தும்; அரண்மனையின் நாலாபக்கங்களில் நகபத், நகாரு மேளவாத்தியம், நாட்டியங்களும், பாட்டுக் கச்சேரிகளும், விருந்துகளும், தாம்பூல மரியாதைகளும் நடக்கவும், விஜயநகர மெங்கும் மேளவாத்தியங்களும், தாம்பூல சுப சோபனங்களும், சாப்பாடு சந்தோஷங்களும் நடக்கவும், இராஜகுமாரியைத் தக்க மரியாதையுடன் அழைத்து வந்தும், தேவபிராமணர்களால் ஓமங்களைச் செய்வித்தும், சமஸ்தான பெண்களைக்கொண்டு திருஷ்டி ஆலத்திமுதலான சடங்குகளைக் கிரமமாக நிறைவேற்றியும்,பெண்ணைப் படுக்கை வீட்டுக்கனுப்ப; அவள் கூடவந்த தாதிமார்கள் அப்பெண்ணைத் தக்க ஆடை ஆபரணங்களால் அலங்கரித்தும், இடுப்பில் வில் கத்திகளைப் பூட்டி மேலே சால்வையைப் போட்டு மூடவே:

இராஜகுமாரி பார்த்து, "ஏ, தாதிகாள்! இதேன் இப்படி வில்லுள்ள கத்திகளை இடுப்பில் புகட்டுகிறீர்கள்? என்ன காரண" மென, தாதிகள்; "அம்மணி, நீங்கள் க்ஷத்திரிய ஜாதியானபடியினால், தங்கள் நாயகர் கட்டாரியைவைத்து விவாஹம் செய்துக்கொண்டார், தாங்கள் அதற்குப் பதிலாக இந்த வில்கத்திகள் வைத்த ஒட்டியாணத்தைப் புகட்டிக் கொண்டு இன்றிரவு இராஜனிடம்

படுத்தல் பூர்வீகமான க்ஷத்திரிய தருமம்; ஆகையால்தான் இக்கத்திகளைப் பூட்டினேன்' என, இராஜகுமாரி கேட்டு இப்படிப்பட்ட வழக்கத்தை முன்னும் பின்னும் பாராத பேதையானபடியால், தாதிகள் வார்த்தையை உண்மையென்று நம்பி தரித்துக் கொண்டு தங்ககட்டிலில் படுத்தாள்:—

இராஜகுமாரத்தி அப்படிப்படுக்க: கிருஷ்ணதேவராயனும் தக்க ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு படுக்கை வீட்டுக்குப் போகுமுன் தமதுதகப்பனருக்குச் சமானமான மந்திரி திம்மரசை அழைப்பித்து ஆசீர்வதிக்கும்படி கேட்க, அந்ததிம்மரசும் கண்குளிரக்கண்டு ஆசீர்வதித்து "அரசே உங்கள் குடும்பமும், கஜபதிகுடும்பமும் ஆதியில் ஒரே குடும்பஸ்தராக இருந்தாலும், இடையில் இரு குடும்பத்தாருக்கும் இராஜ்ஜிய சண்டை சச்சரவுகளில் நடந்த மனஸ்தாபங்கள் இன்னும் பூரணமாகத் தீராமல் இருப்பதாலும், தங்கள் ஜனன விசேஷத்தைப் பற்றி கஜபதி குடும்பஸ்திரீகள் தப்பபிப்பிராயப்பட்டிருப்பதாலும், பேதையராகிய மாதர்கள் மூடத்தனத்தினால் முதலில் யாதாமொரு காரியத்தைச் செய்துவிட்டு பிறகு வியாகூலப்படுவது சகஜமாகையினாலும், தாங்கள் படுக்கைவீட்டில் ஜாக்கிரதையாகக் கொஞ்சகாலம் கழிக்கவேண்டும், என்று புத்திமதிகளைச்சொல்லி, தாமே கிருஷ்ணராயனை அழைத்துப்போய் படுக்கைவீட்டில் விட்டு வந்து விட்டார்.

தேவேந்திரனுடைய மண்டபத்தைப்போல சிங்காரித்து அமைத்திருந்த பள்ளியறைக்குப்போன கிருஷ்ணதேவராயனு முத்துகளணிந்த சோபாவில் உட்கார, தாதிகள் கஜபதி குமாரியை அழைத்துவந்து அரசனுடைய இடதுபக்கத்தில் உட்காரவைத்து சந்தன புஷ்ப தாம்பூலங்கள் நிறைந்த சிறுமேஜையைக் கொண்டுவந்து இராஜகுமாரத்திக்கு அருகில் வைத்து "களித்திருங்கள்" என்று சொல்லி கதவை மூடிக்கொண்டு வெளியில் போயினர்.

உடனே கிருஷ்ணதேவராயனும், கஜபதி குமாரியும் சந்தன புஷ்ப தாம்பூலங்களைத் தரித்தும், ஒருவர் ஒருவர் க்ஷேம சமாசாரத்தைப்பற்றி புன்னகையுடன்பேசியும், வீணை முதலான வாத்தியக் கருவிகளை வாசித்துக் காட்ட, காமமோகங்கொண்ட கிருஷ்ணதேவராயனு தனது செங்கோலேந்தும் சிங்காரக் கையைத் தனது கட்டழகியின் இடுப்பின்மேல் போட்டவுடனே, வில்கத்திகள் பீறிட்டு வந்து தாக்க, கிருஷ்ணதேவர் தந்திரமாக குதித்தோட, பிராணபய மற்று சொல்காயங்களுடன் அறையைவிட்டு வெளியில்வந்து, மந்திரி திம்மரசைத்தருவித்து, நிகழ்ந்த சங்கதிகளைச்சொல்லி; அந்தப் பெண்ணையும் அவளுடைய பிதா பந்து மித்திரர்களையும் உடனே கொல்லத்தக்க ஏற்பாடுகளைச் செய்யச்சொல்ல, திம்மரசுப்பார்த்து "வேந்தே! விசனப்படாதே! இக் குற்றம் அந்தப் பெண்ணினாலும், அந்தப் பெண்ணின் தகப்பனாலும் நடந்ததல்ல; அந்தப்புரத் திலிருக்கும் அவர் அஞ்ஞான ஸ்திரீகளால் நடந்திருக்கலாம். ஆகையால் கஜபதியுடன் சண்டைக்குப்போதல் தருமமல்ல; அவருடைய பெண்ணை அவரிடத்திற்கே திருப்பி அனுப்பிவிட்டால், அந்த அவமான

தண்டனையே போதும் எனக், கிருஷ்ணராயனும் யோசித்து சம்மதித்து, அந்த இராஜகுமாரியைத் தம் தகப்பனார் வீட்டுக்குத் திருப்பி அனுப்ப, அந்தப்பெண் நடந்த சங்கதிகளையும், முக்கியமாகத் தனது தாயாருடைய துர்புத்தியினால் தாதிகள் செய்த சூதுகளையும் எண்ணி, ஏங்கி, இனி தாயார் வீட்டுக்குப் போனாலும் தக்க மரியாதைகிடைக்காதென்று மயங்கி, தன்னை எங்கேயாவது ஒருவனத்தில்விட்டுவிட்டால் நலமென அரசருக்கு விண்ணப்பம் செய்ய, அவரும் சம்மதித்து நகருக்கு தூரமான ஒரு வனத்தில் ஒரு வீட்டைக் கட்டி, அதில் சிறையாக வைத்துவிட்டதாக பிரவுடகவிசரித்திரக் கதையால் தெரியவருகிறது.

கிருஷ்ணதேவராயனுடைய மனைவியும் கஜபதி குமாரியுமாகிய **துகாம்பா** அல்லது வரதராஜம்மாள் அப்படி வனவாசம் செய்த இடம் கடப்பை ஜில்லாவுக் கருகிலென்றும், அங்கு அந்தம்மாள் நான்கு பக்கங்களிலிருக்கும் மலைகளின் மேற் பெய்யும் மழைநீர் வந்து ஒரு பெரிய குளமாகத் தங்கிப் பயிர் பச்சைகளுக்கு உபயோகமாகும்படி அக்குளத்தின் நான்கு பக்கங்களிலும் பலமான பெரிய கற்களாற் கரைகளைக் கட்டிவைத்ததாகவும், அப்படிக் கட்டிய கரைகளில் இரண்டு பக்கங்களில் மலைக் கணவாய்க்கரைகள் அடிக்கடிக் கரைந்து உடைப் பெடுத்து வெகு பயிர்களுக்கு நஷ்டத்தையுண்டாக்கி வந்ததை அந்தம்மாளுடைய தயிர்க்காரி ஒருத்திப் பார்த்துப் பரிதபித்து, அதற்கு நரபலிகொடுத்தால் நலமென்றும், தமக்குத் தக்க பொருள் கொடுத்தால் தமது குமாரர்களாகிய பெரிய **கம்பன் சின்னக் கம்பன்** என்பவர்களை அந்த அணைக்கு நரபலியாகக்கொடுக்க வாக்குத்தத்தம் செய்ததாகவும், அதன்மேல் அந்தத் துகாம்பா அம்மாள் சம்மதித்து அத்தயிர்க்காரிக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களையும் ரொக்கத் தொகையையும் கொடுத்து, அவளுடைய இரண்டு குமாரர்களையும் தருவித்துச் சம்மதிப்படச் செய்வித்தும், அவர்களை அங்கு நரபலி செய்ததன் மேல் அந்த உடைப்பு நின்றுவிட்டதாகவும், அப்படி பல ஜனங்களுடைய உபயோகத்திற்காகத் தம்பிராணனைக் கொடுத்த **கம்பர்களுடைய** பெயர்களால் அங்கு ஒரு கிராமத்தை உண்டாக்கி அதற்கு **கம்பம்** என்று பெயரிட்டதாகவும், அதைத்தான் இப்போது கடப்பைக் கருகிலிருக்கும் **கம்பம்** தாலுக்கா என்றும் ஒருகதை உலாவுகின்றது.

இக்கதைக்கு அனுசரணையாக மிஸ்டர் டயிலர் (Mr. Taylor) எழுதிய கிரந்தத்தில் விஜயநகர ராயலின் மனைவி துகாம்பாள் சரியான ஜாதியானுக்கு விவாகம் செய்யப்படாமையால், விசனத்தோடு அவள் வனசஞ்சாரியாகித் தனக்குத்தன் தகப்பனார் கஜபதி கொடுத்த திரவியத்தை எல்லாம் செலவிட்டு இந்தக்குளத்தை உண்டாக்கினதாகக் கடப்பைக் கருகில் ஒரு சாசனம் அகப்பட்டதாக எழுதி இருக்கின்றனர்.

கிருஷ்ணதேவராயலின் இரண்டாம் விவாஹம்.

இப்படிக் கிருஷ்ணதேவராயலுக்கு முதல் விவாஹத்தினால் உண்டான கஷ்ட நிஷ்டூரங்களை நினைந்து நினைத்து விசனப்படுகையில், இந்தச் சமயமறிந்த உத்கலதேசத்து (ஒரிசா நாட்டின்) அரசன் நரபதிசமஸ்தானத்தின் மீது படையெடுத்து வந்துத் தாக்க, உடனே கிருஷ்ணதேவராயலும், சாளுவ திம்மரசு மந்திரியும் தக்க தண்டுதளாதிகளுடன் எதிர்த்துப் போய்ச் சண்டை செய்து ஜயித்து உத்கல நாட்டின் கோட்டைக்கருகில் அந்த ராஜனிடம் திம்மரசு மந்திரி சமாதானம் செய்யப்போகவே, அந்த உத்கலவேந்தனுக்கு அழகு யாவும் திரண்டு அவதரித்தார்போல ஓர் சுந்தரவதியாகிய குமாரத்தி இருப்பதை அறிந்து, அந்தப்பெண்ணை விசாரித்து கிருஷ்ணராயலுக்கு விவாகம் செய்து விட்டால் கிருஷ்ணதேவராயலுக்கு முதல் மனைவியாலுண்டாகிய வியாகூலம் நீங்குவதுடன், உத்கல நாட்டாரும் நரபதிகளும் சம்பந்திகளாகி, அவர்களோடு முன் சம்பந்தம்செய்த கஜபதியும் சேர, மூன்று பெரிய இந்து ஸமஸ்தானங்களாகி, மகமதியரைத் தலை யெடுக்காமல் தடுக்க அனுகூல மாகுமென்று யோசித்து உத்கல நாட்டரசனுக்கு அறிவிக்க; அந்த இந்து மன்னனும் ஒருகாலத்தில் நரபதி கஜபதி குடும்பத்தைச்சார்ந்த சந்திரவம்ச க்ஷத்திரியரான படியாலும், தமது சுகிமணியாகிய குமாரத்திக்குக் கிருஷ்ணதேவராயலை விடச் சிறந்த மணவாளன் அகப்படமாட்டான் என்று எண்ணியும், இந்தச் சம்பந்தத்தினால், இந்து ராஜாங்கம் பிரபலப்பட்டுப் பெரிய ராஜாங்கமாகுமென்று எண்ணிச் சம்மதிக்க, திம்மரசு உடனே கிருஷ்ணதேவராயலிடம் வந்து தாம் சமாதானத்துக்குப் போன இடத்தில் உத்கல ராஜனுடன் நடந்த வர்த்தமானங்களை எல்லாம் சாங்கோபாங்மாகச் சொல்ல, கிருஷ்ணதேவராயலுங் கேட்டுச் சம்மதித்துச் சந்தோஷமுற்றார்.

பிறகு முகூர்த்தகாலமறிந்து, கிருஷ்ணதேவராயலும், திம்மரசு மந்திரியும் தக்க தண்டுதளாதிகளுடனும், ஆடையாபரணங்களுடனும், பந்து மித்திர கோஷ்டியுடனும் உத்கல தேசத்துக்குப் போக, அந்த உத்கலகர், நாடு நகர அரண்மனைகளைத் தக்கபடி அலங்கரித்தும், தன் குமாரத்தியின் விவாஹத்தைப் பற்றித் தனது அந்தப்புர ஸ்திரீகளுக்கும் பந்து மித்திரர்களுக்கும் சொல்லியும், சிங்காரித்துக்கொண்டு சித்தமாக இருக்கும்படி திட்டப்படுத்தி வந்துக் கோட்டைக்கு வெளியில் நிற்கும் கிருஷ்ணதேவராயலு முதலானவர்களைத் தக்க மரியாதையுடன் அழைத்துப்போய்ப் பால் பழங்கொடுத்து, உபசரித்து மங்கள ஸ்நானத்துக்கு அனுப்பி, சுத்தமும் சுந்தரமுமான வஸ்திராபரணங்களைத் தரிக்கச்செய்வித்தும், விவாஹ மண்டபத்திற்கு அழைத்து உட்காரச்செய்தும் வேத பிராமணர்களைக்கொண்டு கலியாணச் சடங்குகளை யெல்லாம் முறைப்படி செய்வித்து முடித்தும், வந்திருந்த பிராமணர்களுக்கு லக்ஷங் கணக்கான பூரி தட்சணைகளைக் கொடுப்பித்தும், வந்திருந்த பந்து மித்திரர்களுக்கு விமரிசை

ாக விருந்துகளையும், வரிசைகளையும், செய்வித்தும், ஆடல் பாடல் கச்சேரி
ள் வைத்தும், சகலரும் சந்தோஷமடையும்படி செய்வித்தும், அன்று ராத்
ிரி சோபன முகூர்த்தத்துக்கு இன்றியமையா அலங்காரப் படுக்கைவீடும், வரி
சைகளும் தயார் செய்துகொண்டிருந்தார்.

அப்படி நடக்கும் காலத்தில் உத்கலதேச மன்னருடைய மனைவியிடம்
டமதியுடைய சில மங்கையர்வந்து, "அம்மணி, இது என்ன அநியாயம்!
ருந்திருந்து தங்கள் சுந்தரவதியைத் தாசிமகனான கிருஷ்ணதேவராயனுக்
த்தானா கட்டிக் கொடுக்கவேண்டும்? கிருஷ்ணதேவராயனு சுபத்தினிக்குப்
றந்தவனல்லவென்றும், அவனுடைய மூன்தாரமாகிய சஜபதி குமாரத்தி அவ
ிடம் வாழமாட்டேன் என்று வனவாசம்செய்யும் சங்கதி தெரியாதோ?
ருந்து இருந்து என்ன இழிவான வேலையைச் செய்துவிட்டீர்கள்! இப்படி
ழிவானவனைக் கணவனாகக் கட்டிக்கொள்வதைப்பார்க்கிலும், அவனைக்
கான்றுவிட்டு அறுத்த முண்டச்சியாக அண்டத்தில் சந்தோஷத்தோடு வாழுதல்
லம். கிருஷ்ணதேவராயனுடைய உண்மையான பிறப்பையறிந்தும் நமது
ரசர் ராஜகீய விஷயத்தைக் கருதி இக்காரியம் செய்தாரோ, தாங்கள் எப்
டி இப்படிப்பட்ட காரியம் செய்யத் துணிந்தீர்கள்?" என்று பலவிதமாகச்
சால்ல,

இராஜ பஹிஷிகேட்டு, "அடி! இதென்ன விந்தை! எனது அருமை
களுக்கு இப்படிப்பட்ட இழிகுலத்தானா கணவனாகவாய்த்தான்? கிருஷ்ண
தவராயனுடைய சரித்திரத்தை நாம் முன்னரே பல அரண்மனை மங்கையர்
ளால் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிக்கேள்விப்பட்டிருந்தும், "ஆத்திரக்
ாரனுக்குப் புத்திமட்டு" என்னும் பழமொழிப்படி அரசர் ஆராய்ந்து யோசி
ாமல், ஆயிரங்காலத்துப் பயிராகிய இந்தப் பெண்ணை இப்படிப்பட்ட இழி
லத்தானுக்குக் கட்டிவிட்டோம். இனி விசனப்படுவதிற் பிரயோசனமில்லை.
க்குறைவைநீக்க உபாயம் செய்யவேண்டு" மென்று நீளநினைத்துத் தன் மக
ிடம் வந்து பின்வருகிறபடி சொல்லுகிறாள்.

முத்துமணியே! "உன் தலைவிதியை என்னென்று சொல்வேன்? உன்னைப்
பற்ற பெருமை என்ன? உன்னை வளர்த்த அருமை என்ன? இழிகுலத்தா
னென்று சொல்லும் கிருஷ்ணதேவராயனுக்கு உனது தந்தை கேவலம் இராஜ
ப விஷயமாகக் கலியாணம் செய்துகொடுப்பதாக வாக்களித்து முன்னும்
ன்னும் விசாரியாமல் விவாகத்தையும் செய்துவிட்டார். முன்னே கஜபதி
யனும் இப்படியே தமது நாயகியோடு கலந்துபேசிக் கலியாணம் செய்யா
ல், கேவலம் துர்மந்திரிகளுடைய வார்த்தைகளுக்கு இணங்கித் தன் குமாரத்
யைக் கிருஷ்ணதேவராயனுக்கு விவாஹம் செய்ததனால், அவர் பெண் இழி
லத்தானோடு வாழ்வதைப்பார்க்கிலும் வனப்பிராணிகளோடு வாழுதல் உசித
மனக் கருதி, இப்போது வனசஞ்சாரியாகத் திரிந்து தவிக்கிறாள். இது சங்கதி
த்தேசத்திலிருக்கும் ஒவ்வொரு இராஜ குடும்பத்தாருக்கும் தெரிந்திருப்

பதைப்போலவே, நமது அந்தப்புரஸ்திரீகளுக்கும் தெரிந்தவிஷயம். தெ
திருந்தும், உங்களப்பா அவர்களுடைய வாக்குக் மீறி நடக்கக் கூடாதெ
பயத்தினால், வாய்மூடிக்கொண்டிருந்தார்கள். இனி உலைவாயை மூடி
ஊர்வாயைமூட யாரால் முடியும்? இனி என்ன செய்யலாம்? கண்மணி!
காலத்தில் ஓர் உபாய மிருக்கிறது. அதை நீ தக்கபடி கையாடினால், நீ பிற
குடும்பத்தாருக்கு உலகம் உள்ள நாள் உள்ள வரையில் உயர்பதவியும்,
கிருஷ்டப் பெயரு முண்டாகும்," என,

இராஜகுமாரி இத்தியாதிசங்கதிகளை அழுத கண்ணுடனும், சிந்திய
குடனும் கேட்டு, "அன்பே அவதாரமாகவந்த தாயே! இந்தக் கஷ்டகாலத்
தாங்கள் சொல்லுகிறபடி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்" என, இராஜம
"கண்மணியே! சொல்லக்கேள்! காரியமோ முடிந்து விட்டது. இன்று இர
திரி உனக்குச் சோபன முகூர்த்தம் நிச்சயித்திருக்கிறார்கள். நீ படுக்கை
டிற்குப் போகும்போது உனது அப்பாவின் கைக்கட்டாரியை மடியில் வை
மறைத்துக் கொண்டுபோய் வைத்திருந்து, கிருஷ்ணதேவராயலு உன்மே
தூங்கும்போது அந்தக்கட்டாரியை எடுத்து அவன் வயிற்றில் இரண்டு மூ
குத்துகள் குத்தி வயிற்றைப்பிளந்து கொன்றுவிட்டு, யாரோ ஒரு துரா
வந்து குத்திவிட்டான் என்று கூப்பிட்டழுதுகொண்டு வெளியில் ஓடி
உடனே வந்து பார்ப்பவர்கள் யாரோ பகையாளிகள் இப்படிச் செய்தார்
என்று சொல்லிக் கிருஷ்ணராயலை அக்கினிக்கு இரையாக்கிவிடுவார்கள்.
படிச் செய்வதனால் நமது குடும்பத்தின் கீர்த்தியும் பிரகாசிக்கிறதோடு,
பதி ஸமஸ்தானத்துக்கு நடுங்கிக் கொண்டிருக்கும் நரர்கள் நிம்மதியாக இ
பார்கள். நமது ராஜாங்கத்துக்கும் வேறுபயமில்லை" என்று சொல்ல,

இராஜகன்னிகைகேட்டு, அழுது "அம்மா, கிருஷ்ணதேவராயலு சுக
தினிக்குப் பிறந்தவரென்றும், சுந்தர புருஷரென்றும், சுத்தவீரரென்
சகல சமயத்தாருக்கும், ஜாதியாருக்கும் உபகாரம் செய்யும் வள்ளலென்
அநேக கிரந்தங்களினாலும் கதைகளினாலும் அறிந்திருக்க, தாங்கள் இப்ப
சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. ஆயினும் என்னை எப்போது வி
விவாஹம் செய்தாரோ அன்றே நான் அவருக்குப் பாரியாளாகிவிட்டேன்.
படியிருக்க என் மனச்சாக்ஷிக்கு விரோதமாக அவரை எப்படிக்கட்டாரி
குத்திக்கொல்ல மனம் துணியும்!" என்று தலைகுனிந்து அழுதுகொ
சொல்ல, இராஜமஹிஷிக்குக் கோபமதிகரித்துப் பதைத்து "அடீ! பெ
குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பே! உனக்கும் உன் அப்பாவு
பிடித்த பைத்தியம் தலைமீது ஏறி இப்படி இல்லாத பொல்லாத கள்ளக்
களைப் பேசவந்தாய்! அடி மாதரு துரோகி! நீ இப்படி என் வார்த்தைக்கு ம
துச் சொல்லலாமா? ஆ! ஆ! என்ன கலிகாலம்! இன்றோடு நீ செத்தாய்!
நீ எனக்குப் பிள்ளையன்று! இப்போதே கிருஷ்ணராயலிடம்போ, இனி
வீட்டிற் சேர்க்கமாட்டேன்" என் றுறுடித்துச் சொல்ல,

இராஜகுமாரி தாயாருடைய கோபத்தைப் பார்த்துப் பயந்து பதைத்து
ன் அருமைத்தாயே! உங்களுக்கேன் உண்மை சொல்லப்போனால் இவ்
வு கோபம்; உங்களிஷ்டபடியே கிருஷ்ணதேவராயலைக் கொன்றுவிட்டுக்
டாரியோடு வருகிறேன்'' என்று சொல்ல, அப்பெண்ணுக்கு அன்றசோப
த்துக்கு வேண்டிய ஆடையாபரணகளைப் பூட்டிக் கட்டாரியைக் கொடுத்
சித்தப்படுத்த,

இத்தியாதிகளைத் திம்மரசு இரகசியமாகக் கேட்டு விசனப்பட்டுவந்து
ஷ்ணதேவராயலிடம் சொல்ல, அவரும் "அந்தோ! முதல்மனைவிதான்
படியானாள்; இந்த இரண்டாம் மனைவியும் இப்படியாகவேண்டுமோ!" என்று
வரனை நினைத்து விசனப்பட,

திம்மரசுபார்த்து "பிரபுவே பயப்படாதே! நான் சொல்லுகிறபடி கேட்
ல் நமது காரியம் ஜயமாகும்" என்று சொல்லி ஓர் அறையில் கிருஷ்ண
வராயலைப் படுக்கவைத்துவிட்டு, உத்கலதேசராஜனிடம்போய், "மஹா
ஜா! இன்று கிருஷ்ணதேவராயலுக்கு ஜனனதினமாகவும், உயுத்தத்தில்
ர்த்து ஆயாசமாகவும் இருப்பதால், இன்று செய்யும் சோபன முகூர்த்தத்
நாளைக்குவைத்துக்கொண்டால் நலம்" எனச் சொல்ல, அந்த மன்னரும்
ட்டு அப்படியேயாகட்டுமென்று சொல்லி அந்தப்புரத்துக்கும் சங்கதியைத்
ரிவித்தார்.

அதன்மேல் மந்திரி திம்மரசு கிருஷ்ணதேவராயலுடைய அறைக்கு
து, அவருடன் கலந்துபேசியும், அவரைப்போல மெழுகில் ஒரு சிலையைச்
ப்வித்தும், அச்சிலையின் வயற்றில் கொம்புத்தேன் நிறைந்த சுரைக்காய்க்
க்கையைப் பதித்தும், மேலே மெல்லிய சால்வையைப்போட்டு மூடிவைத்
கொண்டிருந்தும், மறுநாள் மாலை சோபன காலத்திற் படுக்கை வீட்டை
லங்கரித்தான் வுடனே, திம்மரசு கிருஷ்ணதேவராயலுடைய சிலையை ரக
மாகக் கொண்டுபோய்ச் சோபனக் கட்டிலில் படுக்கவைத்தும் மேலே சல்
த்துணி போட்டுமூடிக் கதவை மூடிக்கொண்டுவந்து அந்தப்புரத்துக்குப்
ய் 'கிருஷ்ணதேவராயலு ஆயாசமாகப்படுத்துக்கொண்டிருக்கிறார்; இப்
து யாரும் அப்படுக்கை வீட்டுக்குள் போகக்கூடாதுதென்றும், இராஜ
ரி மாத்திரம் இராத்திரி பன்னிரண்டுமணிக்கு நல்ல முகூர்த்தகாலமான
யால் அப்போது தனியாகப்போய்ப் படுக்கலாம் என்றும் சொல்லித் திட்
செய்துவிட்டும், திம்மரசும் கிருஷ்ணதேவராயலும் இராப்போஜனம்
ய்து முடித்துக்கொண்டு சோபனப்படுக்கை வீட்டிற்குள் போய்த் தங்கக்
டிலின் அடியில்பதுங்கிப் படுத்துக்கொண்டிருக்க, பன்னிரண்டுமணியாக
தாதிகள் இராஜகுமாரியை அழைத்துவந்து படுக்கைவீட்டிற்குள் விட்டு
டுக் கதவைமூடிக்கொண்டு போக, இராஜகுமாரி தாய் வார்த்தைக்குக்
டுப்பட்டுக் கட்டாரியைக்கையிலேந்திக் கட்டிலின் மீதிருக்கும் கிருஷ்ண
வராயலு சிலையின் வயிற்றில் குத்திக் கிழிக்க,அதினுள் நிறைந்திருந்ததேன்

பிறிக்கொண்டுவந்து இராஜாகன்னிகையின் முகத்திலும் உதடு முதலா
விடங்களிலும்விழ, இராஜகுமாரியின் உதட்டில் விழுந்த தேன் துளி
அவள் சப்பிப்பார்க்க; அது அதிகமதுரமாக இருக்க "அந்தோ! அந்தோ! இந்த
கிருஷ்ணதேவராயலுடைய இரத்தம்கூட அவர்குணங்களைப்போலவே ருசிய
யிருக்க இப்படிப்பட்ட மஹானுபாவனை மூடமதியுள்ள தாயார் உத்தரவுப்பட
கொன்றேமே; இப்பாவத்துக்கென்னசெய்வோம்" என்று துக்கித்தழ, இத்திய
திகளைக் கேட்டிருந்த திம்மரசு மந்திரி திடீரென்று கட்டிலின் கீழிருந்து வந்
இராஜகன்னிகையைப் பார்த்துக் கும்பிட்டு "என்தாயே தயங்காதே! இஃ
உன் குற்றமன்று, உன் தாயாரும் மற்ற மூடஸ்திரீகளும் செய்வித்தகுற்ற
நீ என்செய்வாய். நீ கிருஷ்ணதேவராயலைக் கொல்லுவதில்லை என்று இ
கட்டாரியைத் தலைமீது வைத்துச் சத்தியஞ்செய்துகொடுப்பாயாகில் உடனே
கிருஷ்ணதேவராயலை எழுப்பித்தருவேன்" என, அந்தராசகன்னிகையு
இசைந்து கட்டாரியைத் தலைமீதுவைத்துச் சத்தியம்செய்துகொடுக்க, உட
னே கட்டிலின்கீழ்ப் பதுங்கியிருந்த கிருஷ்ணதேவராயலு வந்து திம்மரசின்
தந்திரத்திற்குமெச்சி அந்த இராஜகுமாரியைத் தமது தர்மபத்தினியாக அங்
கரித்து ஆனந்த மடைந்தார்.

[ஆக இந்தக் கிருஷ்ணதேவராயலுடைய இரண்டு விவாஹத்தைப்பற்றி
மேற்கண்ட கதைகள் இப்போது அந்தச் சமஸ்தானத்தின் சந்ததியும், ஆ
குந்தியிலிருக்கும் ஸ்ரீமந்த ஸ்ரீரங்கதேவராயலுராவ்சாஹிபவர்கள் சென்ற வ
ஷம் நீலகிரிமலைக்கு மாட்சிமையுள்ள சென்னைக் கவர்னவர்களைப் பார்க்க
போனபோது, கோயமுத்தூர் ரெயில் ஸ்டேஷனில் நமக்கு வெகுமானமாக
கொடுத்த பிரவுடகவுல சரித்திரம் என்னும் தெலுங்குப் புத்தகத்திலிருந்
மொழிபெயர்த்தது.]

கிருஷ்ணதேவராயலுடைய இராஜ்ய பரிபாலன விமரிசனை.

வித்யாநகரம் அல்லது விஜயநகர சமஸ்தானத்தை ஆண்டுவந்த பிரபு
களில் கிருஷ்ணதேவராயலே சிரோபூஷணரென்று அநேக சாசன சரித்திர
களினால் பிரகாச மாவதுடன், அவருடைய தரும இராஜிய பரிபாலனத்தை
பற்றி இன்றளவும் அநேகர் கொண்டாடி வருகின்றார்கள்.

கிருஷ்ணதேவராயலுடைய விருதுகள்.

அந்தக் கிருஷ்ணதேவ ராயலு காலத்திலிருந்த அநேக அரசர்களும், க
களும், வித்வான்களும், சுத்தவீரர்களும், சமயாசாரியர்களும் அவரை 1. ஸ்ரீம

ஹாராஜாதிராஜர, 2. இராஜபரமேசுவர, 3. மாநாராயபிரசண்ட, 4. ஆரிய
யவிபாட, 5. பாஷிகதப்புவராயாகண்ட, 6. அஷடதிக்ராஜமனோயந்தர,
பூர்வ தக்ஷண பஸ்சம சமுத்திராதீசுவர, 8. யவனராஜியஸ்தாபனசா ய,
கஜபதிபாட, 10. நரபதிபூஷண, 11. ஸ்ரீ வீரபிரதாப, 12. ஸ்ரீ கிருஷ்ண
தவராய ப்ரபோ, என்றுதி பட்ட விருதுகளைச் சேர்த்துப் புகழ்ந்தார்கள்.

இப்படிப் பலவிருதுகளைப்பெற்றுத் தமது தம்பிமார்களாகிய அச்சுத
தவராயலையும், ஸ்ரீரங்கதேவராயலையும், மஹாமதியூகியாகிய சாலுவதிம்மரசு
ன்னும் அப்பாஜியையும், இந்த அப்பாஜியின் தம்பியாகிய கோவிந்தராயலையும்,
ஹா சுத்தவீரனுகிய சதாசிவராயலு என்னும் தளகர்த்தரையும், தண்ட நாயடு
ரு என்னும் நீதி பரிபாலன பிரதி நிதிகளையும், அஷ்டகஜங்கள் என்னும்
ட்டு ஆந்த்ர வித்துவான்களையும், அப்பாபதீக்ஷதர், ஸ்ரீ வேதாந்த தேசிகர்
ன்னும் தாதசாரியர், சாம்பசிவாசாரியர் முதலான துவைதா அத்துவைத விசி
ட்டாத்துவைத சித்தாந்த சிகாமணிகளையும், துணையாகக்கொண்டு அரசுசெய்து
ரும்போது கிருஷ்ணதேவராயலுக்கு அனுகூலிகளாக விருந்த மஹா ஜனங்
ள் யாவரெனில்:

(1) ஆர்வீட்டிவாரு, (2) நவுகவாரு, (3) நந்தியாலுவாரு, (4) பெம்மசானி
ாரு, (5) வெலம அல்லது வெலகோட்டிவாரு, (6) பூட்டஹரிவாரு, (7) தும
ண்டிவாரு, (8) துளுவதொரலு, (9) இராவலவாரு என்றுஇவர்களே.

ிருஷ்ணதேவராயலுடைய திரவிய சம்பத்தின் விபரம்.

(1) வித்தியாரணியர் விஜயநகரத்தைக் கட்டி முடிந்தப்பிறகு இராஜா
பாக்கிஷத்தில் மிச்சமா இருந்த ரூபாய் 99,00,00,000.

(2) வித்தியாரண்ணியருக்குப் பிறகு கிருஷ்ணதேவராயலு வித்தியா
ண்ணியர் தபசு செய்த விடத்தில் அகப்பட்ட ரொக்கம் 9,00,00,000-ரூபாய்.

(3) ஸ்யஸ்தான அரண்மனையிலிருந்த இரத்தினங்கள் தங்கம் முதலான
பரணங்கள் 4,00,00,000 ரூபாய்.

(4) வெள்ளி முதலான தட்டு முட்டு கட்டில் முதலானவகைகள்
00,00,000-ரூபாய்.

(5) கனராதேசத்தாற்கூடிக் கப்பமாக அனுப்பிக்கொண்டுவந்தது 84,00
00-ரூபாய்.

(6) பதாதிகள் 100-க்கு ஒருலக்ஷமாக 24-ஆயிரம் பட்டாளத்துக்கும்
தாதிகள் 24,00,000 இருந்தார்கள்.

(8) யுத்தத்துக்கும் வேறுவேலைகளுக்கும் உபயோகமாக 9,000 யானை
ளும்.

(9) ஒட்டைகள் 60,000.

(10) குதிரைகள் 66,000.

(11) தண்ணீர் கொண்டுவர 12,000 பக்காளிகளும்.

(12) தாசி ஜனங்கள் 20,000-பெயர்களும், அந்தபுர ஸ்திரீகளுக்கு உத
யாக 12,000 பெண்களும்.

(13) இராயனுடைய சமுகத்திலும், சொந்தவேலையிலும் மாதம் ஒன்றுக்
24,000 ரூபாய் சம்பளத்தில் 1000-சேவகர்களும், 14 ஸமஸ்தான கோட்டை
காவலாளிகளாக 4,00,000 ரூபாய் சம்பளத்தில் 1,60,000 வர்லண்டியர் வீ
களும் இருந்தார்கள். இவர்களில் பெரும்பாண்மையோர் வெலமவாரும், கம்
வாருமாம்.

கிருஷ்ணதேவராயனு கஜபதி சமஸ்தானத்தாரோடு சம்பந்தம் செய்து
கொண்டதில், அந்த சமஸ்தானத்தார் மூலியமாக கிருஷ்ணதேவராயனுக்
உதவியாகவந்த வீரர்கள் எவர்களென்றால்:—

(1) பலபதிரபாத்ருடு, (2) தர்க்காபாத்ருடு, (3) பீமாபாத்ருடு, (4) மு
தபாத்ருடு, (5) பீகாபாத்ருடு, (6) பேருபாத்ருடு, (7) இரணரங்கபாத்ருடு, (
கட்காபாத்ருடு, (9) அகண்டலபாத்ருடு, (10) முராரிபாத்ருடு, (11) வஜிரமு
டிபாத்ருடு, 12, (13) துருகரேவந்தபாத்ருடு, (14) கஞ்சாகுசபாத்ருடு, (1
அசஹாயபாத்ருடு, (16) மிருகேந்திரபாத்ருடு, என்பவர்களாம். அந்த வீரர்கள
றியில் கிருஷ்ணதேவராயனுடைய சண்டைக் காலத்தில் குதிரைபதாதிகளை
கொடுத்து உதவிபுரியும்படியான நாயடுகாரு அல்லது பிரபுக்கள் அல்ல
பாளையக்காரர்கள் 200 பெயர்களும் இருந்தார்கள்.

இந்தப் பிரபுக்களன்றியில் கிருஷ்ண தேவராயனுடைய அடைக்கலத்
அடைந்த அனேக மகமதியர்கள் சேனைவீரர்களாகி அவருக்கனுகூலமாக உ
த்த காலத்தில் உண்மையுடன் உழைத்து வந்ததன்றியில், அப்போது கோ
பட்டணத்தில் வந்து வர்த்தகம் செய்துவந்த போர்த்துகேயர்கள் தமக்கு வ
பனைக்காக அரபுநாட்டிலும், பாரசீக நாட்டிலுமிருந்துவரும் முதல்தரமா
குதிரைகளை எல்லாம் கிருஷ்ணதேவராயனுக்கே கொடுத்துக்கொண்டு வந்த
கள். அன்றியும், அந்தப் போர்த்துக்கேயவீரர்களில் அநேகர் கிருஷ்ணதே
ராயனுடைய பீரங்கிப்பட்டாளத்தில் சேர்ந்தும், ஐரோபா கண்டத்திலிருந்
முதல்தரமான பீரங்கி, துபாக்கி, இரவை குண்டு மருந்துகளைத் தருவித்து
கொடுத்தும், துப்பாக்கிப் பீரங்கி யுத்தத்தில் உற்சாகமாகவும் உண்மையாக
உழைத்து நரபதி ஸமஸ்தானத்தைப் பெருமைப்படுத்தி வந்தார்கள்.

கிருஷ்ணதேவராயனுடைய விஜயம்.

இப்படி இணையற்ற இரதகஜ துரக பதாதிகளால் சூழ்ந்திருந்த கிருஷ்
தேவராயனுடைய உயுத்த பராக்கிரமத்தைப்பற்றிப் பல கிரந்தங்களில் பிர
மாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

கிருஷ்ணதேவராயலு சிங்காசனமேறின உடனே தமது விஜயநகரக்
கோட்டையை விருத்தியாக்கி, பகைவர்வந்து தாக்குவதற்கு வழியில்லாமல் பந்
தோபஸ்தாகக் கட்டுவித்தும், தக்க பாதுகாப்புகளை நியமித்ததன்றியில்; அக்கா
லத்தில் அந்தச் சமஸ்தானத்தின் சுவாதீனத்திலிருந்த பெனுகொண்ட, சந்தர
கிரி முதலானக் கோட்டைகளைப் பலப்படுத்தியும், பிறகு காஞ்சி, செஞ்சி, வே
லூர் கோட்டைகளைப் பலப்படுத்தியும், அந்த வேலூர் கோட்டையில் தம்மினத்
தைச் சார்ந்த புஜபலராயலே, நாயுடுகாரு என்னும் பட்டணத்திலுல் பிரதிநிதி
யாக நியமித்து ஆண்டுவரும்படி செய்ததில், கர்னாடக ஸமஸ்தானத்தைச் சார்
ந்த உம்மத்தூர், சிவசமுத்திரம் பாளையக்காரராகிய சிற்றரசர்களைத் தம் வசமா
க்க பிரயத்தனப்பட்டார். அப்போது சிவசமுத்திரத்தை ஆண்டுவந்த கங்க
ராயன் முன் வீர நரசிம்மராயலுகாலத்திலும் அசட்டைசெய்ததோடு, இப்போ
தும் அடுத்த சில பாளையக்காரரைத் துணையாகக் கொண்டு, கிருஷ்ணதேவராய
லுடைய சேனையைப் பீரங்கிப்பட்டாளத்தோடு எதிர்க்க, கிருஷ்ணதேவராயலு
அந்தக்கங்கராயலின் விரோதியான சிக்கராயலேத் துணையாகக் கொண்டு சிவ
சமுத்திரத்திற் கடுத்த பிரேத பருவதம் சவுரிமலேக்கருகில் 1510 ஞூ சேனை
கள் தங்கித் தாக்க, அந்தக் கங்கராயன் பயந்து காவிரி நதியோரத்திலிருந்த
கங்கடு அசி என்னும் மடுவில் விழுந்து இறந்துபோக, அந்தச் சிவ சமுத்திரக்
கோட்டை கிருஷ்ணதேவராயலு வசமாகியது. பிறகு 1513 ஞூ உம்மத்தூ
ரும் ஸ்வாதீனமாக. கிருஷ்ணதேவராயலு ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்குப்போய்,
அங்கிருந்த காம்பகவுடர் வீரப்ப கவுடர்களைவசமாக்கி, அவர்களுடைய விசா
ரணையில் சில நாடுகளையும், சிக்கராயர் வசத்தில் சிலநாடுகளையும் கொடுத்தும்,
அடுத்திருந்த அநேக பாளையக்காரர்களை ஜயித்தும், அவர்களிடம் கப்பம் பெற்
றுக்கொண்டும் கர்னாடக தேசத்தில் சுமார் கோடிரூபாய் தமக்குக் கப்பமாகக்
கட்டும்படியாகச் செய்துகொண்டும், அக்கர்னாடக ஸமஸ்தானத்துக்கு ஸ்ரீரங்
கப்பட்டணத்தைப் பிரதான ஸ்தலமாக நியமித்தும், அவ்விடத்தில் சங்கு
சக்கிரங்களாதி விருதுகளுடன்கூடிய கிருஷ்ணதேவராய துவஜஸ்தம்பத்தை
யும் ஸ்தாபித்ததாக பாரிஜாதடஹரண கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

அப்படி துவஜஸ்தம்பம் ஸ்தாபித்தபிறகு கிருஷ்ணதேவராயலு குடகு
மலேயாளம் கவுட முதலான நாடுகளின்மீது படைஎடுத்துப்போய் ஜயித்து,
அந்த அரசர்களுக்கு கப்பங்களை நியமித்தும், பிறகு சேர, சோழ, பாண்டிய நாடு
களின்மீது படையெடுத்துப்போய் ஜயித்து துவஜஸ்தம்பங்களை நாட்டிவிட்டுத்
தமது விஜயநகரத்துக்குத் திரும்பிவந்தும், வடதேசங்களின்மீது படை எடுக்கத்
தக்க குண்டு துபாக்கி பீரங்கிமருந்து முதலானதுகளைச் சித்தப்படுத்திக்கொண்
டுக் களிங்க தேசராஜனைத் தம் வசமாக்கிக் கொண்டும், தமது மஹாமந்திரி
யாகிய திம்மரசு அப்பாஜியையும், சேனாதிபதியாகிய சதாசிவராயலேயும் கூட்
டிக்கொண்டு மத்திய இந்தியா மார்க்கமாக கூர்ச்சரம் அல்லது குஜராத்து
தேசத்தையும், பிறகு மகததேசத்தையும், இடைக்கிடை இருந்த மகமதியர்
களையும் ஜயித்துக்கொண்டும் விஜயநகரத்துக்குத் திரும்பிவந்து தமது பிரபுத்

ராஜ்யத்தை ஹிமசேது பரியந்தம் பிரபலமாகப் புகழும்படி நடத்திவந்தார்.

கிருஷ்ணதேவராயலு 1515௵ கொண்ட வீட்டி சீமையை ஜயித்த
விநோத சரித்திரத்தைப் புருஷார்த்த பிரதாணியில் வெளியான கொண்ட
வீட்டி தண்டகவியில் விவரமாச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாட்டை
சுற்றிலும் எழுபத்திரண்டு பாளையக்காரர்கள் சூழ்ந்திருந்தபடியாலும், அது
மகா அரணான மலைக்கோட்டையாக இருந்தபடியாலும், அப்படி அரணான
கோட்டையைத் தாக்கிப் பிடிப்பது கஷ்டசாத்தியமென் றிருக்கையில், அதை
அறிந்த ஒரு பிராமணர் தந்திர உபாயத்தால் அப்பாளையக்காரர்களாகிய பெட்
டிகளை வசப்படுத்தியும், அவர்களால் அங்கு ஒரு பெரியகோயிலைக் கட்டிவைக்
கச் செய்தும், அதில் கோபிநாதசுவாமி விக்கிரகத்தைப் பிரதிஷ்டிப்பிக்கச் செய்
வித்தும், அந்தப் பிரதிஷ்டை உற்சவத்தைப் பார்ப்பதற்கு அந்தப் பாளையக்
காரர்களைத் தருவித்தும், அவர்களைத் தந்திர மந்திர மருந்து விருந்துகளால்
சாகும்படி செய்ய, அச்சமயமறிந்து கிருஷ்ணதேவராயலு அக்கோட்டையின்
மீது படை எடுத்துப்போய், மூன்று மாதகாலம் முற்றுகைப்போட்டுப்பிடித்து
அங்கு சாலுவதிம்மரசை அதிகாரியாக நியமித்துவிட்டும், பிறகு பெல்லமுகொண்
ட, நாகார்ஜுனன் கொண்ட, வினுகொண்ட, என்றுந்தி மலைக்கோட்டைகளையும்
அவைகளை அடுத்த பதினைந்து நாடுகளையும் கைபற்றிக்கொண்டார். அப்படிச்
செய்ததனால் உதயகிரிக்கடுத்த கைதெபல்லி, உத்தங்கி சீமைக்கடியில் பாருசா
யும், தேசானுபல்லே, யம்மலமந்த, மாதலம் தொண்டபி, கோசரி, ஜுவ்வலகல்
லு, பாகால, சிங்கனபல்லே, தும்மலபேட்ட, கம்பேடு முதலான கிராமங்கள் வசமா
யின. அவைகளில் வினுகொண்ட, பெல்லமு கொண்ட, நாகார்சுன கொண்ட
என்ற கோட்டைகளை சில மாகாணங்களாக வகுத்தும், மற்றப் பத்து கிராமங்
களைக் கர்னாடகதேசத்தோடுசேர்த்து விட்டார். பிறகு கொண்ட கொட்டே
அல்லது இப்போது பரஹாம்பூர் பட்டணம் என்று வழங்கிவரும் நாட்டின்
அதிபதியாகிய சுகராஜு பஹுபலேந்திரனோடு சுமார் டன்னிரெண்டு வருஷ
காலமாக அடிக்கடி சண்டைசெய்து ஜயம் பெற்றார்.

(மநு சரித்திரம், பாரிஜாதாபஹரணம், ஆமுக்தமால்யாதி கிரந்தங்
களின்படி, அக்காலத்தில் (1520௵) கிருஷ்ணதேவராயலு ஸ்வாதீனத்தி
உதயகிரி, வினுகொண்ட, கொண்டவீடு, பெல்லமுகொண்ட, வெலுபுகொண்ட
ஜல்லி பல்லி, அநந்தகிரி, கம்பம், பெஜவாடா, இராஜமஹேந்திரத்திற் கரு
கிருக்கும் கனககிரி, கவுதமி, பொட்ரேரு, மடிபாலு, வட்டாதி, கடகபுரி மு
லானமலைக் கோட்டைகளிருந்தனவாகத் தெரியவருகிறது. 1510௵ போர்
துகேயர், ஈசுப் அதில்ஷாவிட மிருந்த கோவாபட்டணத்தைப் பிடித்து
கொண்டார்கள். இந்தவிஷயத்தில் கிருஷ்ணதேவராயலும் போர்த்துக்கே
ருக்கு உதவியாக ஹோனுவாரிலிருந்த சமது வீரனாகிய திம்மய்யாவைத் த
கர்த்தனை அனுப்பி, பாட்டகால் என்னும் இடத்தில் ஓர் பண்டகசாலையை
கட்டிக்கொள்ள விடை கொடுத்தார். அன்று முதல் அப்போர்த்துகேய
கிருஷ்ணதேவராயலுக்கு சிநேகிதர்களாகி பீஜபூர் சண்டையில் உதவிசெ

தார்கள். 1510-ம் வருஷம் முடிவில் ஈசுப் அதில்ஷா இறந்துபோக, அவர் பட்டத்திற்கு இஸ்மேயில் அதில்ஷா வந்தார். 1520-ம் வருஷம் மேமாதம் 19-ந் தேதி சனிக்கிழமை கிருஷ்ணதேவராயலு பீஜப்பூரைச்சார்ந்த ரெய்ச்சூர் முடகல் கோட்டைகளைப் பிரயாத சண்டைசெய்து பிடித்துக்கொண்டார். இக்கோட்டைகளுக்காக இஸ்மெய்ல் அதில்ஷா என்பவர் 1522-ம் வருஷம் கிருஷ்ணதேவராயலோடு பிரபல சண்டைசெய்தும் ஜயமடையவில்லை. அந்த யுத்த காலத்தில் கிருஷ்ணதேவராயலிடத்தில் 3,26.000 குதிரைகளும், 586 யானைகளும், 7,[illegible]3,000 பதாதிகளும், அவர்களுக்குத் தண்ணீர் கொண்டுவர 12.000 பக்காளிகளும், 20,000 தாசிகளும் இருந்ததாக ஓர் போர்த்துக்கேய சரித்திரகர் எழுதியிருக்கிறார். அந்த உயுத்தத்திற்கு பிறகு பீஜப்பூரார் கிருஷ்ணதேவராயலுடைய ஆயுள்காலம் வரையில் உயுத்தத்துக்கு வரவேயில்லை. மைசூர்த் தலைவனான உம்மத்தூர் அதிபதியும் பிறகு படை எடுக்கவில்லை. கிருஷ்ணதேவர் குடகு நாட்டின்வழியாக மலையாளத்துக்குப் போக பிரயத்தனப் படுகையில், மலையாள அரசன் சரணடைந்து கேட்ட கப்பம் கட்டிவந்தார். பிறகு பாண்டிய நாட்டை ஜயித்து, அதற்கு நாகம நாயுடைப் பிரதிநிதியாக நியமித்து ஆண்டுவரச்செய்தார். தமது தகப்பனார் கட்டுவித்த செஞ்சி, வேலூர், சந்திரகிரியில் கட்டிய சிறு கோட்டைகளைப்பெரிய கோட்டைகளாகக் கட்டுவித்தார். பிறகு தெலுங்கராளுகையை நாடிச்சென்று நெல்லூரில் உதயகிரி அரசனை ஜயித்துக்கொண்டு, அப்போது நைஜாம் சுவாதீனத்திலிருக்கும் பெரும்பாகத்தைப் பிடித்துக்கொண்டார். ஒரிசா கஜபதியோடு சண்டை செய்து கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களைப்பிடித்துக் கொண்டதோடு, கஜபதி குமாரத்தியை விவாஹம் செய்து ஜயசீலரானார்.

இப்படியே கிருஷ்ணதேவராயலு அநேக மகமதிய அரசர்களிடத்திலும், இந்து அரசர்களிடத்திலும் பிரபல சண்டைகள் செய்து ஜயப்பெற்றுவந்தார், கிருஷ்ணதேவராயலுடைய பெயரைக் கேட்டமாத்திரத்தில் எப்படிப்பட்ட வீரதீரனும் திடுக்கிட்டு நடுங்கி அவர் விரும்பிய கப்பத்தைக் கட்டிக் கொண்டு வந்தார்கள்.

கிருஷ்ணதேவராயலு இப்படிக் கேவலம் சுத்தவீரனாக இருந்து பகைவர் மீது படையெடுத்துப்போய் சண்டைசெய்து ஜயாதிபதி என்று கியாதி பெற்று வரும் குணமே சிறந்த குணமாக உடையவரல்லர்.

அவர் தமது நிழலுக்குள் வாழ்ந்துவந்த குடிகளுடைய இகபர சுகங்களையும் நாடி அவர்கட்கு இன்றியமையா சாதனங்களையும் செய்துவந்தார். அச் சாதனங்களில் சில இன்றளவும் அவருடைய தருமராஜ்ய பரிபாலனத்தைப் பற்றிப் புகழ்ந்து கொண்டாடுகின்றன.

கிருஷ்ணதேவராயலுடைய 22- வருஷ ஆளுகைக்குள் குடிகளுக்குண்டான நன்மைகள் இவ்வளவவ்வளவல்ல. தமது ஸமஸ்தான நீதி விசாரணைகளைத் தமது பிரதிநிதி தண்டநாயடவர்களைக்கொண்டு நடத்திவந்தாலும்; கேவ

லம் உத்தியோகஸ்தர்களை நம்பினால் குடிகளுக்குக்கஷ்டம்வருமென்று எண்ணி, இராஜகீய ஒவ்வொரு காரியத்தையும் பெரும்பாலும் தாமே நேரில் கண்டும் கேட்டும் நீதி செலுத்திவந்தார். முதலில் குடியானவர்களுடைய நன்மையைக் கருதி துங்கபத்திரா நதியின்மேல் 1521-ம் வருஷம் பெரிய அணையைக்கட்டி, அதின் ஜலத்தை விஜயநகரத்துக்குள் திருப்பினார். அதைப்பார்த்து அவருடைய உதவி மந்திரியார் மத்தண்ணன் என்பவர் அந்தத்துங்கபத்திராவிலிருந்து 7 வாய்க்கால்களையும் வெட்டுவித்தார். மைசூருக்கும், தார்வாருக்கும் இடையிலுள்ள பெரியகுளம் அவர்காலத்தில்தான் வெட்டப்பட்டது. குடித்தனக்காரருக்கு வேண்டிய ஜலபாசன வேலைகளை அப்போதைக்கப்போது சித்தப்படுத்திக்கொண்டும், குடிகள் கிணறுகளை வெட்டவும், ஆடுமாடுகளை வாங்கவும், பூமிகளைத் திருத்திச் சீர்படுத்தவும், வேளாண்மைக்கு வேண்டிய கருவிகள் விதை முதலானதுகள் வாங்கவும், குறைந்தவட்டியில் கடன் கொடுத்து வந்தார். நிலக்காரர்களுக்குள் எல்லைத் தகரார்கள் உண்டாகாதபடி ரெவினியூ சர்வே டிபார்டுமெண்டை நியமித்து தக்கபடி அளந்து கொடுத்து வந்த விவரத்தையும், ஒவ்வொரு கிராமத்திலும் சரியான ரெவினியூ ரிகார்டுகள் வைப்பித்து, நீதிசெய்து வந்ததாகவும், கனரா தேசத்தில் ஒரு ரிகார்டு ஸர்தாமஸ் மன்றோ பிரபுவுக்கு அகப்பட்டிருக்கிறது. இப்போது இந்த சென்னைராஜதானியில் இருக்கும் இரயத்துவாரி வழக்கம் அல்லது குடியானவர்களே நேராகக் கவர்ன்மெண்டாருக்குக் கந்தாயத்தைச் செலுத்தும் வழக்கம் முதல் முதல் கிருஷ்ணதேவராயலு காலத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது குடிகள் கட்டிய கந்தாயம் அதிக கொஞ்சமாக இருந்ததோடு, அந்தக் குறைந்த கந்தாயத்தையும், நிலத்தில் விளைவான மாசூலிலும், சிலவிடங்களில் ரொக்கமாகவும், சிலவிடங்களில் ஆறில் ஒரு பாகமாகவும், குடியானவர்களின் காலஸ்திதிக்குத் தக்கபடி வருத்தாமல் வசூல் செய்து வந்தார்கள். அந்தத் தரும நியமனத்தை மகமதிய மன்னர் மாற்றி அதிக கந்தாயமாக்கிவிட்டார்கள். அன்றியும் காடுகளையும் புறம்போக்கு பூமிகளையும் குடிகளுக்கு இலவசமாகக் கொடுத்து அவ்விடங்களில் நன்செய், நந்தவனம், புன்செய், தோட்டங்களைச் செய்யச் செய்து திரவிய சகாயமும் செய்து வந்ததுடன், உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தகம் விருத்தியாகக் கைத்தொழிலாளிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் வேண்டிய திரவிய சகாயமும், வசதிகளும் செய்து வந்தார்,

அவர்காலத்தில் பர்மா இலங்கை முதலான விடங்களிலிருந்துவரும் பலவித இரத்தினங்கள விற்பனைக்காக அந்த விஜயநகரத்தாருக்குத்தான் கொண்டு வரப்பட்டன. ஹாரமிஸ், கெயிலி முதலான விடங்களிலிருந்து நல்ல ஆணி முத்துகள் அங்கு வந்துக் கொண்டிருந்தன. சீனதேசத்திலிருந்தும், ஐரோப்பா, அலக்சாந்திரியா, டமாஸ்கஸ் முதலான விடங்களிலிருந்தும் பட்டுத் தினுசுகளும், சாயத்துணிகளும், ஏராளமாகக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. அன்றியும்,

கிருஷ்ணதேவராயனுக்கு கீழ்சமுத்திரக்கரையோரத்திலிருந்த பெரிய

பட்டணங்கள் ஸ்வாதீனத்திலிருந்தபடியால், அவ்விடங்களுக்கு சீனா, பைகோ, இலங்கை, அரேபியா, மலபார், சுமேத்திரா, ஜாவா முதலான விடங்களிலிருந்து பல பொருள்களுடைய கப்பல்கள் சதா வந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தன. அப்படி பல நாடுகளிலிருந்து ஏராளமான சரக்குகளும் ஜனங்களும் கிருஷ்ணதேவராயலு ஸமஸ்தானத்துக்கு வந்துகொண்டிருந்ததில் ஜனத்தொகை அதிகரித்தபடியால், அக்காலதேச தர்த்தனங்களைத் தழுவி, கர்னாடக சமஸ்தானத்தில் ஹூப்ளி, பெங்களூர், பல்லாரி, சிக்கபால்லாபுரம் முதலான அநேகப் பட்டணங்களைப் புதிதாக நியமித்தும், எதிரி ராஜாக்கள் தலை எடுத்து வராதபடி அநேக பலமான கோட்டைகளையும் கட்டுவித்தார். இம்மட்டோ! ஸமஸ்தானத்தில் பலவிடங்களில் பாடசாலைகளையும், சருமசாலைகளையும், வைத்தியசாலைகளையும், பிராமணர்களுக்கு அநேக அக்கிரஹாரங்களையும், வழிப்போக்கர்களுக்கு குளங்கள், கிணறுகள், சாலைகள், சத்திரங்கள் முதலானவைகளையும், நியமித்திருந்ததுடன், தாம் பட்டாபிஷேகம் பெற்றுக்கொண்டதினமேல் ஹம்பியில் ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டிவைத்ததன்றியில், பின்னும் பல விடங்களில் அநேக கோயில் கோபுரங்களையும் கட்டி அவைகளுக்கு மானியதர்மங்களைச் செய்வித்தும் வந்தார். விஜயநகரத்தை அடுத்த கிருஷ்ண புரத்தில் 1513-ம் வருஷம் பிரபலமான கிருஷ்ணருடைய கோயிலையும், விஜயவிட்டலர் கோயிலையும் கட்டுவித்தன்றியில், காஞ்சீபுரத்திலிருக்கும் வரதராஜசுவாமி பெரிய கோயில் கோபுரங்களையும் கட்டுவித்ததாக சாசனமிருக்கிறது.

அவர் ஸ்ரீரங்கம், திருப்பதி முதலான விடங்களில் கோயில்களுக்குச் செய்த தருமங்கள் அநந்தம். இப்படிப் பலவிதத்திலும் புகழ் பெற்று வந்ததனால் விஜயநகர ஸமஸ்தானம் உலகத்தில் ஒப்பற்ற ஸமஸ்தானமாகி அந்த விஜயநகரத்தில் சகல ஜாதியாரும், சகலமதஸ்தர்களும், சகல வித்துவான்களும், கவிகளும், சிற்பிகளும், சாஸ்திரிகளும், பூரணசுகமாகவும் சுதந்திரமாகவும் வாழ்ந்து வந்ததாக கி. பி. 1514-ம் வருஷம் போர்த்துக்கல்லில் இருந்து யாத்திரைக்காரராக வந்துப் பார்த்த (Barbosa) பார்போசா என்பவர் தமது யாத்திரைச் சரித்திரத்தில் எழுதி இருக்கிறார். கிருஷ்ணதேவராயலுடைய பிரபுத்துவம் இப்படி பலவிதத்திலும் பிரபலமானதற்குக் காரணமென்ன என்று யோசிக்கையில் "உலகம் அறிவுடையார் மாட்டு" என்னும் முன்னோர் வாக்கியத்தின்படி, கிருஷ்ணதேவராயலு சமுகத்தில் சதா சமஸ்கிருத பண்டிதர்களும், அஷ்டசஜங்களென்னும் எட்டு ஆந்திர வித்துவான்களும், அடிக்கடி சந்தித்து, இராயலுக்கு இராஜதந்திராதி அறிவையூட்டியும், அவரையும் ஓர் சிறந்த ஆந்திர கவியாக்கியும் வந்ததனால், அவர் காலத்தில் ஆந்திரபாஷை சீர்திருத்தப்பட்டு பூரணம் பெற்றது.

ஆந்திரபாஷைக்கு தெலுங்கு பாஷை என்ற பெயர் வந்த காரணம்.

ஆந்தரம் என்னும் பதத்துக்குப் பிரதிஷ்டை, பெருமை, மேன்மை என்று பொருள்களானபடியால், ஆந்திரர் என்றால் பிரதிஷ்டை பெற்றவர்கள், பெருமை பெற்றவர்கள், மேன்மக்கள், உயர்ந்தோர் என்றுபெயர்களால் பிரகாசித்து வந்தார்கள். அந்த ஆந்தரர் ஆதியில் ஸமஸ்கிருத பாஷையை வழங்கி வந்தார்கள். பிறகு அந்தப்பாஷையின் சில பதங்களுக்கு இறுதியில் டு-மு. வு-லு, என்றுகின்ற ஈறு அல்லது பிரத்தியங்கள் சேர, அது ஒரு புது பாஷை போலாகியது. அந்த ஆந்தரபாஷை ஒருகாலத்தில் கங்கைநதிமுதல் தென்னாடுகள் பலவற்றிலும் வழங்கிய தன்றியில் ஜாவா, சுமேத்திரா முதலான விடங்களிலும் பரவியிருந்தது. அது 1861-ம் வருஷம் இந்துதேசத்தில் (10,00,000) பத்துலக்ஷம் மைல் விஸ்தீரணமுள்ள நாடுகளில், சுமார் 170,00,000 ஜனங்களால் வழங்கப்பட்டு வந்தது. அந்தப் பாஷைக்காரராகிய ஆந்திரருடைய சந்ததிகள் வடநாடுகளை விட்டுத் தக்ஷணதேசத்தில் முதல் முதல் குடியேறிய இடத்திற்குத் திரிலிங்கம் என்று பெயர் திரிலிங்கம் என்றால் (1) ஸ்ரீசைலபருவதம், (2) காளேசுவரம், (3) பீமேசுவரம், என்னும் மூன்று விடங்களில் சிவபெருமான் மல்லிகார்ச்சுனன், காலநாதன், பீமேசுவன், என்ற முப்பெயர்களால் மூன்று லிங்கங்களாக வமைந்து, அம்மூவிடங்களுக்கும் 'திரிலிங்கானம்' என்று பிரபலமான பெயர் பெற்றுப் பிரகாசிக்கிறபடியால், அப்படிப் பிரகாசிக்கும் மூன்றுநாட்டெல்லைகளுக்குள் வந்து குடியேறிய ஆந்திரர்களுக்கு திரிலிங்கர் என்ற பெயரிட்டழைக்கப்பட்டமை, அந்தத் திரிலிங்கர் என்னும் வார்த்தையானது, காலாவட்டத்தில் தெலுங்கர் என்று மருவியதனால், அந்தத் தெலுங்கர் வழங்கி வந்த பாஷைக்கும், தெலுகு, அல்லது தெனுகு, அல்லது தெலுங்கு என்று பிரசித்தியாகி விட்டது.

இம்மாதிரியாகவே பிரம்ம க்ஷத்திரியர்களுக்கு, ஆதியில் ஆரியர் அல்லது ஆரிய என்று வழங்கிவந்த பட்டப் பெயர்களும் காலாவட்டத்தல் ஐய, ஐயர் என்றும் ராஜ, என்ற பதம் ராய, ராயலு, என்று மாறிவிட்டதாகவே தோன்றுகிறது. மேலும் வித்தியாரண்ணிய சுவாமிகளால் உண்டாக்கிய வித்தியாநகரத்துக்கு அதிபதிகளானவர்கள் வீரர்களாக இருந்தபடியால், அந்நகரத்திற்கு விஜயநகரமென்று பெயருண்டாகியதாகத் தோன்றுகின்றது.

அந்த விஜயநகர ஸமஸ்தானத்தாரால் முக்கியமாக கிருஷ்ணதேவராயனது காலத்தில் ஆந்தரபாஷை அதிகமாக ஸமஸ்தான உதவியைப் பெற்று பிரகாசித்த தென்பது அவருடைய சமுக வித்வான்களால் விளங்கும்.

அந்த ஆந்திரச்சமுக வித்வான்கள் எவர்களெனில்.

1. அல்லசானி பெத்தன்ன [illegible]வர் ஆது பாட்டி சீமையில் பிறந்து,

தெலுங்கு பாஷைக்கு பிதாவைப்போன்ற பிரபல வித்துவான். இவர் மநு சரித்திரம், ராமஸ்தவராஜீயம், அத்வைதார்தம் முதலான கிரந்தங்களை இயற்றினவர்.

2. 'பட்டுமூர்த்தி'—இவர் பட்டபள்ளியில் குடியிருந்தவர். வசுசரித்திரம், நரசபூபாலீய முதலான கிரந்தங்களை இயற்றியவர்.

3. 'நந்திதிம்மன்ன'—சன்னமருடி, பாரிஜாதாபஹரண முதலிய கிரந்தங்களை இயற்றியவர்.

4. 'பிங்களி சூரன்ன'—இவர் ராகவபாண்டிய முதலான கிரந்தங்களை இயற்றியவர்.

5. தெனாலிவாசியாகிய தெனாலி ராமலிங்கம், இவர் பாண்டுரங்க விஜயம், பாண்டுரங்க மஹாத்மிய முதலான கிரந்தங்களை இயற்றியவர்.

6. சித்தூர் டிஸ்டிரிக்ட் 'ராமபத்திரகவி'—இவர் இராமபுத்திய முதலான கிரந்தங்களை இயற்றியவர்.

7. சங்கரகவி—இவர் பார்வதிமாலாதி கிரந்தங்களை இயற்றியவர்.

8. தூர்ச்சடி—இவர் அநேக வேடிக்கையான கவிகளைப் பாடியவர்.

இப்படிப்பட்ட அஷ்டகவிச்சிங்கங்களால் சூழப்பட்டிருந்த கிருஷ்ணதேவராயனும் மகாவித்வானென்று சொல்லவும் வேண்டுமோ. ஆகவே அந்தக் கிருஷ்ணதேவராயனும் (1) ஆமுக்தமால், (2) சகலகதாசார சங்கிரகம், (3) சிங்காரரசமஞ்சரி முதலான கிரந்தங்களை இயற்றினார். அன்றியும் வினோதமாகக் காலம் போக்க அச்சமஸ்தானத்தில் சந்திரகிரியில் பிறந்ததாகச் சொல்லும் 'தென்னலிராமகிருஷ்ண' னுமிருந்து வெகு அபூர்வமான யுக்திகளால் இராஜனைச் சந்தோஷபடையச் செய்துவந்தார். அந்த தென்னலிராம கிருஷ்ணனுடைய வேடிக்கையான கதைகளில் சிலதெலுங்கு தமிழ்ப் பாஷைகளிலும் அச்சிட்டிருப்பதுடன், மிஸ்டர் பண்டித நடேச சாஸ்திரிகள் ஆங்கில பாஷையிலும் அச்சிட்டிருக்கின்றனர். இவர்களன்றியில் அக்காலத்தில் விஜயநகர சமஸ்தானம் களிங்கம், வேகி, விதர்ப்பம், கோலகுண்ட, பஞ்சமோத்திர சண்டம், தக்ஷண கண்டங்களாக விருந்தபடியால் ஒவ்வொரு காண்டத்திலும் சில சிறந்த ஆந்திர வித்துவான் களிருந்தார்கள்.

அந்தக் கவிகளுடைய பெயரும்	இயற்றிய நூல்களும்

களிங்கநாட்டில்.

அடிதம்சூரகவி	கவிரஞ்சனம்
பூசபாடி தம்மபூபால்கவி	ஸ்ரீகிருஷ்ண விஜயம்

வேகிதேசத்தில்.

கூசிமஞ்சி திம்மகவி	ரசிகஜன மனோபிராமம்
ஏனுக லக்ஷ்மணகவி	இராம விலாசம்

விதர்ப்பநாட்டில்.

ரெண்டேரிரங்கராஜரி பாருமதிபாணியம்
கனூடர்த்த அப்பயகவி—கவிராஜமனோரஞ்சகி

பஸ்சிமோத்திர கண்டத்தில்

வெங்கடாசாரி—சமத்காரமஞ்சரி
சாரங்கதம்மயம்—வைஜியந்திவிலாசம்

தக்ஷிண கண்டத்தில்.

சேஷமுவெங்கடபதி—தாராசங்கம்
பண்டிடெத்தகிருஷ்ண கவி—பில்ஹணீயமு
சேடகூருவெங்கடராஜுகவி—விஜயவிலாசம் என்ற இத்தி கிரந்தங்களை இயற்றினார்கள்.

அந்தக் கவிகளன்றியில் அவர்களுக்கு முன்னும் பின்னும் சில ஆந்திர கவிகள் இச்சமஸ்தானத்தாரால் பிரபலயானார்கள். அவர்களில் சிலரையாத்திரம் இவ்விடம்காட்டுவது அவசியமென்று எண்ணி எழுதுகிறோம்:—

1. நன்னயபட்டர்—இவர் கி-பி-1130-ம் வருஷம் ஆந்திரர் காலத்தில் கண்ணுவரிஷி எழுதிய இலக்கணத்தைச் சுருக்கி எழுதியதுடன், தெலுங்கு பாரதத்திலும் அதிக பாகம் பாடியவர். திக்கன்னசோமயாஜி அதைப்பூரணமாக்கினார்.

2. அப்பகவி—இவர் 12-ம் நூற்றாண்டில் பிரகாசித்த மஹா இலக்கண வித்துவான். இவரும் அநேக கிரந்தங்களை இயற்றினார். கிருஷ்ணதேவராயனுக்குப் பிறகு வித்துவான்களைத் தக்கபடி ஆதரிப்பவர் இல்லை. ஆயினும் அவர் காலத்திற்குப் பிறகு.

3. வேமலவாடாபீமன்ன—இவர் பதின்மூன்றாவது நூற்றாண்டிலிருந்தவராகத் தெரியவருகிறது. இவர் ஆந்திரசந்தம் என்னும் யாப்பிலக்கணத்தை இயற்றினார்.

4. கோதுலபதி தருமன்ன—இவர் விஜயநகரத்து ஓர் ஆந்திரராஜர் காலத்தில் சுமார் 200-வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர், மிருத்தியுஞ்ஜய விலாசத்தைக் கவியாகபாடியவர். இந்நாடகத்தில் மரணத்தை வெல்லும் விதத்தைப்பற்றியதாகிலும் சிவபெருமான், பார்வதியாரும் கங்கையை விவாகம் செய்த சங்கதிகளடங்கி இருக்கின்றன.

5. அதிதம் சூரன்ன—இவர் சுமார் 180 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் ஆந்திரசேஷம் என்னும் கிரந்தத்தை இயற்றினார்.

6. ஓரக்கபள்ளி சோமப்ப—இவர் 150 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் அனகபல்லி இராஜா சமுக வித்வானாக விருந்து ஸ்ரீகிருஷ்ண ருக்மணி புத்திரனாகிய பிரதியும்னனுடைய ஜநநமாகிய 'பிரதியும்னோதயம்' என்னும் நாடகத்தையும், மேற்படி பிரத்தியும்னனுக்கு உருக்மாவதியை விவாகம் செய்த கதையை "உருக்மாவதி பரிணியாயம்" என்னும் கிரந்தத்தையும் இயற்றினார்.

7. பிரயாகம் நல்ல காமேசுவரம்—இவர் சுமார் 180 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் 'கல்பஞ கல்பமஞ்சரி' என்னும் ஸ்ரீராமருடைய பாட்டனார் அஜமஹாராஜர் இந்துமதி என்னும் ஸ்திரீயை விவாஹம்செய்த சங்கதியைக் காவ்யமாகவும், ஸ்ரீ கிருஷ்ணர் நிர்வாணமாக நின்ற இடைச்சியின் சீலையைத் திருடியதை 'கோபிகஜனமுக்த வஸ்திர டஹரண பாலனே பாலலீலா சுதால ஹரி' என்னும் காவியத்தையும், ஸ்ரீகிருஷ்ணர் சுதந்தாவை விவாஹம் செய்ததைச் 'சுதந்த கலியாணம்' என்ற கிரந்தத்தையும் இயற்றினர்.

8. சத்துராஜலக்ஷ்மி நரசு—இவர் சுமார் 130 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். சிவபார்வதி கலியாணமாகிய ஈசுவரிபரிணியம், பன்னஞராதி, பீமகோதண்டராம சதகம், விசேஷார்த்திரம், என்னும் அகராதி ஆதியங்களை இயற்றினர்.

9. காகரபார்த்தி பத்துருடு—இவர் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் சதியபாமா கிருஷ்ண சம்வாதம், என்னும் கிரந்ததை இயற்றினர்.

10. குருநந்தி நரசிம்மடு—இவர் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் சிறந்த அஷ்டாவதானி.

11. நடமிண்டி சர்வமங்களேஸ்வர சாஸ்திரி—இவர் விஜயநகர சமஸ்தானசமஸ்கிருத வித்துவான், தெலுங்கிலும் நிபுணர். இவரைக் காளிதாசவதாரமென்று சொல்லுவார்கள். இவர் சமுஸகிருத நாமாவளி என்ற இலக்கண கிரந்தத்தை இயற்றினர்.

12. ஜயகிரி சராபகவி—இவரும் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர்யாதவராஜபாண்டவியம் என்னும் கிரந்தத்தை இயற்றினர். இந்தக் கிரந்தத்தின் ஒவ்வொருவாக்கியமும் கிருஷ்ணர், இராமர், பாண்டவர் என்னும் மூவர் பொருளடங்கியிருக்கின்றது.

13. பரவஸ்து ஸ்ரீநிவாசாசாரி—இவரும் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் சமஸ்கிருதத்திலும் வித்துவான். இவர், விஸ்வகுண தரிசனம் என்னும் கிரந்தத்தை ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்தார்.

14. பரவஸ்து இரங்காசாரி—இவர் மேற்படியார் குமாரர்.—இவர் ஸப்தார்த்தசரவணம் என்னும் அகராதியை எழுதினவர்.

15. ஸ்ரீ பாதசாலமய்ய சாஸ்திரி—இவர் கவுசலியோபாகியானம், இராம கிருஷ்ணோபாக்கியானம் என்னும் கிரந்தங்களை இயற்றினர்.

16. இவர்களைத் தவிர சில்லறைக் கவிகள் ஜனித்து நவீன நாடகங்களை எழுதினர்கள்.

17. வேமன்ன—இவர் 16-வது நூற்றுண்டில் பிரகாசித்த வேதாந்த வித்துவான். இவர் சுமார் 2000-பத்தியங்களில் இத்தேசத்து துர்மதாசாரங்களைக் கண்டித்து நீதிகளையும் வேதாந்த விஷயமானவைகளையும் பாடினர்

இவர் இப்படி வேதாந்தியானதற்கு பலர் பலகதைகள் சொல்லுவதுண்டு. இவர் கொண்டவீடுவில் பிறந்தவர்.

இராவ்பஹதூர் வீரேசலிங்கம் பந்துலு அவர்களுடைய ஆந்திரகவிகள்-சரித்திர கிரந்தத்தில் அடியில்கண்ட வித்வான்கள் ஆந்திர தேசங்களில் பிரகாசித்ததாகப் பதிப்பித்திருக்கிறார்.

முதல்பாகம் -பூர்வகவிகள்.

(1) நன்னையப்பட்டு, (2) திக்கன்ன சோமயாஜி, (3) எராபிரகாடரா (4) பாலகுரிபல்கன்ன, (5) இரங்கநாதடு, (6) பாஸ்கரடு, (7) காசிவிடெனு விட்டலராஜு (8) அதர்வணுசாரியடு, (9) கேதன்ன, (10) மாரன்ன, (11) புதுலகுரு சிக்சாபாதடு, (12) மஞ்சன்ன, (13) வினனகோட்ட பெத்தன்ன, (14) மடகிசிரசன்ன, (15) வேமலவாடி பீமகவி, (16) நாசன்ன சோமுடு, (17) ஸ்ரீநாதடு, (18) பம்மரபோதராஜு, (19) ஆர்தமாரியடு, (20) ஜசயகவி, (21) பில்லலமாரி பினவீரன்ன, (22) பிரவுடகவிமல்லனனென் எனுபவர்களாம்.

இரண்டாம்பாகம்-மந்தியகாலத்து கவிகள்.

(1) நந்திமல்லைய்ய, (2) கண்டிசிங்கய்ய, (3) கிருஷ்ணதேவராயலு, (4) அல்லஸானி பெத்தன்ன, (5) தூர்ஜடிகவி, (6) தாளபாக சின்னன்ன, (7) சங்குல நரசிபயகவி, (8) லெண்லகண்டி சூரன்ன, (9) நாசிசுவரப்ப, (10) பாஸ்காரபந்தலு (11) பைபகராஜு, (12) வெங்கடநாதகவி, (13) தாபகுண்ட நாராயணகவி, (14) ஐயலராஜு, (15) இராமபத்ருடு, (16) வெலலகத்தாதம்பட்டு, (17) நுமரமல்லடு, (18) பிடுபர்த்தி சோமநாடு, (19) பிடுபர்த்தி பசுவகவி, (20) ம்சாடி சிவராமய்யர், (21) குமாரதூர்ஜடி, (22) மத்த ஞானகேசினிகவி, (23) பிங்கள சூரிபாராயம், (24) அத்தங்கிகங்க தரகவி, (25) பொன்னகண்டி தெலுகன்ன, (26) இராயராஜு பூஷணுடு, (27) கல்லபெட்டி, (28) இராமராஜுரங்கப்பராஜு (29) மட்ல அநந்த பூபாலடு. (30) எரன்னா, (31) க்ஷேமலசீதாராமகவி, (32) தெனாலிராமகிருஷ்ணடு, (33) தாளபாக திருவேங்கடநாதடு, (34) இராயசம் வெங்கடபதி, (35) சரிகொப்பலல்லன்ன, (36) சரிகெகண்டராமன்ன, (37) சாரங்க தம்மய்ய, (38) துரகாராமகவி, (39) தென்னமராஜு, (40) தென்னலிஅன்னய்ய, (41) சுவாரமு சின்னநாராயண நாயடு, (42) தராயவெங்கடபதி, (43) சித்திரகவி பெத்தன்ன, (44) யாதவாமாதியகவி, (45) கஞ்சாலிதிமைய, (46) ஏலகூசி பாலசிரஸ்வதி, (47) முத்துராஜு, (48) காமன்ன, (49) லிங்கமுகுண்ட ராமகவி, (50) லிங்கமுகுண்ட ராயன்ன, (51) மெண்டேகிரிநகராஜு, (52) சிம்ஹாதிரிவெங்கடாசாரியடு, (53)

சோமகூர வெங்கடகவி, (54) இராஜலிங்ககவி, (55) சிதிரகவிமணகவி, (56) அந்துகூல வெங்கய்ய, (57) காகனூரி அப்பகவி என்பவர்களாம்.

மூன்றாம்பாகம்-பிற்காலத்து (தத்காலத்து) கவிகள்.

(1) ஹரிபட்டு, (2) ஒட்டலூரி பெத்தப்ப, (3) காகமானி மூர்த்தி, (4) வேனுகாதுபப்பல் விசிவநாதகவி, (5) நூதனகவி சூரன்ன, (6) சமுக வெங்கட கிருஷ்ணப்பநாயடு, (7) ரேரசனூரி வெங்கடபதி, (8) பயிடிபாரி வெங்கடபதி, (9) வெலகபூடி கிருஷ்ணய்ய (10) சேஷமு வெங்கடபதி, (11) கூரம்பசிதிம்ம கவி, (12) லக்கலிங்கவீரபத்ரகவி, (13) கூசிம்சிஜுக்கவி, (14) கோவில் கோபராஜு, (15) கொடிசால சீனிவாசகவி, (16) தீயிரபன்னகவி, (17) கேசேரி வெங்கடாசலகவி, (18) ஏனுகலக்ஷணகவி, (19) நெல்லூரி வீரராகவகவி, (20) கனுசராஜு கோடி வெங்கநாராயடு, (22) சடிதரூசூரகவி, (23) மங்களகிரி அநந்தகவி, (24) சணபர்த்த அப்பநாயக நாயடு, (25) கணுதவெப்பத்தன்ன சோமயாஜி, (26) கந்துருக்தி வெங்கடாசலகவி, (27) ஈதுரு ல்லபவானிசங்கடு, (28) தூர்கடி வெங்கடராயடு, (29) அஜ்ஜபுபேரயலிங்கமு, (30) மரிகண்டி சிக்கராஜுராயடு, (31) முத்துபள்ளி கங்கடபாபராஜு, (32) டக்ஷ் கிரிதிம்மன்ன, (33) தாணிதிலகலராமமந்திரி, (34) சித்திரகவி நாராயணகவி, (35) கஸ்தூரி ரங்ககவி, (36) ஆலூரிகுப்பன்னகவி, (37) பிங்களி எல்லநாராயடு, (38) இந்த குண்ட கோதண்ட ராமகவி, (39) கைகயமாயன்ன, (40) வெலிதன்ன வெங்கடபதி, (41) பட்டமெட்ட சரஸ்வதி சோமயாஜி, (42) அகோரி பிச்சய்ய (43) தக்கனபாடி லங்கான்ன, (44) குடிபாடி கோதண்டபாணி, (45) மல்லவரபமாலெசகவாரடு, (46) சிந்தலபள்ளி வீரராசவுடு, (47) மேய்சரல்பாதவராயடு, (48) அணிபாதி கணபதிதேவுடு, (49) வெங்கடாசாரியடு; (50) லிங்ககவிங்ககவி, (51) அங்கர நரசிம்மகவி, (52) சிரிபிரகடசர்மநாயாத்யுடு, (53) சணபுரபு வெங்கடகவி, (54) வெமுகண்டி தததோஜி, (55) குடார வெங்கடதாசகவி, (55) காமனூரி கிருஷ்ணய்ய, (56) வெங்கடாசாரிபடு, (57) மல்லம்பல்லி நாராயணகவி, (58) சித்திரகவிசிங்காரராயடு, (59) வெருனூர் வெங்கடாசாரிபடு, (60) போசிராஜு வீரன்ன, (61) ஐபலூராஜு, (62) நாராயணகவி, (63) கவிஞாலவட்டிகவி, (64) கொத்தலம் மிருத்தஞ்சயடு, (65) கிருமலபுக்கபட்டணபு வெங்கடாசார்யடு, (66) கடிகலெனி ராமய்யகவி, (67) செனிபடுகு டருக்வர்த்தயடு, (68) நாலூரிசேஷஜோதியடு, (69) வீணமுகுந்திபதி, (70) செமணூர்யுலசங்கமேசுரஜோதியடு, (71) மூலபாதபுச்சன்ன சாஸ்திரி, (72) பாலமேகரிகந்திபதி, (73) மாதவமந்திரி, (74) கோபாலநரசிங்கப்ப, (75) சிகல்லு வெங்கடராயணகவி, (76) கிருஷ்ணகவி, (77) வல்லூரி நரசிம்மகவி, (78) செகாண்டூடி சூரன்ன, (79) மேபதபூடி கிருஷ்ணய்ய, (80) பகவராஜு நரேந்திருடு, (81) மாசவரபு ராமமந்தியடு, (82) குருஷ்ணராஜகவி, (83) சென்னமி சோமனமந்திரி, (84) கோடகண்டருடு, (85) செல்லப்

பிள்ளை நரசகவி, (86) ஜயகாரி வீரபதிர கவி, (87) கட்டுபிரபுவு, (88) மும்பிராலசுப்புராயகவி, (89) பிரயாககாமேசுவரகவி, (90) அநந்தநாராயடு, (91) பைரவிகவி, (92) அநுமகுந்திரளய்ய, (93) தாரபல்லி திம்மய்ய, (94) நாரண்குரண்ண, (95) போடேரி பெத்தராமத்யுடு, (96) இராமராஜெல கொண்டபட்டு, (97) மாரயகவி, (98) பரசுராமபந்துலு லிங்கமூர்த்தி, (99) பரசுராமபந்துலு ராமமூர்த்தி, (100) வேகிபாடி கொண்டநாரயடு, (101) வாசுதேவயோகி, (102) கானலநரசிம்மகவி, (103) போதன்ன, (104) வெனுபல்லபாபுச்சுமுபடு, (105) சதுவல சோமலிங்கய்ய, (106) ஸ்ரீதராலலே வெங்கடசாமி, (107) ஓரகண்டி சோமசேகரகவி, (108) மும்மிடிவெங்கடேசராயலு, (111) சக்கணபல்லி நரசிம்மஹகவி, (112) பைடிபாடி வெங்கட நரசிம்மகவி, (113) கொடிகலபூடி வெங்கட கிருஷ்ணகவி, (1.4) கரகரபர்தி கிருஷ்ணகவி, (115) கிருஷ்ணய்ய, (116) தரிகொண்ட வெங்கம்ம, (117) பிண்டிபுரோலி லக்ஷ்மண்ண, (118) அல்லமராஜு ராம கிருஷ்ணடு, (119) கரகரபர்தபுச்சிபாதகவி, (120) சிஷ்டு கிருஷ்ணமூர்த்திகவி, (121) மந்திரபிரகாட குரிய பிரகாசகவி, (122) பக்கி வெங்கட நரசய்ய, (123) வேலபுரி வெங்கடேசுவரகவி, (124) திருமல புக்க பட்டண திருமல சின்ன தாதாசார்யலு, (125) மாடபூசி நரசிம்மாசாரியலு. (126) கோடமராஜு நாகய்ய, (127) கராலபாடி ரங்கய்யகவி, (128) தியாகராஜுமொதவி, (129) ஒகிராலபாடதகவி, (130) நடுகுருராமணகவி, (131) மாடபூசி வெங்கடாசாரி, (132) பெனுமச்சி பச்சிராஜு, (133) மண்டபாக பார்வதீசுவரடு, (134) சதியாலு பாகவதகவி, (135) குருவராஜகவி, (136) அல்லமராஜு சுபிரமணியகவி, (137) கோபிநாதமு வெங்கடகவி, (138) வீரேசலிங்கடு முதலானவர்களே. அவர்களுடைய சரித்திரங்களை அறிய விரும்புவோர் அந்த ஆந்திர கவி சரித்திர புத்தகத்தைப்படித்துப் பார்க்கலாம்.

கிருஷ்ணதேவராயலு இயற்றிய கிரந்தங்களைப் பற்றி விஷ்ணுசித்தீயமெனும் கிரந்தத்தில் அடியில்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது.

సీ. పలికితి త్రైవిక్షోపమల జాతిపంపెక్కరసీకు లానన మధాలస
చరిత్ర॥ భావధ్యనివ్యంగసేవధిగాఁగఁ జెప్పితివిసత్యా వధూప్రీణ
నంబు । శ్రుతిపురాణోప సంహిత చేర్చిగూర్చిత సకల కథా
సారసంగ్రహంబు శ్రోత్రఘచ్చటలు విచ్చుగరచించితి సూక్తినై
పుణిజ్ఞాన చింతామణి కృతి॥ముఁజేయుఁరసమంజరి ముఖ్య మధు

రకావ్యరచన మెప్పించుకొంటి గీర్వాణభాష।నంధ్రభాషయుసా
ధ్యం భెయందు నొకకృతి విరచింపు మింక మీకు భయముగాగ.

இந்த பத்தியத்தினால் அவருடைய கல்வியின் பெருமை பிரத்தியக்ஷமாகும். அன்றியும் கிருஷ்ணதேவராயலுக்கு முன்னிருந்த ஆந்திர கவிகள் பாரத இராமாயண பாகவதாதி புராதன கிரந்தங்களை மொழிபெயர்ப்பாக ஆந்திர பாஷையில் இயற்றினார்களேயன்றி நவீன கிரந்தங்களை இயற்றினார்களில்லை. ஆகவே, காலதேசவர்த்தமானங்களைத் தழுவி சமயோசிதமாக நூதன (Noval) கிரந்தங்களை இயற்ற கிருஷ்ணதேவராயலு தூண்டுகோலாக இருந்து அநேகப் புது புத்தகங்களை எழுதி பிரபலமாக்குவித்தார். அன்று முதல் ஆந்திரபாஷைக்கு உத்சாகமும், உயர்வும் அதிகரித்தன.

இராயலு ஸமஸ்தானம் தக்ஷணத்தில் சந்திரகிரியில் ஸ்தாபித்தபோது பெத்தன்ன, போதன்ன, கவிசூடப்ப முதலான வித்துவான்கள் பிரகாசித்ததன்றியில். பிறகு ஆங்காங்கு சில சில்லரை வித்துவான்கள் ஜனித்துப்பிரகாசித்தார்கள். கி. பி. 1806 ௵ தெலுங்கு பாஷைக்கு முதல் முதல் அச்செழுத்துண்டாக்கப்பட்டு 18·35-௵ சில காவியங்கள் அச்சிடப்பட்டன. தேட்டையான இந்தத் தெலுங்கு பாஷையைப் பெரும்பான்மையான வடநாடு நாயடுமார்கள் இப்போதும் வழங்கி வருகின்றனர்.

இப்படி கிருஷ்ணதேவராயலும் கல்வியறிவினாலும் சிறந்த சக்கிரவர்த்தியாக விருந்ததன்றியில் தெய்வபக்தியினாலும், அநேக தரும கைங்கரியங்களினாலும் சிறந்து விளங்கியதாகச் சரித்திரம் சொல்லுகிறது. அதாவது அவரது அரண்மனையில் சதா 108 சதுர்வேத பாடகர்களான பிராமணபண்டிதர்கள் சதா வேதங்களைப்பாடிக்கொண்டே யிருப்பர். அவரது வீட்டு இராசபுரோஹிதர்களான “அரங்கநாத தீக்ஷிதர், சிவதீக்ஷிதர் அடிக்கடி அரண்மனையில் வாஜபேயாதி யாகங்களைச் செய்துகொண்டிருப்பர்.

கிருஷ்ணதேவராயலு வைணவ மதசித்தாந்த விசிஷ்டாத்துவைதியாகையால், அவர் ஸமஸ்தானத்து மகா வித்துவ தத்துவ சிகாமணியாகிய ‘வேதாந்த தேசிகர்’ என்னும் தாதாசாரியார் ராயலுக்குக் குலகுருவாகவிருந்து சடகோபர் முதலானவர்களுடைய பாசுரங்களைத் தத்துவார்த்த ரீதியாகப் போதித்துவந்தார். அம்மட்டோ, இந்து மதத்துக்கு விரோதிகளான கிறிஸ்து மகமதாதி மதாசாரிகளும் ஸமஸ்தானத்தின் அங்கத்தினராகவிருந்து அவரவர் மதங்களிலிருக்கும் சத்தியங்களைச் சொல்லிவந்தார்கள். ஆகவே அக்காலத்தில் விஜயநகரம் சகலமதஸ்தர்களும் சமரசமாக வாழ்ந்துவரும் சுதந்திர ஸமஸ்தானமாகப் பிரகாசித்தது.

கிருஷ்ணதேவராயலுடைய ஸமஸ்தான வைபவம்.

ஐரோப்பாக் கண்டத்தைச் சார்ந்த போர்த்துகல்தேசத்தில் வர்த்தகஞ்செய்கிற சாதி? டாமிங்கோஸ் பியேய்சு என்பவர் (Damingos Paes) கி. பி. 1520-1522 வருஷம் ஸ்ரீ கிருஷ்ணதேவராயலுடைய சமஸ்தானத்தை வந்து நேரில் வந்துப் பார்த்து தமது அதிகாரத்துக்கு எழுதின பிரசரித்தித்தை மேஸ்டர் சுவேல் என்பவர்கள் அந்தச் சரித்திரத்தின் சுயஸ்தலிகிதத்தை சம்பாதித்து ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்து தமது பர்காட்டன் எம்பயர் என்னும் விஜய நகர சரித்திரம் 236 முதல் 290-ம் பக்கங்களில் பதிப்பித்திருக்கிற சங்கதிகளின் சங்கிரமமாறு.

ஸ்ரீநரசிம்மராயலுடைய ஸமஸ்தானம் வடக்கே பீஜப்பூர், கோலகுண்டா முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் பரவி இருந்ததாகவும், அதற்கு மூன்று பக்கங்களிலும் அகண்ட சமுத்திரங்களும், அச்சமுத்திரக் கரையோரங்களில் வர்த்தகமாணிஞ் செய்ய வசதியான கரைத்துறைப்பட்டணங்களிருந்ததாகவும், உள்நாடுகளில பிரம்மாண்ட பருவத பிரதேசங்களும் மலைகளும், குன்றுகளும், காடுகளும், நதிகளும் குளங்களும் வசதியாக அமைந்து இருந்ததனால், நஞ்சைப் புஞ்சை முதலான நாலாவகைத் தானியங்களும், தென்னை, சமுத மா பலா முதலான தோப்புகளும் பயிர் செய்யப்பட்டு அவற்றின் பலனை பிரதி வெள்ளிக்கிழமைதோறும் கூடும் சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டு விற்பனைசெய்து விடுவதாகவும்; அந்தச் சந்தைக்கருகிலிருக்க ஒரு பெரிய ஆலமரத்தடியில் தான் விற்பனைக்குக் கொண்டுவந்த 50 குதிரைகளை நிறுத்தி இருந்ததாகவும், இந்த ஸமஸ்தானத்தில் வசிக்கும் ஆண், பெண் பிராம்மணர்கள் அதிக அழகுள்ளவர்களாகவும், படித்தவர்களாகவும் பக்திபூஜைகளில் அதிக சிரத்தையுள்ளவர்களாகவும், பொதுவாக பிரஜைகள் பகை மன்னருடைய பயமற்று தைரியமாயும் அந்நியோன்னியமாயும், சந்தோஷமாயும் இருந்ததாகவும்.

தாம் விஜயநகரத்துக்குப்போகும் போது இடையில் நார்வாரில் தங்கிப் போனதாகவும், அங்கு அழகான கோயில்களும், அவைகளுக்குள் அநேக விக்கிரகங்களை வைத்து பிரதிதினமும் பிராம்மணர்கள் வந்து பூஜைசெய்துக்கொண்டும் தாசிப்பெண்கள் அழகான ஆடையாபரணங்களை அணிந்து வந்து ஆடிப்பாடியதாகவும், அந்த நார்வாருக்கு 18 லீக தூரத்திலுள்ள விஜயநகரத்துக்குப் போனதில், அது 24 லீக விஸ்தீரணமுள்ளதாயும் நான்குப் பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்டதாயும், அப்படி சூழப்பட்டிருந்த விஜயநகரக்கோட்டை கருங்கற்களால் கட்டப்பட்ட உன்னதமான மதில் சுவர்களாலும், கோயில் கோபுரங்களாலும் கட்டப்பட்டும் வாசல் வழியன்றி வேறுவழிகளற்றதாயும், நகரைச் சுற்றி இருக்கும் மலைகளுக்கும் கோட்டையின் மதில் சுவர்களுக்கும் இடையில் அநேக குளங்களும் வாய்க்கால்களும் வெட்டப் பட்டிருப்பதாயும் அவற்

றின் தண்ணளிரால் தென்னை மா முதலான தோப்புகளையும் புஷ்பதோட்டங்களையும், சிங்கார உதியானவனங்களையுமுடையதாயு மிருப்பதாகவும்;—

இந்த ஸமஸ்தானத்தில் பெரும்பான்மையோர் பிராம்மணர்களாயும், ஸமஸ்தானத்தின் பெரும்பான்மையான காரியங்களை அவர்கள் நடத்திவருவதாகவும்,—

இந்த விஜயநகர் இராஜன் மத்தியதர உயரமும், அழகமைந்த உருவமும், சற்றுஸ்தூலித்த தேகமும், அம்மைத் தழும்புள்ள முகமும், தரும சிந்தையு முடையவராய் இருந்ததாகவும்,—

இவர் அதிகாரத்திற்குள் அநேக ராஜாராஜர்கள் அடங்கி ஆண்டு வந்ததாகவும், 12 மனைவிகளை உடையவராயும் அவர்களில் 3 பெயர் பட்டமஹிஷிகளாயும், அவர்களில் சிலர்ஒரிசா, ஸ்ரீரங்கபட்டணம் முதலானமன்னர்களுடைய குமாரத்திகளாயும்,ஒருவர் தனது பாலிய சிநேகதியாயும் இருந்ததாகவும்; அந்த மனைவிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான வீடுவாசல்களையும்,வேலைக்காரிகளையும் உடையவர்களாயும்; பொன்மயமாயும் இரத்தினமயமாயும் ஜ்வலிக்கும் ஆடையாபரணங்களை உடையவர்களாயும், அவர்களைப்பாதுகாக்க அநேக கோஷாப்பெண்டுகளும், கோஜாக்களும் உருவியகத்தி கட்டாரிகளோடு நின்று காவல்காத்து வந்ததாயும், இராஜஸ்திரீகள் வெளியில்ப் போக்குவரத்து செய்ய அநேக அழகான மூடுப்பல்லக்குகளும், அவைகளைத்தூக்கிக் கொண்டுப்போக பெண் சிவிகைகளும், பெண்மெய்காப்புகளும் நியமிக்கப்பட்டிருக்கிறதாகவும்; இந்த அந்தபுரஸ்திரீகளைப் பாதுகாக்க 12000 பெண்வேலைக்காரிகளிருந்ததாயும், அவர்களில் சிலர் மல்யுத்தம், வில்லுயுத்தம்,சங்கீதம், சட்ட நியாயங்கள் தெரிந்தவர்களாயும் இருந்து பெண்டுகளுக்குள் நடக்கும் சண்டைச் சச்சரவுகளை விசாரித்து நீதிசெலுத்தி வந்ததாகவும்;—

கிருஷ்ணதேவராயலு பெரும்பாலும் அரண்மனையில் வீரதீரர்களாலும், கோஜாக்களாலும் சூழப்பட்டிருந்ததாயும், தாம் விரும்பியமனைவியைப் பற்றி முதலில் கோஜாக்களிடம் சொல்லியனுப்ப, அவர்கள்போய் கோஷாபெண் காவல் காரிகளிடம் சொல்ல, விரும்பியமனைவி மூடுபல்லக்கில் வருவதாகவும். இராயலு வெண்பட்டில் ரோஜாமுதலான சரிகைச் சித்திர வேலைப்பாடுகளுள்ள வேஷ்டிகளைத் தரிக்கிறவராயும், கழுத்தில் வஜ்ஜிரவைடூரிய மணிமாலைகளைத் தறிக்கிறவராயும்; அவரை தரிசிக்கவரும் பிரபுக்களையும் ஏனையோரையும் தக்க மரியாதையுடன் கவுரவப்படுத்தி உபசரித்து அவர்கள் திரும்பிப் போகும்போது, சால்வை முதலான துணிமணிகளைக் கொடுத்து மரியாதைச் செய்து அனுப்பவதாகவும், இராயலு அதிக விடியற்காலத்தில் எழுந்திருந்து குஸ்தி முதலான கசரத்துக்களை கட்டாயமாகச் செய்துவந்ததாகவும், இவர் சொந்த உபயோகத்துக்கு 800 யானைகளையும், 500 குதிரைகளையும் வைத்திருப்பதாகவும், அவர் வருமானத்திற்கு கணக்குச் சொல்லிமுடியாதென்றும் எழுதி இருப்பதோடு, ஸமஸ்தானத்தில் நடக்கும் தசராபண்டிகை

யில் மல்லக ஜட்டிகள் செய்யும் குஸ்திகளையும், தாசிகளாடும் அழகையும் பூஜைகளை செய்யும் விநோதங்களைப் பற்றியும், பனிவைபவங்களைப் பற்றியும் பிரபலமாக எழுதி இருக்கிறார்.

கிருஷ்ணதேவராயலுடைய விஜயத்தைப் பற்றி மனுசரித்திரம், பாரிஜாத பஹரணத்தில் பின்வருகிறபடி சொல்லப்பட்டிருக்கிறது.

చ॥ మునుకొని కొండవీటి కడ మూడతరుద్రుడు కృష్ణనందను।
న్మనసిజునిస్ జయించెనదిమానుషమే నరసేంద్రు కృష్ణరాయ
నృపతికొండవీటి కడసాహవ భూమిఁబ్రతాపరుద్ర నందనుఁడగు
వీరభద్రుఁ గరుణామతిఁ గాచె జగత్ప్రసిద్ధిగన్.

చ. నెలకొని కృష్ణరాయధరణీ విభుఁడుత్కలభూమి పాలుతోఁ గల
ననెదిర్చి హస్తికరకాండతతుల్లసకంపుబాములై మఁసినచోటఁ
గూడినసమగ్ర యశోవసనంబు గప్పితావలవఁగఁ జేసె భూపతిని
పశ్యవిధిజ్ఞుఁడు గాలసేర్పునన్.

సీ. ఉదయాద్రివేగ నద్భ్యుద్ధతి సాధించె వినుకోడ మాటమాత్రన
హరించెఁ।గూటము ల్పెదరం గొండవీడగలించె బెల్లముకొండ
యచ్చెల్లఁజెఱిచె। వేలుపుకొండనుద్వృత్తి భంగముసేశె జల్లి
పల్లెసమగ్రశక్తి గూల్చెగినుక మీఱననంత। గిరిక్రిందుపడఁజేసె
గంబంమెట్టు గ్రక్కున గదల్చె బలనికాయము కాలుముట్టుల
నడంచు॥ గటకమును నింకననుచు నుత్కలమహీశుఁడనుదిన
మ్మును వెఱచు నెవ్వనికి నతఁడు।రాజమాత్రుండె శ్రీకృష్ణరాయ
విభుఁడు. పారిజాతాప హరణము.

இன்னும் பலகிரந்தங்களில் பலவிதமாகப் புகழ்ந்து எழுதிப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

அதில் தமது 18 மாத வயதுள்ள ஆண் சந்ததியை சாலுவ திம்மரசினல் பாஷணமிட்டு கொல்லப்பட்டபடியால், தமது சமஸ்தானத்தைத் தமது தம்பியராகிய அச்சுத தேவராயலுக்குத் தரவேண்டுமென்றும், அவருக்கு உதவியாக மற்ெருரு சகோதராகிய இரங்கதேவராயலும், தமது, தமயனர் குமாரராகிய புஜபலராயலும், தமது மருமகனர்களாகிய திருமலைராயலு, இராமராஜு முதலானவர்கள் உதவி செய்யவேண்டுமென்றும், தெரிவித்திருந்தார். ஆகவே அக்காலத்தில் சந்திரகிரி கோட்டையிலிருந்த அச்சுத தேவராயலை வருவித்து, 1530-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 15-ந்தேதி திங்கட்கிழமை தினம் அவருக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டுச் செங்கோலைக் கைகொண்டார். அவர் சிங்காசனமேறி அரசுசெய்துவந்த வைபவத்தைப்பற்றி அக்காலத்தில் அந்த விஜய நகரத்திலிருந்த (Fernao Nuniz) பெர்ஞே நூனிஸ் என்னும் போர்த்துகேசிய யாத்திரிகர் அந்தச் சமஸ்தான வைபவத்தை நேரில் பார்த்து சரித்திரமெழுதி இருக்கிறூர். அதன் கருத்தாவது:—

இந்த அச்சுத தேவராயலுடைய அரண்மனையில் உபயோகித்துவந்த அண்டாபானை பாத்திராதி தட்டு முட்டு சாமான்களெல்லாம் பொன் வெள்ளியினல் செய்யப்பட்டிருந்தன வென்றும், அவரும் அவர் மனைவியர்களும் படுத்துக்கொள்ளும் அறைகள் இரும்புத் தகட்டுச் சுவர்களால் அமைக்கப்பட்டும், அவற்றுன்மேல் சித்திராலங்காரவேலைப்பாடுகளுள்ள பொன்தகடுகளால் மூடப்பட்டிருந்தனவென்றும், அவர் படுக்கும் கட்டில்களும், பொன் நவரத்தினங்களாற் அலங்கரிக்கப் பட்டிருந்தனவென்றும், அவருடைய சமயல்வேலைக்கு மாத்திரம் 200 சுயம்பாகிகளும், அவர்ளுக்கு மேல் விசாரணைசெய்ய 8 கர்த்தர்களும், அச்சுத தேவ்ராயலுடைய சொந்த சாப்பாடைமாத்திரம் தயார்செய்ய 10 பெண்டுகளும், அவர்களுக்கு அதிகாரிகளாக ஐந்து மேல் விசாரணைக்காரருமிருந்தார்கள் என்றும், அச்சுதராயலு தங்கத்தகடுகளால் செய்யப்பட்ட முக்காலியின் மேல் சாதம் முதலானதுகளைவைத்து சாப்பிடுவது வழக்கமென்றும், அரண்மனையில் மற்றச் சாதாரண வேலைக்காரர் 600 பெயரும், பெண் வேலைக்காரிகள் 4000 பெயர்களிருந்து சகல காரியங்களைப் பார்த்து வந்தார்களென்றும், அந்த 4000 பெண்களில் சமயல் வேலைச் சங்கீதம் சாஸ்திர முதலானவைகளைக் கற்றுத் தெளிந்தும், அவர்களில் அநேகர் அரண்மனைப்பெண்டுகளுக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகளை விசாரணை செய்து நீதி செலுத்தியும், தினசரி சரித்திரம் எழுதி வந்தார்களாம்.

மேலும் அரண்மனையின் கோயில் பூஜை புரோஹிதாதி விஷயங்களுக்காக 3000 பிராமணசிப்பந்திகளிருந்தார்களென்றும், இராயலுடைய சொந்த உபயோகத்திற்காக 200 பசுக்களும், 200 குதிரைகளும், 400 யானைகளும் இருந்தனவென்றும், இராயரவர்கள் வெளியில் புறப்படும்போது முதலில் 200 குதிரை வீரர்களும், அவர்களுக்குப்பிறகு 100 யானை வீரர்களும், அவர்களுக்குப் பிறகு 2000 ஆயுத பாணிகளும், அவர்களுக்குப் பிறகு இராயரவர்களும் அவருடைய பட்ட மஹிஷிகளும் பொன் தகடுகளால் மூடப்பட்ட பல்லக்கு

களில் வரவும், அவர்களுக்குப் பிறகு 700 குதிரை வீரர்களும், 400 யானை வீரர்களும், 150 நெய் தீவட்டிகளும், பவனிக்கு முன்னும் பின்னும் நகபத், நகார் முதலான 18 வாத்திய கோஷங்களுடன் வருவதைப் பார்ப்பவருக்கே ஆச்சரியத்தை உண்டாக்குமென்றும்; அவரது சொந்த யானை குதிரைகளுக்கு மாத்திரம் முறையே 1000, 2000 வராகன் செலவாகிற தென்றும், இந்த ராயலுக்கு ரொக்கமாக வரும் கப்பம் 60 லக்ஷம் வராகனென்றும், அதில் 25 லக்ஷம் வராகன் சொந்தசெலவாகிறதென்றும், அத்தொகையை ஸமஸ்தானத்தைச் சார்ந்த 200 பிரபுக்கள் கொடுத்துக்கொண்டு வந்தார்களென்றும், சமஸ்தானத்தில் 50,000 வேலைக்காரர் கிரமமாக சம்பளம் பெற்று வந்ததன்றியில், சமஸ்தானத்தைப் பாதுகாக்க(6)ஆறு லக்ஷம் சேனைகளும், 30,000–குதிரைகளும், 1,000-யானைகளும், பிரபுக்களால் எப்போதும் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தனவென்றும், அந்தச் சமஸ்தானத்தில் நவராத்திரிக் கொலுவின் உற்சவ விநோதங்களையும், அக்காலத்தில் பல பிரபுக்கள் வந்து தரிசித்து இராயலு காலை முத்தமிட்டுப் போவதையும், அப்போது குஸ்தி, கரடி, சதிர்கச்சேரி முதலான வைபவங்கள் நடப்பதைப் பற்றியும் விஸ்தரித்து எழுதி இருக்கின்றனர். சொத்து முதலானதுகளைத் திருட்டுக் கொடுத்து நொந்தவர்களும், மற்ற பிராதுக்காரர்களும், இராயரவர்களைக் கண்டு வணங்கி முறையிட்டால் உடனுக்குடனே விசாரணை செய்தும், அந்த குற்றம் நடந்த விடத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களிடம் அந்தச் சொத்துக்குத தக்கபொருளை வஜாசெய்து கொடுத்தும், திருடர்களையும், பதிவிரதைகளைக் கெடுப்பவர்களையும் பகிரங்கமாகக் கடைவீதியில் கொண்டுபோய் பலரும் பார்க்கும்படி சிக்ஷித்தும் வந்ததனால், அவர் ஸமஸ்தானத்தில் திருட்டு முதலான குற்றங்கள் நடப்பது அபூர்வமென்றும் எழுதி இருக்கின்றனர்.

இந்த அச்சுததேவராயலுக்கு மந்திரி சாலுவ நாயடு அமர்ந்தார். அன்றியும், அச்சுததேவராயலு தமது ஸமஸ்தானத்தை நாடி இருந்த 200-பிரபுக்களில் அநேகர் அவருடைய பந்துக்களா யிருந்தபடியால், அவர்களுக்கு விவாக வரிசை ஸ்திரீதனமாக சில சமஸ்தானங்களைக் கொடுத்து ஆண்டுவரச் செய்தார். [அவர்களில் தமது மனைவியாகிய திருமலை யம்மாடளுடைய தங்கை மூர்த்தியம்மாளை விவாகம் செய்து கொண்ட சேவப்ப நாயடுகாருக்கு தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டணம், தேவிப்பட்டணம், திருக்கோயிலூர் முதலான இடங்களை ஸ்ரீதனமாகக் கொடுத்து ஆண்டுவரச்செய்தார். மதுரை, திருநெல்வேலி முதலான பாகங்களைப் பய்யம் நாயடும், விசுவநாத நாயடும் ஆண்டுவரச் செய்தார்.]

கோப்பன்ன நாயடுகாரை ரெய்சூர் முதலான பாகங்களை ஆண்டுவரவும்; லக்ஷமய்ய நாயடுகாரை தார்வார் முதலான பாகங்களை ஆண்டுவரவும்; இதே மாதிரியாக வரதப்ப நாயடு, மல்லப்ப நாயடு, ஆதியப்ப நாயடு, கிருஷ்ணப்ப நாயடு, ராசப்ப நாயடு முதலான அதிகாரிகளை வேலூர், செஞ்சி, சந்திரகிரி உம்மத்தூர், கொண்டவீடு முதலான நாடுகளுக்குத் தலைவர்களாக நியமித்தார். அக்காலத்தில் அவரது சமஸ்தானம் தெற்கே திருநெல்வேலி இலங்கை வரையில் பிரபலமாக இருந்தது. இருந்துமென்ன? அந்த அச்சுதராயலு, இயற்கையில் பயங்காளியாகவும், பேடித்தன முடையவராகவும் இருந்ததில், இராஜ்ஜிய பரிபாலனம் இருக்கவேண்டியபடி இருக்கவில்லை. அவர் தமது சமஸ்தானத்தை ஆதரித்து வந்த சில பிரதிநிதிகளை நம்பாமல், அவர்களை அவமானப்படுத்தி வந்தமையால்; அவர்கள் அச்சுததேவராயலை வெறுக்கச்சம்பவித்தது. அதுசங்கதியை அறிந்த இஸ்மால் அதில் ஷாவும், காசிம் பெரிட்டு என்பவரும் கூட்டாளிகளாகி இருவர் சேனைகளை நடத்திக்கொண்டுவந்து; முன் கிருஷ்ணதேவராயலு அதிக கஷ்டப்பட்டுச் சம்பாதித்த ரெய்ச்சூர், முடகல் கோட்டைகளைப் பற்றிக் கொண்டார்கள். அன்றியும் 1534-வருஷம் கோலகொண்டாவிலிருந்த குதப்சாயிபுக்கு விரோதமாக பீஜநகர் நவாபுக்கு அவர் உதவிசெய்தார். அப்படி இந்துக்கள் மகமதியருக்கு உதவி செய்தது இதுதான் முதல் தடவை. அப்படிச் செய்ததனால், அந்த இரண்டு மகமது சமஸ்தானத்தார் ஒரே கட்டுப் பாடாகக் கூடிக் கடைசியாக விஜயநகர சமஸ்தானமே நாசமாகச் சம்பவித்தது. ஆயினும், அந்த அச்சுததேவராயலு ஆண்ட 13௵ காலத்தில் அனேககோயில் கோபுரங்களும் கட்டிடங்களும் கட்டப்பட்டன. 1541-வருஷம் ஜனவரிமாதம் 25-ந்தேதி அச்சுததேவராயலு பரமபதமடைய, அவருடைய வாலிப குமாரனாகிய வெங்கடாத்திரிராயலு பட்டத்துக்கு வந்தார்.

வெங்கடாத்திரிராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1542-௵ முதல் 1543-௵ வரையில்.

அச்சுததேவராயலுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அவருடைய குமாரர் வெங்கடாத்திரி சிறுபைய்யனாக இருந்தமையால்; அவர் பேருக்கு மாத்திரம் சக்கிரவர்த்தியாக நியமிக்கப்பட்டு, இராஜாங்க காரியங்களை மந்திரியாகிய சாலுவ திம்மராயலு நடத்திவந்தார். இந்த ஹாசி திம்மராயலு சதாசிவராயலுக்குதாய் மாமனார்(?) அவர் கெட்ட எண்ணத்தினாலும், கெட்ட சாவகாசத்தினாலும், துர்போதனைகளைக் கேட்டு சமஸ்தானத்திலிருந்த பழய உத்தியோகஸ்தர்களை எல்லாரையும் நீக்கிவிட்டு, அந்த ஸ்தானங்களுக்குத் தம் பந்து மித்திரர்களை நியமித்தும்; பரிபாலனத்தில் தகாத காரியங்களையும் செய்தும் வந்தமையால்; சமஸ்தானத்திலிருந்த பெரிய பிரபுக்களெல்லாரும் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டு

போய்விட்டார்கள். அந்தச் சமயத்தைப்பார்த்து இபிராஹிம் அதில்ஷா விஜய நகரத்தின் மீது படையெடுத்து வந்தார். அப்படி வந்த மகமதியரைத் தடுக்க திம்மராயரால் முடியாமல், அப்பகைவர்களுக்கு 8 லட்சம் வராகன் கொடுத்து சமாதானப்படுத்தினார். அந்த ஏற்பாடு சமஸ்தானத்திலிருந்த பிரபுக்களுக்கு திருப்தியைக் கொடாமையால்; கலகங்களாகி நாட்டில் நாதனற்றதுபோலாகியது. இம்மட்டோடு நிற்காமல் திம்மராயலு, ஸமஸ்தானபதியாகிய வெங்கடாத்திரிராயலு என்னும் வாலிபனைக் கொலைசெய்வித்தும் தாமே சமஸ்தானபதியாகி அநேக அக்கிரமங்களைச் செய்ய ஆரம்பிக்கவே; சமஸ்தானத்திலுள்ள பெரிய பிரபுக்களும், கிருஷ்ண தேவராயலுடைய மருமகனார் இராமராஜாவும் கூடி அந்த அக்கிரமங்களைக்கண்டிக்கப்புக; அதை அறிந்த திம்மராயலு மஹா கோபங்கொண்டு, அப்படி கலகம் செய்த தம் சமஸ்தானத்து பிரபுக்களையும், இராமராஜாவையும் கண்டித்துத் தாக்கினால் தினம் ஒன்றுக்கு மூன்று (3) லக்ஷம் வராகன் கொடுப்பதாக பிஜப்பூர் இபிராஹிம் அதில்ஷாவுக்குச் சங்கதி சொல்லி யனுப்ப; அவர் பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போலாகிய தென்றெண்ணி பெரும் படை யெடுத்து வந்து அட்டகாசம் செய்து 50 லக்ஷம் வராகனோடு பீஜப்பூருக்குப் போனார்.

திம்மராயலு செய்த இப்படிப்பட்ட பெரிய அக்கிரமங்களைச் சகியாத சமஸ்தான பிரபுக்களும், இராமராஜாவும், திம்மராயலின் ஆயுதபாணிகளோடு வந்து அரண்மனையை வளைந்துகொள்ள; திம்மராயலு இந்தக் கண்டத்தை விட்டுத் தப்புவது அசாத்தியமென்று கண்டு, அரண்மனையிலுள்ள விலை உயர்ந்த ஆடையாபரணங்களை எல்லாம் சுட்டுப் பொசுக்கி பாழாக்கியும்; கடைசியில் தமது வாளை உருவி நிலத்தில் நட்டு நிறுத்தியும், ஓடிவந்து அதற்கு தன்மார்பைக் காட்டி குத்திக்கொண்டு தற்கொலை செய்துகொண்டு இறந்தார். அந்தத் திருமலைராயலு அப்படி தற்கொலை செய்துக்கொண்டு சாகவே, சமஸ்தானத்தில் அவரால் 9 மாதக்காலங்களாக நாதனற்று தவித்த கஷ்டங்கள் நீங்கின. உடனே அந்தச் சமஸ்தானத்துககு சதாசிவராயலைச் சிங்காசன மேற்றினார்கள்.

சதாசிவராயலு ஸமஸ்தானம்.

கி. பி. 1541-ளுடம் முதல் 1542-ளுடம் வரையில்.

கிருஷ்ணதேவராயலுடைய சகோதரர் அரங்கதேவராயலுடைய குமாரராகிய அந்தச் சதாசிவராயலும் சிறுபையனாக இருந்தமையால்; கிருஷ்ண தேவராயலுடைய மருமகனார் இராம இராஜாவே 1565-வருஷம் வரையில் இராஜகாரியங்களை மிக்க சாமார்த்தியமாக நடத்திவந்தார். சதாசிவராயலுடைய தரும சிலாசாசனங்கள் 1576 வருஷம் வரையில் குறிப்பிட்டாலும், அவர் பெனுகொண்டாவில் பரமபத மடையும் வரையிலும் பேருக்கு மாத்திரம் அரச

ராக இருந்தார். அந்த சதாசிவராயலு தன் தாய் மாமனாகிய திம்மராஜை மந்திரியாகக் கொண்டு ஸமஸ்தான பிரபுக்களையும், இராமராஜாவையும் வருத்திய தாக தெரியவருகிறது—

விஜயநகரத்தில் மூன்றாம் ஸமஸ்தானம்,

அல்லது

இராமராஜா ஸமஸ்தானம்.

(கி. பி. 1542-வரும் முதல் 1565-வருவரையில்)

விஜயநகரத்திலாண்ட சதாசிவராயலுக்குப் பிறகு ஆதைத் தக்கபடி ஆளுவதற்கு சரியான ஆண் சந்ததி இல்லாமையால்; அந்த சந்ததியின் மருமகனாகிய இராமராஜா ஆண்ட காலம் முதல் புதுசந்ததி அல்லது மூன்றாம் சந்ததி அரசாக்ஷி என்று சொல்லலாம்.

இராமராஜாவின் வம்சாவளி.

நரபதி விஜயம், பாலபாகவதம், வசுசரித்திரம், நரசபூபாலியம், நரபதி சரித்திரம், டாக்டர் அப்போர்ட்டுக்கு (Dr. Gustav Oppert History of S. India,Page 73) அகப்பட்ட சிலாசாசனம்,செப்பேடு சாசனங்களின்படி "சந்திர வமிச பாண்டவரைச் சார்ந்த அர்ஜுனனுடைய 83-வது சந்ததி நந்தராஜனும், அவனுடைய ஒன்பதாம் சந்தியாகிய சாளுக்கியன் பிறந்து, அவனால் விஜ்ஜலன் அல்லது விசாலராஜன் 1167ம்வருடகலியாணபுரத்தை கட்டி ஆண்டான். அவனுடைய பேரனாகிய வீரஹெம்மல ராயலும்,தாதபின்னனும் பிறந்து அவனுடைய சந்ததியில் இராமராஜர்பிறந்தார்—

எப்படி எனில்

விசாலன் அல்லது கலியாணபுரத்திலாண்ட விஜ்ஜலராஜருக்கு ஹெம்மலராயலு, அவருக்கு தாத பின்னமராயலு, அவருக்கு சோமதேவராயலு, அவருக்கு இராகவ தேவராயலு, அவருக்கு பின்னம சவுரி, அவருக்கு ஆர்வீட்டி புக்கராயலு பிறந்து ஆண்டுவர; அந்த புக்கராயலு மரபில், சிங்கராஜூ, இராமராஜூ, திம்மராஜூ, கொண்டராஜூ, ஸ்ரீரங்கராஜூவும் பிறந்தார்கள்-திம்மலராஜூக்கு திருமலராஜூ, விட்டலராஜன்,சின்ன திம்மராஜா, பாபதியமராஜா, பிறந்தாண்டார்கள்- ஸ்ரீரங்கராஜாவுக்கு கோனராஜா, திம்மராஜா, கிருஷ்ண தேவராயலு மருமகனார் இராமராஜா, திருமலராஜா, வெங்கடராஜ, இலக்ஷ்மம்ம, நரசராஜா பிறந்தார்கள்-கிருஷ்ணதேவராயலு மருமகனார் இராமராஜா மரபில் கிருஷணராஜா, பெத்த திம்மராஜா, கொண்டராஜா, இராமராஜா சின்ன திம்மராஜா, ஸ்ரீரங்கராஜா பிறந்தார்கள்-இந்த ஸ்ரீரங்கராஜாவின் மர,

பில் பெத்த வெங்கடராஜ, சின்ன வெங்கடராஜா பிறக்க, அவர் மரபில் திரு மலைராஜா, வெங்கடராஜா, கோபாலர் தத்து ஸ்ரீரங்கராஜா பிறந்தார்-வெங்கட ராஜா மரபில் கோதண்டராமராஜா மரபில்பெத்தவெங்கடராஜா, சின்னவெங் கடராஜா, கோதண்டராமராஜா, வெங்கடராஜ, ஸ்ரீரங்கராஜா, சின்னவேங்கட ராயலு பிறந்தார்கள்-இந்த நரபதிகளின் உதவியால் கோனேரி பண்டிதர் பால பாகவதத்தையும்; பட்டு மூர்த்தி இராமராஜ பூஷணத்தையும்,வசுசரித்திரத்தை யும்; சாரதாமூர்த்தி நரசபூபாலியத்தையும், பாடி அங்கிதம் செய்தார்கள்.

நரபதிகளுடைய ஒரு கிளையாராகிய சாலுக்கிய வகுப்பைச்சார்ந்த விட்டல ராயலுடைய தமையனுர் திருமலை ராஜாவுக்கு மந்திரியாக விருந்த நாகய்ய பட்டருடைய குமாரராகிய கோனேரி நாதபட்டர் மஹாதெலுங்கு வித்துவான். அவர் நன்னைய பட்டர் மஹா பாரதத்தை தெலுங்கில் பாட்டுகளாகச் செய்து விட்ட குறைவை, திக்கன்ன சோமயாஜி முடிவு செய்ததையும், பின்னும் அக் காலத்தில் பீமசந்தசைபாடிய பீமகவியையும், பின்னும் பலவித்துவான் களு டையக் கவிகளையும் படித்து உற்சாகமாகி; திம்மராஜாவின் புகழைப்பற்றிப் பா டும்படி அவர் குமாரர் திருமலராயுலு விரும்பியபடி,பாலபாகவதத்தைஇயற்றி னுர். அப்புத்தகத்தின் முகவுரையில் தனது பாட்டுக்குடைய தலைவரையும்,அவ ருடைய முன் சந்ததி விவரத்தையும் வெகு திருப்திகரமாகவும், தேவனஹள்ளி முதலான சிலாசனங்களுக்குச் சரியாகவும் எழுதி அரங்கேற்றினுர்-அந்த கிரந் தத்திஞலும் நரபதி விஜயமென்னும் கிரந்தத்திஞலும்,—

நரபதிகள்,சந்திரவமிச பாண்டவரைச்சார்ந்த அர்ஜுனனுடைய 83வது சந்ததியாகிய நந்தராஜாவினுடைய ஒன்பதாம் சந்ததி சாலுக்கியனென்றும்- அந்த சாலுக்கியனுல்,காலசூரிஜாதியை ஸ்தாபித்த விஜ்ஜல விசாலராஜர் கல்வி யாண புரியைக் கட்டி ஆண்டார்; அவரை சாலுகிய நாராயணர் அல்லது வேங்க திருபுவன மல்ல ரென்றும் சொல்வதுண்டு. அவருடைய அரசாக்ஷி பிரபலம் அதிகமாகவே; லிங்காயித்து மதத்தை ஸ்தாபித்த சாதாரண ஸ்திதி யிலுள்ள பசுவரைத் தமது பிரதான மந்திரியாகவும், பிரதானியாகவும் நியமித் துக் கொண்டார்

அப்படி அந்த பசுவரை நியமித்துக்கொண்டதற்கு முக்கியகாரணம்;அந்த பசுவருடைய அதிக ரூபலாவண்ணிய முள்ளசகோதரி பத்மாவதி என்னும் பெண் ணின் மேல் மோகப்பட்டு,அவளையே மனைவியாக விவாஹம் செய்துக் கொண்டி ருந்தார். அப்படிக்கிருந்தும் யாது காரணத்தைப்பற்றியோ பசுவர்,வாஜதேவமல் லன், மொல்லைய, பொம்மணன் என்பவர்களை ஏவி அந்த விசாலராஜ்ஜரை கொலை செய்து விட்டதாக சென்ன பசுவபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாம் (Vide Page 253-Mysore Inscriptions by Mr. L. Rice) அந்த விசாலராஜ ருக்கு ஹெம்மலிராஜனும், அவனுக்கு தாத பின்னையராஜனும், அவனுக்கு சோம தேவனும் பிறந்து பிரபலனுனன்; அவன் ஆர்வீட்டு என்னுமிடத்தில் வசித்தும், கந்தனவாலி; இராயச்சூர். சாதானிகோட்டை, யாதவகிரி, கலப கொலு, முசலிமடுகு, கங்காயணி கொண்ட முதலானவிடங்களை சுவாதீன

மாக்கிக்கொண்டான். அவன் குமாரன் இராகவராஜன், பிறகு புக்கராஜா, பின்னும் இப்படியே மேல் காட்டிய வம்சாவளி பிரகாரம் பிறந்து ஆண்டார்கள்.

அவர்கள் కల్యాణపురవ రాధీశ్వర ఆత్రేయగోత్ర, క్షత్రియాచారకుల పవిత్రచాలుక్యనారాయణ ! చాలుక్యచక్రవర్తి, మండలీకరదరగండ్య వరాహ వెంగత్రి భువనమల్ల, என்ற இந்த வாக்கியங்களின்படி ஆத்ரேய கோத்திரத்தைச் சார்ந்தவர்கள், அவர்களின் வீட்டின் பெயர் பூசுபாட்டிவாரு-இப்படிப்பட்ட விசேஷ குடும்பத்தில் பிறந்தவர்தான் அந்த ராமராஜா. அந்த ராமராஜாவின் ஆதி தாய் தந்தைகளைக் கவனிக்கும்போது சாளுக்கியஜாதியாரும், காலசூரி ஜாதியாரும் ஆதி ஆந்திர வமிசத்தைச் சார்ந்தவர்கள் என்று ஸ்பஷ்டமாகிறது. அந்த ராமராஜா முதலில் கோலகுண்ட குதப்ச்சாயபின் தளகர்த்தராக இருந்து, கர்னூலில் பெரிய ஜாகிரைப் பெற்றிருந்தார்.

அவருடைய வீரதீரத்தை அறிந்த கிருஷ்ணதேவராயனு அந்த ராமராஜாவுக்கு தமது குமாரத்தி இலக்ஷ்மீதேவி என்னும் மோஹநாங்கியை விவாஹம் செய்வித்து தமது சேனைக்குத் தலைவராக்கிக் கொண்டார். அப்படி விவாஹம் செய்துக்கொண்டதற்காக அதோனி கோட்டையை ஸ்திரீதானமாகப் பெற்றார். அந்த ராமராஜா செங்கோல் செலுத்திய இரண்டு வருஷங்களுக்குள் சமஸ்தானத்திற்குத் தமது பந்துமித்திரர்களை உத்தியோகஸ்தர்களாக நியமித்தும், தமது சகோதரனை திருமலராயலைச் சமஸ்தானத்தின் சிவில் வியவஹாரங்களை விசாரித்து நீதி செலுத்தவும்; மற்றோர் சகோதரனாகிய வேங்கடாத்திரியைச் சேனாதிபதியாகவும் நியமித்து 23 வருஷங்கள் கம்பீரமாக அரசுசெய்துவந்தார்.

கிருஷ்ணதேவராயனு காலத்தில் ஆரம்பித்த பெரிய வாய்க்கால் வேலைகள் அந்த ராமராஜாகாலத்தில் தான் முடிவு பெற்றன. தம்மைஅடுத்த மகம்மதுபிரபுக்களுக்கு அடைக்கலம் தந்து, அவர்களை விஜயநகரத்தில் வீடுகளையும், மஜீதுகளும் கட்டிக் கொள்ள இடங்கொடுத்து ஆதரித்தார். அப்படி வந்த மகமதிய பிரபுக்களும் ராமராஜாவும் விஜயநகரத்தில் அநேக பெரிய கட்டிடங்களையும் கோயில் கோபுரங்களையும் கட்டிவைத்ததுடன்; அநேக வாய்க்கால்களை பாசனத்துக்காகத் திருப்பியபடியால்; நாட்டிலுள்ள பிரபுக்கள் அனேக நந்தவனங்களையும், பழம் தரும் செடிகளையும் வைத்துப் பயிர் செய்தார்கள். சமஸ்தானத்தில் சிற்ப சாஸ்திரப் பயிற்சியும், கல்வி ஞானமும் விருத்தியாகின, அவருடைய மதுரை, தஞ்சை முதலான சமஸ்தானங்களை ஆண்டுவந்த பிரதிநிதிகளாகிய நாயடு மார்களும் சித்திர விநோத அரண்மனைக் கட்டிடங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

அப்போது சமஸ்தானத்தில் யாதொருகலகமும், சண்டைசச்சரவுகளும், இல்லாமல் நிம்மதியாக இருந்தது. அப்படிப்பட்டகாலத்தில் தக்ஷணத்திலிருந்த மகமதிய சிற்றரசர்களுக்குள் சண்டைசச்சரவுகளுண்டாகவே, அச்சமயமறிந்து பீஜப்பூராரிடமிருந்த ரேயிச்சூர், முதகல் கோட்டைகளை இராமராஜா மறுபடியும்

பிடித்துக்கொண்டார். அந்த ராமராஜா காலத்தில் பீஜப்பூரை இபிராஹிம் அதில்ஷா என்பவர் தமது மகா தீரனான பெல்காம் அசத்கான் என்பவருடைய உதவியால் ஆண்டுவந்தார். புரான் நிஜாம்ஷா, அகமது நகரை ஆண்டுவந்தார். குதுப்ஷா கோல்குண்டாவை ஆண்டுவந்தார். பிரிடிசா என்னும் பீடரின் பிரதான பட்டணத்தை அமீர்பிரத்து என்பவரும் ஆண்டுவர; அதைப்பீஜப்பூர் அகமது நகர், கோல்கொண்டா அதிபதிகள் அடிக்கடி சண்டைசெய்து பிடித்துக் கொண்டுவந்தார்கள்.

கிருஷ்ணதேவராயனுக்குப் பிறகு குதப்ஷா விஜயநகரத்தைச் சார்ந்த சில கோட்டைகளைப் பிடித்துக்கொண்டமையால், அக்கோட்டைகளை மறுபடியும் பிடுங்கவேண்டுமென்று இராமராஜா சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட காலத்தில் புரான் நிஜாம் சாயபுக்கும், இபிராஹிம் அதில் சாயபுக்கும் சண்டை ஆரம்பிக்க, புரான சாயபுக்கு கோலகுண்ட குதுப்சாயபு உதவிசெய்ய; இராமராஜா, இபிராஹிம் அதில் சாயிபுக்கு உதவியாக நின்று பீஜப்பூர்மேல் படை எடுத்துச்சென்றார். அந்தச் சண்டையில் குத்பிசாயிபுக்கு அபாயகரமான காயம் சம்பவித்து இறந்தபடியால்; அப்பட்டத்திற்கு ஜமஷிதீன் பட்டாபிஷேகம் பெற்றார். அப்படிப்பட்டத்தை கட்டிக்கொண்டதை அவர் சகோதரர் 'இப்ரஹீம்' விரோதித்து சண்டைசெய்ய காரியசித்திபெறாமையால் விஜயநகர சமஸ்தானத்தாரிடம் அபயமாகவர, அங்கு இராமராஜா அவரை மரியாதையுடன் வரவழைத்து தக்க இடங்கொடுத்து ஆதரித்து வந்தார்.

இராமராஜா 1557-ம் வருஷம் போர்த்துக்கேய பிரதிநிதியாகிய (Don-Jaro-da-Castro) டாம்-ஜாவோ-டா-காஷ்டரோ என்பவருடன் ஓர் விசேஷ சமாதான உடன்படிக்கையினால்; அரேபியா, பாரசீக தேசங்களிலிருந்து போர்த்துக்கேயருக்கு வரும் குதிரைகளை இனிமேல் பீஜப்பூருக்கு அனுப்பாமல், நேராக விஜயநகரத்துக்கே அனுப்ப வேண்டுமென்றும், பான்கிபூர் தார்வாரிலிருந்து ஏற்றுமதியாகும் தானியங்களையெல்லாம் விஜயநகர மூலியமாக போர்த்துக்கேயருடைய கோட்டைகளாகிய பாண்டா, ஹானவோர் அன்கோலா விடங்களுக்கு அனுப்பித்தரவேண்டுமென்றும், நாட்டிலுண்டாகும் துணிகள் போர்த்துக்கேயருடைய தொழிற் சாலைகளுக்கு அனுப்பப் பட்டு அவைகளுக்குப் பதிலாக செம்பு, தகரம், பவளம், பாதரசம், சாதிலிங்கம் முதலான சரக்குகளும், போர்த்துக்கேயரால் சீனாவிலிருந்து தருவிக்கும் பட்டுத்துணி முதலானதுகளுக்கும் மாற்றுதல் செய்யப்படவேண்டு மென்றும், விஜயநகரத்தாரும் போர்த்துக் கேயரும் கூடி பீஜப்பூர் மகமதியருடன் சண்டைசெய்து விஜய நகர் கரையோரமாக ஓடும் மகமதியருடைய கப்பல்களைப்பிடித்தும் போர்த்துக் கேயரிடம் ஒப்பிவித்தும், அந்தக் கரையோரத்திற்கும் விஜயநகரத்துக்கும் மத்தியிலிருக்கும் சையாத்திரி கரை துறையையும், பாண்டாவுக்கும் சித்தகல்லுக்கும் மத்தியிலிருக்கும் கரை துறைப் பட்டணங்களையும் சண்டையில் ஜயித்தால் அவைகளைப்போர்த்துக் கேயருக்குக் கொடுத்து விட்டு மற்ற உள்நாட்டு பட்ட

ங்களை விஜயநகரத்தார் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டிருந்தது.

1550-ம் வருஷம் கோலகுண்டா ஜம்ஸித் குதுபிசாயபு இறந்து விட்டபடியால், ஜம்ஸித்குதுபிசாயபு அப்பட்டத்தைப் பெற்றார். அவர் அப்பட்டத்திற்கு ...தது கோலகுண்ட மகமது பிரபுக்களுக்கு இஷ்டமில்லாமையால்; விஜயநக...தில் அடைக்கலம் பெற்றிருந்த சரியான வார்சுதாரராகிய இப்ராஹிம் குதபீ ...யபைப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்று இராம...ஜாவைவேண்ட, அந்த ராமராஜாவும் பெரும்பான்மையான கோலகுண்ட ...கமது பிரபுக்களுடைய வேண்டுகோளின்படி இப்ராஹீம் குத்பீ சாயபவர்...ளுக்கு வேண்டிய தண்டுதளாதிகளைக் கொடுத்தனுப்பி கோலகுண்ட அரச...க சிங்காசனமேற்றினார்.

அப்போது அசத்கான் சாயபு இறந்து விட்டபடியால், பீஜப்பூரின் பேரில் ...ரான் நைஜாம் சாயபை வடபாகமாகப் படை எடுத்து வரும்படித்தூண்ட, ...வரும் அப்படியே வந்து சோளப்பூர், பெராண்டாகோட்டைகளைப் பிடித்துக் ...காள்ள, இராமராஜா ராயச்சூர், மடுகல் கோட்டைகளை மறுபடியும் பிடித்துக் ...காண்டார்.

1553-வருஷம் மறுபடியும் பீஜப்பூரைப் பற்றிச் சண்டையுண்டாக, ...ராமராஜாவும், புரான் நைஜாம்சாவும் படை எடுத்துச் சென்றார்கள். புரான் ...ாயபு அந்தச் சண்டையில் இறந்துபோக, அப்பட்டத்திற்கு உசேன் நைஜாம் ...ாயபு வந்தார். அதன்மேல் இராமராஜா பீஜப்பூராருடன் சிநேகிதராகி அக...த்பாத்தோடு சண்டைசெய்தார். அதை அறிந்து இப்ராஹீம் அதில்ஷா மறுபடி...யும் சோளப்பூர் கோட்டையைப் பிடிக்க விரும்பி இராமராஜாவின் தயவை ...ாட; அவரும் உதவிசெய்ய, சண்டைநடக்க; நிஜாமின் தளகர்த்தர், உசேனும் ...சைபன்மலிக் என்பவர்கள் இப்ராஹீம் கக்ஷியைச் சார்ந்து சதிமோசம்செய்து, ...பீஜப்பூரையே இழந்து விடும்படி செய்து வருவதை இராமராஜாவின் தம்பி ...வெங்கடாத்திரி கண்டு சைபின்மலிகைத் தோற்கடித்து அந்த அபாயத்தை ...நீக்கினார்.

இப்ராஹீம் அதில்ஷா 1557-வருஷம் இறந்துபோக, அப்பட்டத்திற்கு அலி அதில்ஷா வந்து முதலில் இராமராஜாவின் சிநேஹம் பாராட்ட, விஜயநகரத்துக்கு நேராகப்போக, இராமராஜாவும் அவருக்குத் தக்கமரியாதைகளைச்செய்து தம்மாலான உதவிசெய்வதாக வாக்களித்தார். அதை அறிந்த உசேன் நிஜாம் சாயபு, கோலகுண்ட இப்ராஹீம் குதபி சாயபின் உதவியையும், பீஜப்பூராருத...வியையும் நாடி இம்மூன்று சமஸ்தானத்தின் சேனைகள் அகமத் நகரத்தின் மேல் படையெடுக்க, கூல்பர்க்காவில் கூடிற்று. அப்போது அம்மூன்று சமஸ்தானத்தின் சேனையில் 900,000 பதாதிகளும், 100,000 குதிரைபட்டாளத்தாரும் இருந்து அகமத் நகருக்கு முற்றுகைப்போட்டார்கள்.

உசேன் நிஜாம்சா, பைடன்புரிக்கு ஓடினார். இப்ராஹீம் குதுபிசாய இரகசியமாகப் பகையாளிக்கு உதவிசெய்ய; இராமராஜாவும், அலிசாயபு வெகு கம்பீரமாகத் தாக்கி அடித்தார்கள். அதை அறிந்த இப்ராஹீம் சாய இராமராஜா இனிச் சண்டைசெய்யாதிருந்தால், கொண்டபள்ளி ஜில்லாவை லஞ்சமாகக் கொடுப்பதாகச் சொல்லி ஆசைகாட்டியும், இராமராஜா ஒத்து கொள்ளவில்லை. அதன்மேல் இப்ராஹீம் சாயபு பயந்து சண்டையை நிறுத்தி யும், உசேன் சாயபை இராமராஜா அலிசாயபவர்களிடம் சமாதானம்செய்ய அனுப்பினார். அந்தச் சமாதானத்தினால் கலியாணி நாட்டைப் பீஜப்பூருக்குக் கொடுத்து விடுவதாகவும், இராமராஜா தக்ஷணத்திலுள்ள மகமதியர் அரசர் களுக்கெல்லாம் தலைவராகக் கொண்டாடி வரவேண்டுமென்றும், கண்டிருந் தது. அந்த ஏற்பாட்டுக்கு முதலில் உசேன் நிஜாம் சாயபு விதியின்றிச் சம்ம தித்துக் கொண்டாலும்; அந்த அவமானத்தை நெடுநாள் கொண்டிருக்கச் சகி யாமல், அகமத் நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்தியும், இப்ராஹீம் குதிபு சாயபுக்குத் தனது குமாரத்தியை விவாஹம் செய்துக்கொடுத்து வசமாக்கியும், வேண்டிய ஆயுதாதிகளைத் தயார்செய்து வைத்துக்கொண்டும், 1563 - ஷ சண்டைக்காரம்பித்து இப்ராஹீமும், உசேனும் கூடி கலியாணிகோட்டைக்கு முற்றுகைபோட்டார்கள்.

இராமராஜா இந்தச் சண்டையில் குதுபிசாயிபைச் சேர்க்காமல், கோலகுண்டாவுக்கு ஒரு பெரிய சேனைக்கூட்டத்தை யனுப்பி, தாம் பீஜப் பூர் சேனையோடு கலந்து சண்டைசெய்ய, உசேன்சாயபும் இப்ராஹீம் சாயபும் கலியாணிக்கு அருகில் தோல்வியடைய, விஜயநகர் பீஜப்பூர் சேனைகள் அக மத் நகரைநாடிச் சென்று முற்றுகைப்போட, உசேன் நிஜாம்ஷா ஜுனுருக்கு ஓடிப்போக; அவரை இராமராஜா துரத்திக்கொண்டே போயினார். ஹுசேன் சாயபு ஓடிப்போய் மலைத்தாக்குகளில் மறைந்து கொள்ள, இராமராஜா அகமத் நகரத்துக்கே திரும்பினார். அங்கு சீனாப்நதிக்கரையில் பட்டாளம் தங்கியிருந்த போது ஆயிரம் கணக்கான சேனைகளும், சாமான்களும் ஆற்றுவெள்ளம் வாரிக் கொண்டுபோய்விட்டது. இச்சண்டையில் இராமராஜா செய்த உதவிக்காக அலிசாயபு, பாகல்கோட்டை, யாதவகிரி கோட்டைகளை இனாமாகக் கொடுத் தார். அப்போது இராமராஜாவின் தம்பி வெங்கடாத்திரி கோலகுண்டாவைத் தாக்கி அடிக்க, அவருடைய மருமகன் திம்மராஜு தேவகொண்டாவில் சண் டைசெய்ய, இப்ராஹீம் குதுபிசாயபு குண்டூர், கானபுரம், பங்கல் முதலான கோட்டைகளை இராம ராஜாவுக்குத் தந்து ராஜிசெய்துகொண்டார். அக்காலத் தில் இராமராஜாவின் அதிகாரம் எங்கும்பரவிவர, மகமதிய மன்னர்களெல்லா ரும் அவர் உத்தரவின்படி நடக்கச் சம்பவித்தது. அப்போது ராமராஜாவே தக்ஷண இந்தியாவுக்கு ஒப்பும் உயர்வுமற்ற சக்கிரவர்த்தியாக விளங்கினார்.

தலைக்கோட்டையில் நடந்த பயங்கரமான சண்டை.

அந்த இராமராஜாவின் பிரபல பிரபுத்துவத்தைக்கண்டு பொருமையினுல் சகியாத மகமதியர்கள் யாவரும் ஒரேகட்டுப்பாடாகச் சேர்ந்து விஜயநகர சமஸ்தானத்தை இனி தலை எடுக்காமல் தாக்க வேண்டுமென்று தினேதினே சதிமோசங்கள் செய்துகொண்டே வந்தார்கள். அதற்காக முதலில் உசேன் நிஜாம் சாயபு ஓர் யுக்திசெய்து பீடர், கோல்குண்டா, பீஜப்பூர் மன்னர்களை தம்முடன் சேரும்படிக்கும்; அந்தக் கட்டுப்பாடு கெடாதபடி தமது குமாரத்தி சந்திபீபீ என்னும் பெண்ணை அலி அதில்ஷாவுக்கு விவாஹம் செய்துகொடுத்தும்; சோளப்பூரையும் பீஜப்பூரையும் ஸ்ரீதனமாகக் கொடுத்தும் ஆசைகாட்டியதில்; அல்விசாயபும் தமது சகோதரியை உசேன் சாயபுக்கு விவாஹம் செய்வித்தும், இப்படி பீஜப்பூர், கோல்குண்டாவைச் சம்பந்தப்படுத்தியும்; பின்னும் இராமராஜாவை ஜயிப்பதற்கு வேண்டிய சகல காரியங்களையும் தந்திரமாகவும், அந்தரங்கமாகவும் செய்து முடித்து சண்டைக்குத் தயாராக இருக்கையில்; இராமராஜா இத்யாதி காரியங்களைக் கவனியாமலும், தக்க மந்திரி முதலானவர்களுடன் கலந்து பேசாமலும், தமக்கு அப்போதிருந்த பெருஞ் சேனையையும், திரவியத்தையும் பிரபலப் பெயரையும் கருதிச் சண்டைக்குச் சித்தமாக இருப்பதாகத் தெரிவித்தும், கிருஷ்ணாநதிக்குத் தென்பாகத்திலிருக்கும் தானூருக்கு அருகில் தன் சேனையை அனுப்பினுர்.

அந்தச் சண்டை பயங்கரமான பெரிய சண்டை. தக்ஷணத்திலிருந்த மகமதியமன்னர்கள் யாவரும் ஒரே கட்டுப் பாடாகி விஜயநகரத்தைப் பாழ்த்துப்போக நெடுங்காலம் யோசித்து செய்துவந்த சதிமோசச் சண்டையாகையால்; மகமதிய மன்னர்கள் எல்லோருடைய சேனைகளும் ஏககாலத்தில் ஒரே மனதாகித் திரண்டுத் தயாராக நின்றிருந்தன. அந்தச் சண்டைக்கு இராமராஜாவின் சேனைப் பலத்தைப் பற்றி பலர் பலவிதமாக மதிப்பிட்டாலும்; மகமதிய சரித்திரக் காரராகிய பெரிஷ்டா (Ferishta) கணக்கின்படி அப்போது இராமராஜா சேனையில் 9,00,,000 ஒன்பது லட்சம் பதாதிகளும், அவர்களுக்கு உணவு முதலானதுகளைத்தந்து உதவிசெய்ய 1,500 சேவகர்களும், வேலைக்காரர்களும், 60 000 குதிரைகளும், 2,000 யானைகளும், 1000 பீரங்கிகளும், அநேகத் துப்பாக்கிகளும் இருந்தனவாக எழுதி இருக்கிருர்; அப்படிப் பெருத்திருந்த பட்டாளத்தை மூன்று பிரிவுகளாக வகுத்து, ஒரு பிரிவைத் தனத் தம்பி வெங்கடாத்திரி அதிகாரத்துக்குள்ளும்; மற்றொரு பிரிவை மற்றொரு தம்பியாகிய திருமலைராயனு அதிகாரத்துக்குள்ளும்; மீதி இருந்த பிரிவைத் தமது அதிகாரத்துக்குள்ளும் வைத்து தாமே உயுத்தத்துக்கு நேராகப் புறப்பட்டார். அப்போது அவருக்கு வயது 96-ஆனதுபற்றியும், வேறு காரணங்களைக் கருதியும், அவரை நேராக உயுத்தத்துக்குப் போகக் கூடாதென்று பலர் தடுத்தும், யார் வார்த்தையையும் கேளாமல் "செத்தால் சமர்களத்தில் செத்து வீரசொர்க்கந்

தை அடைவேனே யொழிய, அரிவையரைப்போல் அரண்மனையில் தங்கேன்'' எனச் சொல்லிவிட்டு சுமார் 30-வயது வீரனைப்போல் உயுத்தத்துக்கென்று தயார் செய்யப்பட்ட பட்டு, மஹமல், தங்கம், முத்துகளால் அலங்கரித்திருந்த சிங்காரவிமான பல்லக்கில் ஏறிப்போய் அச்சண்டையில் அதிகவீரதீரத்தோடு சண்டை செய்பவர்களுக்கு அந்த யுத்தகளத்தில் வீரசங்கிலி, வைரகங்கணம் முதலான விருது தோடாக்களைப் போட்டும், திரவியங்களைக் கொடுத்தும், உற்சாகப்படுத்த வேண்டிய ஆபரணங்கள் முதலானவைகளை தம்பல்லக்கிலே வைத்துக்கொண்டும் மஹா வீரதீரத்துடன் 1565-வருஷம் ஜனவரி மாதம் 23-ந்தேதி செவ்வாய்க்கிழமை சண்டைசெய்ய, முதலில் அவருக் கனுகூலமாகவே ஜெயம் கிடைத்தது.

கிடைத்தாலுமென்ன? அவருடைய சேனைகள் முதலில் ஜெயித்த அகங்காரத்தினால் தலைதெரியாமல் குதித்து கொக்கரித்து கொண்டாடும்போது, மகமதியருடைய சேனையிலிருந்த இரண்டொரு யானைகள் மிரண்டோ அல்லது மூர்க்கத்தனத்தினாலோ பயந்து பாகனுக்கு அடங்காமல் எதிரிலகப்படும் மனுஷர் முதலானவர்களைச் சின்னா பின்னமாக மிதித்துக் கிழித்து கொள்ளையாடி வரவே; இராமராஜாவைச் சுமந்து கொண்டிருந்த போயிகளும் பயந்து தமது இராஜ சிம்மாசனப் பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு ஓட, அதைக்கண்ட மற்ற சேனைகள் ஓ! ஓ! இராமராஜாவைக் காணோம், மகமதியர்க் கையில் அகப்பட்டு விட்டார் என்று மதிமயங்கி, நாலாபக்கத்திலோட; இத்தியாதி கலவரங்களைக் கவனித்துக்கொண்டிருந்த மகமதியர் சேனைகளில் 5000-குதிரை வீரர் ஓடிவந்து வளைந்து இராமராஜாவைப் பிடித்து சிரச்சேதம் செய்து அவர் தலையை அகமதாபாத்துக்குக் கொண்டுபோய் விட்டார்கள். இராமராஜாவின் பிரதாபத்தையும், வீரதீரத்தையும், விருத்த வயதையும், பரோபகாரகுணங்களையும், அறிந்திருந்த பெரும்பான்மையான மகமதிய மன்னர்கள் அவரைச் சிரச்சேதம் செய்ததைக்கண்டு சங்கடப்பட்டு வருந்தினாலும்; காரியம் முடிந்த பிறகு என்ன யோசனைசெய்தாலும் பிரயோஜனமென்ன? இராமராஜா மகமதியர்கையிலகப் பட்டுச் சாவதற்கு அவரிட உத்தியோகத்திலிருந்த சில மகமதியர்களுடைய சதிமோசத்தினாலென்றும், அந்த இராமராஜா மகமதியர் கையில் சிக்கி அவமானப்படுவதைப் பார்க்கிலும் வீரசொற்கமடைவது சுகிர்தமென்று எண்ணி தன் தலையை வெட்டிக் கொள்ளும்படிதானே வலியக் கேட்டுக் கொண்டதன்மேல் வெட்டப்பட்டதாகவும், கர்னூல் மானுயூல் சரித்திர புத்தகம் 26-வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இராமராஜா அந்த தலைக்கோட்டைச் சண்டைக்குத் தாமே நேராகப் போகாமலும், தமது தம்பிமார்களையும் வேறுதளகர்த்தர்களையும் அனுப்பிச் சண்டை செய்திருந்தாகிலும், அல்லது அப்படி மகமதியர்கள் யாவரும் ஒரே சேனையாகத் திரண்டுவரும் கட்டுபாட்டை யறிந்து கொஞ்சம் காலதாமதம் செய்தாகிலும், தக்கபடி யோசனை செய்திருந்தால்; அவர் பிராணனுக்கும் நஷ்டமுண்டாயிராது. விஜயநகரமும் பாழத்துப்போயிராது. அவருக்கு அப்போது 96 வயதாகிய

தால்புத்திச்சுவாதின மற்று அப்படிச் செய்தார்போலும்.கிருஷ்ணதேவராயலுக்குப் பிறகு வில்வித்தையிலும் மல்லஉயுத்தத்திலும் சிறந்தவீரன் அந்த இராமராஜாவே. அவர் ஆண்ட 22வருஷ காலத்தில் சமஸ்தானத்தில் கல்வி ஞானம் தருமம்முதலானவைகளைவிருத்தியாக்கியும்,குடித்தனக்காரருக்குவேண்டியபாசன வசதிகளையும், வர்த்தகவியாபாரம், கைத்தொழில், சிற்ப விஞ்ஞானங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வித்தும்;அனேக குளங்கள்,கோயில் கோபுரங்களையும் அக்கிரஹாரங்களையும் கட்டுவித்தும்; தக்ஷண நாட்டில் தமக்கு ஒப்பும் உயர்வுமற்ற இராஜராஜாதிபதியாக பிரகாசித்து வந்தார். இப்போது ஹம்பியிலிருக்கும் ஹஜாரி இராமசுவாமி கோயிலைக் கட்டிவைத்தவர் அவரே.

அப்படிப்பட்ட சுத்தவீரன் யுத்த களத்தில் போகவே, அவருடைய தம்பிமார்களாகிய வெங்கடாத்திரியும்,திருமலைராயலும் தமக்குப் போதுமான சேனையின் உதவி இல்லாததை அறிந்து, அநந்தபூர் ஜில்லாவைச் சேர்ந்த பெனுகொண்டாவுக்குப் போய்விட்டார்கள். விஜயநகரம் மகமதியர்கள் கையில் அகப்பட்டுப் பாழ்த்துபோமென்று எச்சரிக்கையாக இருந்த விஜயநகரப் பிரபுக்களும், மற்றக குடிகளும், அரண் மனையிலிருந்த உத்தியோகஸ்தர்களும் அதிக விலையுயர்ந்த ராஜ சிங்காசனம், ஆடையாபணரங்களையும், பெண்டு பிள்ளைகளையும் 1550-யானைகளின்மே லேற்றிக்கொண்டு நாலாபக்கங்களிலுமுள்ள மலை நாடுகளில் போய்த் தங்கிக் கொண்டார்கள். பிறகு மகமதியர் சேனைகள் விஜயநகரத்துக்குள் பிரவேசித்து வீடுவாசல், விக்கிரகம், கோயில் கோபுரங்களை எல்லாம் பாழாக்கிய அக்கிரம அர்நியங்களை இப்போதும் அங்குப் பார்க்கலாம். அப்படிப் பாழாக்கிய பட்டணத்தில் 3-மகமதிய மன்னர்களும் வந்து ஐந்து மாதகாலமாகத் தங்கி, எந்தெந்தச்சொத்தைச் எந்தெந்த மன்னர் அனுபவிக்கிறதென்று யோசித்ததில்; ஒருவர் அபிப்பிராயம் ஒருவருக்குப் பொருந்தாமல், மனஸ்தாபங்களும் சண்டை சச்சரவுகளுமுண்டாகிக் கடைசியாக விஜயநகரத்தை இராமராஜா சந்ததிகளிடமே விட்டு விட்டு வடக்கே தமது நாடுகளுக்கே போய் விட்டார்கள். உசேன் நீஜாம் சாயபு அகமத் நகரத்துக்குப் போனதும் இறந்தார்.

1566-ம் வருஷம் அலி அதில்ஷா பெனுகொண்டாவிலிருந்த வெங்கடாத்திரிக்கு விரோதமாக ஒரு சேனையையனுப்ப, வெங்கடாத்திரி கோலகுண்டா, பெனுகுண்ட, நவாப்புகளுடன் சமாதான உடன்படிக்கைகள் செய்துக்கொண்டதில், அவர்கள் சேனைகள் பீஜப்பூர்மேல் படையெடுக்க, அலி அதில்ஷா பயந்து திரும்பிவிட்டார்.

1568-ம் வருஷம் அந்த திருமலை ராயலு விஜயநகரத்துக்கு வந்து அதைப் பழையபடி பிரபலமாக்க முயன்றும் முடியவில்லை. 1568ஸூம் அந்த திருமலைராயலு உண்மையானவாரசாகிய பழய சதாசிவராயலைக் கொன்றுவிட்டு தானே பட்டம் சூட்டிக் கொண்டு 8 வருஷம் ஆண்டதாக ஒரு சாசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அந்தக்காலத்தில் விஜயநகரத்தை வந்து பார்த்த ஐரோப்பா வர்த்தகராகிய (Ceasar, Frederick) சீஸர், பெயிடரிக் என்பவர் விஜயநகரம் குடியில்லாமல் காலியாகவிருக்கினும்; அங்கு இன்னும் அநேக மாடமாளிகைகளிருக் கின்றன வென்றும், அவைகளில் புலி முதலான காட்டு மிருகங்கள் சஞ்சரிக்கின்றன வென்றும், கோயில் கோபுரங்கள் பலமான கட்டிடங்கள் என்றும், அதன் அரண்மனை எட்டுச்சுவர்களால் சூழப்பட்ட இணையில்லாக் கட்டிடமென்றும், அது தக்க வீரர்களால் காக்கப்பட்டுவருகிறதென்றும், எழுதினர்.

1568-ம் வருஷம் அலி அதில் ஷாவானவர் இராமராஜா தமயன் குமாரரிடமிருந்த அதோனிகோட்டையையும், 1573-வருஷம் பாதாமி, தோர்கல் கோட்டைகளையும்; 1574-வருஷம் தார்வாரையும், பிறகு பான்காபுரத்தையும் பிடித்துக்கொள்ளப் போக, அப்போது அங்கு பிரதிநிதியாகவிருந்த வேலப்ப நாயடு சுமார் ஒன்றரை வருஷ காலமாகத் தடுத்தும் முடியாமல், அதில்ஷா ஜயித்து அங்கிருந்த இந்துமத கோயிலை இடித்து அந்த அஸ்திவாரத்தின்மீதில் மசூதி கட்டிவிட்டும், கொங்கணத்திலும் ஜயம்பெற்று மூன்று வருஷத்துக்குள் பெல்லமுகொண்டாவையும் பிடித்துக்கொண்டார். பிறகு துங்கபத்திராவுககுத் தெற்கே இருந்த நாடுகளைத் திருமலைராயலு ஆண்டுவந்தார். அக்காலத்தில் பெயருக்கு மாத்திரம் சக்கிரவர்த்தியாகவிருந்த சதாசிவராயலைத் திருமலைராயலு கொன்று விட்டதாக பெரெடரிக் என்பவர் எழுதி இருக்கிறார்.

சதாசிவராயலோடு விஜயநகர சமஸ்தானமே முடிவுபெற்றதென்று சொல்லும்படி யாகிவிட்டது. ஏனெனில் அப்போது அவர்களுக்கு மேற்கே இருந்த நகரங்களும், மைசூரின் வடபாகங்களும் அந்தப்பாகங்களை ஆண்டுவந்த அரசர்களும் சுதந்திரராகிச்சுவாதீனமாக்கிக்கொண்டார்கள். திருமலைராயலுடைய முயற்சியினால் சாதாரணமாக ஸ்தாபிக்க முயன்ற குடும்பமும் எதிர்பார்த்தபடி பிரபலமாகவில்லை. அவர் குமாரர் ஸ்ரீரங்கராயலு 1573 முதல் 1585 வருஷம் வரையில் அரசனாக ஆண்டுவந்தாலும், 1579 வருஷம் அலிஅதில் ஷா மறுபடியும் பெனுகொண்டாவின்மேல் படை எடுத்து வந்து முடியாமையால் பெனுகொண்டாவைப் பிடிக்காமல் பீஜப்பூருக்குப்போக, அங்கு அவரை மகமதியர் 1580 வருஷம் சதிமோசமாகக் கொலைசெய்துவிட்டார்கள். பிறகு ஸ்ரீரங்கராயலு சந்திரகிரிகோட்டைக்கு வந்து 14வருடம் ஆண்டு 1585 வருஷம் இறந்தார். அவருக்குப்பிறகு

வெங்கடபதிராயலு ஸமஸ்தானம்.

1586-ம் வருஷம் முதல் 1614-வது வருஷம் வரையில்.

ஸ்ரீரங்கராயலுக்குப் பிறகு அவர் சகோதிரர் வெங்கடபதிராயலு சந்திரகிரி சமஸ்தானபதியானர். அவரும் ஓர் வீரதீரரானபடியினால், 28-வருஷம் ஆண்டு

தமது செஞ்சிகோட்டைக்கு கிருஷ்ணப்ப நாயடுவையும், மதுரைக்கு குமார கிருஷ்ணப்ப நாயடையும், சென்னைக்கு ஜகதேவராயலேயும், ஸ்ரீரங்கபட்டணத்திற்கு திருமலேராயலேயும், இதேமாதிரியாக தஞ்சை பெனுகொண்டாமுதலான விடங்களுக்கு பிரதிநிதிகளை நியமித்து ஆண்டுவரும்படி செய்வித்தும்; கிருஷ்ண நதிக்குத் தெற்கே இருக்கும் மகமது குத்ப்ஷா நாடுகளை ஜயிக்கமுயன்று 1593-முதல் 1599-வருஷம்வரையில் சண்டைசெய்து ஜயித்தார். அவருக்குப்பிறகு 1614லிருந்துமுதல் 1636 வருஷம்வரையில் அந்த மூன்றும் சந்ததியில் பெத்தவெங்கடராயலு, சின்னவெங்கடராயலு, இரங்கராயலுமுதலான ஐந்து அரசர்கள் ஆண்டார்கள். 1610-ம் வருஷம்வரையில் விஜயநகரப் பிரதிநிதி மைசூர்நாட்டையும், 1650-ம்வருஷம் வரையில் இக்கரை அல்லது பெத்தனூர் பிரதிநிதிகள் ஆண்டுவர, வடதேசத்தில் மொகல் சக்கரவர்த்திகள் பிரபலராகி தக்ஷண தேச மகமதியர்களை அடக்கிக் கீழ்ப்படுத்தினார்கள்.

1673-ம் வருஷம் மஹாராஷ்டிர தலைவரான சிவாஜியின் தந்தை சாஹாஜி போஷலோ வந்து கொங்கண நாடுகளையும், பிறகு கர்னூல், செஞ்சி, வேலூர் முதலான கோட்டைகளையும் பிடித்துக்கொண்டார். 1639-ம் வருஷம் ஸ்ரீரங்கராயலு விஜயநகர சமஸ்தானபதியாக இருக்கும்போது, ஈஸ்ட் இந்தியா கம்பெனி தலைவரான மிஸ்டர் டே (Mr. Day) என்பவர் சென்னையில் போர்ட் சேன்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிக்கொள்ள ஒரு மைல் அகலமும், 5 மைல் நீளமுமுள்ள இடத்தைக் கேட்க; அந்த ஸ்ரீரங்கராயலும் தமது பெயரால் ஸ்ரீரங்கராயலு பட்டணம் என்ற பெயரால் கட்டிக்கொள்ள, அவ்விடத்திலிருந்த தமது பிரதிநிதி நாயடவர்களுக்கு உத்தரவளிக்க, அந்த நாயடு தமது தகப்பனார் சேன்னப்பநாயடு பெயர் வழங்கும்படி கட்டிக்கொள்ளச் சொல்ல; அன்று முதல் அதற்குச் சேன்னப்பட்டணமென்று பெயராகியது.

நரபதி சமஸ்தானத்தின் மூன்றும் சந்ததியின் வமிசவிருக்ஷம்

பூசபாட்டி இரங்கராயலுக்கும் அவர் மனைவி திருமலாம்பாளுக்கும் இராமராஜா, திருமலேராயலு, வெங்கடாத்திரி ராயலு, பிறந்தார்கள். அவர்களில்,

1-வது இராமராஜா, கிருஷ்ணதேவராயலுடைய மூத்தகுமாரத்தி மோஹனாங்கி அல்லது திருமலாம்பாளை விவாஹம் செய்துக்கொண்டதில், இரங்கராயலு (4-வதும்) வேறு நான்கு குமாரர்களும் பிறந்தார்கள். அந்த ரங்கராயலுக்குப் பெத்தவெங்கடராயலும், சின்ன வெங்கடராயலும் பிறக்க, அந்தச் சின்ன வெங்கடராயலுக்கு இரங்கராயலு (6-வது) பிறந்து 1644-ம் வருஷம் கோபாலராயலுக்குச் சுவீகார புத்திரனாய் சந்திரகிரியிலிருந்து ஆண்டார்.

2-வது திருமலைராயலும் கிருஷ்ணதேவராயலுடைய மற்றொரு குமாரத்தி வெங்கடாம்பாளை விவாகம் செய்ததில், இரகுநாத ராயலு, இரங்கராயலு, (2-வது) இராமராயலு (3-வது) வெங்கடராயலு (1-வது) என்ற நான்கு குமாரர்கள் பிறக்க, அவர்களில் இராமராயலுக்குத் திருமலைராயலு. 2-வது, இரங்கராயலு (3-வது) பிறக்க அந்த ரங்கராயலுக்கு இராமராயலும் (4-வது) மற்ற சில சகோதிரர்களும் பிறந்தார்கள்.

3-வது அந்தரங்கராயலுடைய மற்றொரு குமாரராகிய வெங்கடாத்திரிக்கு இரங்கராயலும், அவருக்கு கோபலராயலும் பிறக்க, அவர் 6-வது இரங்கராயலைச் சுவீகாரம் செய்துகொண்டார்.

இந்த வமிசவிருக்ஷத்தினால் (6-வது) இரங்கராயலு அல்லது ஸ்ரீரங்க தேவராயலு 3-வது சின்ன வெங்கடராயலுடைய மூன்று குமாரர்களில் இளைய குமாரரென்றும், வீரவெங்கடபதிராயலு மூத்தவரென்றும், ஸ்பஷ்டமாகும்.

விஜயநகர ஸமஸ்தானத்தாருக்குளுண்டான குழப்பங்கள்.

சந்திரகிரியில் கி-பி:1614ம்வருஷம் வெங்கடபதிராயலு, தமது 67 வயதில் இறந்த பிறகு, அவருடைய சிங்காசன விஷயத்தை பற்றி, 1616ம்வருஷம் டிசம்பர்மீ 12உ கொச்சி சமஸ்தானத்திலிருந்த (Manual Baradas) மானியூல் மார்டஸ் என்பவர்எழுதியசரித்திர சாசனம் லிஸபன்(Lisban) பட்டணத்தின் (National ArchivesLesbon) தேசவிசாரணைச் சபையில் வைக்கப்பட்டதை மேஸ்டர் சுவேல் (Robert Sewell) சாஸ்திரியாரால் அங்கிலேய பாஷையில் எழுதப்பட்டு தமது விஜயநகர சமஸ்தான சரித்திரத்தில் சேர்த்திருக்கிறார்-

அதன் கருத்தாவது.

அந்த வெங்கடபதி ராயலு, ஜகதேவராயலுடைய குமாரத்தி பாயாம்மாளை விவாஹம் செய்துக்கொண்டதில், ஆண்பிள்ளைகளில்லாமையால், ஓர் அந்தணர் பெண்ணின் ஆண்குழந்தையை சுவீகாரம் செய்து வளர்த்தும், தன் கணவன் மைத்துனர் ஒபிளி ராயலு குமாரத்தியை விவாஹம் செய்து வைத்தும், வெங்கடபதிராயலுககு பிறகு பட்டம் கட்டிவைக்கபிரயத்தனப்படச்சே; அந்த வெங்கடராயலு இந்த சூதை யறிந்து தமது தாடாதி குமாரன் சிக்கதேவராயலை பட்டத்திற்கு நியமித்து இறந்து விட்டதாகவும்; அதன் மேல் ஜகதேவராயலும், தீம்மராயலும், மேகராயலும் ஒன்றுகூடி அந்த சிக்க தேவராயலை குடும்பத்தோடு பிடித்து கோட்டைக்குள் சிறையில்வைத்து விட்டு, அந்த ஸ்தானத்திற்கு பார்ப்பினி மகனை இராஜனாக நியமிக்க; ஸமஸ்தானத்தில் பெரிய கலகங்களுண்டாகியதால்; பழய அரசனை கொன்று விட்டாலன்றி சண்டை சச்சரவு களடங்காதென்று கண்ட ஜகதேவராயலு, சின்ன ஒபிளி நாயடு விடம் கத்திகட்டாரிகளைக் கொடுத்து அக்கருமத்தை முடித்து வரும்படி அனுபிய

தாகவும், சின்ன ஒபிளி நாயிடும் போய் தான் வந்த சங்கதியைச்சொல்ல, அந்தப் பழைய அரசன் சிக்கராயலு கேட்டு விசனப்பட்டு தன் கத்தியால் தன் மனைவி மக்களை வெட்டி விட்டு, தாமும் ஹரி ஹரி என்று வெட்டிக் கொண்டு விழுந்து விட்ட தாகவும்; இந்த அக்கிரமத்தை கண்ட எச்சம நாயடு, உடனே 10000 சேனையோடு போய் புது அரசனைக் கொன்று விட்டு சரியான வார்சாகிய சிக்க தேவராயலு குமாரனை சிங்காசன மேற்றிய தாகவும்; அதன் மேல் ஜகதேவ ராயலு 20000 சேனையோடு வந்து எச்சம நாயடு சேனையை தாக்க முடியாமையால், ஜகதேவராயலு வந்து தஞ்சையிலாண்ட நாயடுமார்களிடத்திலும் மதுரையிலாண்ட முத்துவீரப்பநாயடுவாரு ஸமஸ்தானத்திலும் உகவி செய்யும்படி வேண்ட அவர்கள் ஜகதேவராயலு அக்கிரமஸ்தனென்றும், இராஜ துரோகியும், பந்து துரோகியும், என்று கண்டு எவ்விதஉதவி செய்ய மாட்டோமென்று சொல்லி துரத்திவிட்டதாகவும் எழுதி இருக்கிறார். இந்தக்குழப்பக்கதையை முழுதும் படித்துப் பார்ப்போர்க்கு நிராதவியாகூலத்தை உண்டாக்குமென்பது திண்ணம். விரிவஞ்சி இதை மிகவும் சங்கிரமாகத் தெரிவித்தோம்.

நரபதிகளின் நான்காவது சந்ததி விவரம்.

சின்ன வெங்கடராயலுடன் நரபதியின் நான்காவது சந்ததியார் ஆளுகைக்கு வந்தார்கள். அவர்கள் எவர்களெனில்:—

சின்ன (3-வது) வெங்கடராயலுக்கு வீரவெங்கடராயலு, திருமலைராயலு, இரங்கராயலு (6-வது) பிறந்தார்கள். அவர்களில் வீரவெங்கடராயலுக்கு இராமராயலு, இரங்கராயலு பிறந்தார்கள். அந்த இராமராயலுக்கு வெங்கன்ன, சின்னராஜா, ராம ராயலென்ற மூன்று குமாரர்கள் பிறந்தார்கள். திருமலைராயலுக்கு இராமராயலு, கோபாலராயலு, பிறந்தார்கள். அவர்களில் சின்ன ராஜாவுக்கு பெத்த தாசராயலு, சின்னதாசராயலு பிறந்தார்கள். அந்தச் சின்ன தாசராயலுக்கு இராமராயலு, வீரவெங்கடராயலு பிறந்தார்கள். அந்த வீர வேங்கட ராயலுக்கு திருமலைராயலும், செல்லம்மா என்ற ஒரு பெண்ணும் பிறந்தார்கள். அந்தத் திருமலைராயலுக்கு நரசிம்மராயலு, வீர வெங்கடராயலு, கேசவம்மாள் பிறந்தார்கள். அந்த கேசவம்மாள் வயிற்றில், சின்ன திருமலை ராயலுக்கு இலக்ஷிமி தேவி அம்மாள் பிறந்தார்கள். அந்த சின்ன திருமலை ராயலு வெங்கடராயலு, கிருஷ்ணராயலும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். அந்த கிருஷ்ணராயலு குப்பம்மாளை விவாஹம் செய்து புத்திர சந்தான மில்லாமையால் பம்பாபதிராயலைச் சுவீகரம் செய்துக்கொண்டார்கள். அந்தப் பம்பாபதிராயலு எவரெனில், முன் சொன்ன வீரவெங்கடராயலு குமாரத்தியாகிய செல்லம்மாள் வயிற்றில பெத்த பம்பாபதி சின்ன பம்பாபதிபிறக்க, அந்தச் சின்ன பாம்பாபதி வயிற்றில் திருமலைராயலும், குமார இராகவராயலும் பிறக்க, அந்த ராகவராயலுக்கும், சதாசிவராயலு, கோதண்டராம ராயலு, குப்பம்மாள்

நரசர்பம்பாபதிராயலு பிறந்தார்கள். இப்போது அந்த நரபதி சந்ததியின் பிரதிநிதியாக இருக்கப்பட்ட **ஸ்ரீமான் ஸ்ரீரங்க தேவராயலு இராவ்சாஹிப்** பம்பாபதி குடும்பத்தைச் சார்ந்தவராயும், ஆனகுந்தி அரசராகவுமிருக்கிறார். கிருஷ்ண தேவராயலுடைய மனைவி குப்பம்மாளுக்கு சந்ததி இல்லாமையால், பம்பாபதி ராஜாவை சுவீகாரம் செய்து கொண்டனர்.

விஜயநகர ஸமஸ்தானம் மகமதியர் வசமான பிறகு அலி அதில்ஷா இராமராஜாவின் சந்ததி திருமலைராயலுடைய பேரனாகிய நரசிம்மதேவராயலுக்கு ஆனகுந்தியை ஜாகீராகக் கொடுத்தார். அதை அனுசரித்தே ஐதிராபாத்து நிஜாம் கவர்ன்மெண்டாரும் சில கிராமங்களைத் தற்கால இராயலுக்கு ஜமீனாகக் கொடுத்து பூர்வ பட்டத்தை வகிக்கும்படி செய்ய; நமது இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரும் அந்தச் சமஸ்தானத்தைச் சார்ந்த **ஹாஸ்பேட்டை, பல்லாரி**யைத் தம்பக்கம் சேர்த்துக்கொண்டு அவை கட்கா 1807ஹூ மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1377-11-4- பென்ஷனாகக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். பிறகு இப்போது இராயலுடைய சுவிகாரத்தில் யாதோ சட்டவிரோதமான நடவடிக்கை நடந்திருப்பதாகச் சொல்லி, அந்த பென்ஷனை நிறுத்தி விட்டார்கள். பிறகு தகுந்த சாதனங்களைக்கொண்டு தம்பாத்தியதையை நிரூபித்த தன்மேல், 1902ஹூ செப்டம்பர்மீ கடைசியில் இப்போதிருக்கும் **நரபதி ஸ்ரீரங்கதேவராயலு இராஜா சாஹேப் அவர்களே,** அந்த சமஸ்தானத்துக்குச் சரியான வாரிசு எனக்கண்டும்; நமது சக்கிரவர்த்தியாகிய ஏழாவது எட்வர்ட் அவர்கள் சக்கிரவர்த்தி என்னும் பட்டத்தைதரித்தது முதல் ஸ்ரீநரபதி ஸ்ரீரங்கதேவராயலு இராஜா சாஹேப் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு500 ரூபாய பென்சன்கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

இந்தநரபதிராயலுகாலத்தில் சாசனம் எழுதும்வக்கணை.

சுவஸ்தி, மகாமண்டலேஸ்வர, ராஜாதிராஜ ராஜபரமேஸ்வர, ராஜகுலதிலக, ராஜமார்த்தாண்ட, பாஷைக்குத் தப்புவராத, கண்ட கண்டநாடு, கொண்டு கொண்டநாடு, கொடாதோன், எம்மண்டல, முத்திரைக்கொண்டு, ஈழமுந்திரைகொண்டு, தலைகொண்ட கண்டன், துலுக்கதளவிபாடன், துலுக்கயோகந் தவிர்த்தோன், மனுசூர, மகாசூர, மகாமண்டலாதிபதி, அஸ்வபதி, நரபதி, கெஜபதி, கொடியன்னன், ஆதத்தானன், ராயச்சூரத்தான், ராஜாதிராஜன், ராஜகெம்பீரன், ராஜநாராயணன், சேனவாசிசூரன், தீனவர்த்தோழன், சத்துருக்கள் கண்ட, நவகோடி நாராயணன், பூலோகபுரந்தரன், அசுவகுணநகுலன், விருதுநாபாலன், கோதண்டராமன், கலியுக கர்ணன், தக்ஷண சுல்த்தானன், இந்துராயர் சுல்த்தானன், அஷ்டாங்கபயங்கரன், மத்தகாமினி மானுபரணன், இரணரங்கவேசியர், புயங்கன், உபயகுலதிலாகடகத்தளவிபாடன். ராயர்க்குத் தக்ககண்டன், நாகலோக நரபாலன், பூலோகபுரந்தரன், உத்தரதக்ஷண பூர்வபச்சிமசத்தசமுத்திராதிபதி, செஞ்சிக்கோட்டை கண்டருளிய ஸ்ரீவீரப் பிரதாபன், சோழமண்டல, ஸ்தாபனாசாரியன், பாண்டியமண்டல ஸ்தாபனாசாரியன், ஈழமண்டலமுங் கொண்டருளிய ராஜாதி ராஜ ராஜபரமேஸ்வரன், ஸ்ரீவீரப்பிரதாபன் **ஸ்ரீவீரவேங்கடபதிராயர்** அய்யர், தேவமகாராயர், பிருதிவிராஜ்ஜியம்பண்ணியருளாநின்ற சகாப்த வருஷம் 1512க்கு மேற்செல்லாநின்ற விளம்பி வருஷம் அற்பிசிமீ 5௳ என்று எழுதிவந்தார்கள்

முதல்காண்டம் முற்றிற்று.

உ

கடவுளுக்குவந்தனம்.

தேவகிரியாதவர், கதம்பர், ஹைசாலர், கேலாத்தியர், மைசூரார், சேரர் சோழர் பல்லவர் பாண்டியர்களுடைய சரித்திரங்களடங்கிய

இரண்டாம்காண்டம்.

இதற்குமுன் நிற்கும் முதல்காண்டம், ஏழாவது அத்தியாயத்தில், விஜயநகர ஸமஸ்தானத்தார் இந்த தேசத்திற்கு இடையில் இந்துராஜாங்கத்தை ஸ்தாபித்தும், அதிக பராக்கிரமசாலிகளாகியும்; வடநாடுகளில் படையெடுத்துவந்த மகமதியர் முதலானவர்கள் தென்னாடுகளின்மீது படையெடுத்துவந்து தேசக்குடிகளை வருத்தாதபடி சுமார் (300) முந்நூறு வருஷங்கள் வரையில் பாதுகாத்தும்; இந்து மதத்தையும், அதன் தருமங்களையும் விருத்தியாக்கியும் வந்தபிறகு, காலவிததியாசத்தினால் அந்த ஸமஸ்தானம் மங்கலடையவே; அவர்களுடைய இனத்தார் தெற்கேவந்து சுமார் இருநூறு (200) வருஷங்கள் ஆண்டு, மகமதியர் முதலானவர்களைத் தடுத்தும், இந்த மத தருமங்களை யாதரித்தும் வந்ததாகச் சொல்லி இருக்கிறோமல்லவா ?

அப்படி விஜயநகரத்தாருடைய இனத்தாரும், பிரதிநிதிகளும் தென்னாட்டில்வந்து ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தபோது; தென்னாடுகள் என்ன ஸ்திதியிலிருந்தன? அவைகளை அப்போது ஆண்டுவந்தவர்கள் யாவர்? அவர்களால் குடிகளுக்குண்டான சுகதுக்கங்களின்னவை, என்றுதிவிவரங்களை முன்னாடியாகத் தெரிந்திருத்தல்நலம்; ஆகவே, அவ்விஷயங்களை இந்த இரண்டாம்காண்டத்தில் சற்று விசாரிப்போம். விஜயநகரத்தார் மத்தியநாடுகளிற் பிரபலமாக அரசு செய்துவந்த காலத்தில், தென்னாடுகளிற் தேவகிரியாதவர்கள், கதம்பஜாதியார், ஹொய்சாலபல்லாளர், கேலாதியர் அல்லது பெத்தநூர்ராஜர்கள், மைசூரார், கொங்குநாட்டார் முதலிய சிலகுறுநில மன்னர்களும்; சேரர், சோழர், பல்லவர், பாண்டியர் முதலான பெருநில மன்னர்களும் பலமாகாணங்களைப்பிடித்து பிரபலமாக ஆண்டுவந்தார்கள் அவர்களில் முதலில்குறித்த நான்குஜாதியார்களுடைய ஆளுகைக் காலதேச வர்த்தமானங்கள் கொஞ்சமாகையாலும்; அவர்களுக்கு அடுத்தப்படியிலிருக்கும் மைசூரார், மலையாளத்தார் என்னும் சேரர்கள் தெய்வானுகூலத்தினால் இப்போதும் தமது நாடுகளை ஆண்டுவருகையாலும், அவர்களுடைய சரித்திரங்கள் ஆங்கில தேசபாஷைகளில் அறியலாம்; ஆகவே, அந்த ஆறு அரசஜாதியார்களுடைய ஆதிஉற்பத்தி முதலானவிவரங்களை சங்கிரகமாகத் தெரிவித்துவிட்டு, இப்போது அரசு அற்றுப்போனதினால் அவர்களுடைய ஆதி உற்பத்தி

முதலான விவரங்களை விஸ்தாரமாகக்காட்டும் சரியான சாசனசரித்திரங்களற்ற சோழர் பல்லவர் பாண்டியர்களுடைய சரித்திரங்களை சற்றுவிவரமாக எழுதுகின்றோம்.

முதல் அத்தியாயம்.

தேவகிரி யாதவர்கள்.

சலாரூரியர் ஸைந்தானம் மங்களடைந்தபோது அவர்களுடைய தென்னாடுகள் ஹயிசால பல்லாளர் அல்லது தேவர சமுத்திரயாதவர் வசமாக; தேவகிரி (டவுல்தாபாத்து) யாதவர்கள் வசமாகியது—அவர்களில் சிரேஷ்டமான (1) சிங்கண்ணன், உமையாதேவியை மணம்செய்துகொண்டான் (2) 1187 முதல் 1191ஆம் பில்லம்மா, (3) 1209—1247ஆம் திருபுவனமல்லன், (4) 1246 முதல் 1260ஆம் ஜயத்துங்கன், கிருஷ்ணன், (5) 1271—1309ஆம் வரையில் இராமசந்திரன், 1309 — 1312ஆம் வரையில் சங்கரன், பிறகு பீமன், ஹரிபாலனும் 1260—1271ஆம் மஹாதேவனும், அம்மராயனும்; ஆண்டார்கள்.

அவர்களில் சிங்கண்ணன் விஷ்ணுவர்த்தனனையும், ஜயதுங்கன், திரிலிங்க ராஜனையும் ஜயித்தானும்; 1306ஆம் மாலிக்காபூர் 10,000 குதிரைபட்டாளத் தோடுவந்து டில்லிக்கு கப்பம்கட்டாதிருந்த இராமசந்திரனையும், 1310ஆம் சங்கரனையும் ஜயித்தும், 1318ஆம் முபர்கான் டில்லியை ஆளும்போது ஹரிபாலராஜனைப்பிடித்து கொன்றுவிட்டதனால், ராஜ்ஜியம் நாதனற்று நாசமாகி விட்டது—(Vide Pages 71-78 Kanaris Dynasties by Mr. Fleet)

கதம்ப ஜாதியார்கள்.

அவர்கள் கி-பி 538ஆம் முதல் 1246ஆம் வரையில் பெல்காமில், பால்சிகா அல்லது ஹால்சிகா நாட்டிலும், வடகனராவைச்சார்ந்த பானவாசி, கோவா பட்டணத்திலிருந்து ஆண்ட—ஜயினர்களாம்.

அவர்கள் சந்ததிவிவரமாவன.

காகுஸ்தவர்மா, சந்திரவர்மா, மிருகேசவர்மா, இரவிவர்மா, பானுவர்மா, சிவரதன், அரிவர்மா, பாவாசிஜடந்தி, மதுகேசவர்மா, சந்திரவர்மா, புரந்தரவர்மா, மயூரவர்மா, க்ஷேத்திரவர்மா, கனகவதி, மாயூரவர்மா, கிருஷ்ணவர்மா, நாகவர்மா, விஷ்ணுவர்மா, மிருகவர்மா, சத்தியவர்மா, விஜயவர்மா, ஜயவர்மா, நாகவர்மா, நாகவர்மா, கீர்த்திவர்மா, ஆதித்யவர்மா, சத்தியவர்மா, ஜயசிம்ஹன் ஜயன், தைலப்பா, 1058ஆம் பாண்டியின்மகள் ஸ்ரீதேவியைவிவாஹம்செய்த சாந்திவர்மா, ஜோகிதேவன். விக்கிரமன் 1065—1077 கீர்த்திவர்மா, 1099 முதல் 1108ஆம் வரையில் தலீபனும், 1131ஆம் மயூரராமனும், 1132 முதல் 1138ஆம் வரையில் பல்லிகர்ஜுனனும், கீர்த்திவர்மனும், சோவ வில் காமதேவனும், குதுகலனும், 1007ஆம் சாஸ்திரதேவனும், 1052ஆம் ஜய சிங்கும், விஜயாதிதபனும், 1125 ஜெயசிங்கும், 1147—1175 சிவசித்தனும், 1147—1171 விஷ்ணுசித்தனும் 1175—1118 ஜயசிங்கும், மாணிக்கதேவி மனைவி திரிபுவனமல்லனும், 1246—1250 சந்திரதேவனுமாக ஆண்டு, மேற்கு சாலுக்கியருக்கு கப்பங்கட்டிவந்தார்கள்.(Vide Pages 7-10-48 Mr. Fleet's the Dynasties of Kanaris District).

ஹாயிசால பல்லாளர்.

அவர்கள் 11ஆம் நூற்றாண்டின் முடிவுமுதல் 14ஆம் நூற்றாண்டின் கடைசிவரையில் மைசூருக்கு அடுத்த நாடுகளில் ஆண்ட யாதவர்கள்—அவர்கள் குடும்பப்பெயர் சாலர். அவர்களுடைய முதல் ராஜன் வினியாதித்தியன். அவன் கி-பி 1047—1076ஆம் ஆண்டு, கேலிகலதேவியை விவாஹம்செய்ததில், எரியங்கன் பிறந்து எலிச்சிதேவியை மணந்தான்—அவர்களுக்கு மூன்று குமாரர்கள் பிறக்க, மூத்தவனாகிய பல்லாளன்; 1103ஆம் பத்மலாதேவி, சாலாதேவியை விவாகம்செய்துகொண்டான். இரண்டாவது குமாரனாகிய விஷ்ணுவர்த்தனன் 1117 முதல் 1137ஆம் வரையில் ஆண்டு, சாந்தலாதேவியை மணந்தான்—தலைக்காடு அவனுடைய பிரதானநகரம். ஸ்ரீராமானுஜாசாரியாரால், விஷ்ணுமதத்தைத்தழுவலானான் — மூன்றாவது குமாரனாகிய உதயாதித்தியனுக்கு விஜயநரசிம்மன் பிறந்து, எக்கலாதேவியை மணந்து 1142—1191ஆம் வரையில் ஆண்டான். அவனுக்கு பல்லாளன் என்பவன் பிறந்து 1192 முதல் 1211ஆம் வரையில் ஆண்டு,சோழபாண்டியர்களோடு சண்டைசெய்துவந்தான். அவனுக்கு வீரநரசிம்மனும் (1223ஆம்) அவனுக்கு சோமேசுவரனும் பிறந்து 1252ஆம் ஆண்டு சோழநாட்டில் விக்கிரமபுரத்தை ஸ்தாபித்தான். அவனுக்கு நரசிம்மன்பிறந்து, 1254 முதல் 1283ஆம் வரையில் ஆண்டுவர, அவனுக்கு பல்லாளன் (3) பிறந்து 1310ஆம் மகம்மதியரால் பிடிப்பட்டிருந்த நாடுகளை மறுபடியும் பிடித்தாலும், 1326—1327ஆம் அலாவுதின் பெரும்படையோடு வந்துதாக்கினான்—1347ஆம் மகம்மதியர் மறுபடியும்வந்துதாக்க பல்லாளராஜியம்பாழ்த்துவிட்டது.

கேலாதி அல்லது பெத்தநூர்ராஜர்கள்.

அவர்கள் 1560ஆம் வரையில் மைசூரிலிருந்து ஆண்டவர்கள். 1560ம் விஜயநகர சதாசிவராயலு பசுவகவுடருடைய ஜேஷ்டகுமாரனாகிய சதாசிவன் என்பவனுக்கு தனதுபெயரால், இக்கரை என்னும் பெத்தநூரைத்தர, அதை சுயமுயற்சியினால் விருத்தியாக்கினான் — அவன் சந்ததியில் பிறந்தவர்களான.

பசுவகவுடருக்கு 1560—1567ஆம் சதாசிவநாயகனும், 1576—1585ம் அவன்தம்பி பத்திரப்பநாயககனும் ஆண்டார்கள். சதாசிவநாயகனுக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள் முதல் மனைவிக்குதொட்ட சிககண்ணநாயக்கன்பிறந்து 1585—1596ஆம் வரையில் ஆண்டான். அவனுடைய மகனாகிய வெங்கடப்ப நாயக்கன் 1604 முதல் 1626ம் வரையிலும் ஆண்டுவர, 1637ம் பெத்தபத்திரப்ப நாயக்கனும், 1649ம் சின்னப் பத்திரப்பநாயக்கனும் முறையே ஆண்டு வந்தார்கள்.

இரண்டாவது மனைவிக்குப்பிறந்த சிக்க (சின்ன) கண்ணநாயககன் 1596 முதல் 1603ம் ஆண்டுவந்தபிறகு, அவன்மக்களில் 1603 முதல் 1604ம் வரையில் சித்தப்பநாயக்கனும், 1649—1671ம் வரையில் சிவப்பநாயக்கனும், 1671 முதல் 1681ம் வரையில் பத்திரப்ப நாயக்கனும், 1681—1686ம் வரையில் சோமசேகர நாயக்கனும், அவன்மனைவி தொட்ட சின்னம்மாஞ்சியும் 1686-1698ம் வரையிலும் முறையே ஆண்டுவந்து புத்திரசந்தானமற்றுப்போக, 1698 முதல் 1714ம்

வரையில் ருத்ரபத்திரனுகிய பசவநாயக்கன் ஆண்டான்—இவர பெத்தநூர் செட்டிஜாதியைச் சார்ந்தவன்.

பிறகு 1714 முதல் 1740 வரையில் சோமசேகர நாயக்கனும், வீரபத்திர னும் 1740—1755 வரையில் பத்திபசவப்ப நாயக்கனும், 1755—1757 வரையில் சின்னபசவண நாயக்கனும், 1757 முதல் 1763 வரையில் சோம சேகர நாயக்கனும் ஆண்டனர்; ஹைதரலி இந்த ராஜ்யத்தைக் கைக்கொண்டான்—(Vide Page 259 Vol. II Buchanan's Mysore—P. 1—35—37 Wilks History of Mysore—Pages 355-356 Vol. II—Rice's Mysore & Coorg.)

இவ்வண்ணமாக இதுவரையில் பெயர்பெற்ற இராஜதானிகளைச் சார்ந்த சரித்திரங்களில் இருக்கும் இராஜாக்கட்டளையும், ஹொய்சள வம்சத்தாரைத் தழுவிய [illegible] ஆண்ட சித்ரதுர்க்கரையும், சாளுக்ய ராஜ்யங்களையும் [illegible] யில் ஆண்ட பிருதுராஜா முதலானவர்களும் இந்த மன்னர்களைவிடுத்து சிறு ராஜ்யங்களை ஆண்டுவந்தமையால்; அவர்களுடைய சரித்திரங்களை விட்டொழித்து; இப்போது பிரபலமாக இருக்கும் மைசூர் ஸமஸ்தானத்தைப் பற்றி எழுதுவோம்.

இரண்டாம் அத்தியாயம்.

மைசூர் ஸமஸ்தானம்.

மைசூர் என்பது மஹிஷாசுரனுடைய நகரமாம்; இத்தேவதை [illegible] தலையுடைய [illegible] அசுரவர்த்த, அந்தத்தேசத்தின் [illegible] வருகையில்; அவ்விடத்தை சகிக்க முடியாத [illegible] வேண்டிக்கொண்டதற்கு இணங்கி பார்வதி தேவியானவள், "சாமுண்டி" அவதாரமெடுத்துவந்து, அந்த இராக்ஷஸனைக் கொன்று அவனுடைய ஸ்தலத்தைக் கைப்பற்றினாள்; அப்பட்டண த்திற்கு அந்த இராக்ஷஸன் பெயராகிய மஹிஷாசுரன் பட்டணம் என்பது மைசூர் என்று மருவி வழங்கி வருகிறார்கள்.—இப்போது மைசூர் இருக்குமிடம், பூர்வத்தில் இராமாயணத்திற்கண்ட சரித்திரனுடைய [illegible] —கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் [illegible] பிறகு ஒன்பதாம் நூற்றாண்டின் [illegible] கட்டியதாகும்.

மத்தியகால ஸ்திதி.

முதலாவதாக விஜயநகர சம்ஸ்தானத்தில் 'யாதவகுல க்ஷத்திரிய' வம்சத்தினர் 'விஜயன், கிருஷ்ணன்' என்ற இரண்டு சகோதரர்கள் துவா ரகையிலிருந்து சம்பாதிக்கக் கருதி, தென்தேசத்தை நாடிவந்து மைசூருக்கு சமீபத்திலுள்ள ஹடனா (Hadona) கோட்டைக்கருகில் ஒரு குளக்கரையில் தங்கினர்; அந்த நகரத்தின் அரசனுக்கு ஒரு பெண்ணுண்டு; அவளை 'குசகுசு' என்ற பேச்சைக் [illegible] கேட்டனர்; அதனருகிலும் 33-கிராமாதிகாரியாகிய ஒரு உடையாருடைய [illegible] அந்த கிராமத்திலுள்ள ஒரு [illegible] பெண்கொண்டு அவளைத் தனக்கு விவாகஞ்செய்துதர, அவளுக்கு [illegible] கோட்டையை [illegible] கொண்டுவேண்டுமென்றும், அப்படிக்கொடாவிட்டால், உடனே சண்டைக்கு வரவேண்டுமென்றும், [illegible] அந்த உடையாரைக் கொன்று, தமக்கு [illegible] அந்த [illegible] தந்த விஜயகிருஷ்ணா

என்ற சகோதிரர்கள் பரிதவித்து, அவர்கள் அந்த உடையாருக்குத்துணை நிற்பதாக அநாகுந்தண்ணீருக்குவந்த பெண்டுகளிடம் சங்கதிசொல்லி அனுப்ப; அவர்களும் ஓடிப்போய் உடையாருக்குச்சொல்ல, அவரும் சம்மதித்தலந்து, அந்த விஜய கிருஷ்ணர் என்பவர்களை மரியாதையுடன் அழைத்துப்போய் அதோனியில் சேர்த்தும்; அவர்களுக்கு வேண்டிய ஆள்களையும், ஆயுதங்களையும் அந்தரங்கமாகச் சேகரித்துவைத்துக்கொண்டிருக்க, "கார்குள்ளியன்னன்" மணக்கோலமாகவந்து, உடையார்மகளை பாணிக்கிரஹணஞ்செய்யும் தருவாயில்; அதோனுவில் மறைந்திருந்த விஜய கிருஷ்ணர்கள் ஓடிவந்து அம்மன்னனைத் தாக்கி சின்னபின்னமாகக் கிழித்துக்கொன்றார்கள். இத்தியாதி புத்தி பராக்கிரமத்தைக்கண்ட அந்த உடையார் குமாரத்தி, தமதகுலத்தின் பெருமையையும், குடும்பத்தின் க்ஷேமத்தையும் கருதிய, அந்த விஜயனை விவாஹஞ் செய்துகொள்வதாகச் சொல்ல; அவள்தந்தையும் அவள் இஷ்டப்படியே செய்வித்து அவனுக்கு அதோனு, கார்கூலி கோட்டைகளை ஸ்ரீதனமாகத் தந்தான்.

உடனே அந்த விஜயன் தனது பூர்வமதமாகிய வைணவமதத்தைவிட்டு, தன் மனைவியின் லிங்காயத்து மதத்தைத்தழுவி, சிவாசாரத்தை அநுஷ்டித்து பிரபலமாகியும்; பிறகு மைசூர்ஸம்ஸ்தானாதிபதியாகி மைசூர் உடையார் குடும்பத்தை ஸ்தாபித்தான்.

அந்த விஜய உடையார் குடும்பத்தில் ஆண்ட அரசர்களாவன:

விஜய உடையார் கி-பி 1399 முதல் 1423 வரையிலும், ஹரிபெட்ட சாமராஜா கி-பி 1422—1458, திம்மராஜா கி-பி 1458—1477, ஆறுவிரல் சாமராஜா கி-பி 1478—1513, பெட்டசாமராஜா கி-பி 1513-1552, அவருடைய 3 குமாரர்கள் நாட்டைப்பங்கிட்டுக் கொண்டார்கள்.—அப்பணதிம்மராஜா, கி-பி 1552-1571, கிருஷ்ணராஜா, அவருக்குச்சந்ததியில்லை—ஹரிசாமராஜா, கி-பி 1571-1576, மூப்பனதேவரு, கி-பி 1576-1625, தொட்டதேவரு, கி-பி 1625-1672, சிக்கதேவரு, கி-பி 1672—1704, காத்திரவராஜா, கி-பி 1704—1714, தொட்ட கிருஷ்ணராஜா, கி-பி 1714-1731, கெம்பதேவராஜா, கி-பி 1659-1672, பெட்டல உடையார், கி-பி 1576-1578, இராஜ உடையார், கி-பி 1578-1617, காந்திராஜ நரசராஜா, கி-பி 1638-1659, நரசிங்கராஜா, கி-பி 1659-1617, சாமராஜா, கி-பி 1617—1637, இம்மிடிராஜா, கி-பி 1637—1638, சாமராஜா, கி-பி 1731-1733, சிக்க கிருஷ்ணராஜா, கி-பி 1734-1749, ஸ்ரீராஜா கிருஷ்ணராஜா, கி-பி 1799-1868, ஸ்ரீசாமராஜா, கி-பி 1881-1894, ஸ்ரீவாணிவிலாச மஹாராணியார், கி-பி 1894-1903, ஸ்ரீகிருஷ்ணராஜா 1903 ஜூலை 8உ பட்டத்தைப்பெற்றார்.

அப்படி ஆண்ட அரசர்களில் "ஹரிபெட்ட சாமராஜர்—" தமது மூன்று குமாரர்களில், "அப்பாதிம்மராஜருக்கு" ஹெம்பல ஹால்லியையும், கிருஷ்ணராஜருக்கு, கெம்பல நாட்டையும், "சாமராஜருக்கு" பூரகிரி என்னும் மைசூர் நாட்டையும் பங்கிட்டுகொடுத்தார். அந்தப்படி ஸம்ஸ்தானத்தை வகுத்துக் கொண்ட (1) அப்பாதிம்மராஜா, (2) கிருஷ்ணராஜா (3) சாமராஜா என்ற மூன்று குடும்பத்தைச்சார்ந்த சந்ததிகளே நாளது வரையில் மைசூருக்கு மன்னர்களாகள். அப்போது பூரகிரி என்னும் மைசூரில் ஒரு புராதனக்கோட்டை இருந்து பாழ்த்துப்போனபடியால், 1524-வருஷம் இப்போதிருக்கும் கோட்டையைக்கட்டினார்கள்.

திம்மராஜா—மஹா சிவபக்தி யுள்ளவரானபடியால், அடிக்கடி நஞ்சன் குடிக்குப்போய் வரும்போது, உம்மத்தூர் குடிகளுடன் சச்சரவுசெய்யநேரிட்டு, அதன் தலைவனுக்கு உயுத்தசெலவு கப்பங்கட்டிவரும்படி செய்துக்கொண்டார்.

ஹரிசாமராஜா—1571-வருஷம் சிங்காசனமேறி ஆண்டார். அவர் விஜயநகர ஸமஸ்தானத்தைச்சார்ந்த ஸ்ரீரங்கபட்டணத்திலிருந்த பிரதிநிதிக்கு சரியாக கப்பங்கட்டாமையால், அவரைப்பிடிக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கச்செ, அவர் தந்திரமாக தப்பிதொளிந்து 1576-வருஷம் இறந்தார்.

பெட்ட உடையார்—அவர் ஒருமுரட்டு ராஜா. அவர் விஜயநகரத்துக்கு கப்பங்கட்ட பணமில்லாமையால், தப்பெண்டுகளின சிறவடியைய வசூல்செய்து கப்பங்கட்டினர். அவரது சகோதிரர் இராஜ உடையார் அடிக்கடி அவரோடு சண்டை செய்துவரச்செ; குமாரநரசராஜு ஒரு துஷ்டனைக்கொண்டு பெட்ட உடையார் கண்களைப்பிடுங்கிவிடும்படி செய்ததினாலுண்டான வியாகூலத்தினால் இறந்தார். அவருடைய 6 குமாரர்களும், அவருக்கு முன்னுடியாகவே இறந்துவிட்டபடியால், நரசராஜன் என்ற குமாரனுக்கு ஜனித்த சாமராஜா என்னும் பேரன் பட்டத்தைப்பெற்றான்.

அந்த சாமராஜா—1617-ம் பட்டத்துக்குவந்து, 20 [illegible] ஆண்டார். அவர் காலத்தில் ஜெகதேவன் கோட்டைக்கு முற்றுகைபோட்டு சமஸ்தான விஸ்தீர்ணத்தை அதிகமாக்கி, 1637-ம் வருஷம் இறந்துவிட்டார்.

இம்மிடிராஜா—1637-ம் வருஷம் சிங்காசனமேறி ஒன்றரைவருஷத்துக்குள் அவர்மந்திரி விக்கிரமராஜாவினால் பாஷாணமிட்டுக் கொல்லப்பட்டார்.

காந்திரேவ நரசராஜா—அவர் பெரியகுடும்பத்தைச்சார்ந்த பெட்ட உடையாருடைய குமாரர், மஹாவீரதீரர். ரணதுல்லாகானசாயபு ஸ்ரீரங்கபட்டணத்தைத்தாக்கியபோது தடுத்து ஜயங்கொண்டும், கவுடர்களுடைய அக்கிரமங்களைக் கண்டித்தும், ஸ்ரீரங்கபட்டணக்கோட்டையை ரிபேர்செய்வித்தும், புதிதாகத் தங்கசாலையை ஸ்தாபித்தும், பிராமண தேவாலயங்களுக்கு மானியங்களை விட்டும், தசரா உற்சவத்தை முதல் முதல் மைசூரில் ஆரம்பித்துச் சிறப்பாக நடத்திவந்தும், 1655ம் வருஷம் சந்ததியற்று இறந்தார்.

தொட்டதேவராஜா—அவர் சாமராஜாவின் பேரரும், மூப்பண்ணதேவராஜருடைய குமாரருமாம், அவர்காலத்தில் பெத்தநூர்தலைவர் "சிவப்ப நாயக்கர்" படையெடுத்து வந்தார் அவரிடம் ஸ்ரீரங்கராயலு சேர்ந்து படையெடுத்து வந்து ஜயிக்கவில்லை. பிறகு மதுரை 'சொக்கநாத நாயுடு' படையெடுத்து வந்ததில்; தாராபுரமும், ஈரோடும், மைசூராருக்குச் சேர்ந்துவிட்டன. அந்ததொட்ட தேவர் சாமுண்டி மலையின்மேல் ஒரு 'பசுவ விக்கிரகத்தை' ஸ்தாபித்தும்; சீவில் நியாயங்களைச் சீர்படுத்தியும், அநேக பிராமண தருமங்களைச்செய்தும் 1672-ல் இறந்தார்.

'சிக்கதேவராஜா'—தொட்டதேவராஜாவின் அண்ணன் குமாரராகிய அவர் 1672-ல் சிங்காசனமேறி, விசாலாக்ஷி பண்டிதர் அல்லது எலந்தூர் பண்டிதரென்னும் ஜயினமத[illegible]விபரை மந்திரியாக நியமித்தும், முதல் முதல் தபாலிலாகவை ஸ்தாபித்தார். அந்த ஜயினமந்திரி அரண்மனையிலிருந்து வீட்டுக்குத்திரும்பிப்போகும்போது ஓரி சிவாசாரிபதன்தர் குத்திக்கொல்ல, அம்மந்திரி இறந்தார். அப்படி இறந்தமந்திரியின் கருத்தை யனுசரித்து திருமலையங்கார் என்னும்

வைணவ பிராமணரை மந்திரியாகக்கொண்டு, 1687ம் வருஷம் தஞ்சை திக்கோஜி இடம் பெங்களூர்கோட்டையை 3 லக்ஷம் ரூபாய்க்குவாங்க யோசிக்கையில்; டில்லி அரங்கசீப்பின் பிரதிநிதி காசீம்கானும், மராட்டியதலைவனை ஹிரஜிராஜாவும் படையெடுத்துவந்து தாக்க; அதில் காசீம்கான் ஜயமடைய; அவரிடமே அந்தக் கோட்டையை வாங்கினர். பிறகு மதுரை சமஸ்தானத்தின்மேல் படையையனுப்ப, மராட்டியர்வந்து மைசூரைத்தாக்கினர்கள். அவர்காலத்தில் கலகஞ்செய்துக்கொண்டிருந்த சில்லரை உடையார்களை தமது சமஸ்தானத்தில் கௌரவவேலையைச் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டதில்; அவர்களைநம்பி இருந்த அநேக ஜங்கமர்கள் கலகம்செய்ய; சிக்கதேவராஜா அந்த ஜங்கமக் குமாரர்களை நஞ்சன்குடிக்கு தருவித்து, அவர்களில் 400 பெயர்களைக்கொன்று ஓரேகுழியில் போட்டும்; அவர்களுடைய 700 மடங்களை இடிப்பித்தும், ஜங்கமர்களை எங்கு கண்டபோதிலும் கொலைசெய்துவிடும்படி கட்டளையிட்டும், கலகத்தையடக்கியும், 1704-வருஷம டிசம்பர்மாதம் 22-ந்தேதி முதல் 31-வருஷம் 21 நாள்கள் ஆண்டு இறந்தார்.

“மூக்கரசு”—சிக்கதேவராஜருடைய செவிடும், ஊமையுமான குமாரர், பிறகு சிங்காசனமேறினர். அவர்காலத்தில் கர்னாடக நபாப் ‘சாதத் அலிகான்’ பெங்களூர், ஸ்ரீரங்கபட்டணத்துக்கு முற்றுகைபோட, ராஜா 1714ல் இறந்துவிட்டார்.

தொட்ட கிருஷ்ணராஜா—மூக்கரசுவின் குமாரராகிய அந்ததொட்ட கிருஷ்ணர் மஹா சிறுபிள்ளைப்பிரியர். அவர்காலத்தில் மிருகங்களுக்கும், ஊர்வன ஜந்துக்களுக்கும் லக்ஷம்ரூபாய் செலவிட்டு வைத்தியஞ்செய்யச்செய்தார். அவர் காலத்தில் ஆர்காட்டு சாதத் அல்லிகான், குருப்ப, கர்னூல் மகம்மதியர்களுடன் படையெடுத்துவந்து தாக்க, அவர்களுக்கு ஒருகோடிரூபாய் கொடுத்து ராஜி செய்ய; அதில் 40 லக்ஷம் ரூபாய் சாதத் அல்லிகானுக்கு வந்தது. மற்றவர்கள் 12 லக்ஷம் ரூபாயாக பங்கிட்டுக்கொண்டார்கள். அந்த தொட்ட கிருஷ்ணர் 19 வருஷம் ஆண்டு, 1731 வருஷம் இறந்தார்.

சாமராஜா—அவர்காலத்தில் சமஸ்தான மந்திரி பிரதானிகள் கூடி அவர்களிஷ்டப்படி அவரை ஆட்ட; அவர் இடங்கொடாதிருக்க; அவரையும் அவர் மனைவியையும் பிடித்து கோபாலதுருகத்தில் சிறையில் வைத்துச்சாகும்படி செய்துவிட்டார்கள்.

சிக்ககிருஷ்ணராஜா—கி-பி 1734ம் பட்டத்துக்குவர, பழைய மந்திரிகளே அதிகாரிகளாகவும், அவர்களில் நஞ்சிராஜ சிவில் விவஹாரங்களை நடத்தி 80 லக்ஷம் ரூபாய் சம்பாதித்தும்; அதில் இரண்டுலக்ஷம் ரூபாயை தமது [illegible] மனைவிக்குக்கொடுத்துவிட்டு, [illegible]—அந்தவேலைக்கு குரச்சூரி நஞ்சராஜை நியமிக்க; அந்த குருராஜனும் சமஸ்தானத்தில் லஞ்சம் பரிதானம் முதலான கொள்ளைகளுக்கு இடங்கொடுத்துக்கெடுக்க, 1737ல் டாஸ்த் அலிகான் தமது தம்பிமார்களாகிய காசீம்கான், மோரதகான் என்பவர்கள் மூலியமாக ஒருபெரிய சேனையை அனுப்ப, கீங்கி ஆடத்தில் இராஜா அவர்களை முறியடித்து ஓட்டி ஸ்ரீரங்கபட்டணத்திற்கு ஜயவீரராகத்திரும்பினர். 1746ம் நஞ்சராஜா தாராபுரம், கோயமுத்தூர் பாளையக்காரர்களுக்கு விரோதமாக சேனையையனுப்ப, தக்காண சுபேதார நிஜாம் உல்மூல்கு என்பவர் நசூர்ஜங்கை ஒருபடையோடு அனுப்ப;

இராஜாபயந்து சருந்த கப்பங்கட்டி இராஜிசெய்துக்கொண்டார். அந்த இராஜா, நஞ்சராஜா குமாரத்தியைவிவாஹஞ்செய்துகொண்டார். அதுதான் வைணவரும் சிவாசாரிகளுஞ்சேர்ந்தமுதல் விவாஹம். 1749-ம் தேவனஹல்லி பாளையக்காரன் ராஜாவுக்குச்சரியான கப்பங்கட்டாமையால், அவன்மீது படையெடுக்க, அப்போது அச்சேனைக்குக் குதிரைத்தலைவனாக ஐதராலிகான் அமர்ந்தார்.

அப்படி மேல ஸ்திதியிலிருந்த ஐதராலியின் சந்ததிகளின் விவரமாவது.

மைசூரில் மகமது இராஜியஸ்தாபனம்.

பஞ்சாபுநாட்டில் மஹா மத வைராக்கியமுள்ள மகமது பிஹிலோலி என்ற ஓர் மகமதியர் இருந்தார். அவர் மகமது அலி, மகமதுவாலி என்றமகமது இரண்டு குமாரர்களுடன் ஐதிராபாத்துக்கு 110-மைல் தூரத்திலிருக்கும், கூல்பர்கா டிஸ்டிரிக்டைச்சார்ந்த அலந்து என்னும் இடம்வந்து தங்கி, சீராநாட்டில் வேலை சம்பாதிக்கும்படி தங்குமாரர்களை யனுப்ப; அங்கு மகமத் அலியின் குமாரர் பட்டிமகம்மது பிறந்தார். பிறகு அந்த இரண்டு சகோதரர்களும் கோலாருக்கு அருகில்வர, அங்கு மகமது அலி இறந்துபோனார். அவருடைய சகோதிரர் பட்டிமகமதையும், அவர் மனைவியையும் துரத்திவிட; அவ்விடத்தில் வந்தவந்த, நாயடு, படடிமகமதுக்கு ஒருசேவகன்வேலையைக்கொடுத்து ஆதரிக்க, அப்பட்டி மகமதுவின் மூன்றுமனைவிகளில் 3-வது மனைவி வயிற்றில் ஐதராலியும், சாப்ஜாவும் பூடி கொட்டையில் பிறந்தார்கள். அவ்வாலிபர்கள் முறையே 9; 10 வருஷ வயது அடைந்தபோது, தந்தையையும் இழந்தும் திரவியத்தையும்; இழந்துவிட நேரிட்டபடியால்; தாய்மாமனாகிய இப்ராஹீம் சாயபு ஒரு இந்து பிரபுவுக்கு சிபார்சுசெய்து அவர்களை வேலையிலமர்த்தினார்; ஐதராலி முதலில் குதிரை வாலண்டியராக நியமிக்கப்பட்டார். அவர் 27-வது வயது வரையில் எழுதவாசிக்கத் தெரியாதவராக இருந்தும்; புத்திசாலியும், சுத்தவீரனும், தந்திரவாதியுமாக இருந்தபடியால், தினேதினே அந்தஸ்தில் பலுகிப் பெருகி கடைசியாக 1761 வருஷம் ஜூன்மாதம், மைசூர் சமஸ்தானாதிபதியாகி விட்டதன்றியில்; வடக்கே பீஜப்பூர், பொம்பாய் வரையிலும்; தெற்கே கன்னியாகுமாரிவரையிலும், அதிக பயங்கரத்தோடு பிரபலமாக ஆண்டதோடு; ஆங்கிலேயரும் பயப்படும்படியாகவும்; பிராஞ்சுக்காரரும் அவருடையதயவை நாடும்படியாகவும் ஆண்டு, 1782-ம் வருஷம் டிசம்பர்மாதம் 17-ந் தேதி இராஜபிளவையால் இறந்தார். அப்படி ஐதராலி இறந்த சங்கதியைச் சிலநாள்கள் வரையில் மறைத்து வைத்திருந்தாலும்; மகமதுஅமீர் என்னும் குதிரைவீரனால் இறந்த சங்கதிவெளிவந்துவிட்டது,

அப்போது மேற்குக்கரையில் இங்கிலீஷ்காரரோடு எதிர்த்துக்கொண்டிருந்த அவரது குமாரரான திப்பு சுல்தானுக்குச் சங்கதி தெரியவே; சையத்மகமதை ஸ்ரீரங்கபட்டணத்துக்கு அரசனாக்கிவிட்டும், தாம்கோலாரில் பிதுர்க்கர்மங்களை முடித்துக்கொண்டு; 1783ம் வருஷம் ஜன்மாதம் 2உ வேலூருக்கும் ஆரணிக்கும் மத்தியிலிருந்த சமதமுக்கிய சேனையைச் சார்ந்தார். அப்போது அவர் தகப்பனார் சம்பாதித்துவைத்த ரொக்கம் மூன்றுகோடி ரூபாய்களையும், அதிக விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும், 88,000, சேனாவீரர்களையும் அவருடைய திவான் பூர்ணையர் கொண்டுவந்து ஒப்பிவைக்க, அவைகளைப்

பெற்றுத் தமது சேனைகளின் பழயபாக்கியை எல்லாம்கொடுத்துவிட்டோம்; தமது தந்தையைப்பார்க்கிலும் அதிகபயங்கர பிரபுவாக ஆண்டு 1799ம் வருஷம் மேமாதம் 4ந்தேதி இங்கிலேயரால் ஸ்ரீரங்கபட்டணத்தில் கொல்லப்பட்டார். அந்தத் திப்புவின் அதிகாரம் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே பீஜப்பூர் ஐதிராபாத்துவரையில் பிரபலமாகிய சங்கதிகள் இந்துஸ்தானி, இங்கிலீஷ் சரித்திரங்களில் விஸ்தாரமாகச்சொல்லி இருப்பதால்; இவ்விடத்தில் விஸ்தரித்து எழுதாமல்விட்டோம்.

அந்த திப்புசுல்தான் இறந்தபிறகு இங்கிலீஷ்காரர் மைசூர் சமஸ்தானத்தின் வாரிசுதாரராகிய சுமார் 4-வயதுள்ள இராஜா கிருஷ்ணராஜா உடையாரைத் தேடிப்பிடித்து; ஜூன்மாசம் 30உ ஆம்தேதிக்குள் சிக்கதேவராய உடையார் வீற்றிருந்த சிம்மாசனத்திலேற்றினார்கள். மஹா மதியூகியாகிய பழயமந்திரியாகிய பூரணையரையே அவருக்குத் திவானாக இருக்கும்படி நியமித்தார்கள்.

அப்படி சிங்காசனமேறிய கிருஷ்ணராஜ உடையாரும் ஆண்டுவருகையில், நாட்டில் கலகங்களுண்டாகியும், 75-லக்ஷம் ரூபாய் கடன்களினால் அரசருக்கு ஆளும் திறமையற்றிருப்பதையும், கவர்னர் ஜனரலவர்கள் கண்டு, 1831-ம்வருஷம் அக்டோபர்மாதம் 3-ந்தேதி இராஜியபரிபாலனத்தை ஆங்கிலஸ்தானாதிபதியிடம் கொடுத்துவிடும்படி கேட்க; அவரும் கொடுத்துவிட, அவர்பட்டகடனாகிய 75 லக்ஷம் ரூபாயை தீர்த்தும், அவருக்கு மாதம் 1-க்கு 70,000 ரூபாய்களும், வருஷம் 1-க்கு கிஸ்தி வசூலில் 5-ல் ஒரு பங்கும், லக்ஷம் நக்ஷத்திர வராகனும் பெற்றுக்கொண்டுவந்து, 1868 வருஷம் மார்ச்சுமீ 27-ந்தேதி தமது 75 வயதில் சந்ததியற்று இறந்துபோக; 1881-ஆம் சுமார் 4-வயதுள்ள சுவீகாரபுத்திரராகிய ஸ்ரீ சாமராஜா அவர்கள் பட்டமடைந்தாலும், 1881 ஆம் சரியானவயது வந்தமையால், அந்த மஹாராஜா, திவான் இரங்காசார்லு, திவான் சேஷாத்திரி அய்யரவர்கள் உதவியினால் ஸமஸ்தானத்தைச் சீர்திருத்தபெற்ற சமஸ்தானமாக்கி சீரும்சிறப்பும்பெற்று 13வருஷ ஆண்டுவருகையில்; அவர், 1894-வருஷம் டிசம்பர்மீ 28-தேதி கல்கத்தாவுக்குப்போன விடத்தில், திடீரென்று காலவியாதியால் இறந்துவிட, அவரது உத்தமபத்னியார் ஸமஸ்தானத்தை ஆறு வருஷம் ஆண்டு வந்தார்.

1894வருஷம் இறந்துபோன ஸ்ரீசாமராஜேந்திர உடையார் பஹதூரவர்களுக்கும், அவர் சுபத்னி ஸ்ரீவாணிவிலாச மஹாராணியவர்களுக்கும் இரண்டு இராஜ குமாரர்களும், 3 இராஜகுமாரத்திகளும் பிறந்து சமஸ்தானத்துக்கு பாத்தியஸ்தரான ஜேஷ்ட புத்திரர், 10 வயதுடைய ஸ்ரீகிருஷ்ணராஜ உடையாருக்கு சந்ததி விருத்தியினிமித்தம், கடதேசத்தில் ஒரு இராஜகுமாரியை இராஜகுமாரருக்கு விவாஹம் செய்வித்தும், தக்க கல்விகேள்விகளை, மிஸ்டர் பிரேசர் என்னும் உபாத்தியாயரைகொண்டு போதிப்பித்தும் 1902வருஷம் ஜூலைமீ 8 உ சிரேஷ்டதேசாதிபதி கர்ஜன் பிரபு அவர்களால் பட்டாபிஷேகஞ்செய்வித்தார்.

1894 வருஷம் அந்த மைசூர் ஸமஸ்தானத்தின் சுற்றளவு 27,406 சதுரமைல். அதில் 1881வருஷம் கானிஷ்வாரி கணக்கின்படி 49,14,110 குடிகளிருந்தார்கள். 1,02,00,000 ரூபாய் வருஷ வருஷமானம். இப்போது நாட்டில் கைத்தொழில் கல்வி விருத்தியடைந்துவருகிறது. மஹா மதியூகியாகிய பூரணையரவர்களுடைய

பேராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்போது திவானாகி இருப்பதால், இனி நாட்டில் செல்வமும் சீரும் சிறந்தோங்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தியாவிலுள்ள மற்ற சுதேசமன்னருடைய ஆளுகையிலிருக்கும் நாடுகளெல்லாவற்றிலும் இந்த மைசூரில் பெண்கள் கல்வி அதிகபிரபலமாகி வருகின்றது. 1881ஆம் 28 பாலிகைகளோடு ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையில் இப்போது 400 பிள்ளைகளும், அவர்களிற் சிலர் பிஏ பிருதுபெற்றும் வீணைமுதலான சங்கீதவித்தையைக்கற்றும் பிரகாசிக்கிறார்கள்.

சேரநாடு அல்லது மலையாள ஸமஸ்தானம்.

மலையாளம் அல்லது சேரநாட்டைக் கொங்குநாடென்று சிலர் அபிப்பிராயப்பட்டாலும்; பல ஸம்ஸ்கிருத தமிழ்நூல்களினாலும், 1838 வருஷம் கல்கத்தாவில் பிரசுரமாகிய ஜர்னல் ஆப் ஆசியாடிக் ரிசொஸைஸ் என்னும் புத்தகம் 182 வது பக்கத்தில் M.S. புத்தகம் நெம்பர் 3.லும், கவுண்டர் மார்க்கு 896 நெம்பருடன் டாக்டர் லெயிடன் (Dr Leyden) என்பவருக்கு அகப்பட்ட சாசனத்தினாலும், மிஸ்டர் டெயிலர் எழுதிய கொங்குதேச இராஜாக்கள் சரித்திர புத்தகத்தினாலும், சேரநாடு வேறு, கொங்குநாடு வேறுஎன்றும் ஸ்பஷ்டமாகும். சேரதேசம் மலையாளம். அதன் துறை பொருனைத் துறை. அவர்களுடைய மலைபோந்தின்றார். அவர்களுக்குச் சிறந்தமலைக் கொல்லி, சேரநாட்டு மன்னன் தமிழ்நாட்டு மூவேந்திரரில் ஒருவனார்.

சேரநாட்டின் உற்பத்தி விவரம்.

பரசுராமர் க்ஷத்திரியர்களை ஜயித்துப் பிறகு, தென்மேற்குப் பாகத்தில் மலைநாட்டிற்கு வர, அங்கு மிதமிஞ்சிய பாம்புகள் வதிந்து வருவதைக் கண்ணுற்று, அப்படிப்பட்ட இடத்தில் வசிப்பவருக்குபபுத்தியும் பிராமணவிசுவாசமுமுண்டாகுமென்றறிந்தும், அப்பாம்புகளை யோட்டி, அங்கு 64 கிராமங்களை ஸ்தாபித்தும்; அவைகளில் வதிந்தவர 36,000 ஆரியபிராமணர்களைக் குடியேற்றியும்; அவர்கள் அந்நாட்டைவிட்டு வேறநிகளுக்கேகாதபடி "முன்குடுமியையும், முண்டையும்" நியமித்தும்; அவர்களுக்கு ஊழியஞ்செய்ய சோழ பாண்டிய நாடுகளிலிருந்து அநேக சூத்திரர்களைத் தருவித்துவைத்தும்; அவர்களுடைய ஜீவனத்துக்காக வருஷத்தில் ஆறுமாதம் மழைபெய்யவேண்டுமென்று தேவேந்திரனிடம் வரம்பெற்றும்; அந்நாட்டு ஸ்திரிபுருஷர்கள் வேறுநாட்டுக்குப்போகாமல் அந்தமலையாளத்திலேயே சதா தங்கும்படி அவர்களுக்கு மருமக்கத்தாயமும், குடியரசும் நியமித்தும அநேக தருமவிதிகளையும் ஏற்படுத்தினார்.

அப்படி நியமித்த 64 கிராமங்களின் பிராமணர்களில் 11 கிராமப்பிராமணர்கள் மாத்திரம் யாகயக்ஞச் சடங்குகளை நடத்தப்பாத்திரரென்று நியமித்ததில்; பிராமணர்களுக்குள் கலகங்கள் உண்டாகிச் சண்டைகளுண்டாக; அச்சண்டைகளை அடக்க அக்குடியரசால் முடியாமையால், பிராமணருக்கும், க்ஷத்திரிய ஸ்திரீக்கும்பிறந்த ஒருவனை சிரேஷ்டராஜனாக்கியும், பிறகு அந்தமலைநாட்டைத் துளுவம், மூஷிகம், கேரளம், காவசம என நான்கு பாகங்களாக வகுத்தும், அவைகளுக்கு சில குறுநிலமன்னர்களை நியமித்தும், ஆண்டுவரும்படி செய்தார்கள். அந்த குறுநிலமன்னர்களும் கொடுங்கோலரசராகிக் குடிகளை வருத்திவர; அங்கு ஆதிசங்கராசாரியார் ஜனித்து, அவர்களுக்கு வேண்டிய தருமங்களைப் போதித்துவந்தார். பிறகு மறுபடியும் குடிகளுக்குள் கலகங்க

ளுண்டாகி நாட்டில் பஞ்சம் அதிகரிக்க, குடிகள் வருந்தி அவர்கள் உபயோகித்துவந்த 'கொள்ளம்' என்னும் குளம் நீரற்றுப்போனதற்கு, இராஜநீதி முறை வென்று மன்னன்முன் முறையிட, அந்த மன்னனும் ஆயிரங்கணக்கான பிராமணர்களைத் தருவித்தும், அந்தக்கொள்ளம் என்னும் குளக்கரையில் வருணஜபமு செய்யச்செய்தும், சந்தர்ப்பணை செய்விக்க, உடனே மழை அமோகமாகப் பெய்ததனால், அந்தத்தினத்தையே (கொல்லமாண்டு) வருஷப்பிறப்பாகக்கொண்டு சுகமாக வாழ்ந்து வருகையில்; மறுபடியும் பிராமணக் குடிகளுக்கும், அரசனுக்கும் சண்டை சச்சரவுகளுண்டாக, இனி நாட்டைத் தக்க வல்லவனிருந்து அரசு செய்யாவிட்டால் குடிகெட்டுப்போகும் என்று கண்ட சில பெரிய பிராமணர்கள்: விஜயநகரம் கிருஷ்ணதேவராயலிடம்போய் முறையிட்டார்கள் அப்போது இந்துமதோத்தாரராக பிரகாசித்த ஸ்ரீ கிருஷ்ணதேவராயலு கேட்டு பரிதவித்துத் தமது சைன்யஸ்தானத்தில் சுத்தவீரனும், சுசீலனுமாக இருந்த ஆதிராஜபெருமாளை மலையாளத்துக்குப்போய் 12 வருஷங்கள் ஆண்டுவர தமது பிரதிநிதியாக அனுப்பினார்.

அந்த ஆதிராஜபெருமாளும் தமது எஜமானருடைய உத்தரவின்படி மலையாளம்வந்து, 12 வருஷம் தருமபரிபாலனம் செய்துவிட்டு விஜயநகரம்போக; அவருக்குப் பதிலாக பாண்டியராஜப் பெருமாளை 12 வருஷம் ஆண்டுவர அனுப்பினார். அவரும் அப்படியேவந்து ஆண்டு திரும்பிப்போக, அவருக்குப் பதிலாக சேரமான்பெருமாளை அனுப்ப, அவரும்வந்து கிரமமாக 12 வருஷம் ஆண்டுவர, அவர் தருமகுண நடக்கைகள் கிருஷ்ணதேவராயலுக்கு திருப்தியைத் தந்தமையால், அவரையே மறுபடியும் இரண்டுமுறை அதாவது 36 வருஷம் ஆண்டுவரச்செய்ய; அந்தச்சேரமான்பெருமாள் அல்லூரில் ஒருகோட்டையும், கனிநூரல், ஒரு அரண்மனையையும் கட்டி ஆண்டுவரும்போது; குடிகளுக்குள் கலகமுண்டாக; சேரமான்பெருமாள் தமது நாட்டை 18 பாகங்களாகவகுத்தார், அவற்றில் சில கள்ளிக்கோட்டை ராஜராகிய சாமந்தர் அல்லது ஜாமரீன் அல்லது தாமோதரன் என்னும் இராஜனுக்குக் கொடுத்து ஆண்டுவரும்படி செய்துவந்ததில், அரேபிய நாட்டிலிருந்து சில மகமதியர் வர்த்தகவிஷயமாக கள்ளிக்கோட்டையில் குடியேறினார்கள். அப்படிக்குடியேறிய மகமதியருக்கு மலையாளத்தில் பவுத்தர் என்றுபெயர், சேரமான் பெருமாள் அந்த மகமதியருடையமதாதிவிஷயங்களைப்பற்றி விசாரணை செய்தும், கடைசியில் தாமே மகமதிய மதத்தில் புகுந்தும், அந்நாட்டிலுள்ள பிராமணர் எல்லாரையும் மகமது மதத்தைத் தழுவும்படி கட்டாயப்படுத்த; குடிகளுக்குள் பிரமாத கலகங்களுண்டாகி, திரிகாரூர் என்னும் இடத்தில் ஒரு மகாசபையைக் கூட்டி, மகமதியர் மதத்துக்கும், பிராமணர் இந்துமதத்துக்கும் இருக்கும் தாரதம்மியத்தைப்பற்றி தர்க்கம்செய்விக்க; கடைசியில் பிராமண (இந்து) மதமே சிரேஷ்டமென்றேற் பெற்றதால் சேரமான்பெருமாளைப்பட்டத்தைவிட்டு நீக்கியும், அப்பட்டத்திற்கு அவருடைய குமாரரை நியமிக்க; சேரமான்பெருமாள் மதவைராக்கியத்தினால் அரேபியாவிலுள்ள மக்கா நகரத்துக்குப்போனார். அங்குபோய் அரேபியரைக் கள்ளிக்கோட்டைக்குப்போய் வியாபாரம்செய்யும்படி தூண்டிவிட்டுத் திரும்புகையில், ஜட்டா என்ற பட்டணத்தில்இறந்து விட்டார்.

இப்போது கள்ளிக்கோட்டையில் இராஜாவாகவிருப்போர் இந்தச்சேரமான் பெருமாளுடைய சந்ததிகளென்று ஒரு சாசனத்தினால் தெரியவருகிறதன்றியில்;

ஆதிசங்கராசாரியாரும் இச்சேரமான் பெருமாள் காலத்திலிருந்து பிரகாசித்ததாக ஒரு சாசனத்தினால் வெளியாகிறது; ஆயினும் அதை நம்புவதற்கு வேறு சாசன ஆதாரங்கள் அகப்படவில்லை.

அந்தச் சேரமான்பெருமாள் மக்காவக்குப் போனபிறகு, அவருடைய சந்ததிகளை தக்கபடி ஆண்டுவராமையால்; மலையாளத்துக்கு விஜயநகர கிருஷ்ண தேவராயலு ஒரு குலசேகரப்பெருமாளை அனுப்பி ஆண்டுவரச்செய்ததாக ஓர் சாசனமிருக்கிறது. பிறகு இப்போது இராஜனிருக்கும் தளியில் ஒரு வேறு நாட்டு வர்த்தகனாகிய கோளியன் என்பவன் ஒருபெரிய கோட்டையைக்கட்டி வர்த்தகமும்,அதிகாரமும்செய்து வந்தபடியால்;அந்த இடத்திற்கு கோளிக்கட்டு என்று பெயருண்டாகி,பிறகு கள்ளிக்கோட்டைஎன்னும் இப்போதியபெயராகி விட்டதாம்.

அநந்தரம் ஐரோபா கண்டத்திலிருந்து போர்த்துகேயர் வர்த்தக விஷயமாக வர; அவர்மூலியமாக சிரிய கிறிஸ்தவர்களும் மலையாளத்துக்குவர ஆரம்பித்தார்கள்.

மிஸ்டர் டெயிலருக்கு அகப்பட்ட சாசனத்தின்படி அச்சேரநாட்டில் கலியுகம் பிறந்தபிறகு அடியிற்கண்ட அரசர்களாண்டார்கள் ;—

ஆதிபெருமாள் 12வருஷம்—பாண்டியராஜபெருமாள் 12வருஷம்—சேரமான் பெருமாள் அல்லது பானுபெருமாள் 36 வருஷம் ஆண்டு மகமதியனாகி மக்காவுக்குப்போனார்—துளபனபெருமாள் 6வருஷம்—இந்திரபெருமாள் 12வருஷம்-ஆரிய பெருமாள் சமஸ்தானத்தைவகுத்தார். குந்தனபெருமாள் களனெட்டியில் அரண்மனையைகட்டினார்-பிறகு கொட்டிபெருமாள், மாதவபெருமாள் 11வருஷம்—எரிய பெருமாள் 12வருஷம்—கம்பென்பெருமாள் $3\frac{1}{2}$ வருஷம்-விஜயன் பெருமாள் விஜயன் கோட்டையை கட்டினார்—வல்லபப்பெருமாள் ஓர் புதலிங்கத்தைக் கண்டுபிடித்தார் — ஹரிச்சந்திரபெருமாள் புராளிகோட்டையைகட்டினார்—மல்லன் பெருமாள் 12வருஷம்—குலசேகரப்பெருமாள் 18வருஷமுமாக ஆண்டார்கள்.

தமிழ்கவிகளால் புகழ்ந்து பாடப்பெற்ற சில சேரருடைய பெயர்முதலான விவரங்களாவன.

(1) சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்—இவன்போர்வன்மையை நோக்கி யானைப்படையை மேகமாகவும், சேனாவீரர் கையிலுள்ள வாட்டைகளை மின்னலாகவும், போர்பறையை முழக்கமாகவும், குதிரைகளினது கதியைக்காற்றாகவும். வில்லினாற் செலுத்தப்படும் பாணங்களை மழை வருஷமாகவும், பூமியைவயலாகவும், தேரை ஏராகவும், படை திரைகளைச்சாலாகவும், எறியப்படும் வேலாயுதங்களை வித்தாகவும், சாய்த்துகிடக்குந் தலைகளை நெற்போராகவுங்கொண்டு வேளாண்மை செய்பவனென அவனைப் பரணர்புறநானூற்றிலே புகழ்ந்துபாடினார்.

(2) சேரமான் கடுங்கோவாழியாதன்—இவன் கபிலராலும், குண்டுகட்பாலியாதனாராலும் பாடப்பட்டவொருசேரன். தன்னைப்பதிற்றுப் பத்தினுள்ளேழாம்பத்தென்னும் பாடலாலேபாடிய கபிலருக்கு நூறாயிரங்காணமும் மலைமீதேறிக் கண்டநாடும் பரிசாகக்கொடுத்தவள்ளல்.

(3) சேரமான் கணைக்காலிரும்பொறை — கோச்செங்கட் சோழனாலே சிறைசெய்யப்பட்டுக் காராக்கிருகத்திலே கிடந்து, தாகத்தாற் சோதித்தவழியும் தண்ணீருங் வாங்கி யுண்ணாது, உயிர்துறந்தவன்.

(4) சேரமான் கருவூரேறிய வொள்வாட் கோபெருஞ் சேரலிரும்பொறை—அச்சேரன் நரிவெரூஉத்தலையாற் பாடப்பெற்றவன் அப்புலவர் நல்லுடம்பு பெறுதற்குக் காரணனாயிருந்தவனும் இவ்வரசனே (புறநானூறு).

(5) சேரமான் குட்டுவன்கோதை—சோணாட்டு எரிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாராற் பாடப்பெற்ற வீரையாளன.

(6) சேரமான் குடக்கோச்சேர லிரும்பொறை—பெருங்குன்றூர் கிழாராற்பாடப்பெற்ற சேரன்- பதிற்றுப் பத்தினுள்ளே ஒன்பதாம் பத்திற்குத் தலைவனு மிவனே.

(7) சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்—இவனும் வேற்பஃறடக் கைப்பெருநற்கிள்ளியென்னுஞ் சோழனும் போரிலிறந்தபோது கழாத்தலையாராலும் பரணராலும அச்சோழனோடு சேர்த்துப் பாடப்பட்டவன்.

(8) சேரமான் கோக்கோதை மார்பன் — இவன் கோச்செங்கட் சோழன்காலத்துச்சேரன்-இவன் பொய்கையாராற் பாடப்பெற்றவன்- இவன் வண்மையிற் சிறந்தோனென்பது புறநானூற்றால் விளங்கும்.

(9) சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சியமாக்கோதை—புறநானூற்றினுள்வருமொரு பாடலால் புலமைநிறைந்த சேரருளொருவனென்பது துணியப்படும்.

(10) சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன்—1 சிக்கற்பள்ளியி லிறந்த பெருங்கொடையாளனாகிய சேரன், இவன் குண்டுகட்பாலியாதனாராற்பாடப்பெற்றவன்- 2 கபிலரதுகையைப்பற்றி நுகைமெல்லியவென, அவராற்பாடப்பெற்ற சேரன்.

(11) சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரமான்பொறை—தனது முரசுகட்டிலறியாதேறி நித்திரைசெய்த மோசிகீரனாரைத் தண்டியாது அவர் துயிலொழிந்தெழுந் துணையுங் கவரிவீசி நின்றபெருந்தகையிவன் சேரன் பதிற்றுப்பத்தினுள் எட்டாம்பத்தாலே தன்னைப்பாடிய அரிசில் கிழாருக்கு ஒன்பதிலக்ஷம் பொன்பரிசில்கொடுத்தோனும் தகடூரைவென்றவனு மிவனே.

(12) சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி—சேரமானுடைய பாமுளூரை வென்றதைக்கொண்ட சேரன்- இவன் ஊன்பொதிபசுங்குடையராற் பாடப்பெற்றவன்.

(13) சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ—இவன் கொடையாலும் வீரத்தாலும் புகழ்படைத்த வொருசேரன். பேய்மகள் இளவெயினியாற் பாடப்பெற்றவன்- பாட்டிலும் வல்லவன்.

(14) சேரமான் பெருஞ்சேரலாதன்— இவன் கரிகாற்சோழனுக்குத்தோற்று நாணிவடநாட்டிற் சென்றிருந்த சேரன்- இவன் கழாத்தலையார் வெண்ணிக்குயத்தியார் என்னும் இருவராலும் பாடப்பெற்றவன்.

(15) சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்—இவன் பாண்டவர்களும கௌரவர்களும் செய்த யுத்தகாலத்தில் அவர்கள் சேனைகளுக்கு அந்தயுத்தம் முடியுங்காறும் நல்லுணவளித்த பெருஞ்செல்வனாகிய சேரன்- இவன மூரிஞ்சியூர் முடிநாகராயரால் பாடப்பெற்றவன்

(16) சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை—இவன் சோழன்ராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியோடு போர்செய்த சேரன்- இவன்பொருந்திலிளங்கீரனாராலும்,வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனாராலும் பாடப்பெற்றவன.

(17) சேரமான மாவெண்கோ—கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியம்,சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும இச்சேரன் காலத்தவர்கள்- மூவரும் நட்பினர்கள்-இச்சேரமானே சேரமான்பெருமாணுயனெனப் பெயர் கொண்டவர்-இவரைப்பாடிய புலவர் ஔவையார்.

(18) சேரமான் யானைக்கட்சேரலிரும் பொறை — மாந்தரஞ்சேரலிரும் பொறை பாதுகாத்த நாடு தேவருலகத்தை யொக்கும் என்றுலகம் போற்ற அரசுபுரிந்த சேரன்- இவன் தன்னைப்பாடும் புலவர்க்குப் பிறரிடத்தேசென்று பாடியிரந்து நில்லாவண்ணம் அளவின்றிப் பெரும்பொருள் வழங்கும் பெருங் கொடை வள்ளல். இவனைப்பாடிய புலவர் குறுங்கோழியூர்கிழார்.

(19) சேரமான் வஞ்சன் — இவன் திருத்தமாணுராற்பாடப் பெற்ற சேரன். அபிதானகோசம்—167—171 பக்கங்கள்

மூன்றம் அத்தியாயம்-

திருவநந்தபுர ஸமஸ்தானம்.

சேரமான்பெருமாளுடைய சந்ததிகள் கள்ளிக்கோட்டையி லாண்டுவரும் போது அ,வர்கள்மீது கொங்கு நாட்டரசர்கள் படையெடுத்துப்போனதில்; அந்தச் சேரமான்பெருமாளுடைய சந்ததிகள்பயந்து கி-மு 1242ஸூ திருவனந்தபுரம் குடிபுகுந்தார்கள். பரசுராமர்காலத்தில் பாணுவிக்கிரமனுடைய அண்ணன் குமாரரான ஆதித்தியவிக்கிரமனுக்கு பட்டங்கட்டியபோது குடிபுகுந்ததாக ஒருசாசனத்தினல் தெரியவருகிறது. ஆயினும் திருவநந்தபுர சரித்திரத்தைப் பற்றி மிஸ்டர் சங்குண்ணி மேனன் எழுதியதில் அடியிற்கண்ட இராஜர்கள் திருவனந்தபுரத்தை ஆண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:—

திருவனந்தபுரத்தை ஆண்ட அரசர்கள்.

(பாணுவிக்கிரமன் காலந்தெரியவில்லை) வீரமார்த்தாண்டவர்மா கி-பி 731ம் உதயமார்த்தாண்டவர்மா 824(இவர்காலத்தில்தான் மலையாள கொல்லமாண்டு என்னும் புதுவருஷ ஆரம்பம்) ஆதித்தியவர்மா 1188ஸூ வீரராமமார்த்தாண்டன் 1335—1336, (இவர்காலத்தில் திருவாங்கூர் கோட்டை கட்டப்பட்டது- எரிவிவர்த்தனவர்மா 1376—1382- கேரளவர்மா 1382—3ஸ் சேரஉதயவர்மா (சேரமாதேவி மனைவி) 1382—1444, வானவராத முத்துராஜவர்மா 1444—1458 வீரமார்த்தாண்டவர்மா 1458—1471, ஆதித்தியவர்மா 1471—1478; எரிவீரவர்மா 1478—1504, மார்த்தாண்டவர்மா 1504—6ஸ் வீரஎரி வீரவர்மா 1504—1528, மார்த்தாண்டவர்மா 1528—1537. உதயமார்த்தாண்டவர்மா 1537—1560, கேரளசேகரவர்மா 1560—1567, ஆதித்தியவர்மா 1594—1604 உதயமார்த்தாண்டவர்மா 1604—1606, வீர எரிவர்மா 1606—1619, வீரபாணு வர்மா 1619—1625, இரவிவர்மா 1625—1631, உன்னிகேரளவர்மா 1631—

1661, ஆதித்தியவர்மா 1661—1677, உமயம்மாள் இராணியார் 1677—1684, இரவிவர்மா 1684—1718, உன்னிகேரளவர்மா 1718—1724, இராமவர்மா 1724—1728, (இவர்காலத்தில் மதுரை விஸ்வநாதநாயகரொரு படையெடுத்துப் போய் கப்பம்வாங்கிக்கொண்டு பிறகு இராஜிசெய்யப்பட்டது) மார்த்தாண்ட வர்மா 1728—1758, இராமவர்மா 1758—1798, பாலராமவர்மா 1798—1810 கவுரிலக்ஷிமி ராணிபாய் 1810—1815, கவுரிபார்வதி பாயம்மாள் 1815—1829, இராமவர்மா 1829—1847, மார்த்தாண்டவர்மா 1847—1860, ருக்குமணி பாயம்மாள் 1860—61 இராமவர்மா 1860—1880, இராமவர்மா 1880—1885 ஸ்ரீலஸ்ரீ பத்மநாப தாசிவஞ்சி பலராமவர்மா, குலசேகரகிரீடபதி மன்னி சுல்தான் மகாராஜராஜ இராமராஜபகதூர் ஸமஸ்தானத்துக்கு மகாராஜர் 1885ஆம் ஆகஸ்டுமாதம் 19உ பட்டாபிஷேகம் பெற்றார்.

அவர்களில் ஸ்ரீராமவர்மா மகாராஜுவை மகாமந்திரியென்று புகழ்ப்பெற்ற இராஜா மாதவராயரிடம் நான்குவருஷங்கள் வரையில் படிப்பிக்க வைத்த தில்; அந்த ராஜா மஹாவித்துவ சிரோமணியாகி அனேக இங்கிலீஷ்பாஷா புத்தகங்களை மலையாளபாஷையில் மொழிபெயர்த்து வித்தியார்த்திகளுடைய விஞ்ஞானத்தை விருத்தியாக்கிவந்தார்.

அந்த இராஜா பிரபலமான பெருத்த புத்தகசாலையை நியமித்ததுடன்; தந்த மூல கிருஷிசாஸ்திர நிபுணராக இருந்தபடியால், நாட்டில்பலவிதப் பூ, காய், கனி செடிகளையும், காப்பிக்கொட்டை, தேயிலை, மரவள்ளிக்கிழங்கு, மணிலா; புகையிலை முதலான பயிர்களையும்வைத்து பயிர்செய்து குடிகளுக்குக் காட்டி னார். அவர் சித்திரபிரதிமை பாவப் படங்களை எழுதுவதிலும் வல்லவர். நாட்டின் பூர்வசரித்திரங்களைத் தேடி சென்னையில் மிஸ்டர் ஜே. பி. நார்டனால் நடாத்திய 'அதீனியம்' பத்திரிகைக்கும், கல்கட்டா ரிவியூ பத்திரிகைக்கும் எழுதிவந்தார். இந்துதேசம் முழுவதும் யாத்திரைசெய்து சுற்றிப்பார்த்து அநேக சங்கதிகள் அறிந்தவர். அத்துடன்கூட மஹாமந்திரி ஆகிய மாதவராயர், அந்தச் சமஸ்தானத்துக்கு மந்திரியாகி, மேற்படி ஸமஸ்தானமே 1858ஆம் முதல் 1872ஆம் வரையில் அவர் அதிகாரத்தில் இருந்தபடியால்; அந்த திவான் உடனே தக்க சீர்திருத்தங்களைக்கைப்பற்றி வர்த்தகம், ..., வைத்தியம், வித்தியா விவசாயாதி விஷயங்களில் விசேஷ சீர்திருத்தங்களைச் செய்து குடிகளுடைய க்ஷேமத்தை விருத்தியாக்கினார். பிறகு திவான் ... சாஸ்திரிகளும், வெம் பாக்கம் ராமய்யங்காரரும், ஸ்ரீநிவாஸ ராயரும், மாதவராயரும் திவான்களாகி அநேக சீர்திருத்தங்களைச் செய்வித்தார்கள்.

இப்போது இந்தத்திருவநந்தபுர ஸமஸ்தானத்தின் (1894ஆம்) சுற்றளவு 6730 சதுரமைல, இதிலுள்ள 1891ஆம் கானேஷுமாரி கணக்கின்படி 25,57,840 ஜனங்கள் இருந்தார்கள்- 1881ஆம் கானேஷுமாரிப்படி 17,55,000 இந்துக்களும், 4,98,000 கிறிஸ்தவர்களும், 1,47,000 மகமதியரும் குடியிருந்த தாக கணக்கிடப்பட்டிருப்பதால்; இந்நாட்டில கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கிற தாகத்தோன்றும்- அப்படி இருந்தாலும் தற்கால ராஜாவும் திவானவர் களும் சகலமதஸ்தர்களையும் சமரசமாக நடத்திவருகிறார்கள். இப்போது 66,66,000 ரூபாய் ஸமஸ்தான வரும்படியாக விருந்தது. வித்தியா விஷயத் தில் இச்சமஸ்தானம் மைசூரைவிட சிறந்ததென்று சொல்லலாம். இத்தோடு

கூட 45 ஊட்டுப்புரைகளென்னும் அன்னசத்திரங்களை ஸ்தாபித்து, ஆயிரக்கணக்கான ஏழைப்பிராமணர்களை ஆதரித்துவருகிறார்கள்.—

நான்காம் அத்தியாயம்.

சேரநாட்டார் என்று சிலர் தப்பிதமாக எண்ணி இருக்கும்

கொங்குநாட்டு அரசர்கள்.

சேரநாட்டாரையே கொங்குநாட்டாரென்று சிலர் எண்ணிஇருக்கிறார்கள். ஆனால் சரித்திர சாசனங்களினால் சேரநாட்டார் வேறு ஜாதியாரென்றும், கொங்கு நாட்டார் வேறுஜாதியாரென்றும் ஸ்பஷ்டமாகிறது. எப்படியெனில் அசோகராஜனுடைய இராஜரீக கிரந்தத்திலும், பொடோலோமி (Ptolemy's Works in R. Asiatic Research Vol- VII—1-86) என்பவர் எழுதிய கிரந்தங்களிலும்; கொங்குநாட்டார் கி-பி 1132ளும் ஒரிசாநாட்டிலிருந்த கங்கைகுலத்தாரென்றும், அவர்கள் 16-ம் நூற்றாண்டில் சிவசமுத்திரத்தில ஸம்ஸ்தானத்தை ஸ்தாபித்ததில்; அதை விஜயநகர கிருஷ்ணதேவராயலால் ஜயிக்கப்பட்ட பிறகு, அவர்களுடைய சந்ததிகள் இப்போது கோயமுத்தூர் ஜில்லாவைச்சார்ந்த கரூரைப்பிரதான பட்டணமாககொண்டு ஆண்டுவந்ததாகவும், அப்படி ஆண்டவர்களில் அடியில் கண்டவர்கள் சிரேஷ்டர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எவர்கள் எனில்:—

வீரராயசக்கிரவர்த்தி, கோவிந்தராயன், கிருஷ்ணராயன், கலாவல்லபராயன், கோவிந்தராயன், சதுர்புஜகாமதேவன், திருவிக்கிரமதேவன், கொங்கணிவர்மன், மாதவராயன், ஹரிவர்மராயன், பரிகுலாதிராயன், நரசிம்மராயன், விஷ்ணுகோபவர்மன்; பிரிகுலாதித்தராயன், மாதவராயன், கிருஷ்ணவர்மன், கொங்காளிமதிராயன், ஹரிச்சந்திரராயன், கிருஷ்ணவர்மன், கொங்காளிமாதிராயன், திருவிந்தராயன், முஷ்கரராயன், பிரம்மஹாதிராயன், திருவிகாமராயன், பூவிக்கிரமராயன், வல்லபராயன், நவகாமராயன, இராஜகோவிந்தன், நந்திவர்மன் சிவமன், பிருதிவி கொங்கணி, விஜயாதித்தன், மல்லதேவன், காந்ததேவன்; சத்தியவாக்கியன், குணதத்தன், வல்லதேவன், கலிங்கராயன், இவர்களாண்ட காலமுதலானதுகளை விவரமாகக் காட்டும் சாசனங்கள் இன்னமும் அகப்படவில்லை ஆயினும் மிஸ்டர் டாசன் (Mr. Dawson's Paper in Asiatic Journal Vol. VIII) கிரந்தத்திலும், சேலம்ஜில்லா மாணிபுலில் கனம்போக்ஸ் (Rev- Foulke's Historical Papers) எழுதிய சரித்திரத்திலும் ஒருவாறு அறியலாம்.

ஐந்தாம் அத்தியாயம்.

சோழராஜியம்.

சோழமண்டல எல்லையைக்காட்டும்.

வெண்பா.

கடல்கிழக்குத் தெற்குக்கரை பொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக்கரையாம்—வடதிசையில்
லேணாட்டுப் பெண்ணையிருப்பது நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லை எனச்சொல்.

சோழராஜியம், கிழக்குந்தெற்கும் கடலும், வடக்குவெள்ளாறும்; மேற்கு பாண்டிநாடும எல்லையாக உடையது—அதுகாவிரி நதியாயும் நாடாதலினால், நீர்மலிவான் புனனாடென்றும், காரணவிடுகுறி பெயர்களைக்கொண்டு நீர்வளம்

நீர்வளம் பொருந்திய நல்நாடு- அது காவிரி-பூம்பட்டினம், கருவூர், திரு வாரூர், தஞ்சை, திருக்குடந்தை, காஞ்சி முதலான சிறந்த இராஜமாநகரங்களை உடையது-

சோழராஜர்களும்—அவர்கள் ஆண்டகாலமும்.

சோழராஜர்கள் இனனவர்களென்றும், அவர்கள் ஆண்ட காலமும், இடமும் இன்னின்னவை எனறும், ஸ்பஷ்டமாகக் காட்டும் சரித்திர சாசனம் கிடைக்க வில்லை. தென்னாட்டுப புராணங்களைப் பரிசோதிப்போமாகில்; அவைகளிற் சில சோழர்களுடைய பெயர்களையும், அவர்கள் கட்டிவணங்கிய சைவ வைணவக் கோயில்களின் பெருமைகளையும், பற்றி மாத்திரம் சிறப்பித்துச் சொல்லப்பட் டிருக்கின்றனவே ஒழிய; அவர்களாற குடிகளுக்குண்டான சாதகபாதக கால தேசவர்த்தமானங்களைப்பற்றி விபரமாகச் சொல்லப்படவில்லை. சிலபுராண காவியஙகளில் திருநீற்றுச்சோழன், மநுநீதிகண்டசோழன், குளக்கோட்டுச் சோழன், அனையுஞனுபூபாலசோழன், விடலராயசோழன், குலோத்துங்க சோழன், இராமபத்திர சூரப்பசோழன் முதலான சிலருடைய சரித்திரங்களைப் பற்றி மாத்திரம் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன—எப்படி எனில்.

அருண சிந்தாமணியின்படி.

முசுகுந்தன பூர்வஜன்மத்தில் குரங்காக இருந்து, வில்வித்ரைப்பறித்து சிவபெருமான்மீது எரிந்த புண்ணியத்தினுல் சக்கிரவர்த்தியாகியும்; இராக்ஷத ரால் வருந்திய தேவேந்திரனுக்கு உதவிசெய்ததனுல் தேவேந்திர னுத்மார்த்த மாகிய தியாகராஜபெருமானைப் பெற்றுவந்து, திருவாரூரில் பூசைசெய்ததனுல; பெருமைப்பெற்றுனும்—

காடுவெட்டியசோழன் — பாண்டியனுக்கு பயந்து மதுரை மீனுக்ஷி சுந்தரேசுவரரை வேண்டி தவசுக: அந்த ஈசுவரர், [illegible] தொணடுபோய் பாண்டியன் இட்டிருந்த கதவு முதலியவைகளை நீக்கி தரிசனம் பெறச்செய்தாராம்.

கோச்செங்கட்சோழ நாயனுர்—இவர் [illegible] சிலம்பியாகி இருந்து, பட்டுநூலிழைத்து பந்தல்போட்டு சிவ[illegible] இயதால் அரசனுக பிறந்தார்—இவா 63 நாயன்மார்களில் ஒருவராம்.

புகழ்ச்சோழநாயனுர்—இவர் உறையூரிலிருந்[illegible] கரு வூருக்குவந்து சொகுகு, குடகு நாட்டரசர்கள் கொண[illegible] களைப்பெற்று மரியாதைசெய்தனுப்ப; அதிக னென்னும் [illegible] யைச்செலுத்தாமையால், படைபோடுபோய், அவன்சேனை[illegible]; அதில் ஒருசிரசில் சடையிருக்கக்கண்டு, ஐயோ? சிவதுரோகம் [illegible] றெண்ணி அச்சிரசோடு அக்கினிகுண்டத்தில் விழு, சிவபதமடைந்தாராம— இவரும் 63 நாயன்மார்களில் ஒருவராம்.

அபயகுலசேகரசோழன்—இவர் திருவாரூரை இராஜதானியாகக்கொண்டு ஆளுகையில்; ஓதுவார் பாடியபண்களைக் கேட்டு மகிழ்ந்து முற்றப்பண்களை தேடிபிடிக்க கங்கணம்கட்டிக்கொண்டு, பொல்லாப்பிள்ளை

யாரை பூசித்தருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு சிதம்பரத்தில் நடேசர்பால் இருக்கக்கண்டு பிடித்தவராம்.

அநபாயசோழன்—இவர் ஜீவகசிந்தாமணியை மெச்சி பாராட்டி வருவதை, அவர் மந்திரி சேக்கிழார் நாயனார் கண்டு, அவரை திருத்த எண்ணி தில்லைவாழ்ந்தணர் முதலானவர் திருவடியார்களுடைய சரித்திரங்களைப் படிக்கும்படிக் — ஏவி, பலநியாயங்களை எடுத்துச்சொல்ல சுந்திரமூர்த்திசுவாமிகள் — பதினொரு திருப்பாடல்களாகப் பாடியருளிய திருத்தொண்டைத்தொகைக்கு, பொல்லாப்பிள்ளை பொருள் சொல்லியபடி, நம்பியாண்டார் நம்பி தமதுபெயரை முன்னிட்ட கலித்துறைத் திருவந்தாதியை விரித்து புராணமாகப் பாடவேண்டுமென,(அநபாயச்சோழன் வேண்ட) அந்தசேக்கிழார் இணங்கி, சிதம்பரம்வந்து நடராஜபெருமான் "உலகெலாமென" அடி எடுத்துக்கொடுக்க பெரியபுராணம் பாடினாராம்.

ஆதொண்டசோழன் —இவர்தந்தையாகிய மணிகண்டசோழன் அல்லது குலோத்துங்கசோழன், ஒருநாள் வேட்டைக்கேகிய வனத்தில் ஒரு ரிஷிகன்னிகையாகிய நாககன்னிகையை ஆதொண்டைப் பூமாலையைச்சாற்றி, காந்தர்வ விவாஹஞ்செய்துகொண்டதனால் பிறந்தவர்—அவர்தந்தை தனது இராஜியத்தின் தென்பாகத்தை பட்டமகிஷியின் குமாரனுக்குக்கொடுத்தும்; வடபாகத்தை இந்த ஆதொண்டருக்குக கொடுததும் ஆளச்செய்தாராம்—இவர் ஆண்டபாகத்திற்கு தொண்டைமண்டலமென்று பெயராகியது—இவர் தமது நாட்டில் வேளாளரை குடியேற்றி சிறப்பித்தபடியால், அவர்கள் தொண்டைமண்டல வேளாளர் என்றபெயரைப் பெற்றார்கள்—அந்ததொண்டமண்டலத்தின் எல்லையாவன—

வெண்பா.

மேற்குப் பவளமலை வேங்கடநோ வடக்கா
மார்க்கு மூவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழி ருபதின் காத
நற்றொண்டை நாடெனவே நாட்டு.

இத்தொண்டைமண்டலத்திற்கு காஞ்சிபுரம் தலைநகரமாம்—இதுநிற்க.

கலிங்கத்துப்பரணி, திருத்தொண்டர் திருவந்தாதி, திருவிசைப்பா, விக்கிரமங்கதேவசரித்திரம், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, விக்கிரமசோழன் உலா, குலோத்துங்சோழன் கோவை, விடலராயன் பலசந்தமாலை முதலான கிரந்தங்களில் ஒருவாறு சொல்லப்பட்டிருக்கினும்; பூரணமாகத் தெரிவிக்கப் பெறவில்லை.

பிங்கல முனிவர்செய்த பிங்கலந்தை என்னும் பிங்கலநிகண்டில், "சென்னிவளவன் செம்பியன் கிள்ளி, பொன்னித்துறைவன் புலிக்கொடியோன் மால், கோழிவேந்த னேரி வெற்ப னரிமகண்ணிய னேரியன்பயன் சூரியன் புன்னாடன் சோழன் பெயரே"—என்று சொன்ன 747-வது சூத்திரத்தின்படி-சோழனுக்கு சென்னி வளவன், செம்பியன், கிள்ளி, பொன்னித்துறைவன்;

புலிக்கொடியோன், மால்கோழிவேந்தன், நேரிவெற்பன், ஆரின்கண்ணியன், நேரியன், அபயன், சூரியன், புன்னாடன் எனபலபெயர்கள் உண்டாம்,

சோழர்கள் ஜம்புவன் அல்லது சாம்பவன் கோத்திரத்தைச் சார்ந்திருந்ததனாலும்; அவர்களுடைய ராஜியபரிபாலனம் பானுவைப்போல பிரகாசித்ததனால் சூரியன் என்றபெயரைப் பெற்றிருந்ததனாலும்; சாம்புவன் அல்லது சம்பியன் அல்லது சூரியன் ஆண்டராஜியத்துக்கு சாம்பிய மண்டலம் அல்லது சம்பிய மண்டலம் அல்லது சூரியன மண்டலமென்ற பெயருண்டாகி; அது நாளாவட்டத்தில் சோழமண்டலம் என்றபெயரைப் பெற்றதாகத் தோன்றுகிறது.

பிறகு 1902ஞ்ம் மதுரைத்தமிழ்ச் சங்கத்தாருக்கு அகப்பட்டக் கலிங்கத்துப்பரணி யேட்டை ஆதாரமாகக்கொண்டு மகா-ா-ஸ்ரீ, வி. கனகசபைப்பிள்ளையவர்கள் (பி. ஏ. பி. எல்) சுபகிருதுஞ்ஸ கார்த்திகை, மார்கழி, தைமாதங்களின் செந்தமிழ்ப் பத்திரிகைகளில் பின்வருகிற கருத்தை எழுதியிருக்கிறார்.

ஜயங்கொண்டார்—கலிங்கத்துப்பரணியில், “சுராதிராசன் முதலாகவரும் சோழனு முறைட் சோழமண்டல மமைத்த பிறகேழுலகையுமிராசகேசரிகளாமிருவராணையெனவு மேறவெம்புலியிறாணையென நின்றவருளும்” என்ற இப்பாட்டுகளின்படி சோழராஜியத்தை முதல்முதல் ஸ்தாபிதாக — சுராதிராஜன் என்றும்; அவன் மகன் விஜயாலயன் கி-பி 830—850ஞும் பிரகாசித்தவனும்—அவன் கொடும்பை என்னும் ஏரிக்கரைமேல் மதிலாக்கும் கொடும்பாளூர் அரசன் இடங்கழி பார்வழியில் தோன்றினவனும்—தஞ்சையை ராஜதானியாகவி, வரகுண பாண்டியனை தூரத்தியடித்து, திருவிடைமருதூர் சிவாலய மேற்குவாயிற்கோபிர மமைத்தவனும். அவன் காலத்தில் அமோகவர்ஷன் என்னும் மராட்டிரமன்னன் அபிமானம்பெற்ற ஜினசேனன் என்னும் சமணமுனி மஹாபுராணத்தின் முதற்பாகமாகிய ஆதிபுராணத்தை எழுதி முடித்தாராம்.

அந்தவிஜயாலயன் காலத்தில் ஆதிசங்கராசாரியர் அப்போது புகழ்பெற்ற சிவஸ்தலங்களாக இருந்த தில்லையையும், திருவிடை மருதூரையும், குடமூக்கு என்னும் கும்பகோணத்தையும் தரிசித்துப்போனாராம்—பிறகு.

ஆதித்தசோழன் கி-பி 850—880ஞும்

விஜயாலயன் இறந்தபிறகு; அவன்மகன் ஆதித்தன் தஞ்சையில் சிம்மாசனமேறினான். அவனுக்கு கோவிராஜ கேசரிவர்மன் என்னும் இராஜேந்திரன் என்றும் பெயர்கள் வழங்கிற்றும்—அவன் கொங்குநாட்டின்மேற் படையெடுத்துப்போய், அப்போது தலைக்காடு அல்லது தவளனபுரம் ராஜதானியில் அரசுபுரிந்த பிருதுவீபதியின் மகன் சிவமாரனோடு சண்டைசெய்து, சையமலைவரையிலுள்ள கொங்குநாட்டைப் பிடித்தும்; தஞ்சையைவிட்டு உரையூரைத் தனது ராஜதானியாக்கிக்கொண்டானும்—பிறகு காஞ்சிபுரத்திலிருந்த பல்லவராஜ கோவிஜய நிருபதுங்கவர்மனுடைய மகளை மணம்புரிந்து, பல்லவநாட்டிற்கும் அரசனானும், பிறகு கொங்குநாட்டில் கொள்ளையடித்தப் பொருளைக்கொண்டு தில்லையில் கோயில் கூடகோபுரம் மாடமாளிகைகளைக் கட்டிவைத்ததாக (தக்ஷயாகப்பரணி 835, 836, 837ல், “கூடமெடுத்த குலத்தோடு கோபுர மாடமெடுத்த பிரான்மகன் வாழியே”—என ஒட்டக்கூத்தர் பாடிஇருக்கிறார்—அன்றியும்.

பாலாற்றங்கரையிலே, களந்தை என்னும் ஊரிலே, ஆதித்தீச்சுரம் என்னும் சிவாலயம் எடுப்பித்தானும். பிறகு தனது பகைவனான வல்லான் என்னும்

அரசனை செங்குந்தரில் தலைவராகிய பழுவூர் வீரன், பழுவை நாராயணன் கச்சித்தனியன் முதலான 12 பெயர்களைக்கொண்டு ஜயசீலனாகியும்; பிறகு திருச்செந்தூரிலிருந்த சபன் என்னும் செங்குந்தனை துணைக்கொண்டும் ஈழநாட்டரசனை வென்றானும்—

செங்குந்தார் குலத்திலுதித்த ஒட்டக்கூட்டத்தர் ஆதித்தனுடைய சமூக வித்துவானாகவும்; அவன்மகன் குலத்துங்கனுக்கு உபாத்தியாயனாகவுமிருந்தான். ஆதித்தனுக்கு மூப்பு அதிகரித்து, தன்மகன் குலோத்துங்கனுக்கு இளவரசு பட்டங்கட்ட, உரையூரை அலங்கரித்து அநேக பெருநில குருநில மன்னர்கள் முன்பட்டாபிஷேகம் செய்தபோது; இளவரசன்பேரில் வாழ்த்துக் கவியாக ஒட்டகூடத்தர். "ஆடும் கடைமணி நாவசையாம லகிலமெங்கு,நீடுங்குடையைத் தரித்தபிரான்—என்றுகூற—இளவரசன்கேட்டு—"பாடும் புலவர் புகழொட்டக் கூத்தனைபதாம்புயத்தைச்—சூடும் குலோத்துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே"—என்றுபாடி முடித்தானும்—

இந்த ஒட்டகூத்தாரே, குலோத்துங்கனுக்கு பாண்டியன் பெண்ணை விவாஹம்செய்யத் தூதுப்போன காலத்தில், ஆதித்தன் மறைந்தானும். இந்த ஆதித்தன் காலத்தில்தான் ஸ்ரீசங்கராசாரியருடைய சீடர் தேவேசுவரரும், அவருடைய சீடராகிய சர்வஞாதமன் என்பவர் சம்க்ஷேப சாரீரகம் என்னும கிரந்தத்தை எழுதினதாகத் தோன்றுகிறது—இதுநிற்க.

சோழர்கள் சந்திரவமிச க்ஷத்திரியர்கள் என ஹரிவமிசமென்னும், புராணத்திற் சொல்லப்பட்டிருப்பதைப்போலவே; சோழர்களிற் முதலரசன் துஷியந்தனுடைய பௌத்திரனாகிய ஆசிரதனுடைய புத்திரன் என்று அபிதானகோசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சோழர்களுடைய ஆதிஉற்பத்தியைப் பற்றிபலவாறுவேஷங்களாக சோதித்து வரும் கவர்ன்மெண்டு சிலாசாசன பண்டிதர் ஸ்ரீவெங்கய்யரவர்கள் "சோழர்கள்" சூரியவமிசத்தாரென்றும், அந்தராஜ்யத்தை முதலிற் ஸ்தாபித்தவன் விஜயாலயன் என்றும் (1900ளும் நவம்பர்மீ இந்தியன் ரிவியூவ் புத்தகத்தில் எழுதியிருக்கிறார் (Vide Pages 504—506 A Page in South Indian History in the Indian Review No. 11 Nov. 1900)

இதற்கு ஓர் ஆதாரமாக 1837-ம் வருஷம் கல்கத்தா ஏஷியாடிக் சொசைடி சரித்திர சஞ்சிகை 7-வது புத்தகம் 2-வது பாகம் 123-வது பக்கத்தில்.

"சேர சோழ பாண்டிய ராஜ்கள் உண்டான விடமானது ஒருகாலத்தில் தண்டகாரணிய மென்னும் பெயரால் பயங்கரமான காடாகவும்; அதில் புலி சிங்கம் யானை முதலான கொடியமிருகங்களும், இராக்ஷதர்களும் வசித்து வந்ததாகவும்; அப்படிப்பட்டவிடத்திற்கு அயோத்தியாபுரியிலிருந்து ஸ்ரீராமர் தெற்கே வந்தபோது அவருடன் வந்த [illegible] அல்லி, என்று பெயரொன்றும்; அந்த [illegible] காவிரி பாய்ந்து பாயும் [illegible] அங்கிருக்கும் மலையின்மீது தனதுபெயர் [illegible]" என்னும் நாமதேயத்தால் ஒரு சிவலிங்கத்தை [illegible] பூஜைசெய்துகொண்டு வருகையில்; அந்தச்சிவலிங்கம் [illegible] அனுகூலமாக அங்கிருந்த பயங்கரமான [illegible], [illegible]யும், வீதிகள் கடைகள் முதலான [illegible]

தங்கி வியவசாயம் செய்பவர்களுக்கு வேண்டிய கால்வாய் முதலான பாசன வசதிகளை நியமித்து ஆண்டுவந்ததாகவும்; பிறகு அவனது முதல் குமாரனாகிய "தர்மவர்மசோழன்" ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தின் முதல் பிராகாரத்தைக் கட்டுவித்தும் அநேகதருமங்களைச்செய்தும் ஸ்ரீரங்கத்தை ஒரு கிராமமாக்கியதாகவும்; அவனது 2-வது குமாரனாகிய வெண்சோழன் ஆண்டுவந்தபோது காவிரிநதியினால் "வெண்ணாற்றைச்" சேர்த்து குடித்தன பாசன வசதியை விருத்தியாக்கியதால்; அச்சோழனுக்கு வெண்சோழன் என்ற பெயருண்டாகிய தென்றும்; பிறகு அச்சோழனுடைய குமாரனாகிய கரிக்காலச்சோழன், காவிரி நதியின்மீது பெரிய அணையைக் கட்டுவித்ததாகவும் சொல்லப்பெற்றிருக்கிறது.

இச்சாசனத்தையும் சரியான சாசனமென்று எண்ணக் கூடவில்லை; ஏனெனில், திரிசிரபுரமானது ஒருகாலத்தில் பயங்கரமான மூன்று சிரசுகளை உடைய ஒருராக்ஷதன் வதிந்தவிடமென்று ஸ்தலபுராணாதிகளால் ஸ்பஷ்டமாகிறது. மேலும்; அங்கிருக்கும் "தாயுமான சுவாமி" என்னும் சிவஸ்தலம் மஹாபுராதனமானதென்றும்; அங்கிருக்கும் சிவபெருமான், ஓர் தாயற்றப் பிள்ளைக்குப் பாலைக்கொடுத்து, பாதுகாத்தபடியால்; அந்தமூர்த்திக்கு மாத்ருபுவனேசுவரர் என்று சமஸ்கிருத பாஷையிலும், தாயுமானவர்என்று தமிழிலும் வழங்கிவருகையில்; வடதேசத்திலிருந்து வந்து இங்கு குடிபுகுந்த தாயுமான் நல்லி என்றவன்பெயர் எப்படிவந்ததோ தெரியவில்லை.

தென்னாட்டிற் சிறந்த தமிழ்பாஷையில் அச்சோழர்கள்வதிந்த காலத்தில் எழுதிய சில ஸ்தலபுராணங்களையும், முக்கியமாகக் கோயில் புராணம், இரணியவன்மச்சருக்கம் 9; 10, 11, 17, 23, 33, 52, 53, 132-கவிகளிலும்; மேற்படி புராணம் திருவிழாச் சருக்கம் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12; 13-வது கவிகளிலும்; பெரியபுராணம் கூற்றவநாயனார் சரித்திரம் 1, 2, 3, 4, 5-வது கவிகளிலும், கலிங்கத்துப்பரணி முதலானதுகளில் சோழர்களுடைய ஆதிசரித்திரம் முதலானதுகளை சொல்லப்பெற்றிருக்கின்றன— எப்படியெனில்,

கவுடேசன் என்னும் கவுடதேசத்தை ஆண்டுவந்த மகாராஜாவுக்கு சிங்கவர்மன், வேதவர்மன், சுமதி, என்ற மூன்று குமாரர்கள் பிறந்ததில்; முதற் குமாரனான சிங்கவர்மாவுக்கு தேகத்தில் வெண்குஷ்டம்கண்டு வருந்தியதனால் இனிப் பிறவித் துன்பத்தைச் சகிக்கமுடியாமல், தனது பிதுரார்ஜிதமான ராஜ்ய பாரத்தைத் தனது தந்தைக்குப் பிறகு, தன் தம்பிமார்களாகிய வேதவர்மா, சுமதி என்பவர்களே பரிபாலனம் பண்ணச்சொல்லிவிட்டு; தான் ஒரு சன்னியாசியைப்போல வேடந்தரித்தும், அப்போது தண்டகாரணியமாக இருந்த தென்னாட்டைநாடிவந்தும், தபோநிதியாகியும், முதலில் ஸ்ரீசைலம், காளாஸ்திரியில் தங்கியும், அங்குள்ள சிவமூர்த்திகளைப் பூசித்தும்; பிறகு காஞ்சீபுரத்துக்கேகி அங்குள்ள ஏகாம்பரநாதரைப் பூசித்தும்; பிறகு தில்லைவனமாக இருந்த சிதம்பரத்துக்குப்போய் அங்கிருந்த வியாக்கிரபாதரைத் தரிசித்தும்; பிறகு அவருடைய உதவியினால் பதஞ்சலி மஹாமுனிவரைத் தரிசித்தும்; அவரால் நடேசருடைய அருளைப்பெற்றும்; அங்கிருந்த 'சிவகங்கை' என்னும் திவ்விய தடாகத்தில் மூழ்கத் தனது தேகத்திலிருந்த வெண் குஷ்டவியாதிநீங்கி பொன்மேனியாக—இரணியவர்மா என்ற மறுபெயரைப் பெற்றும்; சதாசிவ

பக்தியில் மூழ்கி வசித்துவரும்போது; தனது தந்தை இறந்தசங்கதியைக்கேட்டு கௌடதேசமபோய், தானனுபவித்த சிவச்சுகங்களைச்சொல்லித் தக்கதண்டுதளாதிகளுடனும், திரவியத்துடனும், அங்கிருந்த 3,000 பிரம்மரிஷிகளுடனும் தில்லைவனத்திற்குத் திரும்பிவந்து, அங்கிருந்த பயங்கரமான காட்டைக்களைந்தழ, பயங்கர புலிகளைக்கொன்றும், அக்காட்டை நல்லநாடாக்கியும், அநேகவாவி கூப கூட கோபுரங் கோயில்களையும், தாமழைத்துவந்த மூவாயிர பிராம்மண ரிஷிகளாகிய அந்தணர்களுக்கு அழகிய வீடுகளையும், மானியங்களையும் நியமித்தும்; அந்தஸ்தலத்துக்குச்சமீபமாக, கீழ்புறத்தில் தான் குடியிருக்க 'படைவீடு' கட்டிவைத்தும்; சபாநாயகர் முதலான விக்கிரகங்களை உண்டாக்கியும்; சபாநாயகர் வீற்றிராநின்ற பஞ்சாக்ஷரப் படியின்மீது வியாக்கிரமர், பதஞ்சலியார் களால் பட்டாபிஷேகம் பெற்றும், புலிப்பதியாகிய சிதம்பரத்துக்கு அரசனாகிய தால், புலிக்கொடியை விருதாகப்பெற்றும், பஞ்சாக்ஷர உருவாகிய திருநீற்றைத் தரித்ததனால், திருநீற்றுச் சோழன் என்ற மற்றொரு சைவப்பெயரையும் பெற்றும், தம்குடிகளிடம் 5 ல் ஒருகடமையாக வரிவாங்கிக்கொண்டும், பிரபலமாக ஆண்டுவந்தபிறகு; கூற்றுவநாயனார் என்னும் ஓர் சூத்திரசூரன் புஜபலபராக்கிரமத்தினால் அநேக பெருநில குறுநில மன்னர்களை ஜயித்துக்கொண்டுக் கடைசியாக சிதம்பரத்துக்கு வந்து, பஞ்சாக்ஷரப்படியில் சோழனுக்குப் பட்டாபிஷேகம் செய்த விடத்தில் தனக்கும்பட்டாபிஷேகம்செய்து கிரீடம் தரிக்கவேண்டுமென்றுசொல்ல; அப்போது தில்லைமூவாயிரவர்பார்த்து, இராஜியபரிபாலனத்துக்கு க்ஷத்திரியனாகப்பிறந்தவனே தக்கவனாதலால்; சூத்திரனுக்குத் தகாதெனத் தடுத்துச்சொல்ல, அந்தக்கூற்றவநாயனார் கோபத்தினால் கொக்கரித்து, அந்தத் தில்லை மூவாயிரவரை வதைக்க எத்தனிக்கையில்; அந்ததில்லை அந்தணர் சோழனுடைய சகோதரனாகிய சேரனுடையதேசமாகும் மலையாளத்தில் குடி புகுந்தவிட, அவர்களை அந்த மலையாளத்தார் பட்டர்கள் என்றபெயரால் மரியாதையுடன் பாதுகாத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச்சரித்திரம் கூடியவரையில் அனுபவத்துக்குப் பொருந்தியிருக்கிறது. அந்தச் சிங்கவர்மன் அல்லது இரணியவர்மனுடைய சந்ததிகளே சோழர்கள் என்று பிரபலப்பெயர்களைப்பெற்று பிதா பரமென்னும் சிதம்பரத்தையும், கொள்ளிடக்கரையில் தீவுகோட்டையையும், திரிசிரபுரம், உரையூர், தஞ்சை, கருவூர், காஞ்சி முதலான விடங்களையும் பிரதான கெடிஸ்தலங்களாகக்கொண்டு ஆண்டு வந்ததாக அனேகசாசனங்களிருக்கின்றன — இதுநிற்க—

இப்போது ஆங்கில கவர்ன்மெண்டார் அதிகப்பொருளையும், புத்தியையும் செலவிட்டு புராதனசாசன சரித்திரங்களைத்தேடிக் கண்டுபிடித்து வருகின்றனர் அவர்களால்ஏவப்பட்டுத்தென்னிந்திய சரித்திரசாசனங்களைப்பரிசோதித்து கிரந்தமெழுதியஇராபர்ட்டு சுவேல் சாஸ்திரியாருடைய ஆர்கியாலோஜிகல் சர்வேசரித்திர புத்தகம், 2-வது வாலியம், 154 முதல் 160 வது பக்கங்களிலும், மிஸ்டர் எலியட்டு எழுதிய இந்துதேச சரிததிரத்திலும், கனம் போகன் அவர்கள் எழுதிசேர்த்த சேலம் ஜில்லா சரித்திரம் முதல் வாலியம் 39 வது பக்கத்திலும் அடியிற்கண்ட சோழர்களுடைய பெயர்களையும், ஆண்டகாலத்தையும் ஒருவாறு குறிக்கப்பெற்றிருக்கின்றன.

சோழர்களின் பெயர்களும்—ஆண்டகாலமும்.

விஜயாலயசோழன், கி-பி 855—380 ஆதித்தியவர்மா, 880—905, வீர சோழ நாராயணதேவன், 905—930 ஹரிஞ்ஜயராஜன், மூன்றுமாதம் தசோதி

தியராயன், 930—950 பராந்தகராயன், 950—970 திவியராயன், 970—990 இராஜராஜேந்திரன், 990—995 இராஜேந்திரன், 995—998 கரிக்காலசோழன், 950 இராஜராஜசோழன், 1023—1064, வீரசோழன், 1064—1112. விக்கிரமசோழன், 1113—1128 குலோத்துங்கன், 1128—1130 விக்கிரமதேவன், 1135—1146 என்றும்.

திருத்தணியில் அகப்பட்ட சாசனத்திற்கண்ட சிட்டாவின்படி.

கரிக்காலசோழன், சக்கிரவர்த்திசோழன், குடமசோழன், ருசிகசோழன், நாராயணசோழன, யாவதீபசோழன், இராஜராஜசோழன் (கி-பி 1023—64) விஜயாதித்தியசோழன், 1079 விக்கிரமாதித்தியசோழன், குலத்துங்கன், 1128-ஆம் கங்கைகண்டசோழன், குண்டலசோழன், சாரங்கதரன், விக்கிரமசோழன்; ஆதொண்டசோழன, இராஜசிங்கசோழன், விப்ரதேவசோழன், 1079 வருஷம் ஆநந்தவர்மன், இராஜேந்திரன், குலத்துங்கன். 11— பராக்கிரமசோழன்; என்றும்.

தஞ்சை பிருதீசுவரர் கோயில் மஹாத்மியத்தின் வம்சாவளியில்.

குலத்துங்கன், தேவசோழன், சசிசேகரசோழன், சிவலிங்கன, கரிக்காலன், பீமசோழன், இராஜராஜன், வீரமார்த்தாண்டன், கீர்த்திவர்தனன், ஜயசோழன் கனகசோழன், சுந்தரசோழன், காலாகலசோழன், கலியாணசோழன, பாதிரசோழன், என்றும்.

காஞ்சீபுரத்திலகப்பட்ட சாசன சிட்டாவின்படி.

விஜயசோழன், 991 ஆம—வீணைநீக்கியசோழன், 1011 உத்தண்டிசோழன், 1026 சுகுணசோழன், 1067 பிரபாகரசோழன், 1069 குணாகரசோழன், 1091 சுதிமணிசோழன், 1138 ஏகாம்பரசோழன்; 1186 மனோஹரசோழன், 1217 கற்பூரராஜகசோழன், 1242—1262 விஜயகாந்தகோபாலன், 1260 இராஜகுமார பகைப்பசோழன், 1260—72 என்றும்.

தில்லை, திரிசிராபள்ளி, கரூர் சாசன சிட்டாவின்படி.

இரண்மாயசோழன், தாயுமானசோழன், தருமவருமசோழன், ஸ்ரீரங்ககோயிலின், உற்பிராகாரம் கட்டுவித்தவன், விஜயாலயன் கி-பி ஆதித்தசோழன் பாரங்கதன், அல்லது கோபகேசரிவர்மா, அல்லது வீரநாராயணன், இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்ஜயன், இராஜாதித்தன்; கண்டராதித்தன்; ஆதித்தியவர்மா, மதுராந்தகன், பரகேசரிவர்மா, குலோத்துங்கன், ஜயதரசோழன், விஜயாதித்தன், வீரசோழன், குலோத்துங்கசோழன், ராஜராஜ குலோத்துங்கன், விக்கிரமசோழன், கிருமிகண்டசோழன்—ஸ்ரீராமாநுஜருக்கு விரோதி — மன்னரைவென்ற ராஜன் 1240 என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி தெரிவித்திருக்கிற சோழர்களுடைய சிட்டாவைப் படிப்பவர்களுக்கு அவர்களுடைய பெயர்களும், காலமும் இடத்திற்கிடம் வித்தியாசப்பெற்றிருத்தல் பிரதியக்ஷமாகும், அப்படி வித்தியாசப்பெற்றிருப்பதற்க்கு தக்க சாசன சரித்திரங்கள் இன்னும் அகப்படாமையே காரணமாகும்.

இனி அச்சோழர்களுடைய பெயர் இடம் காலம் காரியம்முதலானதுகளைப்பற்றி ஆங்கிலேய சரித்திர சாசனங்களுடைய கருத்துக்களைப்பற்றி தெரிவிப்பாம்.

மைசூர்ச் சமஸ்தான சரித்திரம்எழுதிய மிஸ்டர் ரைஸ், தமது சரித்திரம் முதல் புத்தகம் 212-வது பக்கத்தில்; மைசூருக்குக் கீழ்பக்கத்தில் கி-பி 867 முதல் 927ஞு ஆதித்தியவர்மா, இராஜேந்திரசோழனும்.—927முதல் 977ஞு வரையில் வீரசோழன் அல்லது நாராயணராஜனும், பிறகு 986ஞு முதல 1023 ஞு வரையில் தசோதித்தியராய சோழனும், பிறகு பாண்டிரிகராயன், ஹரிடவிராயன், தேவராஜன், திவியராயன், திரிபுவனன், வீரசோழன், முறையே ஆண்டதாகசாசனங்களகப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

சேலம்ஜில்லா சரித்திரத்தில் கனம் போகஸ் பாதிரியார் மேற்படி முதல் புத்தகம் 39-வது பக்கத்தின் முதலில் விஜயாதிசோழனும், கி-பி 878 ல் விஜயராய ஆதித்தியவர்மனும், பிறகு சிதம்பரத்தில் "கனகசபையை" க்கட்டுவித்த வீரசோழ நாராயணனும்;அச்சோழனுக்கு ஹிரன்ஐயன், தேசோதியன் பிராண தியாகராயன் முதலான குமாரர்கள் பிறக்க, அவர்களில் பிராணதியாகராயன்; சேதுராயனுடைய குமாரத்தியை விவாஹஞ்செய்து கொண்டதில் திவியராயனும், இராஜராஜேந்திரராயனும் இராஜேந்திரசோழனும் பிறந்ததாக எழுதி இருக்கிறார்.

தஞ்சையில் நீதியதிபதியாக இருந்த மிஸ்டர் பர்னல் சாஸ்திரியார் தென்னிந்தியா பாலியோகிராபி புத்தகம் 40-வது பக்கம், முதல் நோட்டில கி-மு 250-ம வருஷம் வடக்கே அரசுபுரிந்த அசோக மகாராஜன் காலத்திலே, தெற்கே சோழர்கள் சோடன் என்ற பெயர்களால் பிரபலமாக ஆண்டதாகவும், கி-பி 950-ஞு கரிக்காலசோழனும், 1023—1064ஞு இராஜராஜேந்திரனும்; 1064—1113ஞு வீரசோழன் அல்லது குலோத்துங்கனும், 1113—1128ஞு. விக்கிரமசோழனும்; 1335ஞு விக்கிரமாதிசோழனும், அச்சோழர்களில் இராஜராஜேந்திரன், சாலுகிய ஜாதியார் குடும்பத்தில் ஒருபெண்ணை விவாகம்செய்து கொண்டதில், காளிங்கநாடு வெங்கிக்கோட்டையும் சோழராஜியத்துடன் சேர்க்கப்பெற்றதாகவும், அச்சோழன்தான் 1059ஞு இலங்கையின்மீது படையெடுத்துப்போய் மஹேந்திரராஜனையும், அவன்மனைவி லோகமகாதேவியையும் பிடித்து சிறையில்வைத்து சோழநாட்டிலிருந்து ஒரு குருநில மன்னனைத்தருவித்து இலங்கைக்கு அதிபதியாக்கியதாகவும் எழுதி இருப்பதன்றியில்,

1064ஞு குலோத்துங்கசோழன் பாண்டியநாட்டையும், அதை ஆண்டுவந்த வீரபாண்டியனையும் பிடித்தும, காஞ்சீபுரத்தில் அப்போது பிரபலமாக இருந்த பல்லவரையும் ஜயித்து வசமாக்கியவ னென்றும் அந்தச்சோழனுக்கு த்தான் கோபகேசரி, சோவிராஜன், வீரராஜேந்திரன் என்றுதிப்பெயர்களாம் அவன்காலத்தில் சோழராஜியம் துங்கபத்திரா நதிக்கரைவரையில் பரவிப் பிரகாசித்ததாம். அவன் தந்தை ஜயித்த இலங்காபுரிகோட்டையைத் தக்கபடி பாதுகாத்துவந்தாலும்; மஹேந்திரனுடைய மகனான 26-வயதுள்ள 'கசியபன்' சிலகாலம் காட்டில் வனவாசியாகத் திரிந்துக்கொண்டிருந்தும், தக்க தண்டுதளாதிகளைத்தேடிக்கொண்டுவந்தும்,இலங்கையையாண்ட சோழனுடைய பிரதிநிதியைத் தாக்கி ஜயித்தும்,சிறையில்வைத்திருந்த தாய்தந்தைகளை விடுதலைசெய்தும், தானே செங்கோலைக் கைக்கொண்டு ஆண்டுவர; திடீரென்று மார்பு நோய்கண்டு மரணமடையவே, அவன் மந்திரியாகிய லோகேசுவரன் ஆண்டுவர; அவனுக்குப்பிறகு அவன்குமாரன் விஜயபாஹு அரசனுகினனும். அவன் சீயம் நாட்டு தானுபதியைத் தக்கபடி மரியாதைசெய்தும், சோழனுடைய தானுதிபதி

ணையத்தக்கபடி மரியாதை செய்யாமலும் உபேக்ஷையாக இருந்தபடியால்; சோழன், தனது நாட்டில்வந்து வதிந்துவந்த சிங்களநாட்டு ராஜாதிபதியைப் பிடித்து காதுமூக்குகளை அறுத்தும், அவமானப்படுத்தியும், இலங்கை நாட்டின்மேல் படையெடுத்துப்போய் தாக்க; 'விஜயபாகு' தக்கதண்டு தளாதிகளோடு வந்து தடுத்து சோழனை ஓட்டிவிட்டனர்,

அந்தக்குலோத்துங்கன் 1113௵ இறந்துவிட; அவனது இரண்டுகுமாரர்களில் விக்கிரமசோழன் அரசுசெய்யும்போது, சிங்களதேசத்தார் பெரும்படை எடுத்துவந்தும் ஜயித்தார்களில்லை. அந்தக்குலோத்துங்கனுடைய தாசிகுமாரனை ஆதண்டசோழன் பல்லவவீரர்களை முறியடித்ததாகத் திருத்தணிகையிலும், நாராயணவனத்திலும் அகப்பட்டசாசனங்களினால் ஸ்பஷ்டமாகிறது.

கரிக்கால சோழனுக்குப் பிறகு, சக்கிரவர்த்தி சோழனும், பிறகு சுதமான், சுசிராமன், நாராயணன் ஆண்டதாகவும்; நாராயணவன சாசனத்தின்படி ஆதண்டன், சுதர்மன், சூரியன், சிராஜுன், நாராயணன் ஆண்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

காளஸ்திரியிலகப்பட்ட சாசனத்தின்படி, குலோத்துங்கனுக்கு சாரங்கதரன் என்ற சகோதரனும், இராஜசோழன் என்னும் குமாரனும் இருந்ததாகவும்; அந்த சாரங்கதரன் நன்னயப்பட்டரிடம் தெலுங்கு வியாகரணம் வாசித்ததாக அப்பகவி எழுதியிருக்கிறார். இக்குலோத்துங்கன் வங்காளம்வரையில் போனதாகவும் ஒருசாசனத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

டாக்டர் கால்ட்வேல் சாஸ்திரிக்கு அகப்பட்ட சாசனத்தில், 1023-1064 வருஷம் இராஜராஜசோழன் ஒருசண்டையில் கொல்லப்பட்டதாகவும்; பிறகு விஜயாதித்தியசோழன் 15௵ ஆண்டு, 1079௵ இறந்ததாகவும், அவன் சகோதரன் விக்கிரமாதித்தியன், சாலுகிய குடும்பத்தில் ஒருபெண்ணை விவாஹம் செய்துகொண்டதாகவும், இராஜராஜேந்திர சோழன் மகனாகிய இராஜேந்திர வர்மன் 1079௵ சிங்காசனமேறி, லோகமாதாவை விவாகம்செய்துகொண்டு, 1064௵ முதல் 1113௵ வரையில் ஆண்டதாகவும்; அவன் சகோதரனாகிய கங்கைகொண்டான்சோழன் சுந்தரபாண்டியனுக்குப்பிறகு பாண்டியநாட்டையும் ஆண்டான் என்றும்; மற்றொரு சகோதரனாகிய குண்டலசோழன் சாலுகிய இராஜகுமாரத்தியாகிய விமலாவதியை விவாஹம்செய்துகொள்ள, அவள் வயிற்றில் சாரங்கதரன் பிறந்து மகா வித்வசிகாமணியாகப் பிரகாசிக்க, அவனது குமாரனாகிய விக்கிரமசோழன் 1116௵ முதல் 1128௵ வரையில் அரசு செய்தானென்றும்; அவன் மகன் குலோத்துங்கன் 1129௵ பட்டத்திற்கு வந்து தமிழ்நாடெல்லாவற்றையும் ஜயித்து ஆண்டானென்றும்; அவனுடைய தாசிமகனான ஆதண்டசோழன் தொண்டமான் சக்கிரவர்த்தி என்ற பெயரைப்பெற்று அப்போது பிரபலமாகவிருந்த பல்லவரை ஜயித்தான் என்றும்; அவன் தம்பி இராஜராஜசோழன் காலிங்கநாட்டையும், அவனுடைய தம்பி விஷ்ணுவர்த்தனன் 1079—1102௵ வரையில் காலிங்கநாட்டை ஆண்டதாகவும், அவர்களுக்கு சோடகங்கை என்ற ஒருசகோதரி இருந்ததாகவும் எழுதி இருக்கிறார்.

சிங்களதேச சரித்திரத்தின்படி, 1153முதல் 1186௵ வரையில் பராக்கிரமபாகு; குலசேகர பாண்டியன்மேல் படைஎடுத்துப்போய் இராமேசுவரத்தை ஜயித்து அடுத்திருந்த ஆறு குறுநிலமன்னர்களை ஜயித்தானும்,

காஞ்சிபுர—(191 Inscription) சாசனத்தின்படி, கர்பூர ராஜாங்க சோழன் 1242௵ சிங்காசனமேறி 20௵ ஆண்டும்; 104—194 நெம்பர் சாசனங்களின்படி, விஜயகாந்த கோபாலசோழன் 1250௵ சிங்காசனமேறியும். 60 — நெம்பர் சாசனத்தின்படி இராஜகுமார பங்கப்பதேவசோழன் 1265௵ சிங்காசனமேறி அவ்விடத்திய தேவாலயங்களில் நித்திய நைமித்திகச்சடங்குகளுக்கு வேண்டிய தருமங்களைத் திட்டப்படுத்தினனும்,

டாக்டர் புர்ஜஸ் (Dr Burgess) டாக்டர் பர்னல் (Dr. Burnell) சாஸ்திரிகளுக்கு அகப்பட்டசாசனங்களாகிய தஞ்சை பிருஹதீசுவரர் மஹாத்மியத்தின்படிக்கு,குலோத்துங்கசோழனுக்குப்பிறகு தேவசோழன்,சசிசோழன், சிவலிங்கசோழன், கரிக்காலன், பீமசோழன், இராஜேந்திரன், வீரமார்த்தாண்டன். கீர்த்திவர்த்தனன், ஜெயசோழன், கலியாணசோழன், பத்திரசோழன், கனகசோழன், சுந்தரசோழன், காலாகலசோழன், கலியாணசோழராஜர்கள் தஞ்சையைப் பிரதான பட்டணமாகக்கொண்டு ஆண்டுவந்ததாகத் தெரிவித்திருக்கின்றனர்.

1837௵ கல்கத்தாவில் ஜேம்ஸ் 'பிரின்சிப்' அவர்களால் பதிப்பித்த ஜர்னல் ஆப் ஆசியாடிக் சொசைடி சஞ்சிகை 6-வது வாலியம், 507-வது பக்கத்தில் கண்டிருக்கிற இரண்டொரு சோழர்களுடைய சரித்திர சாரத்தை இங்கெழுதுகிறோம்.

வயலவ ராச ஆதித்தியசோழனுக்கு 16-ம் வயது வந்தவுடனே திரிசிரபுரத்துக்கடுத்த காளியூரில் முடிசூட்டப்பெற்றான். முடிசூட்டப்பெற்றவுடனே தனது இராஜ்ய பரிபாலனத்தை மந்திரிவசத்தில் விட்டுவிட்டு, தான் சைவமதத்தைப் பரவச்செய்து வரும்நாளில், ஒரு காட்டானை வகைமோசமாக நாட்டில்வந்து குடிகளைவருத்துகையில், அதைப்பிடித்துவரும்படி 100 வீரர்களையனுப்பினான். அந்த வீரர்கள் யானையைத் துரத்திக்கொண்டுவரும்போது வழியில் ஒரு சன்னியாசி சிவன்கோயிலுக்குப்போய் பூசைசெய்து புஷ்பமாலையைத்தரித்து வருவதை அந்தக்காட்டானை கண்டுவந்து, அந்தச் சன்னியாசி தரித்திருந்த சிவபூஜா புஷ்பமாலையைப் பிடித்திழுத்து சின்னபின்னமாக்க; சன்னியாசிக்கு மிதமிஞ்சிய கோபம் ஜனித்து, அந்த யானையையும், அதையோட்டிக்கொண்டுவந்த 100 ஜனங்களையும் கண்டதுண்டமாக வெட்டிக்கொல்ல; அதுசங்கதியைச் சோழன் அறிந்து அந்த சன்னியாசியைக்கொல்ல சேனையுடன்வர; அந்தச்சன்னியாசி விபூதி உருத்திராக்ஷ மாலைமுதலான சைவசின்னங்களைத் தரித்திருப்பதைப் பார்த்தும் தம் படையைப் பின்னேநிற்கவிட்டு, தான் பாதசாரியாகவந்து சன்னியாசியின் பாதத்தில் வீழ்ந்தும்; தமது அபசாரத்தை க்ஷமிக்கவேண்டுமென்று வேண்ட, அதைகண்ட சன்னியாசி அந்தோ? இப்படிப்பட்ட சைவநெறியுள்ள மன்னனுடைய வீரரையும்,யானையையும் கொன்றோமே என்று பரிதபித்தும், இனி பிராணன் தரிப்பது தகாதென தனது கைவாளால் குத்திக்கொண்டு தன்பிராணனைவிடப் பிரயத்தனப்படுகையில், சோழன்பார்த்து ஐயோ, தனது பதாதிகள் ஓடிவந்ததனாலல்லவா? காட்டானைவந்து சன்னியாசியின் பூமாலையைக் கெடுத்ததாகையால்; அக்குற்றம் தன்னைச்சார்ந்ததென்றும், அக்குற்றத்துக்கு தன்னுயிரை விடுதல்தான் தருமமெனத் தானே தன்வாளால் குத்திக்கொண்டிறந்தானும். அப்படி சைவநெறி

விஷயமாகப் பிராணனைவிட்ட சோழன் மனைவி அப்போது பூரணகர்ப்பவதியாக இருந்தபடியால், அப்போது ஒரு ஆண் மகனைஅச்சுபதினத்திற் பெற அச்சிசுவுக்கு சுபச்சோழன் என்று பெயரிட்டார்கள்.

சுபச்சோழன் சிங்காசனமேறிய வுடனே ஜம்புகேசுவரத்துக்கு வந்து சிவபூசைசெய்துகொண்டு 36வது ஆண்டபிறகு,அவன்குமாரன் வாகுணசோழன் பட்டத்துக்குவந்து 75வது ஆண்டு வருகையில்; தனது மனைவியின் வலதகையைப்பிடித்து இழுத்து ஜம்புகேசுவரருக்கு தத்தம்செய்ய, அந்த ஈசுவரர் சோழன் தொட்ட வலதகையையமாத்திரம்விட்டு,மற்ற பாகத்தை அங்கீகரிக்கச்;சோழன் கண்டு,தனது பாவ எண்ணங்களையும்,கரத்தையும்பற்றி அநுதாபப்பட்டுவேண்ட, ஜம்புகேசுவரர் அந்த வலதகையையும் அங்கீகரித்தாராம். அவர்களுடைய குமாரன்.

புகழ்சோழன் உரையூரைத்தனது பிரதானபுட்டணமாக்கிகொண்டு 60வது ஆண்டான். அந்தப்புகழ்சோழனுடைய மந்திரி நாட்டில் தருமசத்திரம் முதலானதுகளைக்கட்ட திரவியத்துக்காக சோநாட்டின்மேல் படை எடுத்துப் போக; அங்கு, தோல்வியடைந்தபடியால், இராஜ மெய்புகலுக்காக சுமார் 100 பெயருடைய சிரசுகளை வெட்டிக்கொண்டுவந்துகாட்ட, அதில் ஒருசிரசு சிவவேடம் தரித்திருக்கக்கண்டு அந்தோ! சிவபக்தனையும் கொலைசெய்தாயோ என்று துக்கித்து; அந்தப்பாவத்துக்காக தன்னுயிரை மாய்த்துக்கொண்டானும். அவனுக்குப்பிறகு அவனது குமாரனும் மஹாவித்வசிகாமணியும் சைவபக்தனும் தரும நீதிமானுமாகிய.

கிருபாலசோழன் பட்டத்துக்கு வந்தான். அவன் தன்னாட்டில் ஒவ்வொருவீதியிலும் ஒருபெரிய மணியைககட்டித் தொங்கவிட்டு துஷ்டர்களாலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலும் குறைவு குற்றங்களுண்டானால், உடனே குடிகள்போய் அந்தமணியை அடித்தால்; மணியோசை உண்டானவுடனே அதிகாரிகள்போய் விசாரித்து நீதிசெலுத்தக் கட்டாயவிதிகளை நியமித்திருந்தபடியால்; அச்சோழன்காலத்தில் புலியும் பசுவும் ஒரு குளத்தில் தண்ணீர்குடித்ததாம்.

அச்சோழனுடைய குமாரனாகிய வீதிவிடங்கசோழன் ஒருநாள் இரதாரூட்ஞாக வரும்போது; ஒருதேவ பசுவும்;கன்றும் எதிரேவர,இராஜ கோலாஹலத்தினால் கன்று பசுவைவிட்டுப் பிரிந்து இரதத்தின் சக்கிரத்தில் சிக்கி இரண்டு துண்டாகப்பட்டது. இதைக்கேட்ட கிருபாலசோழன்; மகா துக்கப்பட்டு மந்திரியை அழைத்து, தன் வாளைக்கொடுத்துத் தன்குமாரனை வீதிவிடங்கனைக்கொன்றுவிட்டு வரும்படி உத்திரவு கொடுத்தனுப்ப;அம்மந்திரி,இராஜகுமாரனைக்கொல்ல மனமற்று, விதியின்றித் தன் பிராணனையேமாய்த்துக்கொள்ள;இராஜகுமாரன் கண்டு, அந்தோ! நமக்காக மந்திரிபிராணனை விட சம்பவித்ததே! என்று துக்கித்து,அந்தவாளால் தன்பிராணனையும் மாய்த்துக்கொள்ள—கிருபாலசோழன், அறிந்து; ஐயோ! ஒரு பிராணனுக்கு இரண்டு பிராணன் நஷ்டமாகியதைப்பற்றி கிலேசப்பட்டு, தமது ராஜியத்தை மந்திரிகுமாரனுக்குக் கொடுத்துவிட்டுத் தானும் வாளால் வெட்டிக்கொண்டிறந்தான் — அவனுக்குப்பிறகு

பூபாலசோழன் 16-வது வயதில் பட்டத்திற்கு வந்தான். அவனும மஹாசிவபக்தன்; அவன் காலத்தில் ஆதி சங்கராசாரியார் பிரகாசித்ததாக ஒரு சாசனம் சொல்லுகின்றது,

இத்தியாதி வித்தியாசங்களினால் சோழராஜர்கள் ஆண்டகாலம், இடம் அவர்களுடைய செங்கோல் சிறப்பு முதலானதுகளை ஸ்பஷ்டமாகக் காட்டும் சரித்திரசாசனம் இன்னமும் சரியாக அகப்படவில்லை என்று ஸ்பஷ்டமாகும்.

சோழர்களுடைய சரித்திரத்தைப்பற்றி சங்கத் தமிழ்புலவர் ஒருவ சோழர் அந்தாதி என்ற கிரந்தத்தில் விவரித்திரிக்கிறதாகவும், அந்த நூலை நமக்குத தருவதாகவும் மகா—ா-ஸ்ரீ சிவன்பிள்ளையவர்கள் சொல்லிக்கொண்டு வந்தவர், தம் உயிர் உள்ள நாள்வரையில் பலதரம் கேட்டும் தராமல் தரையை விட்டகன்றார். இப்படி நம்மவரிடம் புராதன புத்தகங்கள் இருந்தால், பலருக்கும் வெளியாகும்படி வெளியாக்காதிருப்பது ஆச்சரியம்.

ஆயினும் சோழர்கள் கல்வியையும்,கைத்தொழில்களையும்,விருத் தியாக்கியு இப்போது தென்நாடுகளி லிருக்கும் பெரும்பான்மையான சைவ வைணவக் கோயில் கோபுரங்களைக் கட்டிவைத்தும், சதாசிவ பக்தியிலும், விஷ்ணுபக்தியிலும் சிறந்தவர்களாகி பிரகாசித்திருந்த தன்றியில்; குடிகளிடம் ஐந்தில் ஒரு பாகமாக வரிவாங்கிக்கொண்டும், குடித்தனத்துக்கு இன்றியமையாத கால்வாய்கள், அணைகள் முதலான பாசனவசதிகளை உண்டாக்கியும்; தம் செங்கோலுக்குட்பட்ட குடிகளைத் தம் மக்களைப்போல பாவித்தும் தருமநீதியாக ஆண்டுவந்தார்கள் என்பதற்கு சற்றும் சந்தேகமில்லை.

தமிழ்கவிகளால் பாடப்பெற்ற சோழர்களாவன:

(அபிதானகோசத்தின்படி)

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி—சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறைபனைப் போரிடைவென்றவன், சேரமான் மாவெண்கோவுக்கும், கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதிக்கும் நட்பினன். பாண்டரங்கண்ணனாராலும், ஔவையாராலும், உலோச்சனாராலும், பாடப்பட்டவன்.

சோழன்நலங்கிள்ளிசேட்சென்னி — இவன் இலவந்திகைப் பள்ளியிலே பிறந்த சோழன். எறிச்சலூர்மாடலன், மதுரைக் குமாரனாற் பாடப்பட்டவன்.

சோழன் உருவலப் பஃறேறிளஞ் சேட்சென்னி—இளஞ்சேட்சென்னி உருவப்பஃறேரிளையோன் என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவன். இவன் வீரங்கொடைகளாற் சிறந்தோன். அழுந்தூர்வேளிடத்துப் பெண்கொண்டோன் என, நச்சினார்க்கினியர் கூறுவர், இவன் கரிகாற்சோழன் தந்தை. இவனைப் பரணரும்,பெருங்குன்றூர்கிழாரும் பாடினர்.

சோழன் கரிகாற் பெருவளத்தோன்சோழன் கரிகாலன்—உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னிபுதல்வன். இவன் நாகூர் வேளாளனிடத்துப் பெண்கொண்டவன், என நச்சினார்க்கினியர் கூறுவர்.

சோழன் கிள்ளிவளவன்— கோவூர் கிழாராற் பாடப்பட்டவனும் ஆவத்தூர் கிழார், கோவூர்கிழார், மாறொக்கத்துநப்பசலையார், இடைக்காடனார் முதலிய புலவர் அநேகராற் பாடப்பட்டவனும் இவனே (புறநானூறு)

சோழன் பெருந்திருமா வளவன்—இவன் குராப்பள்ளியிலே இறந்தவன்- காவிரிப்பூம்பட்டிணத்துக் களிக்கண்ணனாராலும், மருத்துவன்றாமோதரனாராலும் பாடப்பட்டவன்.

சோழன் நல்லுருத்திரன்—இவன் புலமை மிக்கோன் என்பது புறநானூற்றில் வரும் அவன்பாடலாலினிது புலப்படும்.

சோழன்மாவளத்தான்—இவன் சோழன் நலங்கிள்ளி தம்பி, தாமப்பல் கண்ணனாராற் பாடப்பட்டவன் (புறநானூறு)

சோழன் நலங்கிள்ளி—பாடும் புலமையுடையவன்- சாத்தனார், கோவூர் கிழார், ஆசத்தூர்கிழாரென்னு மூவராலும் பாடப்பட்டவுன்.

சோழன் நெய்தலங்கான விளஞ்சேட்சென்னி—ஊன்பொதி பசுங்குடையாரென்பவராற் பாடப்பட்டவன்.

சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி—தித்தன் என்னும் சோழன் மகன்- தந்தையைப்பகைத்து நாடிழந்து நல்குரவாற் புல்லரிசியுமுண்டு, சிலகாலமிருந்து பின்னர் நாடுகொண் டரசுபுரிந்தவன் (புறநானூறு)

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி—சேரமான் அந்துவஞ் சேரவிரும்பொறைக்குப் பகைவன். இவனைப்பாடிய புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி—பாணராலும், கிழாத்தலையராலும் பாமாலைசூட்டப்பட்டவன்.

சோழநாட்டுப் பிடவூர் கிழார்மகன் பெருஞ்சாத்தன் — மதுரை நக்கீரனாராற் பாடப்பட்டவன்- பின்னர் நச்சினார்கினியராலும், பொருளதிகாரவுரையினுள்ளே எடுத்துக்கூறப்பட்டவன்.

சோழிய வேனாதி திருக்குட்டுவன்—மிக்ககொடையாளன்- எறிச்சிலூர் மாடலன், மதுரைக்குமரனாராற் பாடப்பட்டவன்—பின்னும்பலருளர்.

அந்தச்சோழர்கள் காலத்திற்றான் ஔவை, கம்பர், காலமேகர், அம்பிகாபதி, தமிழ்தண்டி,வில்லிபுத்தூரார், வரந்தருவர், ஒட்டகூத்தர், புகழேந்தி முதல் பொய்கையார், கோவூர்கிழார்,முதலான வித்துவான்கள் சிறந்து அநேகநூல்களை இயற்றி சோழநாட்டை அலங்கரித்தார்கள்—அன்றியும் அந்நாட்டைப்பற்றி.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே—
மண்ணாவதுஞ்சோழ மண்டலமே—என்றும்
வேழ முடைத்து மலைநாடு மேத்தக—
சோழ வளநாடு சோறுடைத்து—என்றும் ஔவையார்பாடிபுகழ்ந்தார்

அந்தச்சோழர்களில் சிலர்,அக்காலததில் இராஜாதிகாரிகளாக இருந்தசாளுக்கிய ஜாதியாரிடததிலும், பல்லவ ஜாதியாரிடத்திலும் சம்பந்தம் செய்ததாகத் தெரிவிததோமல்லவா? ஆகவே பல்லவர்சரித்திரத்தை இதனடியில் எழுதிகிறோம்.

ஆறவது அத்தியாயம்.

பல்லவராஜர்கள்.

பல்லவர், ஒருகாலத்தில் இந்தத் தக்ஷணதேசத்தில் அதிக பிரபலராகி இராஜியபரிபாலனம் செய்தார்கள். அவர்களுடைய முக்கியபட்டணம் காஞ்சி. அவர்களுடைய தெற்கு எல்லை சோழநாடும், வடக்கு எல்லை கோதாவரி தீரமுமாம்; குண்டூரில் அகப்பட்ட ஒருசாசனத்தினால் அவர்கள் நான்காவது நூற்றாண்டில் பிரபலராக இருந்தவர்களென்று டாக்டர் பர்னல் (Dr. Burnel) சாஸ்திரியார், தமது தென்னிந்திய ஓலை சாசனகிரந்தம் 36 முதல் 39 ஆவது பக்கங்களிலும்; கனம் போகஸ் (Rev. Foulkes) அவர்கள் சேலம்ஜில்லா சரித்திரத்திலும் சிறப்பித்து எழுதியிருக்கிறார்கள்.

அக்குடும்பத்திலாண்ட முக்கிய அரசர்களாவன.

விஜயகாந்தவர்மா, விஜயபுத்தவர்மா, ஸ்காந்தவர்மா, வீரவர்மா, சிம்மவர்மா, விஷ்ணுவர்மா; ஸ்காந்தவர்மா, சிம்மவர்மா, நந்திவர்மா, சிவ விஷ்ணுவர்மா, மஹேந்திரவர்மா. நரசிம்மவர்மா, மஹேந்திரவர்மா, பரமேஸ்ரவர்மா, நரசிம்ம வர்மா, நந்திவர்மா, பல்லவமல்லநந்தி, பராக்கிரவர்மா என்பவர்களே.

செந்தமிழிற் கண்ட சிட்டாவின்படி.

உக்கிரதண்டன் என்ற லோகாதித்தன், இராஜசிங்கன் என்றசிங்கவிஷ்ணு, குணபரானென்ற மஹேந்திரவர்மா, வாதிரபிகொண்ட நரசிம்மவர்மன், மஹேந்திரவர்மன், பரமேச்சுரவர்மன், நரசிம்மவர்மன், பரமேச்சுரவர்மன், நந்திவர்மன், நந்திவர்மன், பல்லவமல்லன் என்பவர்களாம் —

பல்லவர்கள் காலத்தில் அதாவது கி. பி. 650 முதல் 700 வரை ஆதிசங்கராசாரியார், காஞ்சீபுரத்தில் மதோபதேசம்செய்ததாகவும், கி-பி 733 முதல் 714-ம் வரை மேற்கு சாளுக்கிய வமிச விக்கிரமாதித்திய ராசன் காஞ்சீபுரம்வந்து, நந்திபோதவர்மானைக்கொன்று, காஞ்சியை வசமாக்கி, 11 நூற்றாண்டின் கடைசியில் இராஜேந்திர குலத்துங்க ஆதண்டசோழர்கள் காஞ்சீபுரதைத்தாக்கி பல்லவர்களை ஜயித்து, அதைச் சோழநாடாக்கிக்கொண்டதாகவும் ஒருசாசனத்தினால் தெரியவருகிறது.

பல்லவருடைய ஜாதி சரித்திர விவரம்.

அந்த பல்லவர் இன்னஜாதி, இன்னகுலத்தவர்கள் என்று இன்னும் விவரமாகத் தெரியவகை இல்லை. 1872வரு வெளியான ஜாதிசங்கிரக சாரமென்னும் கிரந்தத்தின்; 171வது பக்கத்தில், பல்லவன் என்றபதம், புரவலன் என்ற பதத்திலிருந்து உண்டானதாகவும்; அதாவது—புரம் என்ற தேகத்தில், பலம் என்ற வல்லவனுனபடியால், அது (புரவலன்) அரசனுக்குரிய பெயரென்றும்; அன்றியும்; வடமொழியில், பகரம், வகரமாகவும்; வகரம், பகரமாகவும் உச்சரித்தல் வழக்கமானபடியால்; பல்லவன் என்பது வல்லவன் எனப் பொருளாகுமென்றும் சொல்லியிருப்பதோடு; பல்லவன் என்பது இராஜனுடைய பெயர்எனப் பெரியபுராணம், திருத்தொண்டர் புராணம் 8-வது கவிகளையும் ஷ புராணம் திருநாவுக்கரசு சரித்திரம் 84, 88, 95, 144, கவிகளையும், நாலாயிரபிரபந்தம், திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் 2, 6, 8, முதலானகவிகளையும்;

சுந்திரமூர்த்தி நாயனுர் தேவாரப்பதிகம், திருவேகம்பம் 10 கவியையும், கோயிற் பத்து 4-வது கவியையும், காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் செய்வீகவுலா 61, 102, 146, 151 கவிகளையும்; தொண்டமண்டல சதகம் 89 கவியையும்மேற்கோள் களாகக் காட்டப்பெற்றிருக்கிறது—இது நிற்க.

பல்லவருடைய ஜாதி சரித்திர சாரத்தைப்பற்றி, இப்போது மதுரை செந்தமிழ் (சேபகிருதுவூ பஙகுனிமீ) பத்திரிகையில் மஹாவித்வசிகாமணி யவர்களாகிய ஸ்ரீமான் மகா-௱-ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் எழுதியுல்ல இதிகாசத்தின் ஒருபாகத்தை இசனடியில் பதிப்பித்திருக்கிறேம்

ஜாதியிற் பல்லவசக்கிரவர்த்திகள் க்ஷத்திரியரென்றும், பாரத்துவாஜ கோத்திரத்தவரென்றும்; இவர்களின் தென்மொழிப்பெயர் போத்தரசர் என்றுந்தெரியவருகின்றன- வடமொழியிற் பல்லவம் என்றலும், தென்மொழி யிற் போத்து என்றலும் பொருள், தளிர் என்பதொன்றேயாம். இக்காலத்தில் எக்காரணத்தாலோ பல்லவ ரென்பதற்குத் தூர்த்தரென்றும், போத்தரசன் என்ப தற்குச் சோம்பேறி யென்றும் பொருள் வழங்குவதாயின. வன்னியர்கள் எனப் பகரும் பள்ளிகள், தாமே அக்கினிகுல க்ஷத்திரியர்களெனவும், பல்லவ சக்கிர வர்த்திகளின் வங்கிசத்தவர்களெனவுஞ் சொல்லித்திரிகின்றனர். சோழ பாண்டியவரசரின் சந்ததியார்ப்போலப் பல்லவர்களின் பின்னேரொருவரும் இக்காலததின்மையால் இதனுண்மை அறியக்கூடவில்லை. சோழன் சாதியிற் கள்ளனென்றும், பாணடியன் சாதியில் மறவனென்றும் ஒருசாரார் கொளகை- இஃது உண்மையாயின், பள்ளிகள் பல்லவரெனக் கொள்ளவும் இடமுண்டு. ஆனற் சிலாதாமிரசாஸனங்களால் வெளியானவளவிற் பல்லவர்கள் அவ்வளவு தாழ்ந்தவர்களாகத் தோற்றப்படவில்லை. அவ்வரசர்களின் மதம் சைவமும் வைணவமுங் கலப்புண்டிருந்தது. அக்காலதமேத அருக புத்தசமயங்களும் நட மாடின. சீனதேயத்து யாத்திரிகனுன ஹியூந்த் ஸாங் என்பவர் கச்சிக்கு வந்தகாலத்தில் (அஃதாவது கி-பி 7-ம் சதாப்தம்) அந்நகர்க்கண் நூறுபோதியார் விகாரங்களும், பிண்டியார் பள்ளிபலவம், என்பது சைவ வைஷ்ணவ ஆலயங் களும் இருந்தனவாகச் சொல்லுகின்றார்.

பல்லவம் என்ற தொண்டைமண்டலம் ஈராறு நாடுகளாகவும், எண்ணென் பது கோட்டங்களாகவும் வருக்கப்பட்டிருந்ததென்றும், ஒருகாலத்தில் அத னெல்லை இருபெள்வமும், கிருஷ்ணாநதியும், பொன்னியாறுமாக விருந்ததென் றும், பின்னர் எட்டு ஒன்பதாஞ் சதாப்தஙகளிற் பன்னாட்டரசர்களும் ஒருங்கு திரண்டு படைஎடுத்து வந்தமையாற் சிதறுண்டு போயிற்றென்றுந் தெரியவரு கின்றன. அந்நாட்டின் சிறப்பையும் ஊர்களின் வளனையும் எடுதது ரைக்க எம்மா லாவதன்று. சோழனுக்குப் புகாபோலவம், பாண்டியற்கு நெல்லூர் போலவும்; (இக்காலத்தார் கடலுண்டி என்பர்) பல்லவனுக்கு மாமல்லபுரம் (மகாபலிபுர மன்று) கலவாணிக நிறைந்த நகராயிருந்தது. நாளடைவில், தென்பாண்டி நாட்டை முந்நீருண்டதுபோல், இந்நகரைக் கடல்கொளள மேற்புறத்துநின்ற சிற்சில கட்டிடங்கள்மாத்திரம் மீந்தன.

இனிப் பல்லவ சக்கிரவர்த்திகளின் அருமை பெருமை முதலியவற்றைச் சிறிதாராய்வோம். வடபால் சாளுக்கிய வேந்தர்களும், தென்பால் சோழபாண்டி யர்களும்; அவர்கட்கு எக்காலத்தும் மாற்றார்களா யிருந்தார்கள். ஆனல் ஈழத் தரசர்கண்மட்டுந் தோழமைகொண்டிருந்தனர், பல்லவவமிசத்துககுத தலைவன்

உக்கிரசண்டன் என்ற லோகாதித்தன்: இவன் சுமார் 1400-வருடங்களுக்கு முன்பு இருந்தவன்-பல்லவராஜனான சாளுக்கியவேந்தனென்ற ரணரஸிகனுடன் அநேகம் போர்புரிந்தவன்: இவன்றன் மகன் சிங்கவிஷ்ணு என்ற ராஜசிங்கன்- காஞ்சிநகரில், இப்போது கைலாசநாதர்கோயில் எனவழங்கும்இராஜசிம்மேச்சுரத்தைக் கட்டிவைத்தான். இவனுடைய மகன் குணபாரன் என்ற மகேந்திரவர்மன்- இவன்காலத்தில்(அஃதாவது கி-பி 640ம் ஆண்டில்) பல்லவநாடு தெற்கே திரிசிரபுரம்வரையிற் பரவியிருந்தது. சிராப்பள்ளியில் உச்சிப்பிள்ளையார் கோயில் கட்டினவன் இவனேயென்பர், இவன் முதலில் விஷ்ணு சமயத்தவனாயிருந்து, பின்னர் சைவனானவன்- தென்னிந்தியாவில் நான்கு மலைக்கோட்டைகளைக் கட்டிவைத்தான்.

இவன்றன் மகன் நரசிம்மவர்மன்- சாளுக்கியவேந்தனான புலிகேசியை (கி-பி 610—644) வாதாபி என்ற பாடியில்வென்று, தான் முன்னமிழந்த நாடு நகர்களை மீட்டினான்- அறுபத்துமூவருள் ஒருவரான சிறுத்தோண்ட நாயனார் இவ்வாதாபிப்போர்களத்திற் பல்லவன் பக்கல்நின்று போர்புரிந்து வென்றதாகச் சொல்வதுண்டு. இந்த நரசிம்மவர்மன் பேரன் பரமேச்சுரவர்மன் வல்லபராஜனாகிய விக்கிரமாதித்தனுடன் வினைசெய்து வெற்றியடைந்தவன்- இவன் மகன் நரசிம்மவர்மன் கொடியசைவன்-விஷ்ணுவெனில நாவறுப்பவன்; ஆனால், பிராமணர்களைபொதுவாகக் காப்பாற்றிப் பேணிவந்தான்- வைஷ்ணவ ஆழ்வார்களுள் ஒருவரான திருமழிசையார் இருந்தகாலம் இதுவே யாகலாம். இவ்வாழ்வாரைக் கச்சியிலிருக்க வொண்ணாது பல்லவராஜன் வெருட்ட, அவருந் தொண்டைமண்டல நீங்கித் திருககுடந்தைவந்து சேர்வாராயினர். இவன்றன் மகன் பரமேச்சுரவர்மன் வைணவ சமயத்தவன்; கச்சிமாநகரில் வைகுண்டப்பெருமான்கோயிலென வழங்கும் பரமேச்சுர விண்ணகரத்தைக் கட்டுவித்தான். இவன் அளித்த நன்கொடை எண்ணி லடங்காதனவாகும். இவனுடைய மகன் நந்திவர்மன் பராக்கிரமசாலி யாகாததால், வல்லபனான விக்கிரமாதித்தன் இவனைப் பலகால் முறியடித்துக் கச்சியைக் கைக்கொண்டு, நவபொன்னும் முத்தும் மணியும் இராஜசிம்மேச்சுர முதலாய தேவாலயங்களுக்கும், ஓத்தில் வல்லரான சதுர்வேதியர்களுககும் வழங்கினான்.

விக்கிரமாதித்தன் கச்சிமாநகரைவிட்டகல, தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய ஹிரணியவர்மப் பல்லவராயன் வழியிற்றோன்றியவனும், மிக்க புஜபல பராக்கிரமசாலியும், வீரவைஷ்ணவனுமான நந்திவர்மன் பல்லவமல்லன் சக்கிரவர்த்தியானான்-இவன் முடிசூடிய காலம் கி-பி 710-க்குப் பின்னராகலாம், இவன் சோழபாண்டியரையும், இடதர்கோனான் பிருதிவி வியாக்கிரனையும், இன்னும் அநேக அரசர்களையும் நெல்வேலி, மண்ணைக்குடி, கருவூர் முதலாய போர்களங்களிற் றோல்வியடையச் செய்தனன். நந்திக்கலம்பகத்தினும், பாரத வெண்பாவினும், புகழ்ந்து பாடப்பெற்றுள்ளவனும், தெள்ளாறு என்ற படைவீட்டிற் பகையெறிந்தவனும், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான நந்திபுரவிண்ணகரத்தைக்கட்டுவித்தவனும், இவனாக விருத்தல்வேண்டும். இவனுடைய முதன்மைபெற்றசேனாபதி, வில்லிவலங்குடையனான உதயசந்திரன் என்பான். பல்லவசக்கிரவர்த்தி கண்மீதுபொறாமைகொண்ட தென்னாட்டரசர் பலர் ஒன்றுகூடித் தொண்டைமண்டலத்திற் படையெடுத்து அருபுர நகரை முற்றுகைசெய்ய, அதனைகேள்வியுற்ற, உதயசந்திரன் விரைந்து

சென்று அவர்களையெல்லாம் ஒருங்குசிதறவித்தான். ஆலி நாடுடையாரான திருமங்கையாழ்வார் இக்நந்திவன்மன் சரித்திரத்தைப் 'பெரியதிருமொழிப் பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்துட் பரக்கவிளக்கியிருக்கின்றார். மேலும் இதுவரையில் வெளிப்பட்டுள்ள கசகுடி, உதயேந்திரம் செப்பேடுகளாலும் இவற்றைத் தெளிவாய்க்கண்டுகொள்க.

நந்திவன்மப் பல்லவமல்லன் இறந்தபிற்பு, சுமார் 50, 60 வருஷத்திய சரித்திரம் செவ்வையாய் விளங்கிற்றில்லை. தென்னாட்டு மூவேந்தரும், வல்லபவரசரும் பலாட்டியர்களாகிப் பல்லவர்களை நாசங்கண்டு அவர்கள் நாட்டையுங் வர்ந்துகொண்டனர். ஆயினும், பல்லவநாட்டில் ஓர்பகுதியேனுநின்று பல்லவராயனென்ற பெயருஞ் சிலகாலமாக வழங்கிவந்தது. சோழகுலத்தரசர்கள் தலைப்படவும், அவர்களில் வீரநாராயணசோழனும், ராஜராஜசோழனும் (கி-பி 985, 1004) சேரம், பாண்டியம், கொங்கு முதலான தென்னாடுகளைக் கைப்பற்றி ஏகசக்கிராதிபதிகளாகிவிட, பல்லவதேசம் யாருமறியாவண்ணம, முற்றும் அழிந்தொழிந்தது''

பல்லவர்கள் காலத்திலே செங்குந்தர் என்னும் மரபினர் குருநில மன்னர்களாகவும், படைத்தலைவராகவும் இருந்தமையால்; பல்லவராஜன் அச்செங்குந்தருக்கு முதலியார் என்று பெயர்கொடுததாக ஈட்டி எழுபது 29வது பாட்டில்,

இந்திர னயன்மாறேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபாண்மையினுற் சூலமழுப்படையத் தனர்க்கு
முந்திய நாமந்தானு முதலியராகையாற் செங்
குந்தர் சந்ததிக்கு மப்பேர் முதலியாரென்று கூறும்

என்று சொல்லப்பெற்றிருக்கிறது—அன்றியும்

ஈட்டி எழுபது 3-ம் பாட்டில்.

விடங்கமேழாதி வீதிவிடங்க மாரூர்வெண்காடு
நடங்கொளுதில்லை மூதூர்பஞ்ச நன்னதி சாய்க்காடு
மிடங்கொள் மாகளமேழு மிடைமருதூர் செங்காடுந்
தொடங்கிய தருமவாட்சிச் செங்குந்தர்த் தொகுதிவாழ.

என்றுசொல்லி இருப்பதால், தியாகராஜர் பூஜிக்கப்படும் விடங்கம் என்று பெயர்பெற்ற ஏழுஸ்தலங்களிலும், மாகாளமென்று வழங்கும் ஏழுஸ்லங்களிலும், செங்குந்தர் தர்மகர்த்தர்களாய் பரிபாலனம் செய்தார்கள். என்பதாம்—ஒட்டக்கூத்தர் அவர் மரபைச்சார்ந்தவர். ஆதித்தசோழனுக்கு உதவிசெய்த பழுவூர் வீரன் முதலான 12 பெயர் அம்மரபைச் சார்ந்தவரேயாம்,

ஏழாவது அத்தியாயம்.

பாண்டியராஜியம்.

பாண்டிமண்டலத்தின் எல்லை—வெண்பா.

வெள்ளாறது வடக்கா மேற்குப் பெருவழியாந்
தெள்ளார் புறைகன்னி தெற்காகு—முள்ளார்வத்
தாண்ட கடல்கிழக்கா மைம்பத்தறுகாதம்
பாண்டி நாட்டெல்லைப் பதி.—என்றகவியின்படி.

பாண்டியதேசம் சோழதேசத்துக்குத் தென்மேற்கிலே, கன்னியகுமரி வரையுமுள்ள தேசம். அதற்கு இராஜதானி மதுரை. பாண்டியர் அரசுசெய்தமையின் அஃது அப்பெயர் பெற்றது—அதுவே தமிழ்பிறந்தநாடு, அதுமிக்க புராதனமும்,பெருமையும், அநேகசரித்திரங்களும், புண்ணியக்ஷேத்திரங்களும்; நதிகளும்; மலைகளுமுள்ள நாடு–தமிழ் முச்சங்கமிருந்ததும்;அநேக புலவர்களைத் தந்ததும் அந்நாடே. அப்பாண்டியர்களுக்குப் பிங்கல நிகண்டில் "செழியன் கூடற்கோமான தென்னவன் வழுதி மீனவன் பஞ்சவன் மாறன் கௌரியன் வேம்பின் கண்ணியன் கைதவன் மலையப்பொருப்பன் வைகைத்துறைவன் "குமரிச்சேர்ப்பன் கோபாண்டியனே"—என்றால்; செழியன், கூடற்கோமான், தென்னவன், வழுதி, மீனவன், பஞ்சவன், மாறன், கௌரியன்; வேம்பின் கண்ணியன், கைதவன், மலையப்பொருப்பன், வைகைத்துறைவன், குமரிச்சேர்ப்பன் என்றுதிபெயர்களுண்டென தெரிவிக்கப்பெற்றிருக்கின்றது.

அப்படித்தெரிவிக்கப்பெற்றிருப்பினும், அப்பாண்டியாகளுடைய சரியான சரித்திரம் திட்டமாக இன்னும் கிட்டவில்லை. கடிகைமுத்துப் புலவர், வரகுணராம பாண்டியன்மேல் இயற்றிய திக்குவிஜய மென்னும் கிரந்தத்திலும்; திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், மலையனூர் தாழனூர் அரசன் பாவாடராயன்சரித்திரம், கல்லாடம், காதற் பிரபந்தம், பாண்டியன் உலா, பாண்டியர் அகவல் முதலான கிரந்தங்களிலும் ஒருவாறு சொல்லப்பெற்றிருப்பினும்; அச்சங்கதிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ளவைகளாகவும், புராணரீதியாகவும் எழுதப்பெற்றிருப்பதால்; உண்மையான சரித்திரமென்று இக்காலத்தார் அங்கீகரித்தல் அபூர்வம்—எப்படியெனில்.

காதற் பிரபந்தத்தில் "ஆதியுமை மீனாக்ஷியம்மை பங்கின்மேவு சொக்கநாதர் கொடுக்க நடாத்துகின்ற செஙகோலான்"—என்றும்.

திக்விஜயம் 4-வது தாழிசை"சொக்கர் கொடுத்த செங்கோன்மைத்துரைப் பாண்டியனை வரகுணனைத், தக்க விஜயத்திரம்பாடித் தமிழாற்றுதிக்க மனந்துணிந்தேன்"என்றுதி கவிகளினாற் பாண்டிய வமிசத்தில் பார்வதிதேவியானவள் மீனாக்ஷியம்மையாக,அக்கினிமூலியமாய் மலையத்துவஜ பாண்டியன் மகளாக வந்து; அந்த மலையத்துவஜனுக்கு ஆண் சந்ததிகளில்லாமையால்; பாண்டிய இராஜியபரிபாலனத்தைக்கொண்டு அரசுசெய்தும்; பிறகு சொக்கநாதரென்னும்

சோமசுந்தரபாண்டியனை விவாகம்செய்துகொண்டும்; தனது இராஜியபரிபால னத்தைத் தனது நாயகரான சொக்கநாதரிடம் கொடுத்துவிட்டதாகவும்; பிறகு அந்தச் சொக்கநாதருக்கும், மீனாக்ஷியம்மைக்கும் பிறந்த உக்கிரப்பெருவழுதி பாண்டியனிடம், இராஜியபாரத்தை கொடுத்தும், பாண்டியர் சந்ததியை விருத்தி யாக்கியதாகவும்; அந்தச்சந்ததியைச் சார்ந்தவரே இப்போது சிவகிரியிலிருக்கும் ஜமீன்தாரரென்றும் தெரிவிக்கப்பெற்றிருக்கிறது.

திக்குவிஜயம் 9-வது கவியில்—"பரிமயிற் குமரனிவனெனப்பகர்வர், படை மூனைச்சமரில்வியலா, மெரியனற்பொறியி லவனுதித்ததவ னெழுதிசைக்கடவு மார்பனே" என்ற கவியினாற்,சுப்பிரமணியக்கடவுளே வரகுணராம பாண்டியன் என்றும், சுப்பிரமணியக்கடவுள் சூரனைஜயிக்க அக்கினி சம்பந்தமாக வந்தாற் போல, வரகுணபாண்டியனும் அக்கினியில் பிறந்தான் என்றும் தெரிவிக்கப் பெற்றிருக்கிறது.

திருவிளையாடற்புராணம்—திருமணப்படலம் 18-வது கவியில்—"மீனவன் கொடியுங்காணவெம் புலிக்கொடியும்" என்ற கவியினால் பாண்டியர்களுக்கு மீனக்கொடி என்றும் தெரிவிக்கப்பெற்றிருக்கிறது. வேறு சில புராணங்களிற் பாண்டியர்களிற் குலசேகரபாண்டியன்: முதல் முதல், மதுரையில் வந்து பாண்டியராஜியத்தை ஸ்தாபித்து, மலையத்துவஜ பாண்டியனைப் பெற்றதாகவும், அவன் சூரசேனனுடைய குமாரத்தியை விவாகஞ்செய்துக்கொண்டதில்,பார்வதி தேவியே தடாதகைப் பிராட்டியாகப் பிறந்து, தனது தந்தையின் இராச்சிய பரிபாலனஞ்செய்து வருகையில்; மதுரைச்சுந்தரேசுவரரை விவாகஞ்செய்துக் கொண்டு, தனதுபாண்டிய ராஜியத்தைத் தனது நாயகராகிய சுந்தரேசுவரரிடம் கொடுத்து ஆளும்படிசெய்ததாகவும்; அந்தச்சுந்தரேசுவரருடைய சந்ததிகளே சிறந்தப் பாண்டியர்களாகித் தென்தேசத்தில் பிரகாசித்ததாகவும் சொல்லப் பெற்றிருக்கின்றது.

பாண்டிய ராஜர்களின் பெருமை.

வருண சிந்தாமணியின்படி.

குலசேகரபாண்டியன்—மதுரையில் எழுந்தருளியிருக்கிற மீனாட்சிசுந்தரே சுவரர்களுக்கு ஆலயம் செய்வித்து; மதுரை நகரத்தையும் உண்டுபண்ணி, ஆதி சைவர்களைக் காசியிலிருந்து கொண்டுவந்து அந்நகரத்தில் ஸ்தாபித்தவன்.

மலையத்துவச பாண்டியன்—10,000-வருடமிருந்து, மதுரையையாண்டு 99-அசுவமேத யாகஞ்செய்து, 100-ஆவது யாகத்தில் உலக மாதாவாகிய உமாதேவியாரை மகளாகப்பெற்றவன். தடாதகைப் பிராட்டியார் சோம சுந்தர பாண்டியன், உக்கிரகுமாரபாண்டியன் இம்மூவரும்,முறையே உமாதேவி யார், சிவபெருமான், முருகக்கடவுளாதலின், அவர்கள் பெருமையை யெடுத்துச் சொல்ல ஒருவராலுமுடியாது.

இராஜசேகர பாண்டியன்—அன்பு மிகுதியினாலே வெள்ளியம்பல வாண ராகிய நடேசப்பெருமானைக் கான்மாறி யாடியருளும்படி செய்தவன்,

குலபூடண பாண்டியன்—இவன் தன்னாட்டிலுண்டான க்ஷாமம் நீங்கச் சிவபெருமானிடத்து உலவாக்கிழி பெற்றவன்.

வரகுணபாண்டியன்—இவன் பக்திமிகுதியினாலே சிவபெருமான் சிவலோகங்காட்டியருளத் தரிசித்தவன்.

குலசேகர பாண்டியன்—இவன் தனக்கும் இடைக்காடரென்னும்புலவருக்குமுள்ள பிணக்கைச் சிவபிரானாலே தீர்த்தருளப்பட்டவன்.

அரிமர்த்தன பாண்டியன்—இவன் மாணிக்கவாசகசுவாமிகளைமந்திரியாகக் கொண்டு, அவரால் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்து தரப்பெற்று, பின்பு சோமசுந்தரக்கடவுளை மண்சுமக்கச்செய்து; அவரைப் பிரம்பாலடித்து, அவரது திருவருள் பெற்றவன்.

கூன்பாண்டியன்—இவன் திருஞானசம்பந்த சுவாமிகளால் தனது கூனல் நிமிரப்பெற்றுச் சுரவியாதி நீங்கிச் சமணரைக் கழுவிலேற்றி, முன்போலச் சைவமதத்துட் பிரவேசித்தவன்—என்று சொல்லப்பெற் றிருக்கிறது.

மஹாவம்சம் என்னும் கிரந்தத்தில்—தடாதகை என்னும் மாதை இலங்கையையாண்டுவந்த விஜயன் என்பவன் விவாஹம் செய்துகொண்டதாகவும் சொல்லப்பெற்றிருக்கிறது. இத்தியாதி சங்கதிகளினால் உண்மையான சரித்திரம் இன்னதென்று அறியக்கூடவில்லை. இனிப் பாண்டியர்களுடைய சங்கதிகளைப் பற்றி ஐரோபியருக்கு எட்டியவிவரங்களை எழுதுவாம்.

பாண்டியர்களைப்பற்றி கிரேக்குதேச பூகோளசாஸ்திரிகளுடைய கணக்கின் படிக்கும்; (Marcopolo) மார்க்கபோலோ சாஸ்திரியின் கணக்கின்படிக்கும், கி-மு 404௵ பிரபலமான இராஜவமிசத்தாரென்றும், வராஹமித்திரரும், பிருஹத்ஸம்ஹிதையிலும் அப்பாண்டியர்களின் பெருமையைப்பற்றியும், தாம்பிரபர்ணி நதியின் பெருமையைப்பற்றியும் புகழ்ந்து எழுதியிருப்பதாகவும்; மாகஸ்தீன் (Magesthen) கணக்கின்படி; கி-மு 250௵ பிரபலப்பட்ட இராஜர்களென்றும்; அசோக மகாராஜனுடைய சாசனகணக்கின்படி, கி-மு 77௵ பிரபலம்பெற்ற அரசர்களென்றும்; மஹானாமர் எழுதிய மஹாவம்சம் என்னும் சரித்திரகணக்கின்படி, கி-பி 459, 477௵ இலங்கைத்தீவு மன்னர்களிடம் சண்டைசெய்து ஜயித்தவர்களென்றும், பவுத்தர் கி-மு 447௵ நிர்வாணத்தை யடைந்தபோது, இலங்கைநாட்டு விஜயராஜன் பாண்டியன் மகளை விவாகம் செய்துகொண்டான் என்றும்; ஐரோப்பாவைச் சார்ந்த ரோமாபுரியை கி-பி 80௵ ஆகஸ்டஸ் அரசன் (Augustus) ஆண்டபோது, ஒருபாண்டியன் அவ்வரசனுடைய சினேகிதத்தை நாடி அவனது ஸமஸ்தானத்துக்குத் தனது ஸ்தானபதியை அனுப்பியதாகவும், மிஸ்டர் கால்டுவேல் (Caldwell) சாஸ்திரியார் எழுதிய திருநெல்வேலி சரித்திரம், 17-வது பக்கத்தில்எழுதப்பெற்றிருக்கிறது.

கல்கத்தாவில் 1827௵ ஜுலைமீ பதிப்பித்த, ஜர்னலாப் ஆசியாடிக் சொசைடியின் சரித்திரத்தில், இலங்கைசரித்திரத்தைப்பற்றிஎழுதியதில், ஐயோத்திக்கு அரசனாக இருந்த குலசேகரனுடைய மருமகன், உக்கிரசேனன் மரபில்வந்த மாருத பிராட்டியானவள், உக்கிரசேனனை விவாகம்செய்துகொண்டு, தென்றிசையை நாடி இலங்கைக்குவந்து, அடங்காபத்து என்னுமிடத்தில் வரவொத்திமலையோரத்தில், அரண்மனையைக்கட்டி வாழ்ந்துவருங்கால்; வாலும் சிங்கமுகமுமுள்ள ஒரு மகவைப்பெற்று, அதற்கு வராஜசிங்கமென்று பெயரிட்டு அரசனாக்கியதாகவும்; அந்த வராஜசிங்கனென்னும் அரசன் மதுரைப்பாண்டியன் மகளாகிய சாமதூதியை விவாகம்செய்துகொண்டதனால்; மதுரை முதலான

பல நாடுகளிலிருந்து பிராம்மணாதி பலஜாதியாரை அழைத்துப்போய், இலங்கையிற்குடியேற்றியதாகவும், மேற்படி புத்தகம் 48-வது பாராவில், 54 பாண்டியர்கள் இலங்கையின் 5 விடங்களில் இராஜதானியை ஸ்தாபித்தும், அவைகட்கு இளஞ்சிங்கவாகு என்பவனை அரசனாக்கியதாகவும், அந்த 54 பாண்டியர்கள் திரும்பி வருகையில், கடலில் திமிங்கிலத்தினால் கொல்லப்பட்டதாகவும்; அந்தப்பாண்டியர்களுடைய மனைவியர்கள் பலஜாதியார்களோடு இலங்கைக்குப்போய், மூகமலை, யாழ்ப்பாணம் முதலான விடங்களில் குடியேறி, தம் கணவர் மரணத்தைக்கருதி அக்கினிப்பிரவேசமானதாகவும் எழுதப்பெற்றிருக்கிறது.

வேறு சிலபுராண சரித்திர சாசனங்களினால், அடியிற்கண்ட பாண்டியர்களாண்டதாகத் தெரியவருகிறது.

குலசேகரபாண்டியன், மலையத்துவஜ பாண்டியன், தடாதகைபிராட்டியார், உக்கிரபாண்டியன்—(காஞ்சிசோமசேகரன் மகள் காந்திமதியைக் கலியாணம் செய்தவன்) வீரபாண்டியன், அபிஷேகபாண்டியன், விக்கிரபாண்டியன்—ஜயினமதஸ்தன், இராஜசேகர பாண்டியன்—சிறந்தவித்வான், குலோத்துங்கபாண்டியன் அநந்தகுண பாண்டியன்—அவன் காலத்தில் ஸ்ரீராமர் இலங்கைக்கு வந்தார். ஜயினர் சண்டை; குலபூஷணபாண்டியன் (சோழனைதாக்கினான்) ராஜசிம்ஹ பாண்டியன் (சோழன்மகளை மணந்தவன்) ராஜராஜேந்திர பாண்டியன்—(சோழனைத்தாக்கிததோற்றான்) ராஜேசுவரபாண்டியன், ராஜகம்பீரபாண்டியன், பிரதிப பாண்டியன், புருஹூரதபாண்டியன், பிரதாப பாண்டியன், சுந்தரபாதசேகரபாண்டியன்—(அநேககோயில்களைக் கட்டிவித்தான்—சோழனோடு எதிர்த்து அகழியில்விழுந்து இறந்தான்) வரகுணபாண்டியன், (சோழனையும் தொண்டமானையும் ராஜியாக்கினான்) இராஜ இராஜபாண்டியன், சுகுணபாண்டியன், சித்திரவிரஹபாண்டியன், சித்திரபூஷணன, சித்திரத்துவஜபாண்டியன், சித்திரவர்மபாண்டியன், சித்திரசேனபாண்டியன், சித்திரவிக்கிரமபாண்டியன், ராஜமார்த்தாண்டபாண்டியன், இராஜசூடாமணிபாண்டியன்; இராஜசார்துலபாண்டியன், யுவஜராஜ குலோத்துங்கபாண்டியன், ஆயுதபிரவீணபாண்டியன், ராஜகுஞ்சரபாண்டியன், பரராஜ பயங்கரபாண்டியன்; உக்கிரசேனபாண்டியன், மஹாசேன பாண்டியன், சத்துருஞ்சயபாண்டியன், பீமரதபாண்டியன், பீமபராக்கிரமபாண்டியன், பிரதாபமார்த்தாண்டபாண்டியன், விக்கிரமபாண்டியன், உயுத்தகோலாஹல பாண்டியன், அதலவிகிரமபாண்டியன், அதலகிர்த்திபாண்டியன், கீர்த்திவிபூஷண பாண்டியன்—பிரளயகாலம், வமிசசேகரபாண்டியன்—தமிழ்முதற்சங்கம ஆரம்பித்தவன், வமிசசூடாமணிபாண்டியன். பிரதாப சூரசேனபாண்டியன், வமிசத்துவஜபாண்டியன், ரிபுமர்த்தனபாண்டியன், சோழவமிசபாண்டியன், சேரவமிசபாண்டியன், பாண்டியவமிசாந்தக பாண்டியன், வமிசசூடாமணி பாண்டியன், குளத்துவஜபாண்டியன், வமிசவிபூஷணபாண்டியன், சோமசூடாமணிபாண்டியன், குலசூடாமணிபாண்டியன். ராஜசூடாமணிபாண்டியன், பூபசூடாமணி பாண்டியன், குலேசபாண்டியன்—தமிழ்வித்வான்—அரிமர்த்தன பாண்டியன்; அவனுடைய மந்திரி மாணிக்கவாசகர்—காஞ்சிச்சோழர்களைச் சைவர்களாக்கி அநேக ஜயினரைக் கல்காணத்திலாட்டிக் கொன்றவன், ஜகந்நாதபாண்டியன், வீரபாஹு-பாண்டியன், விக்கிரமபாண்டியன், சுரபிபாண்டியன், குங்கும பாண்டியன், கற்பூரபாண்டியன், காருணியபாண்டியன்; புருஷோத்தமபாண்டியன, சத்துருசேனபாண்டியன் குலப்ஜாபாண்டியன்—அந்தக் குலாப்ஜ பாண்டி

யனைச் "கூன்பாண்டியன்," என்றம்சொல்வதுண்டு அவன்சோழராஜனைஜயித்தும், அவனுடைய குமாரத்தி வாணிதீசுவரியை விவாகம்செய்துக்கொண்டும், அவள் தந்தையை மந்திரியாக வைத்துககொண்டான். அவன் ஜயினமதஸ்தனாக இருந்தபடியால், சைவமதத்திற் சேரக்கருதி, அவன் மனைவியார் திருஞானசம்பந்தரைத் தருவித்துச் சைவமதத்தைப் போதிப்பித்தும், அரசனுடைய 'ஜுரர' நோயை மந்திரபலத்தால் நீங்கும்படி செய்ததனால்; அவன்சைவனாகி அப்பாண்டியன் அநேக ஜயினரைக் கல்காணத்திலாட்டிக் கொல்லச்செய்வித்தான். அவன் காலத்தில்தான் அரபிநாட்டிலிருந்து மகமதியர் முதல்முதல் மதுரையில்வந்து தங்கினதாக ஒரு சாசனம் தெரிவிக்கிறது. பிறகு வீரபாண்டிய சோழனும்.

பாண்டியருடைய ஜாதி முதலான விவரங்கள்.

பாண்டியர்கள்—பாரதம், ஹரிவமிச முதலானகிரந்தங்கலின்படி, சந்திர வமிசக்ஷத்திரியர்களாம். பாண்டியர்களும் சேரசோழர்களுடைய பந்துக்களே.

அப்பாண்டிய நாட்டை ஸ்தாபித்தவன் துஷ்யந்தன் தம்பியாகிய திஷியந்தனது பௌத்திரனாகும் ஆகிரதன் புத்திரன் என "அபிதானகோசத்தில்" அறிவிக்கப்பெற்றிருக்கிறது. அவனே குலசேகரபாண்டியன்போலும். அவன் தென்மதுரையை நகராக்கி, நான்குவருணத்து ஜனங்களையும் ஸ்தாபனம்செய்து, காசியிலிருந்து ஆதி சைவர்களையும் கோயிற்பூஜைக்காக கொணர்ந்து இருத்தி, அகஸ்தியர் அனுமதிபடி அரசுபுரிந்தவனும் — அக்குலசேகரபாண்டியன் மகன் மலயதுவஜ பாண்டியனும். மலயமலையைத் தனது கொடியில்தீட்டிக்கொண்டமையால் அப்பெயர் உண்டாகியதுபோலாம்—அவனும் அகஸ்தியரை உசாவியே எக்காரியமும் செய்பவனென்பது அக்கொடியின் குறிப்புப்பொருளாம் — அப்பாண்டியன்காலம் துவாபரயுகமென சில சரிததிரங்களுடைய கருத்து—பாண்டியர்களுடைய சரியான சரித்திரங்கள் சாசனரீதியாக இன்னும் கிட்டாமையால், திருவிளையாடற்புராணத்தில் செப்பியிருக்கும் சிலருடைய சரிததிரங்களைமாத்திரம் அபிதானகோசத்தின் சங்கிரகமாக இதனடியில் பதிப்பித்திருக்கிறோம்.

தமிழ் திருவிளையாடலிற் கண்டிருக்கும் சில பாண்டியர்களாவன.

குலசேகரபாண்டியன்—காலத்திலே, அவன் ராஜதானியாகிய மணவூரிலே வசிக்குந் தனஞ்சயன் என்னும் வணிகன மேற்றிசையிலுள்ள ஊர்களிற்சென்று, வாணிகஞ்செய்து மீளும்வழியிலே, கடம்பவனத்தில் இராத்தங்கியபோது; அங்கே ஒருதிவ்விய விமானமும, அதன்கீழே சிவலிங்கபெருமானும், அங்கே தேவர்கள்வந்ததும், அன்றிரவெல்லாம் அருச்சனைபுரிந்ததுங்கண்டு, அதிசயித்துத்தானுந் துதித்து வணங்கிக்கொண்டு விடியற் காலத்திலே, அவ்விடத்தினின்றும் நீங்கி அரசனையடைந்து, தான்கண்டதைகூற; அரசன் உடனேசென்று அவ்வனத்தைவெட்டிச் சிவபிரான் கனவிடைச் சென்று, தனக்குக்கூறிய பிரகாரம்ஆலயமும், தனக்கு அரண்மனையும், நாலுவருணத்தாருக்கு வீடுகளும், வீதிகளும், மதில்களும், பிறவும்வகுத்து நகராக்கினனும், (திருநகரங்கண்ட 3-ம் திருவிளையாடல்).

குலசேகரபாண்டியன் மகன், மலயத்துவஜபாண்டியனுக்கு, அவன்மனைவி காஞ்சனமாலை வயிற்றிலே புத்திரோற்பத்தி யில்லாமற்போக, அவன் யாகஞ் செய்து, அவ்யாகத்தினிடமாக உமாதேவியாரைத் தடாதகைப் பிராட்டியா ரென்னும் பெயரோடு மூன்றுவயது நிறைந்த மகவாகப்பெற்றார்; நான்காம் திருவிளையாடல்..

மலயத்துவசன், தடாதகைப் பிராட்டியாருக்கு முடிசூட்டிச் சிவபதமடைந்த பின்னர், தடாதகை பிராட்டியார் திக்குவிஜயத்துக்கெழுந்து, திசைதோறும் அரசரைவென்று, வடதிசையிற் கைலாயஞ்சென்று, அங்குள படையேற்ற, சிவப்பிரான் வெளிப்பட, அவரைக்கண்டமாத்திரத்தே மும்முலைகளுள் ஒன்றுமறைய, அதுகண்டு நாணிச்செயல்மறந்து நின்ற தடாதகைப் பிராட்டியாரைச் சிவபிரான்நோக்கி, உன்னை நாம் மதுரையில்வந்து மணம்புரிவாம்; மீண்டேகுக— என்றருளிச்செய்தனர். அவ்வாறு மீண்டு மதுரையை யடைந்தபோது; சிவபிரான் சோமசுந்தரபாண்டியனுர் என்னும் பெயரோடுசென்று, உலகறியத்திரு மணம்புரிந்து மதுரையை ஆண்டனர்.—ஐந்தாம் திருவிளையாடல்.

சோமசுந்தரபாண்டியனுக உலகாண்ட சிவபிரான், தடாதகைப்பிராட்டியார் வயிற்றிலே, உக்கிரவருமன் என்னுங் குமாரனைத் திருவவதாரஞ்செய்வித் தருளினுர்—11-ம் திரு—உக்கிரவருமபாண்டியன், சோமசேகரனென்னும் அரசனது புத்திரி காந்திமதியை மணம்புணர்ந்தான—12-ம் திருவிளையாடல்.

உக்கிரவருமபாண்டியன், அரசுபுரிந்துவரும்நாளில், அசுவமேதயாகந் தொண்ணூற்றொறுசெய்து முடித்தபோது; இந்திரன் பொறாமையுற்று, வருணனை ஏவிக்கடல்பொங்கிப் பாண்டியநாட்டை அழிக்கும்படிசெய்ய, ஓரிரவினுள்ளே கடல் சினங்கொண்டெழுந்து, நாட்டைமூடி நகரவாயிலையடுத்தது. அதனைச்சிவபிரானுலுணர்ந்த உக்கிரவருமன் தான்முன்னே சிவன்பாற்பெற்ற வேலையெறிந்து சுவறும்படி செய்தான்—13-ம் திருவிளையாடல்.

உக்கிரவர்மபாண்டியன்; காந்திமதியிடத்திலே வீரபாண்டியனென்னுங் குமாரனையீன்ற பின்னர், தனது நாடுமழையின்று வருந்தலைக்கண்டு துன்பக் கடலிலாழ்ந்துகிடக்க, சோமசுந்தரக் கடவுளவனுக்குக் கனவிலே தோன்றி நீ மேருமலையையடைந்து; அம்மேருவரசனைச் செண்டாலடித்து, வணங்கி அம்மலையிலுள்ள பொன்னறையைத் திறந்து, வேண்டுமளவு பொன்னைவாரிக் கொணர்ந்து வழங்கி, மழைபெய்து நாடுமலியுங்காரும் நினது நாட்டைக்காக்கடவை, என்று அனுகிரகிக்க; அவன் தன்சேனைகளோடு புறப்பட்டுப்போய் மேருவையடைந்து செண்டைப்பிரயோகித்து நிற்ப, அவன்வெளிப்பட்டு பொன்னைப் பொதிசெய்துபோக வென்ன, அவவாறுசெய்து மீண்டு தன் நாட்டைக்காத்தான்—15-ம் திருவிளையாடல்.

வீரபாண்டியன், வேங்கை வாய்ப்பட்டிறக்க; அவன்மகன் அபிஷேக பாண்டியனுக்கு முடிசூட்டுதற்கு முகூர்த்தம்வைத்து, மந்திரிகள் முடியைத் தேடிப் பார்த்தபோது, அதனை வீரபாண்டியன் காமக்கிழத்தி மக்கள்களவிற் கவர்ந்துபோயினரென் றுணர்ந்து கவன்றிருப்ப, சிவபிரான் வணிகனுகி மாணிக்கப்பொதியோடு சென்று; அவருக்கு வேண்டிய அளவுமாணிக்கம் விற்றது—17-ம் திருவிளையாடல்.

வருணன்—தன்வயிற்றுநோயை சிவபிரானாலே தீர்ப்பிக்கும்பொருட்டுகடல் பொங்கியெழுந்து, மதுரையைச் சூழும்படிசெய்தபோது, அவன் கருத்துணராத அபிஷேகபாண்டியன் ஓலமிட்டழ, அதற்கிறங்கிச் சிவபிரான் அக்கடலைவற்றுவித்து, அதுவாயிலாக வருணனுக்குஅனுக்கிரகித்தார்—18-ம் திருவிளையாடல்.

அபிஷேகபாண்டியன் சிவபதமடைந்த பின்னர், அவன்மகன், விக்கிரமபாண்டியன் அரசுபுரிந்துவரும்நாளிலே, சமணசமயப் பிரவேசஞ்செய்திருந்த சோழராசன், அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, அத்திகிரி, ஏமகூடம், விந்தம் என்னும் எட்டுமலைகளினுமுள்ள சமணகுரவர் எண்ணாயிரவரையுமழைத்து, அபிசாரவேள்வியொன்றை இயற்றுவித்து, ஒரு யானையை எழுப்பி, பாண்டியனைக் கொல்லுமாறு ஏவ, அதனையறிந்த பாண்டியன் சோமசுந்தரபெருமானை வேண்ட, அவர் ஒருவேட்டுவவடிவங்கொண்டு அவ்வி யானையைக்கொன்று பாண்டியனைக காத்தருளினார்—22-ம் திருவிளையாடல்.

விக்கிரம பாண்டியனுக்குப் பின்னர் அவன்மகன் ராஜசேகரன் அரசுபுரிந்துவரும்நாளிலே, கரிகாற்சோழன் சமஸ்தானத்து வித்துவான் ஒருவன், மதுரையடைந்து, அரசன் பாற்சென்று அளவளாவிக் கொண்டிருக்கையில்; கரிகாற்சோழனுக்கு அறுபத்து நான்குகலையும் வரும், உனக்கோபரதமொழிந்தொழிந்த அறுபத்து மூன்றுமே வருமென்ன, பாண்டியன் அதுகேட்டு மானத்தாற்றூண்டப்பட்டவனாய், உடனே தானே நாடகநூல் வல்லாரைவரவழைத்து அவர்பால் அதனைக்கற்கும்போதுண்டாகிய மெய்வருத்தத்தை நோக்கி, இடையறாதபஞ்சகிருத்தியத்தின் பொருட்டு ஆனந்தத்திருத்தாண்டவஞ்செய்தருளும் என்றுகூறித் தவங்கிடக்க, சிவன் அவன பக்திக்கிறங்கி இடக்காலூன்றி வலக்கால்வீசி ஆடியருளினார்—24-ம் திரு.

இராஜசேகரனுக்குப் பின்னர் அவன்மகன் குலோத்துங்கபாண்டியன் அரசுபுரியுங்காலத்திலே, திருப்புத்தூரிலிருந்து மதுரைக்கு வழிக்கொண்டுசென்ற ஒருவேதியன் தனனுடன்சென்ற மனைவியையும், மகவையும் ஓராலின்கீழிருத்தி, அவளுக்காகத் தண்ணீர்தேடிச்சென்று மீண்டபோது, ஆலின்மீதுகிளைகளிலே சிக்குண்டிருந்த அம்பொன்று காற்றால் அலைப்புண்டு வீழ்ந்து கீழேபடுத்திருந்த பார்ப்பனிவயிற்றிலே தைத்து, உயிர்துறந்து கிடக்கக்கண்டு ஒருவேடன் நிற்ப, அவனே கொன்றானென்றெண்ணி, அவனைக்கைப்பற்றிக்கொண்டு, இறந்தமனைவியைத்தூக்கித்தன்முதுகிற்கட்டியும், பிள்ளையைஅககலிலேதாங்கிச்சென்று பாண்டியன் முன் முறையோவென்று வீழ்ந்துபுலம்ப; பாண்டியன்: வேடனைப்பார்த்து, யாது கூறுகின்றாயென்ன, வேடன் இக்கொடும்பழியான்செய்ததன்று, செய்தாரையும் அறியேன், இதுசத்தியமெனக்கூறினான். அதுகேட்ட பாண்டியன சோமசுந்தரக கடவுளுடைய சந்நிதியையடைந்து விண்ணப்பஞ்செய்ய, நாளை வணிகதெருவிற்சென்று அங்கே மணப்பந்தலில்நடக்கும் செய்தியைக்காண; என்று அசரீரிகேட்க—அவ்வாறே பாண்டியன் அப்பார்ப்பானோடு மற்றைநாள் வணிகவீதியிற்சென்று மண வீட்டருகே நிற்க, யமதூதர் நேற்றுப்பார்ப்பனியுயிரை ஆலமரக்கிளையிற் சிக்கியிருந்த அம்மை வீழ்த்தி எவ்வாறுகொணர்ந்தேமோ, அவ்வாறே இம் மணமகனுயிரையுமோருபாயத்தாற கவர்வோமென்ற சொற்கேட்டு இருவரும் ஐயமீங்கினர்—25-ம் திருவிளையாடல்.

குலோத்துங்க பாண்டியன் காலத்திலே—வேற்றூரிலிருந்துபோய் மதுரையை வாழ்பதியாக்கி, வாள்வித்தை கற்பித்துக்காலக்கழிவ செய்யுமோராசிரியனுடைய மாணாக்கனாகிய சித்தன் என்பவன், அவ்வாசிரியனுடைய மனைவியை புணர எத்தனிக்க; அவள் கடவுளைத்தியானிக்க, அவர் ஆசிரியனைப்போல அங்கேசென்று, நாளைவா இருவருங்கலந்து வாட்போர்செய்வாம்—என,சித்தன் அடுத்த நாளிலே எதிர்க்க, கடவுள் ஆசிரியனைப்போல் நின்று அவன் அங்கத்தைத் வெட்டினார்—27-ம் திரு.

குலோத்துங்கபாண்டியனுக்குப் பின்—அவன்மகன் அனந்தகுணபாண்டியன் காலத்திலே. தன்நாடடிலே சைவப்பயிரன்றிச் சமணப்பயிர் வேர்கொள்ளா திருத்தலைநோக்கிய,சமணகுரவர்கள் 8,000பேர் பாண்டியனைக்கொல்ல மானுஷயாகத்திலே எழுப்பிய அசுரன் ஒருநாகசர்ப்பமாகி மதுரையையடைய, பாண்டியன் அந்நாகத்தைப் பாணத்தாற் கொன் றொழிக்கும்படி சிவன் அனுக்கிரகஞ்செய்தார்—28-திரு.

அனந்தகுணபாண்டியனுக்குப் பின்—அவன்மகன் குலபூஷணன் காலத்திலே,சேதிராயன்—மதுரைமீதுபடையெடுக்கப்போகின்றான்எனக்கேள்வியுற்று, மந்திரி சித்ரசாமந்தன் என்பவனிடம் அளவிறந்த திரவியங்களைக்கொடுத்துச் சேனையைத்திரட்டும்படி ஆஞ்ஞாபிக்க, அவன் அத்திரவியத்தைச் சிவாலயத் திருப்பணிக்கும், சிவபக்தருக்கும் வழங்கிவிட்டு, 6-மாசமாகச் சிவகைங்கரியத் திற்போக்கினான்,அதுகேட்டு பாண்டியன் மந்திரிசாமந்தனை ஒரேநாளில்சேனைதருதல்வேண்டுமென, அவன் சோமசுந்தரரை வேண்ட, அவர் ஒருகுதிரைவீரனாகவும், கணங்கள் சேனவீரராகவும் வெளிப்பட்டு பாண்டியனுக்கு மெய்காட்டியறிவித்தார்—30-ம் திரு.

குலபூஷணனுக்குப்பின்—அவன் மகன் இராஜேந்திரபாண்டியன் நாளிலே, காடுவெட்டியசோழன மதுரைச்சோமசுந்தரரை நேரில்போய் வணங்க கருதிப் பாண்டியனுக்கு பொன்னணிகளை வரிசையாயனுப்ப, பாண்டியனும் அச்சோழனுக்கு சிலவரிசைகளையனுப்ப,சோழன்மகிழ்ந்து தனது மகளை அப்பாண்டியனுக்கு மணஞ்செய்யவிரும்ப, அதையறிந்த பாண்டியன்தம்பி அரசசிங்கன், என்பவன் காஞ்சிநகருக்கேக,சோழன் தன்புத்திரியை மணஞ்செய்து, பாண்டிய நாட்டைக் கைப்பற்றக்கருதி வந்ததைப் பாண்டியன்கேட்டு, சோமசுந்தரரை வேண்ட, அவர் அச்சோழனைமருமகனோடு பிணித்துவந்து பாண்டியன் முன்னர் விட, பாண்டியன், அவர்களை சோமசுந்தரருக்கு முன்னிறுத்தி அவருக்கு தண்டம் யாதெனவேண்ட, அவர், உன் எண்ணப்படி புரிக என்றருளச் சோழனுக்கு வேண்டிய உபகாரங்களைக்கொடுத்தும் தனது தம்பிக்கும் தனது செல்வத்து சிலவற்றையுங்கொடுத்தான்—35-ம் திரு.

இராஜேந்திர பாண்டியனுக்குப் பின்னர் இராஜேசனும், அவனுக்குப்பின், இராஜகம்பீரனும், பிறகு பாண்டியவமிசதீபனும், பிறகு புரந்தரசித்துவம், பிறகு பாண்டிய வமிசபதாகனும் முறைமுறை அரசுசெய்த பின்னர்; சுந்தரேசபாதசேகர பாண்டியன் அரசுசெய்துவருங்காலத்திலே; சோழராஜன் படையெடுத்துச்சென்றபொழுது, பாண்டியன் சிவபெருமானிடத்து முறையிட்டு போர்புரிந்து, சோழனை மடுவில்வீழ்த்திக்கொன்றான்—37-ம் திரு.

சுந்தரேசபாதசேகர பாண்டியனுக்குப்பின பட்டமடைந்த வரகுணபாண்டியன்; சிவலோகத்தை தன் மானிடசரீரத்தோடு காணவேண்டுமென்று வரங்கேட்க, சோமசுந்தரர் அவனுக்கதனை காட்டியருளினர்—40-ம் திரு.

வரகுணபாண்டியனுக்குப்பின் இராஜராஜபாண்டியன் காலத்தில், அவன்தன் காமகிழத்தி ஏவலாலே, பாணபத்திரன் பத்தினியை இசையிலே வெல்விக்குமாறு, ஈழநாட்டிலிருந்து ஒருபாண்மகளை அழைப்பித்து, இசைவாது புரிவித்தபோது; பாண்டியன் நடுநிலை பிறழ்வானென்றுணர்ந்து, சோமசுந்தரர் ஓரிசைப்புலவராகத்தோன்றிப் பாணபத்திரன் பத்தினி புலமையைமெச்சி அற்புதம் என்று கூறிமறைந்தருளினர்—44-ம் திரு—மற்றவிவரங்களை ஷை புராணத்தைப்படித்து அறியலாம்.

தமிழ் வித்துவான்களாற் பாடப்பெற்றபாண்டியர்கள்

அபிதான கோசத்தின்படி.

பாண்டியன் அறிவுடையநம்பி—இவன் தமிழ்ப்புலமையிற் சிறந்த அரசன்.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்—இவனே கோவலனைக் கொல்லுவித்த பாண்டியன் என சிலப்பதிகாரத்தால் விளங்குகின்றது—இவன் கல்வியைப் பொருளாகவும், கற்றோரைச்சுற்றமாகவுங் கொண்டவன்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்—இவன் புலமையிற் சிறந்த ஓர் அரசன் என—புறநானூற்றினுள்ளே வரும் 72-ம் செய்யுளாற் புலப்படும்- இவன் புலமையிற்சிறந்த புலவரைக்காத்தலினும்; அவராற் பாடப்படுதலிலும் மிக்கவிருப்புடையவனென்பது மாங்குடி மருதனாரால் மதுரைக்காஞ்சிக்குத் தலைவனாக்கப்பட்டமையாலும்; கல்லாடர், இடைக்குன்றூர் கிழார் முதலியோராற் பாடப்பெற்றவன்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்—இவ்வரசன் நக்கீரனாராலும், மதுரை மருதனிளநாகனார் முதலியோராலும் பாடப்பெற்றவன்.

பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர் வழுதி—இவன் இரும்பிடர்த்தலையாரាற் பாடப்பெற்ற வீரையாளன்.

பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி—இவன் ஔவையாராற் பாடப்பெற்றவன், இவனே வேங்கை மார்பனைவென்று கானப்பேரெண்ணு மரண்கொண்டவன் (புறநானூர் 67) இவனே திருவள்ளுவருக்குச் சிறப்புப் பாயிரஞ்சொன்ன பாண்டியன்,

பாண்டியன் கீரஞ்சாத்தான் — இவன் ஆவூர்மூலங்கிழாராற் பாடப்பெற்றவன்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன்வழுதி— ஐயூர்முடவனாராலும் மருதனிளநாகனாராலும் பாடப்பெற்ற பாண்டியன்.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சியநன்மாறன்—இவன் சித்தலைச்சாத்தனாராலே, பாடப்பெற்றவன்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

அப்பாண்டியர்கள் அதிகபிரபலராகிப் பிரகாசித்ததற்குக் காரணம்: அவர்களுடைய கல்விஅறிவும், கடவுள்பக்தியுமேயாம். அதற்கு உதாரணமாக அப்பாண்டியர் காலத்தில் முத்தமிழ்ச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்றும், அச்சங்கங்களில் அரங்கேற்றிய நூல்களேபோதுமான நிதரிசனங்களாகும்.

வெண்பா.

நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலான னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறுபத்து நாலாட லுக்கும்
கத்தன் மதுரையிற் சொக்கன்—என்று.

காளமேகப் புலவர் பாட்டின்படி, வம்சசேகர பாண்டியன் காலத்தில் மதுரையில் முதல் முதல் தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்று, அதில் 4449-பெயர் அச்சங்கமேறிச் சிறப்பித்ததாகச் சொல்லப்பெற்றிருப்பினும்; வீரசோழியம் முதலான சில சிறந்த கிரந்தங்களைக்கொண் டாராயுங்கால், 549—பெயர் அச்சங்கமேறியவர்களென்றும், அவர்களுள் அகத்தியனார், விரிசடையத்தனார், முருகமுதல்வனார், முடிநாகராயர், நிதிக்கிழவனார், அதங்கோட்டாசிரியனார், பனம்பாறனார், தொல்காப்பியனார் முதலான சிறந்த வித்வான்கள் சேர்ந்து தொல்காப்பியம், காக்கைபாடினியம்; அவிநயம், நற்றத்தம், வாமனம், புறபொருட் பன்னிருபடலம், முருவல, சயந்தம், குணநூல், செயிற்றியம், பரிபாடல், முதுநாறை, முதுகுருகு, களறியாவிரை முதலான அருமையான தமிழ்நூல்களை இயற்றி அரங்கேற்றி அலங்கரித்தார்கள்.

அவர்கள் அகத்தியத்தை வழிநூலாக வழங்கிவந்தார்கள் அதில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றும் வகுத்துரைக்கப்பட்டிருந்தன. தொல்காப்பியம் முதலியவற்றில் இயற்றமிழும்; பெருநாறை, பெருங்குருகு முதலியவற்றில், இசைத்தமிழும்; முருவல, சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலியவற்றில் நாடகத்தமிழும் விரித்துரைக்கப்பெற்றிருந்தன—பிறகு.

இடைச்சங்கம்—கபாடபுரத்தில்ஸ்தாபிக்கபெற்றது. அவ்விடைச்சங்கமேறியவர்கள் 509-பெயர். அவர்களில் இருந்தையூர்க் கருங்கோழிமோசியார், வெள்ளூர்க்காப்பியன்; சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தையார் முதலான மஹாவித்வான்கள் சிறந்து விளங்கி; கலிகுருகு, வெண்டாலி முதலான நூல்களை இயற்றி அரங்கேற்றினார்கள். அவ்விடைச் சங்கத்தார் அகத்தியம், தொல் காப்பியம்; மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் முதலான நூல்களை வழிநூல்களாக வழங்கிவந்தார்கள்—பிறகு.

கடைச்சங்கம்—உத்திர மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்றது, அதில் 49 வித்வான்கள அச்சங்கமேறிச் சிறப்பித்தார்கள், அவர்களில் இறையனார், உக்கிரப்பெருவழுதியார், கபிலர், பரணர், நற்கீரர், பெருந்தேவனார், நச்சுமனார், குலபதி நாயனார், ஆலங்குடிவங்கனார் முதலானவர்கள் சேர்ந்து நெடுந்தொகை, குறுந்தொகை நானூறு, நாற்றிணை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநானூறு, எழுபதுபரிபாடல், கவிபதிற்றுப்பத்து, நூற்றைம்பது, கூத்தவறி; சிற்றிசை, பேரிசை முதலான நூல்களை இயற்றி அரங்கேற்றினார்கள்.

அப்படி முதற்சங்கத்தில் 4449-பெயரும், இடைச்சங்கத்தில் 3700 பெயரும், கடைச்சங்கத்தில் 49 பெயருமாக கவிகளிபற்றி அரங்கேற்றியதாக இறையனார் அகப்பொருளின் கவியால் ஸ்பஷ்டமாகிறது—எப்படியெனில்.

வெண்பா.

எழேழோ டைஞ்ஞூறு மேலேழொ டைம்பதும்
எழேழுஞ் சங்க மிரியினார்—எழேழ்சேர்
நாற்பதிநா னூறு முப்பானேழ் நூறுநானூற்று
நாற்பதி னொன் பான்கவிஞர் நாடு—என்பதாம்.

அப்படிப் பிரகாசித்த சங்கங்களில் முதற்சங்கத்தின் காலம் முன் பின் 450 வருஷங்களென்றும், இடைச்சங்கத்தின் காலம் 350-என்றும், மூன்றும் சங்கத்தின் காலம் 2000-என்றும், ஒரு நூலில் சொல்லப்பெற்றிருக்கிறது.

அன்றியும், வேறொரு நூலினால் முதற்சங்கத்தின் காலம் காய்சின வழுதி முதல், கடுங்கோன்வழுதி வரையில் 19-பாண்டியர்காலம் வரையிலும்; இடைச் சங்கம் வெண்டேர்ச்செழியன் முதல், முடத்திருமாறனீறாக 59-பாண்டியர்கள் காலம்வரையிலும், மூன்றாஞ்சங்கம் முடித்திருமாறன் முதல், உக்கிரபெருவழுதி யீறாக 49 பாண்டியர்கள் காலம்வரையிலும் பிரபலமாய்ப் பிரகாசித்ததாகவும்; அப்பாண்டியர்களில் முதற்சங்கத்தில் எழுபாண்டியர்களும், இடைச்சங்கத்தில் ஐந்துபாண்டியர்களும், கடைச் சங்கத்தில் மூன்று பாண்டியர்களும், மஹா வித்வசிகாமணிகளாகிப் பிரகாசித்தும், கவிகளையும் கிரந்தங்களையும் இயற்றி அரங்கேற்றினதாக வேறொரு ஒருசாசனத்தில் ஸ்பஷ்டமாகிறது.

சங்கத்துள் அரங்கேற்றியவற்றுள் திருக்குறளே கடைசியாம். சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு-அதாவது உக்கிரப்பெருவழுதி காலத்தில்சங்கம் கலைந்துபோக ஹேதுவாகியது- பிறகு 200 வருஷங்கள் வரையில் சேர, சோழ பாண்டியர்கள் காலத்தில் அதிவீரராமன், ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர் கம்பர், அம்பிகாபதி, தமிழ்த்தண்டி, (கொங்குநாட்டரசனால்பிரகாசித்த) வில்லிபுத்தூரார், முதலான வித்வசிகாமணிகள் பற்பல கிரந்தங்களை இயற்றிப் புகழ் பெற்று வந்தாலும்; பராக்கிரமபாண்டியன் காலத்தில்; மகமதியர்கள் பாண்டிய நாட்டில் பிரவேசித்து பட்டணத்தைப் பாழாக்கியும், பிரஜைகளைப் பங்கப்படுத்தியும், நூல்களை நாசமாக்கியும் விட்டார்கள். பிறகு தமிழ்ச்சங்கத்திற்குத் தலைவர் இல்லாமல் மறைந்தது.

மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம்.

இப்போது தமிழ்பாஷையின் பரதாப நிலையைக்கண்டு, அதற்குத்தக்க உதவி செய்யக்கருதி; பிரபலவித்வசிகாமணியும், சிறந்த தேசாபிமானியும், பாலவநத்தம் ஜமீன்தாரருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரை தேவரவர்கள் 1901-ஆம் மேமீ 24உ மதுரை சேதுபதி பாடசாலையில் ஒருமஹாசபையைக்கூட்டி உபந்நியாசித்தும், ஸ்ரீ சேதுபதி முதலானவர்களுடைய சகாயத்தைக்கொண்டு மறுபடியும் 1901ஆம் செப்டம்பர்மீ 15உ க்குச்சரியான-பிளவஆம் ஆவணிமீ 31உ பானுவாரம்-சித்திரா நக்ஷத்திரம்-கூடியசுபதினம் பகல் $1\frac{1}{2}$ மணிமேல், $2\frac{3}{4}$ குள்-தனுர்லக்கினத்தில்-மதுரையில் நான்காவது தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்து அதற்காக அல்லும் பகலும் உழைத்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட தருணத்தில் தென்னாட்டிற் சிறந்த திரவியவான்களும், தமிழ்வித்வான்களும், அபிமானிகளும் அவருக்குத் துணைநின்று உதவிசெய்யவரில், இந்த நான்காம் தமிழ்ச்சங்கமும் நாளாவட்டத்தில் பலுகிப் பெருகி நாட்டிற்கு நாலாவிதங்களிலும் நன்மை விளைவிக்குமென்பது திண்ணம்.

இந்த மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின்

(1) தமிழ் வித்வான்களாவன

மஹா-ஸ்ரீ, ப. பாண்டித்துரைத் தேவர் அவர்கள்—
பாலவனத்தம் ஜமீன்தாரர், மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி

,, உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்—
தமிழ்ப்பண்டிதர், பிரசிடென்சிகாலேஜ், சென்னை.

,, ரா. இராகவையங்கார் அவர்கள்—
ஸேதுஸம்ஸ்தான வித்வான், பிரசுடணாசிரியர்—தமிழ்ச்சங்கம்.

,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள்—
தலைமைத் தமிழ்ப்பண்டிதர், சர்ச்மிஷன் காலேஜ், சென்னை

,, திருநாராயணையங்கார் அவர்கள்—
தலைமை உபாத்தியாயர் சேதுபதி கலாசாலை தமிழ்ச்சங்கம்

,, ஸ்ரீ. அரங்கசாமி அய்யங்கார் அவர்கள்—இராமநாதபுரம்

,, சேற்றூர். சுப்பிரமணியக்கவிராயர் அவர்கள்—
திருவாவடுதுறை ஆதீனவித்வான், நூற்பரிசோதகா தமிழ்ச்சங்கம்

,, அ. சண்முகம்பிள்ளை அவர்கள்—
உபாத்தியாயர் சேதுபதி கலாசாலை—தமிழ்ச்சங்கம்

,, அம்பலவாண நாவலவர்கள்—திருநெல்வேலி

,, அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியார், சென்னை

,, பு. மா. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்—
தமிழ்ப்பண்டிதர் பிரஸிடென்சி காலேஜ் சென்னை

,, திருமயிலை. ஷண்முகம்பிள்ளை அவர்கள்—
தமிழ்பண்டிதர் செண்ட்தோம் காலேஜ், சென்னை

,, அ. நாராயணசாமி அய்யங்கார் அவர்கள்—
தமிழ்பண்டிதர் ஹைஸ்கூல்—கும்பகோணம்

,, எஸ். பாலவண்ண முதலியார் அவர்கள்—
காரியதரிசி சரஸ்வதிவிலாச புத்தகசாலை திருநெல்வேலி

,, தி. ப. சிவராமபிள்ளை அவர்கள்—
தமிழ்பண்டிதர் இந்துகாலேஜ் திருநெல்வேலி

,, வா. குலாங்கா திருநாவலர் அவர்கள்—நாகூர்

,, தி. கோ. நாராயணசாமிபிள்ளை அவர்கள்—
தமிழ்பண்டிதர் பெங்களூர்

,, ஆ. முத்துத்தம்பி பிள்ளை அவர்கள்—யாழ்ப்பாணம்
,, அ. குமாரசாமிபிள்ளை அவர்கள்—சுன்னாகம் ,,
,, செந்திநாதய்யர் அவர்கள்—திருப்பரங்குன்றம்

ii. ஆங்கிலத்தமிழ் வித்துவான்கள்.

ம-ா-ஸ்ரீ, வி. கனகசபைபிள்ளை அவர்கள் பி. ஏ. பி. எல்.
Postal Supt. Madras Division

,, திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியர் அவர்கள்—
Curator of Books Madras

,, தண்டலம், பாலசுந்தர முதலியார் அவர்கள். எம். ஏ.
Tamil Translator to the Govt. Madras

,, எஸ். இராதாகிருஷ்ணையர் அவர்கள் பி. ஏ.
Principal Maharajah's College Pudukotta

,, ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்—
Editor "Swadasamitran" Madras

,, டி. இராமகிருஷ்ண பிள்ளை அவர்கள் பி. ஏ.
Interpreter H. C. Madras

,, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் பி. ஏ.
Tamil Pandit Christian College Madras

,, கே. சுந்தரராமய்யர் அவர்கள் எம். ஏ.
Lecturer Govt. College Kumbakonam

,, ஜே. எம். நல்லசாமிபிள்ளை அவர்கள் பி. ஏ. பி. எல்.
District Munsiff Nandeyal

,, எஸ். நாராயணசாமி அய்யர் அவர்கள்—
Lecturer Govt. College Kumbakonam

,, பி. குருராவ் அவர்கள், எம். ஏ. எல. டி. எஸ்.
P. G. College Trichy

,, கே. ஜி. சேஷய்யர் அவர்கள் பி. ஏ. பி. எல்.
Professor Law College Trevandram

,, எஸ். இராமசாமி அய்யர் அவர்கள்—
Munsiff Travancore Samastanam

,, எம். முத்துராமலிங்க பிள்ளை அவர்கள் பி. ஏ.
H. T. Pandit H. H. the Maharajah's College Trevandram

,, பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்—Madras

,, ஏஸ். வி. கண்ணபிரான் பிள்ளையவர்கள் பி. ஏ.
Sub-Magistrate Conjeevaram

,, சேலம், பகடால. நரசிம்மலு நாயடுகாரு—
Editor Kala Nidhi Coimbatore

,, பி. நாராயண அய்யர் அவர்கள் பி. எ. பி. எல்.
High Court Vakil Madras

,, பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்—
1st Grade Pleader Madras

,, எஸ். சாமிநாதய்யர் அவர்கள்—
Pleader Ramnad

,, என். வி. சுந்தரராஜ அய்யர் அவர்கள் பி. ஏ. எல். டி.
Teacher Setupathy High School Madura

---

iii. ஸம்ஸ்கிருத தமிழ்வித்வான்கள்.

ம-ா-ஸ்ரீ, பெ. அரங்காசாரியார் அவர்கள்—
மகாமகோபாத்தியாயர், கும்பகோணம்

,, தி. ஈ. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள்—
ஸம்ஸ்கிருதபண்டிதர் கவர்மெண்டு காலேஜ் கும்பகோணம்

,, வி. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள்—
ஸம்ஸ்கிருதபண்டிதர் சேதுபதி கலாசாலை மதுரை

,, வீராசாமி அய்யங்கார் அவர்கள்—
ஸம்ஸ்கிருத வியாகரண வித்வான் எட்டியாபுரம்

,, சந்திரசேகர தீக்ஷிதர் அவர்கள்—
ஸம்ஸ்கிருத பண்டிதர் நேட்டிவ் காலேஜ் மதுரை

---

iv. ஆங்கில ஸமஸ்கிருத வித்வான்கள்.

ம-ா-ஸ்ரீ, பண்டித ச. ம. நடேசசாஸ்திரியார் அவர்கள் பி. எ.

,, ஆர். கிருஷ்ணமாசாரியார் அவர்கள் எம். எ.
ஸம்ஸ்கிருத பாடசாலை இன்ஸ்பெக்டர் சென்னை

ஆக இதுவரையில் இச்சங்கமேறிய வித்வான்கள் 48 பெயர் இந்த நான்காம் தமிழ்ச்சங்கத்தின் உத்தேசங்களாவன.

(1) தமிழ்க்கலாசாலை உளவாக்குதலானும் (2) இறவாதுள்ள தமிழ் ஏடுகள் பலவற்றையும், அச்சிட்ட தமிழ்நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுப் பிறருக்கு பயன்படுமாறு ஒருவழித் தொகுத்துவைத்தலானும், (3) வெளிவராத அரியதமிழ்நூல்களைப்பரிசோதித்து அச்சிட்டுப் பரவச்செய்தலானும், (4) வடமொழி ஆங்கிலமுதலிய பிறபாடைக்கண்ணுள்ள, அரியநூல்களைத் தமிழில்மொழிப்பெயர்த்து பதிப்பித்தலானும், (5) தமிழ் கலவி அபிவிர்த்தியைபற்றிய (செந்தமிழ்ப்) பத்திரிகை வெளியிடலானும், (6) தமிழ்பரிக்ஷை பல வைத்து உயர்தரத்தே தேறியோர்க்குப் பட்டம பரிசுமுதலிய அளித்தலானும், (7) தமிழறிஞரால் உபந்நியாசங்கள் புரிவித்தலானும், (8) இக்காலத் தமிழறிவு மிக்கார் பலரையும், ஒருங்குக்கூட்டித் தமிழாராயதலானும், (9) வேண்டும் நூல், உரைமுதலியன செய்வித்தலானும், (10) பிறர்செய்தநூல் உரை முதலியவற்றை அறங்கேற்றுவித்தலானும், தமிழ்பாஷையை வளர்த்தளாகுமென்பதாம்.—

இக்கருத்துக்களுக்கிணங்க.

இப்போது இராமநாதபுரம் ஸமஸ்தானம் ஸ்ரீ மத், விஜயரகுநாத பாஸ்கரசேதுபதி ராஜரவர்கள் இச்சங்கத்துக்கு பொருளுதவிபுரிந்து என்றும் நிகழுமாறு தக்கசாசனமும் அளித்தபடியால்; (1) சேதுபதிச் செந்தமிழ் கலாசாலையை ஸ்தாபித்து, அக்கலூரியிலோதுவோருக்கு உண்டி, உடை முதலானதுகளைக்கொடுத்து, கல்வி கற்பித்து வருகின்றனர். (2) பாண்டியன் புத்தகசாலை என்னும் பெயரால் பல்லோருக்கு பெரும்பயன்படும்படி நூனிலைய வாசகச்சாலையும், (3) சங்கத்தின் பத்திரிகை புத்தகமுதலியன அச்சிடத் தமிழ்ச்சங்கமுத்திரசாலையும் (4) சங்கத்தின் சங்கதிகளை வெளியாக்க செந்தமிழ்ப்பத்திரிகையும், (5) ஆங்கிலகலாசாலைகளிற்படிக்கும் தமிழ்மாணக்கர்களுக்குத் தமிழில் உத்சாகமுண்டாகும்படி தமிழ் பரிக்ஷைபத்திரங்களால் பரிக்ஷித்து பரிசளித்தும் (6) பலவிடங்களில பரக்கிடக்கும் அச்சிடாத தமிழ்நூல்களை த[illegible]காணடுவர, காரியஸ்தர்களையும்—இத்தமிழ்நாட்டு அறிஞர்பலரை வித்[illegible]சங்கத்தினராகவேண்டி அவர்களை மதுரைசங்கத்திற்கு தருவித்து உபந்நிய[illegible]செய்ய கல்விக்கழகமும் ஸ்தாபித்து; அதிகசிரத்தையாக உழைத்துவ[illegible]றனர்—கடவுள் இச்சங்த்திற்கு பூரணசுகவாழ்வை பிரசாதிப்பாராக.

தமிழரசர் மூவருள்ளும், பாண்டியரே மற்ற இருவரிலும்செந்தமிழைசிறப்புற்றோங்கச் செய்தவர்களென்பதற்கு—யாப்பருங்கல மேற்கோளில்.

"வில்லுடையான் வானவன் வீயாத் தமிழுடையான்
பல்வேற் கடற்றானைப் பாண்டியன்—சொல்லிகவா
வில்லுடையான் பாலை யிளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையா னீர்நாடர் கோ-என்றும்

"நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந்தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டிய நின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்—(ஔவையாரும்)

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும்—(சிறுபாணாற்றுப்படையிலும்)

"உயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந் தமிழின்றுறை-(திருக்கோவை)
"உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—வுலகனைத்துந்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவ
னான்மாடக் கூடனகர்—(பரிபாடலுறுப்பாதி) கவிகளைப்பார்க்கவும்

மேலும்-பூதபாண்டியனும், அவன்தேவியாரும் மஹாவித்வசிகாமணிகளென்பது நானூறு புறநானூறிலும் காணலாம் பிரதியக்ஷம்-புறத்திற்காணப்பட்ட-
மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்—தடங்காத் தானை வேந்தருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை—யாரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த—பேரமருண்கணி வளிற்றும் பிரிக-
என்றுகவிகளால் ஸ்பஷ்டமாகும்.

அன்றியும்—வரததுங்கப்பாண்டியன் பிரம்மோத்திரகாண்டத்தை தமிழாற்பாடினதன்றியில்; அவன்தேவியார் மஹாகவிரத்தினம் எனபதற்கு அத்தேவியார் பணியாரக்குடத்துக்குள் மதுரைப்பூபாண்டியன் தேவி விடுத்தகவி என்னும் தலைப்பின்கீழ்-

"என்னையிவ்வா றவர்மறந்தும் யானவரை மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்றானோ வப்பிறப்பிற் செய்த தவ முடிந்த வாறோ
கன்னன்மத னபிராமன் வரதுங்க ராமனியற் காசிநாட்டி
லன்னவயற் குருகினங்கா ளினியெவ்வா றுயிர்தரித்திங் காற்றுமாறே-
என்று தமிழ்நாவலர் சரிதைக்கண் தெரிவிக்கப்பெற்றிருத்தல்பிரதியக்ஷம்.

மதுரையிலாண்ட புராதன பாண்டியர்கள் கேவலம்இப்படிகல்வி விஷயத்தில் மாத்திரம் கருத்தைச்செலுத்தினது மாத்திரமல்ல; ஈசுவரபக்திக்கும் பாடுபட்டவர்களாகி, அநேக சைவ வைணவக் கோயில் கோபுர மாட மாளிகைகளையும், ஆலிகூப, தடாகங்களையும் உண்டாக்கி, உத்கிருஷ்டமடைந்திருந்தார்கள், என திருவிளையாடற்புராணம் முதலான கிரந்தங்கள் நிதர்சனங்களாக நிரூபிக்கின்றன.

குலசேகரன், மலையதுவஜன் முதலான சிலபாண்டியர்கள், அகத்தியருடைய கட்டளையின்படி தருமராஜ்ய பரிபாலனம்செய்துக் குடிகளை சுகமாகவாழச் செய்தார்களென முன்னமேசொல்லி இருக்கிறோமல்லவா? அதற்கு இரண்டொரு உதாரணங்களை இதனடியில் காட்டுகின்றனம்—

விக்கிரம சிங்கபாண்டியனுக்கு அகஸ்தியர் மனுநீதி யுரைத்தது,
பாவநாசத்தல புராணத்தில்.

ஆறிலொன்றிறையாகவே—கூறுகொண்டதுகோடலா
மீறில்வெந்துயரெய்தினோர்க்—கூறுநீக்குவதுன்கடன்.
ஆதிநூலி னராவின—மாதர் பாலர்வயோதிய
ரோதுவெம்பிணி யோர்தமைப்—பாதுகாத்திடல் பண்புரோ
காமமாதி கடந்திடல்—வாமமாதி மறந்திட
லேமவில்லியை யேத்துதல்—பூமிமன்னவர்பொற்பரோ
ஊக்கநெஞ்சிலுறைத்தலு—மாக்கநாடொறுமாக்கலும்
வாக்குமாறலைமாற்றலுந்—தூக்கிமன்னவர் சூழ்ச்சியால்.
ஒற்றர் மூவருலகினி—லற்றமானவநீதியு
மற்றுமோர்ந்தவைமாற்றுதல்-கொற்றமன்னவர்கொள்கையாம்.என்றும்
குடிபறவ காத்தல் வேகக்கூற்று வந்தெதிர்த்தபோது
மடியிலாச்சேனை சேர்த்தன் மாற்றலறை போதற்குந்
தடைபடு மரணுண்டாக்கல் சந்ததம் பொச்சாப்பின்மை
புடவியோர் புயத்திற்றாங்கும் புலவருக்குறுதியாமால்
என்றுதிகவிகளைக்காண்க.

மேலும்—பாண்டியர்காலத்தில் மஹாபக்த சிரேஷ்டர்களாகிய மாணிக்க வாசகர், திருஞானசம்பந்தமூர்த்திகள், அப்பர், சுந்தரர் முதலான மஹான்களும்; "பாண்டியன் கொண்டாடப்பட்டர்பிரான் வந்தானென்றீண்டிய சங்க மெடுத்தூத" என்றுதி கவிகளின்படி ஆழ்வார்களும், நாயன்மார்களும் பரிமளித்துப் பாண்டியநாட்டைப் பிரபஞ்சத்திற் பிரபலமாக்கினார்கள்.

அந்தப்பண்டியர்களுக்குப் பின்வந்த பாண்டியர்கள் கலவியையும், கடவுள பக்தியையும் அசட்டைசெய்தும்; சிற்றின்பத்திலும், சோம்பலிலும் காலத்தைக் கழித்துவரவே; பாண்டியநாடு பாழ்த்துவர, வேறுநாட்டார் படை எடுத்துவரச் சம்பவித்தது.

பாண்டிய இராஜியத்தின் முடிவு.

குலாப்ஜன் அல்லது கூன்பாண்டியன் காலத்தில் அரபிநாட்டிலிருந்து மகமதியர் மதுரைக்குவர ஆரம்பித்தார்கள் என்று முன்சொல்லி இருக்கிறோமல்லவா? அந்த கூன்பாண்டியனுக்குப் பிறகு, வீரபாண்டியசோழன் பட்டத்தைப்பெறுறான். அவன் ஆதிபாண்டியருடைய 74-வது சந்ததி. அந்த வீரபாண்டியனுக்கு சந்ததி இல்லாமல் போய்விட்டபடியால்; பழைய பாண்டியர்களுடைய வைப்பாட்டி பிள்ளைகள் கிளம்பிவந்து, பாண்டியநாட்டை ஆளத்தலைப்பட்டார்கள் என்று, ஸ்ரீ ஸ்தலபுத்தகத்தில் சொல்லி இருக்கிறதாக, மதுரைஜில்லா மருத்துவத்தை எழுதிய மிஸ்டர் நெல்சன் அவர்கள் எழுதியிருக்கிறார். (Vide Mr. Nelson's Madura Manual) (Mr. Taylor's Supplementary M. S. S. & Mr. Robert Sewell's S. I. A. Pages 218-219).

அப்படி ஆண்ட பாண்டியர்களுடைய வைப்பாட்டிமக்களாவன-

சோமசேகரபாண்டியன், கி-பி 1100 வருஷம் சிங்காசனமேறி 20வருஷம் ஆண்டான். கர்ப்பூரசுந்தரபாண்டியன், குமாரசேகரபாண்டியன், குமாரசுந்தரன், சுந்தரராஜன், ஷண்முகராஜன், மேருசுந்தரபாண்டியன், (அவன் சேர சோழ நாடுகளையும் ஆண்டான) இந்திரவர்மன், (அவன் சோழனைவிடுதலைசெய்து அவன் மகளை விவாஹம்செய்தான்) சந்திரகுலதீபன், மீனகேதனன், மீனத்துவஜன்,

(அவன்சோழன்மகளைவிவாஹம் செய்தான்—அவ்ன் மகன் சோரிநாட்டை ஆண்டான்) (மகரத்துவஜன், அவன் மஹாவீரன்) மார்த்தாண்டன், குவலையாநந்த பாண்டியன் (இவன் கப்பல்யாத்திரைசெய்து கடலில் விழுந்திறந்தான்) கிருஷ்யான் மகள் கிருபாநிதிதாயார்,(அவள் குண்டல பாண்டியனை விவாஹம் செய்தாள்) சத்ருபீகாபாண்டியன்; சத்ருசம்ஹாரன், வீரவர்மன், வீரபாஹு, மகுடவர்த்தனன், (சோழனால் சொல்லப்பட்டான்) வீரசிம்மன், வம்சகுலத்துங்கன்; அதிவீரராமபாண்டியன், (சோழன் தோழன்; அவன் நைடதம், நறுந்தொகை முதலானகிரந்தங்களை இயற்றிய சிறந்த தமிழ்வித்வான்) குலவர்த்தன பாண்டியன், சோமசேகரன், சோமசுந்தரன், இராஜராஜன், இராஜகுஞ்சரன். இராஜசேகரன்; இராஜவர்மன், இராஜமேதாவிபாண்டியன், வரதராஜன், குமாரசிம்ஹன், வீரசேனன், பிரதாபராஜன், வரகுணராஜன். குமாரசந்திரன், வரதுங்கன்,சந்திரசேகரன்,சோமசேகரன்,பராக்கிரமபாண்டியன்,(அவன்பகையாளிகளிடமிருந்து பாண்டியநாட்டைப்பிடுங்கிஆண்டுவரும்போது,ஆதி சுல்தான்மலிக்கபூர்சாயிபு, கி-பி 1311ஞு படையெடுத்துவந்து பாண்டியநாட்டைப்பிடித்துக்கொள்ள; 1312ஞு முதல் 8 மகமதியர்கள் மதுராபுரியை 48ஞு ஆண்டார்கள்.

அந்த மகமதிய அரசர்களாவன.

மலிக்காபூர்சாயபு கி-பி 1310—1313—3, அலாவுதீன்கான், 1313-1319, 6 உத்தமதீன்கான், 1316—1322—3, தீபுதீன்கான், 1322—1327,—6 நாகுல்தீன்கான், 1327—1334—7, சவுத்மலீக் அஹமத்மலேக், 1334-1346—12 பாண்டக் மலீக், 1346—1358—12. என்பவர்கள் ஆண்டுவருங் காலத்தில்; இந்துக் குடிகளுக்குப் பலவித கஷ்ட நிஷ்டூரங்கள் சம்பவிக்க; அக்கஷ்ட நிஷ்டூரங்களை நீக்கி, ஆந்து ராஜாங்கத்தை ஸ்தாபிக்கக்கருதி; விஜயநகர புக்கராயலு 1350—1379ஞு பாண்டியநாடு நாதனற்று கெட்டலைவுதைக்கண்டு, கெம்பன்ன உடையாரைப் பாண்டியநாட்டிற்கு அதிபதியாக அனுப்ப; அவர் 1572 ஞு வரையிலும்; அவர் குமாரர் என் பன்ன உடையாரும், மைத்துனர் பிரகாச உடையாரும்; 1404ஞு வரையிலும் ஆண்டு சந்ததியற்றுப் போனதனால்; புக்கராயலுடைய பந்துக்களில் பராக்கிரமசாலிகளான சில நாயடுகார்களை பிரதிநிதிகளாக அனுப்பி ஆண்டுவரச்செய்ததாக ஒருசாசனத்தில் தெரிவிக்கப்பெற்றிருக்கிறது. அப்படி அனுப்பப் பெற்ற நாயடுகார்களாவன—

(1) இலட்சுமணநாயடு, (2) முத்தன்னநாயடு, அவ்விருவர்களும் 1404-ம் வருஷ முதல், 1451ஞு வரையில் ஆண்டுவருகையில், அபபாண்டிய நாட்டிற்கு பாத்தியஸ்தர்களாக சிலவார்சுகளைக் கண்டுபிடித்தார்கள்.—அவர்களாவன,

சுந்தரத்தாள் மஹாவிசுவநாதராயர், காளியாசோமனுர், அஞ்சாதபெருமாள், முத்துராஜ திருமலை மஹா விசுவநாதராயர் என்பவர்களே. அவர்களுடைய பெயர்களையும்; பாத்தியதைகளையும் பற்றிப் புக்காரயலுக்கு அறிவிக்க; அவர் உடனே பாண்டியநாட்டை அந்த வாரசுகளிடம் கொடுத்துவிட்டுவரும்படி உத்தரவுகொடுக்க; அவரும் அப்படியே செய்ய; அந்தப்பாண்டிய நாட்டு வார்சுகளும் 1451ஞு முதல 1498 ஞு ஆகிய 48ஞு ஆண்டார்கள். அப்படி ஆண்டவர்களை வைப்பாட்டிப் பிள்ளைகளென்று குடிகள் கலகம்செய்து மறுபடியும் விஜயநகரத்துக்கு முறையிட்டு அறிவிக்க; கிருஷ்ணதேவராயலு 1445—1500ஞு நரசநாயடுவையும், 1500—1515 ஞு தென்னமநாயடுவையும் 1519—1519ஞு நரசநாயடுவையும்; பிரதிநிதிகளாக அனுப்பி ஆண்டுவரச்செய்ததில், அவர்கள் சந்ததிகளில்,

குருகுருதிம்மநாயடு, 1519—1524வரும், காட்டியம் காமயநாயடு, 1524—1526, சின்னப்பநாயடு; 1526—1530; ஜங்கமநாயடு, 1530—1535, விசுவநாதநாயடு, 1535—1544, வரதப்பநாயடு, 1544—1545, தொம்பச்சிநாயடு, 1545-1546, விசுவநாதநாயடு,1546-1547,விட்டலநாயடு,1547-1558,வரிஷங்களில் ஆண்டபிறகு, பாண்டியநாட்டிற்குத் தக்க பாத்தியஸ்தன் என ஒரு சந்திரசேகரபாண்டியன் கிளம்பிவந்து,தனது பாதியதையைஸ்தாபித்துக்கட்டியதனுல்; அந்தச்சந்திரசேகரப் பாண்டியனுக்குப் பட்டம்கட்டி ஆண்டுவரச்செய்தார்கள்- அப்போது தஞ்சையிலிருந்த வீரசேகரசோழன், பாண்டியநாட்டின் தலைநகராகிய மதுரைமீதுபடை எடுத்துவந்து தாக்கி பாண்டிய நாட்டைப் பிடுங்கிக்கொள்ள; அப்பாண்டியன், விஜயநகரஸமஸ்தானத்துக்குப்போய் முறையிட்டழ, கிருஷ்ணதேவஇராயலுதமது பிரதிநிதியாகிய நாகமநாயடுகாரை தக்கசண்டுதளாதிகளோடுப்போய்,வீரசேகரச்சோழனைத் தாக்கித்துரத்தி,அவனிடமிருந்த பாண்டியநாட்டைப்பிடுங்கி,பாண்டியனிடம்கொடுத்தவரும்படிகட்டளைக்கொடுத்தனுப்ப; அந்த நாகமநாயடும் அப்படியேவந்து சோழனைத்தாக்கித் துரத்தி, அவனிடமிருந்த பாண்டியநாட்டைப்பிடுங்கி, அதன்வார்சுதாரனாகிய பாண்டியனிடம் கொடுக்காமல்,தன்சொந்தமாக்கிக்கொள்ள;இதுசங்கதி விஜயநகர ஸமஸ்தானத்தாருக்குத்தெரிய, விஜயநகரத்தார் விசனப்பட்டு,இப்படி இராஜதுரோகம்செய்த நாகமநாயடுவைக்கொன்று, அவன் அக்கிரமமாகப்பிடித்துக் கொண்டிருக்கும் பாண்டியநாட்டைப்பிடுங்கி, சரியானவார்சாகிய சந்திரசேகர பாண்டியனிடம் கொடுத்துவரும்படி மேற்படி நாகமநாயடுவின் குமாரனாகிய விசுவநாதநாயடுகாரை அனுப்ப,அவ்விசுவநாதநாயடுவர் வந்து,தன்தகப்பன் என்றமுறையையும் கருதாமல்; சத்தியத்துக்குக் கட்டுபட்டு, தன்தகப்பனை நாகமநாயடைப்பிடித்து சிறையில் வைத்தும்,அந்நாகமநாயடுப்பிடித்து அக்கிரமமாகவைத்துக்கொண்டிருந்தபாண்டியநாட்டைப்பிடுங்கி, அதன்வார்சாகிய சந்திரசேகரபாண்டியனிடம் கொடுத்தும், அப்பாண்டியனுக்கு முடிசூட்டி, அச்சங்கதிகளை விஜயநகரராயலுக்கு அறிவிக்க, அந்த இராயலும் விசுவநாதநாயடுகாருடைய சத்தியத்தைக்கண்டுவியந்துக்கொண்டாடி, அவரை அப்பாண்டியநாட்டில் சிலவருடங்களிருந்து,அப்பாண்டியனுக்கு உதவிசெய்துவரும்படிசெய்ய,அந்தவிசுவநாதநாயடும் அப்படியேசெய்துவருகையில்; அச்சந்திரசேகரபாண்டியனும் அவன்குமாரனும்சிலவருஷங்களாண்டு சந்ததியற்று இறந்துப்போகவே; பாண்டியநாட்டிற்குத் தகுந்த வார்சுகளற்றுப்போன சங்கதியை விஜயநகரத்தாருக்குத் தெரிவிக்க; அந்தவிஜயநகர ஸமஸ்தானத்தார், விசுவநாதநாயடுகாருடைய சுத்தவீரத்துவம், சத்தியம், சுவாமிபக்தி, தருமகுணுதிசயங்களைக்கேட்டும்; பாண்டியநாட்டை அந்தவிசுவநாதநாயடுகாரே ஆளத்தக்கவல்லவர் என்று பாண்டியநாட்டுக் குடிகளுடைய வேண்டுகோளைக் கருதியும், விஜயநகர ஸமஸ்தானத்திலிருந்து தேவபிராம்மணர்களிடம் கங்கைதீர்த்தம், இராஜகில்லத்து அல்லதுகட்டளை. கத்தி. கட்டாரி, ஆடை ஆபரணங்களைக் கொடுத்தனுப்பி, பாண்டியநாட்டுக்கு பிரதானப்பட்டணமாகிய மதுரையில் கி-பி 1559வரு விசுவநாதநாயடுகாருக்கு பாண்டிய சக்கிரவர்த்தி என்றமகுடாபிஷேகம்செய்வித்து. பட்டம்கட்டிவைத்தார்கள்- அந்தவிசுவநாத நாயடுகாரும் அவருடைய பதினாறு சந்ததிகளும், பதினாறுபேறுகளைப்பெற்று நாயடுகாரு ஸமஸ்தானத்தார் என்ற பெயரால், சுமார இருநூறுவருஷகாலம் இந்ததருமசாஸ்திரப்படி ஆண்டார்கள்- ஆகையால் இனி அந்தநாயடுகாருசமஸ்தானசரித்திரத்தை அடுத்தகாண்டத்தில்- எழுதுகிறோம்.

இரண்டாமகாண்டம் முற்றிற்று.

மூன்றாம்காண்டம்.

நாயடுகாரு ஸமஸ்தானம்.

இதற்கு முன் நிற்கு இரண்டாம் காண்டத்தில் சோழ பாண்டியர்கள் ஒரு காலத்தில் மஹாமஹோன்னதஸ்திதியிலிருந்து, பிறகு மங்கலடையவே; குடிகளுக்குப் பலவித கஷ்ட நிஷ்டூரங்கள் உண்டாகிவருந்த; அச்சோழபாண்டிய நாடுகளில் நாயடுகாரு ஸமஸ்தானங்களை ஸ்தாபித்த விவரம் ஸ்பஷ்டமாகும்-

ஸ்ரீசந்திர வமிச க்ஷத்திரிய குலத்தாராகிய ஆந்திரருக்கு ஆதியில் "இராஜன், மஹராஜன், விஜயன், சேனன், விகிரமன், போஜன், பாலன், புவனன், சிம்ஹன், சாலுகியன், வர்மன், வல்லபன், வர்த்தனன், மல்லன், காலசூரியன், கணபதி, கஜபதி, நரபதி, இராயலு என்றுதிப் பட்டபெயர்கள் வழங்கி வந்திருக்க; அந்த ஆந்திரருடைய பின் சந்ததியாருக்கு இப்போது நாயடு என்றப் பட்டப்பெயர் வழங்கி வரவேண்டியக் காரணம் என்ன என்று சிலர் எண்ணக்கூடும். அப்படி நாயடு பட்டம் வந்தகாரணம் என்னவென்றால்.

ஆந்திரர் ஆதியில் மகதநாட்டையும், பிறகு உஜ்ஜினி முதலான வடநாடுகளையும், ஆண்டுவருகையில்; அந்தக்காலத்தில் அந்நாடுகளில் சதாரணமாக வழங்கிவந்த ஸமஸ்கிருத பஷா பட்டப்பெயர்களை தரித்து கொண்டுவந்தார்கள்- பிறகுஅவர்கள் அவ்வட நாடுகளை விட்டு தென்னாடுகளை அடைந்து ஸமஸ்தானங்களைஸ்தாபித்தமையால்; அந்தந்த காலத்தையும், நாட்டையும், அங்கு வழங்கிய பாஷைகளையும் அநுசரித்து பட்டப் பெயர்களை தரிக்கச் சம்பவித்தன-

அப்படிச் சம்பவிக்கினும், அவர்களுக்கு வடநாடுகளில் வழங்கி வந்தப் பட்டப்பெயர்களையும்; பிறகு அவர்களுக்கு தென்னாடுகளில் வழங்கும் பட்டப் பெயர்களையும், பரிசோதித்துப் பார்ப்போமாகில்;அவைகள் பாடபேத சப்தரூபங்களில் வித்தியாசமானவைகளாகக் காணப் பெறினும், பொருளில் பேதம்பெறாதிருத்தல் பிரதியக்ஷமாகும்;மேலும் சிலபதங்கள்,பாஷாந்திரபிரதியயங்களால் வேறு விதமாகத் தோன்றுவதும் ஸ்பஷ்டமாகும்-

எப்படியேனில்-

இராஜா என்ற ஸமஸ்கிருதபதம் இராவு, அல்லது இராயலு என்று தெலுங்குபாஷையில் மருவி வந்ததும் பிரதியக்ஷம். இதேமாதிரியாகவே, அதிகாரி, தலைவன், எஜமானன் என்றுதிப் பொருள்களைத்தரும் நாயக என்ற ஸமஸ்கிருதபதம், தெலுங்கில் நாயடு என்று மருவியதாம்-ஆகவே, நாயடு என்றபதமும், இராஜன் என்றப் பதப்பெயருக்குள்ள பலபெயர்களில் ஒன்றாகும்.

விஜயநகர ஸமஸ்தானம் தினே தினே பல்கிப்பெருகி தெற்கே கன்னியா குமாரி வரையில் வியாபித்துக் கொண்டுவரவே, அவ்வளவு விஸ்திரணமுள்ள பெரிய சமஸ்தானத்தை, ஓர் ராஜன் விஜயநகரத்திலிருந்து திருப்தியாக ஆண்டுவருவது அசாத்தியமெனக் கண்டு; அச்சமஸ்தானத்தை நவ (9) கண்டங்களாக வகுத்தார்; அந்நவ கண்டங்கள் ஒவ்வொன்றிலும் தம் பிரதி நிதிகளாக (Governors & Viceroys) ப்போய் ஆண்டுவர தம்பந்துக்களிற் சிலரை தெரிந்தெடுத்தும், அவர்களுக்கு நாயடுகாரு என்றப்பட்டத்தைக் கொடுத்தும் அனுப்பினார்கள்–

எப்படியெனில்

விஜயநகரத்தில் அச்சுததேவராயலு அரசாண்டகாலத்தில், அவர்மனைவி ஸ்ரீதிருமலைஅம்மாளுடைய தங்கை, மூர்த்தியம் மாளை சேவப்ப நாயடுகாரு விவாஹம் செய்துகொண்டதின் நிமித்தம், அந்தச் சேவப்பநாயடுகாருக்கு சோழதேசமாகிய தஞ்சாவூரை ஸ்ரீதனமாகக் கொடுத்து ஆண்டு அனுபவித்துக் கொள்ளும்படி அனுப்பிவிட்டதாக தஞ்ஜாவூர்ராஜசரித்திரத்தில் செப்பி இருப்பதை போலவே, 1837-வருஷம் ஜேம்ஸ் பிரின்சிப்பவர்கள் பதிப்பித்த ஆசியாடிக் ஜர்னல் சரித்திரம், 6-வது வாலியம், 2-ம் பாகம், 502-505 பக்கங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது (Vide Pages 502-505 Part 2 Vol VI A The Journal of Asiatic Society by J. Prinsep)

மேலும்-விஜயநகர ஸமஸ்தானத்தை ஸ்ரீகிருஷ்ணதேவராயலு, அச்சுத தேவராயலு ஆண்டபோது, போர்த்துக்கல் தேசத்திலிருந்து வர்த்தக விஷயமாக வந்த பிராணவ் நூனிஸ் (Ferno Nuniz) என்பவர் தம் சரித்திரக் கடிதத்தில் விஜயநகர ஸமஸ்தானம் அப்போது மஹாபெரியதென்றும், அதை ஆண்ட இராயலுக்கு 200 பிரதி நிதிகள் நாயடுகாரு என்றப் பெயர்களைப் பெற்று உதவியாக இருந்து அரசாக்ஷி செய்துவந்ததைப் பார்த்ததாகவும்; போர்த்துகியபாஷையில் எழுதி இருப்பதை மேஸ்டர் சுவேல் துரையவர்கள் இங்கிலீஷில் மொழிபெயர்த்து தமது விஜயநகாசரித்திரபுத்தகம் 345-349 பக்கங்களிற் பதிப்பித்திருக்கிறார் (Vide Pages 345-349 A-Forgotten Empire by Mr. R Sewell) ஆகவே அப்படி ஆண்டுவந்த நாயடுகாருகளிற் சிலரைப் பற்றி இதனடியில் எழுதுகிறோம்-

1. அதி வீரதிம்மப்ப நாயடுகாரு—அவர் உதயகிரி, கொண்டவிடு, பெனு கொண்ட, கடப்பை, சித்தவட்டம், கண்டிகோட்டை, நெல்லூர், கனகிரி, ஒரிசாவோரமாக இருக்கப்பட்ட நாடுகளுக்கு அதிபதி. அவருக்கு 8,00,000-லக்ஷம் பொன்வராகன் வரவு. அதில் 3,00,000-லக்ஷம் பொன்வராகன் நரபதிக்குச்சப்பம் கட்டி விட்டு, பாக்கியைத் தாமெடுத்துக்கொண்டு, ஸமஸ்தான உதவிக்காக 25,000-பதாதிகளையும், 15,000-குதிரைகளையும் 40-யானைகளையும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

2. கோபாலநாயடுகாரு-அவர் கோனவை யடுத்த இராஜகுலம், திருபுறம், திக்குமூலம், போகவோலம், அடைக்கலம் என்றுதி வடமேற்கு நாடுகளுக்கு

திபதி. அவருக்கு 600,000-லக்ஷம் பொன்வராகன் வருமானம். அதில் 1,50,000 ராகனை நரபதிக்கு கப்பம்கட்டிவிட்டு 20,000-பதாதிகளையும் 2,500-குதிரைகளையும் 20-யானைகளையும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

3. "இலக்ஷமய்ய நாயடுகாரு—அவர் தார்வாருக்குத் தெற்கேயுள்ள ங்கப்பூர் முதலான நாடுகளுக்குத் தலைவர். அவருக்கு 3,00,000 லக்ஷம் பொன் ராகன் வருமானம். அதில் 80,000 வராகனை நரபதிக்குக் கப்பம் கட்டிவிட்டு; க்கித்தொகைச் செலவில் 20,000 பதாதிகளையும், 1200 குதிரைகளையும், 28 யானைகளையும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

4. நரஹரி நாயடுகாரு—அவர் முதலில் நாகலாபுரி நகை முதலானதுகளுக்கு பொக்கிஷாதிபதியாகவும், ஒண்டிக்கிராமம், பல்லாரி, ஹார்பனை ஹள்ளிக் டுத்த துர்ககவதி, இராயதுருக்கம், அஸ்தகிரி முதலான நாடுகளுக்கு அதிகாரி. அவைகளால் 4,00,000 லக்ஷம் பொன் வராகன் வருமானம். அதில் 2,00,000 ராகன் கப்பம்போக; பாக்கியில் 12,000 பதாதிகளையும், 600 குதிரைகளையும், 0 யானைகளையும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

5. சின்னப்ப நாயடுகாரு—அவர் மைகுரையடுத்த களாலி முதல் கொச்சி ரையிலுள்ள நாடுகளுக்கு அதிகாரி. அவைகளால் அவருக்கு 3,00,000 லக்ஷம் பொன் வராகன் வருமானம். அதில் 1,00,000 வராகன் கப்பம்போக; பாக்கியில் 0,000 பதாதிகளையும் 800 குதிரைகளையும் தயாராகவைத்திருக்க வேண்டும்.

6. கிருஷ்ணப்ப நாயடுகாரு—அவர் அசோலே முதலான நாடுகளுக்கு அதிகாரி. அவைகளால் 20,000 பொன் வராகன் வருமானம். அதில் 7000 வராகன் கப்பம்போக, பாககியில் 700 பதாதி 500 குதிரைகளுடன் சித்தமாக இருக்க வேண்டும்.

7. விஜயப்ப நாயடுகாரு—அவருக்கு இராஜப்ப நாயடு என்று பெயருமுண்டு. அவர் மைசூர், சித்தல் துருக்கம். போடியால் முதல் மங்களூர் வரையிலுள்ள நாடுகளுக்கு அதிகாரி. அவைகளால் 3,00 000 லக்ஷம் பொன் வராகன் வருமானம். அதில் 10,000 வராகன் கப்பம்கட்டி, 10,000 பதாதிகளையும் 800 குதிரைகளையும் 15 யானைகளையும் வைத்திருக்கவேண்டும்.

8. மல்லப்ப நாயடுகாரு—கிருஷ்ணராயனுடைய குதிரை வீரர். அவர் கள்ளிகோட்டை முதலான மலையாள நாடுகளுக்கு அதிகாரி. அவருக்கு 15,000 பொன் வராகன் வருமானம். அதில் 5000-வராகனைக் கப்பங்கட்டி விட்டு பாக்கியில், 6000- பதாதிகளையும் 400- குதிரைகளையும் தயாராகவைத்திருக்க வேண்டும்.

9. சாலுவ நாயடுகாரு—அவர் ஒருகாலத்தில் மந்திரியாகவிருந்த தன்றியில் சோழமண்டலத்தைச் சார்ந்த தஞ்சை, நாகப்பட்டிணம், திருக்கோவிலூர், போயகிரி, காயல் பட்டணம் முதல் இலங்கைவரையிலுள்ள நாடுகளுக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அந்நாடுகளால் (11,00,000)

பதினொரு லட்சம் பொன் வராகன் வரவு. அதில் 3-ல் ஒருபாகத்தை நரபதிக்கு கப்பமாகக் கட்டிவிட்டு; பாக்கி இரண்டுபாகத்தைத் தமது செலவுக்கு வைத்துக்கொள்ள வேண்டியதன்றியில், தமது அந்தஸ்துக்காகவும், சமஸ்தான உதவிக்காகவும் 3000-குதிரைகளையும், 30000-பதாதிகளையும் 30-யானைகளையும் எப்போதும் தயராகவைத்திருக்கவேண்டும்.

10. விஜயப்ப நாயடுகாரு—அவர் இராயசூர் முதலிய நாட்டிற்கதிகாரி. அவைகளால் 4,00,000-லக்ஷம் பொன் வராகன் வருமானம். அதில் 150,000 வராகன் கப்பம் கட்டிபாக்கியில் 150,00 பதாதிகளையும், 1000குதிரை வீரர்களையும், 50 யானைகளையும் வைத்திருக்கவேண்டும்.

11. ஆதியப்ப நாயடுகாரு—அவர் ரூத்தி முதலான நாடுகளிலுண்டாகும் வைரக்கற்களுக்கு அதிகாரி. அவைகளால் 3,00,000 இலக்ஷம் பொன்வராகன் வருமானம்;அதில் 40,000 வராகன் கப்பம்போக, பாக்கியில் 8000 பதாதிகளையும், 800 குதிரைகளையும், 30 யானைகளையும் சித்தமாக வைத்திருக்கவேண்டும்.

12. இதே மாதிரியாகவே மதுரையை நரசா நாயடு முதல் விசுவநாத நாயடுவரையில் ஆண்ட மன்னர்கள் கட்டிவந்த கப்பத்தைப்பற்றியும், மதுரைச் சரித்திரத்தை எழுதிய மிஸ்டர் நெலசன்வர்களுக்கு கிடைத்த சாசனத்தினால் 1609-1623-ம் வருஷம் ஆண்டுவந்த விசுவநாத நாயடு போனபிறகு முத்து வீரப்ப நாயடுகாரு விஜயநகர நரபதிக்கு 6,00,000-லக்ஷம் பொன்வராகனைக் கப்பமாகக் கட்டி வந்ததைப் பற்றியும், எழுதி இருக்கிறார்.

இத்தியாதி சங்கதிகளினால் பலிஜவாராகிய ஆந்திரருக்கு நாயடுகாரு என்ற பட்டமும், அவர்களாண்ட நாடுகளுக்கு நாயடுகாரு ஸமஸ்தானமென்று பெயரானதற்குக் காரணமும் பிரத்தியக்ஷமாகும். இனி இதில் கண்ட நாயடுகாரு ஸமஸ்தானங்களை யெல்லாம் எழுதப்புகுந்தால்; இது ஒரு பெரிய புராணமாகிப் பலர் படிக்க விரும்பார்களாகையால், அவர்களில் நமது தென்னாடுகளில் ஆண்டுவந்தவர்களையும்,இப்போது ஆளுபவர்களுடையாவும் சிலர் சரித்திரங்களை மாத்திரம் சங்கிரகமாக எழுதுகின்றோம். அப்போது-

கர்னாடகதேசத்தின் ஸ்திதி.

விஜயநகர நரபதி சமஸ்தானத்தைச் சார்ந்த நவ (9) கண்டங்களில் கர்னாடக (கண்டம்) தேசம் அதிகபெரிது. அதற்கு தர்மநாயடுகாரு அதிகாரியாக இருந்து ஆண்டபிறகு, அவர் சந்ததிகள் சாலிவாகன சகாப்தம் 520-ஆம் வருஷம் முதல் 688-ஆம் வருஷம் வரையில் ஆண்டுவந்தார்கள். அதில் ஒரு பாகமாகிய திராவிட தெசமென்னும் சோழ நாட்டை சகாப்தம் 670 - ஆம் வருஷம் முதல் 710-ஆம் வருஷம் வரையில் கைப்பற்றிச் சகாப்தம் 711-ஆம்

வருஷம் முதல் 720-ஆம் வருஷம் வரையில் பரிபாலித்து பிறகு அதைச் சகாப்தம் 720-ஆம் முதல் 780-ஆம் வருஷம் வரையில் பிரதாப இராயலும்; சகாப்தம் 781-ஆம் வருஷம் முதல் 900-ஆம் வருஷம் வரையில் கோவிந்தராயலும் அச்சுதராயலும், விதியதாராயலும் பரிபாலித்து வரச்சே. 901-ஆம் வருஷம் முதல் 970-ஆம் வருஷம் வரையில் சிக்கராயலு பரிபாலனம் செய்தார். ச. 971-ஆம் வருஷம் மாதவராயலு சிவசமுத்திரத்தைப் பரிபாலனம் செய்த பிறகு ச. 971-ஆம் வருஷம் முதல் வெங்கடபதிராயலும், அவர் சந்ததிகளும் 1050-ஆம் வருஷம் வரையில் ஆண்டுவர, 1081-முதல் 1110-ஆம் வருஷம் வரையில் சோமசேகரராயலு ஆண்டுவந்தார். ச. 1280-ஆம் வருஷம் தேசத்தில் நாதனற்றுத் தவிக்க, 1300-ஆம் வருஷம் முதல் 1340-ஆம் வருஷம் வரை இம்மத்தூர் ராயலு ஆண்டார்கள். 1385-முதல் 1416-ஆம் வரு வரையில் நஞ்சராயலு, கேர்வர்த்தனராயலு ஆண்டுவர, அவர்களை ஜகதேவராயலு வந்து தாக்கி 1492 வரையிலும்;பிறகு1515-ஆம் வருஷம் இம்முடிஜகதேவராயலும், 1222-ஆம் வருஷமும் குமாரஜகதேவராயலும் ஆண்டுவந்ததாக பிரிவு—பிரபந்தகவிலு சரித்திரம் 77-ஆவது பக்கத்தில் சொல்லப்பெற்றிருக்கிறது.

நெல்லூர் சீமை கஜபதியினிடமிருந்து நரபதிக்கு சுவாதீனமான பிறகு அதை இலக்ஷ்மிராஜ,சின்னராஜ, நாராயணாரஜா ஆண்டுவந்ததாக ஒரு சரித்திரத்தில் கண்டிருக்கிறது. இப்படி பல பிரபுக்கள் கர்னாடகதேசத்தையாண்டு வந்தாலும், இந்தக் கர்னாடக தேசம் அதிக விஸ்தீரணமானதாயும், பற்பல ஜாதி, பற்பல பாஷை, வேஷம் முதலானவைகளால் வகுக்கப்பட்டிருந்தமையாலும், இத்தேசத்தைத் திப்ருதிகரமாக ஆளுவது கஷ்டமாக இருந்தது.

அக்காலத்திலிருந்த

கர்னாடகதேசத்தின் எல்லைவிஸ்தீரண விபரம்.

பெங்காளத்தில் 1837-ஆம் வருஷம் ஜேமஸ் பிரின்சிப்பவர்களால் பதிப்பித்த ஜர்னலாப் ஆசியாடிக் சொஸைடியின் சரித்திரப்புத்தகம் 11ஆம் வாலியம் 2-ஆம் பாகம் 124-வது பக்கத்தில் கி.பி.1807-8-ஆம் வருஷம்-சென்னையில் லார்ட்பேன்டிங்க், (Lord Bentinck) கவர்னராகவும், கர்னல் வில்லியம் மெக்லோடு (Col. William Mecold) ஆர்க்கசட்டில் கமிஷனராகவும், இருந்தபோது அவர் வேண்டுகோளின்படி, செஞ்சி கோட்டை நாரயணன் எழுதிய "கர்னடகராஜாக்களுடையசவிஸ்தார" சரித்திரத்தில் நரபதி இராயலு காலத்தில் கர்னடக தேசத்தைச் சார்ந்த நாடுகளை அடியில்கண்டபடி எழுதியிருக்கிறார்-அதாவது அப்போது கர்னடக தேசத்தில்

1. தொண்டமண்டலம்—அதன் பிரதான பட்டிணம் காஞ்சிபுரம்.
2. கனரா—அல்லது துளுவம்—அதன் பிரதானபட்டிணம் ஸ்ரீரங்கபட்டிணம்.
3. கொங்குமண்டலம்—அப்போது பிரதான பட்டிணம் கருவூர்

4. சோழதேசம்—பிரதான பட்டிணம் தஞ்சை.

5. தென்பாண்டிய தேசம்—பிரதான பட்டிணம் மதுரை-திருச்ராப்பள்ளி.

6. சேரமண்டலம்—திருநகரி, கேரளம், அநந்த சயனம்.

அடங்கிய விஸ்தீரணமான ஸமஸ்தானமாகையினால், அவ்வளவு விஸ்தீரணமுள்ள தேசத்தை ஒரே அரசன ஆள்வது கஷ்டமெனக்கண்டு; கிருஷ்ணதேவராயலு காலத்தில் இக் கர்நாடகத்தை மூன்று கண்டங்களாக (ஸமஸ்தானங்களாக) வகுத்து, அவைகளுக்குத் தக்க கப்பங்களையும், அதிபதிகளையும் நியமிக்கக்கருதியும்; 1,00,000 சேனைகளுடனும் விஜயப்பநாயடு, துபாக்கி கிருஷ்ணப்ப நாயடு, விஜயராகவலுநாயடு, வெங்கடப்ப நாயடு, ஆகிய தமது பந்துக்களையும் பிரதிநிதிகளையும் அனுப்ப, பசலி 879-ஆம் வருஷம் விஜயநாயடு ராயவேலூருக்கு வந்து தங்க; சித்தூர் தொண்டமண்டல பாளையக் காரர்கள் வந்து தரிசித்தபோது; அவர்கள் ஸமஸ்தானத்துக்குக் கட்டவேண்டிய கப்பத்தை நிர்ணயித்தார்கள். பிறகு அந்த விஜயப்ப நாயடுகாரின் சர்தார் சோழமண்டலத்துக்கேகி, செஞ்சி கோட்டை மன்னர்கள் கட்டவேண்டிய கப்பத்தை நிர்ணயித்தும்; பிறகு விஜயப்ப நாயடுகாரு சேர சோழ பாண்டியநாடுகளுக்குப் போய் அம்மன்னர்கள் கட்டவேண்டிய கப்பத்தையும் நிர்ணயித்தார்கள். அப்படி நியமித்த கப்பமானது வருஷம் ஒன்றுக்கு மூன்றுகோடி ரூபாயாகிய பிறகு அம்மூன்று கண்டங்களுக்கும்.

1. துபாக்கி கிருஷ்ணப்ப நாயடுகாரை செஞ்சி, நெல்லூர் முதல் கொல்லிட நதி வரையிலுள்ள நாடுகளுக்கு இராஜாவாகவும்.

2. விஜயராகவலு நாயடுகாரைத் தஞ்சை முதல் காவிரிநதி பாயும் நாடுகளுக்கு இராஜாவாகவும்.

3. வெங்கடப்ப நாயடுகாரை அதற்குத் தெற்கே இருக்கும் நாடுகளுக்கெல்லாம் இராஜாவாகவும் நியமிக்கப்பட்டு ஆண்டுவந்தார்கள். அவர்களில் செஞ்சியிலிருந்த துபாக்கி கிருஷ்ணப்ப நாயடு சிலமகமதியரைச் சேர்த்துக் கொண்டு சுதந்திர ராஜனாக பிரவுடகவிலு சரித்திரம் 80 ஆம் பக்கத்தில்கண்டிருக்கிறது. கர்னல் மெக்கன்ஜி துரையவர்களுக்குக் கிடைத்த ஒரு சாசனத்தினால், கி. பி. 1585-ஞூம் ஸ்ரீரங்கராயலுடைய சகோதிரர் வெங்கடபதி ராயலு சிங்காசன மேறிய உடனே சந்திரகிரியை தமது பிரதானப்பட்டணமாகவும், வேலூரைத் தமது இராணுவம் தங்கும் தலைநகரமாகச் செய்துக் கொண்டும், செஞ்சி கோட்டையை கிஷ்ணம நாயடும், தஞ்சாவூரை, விஜய ராகவலு நாயடும், மதுரையை, குமார கிருஷ்ணப்ப நாயடும்; சென்னப்பட்டணத்தை ஜகதேவராயலும், பெனுகோண்டாவை புஜபலராயலும் ஆண்டுவரும்படி நியமித்ததாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது-இப்படி பலஸமஸ்தானங்களுக்கு பிரபுக்களாக நியமிக்கப் பெற்ற நாயடுகளும் (Vide Pages 129, 130—Vol V1. Part II. The Journal of Asiatic Society of 1837) அவர்களுடைய சந்ததிகளும் நெல்லூர், செஞ்சி, காஞ்சி, வேலூர், சித்தூர் சேலம்,

திரிசிரபுரம், தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலான பல விடங்களில் பரவி சுமார் 200 வருஷங்கள் வரையில் மகமதியரால் இந்துக்கள் கஷ்டப் படாமல் காத்துவந்தார்கள். பிறகு இப்போதிருக்கும் வெங்கடகிரி, காளஸ்திரி, கார்வேடிநகரம், பிட்டாபுரம், போபுலி, பர்லகிமிடி முதலான சிறு ஜமீன்கள் தவிர மற்ற நாடுகள் முறையே மகமதியர் வசமாகிப் பிறகு ஆங்கிலேயர் வசமாகி விட்டன.

மேல் குறித்த வெங்கடகிரி, காளஸ்திரி முதலானதுகள் இப்போதும் நாயடு ஸமஸ்தானங்களாக இருக்கின்றமையால், அவற்றின் சரித்திரங்களைச் சங்கிரஹமாக எழுதுகிறோம்.

வெங்கடகிரி ஸமஸ்தானம்.

இச்சமஸ்தானத்தை கி. பி. 1257-ஆம் வருஷம் வேலம பலிஜவாராகிய பேட்டலநாயடுகாரு ஸ்தாபித்தார். இவர் வாரங்கல் கணபதிராயலிடமிருந்து வந்தவர் இவருக்கு தாமநாயடு பிரசாதித்தியநாயுடு, ருத்திரநாயடு என்ற மூன்று குமாரர்கள் பிறக்க; முதற் குமாரர் மஹாவீரராக இருந்தபடியால் இவருக்கு வாரங்கல் ராஜா கண்டபேரண்டபக்ஷிக் கொடியைப் பிருதாகக் கொடுக்கப் பெற்றார். இவர் மனைவியார் ஜகன்மோஹனி மாதவி. இரண்டாவது குமாரராகிய பிரசாதித்தியநாயடும் அதிக வீரதீரராக இருந்தபடியால், நரபதி ஜராங்ககத்தை ஸ்தாபித்தார். தர்மநாயடுகாரு பத்மாதேவியை விவாகம் செய்ததில் வென்னம நாயடு, சாமி நாயடு, பிறந்தார்கள். இந்த வென்னம நாயடுவின் குமாரரான எர்ரதுளசி நாயடு கி. பி. 1293 முதல் 1323 ஆம் வருஷம் பிரதாபருத்திரருடைய உத்திரவின்படி காஞ்சீபுரத்தில் பாண்டிய ராஜனைத் தாக்கி ஜயசீலரானார்.

இந்த எர்ர துளசி நாயடுக்கு வீரதிவீரனாகிய சிங்கம நாயடு, வென்னம நாயடு, எச்சமநாயடு, என்ற மூவர் பிறக்க; சிங்கம நாயடுக்கு அநந்தபோக நாயடு பிறந்து, 1300-ஆம் வருஷத்தில் சுமார் 101 பாளையக்காரருடன் எதிர்த்துச் சண்டைசெய்து ஜயித்துப் புகழ்பெற்றார்.

மற்றொரு குமாரராகிய மாதவநாயடு 1369-ஆம் வருஷம் ஸ்ரீசைலத்தை விருத்தியாக்கினார். அநந்தபோக நாயடுக்குப் பெத்த சிங்கம நாயடு, தருமநாயடு, திம்மநாயடு, அன்னம நாயடு, சின்னச்சிங்கம நாயடு, பிறந்தார்கள். இந்தத் திம்ம நாயடுக்கு தர்ம நாயடு, சித்தி நாசநாயடு, அநுபோத நாயடு பிறந்து, 1456 முதல் 1477 ஆம் வருஷம் வரையில் நாட்டை யாண்டுவந்தார்கள். அநுபோத நாயடுக்கு பெத்த மாதவநாயடு, சின்ன மாதவநாயடு, வீரசூர நாயடு, மதுசூதன நாயடு, எச்சமநாயடு, சின்ன சிங்கம நாயடு, நிர்வாணராம நாயடு, பிறந்தார்கள். பிறகு இராஜ்யம் விஜயநகர அச்சுத தேவராயனுடைய ஆதீனத்துக்குள் வந்தது.

1530-ஆம் வருஷம் சிங்கமநாயடு, குமாரதிம்ம நாயடும் பிறகு பெத்த கொண்டப்ப நாயடும், திருமலை நாயடும், ஞானதிம்ம நாயடும், கொண்டம நாயடும், பிறகு பெத்த கொண்டப்ப நாயடும், இவர் குமாரர் சென்னப்ப நாயடும், பட்டத்துக்கு வந்தார்கள். இவர் கண்டிகோட்டையில் மகமதியரை மடக்கி ஜயித்தார்.

பெத்த கொண்டம நாயடு சகோதரர் எச்சம நாயடுக்கு கஸ்தூரி ரங்கப்ப நாயடு பிறந்தார். இவர் 1579-ஆம் வருஷம் விஜயநகர நரபதி ஸமஸ்தானத்தாருக் குதவியாக கோலகுண்ட, வினுகொண்ட, கொண்டவிடு, கோட்டைகளைத் தாக்கிய மகமதியரோடு சண்டை செய்து ஜயித்தார். மற்றொரு குமாரராகிய ஆர்வீட்டி திம்மப்ப நாயடுக்கு சந்ததி இல்லை. கஸ்தூரி ரங்கப்ப நாயடுக்கு எச்சம நாயடு பிறந்தார். இவர் 1602-ஆம் வருஷம் செங்கல்பட்டைச் சார்ந்த மதுராந்தகத்தை விஜயநகர வெங்கடபதி ராயரால் பஹுமானமாகப் பெற்றார். இவர் குமாரர் எச்சப்ப நாயடு மைசூரில் சண்டைசெய்து டில்லி சக்கிரவர்த்தியினால் பஹுமானங்களைப்பெற்றார். இந்த எச்சம நாயடுக்கு பங்காரு எச்சம நாயடு பிறந்து, 1639 ஆம் வருஷம் ஒரு பெரிய அக்கிரஹாரத்தைக் கட்டி 1658-ஆம் வருஷம் வேலூர் ஜுலிப் பகார்கானால் கொல்லப்பட்டார். இவர் குமாரர் சர்விக்ன குமார எச்சப்ப நாயடு 1700-ம்ஹூ வேலூரில் சண்டைசெய்தும், 1712 ஆம் வருஷம் மைசூரிலும், 1714-ஆம் வருஷம் செஞ்சிக் கோட்டையிலும் பிரபல சண்டைகளைச்செய்து 1747-ல் இறந்தார். இவர் குமாரர் பங்காரு எச்சம நாயுடு 1760 ஆம் வருஷம் வெங்கடகிரியில் கோட்டையைக் கட்டி 1747 முதல் 1776 ஆம் வருஷம் வரையிலாண்டார். இவர் சகோதரர் பெத்த எச்சம நாயடுக்கு சந்ததி இல்லை. ஆகவே குமார எச்சன்ன நாயடுவைத் தத்துவாங்க அவர் 1776-ஆம் வருஷம் முதல் 1802 ஆம் வருஷம் வரையிலாண்டு வருகையில்; ஐதிராலி படையெடுத்து வந்து தாக்க இந்த நாயடுகாரு அங்கிலேயரோடு சேர்ந்து 1802-ஹூம் (Lord Clive) கிளைவு பிரபுவினால் சமஸ்தான சன்னத்தைப் பெற்றார். இந்த நாயடுகாருக்கும் சந்ததியில்லாமையால் 1802-ஆம் வருஷம் பங்காரு எச்சம நாயடுகாரைச் சுவீகாரம் செய்துகொண்டார். இந்த நாயடுகாரு 1847-ஆம் வருஷம் வரையிலாண்டார். இவர் குமாரன் தான் இப்போது அந்த வெங்கடகிரி ஸமஸ்தானத்தை ஆண்டு வரும் சுமார் 38-வயதுடைய ஸ்ரீ ராஜா ஸ்ரீ கோபால கிருஷ்ண நாயடுகாரு பஹதூரவர்கள். இவர் இந்த ஸமஸ்தானத்துக்கு 28-வது சந்ததி.

இந்த வெங்கடகிரி ஸமஸ்தானம் நெல்லூர் ஜில்லாவுக்குத் தெற்கும், சென்னைக்கு வடமேற்க்காக இருக்கிறது. இதன் விஸ்தீரணம் 2,117-சதுரமைல் இதில் 1881-ஆம் வருஷம் கணக்கின்படி 300,865-குடிகளிருந்தார்கள். இப்போதிருக்கும் ஸமஸ்தானபதி கல்வி கேள்விகளிற் சிறந்து தேசாபிமானத்தை நாடி (Land Holders Association) நிலச் சுவானதாரரர்களுடைய சங்கத்திற்கு சிரேஷ்ட அங்கத்தினராக இருக்கிறார். இச்சமஸ்தானத்தில் மிஸ்டர் நாராயணசாமி செட்டியார் பி. ஏ., மந்திரியாக இருக்கிறார். இச்சமஸ்தானத்

தில் மிஸ்டர் நாராயணசாமி செட்டியார் பி, ஏ., மந்திரியாக இருக்கிறார். இச் சமஸ்தானத்தை நன்கு அறிய விரும்புவோர் மிஸ்டர் பாஸ்வெல் எழுதிய நெல் லூர் மானியூவில் 712-முதல்724-பக்கங்களையும்,இராபர்ட் சுவேல் சாஸ்திரியா ருடைய ஆர்கியாலோஜி சரித்திரம்239,242-பக்கங்களிலும், 1875-ஞ்ஜைகோர் ட்டு வக்கீல் இராமராயர் எழுதிய சரித்திரத்தையும், 1837-ஆம் வருஷம் ஆசி யாடிக் ஜர்னல் 2-ஆவது வாலியம் 2-ஆவது பாகம் 107, 110, 115, 117-ஆம் பக்கங்களையும் படித்துப் பார்க்கலாம்.

(இரண்டாவது அத்தியாயம்.)

காளாஸ்திரி சமஸ்தானம்.

ஸ்ரீமத் திவான் பஹதூர் இரகுநாதராவ்அவர்கள்1891-ஆம் வருஷம் எழுதிப் பதிப்பித்த காளாஸ்திரி சமஸ்தான சரித்திரத்தின்படி,இந்தச் சமஸ்தானத்தைப் பன்னிரெண்டாம் நூற்றண்டில்(கி. பி. 1112-ஆம் வருஷம்)க்ஷத்திரியவமிச, இனிகால கோத்திரம், ஜாபிநாயடுகாரு ஸ்தாபித்தார்.

இவர் சாலிவாஹன சகாப்தம் 1033-ஆம் வருஷம் (கி. பி. 1112-ஞ்) வா ரங்கல் பிரதாபருத்திரராயலுக்கு உதவியாகியும், மகமதியரைத் தாக்கி ஜயித்த படியால், இச் சமஸ்தானத்தைப் பெற்றார்.இவர் குமாரர் மாத நாயடுகாரு14-ஆம் நூற்றண்டில் பிரபலராகி பிரதாப ருத்திரருக்கு உதவியாய்ப் பாண்டியதேசத் தை ஜயித்ததாக, மிஸடர் மெக்கன்ஜி சாசனத்தினுலும், மிஸ்டர் வில்கிஸ் (Wilks' Mysore Vol. I-P 13) சரித்திரத்தினுலும் ஸ்பஷ்டமாகிறது.

இவர் குமாரர் வல்லபநாயடுகாரு கஜபதிக்கு உதவியாகி நின்று,காதர்கான் என்னும் மகமதிய மந்திரியைக் கொன்றார். இவர் குமாரர் திம்மநாயடுகாரு மக மதியரை வென்று "தேவரகொண்ட" ஜாகீரைப் பெற்றார். இவர் குமாரர் அப் பாய் நாயடுகாரு "வாலூரை" ஜயித்து ஆண்டார். இவரது சகோதரர் அன்னம நாயடு காருக்கு அநேக சந்ததிகளுண்டு. இவர் குமாரர் வேங்கடப்ப நாயடுகாரு குனகாசலாவிலிருந்த மகமதியரை ஜயித்து. அதைத் தன் சமஸ்தானத்துடன் சேர்த்தார்.

பதினைந்தாம் (15) நூற்றண்டில் கஜபதி ஸமஸ்தானத்தின் மகிமை குறைய, விஜயநகர ஸமஸதானம் விருத்தியாக, இந்தக் காளாஸ்திரியைச் சார் ந்த தாமரால வீரப்ப நாயடுகாரு அந்த ஸமஸ்தானத்துககு உதவியாக நின்று மகமதியரைத் தடுத்துவந்தார். இவர் குமாரர் தாமரால வெங்கடப்ப நாயடுகாரு ஸ்ரீரங்க இராயலுகாலத்தில் (கி. பி. 1573-1585-ல்) பிரபலரானர் (Vide P. 438 Nellore Manual) இந்த ஸ்ரீரங்க ராயலை மகமதியர் தாக்கியபோது, இந்த வெங்கடப்ப நாயடுகாரு கந்துகூரியில் எதிர்த்து காதி என்னும் மகமதிய வீரனை ஜயித்தபடியால்; இராயலு மகிழ்ந்து செஞ்சி, வந்தவாசி, காளாஸதிரி ஜாகீரை

யும், பல பிருது பட்டங்களையும் கொடுத்தார். இவருடைய குமாரர் வெங்கடப்ப நாயடுகாரு இராபூரி சண்டையில் ஜயசீலனானதால், இராயலு மகிழ்ந்து திரிசிராப்பள்ளி, தஞ்சை முதலான நாடுகளை கொடுக்கப் பெற்றும், திரிசிராப்பள்ளிக்கருகில், சமயவரம் என்னும் இடத்தில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டார்.

இவர் குமாரர் சென்னப்ப நாயடுகாரு பட்டத்துக்கு வந்தபோது தேகசுகமின்மையால, இப்போது சென்னப்பட்டணமென்று பிரசித்திபெற்ற பட்டணம் அப்போது ஓர் மீன்பிடிக்கும் குப்பமாக இருந்த இடத்திற்குப்போய் கடல்காற்றுக்குத் தங்க; அதற்கு 'சென்னகுப்பம்' என்று பெயர் வழங்கிக் கொண்டுவந்தது. இவருடைய குமாரர் தாமரால வெங்கடாத்திரி நாயடுகாரு பட்டத்துக்கு வந்தகாலத்தில், தக்ஷிண நாட்டில் ஆங்கிலேயர், பிரான்சுக்காரர், டானியர், போர்த்துக் கேயர்க்ள் வந்து வர்த்தக ஸ்தலங்களை ஸ்தாபிக்கவேண்டிய இடங்களுக்குப் பல குருநில மன்னர்களுடைய உதவியை நாடித்திரிகையில்; இக்குருநில மன்னர்கள் எந்த ஜாதியாருக்கு உதவி செய்வதென்று மனோராஜியம் செய்து கொண்டிருந்தார்கள். இந்த தாமரால வெங்கடாத்திரி நாயடுகாருக்கு ஆங்கிலேயரே நல்லவர்களென்றும், அவர்களுக்கு உதவிசெய்வதே உத்தமமென்றும் யோசித்துக் கொண்டிருக்கையில்; நெல்லூரிலிருந்து தருவப்பநாயடுவும், ஆறுமுகமுதலியாரும் 1639-ஆம் வருஷம் வந்து, சென்னப்ப நாயடுகாருக்கும், வெங்கடாத்திரி நாயடுகாருக்கும் சிப்பார்சு செய்து, சென்னகுப்பத்தை ஆங்கிலேயருக்கு கொடுக்கும்படி கேட்க; இந்தத் தாமரால வெங்கடாத்திரி நாயடுகாரு அப்போது சந்திரகிரியில் இருந்த நரபதி ஸ்ரீரங்கராயலுக்குத்தெரிவித்து, அவர் அனுமதியின்படி அப்போது ஈஸ்டு இந்தியாக் கம்பனிக்கு காரியஸ்தராகவிருந்த மிஸ்டர் டே (Mr. Day) என்பவர் மூலியமாகக் கொடுத்தார்.

அப்படிக் கொடுத்த அந்த இடத்திற்கு ஸ்ரீரங்கராயலுடையபட்டணம் என்று தம் பெயரிடும்படி சந்திரகிரி ஸ்ரீரங்கராயலு தெரிவித்திருந்தாலும்; இந்த வெங்கடாத்திரி நாயடுகாரின் தகப்பனார் சென்னப்பநாயடுகாரும் அந்த இடத்தை அதிகமாக விரும்பிப் பாராட்டி வந்தமையால், அவர் பெயரே விளங்கட்டுமென்று அதற்கு சென்னப்பட்டணம் என்று பெயரிடும்படி சொன்னதில், அதே பெயரிட்டும், இப்போதும் சென்னப்பட்டணம், அல்லது சென்னை என்ற பெயரால் இந்த தக்ஷணராஜதானிக்கு தலைமை நகராகப் பிரகாசிக்கிறது.

[Vide Pages 172 of the Gazetteer of Southern India; Pages of 216 Manual of the North Arcot; Pages 441, 442 of Mr. Boswells Dt. Manual of Nellore; Pages 14, 15 of Abuer's Rice & Progress of India]

இந்தத் தாமரால நாயடுகாருகள் மகா வீரதீரர்களாகவிருந்து, கஜபதி நரபதிகளுக்கு உதவிசெய்ததன்றியில், அரங்கசீப் சக்கிரவர்த்திக்கும், உஜனி யுத்தத்தில் உதவி செய்ததனால், 1697-ஆம் வருஷம், தாமரால அக்கப்ப நாயடுகா

ருக்கு பஹதூர் பட்டமும், பல்லக்கு முதலான பிருதுகளையும் கொடுத்துக் கௌரவித்தார்.

இவருக்குச் சந்ததியில்லாமையால், இவர் அண்ணன் குமாரர் தாமரால வெங்கடப்ப நாயடு 1745-ஆம் வருஷம் பட்டத்துக்கு வந்தார். இவருக்கு சகமது சாயிபு மந்திரி. நாசிப்கான் 1751-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 5-ந்தேதி தாரூர் முதலான கிராமங்களையும், கம்பத்துக்குப் பதிலாக கனககிரி முதலான விடங்களையும் கொடுத்தார்.

1758-ஆம்வருஷம்மராட்டியர் காளாஸ்திரியைத்தாக்க;மறுவருஷம்வரையில் இங்கிலீஷ்காரர், பாதுகாத்தார்கள். 1781-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ஆந் தேதி ஸர் ஐயர்கூட் (Sir Eyre Coote) இவரை இங்கிலீஷ்காரர்களுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்று கடிதமெழுத, உடனே சம்மதித்து இங்கிலீஷ் சேனைகளுக்கு வேண்டிய அரிசி, ஆடு, மாடு முதலானவைகளைச் சேகரித்துக் கொடுத்து வந்தனம் பெற்றார். இவருக்கு ஆங்கிலேயரிடமிருந்த இராஜ விசுவாசத்தைப்பற்றி 1791-௵ ஆகஸ்டு மாதம் 12-ந்தேதியில் ஸர், ஜார்ஜ் பார்டுநட்டு (Sir George Bardnet) அவர்களும் (Lord Cornwallis) காரன்வாலிஸ் பிரபுவும் புகழ்ந்து கொண்டாடி எழுதி இருக்கிறார்கள். இந்தக் குமார வெங்கடப்பநாயடு இவ்வளவு புகழுடன் 50-வருஷம் ஸமஸ்தானத்தை யாண்டு இறந்துபோக. 1795-வருஷம் இவர் குமாரர் தாமரால திம்ம நாயடுகாரு பட்டத்துக்குவந்தார்.

இவர் இயற்கையில் குரூரரானாலும், ஆங்கிலேயருக்கு அன்பராக இருந்தார். இவருடைய வீரதீரத்தைப் பார்த்து கர்னாடக இங்கிலீஷ் சேனாதிபதியாகிய ஜார்ஜ் ஹாரிசும் (George Harris) அப்போது சென்னைக் கவர்னரான கிளைவு பிரபு(Lord Clive) முதலானவர்கள் கடிதங்கள் மூலியமாக இவர் உதவியை நாடினார்கள். 1803-ம் ௵ இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் இவரையும் மற்ற சுதேச குருநில மன்னரையும் தம் சமஸ்தான சேனைகளை எடுத்துவிடவேண்டுமென்றுகட்டளையிட்டதில் அதேவிசனத்தில் இறந்தார்.

இவருக்கு பெத்த வெங்கடப்ப நாயடு, சின்ன வெங்கடப்ப நாயடு என்ற இரண்டு குமாரர்கள் இருந்ததில், பெத்த வெங்கடப்ப நாயடு காருக்கு பட்டம் கிடைத்தது. இவருக்குப் பிறகு இவர் குமாரர் திம்ம நாயடுகாரு பட்டத்துக்கு வந்து 1832 ஆம் வருஷம் இறந்துபோக, இவர் மனைவி தமரால வெங்கடப்ப நாயடுகாரைச் சுவீகாரம் செய்துகொண்டதில், 1834 ஆம் வருஷம் நவம்பர் மாதம் 12 ஆந்தேதி பட்டத்தை யடைந்தார். இவர் 17 வருஷம் ஆண்டு வித்வான்களை ஆதரித்தார். 1837 ஆம் வருஷம் வட நாடுகளில் சிப்பாய் கலகமுண்டான காலத்தில் தாம் இங்கிலீஷ்காரர்களுக்கு வேண்டிய உதவிகளத்தனையும் செய்வதாக அநுதாப கடிதத்தைச் சென்னை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார். இவர் காலத்தில் ஜமீன் கர்தாயம் வசூல் செய்யும் விஷயத்தில் புது சட்டங்களுண்டாகியதால்; நஷ்டமடைந்து லக்ஷக்கணக்காக கடன்வாங்கி

1881- வருஷம் பிப்ரவரி மாதம் 22-ந்தேதி (தம் ஸமஸ்தானத்துக்கு 6-குமாரர்களைவிட்டு) இறந்தார். இந்த 6-குமாரர்களில் ஜேஷ்டராகிய இராஜா ஓமதராஜா இராஜ தாமரால குமாரமுத்து வெங்கடப்ப நாயடுகாரு பஹதூர்ப் பட்டத்தைப்பெற, 1881ஹூ மே மாதம் 17-ஆந் தேதி இங்கிலீஷ் கவர்ன் மெண்டாரால் கிலத்தைப் பெற்றார்-1 890 ஹூம் சென்னை கவரன் மெண்டரால், (Lord Connemara & Lord Wenlock) இந்த ஸமஸ்தானபதி சென்னைக் கவர்ன்மெண்டு மாளிகைக்குப் போய் வரும்போதும், இராஜவண்டி, தண்டு பிருதுகளுடன் போய் வரும் கவுரவம் கொடுக்கப்பட்டது.

இப்பொழுது இந்த காளாஸதிரி சித்தூர் ஜில்லாவிலிருக்கிறது. இதில் பாலூர், காளாஸதிரி, மாதர் பாக்கம் என்ற வடதென் பிரிவுகளாக வகுக்கபட்டிருக்கின்றது. வடபிரிவில் 5 தாலுகாக்களும், 415 சதுரமைல் விஸதீரணமும், அதில் 194 கிராமங்களும் 100,000குடிகளும்;-தென்பிரிவில் 736 சதுரமைல் விஸ்தீரணமும்; ஸமஸ தான முழுதும் 1151 சதுரமைல் விஸதீரணமுள்ளதாயும், 1191-ம் வருஷம் கானிஷ் மாரிகணக்கின்படி 240,000 குடிகள் வசிக்கிறார்கள். இச்சமஸதான வருஷாந்திர வரவு 4 லட்சம் ரூபாய் இதில் 174,0000 பேஷ்கஷும், மற்றவரிகளில் 27,000 ரூபாய் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்கு கட்டவேண்டும்.

இந்த சமஸ்தானத்தின் ராஜ வமிசாவளி.

1 தாமராலஜாபிநாயடுகாரு 2 மாதநாயடுாரு 3 வல்லபநாயடுகாரு4 திம்ம நாயடுகாரு 5 இரங்கவ நாயடுகாரு 6 அப்பாய் நாயடுகாரு 7 தர்ம நாயடுகாரு 8 சென்னப்ப நாயடுகாரு 9 வெங்கடப்ப நாயடுகாரு 10 திம்ம நாயடுகாரு 11 வெங்கடப்ப நாயடு 12 சென்னப்ப நாயடுகாரு 13 வெங்கடப்ப நாயடுகாரு 14 ஐயப்ப நாயடுகாரு 15 வல்லப நாயடுகாரு 16 அன்னம நாயடுகாரு 17 மகிபதி நாயனிகாரு 18 ஸ்ரீபாத நாயனிகாரு 19 அப்பநாயடுகாரு 20 தர்மநாயடுகாரு 21 வரதப்பநாயடுகாரு 22 வெங்கலப்ப நாயடுகாரு 23 வெங்கலப்பநாயடுகாரு 24 அச்சப்ப நாயடுகாரு 25 சென்னப்ப நாயடுகாரு 26 அக்கப்ப நாயடு 27 வெங்கடப்பநாயடுகாரு 28 வெங்டப்பநாயடுகாரு 29 திம்மப்பநாயடுகாரு 30 பெத்த வெங்கடப்பநாயடு 31 திம்மநாயனிகாரு 32 வெங்கடப்ப நாயடுவாரு (1877 -வருஷம் இப்போதிய அதிபதி-)

[Vide History of Kalastry by Dewan Bahadur R. Ragunatha Row, 1891.]

(மூன்றாம் அத்தியாயம்.)

கார்வேட்டிநகர ஸமஸ்தானம்.

இதுசித்தூர் அல்லது வட ஆர்காடு ஜில்லாவிலிருக்கிற ஒரு சிறியசமஸ்தானம். ஆதிகாலத்தில், ஆறு+காடு=என்னும் ஆர்க்காட்டில் இருந்த பயங்கரமான காடுகளைவெட்டி நாடாக்கியபதனால், அந்த ஆற்காட்டுக்கு அதிகாரி மகிழ்ந்து அக்காடுவெட்டியவருக்கு இந்த கார்வேட்டி அதாவது காடு+வெட்டி=கார்வேட்டி நகரை ஜாகீராகக் கொடுத்ததாய் ஒரு சாசனத்திலிருப்பதாய் மைசூர்ச் சரித்திர சாஸ்திரி மிஸ்டர் ரைஸ் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார். ஆயினும்

இந்தச் சமஸ்தான ஆதி உற்பத்தி சரித்திரத்திலும், மிஸ்டர் காக்ஸ் எழுதிய வட ஆர் காட் மானியூல் சரித்திரம் 223-வது பக்கத்திலும்; மிஸ்டர் ராபர்டு சுவேல் சாஸ்திரியாரின் சரித்திரம் 2-வது வாலியம், 184-வது பக்கத்திலும், பின் வருகிறபடி எழுதப்பட்டிருக்கிறது. அதாவது:—

இச்சமஸ்தானத்தை ஸ்தாபித்தவர், ஒன்பதாம் நூற்றாண்டில், கோதாவரி ஜில்லா, பிட்டாபுரத்தில் சிறந்த க்ஷத்திரிய வெலமபலிஜ குடும்பஸ்தர்களாகிய பொம்மராஜு, குட்டி மேகராஜு என்ற சகோதிரர்கள், இராமேஸ்வர யாத்திரைசெய்துவந்தும்; திருபதிமலை தரிசனத்துக்கு வந்து சுவாமியைக்கண்டு வணங்கியும், கால் நோய் பரிசிமம் தீர்த்துக்கொள்ள அடுத்திருந்த, "மட்டிகுண்டா" என்னும் கிராமத்தில் சிலநாள்கள் தங்கி இருக்க; ஒரு நாளிரவில் சில கூட்டக் கொள்ளைக்காரர்கள் வந்து அந்தக் கிராமத்தையும், அதன் அதிபதியையும் தாக்கி, கொள்ளையிடும்போது; அந்த பொம்மராஜும், குட்டிமேகராஜும் எதிர்த்துக் கள்ளரையடித்து ஓட்ட; அந்தக் கிராமாதிகாரி கண்டு வியந்து, அதில் முக்கியவீரனாகிய பொம்மராஜுவைத் தன் மந்திரியாக நியமித்துக்கொண்டு ஆண்டுவருங்கால்; அவருக்கு சந்ததியில்லாமையால், அந்த உண்மையுள்ள வீரதீரனான மந்திரி பொம்மராஜுவுக்கே இராஜியத்தைத் தந்து இறந்து போக; அந்தப் பொம்மராஜு தருமராஜிய பரிபாலனம் செய்துவந்தாராம். இவருக்கும் சந்ததி இல்லாமையால், கோதாவரி பிட்டபூரிலிருந்த இவர்தாயாதி குமாரர் சாளுவ நரசநாயடு 1016ல்-வந்து அங்கு நரசாபுரம் என்ற ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தும்; 1020 வருஷம் சிங்காசனமேறி, 1023 வருஷம் இறந்து போக; இவர் குமாரர் சாளுவ வெங்கடபதி நாயடு பட்டத்துக்கு வந்து சோழர்களைஜயித்து, 35-வருஷம் ஆண்டாராம்.

வேறொரு சாசனத்தினால், சாலிவாகன சகாப்தம் 880-ஆம் வருஷம் விமலாதித்திய நாயடும், 930 வெங்கடபதிநாயடும், 958ம் பீமநாயடும் ஆண்டதாக தெரியவருகிறது. 1077-வருஷம் புஜங்க நாயடும், 1236 நரசாநாயடும், ஆண்டதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இப்போது இந்தக் கார்வேட்டி நகர சமஸ்தானம் வட ஆர்க்காடுஜில்லாவில் சந்திரகிரி, காளாஸ்திரி, செங்கல்பட்டு, வாலாஜா,

சித்தூருக்கு இடையில் 9438 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயும்; நாராயண வனம், மல்லிப்பேட்டை, திருத்தணி முதலான கிராமங்களுள்பட 798 கிராமங்களில், 125,000 ஏகர் விளைவு நிலமுள்ளதாயும்; தற்காலம் 700,000 ரூபாய் வருமான முடையதாயும் இருக்கிறது. இதைத் தக்கபடி விருத்திசெய்தால் 10,00,000 ரூபாய் கிடைக்கலாம். கடன் அதிகமாக யிருப்பதால் ஸமஸ்தானம் இருக்கவேண்டிய ஸ்திதிக்குக் கொண்டுவர நமது ஆங்கில கவர்ன்மெண்டார் வேண்டிய முயற்சிகளைக் கையாடிவருகிறார்கள்.

(நான்காம் அத்தியாயம்.)

போபுலி ஸமஸ்தானம்.

இந்த போபுலி ஸமஸ்தானம் விசாகப்பட்டணம் ஜில்லாவில், விஜயநகரத்துக்கு வடக்கே இருக்கும் புராதான நாயடு ஸமஸ்தானம். 1652 ஆம் வருஷம் பெத்த நாயடுஎன்னும் இச்சமஸ்தானத்தின் ஆதிதந்தை,இராஜம்என்னும் இடத்துக்கு வந்து போபுலி=இராஜபுலி என்னும் பெயரால் ஒரு கோட்டையைக் கட்டினார். 1756-வருஷம் ஸமஸ்தானத்தில் சிறு கலகங்கள் உண்டாக, அக் காலங்களுக்கு இந்தப் பெத்தநாயடுதான் காரணமென்று பொறாமையினால் சாடிகள் சொல்லி (M Bussy) புசி என்னும் பிரான்சு வீரனை விஜயநகராதி பதிதூண்டி, 11,000- சேனைகளுடன் உதவி செய்ய; போபுலிராஜர் இனி பகையாளிகளை ஜயிப்பது அசாத்தியமெனக் கண்டு, தம் மனைவி மக்களை அக்கினிக்கு இரையாக்கியும்; பிரதி மனுஷனும் பிராணனுள்ளவரையில் போர் செய்தும், போர்முகத்தில் சொர்க்கத்தை யடைந்தார்கள். தப்பி இருந்த ஒரு கிழவன் ஸமஸ்தானத்துக்கு வார்சான ஒரு பாலியனைப் புசியிடம் ஒப்புவித்து விட்டும்;உயிர் தப்பி இருந்த பிரான்சு வீரர்,வேறு நால்வர் விஜயநகர அதிபதியின் கூடாரத்துக்குள் புகுந்து, அந்த அதிபதியைக் கைவாளால் வெட்டிக் கொன்று பழியைத் தீர்த்துக்கொண்டார்கள்.அப்போது சிறுபையனாக இருந்த சின்ன இரங்காராவு என்பவனை 1794-வருஷம் (Bussy) புசி என்பவர் ஸமஸ்தானபதியாக்கி 1801வருஷம், சர்க்கார் பேஷ்கஷ் 90,000-ரூபாயாக நியமித்தார்கள். இராஜாசுவேதசலபதி ரங்காராவ்பஹதர் பிரபுவாயிருந்தபோது கி. பி. 1832ளும் கஞ்சாமிலும், விசாகபட்டணத்திலும், பிரபலகலகங்களுண்டாக இவர் அங்கிலேயருக்கு உதவியாக விருந்து அக்கலகத்தை அடக்கிவைத்தார்— இவர் மஹா தரும பிரபுவாக இருந்தும்; சந்ததியற்று கி. பி. 1862 வருஷம் ஆகஷ்டுமீ 18-ம் தேதி பிட்டாபூர் சமஸ்தானத்தில் ஒரு குமாரனை சுவீகாரம் செய்துக் கொண்டு இறந்து விட்டார். அவரும் 5 வருஷம் ஆண்டு 1864 வருஷம் தமது 23ம் வயதில் இறந்து விட்டார்; அவர் மனைவி செல்லாயம்மகாரு பட்டத்தைப் பெற்று கொஞ்சகாலம் ஆண்டபிறகு, வெங்கடகிரி சமஸ்தான ராஜாவின் மூன்றாவது குமாரராகிய இப்போதிருக்கும் ஸ்ரீவெங்கடஸ்

வேதாசலபதி இரங்காராவ் பஹதரவர்களை ஸ்வீகாரம் செய்துக் கொள்ளப் பட்டு பட்டத்தைப் பெற்றார். இவர் கல்வியில் நிபுணரானபடியால்; சென்னை சட்ட நிரூபண சபையின் ஒரு அங்கத்தினராக நியமிக்கப் பட்டிருப்பதோடு; கி. பி.1893வருஷம்,விக்டோரியா சக்கிரவர்த்தியாவர்களுக்குப் பட்டம் கட்டிய காலத்தில், இங்கிலாந்துக்கு இரண்டு தடவைபோய் மஹாராணியார், சக்கிர வர்த்தி, சக்கிரவர்த்தினிகளால் நன்கு மதிக்கப் பெற்றுவந்தார். இச்சமஸ்தா னம் 920-சதுரமைல் விஸ்தீரணமும்,202 ஜாரிகிராமங்களும், 70 அகிரஹாரங் களும், 7 மோகஸ்கிராமங்களும்,முள்ளது-மொத்த வருமானம் 5லக்ஷம் ரூபாய். பேஷ்கஷ் 95315 ரூபாய் நிலவரி, 32467 ரூபாய்(Vide Pages 34 to 62 The Aristocracy of Southern India, A Vadevelu, 1881 வருஷம் காணிஷ்வாரி கணக்கின்படி அதில் 158 178-குடிகளிருந்தார்கள்.

(ஐந்தாம் அத்தியாயம்.)

பிட்டாபூர் ஸமஸ்தானம்.

இது கோதாவரி ஜில்லாவில் 371 சதுரமைலும், 128 கிராமங்களும், 8,11,500 ரூபாய் வருமானமும்; 2,49,000 ரூபாய் பேஷ்கஷ் கட்டும்படியான சிறு சமஸதானம். இந்தத் தெலுங்கு க்ஷத்திரிய வெலம நாயடு, 1647-ஆம் வருஷம் அயோத்தியிலிருந்து வந்தாராம். இப்போதிருக்கும் ராஜன் பெயர் இராஜாராவ் கங்காதர ராமராவ். 1881-ம் வருஷம் 11,593 குடிகள் இருந்தார் கள். இவைகள அன்றியில், இப்போது இந்த ராஜதானியின் வட நாடுகளில் இருக்கும், சில ஜமீன்தார்களும், கஜபதி சஜபதி ஸமஸ்தானங்களினால் ஜாகீர் இனும் பூமிகளைப்பெற்ற பிரபுக்களும், பலிஜ தெலுங்கரேயாவர்-11526 சதுர மைலும், 442454 குடித்தொகையும், உடைய விஜயநகர விகிரம தேவரவர் களும்;911 சதுரமைல் விஸ்தீரணமும்,35,656குடித்தொகையுமுள்ள இரக்கப் பள்ளி பாலவன்சா பராசலம்தி முதலான விடங்களுக்குஇராஜாாகிய பிரதாப ருத்திர காலத்தில் பிரபலரான ஸ்ரீராஜா பார்த்தசாரதி அப்பாராவ் சாவே, அசுவராவ் பஹதரவர்களும்; 700 சதுரமைல் விஸ்தீரணமும், 274 கிராமங் களும், 400 சதுரமைல் காடுகளும், இலக்ஷம்ரூபாயிக்கு மேல்பட்ட வருமான முள்ள,1898714 பேஷ்கஷ் உடைய குருப்பம்ஜமீன்தார் ஸ்ரீராஜா வீரபத்திர ராஜா பஹதரவர்களும்; கிருஷ்ண ஜில்லா சபீலீஷ் வரமுட்ட நிஸிவிடி ஜமீன் தாரராகிய ஸ்ரீவெங்கடரங்கய்ய அப்பாராவ் பஹதரவர்களும்; பிரதாபருத்திர ரால் டெருமைபெற்று இப்போது விசாகபட்டணம் ஜில்லா சங்கம்வலச ஜமீன் தாரர் ஸ்ரீமிருத்தியஞ்சய நிஷால்க பஹதர் அவர்களும்; கோதாவரி கொத்தம் ஜமீன்தாரர் ஸ்ரீஇராஜவத்சவய்ய வெங்கடசிம்ஹாதிரி, கஜபதி பஹ தரவர்களும்; கோதாவரி பல்லாவரம் ஜமீன்தார் ஸ்ரீராஜ கிருஷ்ணராவ், B. A. பஹதரவர்களும்,ஒருவகை பலிஜ நாயடுமோர்களாம்.இதேமாதிரியாகவே தெற்கே

பாகளூர், கங்குந்தி, சந்திரபதி, வடகரை முதலான நாயடு சமஸ்தானங்களிருக்கின்றன. அவைகளின் சரித்திரம் சுலப பிரயாசையால் அறியலாம்.

இனிகடப்பை, கர்னூல், அநந்தப்பூர், நெல்லூர், செஞ்சி, வேலூர் முதலானவிடங்களிலிருந்து ஆண்ட நாயடுகாருகளுடைய சரித்திரங்கள் திருபதியாகக் கிட்டவில்லை-ஆயினும் அவர்களை விடகாலதேசவர்த்தமானங்களாற் சிறந்தவர்களும், பலிஜவாருக்குள் பஞ்சபாண்டவர்களாகவும், மஹாமநுக்களாகவும், மஹா சக்கிரவர்த்திகளாகவும் கொண்டாட வரப்பெற்றவர்களும்; ஆதி சந்திர வமிச நரபதிகளின் நேரான சந்ததிகளும்; தஞ்சை, மதுரை, சிம்ஹள நாடுகளில் ஸமஸ்தானங்களைப் பெற்று பிரபலமாக ஆண்டவர்களும் என; பல கவிகளால் புகழப்பெற்றோருங்கும் தஞ்சை மதுரை முதலான நாடுகளில் ஆண்ட நாயடுகாருகளுடைய சரித்திரங்களைப் பற்றி எழுதுகிறோம்.

(ஆறும் அத்தியாயம்.)

தஞ்சையில் நாயடுகாரு ஸமஸ்தானம்.

సీసమాలిక.

*   *   *   *
*   *   *   *

ప్రజ్వరిల్లెడు చోళపతులపరంపర ।
వినుడి యానందమాపీనులకును ।
క్షేమకరుండగు చవప్పనాయడు ।
యచ్యుతప్పయాను యవనియందు ।
రగునాధుడు విజయరాఘవ నాయడు ।
యువరాజుమన్నారో క్తముగను ।
పంచపాండువులుని ప్రాబల్యముగనైదు ।
నృపతులేలిరి మహానీతిగాను॥

*   *   *   *

இதன் கருத்து

சோழதேசமாகிய தஞ்சை நகராதிபதிகளாகிய ஸ்ரீமான்

1. சேவப்ப நாயடுகாரு 2. அச்சுதப்ப நாயடுகாரு 3. இரகுநாத நாயடுகாரு 4. விஜயராகவ நாயடுகாரு 5. மன்னாருசாமி நாயடுகாரு ஆகிய ஐவர் பஞ்சபாண்டவர்களுக் கொப்பானவர்களாகையால், முதலில் இவர்களுடைய சரித்திரங்களைப் பற்றி எழுதுகிறோம்.

தஞ்சாவூரில் நாயடுகாரு ஸமஸ்தானம்.

சோழர்களுக்கு ஒருகாலத்தில் பிரபல பட்டணமாக இருந்த தஞ்சாவூரானது சகாப்தம் 1365 (கி-பி 1443) விஜயநகரத்தில் புகழ்பெற்றோங்கிய பிரதாபதேவராயலு காலத்தில், அவர்களுடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருந்ததாக (தஞ்சாவூருக்குச் சுற்றுப்பக்கங்களிலுள்ள கோயில்களிலிருக்கும்) சாசனங்களால் ஸ்பஷ்டமாகினும்; சகாப்தம் 1377க்குச் சரியான(கி-பி 1455ளும்) விஜயநகரத்தில் நரபதி மூல புருஷரான திருமலைதேவராயலு காலத்திலும், இந்த தஞ்சாவூர் விஜயநகரத்தாருடைய அதிகாரத்துக்குள் இருந்ததாக தஞ்சை பெரியகோயில் தென் பிராகாரத்தில் அடியிற் கண்ட சாசனம் (கி-பி 1455 வருஷம்) வரையப்பெற்றிருக்கிறது.

அதாவது

* * ஸ்ரீசகாப்தம் ஆயிரத்து முன்னூற்று எழுபத்து எழின்மேற் செல்லா
"நின்ற பாவவருஷத்துக்குச்செல்லும்,யுவ வருஷத்து சித்திரைமீ களஉ ஸ்ரீமன்
"மஹா மண்டலேசுவரன் மேதினீ மிச்சிரகண்ட கட்டாரி சாளுவ சாளுவத்திரு
"மலை தேவமகாராசர், தஞ்சாவூர் வ* * *ண்டயம் தஞ்சமாமணிகண்டங்குறை
"நாகளாபுரம் பழமாரன் ஏரி அண்மதின்மேலகரம் வேலங்குடிஅம்மை அப்பன்
"*** புரம் தென் அளூர் கருப்பூர்,மருவூர், இராஜேந்திர சோழ நல்லூர் சுங்கந்த
"விர்த்த சோழ நல்லூரான திருமலை ராஜபுரம் சமுத்திற———புறம் ஆக இந்த
"அகரங்களிற் வாரியன் காரணத்தானுக்கு நிருபம் தங்கள் அகரங்களுக்கு அவ
"தாவகக்கனை ராஜஸ்பக்கனை பிரதான கோடி கரணிக்க சோடிதலையாரிக் கம்ம
"வடை மரவடை குளவடை மற்றும் எப்பேர்ப்பட்ட பல உபாதிகளும்மிழித்து
"விட்ட அளவுக்கு சந்திராதித்தவரையும் ஸர்வ மாணியமாக சுகமே இருக்கவும்-
"2 இராஜாவின் அருளிசெபல்படிக்கு மந்திர மூர்த்தி வெட்டு வித்தது, (Vide
"P. 118. Part 1. Vol II, Dr. E. Haltzschis, S. Indian Inscription.

இதனுலும்; தஞ்சை தெற்கு அலங்கம், தொப்பாரங் கேட்ட பிள்ளையாரென்னும் அளகேசுவர பிள்ளையார் கோயில் கோபுர முன்பக்கத்துச் சுவர்களிற் காணும், சகாப்தம் 1454 (கி-பி-1532) சிலாசாசனத்தினுலும்; தஞ்சை வடக்கு வீதி இராஜ கோபால ரென்னும் மதன கோபால சுவாமிகோயில் மூலஸ்தானத்தின் வெளிச் சுவர்களில் வரைந்திருக்கும் சகாப்தம் 1461(கி-பி-1539 வருஷம்) சாசனத்தினுலும்; பின்னும் இப்போது மறைந்து மங்கலடைந்திருக்கும் பல சாசனங்களினுலும், சோழராஜியத்தின் சிறந்த பட்டணமாகிய தஞ்சை வெகு காலமாக விஜயநகர ஸமஸ்தானத்தாருடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருந்ததாக பிரதியக்ஷமாகிறது—

அப்படிக்கிருந்தும்-அந்த விஜயநகரத்தாருடைய உதவியைப்பெற்று சில மன்னர்கள் சோழன் என்ற பட்டப்பெயரால் ஆண்டு வந்ததாகத் தோற்று

கிறது. அப்படி ஆண்டுவந்தவர்களில் வீரசேகர சோழன் தனது தாயாதிகளாற் றுக்கப்பட்டு வருந்தி, இனி தஞ்சையிலிருப்பதில் சுகமில்லை எனக்கண்டு, அப்போது பாண்டியனாக ஆண்டுவந்த சந்திரசேகரனைத் தாக்கி, அப்பாண்டிய நாட்டைப் பிடித்து, தாயாதி சச்சரவற்று வாழலாமெனக் கருதிப் படையெடுத்துப்போய்த் தாக்கி துரத்தியடிக்க; அப்பாண்டியன் அப்போது தனக்குச் சகிரவர்த்தியாக விருந்த, விஜயநகர ஸமஸ்தானபதி இடம் போய் முறையிட்டழ, அவர் தமது தளகர்த்தராகிய நாகம நாயடு வசம் ஒரு பெருஞ் சேனையைக் கொடுத்து அனுப்பி, வீரசேகரனை யோட்டி, அப்பாண்டிய நாட்டை சந்திரசேகர பாண்டியன் வசம் கொடுத்து வரும்படி உத்திர வளித்ததாக, இப்போது சென்னை கவர்ன்மெண்டு O. M. S. கையெழுத்துப் புராதான சரித்திர ரிகார்ட்டிவிருக்கும் புது நெம்பர் 852-கொண்டக் கையெழுத்து ஓலைப்புத்தகம் தஞ்சாவூர் ராஜலு கதையிற் சொல்லப் பெற்றிருக்கிறது.

அதாவது

*   *   *   *   *   *   *

తంజావూరి రాజుకథలు - తాళపత్రము - తెలుగులిపి

౧-౨ పుటలు, ౧ - ౫-౬ - పజ్తులు,

ఆదిలో విజయనగర పట్ణంలో రాయలు దేవునివారు రాజ్యపరిపాలనం వుండగా, పాండ్యదేశాది పతియైన చంద్రశేఖర పాండ్యరాజు, మధురలో రాజ్యమేలునుండగా చోళదేశాధి పతియైన వీరశేఖర చోళరాజు తంజనగర మందుండి, మధురాపురిలోనున్న చంద్రశేఖర పాండ్యుడి మీదాయుధానికిపోయి, పాండ్యరాజును జెయించి, ఆ రాజ్యమంత నపహరించుకొన్నందువల్ల, చంద్రశేఖరపాండ్యుడుయెత్తుపడి రాయలుసమస్తానాకివచ్చి, రాయలుసముఖాన, వీరశేఖరచోళుడు తమరాజ్యం బలాత్కారముగా అపహరించు కొన్నందువల్ల ఈవర్తమానం మీదగ్గిర రప్పంపుచ్చుకొని మీఆజ్ఞవుంచి నడపించుకొని వస్తున్నారుగనుక, లోకమందు "దుర్బలశ్య బలోరాజా" అనేన్యాయమున్నది (గనుక) మాకుగతియేమి ఆజ్ఞంబిస్తున్నారో, ఆప్రకారం, నడచుకొంటున్నారమని, మనవిజేసుకొన్నందున, రాయలువారు ఈమాటలువిని,ఆగ్రహపడి, తోశెచానాఅదికారియైన నాగమనాయునివారిని రప్పించి,దక్షణదేశమంత మీతోశేవఖానావుకుఅడమానంజేసి, మీమనుష్యులు ఆదేశానికంతా దాసీలువుంచ్చి, వారివారిపేష్కసుర్యాలు మీకుచెల్లుతు, మియిలాకాలోవుండగా, పాండిడిరాజ్యంతోతమబలాత్కారముచేసి కప్పకోవలెను - కాబట్టి- దక్షిణదేశములంతా మియిలాకాలో వున్నదిగనుక,

మీరే సయిన్యసమేతముగాపోయి ఆదుష్టుడైన వీరశేఖరచోళున్ని కొట్టి - హతపరచి పాండ్యునికే అతనిదేశం యదాప్రకారం ఇప్పించి, ఆచోళదేశమును జప్తిజేసి సర్కా- రయిలాఖాలో మనుష్యులని చెప్పించిరమ్మని, రాయలుఆజ్ఞాపించిన ప్రకారం దండుసమేతముతో రాగానే, చోళరాజ్యానికి వచ్చియుద్ధముజేశి, వీరశేఖరచోళణ్ణితగటార్చి ఆరాజ్యం తనవసంజేసుకొని, మధురకుపోయి, చోళడువుంచివున్న రవుతులను తరిమి కొట్టి, ఆరాజ్యమంతితమ వరవుప్రకారం పాండ్యుడికి ఇయ్యక, అదిన్ని తానేఅపహరించుకొన్నందున, అతనికుమారుడు, విశ్వనాథనాయని వారిని రాయిలు అంపించి, అతడు వచ్చి తండ్రినిరాజాజ్ఞ ప్రకారముజెయించి, తనవశంజేసుకొని, రాజ్యంపాండ్యునికి యిచ్చినంతలో, చంద్రశేఖరన్కి సంతానమున్ను - అత్సవంశస్తులు లేనందువల్లనున్ను తననిమిత్యం విశ్వనాధనాయడు తండ్రియని చూడగ, జెయించిరాజ్యంతనకిచ్చి నాడని బహుసంతోషబుత్తుడై, అతనిపుత్రస్వీకారం జేసుకొని, తనరాజ్యానికి అరుహజేశిన ప్రకారంరాయలుహరు ఆదేశానికి, విశ్వనాధనాయుణిరాజుగావించి, పట్టాభిషేకంచేశి, అతడు కొన్నిసంవత్సరములు రాబ్యమేలుతావుండగా, ఆరాయలకు తర్వాత అచ్యుత దేవరాయలు, అతనిభార్య తిరుమలమ్మకు చెల్లలైన, మూర్తమ్మను శ్రీచేవప్పనాయనివారికివివాహంబుజేసి, కావలసిన వస్తువాహనములున్ను ఆబరణములిచ్చి చోళదేశాన్కి నాషడువైనమ్మి, చేవప్పనాయన్కి శ్రీదనంగానిచ్చి, చోళదేశమ్కు పంపించి విరక్తుణా జేసిఅంపిచిరి. * * * *

Tanjure Rajulu Cbaritra-The History of Tanjure Rajas-Preserved in charector Telugu Pages 82, Lines 4-5-6-Injured. Collections of Col Mecprenziss, Collection.—

இதன்கருத்தாவது.

ஆதியில் விஜயநகரத்தில் இராயலு ராஜியபரிபாலனம் செய்யும்போது பாண்டிய நாட்டரசனுகிய சந்திரசேசபாண்டியன் மதுரையில் ஆளுகையில், சோழ தேசாதிபதி வீரசேகரசோழன் தஞ்சையிலிருந்து மதுரையிலிருக்கும் சந்திரசேகர பாண்டியன்மேல் சண்டைக்குப்போய், அப்பாண்டியனை ஜயித்து, அந்த ராஜியத்தை அபகரித்துக் கொண்டபடியால், சந்திரசேகர பாண்டியன் விஜயநகரம்போய் இராயலு சமுகத்தில், வீரசேகர சோழயன் துராகிரதமாக தன்நாட்டைப் பிடுங்கிக் கொண்டபடியால், எங்களைப்பாது காப்பதாக, கப்பம்வாங்கிவரும் தாங்கள் இக்காலத்தில் உதவி செய்யவேண்டுமென்று வேண்ட; இராயலு கேட்டு விசனப்பட்டு கோபித்து, தென்னுடுகளில் கப்பம் வாங்கிவரும் நாகமநாயடைத் தருவித்து, இந்த அக்கிரம நடவடிக்கைகளைச்

சொல்லி,தக்க தண்டுதளாதிகளுடன் போய் அச்சோழனைக்கண்டித்து ஓட்டி, அவன் பிடித்துக் கொண்டிருக்கும் பாண்டியநாட்டை சந்திரசேகரனிடம் கொடுத்து விட்டு; சோழன் பட்டணமாகிய தஞ்சையை சமஸ்தான சர்காரில் வைத்து வரும்படி கட்டளை இட்டனுப்ப; அந்த நாகம நாயடும் அப்படியே சோழ நாட்டில்ச் செய்துவிட்டு, பாண்டியநாட்டைப் பிடித்து அதைத்தாமே அனுபவித்துவர; இராயலு கேட்டு விசனப்பட்டு, விசுவநாயடுகாரை அனுப்பி, நாகம நாயடுகாரைக் கண்டித்து அவரிட மிருந்த பாண்டிய நாட்டைப் பிடுங்கி சந்திரசேகர பாண்டியனிடம் கொடுத்து வரும்படி கட்டளை இட்டனுப்ப, அவரும் வந்து அப்படியே செய்து, செய்தியனுப்ப, இராயலு கேட்டு அதிக சந்தோஷத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கையில், சந்திரசேகரபாண்டியன் இறந்து, அவன் சந்ததியற்றுப்போன சங்கதி இராயலு கேட்டு, தமது இஷ்டப்படி நடந்துக்கொண்ட விசுவநாதநாயடை சுவீகாரபுத்திரனகக் கொண்டும், அப்பாண்டிய நாட்டிற்கு அதிபதியாக நியமித்தார்-பிறகு சோழநாட்டிற்குத் தகுந்த அரசன் இல்லாமல் அலைவதை அறிந்து, அந்தராயலுகாருக்குப் பின்பட்ட மடைந்த ஸ்ரீஅச்சுததேவராயலு காரு தமது மனைவி திருமலைஅம்மகாருக்குத் தங்கையாகிய மூர்த்தி அம்மகாரை விவாஹம் செய்துக்கோண்ட சேவப்ப நாயடுகாருக்கு ஆடையாபரண ஆனைக் குதிரை முதலான வரிசைகளைக் கொடுத்தும், சோழதேசத்தை தககபடி ஆளுவதற்கு அச்சேவப்ப நாயடே ஏற்றவரெனக் கண்டு, அச்சோழதேசத்தையே அவருக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்தும் ஆண்டு அனுபவித்துக்கொள்ளும்படி அனுப்பினர்&சஎன்பதேயாம்

* * * * * *

இந்த சரித்திர சாசனத்தினல் தஞ்சையில் நாயடுகாரு ஸமஸ்தானம் உண்டான விவரம் ஸ்மஷ்டமாகும்.

தஞ்சையில் நாயடுகாரு முதல் ஸமஸ்தானம்.

சேவப்ப நாயடுகாரு.

கி-பி. 1549 முதல் 1572 வருஷம் வரையில்

தஞ்சையில் நாயடுகாரு ஸமஸ்தானத்தை முதல்முதல் ஸ்தாபித்தவர்சேவப்பநாயடு காரு. இவருடைய மந்திரியின் மூத்த குமாரராகிய இராஜசூடாமணி தீக்ஷிதரவர்கள் இயற்றிய ருக்மணிபரணியம் என்னும் காவியத்தின் முதல் சருக்கம், 34-வது, சுலோகத்தினல், இந்தசேவப்ப நாயடுகாரின் தந்தை திம்மப்ப நாயடு காரென்றும், தாயார் வய்யமாம்பாள் என்றும் தெரியவருகிறது சந்திரவமிச க்ஷத்திரிய குலதிலகரான ஸ்ரீஅச்சுததேவராய ஹுடைய மனைவியார் திருமலைஆம்பாள் அவர்களுடைய இளைய சகோதிரி மூர்த்தியாம்பாள் என்னும் மங்கையை மணம் புரிந்ததனுல், தஞ்சாவூரை ஸ்ரீதிரிதன மாகப்

பெற்றதாய் தஞ்சாவூரிவரந இராஜசரித்திரம் என்னும் கிரந்தத்தினாலும்,விஜய விலாசம் என்னும் கிரந்தத்தினாலும் வேறு அநேக சாசனங்களினாலும் ஸ்பஷ்டமாகிறது.

இந்த சேவப்ப நாயகோரு முதலில் விஜயநகரத்தை அடுத்த நாகலாபூரில் இருந்த தண்டுக்கு தளகர்த்தராக இருந்தவர். இவர் மஹா வீரதீரனும், மதியூகியுமாயிருந்ததோடு, சத்தியம், சாந்தம், சிவபக்தி, விஷ்ணுபக்தி, தருமம், தயை முதலான குணங்களிற் சிறந்து விளங்கியபடியால்; அப்போது தஞ்சையிலும் அதை அடுத்த விடங்களிலும் சோழர்களுடைய சந்ததிகள் என்று சிலர் எழுந்து அடிக்கடி சண்டைச்சச்சரவுகளைச் செய்துக் குடிகளை வருத்திவந்தவர்களை அடக்கியாளவும், கல்வி, நாகரீகம், தெய்வபக்தி முதலான சீர்திருத்தங்களைப் பல்லாண்டாகப் பெற்றிருந்த சோழநாட்டாரைச் சாந்தமாகவும, சுகமாகவும் வாழும்படிச் செய்ய சக்தியுள்ளவர் இந்தச் சேவப்ப நாயகோரே எனக் கண்டு, விஜயநகரத்தார் சோழநாட்டையே ஸ்ரீதனமாகக் கொடுத்தனுப்பினார்கள் போலும்- சேவப்ப நாயகோரு தஞ்சை ஸமஸ்தானத்தைக் கைக்கொண்ட உடனே, குடிகளுக்கு இன்றிமையா அநேக சத்சாதனங்களை ஸ்தாபிக்க முயன்றார்- முதலில் தஞ்சையிலும் அதைச் சார்ந்த இடங்களிலும் பரக்கவிருந்த சைவ வைணவாதி க்ஷேத்திரங்களில் கால கிரமமாக பூஜைகள் முதலான நித்திய நைமித்திகாதிகிரியைகளை கிரமமாகச் செய்துவரும்படி கட்டளை இட்டார். தஞ்சாவூரி ராஜசரித்திரத்திற் கண்டபடி அநேக கோயில் கோபுர ஆவிகூப தடாகங்களை செப்பநிடசெய்த்தார். தஞ்சைக் கோட்டைக்குள் சகல ஜனங்களும் சுத்தமான தண்ணீரை சதா உபயோகிக்கும்படியாக சிவகங்கைக் குளத்துக்குப்பாய்ச்சல் ஏரியாகிய சேவப்பனேரி அல்லது சேப்பன்குளம் ஒன்றை வெட்டி வைத்ததில்; அது இப்போதும் இவர்பெயரை பலரும் புகழும்படி குடிகளுக்கு உபயோகமாகி பிரகாசிக்கின்றது-தஞ்சைக் கோயிலுக்கு அடுத்திருக்கும் பெரியகோட்டையையும், இந்த சேவப்ப நாயகோரால் கி-பி. பதினாறும் நூற்றாண்டில் கட்டிவித்ததாக மேஸ்டா சுவேல் துரைப் பதிப்பித்த அண்டிகு ட்டிபட்டி புத்தகம் 277-வது பத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ஸாஹித்யரத்னகாம், 3-வது சர்க்கம், 6-வது சுலோகத்தின்படி திருவண்ணாமலையில் கோயிலுக்கு வெளியில் அகன்று ஆழ்ந்து அழகாக இருக்கும் குளமும், அந்தக் கோயிலின் முன்னிருக்கும் சிறந்த கோபுரமும் இந்த நாயகோருடைய கைங்கரியங்களாம். இவர் காலத்தில் அதாவது சகாப்தம் 1494 வருஷத்துக்கு சரியான கி-பி 1572 வருஷம் திருவண்ணாமலையில் சிவநேசன், லோகநாதன் என்ற இரண்டு சகோதிரர்கள் கோபுரம் ஒன்று கட்டியதாக அந்த திருவண்ணாமலை கோவிலில் சிலாசாசனம் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சேவப்ப நாயகோரு செய்த தருமங்கள் கேவலம் இந்து மதஸ்தர்களுக்கு மாத்திரமல்ல, மகமதியர் முதலான ஏனைய மதஸ்தர்களுக்கும் செய்ததாக இப்போது தஞ்சாவூர் புகைவண்டி ஸ்டேஷனுக்கு அடுத்த சமசநுப்

பள்ளிவாசலில் ஒரு கல் கம்பத்தில் சகாப்தம் 1472 சரியான கி-பி 1549 வரு ஷம் செதுக்கப்பட்டிருக்கும் சிலாசனத்திஞல் ஸ்பஷ்டமாகிறது.

அந்தச்சாசனத்தின் நகல் இது

"சாதாரண வருஷம் மார்கழி மாதம் ௰சஉ தஞ்சாவூரிலிருக்கும் சமசருப
"பள்ளிவாசல் பக்கிரிகளுக்கு நிலம் விடவேண்டுமென்று சேவப்ப நாயக்க
"நாஞ்சிக் கோட்டையிலிருக்கும், எண்ணெயக்காரனை அழைப்பிக்க உங்கள்
"எல்லேயிலே ஏழுவேலி நிலம் விடு என்று சொன்னபடியிஞலே ஞயக்கர் அ
"யன் அவர்கள் உத்தாரப்படிக்கு சம்மதித்து * * * * மேற்கு இந்த நங்கெல்
"லேக்குள்ப்பட்ட நிலத்தை சந்திராதித்த வரைக்கும், ஆண்டு அனுபவிச்சு
"கொள்ளக் கடவீராகவும், இந்தப்படிக்கு ஞயக்கர் அய்யன் அவர்களும், மண்
"ணையார்காரும் சம்மதித்து விட்டது. இதுக்கு யாதாமொருவர் தத்த * * விக்கி
"னம் பண்ணிஞர்கள் ஆஞல் காசி ராமேசுரத்தில் காராம்பசுவைக் கொன்ற
"தோசத்திலே போவார்கள். துலுக்காகள் யாதாமொருவர் விக்கினம் பண்ணி
"ஞர்களாஞல் மக்காவிலே பெற்றதாயை ஜஞசெய்தபாவத்திலே போவார்கள்
"யிதுக்குவெட்டியான் " * * * ‖-‖ " என்பதேயாம்.

இப்படி சமரசமாகத் தருமராஜிய பரிபாலனம் செய்து வந்த சேவப்ப நாயடுகாரு ஸாஹிதய ரத்ஞகரம் 3-ம் சர்க்கம் 9-17 சுலோகங்வளிற் சொல் இருக்கிறபடி; தமது ஜீவகாலத்திலேயே தமது புத்திரசிகாமணியாகிய அச்சு தப்ப நாயடுகாருக்கு தஞ்சையில் பட்டம் சூட்டிய பிறகு, பரமபதத்தை அலங் கரித்தார். இந்தச் சேவப்ப நாயடுகாருக்குப் பிறகு-

---

அச்சுதப்ப நாயடுகாரு ஸமஸ்தானம்.

கி-பி. 1577 முதல் 1614 வருஷம் வரையில்

அச்சுதப்ப நாயடுகாரு தஞ்சையில் சிங்காசன மேறிஞர்-இவருக்கு ஸாஹித்ய ரத்ஞகரம் 3-ம் சர்க்கம், 38-வது சோலோகத்தின்படி சின்னசேவப்ப, அச்சு தப்ப நாயடு காரு என்னும் மற்ருரு பெயர் வழங்கி வந்தாலும், இவரது தா தைக்குப்பேருபகாரியாக இருந்து; தஞ்சை ஸமஸ்தானத்தையே ஸ்ரீ தனமாகக் கொடுத்த விஜயநகர அச்சுததேவராயலுடைய பெயரை சதாஞாபகத்திலிருக் கும்படி கருதியே, இவருக்கு அச்சுதப்பநாயடுகாரு என்ற பெயரிட்டதுபோ லும். இவருடைய ஆளுகையைப்பற்றி தஞ்சாவூரிவாரு சரித்திரமென்னும் ஆ திரகிரந்தத்தில் விவரமாக தெரிவிக்காவிடினும்; சாஹித்யரத்னகரம், ரகுநாதா பரணியம், டிஸ்டிரிகட்டு மானியூல் சரித்திரமுதலானதுகளில் ஒருவாறு தெரி விக்கப்பட்டிருக்கிறது. இவர் கல்வியைக்கற்று தெளிந்தவராக இருந்ததோடு தம்மைப்போலவே உலகோர் கற்றுய்யும்படி கல்வியை விருத்தி செய்தார்

ஸ்மிருதிகளிற் சொல்லியபடி தக்கோருக்கு தான தருமாகளைச் செய்துவந்தார். ஸ்ரீரங்கக்ஷேத்திரததிற்கு மாணியமாக அநேக கிராமங்களை விட்டதன்றியில்; ஸ்ரீரங்கநாதருக்கு இரத்னபீடம், இரத்னகிரீடம், பற்பலரத்னபதக்கங்கள், நல்சலங்கை முதலான ஆபரணங்களைச் செய்து சமர்ப்பித்தும், காவிரியாற்றின் கல்அணையைப் பழுதுபார்த்து புதுப்பித்தும்; மாயவரம் மத்தியார்ச்சுனம் (திருவிடைமருதூர்), கும்பகோணம், திருவலஞ்சுழி, விருத்தாசலம், திருவையாறு, இராமசேது முதலியவிடங்களில் படித்துறைகளையும், புஷியமண்டபங்களையும் கட்டுவித்தார். **ஸாஹித்யரத்னகரகாவியம்**, 3-ம் சர்க்கம், 46,47 48,50-வது சுலோகங்களின்படி தமதுபெயரால் அநேக புது அகிஹாரங்களைக் கட்டுவித்து, அவைகளில் அநேகவிடங்களிலுள்ள வேதநிதிகளான விபிரர்களைத் தருவித்துக் குடியேற்றினர். **ருக்மணிபரிணியகாவியம்**, 1-ம் சர்க்கம், 43—45-சுலேகங்களின்படி சிதம்பரம், திருப்பதி, காளஹாஸ்தி முதலான க்ஷேத்திரங்களுக்கு அநேகத் திருப்பணிகளைச் செய்வித்திருப்பதால், இவர் காலத்தில் இவரது அரசாக்ஷி திரிசிராப்பள்ளிமுதல், கீழ்சமுத்திரக்கரைவரையிலும், இராமேச்சுரமுதல் **விருத்தாசலம்** வரையிலும எட்டி இருந்ததாகத் தோன்றுகிறது—

இவருடையபெயரும், ஸமஸ்தானமும் இவ்வளவு மஹோன்னதஸ்திதியை அடைவதற்குக் காரணம் இவருடைய மதியூகிய மந்திரியே என்று தோன்றுகிறது. அவர் **ஸாஹித்யாத்னகரம்** 10-வது சர்க்கம் 1-2-சுலோகங்களின்படி கர்ணடக பிராம்மணரான **கோவிந்த தீக்ஷதர்**—அந்த மந்திரியின் உத்திரவின்படி, கி-பி 1605ஹூம் வடமொழியிலிருந்த **திருவையாற்றுப்** புராணத்தைத் தமிழிற் மொழிபெயர்க்கப்பெற்றதாக அந்தப் புராணத்தின் 18-வது செய்யுளில் அடியிற்கண்டபடிப் பாடப்பெற்றிருக்கிறது—அதாவது,

> "மலிபுனல்சூழ் சோணுடு தஞ்சையிற் காத்திடுமரசர் மதியமைச்ச
> ரொலிமறைதேர் கோவிந்ததீட்சிதராயன் திருவாக்குடைமையாலே
> கலியுகத்துச்சகருண்டு மூவைந்நூற்றிருபதின்மேற்காணுமேழாய்ப்
> பொலிவருடத்தையாற்றுப் புராணவடமொழிதமிழாற் புகலுற்றேன்"

நிற்க. பழய சோழராஜ வமிசத்தார் அங்குமிங்கும் சண்டைச் சச்சரவுகளைச் செய்வதைக் கண்டித்தும் (ஸாஹிதிரத்னகரம் 6-சர்க்கம், 8-வது சுலோகத்தின்படி) நாகப்பட்டணத்திற் கடல்மார்க்கமாக வந்திறங்கின மகமதியர்களை முறியடித்தோட்டினதாகவும் தெரியவருகிறது—

இவர் மனைவியின்பெயர் **மூர்த்தி ஆம்பாள் அம்மாள்**, இரத்னகரம், 3-ம் சர்க்கம், 20-ப் சுலோகத்தின்படி, இரத்தநாட்டுக்குச் சமீபத்தில் ஒரு கிராமத்திற்கு **மூர்த்தமாம்பாபுர** மென்று இன்னும் பெயர் வழங்கிவருகிறது—அன்றியும், தஞ்சை பிரஹதீசுவரஸ்வாமிகோயில் இரண்டாவது கோபிரத்துத் தென்பக்கத்து பிரகாரத்தில், இவர்காலத்தில் அதாவது சகாப்தம் 1499-க்குச்சரியான

கி-பி-1577ஆம் தட்டாருக்குவிட்ட சர்வமானிய சாசனம் இப்போதுமிருக்கிறது. அதன் நகல் அடியில் வருமாறு—

"ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1499இதன்மேற் செல்லாநின்ற வெகுதானிய வரு "ஷம் ஆனிமீ 12உ சோமவாரமும் பிரதம துவாதசியும் பெற்ற புண்ணிய "காலத்து சேவப்பநாய்க்கர் அய்யன் தஞ்சாவூர் தட்டாருக்குக் கொடுத்த தரும "சாசன பட்டயம் கந்தரோலு நாயக்கர் குருநாதன்சிங்கபள்ளி நாகபத்த சேஷா "ஸ்திரியும் சொல்ல தங்களிர் கிழிப்பித்தபடியாலே சந்திராதித்தவரையும்,சர்வ "மானியமாக நடக்கவும், இந்த தருமத்திற்கு அகிதம் பண்ணினவன் கங்கைக் "கரையிலே காராம்பசுவைக்கொன்ற தோஷத்திலே போகக்கடவாராகவும், "இந்த தருமத்தைஅகிதம்பண்ணினவன் ஆயிரம்லிங்கத்தைப் பிடுங்கினதோஷத் திலே போகக்கடவன்."

இதே மாதிரியாக திருவையாறு புஷ்யமண்டபத்தில் கி-பி-1614-5ஆம் சிலாசாசனம் வரையப்பட்டிருக்கிறது—இது நிற்க—கி-பி-1614ஆம் கர்னாடகாதிபதி திருவெங்கடதேவராயலுக்கு சந்தானமில்லாமையால்,அவன் சகோதிரன் மகன் பட்டத்தை அடைய, அதை வெங்கடதேவருடைய மனைவியும் அவள் தந்தையும் 20000 பேர் சேவகருக்கு தலைவனாக இருந்த ஜக்கராஜனும் தடுத்து புதியமன்னனைக்கொன்றுவிட, அவன் மகனை பாலியனை 800 படைச் சேவகருக்கு தலைவரான யாசபூபதி அல்லது எச்சமநாயடு தன் ஆதரவில் வைத்து பாதுகாத்தும்;ஜக்கனோடு சண்டைசெய்து தஞ்சை அச்சுதப்ப நாயடுகாருடைய உதவியை நாடியதை, ஜக்கராஜன்ப்பார்த்து பாண்டியனுடைய சகாயத்தைத் தேடினான். இதை யறிந்த அச்சுதநாயடுகாரு தமது ஜீவியகாலத்திலேயே தமது குமாரரான இரகுநாத நாயடுகாருக்கு பட்டாபிஷேகம்செய்து ஸமஸ்தானத்தைக் கொடுத்துவிட்டு,தாம் ஸ்ரீரங்கத்துக்குப்போய் ஸாஹித்யரத்னாகரம் 12-ம் சர்க்கம் 94-ம் சுலோகத்தின்படி உள்ளநாள் உள்ளவரையில் வாசம்செய்துக்கொண்டும், ஸ்ரீரங்கநாதரை சதா தரிசித்துக்கொண்டும், காலம் கழித்துவிட்டார்—இவருக்குப்பிறகு—

இரகுநாத நாயடுகாரு ஸமஸ்தானம்.

கி-பி 1614 முதல் 1630 வரையில்

அச்சுதப்ப நாயடுகாருக்குப் பிறகு தஞ்சை ஸமஸ்தானத்துக்கு அதிபதியாகமுடிசூடப்பெற்ற இரகுநாத நாயடுகாரு இயற்கையில் கல்விப்பிரியர். இவருக்கு இந்துதருமசாஸ்திர முறைப்படிக்கு பட்டாபிஷேகம் செய்விக்கப்பெற்றதுஇவரை ஒரு தட்டிலும், பசும்பொன்னை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தி அப்பொன்னை எல்லாம் பிராம்மணர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்ததன்றியில்

பொன்னலமைத்த பிரம்மாண்டம், பொன்குதிரை, பொன்தேர், பொன்யானை காமதேனு, கற்பகவிருக்ஷம் முதலியதானங்களும், ஆயிரம் கோதானமும் செய்யப்பெற்றதாக, ஸாஹித்யரத்னாகரம் 12-ம் சர்க்கம், 56 முதல் 82-வது சுலோகங்களிற் சொல்லப்பெற்றிருக்கின்றது. இவ்வளவும் இவரது தந்தைக்காலத்தில் மந்திரியாக இருந்த கோவிந்த தீக்ஷதரே இவர் காலத்திலும் இருந்து செய்வித்தார்—

இவர் கும்பகோணம், விஜயராகவபுரம், ஸ்ரீரங்கம், இராமசேது முதலானவிடங்களில் இராமஸ்வாமி முதலானகோயில்களைக் கட்டிவைத்ததுடன்; இவருடைய அன்னசத்திரங்களில் பிரதிதினம் ஒன்றுக்கு 24000 ஜனங்களுக்கு சாப்பாடிட்டு வந்தார். ஸாஹித்யரத்னாகரம், 13-ம் சர்க்கம் 74-79 சுலோகங்களின்படி ஜக்கராஜன் பாண்டியனோடுசேர்ந்துத் தூண்டிவிட,அப்பாண்டியன் காவிரியாற்றின் கல்லணையை உடைத்துவிட; உடனே இரகுநாத நாயகோரு அப்பாண்டியன் மீதுப் படையெடுத்துச் சென்று, அவனை முற்றிலும் முறியடித்தோட்ட, அப்பாண்டியன்பயந்து தனது குமாரத்தியை இரதுநாதநாயடுகாருக்கு விவாஹம் செய்துக்கொடுத்துச் சமாதானம் செய்துக்கொண்டான். பிறகு முன் இறந்துபோன கர்னாடக ராஜனுடைய குமாரனை நாயடுகாரு இரகுநாதவிலாசம் 4-ம் அங்கத்தின்படி, கர்னாடக ஸமஸ்தானத்தின் சிங்காசனமேற்றி உதவிசெய்தார்.

இந்த இரகுநாத நாயடுகாரு இயற்கையில் கல்விபிரியரென்று முன்னமே சொல்லி இருக்கிறோமல்லவா-இவர் சரித்திரத்தைப்பற்றி தஞ்சாவூர் இராஜாக்கள் என்னும் தெலுங்கு கிரந்தத்தில் பரிக்ஷிக்கையில், இவர் மஹாவித்வசிகாமணி என்றும், கும்பகோணம் முதலானவிடங்களில் இராமஸ்வாமிகோயில் முதலானதுகளைக் கட்டுவித்து, அநேக தருமங்களைச் செய்துவந்தாரென்றுமாத்திரம் சொல்லப்பெற்றிருக்கின்றனவேயன்றி, இவர் காலத்திற் சிறந்துவிளங்கிய வித்துவான்களைப்பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. ஆயினும், அக்குறைவை இப்போது (கி-பி-1903-ஹூம்) தஞ்சை நாயக்கராஜவமிச சரித்திரத்தைப் பதிப்பித்த ஸ்ரீ துப்புசாமிசாஸ்திரிகள் நீக்கினார். அதாவது அவர் இரகுநாதநாயடுகாருடைய ஸமஸ்தானத்தை அலங்கரித்த சில விசேஷ வித்துவான்களுடைய சரித்திரசங்கதிகளை வெகு பிரயாசப்பட்டு சம்பாதித்து பதிப்பித்திருக்கிறார்-அச்சிறு நூலிற்கண்ட வித்வான்களாவன.

(1) கோவிந்த தீக்ஷதர்—இவர் ஹரிவமிச சார சரித்திரம் என்றப் பெயரால் 23 சர்க்கங்களுடைய காவியத்தை இயற்ற, அதற்கு அப்பய்ய தீக்ஷதர் "ஹரிவமிசஸாரசரிதவியாக்கியானம்" எழுதினார். ஸங்கீதவிஷயமாக "ஸங்கீதசுதா நிதி" என்றொரு கிரந்தத்தையும் இயற்றியதன்றியில், இரகுநாதநாயடுகாருக்கும் அவர் தந்தைக்கும் மஹாமந்திரியாகவுமிருந்தார்-

(2) எகியநாராயணதீக்ஷதர்-இவர் மேல்சொன்ன கோவிந்த தீக்ஷதருடைய ஜேஷ்டகுமாரரும் ஸாஹித்யரத்னாகரகாவியம், இரகுநாத பூபவிஜயம், இரகுநாத விலாச நாடகம் முதலான கிரந்தங்களை இயற்றினவர்-

(3) வெங்கடேசுவரமஹீதீக்ஷதர்=இவர் மேலே சொன்ன யஞ்ஞநாராயண தீக்ஷதருடைய சகோதிரர். இவர் வார்த்திகாபரணம், சங்கீத விஷயமான சதுர்த்தண்டி பிரகாசிகை, முதலான கிரந்தங்களை இயற்றியதோடு (கி-பி.1638ல்) கங்காதரண காவியம் 1 சர்க்கம், 51-வது சுலோகத்தின்படி நீலகண்ட விஜய சம்புகாவியம் செய்த நீலகண்டதீக்ஷதருக்கு ஆசாரியராய் இருந்ததாகத் தோற்றுகின்றார்-

(4) இராஜசூடாமணிதீக்ஷதர்=இவர் புகழ்பெற்ற பவஸ்வாமி பட்டருக்கு 6-வது தலைமுறையார். வட ஆர்காடு ஜில்லா, வேலூர்தாலுக்கா, சத்தியமங்கலமென்னும் கிராமத்தில் ஸ்ரீநிவாச தீக்ஷதருக்குப் பிறந்தவர்- ஒருநாளிவர் இரகுநாதநாயடு சமுகத்தில் வானத்தின் காக்ஷியைப்பற்றி பிரபலமாக வர்ணிக்க, நாயடுகாரு வியந்து இரத்தினசேடதீக்ஷதர் என்று பட்டம் சூட்டினார்- இந்த தீக்ஷதர் பாலியத்தில் வடக்கே நவதீவபம் போய் கல்விகற்று பட்டாசாரியர் என்ற பட்டம் பெற்றதாக ருக்மணி பரிணியம், 4-வது சுலோகத்தினால் தெரிய வருகிறது- இவர், ருக்மணிபரிணியம். கம்ஸதுவம்ஸனம், கார்திமத்தியுபயமம், ரத்னகேடவிஜயம்; சித்திரமஞ்சிரி, சிங்காரஸர்வஸ்வம்; காவிய தர்ப்பணம், அலங்காரசூடாமணி, ஸாஹித்திய ஸமாராஜியம்; தந்திர சிகாமணி, ஸங்கர்ஷமுக்தாவளி, நியாய சூடாமணித் தர்ப்பணம், முதலான காவிய, நாடக, பாண, அலங்கார சாஸ்திர கிரந்தங்களியற்றியவராகத் தெரியவரினும்; இவருடைய தந்தை கேட்டஸ்ரீனிவாசதீக்ஷதர் பாவனா புருஷோத்தம முதலான 18 நாடகங்களையும், சதகண்ட விஜயம் முதலான 60 காவியங்களையும், ஸாஹித்திய சஞ்சீவினி, பாவோத்பேதம், ரஸாஸ்ரவம், முதலான அலங்கார கிரந்தங்களையும், வேதாந்த ரத்னாவளி, வாததாராவளி, மணிதருப்பணம், அத்வைத கவுஸ்தபம், விதிநிர்ணயம், ஸர்வஸமய ஸர்வஸ்வம், ஸ்மிருதிரத்ன பிரதீபம், ஸவ்ஷ்டபங்கம் முதலான வியாகியான கிரந்தங்களையும், பரிசுத்தி, தத்துவாவபோதம் முதலான சாஸ்திர கிரந்தங்களையும் இயற்றியவர். பாவனா புருஷோத்தம நாடகத்தின்படி, வெங்களாம்பாபுரம் போத சமுத்திரம் முதலான அகிரஹாரங்களையும், செஞ்சிக்கோட்டையில் வெங்கடேசப் பெருமாள்கோயில் கோபுரங்களையுங் கட்டிப் புகழ்பெற்ற செஞ்சிக் கோட்டைக்கரசரான சூரப்ப நாயடுகாரினால் ஆதரிக்கப்பட்டவராக தெரியவருகிறது-

(5) குமாரதாதாசாரியர்=இவர் சடமர்சண கோத்திரஸ்தரும், தாதாசாரியருடைய வமிசத்தைச் சார்ந்த ஸ்ரீநிவாசாசாரியருடைய பௌத்திரரும், வெங்கடேசாச் சாரியருடைய புத்திரராம். இவர் பாரிஜாதாபஹரணம் என்னும் நாடகத்தை இயற்றியவர்-அந்நாடகத்தில் தஞ்சையின் பெருமையையும், இரகுநாத நாயடுகாரின் பிரதாபத்தையும் பற்றிப் புகழ்ந்து அவர்காலத்திலேயே இயற்றினார்-

(6) பாஸ்கரதீக்ஷதர்=இவர் கோனேரி ராஜபுரத்திற் பிறந்தவர்- இவர், ஆத்யபரிலக்ஷ, அல்லது பாஸ்கரதீக்ஷிதீயம், தப்தமுத்திராவித்ராவணம், முத

வான கிரந்தங்களை இயற்றி அவைகளில் ஆத்மபரீக்ஷையின் துவக்கத்தில் இரகுநாத நாயடுகாரால் தமக்கு குறைவற்றச் செல்வம் கொடுக்கப் பெற்றதாகச் சொல்லி இருக்கிறார்-இந்த வித்துவானுடைய தந்தை அத்வைததீபிகை,பேதத்திக்காரம், முதலான கிரந்தங்களை இயற்றிய நிருஸிம்மா சிரமிஸ்வாமிகளுடைய சிஷ்ரான உமாமகேசுவராசாரியர்-

(7) இவர்களன்றியில் இந்தத் தஞ்சை ராஜாதிபதியாகிய இரகுநாதநாயடுகாரும் ஒரு சிறந்த வித்வாஞ்ஞ இருந்தாரென்பதற்கு இவரியற்றிய பாரிஜாதபஹரணம், நாளாப்பியுதயம் அச்சுதாப்பியுதயம், இராமரயணஸங்கிரஹம், மஹாபாரதஸங்கிரஹம் முதலான கிரந்தங்களே சாக்ஷியாக இருக்கின்றன-சந்திரவம்ச க்ஷத்திரிய ஆந்திரர்களுக்குள் விஜயநகரம் ஸ்ரீகிருஷ்ணதேவராயனுக்குப் பிறகு, கல்வியை விருத்தியாக்கியவர் இவரேயாம்-

ஸ்ரீராஜசூடாமணிதீக்ஷதர் இயற்றிய ஆநந்தராகவ நாடகத்தின் கடைசி சுலோகத்தின்படி இந்த இரகுநாத நாயடுகாருக்கு அச்சுதப்பநாயடுகாரு, இராமபத்திர நாயடுகாரு என்ற இரண்டு புதல்வர்கள் பிறந்தார்கள்-இவர்களில் அச்சுத நாயடுகாருக்கு அச்சுதவிஜயராகவ நாயடுகாரு அல்லது விஜயராகவலு நாயடுகாரு என்ற பெயர்கள் வழங்கிவந்தன- இவரே மூத்தவரானபடியால் இரகுநாத நாயடுகாருக்குப் பிறகு தஞ்சை ஸமஸ்தானாதிபதியானார்-

---

விஜயராகவலு நாயடுகாரு ஸமஸ்தானம்.

கி-பி. 1630 முதல் கி-பி. 1670 வரும் வரையில்.

இரகுநாத நாயடு காருடைய ஜேஷ்ட குமாரராகிய இந்த விஜயராகவலு நாயடுகாருக்கு அச்சுதவிஜயராகவலு நாயடுகாரு என்றப் பெயரும் வழங்கி வந்ததார்கள் இவருடைய காலத்திலும் கோவிந்ததீக்ஷதரே மந்திரியாக இருந்தாரென தஞ்சைடிஸ்டிரிகட்டு மானுயூல் சரித்திரம் 287-754 வது பக்கங்களிலும், ஸ்ரீ சரவணபிள்ளை யவர்கள் எழுதிய மோஹநாங்கி நாடகத்திலும், தஞ்சாவூர் இராஜாக்கள் சரித்திர முதலான கிரந்தங்களிலும் தெரிவிக்கப் பெற்றிருக்கினும்; இந்த கோவிந்ததீக்ஷதர் விஜயராகவலு நாயடு காரின் தந்தைக்கும், இவர் பாட்டனுருக்கும் மந்திரியாக இருந்ததாகவும், சாசனங்கள் இருக்கிறபடியாலும், கி-பி. 1605 வருஷம் கோவிந்த தீக்ஷதர் பஞ்சனத மஹாத்மியத்தைத் தமிழில் மொழிபெயர்த் தெழுதியதாகவும் தெரியவருகிறபடியாலும்; இந்த விஜயராகவலு நாயடு காருடைய பாட்டனுர் அச்சுதப்ப நாயடுகாருடைய காலம் கி-பி. 1577 வருஷம் என்று சாசன மிருக்கிறபடியாலும்;இந்த விஜயராகவலுநாயடுகாரு கி-பி.1660வருஷம் நாகப்பட்டணத்தை டச்சுக்காரருக்குக் கொடுத்ததாக இப்போது பட்டேவியாவில் கவர்ண்மெண்டு கண்காக்ஷிசாலை

யில் இருக்கும் வெள்ளிசாசனப் பட்டயம் சாக்ஷிசொல்லுகிறபடியாலும்; அந்தச்சாசனத்திற்குப் பிறகு இரண்டு வருஷங்களுக்கெல்லாம் விஜயராகவலு நாயடு காரு தேகவியோகமடைந்ததாக தஞ்சை டிஸ்டிரிகட்டு மானியூல் சரித்திரம் 760-வது பக்கத்தில் கண்டிருக்கிறபடியாலும்; இந்த கோவிந்த தீக்ஷதரே இந்த விஜயராகவலு நாயடுகாருக்கும் மந்திரியாராக இருக்கக்கூடுமோ என்று சந்தேகம் ஜனிக்கிறது-

தஞ்சை ஜில்லா டிஸ்டிரிகட்டு மானியூல் சரித்திரத்தை, த்தஞ்சாவூர் இராஜாக்கள் சரித்திரமென்னும் தெலுங்கு கிரந்தத்தைப் பார்த்து எழுதியதாகத் தோன்றுகின்றது. அப்புத்தகம் இப்போது எங்கையோ மறைந்துட்போய் விட்டதாக ம-ா-ா-ஸ்ரீ துப்புசுவாமி சாஸ்திரிகள் தம் புத்தகத்தில் எழுதி இருக்கிறுர். அப்புத்தகம் இப்போது எங்கேயும் மறைந்துப் போகவில்லே. சென்னே கவரன்மெண்டு கண்காக்ஷி சாலேயில் O. M. S. L. கீழ்நாட்டு கையெழுத்து கிரந்தசாலேயில் பத்திரமாகவைத்துப் பாதுகாத்து வருகிறுர்கள். அதை இப்போதும்போய் வாங்கிப் படிக்க விருப்பமுடையவர்களுக்கு கொடுதது வருகிறுர்கள்.

அந்தப்புத்தகத்தினுல் இந்த விஜயராகவலு நாயடுகோரு மஹா வைஷ்ணவ பக்த்தர் சிரோமணி என்றும், தம் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி பிரதி தினமும் 12000 பிராம்மண சாதுக்களுக்கு பிரீதி போஜனமிட்டபிறகு, தாமும் தம் அரண்மனேயாரும் உண்டு வருவது வழக்கமானபடியால்; ஒருகாலத்தில் தஞ்சையிலும் அதன் சுற்றுப்பக்கங்களிலும் ஓய்வற்றஜடி மழைப்பொழிந்து வீதிகளெல்லாம் ஆறுகளாகி, பிரவாக மெடுத்ததோடுகையில், பிராம்மண போஜனத்துக்காக அடுப்பிற்கு விறகு அகப்படாமற் தவித்து அந்த கஷ்டத்தை விஜயராகவலு நாயடுகாரிடம்விண்ணப்பஞ்செய்ய,அவர் தமது அரண்மனேயின் ஒருபாகத்திலிருந்த மாடிமேடைகளே இடிப்பித்து; அதிலுள்ள தூலம், விட்டம், சட்டம், துலாககட்டை, கம்பம், நிலவு கதவு, ஜன்னல் ஸ்தம்பங்களே எல்லாம் இடித்து எடுத்துக்கொண்டுவந்து எரித்துவிட உத்தரவு செய்ததாகவும்; அந்த உத்தரவின்படி சமயல்காரர்கள் 3-நாள்கள் செய்து; வீட்டில் வீட்டொடு கட்டப்பட்டிருந்த மரச் சாமான்களே எல்லாம் பிடுங்கி எரித்துவிட்டு, பின்னும் விறகில்லேயென்று சொல்ல, நாயடவர்கள் அரண்மனேயிலிருக்கும் பட்டுபட்டாவளி, பீதாம்பரம், காசிதுப்பட்டா சால்வை முதலான விலே உயர்ந்த ஆடைகளே எல்லாம் கிழித்து எண்ணெயில் தோய்த்து அடுப்பெரித்து அந்தணர் போஜனத்துக்கு ஹானிவராதபடி செய்வித்ததாகவும் சொல்லப்பெற்றிருக்கிறது மேலும்,—

இப்படிப்பட்ட காலத்தில் ஸ்ரீரங்கத்திலிருக்கும் ஸ்ரீரங்கநாச்சியார் மூக்கிலிருந்த ஒரு விலேயுயர்ந்த இரத்தின மூககுத்தி காணுமற்போய்விட்டதாகவும், அதை அந்த அம்மன்கோயில் ஸ்தானிக பிராமணர் திருடியதாக ஸ்தலத்தார் எண்ணி அந்த ஸ்தானீகனே அடித்து வதைக்க, அந்த ஸ்தானீகர் அந்த வதையைச் சகிக்கமுடியாமல், இந்த தஞ்சை விஜயராகவலு நாயடவர்களிடம் வந்து

முறையிட; நாயடவர்கள் கேட்டுபெரிதவித்து இது விஷயமாக மனோராச்சியம் செய்துகொண்டிருக்க, தமது அரண்மனையில் இருந்த ஒரு பிராமண ஸ்திரீக்கு ஸ்ரீரங்க நாச்சியார் ஆவேசம் வந்து சொன்னதாவது "ஸ்ரீவிஜயராகவலு நாயடு காரு மஹா பக்த சிரேஷ்டரானபடியினால், அவருடைய கட்டளையின்படி பிரதிதினமும் 12000 பிராம்மணருக்கு போஜனமிடாமல் தாம் சாப்பிடுவதில்லை என விரதம் பூண்டிருக்க; மழையினால் விறகுகள் அகப்படாமல், அரண்மனை யின் ஆடைகளை எல்லாம் எடுத்து எண்ணெயிற் றுவைத்து அடுப்பேற்றிய போது, உண்டான புகையைச் சகிக்கமுடியாமல் அநேக பரிசாரகர்கள் ஓடிப் போய் விட்டார்கள். இனி 12000 பிரம்மணருக்கு காலகிரமத்திற் போஜன மிடாவிட்டால், விஜயராகவலு நாயடவர்களுடைய வீரவிரதம் கெட்டுப்போய் விடுமென்று, ஸ்ரீரங்கநாச்சியாரே பரிதபித்து,ஒரு ஏழை பிராம்மண பரிசாரிக ஸ்திரீயைப் போல் வேஷம்தரித்து வந்து சமயற்செய்ய; அச்சமயற்வீட்டு புகை அதிகமாக எழும்பி, அந்த பரிசாரக பிராம்மண ஸ்திரீயின் முகத்திலும், மூக்கிலும் தாக்கி வருத்தியதனால்; அந்தம்மை நொந்து அங்கிருந்தக் கழனித் தொட்டியில் மூக்கை சிந்தியபோது, அந்த மூக்குத்தி அக்கழனித்தொட்டியில் விழுந்திருக்கிறதென்றும்; ஆகவே, கோயில் அர்ச்சகரை அடித்து வதைப்பது பாவமென்றும், அவர்களை வதைக்கக்கூடாதென்றும் வாக்குச்சொல்ல, அவ்வாக் கின்படி அக்கழனிப்பாத்திரத்தைத் தேடிப்பார்க்க, அப்பாத்திரத்தில் அவ்வா பரணம் இருக்கக்கண்டு, நாயடவர்களுக்கு அதிக ஆநந்தமுண்டாகி, அம்மன் தனது அரண்மனைக்கு வந்த மகத்துவத்தைப்பற்றி மேன்மேலும் கொண்டாடி அதை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, ஆநந்த பாஷபம் சொரிந்தும், அதைப்போல எட்டுமூக்குத்திகளைச் செய்வித்தும்; 24,000 பூவராகனால் ஒரு பொன் பிரதிமை நாச்சியாரைச் செய்வித்தும், அதன் முக்கில் அந்த முக்குத்தி ஆபரணத்தைத் தரிப்பித்தும், சகல வாத்திய கோஷங்களுடனும், இராஜ மரி யாதைகளுடனும் அனுப்பிவிட்டு, அன்றுமுதல் ஸ்ரீரங்கநாதரும், நாச்சியாரும் தம்மிடம் கொண்டிருக்கும் காருணியத்தைக்கருதி "இனி பிரதிதினமும் காவி ரியில் ஸ்நானம்செய்து ஸ்ரீரங்கநாதரையும், நாச்சியாரையும் தரிசிக்காமல் உண்ணேம், என்ற வீர விரதத்தைக் கைக்கொண்டு, சுமார் முப்பது மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீரங்கத்துக்கு பிரதிதினமும்போய்வர பல்லக்குதூக்கும் போயர்களை நியமித்து அப்படியே போய்வந்தாராம். இந்த விஜயராகவலு நாயடுகாருடைய சமுகத்தில் சோமசுந்தர சுவாமிகள் என்ற ஒரு தபோநிதி யும், மஹாமதியூகியான மந்திரியும், இரங்கப்ப நாயடு என்ற தளகர்த்தரும் அக்கிராஜா என்ற குதிரைவீரரும் வீரபானு மற்றும் புத்திமான்களான பிர தானி, இராயசம், கொத்தவால் முதலான அதிகாரிகளிருந்து இராஜாங்கத் தைக் கிரமமாக நடத்திவந்தார்கள்.

இவர் காலத்தில் காஞ்சீபுரத்திலிருந்த ஸ்மார்த்த, ஸ்ரீவைஷ்ணவ பிராமணர் களைத் தருவித்து காவிரிநதி யோரமாக இருக்கும் கிராமங்களில் குடியேற்றி கல்வியையும் ஞானத்தையும் விருத்தியாக்கி வந்தார்கள்.

இப்படிப்பட்ட புத்திமான்களால் சூழ்ந்திருந்த விஜயராகவலு நாயடு தஞ்சாவூர், பெரியகோட்டை, அரந்தாங்கிக்கோட்டை, பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் ஜமீனில் உள்ள திருப்பத்தூர்கோட்டை, வள்ளமகோட்டை, திருக்கட்டிப் பள்ளிக்கோட்டை, செங்கோட்டை, பண்டை நல்லூர், தீவிக்கோட்டை முதலான கல்கோட்டைகளையும்; மாயவரம், காவேரிநதி தீரத்திலிருக்கும், புஷ்பமண்டபம், மத்தியார்ஜுனத்தில் புஷ்பமண்டபம்செப்பநிட்டும், மன்னாருகுடியில் இராஜகோபால சுவாமி கோயில், ஹரித்ராநதி என்ற பெரிய தெப்பக்குளம் பின்னும் அந்த ஜில்லாவிலிருக்கும் அநேக விஷ்ணு கோயில்களைக்கட்டி வைத்தும்; குடிகளிடம் ஆறில் ஒரு கடமை வாங்கிக்கொண்டும், தருமராஜிய பரிபாலனம் செய்துவருவதைக் கண்டு ஐரோப்பிய நாட்டாராகிய போர்த்துகேசியர் தஞ்சையில் முதல் முதல் கால்வைத்தார்கள். பிறகு 1620-ஆம் வருஷம் முதல் 1845-ஆம் வருஷம் வரையில் தரங்கம்பாடிக்கு டேனிஸ் சுக்காரர்களும். 1636-ஆம் வருஷம் பிரஞ்சுக்காரர்களும் காரைக்காலுக்கு வந்ததாக இப்போது ஆபிரிகா நெட்டாலிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ பிள்ளைசை, சோ-விருத்தாசலம்பிள்ளை யவர்கள் அபிபிராயப்படுகிறார்கள்.

இப்படி மிக்கமேன்மைபெற்று வாழ்ந்துவருங்கால் விஜயராகவலு நாயடுகாருக்கு வயது எண்பதாகி, முதிர முதிர வியாகூலங்களும், கஷ்டங்களுமுண்டாகி விசனப்பட்டிறக்கவேண்டிச் சம்பவித்தது.

அதற்குக் காரணம்; அவர் பிள்ளைகளும் துர்மந்திரர்களுடைய துர்போதனைகளுமேயாம். அதாவது: அவரது மூத்தகுமாரனாகிய மன்னாருசாமி நாயடுமே, தளகர்த்தன் ஸ்ரீரங்கப்ப நாயடு குமாரன் வீரபானு என்னும் அரங்கநாதனும், விப்பின் வெங்கண்ணனும், பாலிய சிநேகிதர்களாக விருந்துவேடிக்கை விநோதமாகக் காலம் கழித்து வருங்காலத்தில், மன்னாருசாமி நாயடு தமது சிநேகிதன் ஒருவனுக்கு எழுதிய அந்தரங்கக் கடிதத்தையும், இராஜமுத்திர மோதிரத்தையும், திருச்சியிலிருந்து குமாரசாமி என்று பொய்வேடம் பூண்டுவந்த அளகிரியனவன், தஞ்சை சமஸ்தான மந்திரியாகிய கோவிந்த தீக்ஷதருடைய குமார்த்தியும், இராகவேந்திர தீக்ஷதருடைய மனைவியுமாகிய சுலக்ஷினிக்குக் கொடுத்து, அவள் இராஜ உத்தியானவனத்தில் ஏகாந்தமான இராஜ கிரஹத்திலிருக்கும்போது போய் பிடித்தும், இழுத்தும் முத்தமிட்டும் முத்திரை மோதிரமிட்டும் அவமானப் படுத்தியதால்; அவள் அந்தச் சங்கதியைப்பற்றி தனது தந்தையிடம் முறையிட; அவர் அரசனாகிய விஜயராகவலு நாயடுகாருக்கு அறிவிக்க; அவர் அவ்வித அக்கிரமம் செய்தவர் இன்னாரென்று சரியாக விசாரித்து அறியாமல், தன் மகன்தான் செய்திருப்பானென்று பிடித்துக் கொண்டுவரச்சொல்லி சிறையில் போட்டு விட்டதாக தஞ்சை நாயக்கர் ஸமஸ்தான சரித்திரத்தைப்பற்றி நாகை நீலலோசனிப் பத்திரிகையில் ஸ்ரீமான் T. இராஜம் ஐய்யங்கார்வர்கள் B. A. எழுதிய சரித்திரத்தால் ஸ்பஷ்டமாகிறது. ஆனால் இது விஷயத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரீ சரவண முத்துப் பிள்ளையவர்கள் எழுதிய "மோஹனாங்கி" சரித்திரத்தில் வேறுவிதமாகச் சொல்லப் பெற்றிருக்

கிறது. அதாவது தஞ்சை தளகர்த்தராகிய "இரங்கப்ப நாயடு" தமது குமாரன் வீரபானு என்னும் அரங்கநாதன் விஜயராகவலு நாயடு குமாரத்தி மோஹனாங்கி என்னும் "மங்கம்மாளை" விவாகம் செய்வித்துக்கொண்டால், இராஜபரிபாலனம் தன் குமாரனுக்கு கிட்டுமென்றெண்ணி, கோவிந்தாசாரியாருக்கு பரிதானம் கொடுத்தும், அந்த ஆசாரியருடைய குமாரத்தி விஷயத்தில் மன்னாறு செய்த குற்றங்களைப்பற்றித் தூண்டியும், அந்த ஆசாரியைக் கொண்டு விஜயராகவலு நாயடுகாரிடம் மன்னாறு நாயடுவின்மேல் பல சாடிகளைச் சொல்லியும், முக்கியமாக விஜயராகவலு நாயடுவைக் கொல்லப் பிரயத்தனப் படுவதாகச் சொல்ல, மன்னாறுசாமி நாயடை இராஜ கலகக்காரனாக்கி சிறையில் வைக்கும் படியாகச் செய்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார். இது விஷயத்தில் தக்க சாசன மகப்படாமையால்உண்மை இன்னதென்று அறியக்கூடவில்லை. அன்றியும் இந்த விஜயராகவலு நாயடுகாரு காலத்தில் கோவிந்த தீக்ஷதரே மந்திரியாக இருந்ததற்குத் தகுந்த சாசனங்களகப்படவில்லை என்று முன்னமேசொல்லி இருப்பதால்; இந்தக்கதையை உண்மையான தென்று நம்பக்கூடவில்லை; ஆயினும், மஹாவீரதீரனான மன்னாறை மந்திரிகளுடைய துர்ப்போதனையினால இராஜகைதியாகச் சிறையில்வைக்கச் சம்பவித்ததனால்; விஜயராகவலு நாயடுகாருக்கு உண்டான வியாகூலம் கொஞ்ச நஞ்ச மல்ல.

இப்படி புத்திரனால் வியாகூல முண்டான தோடுகூட; தம் புத்திரியினாலும் பிரபல வியாகூல முண்டாகச் சம்பவித்தது. அதாவது-தமது அதிரூபலாவணியமும், இயற்கை அறிவும் பெற்ற மதிவிலாசனி என்னும் மங்கம்மாளை, தமது தளகர்த்தரான இரங்கப்ப நாயடு குமாரன் அரங்கநாதனுக்கு விவாஹம் செய்வித்துத் தமது அரண்மனையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணமிட்டிருக்க; அதற்கு விரோதமாக மதுரைப் பூபதியும், திரிசிராப்பள்ளியிலிருந்த சோக்கநாத நாயடும் அந்த மங்கம்மாளையே விவாகம் செய்வேனென்று பிடிவாதம் செய்ததேயாம்—

மதுரைக் கதிபதியாகிய சொக்கநாத நாயடுவின் தந்தை இறந்ததும், அந்த ஸமஸ்தானத்தின் குலகுருவாகிய பந்த பெரியசுவாமி களும், பேஷ்கர் சின்ன தம்பி முதலியாரவர்களும், மந்திரியும் தளாதிபதியார் வெங்கட கிருஷ்ணப்ப நாயடும்கூடி சொக்கநாதருடைய தாயாராகிய மங்களாவிலாசனியிடம் போய் சொக்கநாதருக்குத் தக்க பெண்ணைத் தேடி விவாஹம் செய்வித்து பட்டங் கட்டாவிடில் ஸமஸ்தானம் கெட்டுபோகுமென்று சொல்ல; அந்த அம்மையும் தனது சகோதிரர் நாகபூஷணருடைய குமாரத்தி விலோசனியை விவாஹம் செய்வித்து சிங்காசன மேற்றுகவென்று உத்தரவு கொடுத்தார். இது சங்கதியை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சோக்கநாதர், திடுக்கிட்டெழுந்து 'தஞ்சை வீஜயராகவலு நாயடு குமாரத்தி மங்கம்மாளை மணஞ் செய்வித்தால் மாத்திரம் செய்துக்கோள்வதேயன்றி; மற்றப் பெண்களைச் செய்துக்கொள்ளமாட்டேன்," என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட; மாதாவும மந்திரிகளும், இது விஷயத்தைப் பற்றிச் சில நாட்கள் வரையில் பேசாமல்

ஆறவிட்டு பிரஸ்தாபிக்க; அந்தச் சொக்கநாதர் முன் சொன்ன வார்த்தையை மாற்றமாட்டேன் என்று சாதிக்க; பிறகு விதியின்றி அந்தத் தஞ்சை மங்கம்மாளை விவாகம் செய்ய தீர்மானித்து; தளகர்த்தர் வெங்கட கிருஷ்ணமநாயடு காரையும், இராஜ புரோஹிதர் பண்டித பிராமணர்களையும், தக்க ஆடை ஆபரண பண்டுபலாதி பஹுமானங்களைக் கொடுத்து தஞ்சைக்குப் பெண்விஷயமாகத் தூதாகப் போய்வர அனுப்பினார்கள். அவரும் அப்படியே விஜயராகவலு நாயடும் அவருடைய மந்திரிகளும் கொலுவிருக்குந் தருணத்தில் தூது வந்த காரியத்தைச் சொல்லியனுப்ப; விஜயராகவர் மிக்க கோபம் கொண்டு, தன்குடும்பத்தில் சொக்கநாதர் பெண்ணைக் கேட்கத் துணியலாமாவென்று திட்டியும், தூதுவந்தவெங்கிடகிருஷ்ணம நாயடுவையும், மந்திரி முதலான சபையார் முன் அவமான மாகப்பேசியும், அவர் கொண்டுவந்த ஆடை ஆபரணவரிசைகளை வாங்கிககொள்ளாமல் வாபீசாக அனுப்பிவிட்டார்.

அந்த விஜயராகவலு நாயடுகாரு அப்படி தூது வந்தவரையும், சொக்கநாதரையும் இராஜ சபையில் அவமானமாகப்பேசி பெண்கொடேனென்று சொன்னதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறார்கள். அவைகளில்-முதலாவது சொக்கநாதருடைய பாட்டனார் திருமலைநாயடு காருக்கு இந்தத் தஞ்சாவூர் சமஸ்தானப் பெண்ணாகிய அச்சுதரகுநாதம்மகாரைப் பட்டஸ்திரியாக முன் விவாகம் செய்வித்து கொடுத்ததில், ஒரு நாள் திருமலை நாயடுகாரு தாம் மதுரையில் கட்டிவைத்த சிற்பலங்காரங்களைக் காட்டி எப்படி இருக்கின்றன வென்றுக் கேட்க, அந்தத் தஞ்சை அச்சுதரகு நாதம்மாள் தன் தகப்பனார் வீட்டு சாக்கடை வேலைக்குச் சமானமானதென வேடிக்கைக்குச் சொல்ல; அந்த வார்த்தையைக்கேட்ட திருமலை நாயடுகாரு கோபவேசங்கொண்டு கையிலிருந்த கட்டாரியால் ஓரேகுத்தாகக் குத்திக் கொன்று விட்டபடியால்; இப்படி முரட்டுத்தனமுள்ள மதுரை ஸமஸ்தானத்தார் வீட்டுக்கு இனி தஞ்சை ஸமஸ்தானப் பெண்ணைத் தருவதில்லையென்று பிரதிக்கினை செய்துக்கொண்டதனால், அந்தப் பிரதிக்கினையை அனுசரித்துச் சொக்கநாதருடைய தூதவனை அவமானப் படுத்தியதாக சிலர் கருத்து- 2-வது- விஜயராகவலு நாயடு குமாரன் மன்னாறு தனது பிதாவின் பிராணனைப் போக்கி, பட்டம் கட்டிக் கொள்வதாக சில துஷ்டர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அந்த மன்னாறுசாமி நாயடை சின்னக்கோட்டையிற் சிறையில் வைத்துவிட்டதால்; இனி விஜயராகவலுக்குப் பிறகு தஞ்சைப்பட்டத்துக்குத் தகுந்த வயதுடைய ஆண்சந்ததி இல்லாமல் விஜயராகவலு நாயடு மைத்துனர் இரங்கப்ப நாயடு குமாரன் அரங்கநாத நாயடுக்கு தனது குமாரத்தியை விவாகம் செய்வித்தும், பிறகு தமது ஸமஸ்தானத்தையே ஸ்ரீதனமாகக் கொடுக்க தீர்மானித்திருந்தபடியால், சொக்கநாதர் தூதனை இப்படி அவமானம் செய்தனுப்பியதாகச் சிலர் கருத்து.

3-வது, கோவிந்த ஆசாரியருடைய குமாரத்தியைக் கெடுக்கத் தீர்மானித்த மன்னாறுசாமி நாயடை தஞ்சையின் பட்டத்துக்கு வராமல் தடுத்து சிறையில் போட்டுக் கொன்று பழியைத் தீர்த்துக்கொள்ள எண்ணமிட்டிருந்த கோவிந்த

தீக்ஷதருக்கு இரங்கப்ப நாயடு லஞ்சங்கள் கொடுத்து துதித்து, தஞ்சை சமஸ்தானத்துப் பெண்ணை, தன் மகனுக்கே வாய்க்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டமையால்; அந்தக் கோவிந்த தீக்ஷிதர், அடிக்கடி அரண்மனைக்குள் போய்; அரசிக்கும், அரசனுக்கும் அரங்கநாத நாயடுவைப்பற்றிப் போற்றியும்; சொக்கநாதன், முரடன் குடும்பத்தைச்சார்ந்த மூடன் என்றும்; அவனும் அவன் தாயார் முதலானவர்களும் சைவ மதாபிமானிக ளாகையால்; அப்படிப்பட்ட வீட்டிற்கு வைணவமதாபிமானமுள்ள வீட்டின் பெண்ணைக் கொடுத்தால், மஹாபாவமென்று சொல்லியும், விஜயராகவலு நாயடுவின் மனதை மாற்றியதால்; அவர் சொக்கநாதருடைய தூதுவனை இப்படி அலக்ஷயமாகப் பேசி அவமானப்படுத்தி யனுப்பியதாக சிலர் கருத்து. பின்னும் சிலர் பற்பலவிதமாக மனோராச்சியம் செய்து சொல்லுகிறார்கள். அப்படிப் பலர் பலவிதமாகச் சொல்லுவதற்குக் காரணம்; விஜயராகவலு நாயடுகாருக்கு அப்போது வயது 82-ம், அத்தோடு வைணவத்தில் பக்தி அதிகமாகி, சதா ஸ்ரீரங்கநாதர் தியானத்திலும், பூஜையிலும் கண்களை மூடிக்கொண்டு காலத்தை கழித்துக் கொண்டும், இராஜாங்க காரியங்களை எல்லாம் அவர் மைத்துனர் இரங்கப்பநாயடு வசத்திலும், அவர் குமாரன் அரங்கநாதனிடத்திலும், மந்திரி மார்களிடத்திலும் விட்டு விட்டும்; அந்த துர்மந்திரிகள் சொல்லும்வார்த்தைகளை யெல்லாம் தேவவாக்காகக் கொண்டும், அவர்களிஷ்டபடி தலையாட்டிக்கொண்டும், சதா ஸ்ரீரங்கா! ஸ்ரீரங்கா! என்று பாடிக்கொண்டும் பரவசமாக நின்றதேயாம்.

இப்படி தஞ்சாவூர் ஸமஸ்தானகாரியங்கள் சீர்கெட்டிருக்கும் தசையில், தூதாக வந்துபோன வெங்கடகிருஷ்ணப்ப நாயடு, தாம் தஞ்சைக்குத்தூதாக வந்த விடத்தில் உண்டான அவமானத்தையும், அசங்கதத்தையும், தமது அரசர் சொக்கநாதரிடமும், பேஷ்கார் சின்னத்தம்பி முதலியாரிடமும் மற்றுமுள்ள இராஜமகிஷி முதலானவர்களிடமும் போய்ச்சொல்ல; அவர்கள் திடுக்கிட்டு விசனப்பட்டு, அந்தோ! "தஞ்சை விஜயராகவர் தம்பெண்ணைக்கொடாவிட்டால் பாதகமில்லை, நமது சமஸ்தானத்தையும், சமஸ்தான தூதவனையும், தமது இராஜசபையில் இவ்வளவு அவமானமாகப்பேசி யனுப்பியது இராஜதருமமல்லவென்றும்; அக்குற்றத்திற்குத் தகுந்த மன்னிப்பு கேட்டுக்கொள்ளாவிட்டால், அவரோடு சண்டை செய்யப்படுமென்றும், சமாசாரமனுப்பினார்கள்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்ட விஜயராகவலு நாயடு கர்ஜித்து, தமது மந்திரி பிரதானிகளை நோக்கி "பார்த்தீர்களா? இந்த சொக்கனுடைய குறும்பு, இந்தப் பயலை நான் மன்னிப்பு கேட்கிறதா? இவனுடைய ராஜியத்தைப் பிடுங்கி, பாழ்த்துப்போகச் செய்து விடுகிறேன் பார்! சொக்கனை சண்டைக்கே வரச் சொல்," என்று சொல்லியனுப்பிவிட்டார்.

இது சங்கதியைக் கேட்டு வந்து திரிசியில் சொக்கநாதர் சமூகத்தில் தூதுக்காரர்கள் பயபக்தியுடன் சொல்ல; சொக்கநாதரும், அவர் ஸமஸ்தானத்தாரும் அதிகவிசனப்பட்டும், விஜயராகவ நாயடுகாருடைய மூத்தவயதையும், பக்தி

தரும குணங்களைக் கருதியும், பூர்வசம்பந்தத்தைக் கருதியும், அவரோடு எப்படி சண்டைச் செய்வதென்று வெகு நேரம் யோசித்தும்; கடைசியாக, அவர் மதுரைச் சொக்கநாத ஸமஸ்தானாதிபதியையும், அவருக்கு பிரதி நிதியாகத் தூது போன தளவாய் வெங்கட கிருஷ்ணப்ப நாயடுகாரையும், இராஜசபையில் பஹிரங்கமாகச் செய்தனுப்பிய அவமானத்தை நீக்கிக்கொள்ள விதியின்றி சண்டை செய்ய தீர்மானித்தார்கள்-தீர்மானித்தாலுமென்ன? விஜயராகவநாயடுகாரு மஹாபக்தி சிரேஷ்டராகவும், மந்திர தந்திர சதுரங்கச் சேனைகளில் சிறந்தவரானபடியாலும், அவரை உயுத்தத்தில் வெல்வது சாதாரணமல்லவென்று அறிந்து, உடனே 10000 சாம்பற் பூசினிக்காய்களைத் தருவித்து, அவைகளைத் துண்டு துண்டுகளாக வெட்டியும், அவற்றின் ஜலத்தில் சொக்கநாதர் எட்டு நாட்கள் நின்று, மந்திர ஜபம் செய்துவிட்டும் (பிறகு 1670-ஆம் ஹீம்) வெங்கட கிருஷ்ணப்பநாயடு, பேஷ்கார் சின்ன தம்பி முதலியார்வசம் 10000 சேனைகொடுத்தனுப்பித் தானும் பின் படையோடு குதிரைவீரனாகப் போக; சின்னதம்பி முதலியாரும்,வெங்கட கிருஷ்ணப்பநாயடும் வேகமாய்ச்சேனையை நடத்திக்கொண்டுபோய், முதலில் வல்லம் கோட்டையைத் தாக்கிச் சண்டை செய்ய, அப்போது அதை காவல் கார்த்துக் கொண்டிருந்த தஞ்சாவூரார் சேனை எதிர்த்தும் முடியாமையால், அந்த வல்லம் கோட்டை திரிசிராப்பள்ளியார் வசமாகிவிடவே; திரிசிராப்பள்ளியார் தைரியங்கொண்டு தஞ்சைக்கருகில் பத்தேரிகளை நியமித்தும்,கோட்டையை நாடி பத்துப் பீரங்கிக் குண்டுகளைச் சுட்டு சொக்கநாதர் சண்டைக்கு வந்திருக்கிற சங்கதியைத் தெரிவித்தார்கள். தெரிவித்தாலுமென்ன? விஜயராகவலு நாயடுகாரு அப்போது விஷ்ணு பூஜையில் உட்கார்ந்துகொண்டும்,கண்களை மூடிக்கொண்டும்,ஸ்ரீரங்கநாதா! இராஜகோபாலா! என்று ஸ்தோத்திரமும், ஜபமும் செய்துக்கொண்டுமிருக்க; வேவுகாரர்கள்போய் "சுவாமி! சொக்கநாதருடைய சேனை நமது வல்லம் கோட்டையைப்பிடித்துக் கொண்டு, இப்போது தஞ்சைக்கோட்டையைப் பிடித்துக் கொள்ள உள்ளே வந்துவிட்டார்கள்" என்று சொல்ல, நாயடுகாரு வெகுநேரம் பேசாமலிருந்து, பிறகு கண்களைத் திறந்துப் பார்த்து; வேவுகாரர்களைநோக்கி கர்ஜித்து, "நமது பூஜைபூரணமாகமுடிகிறவரையில்" நம்மிடம் யாவரும் வரவும்பேசவும் கூடாதென்று அதட்டி சொல்லிவிட்டு; மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு ஸ்ரீரங்கநாதா! இராஜகோபாலா! வென்று சொல்லிக்கொண்டு வெகுநேரம் பூஜையிலேயே இருந்து விட்டார்-

இது நிற்க- இந்த விஜயராகவலு நாயடுகாருடைய வயதையும், பக்திவிசுவாசத்தையும், தரும சிந்தைகளையும், பூர்வபந்து சம்பந்தத்தையும் சொக்கநாதர் சிந்தித்து, இவருடன் சண்டைசெய்ய விருப்பங்கொள்ளாமல், இனிமேலாகிலும் சமாதானத்துக்கு வரக்கூடுமோ என்று தூதுவர்களை கேட்டுவரும்படி சொல்லி அனுப்பினார்-

அப்போது தான் பூஜையைப் பூரணமாக முடித்து, கண்களைத்திறந்துப் பார்த்து; தூதுக் காரர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்து, "க்ஷத்

ரிய சிங்கம் சமர்களத்திலும் சமாதானத்தை நாடுமோ'' என்று கர்ஜித்து, தமது தளவாய் இரங்கப்பநாயடு, வீரபானு, அக்கிராஜா, சோக்கரவுத்தாகிய நால்வரை அழைத்து, உடனே ஆயுதபாணிகளாகி சண்டைக்குப் புறப்படுங்கள் என்று கட்டளையிட, அந்நால்வரும் காலதேசவர்த்தமானனங்களை அனு சரித்து, மஹாவித்வசிகாமணியும், வீராதி வீரருமாகிய அரசர் குமாரர் ஸ்ரீ மன்னுறுசாமி நாயடுகாரை இப்போதாவது சிறையிலிருந்து விடுதலைசெய்வித்தால், நலமென்று ஸ்ரீ விஜயராகவ நாயடுகாரை வணங்கிவேண்ட, அவரும் காலவித்தியாசத்தைக் கருதி விடுதலை உத்திரவு கொடுத்து, அந்நால்வரை அனுப்பி மன்னுறுசாமி நாயடை அழைத்துவரும்படி கட்டளைஇட, அவர்களும் அப்படியே போய் மன்னுறுசாமி நாயடை விடுதலைச்செய்வித்து அழைத்து வந்து, அரசர் சமுகம்விட; அம்மன்னுறுசாமி நாயடும் தமது தந்தையின் பாதங்களில் வீழ்ந்து தண்டம் சமர்ப்பித்து, கைகளைக் கட்டிக்கொண்டு வணங்கி நிற்க: விஜயராகவலுநாயடு தமது அருமைக்குமாரராகிய மன்னுறுசாமி நாயடுகாரை எறிட்டுப் பார்த்து-

"அடேமன்னுறு! மதுரைத் திரிசிப்புரத்தரசனுன சொக்கன் நம்மவீட்டின் பெண்ணை விவாஹம்செய்துத் தரவேண்டி தூதனுப்பினுன்! அந்த மூர்க்கன் குடும்பத்திற்கு, நமது குடும்பப் பெண்ணை கொடுக்கமாட்டோமென்றும் அத்தூதுவனையும், சொக்கனையும், சபையிற்திட்டி அவமானப்படுத்தி அனுப்பியதற்கு, அச்சொக்கன் தனது அவமானத்தைநீக்கிக் கொள்ளக்கருதி, இதோசண்டைக்கு தண்டுதளாதிகளை அனுப்பி இருக்கிறுன்-இப்படிப்பட்ட தருணத்தில் நாம், சொக்கனுக்கு பயந்து நமது அருமைப் பெண்ணை விவாஹம் செய்துக் கொடுதது, சமாதானம் செய்வித்துக்கொள்வது தகுதியா? அல்லது நமது க்ஷத்திரியதருமததிற்கு தக்கபடிக்கும், நமது பெரியோருடைய அந்தஸ்துக்கு தக்கபடிக்கும், கேவலமானவர்களுக்கு பயப்படாமல் சண்டை செய்து ஜயித்து நமது குடும்பத்தின் அந்தஸ்தையும், பிரதிக்கினையையும்பாதுகாப்பது தகுதியா! உடனேசொல்''! என்று வினவ-

அப்போது மன்னுறுசாமிநாயடு சொன்ன
பத்தியம் (காவியம்) இது

కం॥ మణిక్రిందుపరచిజలనిధి,। త్రిణముఁ పైనుంచిఅతనిదేకువసుమీ।
మణి మణియె త్రిణముత్రిణమే । రణవిజయ దిలీప విజయరాఘవభూప॥

என்று சொன்னுர்- அதாவது-

சமுத்திரத்தின் அடியில் இருக்கும் இரத்தினமணிகளின்மேல், குப்பைக்கூழங்களைப்போட்டு மூடினும், அந்தரத்தினமணிகள் மங்கலடையாமல், பிரகாசித்து, அக்குப்பைகூழங்களையும் பிரகாசிக்கும்படி செய்யும்-

அதாவது "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்று சொல்ல: விஜயராகவலு நாயடுகாருகேட்டு, அந்தோ! இப்படிப்பட்ட கல்விமானும், வீரதீரனுமான மன்னாறை துர்மந்திரிகளுடைய வார்த்தைகளைக்கேட்டு சிறையில் வைத்தோமே என்று சிறிதுநேரம் விசனப்பட்டு, பிறகு மன்னாறைத்தாவி உச்சி முகந்து முத்தமிட்டுப்பார்த்து

"அடே மன்னாறு! உன் வீரதீரத்திற்கு நாம் மெச்சினோம்-ஆனால் இந்தச் "சண்டையோ பிரமாதமாக முடியும்போலிருக்கிறது-ஒருவேளை இந்த உயுத் "தத்தில் நாம் வீரசொர்க்கத்தை அடைந்தப்பிறகு, சொக்கன் வந்து நம்மப் "பெண்ணை எடுத்துக்கொண்டுபோய் விவாகம் செய்துக்கொள்ளக்கூடும்! அந்த "அவமானத்திற்கு இடமில்லாதிருக்கும்படி, அந்தபுரத்தில் இருக்கும் நம்ம அரி "வையர் எல்லாரும் நமக்கு முன்னமே வீரசொர்க்கத்தை அடைவதற்கு உருவி "யகத்திகளோடுதயாராக இருக்கச்சொல்! அந்த அரிவையர் அந்தப்புரத்தை அ "ரைநொடியில் பஸ்பமாகும்படி நான்கு மூலைகளிலும் வெடிமருந்துகளை நிறப்பி "யப்பானைகளைப் புதைப்பித்து, நமது குறிப்பை அறிந்த உடனே நெருப்பிட்டு "வெடித்து விழும்படி உத்திரவுசெய்துவா", என்று அனுப்ப-மன்னாறு நாயடும் அந்தப் புரத்துக்குப் போய் தமது தாய், தங்கை, தாரம் முதலானவர்களைக் கண்டுத் தழுவி, தமக்குச் சம்பவித்த காலவித்தியாசத்தைச் சொல்லி விசனப் பட்டும், பிறகு தந்தையவர்கள் அனுப்பிய ஆகினையைச் சொல்ல, அந்த ராஜ மஹிஷிகளும், உடனே சுத்த ஸ்நானம் செய்து, மஞ்சள் குங்குமம் புஷ்பங்களை அணிந்தும்,மஞ்சற் பட்டுப் புடவைகளைக் கட்டிக்கொண்டும்,கத்திகட்டாரிகளை கைகளிலேந்திக்கொண்டும், இராஜ உத்திரவிற்கு எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்க, வெடிக்காரர் வெடி மருந்துகளைப் பானைகளில் நிறைத்து, அந்தபுரத்தின் நான்கு மூலைகளிலும் புதைத்து; தீவர்த்தியை, கையிலேந்தி வேந்தர் உத்திரவுக்கு எதிர்பார்த்திருந்தார்கள்-அந்தப் பெண்மணிகள் வெந்து இறந்த இடத்தை இப்போதும் இராக்காலங்களில் அணுக அஞ்சுகிறார்கள்-

இப்படிப்பட்ட தருணத்தில் விஜயராகவுலு நாயடுகாரு இனி ஸ்ரீரங்கத்துக்குப் போய் ஸ்ரீரங்க நாதரை நேரில் தரிசிப்பதற்குவழிஇல்லாததைக்கண்டு, தமது அரண்மனையின் மாடியின்மேல் மர உப்பிரிகைப்போட்டு, அதன்மேலேறி ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தின் கோபுரங்களை தரிசித்து வணங்கி இறங்கிவந்தும், இராஜவீரவேஷம் தரித்தும், வயதின் கோலத்தினால் தொங்கிக் கொண்டிருந்த கண் இரப்பைகளைத் தங்கக் கம்பிகளினாற்றூக்கிக் கட்டிக்கொண்டும், இராஜ ஆடை ஆபரணம் தட்டி சல்லடம் கட்டிக்கொண்டும், இடது கையிற் கட்டாரியையும், கேட்டியத்தையும், வலதுகையிற் இராஜபட்டாகத்தியையும் பிடித்துக் கொண்டும், ஸ்ரீரங்கநாதா! இராஜகோபாலா என்று கூப்பிட்டு கற்ஜித்து சண்டைக்குப் பிறப்பட, கூடவிருந்த மன்னாறுசாமி நாயடும், தக்க தட்டி சல்லடம் கட்டிக்கொண்டும், கட்டாரியும், கத்தியை ஏந்திக்கொண்டும் இராஜருக்கு முன் அணியாகச் சண்டைக்குப்போக-விஜயராகவலு நாயடுகாருபார்த்து-

“அடே மன்னாறு! நீ எனக்கு பின்வரும் அக்கிராஜா, வீரபானு முதலான
“வர்களுடன் பின் அணியில் நில்? ஏனெனில், ஒருவேளை உனக்கு எதிரிக
“ளுடைய கத்தியடிப்பட்டு விழுந்து, வீரசொர்க்கமடைவாயானால்- உன்னைப்
“பார்க்கும் என் கண்களில் (புத்திரசோகத்தினால்) கண்ணீர்த் ததும்பி, கண்களை
“மூடிக்கொள்ளும்; மேலும் நீ எனக்குமுன் இறப்பாயானால், புத்திரசோகத்தினால்
“என்கைகளின் வலிமைக்குன்றிச் சண்டைசெய்ய சக்தியற்றுப் போகக்கூடும்
“என்று சொல்ல-மன்னாறு நாயடுகேட்டு வணங்கி, “தந்தையே! தாங்கள்
“சகல சாஸ்திரங்களைக் கற்று தெளிந்தவர், அப்படிக்கிருக்க, இப்படிச் சொல்ல
“லாமோ! தாங்கள் தந்தை, நான் குமாரன்,-தாங்கள் அரசர், நான் சேவகன்,
“இப்படிக்கிருக்க, தங்களுடைய உப்பைத் தின்றதற்கு, இப்படிப்பட்ட தருணத்
“திலல்லவா நான் தங்களுக்கு முன்னின்று உதவிசெய்ய வேண்டும். இப்படிப்
“பட்ட தருணத்தில் நான் தங்களுக்கு முன்னின்று தங்கள் பகைவரைத்
“தாக்காவிட்டால், நான் இருந்தும் பிரயோஜனமில்லை,” என்று பலவாறு பஞ்சிக்
“கெஞ்சிக் கேட்டு சமாதானப்படுத்தி, ஆயுதபாணியோடு சமர்களத்தின் முன்
இளஞ் சிங்கம் கர்ஜித்து குதிப்பதைப் போல் குதித்துவர, சொக்கநாதருடைய
தளாவாய் வெங்கடகிருஷ்ணப்ப நாயடுகாரும் ஆயுதபாணியோடு முன்வந்தார்.

இந்த மன்னாறுசாமி நாயடும், பாலியத்தில் வில்வித்தை, மல்யுத்தம், சாமவித்தை, பட்டாகத்தி சுழல் வித்தையிற் பயின்றவராகையால், அவருக்கு அவ்வித்தைகளில்ச் சமானமான சக்தியை உடைய வெங்கட கிருஷ்ணப்ப நாயடுகாரோடு வெகுநேரம் நின்று கத்திச் சண்டைகளைச் செய்துவர, முதலில் மன்னாறு நாயடு பட்டாகத்தியால் வெங்கட கிருஷ்ணப்ப நாயடுகாருடைய சிரசைப் பார்த்து அடிக்க, அது அவர் தலைப்பாகையைத் தூக்கி எறிந்து சிறு காயப்படுத்த, வெங்கட கிருஷ்ண நாயடுகாரு மஹாவீர கோபத்துடன் மன்னாறு நாயடு தலையைப் பார்த்து அடிக்கத் தலைவேறு, உடல்வேறாக அறுப்பட்டு விழுந்தன.

இதை அறிந்த விஜயராகவலு நாயடுகாரு இனி தப்புவது அபூர்வமென அறிந்து, அந்தப் புரத்துக்குச் சேதியை அனுப்ப, அங்கிருந்த இராஜஸ்திரீ கள் உடனே ஒருவரை ஒருவர் கத்திகளால் வெட்டிக்கொண்டுச்சாக; அவர் களில் ஒரு இராணியார் தமது அருமையான நான்கு வயதையுடைய ஆண் குழந்தையை, அதற்குப் பால் கொடுத்த தாதியிடம் கொடுத்தும், அச்சிசுவின் போஷணைக்காக தாமணிந்திருந்த நவரத்தின ஆபரணங்களைக் கொடுத்தும், யாருக்கும் தெரியாமற் போய் வளர்த்திக்கொள்ளும்படி யனுப்பிவிட்டும், அந்த இராணியும் தம்கத்தியால் வெட்டிக்கொண்டு இறந்தார்- இத்தியாதி களைப்பார்த்துக் கொண்டிருந்த மங்கம்மாளும், மற்றவர்களும் தம் வாள்களால் வெட்டிக் கொண்டு வீரசொர்க்கமடைய; உடனே வெடிமருந்துக்காரன் நான்கு மூலைகளிலும் புதைத்திருந்த மருந்துப்பானைகளுக்கு தீயை மூட்ட, அவைகள் ஏககாலத்திற் குபீரென்று பீறிட்டுக் கொண்டு, பல பீரங்கி சப்தங்களோடு பயங்கர இடிசப்தம்போல வெடித்து; அந்தபுரத்தை அஸ்திவாரத்தோடு

ளைப்பி வெடிக்கச்செய்து எங்கும் புகைமயமாக்கியது- இதுச் சங்கதியை அறிந்த விஜயராகவலு நாயடுகாரு, இனி தாம் உலகிலிருப்பதில் பிரயோஜனமில்லையெனத் தெளிந்து, தமது தளவாய் முதலானவர்களோடு வெங்கடகிருஷ்ணப்ப நாயடுடன் மஹா பயங்கரச் சண்டைசெய்ய, அக்கிராஜாவும், வீரபானு முதலானவர்களும் எதிரிகளால் வெட்டப்பட்டு விழுந்து இறந்தார்கள்.

இனி விஜயராகவலு நாயடுகாருத் தனியாக நின்று கத்திச் சண்டைசெய்கையில், எதிரியின் சேனைகள் நாலாபக்கங்களிலுமிருந்து துப்பாக்கிகளுக்குகுண்டுகளைப்போட்டு சுட்டுக்கொண்டு வந்து வளைத்துக் கொள்ளவே, விஜயராகவலு நாயடுகாருப்பார்த்து, ஒரு தூதுவனை எதிரித்தலைவன் வெங்கட கிருஷ்ணப்ப நாயடு விடமனுப்பி, "தூரத்திலும், மறைவிலு மிருந்துத் துபாக்கிதண்டுகளினால்ச்சுட்டுக் கோல்வது, ஆண்பிள்ளைகள் செய்யும் உயுத்தமல்ல, பேடிகளான பெண்பிள்ளைகள் செய்யும் உயுத்தம், அரசர்கள் ஆண்சிங்கங்களைப் போல ஒருவரோடு ஒருவர் நேர்நேராக நின்று சண்டைசெய்வதே ஆண்பிள்ளைத்தனம்", மஹாவிஷ்ணுபக்தனாகிய என்னை திரிசிராப் பள்ளியார் துபாக்கி குண்டில் சுட்டுக் கொன்றால் அவர்களுக்கும் அப்ரகியாதி, எனக்கும் வீரசோர்க்கம் கிட்டாமற் போகக்கூடும்," என்று சொல்லும்படிகட்டளை இட, அந்ததூதுவனும் அப்படியேப்போய்ச் சொல்ல , அதற்கு வெங்கட கிருஷ்ணப்ப நாயடுகாரும் இணங்கி, தமது சேனையில் துப்பாக்கிகளை சுடுபவர்களை நிறுத்திவிடும்படி கட்டளைக்கொடுத்துவிட்டும், கத்திக்கட்டாரிக்காரர்களை மாத்திரம் முன்வந்து நிற்கும்படி திட்டம் செய்துவிட்டும், தாமும் கத்தி கட்டாரியுடன் வந்து விஜயராகவலுநாயடுகாருடன் நேர்நேராக நின்று நெடுநேரம் சண்டைசெய்தார்- விஜயராகவலு நாயடுகாரு கத்தி கட்டாரிவரிசையில் அதிகவல்லவரானபடியால்; நெடுநேரம் பயங்கரசண்டை செய்தாலும், விருதாப்பியவயதினாலும், புத்திர சோகத்தினாலும், குடும்பசோகத்தினாலும் அதிகநேரம் நின்று சண்டைசெய்ததனால் சற்றுத் தளரவே, வாலிபவயதும், மகாவீரதீரமுடைய வெங்கட கிருஷ்ணப்ப நாயடு வெகுமும்மரமாக தளராமல் சண்டைசெய்ய, அவருக்குப் பக்கத்திலிருந்த ஒரு வீரன் சமயம் பார்த்து தனது பட்டாகத்தியை ஓங்கி விஜயராகவலு நாயடுகாருடைய கழுத்தைப்பார்த்து வெட்டவே அரிஹரி! ஸ்ரீரங்கநாதா !இராஜகோபாலா! என்று சொல்லிக்கொண்டு விழுந்து வீரசொர்க்கத்தை அடைந்தார்- இந்தச் சண்டை தஞ்சை வடககு கோட்டை வாசலுக்கு அடுத்த இராஜகோபாலசாமி கோவில்வாசலில் நடந்தது-

உடனே வெங்கடகிருஷ்ணப்ப நாயடுகாருடைய சேனைகள் கோட்டைமாடியின் மேலேறி திரிசிரபுர ஜயக் கொடியை நாட்டி "சோக்கநாதவிஜயீபவா! என்று ஜயபேரிகை முதலான வாத்தியங்கள் கோஷித்தார்கள்- இந்த ஜபத்தைப்பற்றி வெங்கடகிருஷணப்ப நாயடு உடனே சவிஸ்தாரமாக எழுதி இரண்டு குதிரைச் சவாரிக்காரரிடம் கொடுத்து திரிசிபுரத்திற் கனுப்பினார்-

இங்கு தஞ்சையில் இப்படி நடந்துக் கொண்டிருக்க, அப்போது ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அதன் அர்ச்சகர்கள், இந்தச சண்டை எப்படி முடியுமோ

வென்று வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து, அர்ச்சகர்கள் மாமூல்படி அந்த ஸ்ரீ ரங்கர் கோயில் பூஜைகளை முடித்துக்கொண்டு தம் தம் வீடுகளுக்குப்போயிருக்கையில், தஞ்சை விஜயராகவலு நாயடுகாரு வழக்கபடி தமது பட்டபிருதுகளுடன் ஸ்ரீரங்கநாதர் சேவைக்கு வந்திருக்கிறபடியால் (அர்ச்சகர்) யாவரும் வந்து கோயிலைத்திறந்து பூஜைகள் செய்யுங்கள் என்று சேவர்கள் போல சிலர் வந்து சொல்லவே, அர்ச்சகர்களும் ஓடிப்போய்ப்பார்க்க, விஜயராகவலு நாயடுகாரும் பல்லக்கில் வந்திருக்கக் கண்டு, ஒரு வேளை இரண்டு அரசர்களுக்கும் சமாதானமாகிவிட்டபடியால், மாமூல்படி கோயிலுக்கு வந்தாரோ என்று எண்ணி, கோயிலைத் திறந்து பூஜைகளைச்செய்து, தீர்த்தம் சடகோபம் முதலான பிரசாதங்களை சாதித்துக்கொண்டிருக்க, விஜயராகவலு நாயடுகாரும் அவருடன் வந்த ஆட்களும் மாயமாக மறைந்துவிட, அர்ச்சகர்கள் ஆச்சரியப்பட்டு, ஸ்ரீ விஜயராகவ நாயடுகாரு மஹாபக்த சிரேஷ்டரான படியினால், ஸ்ரீரங்க நாதருக்குள் ஐகியமாகி விட்டார் போலும், என்றெண்ணி, இது சங்கதியை திரிசிரபுரத்திலிருக்கும் சொக்கநாத நாயடுகாரு சமூகத்திலும் சொல்ல, ஆச்சரியப்பட்டார்களாம். இது நிற்க- தஞ்சையிலிருந்து தளவாய் வெங்கட கிருஷ்ணப்ப நாயடு எழுதிய ஓலை திரிசிரபுரத்திற் சொக்கநாதர் சமூகத்தில் வந்து சேர, சொக்கநாதரும் அவருடைய மந்திரி முதலான சபையாரும், தாயார் முதலான குடும்பத்தார்களும் கேட்டு அதிகவிசனப்பட்டு, கேவலமான ஒரு பெண்ணைப் பற்றியவார்த்தையினாலே தஞ்சாவூர் சமஸ்தானமே பேர் சொல்லக்கூடபுத்திர மித்திரகளத்திராதிகளற்றுப் போகும்படி சம்பவித்ததைப் பற்றி அதிகமாகச் சிந்தித்தும், இனி நடந்து போன காரியத்தைப் பற்றிச் சிந்திப்பதில் பிரயோஜனமில்லை என்று எண்ணியும்; தம்மையும் தமது தூதனையும் அவமானப் படுத்திய அரசனை அடியோடு அதம் செய்து ஜயித்ததைப் பற்றி சந்தோஷித்தும், உடனே தஞ்சையிலிறந்த விஜயராகவலு நாயடுகாரு முதலான இராஜ குடும்பத்தாரை இராஜ மரியாதையுடன் எடுப்பித்து தகனம்செய்வித்தும், அவர்களுடைய அந்தஸ்துக்கு தக்கபடி கருமாதி காரியங்களை நடப்பித்தும், இராஜ பொக்கிஷத்தை பந்தோபஸ்து செய்வித்தும், நகரில் தகுந்த சேனாவீரரை வைத்துப் பாதுகாத்தும், தமக்குப்பால் கொடுத்து வளர்த்த சவலைத்தாய்க்குமாரரான அளகிரிசாமிநாயடு காரிடம் ஸமஸ்தானத்தைக் கொடுத்து வரும்படி வெங்கட கிருஷ்ணப்ப நாயடுக்கு உடனே பதில் ஓலை எழுதி அனுப்பிவிட்டும்; சொக்கநாதர் சகல பிருதுகளுடன் காவிரிநதிக்கு வந்து சுத்தஸ்தானம் செய்தும், 120 கோதானத்தையும், 12000 சில்லரைதானங்களையும், 24 குதிரை தானங்களையும், 60 கன்னிகாதானங்களையும், 120,2 உபநயன தானங்களையும், 12 கிராமங்களை அக்கிரஹாரங்களாகச் செய்வித்தும், ஸ்ரீரங்கம், ஜம்புகேசுவரம், மதுரை, இராமேசுவரம் முதலான க்ஷேத்திரங்களில் அபிஷேகங்களையும், இலக்ஷம் பிராம்மணர்களுக்கு போஜனமும் செய்விக்கும்படி உத்திரவளித்து விட்டும்; தாம் அரண்மனைக்கு வந்து அன்றிரவெல்லாம் உபவாசமிருந்து, மறுநாள் உண்டு உலாத்திக்கொண்டிருக்க; தஞ்சையிலிருந்து வெங்கட கிருஷ்ணப்ப நாயடு தஞ்சை பொக்கிஷத்தையும், ஆயுதங்களையும், யானைக் குதிரை

முதலான தகளையும் கொண்டுவந்து தங்கபுஷ்பங்களினால் சொக்கநாதர் பாதங்களை பூஜித்து, தாம் தஞ்சையில் சண்டைசெய்து ஜயித்தவைபவங்களை எல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்ல, சொக்கநாதர் கேட்டு சந்தோஷப்பட்டு அவர்களுக்கும், அவர்களுக்கு உதவியாகப் போன பாளையக்காரர்களுக்கும் வஸ்திராபரணங்களையும், சர்வமானியங்களையும் கொடுத்தும் மரியாதை செய்வித்தும், அவரவர்கள் ஸ்தலங்களுக்கு போகும்படி கட்டளை இட்டனுப்பியதாக தஞ்சாவூர் ராஜாக்கள் சரித்திர புத்தகத்திற் சொல்லப் பட்டிருக்கிறது- இந்த தஞ்சை உயுத்தத்தில் இவ்வளவு பராகிரமத்தைக்காட்டிய வெங்கட கிருஷ்ணப்பநாயடு, திண்டுக்கல் இரங்கண்ண நாயடு குமாரரென்றும், இவருக்கு அப்போது தக்க உதவியாக நின்றவர், திண்டுக்கல் சின்ன கதிரப்ப நாயடு என்றும் தெரியவருகிற தன்றியில்; இந்தச் சண்டை முடிந்த பிறகு சொக்க நாதர் சந்திரகிரி துப்பாக்கி விங்கப்ப நாயடு குமார்த்தி மங்கம்மாளை விவாஹம் செய்துகொண்டதாக கனம் டெயிலவர்கள் தமது சரித்திரம் 2-வது புத்தகம் 199-வது பக்கத்திற் சொல்லி இருக்கிறார்—நிற்க

தஞ்சாவூர் நாயக்கர் ஸமஸ்தானசரித்திரத்தைப் பற்றி நவநாடகமாக எழுதிய ம-ா-ா-ஸ்ரீ பி.ஏ.சரவணமுத்து பிள்ளையவர்கள், அவருடைய கிரந்தம்344-டக்க முதல் 372-பக்கங்களில் தஞ்சை உயுத்தத்தின் கடைசீ பாகத்தைப் பற்றி வேறுவிதமாக எழுதி இருக்கிறார்- அந்த ஸ்ரீ சரவணமுதத்துப் பிள்ளையவர்கள் பி-ஏ. பட்டதாரியாகவும், சென்னை கவர்ன் மெண்டு O. M. T. கீழ்நாட்டு கையெழுத்து பிரதி, புத்தகச் சாலையின் தலைவராக இருந்து, அநேகபுராதான சரித்திர சாசன ரிகார்டுகளைப்படிக்க அனுகூல மிருந்தபடியால்; அவர்; எழுதியச் சங்கதிகள் சரியான சங்கதிகளென்று நம்பவேண்டி இருக்கின்றன; ஆகவே அதன் சங்கிரஹத்தை இதனடியிற் சுருக்கமாக எழுதுகிறோம்-

அதாவது தஞ்சை விஜயராகவலு நாயடுகாரை சமாதானத்துக்கு வரச் சொக்கநாதர் பலதரம் வேண்டியும், சம்மதிக்காமல் சண்டைசெய்தே தீரவேண்டுமென்று ஒரேபிடியாகச் சாதித்து தமது அந்த புரத்திலிருக்கும் மனைவி மக்களனைவரையும் மருந்து வெடிவைத்துக் கொல்லும்படி உத்திரவளித்த போது, அவர் புத்திரி மங்கம்மாள் கேட்டு மதிமயங்கி தவிக்கும்போது, அவருடைய தோழிகளான விமலையும், இலக்ஷ்மியும் கூடி தஞ்சை ஸமஸ்தானத்துக்குச் சம்பவிக்கும் ஆபத்தை விவரமாகச் சொல்லி, இபபடிப்பட்ட காலத்தில் மங்கம்மாளே மாறுவேடமும், புற்காவும்போட்டுக் கொண்டு கோட்டைக்கு வெளியில் வெண்குதிரைமேல் நிற்கும் சொக்கநாதரிடம்போய் அவர்பாதத்தில் விழுந்து, தமது ஸமஸ்தான குடும்பத்தை கெடுக்காமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டால்; அவமானமிறங்குவார் என்று சொல்ல; மங்கம்மாளும் விதியின்றி இணங்கி, மாறுவேடம் தரித்துக் கொண்டு கோட்டை நந்தாவன வாசல்வழியாக இரகசியமாகப் போய், சொக்கநாதருக்குச் சொல்லியனுப்ப; அவரும் பரிதாபத்தோடு ஓடிவந்தும், மங்கம்மாள் விண்ணப்பத்தைக்கேட்டும், விசனப்பட்டும், விதியின்றி அவ்வளவோடு உயுத்தத்தை நிறுத்துவிடும்படி

வெங்கடகிருஷ்ணப்ப நாயடுக்குச் சங்கதி சொல்லியனுப்ப; அந்த தூதன்போய் சொல்வதற்குள் விஜயராகவலு நாயடுகோரும், அவர் குமாரன் மன்னாருசாமி நாயடு முதலானவர்கள் வெட்டப்பட்டுக்கொல்லப் பட்டார்களென்றும்; அந்தப் புரஸ்திரீகளும் அக்கினிக்கு இரையாகி விட்டார்களென்றும் சங்கதிவர; சொக்க நாதர் கேட்டு அதிகவிசனப்பட்டு மங்கம்மாளுக்குச் சொல்ல; அந்தம்மாள் திடீரென விழுந்து ஒப்பாரிட்டு அழ; உடனே அருகிலிருந்தவர்கள் பலவாறு தைரியஞ்சொல்லி சமாதானப்படுத்திவிட்டும்; கோட்டைக்குள் எங்குபார்த்தபோதிலும் பிணக்காடாகக் கிடந்திருந்த பிரேதங்களில் விஜயராகவலுநாயடுகாருடையவும், மன்னாருநாயடு காருடையவும், அவர் தாயார் முதலானவர்களுடையவும் பிரேதங்களைத் தேடி எடுப்பித்தும்; அவர்களுக்கு இராஜ மரியாதைகளுடனும், யானைப்பட்டாளம், குதிரைப்பட்டாளம், பதாதிப்பட்டாளம் இரண்டு பேரிகை, முரசுகொடிமுதலான வைபவங்களுடனும்எடுப்பித்துக் கொண்டுச்சொக்கநாதரும்,மங்கம்மாள் முதலானவர்களும் மயானத்துக்கு கூடப்போய்,மங்கம்மாள் மூலியமாக தகனம் செய்வித்து வந்து, தஞ்சையிலுள்ள பெரிய பிரபுக்களையும் உத்தியோகஸ்தர்களையும்சபையாகக்கூட்டி தாம்(சொக்கநாதர்)எழுந்து தஞ்சைவாசிகளே! நாம் உங்கள் தஞ்சையைப் பிடிக்க இந்த உயுத்தம் செய்தோமல்லம்; எம்மையும், எமது தூதனையும் இராஜ சபையில் அவமானப்படுத்தியதைக் கருதிச் சண்டைக்கு வந்தோம்; அப்படி வந்தும்,அடிக்கடி சமாதானத்துக்கு அழைத்தோம், விஜயராகவர் சம்மதிக்காமல் முரட்டுப் பிடியாகச் சண்டைசெய்ததனால் அவர் தம் குடும்பத்தோடு சாகச்சம்பவித்தது;அதற்காக உங்களைவிட நாம் மெத்த விசனப்படுகிறோம்; இனி இத்தஞ்சைக்கு ஆர் அரசாக இருந்தால் உங்கள் சம்மத மெனக்கேட்க;நாட்டின் பிரபுக்கள் கேட்டு,“ விஜயராகவலு நாயடுகாரு துர்மந்திரிகளுடைய வார்த்தைகளைக்கேட்டு இப்படிச் செய்துவிட்டார்- இனி இதைப்பற்றி பிரலாபிப்பதில் பிரயோஜனமில்லை; தஞ்சை சமஸ்தானத்துக்கு தத்காலத்துக்கு சரியான வார்சு ஸ்ரீ மங்கம்மகாராகையால்; அந்தம்மையைத் தாங்களே தரும விவாஹம் செய்துக்கொண்டு, தாங்களே அரசராக இருக்கவேண்டுமென்று வேண்ட,” சொக்கநாதர் கேட்டு, தமது மதுரை ஸமஸ்தானம் பெரியதாகையால், தாம் தக்க பிரதி நிதியை நியமித்து அடிக்கடி வந்துப் பார்ப்பதாகச் சொல்லி, மங்கம்மாளை மூடுபெல்லக்கில்வைத்து திரிசிபுரம் கொண்டுபோய் தம் தாயாரிடம் விட, அந்தம்மை ஆலிங்கனம் செய்தும், முத்தங்கொடுத்தும், மிக்க கம்பீரமாக மங்கள விவாஹம் செய்வித்து ஆனந்தித்ததாகச் சொல்லி இருக்கிறார்.

இப்படி சரித்திரக்காரர்களுடையஅபிபிராயங்கள் ஒருவாறு வித்தியாசப்படினும்; இத்தஞ்சை ஸமஸ்தானத்துக்கு நேர்ந்த நஷ்டத்தையும், கேவலம் ஒரு பெண்ணைப்பற்றியும், ஒரு கோபமானவார்த்தையைப்பற்றியும் ஒரு இராஜ குடும்பத்தின் மன்னன் மனைவி புத்திரன் புத்திரகளத்திராதிகள் பாழ்த்துப் போகச் சம்பவித்ததை எண்ணிப்பார்க்கும் எவர் மனதுதான் துடிக்காது- துர்மந்திரிகளுடைய துர்போதனைகளாலேயே இப்படி நடந்ததாக அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்-

திரிசிராப்பள்ளி சங்கதிகள் இப்படி இருக்க, தஞ்சைக்கு புது அரசனாக நியமிக்கப்பட்ட அளகிரிநாயடு சொக்கநாதருக்கு ஆதியில் பால்கொடுத்துவளர்த்த செவிலித்தாய் மகன், அவன் தஞ்சைக்கதிபதியாகவே, துர்-அஹங்காரியாகியும், செர்க்கரைச் சட்டைசெய்யாமலும், அவருக்கு விரோதமாக அடுத்திருந்த சிலபாளையக்காரர்களை வசப்படுத்திக்கொண்டும் வந்ததன்றியில்; தஞ்சை சமஸ்தானத்தில் புராதனமாகஇருந்த உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள்எல்லவரையும் வேலையைவிட்டுப் போகச்சொல்லி;அவர்களுடைய சொத்துக்களை ஸமஸ்தானச் சொத்துக்களென்று விவாதம் செய்தான்.

இப்படி நீக்கப்பட்ட வேலைக்காரர்களில்ஒருவராகியவெங்கண்ணா என்றஒரு நியோகி பிராமணர். விஜயராகவலு நாயடு காலத்தில் இராயசம் வேலையிலிருந்து பழகினவர். அவரை வேலையைவிட்டு நீங்கும்படி செய்யவே; அந்தப்பிராமணர், தன் பழியைத்தீர்த்துக்கொள்ள சமயம் பார்த்துக்கொண்டிருக்கையில்; விஜயராகவலு நாயடுவின் துவதிய குமாரன் சுமார் நான்கு வயதுடைய பையனை ஒரு தாதி எடுத்துக் கொண்டுபோய் நாகபட்டணத்தில் ஒரு செட்டியாரிடம் வளர்ப்பதாக சங்கதி தெரிந்துப் போய்ப்பார்க்க, அந்தப்பயன் படித்துக்கொண்டிருக்க; அங்கு ஒருவருஷமிருந்து, அந்த செட்டியாருக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்வித்துக்கொண்டு, அந்தப் பையனுக்கு பன்னிரண்டு வயதுக்குமேலாகி யிருந்தபடியால்; அந்தப் பையனாகிய செங்கமல தாசனையும், அவனை வளர்த்த தாதியையும், செட்டியாரையும், தட்டிக்கொடுத்து, தைரியம் சொல்லி, நூறு ஜனங்களையும் பல்லக்கிகளையும் தயார் செய்து, அவர்களை அழைத்துக் கொண்டு பீஜப்பூர் சிகந்தர் பாதுஷாவிடம் கூட்டிக்கொண்டுபோய் நடந்த சங்கதிகளை எல்லாம் சொல்லி முறையிட; அந்த பாதுஷாவானவர் விஜயராகவலு நாயடு குடும்பத்துக்குச் சம்பவித்த அலங்கோலத்தைப்பற்றி பரிதபித்தும், அந்த ராஜாங்கத்தை அளகிரி நாயடு இடமிருப்பதைப் பிடுங்கி இந்தச் செங்கமலதாசு நாயடு வசம் கொடுக்கவேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று எண்ணினார். எண்ணினாலு மென்ன! அப்போது தஞ்சையிலிருந்த அளகிரிநாயடு சொக்கநாத நாயடு காரின்மனுஷனானபடியாலும்; அந்தச் சொக்கநாதர் மதுரைக்கதிபதியும், பெருத்த சேனைகளை உடைய வராகையாலும், அவரால் நியமித்த அளகிரி நாயடையும் அவரையும் ஜயிப்பது கஷ்ட சாத்தியமாக முடியுமென்று யோசித்துக் கொண்டிருக்க; வெங்கண்ணா என்ற பிராமணர் ஒரு உபாயம் சொன்னார்- அதாவது தாம் (வெங்கண்ணா) தஞ்சைக்குப்போய் அளகிரிநாயடுடன்பொய் உறவுசெய்தும், அந்த அளகிரி நாயடு திரிசி, சொக்கநாதருக்கு எழுதும் கடிதங்களை அவமரியாதையுண்டாகும்படி எழுதிவித்தும்; அவைகளால் தஞ்சை அளகிரி நாயடுக்கும், சொக்கநாத நாயடுகாருக்கும் மனஸ்தாபமுண்டாக்கி இருவரும் பகைவர்போல ஒருவருக்கொருவர் உதவிசெய்யாதபடி செய்து விட்டு வருகிறதாக, பாதுஷாவிடம் சொல்ல; அவரும் கேட்டு, இது நல்ல உபாயமென்று நம்ப, அந்த வெங்கண்ணாவும் தஞ்சைக்கு உடனே வந்து, அதேமாதிரியாகவே தஞ்சைக்கும், திரிசிரபுரத்தாருக்கும் சங்கடங்கள் உண்டாகும்படி சதிமோசத்தை

ச் செய்வித்து வந்து பாதுஷா இடம் சொல்ல; அவரும் இந்த சமயம்பார்த்து தம்மிடமிருந்த மஹாராஷ்டிர வீரனாகிய எக்கோஜியிடம் 12000 குதிரைப் பட்டாளத்தையும் 2000ம், பதாதிகளையும் அனுப்பித்தர, அந்த எக்கோஜியும் பாதுஷாவின் உத்தரவின்படி வந்து, பெங்களூரில் தன்சகோதிரரிடம் ஒருமாதம் தங்கி, அவ்விடத்திலிருந்து கொஞ்சம் குதிரைப்பட்டாளத்தையும், பதாதிகளையும் கூட்டிக்கொண்டு ஐயம்பேட்டைக் கருகில் வந்து, அளகிரிநாயடுவின் சேனையோடுதாக்க; எக்கோஜியின் 400-மராட்டிய வீரர்களும், அளகிரிநாயடுவின் 500-வீரர்களும் மடிந்தார்கள். இதனால் அளகிரிநாயடு இனி மராட்டியரை ஜயிப்பது கஷ்டமெனக் கண்டு, திரிசிரபுரத்திலிருக்கும் சொக்கநாதரை உதவிசெய்யவேண்டுமென்று மன்றாட; அப்போது அருகிலிருந்த வெங்கட கிருஷ்ணப்பநாயடுமுதலானவர்கள் இந்த ஆபத்துகாலத்தில் உதவிபுரியவேண்டுமென்று சொல்ல, இந்த அளகிரிநாயடு தஞ்சைக்கரசனான பிறகு தம்மை அசட்டைசெய்து துர் அஹங்காரியாக இருப்பதைக்கொண்டும் தமக்கு எழுதிய கடிதங்களை ஏன் தக்கமரியாதையாக எழுதவில்லை என்று கேட்டதற்கு, தஞ்சாவூரார் மதுரைக்காரருக்கு மாமூலாக எழுதுவதுபோலவே தாம் எழுதியதாக வெங்கண்ணனுடைய துர்போதனையினால் கர்வத்தோடு சொல்லியனுப்பியதால்; அப்படிப்பட்ட அளகிரிநாயடுக்கு தாம் எவ்வித உதவிசெய்யமாட்டோமென்று சொல்லி யனுப்பிவிட்டார்.

“எட்டிமரமானாலும் தான் நட்டமரமென்ற” பழமொழிப்படி, அளகிரியின் அஹங்காரத்தைச் சட்டைசெய்யாமல், இப்படிப்பட்ட ஆபத்துகாலத்தில் சொக்கர் உதவிசெய்திருந்தால்; தஞ்சாவூர் மராட்டியர் வசமாகாமல் இன்றளவும் நாயடு ஸமஸ்தானமாகவே இருக்கும். சொக்கநாதர் இராஜ தந்திரத்தை அனுசரிக்காமல், தஞ்சை அளகிரியின் அதிவிநயமான வேண்டுதலுக் கிறங்கி உதவி செய்யாமல் போகவே; எக்கோஜி தஞ்சைக்கே முற்றுகைபோட்டுப் பிடிக்கும்தருணத்தில், அளகிரிநாயடு பயந்து மைசூர் எல்லைக்குள் போய்விட; அந்த தஞ்சை ஸமஸ்தான சிங்காசனத்தில் செங்கமலதாசு நாயடை உட்கார வைத்தும்; வழக்கபடி மகுடாபிஷேகம் செய்வித்தும், உயுத்த செலவுக்கு கும்பகோணம், மன்னாறுகோயில், பாபநாசமாகிய மூன்றுதாலுக்காக்களில் நின்றிருந்த கிஸ்தித்தொகைகளை வசூல் செய்து கொண்டும் பீஜப்பூருக்குப்போக பிரயத்தனப்படச்சே; தஞ்சைக்கு விஜயராகவலு நாயடு சந்ததியே பட்டத்துக்கு வந்து விட்ட சந்தோஷத்தினால், விஜயராகவலுநாயடு கோட்டைக்குள் புதைத்து வைத்திருந்த பொக்கிஷக் குழியை பழய பொக்கிஷாதிபதிகாட்ட; அதைவெட்டிப்பார்க்கையில் அதில் 20 லக்ஷம் வராகனும், பத்துலக்ஷப் ரூபாய்களும், 6-லக்ஷம் இரத்தின நகைகளும் அநேக லக்ஷம்சானார் காசிகள் அகப்பட, அவைகளை எடுத்து தமக்கு உதவிசெய்த எக்கோஜி சொந்த செலவுக்கு 15 லக்ஷம் ரூபாயும், அவர் திவானுக்கு இரண்டு லக்ஷம் ரூபாயும், சையது சாயிபுக்கு லக்ஷம் ரூபாயும், மற்ற சில்லரையாக ஐந்து லக்ஷம் ரூபாயும், தர்பார் செலவுக்கு 5 லக்ஷம் ரூபாயுமாக கொடுத்து; தாமும்; வெங்கண்ணரும் ஜயம்

பேட்டை வரைக்கும்-வெங்கோஜியோடப்போய் மரியாதைச் செய்து பீஜப்பூருக்கு அனுப்பிவைத்தார்கள்.

இப்படிப் பட்டமடைந்த செங்கமலதாஸனுக்கு, இராயசம் வெங்கண்ணனை மந்திரியாக நியமிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ள; அச்செங்கமலனை வளர்த்த தாதியானவள் பிரவேசித்து,இந்தச் செங்கமலனை வளர்த்த நாகப்பட்டிணம் செட்டியாரை மந்திரியாக நியமிக்கவேண்டுமென்று வம்புகள் செய்ய; செங்கமலன் பெற்றதாயாருக்குச் சமமான தாதியின் வார்த்தைக்கிணங்கி செட்டியாரையே மந்திரியாக நியமிக்க நேர்ந்தது.

இப்படி தஞ்சை சமஸ்தானத்துக்கு செட்டியாரை மந்திரியாக நியமித்ததில்; இராயசம் வெங்கண்ணாவுக்கு அதிக விசனமும் பொறாமையு முண்டாகி, சமயம்பார்த்து பீஜப்பூருக்குப்போய் பாதுஷாவையும், எக்கோஜியையும் கண்டும், செங்மலதாசன் செங்கோலைச் செலுத்த சக்தியற்றவனென்றும், அதனால் குடிகள் பலவித கஷ்டங்களை யனுபவிக்கிறார்கள் என்றும், இனி பாதுஷாவின் உயுத்த கடனும், கப்பமும் கிரமமாகச் செல்லமாட்டாதென்றும், சாக்குகள் சொல்லி; எக்கோஜியை மறுபடியும் தண்டுடனனுப்பி தஞ்சையை வசமாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்; பாதுஷா கேட்டு, நாமே ஒருவனை சிங்காசனத்திலேற்றி, அவனை நாமே சிங்காசனம் விட்டு நீக்குவது இராஜ தருமமல்லவென்றும், அவன் பாக்கித் தொகையை மாத்திரம் கிரமமாக வசூல் செய்துக்கொள்வது நியாயமானதென்றும், பாதுஷா மனதில் தோன்றி அக்கருத்தை எக்கோஜிக்கும் தெரிவித்தும், ஒரு சிறிய தண்டுடன் தஞ்சைக்கனுப்ப, அந்த எக்கோஜியும் வந்து கும்பகோணத்தில் சேனையைத் தங்கச் செய்து இளைப்பாற்றிக்கொண்டிருந்தார்.

இந்தச் செங்கமலதாசு நாயடு, விஜயராகவனு நாயடு குமாரனென்று டிஸ்டிரிகட்டு மானுயூல் சரித்திரத்தில்சொல்லப்பட்டிருக்கினும்,அவரை விஜயராகவனு நாயடுகாருடைய பேரன் என்று கனம் டெயிலர் புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறதுஆயினும் அச்செங்கமலதாச நாயடு சதா விஷ்ணுபகதியிலீடுபட்டும்; சத்தியத்திற்கும் சுவாமி பக்திக்கும் பயந்தவராகையால், நிரபராதியான் தம்மீது எக்கோஜி படையெடுத்துவர ஏதுகாரண முமில்லையே யென்று ஏமாந்திருந்தார். பிறகு வேவுகாரர்கள் ஓடிவந்து செங்கமலனை வணங்கி எக்கோஜியின் சேனைகள் கோட்டைக் கருகில் வந்து விட்டதென பலதரம் சொல்லியும்; தக்க தண்டு தளாதிகளோடு போய் தடுக்காமல், எக்கோஜிசேனை வரும் வழியில் துளசியைக் கொண்டுபோய் போட்டுவிடுங்கள், எக்கோஜி மராட்டியனும் முஹம்தியருடைய சேனைத் தலைவனுமாக இருப்பினும், பிறப்பில் இந்துவாகையாலும், விஷ்ணு சுவரூபமான துளசியைத்தாண்டி வரமாட்டாரென்றும் சொல்லி அனுப்பிவிட்டு, கண்ணை மூடிக்கொண்டு விஷ்ணு பூஜையிலிருக்க, வேவுகாரர்களும் வேந்தன் உத்தரவுப்படி கோட்டையிலிருந்த இராமதுளசியைப் பிடுங்கி கூடைகூடையாகக் கொண்டுபோய் எக்கோஜி வரும்வழியில்

போட்டுவிட்டார்கள். மேற்படி துளசியின் மகிமையை அறியாத மராட்டியர் அதை மிதித்துக்கொண்டு யாதொரு தங்கு தடைகளில்லாமையால் கோட்டையை வந்து வளைந்துக் கொண்டு, உயுத்த சிலவையும் கப்பத்தையும் கேட்க ஆரம்பித்தார்கள்.

எக்கோஜி வந்த உத்தேசத்தை அறியாத செங்கமலதாசன், மராட்டியர் விஷ்ணுபக்தியும் இந்து மதாபிமானமுமில்லாத அசத்தியர்களென்றும்; இனி அவர்களோடு எதிர்த்து சண்டைசெய்வது சத்தியவான்களுக்கும்; சுவாமிபக்தியுள்ளாருக்கும் தகாதென்றும் எண்ணி, கோட்டையின் வாசலைத் திறந்து விடச் சொல்லிவிட்டு, தாம் அரியலூர் பாளையக்காரரிடம் அடைக்கலம் புகுந்தார்.

இது விஷயத்தைப்பற்றி தஞ்சாவூரிவாரு சரித்திரத்தில் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது-எக்கோஜி கும்பகோணத்தில் தங்கி இருந்த போது பொறாமைகொண்ட வெங்கண்ணன் போய் "இப்படிப்பட்ட சோழ தேசத்துக்கு தாங்கள் இராஜராக இருப்பதுபோய் ஒரு துலுக்கனுக்கு கீழிருந்துக்கொண்டு, இந்த செங்கமலனிடம் கப்பம் வாங்கி பிழைப்பது புருஷத்தனமல்லவே, என்று பலவாறு சொல்ல," எக்கோஜிகேட்டு நம்மைப்போன்ற இந்துவாகிய செங்கமலனைக் கெடுத்து, அவன் இராஜியத்தைப் பிடுங்கி வாயில் போட்டுக்கொள்வது தருமமல்லவென்றும், இது சங்கதியைக் கேட்டால் பாதுஷா தம்மிடம் சிறையிலிருக்கும் எக்கோஜியின் தந்தையையும், தம்மையும் கொன்று விடுவானென்றும்; மேலும், தஞ்சைக்கு அருகில் திரிசிரபுரத்தாரிருப்பதால், அவர்கள் செங்கமலனுக்கு உதவி செய்ய ஆரம்பித்தால், தூரதேசத்தாராகிய தமக்கு கஷ்டம் வந்து விடுமென்று சொல்லி வெங்கண்ணனைக் கண்டித்தும், வெங்கண்ணன் கேளாமல் ஸமஸ்தானத்தை எப்படியாவது கெடுத்து விடவேண்டுமென்று ஒரு உபாயம் செய்தார்- அதாவது "எக்கோஜி செங்கமலதாசனைக் கொன்று தஞ்சையைப் பிடித்துக் கொள்ள சமயம் பார்ப்பதாயும், உடனே கோட்டையை விட்டு வெளியே ஓடிப்போகாவிட்டால் பிராணன் மிச்சமாகாதென்றும் பயப்படுத்தி, ஆஷாட பூதியாகிய வெங்கண்ணன் செங்கமலதாசுக்குக் கடிதம் எழுத, பதினான்கு வயதையுடைய செங்கமலதாசு பயந்து அரியாலூருக்கு ஓடிப்போகவே; இது சங்கதியைப்பற்றி அந்த வெங்கண்ணன் சொல்லி, எக்கோஜியின் மனதை கலைக்கவே, எக்கோஜியும் கோட்டைக்குள் வந்து செங்கமல தாசருடைய சத்தியத்தையும் பக்தியையும் பார்த்தும்; அவர் அனுவசியமாக கோட்டையை விட்டுப் போனதைப்பற்றி விசனப்பட்டும்; அவரை மறுபடியும் தருவித்து பாதுஷாவின் கப்பத்தையும் கடனையும் கட்டி விட்டு, எப்போதும் போல தஞ்சையை ஆண்டுவரும்படி சொல்லியனுப்ப; இராயசம் வெங்கண்ணன் இப்படிச் செய்யதகாதென்றும், எக்கோஜிக்கு பலவித தந்திரோபாயங்களைச் சொல்லி, தஞ்சையைத்தாமே ஆண்டுவரும்படி வேண்ட, எக்கோஜி இப்படிப்பட்ட அக்கிரமம் செய்தால் பாதுஷா அங்கீகரிக்க மாட்டாரென்றும், தாமும் இப்படிப்பட்ட அக்கிரமத்தை நடத்த இஷ்டப்படவில்லை

என்றும் சொல்லிக்கொண்டே இருக்கையில், பீஜப்பூர் பாதுஷா இறந்துவிட்டதாகவும், அவர் சந்ததிகள் அச்சமஸ்தானத்திலிருக்கும் இந்து உத்தியோகஸ்தர்களுக்கு கொடுத்திருந்த பெரிய உத்தியோகங்களைப் பிடுங்கித் தம் இனத்தாரான மகமதியருக்கே கொடுத்துவருவதாகவும் சங்கதி வந்தமையால், "பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்" என்ற பழமொழிப்படி, மஹாயோகியரான எக்கோஜியின் மனமும்கெட்டு தஞ்சாவூருக்குத்தாமேராஜன் என்றுபட்டங்கட்டிக்கொண்டார். இவரிப்படி தஞ்சையிற் பட்டங்கட்டிக்கொள்ளவே, செங்கமலதாச நாயடு பயந்து அரியலூருக்குப்போகச் சம்பவித்தது-அப்போது அந்த அரியலூர் மதுரைஸமஸ்தானத்தைச்சார்ந்ததாகவும்,அச்சமஸ்தானத்தார்தமது தஞ்சை குடும்பத்தாருக்கு பழய பகைவரானபடியினாலும்,என்ன கஷ்டம் சம்பவிக்குமோவென்று மனோராச்சியம் செய்யச்சே; அப்போதுஅந்த அரியலூருக்கதிபதியாக இருந்த இரங்கப்ப நாயடு எதிர்வந்து செங்கமலருடைய பயத்தைப் போக்கி, தக்க மரியாதையுடன் அழைத்துப்போய் ஆதரிக்க; தஞ்சை மன்னருக்கு மராட்டியராலுண்டான கஷ்டத்தைக கேட்டு சேதுபதி ஒரு சிறிய தண்டுடன் சண்டைக்குவர,சேதுபதியின் உள்உளவை அறிந்த வெங்கண்ணன் 2000 குதிரைப்பட்டாளத்தோடும் 6000 பதாதிகளோடுப்போய்த் தாக்கி தந்திரமாக வசப்படுத்தி சமாதானமாக்கிவிட்டார் பிறகு செங்கமலதாசு நாயடு புதுக்கோட்டைக்குவர அங்கு அவரையும், அவர் குமாரர்களான விஜயமன்னாறு நாயடுவையும், பங்காருசாமி நாயடுவையும், தக்க மரியாதையோடு வரவழைத்து வைத்திருக்கையில்; இலங்கையைச் சார்ந்த கண்டிதேசத்தில் இராஜனாக இருந்த நாயடுகாருக்கு இந்த விஜய மன்னாரப்ப நாயடு குமாரத்திகளை விவாஹம் செய்வித்துக்கொடுத்ததில், அவர் இவர்களுக்கு பூண்டி, நாட்டை ஜாகிராகக் கொடுத்தும்; பிறகு தமக்கு சந்ததி இல்லாமையால் இந்த விஜயமன்னார் நாயடு குமாரர் விஜயராகவலு நாயடுகாரை சுவீகாரம் செய்துக்கொண்டும்,சிம்ஹளதீவிற்கு அரசனாக்கினார்கள்-மற்றொரு குமாரராகியபங்காருசாமி நாயடு ஜம்புகேசுவரத்தை யடுத்த கொண்டையம்பேட்டையிற் குடிப்புகுந்தார். இப்படித் தஞ்சையில் அதிக வீரதீரத்துடனும், பக்தி விசுவாசத்துடனும் ஆண்டு வந்த நாயடு ஸமஸ்தானம் தேசாபிமானம், மதாபிமானமற்ற மன்னர்கள்காலத்தில், மற்ற மன்னர் வசமாகச சம்பவித்தது என்ன பரிதாபமான விஷயம்!இந்த தஞ்சை நாய்க்கருடைய வம்சாவளியைநாகை நீலோசனி பத்திரிகையில் ஸ்ரீமான் பி. ஏ. இராஜமய்யங்கார் எழுதி வந்த வாசகங்களிலும், ஸ்ரீ சரவணப்பிள்ளை எழுதிய மோஹனாங்கி புத்தகத்திலும் ஸ்ரீ-குப்புசாமி சாஸ்திரிகள் எழுதிய நாயக்கராஜ சரித்திரத்திலும் தஞ்சை சரித்திரத்திலும் விவரமாக காணலாம்.

ஏழாவது அத்தியாயம்.

தஞ்சாவூரில் மஹாராஷ்டிர ஸமஸ்தானமன்னர்கள் வம்சாவளி.

1. பாபாஜி பவுசைலே—இவர் புனாவுக் கருகிலுள்ள மூன்று கிராமங் களுக்குத் தலைவர்.
2. மாலோஜி—நைஜாமிடம் வேலையிலிருந்தவர்.
3. வாஞ்ஞோஜி
4. சஹோஜி—1544-ஆம் வருஷம் பிறந்தவர். துங்காபாய் மோஹினி யை மணந்தார்.
5. மேற்படி மனைவி ஜீஜிபாய்.
6. எக்கோஜி-வெங்கோஜி தஞ்சையைசெங்கமலனிடமிருந்து பிடுங்கினர்
7. சாந்தோஜி சம்சாரி புத்திரனல்லன்.
8. சாஹோஜி—1648-1711 சந்ததியற்றவர்.
9. சார்போஜி—1711-1729 மேற்படி
10. துக்கோஜி—1729-1736
11. பாபாசாஹிப்—1736-37 ஸ்ரீ ஜானுபாய் புருஷர்.
12. சாஹோஜி—1749 சகோதிரன் சண்டைக்காக ஆங்கிலேயர்உதவியை தேடினார். 1765-ல் இறந்தார்.
13. பிரதாபசிங்கு மகாராஜா - வைப்பாட்டி மகன் 1778-ல் இறந்தார்.
14. துலாஜி ராஜா—1765-1788 ஆற்காடு நாவப்புடன்,1767-ல் சண்டை இட்டார்.
15. அமர்சிங் மகாராஜா—1788-1898 அவிவேகன்.
16. சார்போஜி ராஜா—1798-1833 தத்து புத்திரன்.
17. சிவாஜி மகாராஜா—1833-1855 பொம்மைராஜா.
18. விஜயமோசன முத்தாம்பாபாய் கடைசிராணி.

நாயடுகாருகளுக்குப் பின் பட்டத்துக்கு வந்த மஹாராஷ்டிர மன்னர் களில் பெரும்பாலர், சிற்றின்பத்தில் காலம்போக்கி; மிதமிஞ்சிய கடன்களை வாங்கிக் கெட்டுப்போய் விட்டாலும், தஞ்சையில் சங்கீதம் சிற்பவிஞ்ஞான வித்தை முதலான சில சீர்திருத்தங்கள் விருத்தியாயின. விருத்தியாகியும் என்ன? அரசர் இராஜாங்க விஷயத்தைக் கவனிக்காமல், அருமையான காலத் தையும்,அருத்தத்தையும், அரிவையர்க் கீந்து அலைந்து விட்டபடியால், 1857ம்

வருஷம் தஞ்சை நகரம் ஆங்கிலேய கவர்ன்மெண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்த மஹாராஷ்டிரருடைய விருத்தாந்தத்தை கடைசி அத்தியாயத்தில் விவரமாகக் காணலாம்.

எட்டாவது அத்தியாயம்.

மதுரையில் நாயடுகாரு ஸமஸ்தானம்.

இப்புத்தகத்தின் இரண்டாவது பாகத்தின் கடைசியில், மதுரையில் சரியான பாண்டியர்களிருந்து ஆண்டுவராமையால்; குடிகள் கஷ்டப்படுவதைக கண்டு விஜயநகர ஸமஸ்தானத்தார் அப்பாண்டிய தலை நகருக்கு

கி. பி. 1404 வருஷம் இலக்ஷ்மண நாயடுகாரையும்,
ஷை 1449-1500 வருஷம் நரச நாயடுகாரையும்
ஷை 1451 ஷை முத்தன்ன நாயடுகாரையும்
ஷை 1500-1515 வருஷம் தென்னமநாயடுகாரையும்
ஷை 1515-1519 வருஷம் நரசிம்ம நாயடுகாரையும்
ஷை 1519-1524 வருஷம் குருகுரு திம்மநாயடுகாரையும்
ஷை 1524-1526 வருஷம் கட்டியம் காமய நாயடுகாரையும்
ஷை 1526-1530 வருஷம் சின்னப்ப நாயடுகாரையும்
ஷை 1530-1535 வருஷம் ஜகதேவ நாயடுகாரையும்
ஷை 1535-1544 வருஷம் விசுவநாத நாயடுகாரையும்
ஷை 1544-1545 வருஷம் வருதப்ப நாயடுகாரையும்
ஷை 1545-1546 வருஷம் தொம்பச்சி நாயடுகாரையும்
ஷை 1546-1547 வருஷம் விசுவநாத நாயடுகாரையும்
ஷை 1547-1558 வருஷம் விட்டல நாயடுகாரையும் பிரதி நிதிகளாக அனுப்பி ஆண்டுவரச் செய்ததாகச் சொல்லி இருக்கிறோம்.

அப்படி வந்து ஆண்டவர்களுடைய சரித்திரங்களைச் சரியாக எழுத சரியான சாசனங்கள் எமக்கு கிட்டாமையால்; கேவலம் கேள்வியினாலும், யுக்தியினாலும் எழுதி காலத்தைப் போக்குவதைவிட சிலாசாசனங்களினால் தெரிவிக்கப்பட்டிருக்கிற சரியான சரித்திரம் எழுதுவது சிரேஷ்டமல்லவா?

அப்படி சரியான சிலாசாசனங்களால் தெரியவருகிற சரித்திரம் ஸ்ரீ விசுவநாத நாயடுகாருடையவும் அவர்சந்ததிகளுடையவும் சரித்திரங்களாகையால் அவைகளைப் பற்றிச் சங்கிரகமாக எழுதுகிறோம்.

மதுரையிலாண்ட
நாயடு ஸமஸ்தான வம்சாவளி.

సీసమాలిక.

శ్రీవిష్ణుమూర్తికి చెలువయౌలక్ష్మికి । తమ్ముడై వెలసిన ధన్యచంద్ర।
వంశసంభవులైన, వరమహాక్షత్రియు।లని యెడుశ్రీగౌరనాన్వయులగును।
పరగుచుండెడికోట, బలిజెవారనుపేర । వ్యవహరింపుచునుండువార
లైన। బహుళశ్రీపాండ్య భూపతులపరంపర । వివరంబు తెలియుడి, విశ్వ
మందు । నాగమనాయుడు, నయవిశ్వనాదుడు । పెద్దకృష్ణప్పయు,
పృదివియందు । పెద్దవీరప్పనుపేరు నాయుడు విశ్వ।నాథుండు కృష్ణప్ప
నాయడుమఱి।ఘనవిశ్వనాదుడు, కస్తూరి రంగప్ప ముద్దుకృష్ణప్పయును
ఖ్యులైన । స్థిరముద్దువీరప్ప, తిరుమలనాయుడు । మంగమ్మసువిజయ
రంగచొక్క । నాథనాయుడును, మీనాక్షమ్మకడగాను । పద్నాల్గు
మనువులపాటిగాను । పద్నాల్గు ప్రభువులు భాగురంగార్యుల। శిష్యరా
జ్యంబును చేయుచుండ్రి &c. * * * *

விஜய நகரத்தின் ஸமஸ்தானம் அச்சுததேவராயலு காலத்தில் (கி. பி. 1559-ஆம் வருஷம்) பாண்டிய நாடு ஸ்வாதீனமாகி, விசுவநாத நாயடைத் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். அவர் சந்ததி வமிசாவளி விவரமாவது:—

1. நாகம நாயடுகாரு சகாப்தம் 1460 or கி. பி. 1538 வருஷம்.
2. விசுவநாத நாயடு (1)—1559-1563
3. குமாரகிருஷ்ணப்ப நாயடு-1563-1573-
4. கிருஷ்ணப்பநாயடு, பெரிய வீரப்ப நாயடு, விசுவநாதநாயடு 1573-95
5. லிங்கயநாயடு, விசுவநாத நாயடு-1595-1602.
6. முத்து கிருஷ்ணப்ப நாயடு—1602-1609-வருஷம்.
7. முத்துவீரப்பநாயடு—1609—1623-வருஷம்.
8. திருமலைநாயடு—1623—1659-வருஷம்
9. முத்து அளகிரிநாயடு—1559-1660-வரு
10. சொக்கநாத நாயடு—1660-1682-வருஷம்.

11. முத்துலிங்கய்யாயடு 1677-வருஷம்.
12. இரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயடு 1682-1689.
13. மங்கம்மகாரு—1689—1904-வருஷம்.
14. விஜயரகுநாத சொக்கலிங்கநாயடு—1704—1731-வருஷம்.
15. மீனாக்ஷியம்மகாரு—1731—1736-வருஷம்.
16. பங்காரு திருமலைநாயடும். விஜயரகுநாத நாயடுகோரும்-1736.

இப்படிப்பாண்டியநாட்டில் 16-நாயடுகோரு சந்ததிகள் ஆண்டுவந்தார்கள்.

இவர்கள் காலத்தில் பாண்டியநாடு பலவிதத்திலும் சீரும் சிறப்பும் பெற்று பிரகாசித்தது. ஆகையால் அப்படிஆண்டவர்களில் சிலருடைய சரித்திரங்களை மாத்திரம் சங்கிரகமாக இதனடியில் எழுதுகிறோம்.

மதுரையில் நாயடு ஸமஸ்தானம்.

மதுரையில் (பாண்டியநாட்டில்) நாயடுகோரு சமஸ்தானத்தை ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவர் ஸ்ரீவிசுவநாத நாயடுகோரு என, ஸ்ரீஸ்தலப் புத்தகத்தினாலும், மிஸ்டர் டெயிலர் (Mr Taylor) கிரந்தத்தினாலும், கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளினாலும் ஸ்பஷ்டமாகிறது. இந்த விசுவநாத நாயடு மதுரையில் நாயடு ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தகாலம் கி. பி. 1559-ஸு. இவருடையதந்தைவிஜயநகர ஸமஸ்தான உக்கிராணகர்த்தராயும்,பிறகு ஸமஸ்தான தளகர்த்தராயுமிருந்த கோட்டயநாகம அல்லதுநாகப்பநாயடு.அவர் அப்போது விஜயநகரஸமஸ்தானத்துக்கு இருந்த 56இராஜியங்களில் நாற்பதினாயிரம் குதிரைப்பட்டாளமும், நாலாயிரம் யானைப்பட்டாளமும், பத்தாயிரம் ஒட்டகைப் பட்டாளமுமாகிய பெரிய சேனைகளுக்கு சிரேஸ்டதளகர்த்தராக இருந்ததன்றியில்; தம்சொந்த காப்புக்கு ஆறாயிரம் குதிரைப்பட்டாளத்தையும், 20,000 பதாதிகளையும் வைத்துக்கொண்டும்,அவைகளின் செலவுக்காக,ஆறு காடுமுதல் திருவநந்தபுரம் உள்படவிருந்த குருநிலமன்னர்களிடம்பேஷ்கஸ்வசூல்செய்துக்கொள்ள அதிகாரம்பெற்றிருந்தார். அவருடைய தவப்புதல்வர் தான் விசுவநாத நாயடு-

அந்த கோட்டய நாகமநாயடு காருக்கு புத்திரசந்தான மில்லாத கவலையால், அநேகவிரதங்களைப்பூண்டும், கடைசியாக காசிக்ஷேத்திரத்திற்குப் போய் கங்காநதிக்கரையில்அகோர தபசுசெய்துவந்ததில்,ஒரு ஆண்குழந்தைபிறந்தது. அக்குழந்தை ஸ்ரீகாசிவிஸ்வநாதருடைய கிருபையால் பிறந்தமையால், அம்மகனுக்கு விசுவநாதன் என்றுபெயரிட்டார். இந்த விசுவநாதன் பிறந்த வருஷம் 1500 என்று சிலரிகார்டுகளில் காணப்பெற்றாலும், வேறுசிலசாசனங்களினால் 1510 வருஷம் என்றுதெரிவிக்கப்பெற்றிருக்கிறது. இப்படி இவர்பிறந்த வயதைப்பற்றி சிலசாசனங்கள் வித்தியாசப்பெற்றிருக்கினும், இவர் மதுரைக்கதிபதியாகும்போது சுமார் நாற்பது வயதுக்குள் இருக்கவேண்டும்.

இந்த விசுவநாதர் சிறுபையனாக இருக்கும்போதே கல்வி, கேள்விகளில் அதிகவிருப்பமுள்ளவராக இருந்ததன்றியில். தன் தந்தையைப்போலவே யுத்தத் தொழிற்பயிற்சியிலும் சிறந்து சுத்த வீரனாகி, அப்போது விஜயநகரத்தை நாடிவந்த மகமதியரைத் தாக்கி தன் தோள்வலிமையைக் காட்டியதனால்; 1535-ம் வருஷம் அச்சமஸ்தானத்தின் சேனைத்தலைவராக நியமிக்கப்பெற்றார்.

மதுரையில் பாண்டியருடைய வார்சுகளில் ஒருவராகிய 'சந்திரசேகர பாண்டியன்' ஆண்டு வரும்போது, தஞ்சையிலிருந்த 'வீரசேகர சோழன்' படையெடுத்துப் போய்ச்சண்டைசெய்து, ஜயித்துப் பாண்டியநாட்டைச் சோழநாட்டோடுசேர்த்துக்கொள்ள; அப்போதுசக்தி சகாயமற்ற சந்திரசேகர பாண்டியன் சங்கடப்பட்டு, விஜயநகர சமஸ்தானாதிபதி அச்சுத தேவராயனு அவர்களிடம் போய் முறையிட; விஜயநகர ஸமஸ்தானபதி அப்பாண்டியன் விஷயத்தில் பரிதபித்து, 1564-ம் வருஷம் தமது தளகர்த்தர் நாகம நாயடுகாரைத் தருவித்து, தக்க தண்டு தளாதிகளைக் கொடுத்து, தெற்கே தஞ்சைக்குப்போய் வீரசேகரனுடைய கொட்டத்தை யடக்கி, மதுரையைச் சந்திரசேகர பாண்டியனிடம் கொடுத்து வரும்படி சொன்னார். அந்த நாகமநாயடும் ஸமஸ்தானத்தின் உத்திரவின்படி சாலிவாகன சகாப்தம் 1400 ஸு-ம் காளயுக்தி ஸு-ம் பங்குனி மாதம், 15-ம் தேதி தஞ்சைக்கு வந்து வீரசேகரனைத் தாக்கி; மதுரையைப் பிடித்து சந்திரசேகர பாண்டியனுக்கு (கட்டளைப்படிக்) கொடுக்காமல், பேராசையினால் தாமே பாண்டியனென்ற பட்டத்தைக்கொண்டு ஆண்டுவர; விஜயநகர ஸமஸ்தானபதிக்குத் தெரிந்ததில், அவர் அதிக விசனப்பட்டு, தமது ஸமஸ்தான மந்திரி பிரதானி போர்வீரர் கூடிய சபையைக் கூட்டி, அச்சபைக்கு முன்பாக நாகம நாயடு செய்த இராஜதுரோகத்தையும், அக்கிரமத்தையும் பற்றிப் பிரஸ்தாபித்தும்; இப்படிப்பட்ட இராஜதுரோகியின் சிரசைக் கொண்டு வந்து எனது பாதத்தண்டையில் வைக்கும் வீரன் இச்சபையில் இல்லையோ? வென்று பலதரம் வீரகோபத்துடன் கர்ஜித்துச் சொன்னார்.

அப்போது அந்தச் சபையில் ஒருவராக இருந்தவரும், பாண்டியனை மோசஞ்செய்த ஷை நாகம நாயடுவின் குமாரருமாகிய இந்த விசுவநாயடு எழுந்து வணங்கி, "பிரபு துரோகியும், எனது பிதாவுமாகிய நாகம நாயடுவின் சிரசைக் கொண்டுவந்து, தங்கள் பாதத்தடியில் வைத்து, தங்கள் புகழை பாண்டிய நாடெங்குமோங்கு படி செய்விகக இதோ சித்தமாக இருக்கிறேன், உத்தரவு தர வேண்டும் என்று கேட்க; விஜயநகர சமஸ்தானாதிபதி கேட்டு இந்த விசுவநாதன், நாகம நாயடுவின் குமாரனாகையால், இவனும் தனது தந்தையோடு சேர்ந்துகொண்டு, பின்னும் பலவித வம்புகளைப் பாண்டிய நாட்டிற்குச் செய்து விடுவானோ என்று சந்தேக முற்றாலும்; விசுவநாதன் சிறுபிராய முதல் சத்தியம், சுவாமி பக்தி, இராஜ பக்திகளிற் சிறந்தவரென்று நேரில் கண்டிருந்தவராகையால், அவரிட மிருக்கவேண்டிய சந்தேகத்தை விட்டு, பூரண நம்பிக்கை வைத்தும், தக்க தண்டு தளாதிகளைக் கொடுத்து மனுப்பினார்.

இராஜவிசுவாசத்தில் சிறந்த விசுவநாதரும் தெற்கே மதுரைக்கு வந்தும், தமது தகப்பனாராகிய நாகம நாயுடுடன் பிரமாத சண்டைசெய்தும், அவரைப் பிடித்துச் சிறையில் வைத்தும், ஊர்க்கலகத்தை யடக்கியும், சந்திரசேகர பாண்டியனைச் சிங்காசனமேற்றியும், இப்படி நடந்த சங்கதிகள் யாவற்றையும் விஜயநகர ஸமஸ்தானத்துக்குத் தெரிவிக்க; இராயலு கேட்டு, விசுவநாதருடைய வீரதீரத்தையும், இராஜ விசுவாசத்தையும் பற்றிப் புகழ்ந்து, இவ் விசுவநாதரால் சிறையாகப் பிடிக்கப் பட்டிருந்த நாகம நாயுடை விசுவநாத நாயுடு மேலிருந்த விசுவாசத்தின் பொருட்டு விடுதலை செய்யும்படியாகவும், விசுவநாதரைப் பாண்டியனுக்கு கொஞ்சகாலம் உதவியாகவிருந்து சகாயம் செய்யும்படியாகவும் சொல்லியனுப்பினர்.

இப்படிப் பட்டம் பெற்ற இந்த சந்திரசேகர பாண்டியன், வைப்பாட்டி மகன் என்றும், அத்தோடு இராஜிய பரிபாலனம் செய்யும் சக்தியும், சேனையும் அற்றவனென்றும்; ஆகவே, மதுரையில் மறுபடியும் கலகங்களுண்டாகுமென்றும், அப்போது விசுவநாதரிடம் போதுமான தண்டு தளாதிக ளிருப்பதோடு, இவருடைய இனத்தார் இத் தென்னாட்டில் இரண்டு மூன்று நூற்றாண்டு களுக்கு முன் குடியேறி இருப்பதால், அரசருக்கு அவர்களுடைய சகாயமும் கிடைக்குமென்றும், கடைசியாக விசுவநாதர் சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி, பரோபகாரம், குடிகளிடத்து பச்சாதாப முதலான குணச்சிறப்புகளை இயற் கையாகவே பெற்றிருப்பதாலும், இப்படிப் பெற்ற விசுவநாதரென்னும் உத்த மனை மதுரையில் சில காலம் தங்குப்படி செய்யவேண்டுமென்றும், மதுரைக் குடிகள் திரண்டு விஜயநகரத்தாரிடம் முறையிட்டுக்கொள்ள; அவ்விஜயநக ரத்தாருஞ் சந்தோஷமடைந்து, விசுவநாதரை மதுரையிலிருந்து பாண்டிய னுக்கு வேண்டிய உதவியையும், குடிகளுக்கு வேண்டிய சகாயத்தையும் செய்யும்படி உத்தரவனுப்ப; விசுவநாதரும் சமஸ்தான உத்திரவின்படி பாண் டியனுக்கு உதவிகள் செய்துகொண்டும், அப்போது பழனி திண்டுக்கல் மது ரைக்கடுத்த பயங்கரமான காடுகளைக் களைத்து விவசாயம்செய்து ஜீவனம் செய் யும்படி தம்மினத்தாருக்கு நிலங்களைக் கொடுத்தும், குடித்தனத்துக்கு வேண் டிய சாதனங்களையும் செய்து வருகையில்; சந்திரசேகர பாண்டியன் பரமபத மடைய, அவன் பாலிய குமாரன் வீரபாண்டியன் சிங்காசன மேறினன். அந் தப் பாலிய பாண்டியனும் அற்பாயுசாக இறந்துவிடப், பாண்டிய நாட்டிற்கு வார்சுக ளில்லாத குறையைப் பற்றி விஜய நகரத்தாருக்கு அறிவிக்க; அவர் விசுவநாதருடைய உண்மையையும், உதாரத்தையு மறிந்து இவரையே பாண் டியநாட்டிற் கதிபதியாக்கி, சிங்காசனமேற்றி ஆண்டுவரச் செய்யவேண்டு மென் று தீர்மானித்து, மகுடாபிஷேகத்துக்குக் கங்கை ஜலத்தோடும், விஜயநகர துர் க்கையின் பிரதிமையோடும், பிராமண பண்டிதர்களும் உத்தரவின் படி மது ரைக்கு வந்து விசுவநாதருக்கு இரவுத்திரி நாம வருஷம், கார்த்திகைமாதம் 15ம் தேதி கூடிய சுபதினத்தில் பாண்டிய நாட்டுக்குப்பட்டம் கட்டிவைத்தார்கள்.

விசுவநாத நாயடுகாரின் ஸமஸ்தானம்.

கி. பி. 1559-ஹு முதல் 1563-வரையில்.

இப்படிப் பாண்டியநாட்டுக்குப் பட்டம் கட்டிய விசுவநாத நாயடுகாரு சிங்காசனமேறி இராஜியபாரத்தைத் தாமே நேரில் நடத்த வாய்க்கவே; பாண்டிய நாட்டுக் குடிகள் இவருடைய தரும குணங்களேயும், சுத்த வீரத்தனத்தையும் கண்டு இவரிடம் நம்பிக்கை யுண்டாகி நாட்டுப்புறங்களுக்கு வலசையாகப் போயிருந்த பெரும்பான்மையான மானமுள்ள குடிகளெல்லோரும் மறுபடியும் நாட்டில் வந்து வசிக்க ஆரம்பித்தார்கள். குடித்தனம் விவசாயம் செய்யும் கிருஷிகர் குதூகுலமடைந்து கிருஷிக்கு வேண்டிய காடு நிலங்களேத் தர்காஸ்துசெய்து தரும்படி தேடிக்கொண்டுவந்தார்கள். பிரமஞானத்திற் சிறந்த பிராமணர்களெல்லாரும் தங்களுக்கு வேண்டிய அக்கிரஹாரங்களேயும், கோயில் குளங்களேயும் நியமித்துத் தரும்படி தோத்திரம் செய்துகொண்டு வந்தார்கள். விசுவநாதர் சோழன் மீது படையெடுத்து வந்தபோது இவருக்குத் துணைநின்று சண்டை செய்து உதவிய உறவினர் முதலானவர்கள் தங்கள் விசுவாசத்துக்கும், உதவிகளுக்கும் தக்க பருமான மிராசு மானியங்களேத் தரும்படி கேட்க எதிர்பார்த்தார்கள். மேலும் புராதான பாண்டியர்களுடைய வைப்பாட்டி மக்களிற் சிலர் கள்ளர் மறவர் முதலான சிலர்களேக் கூட்டி நாட்டில் குட்டிக்கலகங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். இப்படிப் பாண்டிய நாடு தலேவிரிக்கோலமாக இருப்பதை யறிந்த விசுவநாத நாயடுகாரு, இத்தியாதி குறைகளே நீக்கிக் குடிகளுக்குச் சுகவாழ்வை உண்டாக்கவேண்டிய வன்மையைத்தரதயது இஷ்டதேவதையை வணங்கி வேண்ட; அத்தேவதையின் அருளால் அப்போது அரியநாயகம் என்னும் உத்தம மந்திரி அகப்பட்டார்.

அரியநாயக முதலியாரவர்கள்,

இந்த அரியநாயகம் எவரென்றால், காஞ்சீபுரத்துக்கு அருகில் மெய்ப்பேடு என்னும் கிராமத்தில் ஒரு ஏழை வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் சிறு குழந்தையாக இருந்தபோது, பெற்ற தாயார் இவரை ஓர் பாயின்மேல் படுக்க வைத்து ஜலத்துக்கு வெளியே போயிருக்கும்போது, ஒரு பெருநாகம் வந்து இக்குழந்தையின் உடலேச் சுற்றிக்கொண்டும், அதன் படத்தைக் குழந்தையின் தலேக்குமேல் குடைபோல் மறைத்தும் நிற்க; மாதா வந்து பார்த்து பயந்து பாம்பை யோட்டிப் பிள்ளேக்குண்டான பயங்கரத்தை பெரியோரிடம் சொல்ல; அப்பெரியோர் கேட்டு, இந்தப் பிள்ளே பிரபல பிரபுவாக வாழ்வானென்று சொல்லினராம். பிறகு பிள்ளேக்குப் பதினேந்து வயதானபோது ஓர் பிராம்மண

ஜோஷியர் கண்டு "நீ பிரபல பிரபு ஆவாய்! அப்போது உனக்குண்டாகும் சொத்தில் கால்பாகம் எனக்குத் தரவேண்டும்" என்று ஜோஷியம் சொன்னாராம்.

இப்படி அரியநாயகம் சிறுபிள்ளையாக இருந்தபோதே இவருடைய பிற்காலத்துப் பிரபலத்தைச் சொல்லுவதற்குத் தகுந்தபடி, இவர் கல்வியில் முக்கியமாகக் கணிதத்தில் நிபுணராயும், மல்யுத்தம், வில் யுத்தம் முதலான யுத்தப் பயிற்சிகளிற் சிறந்தவராகி இருந்தபடியால்; விஜயநகர சமஸ்தானபதியினிடம் யாதாவது ஒரு வேலையைச் சம்பாதிக்கலா மென்று போக; அங்கு இராயலு சமஸ்தானத்தில் ஓர் சிக்குமுக்கலான கணக்கினால் சபையார் சர்ச்சித்துக் கொண்டிருந்ததை, இந்த அரியநாயகம் கண்டு, உடனுக்குடனே அக்கணக்கின் விவரத்தை வெட்ட வெளியாக்கியும், இராயலுடைய ஜாதகத்தை பரிசோதித்து ஜோஷியம் சொல்லியும்; நவராத்திரிகாலத்தில் கொல்லும் எருமைக்கழுத்தின் குறிப்பான இடத்தைக்காட்டியும் வந்ததினால் இராயலுக்குச் சந்தோஷம் ஜனித்து, தமது அரன்மனையில் ஒரு கணக்குப் பிள்ளைவேலையில் அமர்த்திக் கொண்டார். இவர் இப்படி சிறுவேலையில் அமர்ந்திருக்கும் நாளில், இவருடைய புத்தி யூகத்தை இராயலுகண்டு இவரைதமது மந்திரிகளில் ஒருவராக்கியும் இவருக்கு பல்லாக்கு மரியாதையையும், முதலியார் என்ற பட்டத்தையும் கொது மரியாதைச் செய்தார்.

அதாவது விஜயநகர ஸமஸ்தான பிரபுக்கள் பிரதிவருஷமும் காட்டிற்குள் வேட்டைக்குப்போய், ஓர் காட்டெருமையை வலைவீசிப் பிடித்துவந்து, தமது ஸமஸ்தானத்தில் பிரதிவருடம் நடக்கும் நவராத்திரிகொலு உற்சவகாலத்தின் பத்தாம்நாள் உற்சவம் கோட்டைக்காவல் காளிகாதேவியின் முன் ஒரே வெட்டில் சிரம்வேறு முண்டம் வேறாக வெட்டிப்பலி கொடுப்பது புராதான வழக்கம். அவ்வழக்கத்தை அனுசரித்து அந்த வருஷமும் காட்டிற்குள்சென்று கம்பீரமான ஒரு காட்டெருமையைப் பிடித்துக்கொண்டு வந்து, கோட்டைக்காவல் காளிகாதேவியின் முன் பலி கொடுக்க வந்தபோது, அந்தக் காட்டெருமையின் கொம்புகள் அதிகமாக நீண்டும், விரிந்தும் இருந்தமையால், அப்படிப்பட்ட பயங்கர கொம்புகளையுடைய எருமையை ஒரே வெட்டில் வெட்ட முடியாமல் காவலாளிகள் மனோராச்சியம் செய்தார்கள். அந்த எருமையின் சிரசு ஒரே வெட்டில் துண்டிக்கப் படாவிடில், சமஸ்தானத்துக்கே கெடுதியுண்டாகு மென்ற சகுண பயமிருப்பதால், இந்தப் பயத்தைக் கருதி இக்கருமத்தைச் செய்ய இராயலு முதலானவர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கமுற்றிருக்கையில்; இத்தியாதிகளை அறிந்த அரியநாயகம் ஓடிவந்து அந்த எருமையை எப்படி நிற்க வைத்து, எந்த விடத்தில் எப்படி வெட்டினால் துண்டாகும் என்னும் உபாயத்தைச் சொல்ல; அந்த உபாயத்தின்படி காவற்காரர்கள் வெட்ட, எருமையின் கழுத்து ஒரே வெட்டில் வெட்டப்பட்டதைக் கண்டு, இராயலும் மற்றுமுள்ள ஸமஸ்தானத்தாரும் அரியநாயகத்தின் ஆழ்ந்த யுக்திக்கு ஆநந்தித்து, அவரை அரண்மனையில் அந்தஸ்தான உத்தியோகத்

தில் அமர்த்தினார்கள். இந்த விருத்தாந்தத்தைப் பற்றி கனம் டெயிலர் (W. Taylor's) வேறு விதமாக எழுதி இருக்கிறார்- அதாவது அப்போது 16 வயதையுடைய இந்த விசுவநாத நாயடுகாரின் சொற்பனத்தில் காலிகாதேவியார் வந்து அந்த எருமையின் கழுத்தை வெட்டவேண்டிய விடத்தைக் குறிப்பாகச் சொன்னதாகவும், அந்த சொற்பனத்தின்படி விசுவநாத நாயடு எழுந்து ஸமஸ்தான ஆயுதச் சாலையிலிருந்த 2, முதல் 8அங்குல் அகலமுள்ள கத்தியைக்கொண்டு வந்து எருமையின் கழுத்தை வெட்டி கீர்த்திப்பெற்றாராம்.(Vide Pages 7.15 Vol2 - O. H. N. by Rev. W. Taylor)

இப்படி அரண்மனையில் அந்தஸ்தான அலுவலில் அமர்த்தப்பட்ட அரிய நாயகம், அன்றொருநாள் அதிவீரதீரரென்ற சில மல்லக ஜட்டிகளோடு மல்ல யுத்தம்செய்து ஜயித்த சங்கதி யறிந்த இராயலு அவரை ஒரு தளகர்த்தராகவும் நியமித்துக் கொண்டிருந்து, நாகம நாயடுக்கு விரோதமாக விசுவநாத நாயடுத் தெற்கே தண்டுடன் போனபோது இந்த அரியநாயகத்தையும் துணையாக அனுப்பினார்.

இப்படித் துணையாகவந்த அரியநாயகம் பாண்டியநாட்டை ஜயித்தபிறகு, கேவலம் தண்டு தளாதிகளை விசாரணைச் செய்துகொண்டிருந்தார். இவருடைய மனோவலிமையையும்,தேக தாருட்டியத்தையும்,தீரத்தன்மையையும்,சத்தியம் சாந்தம், சுவாமிபக்தி, பரோபகாரம் இராஜவிசுவாசம் முதலான குணச்சிறப்புகளையும் நன்கறிந்திருந்த விசுவநாத நாயடுகாரு தம் சிங்காசன மேறியபிறகு தமது தரும ராஜிய பரிபாலனத்துக்கு உண்மையாக உதவி செய்ய,இந்த அரிய நாயகத்தைவிடத் தக்கவர் கிடையாதென்றுதெரிந்து,இவரையே தமது முதல் மந்திரியாகவும்,தளவாய் தளகர்த்தராகவும் நியமித்தும், இவருக்கு "முதலியார்" அதாவது பாண்டிய நாட்டு நாயடு ஸமஸ்தானத்திற்கு முதன்மையானவரென்று முடிசூட்டினார்.

இப்படி முதலியார் என்று மகுடம் பூண்ட அரியநாயக முதலியார் மந்திரி தளகர்த்தராக நியமிக்கவே; அரியநாயக முதலியாரும் உடல்வேறு உயிரொன்றாக விசுவநாத நாயடுடன் கூடி, அவருடைய ஸமஸ்தான காரியங்களை எல்லாம் ஆழ்நீள ஆராய்ந்து, தீர்மானித்துப் பாண்டிய நாட்டிற்கு நன்மை செய்யவேண்டிய காரியங்களைக் கையாடினார்கள்.

விசுவநாத நாயடுகாரும், அரியநாயக முதலியாரும் பாண்டியநாட்டிற் செய்த காரியங்கள்.

மஹாமதியூகியாகிய அரியநாயக முதலியாரை மந்திரியாகக் கொண்ட விசுவநாத நாயடுகாரு, முதலில் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிற் சுவரின் ஓரமாகக் கட்டப் பெற்றிருந்த புராதான பாண்டியருடைய கோட்டை கொத்த

ளம் வாய்க்கால்களை இடிப்பித்து; அவ்விடத்தில் இரட்டைச் சுவர்க் கோட்டையைக் கட்டுவித்தார். புராதன கோயில் கோபுரம் குளங்களைச் செப்பனிட்டுப் பிராமணர்களுக்கு வேண்டிய அக்கிரஹாரங்கள், வீதிகள், வாசல்கள், குளங்கள், குட்டைகளை உண்டாக்கினர். கிருஷித்தொழிலுக்குப் போதுமான பாசன வசதிகள் பக்குவமாக இல்லாமையால், வைகை நதியின்மேல் பேரணை, சிற்றணைகளைக் கட்டி நதியின் மேற்பாகத்தில் அநேகங் கால்வாய்களை வெட்டியும், அவ்விடங்களிலுள்ள நிலங்களை உழுது பயிரிடக் குடிகள் வசிக்கத் தக்க கிராமங்களைக் கட்டுவித்தார்கள். இத்தியாதி செலவுகளுக்கு ஸமஸ்தானத்தில் போதுமான திரவியமில்லாமையால், விசுவநாத நாயகோரு தமது தந்தை நாகம நாயடுடைய (பிரைவேட்) சொந்தப் பொக்கிஷத்திலிருந்து பொருளைத் தருவித்தும், மந்திரி அரியநாயக முதலியாருடைய உயுக்தி யோசனையின்படி பண்டத்தைச் செலவழித்தும் குடிகளுடைய சுகத்தை விருத்தியாக்கினர். இப்படிச் செய்யவே, இதற்கு முன்பு ஒரு காணிபூமியைக்கூடக் கிருஷிசெய்யாதவர்களெல்லோரும், கிருஷி வேலைக்காரம்பத்ததில் நாட்டுப்புரத்தில் பயிரிடாத பூமியைக்காணப தபூர்வமாகி விட்டதன்றியில்; அக்காலத்தில் தஞ்சை ஸமஸ்தானத்துக்குச் சார்ந்திருந்த திரிசிராபள்ளிவரைக்கும் பயிரிட்டுச் சிலசமயங்களில் தஞ்சை மன்னருடைய பூமியிலும் பயிரிடச் சம்பவித்து, இரண்டு இராஜாகளுக்குள்ளும்(பாண்டிய தஞ்சை ராஜர்களும்)எல்லைத் தகராரும் உண்டாகச் சம்பவித்தது. அன்றியும் அக்காலத்தில் இராமேசுவரம் ஸ்ரீரங்கம் யாத்திரை செய்யும் சாதுக்களுக்குத் தக்க வழிகளும், வசதிகளும் இல்லாமையால் யாத்திரைக்காரர் காடு கரடுகளிலும் கள்ளர் மறவர் கைகளிலும் சிக்கித்தத்தளிப்பதையும் நீக்கக்கருதித் திரிசிராப்பள்ளி நாட்டை மதுரைக்கும்,மதுரையைச் சார்ந்த வள்ளங்கோட்டையைத் தஞ்சாவூருக்கும் மாற்றிக்கொண்டால் நலமெனத் தகுந்த நியாயங்களுடன் தஞ்சை மன்னருக்கு அறிவிக்க; அவரும் தமது கேவல ஸ்திதியைக் கருதிச் சம்மதித்துக் கொண்டார்.

இப்படிச்சம்மதித்துத்திரிசிராப்பள்ளியைக்கொடுக்கவே, அங்கிருந்த புராதனக்கோட்டையை நீக்கி, அதே இடத்தில் புது கோட்டையைக்கட்டியும், அந்நகரத்தைசசுற்றிலும் இரட்டை மதில் சுவர் எழுப்பியும், அதன்கீழ்அகன்ற வாய்க்கால்களை வெட்டிக்காவிரிஜலத்தால் நிறப்பியும், கோட்டைக்குள் அநேக அக்கிரகாரங்கள், வீடுகள, வீதிகள், கிணறுகள், கோயில்கள், கடைகள், பண்டசாலைகள் முதலானவைகளை நியமித்தும், நானாதேசத்துக்குடிகள், கிருஷிகர், வர்த்தகர், கைத்தொழிலாளர்கள் வந்து வசிக்கும்படியான வசதிகளை நியமித்தும்; காவிரிநதியின் இரு பக்கங்களிலுமிருந்தபயங்கரமான, காடுகளைவெட்டி, யாத்திரைக்காரர் நிர்ப்பயமாகச்சஞ்சாரம்செய்யவும்; அவர்களுடன் துணையாகப் போய்வரச் சில சிப்பாய் சேவகர்களை நியமித்தும்; ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அநேக வேலைகளைச் செப்பனிட்டுப் புதுப்பித்தும், மானியங்களைக்கொடுத்தும் வரவே; பற்பலநாட்டுப் பணக்காரரான யாத்திரிகர் பணபயம் பிராணபயமற்று யாத்திரைசெய்தும்,இந்நாட்டின் செழிப்பையும் சுதந்திர சுகவாழ்வையும் கண்டு

இந்த ஸமஸ்தானத்தில் வந்து தங்கி வர்த்தக வியாபாரம் முதலானவைச் செய்யவும் ஆரம்பித்தனர். இப்படி விசுவநாதநாயடு திரிசிராப்பள்ளியில் சீர்திருத்தங்கள் செய்துவரும்போது, தெற்கே திருநெல்வேலியைச் சீர்திருத்தப்போயிருந்த அரியநாயகமுதலியாரைப் 'பஞ்சபாண்டவர்கள்' என்ற பெயரால் பழைய பாண்டியர்களுடைய சந்ததிகளென்றும், அவர்கள் விசுவநாதருடைய ஆக்கினைக்குஅடங்கிநடக்கமாட்டோமென்றும்,காயத்தட்ரே விருந்து எதிர்த்தார்கள். அவர்களுக்கு அரியநாயகம் பலவிதமான புத்திமதிகளைச் சொல்லியும், தந்திரங்களைச் செய்தும் வெல்லக்கூடாமையாலும்; அப்போது தம்மோடு இருந்தசேனை கொஞ்சமாக இருந்தபடியாலும், இக்கஷ்டத்தை உடனே விசுவநாதருக்கு அறிவித்தார்.

விசுவநாதர் இச்சங்கதியைக்கேட்ட உடனே காலதாமதமின்றிக் காலாள் குதிரைபட்டாளங்களுடன் திருநெல்வேலிக்குவந்து,அந்தப்பஞ்சபாண்டியர்களைக் கண்டு பகிரங்கச் சண்டைக்கு வரும்படி கேட்க; அவர்கள் விசுவநாத நாயடுவின் பட்டாள வல்லமையைக்கண்டு, அவருடன் எதிர்த்து சண்டைசெய்யச் சேனையும் திரவியமுமில்லை என்றும்; விசுவநாதர் ஒருவருடனே ஒரே காலத்தில் மல்ல உயுத்தம் செய்ய மாத்திரம் தங்கள் ஐவருக்கும் சக்தி இருக்கின்றதென்றும் சொல்லி யனுப்ப; விசுவநாதரும் அதற்குச் சம்மதித்துத் தமது சேனையையும், ஆயுதத்தையும் அரியநாயகரிடம் கொடுத்துவிட்டு; அவருக்கு எதிராகவே வந்து,அந்த ஐந்து பாண்டியர்களிடம் தாம் தனியாக நின்று மல்ல யுத்தம்செய்து,எதிரிகளில் முக்கியமானவனைக்கொன்று ஜயித்ததில்;மற்ற நால்வரும் விசுவநாதருடைய தோள் வலிமைக்கு மெச்சி திருநெல்வேலியையும், அதையடுத்த நாடுகளையும் விட்டுப் போய்விட்டார்கள். (Vide the History of Carnatic Governors) இப்படி ஜயித்த விசுவநாத நாயடுகாரு திருநெல்வேலியைப் புதியகட்டிடங்களினாலும்; கோயில், கோபுரங்கள் குளங்களினாலும் புதுப்பித்தும்; தாம்பிரபரணி நதிக் கரையோரமாக விருந்த அசங்கியமான குடிசைகளை நீக்கிப் புது விடுதிகளைக் கட்டுவித்தும், தாம்பிரபரணி நதியின் ஜலத்தைக் குடிகளும்,கிருஷிகர்களும் உபயோகப்படுத்திக் கொள்ளக் கால்வாய், வாய்க்கால் முதலிய பாசனவசதிகளை நியமித்தும்; பிராமணருக்கு வேண்டிய கோயில் கோபுரம், அகிரஹாரங்களை நியமித்தும், குடிகளால் நல்ல புகழையும், பிரதிஷ்டையையும் பெற்றார்.

விசுவநாதர் இப்படித் தெற்கே திருநெல்வேலியிற் சீர்திருத்தங்களைச் செய்துவருகையில்; திண்டுக்கல்லை யடுத்த கம்பம் கூடலூர்த் தலைவன் சோழன் தன்னைத் தாக்கியபோது, பாண்டியர் உதவிசெய்யாமல் விட்டு விட்டபடியால்; தான் விசுவநாதருககுக் கிரமப் பிரகாரம் கப்பம் கட்டுவதில்லை என்று கலகஞ்செய்ய ஆரம்பித்தபடியால், உடனே தக்க தண்டுகளுடன் திண்டுக்கல் சார்புக்குப்போய்க் கலகக்காரனிடம் சண்டைசெய்து, அவன் கோட்டையைப் பிடித்து, அவன் கொட்டத்தை அடக்கினார்.

இப்படித் தென்னுடுகளின் கலகங்களை அடக்கி நாட்டை நல்ல ஸ்திதிக்குக்கொண்டு வந்தாலும்; வேறொரு கஷ்டம் சம்பவித்தது. அதாவது, விசுவநாத நாயடு மதுரைக்கு வரும்போது அவர்கூட வந்த நாயடுமார்களும், கன்னடியார்களும், வேறுசிலரும் வேண்டிய உதவிகளை உண்மையோடு செய்துவந்தமையால்; அவர்கள் விசுவநாத நாயடே பாண்டிய நாட்டிற்குச் சக்கிரவர்த்தியானதில், தமக்குத் தக்க சிறு ஸமஸ்தானங்களையும், சம்பத்துக்களையும், பஹுமானங்களையும் கொடுப்பாரென்று பொறுமையோடு காத்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் திருப்தியாகக்கொடுத்துக் கௌரவிப்பது கஷ்டமாக விருந்தது. ஆயினும், விசுவநாத நாயடும், அரியநாயக முதலியாரும் இக்கஷ்டத்தை நீக்க ஓர் உபாயம் செய்தார்கள். அதாவது, பாண்டிய நாட்டைச் சுற்றிலும் 72-கொத்தளங்க ளிருந்தமையால், அக்கொத்தளங்களுக்குத் தக்க வீரரைத்தலைவர் அல்லது பாளையக்காரராக நியமித்தும்; அவர்கள் இராஜாங்கத்துக்கு உதவியாக வருஷாந்திரம்இவ்வளவுரொக்கம்கப்பமாகக் கட்டும்படிக்கும்,ஸமஸ்தானத்தின்மேல் எதிரிகள் சண்டைசெய்ய வரும்போது, தக்க தண்டுதளாதிகளைக் கொடுத்துக் உதவிசெய்யும்படிக்கும், இத்தியாதி செலவுகளுக்குச் சில பல கிரமங்களையும், பட்ட பிருதுகளையும், அப்பாளைய காரர்களுக்குக் கொடுத்துக் கௌரவித்தால்; அவர்கள் ஆனந்த மடைந்து இராஜவிசுவாசமாகவும், தம் பின் சந்ததியாருக்கு உதவியாகவும் இருக்கக்கூடு மென்றும் எண்ணி ஏற்படுத்தியதேயாம்.

THE ZAMENDARS OF MADURA.

பாண்டியநாட்டின் பாளையப்பட்டுகள் அல்லது ஜமீன்கள்,

இந்தஎண்ணத்தின்படி72பாளையப்பட்டுகளை ஸ்தாபித்தும்,அவைகளுக்குத் தம்மினத்தாரில் உதவிசெய்த வீரர்களையும், மற்றப்படி பொதுவாகப் பாண்டிய நாட்டிற்கு உதவி செய்தவர்களையும் பாளையக்காரர்கள் அல்லது ஜமீன்தாரர்களாக நியமித்தும், அவர்களுக்கு இனுமாக அநேக கிராமங்களையும், பிருதுகளையும் கொடுத்தார்கள். மதுரைச்சீமையின் விருத்தாந்தத்தில், மதுரையைச்சுற்றியும் அம்மயநாயக்கனூர், நிலக்கோட்டை, வடகரை,போடிநாயக்கனூர், கோம்பை, தேவாரம், கண்டப்பநாயக்கனூர், தோட்டயநாயக்கனூர், காமனுயக்கனூர், மாதவநாயக்கனூர்,தம்பிக்கைநாயக்கனூர்,சந்தையூர், ஏழுமலை, பாவாளி, கவுண்டன் கோட்டை, கண்ணியாவாடி,விருப்பாக்ஷி,ஆயக்குடி,எமக்கலாபுரம், ஒன்பதூர், கூளப்பநாயக்கனூர்,நிலக்கோட்டை, இராசக்கநாயக்கனூர்,சத்திரப்பட்டி, மாரூெ, மருங்காபுரி, செங்குருச்சி, பிள்ளைவிழுங்கி, இராமகிரி, இடையகோட்டை, தோகைமலை, வீரமலை, வெள்ளியகுன்றம், சிறுபாலை, மாம்பறை,

பள்ளியப்பநாயக்கனூர், எரியோடு, சொக்கம்பட்டி, மாரநாற்று, தவசிமடை, அம்பட்டரை, தேவதானப்பட்டி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாத புரமாகிய 47 பாளையப்பட்டு களைமாத்திரம் குறித்திருக்கின்றன. மற்ற 25 பாளை பட்டுகள் மறைத்திருக்கும் காரணம் தெரியவில்லை.

போடிநாய்க்கனூர்ப் பாளையக்காரர், 1336-வருஷம் மகமதியரால் தாக்கப் பட்டு இங்கு வந்தார்கள். இவர்கள் ஒருவகை மலையாளத்தார். இவர்களில் எட்டுத் தலைவர் பிரபலரானார்கள். கடைசித் தலைவரான "சிலாபோடி நாயக்கரும், அவர் குமாரர் "பங்காருமுத்து நாயடும்," 60-ஆவது சொத்தளத்துக்குத் தலைவரானார். வைகை நதிக்கு வடக்கே வடகரை ஜமீன்தாரராயிருக்கும் "ஸ்ரீ ராமபத்திரநாயடு காருடைய ஆதிபிதா" நாகம நாயடுடன் காசிக்குப்போயும், அவருடன்கூட மதுரைக்கு வந்தும் உதவிசெய்ததன்றியில்; கம்பம் சண்டையில்தக்க உதவி செய்ததனால் அவர் சந்ததிகளுக்குப் பழனிக்கருகிலிருக்கும் வடகரை பாளையப்பட்டு கொடுக்கப்பட்டது. தவசிமேடு பாளையப்பட்டுக்கதிபதி சோட்டலநாயடு, குட்டியைச் சார்ந்த தொட்டிய ஜாதியர். இவருடைய ஆதி தந்தை நாகம நாயடு தேக உபாதையோடு பழனிக்குபோனபோது வைத்தியம் செய்து உதவியதனால் இப்பாளையப்பட்டைப் பெற்றார். இப்படியே மற்றப் பாளையக் காரர்களும் ஒவ்வொரு காரணத்தைப் பற்றிப்பாளையக்காரரானார்கள்.

மதுரை ஜில்லா இங்கிலீஷ்காரர் வசமாகி மிஸ்டர் வின்சு(M.Wynch) காலத்தில் (1795-ஞு நவம்பர்மீ 24உ) மதுரையைச்சார்ந்த 24 பாளையப் பட்டுகளின் விவரமாவது —

(1) கோம்பி:—3000 சக்கிரம் வருமான முள்ளது.1500 சர்க்கார் கிஸ்தி. சக்கிர மென்றால் கிட்டத் தட்ட இரண்டு ரூபாய் விலையுள்ள நாணயம். அப் பாஜி கவுண்டர் பாளையக்காரர்,கம்பிலியஜாதி, அவருக்கு 100 சேவகர்களுண்டு.

(2) எச்சக்க நாய்க்கனூர்:—500 சக்கிரம் வருமானம். பாளையக்காரர், கம்பளியஜாதி. வாலிபர்.

(3) தேவாரம்:—357 சக்கிரவருமானம். 110 சக்கிரம் சர்க்கார்கிஸ்தி. பாளையக்காரர் கம்பளத்தார். போடி நாய்க்கனூர் மாப்பிள்ளை.

(4) போடி நாய்க்கனூர்:— 7000 சக்கிர வருமானமுள்ள பெரியபாளையப் பட்டு, திருமலபோடி நாய்க்கர் என்பவர் பாளையக்காரர். கம்பளத்தார், இது 5000 சக்கிரம் கிஸ்தி தரக்கூடுமோம்.

(5) கண்டப்ப நாய்க்கனூர்:—பெரிதும், உபயோகமற்ற நிலமுள்ளது. 4500 சக்கிரம் வருமானம். 1900-சக்கிரம் சர்க்கார்கிஸ்தியுள்ளது.

(6) தேவதானபட்டி:—4000 - சக்கிரம் வருமானம். 3100-சர்க்கார் கிஸ்தி. நல்லதாச நாய்க்கர் என்னும் பாளையக்காரர் கம்பளத்தார்.

(7) தோட்டியன்கோட்டை:—1600-சக்கிரம் வருமானம். சல்தான் கா

லத்தில் 850-சக்கிரம் சர்க்கார்கிஸ்தி. தொட்டப்பநாய்க்கரென்னும் பாளயக்காரர், கம்பளத்தார்.

(8) நிலக்கோட்டை:—9000 சக்கிரவருமானம். 7000 சக்கிரம் கிஸ்தி. கோலப்ப நாயக்கரென்ற பாளயக்காரர் கம்பளத்தார்.

(9) அம்மய நாயக்கனூர்:—அநேக மலை நாடுகளுடன் சேர்ந்த பெரிய பாளையப்பட்டு. 11,000 சக்கிரம் வருமானம். 3,600 சக்கிரம் சர்க்கார்கிஸ்தி. கத்திரப்பநாயக்கரென்ற பாளையக்காரர் கம்பளத்தார்.

(10) அம்பலத்தாரு.—2000 சக்கிரம் வருமானம், 1500 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. மகாபலநாயக்கரென்னும் பாளையக்காரர், கம்பளத்தார்.

(11) தவசுமேடை:— 65. சக்கிரம் சர்க்கார்கிஸ்தி. சோட்லநாய்க்கரென்னும் பாளையக்காரர், கம்பளத்தார்.

(12) எமகாலபுரம்:—550 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. பாளையக்காரர் கம்பளத்தார்.

(13) மறவநாடு:— கம்பளஜாதி, சின்ன அளகிரி நாய்க்கர் பாளையக்காரர். 600 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி.

(14) சொக்கம்பட்டி:—பழனிமுத்து நாய்க்கர் பாளையக்காரர்.

(15) எரியோடு:—12 கிராமங்களும் 39 சிறு கிராமங்களுமுள்ள பெரிய பாளையப்பட்டு. 9000 சக்கிரம் வருமானம். 6700 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. பாளையக்காரராகிய முத்துக்குமாரவேலு பெல்லகொண்டம நாய்க்கர், வடுகர்.

(16) பள்ளியப்ப நாய்க்கனூர்:—2000 சக்கிரம் வருமானம். 1000 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. பழனியப்ப நாய்க்கரென்னும் பாளையக்காரர், கம்பளத்தார்.

(17) இடையகோட்டை:—நல்ல பாளையப்பட்டு. சர்க்கார் கிஸ்தி 2337-சக்கிரம். பாளையக்காரர் கம்பளத்தார்.

(18) மாம்பறை:—400-சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. சாகரம் தொம்மநாயக்கர், கம்பளத்தார்.

(19) பழனி:—பெரிய பாளைப்பட்டு. இது பழனி, இட்டம்பாடி, ஆயக்குடி என்று மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பாளையப்பட்டு முன் 80,000-ரூபாய் கிஸ்திகட்டிக்கொண்டு வந்து, பிறகு 16,000 -சக்கிரமாகக்கட்டியது. 25,000-சக்கிரம் கட்டக்கூடியஸ்திதியிலிருக்கிறது. இதன் முன் பாளையக்காரராகிய வேலாயுத நாய்க்கர், வேடஜாதியார்.

(20) ஆயக்குடி:—8000 சக்கிரமவருமான முடையது. 4000 சக்கிரம் சர்க்கார் கிஸ்தி. பாளையக்காரராகிய ஒபிளிகொண்டம நாயகர் வேடஜாதி.

(21) விருபாக்ஷி:—மலைநாடாகிய இது பெரியபாளையப்பட்டு. 12000 சக்கிரம் வருமானம், 6000 சர்க்கார் கிஸ்தி. பாளையக்காரர் குப்பண்ண நாயக்கர், கம்பளத்தார்.

(22) கண்ணியவாடி:—இது 14 பெரிய கிராமங்களும், 48 சிறு கிராமங்களு முள்ள பெரிய பாளையப்பட்டு. 21,000 சக்கிரம் வருமானம். 12300 சர்க்கார்கிஸ்தி.

(23) மாதூர்:—பெரிய பாளையப்பட்டு. கடனில் மூழ்கிவிட்டபடியால், கவர்ன்மென்டார் மானேஜ்மெனுடில் இருக்கிறது. பாளையக்காரர் வேங்கடசாமி நாயடு.(Vide Pages 9 to 16 Pages IV Dt. Manual Madura.)

இனிவடகரை,எட்டியாபுரம், இராமநாதபுரம்,சிவகங்கை,புதுக்கோட்டை முதலான சில பெரிய பாளையப்பட்டு ஜமீன்களின் சங்கதிகளைச் சங்கிரகமாக இதனடியிற்காணலாம்.

வடகரைஜமீன்தாரரின்விவரம்

வடகரை ஜமீன்தாரரவர்களுடையஆதிதந்தையாகிய ஸ்ரீராமபத்திரநாயடு காரு மதுரையில் முதலில் ஆண்டுவந்த இராஜா கோட்டய நரகம நாயடுகாருடைய சேனைத் தலைவராக இருந்தவர். இந்த நாகம நாயடுகாருக்கு புத்திர சந்தானமில்லாக் குறைவால் காசிக்ஷேத்திரம் யாத்திரைப் போன போது, அவருடைய சமஸ்தானத்தை இந்த ஸ்ரீராம பத்திர நாயடுகாரு அவருக்குப் பிரதிநிதியாக இருந்து இராஜபத்யை யாண்டுவந்த தன்றியில்; நாகமநாயடுகாரு சோழராஜாவின்மேல்படையெடுத்துப் போனபோதும்,பிறகு ஸ்ரீவிசுவநாத நாயடுகாரு மதுரையைப்பிடிக்க வந்தபோதும்,தக்க உதவிசெய்துவந்ததன்றியில்; கம்பம் கோட்டையை முற்றுகைப்போட்டதில் விசேஷ உதவி செய்த தனால், அவரைப் பழனிக்கருகிலும், வைகை நதிக்கு வடகரையிலு மிருக்கும் வடகரை பாளையப் பட்டுக்கு பாளையக்காரராக ஆக்கினர். இந்த வடகரை பாளையக்காரரும், சொக்கம்பட்டி,ஊற்றுமலை,பாளையக்காரர்களும் இராமநாதபுரம் சேதுபதியவர்களுக்கு மற்றப் பாளையக்காரர்களைப்போல எவ்விதமான் வணக்கமும் செய்வதில்லையாம். 1795 ஹு ம் இதன் வருமானம் 6500 சக்கிரமாம்.

இப்போது இந்த வடகரை ஜமீன்தாரராக இருக்கும் பூமான் வீ. இராமபத்திர நாயடுகாரு வாலிபர். கோர்ட்டாப் வார்ட்ஸில் சுமார் 13-வருஷங்களிருந்தும், பிறகு வேறு உபாத்தியாயரிடம் முறையாகக்கற்று தெளிந்தும், சர்வகலாசாலை பிரவேச பரிக்ஷையில் தேறியவர். சுந்தரபுருஷரும், சுகுணசீலரும், தேசாபிமானமும்,மதாபிமானமுடையவர்.1901ஹு ம்மதுரையில்கூடிய மாகாண மஹா சபையில் "கோர்ட்டாப் வார்டஸ்" என்னும் பிரபுக்களுடைய (மைனர்) மக்களை ஏனைய ஜாதியாரிடமும், ஏனைய மதஸ்தரிடமும் கல்விகற்க விடுவதனலுண்டாகும் சாதக பாதகங்களைப்பற்றி பிரபல நியாயங்களோடு ஆங்கில பாஷையில் பேசியதை நாம் காதால் கேட்டும், கண்ணுல் கண்டும் களிப்புற்றோம். அந்த உபநியாசம் மதுரை மாகாண கூட்டத்தின் ரிபோர்ட்டு 96-97-98, வது பக்கங்களில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. அதைத் தமிழில் மொழிப்பெயர்த்து

நமது நாட்டிலிருக்கும் ஒவ்வொரு ஜமீன்தாரர்கையில்கொடுத்துப் படிக்கச்செய்தும், அதில் குறித்த புத்திமதிகளின்படி நடக்கவும் செய்தால்; நமது ஜமீன்தாரர்களுக்கு நல்லகால வருமென்பது திண்ணம்.

இந்த ஸ்ரீ இராமபத்திர நாயடுகாருடைய சுகுணங்களை நேரிலறிந்த சென்னை கவர்ன்மெண்டு சட்ட நிருபண சபையைச் சார்ந்த ஆனரெபில் ஸ்ரீநிவாசராயரவர்களே (அந்தரிப்போர்டு 99-100-வது பக்கங்களில் புகழ்ந்து கொண்டாடி இருக்கையில்; இனி அவரைப்பற்றி நாம் விசேஷமாக எழுதுவ தனுவசியம்.

எட்டியாபுரம் ஜமீன்தாரர்.

இப்போது மதுரையைச் சார்ந்த குண்டம நாயக்கனூரை யடுத்த வல்லநாதிடிவிசனுக்கும், திருநெல்வேலியைச்சார்ந்த எட்டியபுரத்துக்கும் தலைவராகிய ஸ்ரீஇராஜாஜகவீரராமவெங்கடேசுவர எட்டப்பநாயக்கர்பஹதூரவர்களுடையமுன்னோர்களும்,ஆதியில்விஜயநகரத்தாராலும்,பிறகுமதுரைகுமாரகிருஷ்ணப்ப நாயக்கராலும்,முத்துகிஷ்ருணப்ப நாயக்கராலும்கவுரவப்படுத்தப்பெற்றவர்கள். எப்படியெனில், இந்தகுடும்பத்தின் பத்தாவது சந்ததி யாகிய நல்லம நாய்க்கர் மஹாவீரதீரரானபடியால், விஜயநகர ஸமஸ்தானத்துக்குப் போக; அங்கு கோட்டைத்தலைவாசல் காவல்காரனாகிய சோமனை ஜயித்துகொண்டு உள்ளே பிரவேசிக்க வேண்டும்; அல்லது அந்தசோமனுடைய கால்விரலுக்கும் கேட்டுவாசலுக்கும் கட்டி இருந்த தங்கச்சங்கலிக்குள் நுழைந்துப் போகவேண்டுமாம்.இந்த நல்லம நாயக்கர் அந்த சோமன் தலையைவெட்டி ஜயித்து உள்ளே பிரவேசிக்க, விஜயநகர ஸமஸ்தானபதி கண்டு வியந்து, பொன்னால் ஒரு தலையைச் செய்து கொடுத்து,அதை யோர்பிருதாகஇடது கால்முழங்காலில் கட்டிக் கொள்ளவும், அந்த சோமனுடைய இரத்தத்துணியை கொடியாக வைத்துக் கொள்ளவும் உத்திரவுகொடுத்தார்; மேலும் அந்த சோமனுடைய எட்டு சகோதிரர்களைக்கொல்லாமல் பாதுகாத்ததற்காக எட்டப்பன்,அதாவதுஎட்டுபெயருக்குத் தந்தை என்று பொருள்படும்படியான பட்டத்தைவகிக்கவும்,இராஜ விசிரி வரிசை முதலானதுகளைக் கொடுத்து மரியாதை செய்தனுப்பினாராம். அன்று முதல் இந்த ஸமஸ்தானத்துக்கு எட்டியாபுர ஸமஸ்தானமென்று பெயர் வந்ததாம். இந்த குடும்பத்தாரில் சிலர், மதுரை பாண்டியர்களுக்கு உதவிசெய்து மாணியங்களையும்,மரியாதைகளையும் பெற்றிருப்ப தன்றியில்,1567 ஜகவீர ராம குமார எட்டப்ப நாயக்கர்,மதுரை சக்கிரவர்த்தியாகிய குமார கிருஷ்ணப்ப நாயக்கருக்கு உதவியாகி, திருவநந்தப் புரத்திற்போய் கப்பம் வாங்கி வரும் வழியில் இறந்துவிட்டபடியால்; மதுரை நாயக்கர் இந்தஜமீனுக் குருமுருமலையை இனுமாகவும், ஐயன் என்றப் பட்டத்தை தரித்துக் கொள்ளவும் உத்திரவு கொடுத்தார்.

இதே மந்திரியாகவே மதுரை முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் அவருக்குதவியாக திருவநந்தப் புரத்துக்குப் போய் சர்க்கார் பாக்கியை வசூல் செய்து பஹுமானங்களைப் பெற்றார். இந்தசமஸ்தானத்தார்செந்தமிழிலும், சங்கீதவித்தையிலும் ஏராளமான பொருளை செலவிட்ட பிரபுக்கள். இப்போது இந்த சிறுஸமஸ்தானம் 647 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயும், 415428 ஏகர் நிலத்தில், 374441 ஏகர் விளைவுள்ள நிலமுடையதாயும், 415000 ரூபாய் வருமானமும், இதில் 135000 பேஷ்கஷ் கட்டக்கூடியதாயு மிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் விளையும் 60 லக்ஷம் ரூபாய் பருத்தியில், இந்த ஸமஸ்தானத்தில் 30 லக்ஷம் ரூபாய் விளைகின்றது. தத்காலத்திய வாலிப ஜமீன்தாரர் 1899 பட்டத்தைப் பெற்று, ஸ்ரீ ராயபகதூர் ஜகநாத செட்டியாரவர்கள் சகாயத்தினால் திருப்தியாக நடத்திவருகிறார்.

இப்படி பாண்டிய நாட்டை பாதுகாக்க 72 பாளையப்பட்டுகளும், ஜமீன்களும் இருக்கினும், இவைகளில் எல்லாவற்றிலும் சிறந்து சிறிய ஸமஸ்தானங்களாகவும், நாயகோரு ஸமஸ்தானத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களால் புழும் பிருதுகளும் பெற்றவை இராமநாதபுரம், சிவகங்கை, புதுகோட்டை ஸமஸ்தானங்களாகையால், அவற்றின் சரித்திரங்களைச் சங்கிரகமாக எழுதுகிறோம்.

இராமநாத சேதுபதி ஸமஸ்தானம்.

இராமநாதபுர ஸமஸ்தானம் எப்போது எவரால் ஸ்தாபிக்கப் பட்டதோ விவரமாகத் தெரிவிக்கும் சரித்திர சாதனங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், இக்ஷ்வாகுவம்ச திலகராகிய ஸ்ரீராமர் வனவாசம் செய்தபோது, அவருடைய உத்தமபத்தினிச் சீதையை இராவணேசுவரன் எடுத்துக்கொண்டுபோய் இலங்கையில் வைத்திருக்கிற சங்கதியைக் கேட்டு, அந்த இராவணனை ஜயித்து சீதையை மீட்கவந்ததில்; இடையில் சமுத்திர மிருக்கக் கண்டு, அச்சமுத்திரத்திற்கு வாராவதியைக் கட்ட ஆரம்பித்தபோது, அவருக்கு அடுத்த விடங்களிலிருந்த வீரதீரமுள்ள ஒரு ஜாதியார் வந்து வேண்டிய உதவிகளைச் செய்ததனால்; அவர்களுடைய நன்றியை நன்குணர்ந்த ஸ்ரீராமர் அவர்களைப் புகழ்ந்து கொண்டாடி மறவோம் என்றார். என்றால், 'இலங்கைக்கு வாராவதி கட்டிய காலத்தில் நீங்கள் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டோம்' என்பது கருத்தாம். ஆகவே, இந்த ஜாதியாருக்கு அன்று முதல் 'மறவர்' என்ற பெயருண்டாகியதாம். இந்த மறவர்களில் (1) செம்பு நாட்டு மறவர், (2) கோண்டயன் கோட்டை மறவர், (3) அதிநார் நாட்டு மறவர், (4) அகத்து மறவர், (5) உரையூர் நாட்டு மறவர், (6) உப்புக்கோட்டை மறவர், (7) துரிச்சிக்காட்டை மறவர் என வகுப்பார்களுண்டு. இவர்களுடைய மதம் சைவம். (Vide P. 113. 114. M. D. Manual.)

இவர்களுக்குச் சேதுபதி என்னும் பெயர்வந்தக் காரணம்.

ஸ்ரீராமர் இராவணனை ஜயித்து மீண்டகாலத்தில்,பிரம்மஹத்தி நீங்கும்படி சேதுபந்தனத்துக் கருகே நீராடிய தீர்த்தத் துறையருகில், மூர்த்தி ஸ்தலமாக ஸ்தாபித்த இராமேசுவரம் வந்து, அங்கு ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கிய விடம் மகா விசேஷ திவ்விய தீர்த்த மூர்த்தி யாத்திரை ஸ்தலமாகையால்; அந்த ஸ்தலத்தை தரிசிக்க ஆரியவர்த்தம் ஒரெட்டிலு மிருக்கும் ஏராளமான ஜனங்கள் சதா யாத்திரைசெய்யும்போது; இடையில் பயங்கரமான காட்டு மிருகங்களினாலும், கள்ளர் முதலான கொடிய திருடர்களினாலும் கஷ்ட நிஷ்டூரங்க ளுண்டாகா வண்ணம், இந்த மறவர் ஜாதியில் சிரேஷ்டரானவருக்கு சேதுபதி அதாவது இராமேசுவர கடற்கரைக் குட்பட்ட ஜனசமுகத்தாருக்கு பதித்தலைவர் அல்லது அரசர் என்று பொருள்படும் பட்டத்துடன் ஸ்ரீராமர் நியமித்த தன்றியில்; இவர்கள் வசிக்கும் இடத்திற்கும், ஸ்ரீராமர் பெயரே வழங்கட்டு மென்று எண்ணி "ஸ்ரீராமநாதபுரம்" என்று பெயருமிட்டு இச்சமஸ்தானத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்தும், ஐயோத்தியாவுக்கேகினாராம்.

அன்று முதல், இந்த சமஸ்தானத்துக்கு இராமநாதபுர சமஸ்தானமென்றும்; இவர்களுக்கு சேதுபதி என்ற சிறந்த பட்டப் பெயரும் வழங்கிவருகின்றது. இச்சேதுபதிகளுக்கு சில காலங்களில் தேவபுரம், இராமேசுவரம், தோண்டி, இரகுநாதபுரம், விரவநல்லூர் முதலான விடங்கள் பிரதான பட்டணங்களாக இருக்கினும், இராமநாதபுரமே புராதன பிரதான பட்டணமாம்.

இவர்களுக்குச் சேதுபதி என்ற பட்ட மிருப்பதை பலபாண்டியர்களும் அங்கீகரித்துக் கொண்ட தன்றியில்; சோழன், பாண்டியநாட்டின்மேல் படை எடுத்து வந்து பிடித்துக்கொள்ளும் தருணத்தில், பாண்டியனுக்கு உதவியாக அதிவீர ரகுநாத சேதுபதி சோழனைத் துரத்தி யடித்தபடியால்; பாண்டியன் கொண்டாடி அச்சேதுபதிக்குத் தோண்டரேவுதுறையை வெகுமதியாகக் கொடுக்கப் பெற்றார்.

பிறகு கனரா நாட்டு மன்னன் பாண்டிய நாட்டின்மேல் படை எடுத்து வந்தபோது, பரபீதி சேதுபதிவந்து அக்கனரா நாட்டு மன்னனைத் துரத்தி யடித்ததினால்; அச்சேதுபதிக்கு "பாண்டியநாட்டு ஸ்தாபகர்" என்றப் பட்டப் பிருதுடன் திருச்சுழி, பழனிமடம், திருப்புவனதி நாடுகளை மானியமாகக் கொடுத்தார்.

பிறகு சோழநாட்டின்மேல் தெலுங்கு நாட்டார் படையெடுத்து வந்து தாக்கியபோது; ஸ்ரீ வரதுங்க ரகுநாத சேதுபதி அத்தெலுங்கரைத் துரத்தி யடித்ததினால், அவருக்கு "சோழநாட்டைக்காத்தார்" என்ற பட்டத்தையும் கொடுக்கப் பெற்றார். மேலும், "குலத்துங்க சேதுபதி" காலத்தில் சோழன், பாண்டிய நாட்டின் மீது வர, அவனை இச்சேதுபதி ஜயித்து பட்டுகோட்டை, அறந்தாங்கிக் கோட்டைகளைப் பெற்றார். ஸ்ரீ "சமரகோலாகல இரகுநாத

சேதுபதி" காலத்தில், சோழபாண்டிய நாடுகளின் எல்லையைப் பற்றி உண்டான வழக்கைத் தீர்க்க, இச்சேதுபதியை நியமிக்க, அவர் இருகக்ஷிக் காரர்களுக்கும் திருப்திகரமாக எல்லை வழக்கைத் தீர்த்ததில், சோழன் மெச்சி சேதுபதிக்கு மன்னார் குடாக்கடலில் முத்துசலாபம் எடுத்துக்கொள்ள சுதந்திரம் தந்ததன்றியில்; அந்தப் பாண்டியனும் மெச்சி சேதுபதிக்கு 'மஹாராஜா இராஜபரமேசுவர, மார்த்தாண்ட இராஜகம்பீரர்" என்றபிருதையும் வகிக்கும்படி கொடுத்தார்.

அநந்தரம் விஜயநகரஸமஸ்தானத்தார் தெற்கே இருக்கும் இந்துக்களை வருத்தும், மகமதியரைக் கண்டிக்க மந்திராலோசனை செய்ய ஒவ்வொரு இந்து மன்னனையும் பிரதி நிதிகளை யனுப்பும்படி உத்தரவு செய்தபோது; பாண்டியன் சேதுபதியைத் தமது பிரதிநிதியாக அனுப்ப, அச்சேதுபதி போய் அங்கு காட்டிய புத்திசாமர்த்தியங்களைக் கண்டு,விஜயநகர சமஸ்தானுதிபதி அச்சேதுபதிக்கு சோழனிடமிருந்த மன்னார்கோயில், திருவாரூர், தீவுகோட்டை முதலான விடங்களை வெகுமதியாகக் கொடுத்தார்.நிற்க அந்தச் சேதுபதிகளுடைய சரித்திரத்தைப்பற்றி,அச்சேதுபதியின் தத்கால ஸமஸ்தான வித்துவசிரோண் மணியும்,மதுரைத் தமிழ்ச்சங்கத்து செந்தமிழின் பத்திராசியரும், அந்த சமஸ்தான சரித்திரத்தை ஆதியோடந்தமாக அறிந்த ஸ்ரீமத் உபயவேதாந்த பண்டிதராகிய ஸ்ரீ, ரா, இராகவையங்காரவர்கள் 1904௵ம்சுபகிருது௵மார்கழி தைமாதங்களில் வெளியிட்ட செந்தமிழ் பத்திரிகைகளில் பிரபலமாக எழுதிப் பதிப்பித்திருக்கிறார். அச்சரித்திரங்களினுல், சேதுபதிகளுககு வில்லேருழவர், வாளுழவர், மழவர், வீரர், வெட்சி மறவர், கரந்தைமறவர், சேரன் மறவர், பாண்டியன் மறவர், சோழன் மறவர் என்முதிப் பெயர்களை பலகாலங்களிற் பலபாவணர்களால் பாடப் பெற்றதாகவும்; அவர்களில் நன்னன், ஏறை, அத்தி, கங்கன், கட்டி முதலாயோர் சேரன் மறவரென்றும்; கோட்டைப் பொருணன்,பண்ணிமுதலாயோர்பாண்டியன்மறவரென்றும்;பழயன்,பண்ணன் முதலாயோர் சோழன் மறவரென்றும்; செம்பிநாட்டிறை,இரவிகுலத்தவர், அகளங்கன் என்முதி அநேகசிறப்புப் பெயர்களைப் பெற்று கி-பி-1064௵ம் குலோத்துங்க சோழன் வீரபாண்டியனை வென்றபோது அம்மறவர் பாண்டிய நாட்டில் குடியேறி, பிறகு நாளாவட்டத்திற் கடலொரமாகப் போந்து, சேதுநாட்டை ஸ்தாபித்தாண்டார்கள் என்றும்;அகநானூறு,புறநானூறு,ஒருதுறைக்கோவை, முதலான புராதான நூல்களிலிருந்து அநேகமேற்கோள்களை யெடுத்துக் காட்டி யிருக்கிறார். அன்றியும் அநேக கையெழுத்து பிரதிகளைப் பரிசோதித்து (1)ஆதிரகுநாத சேதுபதி, (2) ஜயத்துங்க ரகுநாத சேதுபதி, (3) அதிவீர ரகுநாதர், (4) வரகுண ரகுநாதர், (5) குலோத்துங்கர், (6) சமரகோலாகலர், (7) மார்த்தண்ட பைரவர், (8) சுந்தரபாண்டியர், (9) காங்கேய ரகுநாத சேதுபதி (10) விஜயமுத்து ராமலிங்கசேதுபதிகளாக பத்து புராதான சேதுபதிகளுடைய பெயர்களையும்தெரிவித்திருப்பதன்றில்;சேதுபதிகளால்ஆதிரிக்கப்பெற்ற அடியிற்கண்டதமிழ் வித்வான்களைப்பற்றியும்; விவரமாகத்தெரிவித்திருக்கிறார்.

அத்தமிழ் வித்துவான்களாவன

அகோர தேவர், திருச்சிற்றம்பல தேசிகர், தலைமலைக் கண்ட தேவர், சிற்றம்பலக் கவியார், மங்கைப்பாகக் கவிராயர், அமிர்த கவிராயர், இராமநுஜ கவிராயர், சக்கரைப் புலவர், ஜவ்வாதுப் புலவர், சோமசுந்தர கவிராயர், மதுரகவி, பெரிய சரவணக்கவி, முத்துநாயகப் புலவர், சிறிய சரவணக் கவிராயர், கிருஷ்ணையங்கர், முத்தழகரையங்கார், முத்துசாமி ஐயங்கார், வேலாயுதக் கவிராயர், முத்துவீரப்பிள்ளை, வெண்பாபுலி முதலான மஹாவித்துவான்களாம். சேர சோழப்பாண்டியர்க்குப் பின் சேதுபதிகளே தமிழ்பாஷையை அபிமானித்து பாதுகாத்தவர்கள்.

இச்சேதுபதிகள் கல்வியில் மாத்திர மல்ல, ஸமஸ்தானத்தைச் சார்ந்த தேவாலயங்களுக்கும், தருமசத்திரங்களுக்கும் ஹ்ஸ்ம் ஒன்றுக்கு நான்கு இலக்ஷம் ரூபாய் செலவிட்டு வருவதோடு, சில்லரை தருமங்களுக்கு முப்பதனாயிரம் ரூபாயாக தரும மகிமையாகக் கொண்டு செலவிட்டு வருகிறார்கள்.

சேதுபதிகளுடைய விவரம்.

இனி இந்த இராமநாதபுரத்தை யாண்ட சில விசேஷ சேதுபதிகளின் பெயர், காலம் முதலானதுகளைப் பற்றித் தெரிவிப்போம்.

சரித்திர சாசனங்களால் நமக்குத் தெரிந்த முதல் சேதுபதியின் பெயர் "சடையக்க தேவர்" இவர்(சகாப்தம் 1411 முதல் 1422)அதாவது கி. பி. 1604 ஹ்ஸ்ம் புகளூர் கிராமத்தில் பட்டத்தைப் பெற்று, அந்த புகளூர் கோட்டையை விருத்தியாக்கியும், வடக்கு வட்டிகை, காளியார் கோயில் பட்ட, மங்கலம் முதலான கிராமங்களைச் சேர்த்து விருத்தியாக்கியும், குடிகளுக்கு அநேக நன்மைகளைச் செய்தும், 17 வருஷங்கள் வரையில் ஆண்டும், 1621-ஆம்வருஷம் பரமபதமடைந்தார்.

இவர் சரித்திரத்தைப் பற்றி 1855-ம் வருஷம் "பரோர கம்பெனியார்" (Pharoara & Co) பதிப்பித்த தக்ஷண இந்திய சரித்திரத்தில் (A Gazetter of Southern India) 393-வது பக்கத்தில் கி. பி. 1590-ஆம் வருஷம் மதுரையை யாண்டுக்கொண்டிருந்த "முத்துகிருஷ்ணப்ப நாயடு" காருடைய ஆசாரியர் இராமேசுவர யாத்திரை செய்தபோது, அவ்வாசாரியருக்குவேண்டிய உதவிகளைச் செய்ததனல், அந்த நாயடவர்கள் சந்தோஷப்பட்டு, இந்த உடையார் சடையக்க தேவருக்கு "சேதுபதி" என்ற பட்டம் கொடுத்ததாகவும், இந்த சேதுபதி கி. பி. 1623-ஆம் வருஷம் இறந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சயைடக்க தேவருடைய குமாரர் "துட்டன் சேதுபதி" 1621 வருஷம் பட்டத்துக்கு வந்து 1635-வருஷம் இறந்தார், இவருக்கு "கங்கை நாச்சியார்" என்ற சகோதரியும், சடையக்கதேவர் என்ற சகோதிரரும்இருந்தார்கள்.

இந்த சடையக்கதேவருக்கு தளவாய் சேதுபதி என்றும் பெயர். இவர் 1637-ம் வருஷம் பட்டத்துக்கு வந்து மூன்று வருஷம் ஆண்டு நான்காவது வருஷ ஆரம்பத்தில் தமது தத்து புத்திரரான "இரகுநாத தேவரை" பட்டத்திற்குப் பாத்திரராக்கப் பிரயத்தனிக்கையில்,காளியார் கோயிலிலிருந்த இவர் சகோதிரரான "தம்பித் தேவர்" அல்லது "பெட்டண்ண நாய்க்க" ரெழுந்து சேதுபதிப் பட்டம் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று சச்சரவு செய்தும்: மதுரை "திருமலே நாயடு" காருடைய உதவியை நாட; அவர் முன்னும் பின்னும் யோசியாமலும், தக்க வார்சு இன்னுரென்று தெரிந்துக்கொள்ளாமலும்; தளவாய் சேதுபதியைப் பிடித்து வரும்படி தமது தளகர்த்தர் 'இராமப்பய்யருடன்' ஒரு சிறு சேனையை யனுப்ப; அவரும் வந்து தளவாய் சேதுபதியைப் பிடித்துக்கொண்டு மதுரைக்குப்போய் சிறையிலிட்டும், 'தம்பித் தேவருக்கு' பட்டங்கட்ட, உடனே தளவாய் சேதுபதியின் சகோதிரருடைய குமாரர்களாகிய 'இரகுநாத தேவர்,' 'நாரரயண தேவர்' என்பவர்கள் எழுந்து, தம்பிதேவர் தக்க வார்சு அல்லவென்று சண்டைகளைச் செய்துவந்ததில்; சமஸ்தானத்தில் இராஜனற்றுக் குடிகள் தவித்தும், இராமேசுவர யாத்திரைக் காரர்கள் அதிக கஷ்ட நிஷ்டூரங்களுக் குட்பட்டும், திருமலே நாயடு அவர்களிடம் முறையிட; அவர் தமது குற்றத்தை யறிந்து பரிதபித்து,உடனே தளவாய்சேதுபதியை சிறையிலிருந்து விடுதலேசெய்வித்து சேதுபதி ஸ்தானத்தை வகிக்கும்படி யனுப்பினுர்.

இப்படி வந்த தளவாய் சேதுபதி நாட்டிலுண்டான கலகங்களை யடக்கியும்,யாத்திரைகாரருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தும்வருகையில்,1645-ம் வருஷம் இந்த தளவாய் சேதுபதியைத் தம்பி தேவர் கொலேசெய்து விட்டார். இதனுல் ஸமஸ்தானத்தில் அதிக கலகங்களுண்டாகிக் குடிகள் கஷ்டப்படுவதைக் கேட்ட திருமலே நாயடுகாரு, இந்த ஸமஸ்தானத்தை மூன்று வகுப்புகளாகப் பிரித்தும், இரகுநாத தேவரை இராமநாதபுர சேதுபதியாகவும், இவருடைய மாப்பிள்ளேயும் சகோதிரர்களான தானுகாந்தா அல்லது தினகர தேவரையும்,நாராயண தேவரையும் திருவதாணியில் கூடிவாழவும்,தம்பித் தேவரை சிவகங்கையிலிருந்து ஆண்டுவரவும் நியமித்தார்.

இந்த நியமனம் நெடுங்காலம் நிற்கவில்லே. இரகுநாத சேதுபதி அல்லது திருமலேச் சேதுபதி 1648-ஆம் வருஷம் முதல் 1670-ஆம் வருஷம் வரையில் ஆண்டார். தானுகாந்தர் அல்லது தினகர தேவரும், தம்பி தேவரும் 1659 ஆம் வருஷம் இறந்து விட்டபடியால்; தளவாயின் தத்து புத்திரராகிய விஜயரகுநாத சேதுபதி சிவகங்கையையும், திருவதாணேயையும் பிடித்துக்கொள்ள; மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்ட ஸமஸ்தானம் மறுபடியும் ஒரே ஸமஸ்தான மாகியது. தானுகாந்த தேவர் உயிரோடிருந்தபோது, சேதுபதியும் கலந்து தஞ்சைமேல் படையெடுத்துப்போய், மன்னர்கோயில், பட்டுக்கோட்டை, தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூரைப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு மைசூரார் மதுரையின் மீது படை எடுத்து வந்தபோதும்,இந்த சேதுபதியானவர் திருமலே நாயடவர்களுடைய சேனையை நடத்தி மைசூராரை முறியடித்து

ஒட்டியபடியால், நாயடவர்கள் இவரைக் கொண்டாடித் திருப்புவனம், திருச்சுளூர், பள்ளிமடை கிராமங்களை இனுமாகக் கொடுக்கப் பெற்றும், நாயடவர்களுக்குத் திருப்திகரமாக நடந்தும், 30-வருஷம் ஆண்டு 1670-ஆம் வருஷம் இறந்தார். இவர் காலத்தில் தான் இராமநாதபுர சமஸ்தானத்தில் "நவராத்திரி கோலு" உற்சவம் முதற் முதல் ஆரம்பித்துக் கொண்டாடப்பெற்றது.

சூரியதேவ சேதுபதி:—இவர் முன் சொன்ன சேதுபதியின் சகோதரருடைய குமாரர். இவரை மதுரை நாயடு ஸமஸ்தான தளவாய் வெங்கடகிருஷ்ணம நாயடு பிடித்து திரிசிராப்பள்ளியில் காவலில் போட்டு 1685-ல் கொல்லப்பட்டார். இச்சேதுபதிக்கும் சந்ததி இல்லாமையால், அத்தண்ணூர் சந்திரப்ப சேர்வைக்காரர் ஸமஸ்தானத்தை நடத்திவர, மறவர் ஜனங்கள் மஹாநாடு கூடி 1686-ஆம் வருஷம் இறந்துபோன சேதுபதியின் சிற்றப்பனுருடையபேரராகிய புட்டின "இரகுநாத சேதுபதி" அல்லது 'கிழவன்' சேதுபதிக்குப் பட்டங்கட்டிவைத்தார்கள்.

இந்த இரகுநாத சேதுபதி மஹாபராக்கிரம சாலியாகி (1673-1708) 37-வருஷம்ஆண்டுவந்தார்.இவர்கிறுஸ்து மதத்துவேஷியானுபடியினுல்,சுதேச கிறுஸ்தவர்களை வருத்தி வந்தார். இவர் காலத்தில் தான் (1693-பிப்ரவரி) ஜான். டி. பிரிட்டோ (Jean de Brito) என்பவர் கொல்லப்பட்டார். 1700 - 1702-ஆம் வருஷம் தஞ்சை ராஜனேடு பிரமாத சண்டை செய்ததில்; தேவகோட்டை, மன்னூர் கோயில், திருவாரூர் முதலான விடங்களை தஞ்சை மன்னர் விட்டு விடச் சம்பவித்தது. 1706-ஆம் வருஷம் தஞ்சையாரோடு பின்னுமோர் சண்டை செய்த தன்றியில்,மதுரைமீது படை எடுத்து வந்த 'ரஸ்தம்கானை' தாக்கித் துரத்தியடித்தார். புகலூரிலிருந்த ஸமஸ்தானத்தை இராமநாத புரத்துக்கு மாற்றியும், இரகுநாதருடைய தங்கைக் காட்டேரியை விவாஹம் செய்துக் கொண்டும், அந்த மனைவியின் கூடப் பிறந்த 'இரகுநாதரை' புதுக்கோட்டைக்குத் தொண்டமானுக்கியும், 1708-ஆம் வருஷம் பரமபத மடைந்தார். இவரோடு இவருடைய அநேக மனைவி யார்கள் உடன்கட்டை ஏறினுர்கள்.

இவருக்குப் பிறகு இவரது சகோதரியின் குமாரனும், தமது தத்து புத்திரருமாகிய 'விஜய ரகுநாததேவர்'அல்லது திருவுடையதேவர்(1709-1723 ஆம் வருஷம்) பட்டமடைந்தார். இக்காலத்தில் தஞ்சை மன்னர் புதுக்கோட்டைத் தொண்டமானைத் தன் வசமாக்கிக்கொண்டு சேதுபதியின் மேல் சண்டைக்கு வர, சேதுபதி சேனைக்குத் தொத்து வியாதிக்கண்டு தவித்து இறந்தார்கள். இக்காலத்தில் தான் நிலக்கோட்டைக் குடும்பத்தார் பிரபலரானுர்கள். இந்த நிலக்கோட்டைக் குடும்பத்தின் தலைவர் இராமநாதபுர சேதுபதியின் குமாரத்தி அகிலாண்டேசுவரியை விவாஹம் செய்தவர்.

தாண்டதேவர் (1723-1724ம் வருஷம்) இவர் கிழவன் சேதுபதியின் புராதன பேரர். இவருக்கு விரோதமாகக் கிழவன் சேதுபதியின் குமாரர் பவானி சங்கர தேவர் எழுந்து தஞ்சை ராஜனுடைய உதவியினுல் இராம

நாத புரததைப் பிடித்தும், தண்ட தேவரை சிறையில் போட்டுக் கொன்றும் சேதுபதிப் பட்டம் கட்டிக்கொண்டார்.

பவானி சங்கர சேதுபதி (1724-1728-ம் வருஷம்) தமக்கு கீழ்பட்ட பாளையக்காரர்களைத் தக்கபடி நடத்திவராமையால், "சரவண பெரிய உடையதேவர்" தஞ்சைக்கு ஓடிப்போய், அந்த இராஜன் முன், ஒரு பெரிய புலியோடு எதிர்த்து ஜயித்து சந்தோஷம் மூட்டியதினால், அந்த இராஜனுடைய உதவியினால் அங்கு அடைக்கலமாக இருந்த சேதுபதியின் தாய் மாமனார் குட்ட தேவருடன் சிநேகம் செய்தும், இருவரும் கூடித் தஞ்சை நாயக்கருடைய சேனாபலத்தினால் உறையூரில் சேதுபதியோடு சண்டைசெய்து ஜயித்தும், பவானி சங்கரரை சிறையில் பிடித்து வைத்து விட்டுகுட்டதேவருக்கு 1729-ம் வருஷம் பட்டம் கட்டினார்கள்.

குட்டதேவர் அல்லது குமாரமுத்து விஜய இரகுநாத சேதுபதி (1728-1734 ஆம் வருஷம்) இவர் இராமநாதபுர முழுவதையும் ஆளவில்லை. தஞ்சை மன்னர் பாமபாறுக்கு வடக்கேயுள்ள இடங்களைப் பிடித்துக்கொண்டார். மற்ற பாகங்களை ஐந்து பிரிவுகளாக வகுத்தும், அவைகளில் இரண்டுபாகங்களை இந்த முத்துக்குமாரர் வைத்துக்கொண்டு, சிவகங்கையைப் பிரதான பட்டணமாகக் கொண்டு ஆண்டார், இதற்கு வடுகை என்று பெயர். மற்ற மூன்று பாகங்களாகிய பெரிய வடுகை என்னும் இராமநாதபுரத்தை குட்டதேவர் ஆண்டுவர, இவர் குமாரர்.

முத்துகுமார விஜயரகுநாத சேதுபதி (1734-1747 ஆம் வருஷம்) பட்டமடைந்தார். இவர்காலத்தில இவர் தளவாயிக்கு அதிக அதிகாரம் கொடுத்து விட்டதில், இவருடைய பெருமைப் பிரதிஷ்டை பெறவில்லை. இவர் பாலிய வயதிலேயே சந்ததியற்று இறந்து விட்டபடியால், குட்டத் தேவருடைய சந்ததி இராக்க தேவருக்குப் பட்டம் கட்டப்பட்டது.

இராக்கதேவ சேதுபதி (1747-1748 ஆம் வருஷம்) இவர்காலத்தில் தஞ்சை மன்னர் படையை வெள்ளையன் என்னும் சேர்வைக்காரன் நடத்தி திருநெல்வேலி பாளயக்காராகளைத் தாக்கிவருவதை சேதுபதி பார்த்து; அச் சேர்வைக்காரரை வரவழைக்க, அவர் வந்து சேதுபதியையும் தாக்க, சேதுபதி பயந்து பாம்பனுக்கு ஓட, அவரைத் தொடர்ந்து போய்ப் பிடித்து சிறையில் போட்டு சேதுபதிப்பட்டத்தைக் கிழவன் குடும்பத்தைச்சார்ந்த செல்வத் தேவருக்கு கொடுக்கச் சம்பவித்தது.

இந்தச் செல்வத்தேவர் (1748-1760-ம் வருஷம்) ஆண்டார். இவர் காலத்தில் தஞ்சை மன்னன் படை எடுத்துவந்து தாக்க, 1760-ம் வருஷம் இறந்துபோக, இவர் சகோதரி குமாரர் சுமார் இரண்டுவயதுள்ள குழந்தைக்குப் பட்டம் கட்டப்பட்டது.

குழந்தையாகிய இந்த முத்து இராமலிங்க தேவர் (1760-1772-ம் வருஷம்) ஆண்டார். இவர் காலத்தில் "வெள்ளைச் சேர்வைக்காரர்" இறந்துவிட்ட

படியால், தாமோதரம் பிள்ளைக்கு தளவாய் பட்டங் கட்டப்பட்டது. பிறகு முத்து திருவாய் நாச்சியார் கொஞ்சகாலம் ஆண்டுவருகையில், 1770-ஆம் வருஷம் தஞ்சைமன்னர் ஹனுமந்தகுடியைக் காரணமாகக் கொண்டு இராமநாதபுரத்தின்மேல் படையெடுத்துவர, கர்னாடக நவாபு மகமது அலி ஆங்கிலேயரைக் கூட்டிக்கொண்டுபோய்த் தஞ்சை மன்னனைத் தாக்கிக் கப்பம் பெற்றுக் கொண்டார்.

இந்தச் சண்டையில் சேதுபதி நவாபுக்கு உதவியாக வரவில்லை என்றக் காரணத்தைக் காட்டி 1772-ம் வருஷம் தமது குமாரரிடம் ஒரு சேனையையனுப்பி, அதற்கு ஆங்கிலேயரும் உதவியாக வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள; ஆங்கிலேயரும் சோசப் ஸ்மித் (Joshep Smith) என்னும் தளகர்த்தரை யனுப்பித் தாக்கச் செய்தும், வாலிப சேதுபதியின் தாயார் முத்து திருவாய் நாச்சியரையும், தங்கை மங்கலேசுவரி நாச்சியாரையும் பிடித்துத் திரிசிரபுரத்தில் சிறையில் வைத்தார்கள். 1773 முதல் 1780-வருஷம் வரையில் (எட்டுவருஷகாலம்) இராமநாதபுரம் மகமதியர்வசத்திலிருக்க, இடைக்கிடை சண்டை சச்சரவுகளுண்டாகி சிறையிலிருந்த சேதுபதிகளை விடுதலை செய்வித்தும்,வருஷம்ஒன்றுககு17,500ரூபாய் கப்பம்கட்டிவிட்டுஅச்சேதுபதிகளே ஸமஸ்தானத்தையாண்டுவரும்படி செய்ததில், அவர் 14 வருஷங்களாண்டுவர, மறுபடியும் அவர்கள்மேல் அதிருப்தி உண்டாகி, 1794-ம் வருஷம் திரிசிராபள்ளியில் சிறையில் வைத்தார்கள்.

1802-ஆம் வருஷம் கர்னாடகதேசம் ஆங்கிலேயர் வசமாகியபடியால், அவர்கள் சேதுபதியை அழைத்துப்போய் சென்னையில் சிறையில் வைத்திருந்து 1803-ம் வருஷம் சேதுபதியின் சகோதிரி மங்கலேசுவரிக்கு ஸமஸ்தானத்தைக் கொடுத்தார்கள்.

பட்டம் பெற்ற **மங்கலேசுவரி நாச்சியார்** (1803-1812-ம் வருஷம்) ஆண்டகாலத்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் நிரந்தர செட்டில்மெண்டாக ரூபா 3,24,387-1-2 நியமித்து, மிஸ்டர் சலிவனை பேஷ்கஷ கலெக்டராக நியமித்தார்கள். பாரோர கம்பெனியார் பதிப்பித்த சரித்திரத்தில் பேஷ்கஷ் தொகை ரூபா 3,31,565-8-0 என்று கண்டிருக்கிறது. இந்தம்மை 10 வருஷம் ஆண்டு அநேக தருமங்களைச் செய்தனர்.

இவருக்குப் பிறகு இவரது தத்து புத்திரராகிய "அண்ணுச்சாமி" சேதுபதி (1812-1815-ம் வருஷம்) பட்டத்துக்கு வந்தார். இவர் மைனரானபடியால், ஸமஸ்தான காரியங்களை தியாகராய பிள்ளை என்னும் பிரதானியார் நடத்திவருகையில், இராமலிங்க சேதுபதியின் குமாரி ராணி சிவகாமி நாச்சியார், தாம்தான் பட்டத்துக்குத் தக்கவார்சு என்று சொல்ல, அது சிவில் கோர்ட்டில் விசாரிக்கபட்டும். 1813-ம் வருஷம் புரோவின்ஷியல் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டும், இராணியாருக்கு அனுகூலமாகத்தீர்ப்பு கிடைக்க; அத்தீர்ப்பை 1816-ம் வருஷம் சதர் அதால்த் கோர்ட்டார் மாற்றிவிட, 1825-ம் வருஷம் பிரிட்டிஷ்

பிரபுக்கள் சபைக்கு அப்பீல் செய்ய, அந்தச்சபையார் சதர் அதால்த்கோர்ட்டார் செய்ததே சரியென்று ஸ்தாபித்து விட்டார்கள்.

சிவகாமி நாச்சியார் (1815-1822-ம் வருஷம்) ஆண்டு வந்தாலும், சர்க்கார் கிஸ்தியைக்கிரமமாக செலுத்தாமையால், சமஸ்தானத்தை சதர் அதாலத் கோர்ட்டு விசாரணையில 14 வருஷங்கள் வைக்கப்பட்டிருந்தது. கடைசியில் அண்ணுச்சாமி தேவருடைய வியாச்சியம் அப்பீலில் அனுகூலமாக முடிவுபெற்றாலும், அந்தமுடிவு தெரிவதற்குள் அவர் இறந்து விட்டபடியால், வழக்கை அவர் மனைவியார் இராணிமுத்துவீராயி நாச்சியார் கிரமமாக நடப்பித்தார். இந்த அண்ணுச்சாமி தேவருக்குப் பிறகு, இவரது மைத்துனரும் தத்து புத்திரருமாகிய இராமசாமி தேவர் 1829 பட்டத்துக்கு வந்து, ஒரு வருஷத்துக்குள் 1830ம் வருஷம் இறந்து விட்டபடியால், இவர் குமார்த்தி களில் இராணி மங்கலேசுவரி நாச்சியார் பட்டத்துக்கு வந்தார்கள்.

இந்த மங்கலேசுவரி நாச்சியார் (1830-1838-ம் வருஷம்) வாலிபராக இருந்தபடியால், இவர் பாட்டியார் முத்துச் செல்வி தேவியாரும், முத்து வீராயி நாச்சியாரும் ஸமஸ்தானத்தை யாண்டு வந்தார்கள். மங்கலேசுவரி நாச்சியாரும் 1448-ம் வருஷம் இறந்துபோய் விட்டபடியால், இராணி "துரைராஜ நாச்சியார்" (1838-1845-ம் வருஷம்) ஸமஸ்தானத்துக்கு வந்வார். இவர் மங்கலேசுவரி நாச்சியாரின் தங்கை. இவர் முத்துச்சலாப காரியங்களைப் பார்த்துவந்ததில், கம்பெனியாருக்குத் திருப்தியைக் கொடாமையால், ஸமஸ்தானம் கோர்ட் ஆப் வார்ட்ஸில் வைக்கப்பட்டது.

இந்த துரைராஜ நாச்சியார் இறந்தபிறகு, இராமசாமி சேதுபதியின் மனைவி 'ஸ்ரீ பர்வத வர்த்தனி நாச்சியார்' பட்டத்துக்கு வந்து (1845-1868-ம் வருஷம்) ஆண்டார். இவர் ஸ்ரீமுத்துராமலிங்கச்சேதுபதியை ஸ்வீகாரம் செய்துகொள்ள அந்த பட்டத்தைப் பெற்றார். இவர் வித்வசிகாமணியாக இருந்ததோடு, வீக்கிரகாராதனை முதலான வீண்சடங்குகளை விட்டு பிரம்மதியான பாராயணராகி பிரம்மஸமாஜமத சித்தாந்தராய் இருந்தும் தேசோபகாரமான அநேக தருமங்களைச்செய்தும், பிரபாகரமாலை, வள்ளிமணிமாலை, முருகரநுபூதி, மும்மொழிமாலை, பாலபோதகம், காயகாப்பிரியா, ரஸிகரஞ்சனம், பிரம்மகைவலியம் முதலான கிரந்தங்களை இயற்றி பிரகாசித்ததாக 1874-ளும் மேஸ்டர் கோல்ட்டன் அவர்கள் பதிப்பித்த மதுரைச் சீமை விருத்தாந்தப்புத்தகம் 63-வது பக்கத்திற் சொல்லப் பெற்றிருக்கிறது. இந்த சேதுபதி 1873-ளும் மாசி மீ தோஷசுரத்தால் இறந்தார். இக்காலத்தில் ஸமஸ்தான வியாஜ்ஜியத்தினுல் அதிக பணம் செலவாகி சர்க்கார் கப்பம் கட்டக் கூட வகையற்றுப் போய்விட்ட படியால்,ஸமஸ்தானத்தைமஹாமதிநூகியும்,வித்வசிகாமணிளின் போஷகரும்,மேல் சொன்ன முத்து இராமலிங்க சேதுபதியவர்களுக்கு சகோதிரருமாகிய ஸ்ரீ 'பொன்னுச்சாமி தேவர்' நடாத்தி வந்தார்.

ஸ்ரீ பொன்னுச்சாமி தேவரவர்கள்—இவர் புதுக்கோட்டைச் சிவஞான

தேவருடைய புத்திரர். மஹாவித்வ சிகாமணியாகவும், பக்திமானாகவும் பிரபலமடைந்தவர். இராமநாதபுரம் சீர் கெட்டலைந்த காலத்தில், அதைத் தக்க படி சீர்திருத்திநல்ல நிலைக்குக் கொண்டுவந்தார். இவரை தக்ஷிணநாட்டின் "போஜராஜன்" என்று புகழலாம். இவர் ஆறுமுக நாவலரைக்கொண்டு திருக்குறளையும்; திருக்கோவையாருரை, திருவள்ளுவருரை, நன்னூல் விருத்தியுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியப்பாயிர விருத்தி, சூத்திர விருத்தி, தமிழ்ப் பிரயோக விவேகவுரை, தருக்கச் சங்கிரகவுரை, தனிபாடற்றிரட்டு மருத்துநூல் முதலானதுகளை தக்க வித்துவான்களால் எழுதிவைத்துப் பதிப்பித்தனர். திருச்சி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையென்ன? மாம்பழக்கவிச் சிங்கமென்ன? தியாகராய செட்டியாரென்ன? இன்னுமனேக பிரபலத் தமிழ்க் கவிகளும், வித்வான்களும் இவரிடம் பொன்னையும் புகழையும் பெற்றவர். இவர் இராஜ துரந்தரராய் தருமசாஸ்திர சட்டதிட்டங்களை முற்றும் கற்றுத்தெளிந்தவராகையால், இப்போது இந்நாட்டிற்சிறந்த கனம் நார்ட்டன் நியாயவாதியின் தந்தை மிஸ்டர் ஜே-பி நார்ட்டன், ஜே-டி. மெயின் முதலான ஆங்கிலநியாயவாதிகளும், இப்போது சென்னையிற் சிறந்து விளங்கும் ஐகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் V. C. தேசிகாசாரியார் தந்தையும், பிரதிவாதி பயங்கரருமாகிய மிஸ்டர் இராஜகோபாலாசாரியார் முதலான வக்கீல்களும் வியந்து கொண்டாடி வந்தார்கள். இத்தேவர் சிவபக்தியில் சிறந்தவரேயாயினும், சமரச ஞானியாகையால், சென்னையில் ஸ்தாபித்த பிரம்ம ஸமாஜத்தாருடைய தத்துவபோதினியைப் பதிப்பித்துப் பிரபலமாக்க அச்சுயந்திரத்திற்கு 1000 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்து உதவினார். இப்படியநேக ஸத் கருமங்களைச் செய்து சிறந்து இறந்தார். இந்தப் பொன்னுச்சாமி தேவரவர்களிடம் சேதுபதிகளுடைய சரியான சரித்திர மிருக்கிறதாக மதுரை ஜில்லா சரித்திரம் எழுதிய மிஸ்டர் நெல்சன் முதலானவர்கள் தெரிவித்திருக்கிறபடியால்; அதை அச்சிட்டால் திருப்திகரமான சரித்திரமாகும்.

இந்த ஸ்ரீபொன்னுச்சாமி தேவர்களுடையபுத்திரர்களில் ஒருவராகிய பாலவனத்தம் ஜமீன்தாரராகிய **ஸ்ரீபாண்டித் துரை** தேவரவர்கள் தமது தந்தையைப் போலவே தேசாபிமானம், மதாபிமானம் முதலான குணங்களிற் சிறந்து பிரகாசிக்கிறார்.

மதுரையில் மூன்று வருஷங்களுக்கு முன் கூடிய மஹாஜனசபைக்குத் தலைவராக நின்று வேண்டிய உதவிகளைச் செய்து கீர்த்தி வகித்ததன்றியில் தமிழ்பாஷையிற் சிறந்த வித்வ சிகாமணியாகையால், பன்னூற்றிரட்டு முதலான பல கிரந்தங்களை இயற்றியதோடு, மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தையும் ஸ்தாபித்து அதற்குஅநேக வித்வான்களையும், வித்தியார்த்திகளையும் சேர்த்து ஆதரித்தும்; மறைந்து கிடக்கும் புராதன தமிழ் கிரந்தங்களையும், ஆங்கிலம் முதலான ஏனைய பாஷைகளிலுள்ள சிறந்தநூல்களையும் மொழிபெயர்ப்பித்தும், "செந்தமிழ்" என்னும் பெயரால் ஒரு பத்திரிகையையும் பதிப்பிக்க அச்சு இயந்திரத்தைஸ்தாபித்திருக்கின்றனர். இப்படிப்பட்டஜனோபகாரியும், தேசோப

காரியுமாகிய இவருக்கு நமது ஆங்கில கவரன் மெண்டார் மஹா உபாத்தியா யர் அல்லது தமிழ் இராஜா என்றுதி பிருது பட்டங்களை இன்னும் கொடா திருப்பது ஆச்சரியம்.

முத்து இராமலிங்க சேதுபதி பட்டத்துக்கு வந்து (1868:1873 வருஷம்) ஆண்டாலும், ஸமஸ்தானக்கடன் அதிகமாகிவிட்டபடியால், இங்கிலீஷ் கவரன் மெண்டார்ஒரு ஸ்பெஷல் அஸிஸ்டாண்டு கலெக்டரை நியமித்தார்கள். 1873-ம் வருஷம் இந்த முத்துராமலிங்க சேதுபதியாருக்கு7 மனைவிமார்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களே, ஸ்ரீ பாஷ்கரசேதுபதி, ஸ்ரீதினகரசாமி சேதுபதி என்ற வாலிபர்களாம்.

ஸ்ரீஹிரணியகர்ப்ப இரகுநாத பாஷ்கரசேதுபதி(1873-ம் வருஷம்) மைனராக இருந்தபடியால், முதலில் மேஸ்டர்வர்ணர் (Mr Vernor) என்னும் துரையவர்களின் பார்வையில், கோர்ட்டாப் வார்ட்ஸில் வைக்கப்பட்டுப் பிறகு சென்னை மில்லர் கலாசாலையில் கல்வி கற்பிக்கப்பட்டார். இவர் ஆங்கிலம், தமிழ் முதலான பாஷைகளிற் சிறந்த நிபுணர். பிரசங்க சக்தியிலும், பக்தி சிரத்தையிலும், தானதருமங்களிலும் இவருக்கு நிகரானவரைக் காண்ப தபூர்வம். சிறந்த தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமுள்ளவர். தமிழ் முதலான வித்துவான்களுக்கு அளவில்லாத பொருளை வாரி வாரிக் கொடுத்த வள்ளல். சென்னை இந்து பத்திரிகை, சிதம்பரம் பிரம்ம வித்தியா, நாகை நீலோசனி, திருச்செங்கோடு திவாகரன், மதுரைமெயில்முதலான பத்திரைகைகளுக்கும்தேசோபகார சபைகளுக்கும் ஆயிரம் பத் தாயிரம் ரூபாய்களை கணக் கின்றிக்கொடுத்துதவிய கலியுக கருணர். இவருடைய உதவியினால் உயிர்பெற்ற உத்கிருஷ்ட புத்தகங்களாநந்தம். மதுரையில் சேதுபதி பாடசாலை, மூத்தமிழ்ச் சங்கம், வித்தியார்விர்த்திகளுக்கு உணவு முதலானதுகளைக்கொடுத்தாதரித்த உத்தமர். இவர் இராமேச்சுர ஸ்தலமானேஜராக இருந்து செய்த திருப்பணிகளனந்தம். இந்த ஸ்ரீபாஸ்கர சேதுபதி யவர்கள் 1903 வருஷம் சிவபதமடைந்து விட்டார்.

இந்த ஸமஸ்தானத்துக்கு 1855-ம் வருஷத்தில் இராமநாதபுரம், கிளக்காடு சிக்கல், மூத்துகுளத்தூர், பாப்பன்குளம், கமுதி, அபிராமம், வேதோணி, காமன்கோட்டை, சாளக்கிராமம், இராஜசிங்கமங்கலம், அறு நூற்றுமங்கலம், குத்தகைநாடு, ஒரூர், கோட்டைபட்டிணம், பள்ளிமடம், திருக்குழி என்ற ஏழுதாலுக்காக்களும்; இவைகளில் 2162, பெரிய மஜிரா கிராமங்களும், 574 குக்கிராமங்களு மிருந்தன. இவைகளின் சுற்றளவு 1900 சதுரமைல். இதில் பாதிபாகம் பயிர்செய்ய தண்ணீருள்ள வளமானதும், மற்றபாகம் மணல். தரிசு (Vide Pages 392-Gazetteer of South India)1894-ம் வருஷம் டாக்டர் பர்டக் அவர்கள் பதிப்பித்த இந்திய சுதேச ஸமஸ்தான சரித்திரபுத்தகம் 83-வது பக்கத்தில், இச்சமஸ்தானத்தின் சுற்றளவு 2351 சதுரமைலென்றும்; இதில்(1881-ம் வருஷம்) 3,44,000 இந்துக்களும், 60,000 மகமதியரும், 28,000 கிறிஸ்தவர்களுமாக 472,268 குடிகள் இருந்த தாகவும், 1874 வருஷம் 94733 பூவராகன் பேஷ்கஸ் ஸாகவும், 741,744 ரூபாய் வருமானமென்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த சமஸ்தானத்தார் 1780 வருஷம் ஐதராலி நபாபுக்கு வருஷம் 175000 ரூபாய் செலுத்தி வந்ததாகவும்; பிறகு மங்களேசுவரிநாச்சியார் காலத்தில் 90000 வராகனுக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும்; பிறகு 1801 வருஷம் ஈஸ்டிந்தியா கம்பெனியாருக்கு மூன்று இலக்ஷத்து சில்வானத் தொகைக் கட்டும்படி நியமித்ததாகவும் மதுரைச் சீமைவிருத்தாந்த புத்தகம் 62 பக்கத்தில் அறிவிக்கப் பெற்றிருக்கிறது.

இப்போது இராமநாதபுரத்திலிருக்கும் கோட்டை மதில்கள் நான்குபக்கங்களிலும் அரைமைல் நீளமுள்ளவைகளாகவும், 32 கொத்தளங்கள் உள்ளவைகளாகவும், கிழக்குப்பார்த்த வாசலுடையதாகவும் இருக்கிறதன்றியில்; இதன் சுவர்கள் 27 அடி உயரமும்; 5 அடி அகலம் கனதியும் சுற்றிலும் அகழ்கள் உள்ளதாயும் இருக்கிறது. இந்தக் கோட்டையை 17-ம் நூற்றாண்டில் மோகவ இரகுநாத சேதுபதியவர்கள் கட்டிவைத்தார். கோட்டைவாசல்படியிலிருந்து சுமார் 200 அடி தூரத்திற்குள் சேதுபதியவர்களுடைய அழகிய அரண்மனை இருக்கிறது. கோட்டைக்கு வடமேற்குப் பாகத்தில் அழகிய பெரிய தடாகம் ஒன்று நியமிக்கப பட்டிருக்கிறது. இதற்கு வடகிழக்குப் பாகத்தில் புரோட்ஸ்டாண்டு கிறிஸ்து கோயிலும், மேற்கு கரையில் மாயானமும், கிழக்கு பாகத்தில் (Col. Martines) கர்னல் மார்ட்டினது பங்களாவும் இருக்கின்றன. இராமநாதபுரத்தில் 1881-ம் வருஷத்தில் கானிஷ்மாரி கணக்கின்படி 11,000 குடிகளிருந்தார்கள். நகரத்துக்கு வெளியில் ஏராளமான லப்பைகளும் செட்டிமார்களும குடி இருக்கின்றனர். நல்லசாயப்புடவைகள் வியாபாரம் அதிகம். இந்த ஸமஸ்தானத் தேவகோட்டை, தேவிபட்டணம், பாலவனத்தம், ஓரியூர், திருவாடனை, தொண்டி, நம்பிதாளை முதலான 42 ஊர்களுள்ளது. 1729-ஆம் வருஷம் இச்சமஸ்தானத்தின் ஐந்தில் இரண்டு பாகமாகிய சிவகங்கையை உடையதேவருக்குக் கொடுத்துவிட்டபடியால், அதன் சரித்திரத்தைச் சங்கிரகமாகக் காட்டுகிறோம்.

சிவகங்கை ஸமஸ்தானம்:—இந்தச் சிவகங்கை ஸமஸ்தானம் இராமநாதபுரத்தைக் சார்ந்ததென்று முன்னமே தெரிவித்திருக்கிறோம்- அதாவது இரகுநாத தேவர் அல்லது கிழவன் சேதுபதிகாலத்திலுண்டான கலகத்தினால், சுமார் 3000 சேனாவீரர்களைப் போஷிக்கத்தக்க இராஜ்யம் பெரிய உடையதேவருக்குக் கொடுக்கப்பட்டது.

இரகுநாத சேதுபதி (1723-ம் வருஷம்) இறந்துபோவதற்கு முந்தி, தமது சகோதரியின் குமாரரான விஜயரகுநாத தேவரை இராமநாதபுரத்தில் சிங்காசன மேற்றினர். இதைக்கண்டு சகியாத நிலக்கோட்டை உடைய தேவர் தமது குமாரராகிய "சேஷவருண தேவருக்கு" இராஜருடைய குமாரத்தி "அகிலாண்டேசுவரி" நாச்சியாரை விவாகம் செய்வித்ததில், 10,000 வீரர்களை வைத்துப் போஷிக்கும்படியான நிலத்தை ஸ்ரீதனமாககொடுக்கப் பெற்றார்.

விஜயரகுநாத சேதுபதி சிலகாலம் ஆண்டு சரியான சந்ததியற்று இறந்துவிட்டபடியால், இச்சமஸ்தானத்துக்கு இரகுநாதசேதுபதியின் வைப்பு புத்திரராகிய பவானிசங்கரதேவரும், விஜயரகுநாத தேவருடைய மருமகனாகிய குட்

டத்தேவரும் சண்டை சச்சரவுகள் செய்ய, இவ்விருவர்களில் பவானிசங்கரர் தஞ்சை ராஜருடைய உதவியினால் இராமநாத ஸமஸ்தானத்தைப்பெற, குட்டத்தேவர் கஷ்டப்பட்டு வருந்தச்சம்பவித்தது. இப்படிப்பட்ட காலத்தில் சேஷவருணதேவர் தஞ்சையில் நடந்த ஒரு விசேஷ உற்சவகாலத்தில் போய் ஒரு வேங்கைப்புலியை எதிர்த்துச் சண்டைசெய்து அப்புலியைக் கொன்றதினால்; தஞ்சை மன்னர் மகிழ்ந்து அந்த சேஷவருண தேவரும் குட்டத்தேவரும் இராமநாதபுர ஸமஸ்தானத்தை மறுபடியும் பெரும்படியான சேனையை உதவி செய்ய, அவர்கள் அச்சேனையைக்கூட்டிக்கொண்டு வந்து பவானி சங்கரரைப் பட்டத்திலிருந்துநீக்கி, குட்டத்தேவருக்குப் பட்டம் கட்டிவைத்தார்கள்.

இந்தக் குட்டதேவரும் தஞ்சை மன்னர் செய்த உதவிக்காக இராமநாதபுரத்தைச்சார்ந்த17 தாலுக்காகளில் பட்டுக்கோட்டை முதல் கொட்டகுருகர் வரையிலுள்ள நான்கு தாலுக்காக்களையும் கொடுத்துவிட்டார். இதனால் குட்டத்தேவர் இராமநாதபுர ஸமஸ்தானத்தை ஐந்து பிரிவுகளாக வகுத்து சேஷவருணதேவர் செய்த உதவிக்காக ஐந்தில் இரண்டுபாகத்தைத் தந்தார். அன்றுமுதல் இந்த ராமநாத புரத்தை ஆள்பவரை பெரியமறவர் சமஸ்தானம் என்றும், சிவகங்கையை ஆள்பவர் சிறியமறவர் ஸமஸ்தானம் என்றும், நிலக்கோட்டை பாளையக்காரர் என்றும் பெயருண்டாயிற்று. இந்த சேஷவருணதேவருக்குப் பிறகு வடுகாநந்த தேவர் பட்டத்துக்குவர, 1772-வருஷம் மகமது ஆலியாகிய நபாப், இந்த ராமநாதபுரம், சிவகஙகை ஸமஸ்தானங்கள் தமது கர்னாடக தேசத்துக்குள் சேர்ந்தவை என்றும்; இவர்கள், அந்த மகமது அலி தஞ்சை மன்னனோடு சண்டைசெய்தபோது உதவி செய்ய வரவில்லையென்றும் குற்றப்படுத்தி; நபாபின் குமாரராகிய உமதுட் உல் உமரா வுடன் ஒருசேனையை அனுப்பியும் அவருககு உதவியாக ஆங்கிலேயரும் தக்க தண்டுதளாதிகளுடன் போய் இராமநாத சிவகங்கை ஸமஸ்தானங்களைத் தாக்கவேண்டுமென்றுந் தூண்ட; ஆங்கிலேயரும் கர்னல் ஜோஸப் ஸ்மித் (Col. Joseph Smith) என்னுந் தளகர்த்தருடன் திரிச்சியிலிருந்து சேனையையனுப்ப அச்சேனையும் வந்து இராமநாதபுரத்தைத் தாக்கி வாலிப பாளையக்காரரைக் கொன்றுவிட்டு, சிவகங்கைக்கு போக, வடுகநாதத் தேவர் பெரியமருது சின்னமருது என்னும் இரண்டு அகம்படியச் சேர்வைக்காரர்களை துணைக்காகக் கேட்டு அடைய, அவர்கள் அவரை காளியார்கோயிலுக் கருகிலிருக்கும் காடுகளிலிருக்கச்செய்தார்கள். அப்படிக்கிருந்தும், எதிரிச்சேனைகள் நாலுபக்கங்களிலும் சுற்றிக்கொண்டும், சுட்டுக்கொண்டும் வருகையில், 1712-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி பாளையக்காரர் கொல்லப்பட்டார். அப்போது பூர்ண கர்ப்பவதியாக இருந்த இராஜமஹிஷி சேர்வைக்காரரான மருதப்பருடைய உதவியினால் திண்டுக்கல்லுக்குப் போய் அங்கு ஐதரலியால் பாதுகாக்கப்பட்டார்.

கர்ப்பவதியாக விருந்த இராஜமஹிஷி பெண் குழந்தையைப் பெற, அக்குழந்தை சிறுவயதாக இருக்கும்போதேவேங்கமபெரியஉடையதேவருக்குவிவாகம் செய்து கொடுக்கப்பட்டார்.

1781-ம் வருஷம் ஐதராலி கர்னுடகதேசத்தின் மீது படையெடுத்துவந்த போது சின்னமருது, திண்டுக்கல் கில்லாதாரரிடம் கொஞ்சம் சேனையை சம்பாதித்துக்கொண்டு அச்சேனையின் உதவியினுல் இராணியாரை சிவகெங்கைக்கு அழைத்துவர, இராணியாரைக் குடிகள் நல்வரவுடன் அங்கீகரிக்க, நவாபும் அந்தம்மைக்கு ஸமஸ்தானத்தைத் தந்தார். இப்படி வருவதற்குள் சிவகங்கை ஸமஸ்தானத்தை நவாபவர்கள் குத்தகைக்கொடுத்து விட்டிருந்தார். இப்படிப் பட்ட காலத்தில் பழய பாளையக்காரருடைய தமயன் குமாரராகிய உய்யதேவர் தமது குமாரராகிய கவுரிவல்லப உடைய தேவரைபழயபாளையக்காரர் ஸ்வீகாரம் செய்துக்கொண்டதாகவும்; ஆகவே, அவருக்குத்தான் பட்டம் கட்டிவைக்க வேண்டுமென்றும் சச்சரவுகள் செய்தும், காரியசித்தி பெறவில்லை. பெருமல் போகவே,சின்னமருதுக்கு பிரதானி அல்லது பிரதம மந்திரியார்பட்டம் கொடுக்கப்பெற்ருர், வெங்கம்பெரிய உடையதேவர் கிபத்துக்கு அரசனுக நியமிக்கப்பட்டார்.

இந்த வெங்கம் பெரிய உடையதேவர், தமது மனைவியின், வயிற்றில் ஜனித்த பெண்குழந்தையும் இறந்தபிறகு,மருது குடும்பத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து மறுபடியும் விவாஹம் செய்துக்கொண்டார்.

1783-ம் வருஷம் விடப்பட்ட நாடுகளின் அதிகாரியாகிய(Mr. Sullivan) மிஸ்டர் சலிவன் காலத்தில், கப்பம் தொகை சரியாக வசூலாகாமையினுல், இங்கிலீஷ்காரர் கர்னல் புல்லர்ட்டன் (Col. Fullerton) என்பவருடன் ஒரு தண்டை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி யனுப்ப, இரண்டுமருதுகளும் சுமார் 10,000 சேனையோடுகாளியார் கோயிலுக்குப் போய்விட்டார்கள். ஆயினும் கர்னல் புல்லர்டனவர்கள் யாதொரு சண்டை சச்சரவுகளின்றி கவர்மெண்டு கப்பத்துக்கு வேண்டிய ஜாமீனை நியமித்துக்கொண்டார். பிறகு 1799-ஆம் வருஷம் பாஞ்சல குறிச்சியை முற்றுகைப்போட்டு கர்னல் அக்னியு (Col. Agnew) கோட்டையைத் தாக்க, கட்டபொம்மன் கொல்லப்பட்டதை, அறிந்து ஊமைத்துரை தன் தம்பியோடு சிவகங்கைக்குப்போய் மருதுகளுடன் சேர, அம்மருதுகள் பாஞ்சால குறிச்சி ஊமைத்துரையை அரண்மனைக்குள் சேர்த்துக்கொண்டு 20,000 சேனுவீரருடன் ஆங்கிலேயரை பகிரங்கமாக எதிர்த்தார்கள். அக்காலத்தில் இவர்கள் தொண்டமானை தமக்கு உதவி செய்ய அழைத்தும், அவர் வராமையால், மருதுகள் மறுபடியும் காளியார் கோயிலுக்குப் போய் சுமார் ஐந்துமாத காலம் வரையில் கர்னல் அக்கினியு தளகர்த்தருக்கு அகப்படாமல் வருத்தி வந்தாலும்; கடைசியாக பயங்கர சண்டைசெய்து கோட்டையைப் பிடித்தும், மருதுகளைப் பிடித்து தூக்கில் போட்டு கொன்ருர்கள்.

பிறகு ஊமைத்துரை திண்டுக்கல் மார்க்கமாக விருபாக்ஷிக்கு ஓடினபோது அங்கு பிடித்துதூக்கில்போட்டு கொல்லப்பட்டார்.இந்த பாஞ்சாலகுறிச்சி ஊமைத்துரையின் சண்டை சங்கதியைப் பற்றி சிலர் பாடி பிழைப்பது இத்தென்னுட்

டில் அநேகஆண் பெண்களுக்குத் தெரிந்த விஷயமாதலால் அதைஇங்கு விவரிப்பது அனுவசியம். இந்தச் சண்டைகாலத்தில் தான் இச்சரித்திரமெழுதுவோருடைய பாட்டனார் பகடால நரசப்ப நாயடு ஆங்கிலேய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு துபாஷியாகப் போய்வந்தாராம்.

1801-ம் வருஷம் பாளையக்காரர் பெஷ்வா கலெக்டராகிய மிஸ்டர் லஷிங்குடன் (Mr. Lushington) கர்னல் அக்கினியு வீருடன் கலந்து யோசித்து, கவுரிவல்லப பெரிய உடையதேவரை சிவகங்கைக்கு தலைவராக நியமிக்க வேண்டுமென்று கவரன்மெண்டுக்கு சிபார்சு செய்ய; ஒரு சுஜிபார் எழுந்து வெங்கம் உடையதேவரை நியமிக்கவேண்டுமென்று சொல்ல, கவர்ன்மென்டார் அங்கீகரிக்கவில்லை. பிறகு இந்த சமஸ்தானத்துக்குச் சரியான வார்சுதாரர் புது மத்தூர் முத்துவிஜய இரகுநாதகவுரி வல்லப உய்யதேவர் என்று கண்டு 1891-ம் வருஷம் ஜுலை மாதம் 6-ந் தேதி கவர்ன்மெண்டார் நியமித்தார்கள். இடையில் உய்யதேவர் முதலானவர்கள் பாத்தியதையைப் பாராட்டி வந்தாலும், முன் சொன்ன கவுரிவல்லபருக்கே சன்னது கொடுக்கப்பட்டது.

இந்த கவுரிவல்லபர் 1829-ம் வருஷம் ஜுன் மாதம் சந்ததியற்று இறந்துவிட்டபடியால், அவர் நமையனூர் உய்யதேவருடைய குமாரருக்கு ஜமீன் கொடுக்கப்பட்டது. இந்த நியமனத்தையும் இரகுநாத ஜமீன்தாரருடைய மனைவி அங்கமுத்துநாச்சியார்தடுத்தும்,தாம் தான் தக்கவார்சு என்று வழக்கிட்டு வந்தாலும்; ஸ்வீகார புத்திரராகிய முத்துவடுக நாததேவருக்கு1829-ம் வருஷம் சீமைத்திரும்பியது. 21 வருஷகாலமாக விபாஜியம் செய்த அங்கமுத்து நாச்சியாருக்கு இராஜியம் கிட்டாமையால், பிறகு போதகுருசாமி பட்டத்தைப் பெற்று 10-வருஷம் ஆண்டதன்மேல், அவர் தம்பி முத்துவிஜய இரகுநாத கவுரிவல்லப பெரிய உடையார்தேவர் 1841 வருஷம் பட்டத்துக்கு வந்து, 8-வருஷம் ஆண்ட பிறகு; அவர் குமாரர் போதகுருசாமிக்குப் போதுமான வயது வருகிறவரைக்கும் பேஸ்டர் பிளேச்சர்துரையவர்களை உபாத்தியாயராக்க நியமித்தும்; ஜமீனை, கவர்ன்மெண்டு விசாரணையில் வைத்தும், 1859௵ ஜப்பிசிமீ அவருக்கு பட்டம் கட்டியபோது காத்தமநாச்சியாருடைய வழக்கு ஜயமானபடியால், அவரிடம் மேஸ்டர் (Mr. Fisher) பீஷர் துரையவர்கள் ஜமீனை குத்தகைக்குக்கொண்டு பார்த்துவர; பிறகு ம-ா-ா-ஸ்ரீ வெங்கடசாமி நாயடு காருடையவும், பிறகு மேஸ்டர் ராபர்டு பீஷர் துரை அவர்களுடையவும் பிறகு ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி செட்டிகாருடையவும் மானேஜுமெண்டிலிருந்து இப்போதும் மெஸர்ஸ் ஆர் அண்டு சன்சுகம்பெனியாருடைய அடமானத்திலும் மானேஜ்மெண்டிலுமிருக்கிறது.

1855-வருஷம் சிவகங்கை ஸமஸ்தானம் 1460 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாகவும், இதில் 2,070 கிராமங்களும், 1,265-குக்கிராமங்களும், இவைகளிருந்து 3,62,000 ரூபாய் வருமானமாகவும் தென்னிந்தியா கெஜட்டியர் சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

1874ஹு கணக்கின்படி இந்த சிவகங்கை 1557 சதுரமைல் விஸ்தீரண மும், 4,34,196 குடிகளும், 75000 பூவராகன் பேஷ்கஷ் உடையதாயும்; கஸ்பா சிவகங்கை, திருப்பூவணம், மானமதுரை, இளையாங்குடி, திருவேகம்பத்து, திலவங்கோட்டை, சோளாபுரம், சாக்கை, திருப்பத்தூராகிய 9-தாலுக்காக்களை உடையதாயும்; குன்னக்குடி, காளையார்கோயில், திருகோட்டியூர் அமராவதி, ஆநந்தூர், மானமதுரை முதலான 25 ஊர்களுடையதாயும் இருக்கிறது. இந்த சிவகங்கை ஜமீனை குத்தகைக்குக் கொண்ட மேஸ்டர் பெரிய பீஷர் துரையவர்களுக்கு அகப்பட்ட சகாப்தம் 1655க்கு சரியான கி-பி 1733 ஹும் செம்புப் பட்டயத்தில் முத்து விஜய ரகுநாத சேதுபதியின் குருவானவர் ஒரு தெப்ப குளத்தை வெட்டி அதற்கு சிவதீர்த்தமென்று பொருளாகும் சிவகங்கை என்று பெயரிட்டதாக சொல்லப் பெற்றிருக்கிறது.

புதுக்கோட்டை ஸமஸ்தானம்:—இது ஒரு காலத்தில் தஞ்சை ஸமஸ்தானத்துக்குட்பட்டிருந்து, அந்த தஞ்சை ராஜருக்கு மிகவும் நம்பிக்கையுள்ள பல்லவாரயதோண்டமானுடையமுன்னோருக்கு வெகுமதியாகக்கொடுக்கப்பட்டது. பிறகு 1673-1708-ம் வருஷம் இப்புதுக்கோட்டையை தஞ்சை மன்னருடைய ஆக்கினைக்குள் மாற்ற விரும்பி இருக்கிறதை, சேதுபதிகளில் பிரபலரான இரகுநாத கிழவசேதுபதி யானவர் இரகுநாதருடைய சகோதிரியை விவாஹம் செய்துக்கொண்டதில், தம்மைத்துணரான இரகுநாதருக்கு தோண்டமான் என்ற பட்டம் சூட்டி இப்புதுக்கொட்டையை கொடுத்தார்.

இந்த இரகுநாத தொண்டமானுடைய சந்ததிகளாவன.

1. திருமலைத் தொண்டமான். 2. நாமன் தொண்டமான். 3. பச்சைத் தொண்டமான். 4. தாண்டக தொண்டமான். 5. நாமன் தொண்டமான். 6. திருமலை தொண்டமான். 7. நாமன தொண்டமான். 8. பச்சிச்சே தொண்டமான். 9. நாமன தொண்டமான். 10. பக்கச்சே தொண்டமான். 11. கிங்கினி தொண்டமான். 12. தாண்டக தொண்டமான். 13. திருமலை தொண்டமான். 14. பக்கச்சே தொண்டமான். 15. பல்லவராய தொண்டமான். 16. இரகுநாதராய தொண்டமான் கி. பி. 1680 முதல் 1730 வரையில். 17. விஜய ரகுநாத தொண்டமான் கி. பி. 1730-1767 வருஷம். 18. இரகுநாத தொண்டமான் 1767-1789-வருஷம். 19. இராஜவிஜய ரகுநாதராய பஹதூர் 1789-1807 வருஷம். 20. விஜயரகுநாதராய பகதூர் 1807-1825 வருஷம். 21. இரகுநாதராய தொண்டமான் 1825-1839-வருஷம். 22. இராமசந்திர தொண்டமான் 1839. முதலானவர்களாம்

(Vide Pages 225 & 226 of R. Sewells and the Manual of Dewan Bahadur Seshia Sastrigal &c.

இப்போது ஆளும் மகாராஜருடைய பெயர் ஸ்ரீ இராஜ மார்த்தாண்ட பயரவதொண்டமான் பஹதூர் அவர்கள். இவர் 1894-ம் வருஷம் 12 பிராயமுள்ளவராக இருந்தபடியால், இப்போது சுமார் இருபது இருபத்திரண்டு வயதுடையவராய் இருக்கவேண்டும்.

இந்தப் புதுக்கோட்டை-வடக்கில் திரிச்சி தஞ்சை நாடுகளும், தெற்கில் சிவகங்கை, இராமநாதபுரம், கிழக்கில் தஞ்சையும் மேற்கில் திரிச்சியும், திண்டுக்கல்லும் எல்லைபாக உடையது. இதன் சுற்றளவு 1380 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இவற்றில் மூன்றில் ஒருபாகம் காடு கரடுகள்நிறைந்துள்ளது. மற்ற பாகங்களில் பயிர்பச்சைகள் விளையக்கூடியது. இந்த சமஸ்தானம் (1) கொளத்தூர், (2) ஆலங்குடி, (3) குறவநாடு,(4) அன்னவாசல், (5)திருமெய்யம் என்று ஐந்து தாலுக்காக்களாக வகுக்கப் பட்டும்; வெள்ளாறு, பாம்பாறு, கவரையாறு, குண்டாறு, அம்புலியாறு, முதலான சிற்றாறுகளாலும் அநேக சிறு மலைக்குன்று கரடுகளாலும் சூழப்பட்டிருத்தலோடு, சுமார் 3000 குளங்களாலும் வளம் பொருந்தியது. இதில் நெல் முதலான தானியங்களின் விளைவும், பட்டுநூற்கும் தொழில்களும் நடத்தப்பட்டு வருகின்றன. 1881-ம் வருஷம் 2.82,009 இந்துக்களும், 11,000கிறிஸ்தவர்களும், 9000 மகமதியரும், 83,000 தொழிலாளர்களும், 54,000 செம்படவர்களும், 30,000 விவசாயிகளும், 26,000 இடையர்களும் 27,000 பறையர்களும் வசித்து வந்தார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் ஸ்ரீ சேஷய்ய சாஸ்திரிகள் திவானாக வந்தது முதல் பலவிதங்களிலும் பிரபலமாகி பிரகாசித்ததுடன், புதுக்கோட்டையும் சுத்தியாகவும்,அலங்காரமாகவும் சீர்திருத்தப்பட்டு 1881-ம் வருஷம் 15,000 குடிகள் வாழ்ந்து வந்தார்கள். 1883-ம் வருஷம் ஸமஸ்தான கல்லூரியில் 357 வித்தியார்த்திகள் வாசித்து வந்தார்கள். நகரத்தில் சர்க்கார் வைத்தியசாலை முதலான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்புதுக்கோட்டை இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்கு கப்பங்கட்டாத சுதந்திரநாடாகவும்;இதன் இராஜரவர்கள் இங்கிலாண்டு முதலான நாடுகளை நேரில்போய் பார்த்தறிந்த புத்திப் பிரகாச முள்ளவராகவும் இருப்பதோடு, இப்போது திவானாக இருக்கும் மிஸ்டர் திவான்பஹதூர் வேங்கடராமதாசு நாயடுகாரு மஹாமதியூகியானபடியால், இவர்கள் காலத்திலும் சமஸ்தானம் பின்னும் அதிக சீரும் சுகமும் பெற்று பிரகாசிக்கு மென்பது திண்ணம்.

இப்படிப்பட்ட 72 பாளையப்பட்டு ஜமீன்தாரர்களுக்கு பிரபுவாகவும், பாண்டியநாட்டு குடிகளுக்கு பிதாவைப்போல இருந்தும், சாலிவாகன சகாப்தம் 1380 வருஷம், பரீதாபி நாம வருஷம் முதல், ஈசுவர நாம வருஷமாகிய 26 வருஷங்கள் வரையில், தருமராஜிய பரிபாலனம் செய்து வந்த புகழுடம் பினராகிய ஸ்ரீ விசுவநாத நாயடுகாரு கி-பி. 1563 வருஷம் டிசம்பர்மீ பூரணபுகழுடன் பூதஉடலை விட்டு புகழுடம்பைப் பெற்று பரமபத மடைந்தார். அவர் மரணத்தைப் பற்றி அக்காலத்து குடிகள் அழுத கண்ணும் சிந்திய மூக்குடன் சிந்தித்த தன்றியில்; இக்காலத்தாரும் மதுரை சுந்தரேசுவரர் கோயில் வசந்த மண்டபத்தில் சிலா ரூபமாக வைத்திருக்கும், இந்த உத்தமன் விக்ரகத்துக்கு மேலாக மகா ராஜ ராஜஸ்ரீ விசுவநாத நாயுனி ஐயலுகாரு என்று எழுதி வணங்கி வருகிறார்கள். இம்மட்டோ, இவருடைய குமாரர் முதலான பின் சந்ததியார்களும் இவர் பெயரை மறைக்க மனமில்லாமல், அவர்கள் செய்து வந்த தரும சாசனங்களுக்கு மேல், இந்த விசுவநாத நாயடுகாரு பெயரை மகுடமாக முன்னம் எழுதி, பிறகு தம் பெயர்களை எழுதிவந்தார்கள். இவர் உருவத்தில் நீண்டு ஆஜானுபாஹுராகவும், சற்று கருத்தமேனியையுடையராகவும், நீண்டமுகமும், நெரித்தபுருவங்களும், துடிக்கும்மீசைகளை உடையவராகவும்; பார்வைக்கு பயங்கர புருஷராகவும் இருக்கினும்; ஜீவதயை, பஸ்சாதாபம், தருமம, தானம், சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி முதலான குணபூஷணங்களை உடையவராக இருந்தார்.

இப்படிப்பட்ட மஹாநுபாவராகிய விசுவநாத நாயடு காருக்கு பிறகு பாண்டிய நாட்டிற்கு இவர் குமாரராகிய கிஷ்ணப்ப நாயடு காரு அரசரானார்.

ஸ்ரீ குமார அல்லது பெரிய கிருஷ்ணப்ப நாயடுகாரு சமஸ்தானம்.

கி. பி. 1568-ஆம் வருஷம் முதல் 1573:வரையில்

புகழுடன்பினரான விசுவநாதநாயடு அவர்களுக்குப் பிறகு, அவர் குமாரர் குமாரகிருஷ்ணப்ப நாயடுகாரு மதுரையில் மகுடாபிஷேகம் செய்யப்பட்டுச்சிங்காசனமேறினர். இப்படிச்சிங்காசன மேறிய குமார கிருஷ்ணப்பநாயடுகாரைப் பெரியகிருஷ்ணப்பநாயடு என்றுசொல்வதுமுண்டு. இந்தக்குமார கிருஷ்ணப்பநாயடுகாரும் சுத்தவீர்த்துவமும், இராஜதந்திரமுமுடையவர். அஃதோடுகூட அரியநாயக முதலியாரே இவருக்கும் மந்திரியாக இருந்தபடியால், நாட்டிற்கலகங்களுண்டாகாமல் நிம்மதியாக இருந்தார். இப்படிப்பட்ட காலத்தில், வடக்கே மகமதியர் கலகம் செய்து சேனையோடு மதுரைசமஸ்தானத்துக்குவருவதாகச் சங்கதிகேட்டு, அரியநாயக முதலியார் தக்கசேனைகளோடு தாக்கப்போனர்.

இப்படிப்பட்ட சமயத்தில் 72-பாளையக்காரர்களில் ஒருவராகிய தொம்பிச்சி நாயக்கன், வேறு சில பாளையக்காரர்களுடைய உதவியைப்பெற்றுக் கொண்டு, மதுரை குமார கிருஷ்ணப்ப நாயடுமேல் படை எடுத்துவந்தான். இப்படிப் படைஎடுத்து வந்ததற்குக் காரணம்: தொம்பிச்சி நாயக்கன் 1543 வருஷம் ஒருபெரியமாகாணத்துக்குத் தலைவனுக இருந்தான். விசுவநாத நாயடு காலத்தில் அவனுடைய சில கிராமங்களைப் பிடுங்கி வேறு பாளையக்காரர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தமையால், அந்தப்பகையைத் தீர்த்துக் கொள்ள இதுசமயமாகத்தோன்றி, பணஆசையையும்,பேராசையுமுடைய சிலப்பாளையக்காரருடைய தூண்டுதலினுல்பலமான சேனையை இரகசியமாகச் சேர்த்துக்கொண்டு வந்தும், அரியநாயகம் வடக்கேபோன சங்கதியறிந்தும் திடீரெனச் சேனையைக் கூட்டிக்கொண்டு பரமகுடிக்கருகில்வந்து முற்றுகை போட்டும், நாட்டைக் கொள்ளையடித்தும் குடிகளை வருத்தியும்வர, குமார கிருஷ்ணப்பநாயடுக்குச் சங்கதி தெரிந்துஉடனே தமது தளகர்த்தராகிய பெரிய கேசவப்ப நாயடுவசம் சேனையையனுப்பித் தாக்கச்செய்தார்.

அந்தப் பெரியகேசவப்பநாயடும் வந்துசண்டைசெய்ய, உயுத்தகளத்திற் க்த்தியடிப்பட்டிறந்தார். இது சங்கதியைக்கேட்ட குமார கிருஷ்ணப்பர் விசனப்பட்டு, அந்தக்கேசவப்பருடை குமாரர் வசம் 18,000 பதாதிகளைக் கொடுத்து அனுப்ப, அவரும்போய்ச் சண்டைசெய்து, தன் தகப்பனைக்கொ

ன்ற "தொம்பிச்சிநாயக்கன்தலையை" வெட்டி, மற்றப்பாளையக்காரர்களுக்குப் படிப்பினையாகக்காட்டும்படி குமார கிருஷ்ணப்பநாயடுவிடம் அனுப்பினார். உடனே கலகமடங்கியது. இக்கலகத்துக்குக் காரணமாக நின்ற தொம்பிச்சி நாயக்கனுடைய மனைவிகள் மக்களைச் சிறையாகப்பிடித்துக் குமார கிருஷ்ணப்பரிட மனுப்ப, இவர் மஹாராஜதந்திரியாகையால் உடனே அவர்களைச் சிறையிலிருந்து விடுதலைசெய்தும், உயுத்த செலவுக்குப்பிடித்த பணத்தைப் பாளையப்பட்டிலிருந்து கொடுப்பித்தும், அவர்கள் ஜீவனும்சைக்காகப் பரமகுடி கிராமத்தைக் கொடுத்தும், மூத்தமகனுக்குப் பாளையக்காரன் என்றுபட்டத்தையும் சூட்டினார்.

இந்தக்காலத்தில் இலங்கையிலிருக்கும் கண்டிராஜன், தொம்பிச்சி நாயகனுக்கு உதவியாக இருந்து அந்தரங்கத்தில் அதிக உதவிசெய்தும், வேறு பாளையக்காரர்களைச் சண்டைக்குத் தூண்டி விட்டதன்றியில், நாயடு ஸமஸ்தானத்தைப்பற்றிப்பரிகாசமாகப் பேசிஹேளனம் செய்து வருவதாகச்சங்கதிதெரிந்து, அவன் கொட்டத்தை அடக்கக் குமார கிருஷ்ணப்பநாயடு உயுத்த கோலமாக புறப்பட, அவருடன் அவருக்குட்பட்ட 52-பாளயக்காரர்களும், அவர்கள் இனத்தாரும் சேர்ந்தும், இலங்கைக்கு இராமர்கட்டிய வாராவதியின் ஒன்பதாவது கல்லுக்கருகில் போய்க் கண்டிராஜனுக்கு தாம்யுத்த சந்நதமாக வந்திருக்கிற சங்கதியைத் தெரிவிக்க, அக்கண்டி ராஜன் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாமல், முனைமுகத்தில் நிற்க மனமுவந்து தமது நான்கு மந்திரிகளோடும், அஷ்ட (8) தசநாதர்களுடன், 40,000சேனையைச்சண்டைக் கனுப்பி, ஆயுதங்களுடன்நிற்கச்செய்தான். இதையறிந்த குமார கிருஷ்ணப்பநாயடும் தமது தளகர்த்தன்வசம் 20,000-சேனையை முன் அணியாகவும் பின் அணியாக வகுத்தும், அப்பின் அணியைத்தாமே நடத்திக்கொண்டும்போய்ச் சண்டை செய்ய, இருபக்கத்திலும் பிரமாதமாகப் பிராணச் சேதமுண்டாகி, கடைசியில் கண்டிராஜனுடைய மந்திரிகளில் இரண்டுபெயரும், அஷ்ட தசநாதர்களில் ஐந்துபெயரும், அநேக ஆயிரம் பதாதிகளும்பிடிபட்டுச் சிறையாக, அவர்களுக்குக் குமாரகிருஷ்ணப்பர் உயுத்தத்திலுண்டான வெட்டுக்காயங்களை ஆற்றிஆதரித்துத்தனித்தனிகூடாரங்களில் தங்கச்செய்வித்து உபசரித்தும்வர; மறுநாள்கண்டிராஜனுடையநான் மந்திரிகள் வந்துகுமார கிருஷணப்பரைவணங்கி,கண்டிராஜன்செய்த அக்கிரமங்களுக்கும், அவமானத்துக்கும், தக்க மன்னிப்புக் கேட்டுக்கொண்டும், இந்த உயுத்தச்செலவுக்குப் பிடித்த தொகைக்குத்தக்க மாகாணங்களைக்கொடுத்தாகிலும், அல்லது அடகுவைத்தாகிலும், கடன்கட்டி வருவதாகவும்; இவ்வளவுடன் சண்டையை நிறுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள, குமார கிருஷ்ணப்பரும் சம்மதித்து, அம்மந்திரிகளோடு தக்க தமது இராஜ பாரியை யனுப்ப, கண்டிராஜன்கேட்டு இப்படிப்பட்ட சமாதானத்துக்கு வரத் தனக்கு இஷ்டமில்லையென்றும், சண்டைக்குத்தயாராக இருக்கச்

சொல்லென்றும், சொல்லியனுப்பிவிட்டு, 60,000 சிங்காளியர்களையும், 8000 காப்பிரிகள் (போர்த்துகீயர்) சேனைகளையும் கூட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தான். வந்தாலுமென்ன? இந்த 60,000 சிங்காளிகளும், 8000 காபிரிகளும் முன்பின் போர் முகத்தையறியாத காட்டாள்களாக இருந்தபடியால், உயுத்தப்பயிர்ச்சியைமுறையாகக் கற்றறிந்தமதுரைச் சேனையோடு சரியாகச் சண்டை செய்யச் சக்தியற்று, நல்ல சமயத்தில் நாலாபக்கமுமோடிப்போக, கண்டிராஜனும், அவனுடைய ஆப்தபந்துக்களான பத்துப்பெயர்மாத்திரம் கடைசிவரை கிரமமாகச் சண்டைசெய்ய, மற்றவர்கள் கைதிகளாகப் பிடிபட்டார்கள். இதே மாதிரியாகவே கண்டிராஜனையும் உயிருடன் பிடிக்கப் பிரபல பிரயத்தனப்பட்டும், முடியாமல் கடைசியில் குமார கிருஷ்ணப்பருடைய அம்பினுல் அடிபட்டு அடியற்ற மரம்போல் விழுந்து இறந்தான்.

கண்டிராஜன் கதறி விழுந்து சாகவே, கதிரவனும் மேற்கே சாய்ந்து அஸ்தமாயினுன். கண்டி ராஜியம் குமார கிருஷ்ணப்பர் வசமாகியதால் உடனே பிருதுக்கொடியைக் கோட்டையின்மேல் நட்டு, இறந்துபோன, கண்டிராஜனுடைய பிரேதத்தைத்தேடி எடுத்துத் தக்க மரியாதையுடன் தகனம் செய்வித்தும், அவர் மனைவி மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வித்தும், அங்கு மூன்று நாளிருந்தும், அந்தக் கண்டி நாட்டிற்குத் தமதுமைத்துனர் விஜயபூபால நாயடு காரை இராஜாவாக நியமித்துவிட்டும் ஜயசீலராக மதுரைக்குத் திரும்பிவந்தார்.

இலங்கைக் கண்டிராஜ ஸமஸ்தானம்.

సీసమాలిక.

*　　*　　*

“ అరియలంకాద్వీపమైన సింహళచక్ర । వర్తిపరంపరల్ వసుధవినుడి ।
“ లక్షణవిజయపాలనమహారాజశ్రీ । యంగదాంకితరాజయనులకొండ।
“ సాలమహారాజు జగతియందునుకీర్తి । సింహామహారాజశ్రీకరుఁడగు।
“ రంజిల్లురాజాధిరాజ సింహుడుమఱి । విక్రమసింహుడువీరివరలో।

గీ—ఆఱుగురుచక్రవర్తిలలై యాలుగురును
　పదిలోన్నొకపాలు కప్పంబుప్రజలనొద్ది
　తీసుకొని రాజ్యమేలిరి దిశలువెలుగ
　అనుచు పెద్దలునుడువుదురతిశయముంగ ॥

இந்த இலங்கையின் கண்டியில் விஜய பூபால மஹாராஜருக்குப் பிறகு (2) கொண்டசால மஹாராஜரும் (3) அங்கதாங்கித மஹாராஜரும் (4) கீர்த்தி சிம்ஹளமஹாராஜரும், (5) இராஜாதிராஜமஹாராஜரும் (6) விகிர மசிம்ஹள மஹாராஜரும் முறையே ஆண்டுவந்தார்கள். இவர்களுக்கு வெள்ளிக் குருச்சியில் இருந்த புராதன விசுவநாத நாயடு சந்ததிகளாகிய இராமகிருஷ்ண நாயடு, நாராயணநாயடு, பங்காரு திருமலே நாயடுகாருடைய குமாரத்திகளேயும்—பிறகு தஞ்சை ஸமஸ்தானம் மன்னரு சாமி நாயடுகாருடைய குமாரத்திகளேயும், விவாஹம் செய்துவைத்தாலும், சந்ததிகளற்றுப்போன தாகத்து தெரியவருகிறது. இப்போது தஞ்சைஜில்லா திருவையாற்றில் சப்ரிஜிஷ்டிராக இருக்கும் ஸ்ரீ மஹரஜா—தியகசிம் ஹலராஜவர்களும், அவருக்கு சம்பந்தப்பட்டு இப்போது வெள்ளிக்குருச்சிமுதலான விடங்களிலிருக்கும் சிலரும், இந்தகண்டி சமஸ்தானபதிகளுடைய வார்சுகளாகி இங்கிலீஷ் கவர்மெண்டாரிடத்தில் (தமது இலங்கை இராஜியத்துக்காக) (பென்சன்) நன்கொடைப்பெற்று வருவதாகக்கேள்வி. இது நிற்க.

குமார கிருஷ்ணப்பர் மதுரைக்குவந்து சேரவே, மகமதியர் வடக்கே 1564-ம் வருஷம் விஜயநகரத்தாரோடு பிரமாத சண்டைசெய்ததில் இராமராஜா இறந்துவிட்டபடியால், சமஸ்தானத்துக்குள் கலகங்களுண்டாகி, விஜயநகரத்தாருடைய தென்னுடுகளே அரியநாயக முதலியாருக்குகொடுத்து ஆண்டுவரும்படி செய்யவும், குமாரகிஷ்ணப்பரை வடநாடுகளுக்கு அதிபதியாக நியமிக்கவும் யோசித்தார்கள். இதையறிந்த அரியநாயகம் தமது ஆசாரியரிடம் சம்மதிகேட்க, அவர் ஒருதேசத்தை ஆண்டுவரும் வேலே க்ஷத்திரிய ஜாதியாருக்கே பொருந்தியது, வைசியனும், வேளாளனுமாகிய உனக்குத் தகாதேனத் தடுத்துச் சொல்ல, குரு வாக்கியத்தைத் திருவாக்காகக்கொள்ளும் அரிய நாயகரும், அது சங்கதியை விஜயநகரத்தாருக்கு அறிவிக்க, அவர்கள் அரிய நாயகத்தை மதுரை, மைசூர், தஞ்சை முதலான தென்னுடுகளுக்கு விசேஷ விசாரணே மந்திரியாகவும், தளகர்த்தனுகவும், இருக்கும்படி கேட்டுக்கொண்டமையால்; அரிய நாயகரும் அதற்குச் சம்மதித்து, இச்சமஸ்தானங்களுக்கு இடையில் தாம் வசிப்பது உத்தம மெனக்கருதி 1566–ஆம் வருஷம் மதுரைக்கடுத்த சோழவந்தான் கிராமத்தில் ஒரு சிறு கோட்டையையும், அதற்குள் 300 வீடுகளேயும் கோயில், குருமடம் முதலானவைகளேயும் கட்டுவித்துக் காஞ்சீபுரத்துக் கடுத்த மெய்ப்பேட்டிலிருந்த தமது நெருங்கிய பந்து மித்திரர்களேயும், சிவடி சாரியையும் தருவித்து அங்குவந்து வசிக்கும்படி செய்வித்தும், அவர்களுக்கு உதவியாகப் பார்ப்பான் முதல் பறையனீருக பல சிப்பந்திகளே உதவிசெய்ய நியமித்ததன்றியில், மற்றசாதாரண பந்துமித்திரர்களே நகரி, திருமங்கலம், பட்டனேரி முதலான கிராமங்களில் குடியேற்றினர். இப்படிக்குடி

யேற்றவே, பாண்டியநாட்டாருக்கு இவரிடத்தில் நம்பிக்கை அதிகமுண்டாகியதனால், நாட்டில் கலக மில்லாமல் குடிகள் சுகமாகவாழ்ந்து வந்தனர்.

இப்படி நாட்டில் கலகமற்றுப்போகவே, குமார கிருஷ்ணப்பருக்கு வேறு வேலையற்றுத் பாளையங்கோட்டைக்குக்கிழக்கில் தமது பெயரால் கிருஷ்ணபுரம் என்ற நகரத்தையும், அதில் சைவ வைணவக் கோயில்களையும், குளத்தையும், பிராமணர்களுக்கு அக்கிரஹாரங்களையும் கட்டிவைத்ததன்றியில்; திருநெல்வேலிக்கு மேற்கேகாடியம் கிருஷ்ணபுரம் என்ற நகரங்களையும் கட்டிக் குடிகளுக்கு உதவிசெய்து பாண்டியநாட்டைப் பத்துவருஷம் ஆண்டு 1573-ஆம் வருஷம்பரமபதமடைந்தார். கனம் டெயிலர் கணக்கின்படி சகாப்தம் 1411-ஞ வெகுதானிய வருஷமுதல் கீலகவருஷமாகிய 31 வருஷம் ஆண்டதாகத தெரியவருகிரது.

ஸ்ரீ கிருஷ்ணப்ப அல்லது பெரியவீரப்பநாயடு இரண்டாம் விசுவநாதநாயடு சமஸ்தானம்.

கி. பி. 1573-ஆம் வருஷம் முதல் 1595-ஆம் வருஷம் வரையில்.

கீர்த்திமானாகிய குமாரகிருஷணப்பருக்குப் பிறகு அவருடைய இரண்டு குமாரர்களாகிய கிருஷணப்ப அல்லது பெரியவீரப்பநாயடுவும்; சிறிய குமாரன் இரண்டாவது விசுவநாத நாயடுவும் துவிராஜர்களாகப் பாண்டியநாட்டிற்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டார்கள். இவர்கள் காலத்திலும் அரியநாயகமுதலியாரே மந்திரியாக இருந்தபடியால், நாட்டில் கலகமற்றுப்போக; இராஜ குமாரர்கள், அரண்மனையில் ஆனந்தமாகக் காலம் கழித்தார்கள். இவர்காலத்தில் விசுவநாதர் குடும்பத்தைச்சார்ந்த ஒரு வாலிபனுடைய தூண்டுதலினால் காளியூர்க் கோயிலிலிருந்த மாவலிவான் ராஜா குட்டிக்கலகம்செய்ய எத்தனப்பட, உடனே அக்கலகத்தை அடக்கிவிட்டனர். பிறகு திரிச்சினாப்பள்ளிக்கோட்டையைப் பந்தோபஸ்த்தாக்கியும், சிதம்பரங்கோட்டையைக் கட்டிவைத்தும், பிராமணர்களுக்கு அனேக அக்கிரஹாரங்களையும் நியமித்தார்கள். இவர்களில் இளையவராகிய விசுவநாதர்முதலில் இறந்துவிடப் பெரிய வீரப்ப கிருஷ்ணர் 1585 வருஷம்பரமபத மடைந்தார். கனம் டெயிலர் சரித்திரப்படி சகாப்தம் 1438-கி.பி.1516 சவுமியவருஷ முதல்யுவ வருஷமாகிய 27 வருஷங்களாண்டார்.

குமார கிருஷ்ணப்பநாயடு இலிங்கப்பநாயடு, விசுவப்பநாயடு ஸமஸ்தான்.

(கி. பி. 1595.முதல் 1602-வரையில்.)

.. பெரியகிருஷ்ணப்பநாயடுவின் குமாரர்களாகிய இலிங்கப்பநாயடும், விசுவப்பநாயடும் பட்டத்துக்கு வந்தகாலத்தில், மஹாமதியூகியும் மதுரை

நாட்டிற்குமேதாவியும், மதுரைக் கோயிலில் ஆயிரங்கால் மண்டபம்கட்டி வைத்தவரும், பாண்டிய நாட்டிற்கும் பாளையக்காரருக்கும் பிதாவுமாக இருந்தவருமாகிய அரியநாயகமுதலியார் 1600 வருஷம் சிவபதமடைந்தார். அவர் இறந்தது பலவிதத்திலும் விசனிக்கத்தக்கதேயாகிலும், சில விஷயங்களில் சந்தோஷிக்கவேண்டியிருக்கிறது. அதாவது அவர் புராதனரும், பிடிவாதமுடைய வருமாகையால், நாட்டில் நவநாகரிகம் விருத்தியடையத்தடைபட்டுவந்தன. அவர் இறந்துவிடவே நாட்டில் நவநாகரிகங்கள் தலைகாட்டத் தங்குதடங்கலற்று நடந்தன.

விசுவநாதநாயடுக்குப் பிறகு மதுரையில் ஆண்ட மூன்று தலைமுறை நாயடுமார்களும் வயதிலும், உலக அனுபவத்திலும் கல்வி கேள்விகளிலும் அரியநாயக முதலியாருக்குத் தாழ்ந்தவர்களானபடியால்; அவர்கள் தம்மூதாக்களுடைய உத்தரவின்படி அரியநாயகமுதலியாரைப் பிதாவைப்போல் பாவித்து அவர் வார்த்தையை மீறிநடக்க மனமெழாம லிருந்தார்கள், ஆக்வே, அந்த வாலிபநாயடுமார்கள் தம்மிஷ்டப்படி நாட்டில் நவநாக ரிகத்துக்கேற்றபடி செய்ய வகையற்றிருந்தார்கள். இப்போது அரியநாயக முதலியார் இறந்துவிட்டபடியால், நாயடுமார்கள் நாட்டில் இஷ்டப்படி புதிய சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

இப்படி ஆரம்பித்தாலும், இவர்களுடைய பாண்டிய நாடு விஜயநகர ஸமஸ்தானத்துக்குள்ளடங்கிய ஒருபாகமாக இருந்ததேயோழிய, சுதந்திர நாடாகவில்லை. அப்போது 1602ஆ-ம் வருஷம் விஜயநகர சமஸ்தானம் பெனுகொண்டாவில் ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு ஸ்ரீ வேங்கடபதிராயலு பிரபுவாகவிருந்தார். இந்தவெங்கடபதிராயலு இராமராயலுக்குப் பிறகு21-வருஷம் ஆண்டு 1613-ஆம்வருஷம் இறந்துபோக; மதுரைநாயடு சமஸ்தானம் சுதந்தர நாடாகியதாக 1609-ஆம் வருஷம் சாசனத்தினுல் வெளியாகிறது. அரியநாயகமுதலியார் இறந்தவுடனே, விசுவப்பர் அல்லது 3,வது விசுவநாதநாயடும் இறந்துபோக, 1602-ஆம் வருஷம் இலிங்கப்பநாயடுகாருடம் பரமபதமடைய, கனம் டெயிலர் சரிதிரப்படி சகாப்தம் 1458-(கி. 1537.) தாதுமுதல் மன்மதவருஷமாகிய 20-வருஷ ஆண்டபிறகு அவர்குமாரர் முத்துகிருஷ்ணப்ப நாயடுகாரு சிங்காசனமேறினர்.

ஸ்ரீ முத்துகிருஷ்ணப்ப நாயடு ஸமஸ்தானம்.

1602 ஆம் வருஷம் முதல் 1609 வரையில்.

இந்த முத்துக்கிருஷ்ணப்ப நாயடு சிங்காசனமேறிச் செங்கோலைக் கைக்கொண்டவுடனே, இவரது சிற்றப்பனும், பொருமையையும் பணஆசைப்பேயும் பிடித்தவருமாகிய கஸ்தூரி இரங்கைய்யநாயடு, முத்துகிருஷணப்பனை வஞ்சமோசமாகப்பிடித்துச் சிறையில்வைத்துவிட்டுத் தானே பாண்டி

யநாட்டின் சிங்காசனாதிபதி என்று பறையடித்துச் சிங்காசனமேறி யதில்; இந்த அக்கிரம நடவடிக்கையைக்கேட்ட முத்துகிருஷ்ணப்பருடைய ஆப்த பந்து மித்திரர்கள் அடுத்த வாரத்திலே கஸ்தூரி இரங்கய்யநாயடு சந்தியா வந் தனமடத்தில் கண்களை மூடிக்கொண்டும், சுவாமியை தொழுதுகொண் டுமிருக்கும்சமயத்தை யறிந்துப்போய், அவர்சிரசை ஒரேவெட்டில் வெட்டி த் தள்ளிப் பாண்டிய நாட்டுப் பட்டத்தை மறுபடியும் முத்துக்கிருஷ் நாயடு வசமாக்கினார்கள். ஸமஸ்தானத்தில் அக்கிரமமாகஒருவர்பட்டத்தைப் பிடுங்க, அப்படிபிடுங்கியவரைப்பிரேதமாகும்படி செய்த அக்கிரம நடவடிக் கைகளில் இதுவே முதலாம். இந்த விஷயத்தைப்பற்றி கனம்டெயிலர் சரித் திரத்தில்வேறுவிதமாக எழுதி இருக்கிறார். அதாவது விசுவப்ப நாயடுகாருக் கு பிறகுசமஸ்தானத்தை அவர் குமாரர் குமார கிருஷ்ணப்ப நாயடும்-அவர் தம்பி கஸ்தூரி ரங்கநாயடுமாகச் சாப்தம் 1475-கி. பி. (1553) துன்முகி முதல், பரிதாபி வருஷமாகிய 17-வருஷங்களாண்டதாகவும், பிறகு விசுவப்ப நாயடு குமாரர் முத்துகிருஷ்ணப்பநாயடு வாலிபராக இருந்தபடியால், தம்பி கஸ்தூரிரங்கய்யநாயடு சகாப்தம் 1482(கி-பி1660)பிரமாதி முதல்பரதாபி வரையில் 7வருஷம் ஆண்டுவந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப் பாண்டியநாட்டைப் பெற்ற முத்துகிருஷணப்ப நாயடு காலத்தில் நாட்டி ற்கலகம் சண்டை சச்சரவுக ளில்லாமையால் இவர் குடிகளுக்கு உபயோக மானது.

பல குளங்களையும். அக்கிரஹாரங்களை உண்டாக்கியும் மதுரைக்கும் ஸ் காந்தமலைக்கும் இடையில் தம் பெயரால் 'கிவுஷ்ணபுரம், என்ற நகரத் தையும் கட்டிவைத்தார். இப்படிப்பட்ட காலத்தில் இராமேசசுவரத்துக்கு யாத்திரை செய்பவர்கள் மஹாபயங்கரமான காடுகளைத் தாண்டிப்போ கவேண்டி யிருந்தமையாலும், அவ்வழியில் திருடர்கள் கையில் (யாத்தி ரைக்காரர்) அகப்பட்டு அவஸ்தைப்பட்டு அலைந்து, இந்தப் பாண்டியர் நாட் டு மன்னன் முத்துகிருஷ்ணப்ப நாயடுகாரிடம் முறையிட்டழுது வந்தமை யாலும், இந்தராமேச்சுவரயாத்திரைக் காரரைப் பாதுகாக்க நியமித்த காரி யக்காரர்கள், தம் காரியங்களைக் கிரமமாகச் செய்யாமல் இப்படிப்பட்டகஷ் டங்கள் சம்பவிக்கின்றனவென்றறிந்து, நாயடுகாரு 1605-ம் வருஷம் இரா மநாதபுரசேதுபதி குடும்பத்தைச் சார்ந்த ஸ்ரீ "சடையக்கதேவ" உடையா ரே இக் கஷ்டங்களை நீக்கவல்லவரென்று கண்டு, இராமநாதபுரத்துக் கடு த்த போகலூரில் சேதுபதி என்று பட்டாபிஷேகம் செய்விக்க, அந்தச் சட யக்கதேவ உடையார் சேதுபதியும் உடனே காடுகளை அழித்து, அவைகளை நாடுகளாகவும், நந்தவனங்களாகவும் மாற்றியும், திருடரைத் தும்சம்செய்து ம், யாத்திரைக்காரர் சுகமாக யாத்திரை செய்துவரும்படி செய்வித்தும், இ ராமநாதபுரம், போகலூரை விருத்தியாக்கியும், அங்கு கோட்டைகளைக் கட்டு வித்தும், வடக்கு வட்டகி, காளியார்கோவில், பட்டமங்கலம் முதலான

விடங்களைப்பிடித்து வருஷாந்திரம் நல்ல வருமானத்தை வசூல்செய்வித்தும் மதுரை சமஸ்தானாதிபதிக்குக் கப்பமாய் அனுப்பி, அவருடைய அன்பையும் பிருதையும் பெற்றும் அநேகவருஷங்கள் ஆண்டு 1621-ஆம் வருஷம்இறந்து போக, அந்த இராமநாதபுரம்சமஸ்தானததுக்கு அவருடையகுமாரர் குட்டனை சேதுபதியாக்கியதாக மதுரைச் சரித்திரத்தில் மிஸ்டர் நெல்சன் எழுதியிருக்கிறார். இந்தச் சேதுபதிகளின் ஆதி அந்தஸ்தைப்பற்றி இராமநாதபுரம் மானேஜர் மிஸ்டர் ஸ்ரீபொன்னுச்சாமித் தேவருடைய மெமோராண்டம் என்னும் குறிப்பில் வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கிறது. அதைஇராமதபுரம் சேதுபதி சரித்திரத்தில் விபரமாகக் காணலாம். இப்படிக் குடிகளுடைய நன்மையைக்கருதியும், இராமேச்சுவர யாத்திரைக்காரருடைய சுகத்தைக் கருதியும் பாடுபட்டுழைத்த முத்துக்கிருஷ்ணப்ப நாயடுகாரு, முத்து வீரப்பநாயடு, திருமலை நாயடு, குமார முத்து வீரப்பநாயடு என்ற மூன்று குமாரர்களை விட்டு 1609-வருஷம் அல்லது கனம் டெயிலர் கணக்கின்படி சகாப்தம் 1512ம் (கி. பி. 1590) ரவுத்திரிமுதல் விரோதி விகிருதியாகிய 30-ஆம் ஆண்டு பரமபதமடைந்தார். பிறகு

ஸ்ரீ முத்துவீரப்ப நாயடுகாரு ஸமஸ்தானம்.

கி. பி. 1609-ஆமுதல் 1623-ஆவரையில்.

முத்துகிருஷ்ணப்ப நாயடுகாருக்குப் பிறகு அவர்ஜேஷ்டகுமரராகிய "முத்துவீரப்ப நாயடு காரு 1609-ஆம் வருஷம் சிங்காசனமேறினார். இவர் தஞ்சை அரசனோடும், மைசூர் மன்னனோடும் சண்டை செய்ததன்றியில் மதுரையின் வடமேற்குப் பாகத்தில் மகமதியர் வந்து தாக்க, அவர்களை விருபாக்ஷி பாளையக்காரரும் வேறுசில பாளையக்காரர்களும் கூடி, எதிர்க்க அப்படிமகமதியரைத் துரத்தியடித்ததில்,அதிக சத்தியத்தையும், சுத்தவீரத்தையும்காட்டியவிருபாக்ஷிபாளையக்காரர்களுக்குப் "**பதிக்காவலன்**" என்று பட்டப் பிருதைக்கொடுத்தார். பிறகு மைசூரிலிருந்து முகிலன் என்றவன் சிறுபடையோடு வந்து திண்டுக்கல் கோட்டையை முற்றுகைப்போடத் திண்டுக்கல்லைச் சுற்றியிருந்த பதினெட்டுப் பாளையக்காரர்களும்,முக்கியமாக நடுக்கட்டளை பாளையக்காரனாகிய சின்ன குட்டிதுரை நாய்க்கன் எதிர்த்து முறியடித்தோட்டியதனால், இப்பாளையக் காரனுக்கு திண்டுக்கல் பளையகோட்டைக்கொடுத்தும், அப்பிராந்தியங்களுக்கு முக்கியஸ்தனுக்கிஇன்னும் பட்டப்பிருதுகளையும் கொடுத்தார். இவர் (முத்துவீரப்பநாயடு) காலத்தில் தான்'பிரான் சிஸ் சாவியரால் (Francis Xavier) கிறிஸ்தவர்களாக்கப்பட்ட சிலசெம்படவராகிய பராவாசுகள் மதுரையில் நாயடு உத்தரவின்படி முதல் முதல் கிறிஸ்துமதக் கோயிலைக் கட்டினார்கள் அதையறிந்து பாதரி பர்னண்டிஸ் (Father Fernandez) என்பவர் வந்து வடுகர் முதலான உயர்ந்த வகு

ப்பாரைக்கிறிஸ்து மதஞ்சேர்க்க பிரபலபிரயத்தனபட்டும், முடியாமையால் பாதரி நோபில் பிஸ் (Robertde Nobilibus) என்பவர் வந்து; தாம்ஐரோப்பிய பிராமணனென்றும்,இந்துமதச் சந்நியாசிகளைப்போல காவிவேஷ்டிகளைத் தரித்தும்,சில இந்துக்களைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கவே, மதுரை கோயில் பிராமணர்களுக்கும்,கிறிஸ்தவர்களுக்கும் குட்டிக்கலகங்களுண்டாகி, அந்தப்பாதரியாருடைய நடவடிக்கைகளைப் பற்றி ஐரோப்பிய மன்னர்களும் கண்டித்தார்கள். அப்படிப்பட்ட காலத்தில் முத்துவீரப்ப நாயடும், சாகப்தம் 1544 (கி-பி1622)விகாரிமுதல், துன்முகிஆகிய 32௵ஆண்டு மரணமடைய; அவர் உத்தமசகோதரராகிய புகழ்பெற்ற திருமலைநாயடுகாரு பாண்டியநாட்டதிபதியாக, சாலிவாகன சகாப்தம் 1544ம், துந்துமி௵ம், மாசிமீ 7தேதிக்குச் சரியான 1623௵ ஜெனவரிமாதம் பட்டாபிஷேகம் செய்யப்பெற்றார்.

ஸ்ரீ திருமலை ஐய நாயடுகாரு சமஸ்தானம்.

கி. பி. 1623 முதல் 1659௵வரையில்.

மதுராபுரியானது பெயருக்குமாத்திரம் பாண்டிய நாட்டிற்குப் பிரதான பட்டணமாக விருந்தாலும், உண்மையில் உயுத்த வீரர்களுக்கு வசதியில்லாத பட்டணமாக இருந்தது, அதன் சுற்றுப்பக்கங்களில் பருவதங்களும், காடுகளும், கடல்களும், நதிகளுமில்லாமல் வெட்ட வெளியாக விருந்தபடியால், பகையாளிகள் நாலாபக்கங்களிலும் வந்து தாக்க வசதியாக இருந்ததையறிந்து, விசுவாநாதரும், அரியநாயகமும் அதைப்பாது காப்பதற்கு அதன் நாலாபக்கங்களிலும் 72 பாளையக்காரர்களை வாசல் காவற்காரர்களாக நியமித்திருந்ததன்றியில்; நிலவளம், காவிரி நீர்வளம் பொருந்திய திரிசிராப்பள்ளியானது பகைவரைத் தடுத்து ஒட்டுவதற்கு வசதியானவிடமெனக்கண்டு, அங்குப் பெரியகோட்டைக் கொத்தளங்களைக்கட்டினார்கள். அவர்கள் சந்ததிகளும் இக்கஷ்டத்தைக் கருதியே சிதம்பர முதலானவிடங்களிலும் கோட்டைகளைக் கட்டிவைத்தார்கள். மேலும், மதுரையில் வெயிற்காலத்தில் அதிகஜலக்கஷ்டமும், மிதமிஞ்சிய ஊஷ்ணமும், மலைக்காய்ச்சலு முண்டாவதனால்; மதுராபுரிக்குமன்னரான நாயடுகாருகள், கேவலம் முடிசூட்டும்போது மாத்திரம் மதுரைக்குப் போய்ச் சூட்டிக்கொண்டு, மற்றகாலமெல்லாம் காவிரி நதிபாயும் திரிசிராப்பள்ளியிலேயே பெரும்பான்மையாகக்காலம் கழித்துவந்தார்கள். இந்தவழக்கத்தை அநுசரித்தே முத்துவீரப்பநாயடுவின் சகோதரராகிய இந்தத் திருமலைநாயடுகாரும் தமக்கு முப்பது முப்பத்தைந்து வயதாகிறவரையில் திரிச்சியிலேயே இருந்தார். இவர் சிறுவயதாக இருக்கும்போதே இவ

ருக்குஜலதோஷ (Catarrh) காச கபவியாதி கண்டுவருந்தியும், விதியின்றி முடிசூட்ட மதுராபுரிக்கு அழைத்துக்கொண்டு போகையில், இடையில் வியாதி அதிகரித்துத் திண்டுக்கல்லைச் சார்ந்து, தமது கூடாரத்தில் படுத்துறங்கும்போது, நடு நிசியில் மதுரைச் "சோக்கநாதரும், மீனாக்ஷியும்" ஒரு கிழப்பிராமணர், பார்ப்பினியைப்போல வந்து, திருமலைநாயடைத் தட்டி எழுப்பிப் பஞ்சாக்ஷரமகிமை ரூபமாகிய விபூதியைக் கொடுத்து உண்ணும்படி செய்தும், கொஞ்சம் விபூதியை எடுத்து இராஜனுடைய கழுத்திலும், வயிற்றிலும் தடவிக்கொடுத்தும், "நீ மதுராபுரியைக் தலைநகரமாக்கிக்கோண்டு, அங்கேயே தங்குவாயாகில், உனது வியாதியை நீக்கிச் சகலசம்பத்தும் அடையும்படி ஆசீர்வதிப்போம்". என்று சொல்லி மறைந்ததாகக் கனவுகண்டு: திடீரென்று எழுந்து தம தருகிலிராநின்ற மெய்க்காவலர், பிராமணர்களுக்குச் சொல்ல; அவர்கள் ஆநந்தித்து சொப்பணத்தில் வந்தவர்கள் சொக்கநாதரும், மீனாக்ஷியும் என்றும்; அவர்கள் ஆசீர்வாதத்தின் படியே, ஆகுமென்றுக் தைரியம் சொல்லித் தட்டிக்கொடுக்கத் திருமலைநாயடுகாரும் அதே கவலையாக இருந்து; காலையில் எழுந்து தந்தசுத்தி செய்யவே, தம்மை வருத்திய வியாதி வாயின் வழியாக நீங்கிப்போவதை உணர்ந்தும், உடனே மதுரைக்குப்போய்த் தமது இஷ்டதேவதையாகிய மீனாக்ஷிசன்னிதியின் முன் மகுடாபிஷேகம் பூண்டும்; இனித்தாம் உலகில் உள்ளநாள் உள்ளவரையில் மதுரையிலேயே இருக்கத்தீர்மானித்தும், தமது வியாதியைச் சொப்பனத்தில் வந்து நீக்கிய சொக்கநாதர்மீனாக்ஷியம்மனுக்குக்காணிக்கையாக 1,50,000–ரூபாயைச் செலவிட்டு, நவரத்தனங்களடங்கிய ஆபரணங்களையும், ஆடைகளையும், வாஹனங்களையும், தந்தத்தினாற் செய்த பல்லக்குச் சப்பிரம், இரதங்களையும் தயார்செய்தக் கொண்டுவர; தமது வியாதிமுழுதும் நீங்கி, திடகாத்திரராகவே; மதுரை நகரத்திற்கு வேண்டிய மாடமாளிகை கூட கோபுரங்களையும், அழகிய அரண்மனைக் கோட்டைகொத்தளங்களையும் கட்டிவைக்க, பளவிடங்களிலுள்ளசிறந்த சிற்பிகளைத்தருவித்தும், அவர்களுடைய வேலைக்காகச்செங்கல் சூளைகளைப் பருவதங்களைப்போல் கட்டித் தயார்செய்தும், அவைகளைச்சுட, சுற்றுப்பக்ககாடுகளிலிருந்தபிரமாண்டமான மரம்கட்டைகளைவெட்டிக்கொண்வரச் செய்தும், கருங்கல் கட்டிடத்திற்கு அநேக கற்சுரங்கங்களை வெட்டி, உயரமும் விசாலமுமான உருவமுமுடைய விதம் விதமான கற்களைக் கிளப்பி எடுப்பித்தும்; மீனாக்ஷியம்மன் கோயிலின் வெளிமதில் சுவர்களையும், வசந்தமண்டபம், புது மண்டபம், குளங்கள் முதலான கட்டிடங்களையும் கட்டிவைக்க ஆயிரக்கணக்கான வேளைக்காரரை நியமித்தும்; வேலைகளை நடத்திவந்த தன்றியில், அந்தந்தவேலைகளைத் தாமே பிரதி தினமும் நேரில்போய்ப் பார்த்தும், புத்திசாலித்தனமாக வேலை செய்யும் சிற்பிகளுக்கு, தம் செங்கோலேந்திய சிங்காரமான ெசாந்தக்கையினுல்

1866-ஆம் வருஷம் வரையிலும் அநேக படிப்பாளிகளும் நம்பி எதிர்பார்த்திருந்தார்கள். நிற்க,

திருமலை நயாடுடைய ஸமஸ்தானம் தினே தினே பலுகிப்பெருகியதனால், இனி இச்சமஸ்தானத்தை விஜயநகர சமஸ்தானத்துக்கு அடங்கியதாகக் கொள்ளாமல்; ஓர் சுதந்திர சமஸதானமாக்கக் கருதி மேற்படி விஜயநகர சமஸ்தானம் வேங்கடபதி இராயலுகாலத்திலேயே பாண்டிய நாட்டார் கப்பம்கட்டாமலிருந்தார்கள் என்று முன்னமேசொன்னுமல்லவா? இப்போது இத்திருமலை நாயடுகாரும் அந்த வேங்கடயதிராயலுடைய சந்ததிகளுக்கும் கப்பம் கட்டாமல், தம் ஸமஸ்தானத்தைச் சுத்தசுதந்திரசமஸ்தானமாக்கிப் பிரபலப்படுத்தக் கருதித் தம்மைப்போன்றதக்ஷணசுதேசசமஸ்தானுதிபதிகளாகியசெஞ்சி, தஞ்சைநாயடுகாருகளைத்தம்மோடுகட்டுப்பாடாகச்சேரும்படிசொல்ல; அவர்களும் அங்கீகரிக்க, இந்தக்கட்டுப்பாடானசங்கதி விஜயநகர ஸமஸ்தானபதி நரசிங்க தேவராயலுக்குத்தெரிந்து, உடனேபெரிய சேனையைக் கூட்டிக்கொண்டு தெற்கே தமது பிரதிநிதிகளுடைய அக்கிரம நடவடிக்கைகளைக் கண்டிக்கவர, பேடியாகிய தஞ்சைமன்னர்பயந்து விஜயநகரத்தாரிடம் சரணடைந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டுசேர்ந்து விட்டதன்றியில், திருமலை நாயடுவின் கட்டுப்பாட்டையும், செஞ்சிநாயடுவின் கட்டுப்பாட்டையும் நரசிங்கத்தேவராயலுக்குச் சொல்லி, இவ்விரு மன்னரையும் சிக்ஷிக்கும்படி தூண்டிவிட்டார். இது சங்கதியையறிந்த திருமலைநாயடு கொஞ்சமேனும் முன்னும் பின்னும் யோசியாமலும்; தேசாபிமானத்தையும், சுஜனுபிமானத்தையும் மறந்தும், துர்மந்திரிகளுடைய வார்த்தைக் கிணங்கி, அப்போது கோலகுண்டாவிலிருந்த மகமதியரைத் தமக்கு உதவியாகவும், நரசிங்கராயலுக்கு விரோதியாகவும் வரவேண்டுமென்று சங்கதி சொல்லி யனுப்ப, அந்தக்கோலகுண்ட சுபாசாஹிபவர்கள், பழம் நழுவி பாலில் விழுந்ததைப்போல இக்கருமத்திற்கு உடன்பட்டு உடனே ஒரு பொருஞ்சேனையோடுவந்து, நரசிங்க தேவராயலு ஸமஸ்தானத்தின் பலபக்கங்களிற் புகுந்துக் கொளையடித்துக் குடிகளைக்கொலைசெய்து வருவதாகச் சங்கதி எட்டவே; உடனே நரசிங்கராயலு தமது தக்ஷணயுத்தத்தைவிட்டு விட்டு, தம்சேனையோடு வடக்கே போய், தம் ஸமஸ்தானத்தில்புகுந்துகொள்ளையடித்துக்கொண்டிருந்த கோலகுண்டநபாபைத்தாக்கித் துரத்தியடிக்க, அந்த நவாபின்சேனை அதிகமாகவும் பலமுள்ளதாகவும் இருந்தமையால், அவர்கள் நரசிங்கராயலுவைவடநாட்டில்கால் எடுத்துவைக்காதபடி துரத்தியடித்து க்கொண்டுவர, நரசிங்கராயலுதிகைத்துத்தெற்கேஇருக்கும் செஞ்சி, தஞ்சை. மதுரை நாயிடுமார்களைத்தமக்கு இப்படிப்பட்ட ஆபத்காலத்தில் உதவிசெய்யவேண்டுமென்று பலவிதமாகப் பஞ்சைபோல் கெஞ்சிக்கேட்டும்; இம்மூன்று நாயிடுகார்களும்

கொஞ்சமேனும் ஜாதியபிமானம், மதாபிமானம் தம்மரபாபிமானத்தில் புத்தியைநாட்டாமல்; கேவலம் பொருமை என்னும் பேயால்பிடிப்பட்டு மவுனம்சாதிக்க, அந்த நரசிங்க தேவராயலு மனமொடிந்து, தஞ்சையின் வடக்கே கள்ளர் சீமைக்குப் போய்ப் படாத பாடெல்லாம் பட்டு நொந்தார். இப்படிப்பட்ட காலத்தில் மைசூரார் கொஞ்சம் அவருக்கு உதவிச் செய்யவந்தாலும், தென்னாடுகள் செல்வத்திற் சிறந்து விளங்கியபடியால், இப்படிப்பட்ட நாடுகளில் சிலவற்றைத் தமது நாடுகளோடு சேர்த்துக்கொள்ளப் பேராசை கொண்ட கோலகுண்ட நபாபு, நரசிங்கராயலே அடக்கிய உடனே, செஞ்சிக்கோட்டைமேல் படையை நடதிக்கொண்டு போய் முற்றுகைப் போட்டார்.

இதை யறிந்த தஞ்சை நாயடு பேடித்தனத்திஞல் முன்னும் பின்னும்யோசித்துப்பாராமல்,எங்கேதமது கோட்டைக்கும் முற்றுகை போடப்படுமோ என்ற பயத்திஞல், தம் கோலகுண்ட நபாபின் பக்கம் சேர்ந்து, அவரிஷ்டப்படி நடப்பதாக இராயபாரியை அனுபபத் திருமலே நாயுடுவின் ஸ்திதி அபாயமாகும்படியாகிவிட்டது. ஆகவே அந்த ஆபத்தை நீக்கிக் கொள்ளத்தக்கபடி யோசியாமல், முன்மாதிரியாகவே துர்மந்திரிகளுடைய வார்த்தைகளேக்கேட்டு, தக்கணிநாட்டு நபாபாகிய இடில்கான் 'மகமதியருடைய உதவியை நாட, அந்த நபாபும் தமது 17,000-குதிரை வீரரைத் திருமலேநாயடுக்கு அனுகூலமாக அனுப்ப; அத்துடன் திருமலேநாயடுடைய 30,000 சேனையையும் சேர்த்துச் செஞ்சிக் கோட்டையின் முற்றுகையை நீக்க நடத்திக் கொண்டுபோஞர். இப்படி பெரும்சேனையை நடத்திக்கொண்டு போயும் காரியசித்தி யடையவில்லே. ஏனெனில் திருமலேநாயடுவின் பட்டாளத்தில் தெலுங்கர், தமிழர், கள்ளர், மறவர், மராட்டியர், மகமதியர் முதலான பல ஜாதியார்களிருந்தமையால்; அவர்கள் ஒருவருக்கொருவர் ஜாதிச்சண்டை, மதச்சண்டை செய்துகொண்டே வந்து; கடைசியில் பெரிய கலகத்தை யுண்டாக்கி, மண்டைகளே யுடைத்துக்கொண்டு மாண்டுவரவே, கோட்டையின் கதவுகளேக் கவனிப்பாரற்றுத் திறந்துவைக்க, கோலகுண்ட நபாபின் சேனேகள் சமயம் பார்த்து யாதொரு தட்டுத்தடங்கலற்றுக் கோட்டைக்குள் பிரவேசித்துக் கொடியை நாட்டி, அதிலுள்ள தங்கம் வெள்ளி முதலான ஆபரணங்களேயும், பொக்கிஷத்தையும் எடுத்துக் கொண்டார்கள்.

இத்தியாதி அசம்பவங்களேக் கண்ட திருமலே நாயடு விசனத்தோடு தம் நாடடிற்குவந்து, இனித்தம்மையும்கூடவந்து தாக்குவர்களோவென்று யோசித்துக்கொண்டிருந்தபடியே; மமதைகொண்ட மகமதியர் மதுரைப்பட்டணத்தையும் முற்றுகைப்போட்டுத் தாக்கிஞர்கள். இந்தத்தாக்குதலேத் தடுக்கத் திருமலே நாயடுகோருக்கு அப்போது தக்க தண்டுதளாதிகள்

லாதிருந்ததைக் கருதியும், தமது இனத்தாராகிய தஞ்சைமன்னர் மக மதியர் பக்கம் சேர்ந்திருப்பதைக் கருதியும்; இனி வீணாகச் சண்டை செய்து பொருள் நஷ்டத்தையும், பிராண நஷ்டத்தையும் உண்டாக்கு வதைப் பார்க்கிலும், யுத்தச் செலவுக்குப் பொருள் கொடுத்தும், வருஷாந்திரம் கோலகுண்ட பீஜப்பூருக்குக் கப்பம்கட்டி வருவதாக ஒப்பந்தம் செய்தும் சமாதானப்படுத்த; மகமதியர் முற்றுகையை நீக்கித் தம் நாடுகளுக்கேகினார்கள். என்ன கால வித்தியாசம்! திருமலைநாயடு தமது சொந்த இனத்தாரும், ஆதி அதிகாரியுமாகிய விஜயநகர சமஸ்தான நரசிங்க தேவராயனுக்கு மாமூலாகக் கட்டிக்கொண்டு வந்த கப்பத்தைக் கட்டாமல் சுதந்திரம் நாடப்போய்; இப்போது வேறு ஜாதி, வேறு மதஸ்தருக்கு உதவி செய்ய, அந்த வேறு மதஸ்தரான மகமதியருக்குக் கப்பங்கட்ட நேர்ந்தது. இந்த வியாகூலத்தினாலும் திருமலைநாயடு மந்திரி வார்த்தைகளை நம்பியதனாலும் வந்த மகத்தான விசனத்தினால் மனஞ்சலித்து நிற்க, மறுபடியும் துர்மந்திரிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு மற்றுமோர் அவிவேக காரியம் செய்யலானார். அதாவது— கோலகுண்ட மகமதியர் தம் வடநாடுகளைவிட்டுத் தெற்கே வெகுதூரம் வந்துவிட்டபடியால், அந்நாடுகள் தக்க நாதனற்றுத் தவிப்பதையறிந்து, உடனே படையெடுத்துப்போய் தாம் போக்கடித்துக்கொண்ட நாடுகளையாவது பிடித்துக் கொள்ளலாமென்று எண்ணங்கொண்டு நரசிங்க தேவராயனு மதுரை, தஞ்சை, மைசூர், மன்னர்களுடைய சேனா உதவியைக் கேட்க; மைசூரார் மாத்திரம் உண்மையான தேசாபிமானத்துடன் சேனையை உதவியாக அனுப்பித்தரவே, அந்த நரசிங்க ராயனும் போய்ச்சண்டைசெய்து சில பல சில்லரைக்கோட்டைகள் பிடித்துக்கொண்டு வருகையில்; இந்த நரசிங்கராயனுக்கு உதவிசெய்த மைசூராரின் கொட்டத்தையடக்க மகமதியர் ஒருபடையை யனுப்ப, அப்படையானது திருமலைநாயடுவின் ஸமஸ்தானத்தைச் சார்ந்த தென்கனவாய் வாசல்வழிகளை விடும்படி கேட்க; உடனே விட்டுவிடும்படி திருமலைநாயடு உத்தரவுச்செய்ய, மகமதியர்சேனைகள் தாராளமாக மைசூருக்குள்போய், முற்றுகைப்போட்டுச் சின்னாபின்னமாக்கியதன்றியில், நரசிங்க ராயனுடைய சமஸ்தானத்தையும் தாக்கிக்கெடுத்தும், கடைசியாகத் தமக்கு காலமறிந்து உதவிச்செய்த இந்தத்திருமலைநாயடவர்களுடைய ஸமஸ்தானத்துக்கும் வந்தும், அவர் செய்த உதவி உபகாரத்தையும், சிநேகத்தையும் கருதாமல்; ஏராளமான பொருளைக் கப்பமாகவாங்கிக்கொண்டும், போகும் வழியில் தஞ்சைநாயடு இடத்திலும் மிக்க கப்பம் வாங்கிக்கொண்டும் தம் நாடுகளுக் கேகினார்கள்.

இக்காலத்தில் திருமலை நாயடுகாருக்குச் சம்பவித்தகஷ்டங்கள் இம்மட்டோடு முடியவில்லை. இந்தத் தக்ஷணநாட்டு நாயடுகார்களுக்கு

ஆபத்துவருங்காலத்தில் உதவிசெய்துவந்த, விஜயநகரத்தாரோடு பகைவ ரான தன்றியில், இவரது பக்கத்திலுள்ள மைசூர் நாட்டாரும் இவருடைய தேசாபிமானமற்றதுமான நடவடிக்கைகளினால் பகைவரானார்கள். இத் தியாதிகளைத் திருமலை நாயடு எண்ணியெண்ணி ஏக்கமுற்று, அதனால் வியாதியும் சம்பவித்திருக்கும் தருணத்தில், மைசூரார் இவருடைய தேசாபி மானமற்ற நடவடிக்கைகளினால் தமக்குண்டான நஷ்டங்களைக் கருதிப் பழிதீர்த்துக்கொள்ள ஓர் பெரும் படையெடுத்து வந்தார்கள்.

திடீரென்று மைசூரார் படையெடுத்து வருவார்களென்று கனவி லும் எண்ணாதிருந்த திருமலைநாயடு கண்டு, தம்மோடு அப்போதிருந்த ஸமஸ் தான சேனை போதுமான வலிமையோடு இல்லாதிருந்ததைக் கருதியும், பாளையக்காரர்களுடைய சேனை உதவியைச் சம்பாதிக்கப் போதுமானகால மில்லாமையைக்கருதியும், திகைத்துத் தமது ஸ்திதியைப்பற்றிச் சேதுபதிக் குச் சொல்லியனுப்ப; அவர் காலதாமதமின்றி 25,000 மறவர் சேனையோடு மதுரைக் கோட்டைக்கருகில் வந்துநிற்க, திருமலைநாயடு கண்டு வியந்து அதோடு தமது ஸமஸ்தான காப்புச் சேனையாகிய 35,000 பெயரைச்சேர் த்துத் தக்கதளகர்த்தர்களோடு மைசூராரைத் தடுக்க அனுப்ப, மைசூரார் கண்டு பயந்து இவ்வளவுபெரிய சேனையை எப்படிஜயிப்பதென்றெண்ணித் தம் காரியத்தைத் தந்திரத்தால் முடிக்கக்கருதித் திருமலைநாயடுவின் தள கர்த்தனாகிய பேராசைக்கொண்ட **சிவராமய்யனுக்கு** மிதமிஞ்சிய லஞ்சம் கொடுத்துச்சரிப்படுத்தி, உயுத்த விஷயத்தில் ஜாடையாக இருக்கும்படி செய்துவிட்டார்கள். இந்த வஞ்சனைக் கட்டுப்பாட்டை யறிந்த சேதுபதி, அந்த ராஜதுரோஹி பராம்மணதளகர்த்தனைப் பிடித்துச் சிறையில்போட்டுச் சுத்தவீரராக நின்று, மைசூராரிடம் சண்டை செய்ய, மைசூரார் பயந்து திண்டுக்கல்கோட்டைக்கேக, அங்குஅவர்களுக்கு மறுபடியும் 20,000 சேனை வந்துசேர, இரண்டுசேனைகளும் பிரமாத சண்டைசெய்து இருபக்கங்களி லும் 12,000 சேனைகள் கொல்லப்பட்ட பிறகு மைசூரார் தலைக்காட்டாமல் ஓடி விட்டார்கள்.

சேதுபதியின் இராஜ விசுவாசத்தையும், சுத்தவீரத் தன்மையையுங் கண்டு வியந்து, திருமலைநாயடு ஆநந்தபரவசமாகி அந்தச் சேதுபதிக்கு அநேக பஹுமானங்களைக் கொடுத்தும் "திருமலை சேதுபதி" என்னும் பிருதுகளையும், சிங்கமுகப் பல்லக்கும் கொடுத்தும், இனி இராமநாத புரத் தார் மதுரைச் ஸமஸ்தானத்துக்கு எவ்விதகப்பமும் கட்டாமல் சுதந்திரமா க்கியும்; திருப்புவனம், திருச்சுழி, பள்ளிமடம் முதலான கிராமங்களைக் கொடுத்தும், மரியாதைச்செய்து கொண்டாடினார்.

மைசூராரை மதுரையார் ஜயித்த பிறகு, திருமலை நாயடுகொருக்கு உற்சாகமுண்டாகி, அந்த மைசூரார் போகும்போது தமது குடிகளைச்

செய்த அவமானத்துக்குப் பழிதீர்த்துக்கொள்ள எத்தனப்பட்டார். அதாவது, மைசூரார் மதுரை நாட்டைவிட்டுப் போகும்போது தமக்கு அகப்பட்ட சேனைகளுடைய மூக்குகளையும், நிரபராதிகளாயிருந்த ஆண் பெண்களின் மூக்குகளையும் ஆயிரம் கணக்காக அறுத்துச் சாக்குகளில் கட்டி, மைசூர் மன்னன் களிக்கும்படி அனுப்பினார்கள். அதற்குப் பதிலாக அந்த மைசூர் மன்னனுடைய மூக்கையும் அப்படி அறுத்துக் கொண்டுவந்து தமக்கு காட்டவேண்டுமென்று ஒரு பெரியசேனையைத் திரட்டி, அதற்குத் தமது தம்பியார் குமார முத்துவீரப்ப நாயடுவை தளகர்த்தராகவும், இரங்கண்ண நாயடுவை உதவியாகவும் அனுப்ப, அவர்கள் திண்டுக்கல் வழியாகப்போய் மைசூர் நாட்டின்பல கோட்டைகளைத் தாக்கிப் பிடித்துக்கொண்டும்; கடைசியாக மைசூரையும் பிடித்து அதன் இராஜனை சிறையாக்கி; அவன் மூக்கையும், அவன் தளகர்த்தர் மந்திரிமுதலான சேனு வீரர்களுடைய மூக்குக்களையும்அறுத்து மூட்டைகள்கட்டித் திருமலைநாயடுகாரு களிருக்கும்படிமுன்னுடியாக அனுப்பிவிட்டுப் பிறகு குமாரமுத்து வீரப்பர், இரங்கண்ண நாயடு தமது தண்டுதளாதிகளுடன் ஜயவீரர்களாகத் திரும்பி வருகையில்; மதுரை ஸமஸ்தானுதிபதியும், அச்சமஸ்தானத்தைமுப்பத்தாறு (36) வருஷம் மிகமாக்ஷிமையோடு ஆண்டுவந்த திருமலை நாயடுகாரு 1659 ஆம் வருஷம், தமது 75 ஆவது வயதில் பரமபத மடைந்தார் என்று சங்கதிக்கேட்டு மகத்தான விசனமடையலானுர்கள்.

புகழுடம்பினராகிய திருமலைநாயடு பரமபதமடைந்தவித மின்னதென்று விவரமாக விளங்கவில்லை; ஆயினும் அது விஷயமாகச் சொல்லப்படும் இரண்டொரு கதைகள் பின்வருவனவே. முதலாவது— திருமலைநாயடு கோயில் கோபுர விஷயங்களில் கணக்கற்ற காசைப் பாழாக்குவதைப்பார்க்கிலும், அப்பணத்தைக்கொண்டு குடிகளுக்கு உபயோகமான குளம் குட்டை கால்வாய் முதலான வசதிகளை உண்டாக்கினுல் நலமென்று கிறிஸ்துமத போதகர் அடிக்கடி செய்துவந்த போதனையைக்கேட்டுவந்ததில்; நாயடுகாரு இனிக்கிறிஸ்து மதத்திலும் சேர்ந்துவிடுவாரென்ற பயத்தினுல், அவரைக் கொல்லக்கருதி, மீனுக்ஷியம்மன் கோயில் கர்ப்ப மண்டபத்தில் ஒரு குகையைப் போலத் தோண்டி மறைத்துவைத்தும், அக்கருமத்திற்கு முக்கிய காரணராகிய அம்மன் பூஜாரி குலசேகரபட்டன் என்றவரும், வேறு சிலரும் கூடித் திருமலைநாயடுவிடம்போய், மீனுக்ஷியம்மன் தன் கர்ப்ப மண்டபத்தினடியில் கணக்கற்ற திரவியம் வைத்திருப்பதாகவும், அத்திரவியத்தைத் தங்களை தனியாக வந்து எடுத்துக்கொண்டு போகும்படி உத்தரவு செய்ததாகவுஞ்சொல்ல, திருமலைநாயடும் அவ்வார்த்தையை உண்மையாக நம்பியும், சுத்தஸ்நானம் செய்தும் தனியாகப்போய், அந்தக்கர்ப்ப மண்டபத்தின் குகையிலிறங்க,

அவரிறங்கின் உடனே ஒரு பெரிய பலமான பலகைக் கல்லைப்போட்டு மூடிமறைத்துவிட்டு வந்து, திருமலை நாயடுகாரு மீனாக்ஷியம்மனுக்குள் ஐக்கியமாகிப் பொந்தியோடு கைலாசம் போய்விட்டார் என்று சொல்ல, எல்லாரும் நம்பிக்கொண்டதாகவும்; இரண்டாவது திருமலை நாயடுகாரு ஒரு பட்டருடைய மனைவியுடன் நட்புப் பாராட்டி வந்துகொண்டிருந்து ஒருநாளிரவு அவள் வீட்டுக்குத் தனியாகப் போய்த் திரும்புகையில்; வழியில் கைப்பிடிச் சுவரற்றிருந்த கிணற்றில் விழுந்துவிட, அந்தப்பட்டர் பார்த்து தன்மேல் பழி வந்துவிடுமெனப் பயந்து; மேலே மண்ணைப் போட்டு மூடிவிட்டதாகவும், பின்னும் பலர் பலவிதமான கதைகளைச் சொல்லிக் சொள்ளுகிறார்கள். இக்கதைகளை உண்மையானவைகளென்று நம்பக்கூடவில்லை. ஏனெனில், திருமலைநாயடு தமது ஸமஸ்தானத்திற்கு வந்த ஐரோப்பிய கிறிஸ்துமதப் போதகருக்குக் கேவலம் இடமுதலான வசதிகளை மாத்திரம் கொடுத்து உதவினாரேயன்றி, மற்றப்படி கிறிஸ்து மதத்தில் சிறிதும் பிரியங்கொள்ளவில்லை என்று, அக்காலத்துக் கிறிஸ்துமத போதகர்களே ரோமாபுரிக்குக் கடிதமெழுதி இருக்கிறதன்றியில்; அவரைப் பிராமணர்கள் கொலைசெய்திருக்கிற விஷயத்தில் உடனே அது சங்கதியையும் எழுதி இருப்பார்கள். மேலும் 1659 ஆம் வருஷம் திரிசிராப்பள்ளியிலிருந்து (Father Proenza) "பொரின்சா" பாதிரியார், ரோமாபுரிக்கு எழுதிய நிருபத்தில், திருமலைநாயடு சுத்த இந்து மதஸ்தரென்றும், அவருக்குக் கிறிஸ்துமதத்தில் நம்பிக்கை சுத்தமாகவே இல்லையென்றும், அவர் திடீரென இறந்துவிட்டாரென்றும் எழுதியிருக்கிறார்; ஆகவே, அவர் கிறிஸ்துமத விஷயமாகக் கொலைச் செய்யப்படவில்லை என்று ஸபஷ்டமாகிறது.

இரண்டாவது—பட்டர்மனைவி விஷயமாக இறந்த சங்கதியையும் நம்பக்கூடவில்லை. ஏனெனில், திருமலை நாயடவர்கள் இறந்தபோது அவருக்கு வயது கிட்டத்திட்ட 75. மேலும், அவருடைய அரண்மனையில் அஷ்ட லக்ஷ்மிகளெல்லாம் திரண்டு அவதாரமாக வந்தாற்போல 200 மனைவிகள் இருந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பெரிய வயதில் பெரும்பான்மையான சுலக்ஷணமுள்ள சுபத்தினிகளை விட்டுப்போய், அவக்கோலங்கொண்ட பட்டர் மனைவிக்காக அர்த்த ராத்திரியில் ஆரும் துணையற்றுக் கிணற்றில் விழுந்து செத்தாரென்று சொல்லும் கதையை எப்படி நம்பக்கூடும்? மதுரைச் சரித்திரம் எழுதிய மிஸ்டர் நெல்ஸன் முதலில் சொல்லிய கதை ஒருவேளை உண்மையாக இருக்கலாமென்று சொல்லுகிறார்.

இப்படிப் பலர் பலவிதமாகச் சொல்லி அபிப்பிராயங்கொண்டாலும், ஏதோ ஒரு விதத்தில் இறந்தாரென்று விவரமாகக் காட்டும் சாசனம் இன்னும் அகப்படாமையால் உண்மை சொல்ல வகையில்லை.

புகழுடம்பினரான திருமலைநாயடு ஒரு சேதுபதி விஷயத்திலும், தம்மினத்தாருக்கு விரோதமாக மகமதியருக்கு உதவிசெய்த விஷயத்திலும், துர்மந்திரிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு இராஜகீய தந்திரத்தில் பிசகு செய்துவிட்டாலும்; மற்ற விஷயங்களில் இவரைப்போல பிரபல தருமங்களினால் புகழ்ப்பெற்று 36-வருஷம் செங்கோல் செலுத்தியவர் அபூர்வம். இவர்முன்னோராகிய விஜயநகர ஸமஸ்தான கிருஷ்ண தேவராயலு, இராமராயலு எப்படிவடதேசத்தில் செல்வமும், சிறப்பும் பெற்றுவாழ்ந்ததைப்போலவே, அவர்கள் பின்சந்ததியாராகிய இத்திருமலைநாயடும் தென்தேசங்களில் சிறப்பும் செல்வமும் பெற்றுவாழ்ந்து செங்கோல் செலுத்தியதை, இன்றளவும் மதுரைப் புது மண்டபத்திலிருக்கும் அவரதுபிரதிமைக்கு புஷ்பமாலைகளைச் சூட்டி சுவாமியைப்போல வணங்கிக்கொண்டாடிவருகிறார்கள்.

திருமலை நாயடு சமஸ்தானத்தின் சிறப்பு.

திருமலை, நாயடுகாரு இறந்து போகும்போது, அவருடைய சமஸ்தானத்தில் மதுரை, திருநெல்வேலி, திருவனந்த புரத்தில் பாதி பாகம், திண்டுக்கல், இராமநாதபுரம். சிவகங்கை, கள்ளர்நாடு, புதுக்கோட்டை, மணப்பாறை, கோயமுத்தூர், திரிசிராப்பள்ளி, சேலம் முதலானவைகள் சேர்ந்திருந்தன. இவைகளில் அநேகம் பாளையப் பட்டுகளும், பாளையக்காரர்களும் இருந்து உயுத்தகாலங்களில் ஸமஸ்தானத்தைப்பாது காத்து வந்தார்கள். சேதுபதியும் வேறு சிலரும் இவருக்குக் கப்பம் கட்டாமல் இவரால் சுதந்திரம்பெற்றாலும், இவரைத்தமது சக்கிரவர்த்தியாகக் கொண்டு வணங்கி, இவர்கட்டளைகளின்படி தம் ஸமஸ்தானங்களையும் பரிபாலித்து வந்தார்கள். திருவனந்தபுர சமஸ் தானத்தாரும் கப்பம் கட்டிக்கொண்டுவந்தார்கள்.

பகைவர்கள்வந்து தாக்காதபடி திண்டுக்கல், தாராபுரம், கோயமுத்தூர், தென்னமநாயக்கனூர், சந்தியமங்கலம், அந்தியூர், ஈரோடு, காங்கியம், கரூர், விஜயமங்கலம், நாமக்கல், சேந்தமங்கலம், சேலம், மேலூர், செங்ககிரி, சாமப்பள்ளி, காவிரிபுரம், ஆத்தூர், அநந்தகிரி, அரவக்குறிச்சி, மூகலூர், சக்கிரகிரி, கம்மத்தி, செக்கம்கிரிமுதலான விடங்களில், பெரிய கோட்டைகளை (நாயடவர்களால்) கட்டிவைக்கப்பட்டன.

இவ்வளவு பெரிய ஜில்லாக்களையும், கோட்டைகளையும், திருமலை நாயடு எப்படி அடக்கி ஆண்டுவந்தாரென்று யோசிப்போமாகில்; இவர்

தமது முன்னோராகிய விஜயநகர கிருஷ்ணதேவராயலைப்போல பல தக்க சிப்பந்திகளை நியமித்துக் கொண்டு ஆண்டுவந்தாரென்று ஸ்டஷ்டமாகிறது. இவர் காலத்தில், இவர் சமஸ்தானத்தில் (1) மந்திரி=தளவாய், (2) தளகர்த்தர்=சேனுவீரன், (3) பிரதானி=வரவுசெலவு கணக்கு வைப்பவர், (4) இராயசம்=இரைட்டர் காரியதரிசியும். (5) பொக்கிஷாதிபதி=கஜானசி (6) ஸ்தானுபதி-இதரராஜாங்கங்களில்போய் அந்தரங்க சங்கதிகளை அறிந்து தெரிவிப்போர், (7) கணக்கன்=சர்கார் வசூல் வரவு செலவு கணக்குகளுக்கு அதிகாரி, (8) மணியகாரன்—அம்பலகாரன—கந்தாயம் வசூல் செய்யப்பட்டவன் ஆகிய எட்டங்கத்தார் இருந்து இராஜிய பரிபாலனத்துக்கு உதவிசெய்துவந்த தன்றியில்; குற்றவிசாரணை, சிவில்விசாரணை, மராமத்து இலாகா முதலான உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டு, அவரவர்கள் தம்தம் காரியங்களைச் சரியாகப் பார்த்து வருவதும் வராததையும் பற்றிவிசாரிக்க, நாயடவர்களே அடிக்கடி சமஸ்தான சபை கூடிவிசாரணை செய்து, தக்க உத்தியோகஸ்தர்களைச் சன்மானித்தும் துஷ்டர்களைத் தக்கபடி சிக்ஷித்தும் வந்தார். இப்போது இந்நாட்டில்இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் சர்க்கார் கந்தாயத்தைக் கிராம மணியம், கரணம் முதலான சிப்பந்திகளைக் கொண்டு எப்படி வசூல்செய்து வருகிறார்களோ இதேமாதிரியாகவேத்தான் திருமலைநாயடு காலத்திலும் வசூல்செய்தபடியால், இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் திருமலைநாயடு முதலான முன்னோர் வழக்கத்தையே இப்போதும் அநுசரித்து வருகிறார்கள்.

திருமலை நாயடுகாரின் வருமானம்.

திருமலை நாயடுகாருக்கு நிலக்கந்தாயமும், முத்து சிப்பி முதலானவைகளில் வரும் வருமானமன்றியில், தமது அதிகாரத்துக்குட்பட்ட பாளையக்காரர்களிடமிருந்தும் அதிக வருமானம் கிடைத்துக்கொண்டுவந்தது. 1742-ஆம் வருஷம் திண்டுக்கல் பிர்க்காவைச் சார்ந்த (20) இருபது பாளையப்பட்டுகளில் பாளையப்பட்டு ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 17,500 ரூபாய் வீதம் 3,50,000-ரூபாய் வசூலாகியது. இந்தக்கணக்கின்படி 72-பாளையப்பட்டுகளுடைய வருமானக்கணக்கை கூட்டினால் 12,60,000-ரூபாய் வருமானமானமாகிறது. மற்றொரு சாசனத்தினுல் திருமலை நாயடுகாருக்கு வருஷாவருஷம் பாளையப்பட்டுகளுடைய கப்பம்மாத்திரம் 18,90,000-ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மதுரை நாயடுகார்கள் விஜயநகரத்தாருக்கு வருஷா வருஷம் 4,00,000 பவுன் அல்லது 60,00,000 ரூபாய் கப்பம் கட்டி வந்ததாக பாதிரி விகோ (Father Vico) எழுதி இருக்கிறார்.

அப்படியாகில் அது மொத்தத்தில் மூன்றில் ஒருபாகமாகையால், மற்ற இரண்டுபாகம் அதாவது 12 00,000, பவுன் அல்லது 1,80,00,000 ரூபாய் ஆகிறது. மிஸ்டர் நெல்ஸனுக்கு அகப்பட்ட சாசனத்தினுல் திருமலைநாயடு காருக்கு நிலக்கந்தாயத்தில் இராஜப்பமாக வருஷம் 1க்கு பவுன் 8,80,000 அல்லது 13,20,000 ரூபாயும்; சாதாரண கப்பங்களினுல் பவுன் 1,89,000 அல்லது 28,35,000 ரூபாயும், கடற்சுங்கம், வரிவசூவில் 1,31,000 அல்லது 19,65,000 ரூபாயும், ஆக வருஷாந்திரவருமானம் 12,00,000 பவுன் அல்லது 1,80,00,000 ரூபாய் என தெரிவித்திருக்கிருர். இந்த வருமான மன்றியில், ஒவ்வொரு பாளையக்காரர்களும், இராஜபந்து பிரபுக்களும், ஸமஸ்தானத்தின் காப்புக்காக 3000 பதாதிகளையும், 200 குதிரைகளையும், 50 யானைகளையும் தயாராக வைத்திருக்க வேண்டும். இப்படியானுல் 72 பாளையப்பட்டுகளில் மாத்திரம் 2,16,000 பதாதிகளும். 14,400 குதிரைகளும்; 3,600 யானைகளும் தயாராக இருந்திருக்கவேண்டும். இப்படி ஏராளமான சம்பத்தையுடைய திருமலைநாயடுகாரு தம் சம்பத்தை யெல்லாம் சொந்தப் பந்துமித்திரர்களுக்குக் கொடாமல், கோயில் கோபுரம் குளம், மானியம் முதலான தருமங்களில் ஏராளமாகச் செலவுசெய்து சகலராலும் பிரதிஷ்டையடைந்தார்.

திருமலைநாயடுகாரு செய்வித்தசிலத் திருப்பணிகள்

(1) மதுரை மீனுக்ஷி சுந்தரேசுவரர் சன்னிதியைத்தக்கபடி பழுதுபார்த்து நித்திய நைமித்திக காரியங்களை நடப்பித்துவர அநேகந் தருமகர்த்தர்களை நியமித்தும்; அவர்களுக்கு அநேக மானியங்களைக் கொடுத்தும்; கோயில் பூஜை செலவுக்கு மாத்திரம் வருஷம் ஒன்றுக்கு 2 400 பவன் அல்லது 36,000 ரூபாயைக் கொடுத்துக்கொண்டும் வந்தார். கோயில் பிரசாதச்செலவுக்கு வருஷம் ஒன்றுக்கு 88,000 ரூபாய் வருமானமுள்ள பூமிகளையும், ஸ்தானிகர்செலவுக்காக அநேகங்கிராமங்களையும் கொடுத்தன்றியில், மீனுக்ஷி சுந்தரேசுவரருக்கு நவரத்தின ஆபரண ஆடைவாகனுதிகளுக்கு (மிருத்தியஞ்சய விலாசத்தின்படி) 1,23,00,000, ரூபாய்செலவிட்டும்; மீனுக்ஷியின் சன்னதிகர்ப்பக் கிரகம்முதல், கபாலி உடையார் சன்னிதி வரையுள்ள கட்டிடங்களைப் புதுப்பித்தும்; பிரம்மாண்டமான இராயகோபுரத்தையும் கட்ட அஸ்திவாரமு மிட்டார். மதுரைச்சீமை விருத்தாந்தம் 122 பக்கத்தில் திருமலைநாயடுகாரு மீனுக்ஷியம்மன் கோவில் செலவுக்குவிட்ட 150 கிராமங்களை சர்வமானியமாக விட்டிருக்க, அந்தகிராமங்களை இப்போதிய கவர்மெண்டார் எடுத்துக்கொண்டு, அவைகட்காக பிரதிவருஷம் 40,000ரூபாய் கொடுத்துக் கொண்டு வருகிருர்கள். அத்தொகையைக்கொண்டு 250 பிராம்மண சிப்பந்திகளும், ஏனையரும்கூட 700 சிப்பந்திகளை போஷித்து வரு

கிறார்கள். மேலும் திருமலைநாயடுகாரு இந்த க்ஷேத்திரத்திற்கு ஐந்தரை $5\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் விலையுள்ள ஆபரணங்களையும் கொடுத்தார்.

(2) வசந்த மண்டபம் அல்லது புதுமண்டபம். இது சுமார் 300அடி நீளமும், 20-ம், 30-கஜும் அல்லது 800அடி அகலமுமுள்ள அழகியகருங்கல் கட்டிடம். இதில் சிற்பாலங்காரமாக நான்கு வரிசைகளில், சுமார் இருபதடி உயரமும், விநோத வேலைப்பாடுமுள்ள 124-கல் ஸ்தம்பங்கள் இருக்கின்றன. இது வசந்த காலத்தில் சொக்கர் பத்துநாள் உற்சவம் கொண்டாடக் கட்டி வைக்கப்பெற்றது. இன்றும் அந்தஉற்சவத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தகட்டிடத்தில் ஏககாலத்தில் 1000பெயர் தாராளமாக உட்காரலாம். இந்தக்கட்டிடத்தின் பத்து ஸ்தம்பங்களில் திருமலை நாயடுகாரைப்போலவும், அவருக்குமுன் மதுரையை யாண்ட ஒன்பது மன்னர்களைப் போலவும், அவர்கள் மனைவிகளைப் போலவும், சுவாமியை வணங்கும்பாவனையாகவும் உருவங்களை ஸமஸ்தானத்தின் பிரதான் சிற்பியாகிய சுமந்திரமூர்த்தி ஆசாரியரைக் கொண்டுச் செதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்பத்துப் பிரதமைகளில் திருமலைநாயடு பிரதமைக்கு, அவருடைய பராக்கிரமத்தையும், மேல்நோக்கும் பார்வைக்குத் தக்கபடியாகவும்; அவருடைய தொப்பை வயிறு முதலானவை செம்மையாகத் தெரியும்படியாகவும், வர்ணம்பூசிப் பூமாலையிட்டு இப்போதும் அநேகர் வணங்கிவருகிறார்கள். அந்த விக்கிரகத்தின் அழகு அதை நேரில் பார்த்தவருக்குத்தான் ஸ்பஷ்டமாகும். அந்த திருமலைநாயடுகாரு விக்கிரகத்துடன் அவருடைய ஆறுபட்ட மகிஷிகளுடைய உருவங்களையும் செதுக்கப்பெற்றிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் சோழச் சக்கிரவர்த்தியின் குமாரத்தியாம். அன்றியும் அந்த மண்டபத்தின் மேல்பாகத்திலும் அவரைப்போலவே பிரதிமைசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதிமைகளைப் பார்த்தவர்களுக்கு இப்படிப்பட்ட மன்னரும் எப்படி மாண்டாரோ என்ற எண்ணம் ஜனிக்கும். இந்தக் கட்டிடவேலையைத் திருமலைநாயடு பட்டத்துக்கு வந்த இரண்டாவது வருஷம் ஆரம்பித்து 22 வருஷங்களாக 1,50,00,000 ரூபாய்கள் செலவிட்டுக் கட்டியதாக மிஸ்டர் வில்ஸன் சாஸ்திரியார் தெரிவித்தாலும்; O. H M S. S. சாசனத்தின்படி 1626வருஷம் வேலையாரம்பிக்கப்பட்டு 1645வருஷத்தில் 20, 000 பவுன் அல்லது 3,00,000 ரூபாய் செலவில்கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாளாகமத்தின்படி 1,00,00,000 ரூபாய் செலவிட்டிருக்கிறதாக தெரியவருகிறது. இந்தக் கட்டிடம் கட்டும்போது திருமலைநாயடுகாரு பிரதிதினம் காலையில் தாமே நேராகப்போய் மேல்விசாரணைச்செய்தும்; அங்கு வித்தகமாக வேலைசெய்யும் சிற்பிகளுக்குச் செங்கோலேந்திய தமது சிங்காரக் கைகளால் தாம்பூலங்கொடுத்தும் உத்ஸாகப் படுத்தினாராம். இந்த மண்டப உற்சவங்களுக்காக சுமார் 20,000 ரூபாய்

வருமான்முள்ள் திடியின்புத்தூர் என்ற கிராமம் மாணியமாக விட்டிருக்கிறதாக தாண்டவமூர்த்தி பண்டாரத்தின் திருப்பணிமாலையால் தெரிய வருகிறது.

(3) தேப்பக்குளம்—இது மதுரைக்குச்சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் (இப்போது ஆங்கிலேயர் உலாத்திவரும் இடத்தில்) வெட்டிக் கட்டப்பட்டிருக்கிறது. இத்தெப்பக்குளம் பக்கம் ஒன்றுக்கு 300 கெஜமாக, நான்கு பக்கங்களிலும் 1,200-கெஜ சுற்றளவுள்ள சதுரவடிவான இக்குளத்தைப் பலமான கற்களால் படிக்கட்டுகள், சுவர்கள், கைப்பிடிச் சுவர்களால் சிற்பாலங்காரமாகவும், சுந்தரமாகவும் கட்டப்பட்டிருக்கிற தன்றியில்; குளத்தின் மத்தியில் ஒரு தீவைப்போன்ற இடத்தில், அழகிய கருங்கல் கட்டிடக் கோயிலும்; அதைச்சுற்றிலும் அழகிய விருக்ஷங்களையுடைய உத்தியானவனமும், இலக்ஷம்பொன் அல்லது இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தெப்பக்குளத்தில் வருஷாந்திரம் உற்சவத்தைக் கொண்டாடி வருகிறார்கள். அக்காலத்தில் சொக்கநாதரைத் தெப்பத்தில்வைத்து இழுத்தும்; குளத்தைச்சுற்றி இலக்ஷம்கணக்கான விளக்குகளைவைத்தும், பாணவேடிக்கைகளுடன் கொண்டாடும்வைபவம்வியக்கத் தக்கதே. இவைகளன்றிச் சொக்கநாதருடைய வெளிப்பிராகாரத்தையும், பெரிய கோபுரங்களையும் விலியநாதியார் கட்டிவைத்ததாகசிலரபிப்பிராயப் பட்டாலும்: அவைகளைத் திருமலைநாயடு கட்டிவைத்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஆயினும் மிருத்திஞ்சய கிரந்தத்தின்படி புராதனமும் பாழ்த்துப்போய்க் கொண்டுவந்த மீனாக்ஷியம்மன் கோயிலைத் தக்கபணச் செலவிட்டுப் புதிப்பித்தவர் திருமலைநாயடுகாரென்று சாதிக்கிறது: மேலும்மதுரையில் பிரமாண்டமான இராயகோபுரம் கட்டும்படி கடைக்கால் போட்டபோது, அவ்விதமாகவே தமது சமஸ்தானத்திற்கு உட்பட்ட 64 ஸ்தலங்களிலும் பெரிய கோபுரங்களைக் கட்டிவைக்கக் கடைக்கால் போட்டும், சில விடங்களில் பாதிக்கட்டிடவேலையையும் முடிப்பித்தனராம். இப்போது மதுரையில் கடைக்கால்போட்டு கட்ட ஆரம்பித்த இராயகோபுரத்தின் நான்குபக்கங்களிலும்நாட்டிருக்கும் ஒட்டில்லாத 4 கல் தூண்களின்உயரம் 60அடிகளாம். அவற்றின் அடி அஸ்திவாரத்தை அறிய வெட்டிப்பார்த்தபோது (13) அடி வெட்டவே, ஜலக்கண் ஊற்றெழும்பியதனால் பிறகுவெட்டமுடியாமல் விட்டு விட்டார்கள். இதனால் இந்தத்தூண்கள் நிலத்தின் அடியில் வெகு ஆழத்தில் நாட்டிவைத்திருக்கவேண்டும். இந்த கோபுரம் கட்டிமுடித்தால் ஓர்பெரிய பர்வதத்தைப் போலிருக்கும்.

இம்மட்டோ, தமது சமஸ்தானத்துக்குட்பட்ட அநேகஞ் சில்லரைக்கோயில் கோபுரங்களையும் கட்டிவைத்ததன்றியில்; தமது சமஸ்தானத்தில் வந்து வதிந்த சைவ வைணவ மதாசாரியர்களுக்கு மண்டபம்,

மாளிகை, முதலானவைகளைக் கட்டிக்கொடுத்தும்; தமது ஆசாரியரைச் சில விசேஷகாலங்களில் பல்லக்கிலேற்றியும், ஆசாரியருடைய பாதரட்சைகளை வேறு பல்லக்கிலேற்றி எடுப்பித்துக்கொண்டும், அவைகளுடன் தாம் பாதசாரியாக நகரபிரதக்ஷணமும் வருவாராம். இப்படி மத விஷயமாகச் செய்யவேண்டிய திருப்பணிகளை யெல்லாம் செய்வித்துத் தமது அந்தஸ்துக்கும் வாசத்துக்கும் வேண்டிய அரண்மனைக் கட்டிடங்களையும் கட்டினர்.

மதுரை திருமலைநாயடு மஹால் - இதையே திருமலை நாயடுகொருடைய அரண்மனையென்று சொல்லுகிறார்கள். இந்த அழகிய அரண்மனைக் கட்டிடம் திருமலைநாயடு காலத்தில், ஒருமைல் சுற்றளவு விஸ்தீரணமுள்ளவிடத்தில், விசாலமாகவும் உலகவாழ்வுக்கேற்ற விநோதமாகவும், பல கட்டிடங்களாக அமைத்துக்கட்டப்பட்டிருந்தனவாம். கால வித்தியாசத்தினல் அநேககட்டிடங்கள்இப்போது இல்லாமல்இடிந்துவிட்டதன்றியில்; இவரது பேரனுகிய சோக்கநாதநாயடு பட்டத்துக்கு வந்தபோது பெரும்பாலும் திரிச்சிராபள்ளியிலிருந்தே ஆண்டுவந்தபடியால்; மதுரையில் இவ்வளவு பெரிய அரண்மனை மஹால் அனுவசியமென்று எண்ணி இடித்து, அந்தச் சாமான்களை வண்டிவண்டியாகக் கொண்டுபோய்த் திரிச்சிராப்பள்ளியில் புது அரண்மனையைக்கட்ட அரம்பித்தார். அக்காலத்தில் அவருக்கு மந்திரியாக விருந்தவர் பார்த்துப், ''பெரியோர்கள் கட்டிய பிரபல கட்டிடத்தை இப்படிச் சின்னுபின்னமாக இடிப்பது அவிவேகமென்றும்; பாவத்தொழிலென்றும் தடுத்துவந்தமையால்; இப்போதிருக்கும் நவபத்கானு, சொர்க்கவிலாசமென்னும் அரைக்கால் பாகமான கட்டிடமாவது இடிப்படாமல் நின்றுவிட்டது. இப்போது கலெக்டர் கச்சேரியும், ஜெயிலும் இருக்கிற கட்டிடங்கள்கூட இந்த அரண்மனையைச்சார்ந்தனவென்று சில சாசனங்களினல் தெரியவருகிறபடியால்; இப்போதிருக்கும் மஹால் கட்டிடம் முன் திருமலைநாயடுகாலத்திலிருந்த கட்டிடத்தில் நான்கில் ஒருபாகமென்று திட்டமாய்ச் சொல்லலாம். இப்போதிருக்கும் கட்டிடம் 90-அடி நீளமும், 40-அடி அகலமுமுள்ள ஹால்களுள்ளதாகவும்; செங்கல சுண்ணும்பினல் 40-அடி உயரமும், 15-அடி சுற்றளவுமுள்ள பெரிய ஸ்தம்பங்களைக்கட்டி, அவற்றின் மேல் யாதொரு மரத்துலம் சட்டம், விட்டம் முதலான மரச்சாமான்களில்லாமல் சுத்த செங்கல் சுவர்களினல் வளைவு தார்சுபோட்டுக் கட்டப்பெற்றிருக்கின்றது. இதைச்சேர்ந்த மற்றக்கட்டிடங்களும், ஜலக்கிரீடை பாயி, மிருகாலயகளம் முதலானதுகள் இப்போ திருப்பதைவிட விசாலமானவைகளாகவும், அழகானவைகளாகவும் இருந்தனவாம். இந்தக் கட்டிடத்தை ஐரோப்பா கண்டத்தைச்சேர்ந்த,இட்டாலி ரோமபுரி சிற்பிகளைத் தருவித்துக்கட்டிவைத்ததாகக் கேள்வி. இஃது உண்மையென்றே நம்பவேண்

டியிருக்கிறது. இப்போது இதில் ரிஜிஸ்டிரேஷன் ஆபீசுமுதலான கோர்ட்டு கச்சேரிக ளிருக்கின்றன.

திருமலைநாயடுகாருடைய அரண்மனையின் விவரம்.

இந்தத்திருமலை நாயடுகாருடைய மாஹாலை அவர்காலத்தில் நேராக வந்துப் பார்த்த ஐரோப்பிய யாத்திரகர் ஒருவர் பின்வருகிறபடி எழுதியிருப்பதாக, கனம்டேயிலர், (Rev Taylor) தமது சரித்திரபுத்தகம், 2-வது வாலியம், 157-158-வது பக்கங்களில் மொழி பெயர்த்துப் பதிப்பித்திருக்கிறார்—அதன் கருத்தாவது- ''இந்தத் திருமலை நாயடுகாருடைய அரண்மனைக்குள் வடக்கே அல்லது கிழக்கேப்புகுந்துப் பார்த்தால், பிரம்மாண்டமான பத்துஸ்தம்பங்கள் கட்டப்பட்டு, அவைகட்கு கிழக்கே அகன்ற நீண்ட அழகிய ஆஜாரமும்; அதில் பதினெட்டு வாத்தியக்காரர்கள் சதாவாத்திய கோஷங்களைச்செய்துகொண்டிருக்க ; அதற்கு சற்று கிழக்கே இராஜபவனிக்குபயோகமான, தந்த பல்லாக்குகளும், வேறு பல விதம் விதமான மேனு பல்லக்குகளும் வைக்கப்பட்டிருந்தனவாம். அந்த ஆஜாரமண்டபத்துக்கு மேற்கே சற்றுவளைவாகவும், சிற்பலங்கார வேலைகளால் முடிப்பித்த அழகிய அரங்கவிலாசமும்; அதற்கு மேற்கே சிறந்த சந்திரமேடையும், அதைசசுற்றிவர ஸ்படிகத்தொட்டிகளும், மேலே கோபுரங்களைப் போன்ற ஸ்தூபிகளும், சிங்காரமாக அமைக்கப்பட்டிருந்தனவாம். அதற்கு வடக்கே, குருநில மன்னர்களை வைக்கும் இராஜசிறைச்சாலையும்,அதற்கருகே கத்தி கட்டாரி முதலான இராஜ ஆயுதச்சாலை இருந்ததாம்-அரங்கவிலாசத்துக்கு மேற்கே இராஜஸ்திரிகள் தங்கும்படியான அலங்காரமண்டபமும், அதற்கு தென்மேற்கு பாகத்தில் சுற்றுவளைவான விமானகட்டிடத்தில், பல விக்கிரகங்களை வைத்து பூஜை செய்துக்கொண்டும்; அதற்கு எதிரில் கருப்புஸ்படிகங்களினால் அமைத்தப் படிக்கட்டுகளும், வாசல்களும்,அரங்கவிலாசத்துக்கு கிழக்கே அனேக அழகிய அறைகளும், மேல் வாசல்களும் இருந்தனவாம். அவற்றிற்கு எதிரில் செதுக்கிய கற்களால் கட்டிய ஜலகிரீடைபாயும் (குளமும்) அதற்கருகில் அநேகபுஷ்பாதிச் செடிகளாற் பிரகாசித்த உத்தியானவனமும், சித்திராலங்கார மதில்களால் சூழப்பட்டிருந்ததனவாம்.

அதற்கு தென்மேற்கே, அகன்ற நீண்ட அழகமைந்த நடனசாலையும், அந்த நடனசாலையில் திருமலைநாயடுகாரு சொர்ணமயமான பீடத்தில் அடிக்கடிவந்து உட்கார்ந்து, தமது மந்திரி, தளவாய், பிரதானி, இராயசம் முதலான ஸமஸ்தானத்தின் உத்தியோகஸ்தர்கள்புடைசூழ, இராஜகீய விஷயங்களைப்பற்றி விசாரணைச்செய்துக்கொண்டிருக்க; அழகிலும் அறிவிலும் சிறந்த நாட்டியபெண்கள் அபிநயங்களுடன் பாடி ஆடி வர. தீவட்டி சலாம் முதலான மரியாதைகளைச்செய்து வந்தனராம். அந்நாடகசாலைக்கு

மேற்கே, அநேக கோபுரமண்டபங்களும்; அதற்குமத்தியிற் கருங்கல்லுகளினால் வெகு சுத்தமாகச் செதுக்கிக் கட்டிய சதுரமஹாலும் இருந்ததாம். அதற்குத்தெற்கே, இந்த உலகத்திலிருக்கும் சிற்பவேலைகளெல்லாம் கண்டு நாண முறும்படியாகவும், இணையற்றதாகவும், விசுவ கர்மாவே நேரில் வந்து அமைத்ததைப்போன்ற சொர்க்கவிலாசமிருந்ததாம். அதனழகு அதை நேரில் பார்ப்பவருக்கே விவரமாகுமேயொழிய, எழுத்தால் எழுதி முடியாதாம். அதன் மாடியின்மீது ஏறிப்பார்த்தால் மதுரைக்குவெகு தூரத்திலிருக்கும்காக்ஷிகள் செவ்வையாகதெரியுமாம். அதற்குமேற்கே கோபுர மாஹாலில் ஒரு பெரிய கருங்கல் கட்டிடமும்; அதற்குள் ஆனைத் தந்தங்களினாற் செய்து முடித்த அழகிய கட்டிடமும்; அதற்குள் அதிகவிலை உயர்ந்த இரத்தினங்களினாற் பதிப்பித்தமைத்த சிம்ஹாசனமும்,பொன்மயமான இராஜசிம்ஹபிருதுக்கொடி, குடை, முரசு முதலானவைகள் வைக்கப்பட்டிருந்தனவாம். அந்த சிங்காசனத்தில் நாயடவர்கள் நவராத்திரி உற்சவகாலத்தில், இரக்ஷாபந்தத்தோடு வந்து உட்கார்ந்து கொலுவிருப்பாராம். அந்த சொர்க்க விலாசத்திற்கு வடக்கு மேற்கு தெற்குப் பக்கங்களில் முறையே மூன்று சதுர மந்திரங்கள் சிங்காரமாக கட்டப்பட்டிருந்தனவாம். அரண்மனைக்கு எதிரில் இரட்டைக் குதிரை வண்டிகள் போய்வர, இரட்டை ரோட்டுகளும், அவைகளுக்குமேலே, மேல்மாடிக்குப்போக வழிகளும்; அவ்வழிகளிற்போனால் இராஜஸ்திரிகள் வந்து அந்தரங்கமாக நின்று ஊர்கோலமாகவரும் சுவாமி தரிசினைச் செய்யும்படியாக உப்பரிக்கைகளும், சிகரங்களும் கட்டப்பட்டிருந்தனவாம். இதேமாதிரியானஉன்னத உப்பரிக்கை சிகரங்கள் இரங்கவிலாசத்திற்கு மேலும்கட்டப்பட்டிருந்தனவாம். அந்த கட்டிடத்திற்கு மேற்கே, சிற்பலங்காரமாக செதுக்கிய கற்களால் கட்டப்பட்ட இரண்டு மந்திரங்களும், அவைகளில் இராஜ ஸ்திரிகளும், அவர்களுடைய தாதிகளும் புடைசூழ்ந்திருக்க புராணங்களைப்படிப்பதை கேட்டுக்கொண்டிருந்தனராம். அவற்றிற்குஅருகே, இராஜஸ்திரிகள் குளிப்பதற்காக அழகிய தடாகமும், அதைச்சுற்றிலும் அழகான உயர்ந்த மதில்கள் சூழ்ந்திருந்தனவாம். அதற்கு மேற்கே வேடிமருந்து கோட்டடியும், அதற்குப் பக்கத்தில் புலி கரடி முதலான மிருகங்களோடு சண்டை செய்யும் மல்லகஜட்டி கெரடிக்கொட்டடிகளும், அவற்றிற்கு வடக்கே இராஜபந்து மித்திரர்கள் வந்து தங்கும் படியான கட்டிடங்களும், தென்கிழக்கிலிருந்துவடமேற்குபாகம் வரையிற் கருங்கல்லுகளினாற் கட்டிய வெளி மதில்களும், தென்கிழக்காக இருந்த மதில்களுக்குள் சிங்கார உத்தியானவனமும், அதை நாயடவர்கள்போய்ப் பார்த்து வந்துக்கொண்டிருந்ததாகவும் — இரங்கவிலாசத்தில் அப்போது நாயகொருடையசகோதிரர் முத்துவீரப்பநாயகொருவதிந்துவந்ததைக்கண்டனராம்.

தமகம்— இது வைகைநதிக்கு வடக்கே இரண்டடுக்கு மெத்தையாகக் கட்டிவைத்த சிறிய கட்டிடம். இங்கு புலி யானை முதலான மிருகங்களைச் சண்டைக்கு விட்டு வேடிக்கைப்பார்ப்பதற்காகத் திருமலைநாயடு கட்டிவைத்தார். இப்போது இந்தக் கட்டிடத்தில் மதுரை கலெக்டர் குடியிருக்கிறார். இம்மட்டோ, காசி இராமேச்சுரம் போவோருக்கு அநேக ரோட்டுகளையும், சாலைகளையும், சத்திரங்களையும், தண்ணீர்பந்தல் முதலான ஏராளமான தருமங் களையும் செய்வித்திருந்தார்.

நாயடவர்களுக்குப்பல வர்ணமுள்ள பட்டுத்துணிகளை தரித்துக் கொள்வதில் விருப்பமதிகமாகையால், அவைகளை செய்துக்கொடுக்கச் சவுராஷ்டிரநாட்டிலிருந்து பட்டுநூற்காரரைத் தருவித்துத்தமது நகரிக்கருகில் வதியும்படி செய்வித்தார்.

திருமலை நாயடுவின் காலசரிதை.

பாதகண்டத்தில் மோகல் இராஜியத்தை ஸ்தாபித்த பேபரைப் போல திருமலை நாயடும் தினசரி சரித்திரத்தை எழுதிவைத்திருந்தால் இக்காலத்தாருக்குப் பலவிதத்திலும் பயன்படும். அவர் அப்படி எழுதிவைக்காமையால், சாசனங்களைக் கொண்டும், புராதனரான பல பெரியோர் பாரம்பரை யாரைக் கண்டும், கேட்ட சங்கதிகளைக் கொண்டே எழுதவேண்டி இருக்கிறது.

திருமலைநாயடு, இந்நாட்டின் சில சோம்பேறி மன்னர்களைப் போலன்றிச் சூரியோதயமாவதற்கு முந்தியே எழுந்து, படுக்கை விடுமுன் பரமேசுவரனைத் தியானித்தும்; பிறகு தண்டால் கரிலா முதலான கரடிகளைச் செய்துகொண்டு வெளியில் வந்தும்; கால்கை கழுவித் தந்தசுத்தி செய்துகொண்டும், சமஸ்தான அவசரக் காரியங்களிருந்தால் உடனே இராஜசபை யைக் கூட்டிக் காரியங்களைக் கிரமமாக செய்து முடிப்பார். சமஸ்தான அவசரக்காரியங்கள் இல்லாவிட்டால்.கோவில் முதலான திருப்பணி வேலைகளைப் போய்ப்பார்த்து வேலைசெய்வோரை உற்சாகப்படுத்திவருவார். சில சமயங்களில் தமகத்துக்குப் போய் வேங்கை புலியையும், காட்டெருமையையும் வெளியில்விட்டு அவைகள் சண்டை செய்வதைப் பார்ப்பார். தாம் தொப்பை வயிற்றோடு ஸ்தூலதேகராகிப் பெரிய உருவமும், ஆஜானுபாஹுருமாக இருந்தும்; தமது குதிரைமேலேறி சிறுவாலிபனைப் போற் சவாரி செய்துகொண்டும், அப்படிச்சவாரி செய்யும்போது; ஒரு சிறுத்தைப் புலியையும், கலைமானையும் கூடுகளை விட்டு வெளியில் வந்து அவைகள் சண்டை செய்யவிட்டும்; தாம் ஆயுதபாணியாகக் கலைமானுக்கு உதவியாகக்

குதிரைமேல் சவாரிசெய்துக்கொண்டும் பீமனைப்போல் பாய்ந்துஓடுவார்.சில சமயங்களில் தாமிருக்கும் குதிரை வேகமாக ஓடும்போது, திடீரென அக்கு திரையை விட்டுக்கிளம்பி, அடுத்துவரும் குதிரை அல்லது யானைமேற் பாய்ந்து உட்காருவார். இத்தியாதி விளையாட்டில் இருபது வயது வாலிபனைப் போல நடிப்பார். இப்படித் தேகாப்பியாசத் தேகப்பயிற்சிசெய்து வெய்யில் அதிகமாகில், தமது அரண்மனைக்கு வந்து சுத்த ஸ்நானம் செய்து, பட்டு நார்மடி தரித்தும், நாமமிட்டும், தமது இஷ்ட தேவதைகளாகிய ஸ்ரீரங்கர், திருப்பதி கோவிந்தர், மதுரை சொக்கர், மீனாக்ஷி பூஜைகளை வெகு சிரத்தையாகவும், பயபக்தியாகவும், செய்து முடித்துக்கொண்டு போஜனசாலைக்குப்போவார். க்ஷத்திரிய ஜாதியைச் சார்ந்த இவர் மது மாமிசத்தைச் சாதாரணமாகச் சாப்பிடச் சுதந்திரமுடையவராக விருந்தும்; மதுவைப் பாஷாணமாகவும், மாமிசத்தை மருந்தாகவும் கொண்டு சாதாரணமாக சுத்தமான கந்தமூல போஜனத்தையே பெரும்பாலும் உண்பார்.

இப்படிச் சைவபோஜனம் செய்தபிறகு, சற்று இளைப்பாறி சமஸ்தான அவசரக் காரியங்கள் இல்லாவிட்டால், தமது அரண்மனையின் பல பக்கங்களில் வதிந்துவரும் இந்தரஜாலம், மகேந்திரஜாலம் முதலான வித்தைக்காரரைத் தருவித்து வேடிக்கைப் பார்ப்பார். அல்லது சொக்கட்டான், சதுரங்க ஆட்டங்களை யாடுவார். அல்லது சமுகத்திய சமஸ்கிருத தெலுங்கு, தமிழ் வித்துவான்களைத் தருவித்துச் சாஸ்திர விசாரணை செய்வார். அஷ்ட பிரபந்தமென்னும் அருமையான கிரந்தத்தை இயற்றிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், இந்தத் திருமலை நாயடுகாரு சமுகத்தில் உத்தியோகத்தி லமர்ந்திருந்தார். ஒருநாள் அந்த பிள்ளை பெருமாள் ஐயங்கார், ஸ்ரீரங்கத்தில் சித்திரை தேர்புறப்பட்டு வரும்போது, அந்த இரதத்தில் அலங்கரித்திருந்த துணிக்கு வகை மோசமாக நெருப்பு பிடித்ததாக ஞானக்கண்ணால் கண்டு சொல்ல; அதன் உண்மையை தமது கனவினாலும் கேள்வியினாலும் அறிந்த நாயடுகாரு, அந்த ஐயங்காரருக்கு ஸ்ரீரங்கத்தில் சலவைக்கல் மண்டப பிராகராத்தின் வடமேற்கு மூலையில் ஒரு அறையும், தளிகை பிரசாதமும் சதா கொடுத்துவரும்படி கட்டளை இட்டனுப்பினாராம். நாயடுகாருக்குவேதாந்த விசாரணையில் அதிக விருப்பமுடையவரானகையால், எப்போதும் சில வேதாந்திகள் அருகில் குடியிருந்துகொண்டே இருந்தனர். இவர் மதத்தில் வைணவராகவும், விசிஷ்டாத்து வைதியாகவும் இருந்தாலும், சைவம் முதலான மதஸ்தர்களைக் கௌரவித்துப் பாதுகாத்தும், கடைசியாகக் கிறிஸ்தவர் முதலான புறநாட்டு மதஸ்தர்களையும் போஷித்துப் பாராட்டிப் பாதுகாத்துவந்தார்.

இப்படிப் பகற்பொழுதை கழித்தபிறகு மாலை நெருங்கவே, மறுபடியும் ஸ்நானம்செய்தும், சுவாமியைத் தியானித்தும், தர்பார் ஆடையா பர

ணங்களை அணிந்து கொலுவுக்குவந்து, தீவட்டி சலாம்நடந்தவுடனே;இரா ஜகிய காரியங்களை விசாரிப்பார். அதாவது அன்றுடம் ஸமஸ்தானத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றி மந்திரி பிரதானி முதலானவர்கள் வந்து சொல் லும் சங்கதிகளைக் கேட்டும், அவைகளுக்குத் தக்க சமாதானங்களைச் சொல் லிவிட்டும், சமுகத்தில் முறையிட்டுக் கொள்வோர்களை நேரில் கேட்டும், அவைகளுகருத் தக்க பரிகாரங்களைச் செய்விக்கும்படி கிட்ட இருக்கிற உத் தியோகஸ்தர் களுக்குக்கட்டளை இட்டும், சமுகத்தைத் தரிசிக்க வந்த பிர புக்கள், பாளையக் காரர்களுக்குப் பேட்டி கொடுத்தும், அவர்களுடைய சுக க்ஷேமங்களை விசாரித்தும் வர, அர்த்தராத்திரி யாகிவிடும்.அப்போது நகரின் வெளியில் பதினெட்டு வாத்தியங்களும், பரத நாட்டியங்களும் நடக்கும். பிறகு நாயடவர்கள் கொலுவை விட்டு எழுந்து அந்தபுரத்துக்குப் போய் உண்டு உரங்குவார். இப்படிப்பட்ட மஹானுபாவர் சகாப்தம் 1584 கி-பி. 1662 - துன்முகிமுதல் பிளவ வருஷமாகிய 40வருஷங்கள் ஆண்டு மண்ணு லகை விட்டவுடன், அப்போது மைசூரைச் ஜயித்து மதுரைக்கு வீரதீரனு கத் திரும்பிவந்த **குமாரமுத்து வீரப்பநாயடு** திருமலைநாயடு காருக்கு இளை யதம்பியும், இராஜிய பரிபாலனத்துக்கு வேண்டிய சக்தி சாமர்த்தியங்களை யுடையவராகி, அவருக்குப் பாண்டிய நாட்டிற் பட்டங் கட்டவேண்டி யிரு க்க, யாதுகரணத்தைக் கருதியோ துர்மந்திரிகள் கூடி திருமலை நாயடு காரின் குமாரராகிய முத்து அலகாத்திரி நாயடுகாருக்கு மதுரையில் பட் டங்கட்டி வைத்தார்கள்.

ஸ்ரீ முத்து அளகாத்திரி நாயடுகாரு சமஸ்தானம்.

கி. பி. 1659 - ஆம் வருஷம் முதல் 1682 - ஆம் வருஷம் வரையில்.

இந்த முத்து அளகாத்திரி நாயடு சிறப்பும்சீரும் பெற்ற தமது சிறிய தகப்பனாராகிய குமார முத்து வீரப்ப நாயடுக்குக் கட்டவேண்டிய பட்டத் தை துர் மந்திரிகளின் சகாயத்தினால் தாம் கட்டிக் கொண்டதைப் பற்றி இவரைப் பலர் பலவிதமாக தூஷிக்கத் தலைப்பட்டனர். அக்காரணத்தி னால் சிலர் இவரைச் சுபத்தினிக்குப் பிறக்காமல்வைப்பாட்டி மகன் என்றும் சொல்லித் தூஷிக்க ஆரம்பித்தனர். அன்றியும் அக்காலத்தில் இவர் சிறிய தந்தை குமார முத்து வீரப்பரிடத்தில் தக்க தண்டுதோளாதிக ளிருந்தும்; இவரைக் கண்டிக்காம லிருந்த காரணம் தெரியவில்லை. ஒருவேளை இவரு டைய அதிகாரத்துக்குள் இருந்த சேனை அப்போதுதான் மைசூரில் பிரமா த சண்டைசெய்து களைத்திருப்பதை எண்ணியோ? அல்லது துர்மந்திரிகள் தமக்குத் துணை நிற்கமாட்டார்க ளென்றெண்ணியோ? மற்றெந்த ஏதுவை

ப்பற்றியோ, அவருக்கு இனுமாகக் கொடுத்த சிவகாசி, திருநெல்வேலி ஜில்லாவை யடைந்து, அங்கு போய் நாடு நகரங்களைச் சீர்படுத்தியும், தருமகைங்கரியங்களைச் செய்துகொண்டுங் காலத்தைக் கழித்தார். மதுரையின் புது மன்னராகிய முத்து அளகரி அல்லது முத்துவீரப்ப நாயடு இவ்விதமாக சிங்காசனமேறியவுடனே, தாயாதி சண்டை சச்சரவுகளற்று, நிம்மதியாக விருந்தபடியால்; மதுரை கவர்ன் மென்டார் மகமதியருக்குக் கட்டிக்கொண்டு வந்த அநியாயமான கப்பத்தை நிருத்தி, சுதந்தரம் பெறக்கருதி முதலில் திருசிராப்பள்ளிக் கோட்டையைப் பலப்படுத்தியும், தஞ்சாவூர் நாயடைத் தம்மோடு சேர்த்து மகமதியர்மேல் படையெடுத்துப் போய் பழயபழியைத் தீர்த்துக்கொள்ள பிரயத்தனப் பட்டார். இப்படிப்பட்டகாலத்தில் (1648-ம் வருஷம்) பிராமண வேடம்தரித்து 42-வருஷம் கிறிஸ்து மதத்தைப் போதித்தும், ஆத்மநிரியாணம் முதலானகிரந்தங்களை இயற்றிய இராபர்ட்டு நோபிலிபஸ் (Robert de Nobilbas) மதுரைநாட்டின் கலகங்களைக்கண்டு சகியாதவராய் மயிலாப்பூருக்குப் போய் இறந்துவிட்டார். இது சங்கதியைக்கேட்ட தஞ்சைமன்னர் தாம் மதுரைக் காரருக்கு உதவிசெய்யச் சரிப்படாதென்று சங்கதி சொல்லி யனுப்பிவிட்டு; தக்கணி நபாபாகிய இட்டல்கானுக்கு அநேக பஹுமானங்களை யனுப்பி தமக்கு நேசராக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்த மஹமதியமன்னன், தஞ்சைமன்னன் அனுப்பிய இனும் பஹுமானங்களை வாங்கிக் கொண்டாலும், சில நாள்கள் சென்றவுடனே ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு, தென்னிந்தியா முழுதையும் ஜயிக்க பேராசைக் கொண்டு 1659-ஆம் வருஷம், மார்ச்சுமாதம் 19ஆந்தேதி, தஞ்சாவூர் கோட்டைக்கே (பழய சிநேகிதத்தையும் பாராட்டாமல்) முற்றுகை போட, அக்கோட்டையைக் காக்க பலமான தண்டு பீரங்கிகள் வைத்திருந்தும், தற்செயலாய் அச்சேனைவீரனுக்கு ஒரு சிறு அம்பினுல் காயமுண்டாக, அதற்குப் பயந்தோட, மகமதியச் சேனைகள் கோட்டையைப் பிடித்துக் கொண்டும்; அதைக்காக்க ஒரு சிறுதண்டை விட்டுவிட்டும், அடுத்திருக்கும் மன்னார் கோயிலுக்கு முற்றுகைபோட, அக்கோட்டைக்கு யாதொரு தாக்குதலன்றி விட்டுவிட, பிறகு மகமதியர்சேனை ஜயவீரராகி, பெரும்பாறையில் பலமாகச்சேர்த்துக் கட்டப் பட்டிருந்த வல்லத்தின் கோட்டைக்கும் போனார்கள். அக்கோட்டை பலமான கோட்டையான படியால், அதில் போயிருந்த தஞ்சை மன்னன் முன்னும் பின்னும் யோசித்துப் பாராமல் பயந்து, அடுத்திருந்த காட்டுக்குள்போய் மறைந்து விடவே; அடுத்த கிராமங்களிலிருந்த கள்ளர்கள் அந்த வல்லத்தின் கோட்டைக்குள்புகுந்து, அங்குள்ள ஆடையா பரணங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டுபோய்விட, அதன்மேல் மகமதியரும்போய் அக்கோட்டையையும் பிடித்துக்கொண்டும்;

அதைக்காக்க ஒருசிறு சேனையைவைத்து விட்டும், வழியில் காணும் கிராமங்களில் புகுந்துகொள்ளையடித்தும் கொலைகள் செய்துகொண்டும், மதுரை ஸமஸ்தானத்துக் கருகில் வந்து விட்டனர். இந்த மகமதியர் வழிகளில் செய்த கொள்ளைகளினால் அங்கங்குள்ள குடிகள் பயந்து அடுத்திருக்கும் சத்தியமங்கலம், திரிசிராப் பள்ளிக்கு வலசையாக ஓடிப்போய் விட்டார்கள். இப்படி குடிகள் நாலாயக்கங்களிற் பறந்துபோகவே; பஞ்சமும், பேதி வாந்தியும் சம்பவித்து, மகமதியர் சேனைகளுக்கு உணவும், மருந்தும் கிடையாமல் மண்மாரியாக மாண்டுவிட்டார்கள். தப்பித்தவறி இருந்த சொற்ப சொத்தையும், கள்ளர்கள் புகுந்து கொள்ளையடித்துக் கொண்டார்கள். இத்தியாதிகளினால் மகமதிய மன்னர் மனமொடிந்து திரிசிராப்பள்ளி கோட்டைக்கருகில் வர; அந்த கோட்டையை முத்து அளகாத்திரியும் அவர் சேனைத் தலைவர் இலிங்கம நாயடும் அதிக கம்பீரமாக காத்துக்கொண்டிருந்தபடியால்; மகமதிய மன்னர் ஜபம்சயாமல், செலவுக்கு அதிக கஷ்டமாகி மூன்று வருஷத்திய கப்பத்தையாவது கொடுங்கள் என்று கெஞ்சியும்; மதுரையார் கொடாமையால், அவர்கள் தம்மூர்போய் சேருவதற்கு மாத்திரம் சொற்ப தொகையைக் கொடுக்க, அதைபெற்றுக் கொண்டு சேனையைக் கூட்டிக்கொண்டு தமது நாட்டுக்கேகினார்கள். இப்படி ஜெயம் பெற்ற முத்து அளகாத்திரி நாயடு மதுரைக்குப்போய் இராஜகீய காரியங்களைக் கவனிக்காமல், சிற்றின்பராய் ஸ்திரீகள் இன்பத்தில் மூழ்கி அதனால்வியாதி கண்டிறந்தார். இவர், கனம் டெயிலர் கணக்கின்படி சகாப்தம் 1594ஸூம் (கி. பி. 1672) சுபகிருதுமுதல் விரோதி விகிருதியாகிய பத்து வருஷங்கள் ஆண்டார்.

ஸ்ரீ சொக்கநாதர் அல்லது சொக்கலிங்க நாயடுகாரு ஸமஸ்தானம்.

கி-பி. 1659-வருஷம்முதல் 1682-ஸூவரையில்.

மாதர் மோகத்தில் மூழ்கி மடிந்த முத்து அளகாத்திரி நாயடு பட்டத்திற்கு, அவர் குமாரர் சொக்கநாத நாயடு வந்தார். அப்போது அவருக்கு வயது பதினாறு; ஆகவே, ஸமஸ்தான காரியக்களைத் தமது தகப்பனாரிடம் உண்மையாக இருந்த பிராமண பிரதானியும், பிராமண இராயசனும் நடத்திவந்தார்கள். வந்தாலுமென்ன? அவர்களுக்கு பேராசை யதிகரித்து, சமஸ்தானத்தைத் தம்வசத்திலேயே வைத்துக்கொள்ளக் கருதி, சொக்கநாதருக்கு வேண்டிய பந்து மித்திரர்களையும், அவர் க்ஷேமத்தைக் கருதிய பிரபுக்களையும், பாளையக் காரர்களையும் ஹிம்சித்தும், அவர்களைச் சமஸ்தான

வேலைகளிலிருந்து நீக்கியும்; அநேக அக்கிரம நடவடிக்கைகளைக் கையாடி வந்தார்கள். ஸமஸ்தான ஸ்திதி இப்படியிருக்க, முன்னொருகால் அதிக பிரபல ஸ்திதியிலிருந்து இப்போது மங்கலடைந்த தமது முன்னோராகிய விஜயநகர ஸமஸ்தானத்தை உயிர்பெற்றோங்க விரும்பி, அதன் அதிபர் நரசிங்க தேவராயலுக்கும், அவர் குடும்பத்தாருக்கும் தக்க உதவி செய்யவேண்டுமென்று கருதியும், செஞ்சிகோட்டை நாயகோருக்கு வேண்டிய உதவி செய்தும், அக்கோட்டையை மகமதியர் கையிலிருந்து பிடுங்க வேண்டுமென்றும், சொக்கநாதர் மனதில் தோன்றித் தமது தளவாயையும், தளகர்த்தர் லிங்கம நாயடுவையும் 40,000 சேனையோடு மகமதுசகோசியைத் தாக்க அனுப்ப; சமஸ்தான துர்மந்திரிகள் எதிரிக்கு முன்னாடியாக இந்தசங்கதியனுப்பியும், தளவாய் தளகர்த்தர்களுக்த்தகுந்த லஞ்சம் கொடுத்து சரிபடுத்திக்கொள்ளும்படி தூண்ட, மகமதிய நபாபும் அப்படியே செய்ய, சொக்கநாதநாயடுவின் சேனைகள் வீண்பணச்செலவுடன் திரும்பி வந்துவிட, இத்தியாதிகளைக்கண்டு சொக்கநாதர் கண்டிக்க; துர்மந்திரிகள் அவரைச் சமஸ்தானகாரியங்களில் பிரவேசிக்காதபடிசெய்தும், சிறையிலிருப்பவரைப்போல் இரண்டொருஅறைகுள்வைத்தும், அவருடன்யாரும்போய் பேசாதவிதமாகச் செய்தும், அவரது தம்பியாருக்கு பட்டம் கட்ட, லிங்கம நாயடு மூலியமாக பிரயத்தனப்படும்போது; இத்தியாதி சங்கதிகளை அரண்மனையின் ஒருஸ்திரீயினல் கேட்டு; சொக்கநாதர் இரகசியமாக சில வீரர்களைச் சம்பாதித்து மறைத்துவைத்துக்கொண்டிருந்து; மந்திரியும், இராயசனும் அருகில் வந்தஉடனே கண்ஜாடையால் தூண்டி, இராயசனை அந்த விடத்திலேயே துண்டுத்துண்டாகவெட்டிக் கொல்லுவித்தும்; மந்திரி பிராமணனைபடியால், அவரைக் கொலைசெய்யக் கூடாதென்றெண்ணி அவர்கண்களைப் பிடுங்கச்செய்வித்துதுரத்திவிட்டும் ;அவர்களோடு கலந்திருந்த லிங்கமநாயடையும் தக்கபடி சிக்ஷிக்க யோசிக்கையில், அவர் அசாத்திய வீரனைபடியால், "ஆகாதவனை அடுத்துக் கொல்" என்னும் பழமொழிப்படி முதலில் மரியாதையாக உறவாடி வருகையில் "குற்றமுள்ள நெஞ்சும் குதித்து ஆடிக்கும்" என்னும் பழமொழிக்கொக்க சொக்கர் எப்படியாவது தன்னைக்கொன்றுவிடுவானென்று ஓடிப்போய் தக்ஷணமகமது கோசியினிடம்சேர்ந்து சொக்கரோடு சண்டைசெய்ய 12,000 பதாதிகளையும் 7000 குதிரை வீரரையும் கூட்டிக்கொண்டு வந்தார். அப்போது திரிசிராப்பள்ளியைக் காக்க 50,000 சேனையிருந்தும், லிங்கமநாயடு உள் தந்திரமெல்லாம் அறிந்தவனைகையால் புதிதாகநியமித்த பிராம்மண மந்திரிக்கும் லஞ்சம் கட்டித் தந்திரமாகஜயிக்கப் பார்த்தார். இந்தச் சூதை யறிந்த சொக்கநாதர் அந்தப் புதுபிராமண மந்திரியையும் வேலைவிலிருந்து நீக்கிவிட்டு, தாமே நேரில் சேனையைநடத்திவர ஆரம்பிக்கவே, சேனைகள் தைரி

யம்கொண்டு ஒரேமூச்சாக நின்று மகமதியர் சேனையைத்தாக்க, அவர்கள் தோல்வியடைந்து தஞ்சை நாயடுவின் சமஸ்தானத்துக்கோடி, அவர் தயவைப்பெற்று மறைந்திருக்க, இது சமஸ்தானமெங்கும் பிரசித்தியாக, சொக்கநாதருடைய சக்தியையும், சுத்த வீரத்தனத்தையும் கண்டு சிறு பையன்கள் முதலானவர்களும் வலியவந்து அவர்பட்டாளத்தைச் சேர, 70,000 சேனையோடு தஞ்சைநாட்டின்மேல் படைஎடுத்துப்போக லிங்கமநாயடும் மகமதியரும் பயந்து செஞ்சிகோட்டைக்கு ஓட்டம் பிடித்தார்கள். தஞ்சைமன்னன் தாசானு தாசனுகி சமாதானம் செய்துகொண்டான்.

இந்தக்காலத்தில் (1662-ம்வருஷம்) மதுரையில் அநேக கெட்ட சகுணங்களுண்டாயின. அதாவது பிறந்த பிள்ளைகள் பற்களைப் பெற்றிருந்தனவாம். காணுத பூச்சிகளும், புழுக்களும் பிறந்தபயிர்களைப் பாழத்துப் போகச்செய்தனவாம். பிரஜைகள் யாதொரு வியாதியுமின்றி திடீரென்று விழுந்து செத்துக்கொண்டு வந்தார்களாம். நாட்டில் குடித்தனம் கெட்டுப் பஞ்சம் அதிகரித்ததாம், பஞ்சத்தால் செத்தவர்களைப் புதைக்க வகையற்று நாற்றமெடுக்க, அதனுல் வாந்திபேதிகண்டு கணக்கற்ற ஜனங்கள் மடிந்துவிட்டார்களாம். இத்தியாதி தூர்ப்பிக்ஷகாலத்திளுல் குடிகள்பயந்து நொந்த சமயத்தில் (1662 அல்லது 6 வருஷம்) மகமதியருடைய மந்திரியும், முன் மதுரை ஸமஸ்தானத்தில் மந்திரியாகவிருந்து மோசம் செய்ததனுல் சர்க்கார் வேலையிலிருந்து நீக்கிவிடபட்டிருந்த வனமய்யன் என்னும் பிராமணர் ஒருபெரும் (மகமதிய) சேனையைக்கூட்டிக்கொண்டு திரிசிராப்பள்ளியைத் தாக்கவர; சொக்கர் அதிக தைரியத்தோடு எதிர்த்து மகமதியர் சேனையைத் துரத்தியடிக்க, அவர்கள் திரும்பிப்போகும்போது வழியில்கண்ட கிராமங்களை எல்லாம் கொள்ளையடித்தும், குடிகளைவதைத்தும், குடிகளைக் கொளுத்தி குட்டிச்சுவராக்கிக்கொண்டும் போய்விட்டார்கள். இந்தயுத்தத்தில்தஞ்சை விஜயராகவனுநாயடு மகமதியருக்குதவிசெய்த காரணத்தைப் பற்றி சொக்கநாதர் படை;எடுத்துப்போய் வல்லத்தின் கோட்டையைப் பிடித்துக்கொள்ள, தஞ்சைமன்னர் தஞ்சமென்றுவந்து சமாதானம்செய்துகொண்டார்.

இப்படிமதுரை ஸமஸ்தானத்தின் மேல் மகமதியர் படைஎடுத்து வந்தபோது சேதுபதியானவர் தக்கசகாயம் செய்யாமையால்; அம்மறவர் நாட்டின்மேலும்படையெடுத்துப்போக,அச்சேதுபதிசொக்கருடையசேனையின் பலத்தைக்கண்டு பயந்து ஒருகாட்டுக்குள் போய் மறைந்துகொள்ள சொக்கர் திருப்பத்தூர், மானுமதுரை, புதுகோட்டை, காளியர்கோட்டைகளைப் பிடித்து சுவாதீனமாக்கிக் கொண்டும்; தமது சேனையைத் தமது அதிகாரிகள் வசத்தில் விட்டுவிட்டும், சிலவைதீக சடங்குகளுக்காக மதுரை

க்குப் போக, இதுசங்கதியறிந்த சேதிபதி திடீரென்றுவந்து சொக்கருடைய சேனையைத் தாக்க, சொக்கநாதரும் தமக்கு அகப்பட்ட கோட்டைகளும் வெற்றியும் போதுமென்று எண்ணி பெரும்பான்மையான தமது சேனையைத்தமது கோட்டைகளைப் பாதுகாக்கத் தருவித்துக்கொண்டார். 1666-வருஷம் நாட்டில்சண்டை சச்சரவின்றி சமாதான மேலிட்டோங்க, சொக்கநாதர் சொர்னகோகரணதானம் செய்தார். அதாவது. பசும்பொன்னினால் ஒருபசுவைச்செய்து அதனுள் இராஜன் புகுந்துவந்தபிறகு, அப்பொன் பசுவைப் பிராமணர்களுக்குதானம் செய்துவருவதேயாம். இந்த வழக்கம் இப்போது திருவநந்தபுரத்தில் நடந்துவருகிறது. சொக்கநாதர் இம்படி சமயசடங்குகளில் புகுந்து சமாதானமாக காலம்கழிக்கையில், இவருடைய மந்திரி பிரதானிகள் ராஜனுக்குத் தெரியாமல் குடிகளைவருத்தி ஏராளமான பணம் பிடுங்கிச் சொந்தஉபயோகப் படுத்திக்கொண்டு வந்தார்கள். இப்படிப்பட்ட துஷ்டதனமாக லஞ்சம்வாங்கும் உத்தியோகஸ்தர்களைத் தக்கப்படி சிக்ஷிக்காமல், அவர்களுக்கு சொல்ப அபராதம்போட்டுவந்து மிரட்டிவந்ததனால், அந்தத்துஷ்ட உத்தியோகஸ்தர்கள் தமக்கு விதித்த அபதாரத் தொகையையும் குடிகளைவருத்திப்பிடுங்கி படாதுபாடு படுத்தி வந்தார்கள். இப்படி மந்திரிபிரதானிகள் பரிதானம் வாங்கிக்குடிகளை வருத்திவரும் வழக்கம் மதுரையில் மாத்திரமல்ல, தஞ்சை, செஞ்சி ஸமஸ்தானங்களின் உத்தியோகஸ்தர்களுமிப்படியே செய்து வந்தார்கள்.

இப்படிச் சொக்கநாதருடைய உத்தியோகஸ்தர்கள் குடிகளை வருத்தி லஞ்சம்வாங்கி வந்ததோடு, சர்க்கார் பொக்கிஷத்திலும் பொய் கணக்குகளைஎழுதி கொள்ளையிட்டுவரவே, இராஜபொக்கிஷமும் பாழ்த்துக்கொண்டு வந்தது. இத்தியாதி அக்கிரமங்களைக் கண்டிக்க திரிசிராப்பள்ளியில் போய் தங்கி, தக்கஏற்பாடுகளைச் செய்யச் சொக்கருக்குச் சொகுசான அரண்மனையில்லாததைக்கருதி தன்பாட்டனார் திருமலைநாயகொரு எவ்வளவோ கஷ்டப்பட்டும், காசைச் செலவழித்தும் கட்டிய, மதுரை மஹால் அரண்மனையை இடித்து அதிலிருந்த அழகுள்ள ஸ்படிக ஸ்தம்பங்கள், விட்டங்கள், சட்டங்கள் பீடங்கள் முதலான கல்சாமான்களை இடிப்பித்து வண்டிவண்டிகளாக ஏற்றித்திரிசிராப்பள்ளிக்கு அனுப்பினார். இப்படி அந்தமாக்ஷிமைபொருந்திய மஹாலின் முக்கால் பாகம் இடித்தபிறகு, அப்போது மந்திரியாகிய சின்னதம்பிமுதலியார் பார்த்துப் பலவிதமாகத் தடுத்துவந்ததனால் இப்போதிருக்கும் கொஞ்சபாகத்தை மாத்திரம் மதுரையில் இடிக்காமல் விட்டுவிட்டார்.

இப்படிப்பட்ட காலத்தில் இச்சொக்கருடைய ஜன்மவிரோதியான லிங்கமநாயடு இவருக்கு ஆபத் சினேகிதரானார். இப்படியானதற்

குக் காரணம் தெரியவில்லை. இராஜகீய காரியமாக லிங்கமநாயடுவின் குமாரத்தியைச் சொக்கருக்கு விவாஹம் செய்துகொடுக்கச் சம்மதித்து இப்படிச்சமாதானமாக்கிக் கொண்டதாக ஒரு சாசனம் சொல்லுகின்றது. ஆனால் 1674-ஆம் வருஷம் சொக்கநாதர் தஞ்சாவூர் அச்சுத விஜயராகவலு நாயடவர்களுடைய குமாரத்தி மங்கம்மாளை விவாஹம்செய்ய விரும்பி தளவாய் வெங்கட கிருஷ்ணப்பநாயடுவைத் தூதாக அனுப்ப, அந்தத் தஞ்சைமன்னர் வெங்கட கிருஷ்ணம நாயடை இராஜசபையில் அவமானமாகப் பேசித் துரத்தியதால், அது சங்கதியைக் கேட்டசொக்கர், அந்த அவமான அழுக்கைத் தஞ்சைமன்னர் இரத்தத்தினல் கழுவியே தீரவேண்டு மென்று கருதி, ஒருபெரிய சேனையை வெங்கட கிருஷ்ணம நாயடுடன் அனுப்ப, இரு கக்ஷியாருக்கும் பிரமாதசண்டை நடந்ததில் விஜயராகவலு நாயடு முதலானவர்கள் கொல்லப்பட்டும்; பிறகு, அந்தத் தஞ்சைப்பெண்ணை (மங்கம்மாளை) விவாகம் செய்துகொண்டதாக தஞ்சாவூரு சரித்திரம் முறையிடுகிறது. இந்த விஷயத்தை தஞ்சை ராஜாக்கள் சரித்திரத்திலும், மிஸ்டர் சரவணமுத்துப்பிள்ளை எழுதிய மோகநாங்கி என்னும் நவநாடகத்தைப் பார்த்தாலும் விவரமாக அறியலாம்.

இவ்விதமாக விவாகம் செய்துகொண்ட சொக்கநாதர் வரவர சிற்றின்பப் பிரியராகியும் பாரதம், பாகவதம் இராமாயணுதிகிரந்தபடன காலக்ஷேபத்தில் காலம்கழித்து' சமஸ்தான வேலைகளில் அசட்டையாக இருப்பதைக்கண்டு, தளவாய் முதலான துர்மந்திரிகள் சொக்கருடைய தம்பியாகிய முத்து அளகாத்திரி நாயடுக்குக் கோள்கள்சொல்லி அவரையே ஸமஸ்தான பதியாக்கி தாம் ஸமஸ்தானத்தில் கொள்ளையடிக்க பிரவர்த்தித்தார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில் கோவிந்தப்பய்யன் என்ற ஒரு பிராமணர் முத்து அளகாத்திரிக்கு அந்தரங்கசினேகிதனும் மந்திரியுமாகி; சொக்கநாதரையே சொர்க்கத்துக்கு அனுப்பதக்க தந்திரங்கள் செய்துகொண்டு வந்தார். இந்த கோவிந்தப்பய்யர் முன் தஞ்சையில் மந்திரியாகவிருந்து, அந்தச் சமஸ்தானத்தை நாசமாக்கியவரென்று சிலருடைய கருத்து. சிலர் அந்தக் கோவிந்தப்பய்ய ருடைய சகோதரன் என்றும் சொல்லுகிருர்கள். சமஸ்தானத்திலிருந்த பெரிய உத்தியோகஸ்தர்களை எல்லாரையும் வதித்துக்கொண்டும், சின்னகதிரப்பன் முதலான வீரர்களை மனமொடிந்துபோகும்படி பேசியும், அவர்கள் கப்பத்தொகையை அதிகப்படுத்தியும், இப்படியே சொக்கநாதருக்கு பிரதிகூலமான காரியங்களையெல்லாம் செய்துகொண்டு வந்ததன்றியில் ; இரகசியமாக தஞ்சைக்குப் போய் அவ்விடத்திய அரசன் அளகிரி நாயடுவைச் சொக்கநாதருக்குக்

கப்பம் கட்டாதபடி தடுத்தும், அளகிரியைப் பகையாளியாக்கிவிட்டதாக ஒரு சாசனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சதிமோசம் செய்தவர் வெங்கண்ணனென்ற நியோகிபிராம்மணரென்று தஞ்சை சரிம் திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. மதுரை சமஸ்தானம் இப்படி சீர்கெ ட்ட ஸ்திதியி லிருப்பதை யறிந்த எக்கோஜி 1675-ஷு பெரும் சேனை யோடு வந்து சமஸ்தானத்தைச் சார்ந்த சில கோட்டைகளுக்கு முற்று கைப்போட்டு பிடித்துக்கொண்டும்; திரிசிராப்பள்ளியை மாத்திரம் சொ க்கருக்கு விட்டுப்போனார், இக்காலத்தில் ஸமஸ்தானத்தில் கடும் பஞ்ச முண்டாகிப் பல்லாயிரம்பேரைப் பரலோகத்துக்கனுப்பிவிட்டது.

இத்தியாதி அசம்பவங்களை அறிந்த எக்கோஜி தஞ்சையை வசமாக்கிக்கொண்டு தானே ராஜனுகப் பட்டங்கட்டிக் கொள்ளவே, மது ரை ஸமஸ்தானத்தில் சிலபிரதான பட்டணங்களைப் பிடிக்கவும், பிரபல சேனையைத்திரட்டிக்கொண்டு தக்காணத்து இடல்கான் வர, சொக்க நாதர் கேட்டு இனிச் சிற்றின்பத்திலும் பேரின்பத்திலும் காலம் போக் கிக் கொண்டிருந்தால் தமது இராஜியமே போய்விடுமென்று தெரிந்து திடீரெனஒரு வாலிபனைப்போல் கர்ஜித்து எழுந்தும் தமக்கு, அநுகூல ராகவிருந்தவர்களுடைய சேனைகளோடு தமதுசேனையைச் சேர்த்தும், சண் டைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். மகமதியரும், மைசூராரும்மயங்கி நிற்க, சிவாஜி என்னும் மஹாராஷ்டிர வீரன் 1677 ஷும் தென்தேச ங்களை நாடிவருகிற சங்கதி தெரிந்து பயத்தோடு பார்த்துக்கொண்டிரு க்க, சிவாஜியும் வந்து செஞ்சிகோட்டையைப் பிடித்துக்கொண்டும், தஞ் சையிலிருந்த தனது சகோதரன் எக்கோஜியைச் சினேகபாவங்காட்டி தருவித்துப் பிடித்து அந்தஎக்கோஜி கால்களில் விலங்கைமாட்டி, அவன் சொத்தைப் பிடுங்கப்பார்க்கையில்; எக்கோஜி தந்திரமாக விலங்கை நீக்கி விட்டு கொல்லிடத்தில் குதித்து நீந்திக்கொண்டு அடுத்தகாட்டில் மறை ந்துகொண்டான். இந்தவேளையில் வடக்கில் மோகல் சமஸ்தானத்துக் கும், விஜயநகரசமஸ்தானத்துக்கும் பிரபல சண்டைகள்உண்டாகப்போ கிறதாகச் சங்கதியைக்கேட்ட சிவாஜி தமது சொந்ததம்பி சந்தோஜிரா வைத் தக்ஷணசேனைத்தலைவனுக வீட்டுப்போனார். இது சமயமறிந்தசொ க்கநாதர் தஞ்சாவூரைப் பிடிக்கப்போகவே, எக்கோஜி அறிந்து தமது சகோதரன் சந்தோஜியிடம் போய் போதுமானபொருள் கொடுப்பதாக வும், இந்தச்சமயத்திற் உதவி செய்யவேண்டுமென்றும் வருந்திவேண்டிக் கொள்ள; சந்தோஜியும் சம்மதித்து எக்கோஜிக்கு உதவியாகப்போக சொக்கநாதர் திரும்பி திரிசிராப்பள்ளிக்கே வந்துவிட்டார். இப்படிசொ க்கநாதர் தஞ்சைக்குப்போன சமயமறிந்து, மைசூரா பெருப்படையோடு

வந்து இரண்டொரு கோட்டைகளுக்கு மூற்றுகைப்போட, அம்முற்றுகை யை நீக்கவகையற்று தத்தளிக்க நேர்ந்தது. அப்படியாவதற்குக் காரணம்.

சொக்கருடைய தம்பி முத்துலிங்கனுடைய துர்மந்திரியாகிய கோவிந்தப் பய்யன் தந்திரமாக சொக்கநாதருக்கு புத்தி சுவாதீனமில்லை என்று பறையடித்தும், அவரை சிறையில் போடும்படி செய்தும்; முத்துலிங்க நாயடுக்கு மகுடாபிஷேகம் செய்வித்து விட்டபடியால், கொடுங்கோலனுகிய கோவிந்தப்பயனுலும், முத்துலிங்கனுலும் குடிகள் அதிகமாகவருந்த சம்பவித்தது. இத்தோடுகூட 1677 வருஷம் டிசம்பர்மாதம் மலையாள நாட்டிற் பெய்த மிதமிஞ்சிய மழையினுல் திரிச்சி, மதுரைமுதலான நாடுகளில் அனேக கிராமங்களையும் குடிகளையும் வெள்ளம் வாரிக்கொண்டுபோக; பஞ்சமும் வாந்திபேதியும் பிரபலமாகி பல்லாயிரம் ஜனங்கள் பரகதியடைந்தார்கள். இப்படிப்பட்ட காலத்தில் முத்துலிங்க நாயடு மூடதனத்தினுல் முன்னும் பின்னும் யோசிக்காமல், சொக்கநாதர் அபிமான புத்திரனுக வளர்த்துவந்த ரஸ்தம்கானை தனது சேனைத் தலைவனுக நியமிக்க; அந்தமகமதிய தளகர்த்தனும் அதிகாரம் கைக்கொண்டபிறகு கோவிந்தப்பய்யனுடைய அக்கிரம நடவடிக்கைகளையும், முத்துலிங்கருடைய மூடதனத்தையும் அறிந்து, சமயம்பார்த்து சிறையில் வைக்கப்பட்டிருந்த சொக்கலிங்கரை விடுதலை செய்தும், அந்தச் சிறைச்சாலையில் முத்துலிங்கனையும், கோவிந்தப்பய்யனையும் போட்டு பூட்டி அப்போது ஸமஸ்தானத்தை வளைந்துகொண்டிருந்த மைசூராரைத் துரத்தியடித்தும் சொக்கநாதரைச் சுதந்திரம்பெறச செய்தான். இப்படிச்செய்த ரஸ்தம்கான் இரண்டு வருஷம் மரியாதையாக நடந்துகொண்டிருக்கையில், இந்தரஸ்தம்கான் தனக்குச்செய்த பழியைத்தீர்க்க பக்குவம் பார்த்துக் கொண்டிருந்த கோவிந்தப்பய்யர் அவன்மேல் பல துர்வதந்திகளையுண்டாக்கி, சேதுபதி முதலானவர்களுக்குச் சங்கதி ரகசியமாக அனுப்பித் தருவித்தும் ரஸ்தம்கானைத் துண்டுதுண்டாகவெட்டிக் கொல்லும்படி செய்தும், இப்படிச்செய்து சொக்கநாதருடைய தயவை மறுபடியும் சம்பாதித்துக்கொண்டான். சம்பாதித்தாலுமென்ன, 1682-ம் வருஷம் சொக்கநாதர் பாடு கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது. அதாவது இந்த ஸமஸ்தானத்தைப் பிடுங்கி வாயில் போட்டுக்கொள்ளமைசூரார் மறவர் சிவாஜி மகன் சம்போஜி, மேற்படியார் தம்பிஎக்கோஜி முதலானவர்கள் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

இந்நால்வரில் மைசூர் சேனைத்தலைவனுகிய குமாரராய்யன் தஞ்சை, செஞ்சிக்கோட்டைகளைப் பிடித்து அவற்றின் வார்சுகளுக்குக் கோடுக்கவிரும்பி, தமது பொதுப் பகையாளிகளாகிய மகமதியர், மராட்டியு

ரைத் தாக்க, சொக்கநாதருடைய உதவியை முதலில் நாடினார். இந்த வார்த்தைகளுக்கு சொக்கநாதர் இஷ்டப்படாமல், சோம்பலாகவும், அசட்டையாகவும் இருக்க, மைசூர் வீரன் எக்கோஜி சம்போஜியின் உதவியை நாடி, அந்த இரண்டு மராட்டியர் தமக்கு உதவிசெயதால், மதுரை நாட்டைப்பிடித்து மூவரும் பங்கிட்டுக்கொள்ளலாமென்று சங்கதிஅறிவித்தான். இந்தச் சூதையறிந்த மராட்டியமன்னர், மைசூர் வீரனைப்பிடித்து சிறையில் போட்டுவிட்டு, தமது சேனைகளைநடத்திக்கொண்டு மதுரைகோட்டை தவிர மற்ற சிறுகோட்டைகளை வசமாக்கிக்கொண்டுவர, மறவர்கள் மதுரைக்கொட்டையை யாதரித்தார்கள். இத்தியாதி அசம்பவங்களைக் கண்ட சொக்கநாதர் தமது நிர்ப்பாக்கிய ஸ்திதியை நினைந்துநினைந்து மனமொடிந்து 1682-ஆம் வருஷம் கனம் டெயிலர் சரித்திரத்தின்படி காப்தம் 1610- 2- 1688) பரிதாபிவருஷம் முதல் பிரபவ வருஷமாகிய 16 வருஷங்கள்ஆண்டு மரணமடைய, அவர்குமாரர் இரங்ககிருஷணமுத்து வீரப்பநாயடு சிங்காசனம் பெற்றார்.

ஸ்ரீரங்க கிருஷணமுத்து வீரப்பநாயடு. ஸமஸ்தானம்.

கி. பி. 1682 முதல் 1686வரையில்.

சொக்கநாத நாயடு பட்டத்துக்கு வந்தபோது வயது 16. அதாவது ஒருபாடசாலை வாத்தியாருக்குமுன் கைகட்டிக்கொண்டு பாடம் படிக்கவேண்டிய ஒருவாலிபனுடைய வயசு. அப்படிப்பட்டகாலத்தில் அவரைத் தக்கஉபாத்தியாரிடம்விட்டு படிப்பு சொல்லிக்கொடுத்தும், புத்திசாலியாக்கவேண்டியதைவிட்டு; பெரிய ஸமஸ்தானத்தைஆள விட்டதினால் கல்வியறிவும் அனுபவமுமற்று ஸமஸ்தானத்தைச் சின்னபின்னமாக்கிவிட்டார். அப்படிப்பட்டவருக்குப் பிறகு அவர் பட்டத்தையடைந்த அவர் குமாரருக்கும் வயது 15. ஆகவே ஸமஸ்தானத்தின் அநேக கோட்டைகளை அந்நியர் பிடித்துக் கொண்டதோடு, உள் நாடுகளில் கள்ளர்களே தம்மிஷ்டப்படி கொள்ளையடித்துக் கொண்டுவந்து தாமே குறுநிலமன்னராகிவிட்டார்கள்.

இப்படிப்பட்டகாலத்தில் இராமநாதபுரத்தின் சேதுபதி இறந்துபோக, இராஜசூரிய சேதுபதி அப்பட்டத்திற்குவர, அவர் பட்டமேரிய ஆறுமாதத்திற்குள் யாதொஒரு தப்புநடவடிக்கைகளை நடத்தியதாக தளவாய் வேங்கடகிருஷ்ணப்ப நாயடுக்குத் தெரிந்து அவர்இந்த சேதுபதியைப்பிடித்து சிறையில்போட, அங்குஇறந்தார். அவருக்குப்பதிலாக, அத்தன் முதலானவர்கள் சிலநாள்கள் சேதுபதியாக இருக்கினும், பழய சேதுபதியின் வைப்புக்குமாரராகிய இரகுநாதன் அல்லதுகிழவன் சேதுபதி பட்டத்தையடைந்து (36-வருஷம்) ஆண்டார்,

இந்தக் கிழவன் சேதுபதி காத்தாயி என்னும் ஒரு கள்ளஜாதிப் பெண் மேல் மோகங் கொண்டு கலியாணம் செய்துக் கொண்டதால் அவர் சகோதரர் இரகுநாதருக்கு "தொண்டமான்" என்று பட்டம் சூட்டி புதுக்கோட்டைக்கு அரசாக்கினாராம். இந்தக்கிழவன் சேதுபதி மதுரை மன்னனுக்குச் செய்த உதவிக்காக "பரராஜ கேசரி" என்ற பட்டப்பிருதைப் பெற்றார். நிற்க—மைசூராரும், மஹாராஷ்டிரர்களும் மதுரை ஸமஸ்தானத்தின் பல கோட்டைகளைப் பிடித்துக்கொண்டதன்றியில், மதுரை ஸ்ரீரங்க முதலான பெரிய கோயில்களிலிருக்கும் ஆடையாபரணங்களையும் அடித்துக் கொண்டு போக பிரயத்தனப் பட்டார்கள். இத்தியாதி அக்கிரமங்களைக் கண்டிக்க மதுரைஇளவரசருக்கு அப்போது சொத்துஞ்சேனையுமில்லாமல் சுவாமியே கதியென்றுசும்மாயிருந்து விட்டார். இப்படி இரண்டுமூன்று வருஷங்கள் செல்ல மைசூராருக்கும், மஹாராஷ்டிரருக்கும் பணக் கொள்ளையினால் பொறாமை யதிகரித்து. ஒருவரை யொருவர் தாக்கிக்கொண்டு தந்தம் நாட்டுக்குப் போய் விட, மதுரை சமஸ்தானத்தை மூடிக்கொண்டிருந்த மூடுபனியைப் போன்ற பகைவர் பயம் பாழ்த்தது.

அப்போது இந்த அரங்க கிருஷ்ண முத்து வீரப்பருக்கு 20-வயதாகிய தாலும், இயற்கையறிவும் காரிய நிர்வாக சக்தியும், சுறுசுறுப்பும், சுதந்திர நாட்டமும், விருத்தியாகிய தாலும்; உடனே தமது ஸமஸ்தானத்திலிருந்து லஞ்சம் பரிதானம் வாங்கும் உத்தியோகஸ் தர்களையும், பாவையரைக் கூட்டிக் கொடுக்கும் பாவிகளையும், குடிகளை வருத்தும் துஷ்டர்களையும் நீக்கிவிட்டு நல்ல படிப்பும், யுத்தியும், சத்தியமும், சாந்தமும், சுவாமி பக்தி முதலான குணச்சிறப்பு களையு முடையவர்களைத் தெரிந்தெடுத்து நியமித்தும், சர்க்கார் கந்தாயத்தைக் கிரமமாக வசூல் செய்யாமல் விட்டு டாழ்த்துக்கிடந்த பொக்கிஷத்தைப் பூரணமாக்கியும்;சமஸ்தானத்தின் ஒவ்வொருவேலையையும் ஒவ்வொருவரும் பிரதி நிமிஷமும் சரியாகச் செய்தார்களா இல்லையா என்பதைத் தெரிந்தும், மேல் விசாரணை செய்தும் வந்ததன்றியில், தாமும் கொஞ்சமேனும் சோம்பலையும், சுகத்தையும் விரும்பாமல், குதிரைமீது ஏறிக்கொண்டு போய் திருநெல்வேலியில் நடக்கும் வேலைகளையும், திரிசிராப் பள்ளியில் நடக்கிற வேலைகளையும் பார்த்து வருவார். சிலசமயங்களில் இரவில் வீதிகளில் திரிந்து வேவுகாரர்களை நம்பாமல் தாமே உண்மை கண்டு பிடித்தும், சில சமயங்களில் திண்டுக்கல்லுக்குப் போவதாகப் போய், வேறுவழியில் வேறு இடங்களில் உத்தியோகஸ்தர் களுடைய நடவடிக்கை களை நேரில் பார்த்தும் உண்மை கண்டு பிடிப்பார். இத்தியாதி விஷயங்களில் மதுரையில் இதற்குமுன் ஆண்ட எந்த மன்னனும் இப்படி அதிகாரம் செய்யவில்லை என்று குடிகளால் புகழப் பட்டதன்றியில் ; குடிகளும் தம் நேர் நிர்வாகங்களை நேரில்வந்து சொல்லிக் கொள்ள இடமும் கொடுத்தார். அதற்கு ஒரு உதாரணமாக.

இந்த வாலிப ராசன் திரிசிராப்பள்ளியில் ஆண்டு வருகையில், சில ஏழைக் கிறுஸ்தவர்கள் வந்து தாம் வசிக்கக் கொஞ்சம் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அரங்க கிருஷ்ணர் இரக்கம் கொண்டு கோட்டையில் எவருக்கும் உபயோக மில்லாமல் காலியாக யிருக்கும் ஒரு நிலத்தை அக்கிறுஸ் தவர்களுக்கு தரும்மமாகக் கொடுக்கும்படி சொல்ல, அந்த, இடத்தை முன்னடி யாக ஸமஸ்தான உத்தியோகஸ்தர் சூதுகளினுல் அறிந்த சில பிராம்மணர்கள் எனக்கு உனக்கு வேண்டுமென்று கலகஞ் செய்தும்; அரசனிடம் வந்து, **"அரசே அந்த விடத்தைக் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கக் கூடாது, அது எங்கள் சுவாமியாகிய விக்கிரகத்தை வைத்து பூசை செய்ய வைத்திருக் கிறேம், அதை அவர்களுக்குக் கொடுத்துவிட்டால் எங்கள் சுவாமிவிக்கிரக ங்களை எங்கே கொண்டுபோய் வைக்கிறது"** என, அரசன் கேட்டு, பிரா மண ரென்றும் சுஜாதி இந்து மதஸ்த ரென்றும் பாராமல், நிர்தாக்ஷண்யமாக "உங்கள் சுவாமிகளாகிய விக்கிரகங்களை வைக்க இடமில்லாவிட்டால் அவை களைக் கொண்டுபோய் ஆற்றில் போட்டுவிடுங்கள், உயிருள்ள சுவாமிகளாகிய, ஏழை சனங்கள் அந்த இடத்திலே வாழட்டும் என்று சொல்லிவிட்டாராம். இவ் வார்த்தையைக் கேட்ட பிராமணர்கள் பயந்து திரும்பி விட்டார்கள். இப்படி சுதந்திரம் காட்டியது கேவலம் பிராமணர்களிடத்தில் மாத்திரமன்று; மற்ற மேலான அதிகாரிகள் அக்கிரமம் செய்தாலும் அதைக்கண்டித்து வந்தார். அதற்கொரு திருஷ்டாந்திரமாவது,—டில்லியில் அப்போது மிக்க கம்பீரமாக ஆண்டுவந்த மொகலாய் பாதுஷா அவர்கள் வருஷத்திற் கொருதடவை தமது பழைய ஜோட்டைச் (செருப்பை) ஓரழகிய, பெரிய ஆனையின் அவுதாவில் வைத்தும், அதற்குத்தக்க சில நபாபுகளையும், பக்கிரிகளையும், சேனைகளையும், சேர்த்தும், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு இராஜ சமுகத்திற்கு அனுப்பியும், அந்தந்த ராஜர்கள் தம் தம் மரியாதைகளுடன் வந்து அழைத்துப்போயும் தமது ஸமஸ்தான சிங்காசனத்தின்மீதில் அந்த ஜோடுகளை வைத்தும், புஷ்பங் களைப்போட்டும் பூசை செய்தும் வணங்கியபிறகு, அந்த ஜோட்டுடன் கூடவந்த நபாபு பக்கிரி தண்டு தளாதிகளுக்குத் தக்க மரியாதைகள் செய்தனுப்பிக்க வேண்டு மென்றும், அப்படிபூசை செய்யாதவர்கள்சிட்சிக்கப்படுவார்களென்றும் சகல மன்னர்களுக்கும் தெரிவித்தும், தெரிவித்தபடியே நடத்திக்கொண்டும் வந்தார்கள்.

அந்த வழக்கத்தின் படியே அரங்ககிருஷ்ண முத்து வீரப்ப நாயடு ஸமஸ் தானத்துக்கும் அந்த பாதுஷாவின் சோடுகளைக் கொண்டுவந்த யானையும், பரி வாரங்களும் வந்து நகர்புறம் நின்று சங்கதி தெரிவிக்க, அரங்க மன்னருங்கேட்டு அட ! இப்படிப்பட்ட ஹீனமான பிழைப்பும் புருஷ ஜன்மத்துக் கடுக்குமோ! என்று எண்ணி தமது காரியஸ்தர்களைத் தருவித்தும், அவர்கள் மூலியமாக இராசன் தேகசவுக்கிய மில்லாதிருக்கிறூர் என்று சேதி சொல்லி யனுப்ப; அவர்களும் அப்படியே போய் சொல்ல, அம் மகமதியர் மகத்தான கோபங் கொண்டு, விதி யில்லாமல் சோடுதூக்கும் யானையை வாத்திய கோஷத்துடன் கொட்டைக்குள் விட்டு, யானையையும் தண்டு தளாதிகளையும் வெளியில் நிறுத்தி

விட்டு ஜோட்டை மாத்திரம் எறு பல்லக்கி லேற்றிக்கொண்டு இராஜ கொலு மண்டபத்துக் கருகல் வைத்தும், அங்கிருக்கும் அந்த நவரத்தின கசிதமானசிங்காசனத்தையும், அதன்மேல் அழகிய ராஜனும், அவரைச்சுற்றி மந்திரி பிரதானி முதலானவர்கள் சூழ்ந்திருப்பதையும் பார்த்து பெருமூச்சுவிட்டும்,தமது பல்லக்கில் வந்த ஜோட்டைக் கவனிக்காமல் அசட்டையாக இருப்பதைக் கண்டு கோபம் கொண்டும், பல்லக்கிலிருக்கும் ஜோட்டை எடுத்து வெளியில் வைத்து, அதை இராஜனுக்குக் காட்டியும், அதை இராஜ சிங்காசனத்தின் மீது வைத்து வணங்கவேண்டிய விவரங்களைச் சொல்ல; இளஞ்சிங்கமாகிய அரங்ககிருஷ்ணன் கோபத்தோடு கீழே குதித்துவந்து, அந்த ஜோட்டை வணங்காமல், அதைத் தன் காலில் மாட்டிக்கொண்டு: "இன்னொருகால் ஜோடெங்கே? உங்கள் பாதுஷாவுக்கு இந்த பழைய ஜோடுதவிர வேறு புது ஜோட்டை இனாமாக அனுப்பகெதியில்லையோ", வென்று பரிகாசமாகச் சொல்ல; அம்மகமதியர்களுக்கு கோபம் அதிகரிக்க; அவர்களை அருகிலிருக்கும் பிரம்புக்காரர்களை அழைத்து ஆள் ஒன்றுக்கு ஐந்தடி அடித்தனுப்புங்களென்று சொல்லி,அவர்கள் சேனையானையைத் துரத்திவிட்டாராம். அன்று முதல் பாதுஷா ஜோட்டைப் பூஜைசெய்ய அனுப்புகிறவழக்கத்தை விட்டாராம். இம்மாட்டோ! இன்னும் இந்தவாலிப நாயடுவின் சுதந்திர சாமார்த்தியத்தைப்பற்றி பலவிதக் கதைகளைச் சொல்வதுண்டு.

இந்தவாலிபநாயடு இப்படிப்பட்ட சுதந்திரம் விரும்பி யாகையால், இவருடைய மந்திரி பிரதானி உத்தியோகஸ்தர்கள் தம் இஷ்டப்படி எக்காரியமும் செய்ய இடமில்லை. ஆகவே இவருடைய சக்தி சாமார்த்தியத்தைக் கண்டமைசூராரும், மஹாராஷ்டிராரும், இவரோடு நேர்நின்று சண்டைசெய்யப் பயந்தார்கள். இப்படிப்பட்ட காலத்தில் இராமநாதபுரம் கிழவன் சேதுபதி எக்கோஜியின் உதவியினால் இந்த ரங்ககிருஷ்ண நாயடுக்கு விரோதமாகச்சண்டைசெய்ய யோசித்தாலும், இவருடைய சேனையின் பலத்தினால் சேதுபதியின் ஜபம் முடியவில்லை. அவருக்கு உதவியாகப் போன எக்கோஜியின் சேனையைத் துரத்தி தஞ்சாவூருக்குப் போகச்செய்தார். இந்த ரங்ககிர்ஷ்ணநாயடு சமரசஞானியாகி கிறிஸ்தவர்களையும் மரியாதையாக நடத்திவந்தாலும், மறவஜாதியார் கிறிஸ்தவர்களைத் தலையெடுக்காமல் கண்டித்து ஜான்-டி-பிரிட்டோ (John de Britto) என்ற போதகரையும் கொலைசெய்து போட்டார்கள். 1689-ஆம் வருஷம் இந்த ரங்ககிருஷ்ணம் நாயடுக்கு திடீரென்று அம்மை வியாதிகண்டு (சகாப்தம் 1619 ஹூ கி பி (1695) விபவமுதல் பவ வருஷமாகிய 7 வருஷங்களாண்டபிறகு) இறந்து விடவே. அவருடைய எகபத்தினி விரதத்தை மெச்சிய மனைவி "**முத்தம்மாள்**" உடனே உடன்கட்டை யேறப்போனாள். அப்போது ஸ்மஸ்தானத்துக்கு வேறு சந்ததி யில்லாமையாலும், அந்த முத்தம்மாள் பூரண கர்ப்பவதியாக இருந்தமையாலும், பிள்ளை பிறந்தவுடனே அந்த விரதத்தைச் செய்யலாமென்றும், அவருடைய மாமியார் "**மங்கமகாநும்**" மற்ற நெருங்கிய பந்து மித்திரர்களும் சொன்ன சத்தியவாக்கை நம்பியிருக்க, புருஷபிரஜையைப் பெற்று மறுநாளே உடன்சட்டையேற உத்தரவு கேட்க, இன்னும்

கொஞ்சகாலம் போகட்டுமென்று சாக்குப் போக்குகள் சொல்லிவர, அந்தம்மாள் பிரசவ அறையில் பன்னீர் வாங்கிக் குடித்து அதனால் சீதசன்னி கண்டு சுவர்க்கலோகபதவியை அடைந்தாள். ஏனைய பெண்டுகளைத் தம்மாதாவைப் போலபாவித்துவந்த இரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயடுக்குப்பிறகு அக்குழந்தைக்கு மூன்றுமாத வயதான உடனே, மதுராபுரி பட்டத்தைக் கட்டினாலும், அக்குழந்தைக்குப்பிரதிநிதியாக அவர் பாட்டியார் மங்கம்மகாரு ஆண்டுவந்தார்.

ஸ்ரீ மங்கம்மகாரு ஸமஸ்தானம்.

1687ஆ முதல் 1699ஆ வரையில்

மங்கம்மாள் இயற்கையாகவே தருமகுணமும் இராஜதந்திர ஞானமும், சத்தியமும், சுவாமி பக்தியு முடையவராகையால்; மதுரை சமஸ்தானம் திருமலைநாயடுகாருகாலத்தில் மேன்மைப் பட்டிருந்ததைப்போலவே அந்தம்மாள் காலத்திலும் மேன்மைப்பட ஆரம்பித்தது.

அந்தம்மாள் செய்ததருமங்களுக்குக் கணக்கில்லை.இராமேச்சுவர முதல்,காசி வரையில் யாத்திரைக் காரருக்கு வசதியான ரோட்டுகளையும்.சாலைவிருக்ஷங்களையும், சத்திரங்களையும், தண்ணீர்பந்தல்களையும், சுவாமிமண்டபங்களையும், கோயில்கோபுரங்களையும் உண்டாக்கிவைத்தார்.அவருடையதிருப்பணிகளில்சிலஇன்றளவும்அவர் பெயரைப் புகழ்ந்துக்கொண்டாடுகின்றன.அவர் காலத்தில்வைத்த சாலை விருக்ஷங்களில் சில இன்றளவும் அவர் பெயரைப் பாடிக்கொண்டிருக்கின்றன. அந்தம்மாள் இப்படி மிதமிஞ்சிய தருமங்கள் செய்ததற்கு காரணம் ஒருநாள் தாம் மறந்துபோய் தம் தாம்பூலத்தை இடதுகை விரலால் வாயிலிட்டுக் கொண்டாராம். அந்தப் பாவம்தீர இப்படிசெய்ததாக சிலர்சொல்லுகிறார்கள்; ஆயினும், அந்தம்மாள் உண்மையில் தருமமெல்லாம் திரண்டு ஒருங்கு வந்த இயற்கைத் தருமத்தாய் என்று சொல்லலாம்.

மங்கம்மாள் செய்த தருமங்கள் இந்து மதஸ்தர்களுக்கு மாத்திரமல்ல, ஏனைய மதஸ்தர்களுக்கும் செய்து வந்தார்கள். 1691-ம் வருஷம் (Father Mello) "மெல்லோ பாதிரி" யாரை மறவ நாட்டார் பிடித்துச் சிறையில் போட்டுக் கொலை செய்யத் தீர்மானித்திருக்கிற சங்கதி மங்கம்மாளுக்குத் தெரிய வந்த உடனே, அந்தப் பாதரியாருக்கு எவ்வித தீங்கும் செய்யாமல், உடனே விடுதலை செய்தனுப்ப வேண்டுமென்று தெரிவிக்க, அந்தச் சேதுபதியும் உடனே விடுதலை செய்து அனுப்பிவிட்டார்.

திருவனந்தபுர சமஸ்தானத்தார், மதுரை சமஸ்தானம் பலகுறைந்ததென்று எண்ணி தாம் கட்ட வேண்டிய கப்பத்தைக்கிரமமாகக்கட்டி வராமையால், 1697-ஆம் வருஷம் ஒரு சேனையை அவருடைய குலோன கோட்டைமீது அனுப்பினார்கள். அந்தச் சேனையைக் கண்ட திருவனந்த புர அரசன் முதலில் மதுரையாருக்குப் பயந்தவனைப்போல பாசாங்கு காட்டிப் பிறகு சமயம் பார்த்து தனது சேனையைவிட்டு மதுரைச் சேனையைச் சித்திரவதை செய்யும்படி செய்ய, அனேகர் மாண்டு சிலர் மாத்திரம் திரும்பி திரிசிராப்பள்ளிக்கு வந்துசேர்ந்தார்கள்.

இது சங்கதியை மங்கம்மாள் கேட்ட உடனே தமது சேனையை இப்படி அக்கிரமமாகச் சித்திரவதை செய்து பழியைத் தீர்த்துக்கொள்ள ஒரு பெரிய சேனையைத் திரட்டி தமது தளவாய் நரசப்பையரை அனுப்ப, அவரும் திருவநந்தபுரம் போய் பிரபல சண்டைசெய்து ஜயித்து ஏராளமான பொன்வெள்ளி நாணயங்களையும், பீரங்கிகளையும் எடுத்துக் கொண்டு அந்த ராசன் கட்ட வேண்டிய கப்பத்தையும்பாக்கி இல்லாமல் வசூல் செய்துகொண்டு வந்தார்.

1700-வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் சில பெரிய புலிகள் காட்டிலிருந்து வந்து குடிகளைக் கொன்று குடிகள் நடமாடாதபடி செய்துவருவதை மங்கம்மாள் காதில்விழ, உடனே தக்க மல்லக ஜட்டிகளையும், வேட்டைக் காரர்களையும் அனுப்பி அப்புலிகளைக் கொன்று அக்குடிகளுக்கு நிம்மதியை யுண்டாக்கினர். இந்தம்மாளுடைய தரும குணங்களைக் கேள்விப்பட்ட (Father Boachet) போசிட்டு பாதிரியார் இந்த ராஜ மஹிஷியை நேரில் கண்டு களிக்கவேண்டு மென்று தளவாய் மூலியமாக மனுவை யனுப்ப, மங்கம்மாளவர்கள் அந்தப்பெரியவரைத் தமது மந்திரி மூலியமாகத் தருவித்தும் அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படி கட்டளை யிட, தளவாய் நரசப்பையரும் அதேமாதிரியாக உத்தரவுகொடுக்க, அந்தப் பாதிரியார் அரண்மனைக்குள் வந்து, மந்திரியோடுக் கலந்துபேசித்தாம் மஹாராணியாருக்கு இனமாகக் கொண்டுவந்த கண்ணுடிக் குலோப் முதலானதுகளைத் தந்தனுப்ப, மங்கம்மாளும் அன்புடன் பெற்றுக்கொண்டு, தாம்அந்த புரஸ்திரீ யாகையால், வெளியில் வந்து அவரோடு பேசக்கூடாததைப் பற்றி விசனப்படுவதாகவும், பாதரியாருக்கு என்னவேண்டுமோ அதைச் செய்விக்கச் சித்தமாக இருப்பதாகவும் சொல்லி யனுப்ப, பாதரியார் கள்ளர் முதலான துஷ்டர்கள் கிறிஸ்தவர்களை வருத்தாமல் பாதுகாக்க வேண்டுமென, அப்படியே செய்வோமென சொல்லி அப்பெரியவரை இராஜபல்லக்கில் ஏற்றி சகல வாத்தியங்களோடு நகர்வலம் சுற்றி அவருடைய இடத்தில் கொண்டுபோய் விட்டுவரும்படி உத்தரவு செய்தார்.

இக்காலத்தில் தஞ்சை மஹாராஷ்டிர இராசன் திரிசிராப் பள்ளியை யடுத்த படுகை பூமிகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தமது நாட்டுடன் சேர்த்துக்கொண்டு வருவதை தளவாய் நரசப்பையன் அறிந்து, அக்காரணமாக ஒரு சேனையைக் கூட்டிக்கொண்டு, தஞ்சா வூருக்குப்போக, அது சங்கதியை யறிந்த மஹாராஷ்டிரர் சேனை யெதிர்த்து காவிரி நதியி லிறங்கித்தாக்க வர; அப்போது காவிரியில் புதிதாக வந்த பெரிய வெள்ளம் அநேக மஹாராஷ்டிர சேனு வீரரை அடித்துக்கொண்டு போய்விட; மதுரைச்சேனை தஞ்சாவூரைச் சார்ந்த சில கோட்டைகளைப் பிடித்துக்கொண்டும்; தஞ்சைக்கும் முற்றுகை போட; மஹாராஷ்டிர ராசா இந்த யுத்தத்துக்குக் காரணம் தமது மந்திரி, "வரபோஜி பாண்டின்" தான் என்று எண்ணி, அப்பண்டிதர் தலையை வெட்டிக் கொல்லத் தேடுகையில்; அந்த வரபோஜி நேரில் வந்து அரசே! இது என் குற்றமன்று, எனக்கு 8-நாள் வாயிதா கொடுத்தால் மதுரையாரைச் சமாதானம்

செய்து விடுகிறேன். என்று உத்தரவு கேட்டுக்கொண்டு, ஊரிலுள்ள வர்த்தகர், பிரபுக்களிட மெல்லாம் கடன் வாங்கியும், கஜானாவிலிருந்த பணத்தை எடுத்தும், கிட்டத்தட்ட 5,00,000-ரூபாய் சண்டைச் செலவில், முக்கால் பாகத்தை மங்கம்மாள் பாதத்தில் வைத்தும், மற்றபாகத்தைத் தளவாயின் தந்தை முதலான வர்களுக்கு இலஞ்சம் கொடுத்தும் சமாதானமாக்கி அனுப்பி விட்டார்.

1701-ஆம் வருஷம் மங்கம்மாளும் தஞ்சை மன்னரும் கூடி மைசூரார் மீதில் படை எடுத்தார்கள். அப்படிச் செய்வதற்கு காரணம்— மைசூர் மன்னர் காவிரி நதியின்மேல் பெறிய அணைபைக்கட்டி, அதன்ஜலத்தை எல்லாம் தனது நாட்டு பயிர் பச்சைகளுக்கு வடித்துக்கொள்ள, காவிரி நதியை நம்பியிருந்ததிரிசிராப்பள்ளி, தஞ்சை நன்செய்பயிர்கள் நஷ்டமடைந்து வந்தேயாம் மதுரைதஞ்சைசேனைகள் மைசூரை சேருவதற்குமுன், காவிரியில் பிரமாதமாகப் பிரவாகம் வந்து அந்தப்புது அணையை அடியோடு அடித்துக்கொண்டு போய்விட்டபடியால், தண்ணீர் தாராளமாக திரிச்சி தஞ்சைக்கு வரக்கண்டு சேனைகளைத் திரும்ப தருவித்துக் கொண்டார்கள்.

1702-வருடம் தளவாய் நரசப்பையன் தன்சேனையோடும், தஞ்சை சேனையோடும் கூடி தம் ஸமஸ்தானத்துக்கு அடங்கி நடவாமல் வம்பு செய்த கிழவன் சேது பதியோடு சண்டை செய்யப்போனதில்; சேதுபதியால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். என்ன விந்தை கேவலமான இராமநாத பாளையப்பட்டுச் சேனை பிரபலமான பாண்டிய நாட்டாருடையவும், தஞ்சை நாட்டாருடையவும் பெரிய சேனையைத்தாக்கி துரத்தி யடிக்கச் சம்பவித்தது. இதற்குக் காரணம் மதுரை தஞ்சை சேனைகள் பற்பல ஜாதி மகஸ்தர்களாகவும், தேசாபிமான மற்று கூலிக்கு மாரடிப்போராகவும் இருந்தார்கள், ஆனால் மறவர்சேனையோ ஒரேஜாதி, ஒரேமதம், ஒரே இனம், ஒரே எண்ண,மாகி தேசாபிமானத் தோடு சண்டை செய்ததினால் அச்சிறு சேனை பெரும் சேனையை வென்றது.

1704-அல்லது 1705-ல் மங்கம்மாளுடைய பேரனுக்கு மைனர் நீங்கி சமஸ்தானத்தை ஆளும்படியான வயது வந்துவிட்டபடியால், அந்தம்மாள் தனது மந்திரி அச்சயன் என்பவருடைய துர்ப்போதனை யினால் அப்போது இராஜியத்தை வாலீபனுக்குத் தரேனென; வாலீபன் கட்சியார் மங்கம்மாளைத் தந்திரமாக பிடித்து ஜெயிலில் போட்டதன்றியில்; வேண்டிய உணவுகளைத் தயார்செய்து கைக்கெட்டாத தூரத்தில் வைத்து; வதைத்து அதேவிசனத்தில் சாகும்படி செய்து விட்டார்கள். அந்தோ! என்ன அநியாயம்! இவ்வளவோடு விட்டார்களா? இந்தம்மாளைச் சொல்லாதவார்த்தைகளைச்சொல்லி நிந்தித்தார்கள். இந்தம்மாள் கல்வியும் நாகரிகமும் விருத்தியாகும் இக்காலத்திற் பிறந்திருந்தால் தன் ஜாதிக்கும், தன் தேசத்துக்கும் சிரோ பூஷணமாகப் பிரகாசிப்பார். கனம், டெயிலர் சரித்திரத்தின்படி மங்கம்மாள் சகாப்தம் 1635வது (கி .பி. 1713) யுவவருஷம் முதல் நந்தன வருஷமாகிய 18-வருஷங்கள் ஆண்டார்.

(விஜைய ரகுநாத அல்லது விஜையரங்க.)

சொக்கலிங்கநாயடு சமஸ்தானம்.

கி. பி. 1705-ஆம் வருஷம் முதல் 1741-ஆம் வருஷம் வரையில்.

மங்காத புகழ் பெற்ற மங்கம்மாளுக்குப் பிறகு அவருடைய பேரனுகிய விஜயரங்க சொக்கநாத நாயடு பட்டத்துக்கு வந்து 26-வருஷங்கள் ஆண்டார். ஆண்டாலுமென்ன, தர்மப்பிரபுவாகையால் பிரதிதினமும் கோயில் கோபுரங்களைக்கட்டி வைப்பதிலும்; அக்கிரஹாரங்களை ஸ்தாபிப்பதிலும், பிராமணர்களுக்கு வாரிவாரி கணக்கற்றுக் கொடுப்பதிலும்; பிரதி வருஷமும், திவ்விய தேசயாத்திரை செய்வதிலும்; தமது காலத்தையும், காசையும் தொலைத்து விட்டபடியால், ஸமஸ்தான காரிய கர்த்தர்கள் குடிகளைப் பல விதத்திலும் ஹிம்சித்து பொருள் பிடுங்கி படு பாடு படுத்தினார்கள். மதுரையிலிருந்த ஸமஸ்தான சேனைகளுக்கு கிரமமாக சம்பளம் கொடாமையால், பிரமாத கலகங்களுண்டாக அது சேதுபதி முதலானவர்களுடைய உதவியால் அடக்கப்பட்டது. இப்படி இராஜாங்க வேலையைச் சுத்தமாகக் கவனிக்காமல், இரவும் பகலும், விஷ்ணு தியானத்தில் காலம் போக்கியும், சுஜாதிகளுக்குள்ளுண்டான ஜாதி கட்டுப்பாடுகளின் விவரங்களை விசிதமாகியும், அன்னியஜாதியார் பலிஜவாரைப்போல பட்டம் தரித்துக்கொண்டு வருவதைக் கண்டித்துக்கொண்டும், இராக்காலங்களில் யாருக்கும் தெரியாமல் ஏகாந்தமாகதம்பூரைமீட்டிப் பாடி ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசித்துக் கொண்டே வந்தும் 1731-ம் வருஷம் பரமபத மடைந்தார். கனம் டெயிலர் சரித்திரத்தின் படி சகரப்தம் 1654- ஹூ (கி பி. 1713) விஜய வருஷமுதல் விரோதி விக்ருதி யாகிய 19- வருஷங்கள் ஆண்டார். இருவருக்கும் புத்திர சந்தான மில்லாமையால், ஸமஸ்தானம் இவர் மனைவி மீனுக்ஷியம்மாள் வசமாகியது;

ஸ்ரீ மீனுக்ஷியம்மாள் அதிகாரம்.

1731-ம் முதல் 1738-ம் வரையில்,

இந்த மீனுக்ஷியம்மாள் மதுரை சமஸ்தானத்தை ஆண்டுவந்த சங்கதிவிவரமாகத்தெரியவில்லை. ஆனுல் இந்த மீனுக்ஷியம்மாள் திருமலை நாயடுபட்டத்திற்குபாத்தியஸ்தரும், திருமலை நாயடவர்களுடைய தம்பிமாருடைய குமாரருமாகிய **குமார திருமலை நாயடுவின்** புத்திரர் **பங்காரு திருமலை நாயடுடைய** சிறு குழந்தையைச் சுவீகாரம் செய்து, அந்த பிள்ளைக்குச் சரியான வயது வருகிற வறையில் தமது சகோதரனுகிய வேங்கடாராயலு,பெருமாள் நாயடைபிரதிநிதிகளாகக் கொண்டு ஸமஸ்தான காரியங்களை நடத்தி வந்தார்.

இந்த நியமனம் தளவாய் வேங்கடா சாரியருக்கும், வேறு சிலருக்கும்திருப்தியைக் கொடாயைாமல், ஸ்வீகாரம் செய்துக்கொண்ட பிள்ளையின் பிதாவாகிய பங்காரு திருமலை நாயடு நேரான வார்சாகையினுல், அவரை விட்டு அவர் பிள்ளைக்கு பட்டங்கட்டுவது சரியல்ல வென்று சொல்லி, அந்த பங்காரு

திருமலைநாயடுக்கு பட்டம்கட்ட பிரயத்தனப் பட்டார்கள். இதனால் ஸமஸ்தானத்தில் இரண்டு கக்ஷிகளாகி, இக்கட்சிகளில் பங்காரு திருமலை நாயடு கக்ஷி பலமான கக்ஷியாக விருந்தபடியால், கோட்டைக்குள் புகுந்து இராஜ்யபரிபாலனத்தைக் கைக்கொண்டு மீனாக்ஷியம்மாளைத் தவிக்கும்படி செய்துவிட்டார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில் (1734-வருஷம்) ஆறுகாட்டு நவாப்பாகிய "டாஸ்டு அலிகான்" என்பவர் தனது ஜேஷ்ட குமாரராகிய "சப்தார் அலிகானுக்கு, தென்னாடுகளில் சிலவற்றைப்பிடித்து ஆளுவதற்கு கொடுக்கக் கருதி, தகுந்த சேனையைத்திரட்டி அதற்குத் தனது குமாரன் சப்தார் அலிகானையும், மருமகன் சந்தா சாய்பையும் தலைவர்களாக நியமித்துத் தஞ்சை மதுரை நாட்டார் கிரமமாக கப்பம் கட்டவில்லை என்ற சாக்குக்கொண்டு சண்டைக்கு அனுப்பினார். அவர்களும் அப்படியேவந்து தஞ்சையைப் பிடித்தும், அதைச் சந்தா சாஹிபின் தம்பி பாடாசாயுபு வசத்தில் விட்டுவிட்டும், திருவனந்தபுரத்துக்குப்போய் அதைப்பிடித்து சின்ன பின்னமாக்கியும், கடைசியில் 1734-ஆம் வருஷம் திருச்சிராப்பள்ளிக்கு வரப் பங்காரு திருமலை நாயடு கக்ஷிக்காரர்கள் சப்தார் அலிகானைக்கண்டு பேசி, மீனாட்சி ராணியை, சிறையில் வைத்து, அந்த ராஜியத்தைப்பிடுங்கி "பங்காரு திருமலை" நாயடுக்குக் கொடுத்தால் 30.00000 (30 - லக்ஷம்) ரூபாய் இனாமாகக் கொடுப்பதாகச் சொல்ல, நபாபும் சந்தோஷமாக அங்கீகரித்துக் கொண்டார். ஆனால், திரிசிராப்பள்ளிக் கோட்டை பலமான கோட்டை யாகவும், அதை மீனாக்ஷி ராணியின் பலமான காப்புச்சேனை காவல் செய்துக் கொண்டும் இருந்தமையால்; இக்கோட்டையைப் பிடிக்க சப்தார் அலிகானால் முடியாதென்று கண்டு, இரு கட்சியாரையும் தருவித்து அவரவர் களுக்கிருக்கும் நியாயங்களை விசாரித்துத் தக்க பாத்தியஸ்தர் களுக்கு சமஸ்தானத்தைத் தரப்படும் என்று சொல்லி இரு கட்சியாரையும் முச்சிலிக்கா எழுதித்தரும்படி சொன்னார். இந்தச் சமாதானத்துக்குச் பங்காரு திருமலை நாயடு கக்ஷியார் ஒத்துக்கொண்டாலும், மீனாக்ஷியம்மாள் க்கக்ஷியார் ஒத்துக் கொள்ள மாட்டோமென்று சொல்லி விட்டார்கள். அதன்மேல் இக்காரியத்தை முடிக்கும்படி **சந்தா சாஹிபை** விட்டுவிட்டு ஆர்க்காட்டுக்குப் போய் விட்டார்.

இந்த அசந்தர்ப்பத்தைகண்ட மீனாக்ஷியம்மாள் கக்ஷியார், சந்தாசாயிபு இந்த கக்ஷியில் பிரவேசியாமல் திரிசிராப் பள்ளியை விட்டுப் போய்விட்டால், நல்ல பகுமானம் தருவதாகச் சொல்ல, அவர் இந்தச் சமயத்தைப் பார்த்து, மீனாக்ஷி ராணியார் ஒருகோடி ரூபாய் இனாமாகக் கொடுத்தால் மாத்திரம் திரிசிராப் பள்ளிக்கோட்டையை ராணியார் வசமே இருக்கும்படி செய்து விடுவதாகச் சொல்ல; இந்த வெறும் வார்த்தையை நம்ப மாட்டோ மென்றும், குரான் மீது சத்தியம் செய்து கொடுத்தால் மாத்திரம் நம்புவோ மென்று இராணியார் கக்ஷியார் சொல்ல? சந்தாசாயபும் சம்மதித்து, இராணியின் தமயனாரை காவிரி கரையிலிருக்கும் தளவாய் மண்டபத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்; ஒரு செங்கல்லை எடுத்து அதைத் தங்கத்தட்டில் வைத்தும், அதன்மேல் அதைக்கொ

ரான் என்று காட்டியும், ஒரு கீன்காப்புத் துணியைப்போட்டு மூடியும், அதைப் பலதரம் தொட்டுக் கும்பிட்டும், அதன் சாக்ஷியாக மீனாக்ஷிராணியார் கக்ஷியை விட்டு வேறு கட்சியைச் சார்வதில்லை என்றும், இராணியார் கக்ஷிக்குவேண்டிய உதவிசெய்து சமஸ்தானம் இராணியரிடம் இருக்கவேண்டிய உதவியனைத்தும் செய்வதாக சத்தியம்செய்து கொடுக்க, இந்தச்சூதை யறியாத மூடர்களான மீனாக்ஷியின் கக்ஷியார் சந்தோஷமாகச் சம்மதித்துக் கொண்டு, சந்தாசாயபைக் கோட்டைக்குள் கூட்டிக்கொண்டு வந்தும், அனேக ஆடையாபரணங்களைக் கொடுத்தும், அனேக யானை குதிரைகளைத்தாம் கொடுக்க சம்மதித்த தொகைக்கு ஈடுகாட்ட; அவர் இன்றுமுதல் மீனாக்ஷியின் கக்ஷியிலிருப்போமெனப்பகிரங்கப்படுத்தினர்.

இக்காலத்தில் பங்காரு திருமலை நாயடும், அவர் குமாரரும் இனி திரிசிராப்பள்ளியில் குடியிருந்தால் பிராண அபாயமுண்டாகு மென்றஞ்சித் தத்தளித்துக் கொண்டிருக்கிற சங்கதி மீனாக்ஷியம்மாளுக்குத் தெரிய வந்தது. பங்காரு திருமலைநாயடு சரியான வார்சு என்றும், அவருக்குதவி செய்யவேண்டுமென்றும் எண்ணங் கொண்டே மீனாக்ஷியம்மாள் அவர் பிள்ளையைத் தத்து வாங்கிக் கொண்டார். ஆனால் கக்ஷிடா வேசத்தினாலும், சில துஷ்டர்களுடைய தூண்டுதவினாலும், இவர் விரோதியாகத் தோன்றினாரென்று எண்ணிப், பரிதாபப்பட்டும், அவரையும் அவர் குடும்பத்தையும் திண்டுக்கல் முதலான விடங்களில் போய் குடி இருந்துகொண்டு அவற்றில் வரும் வருமானத்தில் ஜீவனம் செய்யும்படி கட்டளைக்கொடுக்க, அவரும் விதியின்றி அங்கு போயினர்.

இந்த ஏற்பாடு சந்தாசாயபுக்கு திருப்தியைக் கொடாமையால்த் தகுந்த தண்டுகளுடன் வந்து இரு கக்ஷியாரையும் ஜயித்து ஸமஸ்தானத்தைப் பிடுங்கிக் கொள்ள ஆற்காட்டிற்குப்போய், 1736-ல் தக்க தண்டுகளோடு வந்து திருசிராப் பள்ளியைச் சுவாதீனம் செய்துகொண்டும், மீனாக்ஷியம்மாளைக் கேவலம் பேருக்கு மாத்திரம் ராணியாராகத் தோற்றும்படி செய்தும், அந்தம்மாளுடைய மந்திரிகளாகிய **கோவிந்தையன், இராமையன்** முதலானவர்களோடு 8,000-குதிரை பட்டாளத்தோடு பங்காரு திருமலை நாயடைத் தாக்கும்படி யனுப்ப, அவர்கள் முதலில் திண்டுக்கல்லைத் தாக்கியும், பிறகு மதுரைக்கும்வந்து தாக்க, பங்காரு திருமலைநாயடு பயந்து சிவகங்கை ராஜனிடம் அடைக்கலம் பெற்றார். அவர் அந்த நாயடு குடும்பத்தை வெள்ளிக்குறிச்சி கோட்டையில் வைத்து பாதுகாத்தார். இந்தச் சம்பவத்தினால் சந்தாசாஹிபு தைரியங்கொண்டு மதுரை ஸமஸ்தானத்தின் பெரும்பாகமான நாடுகளையெல்லாம் பிடித்துக்கொண்டும் திருசிராப்பள்ளிக்குப் போய், இனி மீனாக்ஷியைச் சுதந்திரமாக்கிவிட்டால் தனக்கு கெடுதியுண்டாக்கு மென்றெண்ணி, சிறையில் போட்டடைக்க யோசித்திருக்கும் சங்கதியையறிந்த அந்த மீனாக்ஷியம்மாள் மானத்துக்குப் பயந்து பாஷாணத்தை உண்டு பரமபதமடைந்தனள். கனம் டெயிலர் சரித்திரத்தின்படி சகாப்தம் 1659 (கி. பி. 1737) பரிதாபிமுதல் நளவருஷம் வரையில் ஐந்து வருஷங்களாண்டார். இக்காலத்தில் பங்காரு நாயடு புத்திசாலியாகவும், அவருடைய கக்ஷிக்காரர்கள் தைரியசாலிகளாகவும் இருந்தால், மீனாக்ஷியம்மாள் இறந்த உடனே ஸமஸ்தானத்தைக் கைப்பற்றி கொண்டிருக்கலாம். சொற்ப சேனையோடும், சொற்பச் சொத்தோடுமிருந்த சந்தாசாயபை எதிர்க்க பங்காரு நாயடு கக்ஷியாரிடம் போதுமான பொருளும், போர்வீரருமில்லாமையால, அவரைத் தடுக்கப்பயந்து அச்சந்தா சாயபை விட பலசாலியான ராஜன் உதவியை நாட பங்காரு திருமலை நாயடு பிரயத்தனப்பட்டார்.

அப்போது சத்தாராவில் மஹாராஷ்டிரர் பிரபல ஸ்திதியிலிருந்தமையால், அவர்களிடம் போய் முறையிட, அக்காலத்தில் நிஜாமலியும் கர்நாடக தேசத்தைப் பிடித்து டாஸ்து அலிகானைச் சிக்ஷிக்க விரும்பி இருந்தமையாலும், இரண்டு துரைத்தனத்தாரும் கூடி 60,000 குதிரை வீரரையும், 50,000-பதாதிகளையும் சேர்த்து 1739-வருஷம் இராகோஜிபான ஷூலேயோடு அனுப்பினார்கள்.

இதை யறிந்த டாஸ்து அலிகான் தமது சேனையை ஒரு இந்து தளகர்த்தனுடனனுப்பி எதிர்க்கும்படி சொல்லி ஆர தேசங்களிலிருந்த தமது குமாரன் சதாத்து அலிகானையும், மருமகன் சந்தாஸாஹபையும் உடனே ஆர்காட்டுக்குவரும்படி சேதி யனுப்பி சேனையைத் திரட்டிக்கொண்டிருக்கையில் மகாராஷ்டிர வீரன் மகமதியருடைய இந்து வீரனை மயக்கி, லஞ்சம் கொடுத்து சுஜாதி அபிமானத்தால் மகமதியரை மோசம் செய்ய வேண்டுமென்று சொல்லி சரிப்படுத்தி கொண்டும் புதுச்சேரிக் கருகில் வந்து சண்டை செய்தும், யானையின் மேலிருந்த டாஸ்து அலிகானை கீழே விழும்படி செய்துக் கொன்றுவிட, அந்த டாஸ்து அலிகானுடைய பெண்களையும் குடும்பத்தையும் மஹாராஷ்டிரர் கெடுக்காதபடி, அப்போது புதுச்சேரியில் கவர்னராக விருந்த (M. Dumas) டுமோஸ் என்பவர் தம் கோட்டையில் அடைக்கல மாக வைத்துப் பாதுகார்த்தார்.

இத்தியாதி சங்கதிகளை கேட்ட சப்தர்அலிகான் வேலூருக்குவந்து மறைந்துகொள்ள, மஹாராஷ்டிரர் கூடவேவந்து பிடித்து உயுத்த செலவுக்காகநூறு லக்ஷம் ரூபாயும், இந்து ராஜாக்களிட மிருந்து பிடித்த கோட்டைகளையும், அந்தந்த ராஜனிடமே தந்துவிட வேண்டுமென்றும் சமாதானஞ் செய்ய, இச்சமாதானத்தின்படி சந்தாசாயபு திரிசிராப் பள்ளிக் கோட்டையைத் தரமாட்டேனென்று சொல்ல, அவர்சேனையோடு மஹாராட்டியர் சண்டைசெய்தும், அவர் தம்பி படேசாயிபை சண்டையில் கொன்றும், சந்தா சாயிபைச் சிறைபிடித்து சத்தாரா பட்டணத்துக்குக் கொண்டு போனார்கள். இப்படிப்போன மஹாராஷ்டிரர், பங்காரு திருமலை நாயடுக்கு வாக்கு தத்தம் செய்தபடி மதுரை ஸமஸ்தானத்தைத் தராமையால், நொந்து நைஜாமிடம் போய் முறையிட்டார். அவர் இவர் விஷயத்தில் மஹாராஷ்டிரர்களும், மகமதியர்களும் செய்த மோசத்தைக்கருதி பரிதாபப்பட்டும்; தம்மால் ஆற்காட்டுக்கு நூதனமாக நியமிக்கப்பட்ட அன்வர் உட்டின்கான் வசம் ஒப்புவித்து அவருக்குப் பிரதிதினமும் சாப்பாட்டுச் செலவுக்கு 100-ரூபாயும், அவர் குமாரனுக்கு பிரதிதினமும் நூறு வராகனும் கொடுத்து கூடிய சீக்கிரத்தில் அவர்கள் சமஸ்தானத்தை அவர்களுக்கு கொடுக்கும்படி சொல்லி யனுப்ப; அந்த அன்வர் உட்டின்கான் அப்படியே கொஞ்ச காலம் செய்துகொண்டு வந்து, மேன்மை பெற்ற மதுராபுரி சமஸ்தானத்தைப் பங்காரு திருமலை நாயடுக்குக் கொடுக்க பிரியப்படாமல், பேராசையினால், அவருக்கு பாஷாணமிட்டுக் கொன்றுவிட்டார். இதுசங்கதியை யறிந்த அவர் குமாரர் 1748-ஆம் வருஷம் ஆற்காட்டை விட்டு சிவகங்கைக்குப் போய் வெள்ளிக்குறிச்சியை யடைந்தார்.

1741-ஆம் வருஷம் மதுரை சமஸ்தானம் நாதனற்ற நாடாகி விட்டது. 1743-ஆம் வருஷம் நிஜாமுலமுலுக்கு படை எடுத்துவந்து மஹாராஷ்டிரர்களை ஓட்டிவிட்டார். 1744-முதல் 1748-வரையில் மதுரை நாடு அன்வர் உன் மகமதலி வசமாகியது. பிறகு மாயாணு என்னும் தளகர்த தன் வசமாக, அவரும்

ராமநாதபுரம் சிவகங்கை மன்னர்களும் கூடி மதுரைக்கு சரியான வார்சாகிய பங்காரு திருமலை நாயடு குமாரர் **விஜய குமார நாயடுகாரை** 1752-ஆம் வருஷம் ஸமஸ்தானபதியாகப் பட்டம் கட்டிவைத்தார்கள்.

விஜயகுமாரநாயடுகாரு 1752-முதல் 1752-வரையில்

அப்படிக்கட்டினாலும் 1752-ஆம் வருஷம் நவம்பர்மீ 29-ந்தேதி அவரைசிங்காதனத்தைவிட்டுநீக்கி வெள்ளக்குரிச்சிக்கே போகும்படி மகமதியர்கள்செய்துவிட்டார்கள். பிறகுமகமதியமன்னர்களுக்குள்ளாகவேசண்டைசச்சரவுகள்நடக்க 1700-வருஷம் மைசூர்ஐதர் ஆலியும்படையெடுத்துவந்து பிடிக்கக்கூடாமல்பின்னடைந்து போய்விட்டார். பிறகு பல மகமதியர்கள் சண்டைகளைப் போட்டுக்கொண்டு வர, 1785-வருஷம் மதுரை ஆங்கிலேயர் வசமாகிவிட்டது. 1790-வருஷம் செப்டம்பர் மாதம் மிஸ்டர் "மேக்லோடு" அவர்களை ஈஸ்டிந்தியாக் கம்பெனியாரால் ரெவினியு கலெக்டராக நியமிக்க, அன்று முதல் குடிகளுக்கு கஷ்டங்களும் நிஷ்டூரங்களும் அடிக்கடி நடந்து வந்த அநியாய சண்டைசச்சரவுகளும், கொள்ளைகளும், கொலைகளும், படுபஞ்சங்களும், படு நோய்களும் நீங்கச் சுகமாக வாழுங்காலம் வாய்த்தது. சுதேச குறுநில மன்னர்களால் மதுரை சமஸ்தானததில் இடையில் சம்பவித்த கஷ்டங்களை இக்காலத்தில் எண்ணிப் பார்த்தாலும் எப்படிப்பட்டவருடைய மனமும் கலங்கும். ஆண்டவர் கிருபையால் ஆங்கிலேயர் வர அந்தப் பயம் அற்றது.

மதுரை ஸமஸ்தான நாயடுகார்கள் விசுவநாத நாயடு முதல் ஆண்ட அரசர்களுடைய சரித்திரங்கள் ஆங்கிலபாஷையில் மிஸ்டர் நெல்ஸன் எழுதியமதுரைமானியூல் 87- முதல் 264-வது பக்கங்கள் வரையில் விவரமாகக் காணலாம். அச்சரித்திரங்களினால் நாயடு காருகள் தேசாபி மானத்தையும், இராஜ தந்திரத்தையும் அனுசரிக்காததனாலும், சோம்பல் சிற்றின்பத்தினாலும், துர்மந்திரிகளுடையதுர்ப்போதனைகளினாலும், ஸமஸ்தானம் சீர்கெட்டு ஏனையர்வசமாகியது ஸ்பஷ்டமாகும். இக்குறைவுகளில்லாவிடில் நாயடு ஸமஸ்தானம் இன்றளவும் பிரகாசிக்கும். நாயடுகாருகள் தக்ஷண தேசங்களில் ஸமஸ்தானங்களைஸ்தாபிக்க ஆரம்பித்த காலமுதல் அந்தம்வரையில் சண்டைச் சச்சரவுகளிலேயே தமது அருமையான காசினையும், காலத்தையும் செலவிட நேர்ந்தபடியால், நாட்டில் கல்வி முதலான விஷயங்களை கவனிக்கக் காலமில்லாமற் போயவிட்டது. அப்படியிருந்தும் அவர்கள் காலத்தில் மதுரை ஸமஸ்தானத்தில் பல பாடசாலைகள் ஸ்தாபிக்கப் பெற்றும், அவைகளில் 10,000-வித்தியார்த்திகள் இலக்கிய இலக்கண தர்க மீமாசாதி கிரந்தங்களைப் பக்ஷித்து வந்ததாக வீரமாமுனிவர் முதலான ஏனைய நாட்டார் நேரில்வந்து பார்த்து ஐரோபாகண்டத்தாருக்கு எழுதி இருக்கிறார்கள். நாயடுகாருகள் ஈசுவர பக்திக்கு ஈடுபட்டு, கோயில் கோபுரம் மடம் தடம் அகிரஹாரங்கள் தருமசத்திரங்களைக் கட்டி அவைகளுக்காக அளவற்றப் பொருளைச் செலவு செய்திருத்தல் இப்போதும் இத்தென் னாட்டில்பார்க்கப் பார்க்கலாம்.

இப்போது கவர்ணமெண்டாருக்கு அகப்பட்டிருக்கும் திருசிராப்பள்ளி மதுரை முதலானவிடங்களில் ஆண்டுவந்த நாயடுகார்களுடைய தருமசாசனங்கள்.

௵ம்	சாசனங்கள்கொடுத்தவர் பெயர்கள்.	இப்போதுஅச்சாசனங்கள் இருக்கும்இடம்.	சாசனங்களின் விவரம்.
கி-பி			
1560	விசுவநாதநாயடுகொடுத்தது	அன்னியூர், தென்ஆர்காடு	சிலாசாசனம்
௸	௸	திருநெல்வேலியில்	தாமரசாசனம்
1569	குமாரகிருஷ்ணப்பநாயடு	விஜயபதிதிருநெல்வேலியில்	சிலாசாசனம்
1573	விரப்பநாயடு	மதுரையில் [லியில்	do
1578	கிருஷ்ணப்பநாயடு	கிருஷ்ணபுரம் திருநெல்வே	do
1583	பெத்தவீரப்பநாயடு	மதுரை	do
1596	இராமகிருஷ்ணநாயடு	do	தாமிரசாசனம்
1597	கிருஷ்ணப்பநாயடு	do	do
1598	குமார கிருஷ்ணப்பநாயடு	திருநெல்வேலியில்	do
1613	முத்துவீரப்பநாயடு	மதுரையில்	சிலாசாசனம்
1620	வீரப்பநாயடு	கோயமுத்தூரில்	தாமிரசாசனம்
1623	முத்துவீரப்பநாயடு	மதுரையில்	சிலாசாசனம்
௸	௸	do [யில்	do
1635	திருமலைநாயடு	ஆண்டியூர், திருநெல்வேலி	do
1637	௸	கபிலமலை, சேலத்தில்[லியில்	தாமரசாசனம்
1648	௸	வைரவிகுலம், திருநெல்வே	சிலாசாசனம்
1652	௸	எருமாபட்டி, சேலத்தில்	do
1653	௸	மதுரையில்	do
1654	௸	do	தாமிரசாசனம்
1655	௸	கோயமுத்தூரில்	do
1656	௸ [பநாயடு	மதுரையில்	do
1657	இரங்க கிருஷ்ணமுத்துவீரப்	திருநெல்வேலியில்	do
1659	திருமலைநாயடு குமாரர்	திருச்செங்கோடு, சேலத்தில்	சிலாசாசனம்
1661	சொக்கலிங்கநாயடு	நெணிமேணி, திருநெல்வேலி	do
1562	௸	திருசிராபள்ளியில் [யில்	தாமிரசாசனம்
1663	விஜயரங்கசொக்கலிங்கநாயடு	திருச்செங்கோடு, சேலத்தில்	சிலாசாசனம்
1665	சொக்கலிங்கநாயடு	நெணிமேணி, திருநெல்வேலி	do
1665	௸	கோயமுத்தூரில் [யில்	தாமிரசாசனம்
1678	முத்துலிங்கநாயடு [பநாயடு	மதுரையில்	do
1686	இரங்ககிருஷ்ண முத்துவீரப்	அரும்பாவூர் திரிசியில்	சிலாசாசனம்
1691	மங்கம்மகாரு	திருசிராப்பள்ளியில்	தாமிரசாசனம்
1692	விஜயரங்கசொக்கநாதநாயடு	திருநெல்வேலியில்	do
1695	௸	do	do
1700	மங்கம்மகாரு	மதுரையில்	do
1706	௸	திருநெல்வேலியில்	சிலாசாசனம்
1710	விஜயரங்கசொக்கநாதநாயடு	மதுரையில்	தாமிரசாசனம்
1715,1716		திருநெல்வேலி, திருசிணப்ப	do
1724,1727	௸	ள்ளி, திருநெல்வேலி, திருசி	do
1729,1731		ராபள்ளி மதுரை, திருநெல்	do
1732	மீனாக்ஷி அம்மகாரு	திருசிராபள்ளியில்[வேலியில்	do
1733	௸	சமயபுரம், திருசிணப்பள்ளி	ஆக 45சாசனம்

பாருங்கள்! ஸ்ரீசந்திரவம்ச க்ஷத்திரியகுல திலகராகிய யயாதியின் சந்ததியில் பலிஜராஜன் வம்சத்திலுதித்த ஆந்திரராஜர்களில் ஆறேழுபெயர் மகத நாட்டைவிட்டு, தெற்கேவந்து, உஜ்ஜினி, காரங்கள், தொண்டைவீடு, கலியாணி, விஜயநகரம் முதலான விடங்களில் விக்கிரமார்க்கன், சாலுக்கியன காலிசூரியர், கஜபதிகள், நரபதிகள், என்றுதிப் பெயர்களால் புதுராஜியங்களை ஸ்தாபித்து தருமபரிபாலனம் செய்தும்; பிறகு அவர்களுடைய சந்ததிகளில், சேவப்பநாயடு, அச்சுதப்பநாயடு, இரகுநாதநாயடு, விஜயராகவநாயடு, செங்கமல நாயடு என்பவர்கள் தஞ்சை சமஸ்தானாதிபதிகளாகியும்; விசுவநாதநாயடு, குமாரகிருஷ்ணப்பநாயடு, வீரப்பநாயடு, விசுவப்பநாயடு, முத்துகிருஷ்ணப்பநாயடு, முத்துவீரப்பநாயடு, திருமலைநாயடு, குமார முத்துகிருஷ்ணப்ப நாயடு, முத்துவீரப்பநாயடு, சொக்கநாத்நாயடு, முத்துலிங்கநாயடு, மங்கம்மகாரு, இரங்ககிருஷ்ண முத்துரவீப்பநாயடு, விஜயராகநாத சொக்கலிங்கநாயடு, மீனாக்ஷீ அம்மகாரு, பங்காரு திருமலைநாயடு, விஜயகுமார ரகுநாத நாயடு முதலானவர்கள் பாண்டியநாடாகிய மதுராபுரி அரசர்களாகியும்; பிறகு விஜயபூபாலநாயடு, அங்கிதாங்கிதராஜ, கோண்ட சாலமஹாராஜ, கீர்த்திசிம்ஹல மஹாராஜ, இராஜசிம்ஹல மஹாராஜ, விக்கிரம சிம்ஹலமஹாராஜ முதலானவர்கள் இலங்கை என்னும் சிம்ஹலத்தீவின் ஸமஸ்தானாதிபதிகளாகியும் பிரபலமாக இந்த இராசிய பரிபாலனம் செய்து வந்து, கடைசியில் அவர்களுக்குள் தேசாவபிமானம், ஜாதிமதாபிமான முதலானதுகளற்றுப் போனதினால், ஸமஸ்தானங்களை இழந்து தவிக்கும் காலத்தில், ஜாதிவித்தியாசத்தினாலும், கல்விச்செல்வமில்லாமையினாலும் "குப்பை உயர்ந்தது, கோபுரம் தாழ்ந்தது" என்னும் பழமொழிக்கொக்க பரதகண்டத்தின் புராதன சந்திரவம்ச க்ஷத்திரியராகிய பலிஜவாருடைய இப்போது அந்தஸ்தும், பிரதிஷ்டையும் குறைந்துவர, கேவலமான ஜாதியார்கள் கவரைவர்களென்றும், பலிஜவாரென்றும், நாமம் போடுவோர்களில் அநேகர் நாயடுகாருகளென்றும் பெயர்களை தரித்துக் கொண்டும், நல்ல குடும்பங்களில் சிலரோடு கொள்வினை கொடுப்பினைசெய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இத்தியாதி விபரீதங்களைக்கண்ட குலஸ்தர்களாகிய பலிஜவார்களிற் சிலர் கி-பி 1705ஆம், மதுரை ஸமஸ்தானாதிபதியாகிய ஸ்ரீவிஜயரகுநாத சொக்கலிங்க நாயடுகாரிடம் முறையிட, அவர் உடனே ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் ஒரு மஹாநாட்டைக்கூட்டி அதில் அநேக வடகலை தென்கலை மடாதிபதிகளையும், கற்றோர் மற்றோர்முதலான பந்துசமூஹத்தாரையும் தருவித்தும் அவர்கள் முன்னிலையில் இந்தச்சந்திரவம்ச பலிஜவாருடைய ஆதிஉற்பத்தி, வீட்டுப்பெயர், கோத்திர சூத்திரப் பெயர்களையும், ஜனனமரண விவாஹாதிசடங்கு விவரங்களையும் பிரசித்தப் படுத்தினார். அப்படிபிரசித்தப் படுத்திய ஸ்ரீவம்சபிரகாசிகையை அக்காலத்திலிருந்த சிலபெரியோர்கள் செப்பேடு சிலாசாசனங்களிற் செதுக்கிவைத்திருந்தார்கள்-அவைகளில் ஸ்ரீரங்கம் கருடமண்டபம் ரிபேர்செய்த காலத்தில் அகப்பட்ட சாசனத்தின் நகல் ஒன்று ஸ்ரீபிரம்மச்சாரி நாராயண தாசுவாமிகள் சுவாதீனத்திலிருந்த நமக்கு அகப்பட்டு அதன்சாரசங்கிரகத்தை இதன் அடுத்த காண்டத்திற் காணலாம்—

தொண்டமண்டலம் பூவைசியகுல உயர்துளுவ வேளாளர் சரித்திரம் என்னும் பெயரால் காஞ்சீபுரத்தில் மகாநாடு தர்மராய முதலியாரிடமிருந்த சுமார் நூறு வருஷங்களுக்கு முன் எழுதின புராதன கையெழுத்து புத்தகத்திலிருந்து 1894-ம் வருஷம் மிஸ்டர் பம்மல் விஜயரங்க முதலியார் பதிப்பித்த புத்தகத்திலிருந்து ஐரோபியர் இந்நாட்டுக்கு வந்தகாலத்தை அதிலுள்ளபடி இதனடியில் பிரசுரிக்கிறோம்.

"இந்த இந்தியாவில் தொப்பிக்காரர் வந்ததும் அந்தந்த தேசங்களைப் பிடித்ததும், சென்னப்பட்டணத்துக்கு வந்த கவர்னர்களுடைய விபரம் தெரியப்படுத்துதல்.

கி. பி. 1,600-ம் வருஷம் மார்கழி மாதம் 31-ந்தேதி இத்தேசத்துக்கு இங்கிலீஷ்காரர் வர்த்தக சங்கதி யுண்டுபண்ண லைசென்சென்கிற இராஜாத்தியார் பட்டோலையைக் கட்டளையிட்டார்.

1602-ம் வருஷம் இந்துதேசத்துக்கு இங்கிலீஷ் கப்பல்கள் புறப்பட்டன.

1609-ல் உலாந்தாக்காரர்பழவேர்க்காட்டைக்கைவசம்பண்ணிக்கொண்டார்கள்.

1620-ல் தென்மார்க்கர்ஐப்பிசி 5-ந்தேதி தரங்கன்பாடியில் காளிங்கராயபிள்ளை முன்னிலையாய் தஞ்சாவூர் இராஜாவினிடத்தில்தரங்கன்பாடியில் கோட்டையைக்கட்டிக்கொள்ள உத்திரவு பெற்றுக்கொண்டார்கள்.

1621-ம் தை மாதம் தரங்கன்பாடியில் கோட்டையைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

1639-ல் டே (Day) என்பவரால்சென்னப்பட்டணமும் கோட்டையுமுண்டாக்கப்பட்டது.சவுல் செங்கல்பட்டு நாயக்கர் மூலியமாக சந்திரகிரி ராஜாவிடத்தில் பெறப்பட்டது. சந்திரகிரி ராஜ வம்சத்தார் முன் விஜய நகரத்தில் அரசாண்டார்கள்.

1658-ல் உலாந்தக்காரர் போர்த்து கீசரிடத்தில் மன்னாறு யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள்.

1666-ல் பிராஞ்சுக்காரர் சிந்து வியாபாரம் துவக்கினார்கள்.

1670-ல் பிராஞ்சுக்காரர் புதுவை நகரத்தை கைவசம்பண்ணிக்கொண்டார்கள்

1680-ல் ஒரு பெரிய வால் நக்ஷத்திரம் வானததிலே காணப்பட்டு மூன்றுநாள் பரியந்த மிருந்தது.

1739-ல் கெங்கையினருகே பெருங்காற்றடித்து சில கப்பல்கள் முறிந்து முப்பதினாயிரம் ஜனங்க ளிறந்துபோனார்கள்.

1746-ல் புரட்டாசி மாதம் 21-ந்தேதி பிராஞ்சுக்காரர் சென்னப்பட்டணத்தை பிடித்தார்கள்.

1756-ல் பிராஞ்சுகாரர்பேரில் இங்கிலீஸ்காரர் சண்டைக்கு ஆரம்பித்தார்கள்.

1759-ல் மாசிமாதம் 11-ம்தேதி சென்னப்பட்டணத்தை பிராஞ்சுகாரர் பிடிக்க வந்தார்கள்.

1761-ல் கர்னல் கூட்டு புதுவையை முதல் விசைப்பிடித்தார்.

1771-ல் இங்கிலீஷ்காரர் தஞ்சாவூரை முற்றுகைப் போட்டார்கள்.

1772-ல் திருசிராப்பள்ளியில் மருந்து கிடங்கு பத்திக்கொண்டது-

1773-ல் தஞ்சாவூரைப் பிடித்தார்கள்.

1777-ல் லார்டு பிகட்டு (Pigot) இறந்தார்.

1777-ல் ஐப்பசி மாசம் 17ந்தேதி புதுவைநகரத்தை இரண்டாம்தரம் இங்கிலீஷ்காரர் பிடித்தார்.

1780-ல் ஐதருக்கும் இங்கிலீஷ்காரருக்கும் சண்டைக்கு ஆரம்பம்.

1780-ல் புரட்டாசி மாசம் 10-தேதி கானல் பெயிலி (Col. Baillie) தண்டு தக்கோலத்தில் மூழ்கிப்போனது.

1781-ல் ஆனி மாசம் 1-ந்தேதி பரங்கிப்பேட்டையில் சண்டை.

1782-ல் வையாசி மாசம் 17ந்தேதி மராட்டியரோடு சமாதானத்துக்கு கையெழுத்துபோட்டது.
1782-ல் ஐப்பசி 1ந்தேதி சென்னப்பட்டணத்தில் பெருங்காத்தடித்து சில கப்பல்களை கரையில் ஒதுக்கிவிட்டது.
1782-ல் மார்கழி மாதம் 7ந்தேதி சித்தூரில் ஐதர் இறந்துபோனார்.
1783-ல் சித்திரைமாதம் 27ந்தேதி ஜெனரல்கூட் (Gen. Coote) இறந்துபோனார்.
1784-ல் இங்கிலீஷ்காரர் டிப்பு சுல்தானுடன் சமாதானப்பட்டார்கள்.
1785-ல் கார்த்திகைமாதம் 25-ந்தேதி சென்னபட்டணத்தில் இடிவிழுந்து நாலாறுபேரிறந்து சிலருக்கு காயம்பட்டது.
1786-ல் சென்னப்பட்டணத்தில் தபால் கூடம் (Post Office) ஸ்தாபித்தார்கள்.
1788-ல் சென்னபட்டணத்தில் மருந்து கிடங்கு பற்றிக்கொண்டது
1789-ல் மார்கழி மாதம் 29-ந்தேதி மலையாள ராஜாவின்பேரில் டிப்புசுல்தான் சண்டைக்காரம் பித்தார்.
1791-ல் பங்குனிமாதம் 21-ந்தேதி பெங்குளூர் பிடித்தார்கள்.
1792-ல் மாசிமாதம் ஸ்ரீரங்கபட்டணத்தின் பேரில் இங்கிலீஷ்காரர் சண்டை துவக்கினார்கள்
1792-ல் பங்குனிமாதம் 18-ந்தேதி சமாதான மானார்கள்.
1793-ல் ஆவணிமாதம் 23-ந்தேதி புதுவை நகரத்தை மூன்றாவதுதரம் கர்னல் பிரத்து ஒயிட்டினால் பிடிக்கப்பட்டது
1795-ல் ஐப்பசிமாதம் 13-ந்தேதி நவாபு வாலாஜா இறந்தார்.
1798-ல் டிசம்பர் 25-ந்தேதி டிப்பு சுல்தான் பேரில் இங்கிலிஷ்காரர் யுத்தத்துக்கு எத்தனம் பண்ணினார்கள்.
1799-ல் மே மாதம் 4-ந்தேதி சனிக்கிழமை மத்தியானம் ஒரு மணிக்கு வேகத்துடனே சீரங்கப்பட்டணம் லங்கை யெறிகலந்து யுத்தம் செய்கிறபோது டிப்பு சுல்தான் இறந்துபோனார்.
1799-ல் ஜூன் மாதம் 4-ந்தேதி சீரங்கப்பட்டணத்துக் கொடியைக்கொண்டு வந்து சென்னப்பட்டணத்து கோயிலிலே வைத்து சந்தோஷ கீர்த்தனம்பாடி கனமும் ஜெயமும் பெற்ற இங்கிலீஷ் கொடி மேலும் சீரங்கப்பட்டணத்துக் கொடி கீழுமாக மத்தியானம் பன்னிரெண்டு மணிக்கு கொடிமரத்திலே போட்டு பீரங்கி முழக்கம் செய்து சாயந்திரம் 6-7 மணிமட்டும் கொடியை கழற்றாமல் சந்தோஷம் கொண்டாடினார்கள்.
1801-ல் ஜூலை மாதம் 15-ந்தேதி நபாப்வாலாஜா சாய்ப் சாகதா இறந்துபோனார்.

இந்த சென்னப்பட்டணம் துவக்கம் துவக்கவந்த கவர்னர் லார்டு அல்லது பெரிய ஸ்ரீமான்கள் உத்தியோகத்துக்கு வந்த நாமதேயங்களும் அந்தந்த ஸ்ரீமான்கள் வந்த வருஷம், மாதம் தேதிகள் தெரியப்படுத்துதல்.

இந்தப்பட்டியில் இதனடியில்கண்ட

1652-ல் ஆம் வருஷம் செம்டம்பர் மாதம் 1-ந்தேதி மே, ஆரோன்பேகர்.
1659-ல் செப்டம்பர் மாதம் 1-ந்தேதி மிஸ்டர் தாமஸ் சேம்பர்.
1661-ல் செப்டம்பர் மாதம் 1-ந்தேதி மிஸ்டர் எட்வர்டு விண்டர்.
1665-ல் ஜூன் மாதம். மே. ஜார்ஜு பாகஸ்கிராப்டு.
1665-ல் செப்டம்பர் மாதம் 16-ந்தேதி மே. எட்வர்டு விண்டர்.
1670-ல் மே ஜார்ஜு பாகஸ்காரடு என்று கிபெயர்கள் எழுதப்படவில்லை.

... ஸர் வில்லியம் லாங்கு ஆரோன்.
...ல் மாசி 6 இஸ்திரியன் ஷாம்.
...1-ல் ஆடி 13 வில்லியம் கிம்போர்டு.
...07-ல் ஆவணி 4 எலியுயேல்.
1692-ல் ஐப்பசி 13 நதிமேனல் இக்கின்சன்.
1692-ல மார்கழி 5 சர்ஜான் கூல்ஷரோ.
1693-ல் ஆவணி 10 நதிமேனல் இக்கின்சன்.
1698-ல் ஆடி 12 தாமஸ் பீட்.
1709-ல் புரட்டாசி 30 கலிசன் அடிசன்.
1709-ல் ஐப்பசி 2 இடமன்மண்டாக்.
1709-ல் கார்த்திகை 14 உலியம் பிரேசர்.
1711-ல் ஆடி 23 எட்வார்டு ஆரிசன்.
1717-ல் தை 16 ஜோசப்சாலிட்
1720-ல் தை 49 பிரான்கிஸ் ஆஸ்டிங்கு-
1721-ல் ஐப்பசி 26 நதினேல் இல்லக்.
1725-ல் தை 28 செய்சுமக்கிரா.
1730-ல் வைகாசி 25 ஜார்ஜுமார்ட்டின்பிட்.
1735-ல் மாசி 3 ரிச்சர்டுபிங்கன்.
1744-ல் தை 28 நிகோல்மாஸ்.
1749-ல் கார்த்திகை 24 மேஸர் இஸ்திரன் சர்லாரெண்யு.
1749-ல் மார்கழி 12 ரிச்சார்டு பிரன்சு.
1752-ல் பங்குனி–6 சாளரிசார்டு இஸடர்கு.
1752-ல் சித்திரை 17-தாமஸ் ஆந்திரசு.
1755-ல் தை 14 ஜார்ஜு பிக்கெட்டு.
1763-ல் கார்த்திகை 14-இராபர்டு பாலக்கு.
1767 ல் தை 25-சாரலிஸ் பவுசர்.
1770-ல் மாசி 8-ஜோசப்டிபிரி.
1773-ல் மாசி 2-அலெக்சாந்தர் ஒன்சி.
1775-ல் மார்பழி 10-லார்டு பிக்கெட்டு.
1776-ல் ஆவணி 24 ஜார்ஜுஸ்திருட்டன்.
1777-ல் ஆவணி 31 சாள் உண்டலி.
1778-ல் மாசி-8-தாமஸ்ரம்போல்.
1780-ல் கார்த்திகை 8-ஜார்ஜு இஸமித் முதலானவர்களாம்.

மதுரைநாயடு ஸமஸ்தானம் மங்கலடைந்துக்கொண்டு வருங் காலத்தில் மஹாராஷ்டிரருடைய பிரபுத்துவம் பெருமைப்பெற்றுங்க ஆரம்பித்து அவர்களுடைய தேசாபிமானம் மதாபிமானத்தினுல் அம்மஹா ராஷ்டிரருடைய அதிகாரம் இந்நாட்டின் சிலவிடங்களில் இன்னும் பிரகாசிக்கின்றது. ஆகவே அவர்களுடைய சரித்திரத்தை இத்துடன்சேர்க்க வேண்டியதாயினும், இப்போது அவர்களுடைய ஆதி உற்பத்தி, மத்தியகாலஸ்திதி, தத்காலஸ்திதிகளைப் பற்றிய சரித்திரங்கள் ஆங்கிலமுதல் அநேகசுதேச பாஷைகளில் எழுதிப் பதிப்பிக்கப் பட்டிருப்பதால், இனி இத்தென் தேசத்தில் சிறந்த, வித்துவான்கள், மதாதிபதிகள், ஆழ்வார் ஆசாரியர் நாயன்மார்கள் தருமவான்களுடைய சரித்திரங்களை இதன் இரண்டாம்பாகத்திற் பதிப்பிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

இந்த சுவர்னர் பிரபுக்களுடைய சரித்திரங்கள் ஆங்கிலேய பாஷையிலும், பெரும் பான்மையான தேசபாஷைகளிலும் எழுதி பதிப்பித்திருப்பதால், இங்கு விவரமாகக் காட்டுவதனு வசியமெனக்கொண்டோம்.

ஸ்ரீ

நான்காவது காண்டம்

முதல் அத்தியாயம்

ஸ்ரீவம்ஸபிரகாசிகை — శ్రీవంశ ప్రకాశిక.

శ్రీ చంద్రవంశ క్షత్రియులైన దేశబలిజవారని యెడుగౌరవులయందు, రాజబంధు, మహాబంధు, గోష్ఠిబంధు, బహుబంధువులని యెడు చతుర్వర్గముల వివరణములఁ దెలిపెడు శ్రీవంశప్రకాశిక యనెడుగ్రంథము:—

శ్రీచంద్రవంశక్షత్రియులయిన గౌరవులనియెడు బలిజవారిలో కోటబలిజవారనియును, పేటబలిజవారనియును రెండు తెరంగులు గలవు-కోటయనగ, విజయనగరపుకోటయని తెలియవలయును. ఈ కోట వారికే దేశబలిజవారను నామముగలదు. వీరిలో రాజబంధు, మహాబంధు, గోష్ఠిబంధు, బహుబంధువులని నాలుగుతెగలుగలవు. ఈ తెగల వారు నాయనివారు, సెట్టివారు, కౌతువారు, రాజువారు, రావువారు, వజీరువారు అను షడ్విధాంక నామధేయములతో వ్యవహరింపఁబడుదురు.

ஸ்ரீ சந்திரவமிஸ க்ஷத்திரிய ஆந்திரராகிய, கவுரவர் என்னும் இந்த பலிஜவாருகளுக்குள் 1. கோட்ட(அல்லது தேச)பலிஜ வாரு என்றும், 2. பேட்ட பலிஜவாரு என்றும் இரண்டு பிரதான வகுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குள் கோட்டை பலிஜ வாரு என்றால்=விஜயநகர ஸமஸ்தானத்தின் கோட்டையிலிருந்த சக்கிரவர்த்திகளால், அவர்கள் பிரதிநிதிகளாக, நாயடுகாரு என்றுதிப் பட்டப்பெயரைப்பெற்று தஞ்சை, திரிசி, மதுரை முதலான விடங்களுக்குவந்து அரசாண்டுவந்தவர்களாம். இவர்கள் யாவரும் ஆதியிற் கஷியபகோத்திரத்தைச் சார்ந்த ஆயிரம் வீட்டுக் காரர்களாம். (*Vide* Page 144, Census of India, 1901. Vol, XV. Part I, Madras, 1902.) *இவர்களுக்குள் 1. இராஜபந்து, 2. மஹாபந்து, 3. கோஷ்டிபந்து, 4. பஹுபந்து என்னும் நான்கு உட்பிரிவினர்*

களாக இருக்கிறார்கள். இவர்கள் இராஜுகாரு, இராவுகாரு, இராயலுகாரு, வஜீருகாரு, நாயடுகாரு, இரவுத்துகாரு, சிரேஷ்டி காருளென்னும் ஆறுவிதப் பட்டப்பெயர்களால் பிரகாசிப்பவர்கள்.

ఈ చతుర్బంధువులయందు రాజబంధుజన కూటస్థుల గృహనామాది వివరణము:—

సీసమాలిక.

శ్రీకరంబగు చంద్ర మాకులక్షత్రియు, లందునాలుగు తెగలవనిగలదు
అవిరాజబంధువు, నరయమహాబంధు, బలగోష్ఠిబంధువు బాగుగాను
బహులబంధువనఁబను, పరికింపవీరిలో, భాసిలును గరికెపాటివారు
వరనెడుంగుండ్రపు వారును, నమ్మకుమారులనిమెడి యల్లూరివారు
వసుధచింతలపురి వారును, మఱి బండ్లపేటవారును, పాలపాటివారు
పట్టపువారును, పగడాలవారును, సెట్టివారును, ధనసెట్టివారు
వెలికోట్లవారను, వెలయుతుపాకులవారును, మఱి కత్తి వారు, పిదప
జగదేవవారును, సవరమువారును, కరివేటివారును, కంచివారు
గంధపురమువారు, కడియాలవారును, నాసూరివారును, నవనియందు
శ్రీపతివారును, చెంజివారును, మఱి వజ్రాలవారును, వరుసగాను
నిమ్ముడివారును, నీలకంఠమువారు, స్థిరనుడేగలవారు, బిరుదువారు
రాయకులమువారు, రాజిలువిజయమువారు, నరావారు, ధోరణిగను
వరలుభండారమువారు, మంచాపాత్ర నామంబువారు, మునగలపేట
వారును, సంజేటివారును, మఱి దళవావారు, తియ్యారివారు, తిరుగ
స్థిరచంద్రగిరివారు, పురమువారును, పర్వతమువారు, నుదయాద్రిస్థల [మువారు,
గుఱుతుగామఱిబంతికుట్లువారనిమెడి, యీనామములుగల నిండ్లవారు
పరికింప శ్రీరాజబంధుకూటస్థులై, విలసిల్లుచుందురు విభవముగను[ను.
భువియందు ననువీరి పూర్వసంబంధులై,యుండువారలతోడ నొకటిగా

గీ. రాజబంధువు లనిముందు తేజవిజయ
రంగచొక్కనాథేంద్రుఁడు రాజులెఱుఁగ

రంగనాథునిముంగల రమ్యముగను
ఘోషణముజేసె బంధువుల్గూడివినఁగ. .

తాత్పర్యము:—శుభకరులగు చంద్రవంశ క్షత్రియులయిన కోటబలిజవారియందు నాలుగుతెగలవారు గలరనియును, వారు రాజబంధువులనియును, మహాబంధువులనియును, గోష్ఠిబంధువులనియును, బహుబంధువులనియును చెప్పబడుదురు.

వీరిలో రాజబంధుజన కూటస్థులెవరనఁగా:—

முதலாவது

இவர்களில் இராஜ பந்து ஜன சமூஹத்தாருடைய வீட்டுப்பெயர்களாவன:—

1. கரிக பாட்டிவாரு அல்லது பாண்டிய நாட்டதிபதி விஜய ரங்க சொக்கநாதருடைய சந்ததிகள்=గరిగపాటివారు అను పాండ్యమండలాధీశ్వరుండైన విజయరంగ చొక్కనాథనాయనివారు.
2. நெடுங்குன்றமுவாரு=నెడుంగుంద్రము వారు.
3. அம்ம குமாருலு அல்லது அல்லூரிவாரு என்னும் தஞ்சைவிஜயராகவநாயடுகாரைச் சார்ந்தவர்= అమ్మకుమారులనియెడు అల్లూరివారను తంజాపూరుఅధిపతివిజయరాఘవనాయనివారు.
4. சிந்தலபுரிவாரு அல்லது கண்டிராஜாவைச் சார்ந்தவர்கள்=చింతలపురివారు అనఁగా శ్రీఖండిమహారాజుగారు.
5. பண்டல பேட்டவாரு = బండ్లపేటవారు.
6. பாலபாடிவாரு= పాలపాటివారు.
7. பட்டபுவாரு=పట్టపువారు.
8. பகடாலவாரு=పగడాలవారు.
9. செட்டிவாரு=సెట్టివారు.
10. தனசெட்டிவாரு=ధనసెట్టివారు
11. வெலகோட்டவாரு அல்லது துபாகுலவாரு=వెలికోటవారులేక తుపాకులవారు.
12. கத்திவாரு=కత్తివారు.
13. ஜகதேவவாரு=జగదేవవారు.
14. சவரமுவாரு=సవరము వారు
15. கரிவேட்டிவாரு=కరివేటివారు.
16. கஞ்சிவாரு=కంచివారు.
17. கந்தபுரமுவாரு=గంధపురమువారు.
18. கடியாலவாரு=కడియాలవారు.
19. ஆசூரிவாரு=ఆసూరివారు.
20. ஸ்ரீபதிவாரு=శ్రీపతివారు.
21. செஞ்சிவாரு=చెంజివారు.
22. வஜ்ராலவாரு=వజ్రాలవారు.
23. நிம்முடிவாரு=నిమ్ముడివారు.
24. நீலகண்டமுவாரு=నీలకంఠము వారు.
25. டேகலவாரு=డేగలవారు.

26. பிருதுவாரு=బిరుదువారు.
27. இராயகுலமுவாரு=రాయకులమువారు.
28. விஜயமுவாரு=విజయమువారు.
29. நராவாரு=నరావారు.
30. பண்டாரமுவாரு=భండారము వారు.
31. மஞ்சாபாதிரமுவாரு=మంచాపాత్రమువారు.
32. முனகலசெட்டவாரு=మునగల శెట్టివారు.
33. அஞ்சேடிவாரு=అంజేటివారు.
34. தளவாய்வாரு=దళవాయివారు.
35. தியயாரிவாரு அல்லது சித்ரால சின்னசாமிநாயுனிவாரு =తిర్యారివారు లేక చిత్రాలవారు.
36. சந்திரகிரிவாரு=చంద్రగిరివారు.
37. புரமுவாரு=పురమువారు.
38. பர்வதமுவாரு=పర్వతము వారు.
39. உதயகிரிவாரு=ఉదయగిరివారు.
40. பன்திகுட்டுவாரு= బంతి కట్టు వారు.

అనియెడు, నలువది ఇండ్లవారును, వీర్ల పూర్వులును, రాజబంధువులని ముందు విజయరంగ చొక్కనాథేంద్రుఁడు రాజకులమువారెల్లఁగ, శ్రీరంగనాయకుల సన్నిధానంబున బంధువులందఱు వినఁగ వక్కాణించిరని తాత్పర్యము. వీరలకు రాజబంధువులనియును, రాజశ్రేష్ఠులనియును, ఏలినవారనియును, చోళపాండ్య దేశాధిపతులనియును, ఖండివారనియును వ్యవహారనామంబులుగలవు. వీరికి సేవకావృత్తియును, రజత భూషణధారణమును లేదు.

వీరల సంఘవాసస్థలములు:— బాగలూరు, నారికల్లు, రాయవేలూరు, వెల్లికురిచి, విరాచ్చిల, పనయూరని తెలియవలయును.

என்று சொல்லப்பெறும் இந்த நாற்பது வீட்டுக்காரர்களும், இவர்களுடைய முன்னோர்களும், இராஜபந்துக்கள் என்று ஸ்ரீவிஜயரங்க சொக்கநாத மஹாராஜர், ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில், இராஜ குடும்ப பந்து சமூஹத்தார் கேட்க திருவாய் மொழிந்தருளினர்.

இவ்வீட்டுக்காரருக்கு இராஜ பந்துக்களென்றும், இராஜ சிரேஷ்டர்கள் என்றும், ஏலினவாரு—ஆண்டவர் என்றும், கர்த்தர்கள் என்றும், சோழபாண்டிய கண்டிதேசாதிபதிகளென்றும், பலபெயர்களுண்டு. இவர்கள் சேவகா விருத்தியையும், இரஜித (வெள்ளி) பூஷணுத்தாரணத்தையும் வகிக்கமாட்டார்கள்.

இவர்கள் பாகளூர், நாரிகல்லு, இராயவேலூர், வெல்லிக்குருச்சி, வீரசில்லா, பணியூரு முதலான விடங்களை வாசஸ் தலங்களாகக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவது

மஹாபந்துஜன சமூஹத்தாருடைய வீட்டுப் பெயர்களாவன:—

మహాబంధుజన కూటస్థుల గృహనామాది వివరణములు:—

సీసమాలిక.

శ్రీలక్ష్మీకరమగు శ్రీపైడియాఘ్నుల వారును, మరల నీ వసుధయందు
కనగొనబంగారుకత్తివారనియెడి పచ్చనిసుగరికె పాటివారు
వరమెండుగుట్టలవారును, మఱిబ్రహ్మముడివారు,ఘనవాడిమొసలవారు
సామువారును, మఱి జవ్వాజివారును, నాదివారును, మఱి దూదివారు
నిండుకులమువారు, నిర్మల సంపంగివారును, మఱి భారివారు, మఱియు
చిఱుతపువారును, జెట్టివారును, మఱి బట్టేటివారును, బండపల్లె
వారును, మఱి యందెవారు నాలంబాకు వారును,జనకలవారు, విడెము
వారును, గంధాలవారు, నరసవారు, పులిగుచ్చువారును, భువినియిండ్ల
వారు, కొనకవారు, వసుమతిలో గోపిసెట్టివారును, మేడిసెట్టివారు
మఱి యేనుగులవారు, మంచికుంచావారు, వరుసగా మఱివల్లెవాట్లవారు
దండిగానుండు రథాలవారును, జూడ ధరకత్తివారు, ముత్యాలవారు
సాయనవారును, జగతి కాలాపురివారు, లాయరివారు, వరుసగాను
పావాడవారును, బరగవంగావారు, పోగులవారును, పొడవుమండి
వారును, శోధింప వనధిమధ్యను పూసపాటివారని నలువదియునొకటి
సంఖ్యతోనొప్పిన చంద్రవంశోద్భవులైనట్టివారిలో నధికులైన
ఈనామధేయపు నిండ్లవారును, వీరి యాదిసంబంధులై యమరియున్న.

గీ. వారలునుమహాబంధువుల్ వరలువిజయ
రంగచొక్కనాథేంద్రుఁడు రాజులెఱుఁగ
రంగనాథునిముంగల రమ్యముగను
ఘోషణముజేసె బంధువుల్ గూడివినఁగ.

1. பயிடியாவுலவாரு= పైడియావులవారు.
2. பங்காரு கத்திவாரென்னும் கரிகபாட்டிவாரு=బంగారుకత్తి వారనెడు గరికెపాటివారు
3. மெண்டுகுட்டலவாரு = మెండుగుట్టలవారు.
4. பிரமமுடிவாரு=బ్రహ్మముడివారు
5. மொநாலவாரு=మొనలవారు.
6. சாமுவாரு=సామువారు.
7. ஜவ்வாதிவாரு=జవ్వాజివారు.
8. ஆதிவாரு=ఆదివారు.
9. தூதிவாரு=నూదివారు.
10. நிண்டுகுலமுவாரு=నిండుకులము [వారు.
11. சம்பங்கிவாரு=సంపంగివారు.
12. பாரிவாரு=భారివారు.
13. சிருதவாரு=చిరుతవారు.
14. ஜெட்டிவாரு=జెట్టివారు.
15. பட்டேடிவாரு=పట్టేటివారు.
16. பண்டபல்லேவாரு= బండపల్లె వారు.
17. அங்தேவாரு=అందేవారు.
18. ஆலம்பாகுவாரு=ఆలంబాకువా [రు.
19. ஜனகலவாரு=జనకలవారు.
20. விடெமுவாரு=విడెమువారు.
21. கந்தாலவாரு=గంధాలవారు.
22. அரசவாரு=అరసవారు.
23. புலிகுச்சுவாரு=పులిగుచ్చువారు
24. இண்டலுவாரு=ఇండ్లవారు.
25. கொனகாவாரு=కొనకావారు.
26. கோபிசெட்டிவாரு= గోపిసెట్టి వారు.
27. மேடிசெட்டிவாரு=మేడిసెట్టివారు.
28. ஏனுகலவாரு=ఏనుగులవారు.
29. குஞ்சாவாரு=కుంచేవారు.
30. வல்லெவாட்லவாரு= వల్లెవాట్ల వారు
31. ரதாலவாரு=రథాలవారు.
32. கத்திவாரு=కత్తివారు.
33. முத்தியாலவாரு=ముత్యాలవారు
34. சாயனவாரு=సాయనవారు.
35. காலாபுரிவாரு=కాలాపురివారు.
36. லாயரிவாரு=లాయరివారు.
37. பாவாடவாரு=పావాడవారు.
38. வங்காவாரு=వంగావారు.
39. போகுலவாரு=పోగులవారు.
40. மண்டிவாரு=మండివారు.
41. பூசபாட்டிவாரு= పూసపాటివారు.

అనియెడు నీ నలువదియొక యిండ్లవారును, వీరలఆది సంబంధులును మహాబంధువులని, విజయరంగ చొక్కనాథేంద్రుఁడు రాజకులమువా రెఱుఁగ, శ్రీరంగంబున శ్రీరంగనాయకుల సన్నిధానంబున బంధువులందఱు వినఁగ వక్కాణించిరని తాత్పర్యము. వీరలకు మహాబంధువులనియును, రాజరాజేంద్రులనియును, పాండ్యరాజ శేఖరులనియును, కులశ్రేష్ఠులనియును, వ్యవహారనామంబులు కలవు, వీరికి చతుర్బంధు

వులయందును మొదటిమర్యాద కలిగియుండును. వీరిలోని స్త్రీలకు మెట్టెలనెడి భూషణంబులు లేవు.

వీరల నివాసస్థలములు:—

శ్రీజగన్నాథము, విజయనగరము, రాజమహేంద్రవరము, సింహాచలము, దక్షిణమధుర, కొత్తకోట, పెరియకుళం, శ్రీహనుమత్పురియను హనుమన్తప్పట్టివాడి, అరుందాణి, ఇవియని తెలియవలయును.

என்று சொல்லப் பெறும் இந்த நாற்பத்தொன்று வீட்டுப் பெயர்களையுடையவர்களும், இவர்களுடைய முன்னோர்களும் மஹா பந்துஜன சமூஹத்தாரென்று, ஸ்ரீவிஜயரங்க சொக்கநாத மஹா ராஜரவர்கள் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் இராஜ பந்துக்கள் சமூஹத்தார் கேட்கத்திருவாய் மலர்ந்தருளினர்.

இவர்களை மஹாபந்து ஜனங்களென்றும், இராஜ ராஜேந்திரர்களென்றும், பாண்டிய ராஜசேகரர்களென்றும், குலசிரேஷ்டர்களென்றும் பலபெயர்களாற் சொல்வதுண்டு. இவர்களுக்கு நான்கு பந்து சமூஹத்தாருக்குள் முதல்தாம்பூலமரியாதை உண்டு. இவர்களுடைய ஸ்திரீகள் மெட்டிகள் என்னும் நகைகளை தரிக்கமாட்டார்கள். இவர்கள்.

ஸ்ரீ ஜகநாதம், விஜயநகரம், இராஜமஹேந்திரம், சிம்ஹாசலம், மதுரை, புதுக்கோட்டை, பெரியகுளம், ஸ்ரீஹனுமர்புரி என்னும் அநுமந்தப்பட்டிவாடி, அருந்தாணி முதவான விடங்களை வாசஸ் தலங்களாகக் கொண்டிருக்கிறார்கள்.

గోష్ఠిబంధుజన కూటస్థుల గృహనామాది వివరణములు.

సీసమాలిక.

శ్రీరమాకృపగల స్థిరమతులగు పైడిపాటివారును, మఱి తోటవారు
గట్లవారును, గుడిమెట్లవారును, గవనాలవారును, మఱి గాలివారు
అయిలివారును, మఱి యాసూరివారును, నంద్యాలవారును, నందెవారు
కుప్పాలవారను గొప్పలవారును, శీలాలవారును, స్థిరను గీర్తి
వారును, సాధనవారును, పగడాలవారును, పోగులవారు, నిండ్ల
వారును, ముత్యాలవారును, గమతంబువారును, సుంకరవారు, మంకు
వారును, నరుగులవారు, నెయ్యూరపువారును, కొలుకులవారు, ఛత్రి

వారును, గటకంబువారును, గనికాలవారును, మన్నెంపు వారు, నెంటి వారును, బీగాలవారును, గరివారు, భోగినివారును, పోలురాజు వారును, శ్రీచందువారు, భీసాపత్రివారును, గానాలవారు, మరల రామాయణమువారు, రాజునాయనివారు, కొట్టెవారును, మఱి కోలవారు స్థిరయుందునను మాలుసెట్టివాగును, మఱియెఱమచ్చువారును, నెఱమసెట్టి వారు, చిన్నమసెట్టి వారును, మరిబాలు సెట్టివారును, జూడ నిడెమువారు బొబ్బారివారును, భువిదళవావారు, కౌతులవారు, చంద్రాతువారు అరయచల్లావారు, నాకులవారును, నఱ్ఱవారును, శ్రీధనాలవారు మహియందునను దిరుమలసెట్టివారును, మానంబువారును, మంచియల్లి వారును, భండారివారును, శ్రీపాండురంగంబువారును, రమ్యపురము వారును, తేకూరివారును, మేడూరివారును, మోసూరివారు, మొలక వారును, మఱి నేతివారు, సొమ్ములవారు, పృథ్విలోపల కొత్తపేటవారు బాలునాయనివారు, పరగపున్నావారు, కనుగొనంగను బండికాటివారు అవనిలోపలజూడ నాలవారు, పసుపులేటివారనెడు సీయిండ్ల పేరు గలవీరలును బూర్వకాలసంబంధులౌ గోష్ఠిబంధువు లని గురుతెఱంగ

గీ. తొల్లి కాలంబునందున దొడ్డవిజయ
రంగచొక్కనాథేంద్రుఁడు రాజు లెఱుఁగ
రంగనాథుని ముంగల రమ్యముగను
ఘోషణము జేసె బంధువుల్ గూడి వినఁగ.

1. பயிடிபாலுவாரு= పయిడిపాటివారు.
2. தோட்டவாரு=తోటవారు.
3. கட்டுவாரு=గట్టువారు.
4. குடிமெட்டவாரு= గుడిమెట్టవారు.
5. கவனாலவாரு=గవనాలవారు.
6. காலிவாரு=గాలివారు.
7. அயிலிவாரு=అయిలివారు.
8. ஆசூரிவாரு=ఆసూరివారు.
9. நந்தியாலவாரு=నంద్యాలవారు.
10. அந்தேவாரு=అందెవారు.
11. குப்பாலவாரு = என்னும் கொப்புலவாரு= కుప్పాలవారు అను కొప్పులవారు.
12. சிலாலவாரு=శీలాలవారు.
13. கீர்த்திவாரு-కీర్తివారు.
14. ஸாதனவாரு=సాధనవారు.
15. பகடாலவாரு=పగడాలవారు.
16. போகுலவாரு-భోగులవారు.
17. இண்டலவாரு=ఇండ్లవారు.

18. முத்யாலவாரு= ముత్యాలవారు.
19. கமதம்புவாரு=కమతంబువారు.
20. சுங்கரவாரு=సుంకరవారు.
21. மங்குவாரு=మంకువారు.
22. அருகுலவாரு=అరుగులవారు.
23. ஓய்யாரபுவாரு= ఒయ్యారపు వా
రు.
24. கொலுகுலவாரு–కొలుకులవారు
25. க்ஷத்திரிவாரு=ఛత్రివారు.
26. கடகமுவாரு=కటకమువారు.
27. கனகாலவாரு=కనకాలవారు.
28. மன்னெம்புவாரு= మన్నెంపువా
29. ஓண்டிவாரு =ఒంటివారు. [రు.
30. பீகாலவாரு=బీగాలవారు.
31. கரிவாரு=కరివారు.
32. போகினிவாரு=భోగినివారు.
33. போலுராஜுவாரு పోలురాజు
వారు.
34. சந்துவாரு =చందువారు. [వారు.
35. பீஸாபத்திரிவாரு = బీసాపత్రి
36. காணுலவாரு=గానాలవారు.
37. இராமாயணமுவாரு = రామా
యణమువారు. [నాయనివారు.
38. இராஜுநாயனிவாரு = రాజు
39. கொட்டெவாரு=కొట్టెవారు.
40. கோலவாரு=కోలవారు. [వారు.
41. மாருசெட்டிவாரு= మాఱుసెట్టి
42. எரமச்சுவாரு =ఎరమచ్చవారు.
43. எரமசெட்டிவாரு= ఎరమసెట్టి
వారు. [సెట్టివారు.
44. சின்னமசெட்டிவாரு= చిన్నమ
45. பாலுசெட்டிவாரு = బాలుసెట్టి
46. நிடெமுவாரு=నిడెమువారు[వారు
47. பொப்பூரிவாரு= బొబ్బూరివారు.
48. தளவாய்வாரு= దళవాయివారు.
49. ரவுதுலவாரு=రౌతులవారు.
50. சந்திரவுதுவாரு = చంద్రౌతు
51. சல்லாவாரு=చల్లావారు. [వారు.
52. ஆகுலவாரு=ఆకులవారు.
53. நர்ராவாரு=నర్రావారు.
54. தணுலவாரு=ధనాలవారు.
55. திருமலசெட்டிவாரு= తిరుమల
సెట్టివారు.
56. மவுனமுவாரு=మౌనమువారు.
57. அல்லிவாரு=అల్లివారు.
58. பண்டாரிவாரு=భండారివారు.
59. பாண்டுரங்கமுவாரு = పాండు
రంగమువారు. [వారు.
60. ரமியபுரமுவாரு = రమ్యపురము
61. தேகூரிவாரு=తేకూరివారు.
62. மேரிவாரு=మేడూరివారు.
63. மோசூரிவாரு=మోసూరివారు.
64. மொலகவாரு=మొలకవారు.
65. நேதிவாரு=నేతివారు.
66. ஸொம்முலவாரு=సొమ్ములవారు.
67. கொத்தபேட்டவாரு=క్రొత్తపే
టవారు. నివారు.
68. பாலுநாயுனிவாரு బాలునాయు
69. புன்னுவாரு=పున్నావారు.
70. பண்டிகாடிவாரு = బండికాటి
71. ஆலவாரு=ఆలవారు. [వారు.
72. பசுபுலேடிவாரு పసుపులేటివా

అనిమొత్తు ఈడెబ్బది రెండిండ్లవారును, వీరి తొలినాటి సంబంధులను, గోష్ఠిబంధువులనియును, విజయరంగచొక్కనాథేంద్రుండు రాజుకులము

వారెఱుఁగ శ్రీరంగంబున, శ్రీరంగనాయకుల సన్నిధానంబున బంధువు లందఱు వినఁగ వక్కాణించిరని తాత్పర్యము. వీరలకు గోష్ఠిబంధువు లనియును, భక్తశ్రేష్ఠులనియును వ్యవహారనామంబులు కలవు.

వీరల సంఘనివాసస్థలములు:—తిరుపతి, చెంగారెడ్డిపల్లె, ధర్మపురి, శ్రీసత్యదర్శనపురము, శ్రీదివ్యజ్ఞానపురము, శ్రీదివ్యతటాకపురము, అయ్యూరు మొదలగు గ్రామములనియును తెలియవలయును.

என்று சொல்லப் பெறும் இந்த 72 வீட்டுப்பெயர்களை உடையவர்களும், இவர்களுடைய முன்னோர்களும், கோஷ்டிபந்து ஜனசமூஹத்தாரென்று ஸ்ரீவிஜயரங்க சொக்கநாத மஹாராஜரவர்கள், ஸ்ரீரங்கத்தில், இராஜகுடும்ப பந்து சமூஹத்தார் கேட்க திருவாய் மலர்ந்தருளினார். இவர்களை கோஷ்டி பந்துக்களென்றும், பக்தசிரேஷ்டர்கள்என்றும், திருபதியாரென்றும், பலபெயர்களால் சொல்வதுமுண்டு.

இவர்கள் திருபதி, செங்கரெட்டிபல்லே, தர்ம்புரி, ஸ்ரீ சதிய தரிசனபுரம், ஸ்ரீ திவியஞானபுரம், ஸ்ரீ திவிய தடாகபுரம், அய்யூருமுதலான விடங்களை வாசஸ்தலங்களாகக் கொண்டிக்கிறார்கள்.

బహుబంధుజన కూటస్థుల గృహనామాది వివరణములు :—

సీసమాలిక.

శ్రీరమావరసుకావేరివారును, మఱి గునిసెట్టివారును, గోవువారు
అల్లంపువారును, నాకులవారును, మహీపతివారును, మఱి నిజపతి
వారును, మానంబువారు, సింగముసెట్టివారు, లక్ష్మిసెట్టివారు, బిరుదు
వారును, నుక్కడివారును, పెనుకొండవారు, జబ్బావారు, వరుసగాను
గాడివారును, మఱి కాలకంఠమువారు, పాండురంగమువారు, భానుసెట్టి
వారు, గంగముసెట్టివారు, పోలముసెట్టివారును, గుజ్జాలవారు, తూము
వారును, తిరుపతివారును, సింగాణివారును, నారణివారు, గాజు
వారును, నగులూరివారును, శ్రీరామవారును, నావులవారు, నవల
అత్తిలివారును, నాచలిపందిటివారును, శోధింప పాయసంబు
వారు, జక్కావారు, వసుధ బాలేరావువారు, తోటావారు,వరలుచంద్రు
పోసంబువారును, భువి దళవావారు, నిమ్మలవారును, నిశ్చయముగ

మేడిదవారును, మేదినిలో కుమ్మవారు, సాయనవారు, మీాఱు భుజనవారును, వగసాలవారును, ముత్యాలవారును, బోయనవారు, మఱియు అయ్యలవారును, నాంబీరవారును, ముప్పత్తివారును, ముదముమీాఱి నలుబదియెనిమిదికులభేదములుగలవారును నీయిండ్లవారు వీరి

గీ. బంధువులు బహుబంధని భోగవిజయ
రంగచొక్కనాథేంద్రుఁడు రాజు లెఱుఁగ
రంగనాథునిముంగల రమ్యముగను
ఘోషణము జేసె బంధువుల్ గూడివినఁగ.

1. காவேரிவாரு அல்லது ஜகதேவலு, புஜபலராவ்வாரு = కావేరివారు, లేక జగదేవ, భుజబలరాయలువారు.
2. குனிசெட்டிவாரு = గునిసెట్టివారు
3. கோவுவாரு = గోవువారు.
4. அல்லம்வாரு = అల్లంవారు.
5. ஆகுலவாரு = ఆకులవారు.
6. மஹிபதிவாரு = మహీపతివారు.
7. நிஜபதிவாரு = నిజపతివారు.
8. மானம்வாரு = మానంవారు.
9. சிங்கமுசெட்டிவாரு = సింగముసెట్టివారు.
10. லக்கிசெட்டிவாரு = లక్కిసెట్టి [వారు.
11. பிருதுவாரு = బిరుదువారు
12. சுக்கடிவாரு = సుక్కడివారు.
13. பெனுகொண்டவாரு = పెనుకొండవారు.
14. ஜப்பாவாரு = జబ్బావారు.
15. காடிவாரு = గాటివారు.
16. காலகண்டமுவாரு = కాలకంఠమువారు.
17. பாண்டுரங்கமுவாரு = పాండు [రంగమువారు.
18. பானுசெட்டிவாரு = భానుసెట్టివారు.
19. கங்கமசெட்டிவாரு = గంగముసెట్టివారు.
20. போலமுசெட்டிவாரு = పోలము [సెట్టివారు.
21. குர்ராலவாரு = గుఱ్ఱాలవారు.
22. தூமுவாரு = తూమువారు.
23. திருபதிவாரு = తిరుపతివారు.
24. சிங்காணிவாரு — సింగాణివారు.
25. ஆரணிவாரு = ఆరణివారు.
26. காஜூவாரு = గాజువారు.
27. நகுலூரிவாரு = నగులూరివారు.
28. ஸ்ரீராமவாரு = శ్రీరామవారు.
29. ஆவுலவாரு = ఆవులవారు.
30. அத்தலிவாரு = అత్తిలివారు.
31. சலிபந்தலிவாரு = చలిపందలివారు
32. பாயஸம்வாரு = పాయసంవారు.
33. ஜக்காவாரு = జక్కావారు.
34. பாலேராவுவாரு = బాలేరావువారు.
35. தோட்டவாரு = తోటవారు.
36. போஸம்வாரு = పోసంవారు.
37. தளவாய்வாரு = దళవాయివారు.

38. நிம்மலவாரு=నిమ్మలవారు.
39. மேடிதவாரு = మేడిదవారు.
40. கும்மவாரு=కుమ్మవారు.
41. ஸாயணவாரு=సాయనవారు.
42. புஜனாவாரு=భుజనావారు.
43. வகஸாலவாரு=వగసాలవారు.
44. முத்தியாலவாரு=ముత్యాలవారు
45. போயனவாரு=బోయనవారు.
46. அய்யல்லவாரு=అయ్యలవారు.
47. ஆம்பீரவாரு=అంబీరవారు.
48. முப்பதிவாரு=ముప్పత్తివారు.

అనియెడు నీ నలుబదియెనిమిది యిండ్లవారును, ముందుసంబంధులును, బహుబంధువులని విజయరంగ చొక్కనాథేంద్రుఁడు రాజకులమువారెఱుఁగ శ్రీరంగంబునందు శ్రీరంగనాయకులసన్నిధానంబున బంధువులందరెఱుఁగ వక్కాణించిరని తాత్పర్యము. వీరలకు బహుబంధువు లనియును, రౌతులనియును, వీరభటులనియును, హస్తినాపురవారనియును వ్యవహారనామంబులు కలవు.

వీరల సంఘనివాసస్థలములు.—వెంకటగిరి, జలకంఠపురి, మన్నారుగుడి, విళక్కుడి, వెంబలకుడి, కోయంబుత్తూరు, ముసిరి, శేలం అని తెలియవలయు.

సదరు రాజబంధువులు, మహాబంధువులు, బహుబంధువులు పరస్పరమును గోష్ఠిబంధువులు ఏకదేశంబునను సంబంధ ప్రతిసంబంధములు చేసికొనుచున్నారు. ఇతర బలిజవారు అన్యబంధువులనియును, పేటబలిజవారనియును చెప్పబడుదురు.

என்று சொல்லும் இந்த 48 நாற்பத்தெட்டு வீட்டுப் பெயர்களை உடையவர்களும், இவர்களுடைய முன் சந்ததியார்களும், பஹூ பந்துக்களென்று ஸ்ரீவிஜயரங்க சொக்கநாத மஹாராஜரவர்கள், ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில், இராஜகுடும்ப பந்துக்கள் சமூஹத்தார் கேட்க திருவாய் மலர்ந்தருளினார். இவர்களைபஹூபந்துக்களென்றும், இரவுத்துகளென்றும், வீரபடர்களென்றும், ஹஸ்தினாபுரியாரென்றும் பலபெயர்களால் சொல்லுவதுண்டு. இவர்கள், வெங்கடகிரி, சேலம், ஜலகண்டபுரி, மன்னாருகுடி, விளிக்குடி, வெம்பலகுடி, திருசி, முசிலி, கோயமுத்தூர் முதலான விடங்களை வாசஸ் தலங்களாகக் கொண்டிருக்கிறார்கள். மேலே சொன்ன, இராஜ பந்துக்கள், மஹாபந்துக்கள், பஹூபந்துக்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்துக் கொள்வதோடு,

கோஷ்டிபந்துக்களிடமும் சற்றேரக்குறைய சம்பந்தம் செய்துக் கொண்டிருக்கின்றனர். மற்ற பலிஜவாரைப் பேட்ட பலிஜவாரென்றும், அந்நியபந்துக்களென்றும் சொல்லப் பெறும்.

☞ * இந்த வீட்டுப்பெயர் பட்டியை முதற்பதிப்பில் பதிப்பித்ததில், சிலர் பார்த்து, இன்னும் அநேக வீட்டுப்பெயர்கள் விட்டிருப்பதாக தெரிவித்தபடியால்; அதைப்பற்றி பலஜில்லாக்களில் விசாரித்ததில், சில நூதனபெயர்கள் கிட்டின. அவைகளை இதனடியிற் பதிப்பித்திருக்கிறோம்.

தென் ஆறுகாடு என்னும் கூடலூர் மஞ்சா குப்பம் ஜில்லாவைச் சார்ந்த, திருப்பாதரிபுலியூர் என்னும் திருபாப்புலியூரிலிருக்கும், ம-௱-௱-ஸ்ரீ, அரங்கசாமி நாயடுகாரவர்கள் அனுப்பிய சிட்டவின்படி அந்த பிராந்தியங்களில் வசித்துவரும் பலிஜவாருடைய வீட்டுப்பெயர், கோத்திரப் பெயர்களை இதனடியிற் காணலாம்.

தாசரி கிச்சிவாரு, தொட்லவாரு, திருமலவாரு, வீசூரிவாரு, முப்பாலவாரு, விருபாக்ஷிவாரு, சேலம்வாரு, வெங்கடகிரி நாயுனிவாரு, ஆதிசெட்டிவாரு, மொயிலாபேட்டவாரு, கெஜ்ஜலவாரு, பங்காளம்வாரு, சகலாபுரம்வாரு, நாஜர்வாரு, புவனகிரிவாரு, செங்கல்பட்டுவாரு, நல்லவாண்டுவாரு, புஷ்பாலவாரு, திரிச்சிணபள்ளிவாரு, சகலாபுரம்வாரு, சித்திராலவாரு, போர்திகிஸ்வாரு, ஆத்தூரிவாரு, விருத்தாசலம்வாரு, சுன்னபவாரு, சாகோலவாரு, பிசுனுவாரு, புதுச்சேரிவாரு, முப்பாலவாரு, நடுகுப்பம்வாரு, திருமலநாயுனிவாரு, மிட்டபாளையம்வாரு, செம்பேடுவாரு, தூசுவாரு, ஒழுக்கைவாரு, கருப்பூருவாரு, ஜல்லிவாரு, கெந்தபொடிவாரு, தெவனுசெட்டிவாரு, கொள்ளபாளையம்வாரு, செந்திராலவாரு, புஷ்பாலவாரு, முத்துரங்கவாரு, சித்தூருவாரு, களிசபாக்கம்வாரு, கோனேடிவாரு, புள்ளாருகுடிவாரு, ஓடலப்பட்டுவாரு, பிச்சம்வாரு, ஆலபாக்கம்வாரு, குட்டியாங்குப்பம்வாரு, முத்துரங்கம்வாரு, அம்மாபேட்டவாரு, களிசபாக்கம்வாரு, சங்குவாரு, ஆள்ளவாரு, புட்டாவாரு, திம்மவாரு, ஊருகாயலுவாரு, ஆரணிவாரு, கஸ்தூரிவாரு, ஓடலப்பட்டுவாரு, கொண்டப்பாவாரு, ஜடலூர்வாரு, நத்திவாரு, சேமகோட்வாரு, அளகாத்திரிவாரு, அன்னதானபேட்டவாரு, மேடவாக்கம்வாரு, ஆதிசெட்டிவாரு, காரலேவாரு, நாகப்பட்டணம்வாரு, மொயிலாபேட்டவாரு, தொளசிங்கம்வாரு, கூடலூர்வாரு, தொண்டமானத்தம்வாரு. கொண்டிவாரு, பாயசம்வாரு, பகடாலவாரு, உப்புவாரு, பட்ட

ணம்வாரு, வேம்புவாரு, பாலகுருவாரு, தூசுவாரு, லோகய்யாவாரு, எரலூர்வாரு, ஏலூர்வாரு, பிசுனுவாரு, வெங்கிடசுப்புவாரு, எடகநாடுவாரு, கோவில்லூர்வாரு, எழுமேடுவாரு, வரதய்யவாரு, கொள்ளிருசுவாரு, பாலமுத்துவாரு, குப்பிச்சிவாரு, சிப்பாய்வாரு, வெளங்கல்பட்டுவாரு, கந்தபாளையம்வாரு, நாமாலவாரு, சிதம்பரம்வாரு, புதுக்கடைவாரு, முத்துவாரு, வரவாடிவாரு, மாமிடிமாக்குவாரு, திருவாதிவாருகளாம்.

☞ இந்தப்பட்டியில் ஒரேவீட்டுக்காரர் பெயர்களை அடிக்கடி சேர்த்துஎழுதி இருந்தவைகளைவிட்டொழித்து, நூதனபெயர்களைமாத்திரம் பதிப்பித்தோம்.

இந்தவீட்டுக்காரர்கள் ஜனகல, முதுகுல, புஷ்பால, பயிடிபாலு, விஷ்ணு, காசி, அச்சுந்தல, கெந்தம்வாரி, யோரசகல கோத்திரங்களைச் சார்ந்தவர்களாம்.

சென்னையில் புராதன பெரியகுடும்பத்தாரும், தேசாய் சிரோஷ்டிகள் வகுப்பினராக ஜுவலித்தவரும், இப்போது கவர்ன்மெண்டு டெலிகிராப் சென்டிரல் ஆபீசு பொக்கிஷாதிபதியும், பாலகிருஷ்ண விஜய முதலான பல கிரந்தங்களை இயற்றிய வித்துவசிகாமணியுமாகிய, ஸ்ரீமத் கேதுகுல திலகராகும், விஜயராகவலு நாயடுகாரவர்களால் எமக்கு தெரிவிக்கப்பெற்ற சென்னை பலிஜவாரின் வீட்டுப் பெயர்களை இதனடியிற் காணலாம்.

கேதுவாரு, சாணுவாரு, குப்பமுசாணுவாரு, கொடுகுலசாணுவாரு, குவ்வலசாணுவாரு, நரஹரிவாரு, நாயருவாரு, இராலூரிவாரு, தொந்தாலூரிவாரு, நீலகண்டமுவாரு, இருப்பூரிவாரு, பூபதிவாரு, நீலிவாரு, ஆவுலவாரு, தொந்துலவாரு, சிலமுத்துருவாரு, நெல்லூரிவாரு, இராசமல்லிவாரு, கோடம்பாக்கம்வாரு, தெப்பலவாரு, மிரியாலவாரு, தனிசெட்டிவாரு, கொரடிவாரு மாசிவாரு, தாண்டலவாரு, முத்தியாலவாரு, தொன்றபட்டிவாரு ஆரணிவாரு, காதெலவாரு, சதகம்பேடிவாரு, மாரிசெட்டிவாரு, பகடாலவாரு, போகலவாரு, தோட்டவாரு, பொன்னேரிவாரு, சிரிவேள்ளவாரு, பொன்னகண்டிவாரு, சணகாவாரு, கத்துலவாரு, உடதவாரு, அரசாவாரு, சாதனவாரு, மெண்டுவாரு, தாமுவாரு, நாகலாபுரமுவாரு, களிஜம்வாரு, பெனுகாலூரிவாரு, எரம்மசெட்டிவாரு, பலகூரிவாரு, கெட்டமுவாரு, அல்லமுவாரு, கங்கிபட்டிவாரு முதலானவீட்டுக்காரர்கள் இரத்னல பலிஜவாரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஜனகலகோத்திரம், காசிகோத்திரம், செட்டலகோத்திரம், மல்லெலகோத்திரம், அச்சுந்தலகோத்திரம், பைடிபாலுமுதலான கோத்திரங்களைச்சார்ந்தவர்களாம்.

இந்த வகுப்பில் ஒருகாலத்தில் 100 வீட்டுக்காரர்களுக்கதிகமாகஇருந்தார்கள். இப்போதுசிலகுடும்பத்தார்கள் நசித்துவிட்டபடியால் அவர்களுடையபெயர்களை திட்டமாய் அறியக்கூடவில்லை. சென்னை திருவல்லிக்கேணியி லிருக்கும் ஸ்ரீமான் லால்பேட்டை வெங்கடபதிநாயடுகா ருடைய குமாரர், லால்பேட்டை ஸ்ரீவெங்கட வரதராஜுலுநாயடுகாரவர்களால் கிடைத்த திருவல்லிக்கேணி பலிஜவாருடையவீட்டுப்பெயர்களாவன-லால்பேட்டைவாரு,மல்ஜட்டிவாரு, புட்டாவாரு, பருத்திபெட்டுவாரு, சூரவரமுவாரு, சூருவாரு, நீவகண்டமுவாரு, இரவுத்துவாரு, வேங்கவாசிவாரு, புட்டமுவாரு,என்றுதிகளாம்.

சென்னையில் மூதகம்மலு பலிஜகுடும்பத்தைச் சார்ந்த சிலவீட்டுப் பெயர்களாவன.

மோதரபுவாரு, சக்காவாரு, பண்டலவாரு,கிரந்தேவாரு, புரமுவாரு, கோட்டவாரு, போதுலவாரு,எனுமுலுவாரு, சாதுவாரு கெடிதாசுவாரு,ஜெம்மிவாரு,தாடிவாரு, பசுபுலேட்டிவாருகளாம். பெரிகவாரில்- நூதனபாட்டிவாரு,மன்னூரி பேட்டவாரு,கடியம்வாருமுத்தம்வாரு,பண்டலவாரு,கோடேவாரு,கொத்தேவாரு,கொட்டேவாரு,தாசரிவாரு,போதமுவாரு,பேரிவாரு,தஞ்சாவூரிவாரு, வைரிவாரு, கட்டாரிவாரு, இராமதேனுவாரு, செண்டிகண்டிதிவாரு,கத்திகவாரு, இராஜமஹேந்திரமுவாரு, சங்கமவாரு,மெடதம்வாரு, பட்டேவாரு. பானுவாருமுதலானவர்களாம்.

இந்தபெரிக பலிஜவாருகளில் பெரும்பான்மையோர்: விசாகபட்டணம், இராஜமஹேந்திரம், கிருஷ்ணாஜில்லாக்களிலும்; வட ஆர்க்காடு ஜில்லாவைச் சார்ந்த சோமலம், சந்திரகிரியிலும் வசிக்கிறார்கள். வடதேசங்களில்இவர்கள் இராஜநாரு, இராவுகாரு,வஜீருகாரு,பாபுகாரு என்றுதிபட்டபெயர்களால் பிரகாசிக்கிறார்கள்.

மதுரை, திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான விடங்களில் வசித்துவரும் பலிஜவாருடைய வீட்டுப்பெயர்களும், கோத்திரப் பெயர்களும் திருநெல்வேலி கலெட்டரா பீசு ம-ா-ா-ஸ்ரீ, எதிராஜுலுநாயடுகாருடைய சிட்டாவின்படி இதனடியிற்பதிப்பித்திருக்கிறோம்.

மெண்டுகுண்டலவாரு, பசுபலேடிவாரு, தோண்டேட்டிவாரு, பெத்துரெட்டிவாரு, முசனவாரு, மன்னவாரு, கோலவாரு, சீர்பாதமுவாரு, சாயனவாரு, படவெட்டிவாரு, இந்தவீட்டுக்காரர்கள் *

*கவியபகோத்திரம்,ஜனகல கோத்திரம், தசரத கோத்திரத்தார்களாம். இந்த 8 பெயரும் 420 வருஷங்களுக்கு முன்,விஜயநகரத்திலிருந்து வந்த நாயடுகாருஸமஸ்தானத்தாரோடுவந்து திருநெல்வேலி,சரகம், ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமம் இடையபேட்டலு என்ற கோகுல பிருந்தாவனத் தெருவில்வசிக்கும் ஆதிபலிஜவாரு. இவர்களின்சுற்றத்தார் திருநெல்வேலிஜில்லாவில் பலபக்கங்களில் பரந்துவசிக்கிறார்கள்.

கெம்பிரமுவாரு,மல்லேனிவாரு,நெடுங்கொண்டமுவாரு,கோட்டவாரு, பெனுகொண்டவாரு, குன்னவாரு, சுரபிவாரு, ஆகிய*

* இவர்களில் அநேகர் உத்தியோக வர்த்தக ஜீவனம் செய்து வருகிற தசரதகோத்திரம்,ஜடபாலகோத்திரம்,ஜனகலகோத்திரத்தார்கள். திருநெல்வேலி, ஸ்ரீ வைகுண்டத்திலிருக்கிறார்கள். பாலகோத்திரத்தார்கள் பாளையங்கோட்டையில் அதிகம்.புதுக்குடிகிராமம் முனிசிப்புகுத்தகைஇவனும்தாரர்கள்.

சீதமுவாரு, கத்திவாரு, சேகத்திவாரு, மல்லேணிவாரு,ஜகதிவாரு, சத்திரமுவாரு, நக்கவாரு, பெருகுவாரு, தோட்டவாரு, பசுபு லேட்டிவாரு, பட்டாலவாரு, ஆகிய இவர்கள்.*

* வீரமுகவு புரத்தி லிருக்கிறார்கள். பாலகோத்திரத்தார். 16 முதல்20 வீட்டுப் பெயரார்திருநெல்வேலி தாலுகாவைச் சார்ந்தவீரராகவபுரத்திலிருக்கிறார்கள். இவர்கள் கோத்திரப் பெயர்கள் செம்மையாகத் தெரியவில்லை, இவர்களில் பெரும்பான்மையோர் மதுரையி லிருக்கிறார்கள்.

*பட்டாலவாரு, கொண்டாடுவாரு, பசுபுரெக்கலவாரு, கொண்டவாரு, பிண்டிவாரு, பசுபுவாரு, மந்தலவாரு, இவர்கள்.

* மச்சகோத்திரம், பாலகோத்திரம், வீரராகவபுரத்தி லிருக்கிறார்கள். ஜனகலகோத்திரம், கூர்மகோத்திரம், வாமனகோத்திரம், வராஹகோத்திரத்தார் இவர்கள் வீரராகவ புரத்தில்குடியிருக்கிறார்கள், நரசிம்மகோத்திரத்தார் இவர்கள் அம்பாசமுத்திரம் தாலுகா கல்லடகுருச்சியில் குடியிருக்கிறார்கள்.

இனி ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் பலிஜவாருடைய வீட்டுப் பெயர்களை, இதேமாதிரியாக எழுதினால், இப்புத்தகம் பெரிதாகி விடுமென்றஞ்சி கஞ்சாம்,விசாகபட்டணம், இராஜமகேந்திரம்,மசுலிபட்டணம்,நெல்லூர்,கடப்பை, கர்நூல், மதிராசு முதலான விடங்களிலிருக்கும் அன்பர்கள் எழுதியனுப்பிய வட்டுப்பெயர்களை, இவற்றிற்குமுன் அகப்பட்ட பெயர்களுடன் சரிபார்த்து,புதிதாகத் தோன்றியப் பெயர்களை மாத்திரம் இதனடியில் பதிப்பித்திருக்கின்றனம். அவைகளாவன

அத்திரிவாரு, அச்சுதவாரு, அசுவணிவாரு, அமரபாலவாரு, அருணவாரு, அங்குலிவாரு, அம்பாரிவாரு, அஷ்டாக்ஷரமுவாரு, அநுரதவாரு,அசுவகல்பவாரு, அம்சவாரு, அஞ்சணவாரு, அரீதாசுவாரு, அச்சுதவாரு அங்குலிவாரு, அஞ்சேடிவாரு, ஆம்பூரிவாரு, ஆடுவாரு, ஆதுலவாரு, ஆரபிவாரு, ஆலூரிவாரு, ஆருகுண்டலவாரு, இராஜபாலவாரு, இரம்பாவாரு, இராஜசேகரவாரு, இரங்கராயவாரு, ஈசுவாரு, ஈருவாரு,எரமச்சவாரு,எனுகுலவாரு, எய்யாரிவாரு, எனுகுலவாரு, ஏனுதிவாரு, ஐயாரிவாரு, ஐதிண்டலவாரு, ஒப்பாரிவாரு, ஓரப்புவாரு, கண்டபேரண்டவாரு, கந்தமுவாரு, கிருதாவாரு, கொபபமுவாரு, கருடவாரு, காசிவாரு, கம்பீரவாரு, கர்ஜூரவாரு,கிரிகிடமுவாரு, கோருவாரு, கோபாலவாரு, கம்புலிவாரு, காளாஸ்திரிவாரு, கர்ஜனவாரு கோஷ்டிவாரு, கிருதாவாரு, கோகுலவாரு, கூனிவாரு, கம்பமுவாரு,கொப்பிவாரு,கோரசவாரு,குண்டதேவவாரு, கர்தாலவாரு.

கடகுமுவாரு, குப்பமுவாரு, காகிவாரு, கட்டுவாரு, கொங்கு வாரு, கேசிமதவாரு, குடிசுட்டுவாரு, கங்கம்மவாரு, சக்கிவாரு சிங்கமுவாரு, சுந்தரவாரு, சோடபாலவாரு, சுகுமாரவாரு, சேதி வாரு, சுயசேனவாரு, சுகந்தவாரு, சதுரங்கமுவாரு, சம்பன்ன வாரு, சந்ததிவாரு, சகோத்திரவாரு, சுமந்துவாரு, சில்லாவாரு சாம்பிராணிவாரு, சோமுவாரு, சம்புவாரு, சங்குலவாரு, சிலா வாரு, சகிரமுவாரு, சங்கபொச்சுவாரு, சாரதிவாரு, சங்குவாரு, சகிரமுவாரு, சுரபிவாரு, சொஜ்ஜிவாரு, சல்லாவாரு, சாமிசெட் டிவாரு, சுண்ணமுவாரு, சவரமுவாரு, சல்லென்வாரு, சரமுவாரு, சவுத்திரிவாரு, செம்பேடுவாரு, சாண்டிவாரு, ஜம்மலமடுகுவாரு, ஜினிவாரு, ஜங்கமயவாரு, ஜுட்டுவாரு, ஜொன்னலவாரு, ஜோகி வாரு, ஜகநாதமுவாரு, ஜல்லிவாரு, டபேதாருவாரு, டமாரவாரு, தாடிவாரு, தித்திவாரு, தீபமுவாரு, தேவதாசவாரு, தன்மந்திரி வாரு, தாசுவாரு, தண்டுவாரு, திலமுவாரு, திருபதிவாரு, தங் கேடிவாரு, தம்பூருவாரு, தீர்த்தமுவாரு, துளசிவாரு, தாமரால வாரு, தேவராயலவாரு, தாதிவாரு, தாமுலுவாரு, தூபமுவாரு, தவனமுவாரு, தாட்டிதோப்புவாரு, தென்னலிவாரு, நாயடுபேட் டவாரு, நகுசவாரு, நாமாலவாரு, நோட்டிபீகமுவாரு, பத்தி வாரு, பானுவாரு, பூசபாட்டிவாரு, பட்டநாமமுவாரு, போஜரா ஜுவாரு, புலோமரிஷிவாரு, பஜ்ஜலவாரு, போகிராஜவாரு, பஜ னவாரு, பத்திராசலமுவாரு, பசுபுகுட்டவாரு, பாலரிஷிவாரு, பசு வவாரு, பண்டரிபுரமுவாரு, பெல்லமுவாரு, மரகதமுவாரு, முடு குலவாரு, மேருவாரு, மல்லிகார்ஜுனவாரு, மல்லேணிவாரு, மன் னமுவாரு, மங்கிவாரு, மிரபகாயவாரு, முரிகிநாட்டிவாரு, ரதால வாரு, ராயதுர்கமுவாரு, வஜிராலவாரு, விஜ்ஜலவாரு. முதலான வர்களாம்.

இந்த பலிஜவாருக்குள் ஆதியில் ஆயிரம் வீட்டுக்காரர்களாகவும், மத்திய காலத்தில் முந்நூறுவீட்டுக்காரர்களாகவும் இருந்தார்கள் என அநேகர் அபிப் பிராயப் படுகிறார்கள். இதுவிஷயமாக **ஸ்ரீ பிரம்மச்சாரிநாராயண தாசரவர் கள்** பலவிடங்களுக்கு நேரில்போய் கஷ்டப்பட்டு கண்டுபிடித்தப் பெயர்களை தெலுங்கு காவியங்களுடன் பதிப்பித்தோம். பிறகு 1891 ஆம் கானிஷ்வாரி கணக்கெழுதியபோது இந்தபலிஜவார்களில் 650 வீட்டுக்காரர்கள் இருப்பதாக **மேஸ்டர் ஸ்டூவார்டு** துரையவர்கள் ரிபோர்ட்டில் காண்பித்திருக்கிறார்கள். இந்த உண்மையை அறியும்படி ஆயிரங்கணக்கான விளம்பரங்களை அச்சிட்டு அநேகருக்கு அனுப்பினோம். அவைகளைப் பார்த்த அநேகர்பதில் எழுதினார்கள்,

எழுதினாலுமென்ன? அவர்கள் எழுதியனுப்பிய பெரும்பான்மையானப் பெயர்கள்: தம்முன்னோரும், தாமும் இருந்த அல்லது இருக்கிற இடங்களினுடையவும், தொழில்களி னுடையவும் பிதாமாதாக்க ளுடையவும் பெயர்களாக தோன்றியபடியால்; அவைகளை விட் டொழித்தும், இந்ததக்ஷண நாட்டில் பலிஜவாரு விசேஷமாக வதிந்துவரும் சென்னை, திருப்பாத்திருப்புலியூர், திருநெல்வேலி முதலான சிலவிடங்களிற்பெற்ற புதுப்பெயர்களையும் பதிப்பித்தோம்.

இந்தவீட்டுப் பெயர்களின் கருத்து என்னவென்று விசாரித்துப் பார்ப்போமாகில்—அவைகள், கேவலம் அந்தந்தவகுப்பு பலிஜவாரு குடியிருந்த இடம், தொழில், அந்துஸ்து, சாகைகளை காட்டுவதாக ஸ்பஷ்டமாகும், ஆகவே இந்தவீட்டுப் பெயர்களை பலிஜவாரு தமதுபெயர் களுக்குமுன்பாகவும், தஸ்தாவேஜு, பத்திரப், பட்டாமுதலானதுகளில்எழுதிவைத்துவழங்கிக்கொண்டும், அல்லது பலிஜவாருடையவீடுகளில் அவரவர்களுடைய கோத்திரம், சூத்திரம் விட்டுப்பெயர்களை பெரியோர்களைக்கேட்டு எழுதிவைத்தும், தம்சந்திகளுக்கு தெரிவித்துவந்தால்; இப்போது இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை. தம் தம் வீட்டுப்பெயர்கள் கோத்திரம் சூத்திரம்தெரியாமல் தவிக்கவேண்டியதுமில்லை. ஒருகுடும்பத்தில் எப்போதோ அநேகவருஷங்களுக்கு ஒருதடவை நடக்கும் கலியாண சுபகாலங்களில் இரண்டொருவிசை வீட்டுப்பெயர் முதலியன உச்சரித்து, பிறகு உபேக்ஷையாக இருப்பதனால், சிலருடைய கோத்திரம் வீட்டுப்பெயர்களைப்பற்றி வினவும்போது, வாயில் வந்தப்பெயர்களை உளர; அவர்களைச் சரியான பலிஜவாரோ வென்றுசந்தேகிக்கவும் இடமாகி விடுகிறது. சிலருடைய விவாஹ காலங்களில் மாப்பிள்ளை, பெண்வீட்டார் இருவருக்கும் தம் தம்வீட்டுப் பெயர்கள்தெரியாமல்புரோஹிதரைப்பார்த்துபரிதவிக்க, அவர்அங்குவநதிருக்கும் படிப்பில்லாலத பெரியவயதையுடையபந்துக்களைப்பார்த்துப்பலதரம்கேட்க, அவர்களும் தெரியாமல் தவிக்க, கடைசியில் புரோஹிதரே காலதேச வர்த்தமானத்தைத் தழுவி, கர்ப்பூரமவாரு, கலகண்டமவாரு, புஷ்பாலவாரு, அச்சந்தலுவாரு என்றுதிவாயில்வந்த வீட்டுப்பெயர்களைச் சொல்லி காரியத்தை முடித்து விடுகிறார்-சிலர் இப்பெயர்களையே தம்வீட்டுபெயர்க ளாகக் கொண்டு தம்சந்ததிகளுக்கும் வழங்கி வருகிறார்கள்.

பலிஜவாருடைய கோத்திர விவரம்.

பலிஜவாருடைய முன்னோர் கஸ்யப, பாரத்துவாஜ கோத்திரங்களைச் சார்ந்தவர்களாக இருக்க, இக்காலத்தில் இந்த இராஜதானியின் வடகீழ்நாடுகளின் பலிஜவாருகள், அத்திரி, ஆங்கிரச. மரீசி முதலான கோத்திரங்களைச் சார்ந்தவர்களாகவும்; தெற்கே தமிழ் நாடுகளில் வசிப்பவர், கஷியப, சலம, ஜனகல, தசரத, ஒடபால, காசி, செட்டல, மல்லேல, அச்சுந்தல, பைடிபாலு, முதுதுல, புஷ்பால, கேந்தம், யோரசாகல, ஜடபால, பால, மச்ச, கூர்ம, வாரஹ, நரசிம்ம, மஹிபதாதி கோத்திரங்களைச் சார்ந்தவர்களாகவும் பிரகாசிக்கிறார்கள்

பலிஜவாருடைய சூத்திரம்.

பலிஜவாருகளில் பெரும்பான்மையார் போதாயன, அசுவலாயன, ஆபஸ்தம்ப, காத்தியாயனுதி சூத்திரங்களைச் சார்ந்தவர்களென்று அநேக ஆரியர் சித்தாந்தம்.

பலிஜவாருடைய மதம்.

இந்த பலிஜவாரு பரம்பரையாக பகவத்பக்திபராள் என்பதற்கு பரதகண்டத்தின் பெரும்பாகமானவிடங்களிலும், முக்கியமாகதக்ஷணபாகங்களிலும்அவர்களால் கட்டப்பட்டிருக்கும் சைவவைணவாதிக் கோயில்களும், மகத்தான மண்டபங்களும், மடம், தடம், சாலை, சோலை, தடாகங்களும், மானியங்களும், ஆபாணுதி திருப்பணிகளும் இப்போதும் சாக்ஷிசொல்லுகின்றன.

ஆதியில் இவர்கள் சந்திரவம்சத்தாரென்ற பெயருடன் பிரகாசித்தபோது சாக்ஷாத் பரபிரம்மத்தின் விசேஷப்பெயராகிய விஷ்ணுவை வணங்கி, அவருடைய அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணபிரானை தமக்கு இகபரத் தலைவனுகக் கொண்டு வணங்கிவந்தார்கள். அப்படிவிஷ்ணுவைக் கொண்டாடினும்,சிவபூசையையும், சிவதருமங்களையும் செய்துவந்தனர்—

பிறகு இவர்கள் ஆந்திரரென்ற பெயரைப் பெற்றகாலத்தில், சிலர்புத்தசமயாசாரத்தைத் தழுவினும், பெரும்பாலும் சைவவைணவ மதஸ்தாபகர்களாக இருந்தார்களென்பதற்கு விக்கிரமார்க்க மஹாராஜனே போதுமான சாக்ஷியமாகும்-அந்த விக்கிரமார்க்கன் காலத்தில் புத்தமதம் பிரபலஸ்தியிலிருக்கக் கண்டு, அதைக்கண்டித்து சைவவைணவ மதத்தை ஸ்தாபித்தார் என்று சரித்திரம் முறையிடுகின்றது. அவர் காளிகாதேவி வரபிரசாதத்தைப் பெற்றவராகினும், சிறந்த சைவ வைணவராகவும் இருந்தார்.—

அநந்தரம் இந்த ஆந்திரர், இராயலுகாரு என்ற ஸமஸ்தானங்களை ஸ்தாபித்த நரபதி கஜபதிராயர்கள் விஜயநகரம், ஆனைகுந்தி, பூரி, ஜகந்நாதம், திருபதி, காஞ்சி, வேலூர், ஸ்ரீரங்க முதலான விடங்களில் பிரபலமான கோயில் கோபுரங்களைக் கட்டிவைத்தும், அநேக திருப்பணிகளைச் செய்வித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணதேவராயலு வைணவமத விசிஷ்டாத்துவைதியாக இருந்தும் தமது ஸமஸ்தானத்தில் தாதாசாரியர், அப்பயதீக்ஷதர், தக்ஷணாமூர்த்தி சுவாமிகளாதிதுவைதா த்துவைத வசிஷ்டாத்துவைத சித்தாந்திகளையும் ஆதரித்து வந்தார்.

கடைசியாக இந்த இராயலுகாரு சந்ததிகளாகிய பலிஜவாரு தென்தேசங்களில் நாயடுகாரு ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தபோது மதுரை, மன்னார்குடி, திருநெல்வேலி, திருச்சி, ஸ்ரீரங்கம் முதலான விடங்களில் விசுவநாதநாயடு, கிருஷ்ணப்பநாயடு, திருமலைநாயடு, தஞ்சை அச்சுதவிஜயராகவலு நாயடு, விஜய

ரங்கநாயகி, மங்கம்மகாரு முதலான மஹாத்துமாக்கள் எண்ணிறந்தப் பொருளை செலவழித்து சைவவைணவ தேவாலயங்களைச் சிறப்பாக்கி ஏராளமான திருப்பணிகளைச் செய்வித்திருக்கிறார்கள்.

இப்படி பரம்பரையாக சைவவைணவ மதோத்தாரர்களாகி இந்துமதத்தைப் பரமளிக்கச் செய்வித்து, சமரசஞான முடையவர்களாகி கீர்த்தியைப் பெற்ற பலிஜவாரில் தஞ்சையை யாண்ட அச்சுத விஜயராகவலு நாயடுகாரும், விஜய ரங்க சொக்கநாத நாயடுகாரும், விசேஷமாக வைணவபக்தியில் சிறந்தவர்களாகி,இரவில் ஆதரங்கமாக பஜனைசெய்துக்கொண்டு அரங்கமா நகருள்ளானை தரிசித்து ஆநந்தநடன மாடிவந்ததன்றியில், தமது கிரஹகிருதிய கர்ம கலியாணங்களை வைணவமதரீதியாக நடாத்திவந்து ஸ்ரீவைஷ்ணவர்களாக பிரகாசித்திருந்தார்கள்.—

இப்படி மதவிஷயத்தில் மஹோன்னத தசையைப்பெற்றுப் பரமளித்தபலிஜவாரு, இப்போது கல்வியறிவு இல்லாமைனாலும், காசுபணமில்லாமைனாலும், காலதேச வித்தியாசத்தினாலும், உண்மையான வைணவ சைவ சமயங்களை யறிந்துய்ய வகையற்று, "தாதனைக்கண்டால் ரங்கன், ஆண்டியைக் கண்டால் லிங்கன்" என்று சொல்லி காலம் போக்கவே, இவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட இவர்களுடைய ஸ்திரீகள் காட்டேரி, குட்டிச்சாத்தான், மதுரைவீரன், மொட்டையாண்டி, முனியன் முதலான சில்லரைத் தேவதைகளை பூஜைகள்செய்ய ஆரம்பித்தார்கள். இம்மட்டோ! பட்டிக்காடுகளில் பகுத்தறிவின்றி பூமியைஉழுது காலம்போக்கும் அநேகஏழை பலிஜவாருகள், புரட்டாசி மார்கழி முதலான மாதங்களிலும், சனிமுதலான சிலகிழமைகளிலும், தம் தம் கிராமப்பெருமாள் கோயில்களில் போட்டிருக்கும் வடகலை நாமங்களைக் கண்டு தாமும்தம்முகங்களில் அப்படியே வடகலைநாமமணிந்து உண்மையானபயபக்தியுடன் **இரங்கப்பா! ஏடுகோண்டலவாடா"** என்று வணங்கிவரச்சே; சிலசாத்தாதாரர்கள்அவர்களிடம்போய் அவர்களை **பிரகிருதர்களென்றும்"** அவர்களுக்கு மோக்ஷமில்லையென்றும் சொல்லி, அவர்களைதென்கலையாராக்கி**திருநாமதாரிகள்** என்றபெயரிட்டு, இந்தஏழைகளுடைய கலியாணம்கருமாதிகாரியங்களை தம்மிஷ்டப்படி செய்விக்க ஆரம்பித்தார்கள். கல்வி அறிவு விருத்தியடையும் இக்காலத்தில், சிலர் ஸ்ரீவைணவ பிராமணர்களைக் கொண்டு நடப்பித்துவருகிறாகள்,

இந்த பலிஜவாருடைய விவாஹாதி முறைகள்.

பலிஜவாரு ஆதியில் மநுமுதலான தருமசாஸ்திரங்களிற் சொல்லியபடி விவாஹங்களைச் செய்து வந்தார்கள். பிறகு வடநாடுகளைவிட்டு தெற்கே வந்து வதிந்துவருகையில், காலதேசவர்த்தமானங்களைத் தழுவி விவாஹங்களைச்செய்ய ஆரம்பித்தார்கள்— அப்படி ஆரம்பித்ததில், இடத்துக் கிடமும், காலத்துக்கு காலமும் வேறுவேறு விதமான விவாஹச் சடங்குகளினல் சண்டை சச்சரவுகளுண்டாகி வருவதைக் கண்டு தஞ்சையிலாண்ட நாயடுகாரும், முக்கியமாக

மதுரைக்கதிபதி யாகிய விஜயரங்கச் சொக்கலிங்க நாயடவர்களும், மஹாவைணவபக்திசிரேஷ்டர்களாக பிரகாசித்தபடியால் அவர்கள் விவாஹாதி காரியங்களை வைணவசம்பிரதாயத்தைத் தழுவிச் செய்விக்க நியமனம்செய்தார்கள் — அந்த நியமன விவரம் அடியில் காணலாம்

ஸ்ரீ சந்திரவம்ச க்ஷத்திரியர்களாகிய பலிஜவாரு அல்லது கவுரவ ஜாதியாருக்குள், தாயார் கர்ப்பத்திலிருந்து சிசு உற்பத்தியாகி தொப்புள் கொடி அறுப்பதற்கு முந்தி ; புருஷ பிரஜையாக இருக்கில், ஜாதகர்மமென்னும் சமஸ்காரம் செய்வித்தும், தொப்புள் கொடியைத் தகிர்த்தும், நெய் அல்லது தேனில் தங்கத்தைக் கொண்டு திருமந்திரத்தைச் சொல்வித் தேய்த்தும், சிசுவின் நாக்கின்மேல் தடவவேண்டும். சிசு பிறந்த பத்து, அல்லது பனிரெண்டு, அல்லது சிசு மாதாவின் தேக ஸ்திதியை யனுசரித்து. நல்ல முகூர்த்த நாளில், பகவானுடைய நாமம் அல்லது பக்தபராளுடைய சுந்திரமான பெயரால் நாமகரணம் செய்விக்க வேண்டும். சிசு பிறந்த நான்காவது மாதத்தில் வெலியில் கொண்டு வந்து ஸ்ரீ சூரிய நாராயணனுக்குக் காட்டவேண்டும். ஆறுவது மாதத்தில் அன்னபிராசனம் (அன்னமிட்டுண்ண) செய்விக்கவேண்டும். ஜனன வருஷ முடிவில், அல்லது மூன்றுவது வருஷத்தில், சவுளம் செய்விக்க வேண்டும். ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்வித்தும், எட்டு அல்லது பதினோராவது வயதில் உபநயனம் செய்வித்தும், ஸ்ரீ ஆசாரியர் சன்னிதானத்தில் பஞ்ச ஸமஸ்காரம் செய்விக்க வேண்டும்,

திருக்கலியாணம் செய்விக்க வேண்டியக் கிரமம் எப்படியெனில்.

முதல் நாளில்—

(1) **நெல் அளக்குதல்** (திருவரங்கம் பெரிய கோவில் என்றாரம்பித்து, பனிரெண்டு தலாம்வரையில் நெல் அளக்கவேண்டும்.)

(2) **முகூர்த்த ஸ்தம்ப ஸ்தாபனம்.** — **மூங்கில், அத்தி, ஆலம், பால், அரசமரங்களில்** ஒன்றை, சுகுர்த முகூர்த்தகால மறிந்து, மங்கள வாத்தியத்துடன் உபயோகப் படுத்தவேண்டும்.

(3) **நலுங்கு.**—ஸ்ரீ ரங்க நாதருடைய பெருமையைப் பற்றிய பாட்டுகளைப் பாட வேண்டும்.

(4) **ஸபா தாம்பூலம்.** — அங்கு வந்திருக்கும் பந்து மித்திரர்களுக்கு தாம்பூலங் கொடுத்துஉபசரிக்கவேண்டும்.

இரண்டாம் நாளில்

நலுங்கு—நிச்சியதார்த்தம்—ஸபா தாம்பூலம்.

மூன்றும் நாளில்-முகூர்த்தம்.

தேவ பிரம்ஹண சந்தர்ப்பணம்.—வசனம், சுங்தலம், நலுங்கு, மங்களஸ்நானம், பெருமாள் திருவாராதனை, அரமணை தோரணம், அகண்ட தீபம், புண்யாஹ வசனம், நாந்தி, நாமகரணம், அன்னபிராசனம், சௌளம், குமார போஜனம், ரக்ஷா பந்தனம், பாலிக பூஜை. செய்வித்தல்.

உபநயன ஹோமம்.—இந்த பூநூலுடன், பொன் வெள்ளி நூல்களையும் சேர்க்கவேண்டும்.

உபநயனம், சந்தியா வந்தனம், பிரம்மோபதேசம், அவுபாசனம், செய்விக்க வேண்டும்.

ஹோமம்.—ஹோம ஸ்தாலி, வைத்து ஹோமம் செய்விக்கவேண்டும்.

பிக்ஷ பிய்யம—கங்கா யாத்திரை—

பிக்ஷையை, மாப்பிள்ளையின் தாயாரோடு பிறந்த ஸ்திரீகள் வைத்த பிறகு, அன்னியர் வைக்கவேண்டும். விவாஹ புண்ணியாஹ வசனம்—லஜா ஹோமம்.— ஷை பிக்ஷை திரவியத்தை பெருமாளுக்குச்சேர்த்தவும். நவக்கிரஹ பூஜை—வஜிரபாண்டபூஜை— கங்காயாத்திரை திரவியம், புரோஹிதாளுக்கு சேர்த்தவேண்டியது.

அருந்ததி பூஜை, மஹா லக்ஷ்மி பூஜை, வஸ்திர தானம், பாசிங்கம், கத்தி கடாரி பெறல், மெட்டிகள், தரிப்பிக்கவேண்டும்—

வரபூஜை:— கன்னிகாதானம் செய்வதற்கு மாப்பிள்ளையின் பாதங்களை, மாமன் மாமியார் பூஜித்துக் கன்னிகையை தத்தம் செய்யவேண்டும்.

மதுபர்க்கம்— மஹா சங்கல்பம்—திராவர்த்தி. சம்பந்தி பிரதி சம்பந்திகள், பரஸ்பரம் வம்ஸாவளியைத் தெரிவிக்கவேண்டும்.

மாங்கல்ய பூஜை, ஆசாரிய சம்பாவனை, குருஹஸ்தாஸ்ரமோபநயனம்.
ஆசாரியர் சன்னிதானத்தில் சமர்ப்பிக்கவும்.

தாராதத்தம். "கன்னியாகங் கனகஸம் பன்னும், கனகாபரண பூஹதரந்தியா சமர்ப்பி விஷ்ணுவே துபியம் பிரஹ்மலோகே சகர்ஷய," என்று சொன்ன பிறகு-சுபலக்கினே, ஸாவதானே, சுப முஹூர்த்தே, ஸாவதானே, லக்ஷ்மிநாராயண ஸ்வரூப ஸாவதானே, என்று அனைவரும் சொல்ல, வேண்டும். பிறகு

சீரகம் — வெல்லமும் கொடுத்தல். பிறது

* மாங்கலிய தாரணம், பாணிக்கிரஹணம், சேஷபிய்யம், முந்தாணி முடி. மங்களாஷ்டகம், ஸப்தரிஷி பூஜைகள் செய்விக்கவேண்டும்.

* இதை ஸ்ரீ கூர்மாவதாரமாகவாவது, ஸ்ரீசங்க சகிராார்த்த புண்டர ஸ்ரீ சூரண குறிகளைப்போன்ற மாங்கலியத்தில் எட்டு நூல்களைக்கோர்த்து தரித்து, விவாஹமான பிறகு நல்ல முகூர்த்த நாளில் மூன்று கயிறுகளாகத் திரித்துக் கட்டவும்

மாங்கலிய சூத்திரம் நலாவிதமாகத் தரித்தாலும், கூர்மரூபமே முக்கியமானது.—இதற்கு உதாரணமாக ஸ்ரீரங்கநாச்சியார், அலமேலு மங்கை, ஸ்ரீ பெருந்தேவி, ஸ்ரீமதுரை தாயார் கழுத்துகளில் விளங்குவது பிரத்தியட்சம். (பிறகு)

அருந்ததி தரிசனை, பலதானம், மங்கல ஹாரத்தி, மஹா லக்ஷ்மீ தரிசனம், அரமனை பூஜைகளைச் செய்விக்க வேணடும். பிறகு

பாலும் பழமும் கொடுத்தல், ஆரத்தி, முந்தாணி முடியை அவிழ்த்தல், ஆசீர்வாதம். ஸபா தாம்பூலம். நடப்பிக்க வேண்டும்.

நான்காம் நாளில்.

நலுங்கு, பூச்செண்டாடல், நாரிகேளிகாடல்,

மாப்பிள்ளையும் பெண்ணும் மஞ்சல் தடவிய தேங்காயை யுருட்டியாடுகையில், பாகவதர் நாச்சியார் திருமொழிகளில் "வாரண மாயிரம்," என்னும் திருமொழி பாசுரங்களைப் பூரணமாகப் பாடவேண்டும். பிறகு

நாச்சியார் சம்பாவனை (மணமகளோடுசேர்ந்த பெண்டுகளெல்லாரும் தட்டுகளில் சம்பாவனை ஸமர்ப்பிக்க வேண்டும்.) பிறகு

மாலை மாற்றல் (மணமகனும் மணமகளும், பரஸ்பரம் தம்தம் மாலைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்.) பிறகு

ஊஞ்சல், ஹாரத்தி, ஸபா தாம்பூலம், அன்று இரவு செய்விக்க வேண்டும். கங்கண சோரத்துவம் (மணமகள்கங்கணத்தைமணமகன்திருடிக்கொண்டு போனபிறகு; மணமகளும், அவளது சகோதரர்களும் தேடிக் கண்டு பிடித்துக் கட்டிக்கொண்டு வருதல்) பிறகு

ஸ்ரீரங்கநாயகர்,ரங்கநாயகி ஸம்வாதங்களைப் பாடல் நலம்—பிறகு ஊஞ்சல்' ஹார்த்தி, ஸபா தாம்பூலம்.

ஐந்தாம் நாளில்—நாகபலிதினம்.

சுங்குலு, நலுங்கு, சங்கு, கங்கண கிரீடை, மங்கள ஸ்நானம், நாகபலி பாண்டங்களை அலங்கரித்தல், புண்யாஹவசனம், வஜ்ரபாண்ட பூஜை, ஸ்ரீரங்க நாத பூஜை, பஞ்ச பாலிகை பூஜை, ஸ்தம்ப பூஜை, வசந்தமாதன பூஜை,

கஜேந்திராள்வார் பூஜை, கிரஹாராதனே, ஹோமம், நீளமணி தாரணம், தீபால பல்லேரம். பாண்டதந்துவி சர்ஜனம், தசார்க்கியம், கஜேந்திர சம்வாதம், மங்களாஷ்டம், கங்கண விசர்ஜனம், இரண்டாந்தர மெட்டிடல், அருந்ததி தரிசனம், வாஹமனதானம், வசந்தம், இராஜாங்கம், ஊஞ்சல், பானுபு, விடமு. அடப்ப தாம்பூலம், சிரவனம்—புத்திரோற்சவம்=(வெங்கல பிரதிமையைவைத்து) புத்திரசம்பாவனம் (இதில் பாதியைபெருமாளுக்கும், பாதியை புரோஹிதாளுக்கும் சேர்த்தவேண்டும்.) சந்திரனேக்காட்டல், ஈடுவாசித்தல், பிரஹஸ்பதிசம்பாவனே, பலதானம், ஆசீர்வாதம், ஹாரத்தி, பாலும் பழமும் கொடுத்தல். ஸபா தாம்பூலம், பாலிகைலாரிம்பு, பூ பிரதக்ஷணம் அல்லது பவனிவருதல், இராத்திரி கிரஹப் பிரவேசம், மல்லிம்புதொல்லிம்புசடங்குகளேச் செய்விக்கவேண்டும்.

ஸ்ரீ சம்பிரதாய தாம்பூல வினியோகவிவரம்.

1 ஸ்ரீ பெரிய பெருமாளுக்கு, 2 ஸ்ரீ பெரிய பிராட்டியாருக்கு, 3 எம்பெருமானுருக்கு, 4 நம்மாழ்வாருக்கு, 5 நாதமுனிகளுக்கு, 6 உய்யகொண்டாருக்கு 7 மணக்கால நம்பிகளுக்கு, 8 ஆளவந்தாருக்கு, 9 பெரியநம்பிகளுக்கு, 10 திருக்கச்சி நம்பிக்கு, 11 சேனே முதலியாருக்கு, 12 கூரத்தாழ்வாருக்கு, 13 மொதலியாண்டானுக்கு 14 திருவரங்கத் தமுதனுருக்கு, 15 எம்பாருக்கு, 16 பட்டருக்கு, 17 நம்ஜீயருக்கு, 18 நம்பிள்ளேக்கு, 19 வடக்குத்திருவீதிபிள்ளேக்கு, 20 பிள்ளேலோகாசாரியருக்கு, 21 குருகுலோத்தம தாசருக்கு, 22 திருவாய் மொழிப் பிள்ளேக்கு, 23 ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கு, 24 மணவாள மாமுனிகளுக்கு 25 வானமாமலே இராமாநுஜருக்கு, 26 திருவேங்கட எம்பெருமான் ஜீயருக்கு, 27 ஸ்ரீ பிரதிவாதி பயங்கர அண்ணனுக்கு, 28 பரவஸ்து பட்டர்பிரான் ஜீயருக்கு, 29 ஸ்ரீ யாந்திர விஷ்ணு மூர்த்திக்கு. 30 ஸ்ரீரங்க நாராயண ஜீயருக்கு, 31 ஸ்ரீ எரிச்சல் அச்சாருக்கு, 32 அப்பிள்ளேயாருக்கு, 33 ஸ்ரீ தனுர்வாசருக்கு, 34 ஸ்ரீரங்க நாராயண ஜீயருக்கு, 35 ஸ்ரீநாரதருக்கு. 36 பராசரருக்கு, 37 ஸ்ரீவேத வியாசருக்கு, 38 பெத்த தாசருக்கு, 39 விஜயரங்க சொக்கநாத நாயடவர்களுக்கு 40 விஜயராகவனுநாயடவர்களுக்கும்வரிசைக் கிரமமாக் கொடுத்தல் வேண்டும்

இந்த ஐந்து தினங்களில், முதல் நாள் முதல் ஸ்ரீ திராவிட வேத பாசுரங்களேயும், ஸ்ரீ கலியாண சங்கீர்த்தனேகளேயும், சிங்கார ராக சீசபத்திய காவியங்களேயும் பாடவேண்டும். திருக் கலியாணத்துக்கு முந்தியாகிலும் பிந்தியாகிலும் ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தை காலட்சேபம் செய்யவேண்டும்.— மற்றபடி அசங்கியமும். கொச்சை கேளிப் பாட்டுகளேப் பாடக் கூடா. இந்த கிரந்தத்தில் கண்ட சாங்கியங்களனேத்தும் சந்திரவம்ச க்ஷத்திரியர்களாகிய பலிஜவாரனேவரும் பூர்வந்தொட்டு அனுஷ்டித்தவைகளாகையால், இதை இக்காலத்தார் ஒவ்வொருவரும் அனுஷ்டிக்க வேண்டும். இடையில் வந்து நுழைந்த துரனுஷ்டானங்களேக் கட்டோடே ஒழித்தல் நலம்.

ஸ்ரீ பிரம வேத அல்லது (பரமபதமடைந்தகாலத்தில்) செய்யும் ஸம்ஸ்கார ஸங்கிரஹம்.

சந்திர வம்ச க்ஷத்திரியர்களாகிய பலிஜவாரு ஜாதியாருக்குள் இவ்வித விவாஹமாகி புத்திர சந்தான முண்டாகில், அப்புத்திரர்களுக்கு க்ஷத்திரிய வம்ஸத்துக்கேற்ற ஜாதகர்மம், நாமகரணாதி கருமங்களை மனுதர்ம சாத்திரத்தில் சொல்லியிருக்கிறபடி செய்விக்க வேண்டும். அந்த மனுதர்ம சாத்திரத்தின் சாரசங்கிரகத்தையே கேசவ சந்திர பிரம்மாநந்த யோகீசுவரர் நவஸம்ஹிதை அல்லது ஆரியர் ஆசாரம் என்னும் கிரந்தத்தில், சங்கிரகமாக திருவாய் மலர்ந்தருளியதை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அதை படித்துப் பார்ப்பவருக்கு உண்மை வெளியாகும். ஆகவே இத்தியாதி கருமங்களைப்பற்றி இவ்விடஞ் சொல்லி காலம் போக்காமல், இந்த பலிஜவாரு ஜாதியாரில் யாராவது வைகுண்டப்பிராப்தி யடைந்தால், அப்போது அனுஷ்டிக்க வேண்டிய கர்மங்களின் பத்ததிகளை இதனடியில் ஒருவாறு சங்கிரகமாகக் காட்டப் பெற்றிருக்கிறது—

ஸ்ரீ பிரபந்நாள் பரமபதிக்கும் சமயத்தில், கிரஹ சுத்தி செய்து, மணல் பரப்பி, அதன்மேல் தர்ப்பை விரித்தும் பின்பு அந்த பாகவதருடைய திருமேனியை சுத்தி செய்து, மடி வஸ்திரந் தரித்தும், பன்னிரண்டு திருமண் காப்பு ஸ்ரீ சூர்ணங்கள் தரித்தும் ; திருமணித்தாவடங்கள், பவித்திர மாலைகள் சாத்தியும், பெருமாளுக்குத் திருவாராதனஞ் செய்வித்தும், அந்த தீர்த்தம் ஸ்ரீ பாத தீர்த்தம், தீர்த்தவடி தீர்த்தம் ஏகாந்தங்கூடி, ஸ்ரீ பாதரேணு திருமாலை சாத்துபடி பிரசாதங்களைச் சாதித்தும் ; அந்த தர்ப்பாசனத்தில் வடக்கே சிரசாகப் படுக்க வைத்தும், பின் அந்த பிரபந்நர் பரமபத பிரயாணமாகுமவர்களுக்கு, அஸ்டாக்ஷர மஹா மந்திரமாகிய திருமந்திர நித்தியானுஸந்தானம் கட்டமு தென்று அர்ச்சாராதி கதியில் அருளிச்செய் திருப்பதினல்; தர்காலத்தில் ஜனன மரணாதி துக்கத்திற்கு, ஹேதுவாயிருக்கின்ற விசித்திரங்களான சம்ஸார வ்யாபார சர்வ சிந்தனைகளையு மறந்து ; மோக்ஷத்துக் கேதுவாகிய திவயாநு சந்தானமும், எம்பெருமானர் திருவடிகளே தஞ்சமென்கிற திடாங்யாவஸாயத்துடனிருக்க வேண்டியதுமன்றி ; அவருடைய புத்திரன் அல்லது சிஷ்யன் இவர்கள் அந்தப் பிரபந்நருடைய திருமுடியை மடியில் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது. அவர்கள் பஞ்ச ஸமஸ்கார மில்லாதவர்களாயிருந்தால், பஞ்ச ஸமஸ்காரமானவர்கள் பேரில், சங்கு சக்கிரங்களை தர்ப்பையினலெழுதி அவரை சுவீகரிக்கச் செய்வித்து, பின்பு வாக்கிய குருபரம்பரை திருமந்த்ரம் துவயம், சர்ம ஸ்லோகத்தையும் உபதேசித்து ; அவர் மூன்று தரம் அனுசந்தித்த பின், எம்பெருமானர் திருவடிகளே தஞ்சமென்கிற தியானமும், உத்தரவாக்யோச்சாரணத்துடனே திருநாட்டுக்கெழ வேண்டியது. அத்தருணத்தில், ஆப்த பந்துக்களெல்லோரும் ஏக கண்டமாய் உத்தர வாக்கியத்தை ஒரு முகூர்த்தம் வரையில் கோஷிக்க வேண்டியது.

நாராயணபலி செய்கிறவிதம்.

திருநாட்டுக் கெழுந்தருளியபின்;புத்திரனும், பந்துமித்திரர்களும் செம்புக் குடங்கள் சகிதமாய், நதி தடாகங்களுக்குப் போய்;தீர்த்தமாடி திருமண்காப்பு சாத்திக்கொண்டு, புத்திரன் மாத்திரம் ஒற்றை புது வஸ்திரந்தரித்து, எல்லோரும் தீர்த்தமெடுத்துக் கொண்டுவந்து, முத்தத்தில் மெழுகி, ஒற்றைக் கோலமிட்டு,—அதினடுவில் கடங்களை வைத்து ; புத்திரன் பாகவதர்களுக்கு தண்டம் ஸமர்ப்பித்து, கையில் சம்பாவனையை வைத்து, ஸ்வாமிகளைப்

பார்த்துக் கொண்டு நிற்க,—அந்த பாகவதர்கள், கர்மகர்த்தாவைப் பார்த்து "வேறொன்று நானறியேன்" என்னும் தனியனை அனுசந்தித்து, புத்திரனுஞ் சொல்லி அனுக்கை பெற்று "மமபிதுநஹா யேக்ஷ்கூடிய் பரமபத பிராப்த்தி யார்த்தம் நாராயண பலிநுபேண கர்மம் கர்த்தும் யோக்கியதா சித்திம் யணுக்கிரஹேயண" என்று புத்திரன் சுவாமிகளை பிரார்த்தித்து, அந்த அனுக்கை சம்பாவனையை ஸமர்ப்பித்து ; ஸ்வாசார்யாராதநஞ் செய்தும், அநந்தரம் முத்தத்திலாவது, உள்ளேயாவது மெழுகி, ஒற்றைக் கோலமிட்டு, வாழையிலை போட்டு,அதன்மேல் தண்டுலம் பரப்பி, நானகு மூலைகளிலும் நான்குகலசங்கள் நடுவில், ஒரு கலசம் நூல் சுத்திவைத்து, உதகம் பூரித்து, புதுவஸ்திரங்கள்தரித்து, அந்த கும்பங்களுக்குள்ளே தனித்தனியே தர்ப்பை கூர்ச்சங்கள் கட்டிப் போட்டு ; அந்த கும்பங்களுக்கெல்லாம் மாவிலை, தேங்காய், சந்தண புஷ்பங்களா லலங்கரித்து ; அந்த கும்பங்களுக்குள்ளே சுவர்ண புஷ்பங்கள் சமர்ப்பித்தும் ; கர்மகர்த்தாவாகிய புத்திரன் கிழக்கு முகமாகவிருக்க வேண்டும். அவருக்கெதிரி லிருக்கிற கும்பந்தொடங்கி ஸ்ரீ சைலேசதயாபாத்திராதி, தருமகமனத்தியாய வரையில் அநுசந்தித்து,முடிவில் நமஃ வென்று ஆழ்வாராசாரியர்களை ஆவாஹனம் பண்ணி, மானஸீகமாய் சோடசோபசாரஞ் செய்தும், கால யுக்தமாய் ஸ்வாமிகள் முக்கியமாய்கொஞ்சந் திராவிடவேதம் சேவிப்பித்தும் கும்பங்களுக்கெல்லா மொரேதடவையாய், சதாஸ்தபயாமி"என்று அக்ஷதை போட்டு புநர்பூஜை செய்தும்.,—

வேறேயொரு ஸ்தானத்தில் சுத்திசெய்த பலகைப்போட்டு, அந்த சரம விக்கிரஹத்தை வடக்கே திருமுடியாய் படுக்கவைத்தும், புத்திரன் முதலிய பந்துக்களாகிய ஸ்திரீ புருஷர்களும், தனித்தனியே எண்ணெய்தொட்டுசிரசில் வைத்தும், அப்படியே சிகைக்காயைத் தொட்டு வைத்தும், முன் கொண்டுவந்த கடஜலங்களால் தீர்த்தமாட்டி பின்பு, பஞ்ச கலசங்களால் தீர்த்தமாட்டி, திருமேனிதுவட்டி,புதுவஸ்திரந்தரித்தும்,பன்னிரெண்டு திருமண்காப்புஸ்ரீசூரணங்கள் தரிப்பித்து,பெருமாள் சந்நதி திருமாலை சாத்துபடிகளை சாதித்து,வஸ்திர பூஷணங்களால் அலங்கிருதம்பண்ணி அந்த பஞ்ச கலசங்களையும் தக்ஷணை சகிதமாய் சுவாமிகளுக்கு விநியோகஞ் செய்யவேண்டும்.

ஸ்ரீ சூர்ணஅநுக்கை விவரம்.

அநந்தரம், வடக்கு முகமாய் இருக்கிற உபாத்தியாயர், கிழக்கு முகமாயிருக்கிற கர்த்தாவுக்கு "அசேஷ ஸ்ரீ வைஷ்ணவ பாதமூலம் சமர்ப்பித, ஹிமாம் தக்ஷண யதோக்த்ததக்ஷிணி மிபஸ்விக்தருந பிதுஹா யக்ஷய,பரமபத பிராப்தியர்த்தம் கோவில்,திருமலை பெருமாள்,கோவில் ஜீயர்கள், ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளி, ஸ்ரீசூர்ண பரிபாலநஞ் செய்ய கிருபைசெய்தருள என்று உபாத்தியாயர் சொன்னபிரகாரம்:கர்த்தா, ஸ்வாமிகளைப் பார்த்துபிரார்த்தித்து, நாராயணபலி செய்த விடத்தில், சுத்திசெய்த உர லுலக்கைக்கு புதுவஸ்திரம், திருமண் ஸ்ரீசூரணங்கள் தரித்து, தர்ப்பை, மாவிலைக்கட்டி ஒரு தொன்னையில் குழைத்ததிருமண், ஒரு தொன்னையில் குழைத்த ஸ்ரீசூரணம், ஒருதொன்னையில் நெய்யமுது சேர்த்து அந்த உரலுக்குள் தனித்தனியே வைத்து, கர்மகர்த்தா முதலிய பாகவதர்கள் உலக்கையை யெடுத்து, இராமாநுஜ நூற்றந்தாதியில் "மொழியைக்கடக்கும் பெரும்புகழான்"என்னும் பாசுரத்தை அநுசந்தித்து, உலக்கையாலுரலில் மூன்றுதரம் மெள்ளக் குத்தி, உலக்கையை கீழே வைத்து,

விட்டு ; பின்பு அந்த மூன்று தொன்னைகளையும் ஒரு தட்டில் வைத்து ஸ்வாமிகள், பந்துக்கள், இஷ்டர்களுக்கும் விசியோகமாகக் காட்டி : அவர்கள் ஒரு விரலால் நெய்யைத்தொட்டு அவர்கள் நெற்றியில் வைத்துக் கொண்டதன் மேல் ;திருமண் காப்பையும்,ஸ்ரீ சூரணத்தையும் தொட்டு வைத்துக்கெண்டான பின்பு, அந்தப் பிரகாரம் புத்திரனும் தரித்துக் கொண்டு, புத்திரன்கையால் சர்ம விக்கிரஹத்தின் நெற்றியில் சாத்தி, சர்ம விக்ரஹம் யாத்திரை போகிற மார்க்கத்தில் ஜலத்தை மூன்றுதரம் இரைத்துவிட வேண்டும்—பிறகு—

அக்கினி ஸம்ஸ்கார விவரம்.

கர்த்தா, ஸ்வாமிகளைப்பார்த்து. **மமபிதுந அட்சய பாமபத பிராப்த்தி யார்த்தம், துஷாக்னிநா ஸமஸ்காரம் கர்த்தும் யோக்கியதா சித்திம் அநுக்கிரஹேணி.,** என்று தக்ஷிணை சமர்ப்பித்து. ஜலத்தை எடுத்து அக்கினிக்கு அபசவ்யமாய் சதுரமாய்பரிமாரி, திருமந்திரத்தையும், "சூழ் விசும்பணி முகிலே" யும் அநுசந்தித்து, சமித்துகளை ஸமர்ப்பித்து, பின்பு அத்தியிலை அல்லது மாவிலையினால் ஆஜ்யமெடுத்து, அக்கினியில் ஆஹுதிசெய்து, தர்ப்பை கூர்ச்சத்தினால் ஜலமெடுத்து, முன்போல அபஸவ்யமாய் ஜலம் புரோக்ஷித்து,சர்மவிக்கிரஹத்துக்கு புத்திரன் இரண்டு கைகளாலும் கோடி மூடினஉடனே; புத்திரன் ஹோமத்தில் அக்கினி யெடுத்து, உமியும் எருமுட்டையும் போட்டிருக்கிற அக்கினிஸ்தாளியில் வைத்து செந்நெல் வைக்கோல் அல்லது தென்னங் குருத்தினால் பிரிமணை சுத்தி கர்த்தாவின் இடதுகையில் வைத்துக்கொண்டு கிரஹத்துக்கு வெளியில் வந்து நிற்கவேண்டும்.

பின்பு,சரம விக்கிரஹத்துக்கு கரசரணபந்தனஞ் செய்வித்து கோடியினால், நன்றாய் மூடி பந்தனஞ்செய்து; பாதங்கள் முன்னும், சிரசு பின்னுமாய். **கோவிந்த நமோச்சாரணத்துடன்** எடுத்து வெளியிலிருக்கிற ஆசந்தியில் வைத்து, மேலே பிரிசுத்தி, அக்கினி முன்னும், சரம விக்கிரஹம் பின்னும், பந்து மித்திராள் முன்னும் பின்னுமாய் சரம திரு மந்திரத்தில் உத்திர வாக்கியத்தினாலும், பரமபத சௌபானத்தினாலும் கோஷித்துக் கொண்டு, ஸம்ஸாகாரபூமிக்குப்போய், வடக்கு சிரசாக ஆசந்தியுடன்வைத்துக், கர்த்தா, தன்பந்துக்களிலொருவர் கொண்டுவந்த சொம்பிலிருக்கிற சுத்த ஜலத்தினால் சிதைக்குப் புரோக்ஷித்து, கரசரண பந்தங்களை நிவர்த்தி செய்து, சரம விக்கிரஹத்தை சிதைச்குமேல் வைத்து, அக்கினி ஸ்தாளியிலிருக்கிற அக்கினியை சிதைக்கு மேற்புறம் கீழே கொட்டி. எருமுட்டையில் கொஞ்சம் அக்கினி யெடுத்துக்கொண்டு, பூர்வாபி முகமாய் நின்று, சரம விக்கிஹித்தின் மார்பில் எருமுட்டையுடன் அக்கினியை வைத்து, திருமந்திரத்தினால் ஆஜ்யாஹுதி செய்து, ஜலமெடுத்து தெற்கேயிருந்து மேற்குவரையில் புரோட்சித்து, தண்டம் சமர்ப்பித்து, தீர்த்தத்துரைக்கு வந்து, நக்நசார்த்தம் செய்தபின்பு, பந்துமித்திராள் சந்தந காஷ்டாதிகளால் அடுக்கி, ஜாக்கிரதையாயிருந்து, தஹனஞ் செய்ய வேண்டியது, பின்பு எல்லோரும் தீர்த்தமாடி, கிரஹத்துக்கு வந்து புண்ணிய வாசனஞ்செய்து போஜனஞ்செய்யவேண்டும்.

2-ம்நாள் ஸஞ்சயனம், 11-ம் நாள்புண்ணியஹா வாசனஞ்செய்து 12-ம் நாள் பகல் திராவிடவேத சேவாகாலம் செய்தும், பின்பு முதனாள் முதல் 12-ம்நாள் வரையிலும் கோக்கிராலயம் செய்து பூர்ணம் செய்ய வேண்டும். புருஷாளாயிருந்தால், திருமந்திரத்தை வலது செவியிலும், ஸ்திரிகளாயிருந்தால் இடதுசெவியிலும் சொல்லவேண்டியது. கர்ம மந்திரங்களில் புருஷாளாயிருந்தால்மமபிதுநுஹா, ஸ்திரீகளாயிருந்தால் மமமாதா என்றும் யுச்சரிக்கவேண்டியது. கர்மாநுஷ்டானங்களாகிய பராகிருதர்கள் பிதுர்பதிகளாகிய எமனுடைய லோகம்போய், அவனுடையதண்டனைக்குட்பட்டு பாவத்தைப் போக்கிக் கொண்டு, ஸ்வர்க்காதி போகங்களை அனுபவிப்பார்களென்றும் கிரமத்தால் கர்மகாண்டப் பிரகாரம் பிதுருகளை எமபுரத்துக்கு தடையன்றியில் போகும்படி சரம விக்கிஹத்தை எமபுரத்தின் திக்காகிய தெற்கே சிரசாகப் படுக்கவைக்கிறதும், எமபுரத்துக்கு சமீபமாகிய வைதரணீ நதியைக் கடப்பதற்கு கோதானமும், அஸ்தியெடுப்பது முதலிய காரியங்கள் செயயவேண்டியது. ஞாநாநுஷ்டானர்களாகிய பிரபந்நர்கள் எமபுரத்தைப்பார்க்க நிமித்தியமில்லாததினால், இவைகளைச் செய்ய காரணமில்லை.

ஸ்ரீ வைஷ்ணவ சந்நியாசிகளுக்கு மிவ்விதமாகவே செய்யவேண்டிருப்பதினாலும், நிர்யாணகாலத்திலும், பின்பும் பத்மாஸனமாக பிரபத்தி அஸ்தத்துடன் எழப்பண்ணிவைத்து, அப்படியே சம்ஸ்காரங்கள்நடந்த பின்புச், சப்பரத்தில் அல்லது கொடிகடத்தில் பத்மாசனமாக எழப்பண்ணி நழுவாமல்பந்தித்து புஷ்பவருஷம் வருஷித்துக்கொண்டு, ஸம்ஸ்ர பூமியில் எட்டடி நீளம், எட்டடி அகலம், எட்டடிஆளம் வெட்டி யிருக்கிற திருப்பக்குழிக்கு புண்யாஹவாசனஞ் செய்து, கீழேமண்ணும்,அதின்மேல்உப்புங்கொட்டி,அதன்மேல் சரமவிக்கிரகத்தை எழப்பண்ணி பிரமரந்திரத்திரக்கும்படிசிரசில் தேங்காயுடைத்தும்,மேலும் லவணம், மணல் கொட்டி பூர்ணம் செய்து உடனே பிருந்தாவனங் கட்டி திருவாராதனஞ்செய்து தீர்த்தப் பிரசாதம் விநியோகஞ் செய்விக்கவேண்டும்.

இந்த சந்திரவம்ச க்ஷத்திரியர்களாகிய கவரவர்கள் என்னும் பலிஜவாருக்கு ஆதிகால முதல் சிகாபக்கிஞேபவித் தாரணங்கள் ஸவசின்னங்களாய் இருந்தபோதிலும், கொஞ்சகாலமாக திருக்கோவிலூர் எம்பெருமானர் ஜீயர்சுவாமிகள்,சிலரை கர்மாநுஷ்டான பரர்களாகவும்,சிலரை ஞானநுஷ்டான பரர்களாகவும் இருவகுப்பாக வகுத்ததனல்,கர்மானுஷ்டபராள் சிகாயக்கிஞேபவீதங்களுடன் பிரகாசிக்கிறார்கள். ஞானநுஷ்டானபராள் சிகாயக்கிஞேபவிதங்களை விட்டு, பிரபன்ன விலட்சணத்தோடு பிரகாசிக்கின்றனர். இவர்களுக்கு பூநூல் இல்லாமையினால் சூத்திரர்களென்று வேதாந்த விசாரணை இல்லாத சிலர் சந்தேகிப்பார்கள். பூர்வத்தில் பிராம்மணகுல திலகராக விருந்த திருக்கோவிலூர் எம்பெருமானர் ஜீயர், "ஸர்வதர்ம பரித்யஜ்யா" என்னும், கிராமகுலாதிகளால் வரும் பேர், அனர்த்த ஹேதுவை பிராமணங்களை யறிந்ததன் அநுஷ்டானப் பிரகாரம் யாசரித்துக்காட்டு மவனல்லவோ அசாரி என்னும் ரீதியாக, சிகாயக்கிஞேப வீதங்களை பரித்யஜித்த சங்கதி பிரசித்தியாகையால்; அந்த திருக்கோவிலூர் எம்பெருமானர் ஜீயர் சுவாமிகளும், ஸ்ரீ சிங்கேரி, ஸ்ரீகும்பகோணம் சங்கராசாரியசுவாமிகளும் சூத்திராளாகக்கொள்ளும்விஷயத்தில்,பிரபந்நானுஷ்டர்களாகும்கவரவாளாகியபலிஜவாரும் சூத்திராளாக வேண்டுமாகையால், பூநூல் தரிக்கும்கவரவர்களை க்ஷத்திரியர்களாகவும், பூநூல் தரிக்காத கவரவர்களை பிராம்மணர்களென்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களென்றும் பிரம்மச்சாரி சுவாமிகள் எழுதி இருக்கிறார்.

இந்த பலிஜவாரின் குடித்தொகை.

சென்னை இராஜதானியில் 1901௵ கானிஸ்வாரி கணக்கின்படி வதிந்து வந்த பலிஜவாரின் குடித்தொகைப்பட்டி (Vide page 165. Table XIII, Census. of India 1901, Vol XV, A. Part 11 InperialTablesMadras)

ஜில்லாக்களின்பெயர்.	பலிஜவாரு ஆண்கள்	பலிஜவாரு பெண்கள்.	ஒட்டு மொத்தம்.
1. கஞ்சம் ஜில்லாவில்	2,931	3,938	6869
2. விசாகப்பட்டணத்தில்... ...	10,002	11,627	21,629
ஷெ ஏஜண்டுடிவிஷனில் ...	39	48	87
3. கோதாவரியில்	6,660	7,221	13,881
ஷெ ஏஜண்டுடிவிஷனில் ...	127	135	262
4. கிருஷ்ணாவில்	13,806	14,128	27,934
5. நெல்லூரில்	44,499	45,781	90,2280
6. கடப்பையில்...	59,795	58,715	118,510
7. கர்னூலில்	29,368	30,032	59,400
8. பல்லாரியில்	86,24	8,546	17,170
9. அநந்தப்பூரில்	25,914	25,630	51,544
10. சென்னையில்	23,759	24,550	48,309
11. செங்கல்பட்டில்	18,934	18,867	37,801
12. வடஆர்காடுஅல்லதுசித்தூரில்	64,306	66,340	130,646
13. சேலத்தில்	29,002	30,530	59,532
14. கோயமுத்தூரில்	11,930	12,472	24,402
15. நீலகிரியில்	1,640	759	2,399
16. தென்ஆர்காடு-கூடலூரில் ...	24,333	24,810	49,143
17. தஞ்சாவூரில்	21,299	24,640	45,939
18. திரிசிராபள்ளியில்	18,131	19,668	37,899
19. மதுரையில்	33,228	34,574	67,802
20. திருநெல்வேலியில்	45,138	42,917	88,055
21. மலையாளத்தில்	1,967	1,955	3922
22. தென்கனரா-மங்களூரில் ...	329	405	734
ஆக- ஆங்கிலேய அதிகாரததுக்குட்பட்ட ஜில்லாக்களில்மொத்தம்	4,95,761	508,288	10,040,49
புதுக்கோட்டையில்	1,232	1224	2456
பங்கனபள்ளியில்	813	718	1531
ஆக-கப்பம்கட்டும் நாடுகளில்	2,045	1,942	ஜனங்கள்.
ஆக ஒட்டுமொத்தம்.	497,806	510,230	10,08,036

இந்த 10,08,036 ஜனங்களுடன், திருவநந்தபுரம், கொச்சி, கோவா, புதுச்சேரி மைசூர், பெங்குளூர் முதலானவிடங்களிலிருக்கும்ஜனங்களைச் சேர்த்தால் கிட்டதிட்டபதினாறு 16,00,000 லக்ஷம் பலிஜவாரு இருக்கிறார்கள்.

1891ஆ காணிஸ்வாரி XVI ரிபோர்ட்டு 226-வது பக்கத்தில் கண்ட இந்த பலிஜவாரில் தெலுங்கு நாட்டாரை பலிஜவரென்றும், தமிழ் நாட்டாரைக் கவரைகளென்றும் இரண்டு பிரிவார்களாகவகுத்து அவ்விருவகுப்பாருக்குள் அவரவர்கள் செய்யும் **வர்த்தகம் தோழில் செய்பவர்கள்** இத்தனைப் பெயரெனக் காட்டும்பட்டி.

நம்பர்.	பலிஜவாருக்குள் வர்த்தகம் வேலை முதலான தங்களைசெய்து ஜீவிப்பார்கள் 131996—பெயர்களாம்.	வேலைக்காரருடையஎண் அல்லது மொத்தம்.	100க்கு இத்தனை பெயர்	நம்பர்.	கவரைகள் என்ற பலிஜவாரில் வர்த்தக முதலான வேலை செய்து ஜீவிப்பவர் 50831—பெயர்களாம்.	வேலைக்காரருடையஎண் அல்லது மொத்தம்.	100க்குஇத்தனை பெயர்
1	பரம்பரையாசத்தொழிலில்128208 பெயர்-குரூப-209 210,211, 318, 378,379, சப்ஆர்டர்56கணக்குபடி	3285	2,4	1	பரம்பரை தொழிளாளர்128, 208, 209, 210, 211, 313, 374,379— சப் ஆர்டர் குரூபில்—	1595	301
2	நிலச்சு வானர்கள்—	73·72	53,6	2	நிலச்சுவானர்கள்—	24275	47.8
3	குடித்தனவேலைக்காரர்கள்	22280	16,5	3	குடித்தன வேலைக்காரர்	7807	14.4
4	உணவுபொருள்பலசரக்கு வியாபாரிகள்	3339	2,5	4	வாரசாருவளிக்காரர்கள்	2989	5.9
5	பிச்சைக்காரர், யாசகர்	2390	1,8	5	பருத்திநூல் நெய்வோர்	2695	5.3
6	சர்கார்வேலைக்காரர்கள்	1702	1,3	6	சர்கார் வேலைக்காரர்கள்	1241	2.4
7	ஆடுமாடுமேய்ப்பவர்கள்	1523	1,1	7	கூடைப்பாய் பின்னுவோர்	983	1.9
8	பருத்திநூல் நெய்பவர்கள்	1271	.9	8	உணவுபொருள் பலசரக்குவிற்போர்	913	1.8
9	மிட்டாய்செய்து விற்பவர்	871	.6	9	நெல்லு குத்துவோர்	810	1.6
10	நெல்லுகுத்துகிறவர்கள்	846	.7	10	மிட்டாய் செய்து விற்போர்	745	1.5
11	சாதாரணவேலைக்காரர்கள்	818	.6	11	சாதாரண வேலைக்காரர்	744	1.5
12	வீட்டுவேலைக்காரர்கள்	648	.5	12	பிச்சைக்காரர், யாசகர்	565	1.5
13	தானியவியாபாரிகள்	610	.5	13	வண்டியோட்டும் வண்டிக்காரர்	376	.7
14	வண்டிக்காரரும், அதைஓட்டுவோரும்	601	.4	14	கால்நடை மேய்ப்போர்	289	.6
15	கொளத்து வேலைக்காரர்கள்	465	.3	15	வீடுகட்டும் கொளுத்து வேலையில்	339	.7
16	கால்நடைகளைவளர்த்தும்வர்த்தகர்கள்	450	.3	16	தானியவியாபாரிகள்	288	.6

17	கள் விற்பவர்கள்	401	.3
18	ஸ்மஸ்தான குமாஸ்தாக்கள்	353	.3
19	பின்சன் சம்பளம் பெறுபவர்	353	.3
20	பாய் கூடை பின்னுபவர்	317	.3
21	புகைவண்டியில் வேலைசெய்வோர்	345	.3
22	படுக்கைப்பின்னல் வேலைக்கார்	313	.2
23	மண்வேலைக் காரர்கள்	297	.2
24	சாய்கறி விற்போர்	274	.2
25	சோயில் சிப்பந்திகள்	262	.2
26	புஷ்பங்கட்டிவிற்போர்	251	.2
27	உபாத்தியாயர்கள்—	2..0	.2
28	சாராயம்விற்போர்	249	.2
29	சுண்ணும்புவிற்போர்	236	.2
30	காடாதுணி விற்போர்	220	.2
31	மரம் அறுத்தல் தச்சுவேலைக்கார்	216	.2
32	போர்டர், காவல் காரர்கள்	203	.2
33	பட்டுநூல்நெய்வோர்	2 6	.2
34	புல்,விறகு விற்போர்	196	.1
35	பாடகர்,வாத்தியக்காரர்கள்	181	.1
36	பொடி, புகையிலை விற்போர்	173	.1
37	விபசாரிகள், தொண்டுகள்	170	.1
38	தையல் தைப்போர்கள்	152	.1
39	சந்தனம் விற்போர்	152	.1
40	பாரெஸ்டு (காட்டிலாக சிப்பந்திகள்)	137	.1
41	சில்லரை வேலைக்கார்	15581	11.4
	ஆக மொத்தம்	134996	100

17	கள் விற்பவர்கள்—	236	.6
18	பட்டுநூல் நெய்பவர்	233	.5
19	பாடகர்-வாத்தியக்காரர்	226	.4
20	கால்நடை வளர்த்து விற்போர்	197	.4
21	சுண்ணும்பு விற்போர்	187	.4
22	வீட்டுவேலைக்காரர்	181	.3
23	கயிறு பின்னுவோர்	166	.3
24	சாராயம் விற்பவர்	162	.3
25	எண்ணெயெடுத்து விற்போர்	155	.3
26	பின்சன் சம்பளம் வாங்குவோர்	146	.3
27	புகைவண்டி வேலைக்கார்	136	.3
28	காடாதுணிவிற்போர்	133	.3
29	தபாலாபீசு சிப்பந்திகள்	128	.3
30	கோயில் வேலையாட்கள்	1 8	.2
31	மண்வேலைக் காரர்கள்	116	.2
32	பித்தளைச்செம்பு வேலைக்காரர்கள்	116	.2
33	தச்சுவேலைக்கார்கள்	99	.2
34	உபாத்தியாயர்கள்	109	.2
35	புகையிலை-பொடி விற்போர்	96	.2
36	போர்டர், காவல்காரர்கள்	83	.2
37	காய்கறி விற்போர்	84	.2
38	வர்த்தகர்குமஸ்தர்கள்	73	.1
39	பாரெஸ்டு-காட்டிலாகாசிப் பந்திகள்	69	.1
40	சர்க்கரை கம்பெனிகூலியாட்கள்	62	.1
41	வைத்தியர்கள்—	61	.1
42	தையல் தைப்பவர்	61	.2
43	சில்லரை வேலைக்கார்	1539	2.1
	ஆகமொத்தம்	50331	100

இந்தபலிஜவாரில் 1901ஆம் இருந்தவர்களின் வயதுவிவரம்—

இப்படி இருக்கும் பலிஜவாரின் குடித்தொகையில் 1 முதல் 5 வயது வருஷங்களுக்குள் 13600 ஆண்களும், 14,661 பெண்களும் — 5 முதல் 12 வயசிற்குள் 23,371 ஆண்களும் : 24,540 பெண்களும் ; —12 - முதல் 15 வயதிற்குள் 8,526 ஆண்களும், 6,799 பெண்களும் : 15 முதல் 20 வயதிற்குள் 8. 855 ஆண்களும், 7, 659 பெண்களும், — 20 முதல் 40 வயதிற்குள் 37,124 ஆண்களும், 38,326 பெண்களும்.—40 வயதிற்குமேற்பட்டு 30,764 ஆண்களும், 31149 பெண்களுமாக 1, 22,271 ஆண்களும், 123,184 பெண்களும் (சிவில்ஸ்திதியில்) இருக்கிறார்கள்.

இந்த பலிஜவாருகளில் 1901ஆம் காணிஸ்வரர் கணக்கின்படி கலியாணமாகாதவர்களும் — அவர்களுடைய வயதுகளும்

1 முதல்5வயதிற்குள் கலியாணமாகாதா13,575ஆண்களும், 14,603பெண்களும்,—5முதல் 12 வயதிற்குள் கலியாணமாகாத 23,271ஆண்களும், 22,932 பெண்களும்,—15முதல் 20 வயதிற்குள்8,498 ஆண்களும்,15,49பெண்களும், 20முதல் 40 வயதிற்குள் 14,909 ஆண்களும் 1009 பெண்களும்;—40 வயதிற்குமேற்பட்டு 1,893ஆண்களும், 562 பெண்களுமாக இந்தபலிஜஜாதியாரில் இன்னும் 70,574 ஆண்களும்450 84 பெண்களும் கலியாணமில்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் இவர்களுடைய தரித்திர தசை எப்படி இருக்கிறது.!

இந்த பலிஜவார்களில் கலியாணமானவர்கள்.

இவர்களில் 1—முதல் 5வருஷங்களுக்குள் கலியாணமான 23 ஆண்களும் 53 பெண்களும்;—5முதல் 12வயதிற்குள் 94 ஆண்களும், 1562பெண்களும்; 12முதல் 15 வயதிற்குள் 92 ஆண்களும், 2, 302 பெண்களும்; 15முதல் 20 வயதிற்குள்-385 ஆண்களும், 5,794 பெண்களும்; 20முதல் 40 வயதிற்குள் 20,937 ஆண்களும், 24,503 பெண்களும் ; 40 வயதிற்குமேற் பட்டு 22, 935ஆண்களும், 8,196 பெண்களுமாக 44,466 ஆண்களும் 46,410 பெண்களும் கலியாணமானவர்களாகஇருக்கிறர்கள்.

இவர்களில் தாரமிழந்த விதந்துக்களின் விவரம்.

இவர்களில் 1முதல் 5 வயதிற்குள் தாரமிழந்த 3 ஆண்களும், 5 பெண்களும்;5முதல் 12க்குள்6 ஆண்களும் 46பெண்களும் 12முதல் 15க்குள் 2ஆண்களும், 68 பெண்களும்; 15முதல் 20குள் 6 ஆண்களும் 46பெண்களும் ; 20 முதல் 40 வயதிற்குள் 1278 ஆண்களும். 8,814 பெண்களும் 40 வயதிற்குமேற்பட்டு 5,936 ஆண்களும், 22,391 பெண்களுமாக 72,31 தாரமிழந்த ஆண்களும், 31.640 தாரமிழந்தபெண்களும் இருந்தார்கள்.

1901ஆம் கானிஸ்வாரி கணக்கின்படி பலிஜவாருக்குள் படித்தவர்கள்-படிப்பில்லாதவர்களுடைய விவரத்தைக் காட்டும் ஜாப்தா

1901ஆம் பலிஜவாருகளில் 122,271 ஆண்களும்,123 134பெண்களும், இருந்தனர்.இவர்களில் 14316 ஆண்களும், 911பெண்களுமாக 15 227 பெயர் மாத்திரம் படித்தவர்களும்,மற்ற 107955 ஆண்களும்,122 223 பெண்களுமாக 230178 பெயர்படியாதவர்களுமாக இருக்கிறார்கள்.படிக்கத்தெரிந்தவர்களில்.

தமிழ்பாஷையில் 3902 ஆண்களும், 187 பெண்களும் படிக்கத்தெரிந்தவர்கள்—**தெலுங்குபாஷையில்** 10,360 ஆண்களும், 728 பெண்களும் படிக்கத்தெரிந்தவர்கள்.**கன்னடிபாஷைகளில்**—17 ஆண்கள் மாத்திரம் படிக்கத்தெரிந்தவர்கள். **மற்றபாஷைகளில்** 11ஆண்கள் மாத்திரம் படித்தவர்கள்.—

இங்கிலீஷ்பாஷையில்—949 ஆண்களும்,13 பெண்களுமாக 962 பெயர் படிக்கத் தெரிந்தவர்கள் — 107955 ஆண்களும் 122 223 பெண்களுமாக 230178 பெயர் யாதொரு **படிப்பறியாதவர்களாக** இருத்தல்என்னபரிதாபம்!

ஐந்தாவது காண்டம்.

பேட்டை பலிஜவாரு.

இதுவரையில் சந்திரவமிச க்ஷத்திரியர்களாகிய பலிஜவாரில் கோட்ட பலிஜவாருடைய இடம், வீட்டுப்பெயர், கோத்திரம், சூத்திரம், அந்தஸ்து, அணியும் ஆடையாபரணம், ஜன்ன, மரண, விவாஹாதிகாலங்களிற்செய்யும் சடங்குகள், தத்காலஸ்திதி முதலானவைகளைப்பற்றிச் சொன்னோம்.

இனி இச்சந்திரவமிச க்ஷத்திரிய பலிஜவாரில், வேறொரு வகுப்பார்களாகிய பேட்டை பலிஜவாருடைய விருத்தாந்தங்களைப்பற்றி விவரிப்பாம், பேட்டை என்றால் கோட்டைக்குவெளியிலிருக்கும நாடு நகர கிராமங்களாம். ஆகவே, பேட்டை பலிஜவாரு என்றால், விஜயநகரக் கோட்டைக்கு வெளியிலிருக்கும் நாடு நகர கிராமங்களிந்த டி இருந்தப் பலிஜவாருகளாம். இவர்கள் இப்போது பற்பலவித கோத்திரத்தைச் சார்ந்தும், அநேக வீட்டுப் பெயர் சூத்திரங்களால் பிரகாசிக்கிறார்கள். இவர்கள் ஆதியில் விஜயநகர ஸமஸ்தானத்தாருடைய பந்து மித்திரர்களாக விருந்தும்; பிறகு காலதேச வர்த்தமானங்களினால், வேறு வேறு விடங்களுக்கு வலசையாகப் போய், வர்த்தகம், விவசாய முதலானதுகளைச் செய்துக்கொண்டும், அங்காங்குத் தங்கிவேறு வேறு ஜாதி, மதஸ்தர்களைப் போலிருக்கின்றனர். இந்தப் பேட்டை பலிஜவாருகளுக்குள் 18 வகுப்பார்கள் இருந்தார்கள். இப்போது இவர்களுக்குள் இரத்தினலவாரு(கல்காரர்) முத்தி · ாலவாரு, பகடாலவாரு, காஜுலுவாரு, சித்திராலவாரு, ஒப்பனவாரு. வெலமவாரு, கம்மவாரு, பேரிகவாரு, கோல்லவாரு, முசுதுவாரு, லிங்கவாரு, பூந்தமல்லிவாரு, தோமிலடிவாரு, கண்டிவாரு, பத்திவாரு, ஜனபவாரு, வாடவாரு, கன்னடி பலிஜவாரு, எத்துகன்னடிவாரு, எனும்கன்னடிபலிஜவாரு, செட்டிபலிஜவாரு, உப்புபலிஜவாரு என்றுதி பல வகுப்பினர்களாக பிரகாசிக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் ஒரு காலத்தில் ஒரே குடும்பத்தாராக இருந்திருக்கலாம். இடையில் காலதேச வர்த்தமானங்களைத் தழுவிபற்பல விடங்களிற்போய். பற்பலவிதவர்த்தகம்விவசாயம்கைத்தொழிகளைச் செய்து வந்ததினால்; பூர்வ உற்பத்தி ஜாதி மதாசாரங்களை காலதேச வித்தியாசங்களினாலும், பழக்க வித்தியாசத்தினாலும் மறந்து; இப்போது பற்பல வித ஜாதியாராகப் பெயர்களைப் பெற்றார்கள் போலும். ஆகவே இவர்களிற் சில விசேஷவகுப்பார்களுடைய விருத்தாந்தங்களைப்பற்றி மாத்திரம் இதனடியிற் சங்கிரகமாகக் காட்டுகிறோம்.

இரத்னல பலிஜவாரு அல்லது இராள்ளவாரு (கல்காரர்கள்) அல்லது வளையல் காரர்கள் அல்லது காஜுலு பலிஜவாரு.

இந்தப்பேட்டை பலிஜவாருக்குள் சிறந்தவர்கள் இரத்னல பலிஜவாரு அல்லது இராள்ளவாரு (கல்காரர்) அல்லது காஜுலு (வளையல்கார) பலிஜவார்களாம். இவர்கள் ஆதியில் விஜயநகர ஸமஸ்தானதிற்கு வேண்டிய வைரம், வைடூரியம், கெம்பு, மரகத மாணிக்கம், முத்துப் பவளம்முதலான நவரத்திணங்களை தூரதேசங்களிலிருந்து தருவித்தும், அவைகளிலிருக்கும் தோஷம், குறைவு குற்றங்களைக் கண்டுபிடித்தும், அவைகளிற்தோஷமற்றவைகளைத் தெரிந்தெடுத்தும், சமஸ்தான சகிரவர்த்திகளுக்கும், இராஜ மஹிஷிகளுக்கும் வேண்டிய ஆபரணங்களாகச் செய்வித்து கொடுத்துக்கொண்டு வந்தவர்கள்.

இவர்களில் சிலர் காஜுலுவாரு அல்லது வளையல்காரர்கள் என்னும் பெயரால், சுமங்கலிய ஸ்திரீகளுக்கு இன்றியமையா கருமணி, காட்டிசை, கதம்பம், கஸ்தூரி, குங்குமம், சந்தனம், மஞ்சல் முதலான வைகளையும்; கரங்களுக்கேற்றக் கங்கணம், வளையல் முதலான சுபகர வஸ்துக்களையும் தருவித்து ஸமஸ்தான இராஜ ஸ்திரிகளுக்கு தரித்து தனவான்களாக இருந்தவர்கள். இவர்களில் அநேகர் அக்காலத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும், சத்தியம், சாந்தம், பரிசுத்தமுள்ளவர்களாகவும், பரநாரி சோதரர்களாகவும் பிரகாசித்து வந்தபடியால், விஜயநகர ஸமஸ்தானத்தார், இவர்களுடைய குணச்சிறப்புகளைக் கண்டு, இவர்களை மைத்துணர்களைப்போல பாவித்தும், தம்மனைவி மக்களாகிய இராஜ ஸ்திரிகள் இருக்கும் அந்த புரத்துக்குள் பிரவேசிக்கவும், அங்கு இராஜஸ்திரிகளுடைய கரங்களைப் பிடித்து கங்கணம், வளையல்கள் முதலானதுகளைப்புகட்டிஅலங்கரித்துவரும் சுதந்தரத்தையும் கொடுத்தும், பிறகு நாளாவட்டத்தில் தேசாஹி சிரேஷ்டி, பட்டணம் சிரேஷ்டிகளென்ற பெரியத்தன பிருதுகளையும் கொடுத்தார்கள் போலும்.

இவர்களுக்கு தேசாஹி பட்டம் வந்தக்காரணம்.

இந்த இந்தியா தேசத்தை, இந்த சந்திரவம்சி க்ஷத்திரிய பலிஜவாருக்கு முன்பு ஆண்டுவந்த சூரிய சந்திரவமிச சக்கிரவர்த்திகள் காலத்தில், அவர்களை மகமதாதி வேறு நாட்டுப்பகைவர் படை எடுத்துவந்து விசேஷமாகத்தாக்காத படியினாலும், அவர்களுக்குப் போதுமான அவகாச மிருந்தபடியினாலும், அவர்கள் காலத்தில், குடிகள் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்ற நான்கு வருணத்தாராகவும், ஒரே இந்து மதஸ்தர்களாக இருந்தபடியினாலும்; சக்கிரவர்த்திகளும், அவர்களுடைய பிரதிநிதிகளும், குடிகளுடைய க்ஷேமலாபங்களைக்கருதி ஜாதிசமயாசார விவஹாரங்களை உடனுக்குடனே நேர்நேராக,

விசாரித்து நீதிசெலுத்தி வந்தார்கள். பிறகு சந்திரவம்சக்ஷத்திரியர்களின் பின் சந்ததியாராகிய ஆந்திரர், மகத நாட்டில் ஆண்டுவரஆரம்பித்தபோது, அவர்கள் ஸமஸ்தானத்திற்குள்ளாகவே பிராம்மண பவுத்தமதஸ்தர்கள் கிளம்பி பிரமாத சமயச்சண்டைகள் செய்துக்கொண்டும், பற்பல சமயாசாரங்களையும், ஜாதிபேதங்களை நியமித்தும் போராடி வந்ததன்றியில்; ஏனைய நாட்டாராகிய யுவனர், பாரசீகர், மகம்மதாதிமதஸ்தர்கள் பெரும்படை எடுத்து வந்து பல பக்கங்களிலும் தாக்கி போருக்கிழுத்தபடியால், இந்நாட்டு சக்கிரவர்த்திகள் அப்பொதுப்பகைவரைத் துரத்தித்தாக்க இரவும் பகலும் வேண்டிய பொருளையும், போர் வீரரையும் தேடி சதாசண்டை செய்வதிலேயே காலமெல்லாம் கழிக்கச் சம்பவித்து. இப்படிப்பட்ட கஷ்டம் சக்கிரவாத்திகளுக்கும், இராஜர்களுக்கும் சம்பவிக்கவே, தம் நாட்டின் குடிகளுக்குள் உண்டாகும் ஜாதிமதாசார கட்டுபாடுகளின் விவஹாரங்களை நேரில்கேட்டு விசாரித்து நீதி செலுத்த அசாத்தியமாகிவிட்டது. ஆகவே அக்குறைவை நீக்கக் கருதி தம்ஸமஸ்தானத்திலிருந்தத் தக்க பெரிய மநுஷர்களைத் தெரிந்தெடுத்து, நகர பரிபாலகராகக்கொண்டும், அவர்களுக்கு தேசாஹி, பட்டணம் சிரேஷ்டி பட்டங்கொடுத்தும், தேசக்குடிகளுடைய விவஹாரங்களை விசாரிக்கும் நீதி அதிகாரிகளாக நியமித்தார்கள் போலும்.

இப்படி நகர பரிபாலனார்த்தம் பட்டணம் தேசாஹி என்றப் பெயரால் பட்டணத்திற் சிறந்த பெரிய மநுஷரைத்தெரிந்து எடுத்து நியமிக்கும் வழக்கம் ஸ்ரீ தசரதராமர் காலத்திலும் உண்டென்றும், அதாவது ஸ்ரீ ராமர் இராவணாதியர்களை ஜயித்து ஐயோதிக்குத் திரும்பி வந்தபோது, அந்த ஐயோத்தியாவிலிருந்தநகர பரிபாலன பெரிய தனக்காரராகிய பட்டணம் தெசாஹி சிரேஷ்டி ஸ்ரீராமருக்கு நல்வரவு கூறி அழைப்பிக்க பிரதிநிதிகளைச் சேர்த்தும், நகரத்தை மாந் தோர்ணதிகளால் சிங்காரித்தும், சகல வாத்திய கோஷங்களோடு எதிர் போய் அழைத்தும் வந்ததாக, அதிகவி வால்மீகரால் சொல்லப்பட்டிருக்கறதென ஸ்ரீ பிரமச்சாரி நாராயணதாசு சுவாமிகள் தமது கிரந்தத்தில் எழுதி இருக்கிறார். அன்றியும், இந்த தேசாஹி கிராம குடியரசு நியமனம் கி.பி. 1011 வருஷங்களுக்கு அதாவது இராஜேந்திர சோழன் காலத்துக்கு முன்பே உண்டென்று கவர்ன்மெண்டு சிலாசாசன டிபார்டுமெண்டு ஸ்ரீவெங்கயாவர்கள் 1900ஹு இந்தியன் ரிவியூவ் கிரந்தத்தில் எழுதி இருக்கிறார். Vide Pages 503-5 The Indian Review Vol. 1-1900—A page on South Indian History.

(முதலாவது.)

விஜய நகர ஸமஸ்தானம் பிரபல தசையிலிருந்தபோது அந்த ஸமஸ்தானபதிகளும், அடிக்கடிப் பகைவரோடு சண்டைகள் செய்துக் கொண்டிருந்தமையால், தமது ஸ்தானத்தின் குடிகளுக்குள் உண்டாகும் ஜாதிக்கட்டு சமயாசார விவஹாரங்களை விசாரித்து நீதிசெலுத்த அக்காலத்தில் இந்த பேட்டை

பலிஜவரில்இரத்தனுலுவாரு அல்லதுகாஜுலுவாரு—கல்வி,கேள்வி,சக்தி,சம்பத்து, சத்தியம், சாந்தம், பரிசுத்தம் முதலான குணங்களிற் சிறந்துவிளங்கியபடியால்,இவர்கள் குடும்பத்திலே மூதன்மையானத்தக்கப் பெரியவரைத் தெரிந்தெடுத்து, அவருக்கு பட்டணம் தேசாஹி என்று பட்டத்தையும், பிருதுகளையும் கொடுத்து நியமித்தார்கள் போலும்:—

இப்படி விஜய நகர ஸமஸ்தான பதிகளால் பட்டணம் தேசாஹி ஸ்ரேஷ்டி என்றுப்பட்ட பிருதுகளை பெற்ற காஜுலுபலிஜவரபைப்பற்றி தென்தேசங்களில்வழங்கிவரும் விருத்தாந்தங்களை இதனடியிற் சங்கிரகமாகக்காணலாம்.

(இரண்டாவது.)

இவர்களுடைய ஆதி ஜனனத்தைப் பற்றிச் சித்தூர் ஜில்லா (Dt. Manaul) சரித்திரம் 276-ஆவது பக்கத்தில், பின்வருகிறபடி எழுதப்பட்டிருக்கிறது.அதாவது:—ஆதிகாலத்தில் தக்ஷப்பிரஜாபதியின் குமாரத்தி ‘தக்ஷம்மாள்’தனக்குப் போதுமான ஆபரணங்கள் இல்லாக்குறைவைப் பற்றித்தன் தந்தையிடம் முறையிட, அவர் அது விஷயமாகப் பிரம்மாவினிடம் பிரார்த்திக்க, அந்நான்முகன் ‘பிரம்மயாகம்’ செய்தால் வேண்டிய நகைகள் கிடைக்குமென்று சொல்ல, அந்த கன்னிகையும் அப்படியே செய்ய, அந்தயாகத்திலிருந்து பொன்மயமான ஒரு புருஷன், பொன்மயமானவளையல், மஞ்சள், குங்குமம், புஷ்பம், புஷ்தியுடன் பிறந்து வந்து, அப்பெண்ணுக்கு போதுமான பொன் வளையல், மஞ்சள், குங்குமம், புஷ்பம், புஸ்திகளைக் கொடுத்து அலங்கரித்தும்; அவளுக்கு மிச்சமான வளையல் முதலானவைகளை உலகத்தாருக்குக் கொடுத்துச் சுமங்கலிய தருமத்தை விருத்தியாக்கவேண்டுமெனக் கட்டளையிட்டருள; அக்கட்டழகியும், தம் குலதேவதையாகிய கவுரியை முதலில் வளையல் முதலான சுமங்கலிய வஸ்துக்களால் அலங்கரித்துப்பிறகு உலகத்தாருக்கு உதவிசெய்தனளாம். ஆகவே, பலி + ஜ=பலிஜ என்றால், பலியாகத்தில்,ஜ=ஜனித்தவனென்றும், சுமங்கலிய பிருதாகிய வளையல்களை உலகத்தாருக்குத் தந்தமையால், காஜுலுவாரு, வளையல்காரரென்றும்;—கவுரியை= இஷ்டதேவதையாக வணங்கிவருவதால், கவரைகளென்றும் பெயர்களுண்டாகியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(மூன்றாவது.)

இந்த ஜாதியாரைப்பற்றிக் கோயம்புத்தூர் முதலான தென்மேற்கு தேசங்களில் வேறுவிதமான கதையொன்றைச் சொல்லிவருகிறார்கள், அதாவது:— ஆதியில் சுமங்கிலியவஸ்துக்களைப்பலிஜவாருபலதேசங்களிற்கொண்டுபோய் வியாபாரம் செய்வதைப்போலவே,காஞ்சிபுரத்திலும் கொண்டுபோய் வியாபாரம்செய்யும்போது, இவர்களிடமிருந்த ஒரு வெங்கலக்கண்ணாடியைக்கண்ட தாரணிராஜனுடைய குமாரத்தி கேட்க, அது கஞ்சி காமட்சி அம்மனுக்கு கொண்டுவந்தபடியால் கொடுக்கப்படமாட்டாதென்று சொல்ல;

இதைக்கேட்ட தாரணிராஜன் இவர்கள் வியாபாரச்சரக்குகளுக்குச்சுங்கம் தர வேண்டுமெனக் கட்டளை இட்டான். இதைக்கேட்ட காஜுலுவாரு வளையல் மிஞ்சு, மஞ்சல், குங்குமாதிபதினொரு (11) சுமாங்கிலிய வஸ்துக்களுக்கு சுங்கம் கொடோமென்று சொன்னதாகவும்; அதைக்கேட்ட தாரணிராஜன் கோபித்து இவாகளோடுசண்டைக்குவந்துவதைக்க, அது சகிக்கமுடியாமல், இந்த காஜுலுவாரு காமாக்ஷியிடம் முறையிட, அந்தம்மை மஹாகாளியாக அவதாரமெடுத்துவந்து, ஆயுதத்தால் அந்த தாரணிராஜனுடைய வயிற்றைக்கீறி, அவன் குடலை வளையல் மலாரமாகவும், அவன் மண்டையோட்டை வளையலை யொட்டும் அக்கினிகுண்டமாகவும், அவன் தாள்வாய்க்கட்டை எலும்பைக் குறடாகவும்கொள்ளும்படி கொடுத்தும்; அவன் தோலைக் கரும்கம்பளியாகவும், அதை இடது கால் பெருவிரலால் எடுத்துகொள்ளும்படி பிரசாதித்து அருளியதாகவும்; ஆகவே இந்தச் சாதியார் அந்த அந்தக்காமாக்ஷி தேவியின் கட்டளையின்படி இன்றளவும் வளையலை விற்றுவருவதால், வளையல்காரரென்றும், காமாக்ஷிதேவியைக் குலதேவதையாக வணங்கிவருவதால், கவரைகளென்றும் பெயருண்டாகியதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

(நான்காவது.)

இக்கதையைச் சித்தூர் ஜில்லா சதரதால்த் கோர்ட்டு தீர்ப்புப்புத்தகம் 33-முதல் 36-வது வரையிலுள்ளப் பக்கங்களில் கண்ட கதையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், வேறு விதமாகச்சொல்லப்பெற்றிருக்கிறது; எப்படியெனில், தாரணிராஜனுடைய சிறையிலிருந்த திவஷ்டாசாரியின் வெட்டப்பட்ட தலை "கஞ்சுபிஞ்சுகு" சுங்கமில்லை, என்று சொல்லிக்கொண்டு காமாக்ஷிதேவியின் காலில்விழ, அக்காமாக்ஷி தாரணிராஜனைக் கொன்று, அவன் குடலை அருகிலிருந்த தேசாய் பலிஜருக்கு மலாரமாகக் கொடுத்தாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அன்றியும், இந்த காஜுலு பலிஜவாருக்கு வலங்கையார் என்றப்பெயர் வந்ததற்கு பின்வருகிறகதையை அந்தப்புத்தகத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியெனில் "பரிமள" சோழனுடைய பட்டத்துக்கு, "பண்புரி" சோழன் வந்தபோது, இளவரசு பட்டத்தை டை பரிமளசோழனுகிய கலிங்கராஜனுக்குக் கொடாமல், தன் குமாரன் பாலனைச்சோழனுக்குத் தரவே, அந்தக்கலிங்கன் கோபத்தால் பண்புரி சோழனை வேட்டைக்குப் போனவிடத்தில் கொன்று அந்தப் பட்டத்துக்கு வர, இராஜ குடும்பத்தில் வலங்கை இடங்கை இரண்டு கக்ஷிகளாகி பிரபல சண்டைகளுண்டானதாகவும், அச்சண்டையில் இராஜன்பக்கம் சேர்ந்தவர்களுக்கு வலங்கையார் என்றும், வலங்கைக் கக்ஷிச்குத்தலைவர் தேவாயிபலிஜசெட்டியார் என்றும்; இடங்கைக்கக்ஷிக்குத் தலைவர் கம்மாளர்கள் என்றும் சொல்லப்பெற்றிருக்கிறது. அப்படிக்கிருக்க; அந்த சித்தூர் தீர்ப்புபுத்தகத்தில், தேசாஹி பெத்தண்ணராஜுகாரும், தேசாஹி ஜயவீரராஜுகாரும் கம்மாளருக்கு உதவி செய்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அந்தப்புத்தகத்தில் இந்ததேசாஹிகளுக்கு கொம்பு தப்பட்டை,

பிருதுக்கொடி, சலவாதி, கரண்டி முதலான பிருதுகளும், பதினெட்டு ஜாதிகளிடம் முதல் தாம்பூல மரியாதையும், கீழ் 18 ஜாதிகளுடைய வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரமும் பெற்றிருந்தாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

(ஐந்தாவது.)

நிற்க கி-பி 1811ளூ-ம் தஞ்சை ஸ்ரீ வேதநாயகசாஸ்திரியார் கர்னல்மெக்கனிசி அவர்களுடைய விருப்பத்தின்படி எழுதிகொடுத்த வலங்கை இடங்கையார் சரித்திரம் ஒன்று சென்னை மியூசியம் O.M. புத்தகசாலையில் இருக்கிறதாம். அதில்சோழராஜனுக்கும், புலைச்சிக்கும்பிறந்த நந்தராஜன் ஓர் வேளாள குலப்பெண்ணை தமக்கு விவாஹம்செய்துக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்திய தாகவும்,அதற்கு வேளாளர்பயந்து விதியின்றி சம்மதித்துக்கொண்டும், கம்மாளரைக்கொண்டு சூத்திரக்கம்பமுள்ள கொட்டகையைக்கட்டுவித்தும், அதில் இராஜனுடைய குடும்பத்தாரெல்லோரையும் விவாவகத்துக்கு வருவித்துவைத்தும், சமயம் பார்த்து அந்த சூத்திர கம்பத்தைத்தட்டிவிடும்படி செய்ய, அந்த கொட்டகைதிடீரென்று விழுந்து, அதனடியிலுள்ள எல்லோரையும் நசுக்கிக் கொன்றுவிட, ஒரு மூலையில் மாத்திரம் ஒருகர்பவதியான ஸ்திரிதப்பித்தயங்கி நிற்க, அவளை ஒருவண்ணான் தன் அழுக்குத்துணி மூட்டைக்குள் மூடி எடுத்துக்கொண்டு போய்பாதுகார்த்தபடியால்; அந்தவண்ணானுக்கு அன்றுமுதல் ஏகாலி=எழுகாலுள்ளவன் அதாவது அந்தவண்ணானுக்கு இரண்டுகாலும், அவன அழுக்கு மூட்டையில் மூடிக்கொண்டு போன கர்பவதி ஸ்திரிக்கு இரண்டுகாலும், அந்த கர்பவதியின் வயிற்றிலிருந்த குழந்தைக்கு இரண்டுகாலும், ஆக ஆறுகால்களும் ஷை வண்ணான் ஊன்றிக்கொண்டு போன கைத்தடி ஒரு காலுமாக எழுகால்களாக=எழுகால்களுடையவன் அதாவது ஏகாலி என்று பெயரைப் பெற்றதாகவும்,அந்த நந்தராஜனுக்கு அனுகூலராக இருந்த வெளாளர் முதலானவர்கள் வலங்கையராகியதாகவும், அந்தராஜனுக்கு பிரதிகூலராக இருந்த கம்மாளர் முதலான சிலர் இடங்கையராகியதாகவும் எழுதப்பெற்றிருக்கிறதாம். இக்கருத்தை ஸ்திரப்படுத்த மாந்தை நகராதிபதி சதகம் 57-வது பாட்டில், நந்தி கிரகத்தின் விவரத்தை அறிவிக்கின்றது. (ஆறுவது)

மேலும்—கி. பி. 1902ளூம் யாழ்பானத்து-மனிப்பாய் ம-া-া-ஸ்ரீ ஆ முத்துத்தம்பிப் பிள்ளை யவர்கள் பதிப்பித்த அபிதானகோசம் என்னும் புத்தகத்தில், தஞ்சையிலாண்ட மராட்டியர் வமிசத்தில் இரண்டொரு இராஜர்கடையப்பெருமைகளைப் பற்றி பிரபலமாக பிரசித்தம் செய்தவர், மதுரையிலாண்ட திருமலை நாயடு முதலானவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி எழுதாமல் விட்ட காரணம் தெரியவில்லை. இந்த வித்துவான் அபிதான கோசம் என்னும் கிரந்தத்தை எழுதும்போது இந்த பலிஜவாரு புராணத்தின் முதற்பதிப்புப் புத்தகமொன்று அனுப்பினோம். அதில் நாயடுகொரு ஸமஸ்தான சரித்திரங்களை இவர் படித்திருக்கலாம். இந்து வேதாககம்புராண இதிகாசங்களிற் சொல்லப்பட்டிருக்கும் தெய்வங்கள், இருஷிகள், முனிவர், அரசர் முதலா

ணவர்களுடைய விருத்தாந்தங்களை விவரப்படுத்த வெளிவந்த புத்தகங்களில் இந்த அபிதானகோசமே முதன்மையானது. இதில் மற்ற மத்தியகால அரசர் முதலானவர்களுடைய சங்கதிகளைச் சங்கிரத்து எழுதி பதிப்பித்திருத்தல்போல—வலங்கை, இடங்கை, கக்ஷிகளுண்டான விதங்களையும், அக்கக்ஷிகளைச் சார்ந்த ஜாதியார்களையும், வேளாளருக்கு நாட்டாண்மை யதிகாரம் வந்த விவரங்களையும்,சேர்த்துப் பதிப்பித்திருந்தால் நல்ல சரித்திர சாதனமாக இருக்கும். மேலும் இந்த வித்துவான் அந்தப் புத்தகத்தின் 181–182-வது பக்கங்களில் இந்த ஜாதியைப்பற்றி எழுதிய விஷயம் திருப்தி யற்றதாகவே இருக்கிறது; ஆயினும், அந்த கிரந்த கர்த்தர் அப்புத்தகம் 182-வது பக்கத்தில் பலிஜவாரைப்பற்றி பின் வருகிறபடி எழுதி இருக்கிறார். அதாவது "தென்னாட்டிலுள்ள கவரைகளுள்ளே பலிஜவர்களே உயர்ந்தோர், இக்கவரைகளுள் பெரும்பாலார் சேனைத்தலை வராகவும், சேனு வீரராகவும் அரச சேவையிலிருந்தவர்கள் "அது பற்றியே அவர்கள் தமிழ் நாட்டிலே நாயகரென்று வழங்கப் படுவராயினர். இவர்கள் முன்னர் நாளிலே ராஜாதி காரம்பூண்டிருந்து பெருமை யுற்றிருந்தவர்கள் பரம்பரையில் வந்தோர்கள்." என்றுமே. (Vide Page 182. Abadana Kosam)

(ஏழாவது.)

கடைசியாக இப்போது (கி–பி 1001ஆு-ம்) சென்னை அகவுண்டாண்டு ஜெனரலாபீசு பென்சன் சூபிரெண்டெண்டாகிய மகா-ா ஸ்ரீ, கூடலூர் கனசபைப்பிள்ளையவர்கள் பதிப்பித்த வருண இந்தரமணி என்னும் நூலில் வேளாளா வைசியர்களென்றும், அவர்கள் வலங்கையைச்சார்ந்தவர்களென்றும், பின்னும் அவர்களுடைய பெருமையைப்பற்றி பிரபலமாக எழுதி இருப்பதன்றியில் அவர்கள் குடியரசு செய்துவந்தவிவரங்களைப்பற்றி அப்தபுத்தகம் 329-வது பக்கம் முதல் 505 பக்கங்களில் விஸ்தாரமாக எழுதி இருக்கிறார்கள் [அதன் சாரசங்கிரகமென்னவெனில்,

காஞ்சிபுரத்தில் ஒரு காலத்தில் மதனபூபதி என்னும் மன்னன் அரசாண்டு வரும்போது அப்பட்டணத்திலுள்ள பதிவிரதைகளை எல்லாம் பலாத்காரமாககொண்டு கெடுத்துவர, அப்பதிவிரதைகளில் வேதவல்லி என்னும் ஸ்திரீமனம் நொந்து, அந்த அரசனும் அவன்ராச்சியமும் பாழுத்துப் போக வேண்டுமென்று சாபமிட்டு பிராணனைவிட, அந்நாட்டிலுள்ள குடிகள் யாவரும் அந்நகரைவிட்டு ஓடிப்போக, அந்நாடு கெட்டு காடாக, கரடி புலிகள் புகுந்து சஞ்சாரம் செய்யும்படியானதாகவும். பிறகு சிலகுறும்பர்கள் அங்கே கால் நடைகளை மேய்க்கவந்து,அங்குத்தங்க,பிறகு நாளாவட்டத்திற் பலஜாதியார் குடியேறியதாகவும்; அக்குடிகளுக்கு அப்போது அரசனில்லாக்குறையால் அக்குடிகளிற்றக்க ஒருவரை அரசனாக நியமிக்ககருதி கவரைகள், கம்மவாரு, ரெட்டிகள்,முதலான முப்பத்தொன்பது ஜாதிக்காரர்கள் கூடிவேளாளர் ஜாதியில் ஒரு உத்தமனைத்தெரிந்தெடுத்து அவருக்கு முதலியார் என்ற பட்டஞ்சூ

ட்டி அந்த நாட்டாண்மைத்தலைவராக நியமித்தாகவும்; அப்படி நியமித்தனை த கம்மாளர் கைக்கோளர் பள்ளிகள் ஆக்ஷேபித்து. அந்த விடத்திற்கு வியாபாரச்செட்டிகளில் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று வாதாடியதாகவும், கடைசியில் வேளாளர் கக்ஷியாகிய வலங்கையார் ஜயித்தபடியால், தோல்வி அடைந்த இடங்கை கக்ஷியாரில் கம்மாளர் வேளாளருடைய உழுவுத்தொழில்களுக்கு வேண்டிய கலப்பை முதலான துகளைச்செய்து கொடுக்காமல் வம்புகள் விளைவித்தபடியால், அவர்களை வலங்கையார்பிடித்து சிறையிலடைத்ததாகவும், பிறகு அவர்களுடைய பெண்டுகள்வந்து கலப்பை முதலானதுகளைச்செய்து கொடுத்து வலங்கை கக்ஷியைச் சார்ந்துக்கொண்டதாகவும், எழுதி இருப்பதன்றியில்-அந்த வருணசிந்தாமணி 503—504-வது பக்கங்களில். "வேளாளர்க்குரிய விருதுகள் கவரைகளுக்கு எங்ஙனம் "பொப்பட்டதெனில்? சாலிவாகன சகாப்தம் 1433,ல், சந்திரகிரியில் கிருஷ்ணராயர் அரசாண்டுவந்தார். அவருக்கு "அறன்வளர்த்தான்முதலியார் மந்திரியாக விருந்தார். அக்காலத்தில் சில வேடதாரிகள் இராஜ சபையில் நூதனமான ஆட்டங்களை யாடவேண்டுமென்று நினைத்து வேடங்கட்டி யாடினார்கள். அவ்வாட்டத்துள், ஓர் வேளாளப்பெண் வந்ததுப்போல ஒருவன் வேடங்கட்டி யாடினான். அதனைக் கண்ட முதலியார் தம்முடைய குலத்தைப் பரிகாசம் செய்வது போல நினைத்து கோபக்குறியாயிருந்தார். இதைக் கண்ட தமது சேவகனுயுள்ள ஒரு கவரைச் செட்டியானவன் அவ்வேளாளப் பெண்ணைப் பார்த்து தாயே! தாங்கள் திருமனைவாயில் கடந்து சபையேறி இங்குவந்த காரணம் யாதென்று கேட்க, வேடதாரியும் பரிகாசமாகவே நீ வந்ததுபோலவே நானும் வந்தேன்" என்றான். அதுகேட்ட அச்சேவகன் என் எஜமானன் சாதிக்குத் தாகாதகாரியஞ் செய்தமையால், உன்னை தண்டிப்பேனென்று தன்கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரே வெட்டாக வெட்டி தலையை வீழ்த்தினான்! அப்படி வெட்டினதற்காக அச்சேவகனைக் குற்றவாலியாக்காமல், வேட பிராந்தியால் வெட்டினனென்று அவன் பிழையை முதலியார் மன்னிக்கச் செய்தார். பின்னும் அவனது வீரத்தனத்தை மெச்சி "தேசாயிபட்டமும்" வேளாளர்க்குண்டான விருதுகளும் அவனுக்குக் கொடுத்துச் சன்மானம் செய்தார்(!!!) அன்று முதல் கவரைச் செட்டிகளுக்கும் வேளாளர் விருதுகள் வழங்கி வருகின்றன"—என்றும்" ** 504-வது பக்கத்தில் "இதற்கு வேறு சில காரணமுமுண்டு—அஃதென்னை எனில்? குடியரசுகாலத்தில் குடிகளை யாளுவதற்கு, "கவரைகள் அதிக முயற்சிசெய்து வேளாளரை முதன்மையாக்கினார்கள், அவ்வபிமானம் பற்றி அவர்களுக்கு தேசாயிப்பட்டமும், தமது விருதுகளும் வேளாளர்க் கொடுத்தனர் என்பதாம்.

மேல்கண்ட விநோதக் கதையை எந்த ஆதாரத்தின் மேல் எழுதினரோ என்று பரிசோதிக்கையில், தொண்ட மண்டல சதகம் 237 வது பக்கம் 98-வது கவியில் "யானமே பெரிதாகக் கொண்டவரென்னும் தலைப்பின் கீழ்

"தாளான்மையுள்ள புகழ் கிருஷ்ணராயன் சமூகத்திலே
வேளான் மகிளரைப்போலே விநோதித்து வேடங்கொண்டு
கோளார்வைரியர் கூத்தாடத் தங்கள் குடிமை யெண்ணி
வாளாலவனுயிர் மாய்ந்ததன்றோ தொண்டைமண்டலமே.

இதன் பொழிப்பு—சந்திரகிரியிலரசுசெய்த விடாமுயற்கியையும்,பெரும்புகழையுமுடைய கிருஷ்ணராயர் சபையில் கூத்தாடுங்கொள்கையில் வல்ல கூத்தர்,வேளாளப்பெண்ணைப்போலவேடிக்கை வேடந்தரித்து கொண்டாடக் கண்டு,தமதுகுடிப்பெருமையை யிகழ்ந்ததைக்கருதி ஓர் வேளாள னேவலாலவ் வேடதாரியை வாளால் வெட்டினான். தம் குடிமைக் கிழிவு வரச்சகியாத வீரமுடைய வேளாளர் வாழுமி தொண்டை மண்டலம் என்பதாம். மேல் காட்டிய பாட்டிலும்,பொழிப்பிலும், கவரைச் சேவகன் என்றப் பெயரையே காணுதிருக்கவை புத்தகத்தின் வை பாட்டின்வரலாற்றில் கண்ட ஆபாசக்கதை யை நமது பிள்ளையவர்கள் பதிப்பித்தது ஆச்சரியம்! ஆச்சரியம்! இப்புராணத தின் 37-வது பக்கமுதல், 128 வரையில் கிருஷ்ண தேவராயலு சரித்திரத்தை விஸ்தரித்து எழுதியிருக்கிறோம். அதில் இந்தக் கதையைப்பற்றி பிரஸ்தாபிக்க வேகாணோம். ஆனால் கிருஷ்ணதேவராயலு காலத்தில் பிரபலராகவிருந்தஇராயனு பாஷ்கர மந்திரியார் காலத்திற் பலிஜவாருக்கு கொடுக்கப்பட்ட 3 சாசனங்களின் நகல்களையும், அவைகட்கு ஆதாரமான கவரி புத்திர சரித்திரத்தின் சங்கிரகத்தையும் இதனடியிற் பதிப்பித்திருக்கிறோம்.

எட்டாவது.

பேட்டை பலிஜவார்களுக்குள் வலங்கைத் தலைவராகிய தேசாஹி ஸ்ரேஷ்டிகள் உண்டான விவரத்தையும், இவர்களுக்கு வலங்கையார் என்றப்பெயரும்,பிருதுகளும், அந்தஸ்து முதலானதுகள்வந்தவிவரத்தைப்பற்றியும் அறிவிக்கும் புராதன புராணமாகிய கவரிபுத்திர புராணமென்னும்தெலுங்கு கிரந்தத்தின் சாரசங்கிரகத்தைத் தமிழ்ப் படுத்தி இதனடியிற் பதிப்பிக்கிறோம்.

கவரி புத்திர புராணத்தின் சாரசங்கிரகம்.

பிரம்மாண்ட புராணம், உத்திரகாண்டத்திலுள்ள, இதிகாசங்களில் ஒன்றாகிய, கவரி புத்திரசரித்திரத்தைச் சொல்லும்படி நைமிசாரணிய வாசிகளாகிய சவுனகாதி மஹாமுனிகள் வேண்டியபடி, சூதர் சொன்னதாவது— புண்ணிய க்ஷேத்திரமாகிய பரத கண்டத்தின் திலகமாக விளங்கும் ஹஸ்தினாபுரத்தில் ஜன்மேஜய மஹாராஜன் செங்கோல் செலுத்திவருகையில்; ஸ்ரீ வேத வியாசர், வைசம்பாயனர், ஜயமுனி முதலான சீடர்களோடு வந்து சேவை சாதித்து, க்ஷேமசமாசாரத்தை விசாரிக்கையில்; அந்தஜன்மேஜயன்மிக்க பயப்பக்தியுடன் வணங்கி, பாரத உயுத்தத்தின் காரணகாரியங்களை வியக்தமாகச்சொல்லவேண்டு மென்று கேட்க; அவைகளை விவரமாக உரைக்கும்படி வைசம்பாயனுருக்கு உத்திரவளித்துப்போக, அந்த வைசம்பாயனரும் உத்திரவின்படி விவரமாகச்சொல்லினர்: அந்தப்பாரத உயுத்தத்துக்கு குந்திதேவியே முக்கிய காரணமென்று ஜன்மேஜயன் அபிப்பிராயங் கொள்வதாகச்சொல்ல;

வைசம்பாயனர் கேட்டு மறுத்து, துரசமஹாராஜனுடைய யாகத்தில் சகல க்ஷத்திரியர் நாசகாரணிரயாக ஜனித்த பிரமஹத்தியே காரணமென, சுகர் தருமருக்குச் சொல்லியதாகச்சொன்னுர்-எப்படியெனில்.

ஹிமவத்ராஜனுக்கு மேனகையின் வயிற்றில் ஜனித்தபார்வதியை, ஸ்ரீ சங்கரருக்கு விவாஹம்செய்ய தீர்மானித்து, சகலதேவாதி தேவர்களையும் தருவித்ததில், அப்போது வந்திருந்த பிரம்மதேவன், பார்வதி தேவியின் பேரழகைக்கண்டு வியந்து, காம எண்ணத்தோடு சிந்தித்ததை; சிவன் அறிந்து, சினந்தும், தமது நெற்றிக்கண்ணினுல் பார்த்து தகித்தும், தமதுகைவாளால் பிரம்மாவின் ஒருசிரசைவெட்ட,உடனே பிரம்மாவின் சிரசு,சங்கரன் கையிற்போய் ஒட்டிக்கொண்டது. அந்தச்சிரசு சங்கரன் கையை விடாமல் பிடித்து ஒட்டிக்கொண்டமையால்; சிவன் விசனப்பட்டு அந்தகஷ்டத்தை நீக்கிக்கொள்ள விஷ்ணுவினிடம் முறையிட,அவர் சிவனுடைய சினத்துக்குச் சினந்து, பரிதபித்து, ஓ சிவனே! நீ தம்பதி சமேதராக காசி க்ஷேத்திரம்போய் 16,000 வருஷகாலம் பிக்ஷை எடுத்து,அந்த பிரம்மகபாலத்தைப் போஷித்து வருவாயாகில் உனது பிரமஹத்தியும் போய்; உன்கையிலொட்டி கொண்டிருக்கும் சிரசும் விடுப்பட்டுபோம் என்று சொல்ல, அதற்குச் சிவனும் சம்மதித்துக்கொண்டு, காசிக்ஷேத்திரம்போய் 16000 வருஷகாலம் பிக்ஷை எடுத்து பிரம கபாலத்துக்குத்திருப்தி செய்துவரச்சே; ஒருநாள் ஸ்ரீ மாதவ சுவாமி மந்திரத்துக்குப்போய்; பவதி பிக்ஷாதேஹி, என்று கேட்க, மஹாலக்ஷ்மிதேவியும் பிச்சான்னம் கொண்டுவந்துபோட, அதிற்சில அன்னப்பருக்கைகள் தவறிக்கீழேவிழ, சிவன்கையிலிருந்த பிரமகபாலம் அந்த அன்னத்தை பொறுக்க சிவன்கையை விட்டிறங்க; சிவன் கண்டு இதுதான் சமயமென்றறிந்து அந்தரமாக மறைந்து விட்டார், உடனே அந்தக் கபாலமானது சிவனைக்காணுமல் கோபித்துக் கொக்கரித்தும், நாலா பக்கங்களிலும் பற்றி எறியும்படிசெய்துக்கொண்டுவரச்சே, விஷ்ணுவானவர் பார்த்து, ஓ கபாலமே! நீ 16000 வருஷகாலம் பிச்சான்னம் உண்டும் திருப்தியடையவில்லையா! என்று கேட்க, "அதுபோதாது, அநேக க்ஷத்திரியர்களுடைய இரத்தத்தைக்குடித்து பேராசை தவிக்கவேண்டுமென்றுசொல்ல" விஷ்ணுவானவர் கேட்டு, ஓ கபாலமே! துவாபரயுகாந்திரத்தில் அநேக ராஜர்களுடைய இரத்தத்தைத்தருகிறேம். அதுவரையிலும் பொருத்துக்கொண்டிரு என, "அதுவரையில் நான் என்னமாக இருப்பேனென" பூமியில் பள்ளமாகவும், செடிகளில் பங்கவர்ணமாகவும், ஸ்திரீகளிடம் ரஜோரூபமாகவும், இருக்கக்கட்வாய் என்று சொல்லிவிட்டு; இந்தகஷ்டத்தைப்பற்றி தேவர்களோடு ஆலோசனைசெய்து, இந்த கபாலத்தை தரிக்கப்பட்டவனும் உலகிலுண்டோ என்று கேட்கையில்; தேவர்கள் பயந்து மெய்விதிர்க்க, மற்கண்டேயர்பின் வருகிறபடி சொல்லலுற்ருர். அதாவது—பூர்வத்தில் சங்கரருடைய நாயகியாகிய கவுரிதேவி செய்த யாகத்தின் யக்கியகுண்டத்தில் சகலலோக ஸ்திரீகளுக்கும் சுப சூக்ஷம்பொருள்களைக் கொடுக்கும்படி

யான கவரிபுத்திரன் பிறந்தான். அவன்தான் இந்தபிரம்மஹத்தி கபாலத்தைத்தாங்கவல்லவன் என்று சொல்ல, விஷ்ணுவானவர் கேட்டு, சந்தோஷித்துத் தக்கதூதர்களை அனுப்பி தருவித்து, ஓ கவரிபுத்திரா! நீ இந்தபிரமகபாலத்தை தாங்கு வாயாகில், உனக்கு புருஷ சிரேஷ்டத்துவம் உண்டாகுமென்று சொல்ல; அந்தகவரி புத்திரன் அதற்கிணங்கி அப்பிரம்மகபாலத்தைத்துணிந்து தரிக்க, தேவர்கள் கண்டு களித்தும், ஆசீர்வதித்தும்; பிரம்மதேவன் அந்தகவரிபுத்திரனைபலிஜவாரு, சேடர், தேவடியார், ஜனப்பர், சிவியார், ஈன்றவாரு, மங்கலவாரு, ஏனாதிகள், எருகலவாரு, போயர், பண்டிவாரு, ஒட்டர், உப்பரவர், லம்பாடியர், தேவரவாரு, பறையர், என்றாதி 18 ஜாதியார்களுக்கும் தலைவனுக்கி பட்டபு செட்டியார் என்னும் பட்டத்தைக்கட்டினார்.

அப்போது அந்தகவரிபுத்திரனுக்கு விஷ்ணுவானவர் கருடதுவஜத்தையும், பிரம்மா ஹம்சதுவஜத்தையும், சிவன் விருஷபதுவஜத்தையும், இந்திரன் உயுத்த ஜயசீலத்தையும், சந்திரசூரியர்கள் சத்திர சாமரங்களையும், அக்கினிதேவன் அசமானதுவஜத்தையும், எமன் இரத்ததுஜத்துவத்தையும், நைருதி சந்திரஹாசத்தையும், தனதானியவைபங்களையும்; மன்மதன் மீனகேதனத்தையம், மற்றதேவர்கள் பேரி மிருதங்கம் முதலான பிருதுகளையும், அஷ்டதிக்கு பாலர்கள்பின்னும் பலபிருதுக்களையும் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்ப; அந்த கவரிபுத்திரன், சகலலோகங்களிலும் சஞ்சரித்துதேசாஹி அதிகாரம்செய்து, தருமபரிபாலனம் செய்து வரவே; அவனிடமிருந்த பிரம்மகபாலம்பிரிந்து துருபதமஹாராஜன் செய்துக்கொண்டிருந்த யாகத்தில் ஆவாஹணமாகி, அந்த அக்கினியே துரௌபதியாகப்பிறிட்டு ஜனித்து, வீஷணனைக்கொன்முன் என்று சுகர் சொல்ல; தருமநந்தனன் கேட்டு, அந்தகவரி புத்திரனைப்பார்க்க பேராசைக் கொண்டிருப்பதாகச் சொல்ல, ஆரியசுதாநந்தனுகிய கவரிபுத்திரன் பலவிடங்களிலும் தேசாதிபதியாக இருப்பானுகையால், அவனை வாயுவின்புத்திரனுகிய பீமனை அனுப்பி வரவழைப்பாய் என்றுசொல்லிப்போக; தருமன்கேட்டு, ஸ்ரீகிருஷ்ணரைப்பார்க்க, அவர்பீமனை நோக்கி, நீபோய் கவரிப்புத்திரனை அழைத்து வருகவென்று கட்டளையிட, உடனே பீமன் நாலாபக்கங்களிலும் காற்றுருபமாகப்போய் தேசாஹி சிரேஷ்டி யாகிய கவரிபுத்திரனை 18வித பிருதுகளுடனும் அழைத்துவர; தருமராஜன் கண்டு, முன் எழுந்துப்போய் அக்கவரிபுத்திரனுக்கு தக்க மரியாதை உபசாரங்களைசெய்து, நல்வரவுகூறி அழைத்து வந்தும், சமகவுரவபந்தியில் தமமோடு உட்காரும்படிச் செய்தும், அருசுவை உணவுஉண்டபிறகு, அழைத்துவந்து சபாமண்டபத்தில் தமக்கருகில் உட்காரவைத்துக் கொண்டு உபசரித்தும், மிருகதுவஜத்தையும், ஜயசங்கத்தையும் பிருதுகளாசக்கொடுக்க; பிறகு பீமன் காண்டிபதுவஜத்தையும், பவுண்டர சங்கத்தையும், அர்ஜுனன் கபிதுவஜத்தையும், தேவதத்த னென்னும் சங்கத்தையும், நகுலன் மாதங்க வஜிரத்தையும், கோஷமென்னும் சங்கத்தையும், சஹாதேவன், சுரபி, மணிபுஷ்டகம் என்னும் சங்கங்களையும்; கிருஷ்ணர், அபிமனுயுவின் கர்ணிகாரத் துவஜத்தையும், தரு

மன், கஞ்சு, பிஞ்சு, மிஞ்சுகளையும், நவரத்னங்களையும் பிருதுகளாகக் கொடுத்து அந்தபாண்டவாதிகள் கவரிபுத்திரனை ஆலிங்கனம் செய்துபுகழ்ந்ததாக வைசம்பாயனர் ஜன்மே ஜயருக்கு சொன்னூர்.

இரண்டாவது அத்தியாயம்.

பிறகு ஜன்மேஜயன் வைசம்பாயனரைப் பார்த்து, ஹிமவந்தனுடைய புத்திரியாகிய பார்வதி தக்ஷனுடைய புத்திரியான விவரத்தைப் பற்றித் தெரிவிக்கவேண்டுமென்று வேண்ட, வைசமபாயனர் சொல்லுகிறூர்.

"பிரமதேவனுடைய வலது கால் பெருவிரலில் ஜனித்தவனும், மஹாவீரபராக்கிரமசாலியுமாகிய,தக்ஷபிரஜாபதிக்கு,100 குமாரத்திகளுண்டு. அவர்களில் தக்ஷாயணி என்னும் பெண்ணை அருமையாக வளர்த்தி வருகையில், ஒருநாள் தக்க ஆடை ஆபரணங்களை அணிந்து, தன் அழகைப்பற்றி நிலக்கண்ணாடியில் பார்க்கச்சே, சுமங்கலிய ஸ்திரீகளுக்கு இன்றியமையா மஞ்சள் மை, வளையல் முதலான சுபகரப்பொருள்களில்லாமையால் மனம் கலங்கி, தன் தந்தையிட முறையிட; அந்த தக்ஷன், சப்தலோகங்களையும் தாண்டி பிரம்மாவினிடம் போய் முறையிட, அந்த பிரம்மாப்பார்த்து, ஹே, தக்ஷா! ஓர் வீரதீரபுருஷன் சிவதேஜஸ்ஸோடு உன் குமாரத்தி செய்யும் யாகத்தில் ஜனித்து, உன் மகளுக்கு வேண்டிய சுபகரமான மங்கள சுப ரூப வஸ்துக்களைத் தருவானென்று சொல்லியனுப்ப; உடனே தக்ஷன் வந்து, தங்கத்தினல் செய்த செங்கற்களைக்கொண்டு, 18 மூலைகளுள்ள சதுரங்க பீடமாகவும், கருடாகிருதியாகவும், சில கமலாகிருதியாகவும், யாககுண்டத்தை நியமித்தும்; அதில் தன் குமாரத்தியைக்கொண்டு அக்கினி ஹோத்திர ஹோமம் செய்வித்து வரச்சே; அங்கு அனேக தேவர்கள் ஆவிர்ப்பாகமாகி வந்து நிற்க, அந்த யாககுண்டத்திலிருந்து கஞ்சு மிஞ்சு, பெஞ்சு, காஜுலு, மலரரம், மஞ்சள் குங்குமம், சாதோலை, சீப்பு, கந்தப்பொடி, சந்தன புஷ்பங்களோடு ஒரு திவ்விய புருஷன் ஜனித்து வந்து, அந்த கவரி தேவியை சுமங்கிலியாக பிரகாசிக்கும்படி முகத்தில் குங்கமிட்டும், கழுத்தில் கருமணி தரித்தும், வளையல்களை புகட்டியும், கண்களுக்கு மைதீட்டியும், சந்தன புஷ்பங்களால் அலங்கரித்தும் வணங்க, கவரி தேவியும் ஆநந்தப்பட்டு; அந்த கவரி புத்திரனை ஆலிங்கனம் செய்துக்கொண்டு, அந்த கவரி புத்திரனைசகல லோகங்களிலிருக்கும் சுமங்கலியஸ்திரீகளுக்கு மஞ்சள் குங்குமாதி சுபகர வஸ்துக்களைக் கொடுத்துக்கொண்டு, சிரேஷ்டனுகி பிரகாசித்தும்—உலகில் நடக்கும் விவகாரங்களை விசாரித்து தரும ப்ரிபாலனம் செய்தும், தேசாஹி என்னும் பெயரால் பிரகாசிக்கக்கடவாயென்று ஆசீர்வதிக்க; இத்தியாதி வைபவங்களை அறிந்த மஹாலட்சுமியும், வாணி, சரஸ்வதி, இந்திராணி முதலான தேவமஹிஷிகள், இந்த தேசாஹி ஆகிய கவரி புத்திரனை தம் தம் இருப்பிடங்களுக்குத் தருவித்தும், தமக்கு வேண்டிய மஞ்சள் குங்கும முதலான சுமங்கலிய வஸ்து

க்களை இந்த கவரி புத்திரன் கொடுக்கப் பெற்று; வைகுண்டத்திலிருந்த லக்ஷுமிதேவியார், இந்த கவரி புத்திரனுக்கு பலிஜவாரு என்ற பெயரையும், அநேக பிருதுகளையும் கொடுத்து மரியாதைச் செய்தனர். பிறகு சத்திய லோகத்திலிருந்த சரச்சுவதி தேவியார், இந்த கவரி புத்திரனுக்கு, கவுரவுலு, என்ற பெயரும் கொடுத்து மரியாதை செய்தார். பிறகு இந்திராணி, சஹா தேவி, சியமலாதேவி, தீர்க்காதேவி, காளிகாதேவி, அஞ்சனாதேவி, சித்திரரேகை, முதலானவர்களுக்கும், முனிபத்தினிமார்களுக்கும் முறையே மஞ்சள், மை, வளையல் முதலான சுபமாங்கிலிய வஸ்துக்களைக் கொடுத்து, அவரவர்களால் தக்க பிரிதுக்களை பெற்றும்; அநந்தரம் 56 தேசங்களிலும் தேசாஹி சிரேஷ்டர் என்ற பெயரால் பிரகாசித்ததாக, வைசம்பாயனர் விவரமாச்சொன்னார்—நிற்க—தக்ஷன், ஒரு காரணத்தைப் பற்றி சிவபெருமானை தூஷிக்க, சிவபெருமான் கோபித்து தக்ஷனுடைய சிரசு ஆட்டுத்தலையாக மாற்றிவிட, அதை மானுஷரூபமாக மாற்ற தக்ஷன் யாகம்செய்ய, எல்லா தேவர்களையும் தருவித்தபோது; சிவபெருமானையும், பார்வதிதேவியையு மாத்திரம் அழைக்காமல் அசட்டையாக விருக்கையில்; பார்வதி தேவியானவர், அழையாத வீட்டிற்குப் பலத்காரமாக போகவேண்டுமென்று சிவபெருமானைக் கேட்க, அழையாத வீட்டிற்கு அவர் போகவேண்டாமென்று தடுத்தும், பார்வதிதேவி கேளாமல், கணபதியையும், நந்தியையும், துணையாகக் கூட்டிக்கொண்டுப்போக, அவர்களை தக்ஷன் தக்கமரியாதையுடன் அழையாமையால்; பார்வதிதேவி நொந்து, அக்கினிகுண்டத்தில் பிரவேசமானார். இது சங்கதியை சிவபெருமான் கேட்டு, அந்த அவமானத்தை சகிக்க முடியாமல், தன் சடாமுடியிலிருந்து வீரபத்திரனை சிருஷ்டித்து, தக்ஷன் யாகத்தைக் கெடுத்துவிட்டு வரும்படியனுப்ப; அவ்வீரபத்திரனும் அப்படியே வந்துச்செய்து, பிருகு முதலானவர்களுடைய மீசைகளைப் பிடுங்கி கைலாசத்துக்குவர, இந்த அகிரமத்தைத் தேவர்கள் சகியாமல் தேவேந்திரனிடம் முறையிட; அத்தேவேந்திரன், வைகுண்டத்துக்குப்போய் விஷ்ணுவினிட முறையிட, அவர் ஸ்ரீசாந்தாவனத்துக்குவந்து, சிவபெருமானை வேண்ட, தக்ஷன் சிரசு யக்ஞியத்தில் பஸ்பமாகிவிட்டபடியால் அதற்குப்பதில் ஒரு ஆட்டுத்தலையை வைத்துக்கொண்டு யாகத்தை முடித்தான்.

மூன்றாவது அத்தியாயம்.

பிறகு, தக்ஷாயணி, பர்வதராஜனுடைய குமாரத்தியானதற்குக் காரணமெப்படியென்று ஜன்மேஜயன் கேட்க, வைசம்பாயனர் பின்வருகிறபடி சொல்லலுற்றார்—ஒருகாலத்தில் பர்வதராஜன் அம்பிகா பூஜைசெய்துவந்ததினால் பார்வதிதேவி வியந்து, முன் தக்ஷன் யாகத்தில் பிரவேசித்த பார்வதியே, ஹிமப்பர்வதனுக்கும், மேனகைக்கும் புத்திரியாகப் பிறந்தார். அப்படிப்பிறந்தஅந்தம்மை, ஒரு காலத்தில் தன் சகிகளோடு சேர்ந்து ஒரு சிங்காரவனத்திற்போய், ஆடிக்கொண்டிருக்கும்போது; சில்பிசாஸ்திரி இடம் சிற்பவித்தையைக்கற்ற இரதாகாரன் என்னும் ஓர் சீடன் குருதுரோகியாகிய படியால்;

அந்த குருவால் சபிக்கப்பட்டான்; அந்தச்சாபனையை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, நல்ல நகைகளைச் செய்து பார்வதி தேவிக்குக் கொடுத்து வணங்க; அந்தம்மை கண்டு உனக்கு வேண்டுவதென்னை யென்று கேட்க, அவன் தனக்கு தேசாஹி பட்டம் கொடுக்கவேண்டுமென்று கேட்க,அந்தம்மையும் கொடுக்க, அப்பட்டத்தைப் பெற்ற இரதாகாரன் உலகெங்கும் திரிந்து வம்புகள் விளைத்து வந்தான்.— நிற்க, ஸ்ரீ பார்வதிதேவியானவர் சிங்காரவனத்தில் விளையாடி வருவதை சிவ பெருமான்கண்டு மோகித்து, ஓர் ஆண்டிவேடம் தரித்துக் கொண்டு வந்து அன்பைவளர்க்க: இருவரும் அங்கு காந்தர்வவிவஹம் செய்து க்கொள்வதற்கு சுமங்களிய சுபவஸ்துக்களைத்தரும் கவரிபுத்திரனை விரும்ப; அவன் வந்து பார்வதிதேவிக்குப்பலவித வலையல்கள் பூட்டி, குங்குமம் பொட்டிட்டும்,மைதீட்டியும்,கருமணி தரித்தும்,மஞ்சள் சந்தணத்தைப்பூசி புஷ்பாதிகளைப்புகட்டி சந்தோஷமடையும்படி செய்விக்க; அப்போது நாரதர்வந்துப் பார்த்து ஹே! தேவி! இந்த கவரி புத்திரன் உன்னை சுபகரமங்கல வஸ்துக்களைக்கொண்டு அலங்கரித்தவெகுசிறப்பாக இருக்கிறதென்றுப்புகழ்ந்துக்கொண்டாடும்போது, இரதாகாரன் கேட்டு வந்து, கவரி புத்திரனுடைய மலாரத்தைப்பிடித்து இழுத்து, கவரி புத்திரனை சுங்கம் கொடுக்கும்படி கேட்க, கவரி புத்திரன் கொடேனென்று கர்ஜித்து இரதாகாரனைக் கொல்லப்போகையில்; ஸ்ரீ பார்வதி தேவியானவர்: தனது வலது கையால், கவரி புத்திரனைப் பிடித்துச் சமாதான படுத்துகையில், நாரதர் எழுந்து இரதாகாரனைப் பார்த்து "ஹே! இரதக்காரனே, நீ நாடு நகரங்களைச் சுற்றித் திரிந்துக்கொண்டும், ஈனைய வேலைகளைச் செய்துக்கொண்டும், பொய் பேசியும், அபகீர்த்தியைப் பெற்றும், பஞ்சமஹா பாதகர்களில் ஒருவனாகி மோசவேலைகளைச் செய்தும் பிறர் பொருளை மோசமாகச் சம்பாதித்துக் காலம் கழிப்பாயாக என்றுச் சபிக்க; உடனே பார்வதி தேவியானவர், இராதக்ரனை கோபித்து அவன் தரித்திருந்த பட்டபிருதைப் பிடுங்கி, கவரி புத்திரனுக்குக் கொடுக்க, அவனதை வாங்கி தன் முழங்காலில் கட்டிக்கொண்டமையால், அன்று முதல் மோகாலி பட்டபிருதுவாரு என்று பட்ட பிருதுப்பெயரையும் (கவரி புத்திரன்) பெற்றான். பிறகு பார்வதியாகிய கவரி தேவியானவர், இராதாகாரனை தனது இடது கையால் இழுத்துத்தள்ளி துரத்திவிட்டபடியால், அன்று முதல் அந்த இரதாகாரனையும், அவனைச் சார்ந்தாரையும், இடங்கையார் என்றும், ஸ்ரீ பார்வதிதேவி தன் வலதுகையால் கவரி புத்திரனைப் பிடித்துச் சமாதானம் செய்தபடியால்,அந்த கவரி புத்திரரைச் சார்ந்த 18 ஜாதியாரை வலங்கையாரென்றப் பெயரைப் பெற்றும், பல பிருதுகளுடனும் தேசாஹி சிரேஷ்டர்களாகப் பிரகாசிக்கலானார்கள்.

எப்படி எனில்.

1. தெலுகுவெலமருக்கு—ஹம்சதுவஜமும்.
2. கன்னிடியாருக்கு—பசுவலிங்கதுவஜமும்.

3. ரெட்டிவாருக்கு—பஞ்சவர்ணகேதனமும்.
4. கும்மரவாருக்கு—நாசேட்டி துவஜமும.
5. கொல்லவாருக்கு—விருஷபதுவஜமும்.
6. வன்ன ஜனபவாருக்கு—கண்டபேரண்ட துவஜமும்.
7. கோமுட்டிவாருக்கு—மகரதோரணமும்.
8. ஜாண்டரவாருக்கு—உலககேதுவஜமும்.
9. ஒசவாருக்கு—மத்தள துவஜமும்.
10. குரவஞ்சிவாருக்கு—சகோரபக்ஷி துவஜமும்.
11. எனாதிவாருக்கு—குந்தேடி துவஜமும்.
12. அருவ தமிழருக்கு—தாமரை துவஜமும்.
13. வேட்டகாருக்கு—கவுதாரிதுவஜமும்.
14. குறவருக்கு—கவுதாரிதுவஜமும்.
15. தேவடியாளுக்கு—மன்மததுவஜமும்.
16. தெலுங்குகொல்லவாருக்கு—சங்குதுவஜமும்.
17. பட்டுநூலுகாரருக்கு—பட்டுதுவஜமும
18. ஜனபவாருக்கு—ஹிரன்யதுவஜமும
19. வட்டவாரிக்கு—பாரசிப்பதுவஜமும்
20. உப்பரவாருக்கு—ஆகுரதுவஜமும்
21. பத்மசாலலுக்கு—சார்து தால துவஜமும்.
22. லம்பாடியாருக்கு—பெரிக துவஜமும்.
23. சுகாலீலருக்கு—சித்திர துவஜமும்.
24. மேளக்காரர்களுக்கு—டமாரு துவஜமும்.
25. நட்டுவருக்கு—தாள துவஜமும்.
26. பட்டுசாலவாருக்கு—கண்டபேரண்டதுவஜமும்.
27. சித்திரகாரருக்கு—மகர துவஜமும்.
28. இலவாணியருக்கு—கோகில துவஜமும்.
29. வாணியருக்கு—கருட துவஜமும்.
30. ஈன்றவருக்கு—ஏணி துவஜமும்.
31. கம்மாளருக்கு—சுத்தி, சம்மட்டி, உளி, முதலான துகளும்.
32. தெலுங்கு செட்டிக்கு—சர துவஜமும்.
33. செம்படவாருக்கு—வலைய துவஜமும்.
34. கிருஸ்தவருக்கு—மருகால்லகுரா துவஜமும்.
35. ஒத்தசெக்காருக்கு—பஞ்சவர்ணக்கிளியும்.
36. பட்டணமுவாருக்கு—கூர்ம துவஜமும்.
37. கரியாலவாருக்கு—பச்ச துவஜமும்.
38. ஓடைக்காரருக்கு—மீன துவஜமும்.
39. கிளாசுவாருக்கு—வண்டி துவஜமும்.
40. நக்கபோயிலுக்கு—குக்க (நாய்) துவஜமும்.
41. இருளருக்கு—சில்லகோல துவஜமும்.
42. குயவருக்கு—சகிரகூல துவஜமும்.
43. புடுபுடுக்காரருக்கு—சக்தி துவஜமும்.
44. பனசவாருக்கு—தாரையும்.
45. ஜோனங்கிவாருக்கு—முக்தா துவஜமும்.
46. வண்ணருக்கு—வெள்ளை யானையும்.
47. தெலுங்குபண்டாரத்திக்கு—சூலமும்.

48. தமிழ்நாசுவருக்கு—புருஷமிருக துவஜமும்.
50. தெலுங்கு நாசுவருக்கு—நாகசுவரமும்.
51. புஜாரிகளுக்கு—சைலமும்.
52. மாரியம்மவாருக்கு—புடிபுடுக்கு துவஜமும்.
53. பூவாணிகளுக்கு—மார துவஜமும்.
54. தொம்பருக்கு—டேக துவஜமும்.
55. பண்ணேவாருக்கு—வெண்குடையும்.
56. போயருக்கு—பல்லக்கியும்.
57. மண்டெவாரிக்கு—விஞ்சாமரமும்.
58. பண்டவாரிக்கு—கத்தி துவஜமும்.
59. பண்ட பறையருக்கு—வெள்ளைக்கோளியும்.
60. மற்றவர்களுக்கு பஞ்சகலசத்தப்பட்டை,சங்கீதம்,பாங்கி முதலான பிருதுகளை வரிசையாக நியமித்தும், கவரி புத்திரனுக்குச் சகல மரியாதைகளையுஞ் செய்வித்து உத்சாகமாக்கியபிறகு—இடங்கையாருக்கு அடியிற்கண்ட பிருதுகளை நியமித்தனராம்.

எப்படியெனில்.

1. கைக்கோளருக்கு—மாயூரம், எலுகு, மான் முதலானதுகளும்.
2. சேர்னவாருக்கு—குரு திருத்துவ துவஜமும்.
3. கம்மாளருக்கு—போரு பொந்த துவஜமும்.
4. பள்ளருக்கு—நெருப்பு, சேவல், நரி, பிருதுகளும்.
5. சக்கிலியருக்கு—சோணமும், கொம்பும், தப்பட்டை முதலானதுகளையுங் கொடுக்கஎல்லாரும் சந்தோஷமுற்றார்கள்—இப்படி கவரி புத்திரன் பிரம்மாதி தேவர்களால் கொடுக்கப்பட்ட பிருதுகளைப் பெற்று காஞ்சிபுரத்தைச் சேர்ந்தான். அப்போது அங்கு நான்கு வமிசத்தாருக்கும் அதிபதியான சம்புமித்திரன் என்னும் பிரபுவானவர், சவுந்திரியவள்ளி என்னும் நாயகியை மணந்து இல்லறத்தை நடத்தி வருகையில், பிள்ளையில்லாக் குறைவினால் வனத்துக் கேகிக் கடுந்தவஞ்செய்து அங்கு தபோநிதியாக விருந்த கிருஷ்ண ஜனவல்கியரை அடுத்து நிற்க, அவர் ஓர் தர்பையை மந்திரித்துக் கொடுத்தனுப்ப, அதை அந்தச் சதிபதிகள் வணங்கிவர, ஒரு பெண்பிள்ளை பிறந்தது. அதற்கு காஞ்சநாங்கி என்ற பெயரிட்டும்,சாவொருவண்ணமும் பொழுதோர் மேனியுமாக வளர்த்து தக்க வயதுவரவே, அந்த கவரி புத்திரனுக்கு விவாஹம் செய்துக் கொடுக்க சதிபுருஷர்கள் சுகமாக வாழ்ந்தார்கள்.

கவரி புத்திரன் பயங்கரமான பிரம்மகபாலத்தைத் தரித்தமையால் விஷ்ணுபகவானால் சிரேஷ்டன் என்ற செட்டிபட்டத்தையும்,கவரி தேவியின் பலியாகத்தில் ஜனித்தபடியால் பலிஜன் என்றக் காரணப் பெயரையும், சரஸ்வதிதேவிக்கு வளையல் கொடுத்ததில், அந்த சரசுவதேவியால் கவுரவன் என்ற சிறப்புப்பெயரையும், கவரி தேவியினால் வலங்கையால் பிடிக்கப்பட்டு இராதாகாரனை இடங்கையால் தள்ளப்பட்டு அவனுடைய பிருதைப்பெற்றமையால் வலங்கைத்தலைவர் தேசாஹி சிரேஷ்டி என்றுதி சிறப்புப் பெயர்களைப் பெற்றான். இப்படிப் புகழ்பெற்ற தேசாஹி சிரேஷ்டியின் கடைசி சந்ததியாகிய காஞ்சி பாலைய சிரேஷ்டிகாரு தொண்டமண்டல தேசாதிபதியாகி பகல் திவட்டியுடனும் 12-பிருதுகளுடனும், 18-ஜாதியார்கள் கைகட்டி மரியாதை செய்ய பிரபலராக இருந்தாராம்.

இந்த கவரி புத்திர சரித்திரம், தேவனஹள்ளி ஸ்ரீ சுப்புராயப்ப சிரேஷ்டியாரின் பிரேரேபணையின்படி, சென்னை கோவிந்தப்ப நாயடு பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ எம்பாரய்யகாரு எழுதி 1898 ௵ சென்னை ஹவலக்கு அச்சில் பதிப்பித்த தெலுங்கு புத்தகத்தின் சாராம்சமாம். இதற்கனுகூலமாக வட (தெலுங்கு) தேசங்களில் 1428 ௵ம் உண்டான சாசனங்களை இதனடியிற் பதிப்பித்திருக்கிறோம்.

(ஒன்பதாவது)

శ్రీరాయని భాస్కరడు బలిజవారికిఁ జేయించిన,

దేశాహిశ్రేష్ఠిశాసనములు.

ఈరాయని భాస్కరుడు తెనుగుదేశములో నంతటను బ్రసిద్ధనాముడు, అట్టి ప్రసిద్ధికిఁ గారణము భాస్కరుడు దేశవిషయమై చేసిన లోకోపకారకార్యమే. దానినే "మంత్రీమహానాటి కట్టుబాటని" వాడెదరు. అది కొందఱికి బాధించినట్లు కనఁబడినను, మెట్టున నన్నివర్ణములవారికి నంగీకారకార్యమైనది. కావున దానిని సాధించి తెచ్చిన రాయని భాస్కరుడు సర్వవర్ణములవారివలన విశేష గౌరవము నొందెను. అశాసనములు వివరించుటకుఁ బూర్వము వాటికాలము మనము వివరించినఁ బ్రస్తుతాంశము దత్తోత్తరమగును. కావున నాశాసనములును వానికాలము సంక్షేపముగ వివరించెదను. ఎట్లనఁగా—

౧-వ శాసనము. శా॥ స॥ ౧౪౨౮ కి సమమగు క్రోధనసంవత్సరము.

౨-వ శాసనము. డిటో డిటో డిటో

3-వ శాసనము. డిటో ౧౪౨౯ కి సమమగు అక్షయ సంవత్సరము.

ఈ మూఁడుశాసనములలో నుదాహరింపఁబడిన యంశ మొక్కటియే. అందు మొదటి రెండును; అశ్వపతి, గజపతి, నరపతి యను మువ్వురు రాజులవలన నిర్ణయింపఁబడిన పన్నులు మాన్పించుటకుఁగాను రాయని భాస్కరుడు వారు కోరినంత ధనము సంపాదించి వారికిచ్చి అందుమూలముగా చేయించిన కట్టుబాటుల వృత్తాంతమును దెల్పును. మూడవ శాసనముపై మువ్వురు రాజులకు నాకాలములో హిందూదేశమున కంతకును బాదుషా (ప్రభువు) గానుండి, ఢిల్లిలో నివసించియున్న, అలంగిరు పాదుషావారికడకుబోయి, పై రాజులిచ్చియున్న మర్యాదలకు పాదుషా సమ్మతించునట్లు చేసి యతనివలన బొందిన పర్వానాయైయున్నది. కాబట్టి యీ గాథలు జరిగిన కాలమునకు రాయని భాస్కరుడు మున్నది నలుపది సంవత్సరముల వయసుగలవాఁడై

యుండవచ్చును. అనంతర కాలములో మూరురాయర గండడను బిరుదునందిన, కృష్ణ దేవరాయని రాజ్యారంభకాలమునను మూడుసంవత్సరములు పూర్వపుదై యున్నది. అనఁగాఁగృష్ణదేవరాయనియన్నయగు వీరవరసింహరాయుడు పరిపాలన చేయుచుండు సమయమై యున్నది. ఈపనిఁబైన రెండుమూఁడు సంవత్సరములకే, అనఁగా శా॥ స॥ ౧౪౩౧, ౧౪౩౨ సంవత్సరములలో వీర నృసింహరాయుడు మృతుఁడగుట యుఁ గృష్ణరాయఁడు సింహాసన మెక్కుటయునై యున్నది. ఈకాలమన వేమారెడ్డిది కాదుకావున, నా వాక్యమునకు ప్రస్తుతములో మన మూహించిన యన్వయమే చెప్ప వలయును, లేకున్న కాలము తప్పును. ఈకృష్ణరాయుడు "మూరురాయగండఁ" డను బిరుదు, బొందినది శా॥ స॥ ౧౪౪౨ వఱకునై యుండదు. అనంతరము కృష్ణ రాయలు, అశ్వపతి, నరపతి, గజపతుల జయించి "మూరురాయరగండఁ" డను బిరుదందియుండును. కృష్ణరాయలు సింహాసనమునకు వచ్చునాటికే లోకప్రసిద్ధ నామముఁగలవాడగుటఁజేసి భాస్కరుని విశేషములురాయలు స్వయముగా నెఱింగి యుండును. అట్టి వృత్తాంతమును మఱియొకచో వివరింపఁ దలఁచి ప్రస్తుతములో భాస్కరుని జననకాలమునాటికి ననఁగా శా॥ స॥ ౧౪౦౦ మొదలు శా॥ స॥ ౧౪౩౦ వఱకుఁ దెన్గుదేశముయొక్క నాల్గు పక్కలనుండు భాగములకుఁ బ్రభువులుగా నుండిన ముగ్గురు రాజులయొక్క వ్యవహారము లెట్లున్నవో వారి కాలములోఁ బ్రజ లేవిధముగా గష్టసుఖముల ననుభవించిరో దానిం దెలియుటకుఁగా నా శాసనముల నొక్కొకదానినె యీక్రింద వివరించెదను.

రాయని భాస్కరుఁడు చేయించిన శాసనములు.

ఈశాసనములలో మొదటిది అనగా శా॥ స॥ ౧౪౨౨ వికెండును ఎట్టాస్టెట్టి వారను తెలగాలకడనున్నట్లును వాటి నకళ్లను సంపాదించి పంపిన యొక చారిత్రా భిమాని కోర్కెపైని బందరులో ననఁగా మచిలీపట్నము (Masulipatam) అను పురములోఁ గొంతకాలముక్రిందట బహుప్రసిద్ధితో వెడలుచువచ్చిన "పురుషార్థ ప్రదాయిని" యను పత్రికలోఁ బ్రకటింపఁబడినవి. మూడవది యనఁగా "అలం గిరుపాదుషా" యిచ్చిన పర్మానా యనునది గోదావరీమండలములో నీ మంత్రీమహా నాటివారివలన వ్యవహారోపయోగార్థముగా నుంచుకొనఁబడినదాని నకలై యు న్నది. ఇది నావలన సంపాదింపఁడినది. మొత్తమున నీమూడుశాసనముల యంశ మొక్కటియే యైనను మొదటి రెంటిలోను జారిత్రాంశములు పెక్కులున్నవి - మూడ వది కేవల సిద్ధాంతములనే తెల్పును.

ஸ்ரீ இராயலு பாஸ்கர மந்திரியவர்கள் முயற்சியினால் பலிஜவாருக்கு உண்டான தேசாஹிபட்டமும் மஹாநாட்டின் கட்டுப்பாடு சாசனங்களுமாவன.

சாலிவாஹன சகாப்தம் 1400-ஆம் ஜனித்த ஆந்திரவடதேசத்தில் இராயலுபாஸ்கர மந்திரி என்னும்பெயரால் ஒரு மஹா தெலுங்கு கவி வித்துவானும், மஹாமதியூகியுமாயுமிருந்தார். அவர்ஸமஸ்கிருத வால்மீக இராமாயணத்தை தெலுங்குப் பத்தியங்களில் பாடியவர். அவர் முதலில் கொண்டபல்லி, வினுக்கொண்டாவில் கோனபுத்தரெட்டியாரிடம் கர்ண முதல் மந்திரி முதலான வேலைகளை வகித்து, கடைசியில் இராஜனுகவும் பிராகசித்ததாக "சுநந்தா பரணியம்" முதலான கிரந்தங்களினால் பிரதியக்ஷமாகிறது. அவருடைய கல்வித்திறத்தையும் ; சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி தருமம் தானமுதலான குணச்சிறப்புகளையும்நேரில் கண்ட ஸ்ரீவிஜயநகர நரபதி ஸ்ரீ கிருஷ்ணதேவ ராயலு, அவருக்கு அநேக பஹுமானங்களைக் கொடுத்த தன்றியில், அவருடைய பெயருக்கு முன்பும், அவருடைய பின் சந்ததிகளின் பெயருக்கு முன்பும், "இராயலு" என்ற தமது பட்டப்பெயரைத் தரித்துக் கொள்ளும்படி உத்திரவு கொடுத்தமையால், அன்று முதல் அந்த பாஸ்கராருக்கு இராயலு பாஸ்கர மந்திரி என்றப்பெயரை வழங்கிவந்தார்கள்.

அந்த இராயலு பாஸ்கரர் காலத்தில் இந்தியாதேசம் அசுவபதி (மகம்மதியர்) (2) கஜபதி (3) நரபதி என்னும் மூன்று மன்னர்களுடைய அதிகாரத்துக்குள் இருந்தது. அம்மூன்று மன்னர்களும் அடிக்கடி ஒருவரை யொருவர் எதிர்த்துச் சண்டைச் சச்சரவுகள் செய்துக்கொண்டு வந்தமையால்; அச்சண்டைச் சச்சரவுகளின் செலவுகளுக்காக தம் குடிகளுக்கு பலவித அநியாய வரிகளை நியமித்தும், அவைகளை வசூல் செய்ய, அநேக அக்கிரம அதிகாரிகளை நியமிக்க ; அந்த வரி வசூல் செய்யும் அதிகாரிகள், குடிகளை தாரதரமின்றி பலவிதங்களிலும் வம்புகளைச் செய்து வருந்தி வருகையில் ; அந்த இராயலு பாஸ்கரமந்திரியார் பார்த்து பரிதபித்து; அப்போது அந்நாட்டில் சத்தியம், சாந்தம், தருமம், நீதி வீர முதலான குணங்களிற் சிறந்திருந்த பேட்டை பலிஜவாரிடம்பேசி, அப்பலி ஜவாருகளில் தக்கவரை தேசாஹி என்னும் பட்டப்பெயரால், தேசத்தின் குடிகளுடைய ஜாதிக்கட்டுப்பாடுகளைப் பற்றி விசாரித்து நீதி செலுத்தவும், அநியா வரிகளைக் கொடுக்கும் குடிகளுக்கு பிரதி நீதியாக ஷை அசுவபதி, கஜபதி, நரபதிகளாகிய மன்னர்களிடம் போய் முறைஇடச்

செய்ததில் அம்மூன்று மன்னர்களும் தம்மால் குடிகளுக்குண்டாகி இருக்கும் கஷ்டங்களை நீக்கக் கருதி பேட்டை பலிஜவாரில் தக்க ஓர் பெரிய மனுஷருக்கு தேசாஹி என்ற பட்டத்தையும் அதற்காக மூன்று சாசனங்களையும் கொடுத்தார்கள். அம்மூன்று சாசனங்களில் முதலாவது சாசனம் சகாப்தம் 1428ஹும் குரோதன வருஷத்திலும் இரண்டாவது சாசனம் ஷெ ஷெ ஷெ
மூன்றுவது சாசனம் 1429ஹும் அக்ஷய வருஷத்தியது.

அம்மூன்று சாசனங்களின் கருத்துகளும் ஒன்றே யாகிலும், முதலிரண்டு சாசனங்களில்—அசுவபதி, கஜபதி, நரபதி மன்னர்கள் காலத்தில் குடிகளுக்கு விதித்திருந்த அநியாய வரிகளை நீக்கிவிட அம்மூன்று மன்னாகளுக்கு ஏராளமான பொருளைக் கொடுத்துப் பெற்ற மஹா நாட்டுக் கட்டுப்பாட்டு சாசனங்களாம்

மூன்றுவது சாசனம், அப்போது டில்லியில் சக்கிர வர்த்தியாக இருந்த அலிங்கர்பாதுஷா இடம்போய் மேல்கண்ட முதலிரண்டு சாசனங்களை ஊர்ஜிதமாக்கி, ஷெ பாதுஷாவர்களால் பற்மாணுப்பெற்றது, இப்படி ஊர்ஜிதமாக்கிய காலம் ஸ்ரீ கிருஷ்ணதேவ ராயலு ஆளுகைக்கு முன்பாம். அதாவது அவர் தமையனுர் வீரநரசிம்ஹலு ராயலு காலத்திலாம். அச்சாசனங்களுண்டான இரண்டு மூன்று வருஷங்களுக்குபிறகு, அதாவது சகாப்தம் 1431-1432ஹும் ஸ்ரீ வீரசிம்ஹ ராயலு பரமபதமடைந்தார். அவருக்குப்பிறகு நரபதியாக சிங்காசனமேறிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயலு மஹாவீர பிரதாபஜய சீலராகி சகாப்தம் 1442ஹும் “மூருராயாகண்ட” அதாவது அசுவபதி (மகம்மது அரசர்,) கஜபதிமுதலான மூன்று மன்னர்களையும் ஜயித்தவர்என்ற பிருதைப்பெறறுர். இப்படிப்பட்ட மஹாசக்கிரவர்த்தியால் கொண்டாடப்பெற்ற ஸ்ரீ இராயலு பாஷ்கரமந்திரி செய்வித்துக் கொடுத்த சாசனங்களில், முதல் சாசனம் (சகாப்தம் 1428ஹும ஒரு ஏர்ரா செட்டியாரிட மிருந்து, ஒரு பூமியின் விவஹார காலத்தில் வெளியாகியதாக, மசூலி பட்டணத்தில் வெளியாகிய “புருஷார்த்தபிரதாயினி யினுல் வெளிவந்தது. மூன்றுவது சாசனம் கோதாவரி தீரத்தில் வசிக்கும் அந்த இராயலு பாஷ்கரமந்திரியார் சந்ததிகளிடம் இருந்து ஒருவிவாஹார காலத்தில் வெளியாகியது.

அந்த முதல் சாசனத்தின் நகலை இதனடியிற்காண்க.

మొదటిశాసనము.

“ఎఱ్ఱంశెట్టి మేరాపాత్రుడు, వలదు (అనగాతండ్రిపేరు) యొళిజేటి శ్రీగవర” అర్య-గుండవర ప్రపద్మనవరాత్రజగదేవుకం శెంజేటి అశ్వపతి, గజపతి, నరపతి, మూడు సింహాసనాల రాజులున్న దేశాలలో నడిపించుచున్న పన్నులు, వర్ణాశ్రమ ధర్మాల కల్లాపన్నులు.

౧. గోవులకు తోకరూకలుపన్ను, ౨. బ్రాహ్మణులకు బొట్లపన్ను, 3. తలవెంట్రుక స్త్రీలకు వర్ణాశ్రమధర్మాలపన్ను, ౪ ఋతువులపన్ను, ౫ స్తనములపన్ను ౬ శుభశోభనాలకుపన్ను, ౭ సమస్తవర్ణాశ్రమ ధర్మారవారికిపన్ను.

ఈప్రకారముగా నారాజులు పన్నులు పుచ్చుకొందురు. ఈ పన్నులపట్టిప్రజలను పుట్టించిన పరమేశ్వరునకు మహాఘోషచేస్తును కష్టపడుతూవుండిరి. ఆతరువాతను యెఱ్ఱంశెట్టి మేరాపాత్రుడన్న అధ్యుడు పరమేశ్వరుని వరప్రసాదితుడై యీ ప్రజలు పడే నిర్బంధముఁజూచి పరమేశ్వరుంగూర్చి తపస్సుచేసెను. పరమేశ్వరుడు ప్రత్యక్షమై మెచ్చితి అడుగుమనెను. ఆ తర్వాత మేరాపాత్రుడు అడిగినమాట:-స్వామీ! పరమేశ్వరా! జగద్రక్షకా! జగత్తుయందున్న నరులు యీ పన్నులచేత కష్టపడుచున్నారు. ఈ ప్రజల అపద నివారణచేసి యేలాగున సంరక్షణచేస్తావు అనెను. అపుడు పరమేశ్వరుడన్నమాట- నీవు అడుగడున నిక్షేపం యిస్తిని. అని పరమేశ్వరుడు వరమిచ్చెను. అంతట మేరాపాత్రుడు రాయని భాస్కరన్నను అన్నమాట. నీవు ముగ్గురు రాజుల సముఖానకు బోయి, దేశాల ప్రజలకు పన్నులు లేకుండ మాపు చెయ్యమని అడుగుము. తరువాత రాజులు యేమి సెలవిస్తున్నారో ఆయుత్తరాలు గ్రహించి, యీ పన్నులు తీసివేయువర కెంత ఆడిగినాగానీ నీవు వప్పుకొని సెలవుపుచ్చుకొని వత్తువని చెప్పిపంపెను.

ఆలాగుననే భాస్కరన్న ముగ్గురు రాజుల సముఖానకును తర్లివెళ్లెను. రాజుల దర్శనమైనతరువాత దేవర దేశాలలోనున్న ప్రజలు పన్నులచేతను మహా కష్టపడుచున్నారు మాపుచేయవలెనని అడిగెను. ఆరాజులు సెలవిచ్చిన యుత్తరాలు-నాలుగు యేనుగులపాడవు అర్థం యిచ్చితేనేకాని యీపన్నులు మాపుచేయలేమనిరి. భాస్కరన్న అన్నయుత్తరములు. మీరు రాజులు ఆడి తప్పరాదు. మీరు సెలవుయిచ్చిన ఫుత్తరం అట్లే నిలుపుడు. నిలిపి పన్నులు మాపుచేయవలెనని భాస్కరన్న ఆనెను, రాజులు సెలవిచ్చిన యుత్తరములు నాలుగు యేనుగులు పాడుగునా యిస్తారా అని రాజులు అడిగిరి. దేవరా! తెస్తున్నామని ఒప్పెను. ఒప్పి రాజులచేత సెలవుపుచ్చుకొని, మేరాపాత్రుని భాస్కరన్నకలుసుకొని ఆరాజులన్న యుత్తరములు చెప్పెను. సంతోషపడి ఆలాగే నాలుగుయేనుగులుపొడవున అర్థం యిస్తున్నామని యిద్దరుకూడి రాజుల దర్శనములకు తరలి వెళ్లిరి. రాజుల దర్శనము అయితేరాజులుఅన్నమాటలు. దేశాలపన్నులు మాపుచేయించుమనినాలుగేనుగులపొడుగునఅర్థముయిస్తున్నామనిఒప్పితిరి. తెమ్మనిఅడిగిరి. ఆలాగుననే యీఅర్థముయిచ్చేటందుకుఉప్పర్లనుపిలుపించుమనిఅనిరి. ఆలాగుననేపిలిపించినతరువాత మేరాపాత్రునకు పరమేశ్వరుని వరమున్నదిగనుక పన్రెండు అడుగుల

జేనసుకొల్చి త్రవ్వమనెను. అపుడు రాజులు సంతోషపడి మెచ్చి అడుగుమనిరి. అప్రడు మేరాపాత్రుడన్నమాట- దేవరా మెప్పని యెంచి యీ పన్నులు మాఫుచేయండి అనెను. వారన్నమాట మాబాగనిరి. ఆతరువాత యేబదియారు దేశాలవారిని పిలిపించి సమూహాలు అంతాకూడి నాల్గురాజ్యాలలోను యీపన్నులు యెవరూ తలపెట్టరు. తలపెట్టిరా, శిరస్సుసహస్రవక్కలై పోదురని సభ శాపముపెట్టి, సూర్యచంద్రాదులు కలయంతకాలమును, ఆకాశవాణి, భూదేవతాసాక్ష్యముగాను శాపముపెట్టి నాలుగు రాజ్యములయందున, నాల్గు శాసనాలువేసి ముగ్గురు రాజులున్ను యెజ్జింశెట్టి మేరాపాత్రుడున్ను, రాయనమంత్రి భాస్కరన్నగారు వీరలంతాను సమ్మతమై! నాలుగు రాజ్యములకు నాలుగు శాసనములు పంపించిరి. పంపించినతరువాత దేవరా మాకు మెప్పు సెలవీయుమని అడుగగా నడుగమనిరి. మూడు సింహాసనములున్ను బలిజె సింహాసనము మాకిమ్మని సెలవు అడిగెను. అడుగగానే అరాజులు సంతోషపడి, పరమేశ్వరుని వరప్రసాది, దొడ్డవాడని సంతోషముచేత సింహాసనము తెప్పించి, తమతో సమానముగా సింహాసనము వేయించి, సింహాసనముమీద గూర్చుండబెట్టి, యేబదియారుదేశములవారిచేతను మ్రొక్కవేయించి సకల బహుమానములు చేయించి, అప్రడు యేబది యారు దేశములకు దేశాహీ అని పచ్చలపల్లకీపెట్టి, జులుమతీ గుఱ్ఱములు యిచ్చితాళి చౌకట్లిచ్చి, విన్నకోట మహల్ మొఖాసాయిచ్చి, అన్ని కులాచార ధర్మాలవారును యేకులానికాకులము హద్దు తప్పకుండా వుంచుమని ముగ్గురురాజులున్ను, సమస్తమైన వర్ణాశ్రమధర్మములవారున్ను సెలవిచ్చిరి. కులాచారధర్మంబులో మహానాటవారేబదియారు దేశాలవారున్ను మాకు నడిపించిన హద్దులు.

(౧) పెండ్లిండ్లకు దేవునికట్నము ౧ రూక, సమయమంత్రి కట్నము ౧ రూక, ఒజ్జలుకట్నము ౧ రూక, బట్టుకట్టము ౧ రూక, మంగలివానికట్నము ౧ రూక, (౨) పంటపుట్టికంచాలు, గోనెలకుహార్బాజు (ప్రతిదానికిన్ని) కుగోనె ౧కి ౧ కాసు:

ఈపద్ధతిగాను సూర్యచంద్రులు కలయంతకాలము, ఆకాశవాణి, భూదేవత సాక్షిగాను నిరంతరము మీకు నడిపింతుము. లేదన్నవాడు కాశీలో గోహత్య పాతకము చేసినట్లే, సర్వనీమాధికార్యాలు తప్పినట్లే, వాని శిరస్సు సహస్రవక్కలైపోవును. అని మహానాటివారు శాపముపెట్టిరి. అంతకు హద్దుతప్పి పుచ్చుకున్నవారి వంశము నిర్వంశమై పోదురని మహానాటివారు శాపంపెట్టినారు. యేకులానకు ఆకులం హద్దు తప్పకుండా నడిపించేరు. ఇందులో నేకులము హద్దుతప్పినది చినా ఆకులానికి ౧ కులంతప్పు, ౨ మహానాటితప్పు, 3 దివాణ తప్పు, ౪ దేవునితప్పు, ఈ నాలుగుతప్పులు పుచ్చుకో

నేది; ఇందులో నేకులం పరామర్శ చేయకపోయినా ఆదోషం మీది అని మహానాటి వారు సెలవిచ్చినారు.

ఇందుకు సాక్షులు.

౧ పూర్వలింగ, ౨ నారదలింగ, ౩ మార్కండేయులు, ౪ కవిసర్వాంచనులు, రాయనిమంత్రి భాస్కరన్న గారు వ్రాసిన ఛప్పన్న దేశాలకు నిర్ణయపత్రిక.

శ్రీ పరమేశ్వరస్వామి, శాలివాహనశక వర్షము ౧౪౨౭ అక్షయ సంవత్సరం అని

இந்த முதல் சாசனத்தின் கருத்து.

எர்ரம்ம செட்டி, மோரபாத்திரன், எலிஜெட்டி ஸ்ரீகவுரி அர்காகுண்ட வரபிரபருத்தன, வாரத்த ஜகதேவகுலசெஞ் செட்டி அசுவபதி, கஜபதி, நரபதி என்னும் மூன்று சிங்காசனாதிபதிகளும் குடிகளுக்கு விதித்திருக்கும் வரிகளை நீக்கியதைப்பற்றியும், வர்ணாசிரம தருமங்களைப் பற்றியும் கொடுத்தசாசனம்.

அப்போது (1வது) பசுக்களுக்கு வால்வரி (2) பிராமணருக்குதிலகம், பொட்டுவரி (3) தலையில் மயிர்வைத்திருக்கும் பெண்களுக்குவரி (4) ருதுகால வரி (5) சுபசோபனங்களுக்கு வரியாக எல்லாஜாதி வருணத்தாருக்கும் வரி விதித்து வசூல் செய்துவந்ததில்; குடிகள் வருந்திவருகிற பரிதாபத்தைப் பார்த்து, எர்ரம்ம செட்டி, மோரபாத்திரன் என்னும் பலிஜன் பரமேசுவரனை நோக்கி, குடிகளுடைய இக்கஷ்டங்களை நீக்கித்தரவேண்டுமென்று பிரார்த்திக்க; பரமேசுவரன் பிரத்தியக்ஷமாகி, நீவிரும்பும் வரம்யாது என்று கேட்க, அம்மோராபாத்திரன், சுவாமி! குடிகள் அநியாயமான வரிகளை கொடுக்கச் சக்திபற்று தவிக்கிறார்கள், அவர்களுடைய இவ்வரி கஷ்டங்களை நீக்கிவைக்கும்படியான திரவியசகாயம் செய்விக்கவேண்டுமென, அவ்வீசனும் "அப்படியே தருவோமென்று" வாக்களித்து மறைந்தனர். பிறகு எர்ரம்மசெட்டி, மோரபாத்திரன் உடனே, இராயனு பாஷ்கர மந்திரியிடம்போய், தமக்குக் கடவுளால் கிடைத்த வரபிரசாதத்தைச் சொல்லியும், குடிகளுடைய வரிகளை நீக்கிவிட, மூன்றுமன்னர்களிடம் இருவருமாகப்போய் முறையிட்டு, அதற்கு அவர்கள்சொல்லும் உத்தரவுகளை தெரிந்து வரலாமென்று சொல்லி (அம்மந்திரியை அழைத்துக்கொண்டு) அந்த எர்ரம்ம செட்டியாரும், இராயனு பாஷ்கரமந்திரியுமாக அம்மூன்றுமன்னர்களிடம்போய்குடிகளுடைய கஷ்டநிஷ்டூரங்களைச்சொல்லி, அவர்களுக்கு விதித்திருக்கும் அநியாயவரிகளை நீக்கவேண்டுமென்று வேண்ட; அம்மன்னர்கள் கேட்டு, நான்குயானைகள்உயரமுள்ளபொன்னை கொடுத்தால் மாத்திரம் வரிகளை நீக்கப்படுமென்று சொல்ல; அவ்விருவரும் சம்மதித்து அப்படிக்கேட்டப் பொருளை எடுத்துக்கொண்டு வரசபஸ்தான கூலி வேலைக்காரர்களைக் கூட்டிக்கொண்டுவந்து, வழியில் ஒருகாட்டில் 12 சதுரடி விஸ்தீரணமுள்ள ஒரு குழியை வெட்டும்படி சொல்ல; பரமேசுவரனுடைய வரத்தினால் அங்கு பசும்பொன்திரவியங்கள் ஏராளமாக இருக்க; அரசர்கள் அறிந்து, அந்த மோராபாத்திரனுடைய வரபிரசாதத்துக்கு மெச்சிக்கொண்டு, 56 தேச ராஜர்களை தரிவித்தும், அவர்கள் முன்னிலையில் இனிமேல்கண்ட வரிகளை குடிகளுக்கு எவர்களுக்கும் விதிக்கக் கூடாதென்று வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டும், அப்போதிருந்த அசுவபதி கஜபதி நரபதி என்னும் பெயரால் இத்தேசத்தையாண்ட மூன்று இராஜ்ய சிங்காசனங்களோடு பலிஜசிங்காசனம் ஒன்றை நியமித்தும்; அவரைத் தமக்குச் சமானமான சிங்காசனத்தில்உட்காரவைத்தும்,

"தேசாஹி" தேச ஜனங்களுடைய ஜாதிகட்டுப்பாடுகளை விசாரித்துநீதிசெலுத்தும் தலைவர் என்ற பட்டத்தைக்கொடுத்தும், 56 தேசராஜர்களால் வந்தன வழிபாடுகளையும், மரியாதைகளையும் செய்வித்தும்,பச்சப்பல்லக்கு,ஜாலிமதிகுதிரை முதலான பிருதுகளையும், வின்னுகொண்ட மஹாலையும் கொடுத்தும்; சகலஜாதியாருடைய குலாசார தருமங்களையும் பற்றி விசாரணை செய்து நீதிசெலுத்தி, தேச க்ஷேமத்தை விருத்தியாக்கும்படி 56 தேசராஜர்கள் சமூகத்தார் அறிய நியமித்தார்கள். அப்படி நியமித்த அந்த தேசாஹி சிரேஷ்டிகள் குடிகளிடம் பெற்றுக் கொளள் வேண்டிய முக்கிய வரிகளாவன.

(1வது) கலியாண வீட்டில் தேவகட்டளை ஒரு பணம், சமயமந்திரிக் கட்டளை ஒருபணம். ஒஜ்ஜலு கட்டளை ஒருபணம், பட்டு கட்டளை ஒருபணம், நாசவன் கட்டளை ஒருபணமாகவும்.

(2வது) பயிர் புண்டிகுஞ்சாலு, கோணிகளுக்கு ஹார்பாஜா ஒரு காசியாகவும், இம்மாதிரியாக சூரிய சந்திராதி காலம்வரையிலும்; ஆகாசவாணி, பூதேவி அறிய நிரந்தர சாசனம் கொடுத்தோம். இப்படி கொடுத்த சாசனத்தின்படி எவராவது ஷை வரிகளைக் கொடாவிட்டால், பசுவைக்கொன்ற பாவத்தில் போகக்கடவரென்றும்; இதற்கு அதிகமானவரி வாங்கினால் அவர்வமிச நாசமாகிவிடுமென்றும் சபித்திருப்பதோடு, அந்தந்தகுலத்தார், தம்தம்குல தருமங்களை தப்பாமல் அநுஷ்டித்து வரவேண்டுமென்றும், எவர் அப்படி குலாச்சார தருமங்களை விட்டு பிசகான வழிகளிற் பிரவேசிக்கிறார்களோ அவர்களிடம் (1) குலத்தின் தப்புகுற்றம் (2) மஹாநாட்டார் தப்பு (3) திவாணு தப்பு (4) தேவதாதப்பு ஆகிய நான்குவித தப்புகுற்ற அபராதங்களை தேசாஹி சிரேஷ்டிகள் பெற்றுக் கொள்ளுகிறதென்றும், அப்படி ஷை குற்ற அபராதங்களை வாங்கதவரினால் அந்தபாவம் தேசாஹியைச்சார்ந்ததென்றும் மஹாநாட்டார் முன்னிலையிற் சொல்லி தீர்மானித்த சாசனம்— இதற்கு சாக்ஷிகள்

(1) பூர்வலிங்கம் (2) நாரதலிங்கம் (3) மார்க்கண்டேயலு (4) காரியசர்வாஞ்சனலு

இப்படிக்கு இராயலு பாஷகரமந்திரியார் எழுதிவைத்த சப்பன்ன தேசங்களுக்கு நிர்ணயபத்திரிகை, ஸ்ரீ பரமேசுவர சுவாமி,

சாலிவாகன சகாப்தம் 1428, அக்ஷயஹூ்ம் எழுதினது என்றுமாம்.

రెండవ శాసనము.

స్వస్తి శ్రీ విజయాభ్యుదయ శాలివాహనశక వర్షములు ౧౪౨౮ లిఖితం

౧ బ్రహ్మ, ౨ క్షత్రియ, ౩ వైశ్య, ౪ శూద్ర, ౫ వ్యవహారక, ౬ గోరక్షక, ౭ కుంభకారక, ౮ శిల్పికార, ౯ పంచాణ, ౧౦ తంతువాయ, ౧౧ తిలఘాతక, ౧౨ క్షౌరక, ౧౩ రజక, ౧౪ వస్త్రచ్ఛేదక, ౧౫ చిత్రకారక, ౧౬ లుబ్ధక, ౧౭ భండాల, ౧౮ మతంగజాతులగు అష్టాదశవర్ణంబులవారున్ను యేబదియారు దేశాలలోనున్న మంత్రి మహానాడున్ను అశ్వపతి, నరపతి, గజపతి మూడుసింహాసనాలవారున్ను నరపతి సింహాసనమున (కొండవీటిలో) గూర్చుండి యేబదియారు దేశాలమంత్రి మహానాటిని పిలుపించుకొని కులారహద్దులు నిర్ణయముచేసిరి.

౧ బ్రాహ్మణులకు పెండ్లిండ్లకు	అందలములు.	పల్లకీలు.	తురంగములు
౨ క్షత్రియుల డిటో	డిటో	డిటో	డిటో
3 వైశ్యుల డిటో	...	డిటో	...

౪ శూద్రుల పెండ్లిండ్లకు పైవిధముగానే నడచును.

ఈ శూద్రజాతుల వ్యవహారమే యితరజాతులకు నిర్ణయము.

౫ పల్లెవారి పెండ్లిండ్లకు	పల్లకీలు.	తురంగములు.
౬ ఆరవకులం గొల్లవారి పెండ్లిండ్లకు	డిటో	డిటో
౭ కుమ్మరి గుండయ్య సంతతికి	డిటో	డిటో
౮ పంచాణం ఆయి సువిధములవారికి దేవతలు, ఋషులు పెట్టిన శాపమున్నందున నొప్పలేదు.	లేదు	లేదు
౯ సాలెవారి పెండ్లిండ్లకు	పల్లకీలు.	తురంగములు.
౧౦ తెలుకులవారి పెండ్లిండ్లకు	డిటో	డిటో
౧౧ చాకలి ౧౨ మంగలి } వారి పెండ్లిండ్లకు	లేదు	డిటో
౧3 భిక్షజంగము డిటో	లేదు	డిటో
౧౪ చిత్రకారుల శోభనాలకు నరపతి యిచ్చిన పంచవన్నెలు, మహానాటివారిచ్చిన తెల్లగుఱ్ఱము, పేటీరుమాలు, సుల్తాను బాసికము గలదు.	లేదు	డిటో
౧౫ ఎఱుకులవారి పెండ్లిండ్లకు వాహనములేదు.	లేదు	డిటో
౧౬ మాలవాండ్ల పెండ్లిండ్లకు తురంగము.	లేదు	తురంగములు.

౧౭ మాదిగవాండ్ర పెండ్లిండ్లకు యముడుయొక్క వాహనముకలదు. మూడుకొంగుల పుల్లడ కలదు. మూడు స్తంభముల పందిలి కలదు. బొమ్మశపెటకలదు. ఊరికి ఉత్తరముపైపున నూరేగింపుకలదు. భూమిమీద అవిరేణి కలదు.

ఈ పద్ధతి పదునెనిమిది జాతులలో జన్మమైనవారికల్లా కలదు. ఈప్రకారాన యీహద్దులు మహానాటిలో ముగ్గురు రాజులున్న యేబదియారుదేశాలను మంత్రీమహానాడుకులాలహద్దులు తీర్చిన తీరున యీప్రకారాన వొట్లు నీమకాలతోచేసిన హద్దులు. యీ హద్దులుతప్పి యేదేశమందు యెవరునడిచినా ఆ దేశానకు అనర్థంవచ్చునని

இரண்டாவது சாசனத்தின்கருத்து.

சுவஸ்தி ஸ்ரீ விஜயாப்துய சாலிவாகனசக௵ 1428௵ எழுதியது.

---

(1) பிரம்ம, (2) க்ஷத்திரிய (3) வைசிய (4) சூத்திர (5) விவஹாரிக (6) கோரக்ஷக (7) கும்பகாரக (8) சில்பிகார (9) பஞ்சாண (10) தந்துவாய (11) திலகாதக (12) க்ஷவரக (13) ரஜக (14) வஸ்திர க்ஷேதக (15) சித்திரகாரக (16) ஔப்தக (17) சண்டால (18) மதாங்காதி ஜாதிகளுக்கு அஷ்டாதசவர்ணத்தாரும், 56 தேசங்களிலுள்ள மந்திர மஹா நாட்டாரும், அசுவபதி, கஜபதி நரபதியாகிய மூனறு சிங்காசன பதிகளும், நரபதி சிங்காசானம் கொண்ட வீட்டிலே இருக்கையில், 56 தேசாபதிகளையும் அழைபித்து, அவர்களுடைய முன்னிலையில் குலாசார கட்டுப்பாடுகளை நியமித்த விவரமெப்படி எனில்.—

1–பிராமணர்	கலியாணவீட்டில்,	அறதலமுலு,	பல்லக்கு,	குதிரை.
2-க்ஷத்திரியர்	ஷை	ஷை	ஷை	ஷை
3-வைசியர்	ஷை	ஷை	ஷை	ஷை
4-சூத்திரர்	ஷை	ஷை	ஷை	ஷை
5-பள்ளர்	ஷை	ஷை	ஷை	ஷை
6-ஆரவகுல கொல்லருக்கு	ஷை	ஷை	ஷை	ஷை
7-குசலகுண்டயசந்ததிக்கு	ஷை	ஷை	ஷை	ஷை

8-பஞ்சாணம்5வகுப்பாருக்கு தேவசாபத்தினால் பல்லக்கு முதலியன கிடையா.

9-சாலேவாருக்கு ஷை

10-தெலுங்குலவாருக்கு ஷை

11-12-வண்ணான்-நாசுவருக்கு ஷெ

13-பிச்சா ஜங்கமருக்கு ஷை

14-சித்திரகாருலுக்கு நரபதி கொடுத்த பஞ்ச வெண்ணலு, மஹாநாட்டார் கொடுத்த வெள்ளைக் குதிரை, பேட்டை உருமாலை,சுல்தான் பாசிங்கம் உண்டு.

15-எருகல வாருக்கு, வாஹனம் கிடையாது.

16-பறையர் கலியாணத்துக்கு, குதிரைகள்.

17-சக்கிலி கலியாணத்துக்கு எருமை வாகனம், மூன்று முந்தாணி புல்லடம் 3கம்பபந்தல், மார்த்தப்பட்டை, ஊருக்கு வடக்கே மெரவணை, நிலப்பாவாடை உண்டு. இந்த பிரகாரம் இந்த18 ஜாதியாருடைய மரியாதை பத்ததிகளை மூன்று சக்கிரவர்த்திகளும், 56 தேசாதி பதிகளும், மஹாநாட்டாரும் தீர்மானித்தபடி நடந்துக் கொள்ள வேண்டும். இதற்கு விரோதமாக நடக்கப்பட்ட தேசத்தாருக்கு அனர்த்தம் வரும் என்றும்.

మూండవ శాసనము. (ఇదే ఫర్మానాయనంబడు)

మహారాజశ్రీ అలంగరు పాదుషావారు మంత్రిమహానాటివారికి దయచేయించిన ఫర్మానా.

స్వస్తి సమస్త త్రిభువన విపులజ్ఞాన వీరవీరావతారులున్ను, గరుడధ్వజ, సింహధ్వజ, బిరుదాంకమాలికా ప్రశస్తధారులున్ను, దేశింగురాయరాజ్యస్థాపనా చార్యులున్ను, అంగ వంగ కళింగ కాశ్మీర కాంభోజాది ఛప్పన్న దేశాధీశులును, వైడూర్య గోమేధిక పుష్యరాగాది నవరత్నాధికారులున్ను, హరి, హర గురుభక్తి పరాయణులున్ను, పరనారీ సహోదరులున్ను, మాళిపట్టభద్రులున్ను, అయిన స్వస్తి సమస్తకల నామాంక మాకొదప్రశస్తధారులున్ను, విప్రముఖ్యులైన రాయనిమంత్రిభాస్కరులు మొదలయినసాలుమూలసమయ పెక్కండ్రున్ను, శ్రీ మహాకళ్యాణధాపులున్నుఅయిన మంత్రి మహానాటివారికి దయచేయించిన పట్టా పాదుషాఫర్మానా.

అలంగరు పాదుషా సౌరాష్ట్ర దుర్గాలు సాధించి అశ్వపతి, నరపతి, గజపతి ముగ్గురు రాజులున్ను, సౌరాష్ట్ర దుర్గాలవారున్ను, ఛప్పన్న దేశాధీశ్వరులున్ను, ఈ దేశాలమంత్రీమహానాడున్ను, ముప్పదియిద్దరు సరదారులున్ను, అంతాగోలకొండలోపాదుషాగారు కూర్చుని, సమస్తమైనవారున్ను కొలువుతీర్చియుండగా దేశాలుఅన్నీ సాధించి వస్తిమిగదా? దేశాలవారికి గెలుపు తాంబూలము యిప్పించవలెను. సౌరాష్ట్ర దుర్గాలవారున్ను, ఛప్పన్న దేశాలవారున్ను, ముప్పదియిద్దరు సరదార్లున్నురావలసినదిగనుక,వీరిని సముఖమునకు బిలుపించుమని ఆజ్ఞయిస్తే, సమస్తమైనటు వంటివారు సముఖమునకువచ్చి, తాంబూలమందక సమయము కట్టినందువల్ల, అందులోపగు మంత్రుల బిలుపించి పాదుషాగారు అడిగిన యుత్తరము. మిమ్మున పిలుపిస్తేయిందుపచ్చి తాంబూలము పుచ్చుకోక సమయం కట్టిన కారణమేమని అడిగితే,మంత్రులు విన్నపము చేసినమాట:— సౌరాష్ట్ర దుర్గాలవారు (౫౬) యేబదియారు దేశాలమంత్రి మహానాడున్ను (౩౨) ముప్పదియిద్దరు సరదార్లున్ను యేకముగా పాదుషాగారితో విన్నపము చేయమన్నయుత్తరం.

మైగాలపు బెజ్జినీడు, కనకాల నల్లాపాత్రుడున్ను, కంచికామాక్షమ్మవద్ద వరప్రసాదులు, మహా సత్యసంపన్నులున్ను, యితని సత్యమువలన అమ్మవారు ప్రసన్న మగుచున్నది. మంత్రిభాస్కరుడు, బెజ్జినీడు, సమయముకట్టిన మహానాటివారు అంతా కూడుదామని కూర్చుండియున్నవారు. వారిని పిలిపిస్తేనేగాని మరియెవ్వరూ తాంబూలము పట్టరు. వారు సత్యసంధులైన, వరప్రసాదులు, అతనితండ్రి మైగాల పృథ్వీశెట్టి, అతని తాత బిజ్జినీడు, వర్ణాశ్రమములయొక్క పద్ధతులు యెక్కువ తక్కువలు నడుస్తూ వున్నారనిన్ని—

౧. చాపకుపన్ను, ౨. కుంచములకుపన్ను, ౩. గంటాలకుపన్ను, ౪. బూడిదెకట్నము. యిటువంటివారికి పన్నుకట్టి పుచ్చుకుంటూ యున్నారున్ను ఆటువంట

అప్రతిష్ఠలు దేశాలవెంబడి చాలా వుదాసీనము ఆక్షేపణలు పొందుతూవున్నారు. ఈపద్ధతి మానిపించవలసినదనిన్ని సౌరాష్ట్రదుర్గాలవారు, ఛప్పన్న దేశాలవారు, మంత్రిమహానాటి వారు, యీ యుదాసీనపుపన్నులు పుచ్చుకోకుండా విడిచి బక్షాయించుమని మంత్రిమహానాటివారు యేలినవారితో విన్నపముచేస్తారు. అని మంత్రులువిన్నపముచేస్తేపాదుషాగారు మాకు వచ్చే అర్థము చాలా నష్టము వస్తుంది. అని సెలవుయిస్తే అప్పుడు మంత్రి భాస్కరుడు, జెజ్జనీడు, కనకాల నల్లాపాత్రుడు, మొదలునుండి పాదుషాగారితో విన్నపములాగున సెలవు జయముచేయిస్తే దేశాలవెంబడి సంతలు సాగించి సాయరు కట్టించి దివాణముకు అర్థముక్క్రీచేస్తాము. అన్నపిమ్మట అశ్వపతి, గజపతి, నరపతి ముగ్గురు రాజులున్న్ను సౌరాష్ట్రదుర్గాలవారున్న్ను, ఛప్పన్న దేశాలవారున్న్ను, సరదారులున్న్ను మంత్రిమహానాడున్న్ను సమ్మతించినతరువాత జెజ్జనీడుని నల్లాపాత్రుని పాదుషాగారు వీరు అడుగునట్లు జరిగిస్తాముగదా మాకు నజరు యేమి యిస్తారు అనిఅడిగితే, అడిగిన నజరుకు అర్థము దేశాలవెంబడిని పంపిణీచేసినపక్షముకు కీర్తిస్వరూపములు భూమియందు ప్రసిద్ధిలోనికి రావలెనని, కంచి కామాక్షమ్మకు ప్రార్థనచేసి కామాక్షమ్మ వరప్రసాదియైన జెజ్జనీడును అమ్మవారితో మనవిచేసిన యుత్తరవు. పాదుషాగారు అడిగినచోట కల్ల కాకుండ మహాలుచుట్టూ అడుగుతప్పించి అడుగునకు (౧౨) పండ్రెండు కణజాలద్రవ్యము చూపించవలసినదని కోరుకుంటే, కోరిన ప్రకారము కామాక్షమ్మ వరమిచ్చినతరువాత, పాదుషాగారిని జెజ్జనీడు మహాలుచుట్టూ త్రిప్పించుకొమ్మని మనవిచేసెను. ఆప్రకారము త్రిప్పిస్తే పైనచెప్పినప్రకారము కనబడెను. ఈప్రకారమే యెప్పటికి యిప్పించుమని అడిగితే, కామాక్షమ్మవరము ఆప్రకారము లేదని జెజ్జనీడు చెప్పినతరువాత, సరదారులున్న్ను, సౌరాష్ట్రదుర్గాలవారున్న్ను, ౫౬ (యేబదియారు) దేశాలవారున్న్ను, మంత్రిమహానాటివారున్న్ను, అందరూ యేకవాక్యముగా సమ్మతించినమీదట, అలంగరు పాదుషా సంతోషించి అందలము, పల్లకీ, చక్రవాళపు గుబ్బగొడుగు, అరిగె, ఆలవట్టము, సురటీ, నింజామర, వేత్రమాలు, జనపశంకరబిరుదు, మొదలగు పండ్రెండు (౧౨) బిరుదులు, భేరీమృదంగవాద్యములతో ఛప్పన్న దేశాలయందున్న్ను నిండుమ్రోవ, బాకాలతోటిట్టుసుఖాన పెత్తనము నడిపించుమని వర్ణాలవారివల్ల గస్తితేజోపార్జనములు, పుత్రపౌత్ర పారంపర్యం అనుభవిస్తూ, బ్రహ్మణ క్షత్రియ వైశ్య శూద్రులు మొదలగు వర్ణాలతో రాయసమంత్రిభాస్కరుడు జెజ్జనీడుతో చెప్పిన యుత్తరము. మిగిలిన పెక్కుండ్రుజాతులలోనున్న్ను, యేమి తగువున్నా సీవేతేరుగడచేయవలసినది. ముందరగంధతాంబూలము మహానాటివారిలో నడిపించుకొనేది, కులాలలో నేమితప్పున్నా, ద్రోహమున్నా తప్పుపుచ్చుకునేది వారిని నివారించి తేరుగడచేసేది అని సమస్తమైనవారి యనుమతిని తాంబూలము పాదుషాగారు యిచ్చినత

రువాత, ముప్పదియిద్దరు సరదార్లున్ను గుణ్ణము కోకలుయిస్తే పుచ్చుకున్నారు. రాష్ట్రిదుర్గాలవారికె తాంబూలము యిప్పిస్తావున్నాము. ఏదుర్గానికి మునుపుగావిలియా తాంబూలము యివ్వవలయునని అడిగితే కొత్తపల్లి (కొండపల్లీ కావచ్చును) దుర్గానకు ముందుగావిలి యా తాంబూలము యివ్వవలయునని చెప్పినతర్వాత, బట్టుకవిరాజు పాదుషాగారికి ఖూనీసలాముచేసి ఆదినియోగియైన రాయనిమంత్రి భాస్కరునితో అడిగిన యుత్తరం నీవు అయితే ఆదినియోగివైతేని యీ పంచాణమువారు, సంకును, దాగటిలి, నాగటిమీదను సుత్తిపని చేస్తావున్నారుగనుక యిదిసమయము. పదునెనిమిదిజాతులవారిలో అవుదురో కారో అని అడిగినపిమ్మట విని పంచాణమువారు మహానాటివారితోఁ దిరుగబాటుగా చెప్పిన యుత్తరము. మేము కులాలలోనికి విశ్వకర్మ సంతతివారము. భూలోకమందు కాడి, మేడి, వస్తువాహనాదులుచేయక మీకు జరుగవుగదా, మేమున్న చోటికి మీరు రావలయునుగాని, మీరున్న చోటికి మేము రావడములేదు. అని తిరస్కరించి యుత్తరముచెప్పినతరువాత, పాదుషాగారికి కోపమువచ్చి పంచాణమువారు దేవతలశాపముచేత సభాయోగ్యులుకారనిశాపంయిచ్చిరి. మహానాటివారంతా చెప్పిన యుత్తరము. నాడు అగస్త్యమహామునివారి శాపముచొప్పన మిమ్మును కులములలో కలియనిచ్చినారుకారు గనుక, నేడున్ను మీరు మహానాటివారితో గర్వించియుత్తరముచెప్పినారు, గనుక మాసమయములో కలియనివ్వలేదు. సరిగదా మీరు మీమీకులాలలో నొకరినొకరు పొందక ద్వంద్వయుద్ధముగా అఘోరింతురు. అని మహానాటివారు శాపము పెట్టిరి. కామాక్షమ్మ వరప్రసాదమువలన వచ్చినశాపముచేతనున్ను, కులభేదములాయెను. నాడు కలియకుండా చేసిన హేతువుచేతను ఇప్పుడున్ను కలియనియ్యవలసిన ప్రసక్తిలేదు. అనిన మంత్రిభాస్కరుని బట్టుకవిరాజు బహుజనసింహాసనస్థుడవోయి, భయాకులాధీశ్వరుడవోయి, మహానాటికి కీర్తితెచ్చినవాడవోయి, జయావిజయీభవ అని పాదుషాగారి సమ్ముఖమందు కైవారముచేసెను. తరువాతముగ్గురు రాజులు, సౌరాష్ట్రిదుర్గాలవారు, యేబదియారుదేశాలవారు, ముప్పదియిద్దరు సరదారులున్ను, బెజ్జనీడిని, నల్లామల్లాపాత్రుని విశేషముగాబహుమతీచేసి మెప్పించిరి. తరువాత పాదుషాగారి సముఖమందు సమస్తమైన వర్ణాలవారి వివాహములు మొదలయిన శుభకార్యములయందు బెజ్జనీడు, నల్లామల్లా పాత్రుడు మొదలయిన మహానాటివారి తాంబూలములు కట్నములు యివ్వవలసి నందుకు నిర్ణయించిన పగ్గతుల వైనమున్ను వాహనములు మొదలైనవినడిచేప్రకారమున్ను యీక్రింద వ్రాయడమయినది.

౧. బ్రహ్మక్షత్రియులు రెండువర్ణములవారికి వివాహకాలములయందు పల్లకీలు, తురంగములు మొదలగు సమస్తవాహనములు నడచును.

౨ దేవతెలుకులవాళ్ళకు కపిలమహామునిశాపముచేతను, తిలలయొక్క తైలం తీసినందున అయోగ్యత పట్టినది. వీరు మనువంశజులైన క్షత్రియులు, గనుక వీరికీవివాహకాలములయందు పల్లకీలుమాత్రము నడుచును. మహానాటివారికి తాంబూలముయిచ్చుకోవలసినది.

3. వైశ్యుల పెండ్లిండ్లకు పాలకీలు, తురంగములు నడుచును. వీరు మహానాటివారికి తాంబూలము యిచ్చుకోవలసినది.

౪. శూద్రుల పెండ్లిండ్లకు పాలకీలు, తురంగంబులు మొదలగు వాహనములు నడుచును. ఈశూద్రరత్నంబులుమంత్రులకుసమయమంత్రికట్నముయివ్వవలసినది. ఈశూద్రరత్నంబులు వ్యవహారరీతువున్ను యితరవర్ణాలకుచేసే నిర్ణయము.

౫. సాలీల పెండ్లిండ్లకాలముయందు మూడుకట్లలుతమలపాకులు, సేరుపోకచెక్కలు, రూపాయి కట్నము మహానాటివారికి తాంబూలము యివ్వవలసినది, సాలీలు భావనాఋషిసంతతి గనుక పాలకీలు, తురంగములునడుచును.

౬. కుమ్మరుల పెండ్లిండ్లకాలములయందు మూడుకట్లలఆకులు, సేరు పోకలు ఆరురూపాయిలు మహానాటివారికి తాంబూలము యివ్వవలసినది. కుమ్మరులు శాలివాహనుని సంతతివారు గనుక పాలకీలు నడుచును.

౭. కైకాలవాళ్ళ పెండ్లిండ్లకాలములందు మూడుకట్లల ఆకులు, సేరుపోకలు, ఆరురూపాయలు, కట్నము మహానాటివారికి, ౧ సెల్లామంత్రులకు. యీప్రకారం మహానాటివారికి తాంబూలము యిచ్చుకోవలసినది. కైకాలవాళ్లు షోడచక్రవర్తి సంతతివారుగనుక పల్లకీలు నడుచును.

౮. కరిణీలు (కరిణిబత్తులు) పెండ్లిండ్లకాలమందు మూడుకట్లల ఆకులు, సేరు పోకలు, ఆరురూపాయిలు, మంత్రులకొక సెల్లాయీప్రకారం మహానాటివారికియివ్వవలసినది. కరిణీలు మాండవ్యముని సంతతివారుగనుక పల్లకీలు నడుచును.

౯. గొల్లవాండ్ర పెండ్లిండ్లకు ౧ కట్ట ఆకులు, పావుసేరు పోకలు, రెండు రూపాయిల కట్నము, మహానాటివారికి యివ్వవలసినది. వీళ్లు యాదవ సంతతి గనుక పల్లకీలు నడుచును.

౧౦. నటకులు అనగా బోగమువాండ్రు. పెండ్లిండ్లకాలములయందు తాంబూలము రెండురూపాయిలున్ను కట్నము యివ్వవలసినది. వీళ్లు రంభసంతతి గనుక పాలకీ నడుచును.

౧౧. సానివాళ్ళ పెండ్లిండ్లకాలములముందు తాంబూలము, రెండురూపాయలు కట్నము యివ్వవలసినది. వీళ్లు ఊర్వశి సంతతిగనుక పల్లకీలు నడుచును. నవకోటి సిద్ధులలో యేతప్పులున్నా ఆ తగవులు తీర్చి తప్పులు నిర్ణయించి నేరంకోలది తాంబూలము పుచ్చుకోవలెను.

౧౨. దాసరివాళ్ళ పెండ్లిండ్లకాలములయందు తాంబూలము, అర్ధరూపాయి పుచ్చుకోవలసినది. దాసర్లకు గుఱ్ఱములు నడుచును.

౧౩. ఈడిగవాండ్ర పెండ్లిండ్లకాలములయందు తాంబూలము, అర్ధరూపాయి కట్నము యివ్వవలసినది. వీళ్లు తెలియ మహాముని సంతతివారుగనుక పాలకీనడుచును.

౧౪. గమళ్ళవాళ్ళ పెండ్లిండ్లకాలములయందు మాలవాళ్లువచ్చి గమళ్ళముంది రాలమీద పడి తోరణములు తెంచి కామధేనువు శల్యములు కట్టించి, పందిలిపాకలు అన్నీ విరగకొట్టించి వీధిలోవేసి తగలబెట్టించి వాహనములు విరగగొట్టించి కూడా వేసి కట్టి మహానాటివారి శెలవుప్రకారము నడవక వ్యతిరేకముగా సంచరించినందున వాళ్ళకు వాహనములు మొదలగునవి జరుగవు.

౧౫. మంగలవాండ్ర పెండ్లిండ్లకు మహానాటివారికి తాంబూలము, యివ్వవలసినది. వీళ్ళకు గుఱ్ఱములు నడుచును.

౧౬. చాకలవాళ్ళ పెండ్లిండ్ల కాలములయందు మహానాటివారికి తాంబూలము యివ్వవలసినది. వీళ్లకు గుఱ్ఱములు నడుచును.

౧౭. ఎరకలవాళ్ళ పెండ్లిండ్లకాలమందు తాంబూలము, అర్ధరూపాయి యివ్వవలసినది.

౧౮. మేదరవాండ్ల పెండ్లిండ్ల కాలములయందు తాంబూలము, అర్ధరూపాయి యివ్వవలసినది.

౧౯. కొండవాళ్ళు, కోయవాళ్ళు, ఓదులవాళ్ళు యీమూడువర్ణములవాళ్ళు తాంబూలము, అర్ధరూపాయిచొప్పున కట్నము యివ్వవలసినది.

౨౦. శిల్పికారులు, పంచాణమువాళ్లు, యీ ఆయిదువర్ణములవారికి దేవతలనాటి శాపమున్నదిగనుకనున్ను, మహానాటివారి సమయములోనివారు కానందున పాలకీ మొదలయినవి నడువవు. శుభకార్యములు వచ్చినపుడు కొమ్మతోరణము కట్ట కూడదు. మహానాటివారి సమ్మతిని అడుగుకొని దొప్పతోరణము కట్టుకోవలసినది. గోడకు వెల్లవేయ కూడదు, మూడు చెంగులయిల్లడము పట్టవలసినది.

౨౧. మాళవాళ్ళు మొగవాళ్ళ పెండ్లిండ్లకు మహానాటివారికి తాంబూలము, అర్ధరూపాయి కట్నము యివ్వవలసినది. గ్రామములో ఆడపడుచుపెండ్లికి పావలా కట్నము యివ్వవలసినది. వెల్లగుఱ్ఱము, వెల్లగొడుగు, పట్నమునడుమ నాలుగు వీథులు వూరేగడమున్ను గలదు. యిదిగాక మహానాటివారికి సంకురాత్రికట్నము యింటికి మూడేసి కుంచముల వరియులు యివ్వవలసినది.

౨౨. మాదిగవాళ్ళ పెండ్లికి మూడు స్తంభముల పందిరి. బొట్టమోపుగా నొకరాట నిల్పుకునేది. మూడు చెంగుల యుల్లనము పట్టవలసినది. తుడుముతప్పెట్లు దొడ్డికొమ్ము యముండుయొక్క వాహనముకలదు. ఊరికి ఉత్తరమున వూరేగింపు కలదు. ఏడి మూరెడు పసుపులో తడిపిన పసుపుపాత్తి ఉత్తరము, దక్షిణము తూర్పు యిండ్లుకట్టరాదు పడమరయిల్లు గోలుమట్టె కట్టుక నక్షత్రవీధి కనిపించేలాగున విడిచిపెట్టవలసినది, ఇండ్లకు మేలుముద్దలేదు. బోయుంబ కానవుండా అవిరేసు కలదు. యెండిసకుండయూంగు వాళ్లు నెల్లతిసేది. కత్తివంకపిళ్లు, విచ్చుకత్తి, విసనకఱ్ఱ, సింధుప్రతిమ, దొప్పతోరణము, అరుంధతీదేవి శాపమువల్ల యీప్రకారముగా నడిచే మర్యాదలు. పెండ్లికి మహానాటివారికి కట్నము యివ్వవలసినది. యిదిగాక సంకురాత్రి పండుగుకింప కత్తికిబేడ, గూటమునకు బాతిక, ఆరెకు దూలము, కులాచార ధర్మములు చెడగొట్టక యీ చొప్పున నిచ్చుకోవలసినది. యీపద్ధతికి యీపైన వ్రాసిన జాతులలోను వ్యవహారపు పద్ధతుల చొప్పున వప్పుకున్న కులాలవారికి యెవరి పద్ధతుల చొప్పున వారికి నడిపించవలసినది.

౨౩. ఈజాతులలో పుస్తెముడుపు కట్టుకునేవర్గములకు ముడుపు ౧కి మూరూపాయీలు చొప్పున తప్పు యిచ్చుకోవలసినది.

ఇందుకు వ్యతిరేకము జరిగించిన పక్షముకు మహానాటివారు యేచొప్పున జరిగించినా, అందుకు అడ్డముపెట్టే అధికారులులేరని తెలియవలసినది. పైనివ్రాసిన ప్రకారము గులాచారములచొప్పున జరిగించగలందులకు యీఫర్మానా వ్రాయించి దయచేయించడమైనది అక్షయనామసంవత్సర, చైత్ర, శు ౧౦ యిందువాసరము.

పార్సీ మోహరున్నది———పాదుషాగారి పారషీదస్కతున్నది.

மூன்றுவது சாசனத்தின் பரமாணுவின் கருத்து.

மஹாராஜ ஸ்ரீ அலங்கருபாதுஷா அவர்கள் மந்திரி மஹாநாட்டாருக்கு கொடுத்த பர்மாணு.—

சுவஸ்தீ, சமஸ்த திருபுவன விபுல விக்ஞானவீர வீரதீரரும், கருடதுவஜ சிங்கதுவஜ பிருதுகளை உடையவருங், தேசிங்கு ராஜிய ஸ்தாபனு சாரியரும்,

அங்க வங்ககளிங்க,காஷ்மீர,காம்போஜி முதலான தேசாதீசுவரரும்,வைடூரிய கோமேதிக, புஷ்பராக நவரத்னுதி காரியும், ஹர, ஹரி, குருபக்த பாராயணரும், பரநாரி சோதரரும்,மாவுளிபட்ட பிருதுடையவரும், சுவஸ்தி சமஸ்த கலநாயிங்கித பிரசஸ்ததாரரும், விப்ர முகியாரன இராயலு மந்திரி பாஷ்கரர் முதலான சால மூலசமயரநேகரும், ஸ்ரீ மஹா கலியாணதாரருமாகிய மந்திரி மஹாநாட்டாருக்கு கொடுத்தப் பட்டா, பாதுஷாவர்களுடைய பர்மானு

என்னவென்றால்-ஸ்ரீ அலங்கர்பாதுஷாவர்கள் கோலகொண்டாவில் ஜயசீலராகி, வீற்றிருந்து, சவுராஷ்டிர தேசத்தைப்பிடித்து அசுவபதி, கஜபதி, நரபதியாகிய மூன்று ஸமஸ்தானுதிபதிகளும்,56தேசராஜர்களும் கூடி மஹாநாட்டாருக்கு ஜயசந்தோஷ தாம்பூலம் கொடுக்க அழைபித்தபோது; அவர்கள்யாவரும் வராமல் இருத்தலைக்கண்டு;பாதுஷா அவர்கள் தமது மந்திரிகளை அழைப்பித்து. இப்படி கட்டுப்பாடாக நின்ற தற்குக்காரணம் யாதென கேட்டமையால்,பிஜ்ஜி நாயடுபேரரும்,புருதிவிசெட்டி குமாரருமாகிய மைகாலபு பிஜ்ஜிநாயடு,கனகால நல்லா பாதிரர், கஞ்சிகாமாக்ஷியம்மனுடைய வர பிரசாதிகள். அவர்கள்

ஏழைக்குடிகளுக்கு பாய்வரி, குஞ்சம்வரி, எழுத்தாணிவரி, சாமல்வரி முதலான வரிகளை விதித்து வருத்திவருவதைப் பற்றி, இராயலு பாஷ்கர மந்திரியோடு மஹாநாடுகூட்டி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சமூகம் வந்து தாம்பூலம்பெற்றுக் கொண்டாலன்றி,இதராள்வந்து வாங்கமாட்டார்களென்று சொல்ல; உடனே பாதுஷாவர்கள், அந்த மஹாநாட்டாரை தருவித்து விசாரிக்க; அவர்கள் குடிகளுக்கு விதித்திருக்கும் அநியாய வரிகளால் வருந்துவதாகவும் ; அந்தவரிகளை நீக்கிவிட வேண்டுமென்றும் விண்ணப்பஞ்செய்ய : பாதுஷாவர்கள் கேட்டு,அவ்வரிகளை நீக்கி விட்டால் சர்கார் பொக்கிஷம் குறைந்துப் போகுமென்று சொல்ல;சர்க்கார் பொக்கிஷத்துக்குநஷ்டம் வராமல் திரவியம் கொடுப்பதாகச் சொல்ல, பாதுஷா அப்படியே கொடுமென்று சொல்ல- அம்மஹாநாட்டின் தலைவரான பிஜ்ஜி நாயடு தனது குலதேவதையாகிய காமாக்ஷியம்மனை வேண்ட, அந்தம்மாள் உத்திரவுபடி பாதுஷாவர்களுடைய அரண்மனைக்கருகில் 12 சதுரடி குழியைவெட்டிப்பார்க்க, அங்குவேண்டிய பொன்னிருக்கக்கண்ட பாதுஷா,மஹாநாட்டாரையும், முக்கியமாக வரபிரசாதியாகி

பிஜஜி நாயடுகாரையும் கொண்டாடி, அவருக்கு, அந்தலமும், பல்லக்கும், சக்கிரவாளக்கொடி, குடை, அரிசே, ஆளவட்டம், சுருட்டிவிஞ்சாமரம, பேட்டுருமாலு ஜணவசங்கர பிருது முதலான 12 பிருதுகளையும்; பேரி, மிருதங்கம் முதலான வாத்தியங்களையும் கொடுத்து, 56 தேசஜனங்களுடைய ஜாதிவர்ணாச்சிரமாதி விவஹாரங்களை விசாரித்து நீதிசெலுத்தவேண்டுமென்றுஉத்திரவு கொடுத்தும், இராஜசபையில் முதல் தாமபூலம் கொடுத்து மரியாதை செய்வித்தார். பிறகு அந்த மஹாநாட்டார் கொண்டபல்ஜி வாருக்கு முதல் தாம்பூலம் கொடுத்து விட்டு. பிறகு மற்றவர்களுக்கு தாம்பூலம் கொடுப்பிக்க; அப்போது, பஞ்சாணவராகிய கம்மாளர் எழுந்து, தாங்கள் விசுவகர்மாவின் சந்ததிகளாகையால், தமக்கு முதல் தாம்பூலம் கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அதைப்பற்றி பாதுஷாவர்கள் மந்திரி மஹாநாட்டாரைக்கேட்க; அவர்கள் பார்த்து அரசே! கமமாளர் தேவதைகளுடைய சாபத்தினாலும், அகஸ்தியருடைய சாபத்தினாலும, சபாயோக்கியரல்லரென்று சொல்லிவிட்டும், சபையில் தாம்பூலம் வாங்கோமென்று நிராகரித்ததற்கு, அவர்களைபலவிதமாக மஹாநாட்டார் சபித்து விட்டார்கள். பிறகு பாதுஷாவர்கள் விவாஹாதிகாலங்களில் பிஜஜி நாயடு, நல்ல மல்லாபாத்திரனுகிய மஹாநாட்டுத் தலைவர்களுக்குத் தரவேண்டிய தாம்பூல மரியாதை கட்டண வாஹன முதலானவைகளைப் பற்றிபேசி அடியில் கண்டபடி தீர்மானித்தார்கள்.

(1) பிராமணர், க்ஷத்திரியர்களுக்குப் பல்லக்கு முதலான சகல வாஹன மரியாதைகளும் (2) தேவதெலுங்கருக்கு பல்லக்கு, மஹாநாட்டாருக்குத் தாம்பூலம்கொடுத்தலும் (3) வைசியருக்குபல்லக்கு, குதிரைகள், மஹாநாட்டாருக்குத் தாம்பூலமும் (4) சூத்திரருக்குப் பல்லக்கு, குதிரை சமயமந்திரிகளுக்கு கட்டணமுண்டு (5) சாலியருக்குப் பல்லக்கு, குதிரைகளும், மஹாநாட்டாருக்கு 3 கட்டு வெற்றிலை, ஒருசேர் பாக்குக் கொடுத்தல் (6) குயவருக்கு பல்லக்கு மஹாநாட்டாருக்கு 3 கட்டு வெற்றிலை, ஒருசேர்பாக்கு (7) கைக்கோளருக்குப் பல்லக்கு, 3 கட்டு வெற்றிலை, ஒரு சேர்பாக்கு, 6 ரூபாய் கட்டணமாகவும், 9 கொல்லருக்கு பல்லக்கு, ஒருகட்டு வெற்றிலை, பாவுசேரு பாக்கும் 12ரூபாய் கட்டணமும் (10) தாசிகளுக்குபல்லக்கு, தாம்பூலம் 12ரூபாய்க்கட்டணமும் 11 தாசிகளுக்குகுதிரைகளுண்டு, தாம்பூலம் அரை ரூபாய் கட்டணமும் (13) நடசேவாருக்கு

பல்லக்குண்டு, தாம்பூலம் அரை ரூபாய் கட்டணமும் (14) கம்மாளருக்கு எந்த வாஹன மரியாதையுமில்லை (15) நாசுவருக்கு குதிரை, மஹாநாட்டாருக்குத் தாம்பூலம், (16) குயவருக்கு குதிரை, மஹாநாட்டாருக்கு தம்பூலம் (17) எரகலவாருக்கு தாம்பூலம், அரை ரூபாய் கட்டணம் (18) மேதரவர் தாம்பூலமும் அரை ரூபாய் கட்டணம், (19) கொண்டவாரு கோயவாரு ஒதுலவாரு தாம்பூலமும், அரை ரூபாய் கட்டணமும் (20) சில்பி கம்மாளருக்கு தேவசாபனை இருப்பதால்பல்லக்காதி வாஹனங்கிடையா-மஹாநாட்டாரின் அனுமதியின்மேல் இலைகளைமடித்து தொப்பை தோரணம் கட்டிக்கொள்ளலாம். சுவற்றுக்குச் சுண்ணும்புப் பூசக் கூடாது. மூன்று செங்கலயுல்ல முனிவர்க்கவும் (21) பறையர் ஆண்கலியாணத்துக்கு மஹாநாட்டாருக்கு அரை ரூபாயும், தாம்பூலமும், வெள்ளைக்குதிரை, வெள்ளைக்குடைகளுடன் நாலுபக்கங்களிலும் வரலாம். பெண்கள் கலியாணத்துக்கு பாவலாகட்டணம் கொடுக்கவேண்டும். (22) சக்கிலியர் கலியாணத்தில் 3 கம்பங்கள் நட்டு பந்தல் போட்டும், துடுமு, தப்பட்டை, தொட்டித்தடி, எருமை, ஊருக்கு வடக்கே மெரவணை கத்தி வங்கபில்லை விச்சு கத்தி விசிரிகள்ரண்டுபிரதிம தொப்பைதோரணங்களுண்டு மஹாநாட்டாருக்கு தாம்பூலம் கட்டணமும் தரவேண்டும். இம்மாதிரியாக மேல்கண்ட ஜாதியார்கள் நடந்துக்கொள்ள வேண்டும். 23 இவர்களில் யாராவது புனர் விவாஹமாக மறுபடியும் தாலிக்கட்டிக்கொள்ளுகிறவர்கள், தாலி ஒன்றுக்கு அபராதம் ஒரு ரூபாய் கட்டித்தரவேண்டும். இத்தியாதி மஹாநாட்டாருடைய ஜாதி கட்டுப்பாடு விதிகளைக்கண்டிக்க எந்த இராஜருக்கும் ஏனையோருக்கும் அதிகாரமில்லை. மேலெழுதியபிரகாரம் குலாசார தருமங்களை நடத்திவரப்பட்டவர்களுக்கு இந்த பர்மாணு எழுதிக் கொடுக்கப்பட்டது, அக்ஷய ஸூல், சித்திரை மீ 10 தேதி திங்கட் கிழமை, பாதுஷாகாரு மோஹர் இருக்கிறது. பாதுஷாகாரு கையெழுத்து போடப் பெற்றிருக்கிறது.

పై మూడు శాసనములను జదివిన వారికి శాలివాహనుని పదునేనవ శతాబ్దము లో నీ తెనుగు దేశములోని జనులలో జరిగిన కట్టుబాటుల రీతులు కొంత కొంత తెలియగలవు. అట్టికట్టుబాటులనుగూర్చి మనము వ్రాయవలసినది విశేషించియున్నది.

(Vide. P. 1-14- Rayana Baskara Mantri Charitram by Gurujada Sree Ramamurthi Garu, Sujani Rangani Press- Cocanada 1990.

மேல்கண்டமூன்று சாசனங்களைப்படித்து பார்ப்பவருக்குசாலிவாஹன சகாப்தம். 18ம் சகாப்தத்தில் தெலுங்கு தேசத்தில் இருந்த மஹாநாட்டுஜனசாரகட்டுப்பாடுகளின் விவரம் வெளியாகும். இச்சாசனங்கள் மூன்றில்,முதல் இரண்டு சாசனங்கள் எர்ரம்செட்டி மேராபாத்திரன் மஹாநாட்டாருடைய கருத்தின்படி நடவடிக்கைகளை நடாத்தியதாகவும்,3 வது சாசனத்தில் மைகாபுல பிஜ்ஜி நாயடு, கனகால நல்லபாதுருடு ஷை வேலைகளை நடாத்திவந்ததாகவும் தெரியவரும். இந்த கட்டுபாட்டிற்கு முதல்வரான இராயலு பாஷ்கரமந்திரி, இந்த மூன்று சாசனங்களுண்டான காலங்களிலிருந்து கட்டுப்பாட்டு காரியங்களை நிறை வேற்றி வந்தது ஸ்பஷடமாகிறது. இராயலு பாஷ்கர மந்திரி சந்ததிகள் சில கிராமங்களில் இக்கட்டுப் பாடுகளை சற்றேரகுறைய நடத்திவருவதாக வதந்தி. அதாவது இக்கட்டுபாடுகள் 300 அல்லது 400வருஷகாலம் அதாவது சகாப்தம் 1428வருஷம் முதல் 1780வருஷம் வரையில் நடந்துவந்தது. பிறகு இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் நிருத்தி விட்டார்கள்.

இந்த சாசனங்களுக்குத் தக்கபடியே தென்னாட்டில் துளவ வேளாளர், வடுகர் வலங்கை கக்ஷியை நடத்தி வந்ததற்கு ஆதாரசட்டம் சென்னை இஸ்கூல் இனிஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீப.விஜயரங்க முதலியார் அவர்களுக்கு கிடைத்து, பதிப்பித்தபுத்தகத்தில் ஒரு பிரதியை, ஷையார்குமாரர் ம-ா-ா-ஸ்ரீ ஐகோர்ட்டு வக்கில் ப. சம்பந்த முதலியாரவர்கள் தயவுடன் எமக்கு அனுப்பிய ஷைபுத்தகத்தில் கண்ட சில சங்கதிகளை இதனடியிற் காணலாம்.

☞ இந்த ஐந்தாம் காண்டத்தை பல பிரசுகளில் பதிப் பித்ததில், 37d-38d, 39d, 40d. பக்கங்களுக்கு விஷயம்போதாமல் 36d-வது பக்கத்துடன் முடிபித்து, அடுத்த பாரத்துக்கும்;பக்கத்துக்கும் 41b, இலக்கமிட்டிருக்கிறோம்; ஆகவே 37d, 38d, 39d, 40d, பக்கங்கள் இல்லை என்று கவலைப்படாமல்,41d பக்கமே தொடர்ச்சியான பக்கமெனக் கொள்க.—

பத்தாவது

வலங்கை இடங்கையாருடைய

வழக்கங்கள், பிருதுகள் சுதந்திரங்களைக் காட்டும் தொண்டமண்டல சரித்திர சார சங்கிரகம்.

காஞ்சிபுரத்தில் மஹாநாடு தருமராயமுதலியாரவர்களிடம் தொண்டமண்டலம் பூ. வைஸியகுல உயர் துளுவ வேளாளர் சரித்திர புத்தகத்தில், பூர்வம் வலங்கை இடங்கை ஜாதியார்களுடைய வழக்கங்களையும், சுதந்திரங்களையும், புராதன கையெழுத்து புத்தகமாக இருந்ததை, பூவிருந்தவல்லி மரபு நிர்வாக சபையாரின் அக்கிராசனாதிபதியும், சென்னை கவர்ண்மெண்டு வித்தியாவிசாரணைத் தலைவர்களில் ஒருவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ பம்மல். விஜயரங்கமுதலியாரவர்கள்,கி. பி. 1894ஆம் அச்சிட்டதாகத் தெரியவந்ததை,அவருடைய புத்திரசிகாமணியும், ஐகோர்ட்டு வக்கீலுமாகிய ம-ா-ா-ஸ்ரீ பம்மல். சம்பந்த முதலியாரவர்களுக்கு (BA-BL.) எழுத; அவரும் அன்போடு அதில் ஒருபுத்தகத்தை எமக்கு அனுப்பித் தந்தார்.— அதில் பதிப்பித்த வலங்கை இடங்கையாருடைய நடவடிக்கை, பிருது முதலானதுகளில் முக்கியமான சிலபாகங்களை மாத்திரம் (அதிலிருந்த பழையபாஷையின்படி) இதனடியிற் பதிப்பிக்கிறோம்.

பின்வரும் சங்கதிகள் பூர்வம் வலங்கை இடங்கை ஜாதியாருடைய வழக்கங்களையும், சுதந்திரங்களையும், தெரிவிக்கின்றன.

சென்னை இராஜதானியில் இங்கிலீஷ் கவரண்மெண்டு ஸ்தாபித்தபிறகு வலங்கை நாட்டாண்மை, தேசாயிகள் தம் நடவடிக்கை அந்தஸ்து அதிகாரம் பிருது முதலானதுகளைப் பற்றி கவரண்மெண்டாருக்குத் தெரிவித்துக் கொண்ட புராதன பாஷாவிண்ணப்பங்களின் நகல்களாவன.

× × × × × × × × × × × × × × ×

ம-ா-ா-ஸ்ரீ கவுனர் கவுன்சிலர் அவர்கள் சென்னைப் பட்டணத்திலிருக்கும் குடிகளுக்குள் நடக்கும் முறைமைக்கெழுதிக் கொடுத்த சட்டத்திற்கு, வலங்கையாரனைவரும் மிகுதியும் வந்தனார்த்தம் பண்ணி எழுதிக் கொண்ட உத்திரவு.—

முதலாவது—. வருஷா வருஷம் அந்தந்தஜாதியிலே பனிரெண்டுபேரை நேமித்து, அதிலே- ஒருமுதல் பெரியதனம் குறித்துக்கொள்ளுகிற தென்றும், நாடு தேசத்து பெரிய தனக்காரனையும் வருஷா வருஷம் நேமிக்க வேண்டிய தென்றும் எழுதி இருக்கிறதே—அதற்கு உத்திரவு.

அந்தந்த ஜாதி பெரிய தனக்காரரையும், நாடு தேசத்து பெரிய தனக்காரர் இரண்டு பேரையும், வருஷாவருஷம் மாற்றுகிறது அனுக்கூலமல்ல. அதே

னென்றால், அவர்களிலே சிலபேர் பாரம் பாரியமாய் குலாச்சார ஞாயங்கள் நன்றாய் தெரிந்து பெரிய தனமாய் வருகிற பேருமுண்டு. சிலபேர் யோக்கிய ராய்ப் பார்த்து குறித்து வைத்துக்கொண்ட பேருமுண்டு. ஆகையால், இவர் களை மாத்தாமல் நிருத்திக்கொள்ள வேண்டியது—ஒரு வேளை அந்த பெரிய தனக்காரர் நடக்கிற நடத்தை சர்வஜனங்களுக்கு சம்மதி யில்லாத நடத்தையா யிருந்தால், அப்போதைக்கு அந்த குலங்கூடி பெரியதனம் வேறே நேமித்துக் கொள்ளலாம்.

ஒத்தாசை பெரியதனம், அந்தந்த சாதிக்குத் தக்கதாய் மிகுந்த ஜன மிருந் தால் பனிரெண்டு பேரும், மித ஜனமா யிருக்கிறவர்களுக்கு ஆறு பேரும் குறித்து வைத்துக்கொள்ளலாம்—வருஷாவருஷம் பனிரெண்டு பேருக்கு நாலுபேரை நீக்கி, நாலுபேருக்கு சீட்டுபோட்டு வைத்துக்கொள்ள வேண்டியது. ஆறு பேருக்கு. ரெண்டு பேரை நீக்கி, ரெண்டு பேருக்குச் சீட்டுபோட்டு வைத் துக்கொள்ள வேண்டியது.

கூடித் தீர்க்கிறதுக்கு ஒத்தாசை பெரிய தனக்காரருக்கு யெல்லாம் செல்லி அனுப்பி வைக்கு மிடத்தில், யெல்லாரும் வந்தாலும் சரிவராமல் போனால் பன்னிரெண்டு பேருக்கு நாலுபேரும் பெரிய தனமும். ஆறுபேருக்கு மூன்று பேரும் பெரியதனமும் கூடித்தீற்கலாம். முதல் பெரிய தனக்காரனுக்கு சரீர உபாதி வசத்தினால் வரக்கூடாமல் போனால், பனிரெண்டு பேருக்குஎழுபேரும் ஆறு பேருக்கு அஞ்சுபேரும் யிருந்து தீர்க்கலாம். இப்படிக்கூடி தீர்க்கு மிடத் தில் ஒரு வழிப்படாமல் போனால், முழுக்கூட்டம் கூட வேண்டியது—அதற்கு முழுக்கூட்டத்திலேயும், கக்ஷிப்பட்டால் பத்துப்பேரும், எசமானும்ஒருவழியாய் இரண்டுபேர் ஒப்பாமல் போனால், பத்து பேரும் எசமானும் ஒரு வழியாய் இரண்டுபேர் ஒப்பாமால் போனல், பத்துபேரும் எசமானும் ஒப்பினதே தீரப் பாய் ஒத்துக்கொள்ள வேண்டியது—பத்து பேருக்கு குறைந்தால் உத்திர சபை ஆறு பேருக்கும் சீட்டுப்போட்டு குறித்துக்கொண்டு, அவர்களிலே தீர்த் கொள்ள வேண்டியது. அவர்கள் தீர்க்கிற தீர்ப்பிலே எசமானும் பனிரெண்டு பேரும், பெரிய தனக்காரரும் கூட கை யெழுத்துப்போட வேண்டியது. அந்த உத்திர சபையாரிலே கக்ஷிப்படாமல் அதிக செனம் எங்கையோ, அது வே தீர்ப்பாய் வைதது‌க்கொள்ள வேண்டியது—சமயக்கக்ஷியானால் நாடு தேசத் திலே போய் தீர்த்து கொள்ள வேண்டியது—விபாசியக்காரன் நாடு தேசத்து பெரிய தனக்காரர் இரண்டு பேருடனேயும் போய் சொல்லிக்கொள்ள வேண் டியது. வந்துசொல்லிக்கொண்ட பத்து நாளைக்குள்ளே உத்திர சபைக்காரரைக் கூட அழைப்பித்து வைத்துக் கொண்டு—தீர்த்துப் போட வேண்டியது. அங் கேயும் ரெண்டு பட்டால், தமிழ் ஞானல் நாட்டார் அப்பிராயப்பட்டு யிருக்கிற படிக்கு தீர்ப்புத்தர வேண்டியது. மேலே எழுதி யிருக்கிற உத்திர சபை கோரவேண்டிய வயணம் பதினெட்டு பேர் நிர்ணியப்பட்டு யிருக்கிறது—அவர் களிலே ஆறு பேருக்கு சீட்டு போட்டு நேமித்துக்கொள்ள வேண்டியது—அந்த பதினெட்டு பேரும் மாறுமற் படிக்கு யிருக்கிறது.

பூழுக்கூட்டத்திலே தீர்ந்த தீர்ப்புக்காவது, நாடுதேசத்திலே தீர்ந்த தீர்ப்புக்காவது ஆராகிலும் ஆட்சேபனை பண்ணினால், அந்தந்த குலத்திலே யெப்போதும் நடக்கிற தெண்டனை நடக்கும் படியாய் தாங்கள் உத்தரம் பண்ண வேண்டியது—அதற்கும் அடங்காமற் படிக்கி மொண்டித்தனம் பண்ணால் பெரிய தனக்காரன் வந்து கோர்டடு கச்சேரியாருடனே வந்து சொல்லிக் கொண்டால், தாங்கள் அந்த தீர்ப்புப்படிக்கு நடக்கும்படியாய் தெண்டித்து நடப்பிக்க வேண்டியது. தீர்த்த தீர்ப்பு அட்டவணை எழுதுகிற தற்கும், சலவாதி பணிசவர்களுக்கும் நடக்க வேண்டியத்துக்கு சிலவு வயணம் தாங்கள் நிர்ணயம் பண்ண வேண்டியது.

இப்படிக்கு, நாடுதேசத்தார் கையெழுத்து.

நாயநு— வீரப்பசெட்டி, செய்விராலு

கன்னிகைபேறு — முத்துகிருஷ்ணன் கையெழுத்து.

துளுவவேளாளரில் பூந்தமல்லிநாடு திருமணம் செங்கல்வராய முதலியார் இவர் சிவலோக பதவியான படியினாலே தற்காலத்துக்குமேலே யெழுதி யிருக்கிற முத்துகிருஷ்ணன் கையெழுத்து.

பென்னேரி நாடு காளத்தியப்ப முதலியார் கையெழுத்து.

சாவணம் முத்துகிருஷ்ண முதலியார் கையெழுத்து.

பாக்காட்டு—வெங்கிடநாறப்ப செய்விராலு

வடுகவெள்ளாழரில், வெள்ளாழரில் பூதூர் முத்து முதலியார் கையெழுத்து.

நந்தகோபாலரில், வெங்கிட கிருஷ்ணப்பிள்ளைகையெழுத்து, தாதாப்பிள்ளை கையெழுத்து.

நாடுதேசத்தார் அதிகாரச் சட்டம்.

வாதிபிரதிவாதி கொடுக்கப் பட்டது.

முச்சிலிக்கைக்கி வாதி ... ... பணம் 12
பிறதிவாதி ... ... ,, 12
அகத்தியம் தவச்சினம் கொடுக்கப்படும் வாக்குமூலத்துக்கு
நூறுசொல்லுக்கு. ... ... ,, ரூ. 1.
கூட்டம் சொல்லுகிற சமயன் சலவாதிபணிசவன் நபுரு ஒன்றுக்குபடி.பணம் 2
வாதி பிரதிவாதி நியாயமல்லாத நியாயம்பேசினால் அபராதம். ... 12
சாக்ஷிக்காரருக்குச் சொல்லி வராமல்போனால் அபராதம். ... ... ,, 3
கூட்டம் சொல்லி வராமல் போனவர் கையில் அவசியம்வாங்கவேண்டிய
அபராதம் ... ... ,, 2
ஒருதரம் கூட்டம் கூடினால் வாதி ... ... ரூபா 2
ஷை பிரதிவாதி ,, 2
கூட்டங் கூட்டத்துக்கு அப்படியே கொடுக்கப்படும்.
வாதிசாக்ஷி விளங்கினால் சாக்ஷி க. க்கு ... ... பணம் 3
பிரதிவாதி ஷை ... ... ,, 3
சாக்ஷிவாக்குமூலம் எழுதினால் ... ... ,, 6
கூட்டத்துக்கு விளக்கெண்ணை, வெத்திலபாக்கு வாதி பிரதிவாதிகள் சிலவு.
கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கு வாதி ... ... விராகன் 5
பிரதிவாதி ... ... ஷை 5
கொடுக்கப்பட்ட தீர்ப்பை வாங்கிக் கொள்ளாதவன் அபராதம் ஷை 4
பிரதிவாதி 5

குத்தவாளிகையில் மூணுபணம் முதல், நூற்திருபது வராகன்வரைக்கும் அபராதம் வாங்கப்படும்.

வாதிபிரதி வாதிகளை சலவாதி போய் அழைத்த மாத்திரத்திற்கு வராமல் போனால்; சலவாதியைவிட்டு மேஜோரும் பேரில் கொணடுவந்து அவாளை விசாரிக்க வேண்டியது—

அதிலேயும் வராமல் போனால், அவன் வீட்டை சாத்தி, சாணிமுத்திரை போட வேண்டியது. வாதிபிரதிவாதிகள் செய்யத்தகாதபெரிய குத்தங்கள்செய்தால், அவாளை ஆறுஅடிமுதல் யெவ்வளவு வரைக்கும் நாடுதேசத்தார் உத்திரவுபண்ணுகிறார்களோ, அவ்வளவு வரைக்கும் அடித்து, சாணிப்பானையை கரைத்து தலையில் ஊத்தி, அந்தகுத்தவாளியை வெளியேதள்ளி போட வேண்டியது. அவன் ஆயுதம் முதலானதுகளை வாங்கிக்கொள்ள வேண்டியது.

சிலநாள் பொறுத்து அந்தகுத்தவாளி பச்சவடம், தாம்பூலம், வைத்து நாடு தேசத்தாரை வணங்கி சிலவு கேட்டால், அவனுக்கு சிலவுகொடுத்து யெந்த ஜாதியோ அந்த ஜாதியில் அவாளை கூட்டிவிட வேண்டியது.

நாட்டைச் சேர்ந்தவனானல் நாட்டான் சிலவுகொடுக்கவேண்டியது. தேசசத்தை சேர்ந்தவனானல் தேசாய் சிலவு கொடுக்கவேண்டியது.

எந்தெந்த ஜாதியார் இந்தபடிக்குச் செய்யவேண்டுமென்றால், அந்த ஜாதியார் நாடு, தேசத்தார் முன்பாக அவாளுத்திரவு படிக்கு செய்யவேண்டியது.

எந்த ஜாதியிலேயாவது, சுபாசுபங்களில் புரோகிதன், பண்டாரம், மாணிக்கத்தாள், சமையன், சலவாதி, பணிசெய்வன், அம்பட்டவன், வண்ணான் தெள்ளி, வெட்டியான், கரண்டிக்காரன், காடுகாற் குறதங்குலான், முதலான பரிசாலகாளை எந்த ஜாதியிலே எந்தகாரிய மிருந்தாலும், அவர் நாட்டைச் சேர்ந்தவனானல் நாட்டானைபோய் சிலவுகேட்டு வாங்கிக் கொண்டு போய் அவன் தன் காரியம் பார்த்துக் கொள்ளவேண்டியது.—

அல்லது தேசத்தைச் சேர்ந்தவனானல் தேசாயியை போய் சிலவு கேட்டு வாங்கிக்கொண்டு போய், அவன் தன்காரியம் பார்த்துக் சொள்ள வேண்டியது.

(அல்லது தேசத்தைச் சேர்ந்தவனானல்) அல்லது நாடுதேசத்தைச் சார்ந்த பொது ஜாதிகளினால் நாடு தேசத்தார் இரண்டு பேரையும் போய் வேலைக்காரர் சிலவுகேட்டு வாங்கிக் கொள்ள வேண்டியது—இரண்டுபேரில் ஒருவரியில்லாமற் போனல், அவன் தன் சுயஜாதிபெரிய தனக்காரரை அழைத்துக் கொண்டு போய் மேலெழுதிய நாடுதேசத்தாரில் யாரிருக்கிறார்களோ அவர்களிடத்தில்சிலவுபெற்றுக் கொள்ளலாம். அப்படி யில்லாமல்சமையபேதமாயிருந்தால், நாடுதேசத்தவரில் ஒருவரிடத்தில் சிலவுபெற்றுக்கொள்ள வேண்டியது.

நாடுதேசத்தாரிடத்தில் எந்த ஜாதியார் என்ன காரியமாய் வந்து சொல்லிக் கொள்ளுகிறார்களோ, அந்தகாரியத்தை இரண்டு பேருமாயிருந்து எப்பேற்பட்ட காரியமான போலுதக்கும், அதற்குத் தகுமானதாய் யோசனைபண்ணி செய்ய வேண்டியது—

அதிலேயும் நாடுதேசாத்தார் இரண்டு பட்டால், தனித்தனியே மேலெழுதிய பிரகாரமும் செய்யலாம். யிரண்டும் ஒன்றுபட்டால் கலந்துக் கொண்டு சகல காரியமும் பார்த்துக் கொள்ள வேண்டியது.

நாடுதேசத்தாருக்குபொதுமையா யிருக்கிற சகல தொழிலாளிகளும், அண்ணடம் நடக்கப்பட்ட சங்கதிகளை நாடுதேசத்தாருக்கு அறிக்கை பண்ணிக்

கொண்டு, அவாளுத்திரவின் படிக்கு தொழிலாளிகள் நடவாமல் போனால், அவர்களை நாடுதேசததார் மனதின்படி கண்டனை தெண்டனை பண்ணிக் கொண்டு வரவேண்டியது.

இந்தப் பிரகாரம் வலங்கை ஜாதிக்கு ஒரு குறைச்சல் வராமலும், வலங்கைத் தலைவருன நாடுதேசத்தார் பார்த்துக் கொள்ள வேண்டியது.

இதுவெகுஜெனத்தாரால் உண்டான சட்டம்.

அப்போது வலங்கையார் - கட்டணவிகிதம்.

வலங்கையார்தகனசஞ்சயனகாலத்தில் செய்யவேண்டிய செலவு விபரம்.	கட்டாய தொகை.			இஷ்ட மிருக்கில்.			மொத்தம்.		
	ரூ.	அ.	ப.						
மடம் உறியடிக்கு		2	6	0	0	0	0	2	6
பல்லக்குக்கு		12	0		12	0	0	12	0
ஷை எடுகூலி		2	0	0	12	0	0	12	0
வாசலில் நிறைநாழி சங்கு		1	3					1	3
வாய்க்கரிசிக்கு		1	3					1	3
சூர்ணோர்சவசங்கு		1	3					1	3
மயாணத்தில் வாய்க்கரிசிக்கு		1	3					1	3
கொள்ளிக்காசு, குடக்காசு, வரட்டிக்குகூலிசு		2	6					2	6
சஞ்சயன தெருச்சங்கு ஒன்றுக்கு		2	6					2	6
தட்டுக்காசு		2	6					2	6
முக்காலிக்காசு		1	3					1	3
கஞ்சிபடி		6	3					6	3
தலைச்சுற்றுக்கு		2	6					2	6
பந்துக்களுக்கு சலவாதிசொல்ல		10	0					10	0
அன்னியஜாதியருக்கு சொல்ல						5		5	0
செட்டிப்பேட்டைக்கு ஷை சருமாந்திரம்						8		8	0
வாசல்தெருச்சங்கு ஒன்றுக்கு		2	6					2	6
துரைச்சங்குக்கு		2	6					2	6
ஆசந்திக்கு		1	3					1	3
வாய்க்கரிசிக்கு		1	3					1	3
பிண்டபிரதானம்		1	3					1	3
பிரபோதம்		1	3					1	3
சவுண்டி		1	3					1	3
கஞ்சிக்காசு		4	0					4	0
ஊர்சொல்ல சலவாதி அல்லது 100 வீட்டிற்கு		10	0					10	0
அன்னியஜாதிகளுக்கு ஷை					5			5	0
செட்டிப்பேட்டைக்கு					8			8	0
அசுபமுழுமைக்கும் சுதந்திரம்	1	0	0				1	0	0
ஆகமொத்தம் ரூபாய் செலவு	4	12	3	3	2	0	7	14	3

சுபகாரியகட்டணம்.

எவ்வித சுப்பிரபையோசனத்திலும் நவகிரகதாம்பூலதக்ஷிணையில்பெண்பிள்ளை வீட்டார் இருவரும் தனித்தனி ஸ்ரீ-வரசித்தி விநாயகர் அவயகட்டணமாக ஓர் தக்ஷிணைபிரதமத்தில் சலாபபார் தரப்பில் கொடுக்க வேண்டியது. அசுபவகால த்தில் சுபஸ்வீகரணத்தில் ஒருதாம்பூல தக்ஷிணைஉண்டு.வரசித்தி விநாயகர் குரு க்கள், நாட்டுபுரோகிதர்சள் வந்திருக்கும் பட்சம், இதர பிராமமணுளுக்குக் கொ டுக்கிறபடி ஒரு தாம்பூலதக்ஷிணை உண்டு. நாட்டுஒதுவார் அல்லது சைவபண் டாரம் சுப்பிரப் போசனங்களில் வந்திருந்தால் தாம்பூலதக்ஷிணை உண்டு. இவர் அசுபகாலத்தில் சூரணேற்சவம் நடத்த சுதந்திரம் அணு 4. கலசதக்ஷிணை அணு4.மயானத்திற்குவந்தால்அணு-4. சஞ்சயனகாலத்தில்,கிரியைநடத்தினல் அணு-4.மயானத்தில்தேக அந்தியேஷ்டை நடத்தினல்சாதகர்உள்படரூபாய்2. உத்திரகிரியைக்கு அல்லது சிரோ தாபனத்திற்கு வந்திருந்தால் பிராம்மணு ளுக்கு நடக்கிற பிரயோசனப்படி நடத்துதல் உத்தமம். சகல சுபகாரியத்திலும் மாணிக்கத்தாளுக்கு வேளைஒன்றுக்கு சுதந்திரம்அணு6- ஆலயத்திற்குபிரயோஜ னக்காரர் இஷ்டம்-தகனகாலத்தில்சூர்ணோ சவத்திற்குஅணு1-6 பாவாடைஒன் றக்குஅணு-2-6-சஞ்சயனகாலத்தில் அணு 2-6 சஞ்சயனத்தில் சாப்பாட்டிற்கு அணு 2-6-தகனசஞ்சயமான சுதந்திரம் அணு 5-சிலோதாபனத்திற்கு வரவழை த்தால் சேலைகொடுக்க வேண்டும். சுபகாலத்தில் பணிசெய்வோன், சலவாதி யாசிய இருவரை வரவழைத்தால், சுதந்திரம் அணு5. சங்குக்கு அணு 2-6-சுபத் தில் ஊர்சொல்ல 100க்கு அணு 12-கிராமாந்திரம் போனல் கிராமம் ஒன்றுக்கு அணு 2-தனியாய் ஒரு கிராமம் மாத்திரம் போனல் அணு 4 விகிதம் கொடுக்க வேண்டும்.

அப்போது வலங்கையிற் சேர்ந்த ஜாதிகளாவன.

1 பூவிருந்தவல்லி ஒயர்துளுவ வெள்ளாழர் 2 பொன்னேரி ஒயர் துளுவ வெள்ளாழர் 3 கொண்டைக்காட்டி வெள்ளாழர் 4 வடுகு வெள்ளாழர் 5 சாரைக்காட்டு வெள்ளாழர் 6 சோழிய வெள்ளாழர் 7 நல் வெள்ளாழர் 8 வெள் ளான் செட்டி, 9 பொட்டந்தலை வெள்ளாழர், 10 - கொடிக் கால் வெள் ளாழர், 11 நீரிடு வெள்ளாழர், 12 சயினிய வெள்ளாழர், 13 ஆழியவெள் ளாழர், 14 நகரம்கோமிட்டிகள், 15 பக்க நாட்டு ரெட்டிகள், 16 பண்ட ரெட்டிகள், 17 தேசூர் ரெட்டிகள், 18-கம்மவார், 19 சேனைக்குடையார், 20-மணியக்கார இடையர், 21-வடுகுஇடையர், 22-சக்குலவாரர், 23-ஆற தொம்பரவார். 24-பண்டாரர், 25-மனைை காக்கியார், 26-சலவ பக்ஷியார் 27- பட்டுராஜு, 28- படகண்டிவார், 29- பாகசோவார். 30- எனுதிகள் 31-வடுகு சாணுர், 32-தமிழ் சாணுர், 33-கழியர், 34-கல்க்காரர், 35-பெ ருக்கவார், 36 பவழக்காரர், 37- பூந்தமல்லி பலிஞ்சவார்லு, 38-பத்தி பலிஞ்சவார், 39 - வாடபலிஞ்சவார், 40 லிங்க பலிஞ்சவார், 41 -கன்னடி பலிஞ்சலு, 42-எருது கன்னடி பலிஞ்சலு, 43-எருமைம்கிடா பலிஞ்சலு, 44-உப்பற பலிஞ்சலு, 45 கோயிலடி பலிஞ்சலு 46- கோடசாட்டு கம்மவார்

47-கம்யசாட்டுகெம்மவார், 48- பஞ்சம கன்னிடையர், 49-துலுக்காணம் கன்னிடையர், 50 குறம்ப கன்னிடையர், 51- முத்திரியர். 52 கைக்கிளவர், 53-ஜேன்றவர் 54-செட்டிகள்- 55- பத்துமசாலியர், 56- சேணியர், 57-பட்டு சாலியர், 58-கன்னடி சேணியர், 59-பட்டு நூல்காரர், 60-வாணியர், 61-ஒண்டிஎருது வாணியர், 62-அருப்புக்காரர், 63ஜோனகர் 64 கணக்கர், 65-போயவார், 66 - குரும்புஇடையர். 67-சிவிகையிடையர், 68-வெளிக்கம்மாளர், 69-வெளித்தச்சர், 70-கப்பல் தச்சர், 71-கப்பல் கிளாசுகாரர்; 72-இருளர், 73-வடுகு பண்டாரம், 74-தமிழ் பண்டாரம், 75 - பெஸ்தபோயிகள், 76-உப்பாடபோயிகள், 77-தமிழ் கொசவர், 78 வடகுகொசவர், 79-பொந்திலியார், 80-மராட்டியார், 81-வீரணத்தார், 82-வீரமுஷ்டிகள், 83-வேடர், 84 வெளிப்பள்ளிகள், 85-கைக்கள தாசிகள், 86-மறவையார் 87-ஜோகிகள், 88- பம்பைக்காரர்கள், 89-சனப்பர், 90- செவிஞ்சுவார்; 91-தமிழ் வண்ணார், 92-வடுகு வண்ணார், 93-மாரட்டி வண்ணார், 94-தமிழ் அம்பட்டர், 95-வடுகு அம்பட்டர், 96-வள்ளுவர், 97-பவுனியர், 98-முச்சியார், 99-எகுலவார், 100 கல்லடி சித்தர் 101-பெத்திண்டி கொல்லர், 102-மேதரவார் 103-பஞ்சு செட்டிகள், 104 கள்ளர், 105-துக்கோசி, 106-எத்துக்கொறவர், 107-பூணிக் கொறவர், 108 - ரசபுத்திரர், 109- வடுகுகைக்கிளவர் 110- சுக்காளியார், 111- சாத்தாணியார், 112-வடுகுகணக்கர்கள், 113 - வடுகுகவுண்டர், 114 - வடுகு ஒட்டர், 115-வடுகு உப்பறவர், 116-தமிழ் ஒட்டர், 117- வெக்கரளாவர் 118-மறவர், 119 தப்பட்டைதாசரி, 120-கூடதாசரி, 121- பந்துதாசரி 122-பட்டாணியார், 123-கரையார், 124-வேட்டைக்காரர், 125-குறவர், 126-உப்புக்குறவர், 127-செட்டிக்குறவர், 128-வடுகுக் குறவர், 129-காடைக்குறவர்; 130-ஒட்டர், 131-ஓச்சர், 132-நட்டுவர், 133-செம்படவர், 134-குடு குடுப்பைகள், 135-தோம்பரவர், 136-நரி ஜோகிகள், 137 -லம்பாடிகள், 138-பணிசெய்வர், 139-மாவுட்டியர், 140-பறையர், 141 -பறைத்தாதர், 142-வடுகு பறையர், 143-பண்டப்பறையர். ஆக ஜாதி 143-இன்னுமுண்டு.

போத ஜாதி பிராமணர்கள், — இராஜாக்கள்.
அப்போதிருந்த இடங்கை ஜாதிகள்.

1-அச்சரவரத்து செட்டிகள், 2-காசுக்காரசெட்டிகள், 3-வடுகு செட்டிகள், 4- வக்காமணி செட்டிகள் 5-வடக்கத்திய செட்டிகள், 6- வன்னியபள்ளிகள், 7-அவிரி பள்ளி, 8-கூடைகட்டி பள்ளி, 9-காவல் பள்ளி, 10-மீன்நண்டு பள்ளி.

இரண்டாம் வகுப்பு.

1-தச்சன் 2-கருமான். 3- தட்டான், 4- கண்ணன், 5- கல்தச்சன், 6-செம்படவன், 7-சக்கிலியன், 8-கைக்கோளன். ஆக ஜாதி 13

அப்போதுஇருந்த—வலங்கையார் கொடிபிருதுகள்.

1-வெள்ளைக்குடை, 2-வெள்ளைக்கொடி, 3-மேழிக்கொடி, 4-வெள்ளைக்குதிரை, 5-சோடி வெண்சாமரம், 6-செயமணி, 7- சிம்மலலாடம், 8-அருகுதீவட்டி, 9-சவளதோரணம், 10 - அன்னக்கொடி, 11 - பச்சைக்குதிரைக்கொடி, 12-குயில்கொடி, 13-சிம்மக்கொடி, 14 - யாளிக்கொடி, 15-கழுதைக்கொடி, 16-அனுமக்கொடி, 17-காமதேனுக்கொடி, 18 - வசந்தக்கொடி, 19-புலிக்கொடி, 20 சங்குக்கொடி, 21-சக்கரக்கொடி, 22-கண்டபேரண்டபக்ஷிக்கொடி, 23-சற்பக்கொடி, 24-பட்டுகொடி, 25-கருடக்கொடி 26-மகரமீன்கொடி, 27-சொங்குக்கொடி, 28-புருஷ்வமிருககொடி, 29-பூனைக்கொடி, 30-பஞ்சவர்ணக்கொடி, 31 - பசவக்கொடி, 32 - யானைக்கொடி, 33-சந்திரக்கொடி, 34, சூரியக்கொடி, 35-அக்கினிக்கொடி, 36-ஜெதாக்கொடி, 37-சத்திக்கொடி, 38-மீன்கொடி, 39-பாங்குக்கொடி. 40-மிருதங்கக்கொடி, 41-பவுண்டரக்கொடி, 42 - தேவசத்தக்கொடி, 43- சுகோஷக்கொடி, 44-மணிக்கொடி, 45 - மணிபுஷ்பக்கொடி, 46 - கொங்குக்கொடி, 47-சரசுவதிக்கொடி, 48-லக்ஷிமிக்கொடி, 49-பார்வதிக்கொடி, 50- மயில்கொடி, 51-மஞ்சல் பாவாடை, 52-வெள்ளைப்பாவாடை, 53 - மகரதோரணம், 54-வெள்ளை யானை, 55-வலை, 56 - வெள்ளைடோரா, 57- காவிடோரா, 58-கம்பிளிடோரா, பஞ்சகலசம் முதல் 33வரைக்கும் தற்காலத்து இராஜக் கொடிகள்.

இடங்கையார் கொடிகள்.

1-கரடிக்கொடி, 2-சாவல்கொடி, 3 - அக்கினிக்கொடி, 4-மான்கொடி, 5-கிளிக்கொடி,6-பறந்துக்கொடி,7-கழுகுக்கொடி, 8-நரிக்கொடி,9- மயில்கொடி.

அப்போது வலங்கையார் சுபங்களில் ஊர் கோலம் வருகிறவிதம்

1-பல்லக்கு 2 - காடி, 3 - குதிரை, 4 - யானையின்மேல் அம்பாரி, 5-யானையின்மேல்கொடி, 6-ஒட்டையின்மேல் டாங்கா, 7— ஒட்டையின் மேல் நகபத்து, 8- குதிரையின்மேல் நகபத்து, 9 — குதிரையின்மல்சவுடோல், 10, குதிரையின்மேல் நாகசுரம். 11-ரிஷபத்தின்மேல்டமார், 12-தண்டுகெட்டினபல்லக்கு,13-நகபத்துகாரு 14-சிம்மாசனம், 15-சங்கீத மேளம், 16-வெள்ளைக்குடை,17-அருகை18-ஆலவட்டம்,19-வெள்ளைக்கொடி,20- மொறசுகொடி,21-சாமரம்ஜோடி, 22 - மயில்குச்சு, 23- மயில்விசிறி, 24- வெள்ளைப்பாவாடை, 25-கொடை, 26 - ஈட்டிக்கழி, 27 - கொடிச்சீலை, 28 - மகரதோரணம், 29-பூரிகை, 30-தவச்சங்கு, 31-தெருவுஅடைப்பார், 32 - திருச்சின்னம், 33-எக்காளம், 34-கட்டியம், 35-தமுக்கு, 36-தேவடியாக்கள், 38- துத்தாரி, 33 - தப்பட்டை, 39 - தீவட்டி, 40-கிருஷ்ணவிலாசம் முதலியன

லவங்கையார் அசுபங்களிலே ஆசரிக்கப் பட்டவை.

1-பல்லக்கு, 2-பாடை, 3-தேர், சங்கீதமேளம். 5-தாரை, 6-மேளம் 7 - கன்சதம்பட்டை,8- தமுக்கு, 9- கோணககொம்புத்தாரை, 10- மஞ்சல்பாவாடை, 11-வெள்ளைப் பாவாடை, 12-மயில் விசிறி, 13- வெண்சாமரம்

ரம், 14-விசிறி, 15-பூமிபாவாடை, 16-வெள்ளைத்தோரணம், 17-வெள்ளைக்கொடி, 18-சங்கு, 19-தவளச்சங்கு, 20-தாசறிதப்பட்டை, 21-சேமக்கலம், 22-வெள்ளைக்குழி, 23-மணி, 24-அஞ்சுகலசமுதல் 33வரைக்கும், 25-வெடியில், 26-தீவட்டி, 27-அக்கினிசட்டி, 28-கொடம், 29-கடியம், 30-அருகு, குடிமக்கள் பரிவட்டம் கட்டிக்கொண்டு, சிலர் காலில் விழுகிறதுண்டு.

இவ்வளவு பத்ததிகளோடு இருந்த இடங்கை வலங்கையார்களுக்குள், இடையில் ஜாதிவைஷமியவிஷயமாக சண்டைசச்சரவுகள் உண்டாகியதால், செங்கல்பட்டு டிஸ்டிரிகட்டுஜட்ஜிமேஜஸ்திரேட்டாரிடமுறையிடவே, அவர் இருகக்ஷியாருடைய ஆதரா தஸ்தாவேசுகளைத்தருவித்துப் பார்த்து, விசாரணைசெய்து கொடுத்ததீர்ப்பின் நகலை இதனடியிற் காணலாம்—

செங்கல் பட்டு ஜில்லா கோர்ட்டு முத்திரை
[L T]

செங்கல்பட்டு டிஸ்டிரிகட்டு ஜட்ஜி மேஜஸ்திரேட்டார் தீர்ப்பு என்னவென்றால், காஞ்சீபுரத்தி லிருக்கும் வலங்கையார், இடங்கையார், தேவதா காரியங்கள், சுப சோபனங்கள், அசுப காரியங்கள், முதலாகியதுகளுக்கு, தங்கள் சாதி பிருதுகளைக்குறித்து, ஒருவருக்கொருவர் சச்சறவாய், நம்மிடத்தில் வந்து, பிராது பண்ணிக்கொண்டு, யினிமேல் அப்படி சச்சறவுகளில்லாமல் நடக்குறத்துக்காக தீர்ப்பு பண்ணவேணுமென்று, மனுவு பண்ணிக்கொண்டு, உபயவாதிகளில், வலங்கையார் கொடுத்த அற்ச்சி 1, இடங்கையார் கொடுத்த அற்ச்சி 2. தங்களிடங்களிலே யிருந்த தஸ்தாவேசுகள் வலங்கையார் கொடுத்தது, விரோதிஹூ பங்குனிமீ 20தேதிக்கு (கி பி) 1769ஹூம் மார்ச்சிமீ 30 தேதி சேணியருக்கு புலிவாகனமும், புலிக்கொடியும், உண்டென்று யெழுதின செய்பத்திரத்துக்கு, நகல் 1- கரஹூ புரட்டாசிமீ 29தேதிக்கு (கி பி) 1771ஹூம் அக்டோபர்மீ 12உ யிடங்கையின் சேர்ந்த கைக்களவர் தாங்கள் பிடிச்சது சிங்கக்கொடியே யெல்லாமல், புலிக்கொடி பிடிச்சதில்லை யென்றும், யினிமேல் சாஸ்தியாய் நடந்தால் கும்பிணி சற்காறுக்கு ரூபாயி 120 அபராதம் குடுக்குறோமென்றும் யெழுதிக்கொடுத்தமுச்சிலிக்கா 1-(கி பி) 1185ஹூம்டிசம்பர் 4-உக்கு (கி பி)1771ஹூம் ஆகஷ்டுமீ 27தேதிகைக்களவர்புலிக்கொடிபிடிச்சதுக்காக, ஜேன்றவர் தங்களிடபிருதைப் பிடித்ததாயிருவரும், சச்சரவுபட்டுப் பிறதானத்துக்கு, விசாரணைசெய்து புலிக்கொடி ஜேன்றவருக்கே உண்டென்று ஸ்தாபித்தாச்சது. அந்தபடிக்கு நடப்பிக்கவுமென்று திவான அபறசீதுகான் அற்தோகாஞ்சி அமீர் சின்னிய நயினார் பேருக்கு யெழுதின சன்னத்துக்கு நகல் 1- பிறமாதிவருஷம் மாசிமீ 27 தேதிக்கு (கி பி) 1793வருஷம் மாற்ச்மீ 8 தேதிக்கு கெருடக்கொடி வலங்கையிற் சேர்ந்த வாணியருக்கு அனுபவ

கங்களுண்டென்றும், மாஜற்நாமா அசல் 1-அந்தந்த சாதிகளுக்கு உண்டானபிருதுகளைக் குறித்து குடுத்த சாபிதா 2, (கி பி) 1809வருஷம் சூலாய் மாதம் 5 தேதி வலங்கை பறையருக்கும், யிடங்கை பள்ளருக்கும், உண்டான வியாச்சியத்தைகுறித்து எழுதிக்கொடுத்த கடுதாசி 1- யிந்ததஸ்தா வேசுக்குமேல் தங்கள் கையில் தஸ்தாவேசுகளில்லையென்று கடுதாசு 1-இடங்கையார் தாங்கள் கொடுத்த அர்ஜிகளிலே கண்டிருக்கிறது. சோற்ட்டிலே 1348 நெம்பருக்கு தறப்பு.1-மேஜிஸ்திரேட்டு சன்னதுகளும் தவிரவேறேயில்லை யென்றும்ஸ்தளத்தார் இப்படிக்குடுத்த மாஜற்நாமா படிக்கு, ஒத்துக்கொள்ளுகிறோ மென்று சொன்னார்களே யல்லாமல் தஸ்தவேசுக ளொன்றும் குடுக்கயில்லை. ஸ்தளத்தார் (கி பி) 1809வருஷம் மேமாதம் 10உ குடுத்தயாஜர்நாமா 1- யிதுகளைபார் வையிட்டு பரிசோதிக்கு மளவில், யிந்தவியாச்சியம் வெகுஜனங்கள் குறித்த தாகையால், யிடங்கையார் குடுத்த அற்ஜிகளிலே கண்டிருக்கப்பட்ட கோற்ட்டு தீர்ப்பும், மேஜிஸ்திரேட்டு சன்னதுகளும், யிதுக்கு சம்மந்தம்படயில்லை. ஆகையாலிதுமுதல். வலங்கையாரும், யிடங்கையாரும் அவரவர்கள் சாதிபிருதுகளும் நடத்தைகளும் குறித்து இதற்கடியில் கண்டிருக்கிற தீர்ப்புபடிக்கு நடந்துகொள்ள வேண்டியது; அப்படி நடவாமல், ஆராகிலும் விரோதமாய் நடந்தால் அவர்கள் கையில் துரைத்தனத்தாருக்காக கனமான அபருதம் வாங்குறது மல்லாமல், கனமான சிட்சைபண்ணப்படும்—

1809-ஹு சூலை மீ 29உ } (Signed) George Coleman,
Judge and Magistrate,

(Signed) திருவேர்க்காடு சுப்பராய முதலியார். னேடைவ் ரிஜீஸ்டர்.

இந்த கவரன்மெண்டு தீர்ப்பின்படி வலங்கை இடங்கையாருடைய பிருது முதலான விவரங்களாவன—

செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டார் உத்திரவின்படி
வலங்கை சூத்திரர்களுக்கு பிருதுகள்.

வெள்ளாழர், கவரைகளுக்கு—சங்கு சக்கிக் கோலு, பசுமை தவளைத் தாரு, ஆத்தித்தாரு, தவண்டை, அருகு தீவட்டி, வெள்ளைக்கொடை, வெண்சாமரம், திருச்சின்னம், ஜெயமணி, சித்திரமேழிக்கொடி, வெள்ளைக்கொடி, அம்சக்கொடி, அனுமகொடி, மயில்க்கொடி, கன்னிடையருக்கு-கூடாரம், பசுவசங் காக்கொடி, பஞ்ச வற்ணக்கொடி.

வடுகு வெள்ளாழர்க்கு-அம்சக்கொடி, ரெட்டிகளுக்கு-கலப்பைக்கொடி கம்மவாருக்கு-ரிஷபக்கொடி, சொந்தகருக்கு - சகோரபக்ஷிக்கொடி, நத்தமக்களுக்கு-ஆளிக்கொடி, மலைய மக்களுக்கு-அரிதாளக்கொடி, கோமுட்டிகளுக்கு விடுமெயில், யிடுமுறசு, இலவந்தாரு, மகர தோரணம்.

இடையருக்கு-சக்கரம், வடுகு இடையருக்கு-சங்கு, பத்ம சாலியருக்கு-புலிவாகனம், ஆண்புலிகொடி, பட்டு சாலியருக்கு-இருதலை பட்சிக்கொடி,வடுகு

சேணியருக்கு-பிச்சுமாலை, நாகபாசம், பெண்புலிக்கொடி, சேன்றவருக்கு முதலைக்கொடி கன்னிடைய சேணியருக்கு, முல்லைமாலை, விசுரி தண்டைக் கெண்ட பேரண்ட பட்சிக்கொடி.

பட்டு நூல் காரருக்கு-பட்டுக்கொடி, சேடருக்கு, கூரவானக்கொடி கோழிஞ்சக்கொடி, செக்கு வாணியருக்கு-செண்டு, தொண்டு, விடுமெயிர்தாரு, யிடுமுரசு, கெருடக்கொடி,

இலை வாணியருக்கு- தொண்டு, தாரு, யிடுமுரசு.குயில்கொடி, ஒண்டிஎருது வாணியருக்கு-பஞ்சவர்ணக்கிளிக்கொடி, சணப்பருக்கு சவுரிக்கொடி, முச்சியருக்குமகரமீன் கொடி, காஞ்சியருக்கு-பொதிக்கொடி, வேதக்காறருக்குசிக்கிலிக் கொடி, பொய்க்கால் குதிரைகத்திக் கொடி, நரிசோகிகளுக்கு நாய்க்கொடி.

தமிழ்குசவர் — வடுகுக்குசவர்— குசக்கணக்கர்களுக்கு— சக்கறம், தடி, தாள விருஷபக்கொடி,

மேளக்காறருக்கு- டமரகக்கொடி, நட்டுவருக்கு தாளக்கொடி,

தேர் உரச்சவத்தன்றைக்குமேல்கண்டுஎழுதி யிருக்கப்பட்ட பிருதுகளை தாரையில்கட்டி தேருக்கு வலப்பக்கத்தில் தாரை ஊதி வருகிறது. ஸ்ரீகாமாட்சி அம்மன் உச்சவத்தில்வண்ணான் வெள்ளையாணை மீதில்ஏறி வருகிறது. நாவிதன்புருஷாமிருகம் எடுத்து வருகுறது, முச்சியன் மச்சங்கட்டி வாறது. செம்படவன் வலை போடுகுறது. வேதக்காறன் பொய்குதிரைக்கட்டி ஆடி வருகிறது. சுபசோபனங்களுக்கு மாமூல்படி பந்தல்ப் போட்டு அலங்காரம் செய்து மேல் கண்டெழுதி இருக்கப்பட்ட அந்தந்த ஜாதி பிருதுகளும், வாகனங்கள் மேள வாத்தியங்களுடனே வலங்கை வீதிகளும் ராஜவீதிகளும், கோலம்வருகுறது. அசுபங்களுக்கு மாமூல்படிக்கு வலங்கை வீதியே போகிறது.

பஞ்சமர்களுக்கு பிருதுகள்.

பவுணியருக்கு—டமரக்கொடி.

வள்ளுவர்—மாவட்டியார்—பறையர்—பண்டபறையர்களுககு—வெள்ளைக்கொடை, வெண்சாமரம், வெள்ளைக்கொடி, செக்குத்தடி, தமுக்கு, தப்பட்டை பாங்கா, பற சங்கீதமேளம், பஞ்சகலசம்.

நட கதைகள்.

இவர்கள் குடம் அம்மன், செறப்பு பிரூந்தனை செய்ய வேண்டியதற்கு 4.8.16. கால் நட்டுப் பந்தல் போட்டு, வாழமறம் கட்டி, வஸ்திரங்களிலைபந்தல் சிங்காரம் பண்ணி மேல்கண்டு எழுதி யிருக்கப்பட்ட பிருதுகளும், தமுக்கு தப்பட்டை பாங்கா மேள வாத்தியங்களுடனே தங்கள் வீதியில் கோலம் வருகிறது. கலியாணங்களுக்கும் மேல்கண்டெழுதி இருக்கப்பட்ட பிருதுகள வாத்தியங்களுடனே வாகனங்கள் பேரில் தங்கள் வீதியில்கோலம்வருகுறது. சபத்துப்பாடைக்கு பஞ்ச கலசம் கட்டி மேல் கண்டிருக்கப்பட்ட பிருது வாத்தியங்களுடனே தங்கள் வீதியே பேணத்தை யெடுத்துப்போறது.

தாசிகளுக்கு-மன்மதக் கொடி, சாணர் என்றவருக்கு - குறிஞ்சித்தாரு சாணை, யேணி, குறவருக்கு-கழுதைக் கொடி, சுக்கா செட்டி லம்பாடிகளுக்கு சித்திரக்கொடி, வேட்டைக் காறருக்கு - கவுண்டுக்கொடி, பட்டணவருக்கு-ஆமைக்கொடி, கரையாருக்கு-மச்சக்கொடி, ஒட்டருக்கு-மண்வெட்டிக்கொடி உப்பறவருக்கு-பண்ணிக் கொடி, போயிகளுக்கு - பல்லக்குக்கொடி, பணி செய்வருக்கு-தாரைக் கொடி.

தமிழ் வண்ணர்—வடுகு வண்ணர்—சாய்ப்பூ, அருவாள், அல்லித்தாரு, வெள்ளையானை.

தமிழ் நாவிதனுக்கு-தும்பமாலை- புருஷாமிருகம், வடுகு நாவிதனுக்கு-நாகசரம், தொம்புரவருக்கு-கொடைக்கொடி, மாரியம்மைக்காரருக்கு-உடுக்கைக் கொடி, பூசாலிக்கு-சிலம்புக்கொடி, யேனாதிகளுக்கு- முசல்க்கொடி, அரிப்புக் காரருக்கு- தாமரைப்பத்மம். வடுகுப் பண்டாரங்களுக்கு-சூலக்கொடி, வஞ்சூரருக்கு முத்துக்கோரவைக் கொடி, குடுகுடுப்பைக்காரருக்கு-சத்திக்கொடி, கிளாசுக்காரருக்கு-வண்டிக்கொடி, இருளருக்கு சில்லாக்கோல் கொடி, வெளிக் கருமானுக்கு-துத்திக்கொடி, சம்மட்டிககொடி, வெளிக்கல்த்தச்சருக்கு, உளிக் கொடி, கப்பல் தச்சருக்கு-வாச்சிச்கொடி, கப்பல் வடுகருக்கு- கப்பல் கொடி பண்டருக்கு-கத்திக்கொடி,.

நடத்தைகள்.

வலங்கை கட்சியில் யாதாமொருவர், கிரும தேவதைக்கும், கிறக தேவதைகளுக்கும், சிறப்பு, குடம் எடுக்க வேண்டியத்துக்கு மேலே எழுதி அவரவர்கள், சாதி பிருதுகள் மேள வாத்தியங்களுடனே, தங்கள் கிரகங்களி லிருந்தாவது, வீரபத்திரசுவாமி கோவிலண்டை யிருந்தாவது பிறப்பட்டு ராஜவீதிநாலு வீதியும் வந்து பிருத்தனை செலுத்துகிறது.

இடங்கை சூத்திராளுக்கு பிருதுகள்

ஸ்ரீஏகாம்பர யீஸ்வரர். சுவாமி பிரும்ம உச்சவத்தில் செட்டிகளுக்கு பருந்துக்கொடி

நகரவாணியருக்கு-நவரத்தினமாலை, தொண்டுதாரு, கைக்களருக்கு -திருவரை பத்திரம், அடக்கம், தொமரம், எறுகழுகு, சிங்கக்கொடி, கறடிக்கொடி, மான்கொடி, மயில்கொடி, பொத்துக்கொடி, யிடுமுறசு

கம்மாளருக்கு-சுத்தி, உளி, வாச்சி, சக்கரகோலு, கிளிக்கொடி, கழுக்கொடி.

பள்ளிகளுக்கு-குந்தளி, கொக்கு எறகு, யீடிமயிர், செங்கழுநீர் மாலை, பசுமை, வெங்கத்தாரு, அக்கினிக்கொடி, சாவல்கொடி. சிலைக்கொடி, மாலக்கொடி கழுக்கொடி, பொத்துக்கொடி, நரிக்கொடி, யிடுமுரசு.

நடத்தைகள்.

இடங்கை கட்சியில் யாதாமொருவர் கிருமதேவதைக்கும், தங்களிடகிறக தேவதைக்கு செறப்பு குடம் யெடுக்க வெண்டியத்துக்கும் மேலெழுதிய அவரவர்கள் சாதிபிருதுகள், மேளவாத்தியங்களுடனே தங்கள் தங்கள், கிறகங்களிலே யிருந்தாவது, சற்பகப்பிள்ளையார் கோவிலண்டையி லிருந்தாவது,

பெறப்பட்டு யெடங்கை வீதியேபோய், ஒதியடியில் தெருவில் சேர்ந்து, பிரு, ர்த்தனை செலத்துகுறது. ஸ்ரீஏகாம்பரயீசுவரசுவாமி பிரம்ம உச்சவத்தில் ரதத்து நன்றைக்கு, மேல்கண்டு எழுதியிருக்கப்பட்டபிருதுகொடிகளை கட்டிக்கொள்ளு கிறது. சுபசோபனங்களுக்கு மாமூல் படிக்கு பந்தல் போட்டு அலங்காரம் பண்ணி, மேல்கண்டிருக்குற அந்தந்தசாதி பிருதுவாகனங்கள் வாத்தியங்களுட னே யிடங்கை வீதியே கோலம் வருகுறது. ராஜவீதியே போகக்கூடாது. அசுபத்துக்கு மாமூல்படிக்கு யிடங்கை வீதியில் போறது. கம்மாளர் காளி யம்மன் உற்சவம் தங்கள் பிருதுகளுடனே ஆலயத்துக்கொள்ளே செய்குறது. கம்மாளர் கிறக தேவதா காரியத்துக்கும், கலியாணத்துக்கும், பந்தல் போட்டு பூமியில்படாமல் அந்தரமாய்வாழைமரங்கள்கட்டி, வஸ்திரம் அலங்காரம்பண்ணி வாகனங்கள் தங்கள் பிருதுமேள வாத்தியத்துடனே தங்கள் வீதியே கோலம் வருகிறது. கம்மாளர் சபத்துக்கு பஞ்சகலசங் கட்டக்கூடாது. பாடையில் யிடங்கைவீதி யே கொண்டு போறது.

பஞ்சமர் பிருதுகள்.

பள்ளருக்கு-நெல்லித்தாரு, அரவங்கொடி, சக்கிலிகளுக்கு-மஞ்சர் தட்டி, கறுப்பு உருமாலை, வீரகத்தி, தென்னஞ்சோலை, தப்பட்டை, கோணக்கொம்பு இவர்கள் கொடம், அம்மன் சிறப்பு, பிரார்த்தனை, செய்யவேண்டியத்துக்கு 3 5. கால் நட்டு, பந்தல் போட்டு, தப்பட்டை கோணக்கொம்பு மேல்கண் டெழுதி யிருக்கப்பட்ட பிருதுவாத்தியங்களுடனே தங்கள் வீட்டில் செய்து கொள்ளுகிறது. சபத்துக்கு பஞ்சகலசங் கட்டக்கூடாது. பாடையில்பிணத்தை யெடுத்துக் கொண்டு தங்கள் வீதியேபோறது.

இதற்குசாக்ஷி— 1809௵ம்29௳ செங்கல்பட்டுஜில்லா ஜட்ஜி மேஜிஸ்திரே ட்டு விசாரணைக் கர்த்தாராகிய **மேஸ்தர் ஜார்ஜி கோலு மென்துரை** அவர்க ளிடகையெழுத்தும், கோறட்டுகிடமுத்திரையும் போடப் பட்டது.

(Signed) George Coleman.
Judge and Magistrate.

(Signed) திருவேர்க்காடு சுப்பராய முதலியார்- னேடைவ்ரிஜிஸ்டர்

இந்தச்செங்கல்பட்டு கோர்ட்டு தீர்ப்பும், அதற்கு முன்கண்டிருக்கும் வலங் கையார் நடவடிக்கைகளும், புராதனபாஷையில் எழுதி இருந்தபடியே பதிப் பித்தபடியால அவைகளில் உள்ளஎழுத்தாதி பிழைகளுக்கு யாம் உத்திரவாதிய ல்லோம்- நிற்க

இப்படி ஒருகாலத்தில் இவ்வளவு சிறப்பு பெற்றோங்கிய இந்த வலங்கை கக்ஷியார் பிற்காலத்தில் தம்கடமைகளை கிரமமாகச்செய்யாம லிருந்ததில், அக் காங்கு குடிகளுக்கு கஷ்டங்கள் சம்பவித்து வந்த படியால், குடிகள் வலங்கை யார் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் போகவே, இந்த ஆங்கில அரசுகாலத்தில் அவர்கள் அதிகாரமும் அந்தஸ்தும் மங்கலடைந்து விட்டது.

இதுவரையில் எடுத்துக்காட்டிய வலங்கை இடங்கை சரித்திரங்களினால் இடங்கை கக்ஷியைச் சார்ந்த கம்மாளர் முதலான சிலஜாதியார்களை இவ்வளவு கஷ்டஸ்திதிக்குக்கொண்டு வந்துவிட்டக் காரணம் வியக்தமாக விளங்கவில்லை. நாம்அறிந்தவரையில் கம்மாளர்இத்தேசத்தாருக்குதொப்புளறுக்கும் கத்திமுதல் தேர் முதலானவைகளைச் செய்து கொடுத்து வருவதோடு; அவர்களில் அநேகர் படிப்பாளிகளாயும், புத்திமான்களாயும், சத்தியவான்களாயும்;சுவாமிபக்தியுள்ளவர்களாயும்இருக்கிறார்கள். இப்படிப்பட்டநல்லஜாதியாரை நாம்கொண்டாடிவர வேண்டி இருக்க, அவர்களை ஜன்மவிரோதிகளாகக் கொண்டு, கஷ்டப்படுத்தி வருவதுதருமமல்லவே! கல்வி அறிவில்லாதவர்களும், பொறாமைக்காரருமான முன்னோர் அவர்களை விரோதித்து வந்தாலும்,சீர்திருத்தமும்,கல்வியும்விருத்தியாகி வரும் இக்காலத்தார், அவர்களை சகோதரர்களைப்போல பாவித்து அன்பு பாராட்டி வரவேண்டியது நீங்கலா கடமையாம். நிற்க.

இனி இந்தபேட்டை பலிஜவாருகளில் ஒவ்வொரு வகுப்பார்களுடைய சரித்திரங்களை இப்படியே விஸ்தாரமாக எழுதினால் இது ஒரு பிரம்மாண்ட புராணமாகுமென்றஞ்சி இவர்கள் சரித்திரங்களை அதிக சங்கிரகமாக எழுதலானோம்.

இலிங்கபலிஜவாரு அல்லது லிங்காயிதுலு.

என்பவர்கள் ஆதியில்விஜயநகரத்தி லிருந்தபோதுசைவர்களாகவிருந்தும், பிறகு வைணவர்களாகி தம்சமஸ்தானத்தை ஸ்ரீரங்கபட்டணம் மைசூரில்ஸ்தாபித்தபோது அங்கிருக்கும்சிவாசாரியர்களைப் பார்த்து லிங்கம்தரித்து சுத்தசைவரானார்கள் போலும். இவர்களில் லிங்கபூஜைசெய்வோருக்குஜங்கம வாரென்றும்,வியவசாயிகளுக்கு **ரெட்டிகளென்றும்**, வர்த்தகம் செய்வோருக்கு **கண்டமூ**வாரென்றும், உத்தியோகஸ்தர்களுக்கு **நாயடுகா** ரென்றும் பெயர் இவர்கள் குடுமி, மீசை, தாடியை க்ஷவரம் செய்துகொண்டும், மது மாமிசத்தை யுண்ணாமலும், பிராம்மணாள் வீட்டிலும் ஜலபானம்செய்யாமலும் இருக்கிறார்கள். இவர்களுக்குள் ஒருக்கால்கன்னியா விதவா விவாஹமும் நடந்துகொண்டு வந்தது. கி. பி. 1901 ஞு ம் கானிஷ்வாரிகணக்கின்படி இந்த ராஜதானியில் 138518 லிங்காய்த்துகள் இருந்தார்கள்.

இந்த லிங்கபலிஜவாரு உண்டானதற்கு வேறொரு காரணமு முண்டென சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்— அதாவது—ஸ்ரீ சந்திரவமிச க்ஷத்திரிய ஆந்திர குடும்பத்தைச் சார்ந்த **சாலுக்ய விஜ்ஜலராஜன்**, தனது பிரதான மந்திரியும், தண்டநாயகருமாக இருந்த **பசுவருடைய** சகோதிரி **பத்மாவதியை**விவாஹம் செய்துக்கொண்ட தாகவும், (இப்புத்தகம் 48-பக்கம் பார்க்கவும்) அந்த **பத்மாவதியின்** சகோதிரராகிய **பசுவர்** லிங்காயத்து மதத்தை ஸ்தாபித்தவரான படியால், அந்த பத்மாவதியின் மக்களில் சிலர் தமது தாய் மாமனாராகிய பசுவருடைய **அந்த லிங்காயத்து மதத்தை** அநுஷ்டித்துவர, அவர்கள் சந்ததிகளே பிற்காலத்தில் லிங்க பலிஜவாராகியதாக எண்ணம். அதற்கு திருஷ்டாந்தமாகச் சொல்லும் காரணங்களாவன. இந்தசந்திரவமிச க்ஷத்திரியர்களில்

வாரங்கல் கணபதிராஜ வமிசத்தைச் சார்ந்த கணபதி தேவருக்கும், அவர் மனைவிருதிரம்மகாருக்கும்— ஞானம்பாளென்னும் கன்னிகைபிறக்க,அப்போது கி.பி. 1190-1258 தாரணிகோட்டையிலாண்டுவந்தஜயினஅரசனுக்குஇராஜகீய விஷயத்தைக்கருதி அந்தஞானம்பாளை விவாஹம்செய்துக்கொடுக்க,அவர்களுக் பிறந்த புகழ்பெற்ற பிரதாபருத்திரன் தன் தந்தையின் ஜயினமதத்தைத் தழு வாமல், தன் தாயாருடைய வைணவ மதத்தைத் தழுவி விருத்திசெய்து வந் ததாக சரித்திரம் முறையிடுகிறபடியாலும்—(இந்த பலிஜபுராணம் 32-ம் பக்கம் பார்க்கவும்.) இதேமாதிரியாகவே சந்திரவமிச ஆந்திரர்களில் ஒருகிளையாராகிய சாலுக்கியரில் விமலாதித்தியன், இராஜேந்திர சோழனுடைய தங்கைகுந்தி தேவியையும், அவர்கள் குமாரன் இராஜஇராஜ சோழனுடைய குமாரத்தி இருமாங்கியை விவாஹம் செய்துக்கொண்ட படியாலும், (இந்தபலிஜபுராணம் 25-வது பக்கம் பார்க்கவும்) தஞ்சையிலாண்ட அச்சுதப்புநாயடு காரு ஒரு பாண்டியன் குமாரத்தியை விவாஹம் செய்துக்கொண்ட படியாலும்; ஆகப்பா ண்டியரும், சோழர்களும், ஜயினர்களும், ஒருவருக்கொருவர் கொள்வினை கொ டுப்பினைச் செய்துக் கொள்வது சஹஜமென்றும் எண்கிறார்கள். இப்படி ஒரு வகுப்பானப்பெண்ணை மற்றோர் வகுப்பார் விவாகம் செய்துக்கொள்வதுத்தகும், ஏனெனில், இவர்கள் யாவரும் க்ஷத்திரியர்கள்;ஆனால், இந்தபசுவரோபிராம் மண தலதிலர்கள். இப்படிப்பட்ட வுயர்குலத்துப் பெண்ணாகிய பத்மாவதியை க்ஷத்திரியகுல விஜ்ஜலன் விவாஹம் செய்துக்கொண்டது எப்படியோ தெரிய வில்லை, இந்தவிவாஹத்தை உண்மை என்றும், இந்த விஜ்ஜலனை, பசுவ நுடைய தூண்டுதலினால் வாஜதேவர், மல்லய்ய, பொம்மண்ணு என்றவர்கள் கொன்றதாக சென்னபசுவ புராணத்தில் செப்பி இருப்பதாகவும், தென் னிந்திய சரித்திரசாசன கிரந்தம் 25-27வது பக்கங்களில் டாக்டர் ஹுப்போர் ட்டு சாஸ்திரியும் சொல்லி இருக்கிறார் (இப்புத்தகத்தின் 48வது பக்கம் பார்க் கவும்) அந்த சென்னபசுவ புராணம் எமக்கு கிட்டாமையால் உண்மையறியக் கூடவில்லை.

கண்டிபலிஜவாரு.

இவர்கள் மதுரை விசுவநாத நாயடுகாரு குமாரர் கிருஷ்ணப்ப நாயடு காரு, இலங்கையின் மீது படை எடுத்துப்போய் ஜெயித்து, கண்டியில் நாயடு ஸமஸ்தானத்தை ஸ்தாபித்ததில், அக்கண்டி நாயடுகாரின் சந்ததிகளே கண்டிவாரு என்ற பெயரைப் பெற்றார்கள். இவர்கள் ஸ்ரீவிசுவநாத நாயடு காருடைய குமாரர் குமார கிருஷ்ணப்ப நாடுகாருயடைய மைத்துனர்விஜய பூபாலருக்குப்பிறகு அங்கிதாங்கித ராஜநும், இராஜ சிம்ஹலராஜநும் விஜய சிம்ஹள மஹாராஜர்களும் அந்தக்கண்டி நாட்டிலே அரசுசெய்தும், பூர்வ விசுவநாத நாயடுசந்ததிகளில் வேள்க்குரிச்சியி லிருந்தும், தஞ்சைமண்ணாறு சாமிநாயடு செங்கமலதாசு நாயடுமுதலானவர்களிட மிருந்துப் பெண்களைவிவா ஹம் செய்துக் கொண்டவர்கள், இவர்கள் கஸ்ய பகோத்திரத்தைச் சாந்தவர் கள்-இவர்கள் வீட்டின் பெயர் சிந்தலபுரிவாராம்-இவர்களுடைய ஸ்திரிகள்

இன்றும் கோஷா அந்தபுரஸ்திரிகளாக இருக்கிறதன்றியில்; புருஷர்கள் பூணுநூலைதரித்தும் க்ஷத்திரிய தருமத்தின்படி சடங்குகளைச்செய்து வருகின்றனர். இப்போது இவர்களில் அநேகர் திருநெல்வேலி மதுரை, நாகபட்டணம், தஞ்சை திருச்சிமுதலான விடங்களில் வதிந்து வருகிறார்கள். திருவையாற்றில் சப்ரிஜிஸ்டிராராக இருக்கும் ஸ்ரீ தியாகசிமஹல மஹாராஜர் இந்தசந்ததியைச் சார்ந்தவராம் இப்போது பூர்வஸமஸ்தான பெண்ஷனைப்பெற்று வருகின்றனராம்—

சித்திராலபலிஜவாரு.

இவர்கள் ஸமஸ்தானத்தின் ரூப பாவபடங்களை எழுதிக் கொண்டும், இராயர்களுடைய பட்டுதுணிகளுக்கு பலவிதவர்ணங்களையும், சரிகைகளையும்புகட்டி தந்ததன்றியில், அநேகர்சிற்பசாஸ்திர நிபுணர்களாக விருந்துகோயில் கோபுரம், கோட்டை கொத்தளங்களைக் கட்ட நக்ஷாக்களைத் தயார்செய்து மேல்விசாரணை செய்தவர்கள் 1901 ௵ம் கானீஸ்மாரி கணக்கின்படி இந்த ராஜதானியில் இவ்வகுப்பில் 6110 குடிக ளிருந்தார்கள்.

மூசுகுபலிஜவாரு.

இவர்கள் விஜயநகரத்தில் மகமதியர் புகுந்து வம்புகள் செய்தபோது ஸ்திரீகளுக்கு முக்காடிட்டு மறைத்ததினால் இப்பெயரைப் பெற்றாகள். இவர்கள் விஜயநகர ஸமஸ்தானத்தைச்சார்ந்த ஜகதேவராயலு காருடைய நேரான சந்ததிகள்-இவர்களுடைய சுகருக்கச் சடங்குகள் பூர்வம் சந்திரவமிசத்தாருடைய முறைப்படிச் செய்யினும்; இடையில் காலதேசவர்த்தமானங்களைத் தழுவிச் செய்து வருகிறார்கள். இவர்கள் விவாஹகாலங்களில் மாப்பிள்ளைப் பெண்ணுக்குக் கட்டும் பாசிங்கத்தை மற்றபலிஜவாரைப்போல சரிகைத்தக்கை முதலானவைகளில் சிங்காரித்தவைகளை உபயோகப் படுத்தாமல், அரளிமொக்குகளால் (பாசிங்களைச்) சிங்காரித்துக் கட்டிக்கொண்டு வருகிறார்கள்,—

இவர்களிற் சிலர் 'மூதகம்மலு' என்ற பெயரால் மரக் காதோலைகளைத் தரிப்பதனால் மூதகம்மலுவாரு என்ற பெயரையும் பெற்றனர்.

இவர்களில் இராணுவாரு, கூலியம்வாரு, ரகுரவுத்துவாரு, குப்பாலவாரு, பண்டிவாரு, கட்டாரிவரு, நெல்லங்கலவாரு, மடிகலவாரு, ஆதுலவாரு, சாமிசெட்டிவாரு, மேடிசெட்டிவாரு, அங்கிசெட்டிவாரு, செட்லுவாரு, புங்காலவாரு, சீரிகிரிவாரு, காசுலவாரு, பைபுவாரு, பாகாரபுவாரு, அரிகிரிவாரு, சிங்கம்வாரும், கும்பினிவாரு, மந்திரிவாரு என்னும் வீட்டுப்பெயர்களுடைய வர்கள்முக்கியஸ்தர்கள்—இவர்கள் பாலகோத்திரம், அச்சுந்தல கோத்திரம், விஷ்ணுவர்த்தனுதி கோத்திரங்களைச் சார்ந்தவர்கள். இப்போது இவர்கள் (முக்கியமாக) சித்தூர், கூடலூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, காவேரி பட்டினம், பெண்ணுகரம், டெங்கணிகோட்டை, வேலூர், இராயகோட்டை, குந்தனபல்லி ஈரோடு சத்தியமங்கலம், கோயமுத்தூர், முத்தனூர் முதலான விடங்களில் வதிந்துவருகிறார்கள். இவர்களுடைய ஜாதிவிவரத்தைக் காட்டும் புத்தகம் தருமபுரிக்கடுத்த ராயகோட்டை ம-ா-ா-ஸ்ரீ, சப்பநாயடுகாரிடமிருக்கிறதாம்.

ஒப்பனபலிஜவாரு.

இவர்கள் விஜயநகர சமஸ்தானம் புஜபலராயலுவுடைய நேரானசந்ததிகள். அந்தச் சமஸ்தானம் ஸ்ரீரங்க பட்டணத்தில் ஸ்தாபித்தபிறகு, அங்கிருந்த ஸமஸ்தானபதிக்கு வெளிநாடுகளிலிருந்து வரவேண்டிய சர்க்கார் கந்தாயவரி வசூல் தொகையை (ஒப்பனம்=போன்னை) அதிக நம்பிக்கையுடன் கொண்டுபோய் செலுத்தியதால், ஒப்பனக்காரர்கள் என்றபெயரைப் பெற்றார்கள். இவர்களில் அந்த விஜயநகர ஸமஸ்தானம் பிரபலமாக இருந்தபோது அனேகர் குதிரை வீரர்களாக இருந்தபடியால், இராவுத்துகள் என்ற பெயரையும் பெற்றார்கள்.

இவ்வகுப்பாரில் அநேகர் பூர்வத்தில் பிரபலவிவசாயிகளாகவும், வர்த்தகர்களாகவும், படிப்பாளிகளாகவும், புத்திமான்களாகவும் இருந்ததுடன் ; இவர்களுடைய ஸ்திரீகளை (கோஷா) அந்தபுரத்தில் வைத்தும் ; அந்தஸ்திரிகள் விவாஹகாலங்களிற் செய்யவேண்டிய சடங்குகளை பகல் காலத்திற் செய்தால் ஸ்திரீகளை பலபுருஷர்கள் பார்க்க சம்பவிக்கும் என்ற எண்ணத்தினால், இராக்காலங்களிலேயே பெரும்பான்மை யோர்ச்செய்து வருகிறார்கள் - சிலர் தம்கலியாணங்கள் ஆரம்பிப்பதற்குமுன் விஜயநகர ஸமஸ்தான பதிகளாகிய ஸ்ரீபுஜபலராயலு, ஸ்ரீகிருஷ்ணதேவராயலு, முதலான முன்னோர்களை தம் வீட்டு தெய்வங்களாகவும், குலதெய்வங்களாகவும் கொண்டு பெரும்பூஜை செய்து வணங்கிய பின்னர், விவாஹகாரியங்களை ஆரம்பிப்பது வழக்கம்—

இப்படி சந்திரவம்சிச க்ஷத்திரியராகிய விஜயநகர புஜபல, கிருஷ்ணதேவராயலுவுடைய சந்ததிகளாகிய இவர்கள், காலவித்தியாசத்தினால் விவாஹம், சாவுமுதலான சடங்குகளில் சிறுபான்மையாக புராதனவழக்கங்களையும், பெரும்பான்மையாகதாம்பிறகுகுடிபுகுந்தபுதுவிடங்களின்வழக்கங்களையும்அநுஷ்டித்து வருவதுடன்: சிலருக்கு தமது ஜாதியின் பெருமையும் பெயரும் தெரியாமல், இரவுத்துஜாதி, இரவுத்து குலம் என்று சொல்லிக் கொண்டும், பத்திரங்களில் எழுதிக்கொண்டும் வருகிறார்கள்—

இந்த இரவுத்துப்பட்டம் இத்தென் தேசத்தில் மகமதியர் முதலானவர்களுக்கும் வழங்கி வருவதால்; அது ஒரு கேவலமான பட்டமாக எண்ணபட்டு இக்காலத்து இங்கிலீஷ் படித்து உத்தியோகம் செய்யும் இந்து வகுப்பாரில் சிலர் நாயடு என்றப்பட்டத்தை வகித்து வருகிறார்கள்=இரவுத்துஎன்பது இராயலு என்ற பதத்தின் திரிபாம்—இவர்களும் ஆதியில் 1000 வீட்டுக்காரர், கள் போல தோன்றினும், இப்போது இத்தென் தேயத்தில் கோயமுத்தூர், சேலம், செவ்வாய் பேட்டை, முசிலி, புதுக்கோட்டை, நிம்மலகுடி,மன்னார்குடி கும்பகோணம், ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை முதலான விடங்களில் வதிந்து வருகிறார்கள்.

வெலம(பலிஜ)வாரு

11. —இவர்களை வெலகினவாரு, வெலகோட்டிவாரு, வெலம தொரலு என்றும் சொல்வதுண்டு. ஆதியிலிவர்கள் விசாகப்பட்டிணம் (கஞ்சாம்) ஜில்லாக்களிலும், வட ஆர்க்காட்டின் கீழ்கரை யோரங்களிலும் வியவசாயக் குடிகளாக விருந்து, பிறகு குருநில மன்னராஞர்கள். விஜயகர ஸமஸ்தான கிருஷ்ணதேவராயலுக்கு இவர்கள் ஆப்தர்களாக இருந்து உதவி செய்தவர்களென பிரவுட பிரபந்த கவிஜீவத புத்தகம் 68-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் பல்லவரைச் சார்ந்தவர்களென டாக்ட்டர் ஆபர்டு (Dr. Oppert) சாஸ்த்திரியும்—காபுரெட்டி வகுப்புகளைச்சார்ந்தவர்களென கர்னல்மெகன்சியும் (Col Machenze) எழுதிஇருக்கிருர்கள். இவர்களுக்குள்"ஆதிவெலமலு",'பத்மவெலமலு', தெனுகுவெலமலு', ,'திராவிட வெலமலு'கோனவெலமலு' என்ருதி 142 வெலமஜாதி உட்பிரிவுகளுண்டு. கோட்டதேசபலிஜவாரு இவர்களைத்தமக்குத்தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்களென்றுஎண்ண, அவர்களை இவர்கள் தமக்குத்தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்கள் என்று எண்ணுகிருர்கள். இம்மட்டோ ! ஆதியில் இவ்வெலம பலிஜவாரும், கம்மபலிஜவாரும் ஒரேகுலத்தராக இருந்ததாகவும் ; இடையில் மகமதியர் படையெடுத்து விஜயநகரத்துக்கருகில் வந்தபோது; இவ்வெலமவாரு தமது ஸ்திரிகளை மகமதிய ஸ்திரிகளைப்போல கோஷா (பர்தாநிவாசி) அந்தரங்கத்தில் வைக்க, அந்தக்கோஷா வழக்கத்தை அவர் இனத்தாரில் சிலர் தடுக்க, இனத்தாருக்குள் இரு கக்ஷிகளுண்டாகி தமக்கு அப்போது தலைவரான நரபதி வீரநரசிம்ஹராயவிடம் முறையிட ; அவர் இருகக்ஷிகளையும் தீரவிசாரித்து, பலிஜவாரு மகமதிய ஸ்திரிகளைப்போல தமது ஸ்திரிகளையும், கோஷாவில் வைப்பது இந்து தருமசாஸ்திரவிதிக்கு விரோதமென்று தீர்மானித்தும்; இருகக்ஷிகளும் இராஜியாகப் போகவேண்டுமென்று சொல்லியும், ஓலையில் (கம்மையில்) கையொப்பமிடும்படி கட்டளையிட, ஒரு கக்ஷிக்காரர் உடனே அந்த ஓலையில் (கம்மையில்) கையொப்ப மிட்டார்களாம். அப்படி ஸமஸ்தான உத்தரவின்படி ஓலையில் (கம்மையில்) கையொப்பமிட்டதிஞல் அன்றுமுதல் அவர்களுக்கு **கம்ம பலிஜவாரு** என்று பெயருண்டாகியதாம். **கம்ம** என்ருல் ஓலையாம்,—அந்த ஓலையில் (கம்மையில்) கையொப்பமிடாமல் விலகியவர்களுக்கு, **விலகினவாரு**=வெலமவாரென்று பெயராகியதாம். இந்த வெலமவாரில் இன்னும் தம் ஸ்திரீகளைக் கோஷாவில் வைத்திருப்பவர்களுக்கு, **ஆதிவெலம** லென்றும்; கோஷா வழக்கத்தை விட்டவர்களுக்கு, **பத்மவெலமலென்றும்** சித்தூர்ஜில்லா சரித்திர 276-வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது இந்த வெலமபலிஜலு, கிருஷ்ணு, கோதாவரி, மசூலிப்பட்டணம், இராஜமஹேந்திரம், பந்தர், நெல்லூர், வெங்கிடகிரி, காளாஸ்திரி. கார்வேட்டி நகரம், பிட்டாபூர், பூபுலி, புங்கனூர் முதலான விடங்களிலிருக்கிருர்கள். 1901ஆ கானிஸ்வாரி கணக்கின்படி இவ்வகுப்பில் 4, 36, 327 குடிகளிருந்தார்கள்.

இந்தவெலமபலிஜவாருடைய உற்பத்திவிவரம். வீட்டுப்பெயர், கோத்திரம் முதலானவைகளின் சங்கிரகம். பாபட்ல ஸ்ரீ சிதாராமநாயுடுகாரின் வாக்குமூலம்.

வெலமபலிஜவாருடைய பெயர் வந்தவிவரத்தை முன்னமே சொல்லி இருக்கிறோம். அவர்களுக்குள் ஆதிவெலமலு, பத்மவெலமலு, சொப்புவெலமலு, கூனவெலமலு, நீலிசாயவெலமலு, தொரசாட்டு வெலமலு, கொண்டவீட்டி சீம வெலமலு, என்றுதிபல உட்பிரிவர்களுண்டு. அவர்களில் **ஆதிஅண்ணன், பதுமஅண்ணன்** என்னும் இரண்டு சஹோதிரர்கள் வசித்த வீட்டில், பதுமண்ணனுக்கு ஒரு அழகிய பெண்பிறந்து சுந்தரவதியாக வாழ்ந்துவரும் நாளில், அவ்விடத்தில் அப்போது வதிந்துவந்த இராஜனுக்கு அதிகஇஷ்டனாக இருந்த பதுமண்ணன் தன் அழகியகுமாரத்தியை விவாஹம்செய்துக் கொடுக்கச் சம்மதித்துக்கொண்டான். இந்த விவாஹ ஏற்பாடு ஆதிஅண்ணனுககு இசைந்திராமையால், இருவருக்கும் பிரமாத சண்டைச் சச்சரவுகள் நடக்க; ஆதிஅண்ணன் அந்த இராஜனுக்குப் பயந்து இரவில்வேறு ஊருக்கு ஓடிவர, இடையில் ஒருபெரிய நதிபெருக்கடித்துத் தடுக்க, ஆதியண்ணன் அருகிலிருந்த மீன்பிடிப்பவனுடைய உதவியை நாட, அவன் தந்திரமாக அழைத்துப்போய் அக்கரையில் விட்டான். அந்தநன்றியை மறவாதபடி, அந்த ஆதிஅண்ணன் அவனுடைய வலையில் கொஞ்சம் வாங்கிக்கொண்டு போய், தன்கலியாணத்தின் பாலமரத்துக்குக் கட்டி மரியாதைச் செய்தபடியால், அன்றுமுதல் அந்த வகுப்பார் தம் கலியாணகாலங்களில் பாலமரத்துக்கு மீன்வலையைக் கட்டி மரியாதைச் செய்வதுண்டு. அவர்கள்தாலி, மற்ற கோட்டபலிஜவாரைப்போல் கிண்ணி பொட்டைக் கட்டிவந்தாலும், அவர்கள் விவாஹத்தை ஒன்றுமுத ஐந்துநாள்கள் வரையில் செய்துவருவதன்றியில், மற்ற பலிஜவாரைப்போல அம்மிமிதித்தல் முதலான சிலசடங்குகளைச் செய்வதில்லை. அவர்களுடைய ஸ்திரீகளை அந்தபுரத்தில் வைத்து கோஷாஸ்திரீகளாக நடத்தி வருகின்றார்கள். மற்ற வேஷாபாஷாப் பெயர்கள் கோட்டபலிஜவாருடையவைகளையே அனுஷ்டித்து வருகிறார்கள். சென்னையில் மற்றதேச பலிஜவாரோடு சாப்பிட்டாலும், கிராமங்களில் அந்தவழக்கமில்லை போலிருக்கிறது.

இந்தவெலமருடைய வீட்டுப்பெயர் கோத்திரப்பெயர்களாவன.

1899-ஞ ம் எப்பிரல் மீ சென்னையில் ஸ்ரீகலியாண சரஸ்வதி நிலைய முத்திராக்ஷர சாலையில், லேட் நாயனி இராமய்யநாயனிஅவர்கள் சகாயத்தினால் சேகரிக்கப்பட்டு அயினால் பாபநய்யநாயனிவாரால் ஸ்தாபிதமாக்கப்பட்டு, பசுமர்த்தி—ரங்கநாதம் செட்டியாரால் பதிப்பிக்கப் பட்டிருக்கும் ஆதிவெலமல அன்வய கோத்திரநாமமுலு என்னும் கிரந்தத்தின்படி

வெலம்பலிஜவாரின்

வீட்டுப் பெயர்கள்.		கோத்திரப் பெயர்கள்.	
1. அயினலவாரு	...	கோனதுள்ள கோத்திரம்	
2. அங்காலவாரு	...	வந்தமாரி கோத்திரம்	
3. அங்காலவாரு (மற்றொரு)		அயம்பககோத்திரம்	
4. அங்காலவாரு (மற்றொரு)		அயுஸ்தகோத்திரம்	
5. அம்பினேனிவாரு	...	நேமாகுலு கோத்திரம்	
6. ஆகுல வாரு	...	பாலங்கி கோத்திரம்	
7. ஆகுனூரிவாரு	...	ஸ்ரீவன்தஸகோத்திரம்	
8. அருமாக்கவாரு	...	உல்லம்பாகுலு கோத்திரம்	
9. இம்மானேனிவாரு	...	புவ்வாடகோத்திரம்	
10. உதெல்லருவாரு	...	கௌண்டினிய கோத்திரம்	
11. உம்மடிசிங்குவாரு	...	பொன்னிவெலகல கோத்திரம்	
12. கனகாலவாரு	...	தேவகல கோத்திரம்	
13. கனகபல்லிவாரு	...	வேள்ளமூடிகோத்திரம்	
14. காவேரிவாரு	...	பட்டில்ல கோத்திரம்	
15. குள்ளிவாரு	...	பாலகுல கோத்திரம்	
16. கொப்பிசெட்டிவாரு	...	நலகல கோத்திரம்	
17. களித்திம்பாகவாரு	...	வஸிஷ்ட கோத்திரம்	
18. கோகாவாரு	...	பைனூரி கோத்திரம்	
19. கோகாவாரு-மற்றொரு	...	கூடவல்லிகோத்திரம்	
20. கஞ்சிவாரு	...	தேவேந்திர	,,
21. கொலிதவாரு	...	ராயாகுல	,,
22. சிலம்பிவாரு	...	காடுள்ள	,,
23. தலகரிவாரு	...	கரிதுள	,,
24. தாய்வாரு	...	ஒடிவெள்ள	,,
25. திக்காணிவாரு	...	நகுடி	,,
26. தீத்தவாரு	...	கடவகூள்ள	,,
27. நங்கிரெட்டிவாரு	...	காந்தள்ள	,,
28. நாயினிவாரு	...	க்ஷேத்திரால	,,
29. நாணிசெட்டிவாரு	...	ஸ்ரீ வத்சல	,,
30. பரிகிவாரு	...	வஸவலன்	,,
31. பஞ்செடிவாரு	...	நேமாகுல	,,
32. பாலல்லுவாரு } 33. பாதானிவாரு }	...	எமகாணி	,,
34. பாபினேனிவாரு	...	புகியடு	,,
35. பாகநாட்டிவாரு	...	நெக்கந்திரா	,,
36. பாகலவாரு	...	சாண்டில்ய	,,

37.	பாரவிவாரு	...	செட்டில்லகோத்திரம்
38.	பிள்ளாரிசெட்டிவாரு	...	கலியுகல ,,
39.	போகலவாரு	...	சாண்டில்ய ,,
40.	போகலவாரு (மற்றொரு)	...	யெமகள்ள ,,
41.	,, ,,	...	செட்டிள்ள ,,
42.	,, ,,	...	வெளிவெள்ள ,,
43.	,, ,,	...	ஆத்திரேயய ,,
44.	பார்லபூதிவாரு	...	உந்தந்தலகோத்திரம்
45.	பொலுமுதேலவாரு	...	நேமாகுலகோத்திரம்
46.	பொயிந்தால்வாரு	...	ஸப்தரிஷி கோத்திரம்
47.	மரகானிவாரு	...	கார்ஸதால ,,
48.	மாத்திராலவாரு	...	ஆமாகுல ,,
49.	மாகரலவாரு	...	உத்தண்டல ,,
50.	மாதிரெட்டிவாரு	...	தாமேலன ,,
51.	மொகலி செட்டிவாரு	...	புர்ஸகியான்
52.	மோடுபெல்லிவாரு	...	செட்டில்ல
53.	மோடுபெல்லிவாரு	...	கர்மால ,,
54.	ராஜனுலவாரு	...	நெமிலிகல கோத்திரம்
55.	வடியாரு செட்டிவாரு	...	கொண்டினய ,,
56.	வந்திவாரு	...	கூடவல்லி ,,
57.	வந்தம் செட்டிவாரு	...	கலியுகல ,,
58.	வரதாவாரு	...	பென்னிவெலகல
59.	வாரநாசிவாரு	...	வெலிசால ,,
60.	வெலமாதிவாரு	...	வெய்கள ,,
61.	சானம்செட்டிவாரு	...	ஹரிதாஸ ,,
62.	சிருதாவாரு	...	கடவகூள்ள ,,
63.	சிருஷூரிவாரு		

இவர்களுடைய ஆதிசரித்திரத்தைப் பற்றி போலீசு இனிஸ்பெக்டர் ஸ்ரீ பாபாராவு நாயடுகாரு வேறுவிதமாகஅபிபிராயப்பட்டாலும், சென்னையிலிருக்கும் சிலவெலம குடும்பத்தாரிடம் இதை வாசித்து காட்டியதில் இந்த கருத்தே சரியானதென்று அபிபிராயப்படுகிறார்கள்.

கம்ம (பலிஜ) வாரு.

இந்த கம்மபலிஜவாரு உண்டான விதத்தைப்பற்றி ஒரு சரித்திரத்தில் பின்வருகிறபடி சொல்லப்பட்டிருக்கிறது—அதாவது, பிரதாபருத்திர மஹாராஜனுடைய கம்மை (காதோலையைப் போன்றசீட்டு) ஒருப்பகைஅரசனிடம் போய்ச் சேர்ந்துவிட்டபடியால், அந்தக்கம்மையை தம் ஸமஸ்தானத்திலிருந்த காபுஜாதியாரில் சிலர்த் துணிந்து போய்ப் பிடுங்கிவந்தபடியால், கம்மவாரு என்ற பெயரைப் பெற்றதாகவும்; அந்தப்பகை அரசனுக்குப் பயந்தூஒடி விலகிய

வருக்குவேலமவாரு என்றும்பெயருண்டாகியதாகவும் 1891வருஷகாணிஷ்வாரி ரிபோர்ட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களுக்குக் கம்மவாரென்பதற்கு வேறொரு காரணமாவது.— பிரவுடபிரபந்தகவிஜீவிதம்புத்தகம் 94-வதுபக்கத்தில் இக்கம்மவாரு கிருஷ்ணதேவ ராயலுடைய ஆப்தர்களாக விருந்து, அவரது அந்தரங்கமான இராஜகீய சமாசார ஓலையைக் (கம்மையை) கொண்டுபோய் இதர ராஜர்களுக்குக் கொடுத்து வந்தமையால், **கம்மையை=ஓலையைக்** கொண்டு போவோர் என்று பொருள்படும் கம்மவாரென்றாகியதாகச் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

இவர்களைக் கம்மவாரென்பதற்கு மற்றொருகாரண மென்னெனில். ஆதியில் தண்டகாரணியத்தில் தபசு செய்துகொண்டிருந்த காமாதித ரிஷியை அனேக ராக்ஷதர்கள் வந்து வருத்த; அவர், கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் மகாவிஷ்ணுவைநாடி வணங்க; அம்மஹாவிஷ்ணு அந்த ரிஷியைத்தமது மனைவி இலக்ஷுமி தேவியிடம் முறையிடச்சொல்ல, அந்த ரிஷியும் அப்படியே போய் முறையிட, அந்தம்மை மனம் கசிந்து, தமது காதோலையைக் (கம்மையைக்) கழற்றிக்கொடுத்து, அதற்கு 100-வருஷம் பூசை செய்யும்படி சொல்ல, அந்த ரிஷியும் அப்படியே 100-வருஷம் பூஜைசெய்ய, அந்தக்காதோலை (கம்மை) யிலிருந்து 500-வீரர்கள் ஜனித்தும், அந்த ராக்ஷதர்களைக்கொன்றும் காட்டையழித்துப் பயத்தைப்போக்க, அந்த ருஷியானவர் மகிழ்ந்து அந்த500-பெயரை அங்கு வியவசாயம் செய்து ஜீவனம் செய்யும்படி ஆசீர்வதித்தும், அந்த வீரர்களுக்கு (கம்மையிலிருந்து ஜனித்தபடியால்) கம்மவாரென்று பெயரிட்டனராம்.

அவர்கள் சந்ததிகள் கண்டிகோட்டையில் பிரமாதசண்டை செய்ததில் அனேகர் மடிந்துவிட்டதாகச் சித்தூர் சில்லா மாணியூல் சரித்திரம் 278-279 வது பக்கங்களில் எழுதப்பட்டிருக்கின்றது.

(இவர்களைப்பற்றி வேறொரு கதையாவது)

இவர்கள் விஜயநகரத்துக்கருகில், கிருஷ்ணாநதி தீரத்திலும், மஹாநதிக்கு வடக்கே வியவசாயம்செய்து வசித்து வருங்கால், மகமதியர் வந்து ஒரு பெண்ணைச் சிறையெடுக்க எத்தனப்படுவதை யறிந்து, மானத்துக்கஞ்சி தென்னாடுகளை நாடிவர, இடையில் பெண்ணையாறு வெள்ளப் பெருக்கெடுத்து தடுக்க, உடனே அந்நதிக்கரையில் கங்கைக்குப் பூசை செய்து வணங்க, அந்நதியானது இடையில் கம்மவாரு நடந்து அக்கரைப்போகும்படி தண்ணீரற்று தரையைக்காட்ட, இவர்கள் ஓடிவந்து இக்கரையிலிருந்த ஓர் துவரம்காட்டில் சில நாள்கள் மறைந்திருந்து தென்னாடுகளில் குடியேறினார்களாம். இக்கம்மவாரு வைணவர்களாயினும், இடையில் ஆபத்துகாலத்தில் கங்கையானது வழிவிட்டு உதவி செய்ததனால் அந்தக்கங்கையை ஓர் இஷ்டதேவதை யாகக் கலியாணக் காலங்களில் வணங்கியும்; துவரம் செடி மறைவு கொடுத்தமையால் அதன் இலைகளை கலியாணபந்தலின் வடகிழக்குஸ்தம்பத்தில் கட்டி வணங்கியும் வருவது முண்டாம். இவர்களில் கண்டிகோட்டவாரு, கடையாலவாரு, முக்கரவாரு, பங்காரு முக்கரவாரு, பகடமுவாரு என்று பல வீடு கோத்திரக்காரர்கள் உண்டாம்.

இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் 1891௵ கனிஷ்வாரி கணக்கெடுத்தபோது இந்த ராஜதானியில் 324155-குடிகள் இருந்ததாகவும், இவர்களுக்குள் 231-உள் வகுப்பார்களும், இவர்களில் எழு உள்வகுப்பார் விசேஷமானவர்க ளென்றும் எழுதி இருக்கிறார்கள். அந்த எழு வகுப்பார்கள் யாவர்களெனில்"

1. **பங்காருவாரு**=தங்கமூக்குத்தியை தரிப்போர், வடஆர்காட்டிலும்,மற்ற விடங்களிலும் 12, 617-குடிகளிருந்தார்கள்.

2. **கம்ப்சாடுவாரு**=கூடையினால் முகத்தை மறைப்போர், கிருஷ்ணா, நெல்லூர் முதலானவிடங்களில் 1, 99, 807-குடிகளிருந்தார்கள்.

3. **கோடசாட்டிவாரு**= சுவருக்குப் பின் மறைந்தவர்கள், வட ஆர்காடு, செங்கல்பட்டு முதலான விடங்களில் 68, 446-குடிகளிருந்தார்கள்.

4. **இல்லுவேல்லனிவாரு**=வெளியில்வராதவர்கள்-அனந்தப்பூர், நெல்லூர், கிருஷ்ணா ஜில்லாக்களில் 87, 870-குடிகளிருந்தார்கள்.

5. **காவலிவாரு**=கோதாவரிமுதலான விடங்களில் 42, 888-இருந்தார்கள்

6. **பெத்தகம்மவாரு**=கிருஷ்ணா முதலான விடங்களில் 26, 941-குடிகள் இருந்தார்கள்.

7. **வடுதகம்மவாரு**= கோயமுத்தூர் முதலானதுகளில் 28, 578-குடிகள் இருந்தார்கள்.

இந்த எழு உட்பிரிவாருக்குள் போஜன பிரதிபோஜன முண்டு ; ஆனால் கொள்வினை கொடுப்பினை சம்பந்தம் கிடையாதாம்.

(மற்றோர் கதையாவது.)

இக்கம்மவாருடைய ஆதி சரித்திரத்தைப் பற்றி கோயமுத்தூர் முதலான தென்னாடுகளில் வேறுவிதமாகச் சொல்லுகிறார்கள். அதாவது:— பல்லடம் தாலுகா சித்திநாயக்கன்பாளைய வாசியும், கம்மவாரு புராணத்தை கவிகளாகப் பாடிய ஸ்ரீமாந் இராமாநுஜ கவிராயரவர்கள், இந்த கம்மவாருடைய ஆதி உற்பத்தியைப்பற்றி பின்வருகிறபடி சொல்லி இருக்கிறார். எப்படியெனில்—சந்திர வம்ச க்ஷத்திரியனாகிய யயாதியின் சந்ததியாகும் **சசிபிந்துவுக்கு** துஹீனனும், அவனுக்கு நந்தனும் பிறந்ததாகவும்; அந்த**நந்தன்**—துஹீனனுக்கும், ஒரு பஞ்சமஸ்திரீக்கும் பிறந்தபடியால், அந்தநந்தனை அவனுடைய பந்துக்கள் ஜாதி பிரஷ்டனாகக் கொண்டு அவமதித்துவர; அந்தநந்தன் சசிக்கமுடியாமல் தனது இராஜ அதிகாரத்தினால் தன்னை அவமதித்த பந்துக்களைப் பிடித்து வதைக்க; அக்கஷ்டத்தைசகிக்கமுடியாமல் அநேகபந்துக்கள்கூடிதமதுநாட்டை விட்டுதெற்கே யோடிவர, இடையில் பெண்ணைநதி பிரவாகமாகித் தடுக்க; அக்கரையில் தபோநிதியாக இருந்த ரேணுகாதேவியை வணங்கிவேண்ட, அந்தம்மை தமது இரண்டுகாதோலை (கம்மல்களை) மந்தரித்துக்கொடுக்க; அதைப்பெற்றவுடனே பெண்ணையாறு வழிவிட, இக்கரைவந்ததாகவும்; — அன்றுமுதல் அவர்களுக்கு **கம்மவாரு** என்றபெயர்வழங்குகிறதென்றும்;—அவர்களுக்கு பலபதிபாஷ்கர ஐயர் குலகுருவென்றும், பட்டுமூர்த்தி இயற்றிய திப்தகாவியத்தில் விவரமாகக் காணலாமென்றும்; அவர்களுடைய வீட்டுப்பெயர் விவரங்கள் பிச்சகொண்டி

ருக்கு செம்மையாகத் தெரியுமென்று சொல்லுகிருர். இக்கதை யன்றியில், வேருெரு கதையும் இருக்கிறது. அதாவது

பிரம்மாண்ட புராணம், கலிதரும பிரகரணம்III முதல் 20-அத்தியாயங்களில் சூதர் சவுனகாதிகளுக்குச் சொல்லுகிறபடி, சூரியவமிச ராஜஞன **துவிலீபன்** சந்தானக் கதையில் கம்மவாரு அந்தத் துவிலீபருடைய லக்ஷம் சந்ததிகளிற் பிறந்து, சந்திரவமிசத்தாரோடு சம்பந்தம் செய்ததனுல், உபயாதிகளென்றும், இவர்களுடைய ஆதிதந்தை **தருமபாலன்** என்றும், ஆதி ஆசாரியன் **தருமசீலன்** என்றும், தருமபாலனுடைய குமாரத்தி **கன்னிகாமணியை** ஒருசந்திரவமிசத்தான் சிறையெடுக்கப் பிரயத்தனப் படுவதை யறிந்த பெண்ணும், பெற்ருேரும் ஒருகறுப்புநாய்க்குப் பெண்வேஷம் பூட்டி வீட்டில் கட்டிவிட்டு, தென்ருடுகளை நாடிவருகையில், ஒருபெருநதி வெள்ளத்தால் தடுக்க, அப்போது அந்நதிக்கரையில் தபோநிதிகளாக விருந்த **ஜமதக்கினி** மஹாரிஷியையும், அவர் மனைவி **ரேணுகாதேவியையும், பரசுராமரையும்**, வணங்க; அந்த ரேணுகாதேவி தன்காதி லணிந்திருந்த **கம்மலை** ஓலையைப்பிடுங்கிக் கொடுத்து வணங்கி கரை தாண்டும்படி சொல்ல, அப்போது அந்தநதிவழிவிட, அன்றுமுதல் அவர்களுக்கும் **கம்மவாரென்றும்**, அக்கம்மலைக்கொடுத்துதவிய **ஜமதக்கினி, இரேணுகாதேவி, பரசுராமர்** குலதேவர்களாகக்கொண்டு, கலியாணகாலங்களில் முதலில் வணங்கியும், பிறகு **பலபத்திரர்** என்னும் குலாசாரியருக்கு, முதல் தாம்பூலம் கொடுத்தும், விவாகம் செய்கிருர்களாம். இவர்களில் தமதுஸ்திரீகளைக் கோஷாவில் வைப்பவர்களுக்கு **கோடாசாட்டுவரென்றும்**, மற்றவர்களுக்கு **கேம்பசாட்டுவாரென்றும்**, இருவகுப்பார்களாக இருப்பதன்றியில், சிங்கமுவாரு, இந்திரபுரமுவாரு, லக்ஷபுரமுவாரு, வகுளம்வாரு, லுகுளம்வாரு, மைலேட்டிவாரு, பைடிபாலிவாரு, புஷ்பம்வாரு, ஜன குலம்வாரு, வசந்தம்வாரு, செம்பேடுவாரு, கந்தாளம்வாரு, புனசூர்வாரு, மஹிராடுவாரு, முன்னூரிவாரு,சல்லாவாரு,வங்காபலவாரு,பசுபலவாரு,வேலூருவாரு, பிடிகுலராலவாரு, சாலம்வாரு, விந்தலவாரு, ஆடேருவாரு, என்ருதி வீட்டுக்காரர்களும், கோத்திரக்காரர்களு மிருக்கிறதாக பீளமேடு ம-ா-ா-ஸ்ரீ, **கோபாலசாமி நாயடவர்களிடமிருக்கும், ஸமஸ்கிருத்சுலோக கிரந்தத்தில்** சொல்லப் பெற்றிருக்கிறது.

இக்கம்மவாரு தொன்று தொட்டு வியவசாயத்தில் வல்லவர்வளாசையால் "கம்மவானிகண்டே கடினபூமியு வெருசுனு, "கம்மஜாதி சேரிதே கடமஜாதி தொலுகுனு "என்ருதி பழமொழிகள் வழங்கி வருகின்றன. இவர்கள் அமராவதி, கிருஷ்ண, நெல்லூர், செங்கல்பட்டு, கடப்பை, கோயமுத்தூர், திருநெல்வேலி முதலான ஜில்லாக்களில் விசேஷமாகவும், முக்கியமாகப் பருத்தி விளையும் கரிசல் நிலமுள்ள விடங்களில் இருக்கிருர்கள். இவர்களில் சிலர் நாசுவன் (அம்பட்டன்) கையில் குடுமியைக் கொடுத்துக் குனிந்து க்ஷவரம் செய்துக்கொள்வது கௌரவக்குறைவெனத் தலை க்ஷவரமும் செய்துகொள்வதில்லையாம். 1901-வூ காணிஸ்வாரி கணக்கின்படி இந்த **இராஜதானியில் இவ்வகுப்பில் 9,73,723**-குடிகளிருந்தார்கள்.

இந்த கம்மவார்களில் அநேகர் திருநெல்வேலி ஜில்லாவில் பலவீட்டுப்பெயர்களாலும், கோத்திரமுதாலானதுகளினாலும்பிரபலமாக இருப்பதால், அவ்விடத்திலுள்ளாருடைய வீட்டுப்பெயர் முதலானதுகளை இதனடியில் காணலாம்.

(வீட்டுப்பெயர்கள்—கோத்திரமுதலான விவரம்.)

1-வெல்லம்வாரு-பாலெட்லகோத்திரம்,மேல்பட்டிஓட்டப்பிடாரத்திலிருக்கிறார்கள்
2- செப்படிவாரு-கொங்குளகோத்திரத்தார்,சிவலாபாடியிலிருக்கிறார்கள்
3- கோட்டவாரு-புலிகொட்லகோத்திரம்-பந்தல்குடியிலிருக்கிறார்கள்
4- இராவல்லவாரு-சங்கரநாயினர் கோயில், கிழவந்தவலியிலிருக்கிறார்கள்
5- செருகுவாரு-சென்னுக்குளம் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருக்கிறார்கள்
6- எட்ரேருவாரு-சாத்தூர் தாலுக்கா, எட்ரேருபட்டியிலிருக்கிறார்கள்
7- கோட்டவாரு-சங்கரனயினர் கோயில் குருவிகுளத்திலிருக்கிறார்கள்
8- கோடுல்லவாரு-கடகம்பாளையத்திலிருக்கிறார்கள்
9- வீமனவாரு-மேமமந்தையிலிருக்கிறார்கள்
10-சிங்கமுவாரு-படந்தவளியிலிருக்கிறார்கள்
11-மரபட்டிவாரு-வேணிலிகிராமத்திலிருக்கிறார்கள்
12-வண்டாளவாரு ஷை ஷை
13-மாதனவாரு-கண்டமனுலகிராமத்திலிருக்கிறார்கள்
14-நாதலிவாரு-வாலசமுத்திரத்திலிருக்கிறார்கள்
15-நறறவாரு-உம்பத்தூரிலிருக்கிறார்கள்
16-ஜாமண்டலவாரு-சிதம்பரப்பட்டியிலிருக்கிறார்கள்
17-மந்தலப்பவாரு-மாவிலிபட்டியிலிருக்கிறார்கள்
18-பயிண்டிவாரு-கொண்டரெட்டி பட்டியிலிருக்கிறார்கள்
19-கோரேருவாரு-ஆகலகூடத்திலிருக்கிறார்கள்
20-நாயடுவாரு-சீகம்பட்டியிலிருக்கிறார்கள்
21-காமினிவாரு-சீயம்பட்டியிலிருக்கிறார்கள்
22-சம்மட்டிவாரு-சிவனுமபட்டியிலிருக்கிறார்கள்
23-சாதுவாரு-மத்துக்குடி, உச்சிவலார், வாலசமுத்திரத்திலிருக்கிறார்கள்
24-பொற்றவாரு-சாத்தூர் வெங்கிடேசர புரத்திலிருக்கிறார்கள்
25-பொட்டுவாரு ஷை ஷை
26-கந்தப்பவாரு-கலுங்குப்பட்டியிலிருக்கிறார்கள்
27-காளையர் குருசிவாரு-செங்கோட்டையிலிருக்கிறார்கள்
28-கெட்டமுவாரு-வத்திப்பொருட்டி புதுப்பட்டியிலிருக்கிறார்கள்
29-மதமிஞ்சிவாரு-சாத்தூருக்கடுத்ததாயில் பட்டியிலிருக்கிறார்கள்
30-நாமவாரு ஷை ஷை
31-கும்பினிவாரு-சிவகத்தாகுருச்சியிலிருக்கிறார்கள்
32-மல்லேனிவாரு-தடம்பாறையிலிருக்கிறார்கள்
33-குறசலவாரு-தருகுசாலபுரத்திலிருக்கிறார்கள்

34-துப்பட்டிவாரு-குருவிகுளத்திலிருக்கிறார்கள்
36-பச்சலவாரு-மோரம்பள்ளியிலிருக்கிறார்கள்
37-சல்லாவாரு-திம்மராஜபுரத்திலிருக்கிறார்கள்
38-தந்தூரிவாரு-சிங்கத்தாகுருச்சியிலிருக்கிறார்கள்
39-கொத்தபல்லிவாரு-காருசேரியிலிருக்கிறார்கள்
40-இராமபட்டிவாரு-பூவரணியிலிருக்கிறார்கள்
41-வயிஹுவாரு-சலமந்தத்திலிருக்கிறார்கள்
42-லிங்கட்டில்வாரு-வெங்கடேசபுரத்திலிருக்கிறார்கள்
43-தான்ருவாரு ஷை ஷை
44-கென்னவாரு-களுகுபட்டிலிருக்கிறார்கள்
45-தாதவாரு-வென்ஞளியிலிருக்கிறார்கள்
46-வேதகிரிவாரு-குருவிகுளத்திலிருக்கிறார்கள்
47-ஆத்தூரிவாரு-வென்ஞளியிலிருக்கிறார்கள்
48-வாசுரெட்டிவாரு-செங்கமலநாச்சியார் புரம்வெள்ளையாபுரத்திலிருக்கிறார்கள்
49-சலிசிவாரு-மீசலூரிலிருக்கிறார்கள்
50-சோகினிவாரு-மேலமறினூரிலிருக்கிறார்கள்
51-சாகினிவாரு ஷை ஷை
52-விரிப்பினிவாரு-ஆழ்வார் நாயக்கம் பட்டியிலிருக்கிறார்கள்
53-குறஜெலவாரு ஷை ஷை
54-வெல்லம்வாரு-செவ்வட்டி ஜமீன்தாருடைய குடும்பத்தார்
55-கொண்டவாரு-குருவிகுளத்திலிருக்கிறார்கள்
56-கோனபல்லிவாரு ஷை ஷை.
57-பிலாரிவாரு-இழவந்தனியிலிருக்கிறார்கள்
58-கம்மவாரு-கொண்டரெட்டிபட்டியிலிருக்கிறார்கள்
59-பருத்திவாரு-எட்டியாபுரத்துக்கடுத்த காட்டுபுதுபட்டியிலிருக்கிறார்கள்
60-அயஞலவாரு-வெளவாதியிலிருக்கிறார்கள்
61-கொடுகுலவாரு-சிவகாசிக்கடுத்த ஆனைகூட்டத்திலிருக்கிறார்கள்
62-தேட்டிவாரு-இந்தலக்கடமையிலிருக்கிறார்கள்
63-காகூரிவாரு-படந்தவள்ளியிலிருக்கிறார்கள்
64-மந்தலப்பவாரு-மாவிலிபட்டியிலிருக்கிறார்கள்
65-சீர்பாட்டிவாரு-வடமலபுரத்திலிருக்கிறார்கள்
66-மங்கபாட்டிவாரு-சிங்கத்தாருகுடிசியிலிருக்கிறார்கள்
67-சப்பினவாரு ஷை ஷை
68-பண்டாருவாரு-மீன்துள்ளியிலிருக்கிறார்கள்
69-பண்டலவாரு-போஜப்பட்டியிலிருக்கிறார்கள்
70-வாசுரெட்டிவாரு-நெல்லூர் ஜில்லாவில் பிரபலர்-விவாஹாதி காலங்களில் பந்துக்களில் முதல் தாம்பூலத்தை பெற்றுக்கொள்பவர். திருநெல்வேலி, சாத்தூர் தாலுக்காவெள்ளையா புரத்தில் குடியிருக்கிறார்கள்—
71-நாயினிவாரு-வெள்ளையாபுரத்திலிருக்கிறார்கள்

72-வச்சலவாரு-முரம்பனில் குடியிருக்கிறார்கள்
73-கென்னினிவாரு-வென்றானியில் குடியிருக்கிறார்கள்
74-பொட்டவாரு-சிவலார் பட்டியிலிருக்கிறார்கள்
75-வயனலவாரு-தாளூர் கோத்திரம்,எட்டியாபுரம் சாமிநத்தத்திலிருக்கிறார்கள்
76-காளாஸ்திரிவாரு-வல்லட்டிகோத்திரத்தார்செங்கோட்டையிலிருக்கிறார்கள்
77-பொட்டுவாரு - கன்ஜலகோத்திரம்-தூத்துக்குடி வெங்கடேசுபுரத்தி லிருக்கிறார்கள்
78-சீபாட்டிவாரு - கூம்பூர் கோத்திரம்-தட்டப்பறை திம்மாராஜபுரத்தி லிருக்கிறார்கள்
79-சல்லாவாரு- ஷை ஷை ஷை
80-வெல்லம் கொண்டவாரு-சங்கரநயினார்கோயில்குருவிகுளத்திலிருக்கிறார்கள்
81-இராவல்லவாரு-இளவந்தலிலிருக்கிறார்கள்
82-செருகுவாரு-ஸ்ரீவல்லிபுறத்தார்.நாச்சியார்பட்டிசென்னார்குளத்திலிருக்கிறார்கள்
83-குரபாட்டிவாரு-மணியாச்சிபுவானி கிரமத்தி லிருக்கிறார்கள்
84-பாலேட்டிவாரு-பலவிடங்களி லிருக்கிறார்கள்

இப்படியேஇந்த கம்மவாருக்குள் 600-வீட்டுக்காரர்களும்,600-கோத்திரத்தார்களும் இருப்பதாக, ஸ்ரீ வல்லிபுத்தூர் தாலுகா சேத்தூர்ஜமீன் சரகம்சேகர முகவூரில் வசிக்கிற கம்மவாரு நாயடுகாரு ஒருவரிடமிருக்கும் செப்புப்பட்டயத்திலிருக்கிறதாம்.

பெரிகபலிஜவாரு.

கம்மவாரு விளைவிக்கும் தானியம் முதலானதுகளைப் பைகளிற் போட்டு மாடுகளின்மேல் கொண்டுபோய்த் தூரதேசங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கு **பெரிக பலிஜவாரு** என்று பெயர். சிலர், இவர்களை பிரிகிபலிஜவாரென்று சொல்வதுமுண்டு. அதாவது ஆதியில் பரசுராமர் க்ஷத்திரியர்களை நாசமாக்க கங்கணம் கட்டிக்கொண்டு வந்தபோது, இவர்கள் அப்பரசுராமருக்கு பயந்துக்கொண்டு, தெற்கே ஓடிவந்து விட்டபடியால், இவர்களை **பிரிக்கி**=பயந்து வந்தவர்களென்றும் சொல்லுகிறார்கள். இவர்களுடைய விவாஹகாலங்களில் பெரிகையென்ற மாட்டின்மேற் போடும், கோணிப்பையில் புல்லை நிறைப்பித்துக்கட்டி அந்தப் பையின்மேல் நக்ஷத்திரங்களைப்போல பல வர்ண புள்ளிகளை வைத்து அலங்கரித்து பூஜை செய்தபிறகே, தாலியைக் கட்டுவது வழக்கம். இவர்களுக்குள் அம்மி மிதித்தல் முதலான சடங்குகளில்லை — கத்தி கட்டாரி ஆயுதங்களை வைத்து வணங்குவதுண்டு— இவர்களில் அனேகர் உப்பு மூட்டைகளையும், கோணிப்பைகளை தைத்தமூட்டைகளையும் மாடுகளின், மேல் கொண்டுபோய் வியாபாரம் செய்து நாளாவட்டத்தில் சிலர் ஜமீன்தாரர்களானார்கள். இக்குடும்பத்தில் அனேகர் இப்போது இராஜமஹேந்திரம், விசாகபட்டணம் ஜில்லாக்களில் நல்ல அந்தஸ்தி லிருக்கிறார்கள். சமீப காலத்துக்கு முன் பரமபதமடைந்த புகழுடம்பினராகிய ஸ்ரீ மஹாராஜா, கோடே, நாராயண, **கஜபதிராயலு காரும்**, விசாகப் பட்டணத்தின் திலகங்களைப் போலிருந்த,

ஸ்ரீ நரசிங்க ராயலுகாரும், ஜக்காராயலுகாரும், குருப்பம்ஹீமின் தாரவரர்களும் இந்த வகுப்பைச் சார்ந்தவர்களாம். இவர்களுக்கு அந்த பிராந்தியங்களில் பாபுகாரு, வஜீருகாரு, இராவ்காரு, இராணிகாரு, என்றுதி பட்டங்களை வழங்கி வருகின்றனர். சுகதுக்கச் சடங்குகளை வடநாடுகளை அனுசரித்து நடத்தி வருகிறார்கள். சென்னை முதலான சில விடங்களில் நாயடுகாரு என்ற பட்டத்தையும் இந்த பிராந்தியத்திற்கேற்றபடி சடங்குகளையும், வழங்கிவருகிறார்கள். சென்னை ஐகோர்ட்டு இண்டர் பிரிட்டராகவும், பிறகு டிஸ்டிரிகட்டு முனிசீப்பு முதலான உத்தியோகங்களை வகித்துவந்த ஸ்ரீ பண்டல இராமசுவாமி நாயடுகாரும் இந்த வகுப்பைச் சார்ந்தவராம். கி - பி. 1901-ஆம்சென்னை காணிஸ்வரி கணக்கின்படி, இந்த ராஜதானியில்22, 732-பெரிசபலிஜவாருகள் இருந்தார்கள்.

பத்தி பலிஜவாரு.

இவர்களும் பூர்வம் விஜயநகர ஸமஸ்தானத்தி லிருந்து தெற்கே வந்து பருத்தி வியாபாரத்தையே விசேஷமாகச் செய்து வருவதனால் இப்பெயரைப் பெற்றார்கள் போலும்.

கன்னடி பலிஜவாரு.

இவர்களும் பூர்வம் விஜயநகர ஸமஸ்தானத்தி லிருந்து பல்லாரி மைசூர் முதலான பிராந்தியங்களில் குடியேறி யவர்கள். இவர்களுடைய ஆதி மதம் வைணவ மேயாகிலும், பல்லாரி, மைசூர் முதலான விடங்களிலிருக்கும் சிலர் சிவாசார மதஸ்தர்களைப் பார்த்து சைவமதத்தை தழுவிக்கொண்டும், கன்னடி பாஷையைப் பேசிக்கொண்டும் வருகின்றனர். இவர்களுக்குள், எத்துகன்னடி, எனமு கன்னடி பலிஜவாரென்றப் பெயர்களால் சில்லரை வியாபாரிகள் அநேகருண்டு. சென்ற கி - பி. 1901-காணிஷ்வாரி கணக்கின்படி இந்த ராஜதானியில் 20975-குடிகளிருந்தார்கள்.

உப்பு பலிஜவாரு.

இவர்களும் பூர்வம் விஜய நகரம் முதலான வட தேசங்களி லிருந்து சென்னை முதலான விடங்களில் உப்பு வியாபாரம் செய்து வந்தமையால், இப்பெயரைப் பெற்றார்கள்போலும். இவர்களிற் சிலர் ரேவு துரைகளிலும், நகைக்கடைகளிலும் தரகு வியாபாரம் செய்துக் கொண்டிருக்கினும்; சென்னை, செங்கல்பட்டு முதலான விடங்களில் அநேக தனிகர்கள் இருக்கிறார்கள்.

ஜனப பலிஜவாரு.

இவர்கள் ஸமஸ்தானபதிகளுக்கு வேண்டிய பட்டுசரிகைத் துணிகளை நெய்து கொடுத்துக்கொண்டு வந்தவர்கள். இவர்களை புஷ்பால பலிஜவாரு என்றும் வழங்குவதுண்டாம். இக்காலத்தில் இவர்களில் அநேகர் தீகருச்சி, சாய

துணிமணிகளை விற்றுவந்தாலும், பெரும்பாலார் தரித்திர தசை யடைந்து கோணிப்பை முதலானதுகளைத் தைத்தும், துரைமார்கள் வீட்டிற்கு சீட்டி முதலான ஹாகர் வியாபாரம் செய்து வருகிறார்கள். தமிழ்நாடுகளில் இவர்களுக்கு சலுப்புசெட்டிகளென்று பெயராம்—மதுரையில் இவர்களுடைய ஒரு வகுப்பாருடைய மனைவிகள் தமிழ்பேசி வருகிறார்கள். கி. பி. 1901 ஞு ம் 82, 362 குடிகளிருந்தார்கள்.

வாடபலிஜவாரு.

இவர்கள் ஸமஸ்தானாதிபதிகள் பெரிய நதி, கடல் முதலானவைகளைக் கடந்துபோகும்போது அதிகசத்தியத்தோடும், சாமார்த்தியத்தோடும்,தோணி பரசல் கப்பல்களை யோட்டினவர்கள். இவர்களில் சிலர் வலச பலிஜவாராம். இவர்கள் சமஸ்தானத்துக்குவேண்டிய பலவித சரக்குகளைப் பலதேசங்களுக்கு போய்வாங்கிவந்து ஸமஸ்தானத்துக்குள் வியாபாரம் செய்து, வரும்படியில் நான்கில் ஒருபாகம் சமஸ்தானத்துக்குச் சுங்கமாகக்கட்டி வந்தார்கள். கி பி. 1901-ஞு கானிஷ்வரி கணக்கின்படி 4, 70, 989-குடிகளிருந்தார்கள்.

கோயில்டி பலிஜவாரு.

இவர்கள் தஞ்சை நாட்டிற்கு சேவப்பநாயகொருவந்தபோது அவரோடு பிறப்பட்டு விஜயநகர ஸமஸ்தானத்திலிருந்துவந்தவர்கள்-இவர்கள் சிலநூற்றுண்டுகளாக அந்ததமிழ்நாடாகிய தஞ்சாவூரிலும், அதையடுத்த இடங்களிலும் வதிந்து வந்ததில் தமது சொந்தபாஷையாகியதெலுங்கைமறந்து, அதற்கு பதிலாக தமிழ்பாஷையையும், தமதுபுராதன சடங்குகளிலும் சிறுபான்மை மாற்றி நடத்தி வருகிறார்கள்—கி. பி 1901ஞும் கானிஸ்வார்கணக்கின்படி இந்தராஜதானியில் தமிழ்டாஷையை உபயோகிக்கும் பலிஜவாரு 1, 80, 884 குடிகளிருந்தார்கள்—

பூந்தமல்லி பலிஜவாரு.

இவர்களும் ஆதியில் விஜயநகர ஸமஸ்தானத்தைச் சார்ந்த பிரதிநிதிகளாகிய நாயடுகார்களுடன் வந்தவர்கள், இவர்களில் பெரும்பான்மையோர் தோட்டங்களில் வெற்றிலை காய்கறிகளை பயிர்செய்து விற்பனைசெய்து வருகிறார்கள்.

செட்டிபலிஜவாரு.

இவர்களைத்தெலுங்குச்செட்டிகள் என்று சொல்வது முண்டு. இவர்கள் இருபத்துநான்குமனையார் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் ஆதிசரித்திரம் பின்வருமாறு:—"புநதீவீசன்" என்னும் மன்னவன், அந்தகாசுரனல் அவஸ்தைப்பட்டுச் சிவனிடம் முறையிட அச்சிவனுத்திரவினல் பிரம்மா வந்து அந்தஅந்தகாசுரனைக் கொன்று. அவன் மண்டை ஓடுகளைத் திராசு தட்டுங்களாகவும், முதுகெலும்பைத தண்டமாகவும், நரம்புகளைக்

கயிறுகளாகவும் தொடுத்து திராசாக்கி வியாபாரம் செய்து பிழைக்கும்படி சொல்ல; அவனும் அப்படியே செய்து புத்திரனில்லாக் குறையால் புத்திர காமேஷ்டியாகம் செய்ய ; அவன் மனைவி சுஜனுடையயின் வயிற்றில் 24 ரிஷிகளே, 24 புத்திரர்களாகப் பிறந்ததாகவும், அந்த இருபத்திநான்கு பெயரே வங்குநுவன், கந்தவங்குரவன், வாஜவன், மராட்டியன், கயரவன், தில்லைவான், ரெட்டயன், பிடுதுவான், கவலைவான், தவழைவான், கோலவான் கனத்தவான், பல்லவன், மும்முடிவான், கோட்டைவான், அம்மைவான், மங்களவான், பக்ஷவவான், லகாகயன், நனவிதியான், மதலவான், பலவிதியான, இராயலுவான், என்ற 24 தெலுங்கு வமிசத்தார்களானதாகவும், இவர்களில் மும்முடியானுக்குக் காஞ்சீபுரத்தில் முடிசூட்டியும், மங்களவானுக்கு குசலவதி நகரத்தில் முடிசூட்டியும், மற்ற 22 பெயர் மந்திரிகளாகக்கொண்டு ஆண்டு வருகையில் ; சோழனுடைய உத்தரவின்படி கப்பல் தயார் செய்து தென்கடல் வழியாக மலையாளதத்துக்குப்போய் வியாபாரம் செய்ய ; அச்சேரன் இவர்களைச் சுங்கம் கேட்க ; இரு கக்ஷிகாரர்களுக்கும் சண்டையுண்டாக, அச்சண்டையில் சேரன், மடிய அவன் குமாரத்தி சிரோன்மணி கருமம்செய்து கேரளத்தை யாண்டதாகவும்,—பிறகு பாண்டியனுடைய துஷ்ட குடிகளுக்கு இவர்கள் அடைக்கலம் கொடுத்து ஆதரிக்க, அப்பாண்டியனுக்கு தம் சிரங்களைக் கொடுக்க காமாக்ஷியின் மகிமையால், சிரங்களைப் பெற்றதாகவும், பிறகு சோழன் இவர்கள் குடும்பத்தில் ஒருபெண்ணைக் கேட்க, பொன் பிரதிமையைச் செய்து காமாக்ஷியின் மகிமையால் உயிர் கொடுத்ததாகவும்; பிறகு கூர்ச்சரநாட்டு தநகோவிந்தனேடு எதிர்த்துச் சண்டையிட்டு அவனைக்கொன்று, அவனுடைய பெண்களை நாயகிகளாகக் கொண்டதாகவும், தம் சொந்தநாயகிமார் அக்கினிகுண்டத்தில் விழுந்து இறந்ததைக் காமாக்ஷியம்மன் மகிமையால் உயிர்பெற்றதால் அந்தக்காமாக்ஷி அம்மையே குலதெய்வமாகக் கொண்டாடி வருகிறதாகவும் சொல்லுகிறார்கள். இதுவிஷயத்தில் வெறெரு கதையும் உலாவுகிறது.—அதாவது; இவர்கள் கூச்சரநாட்டரசனேடு சண்டைக்குப்போனபோது இவர்களுக்கு எதிரியினல் அபாயமுண்டாகும் குறிப்பை நாய்கள்வந்து அறிவிக்கும் என்றும், அப்போது தம் அரிவையர் அக்கினிகுண்டத்தில் விழவேண்டுமென்றும் சொல்லிப்போக, அந்தநாய்களை எரும்புற்றுக் கருகில் கட்டிவைக்க, அவைகளை எரும்புகள் கடித்தபோது நாய்கள் சகிக்கமுடியாமல் சேந்நீரோடு ஓடிவந்து குறைக்க, இவர்கள் பெண்டுகள் பார்த்துபயந்து அக்கினி பிரவேசமானதாகவும்; அதன்மேல் இந்த செட்டிபலிஜர்கள் தமக்கு மனைவிகளில்லாக் குறைவினல், கொங்குநாட்டு வேளாளப் பெண்களை வைப்பாட்டிகளாகக் கொண்டதாகவும்; ஆகவே, இப்போதும் இவர்களுடையமனைவிகளுக்கு இவர்கள் தாலியைக்கட்டாமல், பந்துக்களான பெண்டுகளைக் கொண்டு தாலியைக்கட்டுவித்தும், கைகளுக்கு வளையல்கள் போடாமலும், சுவாமிமுதலானச் சடங்குகளைச் செய்யும்போதுஸ்திரிகளில்லாமலும் புருஷர்கள்மாத்திரம் செய்து வருகிறார்களாம்.— இவர்களை 1901-ளும்) கானிஷ்வாரி கணக்கின்படி 95, 924 குடிகளென்றும், வடுகர் என்றும் எழுதியிருக்கிறார்கள்போலும்— இவ்

வகுப்பார்களில் அநேகர் வர்த்தக வியாபாரங்களைச் செய்து தனவந்தர்களாக இருக்கிறார்கள். கோயமுத்தூர் முதலான விடங்களி லிருக்கும் இவர்களிற் சிலர்பேசும் பாஷை தமிழ், தெலுங்குக் கலந்து கொச்சையாகப்பேசி வருகிறார்கள்.

கொல்ல பலிஜவாரு.

இவர்கள் பூர்வத்தில் விஜயநகர ஸமஸ்தானத்தாருடைய கோக்களைப்பாது காத்துக்கொண் டிருந்தார்கள். கோபாலர் என்ற பதத்திலிருந்து கொல்லர் என்ற சுருக்கப்பெயராக நாளவட்டத்தில் மருவியதுபோலும். இவர்களுள் 274 உட்பிரிவினர்கள் இருக்கினும், இவர்களில் முக்கிய மானவர்கள் பத்துப்பெயர் களாம். இவர்கள் விவரமாவன.

(1) ஆலகோல்லவாரு —கஞ்சாமில் 21683-விஜாகப் பட்டணத்தில் 114820-கோதாவரியில் 17173-ஆக 135569-குடிகளிருந்தார்கள்.

(2) ஏர்ரகோல்லு—கோதாவரியில்20709 - கிருஷ்ணாவில் 22149 நெல்லூரில் 4489-கூடப்பையில் 3166-கர்னூலில் 4993-கோயமுத்தூரில் 2003ஆக 172633-குடிகளிருந்தார்கள்.

(3) காணகோல்லலு—கடப்பையில் 32269-கர்னூலில் 14112-அநந்தப்பூரில் 21795- வட ஆர்காட்டில் 8499, பல்லாரியில் 7455, நெல்லூரில் 4756.ஆக 92245-குடிகளிருந்தார்கள்.

(4) மேகலகோல்லலு—கஞ்சாமில் 20531-விசககப் பட்டணத்தில் 2272-ஆக 23002-குடிகளிருந்தார்கள்.

(5) பக்கநாட்டிகோல்லலு—கர்னூலில் 10864-பல்லாரியில் 4171 ஆக 16747-குடிகளிருந்தார்கள்.

(6) பூஜகோல்லலு—கிருஷ்ணாவில் 495241-நெல்லூரில் 56971-கடப்பையில் 25916-கர்னூரில் 19618-ஆக 155075-குடிகளிருந்தார்கள்.

(7) பூனிகோல்லலு —கோதாவரியில் 10108-கிருஷ்ணாவில் 10144 நெல்லூரில் 36606-கடப்பையில் 6785-வட ஆர்காட்டில் 26531-ஆக 94252 குடிகளிருந்தார்கள்.

(8) பூரிகோல்லலு—கிருஷ்ணாவில் 22143-நெல்லூரில் 9147-ஆக 3338-குடிகளிருந்தார்கள்.

(9) போக்கிஷ கோல்லலு—பல ஜில்லாக்களில் 22250-குடிகளிருந்தார்கள். இவர்களையே ஸ்வதந்திர கொல்லர்களென்று சொல்லலாம். இவர்கள் மஹா சத்தியவந்தர் களாக இருந்தபடியால் விஜயநகர ஸமஸ்தான பதியின் பொக்கிஷத்துக்கு முக்கிய போஷகாரர்களாக இருந்தார்கள். இவர்களில்ஒரு வகுப்பார் சில வருஷங்களுக்குமுன், மறுமணம் செய்துக்கொண்டும் வந்ததோடு, பூஜகொல்லர்களில் பெண்கள் தம் கணவர்கள் துஷ்டராக இருக்கிற விஷயத்தில், கலியாணச்செலவைக் கொடுத்துவிட்டு விலக்கிக்கொள்ளலாமாம்

சாத்தாதாரர்கள் இவர்களுக்கு குருமார்களாம். பலிஜவாரோடு போஜன பிரதி போஜனம் செய்துக்கொண்டும், நாயடுகாரென்றப் பட்டத்தைதரித்துக்கொண்டுமிருக்கினும், மற்ற நடவடிக்கைகளில் இவர்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைச் சார்ந்த யாதவகுலத்தைச் சார்ந்தவர்கள். ஒருகாலத்தில் சங்கமவகுப்பைச் சார்ந்த ஹரிஹரராயலு, புக்கதேவராயலு முதலான விதியா நகராதிபர்களாக இருந்த அரசர்கள் இவர்களுடைய முன்னோர்களாம்.—நிற்க

இவர்களன்றியில் சிலர்காபு ரெட்டிகளும், பலிஜவார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய விவரமாவன.

காபு அல்லது ரெட்டிவாரு.

இவர்கள் பல ஜில்லாக்களில் பரவி இருக்கும் விவசாயிகர். காபு=என்றால் காவல்காரன்.ரெட்டிஎன்றால்=இரட்டு=இரெட்டி=ரட்டி=ரட்டோர்=ரஸ்திரகூட்டார்=அரசன். ஒருகாலத்தில் பிரபலர் ஆதியில் ரெட்டிபாடியி லிருந்தோர். இவர்களை சாலுகியர், பல்லவர், பலலாலர், அடிக்கடித் தாக்கி யடித்தாலும் 1323ஆ Ghiyas-ud - din - Loghluk கியாசுட்டீன் டோகலாக் வாரங்கள் நாட்டு பிரதாப ருத்திரனை பிடித்தபிறகு இந்த காபுகளில் அனேகர் ஜமீன்தாரர்களானார்கள்—ஒருகாலத்தில் மில்டெரி உத்தியோகத்தி லிருந்த வெலமவாரே அதைச்சார்ந்தவர்களென சிலர்கருத்து-உண்மைத் தெரியவில்லை.

இவர்களில் 840-உட்பிரிவினராகவும், இவர்களில் அடியில் கண்டவர்கள் முகியஸ்தராகவும் இருக்கிறார்கள்—அவர்களாவன.

ஐயோத்திவாரு—24278	குடிகள்	நேரட்டிவாரு—29419	குடிகள்
பலிஜவாரு—38697	,,	ஓரகண்டிவாரு—13873	,,
பூமன் சிவாரு—29597	,,	பக்கநாட்டிவாரு—226358	,,
தேசுருவாரு—26441	,,	பல்லேவாரு—22693	,,
காஜலுவாரு—302462	,,	பண்டவாரு—455, 134	,,
கண்டிகோட்டிவாரு—18905	,,	பெத்தகண்டிவாரு—204270	,,
கம்மபுரிவாரு—11500	,,	போகநாட்டிவாரு—87820	,,
கோட்டிடிவாரு—91200	,,	பொங்கநாடுவாரு—27887	,,
குஞ்செட்டிவாரு—8842	,,	தெலகாவாரு—18796	,,
மொராசவாரு—40934	,,	வெலநாட்டிவாரு—49682	,,
மொட்டேடிவாரு—145391	,,		

இவர்களில், ஐயோதியவாரு=இவர்கள் திருநெல்வேலியிலும், (200 - பெயர்) மதுரையிலு மிருக்கிறார்கள், இவர்களுக்கு ரெட்டிகளெனவும், ஐயோதியாவிலிருந்து வந்த பெருமையை யுடையார். ஐயோதியாரெட்டிமாப்பிள்ளைக்கு; மிதலைரெட்டி பெண்ணை கேட்பது வழக்கம். இவர்களுக்கு வைணவர் புரோஹிதரில்லை. தாலிக்கு தங்கபொட்டில்லை, மாப்பிள்ளையின் தங்கை அல்லது தமக்கைமகளைகட்டும் வழக்கமுண்டு.

இவர்களுடைய சீர்சடங்குகளைப்பற்றி ஆராயும்போது இவர்கள் சந்திரவம்சக்ஷத்திரிய பலிஜவார் வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்லரென்று ஸ்பஷ்டமாகிறபடியால் விரிவாக எழுதாமல் விட்டோம்.

ஐந்தாம்காண்டம் முற்றிற்று.

ஆறுவது காண்டம்.

பலிஜவாருகளுடைய தத்காலஸ்திதி.

இதற்கு முன்னிற்கிற காண்டத்திற் கண்டிருக்கும் பலிஜவாருடைய பல உட்பிரிவுகளையும்; அவர்களுடைய நாம ரூப பேதங்களையும்; அவர்களிற் சிலர் காலவித்தியாசத்தினால் கிராமாந்திரங்களிற் குடியிருந்துகொண்டு கஷ்ட ஜீவத்சையினால், தாழ்ந்த ஜாதியாரிடம் வேலைகளில் அமர்ந்தும்; அத் தாழ்ந்த வகுப்பார்களைப்போல உண்டும் உடுத்தியும்; அக்கிராமவாசிகள் வணங்கும் காட்டேரி, குட்டிச்சாத்தான் முதலான சில்லரை தேவதைகளை மதுமாமிசங்களை வைத்துக்கொண்டாடியும்; ஒரு கேவலமான ஜாதியாராகக் காலம் கழித்து வருகிறார்கள். இவர்களைக்காணும், ஏனையோர் இந்தக் கலியுகத்தில் "பிராம்மணர், சூத்திரர் தவிர" க்ஷத்திரியர் வைசியர்கிடையாதென்றும்; ஆகவே, இந்த பலிஜவாரும் சூத்திர ஜாதியாரென்றும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

இப்படிச்சொல்பவர்கள் இப்புராணத்தை முழுதும் துரபிமானம்விட்டு படித்துப் பார்த்தால் அப்படிச்சொல்லத்துணியார்கள்.

கால வித்தியாசத்தினால் அரிச்சந்திரன் பறையன் வேலையையும், நளன் சுயம்பாகி வேலையையும், பின்னும் சில சக்கிரவர்த்திகள் கேவலமான தொழில்களையும் செய்தமையால், அவர்களை க்ஷத்திரியர்கள் அல்லவென்று சொல்லப்பொருந்துமோ? இக்காலத்தில் உயர்குலத்தாராகிய பிராம்மணர்களிற் சிலர், சந்தியாவந்தன வேதபடனங்களைவிட்டு, சட்டபாராயணஞ்செய்து கொண்டும்; சிலர், அரிசிக்கடை, சோற்றுக்கடை, தோல்கடைகளை வைத்துக்கொண்டும், சிலர்கள் சாராயகுத்தகை, கூத்தாடி முதலான தொழில்களைச்செய்துக்கொண்டும் வருவதனாலேயே, பிராம்மணர்கள் அல்லவென்று சொல்லப்பொருந்துமோ ?

இந்த பலிஜவாரில் காலவித்தியாசத்தினால் பல உட்பிரிவுகளுண்டாகி இருப்பனப்போலவே, மற்றவருணத்தார்களிலும் உண்டாயிருக்கிறார்கள். எப்படியெனில்,

பிராம்மணர் க்ஷத்திரியர் உட்பிரிவுகள்.

நமது இராஜதானியில் தெலுங்கு பிராம்மணர்களில் (1) காணகமல்லுவாரு, (2) முரிகிநாட்டிவாரு, (3) வெலநாட்டிவாரு (4) வேகிநாட்டிவாரு (5) நியோகியர் (6) தெலுங்காணியர் (7) மகாராஷ்டிரர் (8) கொங்கணத்தார் (9) கன்னடப்பிராமணர் (10) கர்நாட்டகர்கள் (11) ஆறுவேலு பிராஹ்மணர் (12) அறுபது வக்கலுபிராஹமணர் (13) பனக்கநாட்டார் (14) கம்மாளுரார் (15) குஜராத்தியப்பிராஹ்மணர் என்றும்;—தமிழர்களில் (1) சோழதேசத்து வடமர் (2) வடதேசத்து வடமர் (3) வாத்திமார், (4) அஷ்டசகஸ்த்திரத்தார் (5) பிரஹசரணத்தார், சதியமங்கல பிரஹசரணத்தார், (6) காணி

யாளர் (7) பூக்காணியர் (8) சோழியர் (9) வீழியர் (10) கேசிகர் (11) குருக்கர் (12) ஆழியாளர், (13) போற்றிமார் (14) சுக்கிலயசுரர் அல்லது மாத்தியான சண்டாளர் (15) மூவாயிரவர் (16) முக்காணியர் (17) பட்டர்மார் (18) வடகலைஐயங்கார் (19) தென்கலைஐயங்காரென்றுதி உட்பிரிவாரிருப்பதாக வருணசிந்தாமணியிலும்.

1870ஷு ஏப்பிரல்மீ 15உ பிரம்மதீபிகையின்படி (1) ஸ்மார்த்த பிராமணர் (2) வடகலை (3) திராவிடாள் (4) திராவிடவடமாள் (5) திராவிடசோழதேசாள் (6) திராவிடதேசாள் (7) அர்ச்சகாசாரர் (8) ஆரியரதாள் (9) மகிமன் (10) காணியர் (11) முக்காணியர் (12) சாவியர் (13) பரதமசாங்கியர் (14) தெலுங்கர் (15) தெலுங்காணியர் (16) வெலநாட்டிவாரு (17) முறிகிநாட்டிவாரு (18) நியோகி (19) ஆராத்தியர், (20) தேசஸ்தன் (21) கருநாடகன் (22) வேபாரி, (23) நம்பூரி (24) திராவடவைஷ்ணவாள் (25) ஆந்திரதிராவிட வைஷ்ணவாள் (26) கோவிந்த பிராமணர் (27) மச்சதேசஸ்தாள் (28) இந்துஸ்தானியர் (29) சைனர் (30) சூயன் (31) வடமன் (32) சாங்கேந்தி (33) குஜராத்தி (34) நம்பியார் (35) திரிபூரணிகாள் (36) ஆபத்தம்பியாள் (37) காத்தியாயனுள் (38) பாந்தியாயனுள் (39) ஆரியர் (40) பதிதாள் (41) லிங்கிகள் (42) கனோஜி பிராம்மணரென்றுதி உட்பிரிவுகளிருத்தல்பிரத்தியக்ஷம். இதேமாதிரியே க்ஷத்திரியர்களில்-நேபாளம், குச்சுபேஹார், காஷ்மீரம் பரோடா, ஹோல்கார், குவாலியூர், விஜயநகர், திருவனந்தபுரம் மைசூர்முதலான ஸமஸ்தானத்தார் இப்போது பற்பல ஜாதியாராகவும், குலத்தாராகவும் இருத்தல் பிரதியக்ஷமேயல்லவா ?

வேளாளரில் உட்பிரிவுகள்.

நமது இராஜதானியில் வைசியரில் ஒருவகுப்பாருக்கு வேளாண்மைத்தொழில் செய்வதைப்பற்றி வேளாளரெனப் பெயருண்டாயிற்று. அவ்வேளாளரில் பாண்டியதேசத்து வேளாண்மைமாந்தர், பாண்டிய வேளாளரெனவும்; சேரதேசத்து வேளாண்மைமாந்தர், சேரகுலவேளாளரெனவும், கொங்குதேசத்து வேளாண்மைமாந்தர், கொங்குவேளாளரெனவும், சோழதேசத்து வேளாண்மைமாந்தர், சோழியவேளாளரெனவும் சொல்லப்படுமூர்கள். துளுவவேளாளரென்னும் ஒருமரபிற்றுனே பலபிரதேசங்களைப்பற்றி உட்பிரிகள் உண்டாயிருக்கின்றன. அதாவது ஆற்காட்டுப் பிரதேசத்திலுள்ளவர் ஆற்காட்டார், புதுச்சேரி பிரதேசத்திலுள்ளவர் புதுச்சேரியார், பூந்தமல்லி பிரதேசத்திலுள்ளவர் பூந்தமல்லியார், பொன்னேரிபிரதேசத்திலுள்ளவர் பொன்னேரியார், ஒரு பொன்னேரி மரபாருக்குள்ளாகத்தானே, கும்மங்கலத்தார், காணியம்பாக்கத்தார், பழவேற்காட்டார், எடமாணியார், கூடாஞ்சேரியார், தேவனுஞ்சேரியார், வெண்பாக்கத்தார், தளபரம்பாக்கத்தார், நந்தியம்பாக்கத்தார், உப்பளத்தார், ஸைதைபுரத்தார், இலவம்பேட்டார், எலம்பேட்டார், சதுரங்கபட்டணத்தார், இன்னும் திருவட்டீசுரன்பேட்டை, சிவவரம்பேடு, நாலூர், இருக்கம், இரட்டம்பேடு, ஏனும்பாக்கம், உமிப்பேடு,

அடப்பம்பேடு, குறடி, கொறுக்குப்பேட்டை, சின்னகாவணம், பெரியகாரணம், கன்னிபுத்தூர், வழுதிலமபோடு, இந்தப்படி அநேகமாயேற்பட்டு, பற்பல ஜாதியார்களாகவும், குலத்தார்களாகவும் பிரபலப்பட்டிருத்தல் பிரதியக்ஷமல்லவா ?

நமது நாட்டிலிருக்கும் சூத்திரர்க்குள்ளிருக்கும் உட்பிரிவினர்களுக்கு கணக்கிடுவதே கஷ்டசாத்தியம். கேவலம் பஞ்சமரென்றுசொல்லும் பறையருக்குள்ளும் எத்தனையோவிதமான பிரிவுக்காரகளிருக்கிறார்கள் என்பதற்கு அடியிற்காணலாம்.

பறையர்களின் உட்பிரிவு விவரம்.

(1) அச்சக்கேரளபறையன் (2) அகமுடிபறையன் (3) அக்னிபறையன் (4) ஆயிபறையன் (5) அகத்திப்பறையன் (6) ஏலங்காணிபறையன் (7) அம்பலக்காரன் (8) அம்பட்டபறையன் (9) அம்புளுட்டுபறையன் (10) அம்மாபறையன் (11) அனந்தபதி (12) ஆண்டிபறையன் (13) அங்குபறையன் (14) அணிலேயிங்கோத்திரன், (16) அனுபாவிபறையன், (17) அப்பையாபறையன் (18) அரசுபறையன் (19) அரவபறையன் (அரங்கோட்டை பறையன் (20) அறுத்துக்காட்டாதவன் (21) ஆரியபறையன் (22) ஆத்மபறையன் என்றாதி 400-வகுப்பு பறையர்கள் இருக்கிறார்கள். ஆதிகாலத்தில் நான்கைந்து ஜாதியார்களாக இருந்த இந்துக்களுக்குள் இப்போது இத்தனை உட்பிரிவாருண்டானதற்கு காலதேசவர்த்தமானமே காரணமல்லவா ?

பிராமணன், க்ஷதிரியன், வைஸியன், சூத்திரன், என்றபதங்களின் பகுதிப்பொருள் விவரமாவன.

---

1. பிராமணன் என்னும்பதம் ப்ரூः என்றதாதுவிலிருந்து பிறந்ததாம் இந்த ப்ரூःஎன்றதாதுவுக்கு=உச்சரித்தல்,=என்றால் வேதத்தைஉச்சரித்தல் என்று பொருளாம். அதாவது, வேதத்தை உச்சரித்தவர் பிராமணர் என்பதாம், மேலும் பிராஹ்மணம் என்பது வேதம், அதை உச்சரிப்பவன் அல்லது ஓதுகிறவன் பிராஹமணனும்.

2. க்ஷத்திரியன்=என்னும்பதம் க்ஷத்திரம்=என்னும் தாதுவிலிருந்து உண்டானதாம். க்ஷத்திரம் என்பதற்கு வல்லபம், அதிகாரம் என்றுதிப்பொருள்களுண்டு; ஆகவே க்ஷத்திரமுடைய (வீரர்களுக்கு) க்ஷத்திரியர் என்றப்பெயருண்டாயிற்று. இக்கருத்தால் இந்திரன்,மித்திரன், வருணன் முதலான தேவர்களுக்கும் இப்பதம் உபயோகப்படுத்தபட்டிருக்கிறது. மேலும் வேதத்தில் க்ஷத்ரபதி என்றும்சொல்லப்பட்டிருக்கிறது; ஆகவே, பு[illegible]தன். பூஸ்திதி உடையவன் என்றும் பொருளாகிறது, சிலவிடங்களில் க்ஷத்திரபதி என்றும் சொல்லியிருப்பதால்,அதிகாரி என்றபொருளும் பெற்றிருக்கின்ற தன்றியில், க்ஷத்திரியா என்னும் பதத்திற்கு விஸபதி, அல்லது விஸம்பதி என்றும்பொருளும் சொல்லியிருப்பதால், விஸ அல்லது விஸம்

நரர்கள்+பதி=நரபதி என்றும் பொருளாகிறது. அன்றியும்- இவர்களுக்கு இராஜன்ய:=இராஜா என்ற(தாதுப்) பெயரையும் வேதத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.

3. வைசியர்=விச=வேச=வீட்டை உடையார் என்னும் தாதுவிலிருந்து பிறந்த பதத்தினல், வைசியரானுரென்றுசொல்லப்பட்டிருக்கிறது.

4. சூத்திரன்—என்றபதம் சூத்=சுத்தீகரித்தல், அதாவது வீடு வாசல் நிலங்களைச்சுத்தி செய்வோன் என்று சொல்லப்பட்ட பதத்திலிருந்து உற்பத்தியாயிருக்கிறது.

அதாவது மற்றமூன்று வருணத்தாருக்கும் ஊழியம்செய்பவராம் .நிற்க இந்து ஜாதியைப்பற்றி மநுதர்ம சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிற

பிரமாணங்களாவன.

மநு—1 ஆவது, அத்தியாயம் 32-வதுசுலோகத்தில்=பிரமா தன்னுடையதேகத்தை இரண்டு கூறாக்கி, ஒன்று ஸ்திரீயும்,ஒன்று புருஷனுமாக்கிஅந்த ஸ்திரீயினிடத்தில் அந்தப்புருஷனுகிய தானே புணர்ந்து விராட்டு புருஷனை யுண்டுபண்ணினுர்— என்றும்.

மநு—1-33-ல், அந்த விராட்டு தவஞ்செய்து சுவாயம்புமநுவை யுண்டு பண்ணினுர் என்றும்.

மநு—1-34-ல் சுவாயம்புமநு தவஞ்செய்து பிரஜாபதிகளான பத்துபிரமரிஷிகளை யுண்டாக்கினுர்-என்றும்.

மநு—3-198-ல் அந்த பிரமரிஷிகளிடத்திலிருந்து பிதுர்க்கள் உண்டானுர்கள். அந்தப்பிதுர்க்களிடமாகச் சதுர்வருணத்தாரு முண்டானுர்கள் என்றும்.

மநு—1-35-ல் பத்துப்பிரமரிஷிகள் யாவரெனின் மரீசி,அத்திரி, அங்கிரசு,புலத்தியன்,புலகன்,கிரது,பிரசேதசு,வசிட்டன்,பிருகு,நாரதன் என்பவர்களாம்.—இவர்களுள்

மநு—3-197—ல் யபிருகுவினிடத்தில் சோமபர்கள் என்றபிதுர்க்களும் அத்தப் பிதுர்க்களினின்று பிராமணர்களுமுண்டானுர்கள் 2, ஆங்கிரசனிடத்து ஹவிர்ப்புக்குகள் என்ற பிதுர்க்களும், அவர்களினின்று க்ஷத்திரியர்களுமுண்டானுர்கள்—என்றும்.

3-129புலத்தியரிடத்து ஆஜ்ஜியபர்கரென்ற பிதுர்க்களும், அவர்களினின்று வைசியர்களுமுண்டானுர்கள், 4. வசிஷ்டரிடத்துச் சுவாலிகள் என்றபிதுர்க்களும், அவர்களிடத்துச் சூத்திரர்களுமுண்டானுர்கள் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது.

இதனல் அந்தணர், பிருகுவமிசத்தாரென்றும், க்ஷத்திரியர், ஆங்கிரசவமிசத்தாரென்றும், வைசியர் புலத்தியவமிசத்தாரென்றும். வெளியாகின்றது.

வேதத்தில்கூறும் ஜாதி அட்டவணை.

(வருணசிந்தாமணி.)

எண்.	வேதவாக்கியம்.	ஆரியபதம்.	பொருள்.	திராவிடபதம்.
1	பிராஹ்மணே	பிராஹ்மணம்	வேதம்	அந்தணன்
2	க்ஷத்திரியா	ராஜங்யம்	வீரம்	அரசன்
3	மருத்பியோ	வைஷ்யம்	வேளாண்மை	வேளாளன்
4	தபஸே	ஷூத்திரம்	தொழில்	தொழில்செய்வோன்
5	காமாயா	புஷ்சலம்	காமம்	பரத்தை
6	நிருத்தியா	ஸூதம்	நாட்டியம்	ஆட்டக்காரன்
7	மேதாயி	ரதகாரம்	அறிவு	தேர்செய்வோன்
8	தைர்யாய	தக்ஷாநம்	உறுதி	தச்சன்
9	தபஸே	கௌலாலம்	உழைப்பு	குசவன்
10	மயாயை	கர்மாரம்	செய்பவன்	கொல்லன்
11	ரூபாய	மணிகாரம்	அழகு	இரத்தினவியாபாரி
12	மிருத்யாவி	மிரிகாயம்	கொல்லல்	வேட்டைக்காரன்
13	ரிக்ஷிகாப்யோ	நைஷதம்	காத்தல்	காவலாளி
14	அயேப்யா	கிதவம்	அதிஷ்டம்	சூதாடுகிறவன்
15	பவித்ராய	பிஷகாஜம்	ஒழித்தல்	வைத்தியன்
16	பிரஜ்ஞாந்தியா	நக்ஷத்திரதர்ஸநம்	சோதிடம்	சோதிடன்
17	மர்யாதாயை	பிரஷ்நவிவாஹம்	எல்லைக்குறி	நிமித்தமுரைப்போன்
18	ஆர்மேப்யோ	ஹஸ்திபம்	வாகனம்	யானைக்காரன்
19	ஜவாயா	அஷ்வபம்	ஓட்டம்	குதிரைக்காரன்

வேதத்தில்கூறும் ஜாதி அட்டவணை.

(வருணசிந்தாமணி.)

எண்.	வேதவாக்கியம்.	ஆரியபதம்.	பொருள்.	திராவிடபதம்.
20	புஷ்டே	கோபாலம்	போஷணை	பசுக்காப்போன்
21	விராயா	அவிபலம்	வீரம்	இடையன்
22	கிலாதாயா	சுராகாரம்	ஜலம்	கள்விற்போன்
23	மேதாயாவாஸா	பல்புலிம்	பிரித்தியாகம்	வண்ணான்
24	நத்வலாப்யா	ஷௌஷாகலம்	சேற்றுநிலம்	மீன்வணிகன்
25	ஸரப்யோ	தைவரம்	நீர்	மீன்பிடிக்கிறவன்
26	வர்நாயா	ஹிரண்யகாரம்	பொன்	தட்டான்
27	துலாயா	வாணிஜ்யம்	நிறை	வணிகன்
28	ஷப்தாயா	அதம்பாதகம்	சத்தம்	மேளக்காரன்
29	பூம்நே	பரிஷ்க்கந்தம்	நீர்	மரமேறி
30	வாயவே	சாண்டாளாம்	காற்று	சண்டாளன்
31	குஹாப்யா	கிராதம்	குகை	கிராதன்
32	ப்ரவதேப்யா	கிம்புருஷம்	உயர்ந்தமலை	கிம்புருஷர்

இந்த முப்பத்திரண்டு பெயர்களைக் கவனித்துப்பார்ப் பவர்களுக்கு அவரவர்கள் தொழில்களினாலேயே இந்த ஜாதிகளுண்டான விவரம் பிரதியக்ஷமாகும்.

பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் செய்யவேண்டிய கருமங்களாவன.

மநுமுதல் அத்தியாயம் 87-வது சுலோகம்.

ஸர்வஸ்யா ஸ்யது ஸர்க்கஸ்ய குப்தியார்த்தம் ஸமஹாத்தியுதிஃ
முகபஹூருபஜ்ஜாநாம் பிரதக்கர்மாண்ய கல்பயத்

(இ - ள்.) அப்பிரமாவானவர் இவ்வுலகத்லைதக் சாககும்படிக்குத் தன் முகம் தோள், தொடை, பாதம் இவைகளினின்று முண்டான பிராமண க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணத்தாருக்கு இம்மைக்கு மறுமைக்கு உபயோகமான கருமங்களை த் தனித்தனியாக விதித்தார்-என்றும்.

அத்யா பனநசாத்ய யநம்ந யஜநம்யாஜநத தா
தாநம்பிரதிக்கிரஹஞ்சைவ பிராஹமணு நாமகல்பயேது.

(இ - ள்.) பிராமணனுக்கு வேதம் ஓதல், ஓதுவித்தல்,யாகஞ்செய்தல், செய்வித்தல், தானங்கொடுத்தல்,வாங்குதல் ஆகிய ஆறு தொழிலையும் விதித்தார்-என்றும்.

89-வது சுலோகம் க்ஷத்திரிய கருமம்.

மநுமுதல் அத்தியாயம் 87-வது சுலோகம்.

பிரஜநாம் ரக்ஷணந்தாந மிஜ்யாதியயந மேவச
விஷயேஷ்வபிரஸக்கிஸ்சக்ஷத்திரியயஸ்ய ஸமாஸதஃ

(இ - ள்.) க்ஷத்திரியனுக்குப் பிரஜைகளை காத்தல், தானங்கொடுத்தல், வேதம் ஓதல், பாட்டு கூத்து ஸ்திரீ முதலிய விஷயங்களில் மனஞ்செல்லா தடக்கல், இந்நான்கையும் விதித்தார்.யாகாதி கருமங்களும் அவனுக்குண்டு. என்றும்.

90. வது சுலோகம் வைசிய கருமம்.

பசுநாம்ரக்ஷணந்தானமிஜ்யாத்யயநமேவச
வணிக்பதங்குஸீதஞ்சவைஸ்யஸ்யகிருஷிமேவச

(இ - ள்.) வைசியனுக்குப் பசுகாத்தல், தானங்கொடுத்தல் வேதமோதல், சலத்திலும் பூமியிலும் உண்டான இரத்தினம் நெல் முதலிய வியாபாரஞ்செய்தல், வட்டிவாங்குதல், பயிரிடுதல் ஆகிய இவ்வாறையும் விதித்தார் என்றும்.

91-வது சுலோகம் சூத்திர கருமம்.

ஏகமேவதுஸூத்ரஸ்ய பிரபுகர்மஸமாதிஷத்
ஏதேஷாமேவவர்ணுநாம்ஸுஸ்ரூஷாமநஸஸ்யா.

(இ - ள்.) சூத்திரனுக்கு இந்த மூன்று வருணத்தாருக்கும் பொறாமையின்றிப்பணிசெய்வ தொன்றையே முக்கியமான தருமமாக விதித்தார். என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்யாதி வாக்கியங்களினால் இந்து ஜாதியானது, தொழிலினாலேயே உண்டானதாக பிரத்யக்ஷமாகிறதேயன்றி, பிறப்பினாலல்லவென்று ஸ்பஷ்டமாகும்—நிற்க.

இந்நாட்டு இந்துக்களுக்குள் ஜாதிபேதம் எப்போது? என்ன காரணங்களினாலாகிய தென்றவிஷயங்களையும், க்ஷத்ரியர்கள் மதுமாமிசங்களையுண்ண சுருதிஸ்மிருதிகளிலிருக்கிற பிரமாணங்களையும்; கலியுகத்திலும் க்ஷத்திரியர் வைஸியர்கள் இருக்கிறார்கள் என்ற விஷயத்தைப்பற்றியும்இதனடியிற்சற்று சங்கிரகமாகக்காட்டுவோம்.

இந்துஜாதியைப்பற்றி வேதபிரமாணங்களாவன.

இந்து ஜாதியைப்பற்றி இருக்குவேதம், 6-வது அஷ்டகம், 3-வது அத்தியாயம், 16-வது வருக்கையிலும்,—இருக்குவேதம் 8-வது அஷ்டகம், புருஷ சூக்தத்திலும்,—கிருஷ்ண யஜுர்வேதத்திலும்,—சுக்லயஜுர்வேதம் 13-வது அத்தியாயத்திலும்,—தைதிரேயம் 30-வது அத்தியாயத்திலும்,-அதர்வணவேதத்தின் சில பாகங்களிலும்,—பிராஹ்மணங்களில், இருக்குவேதத்தைச்சார்ந்த ஐத்திரேயப்பிராஹ்மணம்,முதலாவது அத்தியாயம், முதலாவது பஞ்சகத்திலும்-மூன்றாவது பஞ்சகத்திலும்,—ஷை 5-வது அத்தியாயம் 5-வது பஞ்சகத்திலும்,—ஷை 7-வது அத்தியாயம 7-வதுபஞ்சகத்திலும்,(இவைகளில் விசுவாமித்திரருடைய புத்திரர்களில் 50-பெயர், சுனக்ஷேபனை அங்கீகரிக்காததனால், அவர்கள் ஆந்திரர்,புந்திரராகப்பிறந்தகதைகளையும்,கிருஷ்ண யஜுர்வேதத்தைச்சேர்ந்த தைத்ரேய பிராஹமணத்திலும்,—சுக்கிலயஜுர் வேதத்தைச்சார்ந்த சதபதப்பிராஹ்மணத்தின் 13-வது காண்டத்திலும்,—அதர்வண வேதத்தைச்சார்ந்தசோபிதப்பிராஹ்மணத்திலும்,—உபநிஷத்துக்களில்,பிருஹதாரணிய உபநிஷத்தின் 235-முதல்238-பக்கங்களிலும்,—கிருஷ்ணயசுரைச்சார்ந்த தைத்திரேய உபநிஷத்திலும்,—சாந்தோக்கிய உபநிஷத்து 254-முதல் 255-வது பக்கங்களினாலும்,—சூத்திரங்களில், சுக்லயஜுர் வேதத்தைச் சேர்ந்த காத்தியாயன சூத்திரத்திலும், கிருஷ்ணயஜுர்வேதத்தைச்சார்ந்தபௌதாயனசூத்திரத்திலும், -கிருஷ்ணயஜுர்வேதத்தைச்சார்ந்த ஹிரண்யகேசி சூத்திரம், ஷை ஸ்மார்த்த சூத்திரத்திலும், ஷை தருமசூத்திரத்திலும்,--கிருஷ்ணயஜுர்வேதத்தைச்சார்ந்த ஆபஸ்தம்ப சமயாசார சூத்திரத்திலும்,இருக்குவேதத்தைச்சார்ந்த ஆஸ்வலாயனஸிரௌத சூத்திரத்திலும், ஷை கிருஹ்ய சூத்திரத்திலும்,—கிருஷ்ணயசுரைச்சார்ந்த மானவகற்பத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட சுருதிகளினால் இந்துஜாதியானது தொழில்களினாலும் குணங்களினாலும் பிரகாசிக்கிறதேயொழிய பிறப்பினாலல்லவென்று ஸ்பஷ்டமாகிறது. சிலர் பிறப்பினாலேயே ஜாதிபேதம் உண்டாகியதென புருஷசூக்தத்தில் சொல்லியிருக்கிறதாக எண்ணுகிறார்கள் அந்தக்கருத்து உண்மையோ என்பதைப்பற்றி விசாரிப்போம்.

புருஷசூக்தம்என்பது.

புருஷனைப்பற்றி நன்ருகச் சொல்லப்பட்டது என்றும் அர்த்தத்தைக் காட்டுகின்றது. புருஷன் என்பவர்யாரெனில், "பூர்ணத்வாத் புருஷஃ" என்றபடி பூரண மூர்த்தியாயிருப்பதால் புருஷன் எனபரபிரமத்துக்கே,பரியாய நாமமாக வளங்கப்பெற்றது.

இப்பிரபஞ்சத்தின் சம்பூதி, விபூதி,பரிபூதி என்னும் சிருஷ்டி, ஸ்திதி சம்ஹாரம் ஆகிய கிர்த்தியங்களை நடாத்தி வருவதற்குக் காரணராகியவரே புருஷன்; அவருடைய மகத்துவத்தையும், பிரபஞ்ச சிருஷ்டியையும், முக்தியடையும் மார்க்கத்தையும் காட்டுவதே இப்புருஷ சூக்தத்தின் கருத்தாம்

இந்தப் புருஷசூக்தம், கிருஷ்ணயஜுர்வேதத்தில் 18 ரிக்குகளாகவும், சுக்கில யஜுர்வேதத்தில் 5 ரிக்குகளில் அடங்கியும், இருக்குவேதத்தில் 16 ரிக்குகளாக அமைந்தும், சாம அதர்வண வேதங்களில் 7 ரிக்குளாக முடிந்தும் இருக்கின்றது. இவைகளில் புருஷன் வரலாற்றைக்குறித்த 18 ரிக்குகளாக கிருஷ்ண யஜுர்வேதத்தில் பூரணமாய் கூறப்பட்டு இருக்கின்றது.

சுருதிகளிற் சொல்லிய வாக்கியங்களிற் சிலதுணர்த்தவாதங்களாயும், சில பூதார்த்தவாதங்களாயும் இருக்கின்றன. அவைகளில் நடந்ததை நடந்தவாறு சரித்திரமாய் உரைக்கும் பாகங்களுக்கு பூதார்த்தவாதம் என்றும்; கேவலம்,தத்துவவிஷயமாகவும், மகிமா விஷயமாகவும் சொல்லி, மனதிற் பொருந்தும் பொருட்டு லக்ஷியமாகவும், உபமானமாகவும், அபூதகல்பனையாகவும் சொல்லப்பட்ட பாகங்களுக்கு "துணர்த்தவாதம்" என்றும்பெயர் இதைக்குறித்து மீம்சவாக்கியத்தை கவனிக்கவேண்டியது.

இந்த புருஷசூக்தத்தில் "பிராஹமணோஸ்ய-முகமாஸீத்-பாஹூ-ராஜன்யஃ கிருதஃ, பத்பியாகம் ஸூத்ரோ அஜாயதஃ"—என்ருல் (வீராட்டு என்னும் பிரபஞ்சத்துக்கு) பிராம்மணன் முகமானன், க்ஷத்திரியன் தோள்களாக்கப்பட்டான். வைசியன் என்பது எதுவோ, அதுவே தொடைகள் என்றும்; பாதங்களிலிருந்து சூத்திரன் உண்டானதாக கற்பனையாகச் சொல்லி இருப்பதால்; அவர்களை முகமாகவும். புஜங்களாகவும், தொடைகளாகவும் உத்பிரேக்ஷித்திருப்பதாகக் கருத்தேயன்றி, அந்தந்த அவயவங்களிலிருந்துபிறந்தார்கள் என்பதன்று.

இந்த உத்பிரேக்ஷைக்கு ஹேதுவில்லாமல் போகவில்லை-புத்திக்குக்குறியாகிய முகத்தைபிராம்மணன்பிறந்த இடமாகவும், பலத்துக்கு இடமாகிய புஜத்தை, க்ஷத்திரியன்பிறந்த இடமாகவும், சஞ்சாரத்துக்குச் சாதனமான தொடைகளை, வைசியன் பிறந்த இடமாகவும், சூத்திரத்தொழிலுக்குஇன்றியமையாபாதங்களை, சூத்திரன் பிறந்த இடமாக

வும் வர்ணிக்கப்பட்டிருக்கிறதேயன்றி;உண்மையில் பிறந்ததைப்பற்றியன்று இந்த சூக்தத்துக்கு வித்தியாரண்ய சுவாமிகளும், மஹீதரர் முதலானவர்களும் செய்திருக்கும் பாஷியங்களை பரிசோதிப்போருக்கு இதன் உண்மை வெட்ட வெளியாகும்.

மேலும், மக்கள்தேவர் நரகர் முதலானவர்கள் சூதத்துவாரமாக பிறப்பவர்கள் என்று சாஸ்திரங்கள் முறை இடுகிறன்றியில், இவ்வுலகத்தில் நமது மாதா, மனைவி. மக்களும் சூதத்தூவாமாக பிறப்பதும், பிறப்பிப்பதும் பிரதியக்ஷமாக இருக்கும்போது,இந்த பிரதியக்ஷஅனுபவத்தை விட்டு,மூக்கிலும்,கண்ணிலும், காதிலும்,கையிலும், ஜனங்கள் பிறக்கிறார்களென்றால், இந்த இருபதாம் நூற்றாண்டில் எவர் நம்புவார்கள் ?

இப்போது நமது நாட்டை ஆண்டுவரும் ஒரேஜாதியாரான அங்கிலேயரில் சிலர், லார்டுபிஷப் பாதரிமார் என்றப்பெயரால் பராபரன் பிரார்த்தனை முதலானவைதீகவிஷயங்களைச் செய்துக்கொண்டும்;சிலர் கவர்னர், கவர்னர் ஜனரல்,கம்மாண்டிரின்சீப் என்றப்பெயர்களால்தேசங்களை உயத்தங்களினுல் ஜயித்து ஹிமசேதுபரியந்தம் ஆண்டு அரசுபுரிந்துக்கொண்டும்,சிலர் ஆர்பத்நட்டு கம்பெனி, ஒக்ஸ் கம்பெனி, என்றப்பெயர்களால் பெரியவர்த்தகங்களைச்செய்துக்கொண்டும் சிலர் சானிடெரி முதலான சூத்திரத்தொழில்களைச்செய்துக்கொண்டும் வருகிறார்களன்றோ ? இவர்கள எந்த பிரம்மாவின்முகத்திலும்,புஜத்திலும், தொடைபாதங்களிலும் பிறந்தார்கள்? இவர்கள் யாவரும் தொழில்களில் வேறு பட்டவர்களாக விருக்கினும், ஜாதியில் ஒரே ஜாதியாரல்லவா? இப்படியாவதற்குக்காரணம் யாது?புத்திமான்களே யோசிக்கவேண்டும்.

இந்துக்களுடையஜாதி-தொழில் குணங்களினுல்பிரகாசிக்கின்றதென்பதற்கு சாந்தோக்கியஉபநிஷத்து, (இங்கிலீஷ்மொழிபெயர்ப்பு 84-85-வது பக்கங்களினுல்,) "சுவேதகேது ஆருணியன் என்ற பிராம்மணவாலிபன்,பாஞ்சாலதேசராஜனிடம் போய்ப்படித்ததாகவும், அந்த வாலிபன் தந்தைகௌதமிகோத்திரத்தானும்போய் பாடம் கேட்டதாகவும்,—அந்த சாந்தோகிய உபநிஷத்து 11-வது பாகத்தில், 93-வது பக்கத்தில்- அசுவபதிராஜன், ஆத்மவைஸ்ரவாநரன் என்னும் பிராமணனுக்கு பிரம்ம வித்தையை போதித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் க்ஷத்திரியர், பிராம்மணத்தொழிலையும் செய்திருக்கிறார்களென்றுஸ்பஷ்டமாகிறது. இதற்கு விசுவாமித்திரர் பிரம்மரிஷியானதே பிரதியக்ஷமாம்.

இம்மட்டோ! இந்த பலிஜவாருக்கு ஆதிபிதாக்களில் ஒருவராகிய விஜயநகர நரபதி கிருஷ்ணதேவராயலு இயற்றிய ஆமுக்தமாலியோதய மென்னும் கிரந்தத்தை இந்த 1905- பி. ஏ. பரிக்ஷைக்கு பாடபுத்தகமாக நியமித்திருக்கிறார்கள். ஆகவே அதை எத்தனையோ பிராமணுதி வித்தியார்த்திகளும், உபாத்தியாயர்களும், படிக்க நேர்ந்ததன்றோ?இதற்கு என்ன சமாதானம் கூறக்கூடும்? இனி இதைப்பற்றி ஸ்மிருதிகளை விசாரிப்பாம்.

ஸ்மிருதிபிரமாணங்கள்.

மனு 2 - வது அத்தியாயம் 163 - வது சுலோகத்தில்.

எந்த பிராமணன் வேதத்தை அத்தியயனம் செய்யாமல், வேறு வித்தைகளைப்படிக்கப் பிராயாசப்படுகின்றானோ; அவன், வாழ்நாளிலேயே தன் குடும்பத்தோடு சீக்கிரம் சூத்திரத்துவத்தை யடைகின்றான். என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வசிஷ்டர் 6 - வது அத்தியாயம்.

யோகம், தபசு, இந்திரியநிக்கிரகம், தானம், சத்தியம், சௌசம், தயை அதிகக்கேள்வி. வித்தை, ஞானம், ஆஸ்திக்கியம், ஆகிய இவையெல்லாம் பிராமணர்களின் லக்ஷணமாம்.

பகவத்கீதை 18 - வது அத்தியாயம். 42 - வது சுலோகத்தில்

அந்தரிந்திரிய நிக்கிரகமும், பஹிரேந்திரிய நிக்கிரகமும், தபசும், சுசித்துவமும், பொறுமையும், நேர்மையும், ஞானமும், விக்ஞானமும், ஆஸ்திக்கியமும் இவைகள் பிராமணர்களுடைய கர்மங்களாம்.

பொறுமை முதலிய குணங்களுள்ளவனும், சிக்ஷைசெய்யப் படாதவனும், மாம்சபோஜனம் விட்டவனும், எந்த ஜீவனையும் ஹிம்சியாதவனும் இருப்பது பிராமணனுடைய முதலாவது லக்ஷணம்.

பிறனுடைய பொருளை கொஞ்சமென்கிலும் வழியிலாவது, வீட்டிலாவது அவன் கொடுத்தாலன்றி பெறுகிறதில்லையோ, இது பிராமணனுடைய இரண்டாவது லக்ஷணம்.

குரூர சுவபாவத்தைவிட்டு, எதையும் பரிகிரகமும் இல்லதாவனாய், பந்தங்களை விட்டவனாய், எப்போதும் நடப்பது பிராமணனுடைய மூன்றாவது லக்ஷணம்.

எப்போதும் ஸ்திரி சங்கமம் விட்டிருத்தல், பிரமாணனுடைய நான்காவது லக்ஷணம்.

சத்தியமாகிய சௌசம், தயையாகிய சௌசம், இந்திரிய நிக்கிரகமாகிய சௌசம், ஜீவதயையாகிய சௌசம், தபஸாகிய சௌசம், ஆகிய இந்த ஐந்து வித சௌச லக்ஷணங்களும் நிறைந்தவனாய், எந்த துவிஜன்இருக்கின்றானோ அவனை நான் பிராமணன் என்கிறேன்; இக்குணங்களில்லாதவன் எவனோ அவன் சூத்திரன், ஹே! யுதிஷ்டிரா.!

ஹே! யுதிஷ்டிரா. ஒரே வர்ணத்தினாலே (இந்த) உலகம் (முதலில்) நிறைந்திருந்தது; கர்மம், கிரியைகளின் விசேஷத்தினால் நான்கு வருணம் (கருமம்) ஸ்தாபிக்கப்பட்டது, எல்லா மனுஷியர்களும் யோனியினின்றே உற்பத்தியாயிருக்கின்றார்கள். எல்லாரும் மலமூத்திரம் விசர்ஜனம் செய்கின்றார்கள், எல்லோருக்கும் இந்திரியங்கள் ஒன்றே, விஷயங்களும் ஒன்றே; ஆகையால் சீலத்தினாலும், குணத்தினாலும் துவிஜன் ஆகின்றான். குணவானாயும், சீலசம்பன்னனாயும் இருக்கும் சூத்திரனும் பிராமணனாகின்றான். கிரியாஹீனனான பிராமணன் சூத்திரனிலும் தாழ்ந்தவனாகிறான் என்றும் ;—

சௌரியம், வீரியம், தைரியம், தேஜஃ, கொடை, தன்னை ஜயித்தல். க்ஷமை, பிராமணனுடைய ஸமானம், அனுக்கிரகம், இரக்ஷித்தல், இவையெல்லாம் க்ஷத்திரியனுடைய லக்ஷணங்களாம்.

தேவதை, குரு, ஈசுவரன், இவர்களிடம் பக்தி, தர்மம், அர்த்தம், காமம் இவைகளை இரக்ஷித்தல், ஆஸ்திக்கியம், விடாமுயற்சி சமர்த்து, இவைகள் வைசிய லக்ஷணங்களாம்.

வணக்கம்,சௌசம்,எஜமானனிடம் கபடமில்லாத சேவகம், மந்திரமில்லாத யக்கியம், திருட்டுத்தனமின்மை, நாணயம், சத்தியம், பசு, பிராமணர்களை இரக்ஷித்தல், இவை சூத்திரனுடைய லக்ஷணங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இனி இது விஷயத்தைப்பற்றி புராணபிரமாணங்களை விசாரிப்பாம்.

புராண பிரமாணங்கள்.

புராணங்களில் சிரேஷ்டமான பாகவதம் 7-வது காண்டம்.

11 - வது அத்தியாயம், 35 - வது வாக்கியத்தில், ஒரு ஜாதிக்கு அவன் குண விசேஷங்களே முக்கிய காரணங்களென ஸ்ரீதரரும், வீரராகவாசாரியரும் பொருள் செய்திருக்கின்றனர். ஷை புராணம் 119-வது ஸ்காந்தம், 17 - வது அத்தியாயம், 19 -வது வாக்கியத்தில், கிருதயுக ஆரம்பத்தில் ஹம்ச என்ற ஒரே பெயரால் மனிதர் இருந்தார்களே யொழிய, பிராம்மணர் க்ஷத்திரியர் முதலான ஜாதிகள் கிடையாது என்று வீரராகவாசாரியாரும், விஜயதுவஜாசாரியாரும் பொருள் செய்திருக்கிறார்கள். இதனால் பிராம்மணர்கள் குணங்களினாலும், தொழில்களினாலும் பிறகுக்ஷத்திரிய வைசியரானதாக ஸ்பஷ்டமாகிறதல்லவா ?

ஷை புராணம் 5-4-12-லும், 9-2-17-லும், 22-23-லும்,9-17-3-லும்,9-20-1 லும், 9-21-19-லும், 20-லும், 9-21-23-லும் சொல்லி இருக்கப்பட்ட வாக்கியங்களைப்படித்துப் பார்ப்போருக்கு, 'மநுவின் பேரன் ரிஷபனுக்கு 100 குமாரர்களிருந்து, அவர்களில் பரதன் பட்டமடைந்ததாகவும்; அந்த பரதனுடைய சகோதிரர் 99பெயரில்,81 பெயர் பிதாவின் கட்டளைக் குட்பட்டு நடந்து பிராம்மணர்களானதாகவும், திருஷ்டராஜன் மக்கள் பிராம்மணரானதாகவும், ஒரு க்ஷத்திரிய குடும்பத்திலிருந்து அக்கினிவஸியனம் என்ற பிராம்மண குடும்ப முண்டானதாகவும், திருஷ்டனுடைய ஒரு குமாரன் வைசியன் ஆனதாகவும், சவுனகர், கார்கியர், கார்க்கி அஜமேதன், துஷியந்தன் சந்ததிகள் பிராம்மணராதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

விஷ்ணு புராணம்4 அம்ஸம் 4 - வது அத்தியாயம் 19-ல்,

க்ஷத்திரியனாகிய பிரதிரதன் தனது குமாரன் கண்வன்; கணவனது புதல்வன் மேதாதிதி, மேதாதிதியினிடத்திலிருந்து கண்வாயணப் பிராம்ஹணர்களனைவரும் உத்பத்தியாகின்றனர்.

கண்வன் பிரதிரதனது குமாரன்; மேதாதிதி அவனது புத்திரன். அவனிடத்திலிருந்து கண்வப்பிராம்ஹணர்களானூர்கள்.

மஹா வீரியனென்னும் க்ஷத்திரியனுக்கு உருக்ஷயன் என்னும் புத்திரனுண்டானான், அவனுக்கு திரய்யாருணன், புஷ்கரன், கபி, என்னும் மூன்றுபிள்ளைகளிருந்தார்கள். இம்மூவரும் பிறகு பிராம்ஹணர்களானூர்கள். என்று சொல்லப்பெற்றிருக்கிறது;—

இனி இதிகாசங்களைப் பரிசோதிப்பாம்.

பாரதம்,சாந்திபருவமோக்ஷதருமம188அத்தியாயத்தில்,

1. வருணபேதமில்லை, இவ்வுலகமுழுதும் பிரம்ஹஸம்பந்தமானது, பிரமனால் முன்னற்படைக்கப்பட்டு, செய்தொழிலினால் வருணங்களைப் பெற்றனர்- என்றும்,

2. விடயசுகத்தில் விருப்புற்றவர்களும், உக்கிரமும், குரோத [illegible] தன்மையுடையவர்களும், ஸாஹஸத்தில் விருப்பமுள்ள [illegible] ருமங்களை விட்டு, இரஜோகுணத்துடனிருந்த இருபி[illegible] யாரோ, அவர்கள் க்ஷத்திரியர்களானூர்கள், என்றும்,

3. பசுபாலநமும், உழவும் தமது தொழிலாக வைத்[illegible] இராஜோகுணமும்,தமோகுணமுமுடையவர்களாகி [illegible] ழிலில்இராதவர்களான இருபிறப்பாளர் யாரோ, அவர்கள் வை[illegible] னூர்கள். என்றும்,

4. ஹிம்ஸை, பொய்யான செய்கை, இவற்றில் [illegible] டையவர்களும், ஜீவநத்திற்கு எல்லாத் தொழி[illegible] வர்களும், தமோகுணமுடையவர்களும், சவுசம[illegible] இருபிறப்பாளர் யாரோ அவர்கள் சூத்திரரானூர்க[illegible]

5. சூத்திரர்களும் பிராம்மணர்களாகின்றனர், பிராம்ஹண[illegible] ரர்களாகின்றனர். க்ஷத்திரியர்வைசியசூத்திரர்களும் அப்படி[illegible] யத்தக்கது. என்றும் சொல்லபட்டிருக்கிறதன்றியில்.

இவ்விஷயம் பாரதத்தின் அநுசாஸநபர்வத்தில் விரிவகா யெழு[illegible] டிருக்கிறது:—எப்படியெனில்

6. ஒதேவி ! இந்தகருமங்களாலும், ஸதாசார[illegible] லும், சூத்திரன் பிராம்மணனாகிறான். வைசியன் க்ஷத்திரியனா[illegible]

7. ஒதேவீ? தாழ்ந்தஜாதியிலும்,தாழ்ந்தகுலத்திலும்,பி[illegible] னும்,இந்த செய்கைகளுடையபலத்தினால் நூல்களினநு[illegible] பரிசுத்தனாகி இருபிறப்பாளனாகிறான்.—என்றும்,

8. அப்படியே பிராம்மணனாயினும்,தூர்மாக்கனும்ஸங்கர[illegible] பிராம்மணத்தன்மையிலிருந்து நீங்கி சூத்திரனாகிறான்.—என்று[illegible]

9. ஒதேவீ ! செய்கையினாலும், தூய்மையினாலும், தூய்ய ஆத்மா[illegible] இந்திரியங்களை வென்றவன், சூத்திரனாயினும் இருபிறப்பாளன் போல[illegible] கப்படத்தக்கவனென்பது கடவுளின் நியமனம்.—என்றும்,

10. எந்தசூத்திரனுடைய தன்மையும், செய்கையும தூய்மையாயிருக்கின்றனவோ, அந்தச்சூத்திரன் இருபிறப்பாளரிலும் சிறந்தவன் —என்றும்

11. பிறப்பு, சமயாநுட்டானம், நூர்பயிற்சி, குலம், இவை இருபிறப்பாளத்தன்மையைப் பெறுதற்குக காரணமாகா. அதற்கு ஒழுக்கமே காரணம். என்றும்

12. உலகத்திலிருக்கிற யாவரும்ஒழுக்கத்திஞற்ருன் பிராம்மணர்களாகலாம். நல்லொழுக்கத்திலிருக்கிறசூத்திரனும் பிராம்மணத்தன்மையைப்பெறுகிருன். என்றும்

13. ஓ! கல்லியாணீ! பிரம்ஹத்தின் தன்மை எங்கும் ஒன்றே என்பது என்கருத்து. நிர்குணமும்,நிர்மலமுமாகிய பிரம்ஹமயாரிடத்தி லுளதோ அவரேபிராம்மணன். என்றும்,

14. சூத்திரன் எவ்விதமாக பிராம்மணனுகக்கூடுமோ, பிராம்மணன் தருமத்தை விட்டு எப்படி சூத்திரனுகிருனே, அதன் மறைவான விஷயங்கள் உமக்குச்சொல்லப்பட்டன என்றும்,

15. உண்மை, ஈகை, பொறுமை, நல்லொழுக்கம், சாந்தம், தவம், அருள் இவை யாரிடத்திலிருக்கின்றனவோ ஓ ! நாகேந்திரா / அவரே பிராம்மணர். என்றும்,

16. யார் பொறிகளைவென்றவரோ, தருமங்களையனுஷ்டிக்கிறவரோ, வேதாத்தியயனத்தில் விருப்பமுள்ளவரோ, தூய்மையுடையவரோ, யாருக்கு காமக்குரோதங்கள் வசமாயிருக்கின்றனவோ அவரையே தேவதைகள் பிராம்மணரென்று அறிகின்றனர். என்றும்,

17. யார் உலகத்தாரை தம்மைப்போல் நினைக்கிருரோ, தருமத்தில் ஞானமுள்ளவராயும், பிரசஸ்தசித்தமுள்ளவராயும் இருக்கின்ருரோ, மேலும் யார் எல்லாதருமாநுட்டானங்களிலும் விருப்பமுள்ளவராய்இருக்கின்ருரோ; அவரையே, தேவதைகள் பிராம்மணராகவறிகின்றனர் என்றும். சொல்லப்பெற்றிருக்கிறதன்றியில்,

பாரதம் ஆரண்ணியபர்வம் 312-வது அத்தியாயத்தில், யக்ஷ யுதிஷ்டிர ஸம்வாதத்தில், யக்ஷன்சொல்வது :—

18. ஓ அரசனே ! பிராம்ஹணத்துவம் குலத்திஞலா, நடத்தையிஞலா, வேதசாத்திர படனத்திஞலா எதஞலுண்டாகிறது? இந்த நிச்சயத்தை நன்ருகச் சொல்லும் என்க.

யுதிஷ்டிரன் சொல்வது.

19. கேளும் யக்ஷனே ! பிராம்ஹணத்துவத்திற்கு குலம், வேதசாத்திரங்களைப்படித்தல் இவைகள் காரணங்களாகா, இருபிறப்பாளத்தன்மைக்கு ஒழுக்கமே காரணம். ஐயமில்லை. என்றும்,

பாரதம் அநுசாசன பருவத்தில்,

20. அந்த மஹா தபஸியாகிய விசுவாமித்திரன் க்ஷத்திரியனு யிருந்தும் பிறகு பிராம்ஹணனுனன். மேலும் பிராம்ஹண வம்சத்திற்குக் காரணனுமானுன். என்றும்,

பாரதத்தைச்சேர்ந்த ஹரிவம்சத்தின் 32-வது அத்தியயத்தில்.

21. திவோதாஸர்என்பவரது புத்திரனுகிய மித்திரயு என்னும் அரசன் பிரமரிஷியானுர். அவரது புதல்வர் மைத்திராயணர், மைத்திராயணரது குமாரர் ஸோமர், ஸோமரிடத்திலிருந்து மைத்திரேயப்பிராம் ஹணர்களுண்டாயினர்.

22. அப்பொழுது பிராம்ஹணர்களில்லாத தேசத்தில் கைவர்த்தகர்களைப்பார்த்து பரசுராமன் அவர்களுக்கு யக்கிய சூத்திரத்தைத்தந்தான்.

23. இப்படி தன்னுலுண்டாக்கப்பட்ட பிராமஹணர்களை தனது க்ஷேத்ரத்தில் நிலைப்படுத்தி அன்பான உள்ளத்துடன் சொன்னுன்.

24 பிராம்ஹணனுகிய வைவஸ்தமனுவினுடைய புத்திரர்களுக்குள் கருஷனிடத்திலிருந்து மிகுந்த பலமுள்ள காருஷாகளென்னும் க்ஷத்திரியர்களுண்டானுர்கள்.

25 அந்த வைவஸ்வதமனுவின மற்றொரு புத்திரன் நேதிஷ்டன், அவனது குமாரனுகிய நாபாகன் வைசியனுனன்.

26. அந்த வைவஸ்வதமனுவின் வேறொருபிள்ளையாகிய பிருஹத்திரன் என்பவன் ஆசானது பசுவைக்கொன்றதினுல் சூத்திரனுனன்.

விஷ்ணுபுராணம் 4-வது அம்சம் 8-வது அத்தியாயத்தில்.

27. ஸௌநஹோத்திரனது மூன்று புத்திரர்கள் காசன், லேசன், கிருத்ஸமதன். கிருத்ஸமதனுடைய புத்திரனுகிய சவுன்கனிடத்திலிருந்து நான்கு ஜாதிகளும் உண்டாயின.

28. ஹரிவம்சத்தில் இந்தலேசன்என்னும்பெயர் சலன் என்றும் சவுன்கனென்னும் பெயர், சுனகனென்றும் எழுதப்பட்டிருக்கின்றது ஷை நூலின் 29 - வது அத்தியாயத்தில்:—

29. சநகோத்திரனுக்கு காசன், சலன், கிருச்சமதன் எனறு மிகுந்த தருமவான்களாகிய புதல்வர் மூவரிருந்தனர்.

30. கிருத்ஸமதனது புதல்வன் சுனகன், அவனது புத்திரர்களாகிய சௌனகாள், பிராமஹணர்கள். க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள்; ஆனுர்கள். என்று சொல்லப்பெற்றிருக்கிறது.

ஆகவே இதுவரையில் எடுத்துக் காட்டிய சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களினுல் இந்த ஜாதிபேதம் கேவலம் பிறப்பினுலன்றி; தொழில் களினுலுங் குணங்களினுலும் உண்டாகிறதென்றும், அப்படியே அநேக பிராம்மணர்கள் க்ஷத்திரிய வைசிய சூத்திரரானதாகவும், க்ஷத்திரியர்

பிராம்மணரானதாகவும் பிரத்தியக்ஷமாகிறதல்லவா? அப்படிக்கிருக்க, சந்திர வமிச பலிஜவாரின் ஆதிசந்ததிகளிற் சிலர் காலதேச பேதத்தினல் பவுத்தர்களாக இருக்கினும்; பிறகு சைவ, வைணவர்களாகி அநேக சைவ வைணவ க்ஷேத்திரங்களையும் மாடமாளிகை கூட கோபுர அகிரஹாரங்களை நியமித்தும், தம் தம் அரண்மனைகளில் சதா தேவப் பிராம்மணர்களைக்கொண்டு வேதமோதுவித்தும், வேள்விகளைச் செய்வித்தும், ஆயிரம் பத்தாயிரம் பிராம்மணர்களுக்கு சதாவர்த்து சமாராதனை செய்வித்தும், சைவ வைணவமதோத்தாரணம் செய்வித்த விவரங்கள் இந்தப்புராணத்தில் விக்கிரமார்க்கன், சாலுவியன், பிரதாபருத்திரன், கிருஷ்ணதேவராயலு, அச்சுததேவராயலு, சேவப்பநாயடு, அச்சுதப்பநாயடு, விஜயராகவலுநாயடு, மதுரைவிசுவநாதநாயடு, திருமலைநாயடு, விஜயரங்கசொக்கலிங்கநாயடு, மங்கம்மாள் முதலானவர்களுடைய சரித்திரங்களைப் படித்து பார்ப்போர்க்கு பிரத்தியக்ஷமாகும். இதியாதி விவரங்களினல் பலிஜவாரும் பூரண க்ஷத்திரியர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை யல்லவா? நிற்க.

மதுமாமிச போஜனம்.

சிலர்: பலிஜவாரென்ற க்ஷத்திரியர்கள் மதுமாமிசத்தை உபயோகப் படுத்துவதால், அவர்களை உயர்குலத்தாரென்று எப்படிச் சொல்லலாமென்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய திருப்தியின் பொருட்டு இதனடியில் சில ஆதாரங்களைக் காட்டுகிறோம்.

ஆரியராகிய நம்முன்னோர் சோமரசம், சுராபணம் முதலான லாகிரிவஸ்துக்களை தொன்றுதொட்டு உபயோகித்து வந்தது நமது வேதங்களினலே ஸ்பஷ்டமாகும். அந்த சோமரசத்தை அக்காலத்தில் சாதாரண ஜனங்கள் மாத்திரம் குடித்தாடியதன்றியில்; இந்திரன், வாயு, மித்திரர், வருணர், அக்கினி, அசுவணி, முதலான தேவதைகளுக்கும் வைத்து பூசைசெய்து குடித்து பாடி யாடி யாநந்தமடைந்த வந்தசங்கதி, டாக்டர் இராஜேந்திரலாலமித்திரரியற்றிய இந்து ஆரியர் சரித்திரத்தைப் பார்ப்பவருக்கு ஸ்பஷ்டமாகும் அன்றியும்.

ஆரியராகிய நம்முன்னோர் மதுமாமிசபக்ஷணிகளென்று எஜுர்வேதத்தை ச்சார்ந்த தைதிரிய பிரமாணத்தினலும், அசுவலாயன சூத்திரத்தினலும், அதர்வண வேதத்தைச்சார்ந்த கோபாத பிரமாணத்தினலும், ஸ்பஷ்டமாகும், அவர்கள் மாமிசத்தை உண்டதன்றியில் விஷ்ணு, வருணன், வாயு, சூரியன் ருத்திரன், இந்திரன் முதலானவர்களுக்கு, கோமேத அசுவமேதாதியாகங்களை செய்து உண்டு வந்தார்கள். இதன் விவரத்தை இந்து ஆரியன் சரித்திரம் புத்தகம்—1—363 பக்கத்தை பார்ப்பவருக்கு ஸ்பஷ்டமாகும். சிலர், இந்த அசுவமேதாதியாகங்களின் கருத்து மாமிசபக்ஷணத்திற்கு அல்லவென்று

சொல்லக்கூடும்;ஆனுல்,விருந்தாளி அல்லது அதிதிக்கு "கோகனு"=பசுவைக் கோல்லப்பட்டவன், என்று பெயர்வந்த காரணத்தை விசாரிப்போருக்கு உண்மை வெளியாகும்.

அதாவது-ஆரியர்,தம்மிடம் விட்டு,வேறுயாரிடமாவது விருந்தாளியாகப் போனுல், அவருடைய திருப்தியின்பொருட்டு சோழத்தபசுக்கன்றுகளைக் கோன்று விருந்துசெய்விப்பது சஹஜமாகஇருந்தபடியால்;விருந்தாளிகளுக்கு கோகனு=பசுவைக்கோன்றுஉண்பவன்- என்றபெயரிடப்பட்டதாம்.அதற்கு திருஷ்டாந்தமாக வசிஷடர்,வால்மீகரிடம் வந்தபோது அநேககொழுத்தபசுங் கன்றுகளைக் கொன்று விருந்துசெய்வித்ததாக உத்திரராம சரித்திரத்திலும்; அந்த வசிஷ்டரும், தமதாச்சிரமத்தை நாடிவந்த விசுவாமித்திரர், ஜமதக்கினி, ஜனகர், சதாநந்தர் முதலானவர்களுக்கு பசுங்கன்றுகளைக்கொன்று சமைப் பித்து விருந்தளித்ததாகவும் ஸ்ரீராஜேந்திரலாலமித்திரரின்ஆரியர் சரித்திரம் 356-358-வது பக்கங்களில் ஸ்பஷ்டமாகிறது.—

மாமிசபக்ஷணத்தைப்பற்றி மநுதருமசாஸ்திரம் 3-முதல் 5-அத்தியா யங்களில் அடியிற்கண்டபடி சோல்லப்பேற்றிருக்கிறது.

பிதுர்கள் :—ஒருமாதமுழுதும் திலதர்ப்பணம்,பிண்டம், அன்னம், கந்த மூலபழங்களினுல் திருப்தியடைவதாகவும்; இரண்டுமாதங்கள் மச்சத்தினு லும்;3-மாதங்கள் வேட்டையிலகப்பட்ட மிருகமாமிசத்தினுலும்; 4-மாதங்கள் ஆட்டுமாமிசத்தினுலும் 5-மாதங்கள் பக்ஷிகளின் மாமிசத்தினுலும்; 6-மாதங்கள் வெள்ளாட்டுக்குட்டி மாமிசத்தினுலும்; 7-மாதங்கள் புள்ளிமான் மாமிசத்தினு லும்; 8-மாதங்கள் எரூ என்கிற மான்மாமிசத்தினுலும்; 9-மாதங்கள் ருரு என்ற மான்மாமிசத்தினுலும்; 10-மாதங்கள் காட்டுப்பன்றி, காட்டெருமை மாமிசங்களினுலும்; 11-மாதங்களில் வெள்ளைமுயல், ஆமைமாமிசங்களினுலும், ஒரு ஷூம் முழுதும் பசுவின்பால், அதில் சமைத்த அன்னத்தினுலும்; 12-வரு ஷங்கள் நீண்டகாதுடைய வெள்ளாட்டின் மாமிசத்தினுலும்; மற்றமுடிவில் லாத காலம்வரையிலும் காண்டாமிருகம், தியோதினமீன், இரும்புநர வெள் ளாட்டுக்குட்டி மாமிசத்தினுலும் திருப்தியடைவதாகச் சொல்லப்பெற்றிருக் கின்றது.

இம்மட்டோ?தேவாராதனை, திதி,ஒருபொழுதுஉபவாசகாலங்களில்பாதீ னம், ரோஹிதம் என்னும்மீன்களின் மாமிசங்களை உண்ணலாமென்றும்,மநு தருமசாஸ்திரம் 5-23-லும், 10-107-லும், 3-266-லும்,3-268-லும். 3-269லும், 3-270லும், 5-27லும், 4-250லும், 4-32லும், 5-35லும், வேதத்தில் ஐதிரேய பிரமஹணம் 7-ம் அத்தியாயம், 7-ம் பஞ்சகத்திலும். பின்னும் பலவித மாமி சங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது.

மநு-6,35-ல் சிரார்த்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட துவிஜனானவன் தோஷமென்றுமாமிசத்தைப் புசியாவிட்டால், அவன் இருபத்தொரு ஜநநம் பசுவாய்ப்பிறப்பான்என்றும்சொல்லிஇருப்பதாலும்தேகதாநுட்டியத்திற்தம், துஷ்டநிகிரகம் செய்து தேசத்தை ஆள்பவர் மாமிசபக்ஷணம்செய்தால் உத்தமமென்றும் இக்காலத்து பதார்த்தகுணமறிந்த டாக்டர்களும் சொல்லி இருக்கிறபோது; இக்காலத்து பலிஜவாரு மாமிசபக்ஷணம் செய்வதனுல் அவர்களுடையக்ஷத்திரியவமிசம் க்ஷீணித்துப்போமோ புத்திமான்களேயோசிக்கவேண்டும். நாம் இப்படிச் சொல்வதனுல்,இக்காலத்து பலிஜவாரெல்லோரும்மதுமாமிசபக்ஷணம் செய்யத்தூண்டியதன்று.மஹாத்மாக்களான தேவர்,ரிஷிகள் பிராம்மணர்கள் உவந்து உண்ட மதுமாமிசத்தை பலிஜவாருண்பதினுலேயே கீழ்ஜாதியாகாரென்றும்; புலேயும், கொலேயும், குடியையும் விட்டு,காலதேசவர்த்தமானங்களைத்தழுவி கந்தமூல பதார்த்தங்களேயே பலிஜவாரெல்லோரும் உண்டால், இகத்திலும் பரத்திலும் நல்ல சுகிர்தத்தை அடையலாமென்றும் சொல்லவந்ததேயாம்.

இனிக் கலியுகத்தில் க்ஷத்திரியர்கள் உண்டா? என்னும் கேள்வியைப் பற்றிவிசாரிப்போம்.

நிற்க இக்கலியுகத்தில் சரியான க்ஷத்திரியர்கள் இல்லை என்றுசொல்லுவதற்குக்காரணம், மநுமுதலான தருமசாஸ்திரங்களிற் சொல்லியபடி, இக்காலத்து க்ஷத்திரியரென்போர், தருமாநுஷ்டானங்களைத்தழுவாமையால், சரியான க்ஷத்திரியர்களாகார்கள் எனச் சிலர் சொல்லுகிருர்கள்.

அப்படியாகில், இக்கலியுகத்தில் சரியான பிராம்மணரும், சூத்திரரும் கிடையாதென்றும் சொல்லலாம். எப்படியெனில்:—முதலாவது, ஆரியவர்த்தத்தைக்கடந்ததுவிஜர்கள் மிலேச்சரென்று மநுசொல்லிருப்பதினுலும்; இரண்டாவது—பிராமணருக்கு (மநுவிதித்திட்ட) ஆறுவிதகருமங்களில், யாகம் செய்பவரும், செய்விப்பவரும்,வேதமோதுவோரும்,தானம்செய்பவரும் வெகு சிலரும்; அதைவாங்குவோர் அநேகருமாக இருப்பதனுலும்; வேதமோதுவோரில்பலரிருக்கினும்,அதன்பொருளை அறிந்தோர்வெகுசிலராகவும்,மிகுந்த கருமமாகிய தானம்கொடுப்பதற்கு வெகுசிலரும், அதைவாங்குவதற்கு அநேகரும் இருப்பதாலும்,மநுவிதித்தஆறுகருமங்களை திருப்தியாகச்செய்யாதவர்களை சரியான பிராம்மணர்களென்று எப்படிச்சொல்லலாம்? மேலும், பட்டிக்காட்டுக் கிராமங்களிலிருக்கும் பிராமணர்களில் சிலர் கிராமகணக்கு, மணியம் முனிசீபு முதலான சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர்கள் தவிர, மற்ற பிராமணர்கள் விவசாயத்திற் புகுந்து உழைத்து,அந்த கிராமங்களில் கிடைக்கும் கம்பு, சோளம் முதலான தானியங்களையுண்டு பார்வைக்கு கேவலஞ்சூத்திரர்களைப்போல காலம்கழித்துவருகிருர்கள்.அல்லவா?

நாடு நகரங்களிலிருக்கும் படிப்பில்லாத பிராம்மணர்களிற் சிலர், ஹோட்டல்கடை, சோத்துக்கடை, அரிசிப்பருப்புக்கடை, துணிஜவுளிக்கடை, தோல்கடை, சாராயகுத்தகை, கள்குத்தகை, கூத்தாடித்தொழில், சூத்திரர்களிடம் சமையல் செய்தல், சேவகவேலைகளைச்செய்து காலம் கழிப்பதன்றியில்; சிலர் நீசஸ்திரீகளோடு சேர்ந்தும், சிலசமயங்களில் அவர்களிடம் உண்டும் வருகிருர்கள். இப்படிப்பட்டவர்களை (மநுதருமசாஸ்திரத்தின்படி) சரியான பிராம்மணர்கள் என்று சொல்லப்பொருந்துமோ? மேலும், இந்நாட்டில் இங்கிலீஷ் ராஜியம் ஸ்தாபித்த பிறகு, அநேகபிராம்மணர்கள் தம் மக்களுக்கு இங்கிலீஷ் பாஷையை கற்பிக்க பிரயத்தனப்பட்டதில், பெரும்பான்மையான பிராம்மணவாலிபர்கள், வேதபாராயணம், சந்தியாவந்தனங்களைவிட்டுவிட்டு, ஜியாகர்பி, இஸ்டோரி, யூக்லிட்டு, முதலான ஹூணபாஷா சாஸ்திரபாராயணம் செய்துக்கொண்டும் பி-எ முதலான பரிக்ஷைகளிற்தேறி; சிலர் சதா ஸிவில்கோர்ட்டு கிரிமினல் கோர்ட்டாதி சட்டபாராயணங்களைச் செய்துக்கொண்டும்; சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந்தும், சர்க்கார் உத்தியோக பிராம்மணர்களாகி வருவது பிரதியக்ஷமல்லவா? இவர்களில்சிலர், சீமைமுதலான ஐரோபா அமெரிகாதேசங்களிற்போய் கண்டவிடத்திலுண்டும், உறங்கிவருவதோடு, இந்நாட்டிலேயே சிலர் கிளப்பவுஸ், ரிபரஷ்மெண்டு ரூமுகளுக்கு ரகசியமாகவும், பயிரங்கமாகவும்போய் இஷ்டமான உணவுகளை உண்டுவருவதாககேள்வி. "ஜந்மநாஜாயதேசூத்ர: கர்மணாஜாயதே துவிஜ:" என்ற பிரமாணப்படி, மேற்சொல்லியவர்கள்மநுதருமத்திற்கண்ட கருமங்களைச்செய்யாமையால் இவர்களுக்குதுவிஜத்துவமேது? மநு2-வது அத்தியாயம்168-வதுசுலோகத்தில் "எந்த பிராமணன் வேதத்தை அதியயனம் செய்யாமல், வேறுபாஷைகளைப்படித்தால், அவன் குடும்பத்தோடு சூத்திரத்துவமடைவதாகச்சொல்லி இருக்கிருர். இதியாதி காரணங்களினுல் இக்கலியுகத்தில்சரியான பிராம்மணரும் இல்லை என்றல்லவா ஏற்படுகிறது-நிற்க

இந்நாட்டு சூத்திரர்களில் பெரும்பாலர், மநுதருமவிதிப்படி மற்ற மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்யும் தொழிலை விட்டு, தீயர், புலையர், பள்ளி முதலான அநேகர் கல்விக்கேள்விகளிற் தேர்ந்து, பிராம்மணருக்குச் சமானமான உத்தியோகங்களையும், வர்த்தகவியாபாரங்களையும் செய்துவருவதும் பிரதியக்ஷம். சிலர் பிராம்மணர்களைப்போல காலையில் சுத்தஸ்நானம் ஜபதபங்களைச்செய்தும், விபூதி ருத்திராக்ஷம், திருநாமம், துளசிமாலைகளை அணிந்துக்கொண்டும்; தேவாரம், திருவாசகம், திருபல்லாண்டுகளைப்படித்துக் கொடும்; கோயில் கோபுரங்களைக் கட்டி வணங்கிக்கொண்டும்; புலையும், கொலையும், களவும்விட்டு ஆண்டிகளாகவும், ஆழ்வார் ஆசாரியர்களாகவும் பிரகாசிக்கிருர்களல்லவா? இவர்களெல்லாரும் சூத்திராரவரோ? மேலும் சில சூத்திரர்கள் கிறிஸ்துமுதலான வேறுமதங்களில் பிரவேசித்து பாபுஐயர், பீட்டர் ஐயர், பெரிசிவேல்ஐயர், போப்புஐயர், பாக்கியநாதஐயர், நாட்டுஐயர், பாட்டையர், என்று ஐயர் பட்டங்களை தரித்துக்கொண்டிருப்பதும் பிரதியக்ஷமல்ல

வா? இவர்கள் மநுதருமவிதிப்படி சூத்திராவார்களோ? இத்தியாதி விவரங்களினால் இக்கலியுகத்தில் சரியான சூத்திரரும் கிடையாதென்றல்லவா ஏற்படுகிறது. மேலும்-

---

பரசுராமரால் க்ஷத்திரியவமிசம் நாசமடைந்துவிட்டது என்பதற்கு விடையாவது.

சிலர், "**பரசுராமர்,**" க்ஷத்ரியர்களை 21 தலைமுறையாகக் கறுவறுத்துவிட்டபடியால்; கலியுகத்தில் க்ஷத்திரியர் கிடையாதென்று, சிலபுராண இதிகாசங்களில் கண்டச்சங்கதிகளைக்கொண்டு சொல்லுகிறார்கள். இக்கதையை உண்மையானதாகநம்புவோமாகில்; வேறுசிலபுராண இதிகாசகிரந்தங்களில், பரசுராமர்அசுவமேதயாகம் செய்தபோதுக்ஷத்திரியர்ஆண்டுவந்த பூமியை கஸி**யபருக்கு** தானம்செய்ய, அப்போது கஷியபர், பரசுராமரைநோக்கி: இனிநீர்**பிழைத்துள்ளக்ஷத்திரியர்களைக் கொல்லாமல்விட்டு** (பரசுராமர்) தென்கடலைப் போய்ச்சேரவேண்டுமென்று சொன்னதாகவும், பரசுராமர் அப்படியே ஆகட்டுமென்று போய்விட்டதாகவும், பிறகு உலகில் அரசு இல்லாமல் குடிகள் வருந்துவதைக்கண்டு,பூமிதேவி கஸியபரைநோக்கி"தாம்கேகயதேசத்தில் பாதுகாத்துவரும்அநேக க்ஷத்திரியர்களில் ஒருவனை அரசனாக்கவேண்டுமென்று முறையிட, அந்த கஸியபரும் இணங்கி, ஒரு க்ஷத்திரியனை அரசனாக நியமித்து ஆண்டுவரச் செய்ததனால், க்ஷத்திரியவமிசம் மறுபடியும் கஸியபரால் நிலைநிருத்தியதாகவும் சொல்லப்பெற்றிருக்கிறது.ஆகவெ,முன்சொன்ன **பரசுராமர்** கதை மெய்யானால், பின்சொன்ன **கசியபருடைய** கதையையும் மெய்யாகவே கொள்ளவேண்டும்?

மேலும், தசரதர் பரசுராமருக்கு பயந்து சதா **மாப்பிள்ளை**வேடந்தரித்து இருந்ததாகவும்; அந்ததசரதருடைய புத்திரர் ஸ்ரீராமரையும் பரசுராமர் வந்துத்தாக்க, ஸ்ரீராமரும் எதிர்த்து, பரசுராமர் பிராமணரானபடியால், அவரைக்கொல்லாமல், அவர் தவத்தைக்கொள்ளைக்கொள்ள, பரசுராமர் தோற்று நொந்து தம்மிருப்பிடம் போய்விட்டதாகக் கூர்மபுராணத்திலும், மற்ற இதிகாசங்களிலும் சொல்லப்பெற்றிருக்கிறது. தசரதருடைய முன்னோர்களைபரசுராமர் நாசமாக்கிவிட்டாரெனில், **ஹரிச்சந்திரன்** முதல் **ஸ்ரீராமர்** வரையில் **21 தலைமுறை**யாகிறது. அவருடைய முன்னோர்கள் பரசுராமரால் அழிந்து போயிருந்தால்; தசரதரும், அவருடைய குமாரர் ஸ்ரீராமர், லக்ஷமணர், பரதர், சதுருக்கினர் எப்படி பிறந்திருக்ககூடும்? அன்றியும் அந்த **ஸ்ரீ**ராமர் பரம்பரையில் **தசன்,** அதிதி முதல் சுரதன், **சுமித்திரன்** வரையில் அறுபது (60) பெயர் அரசர்களாகி ஐயோத்தியில் ஆண்டுவந்ததாக சரித்திரம் முறை இடுகின்றதல்லவா, இதற்கு என்ன சமாதானம் சொல்லக்கூடும்—நிற்க

குருகுலவம்சத்தைப்பற்றிவிசாரிக்கையில், கலியுகம் ஆரம்பமாகிறவரையில் பஞ்ச பாண்டவர்களும், பிறகு பரிக்ஷித்து, ஜனமேஜயன், நரேந்திரன், சாரங்கன், விக்கிரமன் முதலானவர்களும்; கலியுகம் பிறந்தபிறகும் இரகுகுலத்தாரும், குருகுலத்தாரும் ஆண்டதாக சாசனங்களகப்பட்டிருக்கின்றமையால், பரசுராமர் அவர்களை கருவறுத்தாரா? புத்திமான்களேயோசிக்கவேண்டும்—ஆதிசூரியசந்திரவம்சத்தைச்சார்ந்த சேரசோழ பாண்டியர்களை மகமதியர்வந்து தாக்கும்வரையில் அரசு செய்து வந்தது உண்மையல்லவோ? அவர்களையும் பரசுராமர் பூண்டறுக்காமல் விட்டதற்குக் காரணமென்ன? புத்திமான்களேயோசிக்கவேண்டும்—

இப்போது வடமேற்கு நாட்டில் குபேரசம்பத்துடன் இராஜியபரிபாலனம் செய்துவரும் **ஜெயபுர** ஸமஸ்தானுதிபதி ஆதி சூரியவம்சத்தைச்சார்ந்த சந்ததியாரென்று அநேக சிலாசாசன சரித்திர சாஸ்திரங்களால் ஸ்தாபிக்கப்பட்டு செங்கோல் செலுத்திவருவது பிரதியக்ஷம். இதேமாதிரியாகவே நேபாளம், காஷ்மீரம், முதலான வடநாடுகளின் அரசர்களும், திருவநந்தபுரம், கொச்சி முதலான ஸமஸ்தானுதிபதிகளுமுறையே சூரிய சந்திரவம்சத்தார்களென்று சிலாசாசன ஆதாரங்களைக்கொண்டு ஸ்தாபித்துவருவது பிரதியக்ஷம்.

இப்போது ஆனேகுந்தியிலிருக்கும் நரபதி **ஸ்ரீரங்கதேவராயலு** இராவ் சாஹேபவர்கள் ஸ்ரீவிஜயநகர நரபதிஸமஸ்தானத்தாருடைய சரியான சந்ததி என்று சாசனசரித்திரங்களால்கண்டும்அவர்நாடுகளை காலவித்தியாசத்திஞல் கைபற்றிக்கொண்ட ஐதிராபாத்து **நிஜாமவர்கள்**, அந்த ராயலுக்கு இனும் ஜாகீர் மானியபூமிகளைக்கொடுத்திருப்பதன்றியில், **இங்கிலீஷ** கவரன்மெண்டாரும் நமது சக்கிரவர்த்திக்குபட்டம்கட்டியபோது அவருக்கு மாதம் 500ரு பின்சன்என்னும்நன்கொடையை பிரதிமாதமும் கொடுத்துக்கொண்டு வருவது பிரதியக்ஷம்: இந்த ஸ்ரீரங்கதேவராயலுடைய முன்னோராகிய ஸ்ரீநரசிம்மராயலு, ஸ்ரீகிருஷ்ணதேவராயலு, ஸ்ரீஅச்சுததேவராயலு, ஸ்ரீ இராமதேவராயலு முதலானவர்கள் ஆதியில் மகதநாட்டிலாண்ட சந்திரவம்ச ஆந்திராருடைய நேரான சந்ததிகளென இப்புத்தகம் முழுதும் படித்துப்பார்ப்பவர்களுக்கு பிரதியக்ஷமாகும்.

மேலும், மதுரை, தஞ்சை, கண்டிமுதலான விடங்களில் ஆண்டுவந்த நாயடுகாரு ஸமஸ்தானத்தாருடைய சந்ததிகள் இப்போது வெள்ளிக்குரிச்சியில் இருக்கவில்லையா? கண்டிஸமஸ்தானத்தைச்சார்ந்தவர்களில் சிலர் இப்போதும் கவர்ன்மெண்டுபின்சன் (நன்கொடை) பெற்றுவருவது பிரதியக்ஷமல்லவா.

ஆகவேஇதுவரையில் எடுத்துக்காட்டிய நியாயவிவரங்களிஞல், சந்திரவம்சக்ஷத்திரியகுலத்தாகிய **பலிஜவாரு** இப்போது காலவித்தியாசத்திஞல் பல பிரிவினராகி, பலகிருத்தியங்களைச்செய்தும், மதுமாமிசங்களை உண்டும்கேவல

மாகத்தோற்றினும், இப்புத்தகத்தை முழுதும், முக்கியமாக ஸ்ரீவில்லிபுத்தூர் வைஷ்ணவ வடகலை தென்கலை மடாதிபதிகளுடைய ஸ்ரீமுகத்தைப்படித்துப் பார்ப்பவருக்கு இவர்கள் சந்திரவமிச க்ஷத்திரியர் என்றும், அப்படிப்பட்ட க்ஷதிரியர்கள் இந்தக்கலியுகத்திலும் இருக்கிறார்கள் என்றும் துரபிமானமற்ற மேலோருக்கு பிரதியக்ஷமாகும்.

ஏழாவது காண்டம்.

பலிஜவாரின் தத்கால ஸ்திதியைப்பற்றி நமது (ஆங்கில) கவரன்மெண்டாருடைய விசாரணை.

ஒரு காலத்தில் ஹிமசேதுவரையில் சந்திரவமிச ஆந்திர க்ஷதிரியர்களென்று பெருமையான புகழையும்; கல்வி, செல்வம்,சீர்திருத்தமும் பெற்று செங்கோல் செலுத்தியும்; பிரம்மாலயம், தேவாலயம், நந்தவனம் ஆவிகூப தடாகங்களையும், கல்விச்சாலை, தொழிற்சாலை தருமச்சாலைகளை ஸ்தாபித்தும்; ஆரிய தருமசாஸ்திரநியமனப்படி அரசுசெய்தும்; இந்து மதத்தையும், இந்து ஜனங்களையும் மகமதாதி ஏனைய மதஸ்தர்கள் வந்துதாக்கி கெடுக்காதபடி சுமார் 400வருஷம் பாதுகாத்தும் வந்த பலிஜவாரு, காலவித்தியாசத்தினால் கல்விச்செல்வமற்றும், தம்ஜாதிகுலாசாரங்களைத்தக்கபடி தழுவவகையற்றதனால்; ஏனையோரால் பரிஹஸிக்கும்படியான நிலைமைக்குவந்து தவிக்கும்போது, அவர்களுக்கு, தெய்வானுகூலத்தினால் மங்காத புகழ்பெற்ற ஆங்கிலேய கவரன்மெண்டார் உதவிசெய்ய வந்ததைக்கண்டானந்திக்கவேண்டும்-அதாவது.

ஆங்கிலேய அரசர் ஆரியவர்த்தமென்னும் இந்தபரதகண்டத்தின் பெரும்பாகத்தை சுவாதீனம்செய்துக்கொண்டபிறகு, இதன்விஸ்தீரண முதலான விவரங்களையும், இதில் முன்ஆண்ட அரசருடைய காலம், இடம், ஜாதி, சமயசரித்திரங்களையும் சரியாக அறிந்து, அரசு செய்யவேண்டுமென்னும் அவாவினால், அநேகப் பொன்னைச்செலவழித்தும், அநேக டிஸ்டிரிகட்டு மானியூல் (District Manual) ஜில்லா சரித்திரங்களையும்; பல்லாயிரம்பொன்னை செலவழித்து பத்துவருஷங்களுக்கு ஒருதடவை குடித்தொகை சரித்திரங்களையும் எழுதிவருவதில், மூலைமுடக்குகளில் மறைந்துகிடக்கும் குடிகளுடைய சரித்திரங்கள் வெளியாகிவருகின்றன—

இதுவிஷயத்தில் 1891வருஷம் குடித்தொகைச் (Census) சரித்திரத்தை மேஸ்டர் ஸ்டூவார்டு துரையவர்களுடைய ரிபோர்ட்டிலிருந்து சங்கிரகித்து எழுதுகிறோம்.

1891ஆம் சென்னைராஜதானியின் கானிஷ்வாரிகணக்கு.

1891ஆம் கானிஸ்வாரிகணக்குரிபோர்ட்டு XIII-13-வது வாலியம் 458-வது பாராவில், இந்த சென்னை ராஜதானியில் 1891ஆம்—7,11,379 பலிஜவாரு இருந்ததாகவும்; இவர்கள் இந்தராஜதானியின்பலபக்கங்களிற் பரவிவசிக்கும் வர்த்தகவியாபாரஜீவனம்செய்யும் குடிகளென்றும்; இவர்களுடைய ஆதி உற்பத்தி விவரங்கள் பலவாருக இருக்கினும்,காபுகள் அல்லது ரேட்டிவாரு முதலான வகுப்புகளிலிருந்து உண்டானவர்களாக இருக்கலாமென்றும், இந்தபலிஜவாருக்குள் 650 உள்பிரிவார் இருக்கிறதாகவும் எழுதி இருக்கிருர்.மேலும், இந்த 650-உட்பிரிவார்களுக்குள் முக்கியமானவர்கள், 13, உட்பிரிவாரென்றும்; அந்த 13, உட்பிரிவாருடைய பெயர்களையும், கணக்கையும் பின்வருகிறபடி எழுதிபதிப்பித்திருக்கிருர்-எப்படியெனில்-

1. செட்டி	(பலிஜவாரு)	1891ஆம்	100446,	குடிகள்
2. காஜுலு	ஷை	ஷை	101791	ஷை
3. கவரை	ஷை	ஷை	36101	ஷை
4. லிங்க	ஷை	ஷை	20015	ஷை
5. முசுகு	ஷை	ஷை	9420	ஷை
6. பஞ்சம்	ஷை	ஷை	11310	ஷை
7. இராஜமஹேந்திரஷை		ஷை	14538	ஷை
8. தெலுகுபலிஜலு		ஷை	24500	ஷை
9. தலுங்குபலிஜலு ?		ஷை	27006	ஷை
10. தோட்டபலிஜலு		ஷை	66089	ஷை
11. வாடபலிஜலு		ஷை	12036	ஷை
		ஷை		
		ஆகமொத்தம்...	133000	ஷை
12. கவுரவபலிஜலு		ஷை	168966	ஷை
13. பெரிகபலிஜலு		ஷை	19356	ஷை

இந்த 13, வகுப்பார்களன்றியில், இராள்ளவாரு, கெம்புலுவாரு, பகடாலவாரு, அதிவாரு, உப்புவாரு, மூடகம்மலபலிஜவாரு என்ருதி உட்பிரிவினர்களிருக்கிறதாகவும், அவர்களுடைய கணக்குகள் சரியாக அகப்படவில்லை என்றும்; இந்த 13, வகுப்பார்களில் இந்திந்தஜில்லாக்களில் இத்தனைப்பெயர்களிருக்கிருர்கள் என்று காட்டும்படியுடனும் எழுதி பதிப்பித்திருக்கிருர்— (Vide P. 276-Para 458 of the Census of India Vol XIII of 1891—)

இந்த 1901ஆம் கானிஷ்வாரி ரிபோர்ட்டு திருப்திகரமானதென்று சொல்ல விடமில்லை—ஏனெனில்—

முதலாவது—இந்த பலிஜவாரு, காபு, ரேட்டி முதலானமற்ற ஜாதிகளிலிருந்து உண்டானவர்களல்லர் என்று இந்த பலிஜவாருபுராணப்புத்தகத்தை முழுதும்படித்துப்பார்ப்பவருக்கு ஸ்பஷ்டமாகும்.

இரண்டாவது—பலிஜவாருள் உட்பிரிவுகளில் **1-2**-நெம்பர்களிற்கண்ட (1) **செட்டிகள்** (2) **காஜுலுவாரு** என்று எழுதியதில், காஜுலுவாருக்கே செட்டிகள் என்ற பட்டப்பெயர் வழங்கிவருவதனால், இனி " **செட்டிகள்** " என்று தனிப்பெயரால் ஒரு உட்பிரிவைக்காட்டிய காரணம் தெரியவில்லை- 3-வது நெம்பரில் " **கவரைகள்** " என்றும், 12-வது நெம்பரில் " **கவுரவர்கள்** " என்றும், இரண்டுவித உட்பிரிவாராகத் தனித்துக்காட்டியகாரணமும் தெரியவில்லை-மேலும் 8-9 வது நெம்பர்களில் " **தெலுங்குவாரு** ' என்றும், **தெலுங்குவாரு**-என்றும்ஒரேபொருளுள்ளப்பெயர்களைதனித்தனியாக பிரித்துக்காட்டிய விதமும் தெரியவில்லை-

மூன்றவது—5,ம் நெம்பரில் காட்டிய முசுகு என்ற முசுகுவாரு சேலம், கோயமுத்தூர் முதலான ஜில்லாக்களிலிருக்கும்போது, வடஆற்காடு ஜில்லாவில் மாத்திரம் இருப்பதாக எழுதியும், 3-வது நெம்பரில்கண்ட கவரைபலிஜவாரு கோயமுத்தூரில் 1000 பெயர்தான் இருப்பதாக எழுதியும், இப்படி பலவகுப்பாருடைய சங்கையை பலஜில்லாக்களில் வித்தியாசப்பட்டிருத்தல் பாக்ககாணலாம். இந்த கானிஸ்வாரிகணக்கு இப்படி வித்தியாசப்பட்டிருப்பதற்கு நமதுகாருணிய கவரன்மெண்டார் காரணரல்லர்—

எனெனில்:-இக்காலத்தின்,பெரும்பான்மையான பலிஜவாருக்குபோதுமான கல்வி, அறிவு இல்லாமையாலும், இவர்கள் இன்னகுலம், இன்னஜாதி, இன்னகோத்திரம், இன்னசூத்திரம், இன்னவீட்டுக்கு உடையவர் என்று வியக்தமாக அறிந்திருக்கும்படி,ஆன்றோரும், ஆசாரியர்களும் அடிக்கடி போதனைசெய்துவைக்காமல்அந்தகாரத்தில்விட்டிருப்பதனாலும்; கவரன்மெண்டு கானிஸ்வாரி கணக்கெழுதும் (எனியூமரேட்டர்கள்) வந்து எழுதும்போது, **வாயில்வந்தபடி உளரிவிட**, அவைகளை (எனியூமரேட்டரவர்கள்)நிஜமென்று நம்பி எழுதி கவரண்மெண்டாரிடம் கொடுக்க, அவர்களும் அதை நம்பி அச்சிட்டு விடுகிறார்கள்.

இப்படிச்செய்வதனாலுண்டாகும் சாதக பாதகங்களுக்கு குடிகளே காரணரேயன்றி, கெவரன்மெண்டாரல்ல. குடிகள் தம்தம்சரியான ஜாதிமதங்களை தக்கபடி சொல்லி எழுதிவைக்காவிட்டால்; ஜாதியிலும், **மதத்திலும்**, **வேஷபாஷாதி**களிலும் முற்றும்வேறுபட்டிருக்கும் கவரன்மெண்டார்எப்படி அறியகூடும்? குடிகளாலுண்டாகும் குற்றங்களுக்கு கவரன்மெண்டாரை நிந்தித்தல் நியாயமாகுமா? நமது கவரன்மெண்டார், இவ்வளவு தசையிலிருந்தும், தமது குடிகளுடைய உண்மையான ஜாதிஅந்தஸ்துகளை அறிந்து அரசுசெய்யவேண்டுமென்னும் நல்ல எண்ணத்தினால் படும்பாடு கொஞ்சமல்ல- இதற்கொரு திருஷ்டாந்தமாக:—1871ளும் குடித்தொகை எழுதியபொது இந்த ராஜதானியின் குடிகளை **ஆசியாகண்டத்தார்** (Asiatics) என்றும் (2) **ஐரோப்பியர்** (Europeons) என்றும் (3) **யூரேஷியர்** (Eurasians) என்றும் மூன்று

பெரிய ஜாதியாராக வகுத்தும் பிறகு அவர்களில் முதல் வகுப்பாகிய ஆரியர்க
ளிடத்தாரில் இந்துக்கள் இருந்தவர் பவுத்தர், ஜெயினர் (2) மகம்மதியர் யென்று வி
சேஷ உட்பிரிவினராக வகுத்தும, அவர்களில். அதாவது 3,00,00,000 இந்துக்களில்
விவசாயம், வர்த்தகம் முதலான 17 வகுப்பு தொழிலாளர்களிருப்பதாகவும் காட்
டினார்கள். இப்படிச்செய்ததினால், இந்துக்களில் உயர்ந்த ஜாதியார் இன்னாரென
றும் தாழ்ந்தஜாதியார் இன்னாரெனறும் தெரியவகையற்று தவிக்கவேண்டி வந்த
மையால் ; இக்குறைவை நீக்ககருதி 1881௵ எழுதிய கானிஷ்வாரி கணக்கில்
இந்துக்கள் இத்தனைபெயர், மகம்மதியர் இத்தனைப்பெயரெனறு எழுதியும்; அவர்
களில் 100000 ஜனங்களை உடைய ஜில்லாக்களில் 49 விதமான இந்துக்கள் இருப்ப
தாக காட்டியும், அவர்களில் 17 பெரியஜாதியாரையும், 254 உட்பிரிவாரையும்
பிரித்துக்காட்டினார்கள். இதிலும் திருப்தி இல்லாமையினால் 1891௵ எழுதிய
கானிஷ்வாரி கணக்கில் 1871௵ 1881௵ கணக்குகளை அனுசரித்தும், இந்துக்
களுடைய ஜாதி விபரங்களைப்பற்றி பின்னும் சற்று விவரமாக எழுதினார்கள் இது
வும் திருப்தியாக விராமையால், 1901௵ எழுதிய கானிஷ்வாரி கணக்கில், இந்த
ராஜதானியில் வசிக்கும் இந்துக்களில, தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்ன
டியார் ஒரியர் முதலான மற்ற பாஷைக்காரர்கள் இத்தனை பெயர்களென்றும், அவ
ர்களுடைய ஜாதி, பிறப்பு அந்தஸ்து முதலான சரித்திரங்களையும திட்டமாக எழுத
விரும்பி, ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும உத்தியோகஸ்தர்களையும், சுஜாதி பெரியோர்
களையும், சேர்த்து சபைகள்கூட்டி, அவர்களால் தக்கபடி விசாரித்து எழுதினார்
கள். அப்படி எழுதினதினால் ஒருவாறு உண்மையான சரித்திரம் கிட்டின ; கிட்டவே
பலிஜவாரைப்பற்றி 1901௵ கானிஷ்வாரி கணக்கில் பின்வருகிறபடி எழுதப்பெ
ற்றிருக்கிறது.

1901ஞு சென்னை ராஜதானியிலிருந்த பலிஜவாரு 10,08,036 குடிகள் M-107.

இவர்கள் (பலிஜவாரு) விசேஷமாக வர்த்தகம்செய்யும் தெலுங்கு ஜாதியார்கள். இவர்கள் இச்சென்னைராஜதானியின் எல்லா ஜில்லாக்களிலும் பரவியிருக்கிறார்கள். இவர்களில் தேசபலிஜவாரென்றும், கோட்ட பலிஜவாரு என்றும் பேட்டபலிஜவாரென்றும் இரண்டு முக்கியமான வகுப்பினர் இருக்கின்றனர்-இவ்விரு வகுப்பார்களில் முதல் வகுப்பார், மதுரை, தஞ்சை, விஜயநகர ஸமஸ்தானங்களை ஆண்டபலிஜ அல்லது நாயக்கர் ராஜர்களுடைய சந்ததிகளைச் சார்ந்தவர்கள். இரண்டாவது வகுப்பார், வளையல்களைவிற்கும் காஜுலுவாரும், உப்பு வியாபாரம் செய்யும் பெரிகவாருமான வர்த்தக விருத்தி செய்பவராவர்—தமிழ் ஜில்லாக்களில் பலிஜவாரை வடுகர் (தெலுங்கு ஜனங்கள்) என்றும், கவரைகளென்றும் சொல்லப்படும். மதுரை, தஞ்சை ஸமஸ்தானங்களைஆண்ட நாயக்கர் அல்லது பலிஜராஜாக்களுடைய சந்திகள் க்ஷத்திரியஜாதியைச்சார்ந்த கஷியபகோத்திரத்தார்களென்றும்; விஜயநகர சமஸ்தான இராயலுகாருகள் பாரத்துவாஜ மஹாமுனிவருடைய நேரான சந்ததிகளென்றும் சொல்லுகிறார்கள். மற்ற பலிஜவார்கள் மஹாபாரதத்தில் கண்டிருக்கும் கவுரவர்களுடைய சந்ததிகளென்று சொல்லுகிறார்கள். சொன்னாலும், இவர்கள் க்ஷத்திரியர் சந்ததிகளென்பதை மற்ற ஜாதியார் அங்கீகரிக்கிறதில்லை. பலிஜவாரு கம்ம, காபுஜாதிகளிலிருந்துண்டானவர்கள், அல்லது ஷை ஜாதிகளிலிருந்தும், வேறு ஜாதிகளிலிருந்தும் பிரிந்த கலப்பு ஜாதியாரென்றும் சொல்லுகிறார்கள்—இந்த ஜாதியைச்சார்ந்தவர்களில் எவரும் இப்போது (எஞ்ஞோபவீதம்) பூணுநூலை தரிக்கிறதில்லை, வேதோகதமாக கர்மங்களைச்செய்வதுமில்லை. (விவரமாக அறிய விரும்புவோர், 1891 ஞு கானிஸ்வாரி ரிபோர்ட்டையும், கர்னூல் சரித்திரம் 137-வது பக்கத்தையும், பக்கானன் மைசூர் சரித்திரம் 1-வது வாலியம், 16ரீ, 170 பக்கங்களையும், மதுரை சரித்திரம் 2-ம் பாகம் 86-வது பக்கத்தையும், வட ஆற்காடு சரித்திரம், வாலியம் 1-20-23 பக்கங்களையும் படித்துப்பார்க்கலாம், என்று எழுதியிருக்கிறார்.

பாருங்கள்! மேஸ்டர்ஸ்டுவோட்டவர்கள் 1891ஞு எழுதிய சரித்திரத்திற்கும், இந்த 1901ஞு-ம் சரித்திரத்திற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது ?

பாருங்கள் ! நமதுகாருண்ணிய கவர்ன்மெண்டார் இந்து ஜாதி விவரங்களை திட்டமாக அறியவேண்டி எடுத்துக்கொண்ட சிரத்தையினால், இந்த 1901ஞு-ம் குடித்தொகை ரிபோர்ட்டு கூடியவரையில் திருப்தீகரமானதென்று சொல்லும்படியாக பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால் “ **இந்த பலிஜவாரு க்ஷத்திரியரல்லரென்றும், கம்ம** அல்லது **காபு** அல்லதுமற்றதெலுங்கு ஜாதிகளிலிருந்து உண்டானவர்கள்என்று மற்றவர்கள்சொல்லுகிறர்களென்

றாளெழுதியிருப்பதைப்பற்றியும்; 2-து-இந்த பலிஜவாரில்எவரும் **பூணுநூல்தரிப்பதில்லை"** என்றும் எழுதியிருப்பதைப்பற்றியும் சிலர் விசனப்படக்கூடும்—இப்படி பிசகாகப்பதிப்பித்ததற்கு கவர்ன்மெண்டார் காரணரல்லர். இத்தியாதி விஷயங்களைப்பற்றி கவரன்மெண்டாருக்கு திருப்தியுண்டாகும்படி தம் தம் ஜாதிமுதலான விவரங்களை உள்ளது உள்ளபடி கவரன்மெண்டாருக்கு தெரிவிக்காமல் சோம்பலாகவிருந்தது குடிகளுடையகுற்றமேயாகும்; ஆகவே கவரன்மெண்டாரை நொந்துக்கொள்வதுஅநியாயமும், அவிவேகமுமாகும்—நிற்க—**மேல்கண்ட 3 வினாக்களுக்கு** ஒருவித **விடைகளாவன**—

1 வது. "பலிஜவாரு கம்ம, காபு முதலானவர்களிடமிருந்து உண்டானவர்களென்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள் எதெனில்; **கம்மாளர்களும், லிங்கம் கட்டிகளும், பட்டுநூல்காரர்களும்,** தாம்தாம் விசுவகுல பிராம்மணர், **ஆரியபிராம்மணர், சவுராஷ்டிர பிராமணர், சிவாசார பிராம்மணர்களென்றும்,** மற்ற நமது நாடறிந்த பிராம்மணர்களை சரியான பிராமணர்கள் அல்லரென்றும் சொல்லிவருகிறார்கள்; இப்படி கம்மாளர்முதலானவர்கள் சொல்லிவருவதனாலேயே நமது நாட்டு பிராம்மணர்களை பிராம்மணரல்லரென்று சொல்லப் பொருந்துமோ? **இந்த ஆக்ஷேபணையை** பிராம்மணர் முதலான மற்றவர்கள் **அங்கீகரிப்பார்களோ?**

2 வது. பலிஜவாரி லிப்போது எவரும் **பூணுநூல்** தரிப்பதில்லையென்று சொன்னதும் பிசகே—இப்போது அநேக ஜில்லாக்களி லிருக்கும் பலிஜவாரு பூணுநூலை சதா தரிக்காவிட்டாலும்; சில விடங்களில் பலிஜவாரு பூணுநூலை சதா தரித்திருப்பதோடும்; பெரும்பாலார் கலியாணம் கர்மாதி காரியங்களை நடத்தும்போது புரோகிதரால் பூணுநூலைப் பெற்று தரித்து வருவது பிரதியக்ஷம். பூணுநூலை தரிப்பதனாலேயே சிரேஷ்டத்துவமெனில்; சில ஜில்லாக்களில் பள்ளிகள், செம்படவர் முதலானவர்களும் பூணுநூலை தரித்துக்கொண்டிருக்கிறார்களன்றோ? அவர்கள் துவஜர்களாவரோ?

3 **வது—"வேதோக்தமாக** கருமங்களை"ச் செய்வதில்லையெனில்,—கால வித்தியாசத்தினாலும், கல்வி அறிவில்லாமையாலும், "**வேதம்**" என்னும் பதத்திற்கே பொருளறிய வகையற்று தவிக்கும்போது, இனி வேதோக்தமாக கருமங்களைச் செய்வதெப்படி சாத்தியமாகும்? கலியுகத்தில் வேதோக்தமாக கருமங்களைச்செய்வது கஷ்டமென்றுகண்டே **வியாசர், ஆழ்வார், ஆசாரியர்** புராணரீதியாகச் செய்யலாமென்று சொல்லி இருக்கிறார்களல்லவா?

நமது ஆங்கில கவரண்மெண்டார் வேஷபாஷாதிகளில் நம்மவருக்கு வேறுபட்டவர்களாக இருப்பதனால், இத்தியாதி விஷயங்களை தமக்கருகிலிருக்கும் சுதேச உத்தியோகஸ்தர்களை விசாரித்து எழுதவேண்டி வருகிறது. அப்படி விசாரிக்கும் சுதேச உத்தியோகஸ்தர், **தூரபிமானமுள்ளவர்களாக** இருந்தால், தமக்கிஷ்டமான சங்கதிகளைச் சொல்லி விடுவார்கள். அச்சங்கதிகளையப்படி எழுதிவிட்டால் குடிகளுக்கு கஷ்டங்களுண்டாகின்றன. இத்தியாதி கஷ்டங்களை நீக்கக்கருதியே கவரண்மெண்டார் **இதனேகிராமிர்தசர்வே**

(Ethnogrophic Survay) டிபார்டுமெண்டை இப்போது நியமித்து, அந்தந்த ஜாதியார் குடி இருக்கும் இடங்களுக்குப்போய் நேரில் விசாரித்து சரித்திரம் எழுதும்படி நியமித்திருக்கிறார்கள்; ஆகவே, இனி 1911லும் எழுதும் கானிஷ்வாரி கணக்கு திருப்திகரமாக இருக்கும் என்பது திண்ணம். இப்படி இங்கிலீஷ் கவரண்மெண்டார் நம் குடிகளுடைய க்ஷேமத்துக்கு உழைப்பதற்கு நன்றியறிந்த வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா?

முடிவுரை.

எனது சுஜாதியாருக்கோர் வினயமுள்ள விண்ணப்பம்.

சுஜாதி சகோதிரர்களே,

இந்த பலிஜவாரு புராணத்தைச்சார்ந்த **இரண்டாம்பதிப்பு முகவுரையில்** கண்டிருக்கும் சாசனங்களினால்; முக்கியமாக **ஸ்ரீவில்லிபுத்தூர் வடகலே, தென்கலே ஆசாரிய சுவாமிகளுடைய ஸ்ரீமுகப் பத்திரிகையினால்** நம்மவர் ஆதி **சந்திரவமிச க்ஷத்திரியர்** என்று ஸ்பஷ்டமாகும்.

இப்புராணத்தின் 2 முதல் 12 பக்கங்களிற் கண்டச் சங்கதிகளினால், அந்த ஆதிசந்திர வமிச க்ஷத்திரியர்களில் **பலிஜன்** அல்லது **ஆந்திரர்** பிறந்து மகததேசத்திலாண்டபிறகு, அவர்களில் ஆறேழு பெயர், மகதநாட்டைவிட்டு தெற்கேவந்து, புது ஸமஸ்தானங்களை ஸ்தாபித்து ஆண்டுவந்த சங்கதிகள் விவரமாகும்.

இப்புராணத்தின் 13 முதல் 20 பக்கங்களினால், அப்படி ஆண்டவர்களுக்குள் **விக்கிரமார்க்கன்** மாளவ உஜ்ஜினியில் ஆண்டுவந்தவிவரம் விவரமாகும்.

இதன் 20 முதல் 27 வது பக்கங்களினால், அந்த ஆந்திரருள் ஒரு சந்ததியாராகிய **சாலுக்கியருடைய** இராஜிய பரிபாலனம் விவரமாகும்.

இதன் 28 முதல் 30 பக்கங்களினால், அந்த ஆந்திரருடைய மற்றோர் சந்ததியாராகிய **காலசூரியர்** என்பவர்களுடைய இராஜ்ஜிய பரிபாலனம் விவரமாகும்.

இதன் 31 முதல் 34 பக்கங்களினால், அந்த ஆந்திரருள் மற்றோர் சந்ததியராகிய ஓரங்கல் **கணபதிராயர்களுடைய** அரசாக்ஷி விவரமாகும்.

இதன் 35 வது பக்கத்தினால் அந்தஆந்திரருள் மற்றோர் சந்ததியாராகிய **கொண்டவீடு கஜபதிராயலு** களுடைய அரசாக்ஷி விவரமாகும்.

இதன் 36 வது பக்கத்தினால், அந்த ஆந்திரருடைய மற்றோர் சந்ததியாராகிய **கபிலேசுவரகஜபதியார்** உடைய அரசாக்ஷி வெளியாகும்.

இதன் 37 முதல் 123 பக்கங்களினால் அந்த ஆந்திரருள் மற்றுமோர் சந்ததியாராகிய **விஜயநகர நரபதிகள்** உடைய செங்கோல் சிங்காரம் வெளியாகும்.

இதன் 3 ம் காண்டம்முதல் 16-46பக்கங்களினுல், அந்தநாபதிகளுடைய சந்ததிகளாகிய தஞ்சை சேவப்பநாயடு, அச்சுதப்பநாயடு, விஜயராகவலு நாயடு சமஸ்தான பதிகளின் பிரபாவம் விவரமாகும்.

இதன் இரண்டாம் காண்டத்தில், அந்த நாயடுகோரு தென்னுடுகளுக்கு வரும்காலத்தில், இத்தென்னுட்டிலாண்ட சேர சோழ பல்லவ பாண்டியர்களுடைய அரசாக்ஷியின் விவரம் வெளியாகும்.

இதன் மூன்ரும் காண்டத்தினுல், இவர்களுக்கு நாயடு என்ற பட்டம் வந்த காரணமும், வெங்கடகிரி, கார்வேட்டி நகரம், காளாஸ்திரி, பிட்டாபூர், போபுலி சமஸ்தானங்களுண்டான விதங்களும்; தஞ்சை, மதுரை, இலங்கை முதலான விடங்களில் நாயடு ஸமஸ்தானங்களை ஸ்தாபித்தாண்டவர்களுடைய விவரங்களும் வெளியாகும்.

இதன் நான்காவது காண்டத்தினுல் கோட்டை, பேட்டை, பலிஜவார்கடைய வீட்டுப் பெயர்கள், கோத்திரம், சூத்திரம், மதம், விவாஹாதிகர்மங்களைச்செய்யும் விவரங்களும், 1901ஸூ கானிஷ்வார் கணக்கின்படி குடித்தொகை முதலான விவரங்களும் வெளியாகும்.

இதன் ஐந்தாவது காண்டத்தினுல், பேட்டை பலிஜவாருடைய விவரம், அவர்களுக்கு நேசாஹிபட்டம் வந்த விவரமும், பலிஜவாருகளுக்குள் இருக்கும் பல உள் பிரிவார்களுடைய சரித்திரங்களும் விவரமாகும்.

இதன் ஆருவது காண்டத்தினுல், பலிஜவாருடைய தத்கால ஸ்திதியைப்பற்றி சிலர்கொண்டிருக்கிறஅபிப்பிராயங்களுக்கு, விடையாகக்காட்டிஇருக்கும் பிரமாணங்கள் இன்னவையென்று விவரமாகும்.

இதன் ஏழாவது காண்டத்தினுல் கவரண்மெண்டாருடைய கானிஸ்வாரி கணக்கின்படி ஜாதிஅந்தஸ்துக்களின் விவரமும் வெளியாகும்.

இவ்விஷயங்களை எல்லாம் ஒருதரத்துக்கு பலதரம் படித்துப்பார்த்தும் விரிந்த சுபுத்தியோடு யோசித்தும் பார்ப்பீர்களாளுல்; ஒரு காலத்தில் மண்டலம்புகழ் மஹோன்னத தசையிலிருந்த சந்திரவம்ச ஆந்திரர்களுடைய சந்ததிகளாகிய நம்மவர், இப்போதிருக்கும்படியான கேவலஸ்திதிக்கு வந்திருப்பதற்குக் காரணம் நம்மவரேஎன்று ஸ்படிகமாகும்—எப்படியெனில்:— நமது முன்னேராகிய ஆந்திரர்களில், மநுதர்மசாஸ்திரத்தில் க்ஷத்திரியருடைய தருமங்களைப்பற்றிச் சொல்லி இருக்கிற (அதாவது பிரஜைகளை தருமமாக காத்தல், (2) வேதமோதல், யகியாதி சருமங்களைச் செய்தல், (3) பரஸ்திரிகளுடைய முகங்களை (காம இச்சையுடன்) பாராதிருத்தல் (4) பாட்டு கூத்துகளில் மனதை நாட்டாம லிருத்தலாகிய) விசேஷ தருமங்களைத் தழுவி, தருமராஜயபரிபாலனம்செய்த விக்கிரமார்க்கன் போஜமஹாராஜன் பிரதாபருத்தி ரகஜபதி, வீரநரசிம்ஹ நரபதி, கிருஷ்ணதேவாராயலு, அச்சுத தேவராயலு முதலான வடதேசத்தாரும்; அவர்களுடைய பின்சந்ததியார்களான

தஞ்சை சேவப்பநாயடு, அச்சுதப்பநாயடு, விஜயராகவலு நாயடு, முதலான சோழநாட்டரசர்களும்; விசுவநாதநாயடு, குமார கிருஷ்ணப்பநாயடு, திருமலைநாயடு, மங்கம்மகாரு முதலான பாண்டிய நாட்டரசர்களும் தம் தம் காலங்களில் குடிகளால் கொண்டாடப்பெற்றிருந்ததோடு, இக்காலத்து குடிகளாலும், ஏனையநாட்டராலும் கொண்டாடப்பெற்றும், சிலரால்வணங்கப்பெற்றும் வருதல் பிரதியக்ஷமல்லவா ?

அந்த மஹான்களுடைய பின் சந்ததியார்கள் அவர்களைப்போல க்ஷதிரிய தருமங்களைத் தழுவாமலும், கல்வி அறிவைப் பெறாமலும், விஞ்ஞானவிருத்தியை விட்டொழித்தும், தம்முயிரைப்போல் மன்னுயிரைப் பாதுகாவாமலும், தமது இராஜ்ய பரிபாலன காரியங்களை தாமே நேரில் பாராமலும், மூடர்களான மந்திரி பிரதானி முதலான சிப்பந்திகளிட விசாரணையில்விட்டுவிட்டு; தாம், வீணான வீராவேசத்தோடு தம்மினத்தாரோடும், சுஜாதியாரோடும் வீண் சண்டைகளைச் செய்துக்கொண்டு வந்ததனாலும்; சமயங்கண்டு சுஜாதியாருக்கு உதவிசெய்யாமல், ஏனைய ஜாதியாரோடும், ஏனைய மதஸ்தரோடும் சேர்ந்துக்கொண்டு தம் சுஜாதியாருக்கு தீங்குகளை விளைவித்துக்கொண்டுவந்ததனாலும்; கணக்கற்ற கன்னிகைகளோடுகூடி காமகூத்துகளை ஆடிக்கொண்டும், மிதமிஞ்சி மதுமாமிசங்களை உண்டு மடிந்தவர்போல மயங்கிக்கிடந்ததினாலும், அவரவர்களுடைய குரூர உத்தியோகஸ்தர்களுடைய கொடுங்கோலுக்குள் குடிகள் வருந்தித் தவித்ததனாலும், அக்கொடுங்கோலின் கஷ்டம் கடவுளுக்கே சகிக்கக்கூடாமலிருந்தமையாலும் அவர்களுடைய அரசாக்ஷியைப்பிடுங்கி ஏனையோரிடம் கொடுத்துவிட்டார்போலும். இதன் காரண காரிய மிம்படி இருக்க, இதை யறியாத நம்மவரில் சிலர். பலிஜவாரு இப்போது இவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்ததற்கு பிராம்மணரே காரணரென்றும், அந்த பிராமணர் ஆந்திரருக்கு மந்திரிகளாக இருந்தபோது, அநேக அகிரமமான நடவடிக்கைகளை நடத்தி இராஜியபரிபாலனத்தைப் பாழ்த்துப் போகச்செய்து விட்டார்களென்றும், இக்காலத்து பிராமணர்களும், பலிஜவாரை சூத்திரஜாதியாரென்றுசொல்லி கீழ்ஜாதியாக்கி விட்டார்களென்றும் சொல்லித் திரிகிறூர்கள்.

என்ன அநியாயமான அபிப்பிராயம் ! இப்படிப்பட்ட பிசகான அபிப்பிராயங்கொண்டிருப்பவர்கள் இந்தப்புராணத்தை முழுதும் ஆர அமர வாசித்துப் பார்ப்பார்களாகில், பலிஜவாருடைய ராஜாங்க காரியங்களை நடத்த மந்திரிகளாக நியமித்த பிராம்மண மந்திரிகளில் இரண்டொருவர் தவிர, மற்றபிராம்மண மந்திரமார்கள் எல்லோரும் மஹாமதியூகிகளாகி, தருமராஜியபரிபாலனத்துக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் உள்ளன்போடு செய்துப் பாதுகாத்த விவரம் பிரதியக்ஷமாகும். மேலும், மந்திரிமார்கள் கொடுங்கோன்மை செய்வதற்கும், சதிமோசம் செய்வதற்கும், அரசருடைய அவிமேகமும், ஆளும் திறமை இல்லாமையுமே காரணங்க ளாகுமன்றோ ?

அன்றியும், இக்காலத்து பிராம்மணர்களும் நம்மவரை சூத்திரஜாதியாக்கி அவமதிக்கிறதாக எண்ணுவதும் பிசகான அபிப்பிராயமுமேயாகும்—ஏனெனில், கேவல சாஸ்திரஞானமும், சரித்திர ஆராய்ச்சியுமற்று துரபிமானமுள்ள இக்காலத்து சில பிராம்மணர்கள் நம்மவரை சூத்திரராக பாவித்தாலும்; படித்தவர்களும், பெரியவர்களுமான பெரும்பான்மையான பிராம்மணர்கள் நம்மவர் ஜாதிக்குத்தக்கபடி மரியாதைசெய்து அன்பு பாராட்டி

வருவது அனுபவ சித்தமேயாம். ஆகவே, நம்மவர் பிராம்மணரை தூஷித்தல் அவிவேகமும் அநியாயமேயாகும். இதுகிடக்க—

இப்பிரபஞ்சாதிபதியாகிய பரமேசுவரன் படைத்த பிரஜைகளை, சுகமாக வாழ்விக்கக்கருதி, காலத்துக்குக் காலம் தருமாநுஷ்டர்களை சிரிஷ்டித்து, அண்டத்தின் அரசர்களாக அனுப்பிவருகிருரென்று பகவத்கீதையும், மற்ற உலகசரித்திரங்களும் முறையிடுகிறதன்றியில்; நமது அனுபவத்திலும் கண்டும் கேட்டு வருகிறோமல்லவா ?

ஆகவே; நமது நாயடுகொரு ஸமஸ்தானத்தார், கடைசீ காலத்தில், தம் சிங்காசனத்தைப் பற்றி தம்மினத்தாருக்குள்ளாகவே சண்டை சச்சரவுகள் செய்துக்கொண்டும், மத்தியில்வந்த மகமதீயர் உதவியை நாடவே; அந்த மகமதியரும் தமக்கு இயற்கையான ஜாதிக் கட்டுப்பாடினாலும், மதவைராக்கியத்தினாலும் தந்திரமாகவே நமது தேசங்களைப்பிடித்தும், தாமே மன்னர்களாகிவிட்டதன்றியில்; பெரும்பான்மையான அம்மகமதியமன்னர்களும்தம் மன்னுயிரை தம்முயிரைப்போலெண்ணுமல் வருந்தித் தவிக்கச்செய்தார்கள். இப்படி தவிக்கும் குடிகளின் கஷ்டநிஷ்டூரங்களை நீக்கக்கருதியே, ஈசுவரன் இவ்விருமன்னர்களுடைய இராஜிய பரிபாலனத்தைப் பிடிங்கி இங்கிலீஷ் காரரிடம் கொடுத்துவிட்டார் போலும்.

இந்த இங்கிலீஷ் ராஜாங்கத்தார், கல்வி, கேள்வி, செல்வம், சக்தி; சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி முதலான குணங்களிற்சிறந்தவர்களாகவும், இந்நாட்டின் **சகலஜாதியாரிடமும், சமயபேதம்,** ஜாதிபேத முதலானதுகளைப் பாராட்டாமல், **அபேதராக** இருந்து தம்குடிகளுக்கு **வாக்குசுதந்திரம், சமாசாரபத்திரிகை சுதந்திரம்** முதலானதுகளைக் கொடுத்து (குடிகளை) சுகமாக வாழ்விக்கும்படியான சக்தியையும் பெற்றிருப்பதால்; இப்படிப்பட்ட **சமரச ஞானமுடைய** புத்திமான்களின் செங்கோலுக்குள் இந்த ஆரியவர்த்தமாகிய இப்பெரியதேசம் அடைக்கலம் பெற்றிருத்தல் நலமென (கடவுளின் கருத்தென்று) கரதலாமலகம்போல் காணலாம்.

இப்போது இந்த இங்கிலீஷ் அரசர்களால் இந்நாட்டின் குடிகளுக்கு உண்டாகி இருக்கும் சுதந்திர சுகவாழ்வு இவர்களுக்கு முன்னிருந்த மற்ற மன்னர்கள் காலத்தில் கிடையாதென்பது திண்ணம். ஆகவே, இப்படிப்பட்ட ஆங்கில அரசை இந்த ஆரியநாட்டில் ஸ்தாபித்த ஜகதீசுவரனை சதாக் கொண்டாடியும், இந்த ஆங்கிலஅரசருக்கு இராஜபக்தியோடு அடங்கிவாழக் கடமைப்பட்டிருக்கிறோ மல்லவா ?

இனி இப்படிப்பட்ட ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட நம்மவர்கள் நற்கதியை அடைவதற்கதாரமான சிலசுலபசாதனசாதுஷ்டியங்களை இதனடியிற் சங்கிரமாக காணலாம். அவையாவன.

பலிஜவாருக்கு பத்து பிரமாணங்கள்.

(1) நம்மவர் நற்கதியை அடைவதற்கு இன்றியமையா சாதனங்கள் **கல்வியும், கைத்தொழில்** களுமேயாம். நம்மவர்களிற் பெரும்பாலார் கல்வியையும், கைத்தொழில்களையும்அசட்டைசெய்து, சோம்பேறிகளாகி தினேதினே தரித்திர தசையை அடைந்து வருந்துவது பிரதியக்ஷம். இதுவரையிற் போனது போகட்டும், இனிமேலாகிலும் நம்மக்கள் சிறுவர்களாக இருக்கும்போதே

தேசபாஷையையும், அத்தோடுகூட இராஜபாஷையாகிய இங்கிலீஷ்பாஷையையும் கட்டாயமாய்க் கற்பிக்கவேண்டும். ஏழைகளாக இருப்போர் தேசபாஷை, இங்கிலீஷ் பாஷைகளில் படிக்கவும், எழுதவும், கணச்கிடவும் போதுமான வரையில் கற்பித்தும். தனவான்களாக இருப்பவர் தம்மக்களை பி. ஏ. பி. எல். பரிக்ஷையில் தேறுகிற வரையிலும் கற்பித்து வரவேண்டும். இப்படி படிப்பிக்கும்போது தேக அப்பியாசத்துக்கேற்ற கொடி, ஜிம்னசிய முதலான வித்தைகளையும்; தமது பெண்மக்களுக்குப் போதுமான தேசபாஷைக் கல்வியையும் கற்பிக்கவேண்டும். கைத்தொழில், விவசாயம், வர்த்தக வேலைகளில் நாட்டமுடையவர்கள்கூட தம்மக்கள் பாலியராக இருக்கையில் தேசபாஷையிலும் இராஜபாஷையிலும் எழுத வாசிக்கும் வரையிலாவது கற்பித்துக்கொடுத்து, பிறகு தமக்கு இஷ்டமான தொழில்களிற் செய்யவிடவேண்டும். இவ்வாறு கல்வியையும், கைத்தொழில்களையும் கிரமேண கற்றுக்கொடுத்தபிறகு, கல்வி கைத்தொழில் விருத்தி விஷயமாக ஏனைய விடங்களுக்கு யாத்திரையாகப்போய் நேரில் பார்க்கச்செய்து அறிவை விருத்தியாக்கவேண்டும்.

(2) இவ்விதமாகக் கல்வியையும், கைத்தொழில்களையும் விருத்தியாக்கிக்கொண்டுவந்து, தமது கல்விக்குத் தக்கபடி உத்தியோகமோ? அல்லது கைத்தொழில்களோ செய்யும்பொழுது இராஜாங்க சட்டதிட்டங்களைக்காட்டும் புத்தகங்களையும், தம் தம் ஜில்லா கெஜட்டுகளையும், சமாசார பத்திரிகைகளையும் தருவித்துப் படித்து; இராஜகீய கட்டளைகளையம், உலக விசித்திர விநோதங்களையும் தெரிந்துக்கொள்ளவேண்டும். இப்படி சட்டதிட்ட புத்தகங்களையும், சமாசார பத்திரிகைகளையும் அதிகப் பணச்செலவிட்டு வாங்க சக்தியற்றவர்கள் தாம் குடியிருக்கும் கிராமம், அல்லது தாலுகா அல்லது கஸ்பாபட்டணங்களிற் குடியிருக்கும் குடிகளிற் சிலரைக் கையொப்பக்காரர்களாகச் சேர்த்து பணம் வசூல்செய்து பொதுவான வாசகச்சாலைகளை ஸ்தாபித்து விருத்தி யடையவேண்டும்.

(3) இவ்வாறு விருத்தியடைந்து வருங்காலத்தில், தாம் வதிந்துவரும் அந்தந்த கிராமாதிகாரிகள், சப்மேஜஸ்டர்கள், தாசீல்தாரர்கள், டிவிஜனல் ஆபீசர்கள், அல்லது கலெக்டர்களை அடிக்கடி தரிசித்து தமது குறைவு நிறைவுகளையும், குடிகளுடைய சுகதுக்கங்களையும் சொல்லி வரவேண்டும்; அவர்கள் அவைகளை அநுதாபத்தோடு கேட்காதவிஷயத்தில், அப்படிப்பட்டவர்களிடம்போய் வருத்தாமலிருக்கவேண்டும்.

(4) தம் தம் சொந்தகாரியங்களை தாமே நேரில்போய் பார்த்து செய்தும், செய்வித்தும் வரவேண்டும். வேலைக்காரர்களையும், ஏஜண்டுகளையும் முற்றும் நம்பி பெரியவேலைகளை விட்டுவிடவேண்டாம். கலியாணம் கல்லெடுப்பு முதலான காரியங்களில் டம்பாகாரமான வீண்செலவுகளைக்செய்ய கடன்வாங்கவேண்டாம். அல்லது பிறர்கடனுக்கு பிணைப்பட்டு அலையவேண்டாம். வரவுக்குமிஞ்சி செலவுசெய்வோர் வருந்தி சாவார்; ஆகவே, சிக்கனவாழ்வே சிறந்தவாழ்வாம்.

(5) தருமம் செய்ய பின்னடையவேண்டாம். அதாவது ஏழைகள், வருமையிலுள்ளோர், வியாதியஸ்தர், கூன், குருடு, நொண்டி முதலானவர்களுக்கு தம்மாலான உதவிசெய்யவேண்டும்.

(6) தருமத்திற் சிறந்தது சுஜாதிதருமமாம்—அதாவது, நமது சுஜாதியாரில் ஏழைகளாக இருப்பவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டியதன்றியில்; அவர்களுடைய மக்களுக்கு கல்வி, கைத்தொழில்களை கற்பித்துவைத்தும், அது விஷயமாக அந்தந்தகிராமம், கஸ்பா நகரங்களிலும், கூடுமாகில் மதுரை, மதராசு முதலான பட்டணங்களிலும், பிரதிவருஷம் **சுஜாதிமஹாசபை**களைக்கூட்டி, அந்தச்சபைகளில் சுஜாதியாருடைய விருத்தி விஷயத்தைப் பற்றி பேசி, **நாயுடுஹோம் (Naidu Home) கவுரவர் குலவாசம்** என்றாதி தர்மஸ்தாபனங்களை ஸ்தாபித்து அவைகளுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்வித்தும், அந்ததிரவியத்தைக்கூட்டி பெருக்கி விருத்தியாக்கி, அதனால் வரும் லாபத்தினால் நம்மவர்மக்களுக்கு தர்ம கல்வியையும், கைத்தொழிலறிவையும் ஊட்டி விருத்தியாக்கி வரவேண்டும். இப்படி விருத்தியாக்கப் பெற்றவர்களுடைய சுகவாழ்வைக் கருதியும், அவர்களுடைய சந்ததிகளுடைய விருத்தியைக்கருதியும், பிரதிவருஷம் தாம்வாழும்பிரதிஜில்லாக்களிலும் மாகாண சபைகளைக்கூட்டி பேசி சுகாதிவிருத்தியை பிரபலமாக்கவேண்டும்.

(7) இப்போது நம்மவர்களிற் சிலர் நான் பெரியஜாதி, நல்லவமிசத்தான் என்று சொல்லிக்கொள்ளும் கக்ஷி பிரதிகக்ஷிகளையும் உண்டாக்கி ஒருமைப்பாட்டின் பெருமையை அறியாமல் தவிக்கிறார்கள். அதனால் நமது ஜாதியாருக்கு வந்த கஷ்டநிஷ்டூரங்கள் கொஞ்சமல்ல. இனிமேலாகிலும் நம்ம ஜாதியார் யாவரும் ஒரே குடும்பத்திற்பிறந்த ஒரே சகோதிரர்களாக எண்ணித் தழுவி ஒருமைப்பாட்டை விருத்தியாக்கவேண்டும்.

(8) நம்மவருக்குள் குடிவெறியும், கூத்திவைப்பும், வரவர அதிகரித்து வருவதாக வதந்தி. **குடித்தல் பஞ்சமஹா பாதங்களில்** ஒன்று, கூத்திகளை வைத்தல் தருமசாஸ்திர விரோதம்; ஆகவே, குடி—கூத்திக் கள்ளத்தனங்களை கட்டோடே விட்டொழித்தும், பரநாரி சோதரர்களாக பிரகாசிக்க வேண்டும். புலையும், கொலையும், களவும் தவிர்த்தவர்கள் புனிதராவார்க ளன்றோ?

(9) பொய், சூது, வாது முதலானதுகளை விட்டொழித்து பெற்றோர், பெரியோர், பிராம்மணர் பக்தி விசுவாசமுள்ளவர்களாகி; சான்றோர், சாதுக்கள் சத்சங்கத்திற் சேர்ந்து சதா**சாந்தம், சத்தியம், சுவாமிபக்தி**யைத் தழுவ வேண்டும்.

(10) பிரதிதினமும் அருணோதயத்தில் எழுந்து ஆண் பெண் சகிதமாக சுத்த ஸ்நானஞ்செய்தும், வீடுவாசல் பண்டபாத்திரங்களை சுத்திசெய்தும், ஜகதீசுவரனை தியானித்தும், தமக்கு கிடைத்திருக்கும் போஜனத்தை உண்டும், தம் தம் காரியங்களை கிரமேணசெய்து முடித்தும், ஆவகாசகாலத்தில் **ஆரியர் வேதம், ஆரியர்ஆசாரம், பகவத்கீதையாதி** கிரந்தங்களைப்படித்துத்தெளிந்து சதாபிரம்மதியானபராயணர்களாகி, இல்லறதருமத்தைஇன்பமாகநடத்தி, ஈசுவர குடும்பத்தாராக பிரகாசிக்கவேண்டும். ஓசுஜாதிசகோதிரர்களே! இந்தப் பத்து பிரமாணங்களை ஒடுங்கிய மனதோடன்றி, சுபுத்தியால்படித்துஆழ்ந்து யோசித்து அவைகளின்படி நடந்தும், நடத்தியும் வந்தால், நம்மவர் நற்கதியை அடைவார்கள்என்பது திண்ணம். ஓ! சுஜாதிசகோதிரர்களே உங்களுக்கு சுபவாழ்வும் மங்களமு முண்டாவதாக—ஓம் தத் சத்.

இப்படிக்கு சுஜாதி ஊழியன்,

சேலம், பகடால, நரசிம்மலுநாயடு.

கோயமுத்தூர் கலாநிதி பத்திராசிரியன்.